D
V211,32 N78
N78.14791
121945

# Tamil Nadu Legislative Council Debates

FIFTY-THIRD SESSION OF THE LEGISLATIVE COUNCIL UNDER THE CONSTITUTION OF INDIA.

VOLUME CXLVII (Nos. 1 to 5).

*15th to 18th and 20th March* 1978.

TABLE OF CONTENTS.

*Wednesday, 15th March* 1978.


| | PAGES |
|---|---|
| Personnel of the Government of Tamil Nadu ... ... | i-iv |
| Principal Officers of the Tamil Nadu Legislative Council ... ... ... ... ... ... | iv |
| List of Members of the Tamil Nadu Legislative Council with their constituencies ... ... ... | vii-x |
| 1. Condolence Resolution *re* death of Thiru R.R.S.R. Ranga Rao, Raja of Bobbili, former Chief Minister of Composite Madras State ... ... | 1 |
| 2. Questions and Answers ... ... ... ... | 2-20 |
| 3. Announcement *re* decision of the Business Advisory Committee ... ... ... ... ... | 20-21 |
| 4. Statement under rule 82 of the Council Rules *re*— | |
| (1) Periyar-Anna Ninaivagam at Erode ... | 21-22 |
| (2) State Administration Report for 1974-75 ... | 22-23 |
| 5. Presentation of the Twenty-seventh Report of the Committee on Government Assurances ... | 23 |
| 6. Discussion on the Policy Note on 'Progress of Education in Tamil Nadu' ... ... ... | 24-67 |
| 7. Papers laid on the table of the House ... ... | 67-70 |

PAGES

*Thursday*, 16*th March* 1978.

1. Questions and Answers ... ... ... ... 157-169
2. Calling attention to hardship caused to stoppage of teaching grant to schools run by Cantonment Boards ... ... ... ... ... 169-171
3. Privilege Issue *re* remarks of Thiru K. Suppu, M.L.A., in the Assembly regarding Council ... 171-172
4. Government Motion *re* discussion on the Policy Note on 'Progress of Education in Tamil Nadu'—cont. 172-234
5. Obituary reference *re* death of Thirumathi Mani Ammayar, wife of Periar E.V.R., Leader of Dravida Kazhagam ... ... ... ... 234-235
6. Papers laid on the table of the House ... ... 235-236

*Friday*, 17*th March* 1978.

1. Questions and Answers ... ... ... ... 237-246
2. Privilege Issue *re* statement of Thiru Arcot N. Veerasamy, M.L.C., about the alleged appointment of one Thiru Vijayan and destruction of State Administration Reports ... ... ... ... 246-248
3. Calling attention to hartal in Chatrapatty area, Ramanathapuram district, pressing for ban on production of bandage and gauze cloth by powerlooms ... ... ... ... ... ... 248-252
4. Government Motion *re* discussion on the Policy Notes on Agriculture and Irrigation ... ... 252-315
5. Papers laid on the table of the House ... ... 315-316

*Saturday*, 18*th March* 1978.

1. Questions and Answers ... ... ... ... 353-362
2. Government Resolutions—
(1) Transaction of Government business on a Private Members' Day ... ... ... 362-363
(2) Election of one Member to the Tamil Nadu Land Improvement Board ... ... 363-36
(3) The Constitution (Forty-fourth Amendment) Bill, 1977 ... ... ... ... ... 364-40



PAGES

*Monday*, 20*th March* 1978.

1. Condolence Resolution *re* death of Thiru M. Ananthasayanam Iyengar, former Speaker, Lok Sabha and former Governor of Bihar ... ... 407
2. Questions and Answers ... ... ... ... 408-423
3. Information *re* questions to be answered by the Chief Minister ... ... ... ... ... 424-426
4. Government Motion *re* discussion on the Policy Notes on Community Development, Panchayat Development and Urban Development ... 426-498
5. Paptr laid on the table of the House ... ... ... 499-500
Index ... ... ... ... ... ... 535-560

# PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

---

## GOVERNOR OF TAMIL NADU

THIRU *PRABHUDAS PATWARI*

### *Members of the Council of Ministers.*

1. THE HON. THIRU M. G. RAMACHANDRAN, Chief Minister in charge of Public, General Administration, Matters relating to Indian Civil Service and Indian Administrative Service Officers, District Revenue Officers, Deputy Collectors, Police, Elections, Passport, Prohibition, Health, Medicine, Religious Endowments, Prevention of Corruption, Industries, Bhoodan and Gramdan, Ex-Servicemen, Mines and Minerals and Rural Industries Project.

2. THE HON. THIRU K. MANOHARAN, Minister in charge of Finance, Planning, Commercial Taxes and Excise, Revenue and Legislature.

3. THE HON. THIRU S. RAMACHANDRAN, Minister in charge of Works, Minor Irrigation including Special Minor Irrigation Programme Works, Iron and Steel Control and Electricity.

4. THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIYAR, Minister in charge of Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Legislation on Money Lending, Legislation on Chits and Registration of Companies.

5. THE HON. THIRU G. R. EDMUND, Minister in charge of Food, Food Production, Co-operation, Fisheries, Registration, Forest including Cinchona, Youth Service Corps and Price Control.

6. THE HON. THIRU R. M. VEERAPPAN, Minister in charge of Information and Tourism, Publicity, Film Technology, Tourism Development Corporation and Cinematograph Act.

7. THE HON. THIRU C. ARANGANAYAGAM, Minister in charge of Education including Technical Education, Official Language and Employment and Training.

8. THE HON. THIRU K. KALIMUTHU, Minister in charge of Local Administration, Municipal Administration, Community Development, Panchayats, Panchayat Union and Rural Indebtedness.

9. The Hon. Thiru S. RAGHAVANANDHAM, Minister in charge of Labour, Housing, Slum Clearance Board, Statistics, Tamil Nadu Water Supply and Drainage Board and Town Planning.

10. The Hon. Thiru P. SOUNDARAPANDIAN, Minister in charge of Harijan Welfare, Backward Classes, Stationery and Printing, Government Press and Hill Tribes and Bonded Labour.

11. The Hon. Thiru C. PONNAIYAN, Minister in charge of Transport, Nationalised Transport, Motor Vehicles Act, Highways and Ports.

12. The Hon. Selvi P. T. SARASWATHI, Minister in charge of Social Welfare including Women and Children's Welfare, Animal Husbandry, Beggars' Home, Orphanages, Indians Overseas and Refugees, Evacuees and Correctional Administration.

13. The Hon. Thiru P. KOLANDAIVELU, Minister in charge of Agriculture, Agricultural Refinance, Agricultural Engineering Wing, Agro-Engineering Wing, Milk, Dairy Development Corporation and Operation Flood Project.

14. The Hon. Thiru K. RAJA MOHAMMED, Minister in charge of Handlooms and Textiles, Accommodation Control, News Print Control, Agro-Service Co-operative Societies at Block, District and Apex Level including Federation, Waqfs, Yarn, Khadi and Village Industries.



## தமிழ்நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும்.

### தமிழ்நாடு ஆளுநர்

திரு. பிரபுதாஸ் பட்வாரி.

### அமைச்சரவை உறுப்பினர்கள்

1. மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் (முதலமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: பொது, பொது நிர்வாகம், இந்திய ஆளுகைப் பணியாளர், இந்திய ஆட்சிப் பணியாளர், மாவட்ட வருவாய் அதிகாரிகள், மாவட்டக் கழக ஆட்சியாளர் சம்பந்தப்பட்டவை, காவல், தேர்தல்கள், பயண இசைவுச் சீட்டு, மதுவிலக்கு, நல்வாழ்வு, மருந்துகள், அறநிலையத் துறை, இலஞ்ச ஒழிப்பு, தொழில் நிறுவனங்கள், பூமிதானம்–கிராம தானம், முன்னாள் இராணுவத்தினர், சுரங்கம்-கனிவளம், ஊரகத் தொழில் நிறுவனத் திட்டங்கள்.

2. மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் (நிதித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: நிதி, திட்டம், வணிக வரிகள், ஆயத் துறை, வருவாய், சட்ட மன்றம்.

3. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் (பொதுப்பணித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: பொதுப்பணி, சிறப்புச் சிறு பாசனத் திட்ட வேலை உட்பட்ட சிறு பாசனங்கள், இரும்பு எஃகுக் கட்டுப்பாடு, மின்சாரம்.

4. மாண்புமிகு திரு. கே. நாராயணசாமி முதலியார் (சட்டத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: சட்டம், நீதி மன்றங்கள், சிறைகள், எடைகள்—அளவைகள் சட்டம் இயற்றல், கடன் கொடுத்தல் சட்டம் இயற்றல், சீட்டு நிதிச் சட்டம் இயற்றல், நிறுவனங்கள் பதிவு.

5. மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் (உணவுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: உணவு, உணவு உற்பத்தி, கூட்டுறவு, மீன் வளம், ஆவணப் பதிவுத் துறை, சிங்கோனா உள்பட வனங்கள், இளைஞர் அணி, விலைக்கட்டுப்பாடு.

6. மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் (செய்தி சுற்றுலாத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: செய்தி, விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், திரைப்படச் சட்டம்.

7. மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் (கல்வித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: தொழில் நுட்பக் கல்வி உள்ளிட்ட கல்வி, ஆட்சிமொழி, வேலை வாய்ப்பும் பயிற்சியும்.

8. மாண்புமிகு திரு. கா. காளிமுத்து (உள்ளாட்சித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: நகராட்சிகள், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், ஊரகக் கடன்கள், சமுதாய வளர்ச்சி.

9. மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் (தொழிலாளர் நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: தொழிலாளர், வீட்டு வசதி, குடிசை மாற்று வாரியம், புள்ளி விவரங்கள், தமிழ்நாடு குடி நீர் வடிகால் வாரியம், நகர அமைப்பு.

10 மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் (அரிசன நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: அரிசன நலம், பிற்பட்ட வகுப்பினர், எழுதுபொருள் அச்சுத் துறை, அரசு அச்சகம், மலைவாழ் பழங்குடியினர், பிணைத் தொழிலாளர்.

11. மாண்புமிகு திரு. சி. பொன்னையன் (போக்குவரத்துத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: போக்குவரத்து, அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம், நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள்.

12. மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி (சமூக நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: மகளிர், குழந்தைகள் நலம் உள்ளிட்ட சமூக நலம், கால்நடை பராமரிப்பு, பிச்சைக்காரர்கள் விடுதி, அனாதை விடுதிகள், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள், வெளியேற்றப்பட்டவர்கள் நலம், சீர்திருத்த நிர்வாகம்.

13. மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு (வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: வேளாண்மை, வேளாண்மை மறு நிதி, வேளாண்மை பொறியியல் பிரிவு, அக்ரோ பொறியியல் பிரிவு, பால், பால் வள நிறுவனம், பால் பெருக்குத் திட்டம்.

14. மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது (கைத்தறி—ஆலைத் துணிகள் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: இட வசதிக் கட்டுப்பாடு, அச்சுக் காகிதக் கட்டுப்பாடு, கூட்டமைப்பு உள்ளிட்ட வட்டார—மாவட்ட தலைமை இடம் சார்ந்த வேளாண்மைப் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், வக்ப், நெசவு, நூல், கைத்தறி, கதர், கிராமத் தொழில்கள்.

## தமிழ்நாடு சட்ட மன்ற மேலவையின் முக்கிய அலுவலர்கள்.

---

### மேலவைத் தலைவர்.

[அரசியலமைப்புச் சட்டத்தின் 184 (1)-வது பிரிவின்கீழ் தலைவரின் அலுவல்களைத் துணைத் தலைவர் மேற்கொண்டிருக்கிறார்.

### மேலவைத் துணைத் தலைவர்.

திரு. ம. பொ. சிவஞானம்

### மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

1. திரு. கோ. சி. மணி.
2. திருமதி சத்தியவாணிமுத்து.
3. திரு. ஆ. பாலசுப்ரமணியம்.
4. திரு. கே. எஸ். கணபதி.

### மேலவைச் செயலாளர்.

திரு. சி.கு. இராமசாமி, பி.ஏ., பி.எல்.

### சார்புச் செயலாளர்.

திரு. த. பி. டெல்லிதுரை, பி.எஸ்ஸி., பி.ஜி.எல்.

### விவாதப் பதிப்பாளர்.

திரு. நா. கோதண்டராமன், பி.ஏ., பி.ஜி.எல்., பி.எல்.

### மொழிபெயர்ப்பாளர்

### நிலைமை நிருபர்.

திரு. எஸ். நடராஜன்.

| தொடர் இலக்கமும், உறுப்பினர் பெயரும். | தொகுதி. |
|---|---|
| (1) | (2) |
| 15 சத்தியவாணி முத்து, | மாநிலச் சட்ட மன்றப் பேரவை |
| 16 சந்தோஷம், டி. எம். ஏ., பி. எல்., | சென்னை தெற்கு பட்டதாரிகள் தொகுதி. |
| 17 சாம்பசிவம், இரா. | தென் ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 18 சிவஞானம், ம. பொ, (துணைத் தலைவர்) | நியமனம் |
| 19 சுந்தரேசத் தேவர், என். | தஞ்சாவூர் உள்ளாட்சி மன்றத் தொகுதி |
| 20 சுவாமிநாதன், ஜி., பி.பார்மஸி. | தமிழ்நாடு கிழக்கு மத்திய பட்டதாரிகள் தொகுதி. |
| 21 தங்கப்பாண்டியன், வே. பி. ஏ., பி. டி. | இராமநாதபுரம் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 22 தங்கவேல், ஏ. | மாநிலச் சட்ட மன்றப் பேரவை |
| 23 தமிழரசி, சி. | மாநிலச் சட்ட மன்றப் பேரவை |
| 24 தாமஸ், பி. ஆர். | மதுரை-இராமநாதபுரம் ஆசிரியர்கள் தொகுதி |
| 25 தாமோதரன், ஏ. ஆர், பி. எஸ்ஸி., (ஆனர்ஸ்) | சென்னை வடக்கு பட்டதாரிகள் தொகுதி. |
| 26 தாமோதரன், ஜி. ஆர். | சென்னை மேற்கு மத்திய பட்டதாரிகள் தொகுதி |
| 27 திராவிடமணி, ஆ. | மாநிலச் சட்ட மன்றப் பேரவை |
| 8 டிமான்டி டென்சில் வின்சென்ட் | மாநிலச் சட்ட மன்றப் பேரவை |
| 29 தேவராஜ், வி. எம். | வட ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |



| தொடர் இலக்கமும், உறுப்பினர் பெயரும். | தொகுதி. |
|---|---|
| (1) | (2) |
| 30 நடராசன், எம். கே. டி. | திருச்சிராப்பள்ளி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 31 நாராயணசுவாமி முதலியார், கே. (சட்ட அமைச்சர்) | மாநிலச் சட்ட மன்றப் பேரவை |
| 32 நீல நாராயணன், | மாநிலச் சட்ட மன்றப் பேரவை |
| 33 பக்கர், எம். எம். | நியமனம் |
| 34 பலராமன், எல். | வட ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| *35 பாலகுருசாமி ஆர். | நியமனம் |
| 36 பாலசுப்ரமணியம், ஆ. | சேலம்-தர்மபுரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 37 பாலசுப்பிரமணியம், கு. மா. | நியமனம் |
| *38 புலமைபித்தன் | நியமனம். |
| 39 பெரியண்ணன், வீ. ஆர். | சேலம்—தர்மபுரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 40 மணி, கோ. சி. | தஞ்சாவூர் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| *41 மந்தாகினி கிருஷ்ணமூர்த்தி | நியமனம் |
| 42 மாசிலாமணி, மு. | மாநிலச் சட்ட மன்றப் பேரவை |
| 43 மாணிக்கம், பி. | மாநிலச் சட்ட மன்றப் பேரவை |
| 44 முத்து, எஸ். | மாநிலச் சட்ட மன்றப் பேரவை |
| 45 முத்துகிருஷ்ணன், டி. வீ. | மாநிலச் சட்ட மன்றப் பேரவை |
| 46 முருகேசன், எச். எல், | நியமனம் |
| 47 வில்வம், ஏ. கே. | நியமனம் |
| 48 வில்சன் அப்பலோஸ், என். | கன்னியாகுமரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| *49 வீரப்பன், ஆர். எம். (செய்தி விளம்பரத் துறை அமைச்சர்) | மாநிலச் சட்ட மன்றப் பேரவை |

* 31—12—1977 அன்று நியமனம் செய்யப்பட்டார்கள்

| தொடர் இலக்கமும், உறுப்பினர் பெயரும். | தொகுதி. |
| --- | --- |
| (1) | (2) |
| 50 வெங்கடேஸ்வர தீக்ஷிதர், ஒய், | .. திருச்சிராப்பள்ளி உள் ளாட்சி மன்றத் தொகுதி. |
| 51 ஜார்ஜ் கோமகன், | .. மாநிலச் சட்ட மன்றப் பேரவை |
| 52 வெற்றிடம் | .. சென்னை உள்ளாட்சிமன்றத் தொகுதி, |
| 53 வெற்றிடம் | — சென்னை மாவட்ட பட்ட தாரிகள். |
| 54 வெற்றிடம் | — சென்னை மாவட்ட பட்ட தாரிகள். |
| 55 வெற்றிடம் | — வட ஆற்காடு-தென் ஆற் காடு ஆசிரியர்கள் தொகுதி. |
| 56 வெற்றிடம் | — சேலம், தர்மபுரி, கோயம் புத்தூர், நீலகிரி ஆசிரியர் கள் தொகுதி. |
| 57 வெற்றிடம் | — கோயம்புத்தூர்—நீலகிரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 58 வெற்றிடம் | — கோயம்புத்தூர்—நீலகிரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 59 வெற்றிடம் | — செங்கல்பட்டு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 60 வெற்றிடம் | — மதுரை உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 61 வெற்றிடம் | — மதுரை உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 62 வெற்றிடம் | — திருநெல்வேலி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 63 வெற்றிடம் | — திருநெல்வேலி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |

# தமிழ்நாடு சட்ட மன்ற மேலவை.

---

## இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் கூடும் சட்ட மன்ற மேலவையின் ஐம்பத்திமூன்றாவது கூட்டத் தொடர்.

### புதன்கிழமை, 1978 மார்ச் 15.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் முற்பகல் 10-30 மணியளவில் மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் (திரு. ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

### 1. இரங்கல் தீர்மானம்.

**ஒருங்கிணைந்த சென்னை மாநிலத்தின் முன்னாள் முதலமைச்சர் பொப்பிலி ராஜா திரு. ஆர். ஆர். எஸ். ஆர். ரங்கா ராவ் அவர்கள் மறைவு குறித்து.**

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்** : மாண்புமிகு உறுப்பினர்களே, இரங்கல் தீர்மானம் ஒன்றை அவையின் முன் மொழிகிறேன் :—

"ஒருங்கிணைந்த சென்னை மாநிலத்தின் முன்னாள் முதலமைச்சராக இருந்த பொப்பிலி ராஜா திரு. ஆர். ஆர். எஸ். ஆர். ரங்கா ராவ் அவர்கள் 10—3—1978 ஆம் நாளன்று விசாகப்பட்டினத்தில் இயற்கை எய்தியதைக் குறித்து இவ்வவை தனது ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறது. அன்னாரின் மறைவால் துயருற்றிருக்கும் அவர்தம் குடும்பத்தினருக்கு தனது ஆழ்ந்த இரங்கலையும், பரிவுணர்ச்சியையும் தெரிவித்துக்கொள்கிறது."

திரு. பொப்பிலி ராஜா அவர்கள் 1932 ஆம் ஆண்டு நவம்பர் திங்களிலிருந்து 1936 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் வரையிலும், மீண்டும் 1936 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்களிலிருந்து 1937 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் வரையிலும் ஒருங்கிணைந்த சென்னை மாநிலத்தின் முதலமைச்சராக இருந்தார்.

அவர் நீதிக் கட்சியின் முக்கிய தலைவராக இருந்தவர். அவர் அரசியல் நிர்ணய சபையில் உறுப்பினராக இருந்தார்.

மறைந்த பெரியவருக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் உறுப்பினர்கள் இரண்டு நிமிடம் மௌனமாக எழுந்து நிற்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

அவை உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடம் மௌனமாக எழுந்து நின்றனர்.

தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

2. வினுக்கள்-விடைகள்.

உடுக்குறியிட்ட வினுக்கள்.

## *Self Employment Scheme*

*170. Q.—THIRU A. R. DAMODARAN (on behalf of THIRU D. SANTOSHAM): Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether Young entrepreneurs under the "Self-Employment Scheme", Ambattur, were allowed to start their workshops using electricity, at 8.00 p.m.;

(b) whether this time was subsequently changed to 9.00 p.m. without notice; and

(c) whether several entrepreneurs who started work at 8.00 p.m. for want of notice, had their electric connection cut and penalty was also levied for restoration of connection?

சுய வேலை வாய்ப்புத் திட்டம்

திரு. ஏ. ஆர். தாமோதரன் (திரு. டி. சந்தோஷம் சார்பில்): மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அம்பத்தூரில் " சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின் " கீழ் புதிதாக தொழிலில் முனையும் இளைஞர்கள், இரவு 8-00 மணிக்கு மின்சாரத்தைப் பயன் படுத்தி அவர்களது தொழில் பட்டறைகளைத் தொடங்க அனுமதிக்கப் பட்டனரா ?

(இ) இந்த நேரம் எவ்வித அறிவிப்புமின்றி இரவு 9-00 மணி என்று பின்னர் மாற்றப்பட்டதா ?

(உ) அறிவிப்பு கொடுக்கப்படாததால் இரவு 8-00 மணிக்கு பட்டறை களைத் தொடங்கிய பல தொழில் முனைவோர்களுக்கு, மின் இணைப்பு துண்டிக்கப்பட்டு, மீண்டும் மின் தொடர்பு அளிப்பதற்காக தண்டக் கட்டணமும் விதிக்கப்பட்டதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) & (இ) சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் வரும் அம்பத்தூர் சிறுதொழிலதிபர்களின் தொழிற்சாலைகள் உட்பட அனைத்து நகர்ப்புற குறைவழுத்தத் தொழிற்சாலைகளுக்கும், தொடர்ச்சியாக இயங்காத உயர் அழுத்தத் தொழிற்சாலைகளுக்கும் காலையிலும், மாலையிலும் 6 மணி முதல் 9 மணி வரை இருந்த மின்சாரக் கட்டுப்பாட்டை ஒரு பரிசோதனை அடிப்படையில் 20—8—1977 முதல் 19—9—1977 வரையில் ஒரு மாதத்திற்கு மட்டும் தளர்த்திக் காலையிலும் இரவிலும் கூடுதலாக ஒரு மணிநேரம் மின்சாரம் வழங்கப்பட்டது. பூரணமாக இது ஒரு பரிசோதனை வாப்படையில் தான் என்ற இந்த உண்மைக்குப் பரவலான விளம்பரமும்



கொடுக்கப்பட்டுள்ளது. சென்னையிலுள்ள தமிழ்நாடு சிறுதொழில் கழகத் தலைவர் அவர்களுக்கு கடித மூலமாகத் தெரிவிக்கப்பட்டது. தொழில் நுட்ப ரீதியாக மேற்கொண்டு தொடர்ச்சியாக அளிக்க இயலாமல் போன தாலும் மின் வாரியத்தின் செயல்முறைகளுக்குப் பிரச்சினைகள் ஏற்பட்ட தாலும் கூடுதலாக ஒரு மணி நேரத்திற்கு மின்சாரம் வழங்கப்பட்ட இச் சலுகை திரும்பப் பெறப்பட்டது. ஆகவே, தாக்கீது வழங்கி இச்செய்கை திரும்பப்பெற்றிருக்கவேண்டும் என்ற கேள்வி எழவில்லை.

(உ) ஆம். 19—9—1977-க்குப் பிறகு உச்சகால வரம்பாணைகளை மீறியவர்களுக்குத் தண்டத் தீர்வை விதிக்கப்பட்டது.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும் போது, இந்தத் திட்டம் 'எக்ஸ்பரிமெண்ட்டலாகத்' தான் செய்யப்பட்டது என்று சொன்னார்கள். சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் புதிதாகத் தொழில் ஆரம்பித்த அந்த இளைஞர்கள் அரசாங்கம் தங்களுக்கு ஏற்கனவே அனுமதித்த நேரத்தை மாற்றி யிருந்தாலும்—விவரம் தெரியாத ஒரு சிலர் அங்கே மின்சாரத்தைப் பயன்படுத்தியதற்காக மின்சார இணைப்பு துண்டிக்கப் பட்டது. அது மட்டுமெல்லாமல், அதற்கான தண்டக் கட்டணமும் அவர்களிட மிருந்து வாங்கப்பட்டுள்ளது. அது முறைதானு? எனவே அப்படி வாங்கப் பட்ட தண்டக் கட்டணத்தைத் தள்ளிக் கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் தொழிற்சாலையை அவர்கள் துவக்கினர்கள் என்பதால், தனிச்சலுகை ஏதும் காட்டப்படவில்லை. "Peak Hour Restrictions" இருக்கிறது; அதைத் தளர்த்திப் பார்க்கலாம் என்ற நோக்கத்துடன் ஒரு மணி நேரத்தை அதில் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று பத்திரிகைகளில்கூட அறிவிக்கப் பட்டது. இந்தத் திட்டம் ஒரு மாத காலத்திற்குத்தான் அமுலில் இருந்தது. ஆனல் இதன் காரணமாக பல பிரச்சினைகள் ஏற்பட்ட காரணத்தால், அது சோதனைக் காலத்தோடு முடிவடைந்துவிட்டது. எனவே இது தெரிந்தவுடனே அவர்கள் "Peak Hour" நேரத்தைப் பயன்படுத்தாமல் இருந்திருக்க வேண்டும். பயன்படுத்தியிருப்பார்களானல், "Peak Hour" நேரத்தில் மின்சாரத்தைப் பயன்படுத்தியதற்காக என்னென்ன தண்டனைகள் இருக்கின்றனவோ அவைகளை அனுபவித்துத்தான் தீர வேண்டும்.

திரு. எம். சங்கரலிங்கம்: "Peak Hour" நேரத்தில் மின்சாரத்தைப் பயன்படுத்திய 'சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின்' கீழ் வரும் புதிய தொழிலாளர்கள், தொழில் அதிபர்கள் எத்தனை பேர்கள்? அவர்களுக்கு விதிக்கப்பட்ட தண்டக் கட்டணத்தை விலக்கிக்கொள்ள வேண்டுமென்று மனுக்கள் வந்திருக்கின்றனவா ?

[1978 மார்ச் 15

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அந்த விவரம் தற்போது என்னிடம் இல்லை.

THIRU G. SWAMINATHAN : Sir, there is only one kind of electricity tariff both for power used during peak hour and for power consumed during ordinary period. Will the Government consider the introduction of two kinds of tariff separately for peak hour and ordinary period and the fixation of higher tariff for peak hour so that people may not go in for peak hour consumption?

THE HON. THIRU S. RAMACHANDRAN : This is another form of preventing the consumers from utilising the energy during peak hour. Now the rules in force provide for disconnection of such services where they are found using energy during peak hours, apart from the levy that is imposed on such people.

### *Private Tanks.*

* 171 Q.—THIRU M. SANKARALINGAM : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether the Government have received any representation from the farmers of Kanyakumari district requesting the Government to take over all private tanks receiving water from Government reservoirs; and

(b) if so, the action taken thereon?

### தனியார் குளங்கள்.

திரு. எம். சங்கரலிங்கம் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அரசாங்க நீர்த் தேக்கங்களிலிருந்து நீர் பெறுகிற தனியார் குளங்களை எல்லாம் அரசு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று, கன்னியாகுமரி மாவட்ட விவசாயிகளிடமிருந்து முறையீடு ஏதும் அரசுக்கு வந்துள்ளதா?

(இ) ஆமெனில், அதன் மீது எடுத்த நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(இ) இது பரிசீலனையில் உள்ளது.



1978 மார்ச் 15]

திரு. எம். சங்கரலிங்கம் : கன்னியாகுமரி மாவட்டத்தில் எத்தனை குளங்கள் தனியார் கையில் இருந்துகொண்டு, அரசாங்கம் நிருவகித்து வருகிற அணை களிலிருந்து தண்ணீர் பெறுகின்றன? அவற்றை அரசு தன்னுடைய குளங்களாக அறிவிப்பதில் ஏன் காலதாமதம் ஏற்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : கன்னியாகுமரி மாவட்டத்தில் தோவாளை தாலுகாவில் உள்ள அழகிய பாண்டியபுரம் கிராமத்தைச் சார்ந்த தட்டான் பள்ளம் குளம், தோவாளைத் தாலுகா செண்பகராமன்புதூர் கிராமத்தைச் சார்ந்த தேவர் குளம் மற்றும் தோவாளை தாலுகா செண்பகராமன்புதூர் கிராமத்தைச் சார்ந்த புதுக்குளம் ஆகிய மூன்று குளங்கள் தனியார்களிடம் இருக்கின்றன. 1948 ஆம் ஆண்டு ஜமீன் ஒழிப்புச் சட்டமும் அதன் பின் 1974 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட திருத்தமும் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு நீட்டிக்கப்படவில்லை. கன்னியாகுமரி மாவட்டம் மாற்றப்பட்ட பகுதியானதால் (Transferred territory) எந்த அளவுக்கு இந்தச் சட்டங்களை நீட்டித்து இவைகளை எடுத்துக் கொள்ளலாம் என்பது பற்றி வருவாய்த் துறை பரிசீலித்து வருகிறது.

திரு. எம். சங்கரலிங்கம் : கழிந்த 10 ஆண்டுகளாக இந்தப் பிரச்சினை இருந்து வருகிறது. தனியார் குளங்கள் முழு அளவில் அரசு நிருவாகத்தில் இருந்து வருகிற அணைகளிலிருந்து தண்ணீரை எடுத்து வருகின்றன. அதிலும் பெரு நிலச்சுவான்தார்கள் இந்தக் குளங்களைத் தங்களுடைய சொந்தக் குளங்கள் என்று கூறி, சிறு நிலச் சொந்தக்காரர்களுக்கு இந்தத் தண்ணீர் கிடையாது என்று சொல்லி, தண்ணீர் விட மறுக்கிறார்கள். இதனால் மற்ற விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள். இதனால் பல சிக்கல்கள் உருவாகின்றன என்பதால், இவைகளைத் தீர்க்கும் வகையில் அரசு துரித நடவடிக்கை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அரசு விரைவில் ஆவன செய்யும் என்று கூறிக்கொள்கிறேன்.

### *Janata Hotels.*

* 172 Q.—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Information and Tourism be pleased to state—

(a) whether the Government have proposed to the India Tourism Development Corporation the construction of Janata Hotels in the State:

(b) if so, the reasons therefor; and

(c) the details thereof, including the places in which such hotels are proposed to be constructed?

## ஜனதா ஓட்டல்கள்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** மாண்புமிகு செய்தி-சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இம்மாநிலத்தில் ஜனதா ஓட்டல்களைக் கட்டுமாறு இந்திய சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்கு இவ்வரசு கருத்துத் தெரிவித்துள்ளதா ?

(இ) ஆமெனில் அதற்கான காரணங்கள் யாவை ?

(உ) அவை பற்றிய விவரங்கள் யாவை ? எந்தெந்த இடங்களில் அத்தகைய ஓட்டல்கள் கட்டத் திட்டமிடப்பட்டிருக்கின்றன ?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** (அ) இல்லை.

(இ) எழவில்லை.

(உ) எழவில்லை.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** சில மாதங்களுக்கு முன்பு, மத்திய சுற்றுலாத் துறை அமைச்சர் திரு. புருஷோத்தம்லால் கௌசிக் அவர்கள் இந்திய நாடு முழுவதும் ஜனதா ஹோட்டல்களைக் கட்ட இருப்பதாகவும் இதற்காக இந்தியா முழுவதும் போதுமான அளவுக்கு இடங்களைப் பொறுக்கி எடுக்க இருப்ப தாகவும், டெல்லியில் மட்டும் ஆயிரம் படுக்கைகள் கொண்ட ஒரு ஹோட்டலைக் கட்ட இருப்பதாகவும், அதுபற்றி அவர்கள் ஒரு அறிக்கை அனுப்ப இருப்பதாகவும் சொன்னதாக, பத்திரிகையில் செய்தி பார்த்தேன். அது உண்மையா ? அப்படி மத்திய அரசு இது போன்ற ஹோட்டல்களைக் கட்டுவதாக இருந்தால், நமது மாநிலத்தைப் பொறுத்தவரையில், சில இடங்களைப் பொறுக்கி எடுத்து அந்த இடங்களில் அந்த ஹோட்டல்களைக் கட்ட வேண்டுமென்று மத்திய அரசை இந்த மாநில அரசு கோருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மத்திய சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் நடுத்தரப் பயணிகளுக்குப் பயன்படுகிற வகையில் குறைந்த கட்டணத்தில் அவைகளைப் பயன்படுத்திக்கொள்ளத் தக்க வகையில், இது போன்ற ஜனதா ஹோட்டல்கள் நாடெங்கும் வர வேண்டும் என்ற கருத்துத்தான் தெரிவித்திருக்கிறார்கள். இந்த ஜனதா ஹோட்டல்கள் என்பவை எந்த அமைப்பில் இருக்கும், எந்தக் கட்டணத்தில் இருக்கும் என்பதைப்பற்றி இன்னும் அவர்கள் முடிவெடுக்கவில்லை. முதலில் டெல்லியில் 5 நட்சத்திர ஹோட்டல் கட்டுவதாக இருந்த திட்டத்தை மாற்றி இப்போது முதல் முறையாக அங்கே ஜனதா ஹோட்டல் கட்ட திட்டமிட்டிருக்கிறார்கள். அது கட்டி முடிக்கப்பட்ட பிறகுதான், அதன் அமைப்பும் மற்ற விவரங்களும்



தெரிய வரும். எனவே, மத்திய அமைச்சர் அவர்கள் இந்த விவரத்தைத்தான் அறிவித்திருக்கிறார்களே தவிர, மத்திய அரசு திட்டமாக அதை அறிவிக்க வில்லை. அப்படி திட்டம் அறிவிக்கப்பட்டால், மாநில அரசும் அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** மத்திய அமைச்சர் அவர்கள் இதை ஒரு திட்டமாகவே அறிவித்திருக்கிறார்கள். ஒருவர் தங்குகிற அறை வாடகை ரூ. 15 என்றும் இருவர் தங்குகிற அறை ஒன்றுக்கு ரூ. 20 வாடகை என்றும் இந்த ஹோட்டல் கட்டப்படும் என்றும் டெல்லியில் ஆயிரம் படுக்கைகள் கொண்ட ஹோட்டல் கட்டப்படும் என்றும் தெரிவித்திருக்கிறார்கள். இப்படிப் பட்ட ஹோட்டல்கள் நம் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் கட்டப்படும் என்றும் தெரிவித்திருக்கிறார்கள். அதைத் தொடர்ந்து நம் மாநிலத்தில் அம்மாதிரி ஹோட்டல்கள் கட்ட பல இடங்களைத் தேர்ந்தெடுக்கவும், அப்படித் தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்களில் அத்தகைய ஹோட்டல்களைக் கட்டவும் இந்த அரசு மத்திய அரசின் உதவியைப் பெறுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** சுற்றுலாத்துறை அமைச்சர்கள் மாநாட்டில் மத்திய அரசிடம் நம் மாநிலத்தில் தேவைகளை வேண்டுகோளாக வைத்திருக்கிறோம். அப்படிப்பட்ட வாய்ப்புகள் வரும்போது, நிச்சயமாக மத்திய அரசிடம் உரிமையோடு கேட்டுப் பெற்று எத்தனை இடங்களில் நம் மாநிலத்தில் அமைக்க முடியுமோ அத்தனை இடங்களிலும் அமைக்க வேண்டிய முயற்சிகள் அனைத்தும் எடுத்துக்கொள்ளப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 10-40)

**திரு. எல். பலராமன் :** கடந்த கால காங்கிரஸ் மத்திய ஆட்சியிலே ஒரு ரூபாய்க்கு ஜனதா சாப்பாடு எவ்வளவு போட வேண்டும் என்பதற்கு ஒரு அளவினை நிர்ணயித்திருந்தார்கள். அதுபோல் பஞ்சாபில் இருக்கின்றது. அங்கு இருப்பது போன்று சாலை ஓரங்களில் தமிழ்நாடு அரசாங்கம் ஓட்டல்களை அமைப்பதற்கும் அதன் மூலம் வேலை வாய்ப்புகள் ஏற்படுத்துவதற்கும் திட்டம் இருக்கின்றதா என்பதைப்பற்றி அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** அது போன்று சாலை ஓர தங்கும் விடுதிகள் நம்முடைய தமிழக அரசு சுற்றுலாத் துறை வளர்ச்சிக் கழகம் சார்பில் ராணிப்பேட்டையிலே, உளுந்தூர்பேட்டையிலே கட்டுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. ஹோசூரிலும் அச்சரப்பாக்கம் அருகிலும் கட்டுவதற்கான திட்டங்கள் இருக்கின்றன. தொடர்ந்து சாலை ஓர பயணிகள் தங்கும் விடுதிகளைக் கட்டுவதற்கு தமிழக அரசின் சுற்றுலா வளர்ச்சிக் கழகம் பல்வேறு திட்டங்களை அதனுடைய ஆலோசனையில் வைத்திருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[1978 மார்ச் 15

**திரு. எம். சங்கரலிங்கம் :** தற்போது நம் மாநிலத்தில் இருக்கக்கூடிய சுற்றுலாத் துறை மாளிகைகளில் வாடகை கூடுதலாக இருக்கின்றது என்று கருத்துச் சொல்லப்படுகிறது. ஒரு நபர் தங்குவதற்கு ரூ. 15 என்றும், இரு நபர்கள் தங்குவதற்கு ரூ. 20 என்றும், ரூ. 25 என்றும் நிலைமைகள் இருக்கின்றன. இப்போது ஜனதா சுற்றுலாத் துறை மாளிகை கட்டுவது வரை, அதைக் குறைத்து ரூ. 10 என்ற அளவிலே, தனி நபர் தங்குகின்ற அறைக்கு வாடகையை நிர்ணயிப்பதுபற்றி அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** இந்தச் சுற்றுலா பயணிகள் விடுதிகளைத் தமிழ் நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நடத்துகிறது. இந்தக் கழகம் லாப நோக்கத்தோடு அல்லது நஷ்டம் ஏற்படாமல் நடத்துவதற்கான திட்டங்கள் அடிப்படையிலேதான் இந்த சுற்றுலா விடுதிகளை நடத்திக் கொண்டிருக்கின்றது. இதுபற்றி பல்வேறு கருத்துக்கள் தரப்படுகின்றன. இருந்தாலும் இருக்கின்ற வாடகைகளைக் குறைக்க முடியுமா என்பதுபற்றிப் பரிசீலனை செய்ய வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. குறைந்த வாடகையிலே கிடைக்க வேண்டும் என்பதற்காக, 10 அல்லது 15 பேர்கள் தங்குகின்ற அளவுக்கு, டார்மிட்டரி சிஸ்டம் அடிப்படையில், விடுதிகள் அமைத்து, அதில் ஒரு நபருக்கு ரூ. 5 என்ற அளவிலே கட்டணம் விதிக்கப் பட்டு, மொத்தமாக பயணிகள் தங்குகின்ற அளவிலே பல்வேறு இடங்களிலே திட்டங்கள் உருவாக்கி நடைமுறைப்படுத்த முயற்சி எடுத்துக்கொள்ளப் படுகின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** சுற்றுலாத் துறை அமைச்சர்கள் மாநாட்டிலே, ஜனதா ஓட்டல்களைப் பொறுத்து நம் தேவைகள் என்ன என்ன என்று குறிப்பிட்டுள்ளதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மத்திய அரசுக்குச் சொல்லப்பட்டதாகச் சொன்னார்கள். என்ன என்ன தேவைகள், எந்த எந்த இடங்கள் என்பதைப்பற்றி அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** இதைப்பற்றி நான் முன்னரே சொல்லியிருக்கிறேன். மத்திய அரசு இதைத் தீவிரமான, முக்கியமான தெளிவான திட்டமாக அறிவிக்கவில்லை. இதற்காக இந்திய சுற்றுலா வளர்ச்சிக் கழக வாரியம் முயற்சிகளை செய்துகொண்டிருக்கிறது. மத்திய அரசின் திட்டம் என்பதும், சுற்றுலா வளர்ச்சிக் கழகம் என்பதும் வேறு. இந்திய அரசைச் சேர்ந்த இந்திய சுற்றுலா வளர்ச்சிக் கழகம் என்பதுதான் இந்த மாதிரியான ஓட்டல்களைக் கட்டுகின்றது. ஆகவே, இந்தத் திட்டத்திற்கும் அரசுக்கும் சம்பந்தம் இல்லை. மத்திய அரசே இந்தமாதிரித் திட்டத்தை எடுத்துக்கொள்ளும்போது, மாநில அரசும் இந்தத் திட்டத்தின்கீழ் உதவிகளைப் பெற முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



1978 மார்ச் 15]

**திரு. வே. தங்கப்பாண்டியன் :** தமிழ் நாடு சுற்றுலாத் துறையைச் சேர்ந்த விடுதிகளில் சட்டமன்ற உறுப்பினர்கள் தங்குவதற்கு ஓரளவுக்குக் குறைந்த அளவுக்கு வாடகை வசூலிக்கப்படுமா? இப்போது சட்ட மன்ற உறுப்பினர்கள் தங்கும் விடுதியில் என்ன வாடகைக்கு விடப்படுகின்றதோ அந்த வாடகைக்கு தங்குவதற்கு அரசு தனிச் சலுகை வழங்குவதற்கு முயற்சிக்குமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு எவ்வளவு வசதிகள் கொடுக்கவேண்டுமோ அந்த அளவுக்கு, நாட்டு மக்களுக்குக் கிடைக்கவில்லை என்றாலும், இந்த அரசு கொடுப்பதற்கு முயற்சிகளை மேற்கொள்ளும். முயற்சிகள் எப்படி இருந்தாலும், சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு இப்படி வாடகைக்கு விடுகின்றபோதும், முதலுக்கு நஷ்டம் வராமல் பார்த்துக்கொள்ள வேண்டும். இந்த விடுதிகளைக் கட்டுவதற்கு அரசும் பணம் போடுகிறது. இதற்காக வங்கிகளிலும் கடன் வாங்கப்படுகிறது. இந்த விடுதிகள் இன்றைக்கு பல இடங்களிலே நஷ்டத்தில் நடந்துகொண்டிருக் கின்றன. இந்த நஷ்டத்தைப் போக்கிக்கொள்ள அரசு முயற்சி எடுத்துக் கொண்டிருக்கின்றது. சட்ட மன்ற உறுப்பினர்களுக்குக் குறைந்த வாடகைக்கு விட்டுவிட்டு, மற்றவர்களுக்கு அதிக வாடகைக்கு விட்டு, மேலும் வருகிற பயணிகளுக்கு இடம் இல்லை என்றும் சொன்னால், நஷ்டம் கூடுமா குறையுமா என்பதை நமது மாண்புமிகு சட்ட மன்ற உறுப்பினர்கள் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே. எஸ். கணபதி :** நம் மாநிலத்திலுள்ள மாவட்டத்திற்கு மாவட்டம் விமானப் போக்குவரத்து வசதி ஏற்படுத்தப்போவதாகச் சொல்லப்படுகிறது. அதைப்பற்றி அரசு எடுத்த முடிவு என்ன என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** இப்படி ஒரு திட்டம் இருக்கிறது. அதுபற்றித் தனிக் கேள்வி போட்டால், முழு விவரமும் அறிந்து இந்த அவையில் வைக்க வசதியாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** அந்தத் திட்டத்தைப்பற்றி அவைக்கு வெளியிலே தெரிவித்திருக்கிறார்கள். பத்திரிகை நிருபர்களிடம் சொல்லியிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** விமானப் போக்குவரத்துபற்றி வெளியிலே பத்திரிகையாளர்கள் கேட்டபோது பதில் சொல்லியிருக்கிறேன். இப்படிப்பட்ட ஒரு திட்டம் உருவாகியிருப்பதையும், அது பரிசீலனையில் இருக்கிறது என்பதையும் தெரிவித்திருக்கிறோம். அதைப் பற்றி அவையிலும் இப்பொழுது சொல்லியிருக்கிறேன். இங்கே ஜனதா ஓட்டல்களைப் பற்றிக்

கோரப்பட்டது. அதைப்பற்றி விவரம் தந்திருக்கிறேன். இப்போது விமானப் போக்குவரத்து பற்றிக் கேட்கப்படுகிறது. அதற்கான விவரங்களை, தனிக் கேள்வி போட்டால், இந்த சபையில் தெரிவிக்க அரசு தயாராக இருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் :** ஜனதா ஓட்டல், ஜனதா ரெயில், ஜனதா பயணம் என்பது போல ஜனதா விமானப் பயணம் என்று வருமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** நாம் எல்லாம் ஜனதா விமானப் பயணம் போவோமா ?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** விமானப் போக்குவரத்தில் இங்கிருந்து 100 பேர், 50 பேர் என்று போவதற்குப் பதிலாக, 5 பேர் அல்லது 10 பேர் என்ற அளவிலே ஏற்றிப்போகின்ற சிறிய விமானங்கள், குறைந்த தூரங்களுக்குச் செல்கின்ற அளவுக்கு, நிரந்தரமான விமான வழிகளில் இல்லாமல் இருக்கின்ற பகுதிகளுக்குச் செல்லும் விமானப் போக்குவரத்து அமைக்க வேண்டும். சென்னை, சிதம்பரம், தஞ்சாவூர், திருச்சி, மதுரை, கன்னியாகுமரி என்று போகின்ற சுற்றுலா பயணிகளுக்கு வசதியாக இருப்பதற்கு அந்தத் திட்டம் உருவாகிக்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**புலவர் புதுமைப் பித்தன் :** இப்போது ஜனதா ஓட்டல் என்று அழைக்கப் படுகிறது. இந்த அரசு எங்கும் தமிழ் எதிலும் தமிழ் என்று இருக்கின்ற அரசு. ஆகவே, அந்தப் பெயரையும் தமிழ் படுத்தவேண்டாமா என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சிறந்த தமிழ்ப் புலவர், தமிழ் கவிஞர். அதற்காக நல்ல தமிழ்ப் பெயரைச் சொன்னால், அவர்களே உருவாக்கிய அந்தப் பெயரை வைக்க இந்த அரசுக்கு தடையேதும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## *Orchard.*

* 173 Q.—THIRU V. R. PERIANNAN: Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) whether there is any proposal with the Government to start an orchard at Kolli Hills through the Agricultural University, Coimbatore; and

(b) if so, the extent of acres in which it will be formed?



## பழத்தோட்டம்

**திரு. வி. ஆர். பெரியண்ணன் :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கொல்லி மலையில் கோவை விவசாய பல்கலைக் கழகம் மூலம் பழத் தோட்டம் ஏற்படுத்தும் குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், எத்தனை ஏக்கர் பரப்பளவில் ஏற்படுத்தப்படும் ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** (அ) அம்மாதிரி செயற்குறிப்பு ஏதும் தற்போது பரிசீலனையில் இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**திரு. வி. ஆர். பெரியண்ணன் :** நம் விவசாயப் பல்கலைக் கழகம் மூலம் பழத்தோட்டம் ஏற்படுத்தி, பழ வகைகள் உற்பத்தி செய்வதற்காக வாய்ப்புகள் இருப்பதாகவும், அதற்காக முயற்சிகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் பத்திரிகைச் செய்திகளில் பார்த்தேன். அதை விரைவுபடுத்த அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்ய வேண்டும். விவசாயப் பல்கலைக் கழகத்தோடு தொடர்ந்து பேச்சு வார்த்தை நடத்துவார்களா என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் சொன்னதுபோல, அரசுக்கு எந்தத் தகவலும் இல்லை. அதைப்பற்றித் துணை வேந்தர் எங்காவது சொல்லியிருந்தால், அதைக் குறித்து அரசு கவனிக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

## *Farmers Growing Betel-Vines.*

* 174 Q.—THIRU A. DRAVIDAMANI: Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) whether the Committee which has been set up to study the problems of farmers, will consider all the problems regarding agriculture;

(b) if so, whether the problems of farmers growing Betel-Vines also will be considered; and

(c) whether a member who has experience in Betel-Vines cultivation will be included in that Committee?

[1978 மார்ச் 15

## வெற்றிலைக் கொடிக்கால் விவசாயிகள்

**திரு. ஆ. திராவிடமணி:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) விவசாயிகளின் பிரச்சினைகளைப் பற்றி ஆராய அமைக்கப்பட்டுள்ள குழு விவசாய சம்பந்தமான அனைத்துப் பிரச்சினைகளையும் பரிசீலிக்குமா?

(இ) ஆமெனில், வெற்றிலைக் கொடிக்கால் விவசாயிகள் பிரச்சினைகளும் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படுமா?

(உ) அந்தக் குழுவில் தொழில் அனுபவம் உள்ள வெற்றிலைக் கொடிக்கால் விவசாயி ஒருவரும் சேர்த்துக்கொள்ளப்படுவாரா?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** (அ), (இ) & (உ) விவசாயிகளின் பிரச்சினைகளைப் பற்றி ஆராய அமைக்கப்பட்ட குழு,

1. விவசாய நீரேற்றும் பம்புசெட்டுக்கான மின் கட்டணம் பற்றியும்,

2. நெல் கொள்முதல் விலை, பற்றியும்,

3. கடன்களைத் திருப்பிக் கொடுப்பதில் சலுகைகள் அளித்தல், பற்றியும்,

4. ஆக்கச் செலவுக்கேற்ப வேளாண்மை உற்பத்தி பொருட்களுக்கு குறைந்த அளவு விலை அறுதியிடல் பற்றியும் இவை சம்பந்தமான காரியங்கள் பற்றியும் இக்குழு ஆராயும்.

வெற்றிலைக் கொடிக்கால் விவசாயிகளின் பிரச்சினைகளும் இந்தக் குழுவின் கவனத்துக்குக் கொண்டுவரப்படலாம். போதிய அளவு விவசாயிகளுக்கு குழுவில் பிரதிநிதித்துவம் கொடுக்கப்பட்டு விட்டதால் தனியாக வெற்றிலைக் கொடிக்கால் விவசாயிகளின் பிரதிநிதியாக ஒரு விவசாயியை குழுவில் நியமித்தல் தற்போது அவசியம் இல்லை.

(முற்பகல் 10-50)

**திரு. வே. தங்கப்பாண்டியன்:** விவசாயம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளை ஆராய அமைக்கப்பட்ட குழு இவ்வளவு காலத்திற்குள் அரசாங்கத்திற்குத் தன்னுடைய பரிந்துரையைத் தர வேண்டுமென்று உத்தரவு இருக்கிறதா? எவ்வளவு காலத்திற்குள் அந்தக் குழுவின் பரிந்துரை கிடைக்குமென்று அரசு எதிர்பார்க்கிறது?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரத்தில் அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறு அந்தக் குழு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.



1978 மார்ச் 15]

**திரு. ஆ. திராவிடமணி:** கொடிக்கால் விவசாயம் செய்கின்ற மக்கள் ஏறத்தாழ 10 லட்சம் பேர்கள் இருக்கிறார்கள். அவர்கள் இந்த நாட்டிற்கும், சமுதாயத்திற்கும் அவசியமான பொருளை உற்பத்தி செய்கிறார்கள். அடிக்கடி பாதிக்கப்படுகின்ற தொழில் வெற்றிலை கொடிக்கால் தொழில். பெரிய புயல் வந்துதான் அந்தப் பயிர் பாதிக்கப்படுமென்பதல்ல. சிறிய காற்றினாலேயே வெற்றிலைக் கொடிகள் பாதிக்கப்படுகின்றன. சமுதாயத்திற்கு மிக இன்றியமையாத பயிரைப் பயிரிடும் வெற்றிலைக் கொடிக்கால் விவசாயிகள் தமிழகத்தில் நிறைய இருக்கிறார்கள். நாமக்கல் வட்டாரத்திலும், சேலம், நெல்லை மாவட்டங்களிலும் உள்ளவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அரசு விவசாயிகள்மீது நல்லெண்ணம் கொண்டு குழுவை அமைத்திருக்கிறார்கள். இங்கிருந்து வெற்றிலை பம்பாய்வரை ஏற்றுமதி செய்யப்படுகிறது. அதனால் அந்தப் பயிரைப் பயிரிடும் விவசாயிகளுக்குப் பல சிரமங்கள் ஏற்படுகின்றன. எனவே அந்தப் பயிரைப் பயிரிடும் விவசாயிகளின் பிரதிநிதியும் இக்குழுவில் இடம் பெற்றால், அவர்கள் தங்கள் ஆலோசனைகளை, அக்குழுவின் மூலம் அரசுக்குத் தெரிவிக்க முடியும். அரசும் அவர்களுக்குத் தேவையானவற்றைச் செய்ய முடியும்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** இது கேள்வி நேரம். சொற்பொழிவாற்றக்கூடாது.

**திரு. ஆ. திராவிடமணி:** கிட்டத்தட்ட 10 லட்சம் விவசாயிகள் கொடிக்கால் வெற்றிலை பயிரிடுவதால், அவர்களின் பிரதிநிதி ஒருவரும் அந்தக் குழுவில் இடம் பெறுவாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** நான் ஏற்கனவே பதிலிலேயே சொல்லிவிட்டேன். தமிழ் நாட்டிலே ஏறத்தாழ 5,800 ஹெக்டேர்கள் வரையிலே வெற்றிலைக் கொடிக்கால்கள் நடப்பட்டு, அதன் மூலம் விவசாயிகள் பயனடைந்து வருகிறார்கள். இதையெல்லாம் கவனத்தில் கொண்டுதான். நான் பதிலைச் சொல்லியிருக்கிறேன். எனவே இவர்களது பிரச்சினைகளையும் கவனத்திற்குக் கொண்டுவந்தால், அந்தக் குழு பரிசீலிக்குமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. வே. தங்கப்பாண்டியன்:** மிக முக்கிய பிரச்சினை குறித்து ஆராய குழு அமைக்கப்பட்டிருக்கிறது. எப்போதும் ஒரு குழு அமைக்கப்பட்டால், ஒரு காலவரையறை கொடுத்து, இந்தத் திங்களுக்குள் அறிக்கையைச் சமர்ப்பிக்க வேண்டுமென்று அரசு உத்தரவிடும். எனவே விவசாயப் பிரச்சினை குறித்து ஆராய அமைக்கப்பட்ட குழு, தன்னுடைய அறிக்கையைத் தருவதற்கு ஏதாவது காலவரையறையை அரசு நிர்ணயித்திருக்கிறதா

[திரு. எல். பலராமன்] [1978 மார்ச் 15

குழுவிற்கு அரசு கூறுமா? மாவட்டத்திற்கு மாவட்டம் விலையில் வித்தியாசம் இருப்பதால், அதைப்பற்றிப் பரிசீலிப்பதை அரசு ஒரு வழக்கமாகக் கொண்டு, அப்படிப் பரிசீலிக்க வேண்டுமென்ற ஆலோசனையை அந்தக் குழுவிற்கு அரசு கூற வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** 11 பேர்கள் பற்றி மாண்புமிகு உறுப்பினரவர்கள் விவரம் கேட்டார்கள். சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். 1. சி. நாராயணசாமி நாயுடு; 2. ஆர். கிருஷ்ணசாமி கவுண்டர்; 3. ஆர். பால சுப்பிரமணி; 4. பி. வேலுசாமி; 5. சி. வையாபுரி; 6. பி. எம். பரமசிவம்; 7. தென்கோவன்; 8. முகுந்த கோவிந்தராசன்; 9. வீரையன்; 10. எ. ஆதிமூலம்; 11. முத்து மல்லா ரெட்டியார்.

(முற்பகல் 11-00)

**புலவர் புலமைப்பித்தன் :** இந்த விவசாயிகளுடைய பிரச்சினைகளை ஆராய்வதற்கென்று அமைக்கப்பட்ட குழுவில் இருக்கிற சில பேர் வரி கொடா இயக்கத்தை நடத்த வேண்டுமென்ற முயற்சியில் ஈடுபட்டிருப்பதாக அரசுக்குத் தகவல் ஏதாவது தெரிவிக்கப்பட்டிருக்கிறதா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** வரி கொடா இயக்கம் நடத்துவதாக, இந்தக் குழுவில் உறுப்பினராக உள்ள சில பேர் அச்சுறுத்தல் செய்திருப்பது இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இது குறித்து அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

மேலும் இந்த நேரத்தில் இந்தக் கேள்வியை மாண்புமிகு உறுப்பினர் கேட்ட காரணத்திற்காக, நான் ஓரிரு கருத்துக்களைச் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். விவசாயிகளுடைய நலனைக் கருதி, அவர்களுக்கு நன்மை செய்ய வேண்டுமென்றுதான் இந்தக் குழுவே ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இந்தக் குழுவில் உறுப்பினராக இருக்கிறவர்களே இப்படி அச்சுறுத்தலிலே ஈடுபட்டிருப்பது வரவேற்கத் தகுந்ததல்ல என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அப்படி யாராவது வரி கொடா இயக்கத்தை நடத்த முற்பட்டால், அதைத் தடுக்க அரசு தகுந்த நடவடிக்கை எடுக்கும் என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. எஸ். ராமகிருஷ்ணத் தேவர் :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள், முகுந்த கோவிந்தராஜன் என்ற ஒருவர் இராமநாதபுரம் மாவட்டத்திலிருந்து நியமிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவித்தார்கள். முகுந்த கோவிந்தராஜன் ஒரு விவசாயியா? அல்லது பட்டம் படித்த விவசாய நுணுக்கங்களை அறிந்தவரா? அவர் யார் என்பதை அறிய விரும்புகிறேன்.

முடியும் என ...



978 மார்ச் 15]

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** முகுந்த கோவிந்தராஜன் என்பவர் விவசாயி. அவர் மானாமதுரையைச் சேர்ந்தவர்.

**திரு. எம். சங்கரலிங்கம் :** விவசாயிகளின் பிரச்சினைகளை ஆராய்வதற்காக
நியமிக்கப்பட்ட குழுவில் இருக்கிற உறுப்பினர்கள், அவர்கள் பொறுப்
பேற்றிருக்கிற சங்கங்களின் வழி நின்று அந்தச் சங்கங்கள் ஏற்றுக்
கொள்ளுகிற கொள்கைக்கேற்ப நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு அவர்களுக்கு
உரிமையுண்டு. விவசாய நிலங்களுக்கு விதிக்கப்பட்டுள்ள வரியினுடைய
அளவு அளவுக்கு மீறி மிகுதியாக இருக்கிறது என்பதைக் கண்டித்து அவர்கள்
தீர்மானம் நிறைவேற்றுகிறபோது, அதை நிறைவேற்ற அவர்களுக்கு உரிமை
இல்லையென்றும், அதற்காக அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்றும்
சொல்லுவது முறையாகுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** அந்தச் சங்கங்களைச் சேர்ந்தவர்கள்
தங்களுடைய தனிப்பட்ட கருத்துக்களைச் சொல்வதிலே இந்த அரசு
குறுக்கிடாது. அவர்களுடைய உரிமையைத் தடுக்கிற அளவிலே இந்த அரசு
செயல்படாது என்பதைச் சொல்லிக் கொள்ளக் கடமைப்
பட்டிருக்கிறேன். ஆனால் அதே நேரத்தில், எந்தப் பிரச்சினைகளைத்
தீர்ப்பதற்காக விவசாயக் குழுவிலே உறுப்பினர்களாக இருக்கிறார்களோ,
அந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதன் மூலமாக தங்களுடைய கஷ்ட நஷ்டங்கள்
தீர்ந்துவிடும் என்று கருதினார்களோ அதே பிரச்சினைகளை மீண்டும் வெளியே
கிளப்பி தவறான எண்ணங்களைப் பரப்புவதும் அதன் மூலம் வரிகொடா
இயக்கம் நடத்த விவசாயிகளைத் திரட்டுவது என்பது சரியானதல்ல என்ப
தைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொன்னார்கள்.
அப்படியென்றால், அது போன்ற உறுப்பினர்களை சங்கத்திலிருந்து
விலக்குவதாக உத்தேசம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** அது நிலைமைக்கேற்றவாறு
சட்டப்படி தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. வே. தங்கப்பாண்டியன் :** சேலம், கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்
களில், விவசாயிகள் கிளர்ச்சி செய்வதற்காக, அங்கே அவர்கள் கட்ட
வேண்டிய மின் கட்டணத்தை இரண்டு ஆண்டுகளாகக் கட்டாமல் தள்ளி
வைத்திருக்கிறார்கள். ஆனால் மதுரை மாவட்டத்திலே ஒரு மாதம் அல்லது ஒரு
நாள் தவறினால் கூட, அங்கு மின் இணைப்பு துண்டிக்கப்படுகிறது. ஆகவே
மதுரை மாவட்டத்தில் மட்டும் கடுமையாக நடந்துகொள்ளுகிறார்கள் என்பது
அரசுக்குத் தெரியுமா? அதைத் தவிர்க்க அரசு முன் வருமா என்பதைத்
தெரிந்துகொள்ள விரும்புகிறேன்

[1978 மார்ச் 15

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கப்பாண்டியன் அவர்கள் கேட்ட கேள்வி, மின்சார வாரியத்தைப் பொறுத்தது. அப்படிப்பட்ட புகார்கள் இந்த அரசின் கவனத்திற்கு இது வரையில் கொண்டுவரப்படவில்லை. அப்படிக் கொண்டுவந்தால், அரசு அதில் உடனடியாகக் கவனம் செலுத்தும் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

**திரு. எஸ். ராமகிருஷ்ணத் தேவர் :** முகுந்த கோவிந்தராஜன் என்பவர் மானாமதுரையில் தர்மாஸன இனாம்தார். முகுந்தராஜு ஐயங்கார் என்பவர் தேவகோட்டையிலே நீண்ட நாளாக வக்கீலாக இருந்தவர். அவருடைய மகன்தான் கோவிந்தராஜன் என்பது எனக்குத் தெரியும். அவரை எம். கோவிந்தராஜன் என்றும் மு. கோவிந்தராஜன் என்றும் சொல்வதுண்டு. அவர் ஒரு லீடிங் லாயர் (Leading Lawyer)

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அவருக்கென்ன ? நீங்கள் என்ன கேள்வியைக் கேட்கப் போகிறீர்கள் ? அதைச் சொல்லுங்கள்.

**திரு. எஸ். ராமகிருஷ்ணத் தேவர் :** அவர் தனிப்பட்ட முறையிலே விவசாயம் செய்யக் கூடியவரா ? அல்லது தர்மாசன இனாம்தாராக இருந்து கொண்டு கிராமங்களில் வரும் பிரச்சினைகளை ஏற்றுக்கொண்டு செட்டில் மெண்டுக்காக கோர்ட்டில் நிற்கக் கூடியவரா ? அமைச்சர் அவர்கள் தெரிந்து தான் செய்திருப்பார்கள்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** தனிப்பட்டவர்களைப் பற்றி அதிகமாகச் சொல்வது முறையல்ல.

**திரு. எஸ். ராமகிருஷ்ணத் தேவர் :** விவசாயி என்ற முறையிலே விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவரை நியமித்திருக்கலாம் அமைச்சர் அவர்கள். ஒரு தர்மாசன இனாம்தாரைப் போட்டிருக்க வேண்டாம். இராமநாதபுரம் ஜில்லா ஒரு நலிந்து போன ஜில்லா. ஆகவே ஒரு விவசாயியை நியமித் திருக்கலாம் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை அன்பான முறையிலே கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** முகுந்த கோவிந்தராஜன் கலப்பையைப் பிடித்தாரா அல்லது கவலையை ஓட்டினாரா என்கிற கேள்விக் குள்ளே போகாமல், அவர் விவசாயிகளுடைய கஷ்ட நஷ்டங்களைத் தெரிந்தவர், விவசாயிகளுடைய பிரச்சினைகளை உணர்ந்தவர் என்கிற காரணத்தாலேதான் அவர் நியமிக்கப்பட்டிருக்கிறார் என்பதைச் சொல்லிக்கொள்ளுகிறேன்.

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் :** பிரசவம் ஆனால்தான் வலியின் கஷ்டம் தெரியும். அது மாதிரி . . .



1978 மார்ச் 15]

**திரு. வே. தங்கப்பாண்டியன் :** எல்லோரும் பிரசவிக்க முடியாது என்று அறிகிறேன்.

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் :** இப்போது போடப்பட்டிருக்கிற கமிட்டியிலே உள்ள உறுப்பினர்களுக்கு விவசாயத்தில் பிராக்டிகல் எக்ஸ்பீரியன்ஸ் (Practical experience) இருக்கிறதா என்று தெரியவில்லை. நிலத்திலே நேரிடையாக உழைப்பவர்கள் இருக்கிறார்கள். அமைச்சர் அவர்கள் அறிவித்ததில் அப்படி விஷயம் தெரிந்தவர்கள் இருப்பதாகத் தெரியவில்லை. ஆகவே அது மாதிரி இல்லாமல், உண்மையாகவே விவசாயிகளாக இருப்பவர்களை அதிலே சேர்க்க முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** இக்குழுவிலே இடம் பெற்றிருப் பவர்கள் அத்தனை பேருமே விவசாயிகளுடைய கஷ்ட நஷ்டங்களைத் தெரிந்தவர்கள், விவசாயிகளுடைய நலனில் அக்கறை கொண்டவர்கள், அதே நேரத்தில் விவசாய நிலத்திலே பாடுபடுபவர்கள். இவர்கள்தான் இந்தக் குழுவிலே உறுப்பினராக இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ளு கிறேன்.

**திரு. வி. ஆர். பெரியண்ணன் :** சேலம் மாவட்டத்திலே ஐந்தாறு மாதங்களாக மின்சாரக் கட்டணத்தைக் கட்டவில்லை. பிறகு எங்களுடைய மாவட்டத்தைச் சேர்ந்த தலைவர்களையெல்லாம் சேர்த்து இந்தக் குழு அமைக்கப்பட்ட பிறகு டிசம்பர் மாதத்தில் மின் கட்டணத்தைக் கட்ட வேண்டு மென்று அறிவிக்கப்பட்டு, டிசம்பர் மாதத்தில் மின் கட்டணம் கட்டப்பட்டது. அதன் பிறகு அரசு கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்றவில்லை என்று ஜனவரி மாதத்தில் கட்ட வேண்டாமென்று சொல்லியிருக்கிறார்கள். சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயி திரு. பாலசுப்பிரமணியம் இந்தக் குழுவில் தலைவராக இருக்கிறார். ஆகவே அரசு என்ன வாக்குறுதியை அளித்தது ? அந்த வாக்குறுதியைக் காப்பாற்றவில்லை, அதனால் கட்ட வேண்டாமென்று சொல்லப்படுகிறதே, அது உண்மையா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** ஒப்பந்தத்தைப்பற்றித் தனிக் கேள்வி போட்டால், விபரம் சொல்லுகிறேன். ஆனாலும், மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்ததைப் போல, டிசம்பர் மாதத்திலிருந்து மின் கட்டணத்தைக் கட்ட வேண்டுமென்று ஒப்புக்கொண்டு, பின்னால் கட்டாமலிருப்பது சரியாகாது என்பதை மட்டும் நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கப்பாண்டியன் அவர்கள் கேட்ட கேள்வி, மின்சார வாரியத்தைப் பொறுத்தது. அப்படிப்பட்ட புகார்கள் இந்த அரசின் கவனத்திற்கு இது வரையில் கொண்டுவரப்படவில்லை. அப்படிக் கொண்டுவந்தால், அரசு அதில் உடனடியாகக் கவனம் செலுத்தும் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

**திரு. எஸ். ராமகிருஷ்ணத் தேவர் :** முகுந்த கோவிந்தராஜன் என்பவர் மானாமதுரையில் தர்மாஸன இனாம்தார். முகுந்தராஜு ஐயங்கார் என்பவர் தேவகோட்டையிலே நீண்ட நாளாக வக்கீலாக இருந்தவர். அவருடைய மகன்தான் கோவிந்தராஜன் என்பது எனக்குத் தெரியும். அவரை எம். கோவிந்தராஜன் என்றும் மு. கோவிந்தராஜன் என்றும் சொல்வதுண்டு. அவர் ஒரு லீடிங் லாயர் (Leading Lawyer)

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அவருக்கென்ன ? நீங்கள் என்ன கேள்வியைக் கேட்கப் போகிறீர்கள் ? அதைச் சொல்லுங்கள்.

**திரு. எஸ். ராமகிருஷ்ணத் தேவர் :** அவர் தனிப்பட்ட முறையிலே விவசாயம் செய்யக் கூடியவரா ? அல்லது தர்மாசன இனாம்தாராக இருந்து கொண்டு கிராமங்களில் வரும் பிரச்சினைகளை ஏற்றுக்கொண்டு செட்டில் மென்டுக்காக கோர்ட்டில் நிற்கக் கூடியவரா ? அமைச்சர் அவர்கள் தெரிந்து தான் செய்திருப்பார்கள்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** தனிப்பட்டவர்களைப் பற்றி அதிகமாகச் சொல்வது முறையல்ல.

**திரு. எஸ். ராமகிருஷ்ணத் தேவர் :** விவசாயி என்ற முறையிலே விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவரை நியமித்திருக்கலாம் அமைச்சர் அவர்கள். ஒரு தர்மாசன இனாம்தாரைப் போட்டிருக்க வேண்டாம். இராமநாதபுரம் ஜில்லா ஒரு நசிந்து போன ஜில்லா. ஆகவே ஒரு விவசாயியை நியமித் திருக்கலாம் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை அன்பான முறையிலே கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** முகுந்த கோவிந்தராஜன் கலப்பையைப் பிடித்தாரா அல்லது கவலையை ஓட்டினாரா என்கிற கேள்விக் குள்ளே போகாமல், அவர் விவசாயிகளுடைய கஷ்ட நஷ்டங்களைத் தெரிந்தவர், விவசாயிகளுடைய பிரச்சினைகளை உணர்ந்தவர் என்கிற காரணத்தாலேதான் அவர் நியமிக்கப்பட்டிருக்கிறார் என்பதைச் சொல்லிக்கொள்ளுகிறேன்.

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் :** பிரசவம் ஆனால்தான் வலியின் கஷ்டம் தெரியும். அது மாதிரி . .



**திரு. வே. தங்கப்பாண்டியன் :** எல்லோரும் பிரசவிக்க முடியாது என்று அறிகிறேன்.

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் :** இப்போது போடப்பட்டிருக்கிற கமிட்டியிலே உள்ள உறுப்பினர்களுக்கு விவசாயத்தில் பிராக்டிகல் எக்ஸ்பீரியன்ஸ் (Practical experience) இருக்கிறதா என்று தெரியவில்லை. நிலத்திலே நேரிடை யாக உழைப்பவர்கள் இருக்கிறார்கள். அமைச்சர் அவர்கள் அறிவித்ததில் அப்படி விஷயம் தெரிந்தவர்கள் இருப்பதாகத் தெரியவில்லை. ஆகவே அது மாதிரி இல்லாமல், உண்மையாகவே விவசாயிகளாக இருப்பவர்களை அதிலே சேர்க்க முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** இக்குழுவிலே இடம் பெற்றிருப் பவர்கள் அத்தனை பேருமே விவசாயிகளுடைய கஷ்ட நஷ்டங்களைத் தெரிந்தவர்கள், விவசாயிகளுடைய நலனில் அக்கறை கொண்டவர்கள், அதே நேரத்தில் விவசாய நிலத்திலே பாடுபடுபவர்கள். இவர்கள்தான் இந்தக் குழுவிலே உறுப்பினராக இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ளு கிறேன்.

**திரு. வி. ஆர். பெரியண்ணன் :** சேலம் மாவட்டத்திலே ஐந்தாறு மாதங்களாக மின்சாரக் கட்டணத்தைக் கட்டவில்லை. பிறகு எங்களுடைய மாவட்டத்தைச் சேர்ந்த தலைவர்களையெல்லாம் சேர்த்து இந்தக் குழு அமைக்கப்பட்ட பிறகு டிசம்பர் மாதத்தில் மின் கட்டணத்தைக் கட்ட வேண்டு மென்று அறிவிக்கப்பட்டு, டிசம்பர் மாதத்தில் மின் கட்டணம் கட்டப்பட்டது. அதன் பிறகு அரசு கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்றவில்லை என்று ஜனவரி மாதத்தில் கட்ட வேண்டாமென்று சொல்லியிருக்கிறார்கள். சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயி திரு. பாலசுப்பிரமணியம் இந்தக் குழுவில் தலைவராக இருக்கிறார். ஆகவே அரசு என்ன வாக்குறுதியை அளித்தது ? அந்த வாக்குறுதியைக் காப்பாற்றவில்லை, அதனால் கட்ட வேண்டாமென்று சொல்லப்படுகிறதே, அது உண்மையா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** ஒப்பந்தத்தைப்பற்றித் தனிக் கேள்வி போட்டால், விபரம் சொல்லுகிறேன். ஆனாலும், மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்ததைப் போல, டிசம்பர் மாதத்திலிருந்து மின் கட்டணத்தைக் கட்ட வேண்டுமென்று ஒப்புக்கொண்டு, பின்னால் கட்டாமலிருப்பது சரியாகாது என்பதை மட்டும் நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ளுகிறேன்.

[1978 மார்ச் 15

**திரு. எல். பலராமன் :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்த பட்டியலில் எல்லா மாவட்டத்துப் பிரதிநிதிகளும் சேர்க்கப்பட்டதாகத் தெரியவில்லை. ஆகவே எல்லா மாவட்டப் பிரதிநிதிகளும் இருக்கக் கூடிய நிலையில் அரசு மறு பரிசீலனை செய்யுமா? அவர்களுக்காக மேலும் ஒரு பட்டியலை இணைக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** இது மாதிரி யோசனை அரசுக்குத் தற்போது இல்லை.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 3. அறிவிப்பு.

அலுவல் ஆய்வுக்குழுவின் முடிவு.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** இன்று காலை 10 மணிக்குக் கூடிய சட்ட மன்ற அலுவல் ஆய்வுக் குழுவில் கீழ்க்கண்டவாறு முடிவு எடுக்கப்பட்டது.

| | |
|---|---|
| 15—3—1978 (புதன்கிழமை) 16—3—1978 (வியாழக்கிழமை) | கல்வி குறித்த கொள்கை விளக்கக் குறிப்பின் மீது விவாதம். |
| 17—3—1978 (வெள்ளிக்கிழமை) | வேளாண்மை மற்றும் பாசனம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் மீது விவாதம். |
| 18—3—1978 (சனிக்கிழமை) | அரசியலமைப்பு (44-வது திருத்த) சட்டத்திற்கு ஏற்பளித்தல். |
| 19—3—1978 (ஞாயிற்றுக்கிழமை) | விடுமுறை. |
| 20—3—1978 (திங்கட்கிழமை) | ஊராட்சி வளர்ச்சி மற்றும் சமுதாயநல வளர்ச்சி குறித்த கொள்கை விளக்கக்குறிப்பின் மீது விவாதம். |
| 21—3—1978 (செவ்வாய்க்கிழமை) | போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பின் மீது விவாதம். |

முடியும் என



1978 மார்ச் 15]

| | |
|---|---|
| 22—3—1978 (புதன்கிழமை) | நீதி மற்றும் சிறைச்சாலை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பின் மீது விவாதம். |
| 23—3—1978 (வியாழக்கிழமை) (பிற்பகல்) | 1977-78-ஆம் ஆண்டிற்கான இறுதி துணை விவர அறிக்கையை அளித்தல். 1970-71 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான விவர அறிக்கையை அளித்தல். |
| 24—3—1978 (வெள்ளிக்கிழமை) | தூய வெள்ளிக்கிழமை—விடுமுறை. |
| 25—3—1978 (சனிக்கிழமை) | தொழில் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பின் மீது விவாதம். |
| 26—3—1978 (ஞாயிற்றுக்கிழமை) | விடுமுறை. |
| 27—3—1978 (திங்கட்கிழமை) | 1977-78-ஆம் ஆண்டிற்கான இறுதி துணை விவர அறிக்கையின் மீதும் 1970-71 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான விவர அறிக்கையின் மீதும் விவாதம். |
| 28—3—1978 (செவ்வாய்க்கிழமை) | மருத்துவமும் மக்கள் நல்வாழ்வும் குறித்த கொள்கை விளக்கக் குறிப்புக்கள் மீது விவாதம். |
| 29—3—1978 (புதன்கிழமை) | உணவு மற்றும் கூட்டுறவு குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள்மீது விவாதம். |
| 30—3—1978 (வியாழக்கிழமை) | நிதி சட்ட முன்வடிவுகளை ஆய்வு செய்தல். |
| 31—3—1978 (வெள்ளிக்கிழமை) | முற்பகல் : இஸ்மாயில் கமிஷன் அறிக்கையின் மீது விவாதம். பிற்பகல் : பிரிவு உபசார உரை. |

(முற்பகல் 11-10)

## 4. 82-வது விதியின்படி விவர அறிக்கை.

### (1) பெரியார்—அண்ணா நினைவகம் குறித்து

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :** துணைத் தலைவர் அவர்களே, தமிழ் நாடு சட்ட மன்ற மேலவை விதிகளைச் சார்ந்த 82-வது விதியின்கீழ் பின்வரும் அறிக்கையை அளிக்க நான் விழைகிறேன்.

[திரு. கே. இராஜா முகமது] [1978 மார்ச் 15

**1978-79** ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தின் மீதான விவாதத்தின் போது பெரியார்-அண்ணா நினைவகம் பற்றி 28—2—1978 அன்று திரு. என். வீராசாமி சில கருத்துக்களை வெளியிட்டார். அது தொடர்பாக நிலைமையை விளக்கி கீழ்க்காணும் தகவல்களை அளிக்க முன்வருகிறேன்.

**1978** ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 2-ம் தேதி அன்று பெரியார்-அண்ணா நினைவகத்திற்குப் பார்வையிடச் சென்றிருந்த கோபிசெட்டிபாளையத்தைச் சேர்ந்த திரு. கோ. தமிழரசு என்பவர் 'பார்வையாளர் புத்தகத்தில்' சில கருத்துக்களை எழுதியிருந்தார். நினைவகத்தைக் கவனித்துக்கொள்ள அங்குப் பொறுப்பானவர்கள் எவரும் இல்லை என்றும், இரண்டு சிறுவர்கள் அன்றாட சம்பள தற்காலிக அடிப்படையில் (என். எம். ஆர்) 2—1—1978 ஆம் நாளிலிருந்துதான் அங்குப் பணியாற்றிவருவதாகவும் அவர்களில் ஒரு பையனாகிய திரு. விஜயன் என்பவன் கேரள மாநிலத்தைச் சேர்ந்தவன் என்றும் குறிப்பிட்டிருந்தார்.

ஈரோடு பிரிவின் உதவிப் பொறியாளர், ஈரோடு கிழக்கு துணைக் கோட்டத்தின் உதவி நிருவாகப் பொறியாளர் ஆகியோரின் கண்காணிப்பில் பெரியார்-அண்ணா நினைவகம் இருந்து வருவதாகவும், பார்வையாளர் குறிப்பிட்டிருப்பது போல விஜயன் என்ற பெயரில் எவரும் அங்கு நியமிக்கப்படவில்லை என்றும் பொதுப்பணித் துறை (கட்டிடங்கள்) முதுநிலை துணைத் தலைமைப் பொறியாளரும், தலைமைப் பொறியாளரும் இதுபற்றி விசாரித்து அறிவித்துள்ளனர். பார்வையாளர் புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டிருந்த கருத்துக்களை உயர் அதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டு வராததற்காகச் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடமிருந்தும் விளக்கம் கேட்கப்பட்டுள்ளது என்றும் விளக்கங்களைப் பெற்றதன் பேரில் அலுவலர்களின் மீது தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தலைமைப் பொறியாளர் தெரிவித்துள்ளார்.

எனவே, மாண்புமிகு உறுப்பினர் திரு. என். வீராசாமி தெரிவித்த கருத்துக்களில் உண்மை ஏதும் இல்லை என தெரிவித்துக்கொள்கிறேன்.

(2) **1974-75 ஆம் ஆண்டிற்கான தமிழ் நாட்டு நிர்வாக அறிக்கை குறித்து.**

**மாண்புமிகு** திரு. கே. இராஜா **முகமது** : தமிழ் நாடு சட்டமன்ற மேலவை விதிகளைச் சார்ந்த 82-வது விதியின்கீழ் பின்வரும் அறிக்கையை அளிக்க விரும்புகிறேன்.

**1976** ஆம் ஆண்டில் அச்சிடப்பட்ட 1974-75 ஆம் ஆண்டுக்கான **தமிழ் நாட்டு** நிர்வாக அறிக்கையின் படிகளைக் குறித்து திரு. என். **வீராசாமி. சில கருத்துக்களை** 28—2—1978 **ஆம் நாளன்று தெரிவித்தார்.**



1978 மார்ச் 15] [திரு. கே. இராஜா முகமது]

1974-75 ஆம் ஆண்டுக்கான தமிழ் நாட்டு நிர்வாக அறிக்கை வெளியிடப்பட்டது. 1976 டிசம்பரில் எழுதுபொருள் அச்சுத் துறை இயக்குநரால் அதன் படிகள் அரசின் அஞ்சல் பட்டியலின்படி துறைத் தலைவர்களுக்கும், நிறுவனங்களுக்கும், சட்டமன்ற மேலவை உறுப்பினர்களுக்கும் அனுப்பப்பட்டன. அப்போது சட்டமன்றப் பேரவை கலைக்கப்பட்டிருந்ததால், சட்ட மன்றப் பேரவை உறுப்பினர்களுக்கு அந்த அறிக்கைகள் வழங்கப்படவில்லை. அண்ணா சாலையில் உள்ள அரசு வெளியீடுகள் விற்பனை நிலையம் பொது மக்களுக்கு இந்த அறிக்கையின் 18 பிரதிகளை விற்பனை செய்துள்ளது. தற்போது 288 பிரதிகள் அங்கு விற்பனைக்கு உள்ளன. இதனால் இவ்வறிக்கையின் பிரதிகள் எரிக்கப்பட்டன என்பது உண்மையல்ல.

எனவே, மாண்புமிகு உறுப்பினர் திரு. என். வீராசாமி தெரிவித்த கருத்துக்களில் உண்மை ஏதும் இல்லை என தெரிவித்துக் கொள்கிறேன்.

(உறுப்பினர் திரு. ஆற்காடு நா. வீராசாமி எழுந்தார்.)

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** இந்த அறிக்கையின் மீது எந்த விதமான வினாவும் எழுப்பப்படலாகாது என்று விதியில் தெளிவாக இருக்கிறது. அதைத் தெரிந்த நீங்களே கேட்டால், என்ன செய்வது ? அமருங்கள்.

**5. அரசு உறுதிமொழிக் குழுவின் இருபத்தி ஏழாவது அறிக்கையை அளித்தல்.**

**திரு. எம். சங்கரலிங்கம் :** துணைத் தலைவர் அவர்களே, அரசு உறுதி மொழிக் குழுவின் இருபத்தி ஏழாவது அறிக்கையை தங்களுடைய அனுமதியோடு இங்கே அளிக்கிறேன். உறுதி மொழிகளைப் பரிசீலனை செய்து அவற்றின் பேரில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளைக் கண்டு சில உறுதிமொழிகளின் பேரில் சரியான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்று வற்புறுத்தி, பல உறுதி மொழிகளை எவ்வாறு நடைமுறைப்படுத்தலாம் என்பதைப்பற்றி ஆராய்வதற்காக அண்டை மாநிலங்களுக்குச் சென்று இந்தக் குழு தன்னுடைய வேலையை சிறப்புறச் செய்து இந்த அறிக்கையை சமர்ப்பித்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[1978 மார்ச் 15

## 5. அரசின் தீர்மானம்.

### ‘தமிழ் நாட்டில் கல்வி வளர்ச்சி’ பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பின் மீது விவாதம்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** துணைத் தலைவர் அவர்களே, “சட்ட மன்ற மேலவையின் முன் வைக்கப்பட்ட ‘தமிழ் நாட்டில் கல்வி வளர்ச்சி’ பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு @ பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப் பட வேண்டும்” என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** முன்மொழியப்பட்ட தீர் மானம்—

“சட்ட மன்ற மேலவையின் முன் வைக்கப்பட்ட ‘தமிழ் நாட்டில் கல்வி வளர்ச்சி’ பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப் பட வேண்டும்.”

**திரு. வே. தங்கப்பாண்டியன்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களால் இந்த ஆண்டு கல்விக் குறிப்பு நம்முடைய மேலவையின் முன் வைக்கப்பட்டிருக்கிறது. கல்வி சம் பந்தமான பல்வேறு கொள்கைகள் இந்தக் கொள்கைக் குறிப்பில் இடம் பெற் றிருக்கின்றன. பொதுவாக மேலவையில் இந்தக் கொள்கைக் குறிப்புகள் மீது பேசுகிற வாய்ப்பு கிடைக்கிற பொழுது, இங்கே வீற்றிருக்கிற பல்வேறு அனு பவம் மிக்க கல்வியாளர்கள், கல்வித் துறையில் நீண்ட காலம் இடம் பெற்ற வர்கள், ஆசிரியர் பிரதிநிதிகள் போன்றவர்கள் தொடர்ந்து பல கருத்துக் களைச் சொல்வதும் அந்தக் கருத்துக்களை அந்தத் துறை அதிகாரிகள் நடை முறைப்படுத்த அரசாங்கத்திடம் ஆணை பெற்று நிறைவேற்றுவதும் தொடர்ந்து நடைபெற்று வரும் காரியமாகும். இந்த ஆண்டு வரவு செலவுத் திட்டத்தை மாண்புமிகு நிதி அமைச்சர் சமர்ப்பித்தபொழுது மிகப் பெருமையோடு ஒரு கருத்தைச் சொன்னார்கள். இந்த மாநிலத்தினுடைய நிதிநிலை அறிக்கையில் 24 சதவிகிதம் கல்விக்காகச் செலவழிக்கிறோம் என்றும் ஏறக்குறைய ரூபாய் 169 கோடி இந்தத் துறையில் செலவழிக்கப்படும் என்றும் அதிலே குறிப்பிடப்பட்டிருந்தது. திரு. காமராஜ் காலத்திலிருந்து அண்ணா அவர்கள் காலத்திலும் கலைஞர் காலத்திலும் தொடர்ந்து வந்திருக்கிற இந்த அரசின் காலத்திலும், தொடர்ந்து பல்வேறு திட்டங்களை நிறைவேற்றும்போது, கல்வித்

---

@ 71-156 ஆம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.



1978 மார்ச் 15] [திரு. வே. தங்கப்பாண்டியன்]

துறைக்கும் பெருமளவு நிதி ஒதுக்கியிருப்பதைப் பாராட்டுகிறேன். கல்வித்
துறையில் நீண்ட காலம் அனுபவம் பெற்றவர்கள் அந்தத் துறையிலே அதி
காரிகளாக இருந்து வருவதால் திட்டமிட்ட காரியங்களைச் செய்துவருகிறார்கள்.
அதிகாரிகளை ஆராய்ந்து அவ்வுடனடியாகவும் மாற்ற வேண்டுமென்றால்,
அவர்கள் நினைக்கிற காரியங்கள் நடைபெறுவதற்கு அரசாங்கத்தினுடைய
கொள்கை தெளிவாக இருக்க வேண்டுமென்பதுதான் எதிர்க் கட்சி வரிசை
யில் இருக்கிறவர்களுடைய எண்ணமாகும். எதிர்க் கட்சி வரிசையில் இருந்த
போது, இந்தத் துறையில் மாற்றம் வேண்டுமென்று சொன்ன நண்பர்கள்
குரல் இப்போது கேட்பதில்லை. ஒருகால் அவர்கள் வரிசை மாறியிருப்பதால்
அப்படி இருக்கலாம். இந்தத் துறை மிக வேகமாக வளருகிற ஒரு துறை
யாகும். உடனடியாக லாபம் கிடைக்காவிட்டாலும், இந்த நாட்டின் தரத்தை
உயர்த்துகிற ஒரு துறை இதுவாகும். அண்ணா அவர்கள் நாட்டின் செல்வம்
எது என்பதைப்பற்றிக் குறிப்பிடும்போது, இந்த நாட்டின் செல்வமாக அதி
லுள்ள நிதி வசதியையோ மற்ற செல்வங்களையோ குறிப்பிடாமல் மக்களின்
மனவளம், மன நலம் இவைதான் ஒரு நாட்டின் செல்வம் என்று குறிப்பிட்
டார்கள். அந்த மக்களின் மன நலத்தை கல்வித் துறை மூலமாகத்தான்
உண்டாக்க வேண்டும். நீண்ட தொலை நோக்கோடு செய்ய வேண்டிய காரியம்
அது. கல்வி அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையில் தனது
செல்வாக்கைப் பயன்படுத்தி அதிகத் தொகையைக் கல்வித் துறைக்கு ஒதுக்கச்
செய்திருக்கிறார்கள். தனிப்பட்ட முறையில் அதைப் பாராட்டுகிறேன்.
கல்வித் துறையில் ஏற்பட்டிருக்கிற சீர்திருத்தத்தை வரவேற்கும் அதே நேரத்
தில் சீர்திருத்தங்களை உடனடியாக நிறைவேற்ற வேண்டுமென்று ஆர்வம்
இருந்தாலும் கூட, அரசாங்க அதிகாரிகள் மிகுந்த முன் யோசனையோடு
அதைப்பற்றி ஆய்ந்து சிந்தித்து, பரிசீலனை செய்து, அதற்கான கொள்கைகளை
உருவாக்க வேண்டுமென்ற எண்ணத்தை இங்கே வலியுறுத்தக் கடமைப்
பட்டிருக்கிறேன். பல்வேறு புதிய மாற்றங்களை இந்த ஆண்டு கல்வித் துறை
யில் புகுத்தியிருக்கிறோம். தமிழ் நாட்டின் கல்வித் தரம் ஒரு காலத்தில்
இந்தியத் துணைக்கண்டத்தில் சிறப்பான இடம் பெற்றிருந்தது. ஐ.ஏ.எஸ்.
போன்ற உத்தியோகத்திற்கு வருகிறவர்களில், இந்தியத் துணைக் கண்டத்தைப்
பொறுத்தவரையில், தமிழ் நாட்டிலிருந்துதான் அதிகமாக வருகிறார்கள் என்ற

(முற்பகல் 11-20)

நிலைமை அப்போது இருந்தது. அதிலும் குறிப்பாக, தமிழ் நாட்டிலிருந்து
வெளியிலே சென்றவர்கள் மத்திய அரசானாலும் சரி, தனியார் துறையானாலும்
சரி, அவர்களின் அறிவாற்றல் காரணமாக மதிப்பும் மரியாதையும் மிக்கவர்
களாக இருக்கிறார்கள் என்ற கருத்து, கொஞ்சம் கொஞ்சமாக மெல்ல மெல்ல
மறைந்து வருகிறது. கல்வியின் தரம் உயரவில்லை என்பதற்கு அமைச்சர்கள்

[திரு. வே. தங்கப்பாண்டியன்] [1978 மார்ச் 15

மீதோ, அரசாங்கத்தின் பலஹீனமான கொள்கை என்றோ, அல்லது நிறை
வேற்றுகின்ற அதிகாரிகளின் அசிரத்தை என்றோ நான் குறை சொல்ல மாட்
டேன். அப்படிப்பட்ட நிலை தொடர்ந்து உருவாகிக்கொண்டு வருகிறது.
ஆகவே, நான் கேட்டுக்கொள்ள விரும்புவதெல்லாம், கல்வியின் தரத்தைப்
பலப்படுத்துவதற்கு அரசு எடுத்துக்கொண்ட முயற்சிகள் என்ன என்பது
தான். கல்வித் தரம் குறைகிறது, குறைகிறது என்று அமைச்சர்களும் இங்கே
இருக்கிற சட்டமன்ற உறுப்பினர்களும் அதிகாரிகளும் சொல்கிறோமே தவிர,
அது குறித்து அரசு எடுத்துக்கொண்ட திட்டவட்டமான நடவடிக்கை என்ன?
என்ன காரணத்தால் கல்வித் தரம் குறைந்து வருகிறது? ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்.
தேர்வுகளில் தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்கள் அதிகமாகத் தேர்ந்தெடுக்கப்
படாத நிலைமைக்கு என்ன காரணம் என்ற அடிப்படைக் கருத்தை அரசாங்கம்
கூர்ந்து பரிசீலிக்க வேண்டும். இப்படிப்பட்ட பயங்கரமான நிலை உருவானால்,
நமது செகரடேரியட்டிலும் சரி, மற்ற மாநில அரசுத் துறையிலும் சரி, இப்போ
துள்ள ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். அதிகாரிகள் சென்ற பின்பு, புதிதாக வேறு பல
மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் இங்கே இடம் பெற்றுவிடுகிற வாய்ப்பு இருக்
கிறது. இப்போது வேண்டுமானாலும் எடுத்துப் பார்க்கலாம். ஒவ்வொரு
மாவட்டத்திலும் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். அதிகாரிகள் வேறு பல மாநிலங்களைச்
சேர்ந்தவர்களாக, வேறு மொழி பேசுகிறவர்களாக இருக்கிறார்கள். இதில்
மாநிலக் கோட்டா முறை இருக்கலாம். இல்லை என்று சொல்லவில்லை. அரசின்
புள்ளி விவரங்களைப் பார்க்கும்போது, பத்திரிகைக் குறிப்புகளைப் பார்க்கும்
போது, கல்வித் தரம் குறைந்த காரணத்தால்தான் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்.
போன்ற தேர்வுகளில் தமிழர்கள் வர வாய்ப்பு இல்லாமல் போகிறது,
தமிழர்கள் அதிகாரிகளாக வருகின்ற வாய்ப்பை இழக்கக்கூடிய நிலைமை
இருக்கிறது என்று பேசப்படுகிறது. இதைப்பற்றிக் கல்வித் துறை ஆழ்ந்து
பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கல்வித் துறையில் நாம் கல்லூரிக் கல்வி, உயர் செகண்டரி கல்வி, ஆரம்பக்
கல்வி என்ற மூன்று பிரிவுகளை ஏற்படுத்தியிருக்கிறோம். கல்லூரிக் கல்வி தனி
யாக 'அடானமஸ் பாடி' என்ற முறையில் பல்கலைக் கழகத்தின் மேற்பார்வை
யில் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. நமது மாநிலம், இரண்டு பல்கலைக்
கழகங்களைப் பெற்றிருக்கிறது—இது கல்வி வளர்ச்சியைக் காட்டுகிறது. குறிப்
பாக, நீண்டகாலமாக பிரச்சினையாக இருந்து வந்துள்ள மதுரைப் பல்கலைக்
கழகம் உருவாகியிருக்கிறது. புது பல்கலைக் கழகங்கள் திருச்சியிலும் வரலாம்,
கோவையிலும் வரலாம் என்று இன்றைக்கு ஆளுநர் தரப்பிலிருந்தும் அமைச்
சர் தரப்பிலும் அறிக்கைகள் வந்துள்ளன. இது வரவேற்கத்தக்க அம்சங்கள்.
ஒரு நாட்டின் வளர்ச்சியை அந்நாட்டின் கல்வி வளர்ச்சியை அடிப்படையாக
வைத்துத் தான் பார்க்கிறோம், அந்த முறையிலும் நாம் பெருமைப்பட்டுக்



1978 மார்ச் 15] [திரு.வே. தங்கப்பாண்டியன்]

கொள்ள வாய்ப்பு இருக்கிறது. ஆனால் இதில் நான் ஒரு சிறு வேதனையைத்
தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன். கல்வியில், அதிலும் கல்லூரிக் கல்வி
யில் அரசியல் தலையீடு இருக்கக் கூடாது என்று திட்டவட்டமாகச் சொல்லி
வருகிறோம். அரசியல்வாதிக்கு இதில் இடமே இல்லை. சிண்டிகேட்டும்
செனேட்டும் தான் கல்லூரிக் கல்வி பற்றிய முடிவுகளை எடுக்கிறது. வைஸ்-
சான்ஸலர், துணை வேந்தர் அவற்றை நிறைவேற்றி வைக்க வேண்டுமென்ற
நல்ல மரபுகளை நாம் பின்பற்றி வருகின்றோம். சென்னைப் பல்கலைக் கழகத்தில்
டாக்டர் லட்சுமணசுவாமி முதலியார் இருந்த போது, நல்ல மரபுகள் காக்கப்
பட்டன. ஆனால், இன்றைக்கு பல பிரச்சினைகள் இது குறித்து உரு
வாகியிருக்கின்றன. மதுரைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் பதவி இன்னும்
காலியாக இருக்கிறது. நான் அந்தப் பகுதியைச் சேர்ந்தவன் என்ற முறை
யில், வேதனையோடு சொல்கிறேன், இது குறித்து ஒரு ஒத்திவைப்புத் தீர்
மானம் கூட கொண்டு வந்து மரபுகள் மீறப்படுகின்றன என்று சொல்லியிருக்
கிறேன். இதில் அரசுக்கும் ஆளுநருக்கும் கருத்து வேறுபாடு இருப்பதாகச்
சொல்லப்படுகிறது. அதன் காரணமாக துணை வேந்தர் பதவி நிரப்பப்பட
வில்லை என்று கூறப்படுகிறது. ஆனால், ஆளுநர் அவர்கள் திருச்சியில் முதல்
வருக்கும் எனக்கும் கருத்து வேறுபாடு கிடையாது என்று சொல்லியிருக்கி
றார்கள். முதல்வரும் "எனக்கும் ஆளுநருக்கும் கருத்து வேறுபாடு கிடை
யாது. ஆளுநர் மிகுந்த பற்றும் பிரியமும் வைத்திருக்கிறார்கள்" என்று
சொல்லியிருக்கிறார்கள். இப்படிச் சொல்லிவிட்டு, மதுரைப் பல்கலைக் கழகத்து
துணைவேந்தர் பதவிக்கு நியமிப்பதற்கு முட்டுக்கட்டை இருப்பானேன்?
கல்வித் துறையில் பின்பற்றப்படுகிற மரபுகள், கோட்பாடுகள் ஆகியவைகளைத்
தடுத்து நிறுத்துகிற சூழ்நிலையை உருவாக்க இந்த அரசு காரணமாக இருக்கக்
கூடாது என்ற முடிவுக்கு வந்தாக வேண்டும். அப்படிப்பட்ட முட்டுக்கட்டை
எந்தத் தரப்பிலிருந்து, எந்தப் பக்கத்திலிருந்து வந்தாலும், என்ன எதிர்ப்புகள்
வந்தாலும், அவற்றைத் தகர்த்தெறிந்து விட்டு திட்டவட்டமான முடிவுகளை
இந்த அரசு மேற்கொள்ள வேண்டும். எந்தத் தேதியிலிருந்து துணைவேந்தர்
பதவிக்கு நியமிப்பது என்ற முடிவினை எடுத்தாக வேண்டும். பேனல் வைத்
திருக்கிறார்கள். அதில் மூன்று பேர்களின் பெயர்கள் சிபாரிசு செய்யப்பட்
டிருக்கிறது. இந்த மூன்று பேர்களில் ஒருவரை நியமிப்பது என்ற மன உறுதி
ஏன் ஏற்படவில்லை என்று தெரியவில்லை. இதில் இந்தத் தளர்ச்சியை, விட்டுக்
கொடுக்கிற மனப்பான்மையை அதுவும் பல்கலைக்கழகத்திலே உருவாக்கிவிட
லாகாது என்பதனைக் கூற விரும்புகிறேன். மற்ற துறைகளிலே, செக்ரடேரி
யட் போன்ற துறைகளிலே, ஒரு இலாக்கா காரியதரிசி இல்லை என்றால், அதை
இன்னொருவர் 'அடிஷனல் சார்ஜ்' என்ற முறையிலோ, மாவட்டத்தில் மாவட்ட
ஆட்சித் தலைவர் இல்லை என்றால், டி.ஆர்.ஓ. கவனிப்பது என்ற முறையிலோ
கவனிப்பதைப்போல இந்தத் துறையில் கவனிக்க முடியாது. அங்

[திரு. வே. தங்கப்பாண்டியன்] [1978 மார்ச் 15

அரசின் கல்லூரியில் உள்ளவர்களுக்கு இன்றைக்கு என்ன சலுகைகள் கொடுக்கப்படுகின்றனவோ, அதே சலுகைகள் தனியார் கல்லூரிகளில் உள்ளவர்களுக்கும் கொடுக்கப்பட வேண்டும் என்று தனியார் கல்லூரிப் பேராசிரியர்கள் கோரிக்கை வைத்திருக்கிருர்கள். 20 மாணவர்கள் இருந்தால் கூட, துணைப் பேராசிரியர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்க வேண்டுமென்பதற்காக, பதவி கொடுக்கப்படுகிறது. ஆனால் தனியார் கல்லூரிகளில் 20 மாணவர்களுக்குக் குறைந்தால் ஆசிரியர்களுக்குப் பதவி இல்லாமல் போய்விடக்கூடிய நிலைமை இருக்கிறது.

(முற்பகல் 11-30)

தனியார் கல்லூரிகளைப் பொறுத்தவரையில் ஒரு ஆசிரியருக்கு 20 மாணவர்கள் என்ற எண்ணிக்கை குறைந்துவிட்டால் அந்த ஆசிரியருக்கு வேலைவாய்ப்பில்லாமல் போகும் நிலை இருக்கிறது. ஆகவே அரசு போடும் உத்தரவுகள் அனைத்தும் தனியார் கல்லூரிகள், அரசுக் கல்லூரிகள் என்ற வித்தியாசம் இல்லாமல், தனியார் கல்லூரிகளுக்கும் பொருந்தும், அரசுக் கல்லூரிகளுக்கும் பொருந்தும் என்ற அளவில் இருக்க வேண்டும் என்பதையும் வலியுறுத்திச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்து, மாணவர் தேக்கங்கள் என்பது கல்லூரி நிலையில் அதிகமாக ஏற்
படுகின்றன. எஸ். எஸ். எல். சி. மட்டத்தில் பார்க்கிற நாம் இந்தத் தேக்
கத்தை கல்லூரி மட்டத்தில் பார்ப்பதில்லை. ஏப்ரல், செப்டம்பர், என்று மாற்
மாறி தேர்வுகள் வருகிற காரணத்தால், ஒரு ஆண்டில் எத்தனை சதவீத மாண
வர்கள் கல்லூரி நிலையில் தவறி விடுகிருர்கள் என்பது பற்றிய கணக்கை நாட
வைத்துக்கொள்வதே இல்லை. என்னைப் பொறுத்தவரையில், எஸ்.எஸ்.எல்.சி
யைக் காட்டிலும் கல்லூரி மட்டத்தில்தான் மாணவர் தேக்கம் அதிகமாக இரு
கிறது. கல்லூரிக் கல்வியின் தரத்தை உயர்த்த வேண்டும் என்று நாம் பா
படுகிருேம். வரவேற்க வேண்டிய விஷயம். கல்லூரிக் கட்டம் தான் கல்
யின் தரத்தை உயர்த்த சரியான கட்டம் என்று நாம் நினைத்தால், அதற்கா
வழியில் சிறப்பான முறைகளை நாம் பின்பற்றியாக வேண்டும். அதற்கு மி
முக்கியமான வழி மாணவர் ஆசிரியர் விகிதாசாரத்தைக் கீழே இருந்து அ
வது ஆரம்பக் கல்வியில் இருந்து, உயர்நிலைப் பள்ளிக் கல்வி முதல், கல்லூர்
கல்வி வரை பரவலாக்க வேண்டும். இதற்கு ஏராளமான நிதி தேவைப்பட
என்று குறைபாடு இருந்தாலும், அந்தக் குறைபாடுகளை நீக்க மற்ற வேண்ட
துறைகளில் சிக்கனத்தைக் கடைப்பிடித்து அரசு இதற்கான நிதிவசதியை
பெற்றிட வேண்டும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

கல்லூரிக் கல்வியில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்களின் பரவலான பிரச்சினைய
மற்றொன்றையும் இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன். அரசாங்கக்
லூரிகளில் பணியாற்றும் பேராசிரியர்கள், உதவிப் பேராசிரியர்கள் ஆகி



1978 மார்ச் 15] [திரு. வே. தங்கப்பாண்டியன்]

ரின் ஊதியத்திற்கும், உத்தியோகத்திற்கும் இருக்கிற பாதுகாப்பு—
கியாரண்ட்டி—தனியார் கல்லூரிகளில் பணியாற்றும் ஆசிரியப் பெருமக்களுக்கு
இல்லை என்பதை வேதனையோடு சொல்லிக் கொள்ளுகிறேன். அரசுக் கல்லூரி
களில் பணியாற்றும் பேராசிரியர்களுக்கு, உதவிப் பேராசிரியர்களுக்கு மாறு
தல்தான் வருமே தவிர, உத்தியோகத்தைப் பொறுத்தவரையில், ஒரு உத்தர
வாதம், பாதுகாப்பு இருக்கிறது. எந்தக் காரணத்தைக் கொண்டும் இவர்
களுக்கு உத்தியோகமில்லை என்று அரசாங்கம் சொல்லாது. ஆனால் தனியார்
கல்லூரி ஆசிரியர்களைப் பொறுத்தவரையில், எந்த நேரத்தில் அந்தக் கல்லூரி
யின் தாளாளர் அல்லது நிருவாகம் விரும்பினாலும், அவர்களை வீட்டுக்கு
அனுப்பி விடலாம் என்று சொல்கிற நிலை இருந்து வருகிறது. தனியார் கல்
லூரிகளில் பணியாற்றும் இந்த ஆசிரியப் பெருமக்களுக்கு உத்தியோகப் பாது
காப்பு அளிக்கப்பட வேண்டும். அவர்கள் வாங்குகிற சம்பளம் முழுமையாக
இன்றையதினம் அவர்கள் கைக்குப் போய்ச் சேருவதில்லை. அந்தக் காலத்
தில் மானேஜ்மெண்ட் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களின் சம்பளத்தில்
ஒரு 'பிடித்தம்' இருந்தது என்று சொல்வார்கள். அதாவது அந்த மானேஜ்
மெண்ட் தங்களின் கீழ் பணியாற்றும் ஆசிரியர்களின் ஊதியத்தில் ஒரு குறிப்
பிட்ட தொகையைப் பிடித்துக்கொண்டுதான் அவர்களுக்கு ஊதியமாகத் தந்து
வந்தார்கள். இன்றையதினம் கல்லூரிகள் போன்ற பெரிய நிறுவனங்களில்
கூட இந்த நிலைமை உருவாகி விட்டது. அரசாங்கம் இதில் கவனம் செலுத்தி,
கல்லூரிகளில் பணியாற்றும் ஆசிரியப் பெருமக்களின் முழுச் சம்பளமும் அவர்
கள் கையிலே போய்ச் சேரும் வகையில் அவர்களுக்குச் சம்பள உத்தரவாதம்
ஏற்படுத்த வேண்டும். எனவேதான் அரசுக் கல்லூரிகளில் பணியாற்றும்
ஆசிரியப் பெருமக்களுக்குக் கிடைக்கும் ஊதியப் பாதுகாப்பு, உத்தியோகப்
பாதுகாப்பு, தனியார் கல்லூரிகளில் பணியாற்றும் பேராசிரியர்களானாலும் சரி,
துணைப் பேராசிரியர்களானாலும் சரி, அங்கே பணியாற்றும் அத்தனை பேருக்கும்
இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இடைநிலைக் கல்விக்கு அடுத்து உள்ள ஹையர் செகண்டரி எஜுகேஷன்
பற்றி இன்றையதினம் இரண்டுவிதமான விமர்சனங்கள் நடைபெற்றுக் கொண்
டிருக்கின்றன. ஆனால் உயர்நிலைப் பள்ளிக் கல்வியில் இந்த மாறுதல் தேவை
என்று எண்ணுகிறபோது, அதைப்பற்றி நாம் நன்கு சிந்தித்து, சரியான முடி
வுக்கு வர வேண்டும். இதைப்பற்றி இரண்டு மூன்று முறை 'தினமணி'
பத்திரிகையில் கட்டுரைகூட வந்திருக்கிறது. 10+2+3 Scheme
பற்றி அதிலே சொல்லப்பட்டிருக்கிற கருத்தைப் பார்க்கும்போது, நியாயம்
தானா என்பது எனக்குத் தோன்றுகிறது

[திரு. வே. தங்கப்பாண்டியன்] [1978 மார்ச் 15

திட்டவட்டமாக நம்முடைய Director of School Education
மாண்புமிகு கல்வி அமைச்சர், கல்வித் துறையின் செயலாளர் ஆகியோர் ஒன்று
கூடி ஒரு முடிவெடுத்து நிறைவேற்றுகிறபோது, அப்படி எடுக்கும் முடிவு,
அல்லது மாறுதல் அவசரப்பட்டு நாம் எடுத்த முடிவோ என்று நினைக்கக்கூடாத அளவுக்கு நாம் இப்போதே சிந்தித்துச் செயல்பட வேண்டும்.

கல்லூரியிலிருந்து பி.யூ.சி. வகுப்பை எடுத்துவிடுகிறோம். அதை இனி
மேல் ஹையர் செகண்டரி பள்ளிகளில் கொண்டு வருகிறோம். இந்த வகையில்
தான் ஹையர் செகண்டரி எஜுகேஷன் என்ற மாறுதல் வருகிறது. ஏற்
கெனவே உள்ள உயர்நிலைப் பள்ளிக் கல்வியோடு ஹையர் செகண்டரி வகுப்பை
இணைப்பதாகச் சொல்லோம். இது திட்டவட்டமாக உயர்நிலைப் பள்ளிகளில்
தான் இருக்க வேண்டுமென்று அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.
நான் அதை வரவேற்கிறேன். இந்த ஹையர் செகண்டரி - வகுப்புகள் 500
அல்லது 500 என்பது வேறுபாடே தவிர, முரண்பாடல்ல என்று
குறிப்பிட்டார்கள். இதையும் நான் வரவேற்கிறேன்.

இப்படி ஹையர் செகண்டரி வகுப்புகளைக் கொண்ட பள்ளிகள் அதிகமாக
கிராமப் பகுதிகளில்தான் இருக்க வேண்டுமே தவிர, நகரப் புறங்களில் இல்லா
மல் பார்த்துக்கொள்ள வேண்டும். காரணம் இன்றையதினம் கிராமப்புறங்
களில் வாழ்கிற ஏழை எளிய மாணவர்கள் உயர் கல்வி பெறுவதற்கும்,
கல்லூரிக் கல்வி பெறுவதற்கும் அதிகமாகப் பணம் செலவழிக்க வேண்டியிருக்
கிறது. அதைக் குறைத்துவிடும் நோக்கத்தில்தான் இந்த முறையைப் பள்ளி
களுக்குக் கொண்டு வருகிறோம். இந்தியத் துணைக் கண்டம் முழுவதும் இந்த
முறைதான் வரும் என்று எதிர்பார்த்து, இந்தத் திட்டம்தான் மிகச் சிறந்த
திட்டம் என்று முடிவெடுத்து, இதை நாம் பின்பற்றுகிறோம் என்று அமைச்சர்
அவர்கள் குறிப்பிட்டார்கள்.

இந்த நோக்கில் இதன்காரணமாக கல்லூரிகளுக்கு உண்டாகும் நிலை
மையை எண்ணிப் பார்க்க வேண்டும். அங்கே இருப்பவர்களுக்கு உத்தியோ
கப் பாதுகாப்பு இருக்கிறது. கல்லூரிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு
வேலைக்கான உத்தரவாதம் இருக்கிறது. அந்தக் கல்லூரிகளில்தான் மிகப்
பெரிய கட்டடங்கள் இருக்கின்றன. பி.யு.சி.யை நம்பித்தான் பல பெரிய
கல்லூரிகள் இருக்கின்றன. பி.யு.சி.-யில் 3 அல்லது 4 செக்ஷன்கள் இருக்
கின்றன. இதை நம்பித்தான் பல கல்லூரிகள் நடைபெற்றுக்கொண்டிருக்
கின்றன. இந்த நிலையில் ஹையர் செகண்டரி வகுப்புகளை உயர் நிலைப் பள்ளி
களுக்குக் கொண்டுவந்தால், இந்தக் கல்லூரிகளின் நிலைமை என்ன என்பதை
யும் எண்ணிப்பார்க்க வேண்டும்.



1978 மார்ச் 15] [திரு. வே. தங்கப்பாண்டியன்]

எனக்கு ஒரு தகவல் கிடைத்திருக்கிறது. அது சரியாகவும் இருக்கலாம், தவறாகவும் இருக்கலாம். இராமநாதபுரம் மாவட்டத்தில் மொத்தம் 114 உயர் நிலைப் பள்ளிகள்—அரசாங்கப் பள்ளிக்கூடங்கள்—இருக்கின்றன. இவற்றில் 9 பள்ளிகளுக்குத்தான் ஹையர் செகண்டரி வகுப்புகள் வைத்து நடத்து வதற்கு அனுமதி கிடைத்திருக்கிறது என்று கேள்விப்படுகிறேன். அந்த மாவட்டத்தில் மொத்தம் எத்தனை பள்ளிகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன என்பது எனக்குத் தெரியாது. ஆனால் 114 பள்ளிகள் உள்ள அந்த மாவட்டத் தில், 9 அல்லது 10 பள்ளிகளுக்குத்தான் அந்த வாய்ப்பு கிடைக்கிறது என்றால், தனியார் பள்ளிக்கூடங்களுக்கு வாய்ப்பு அதிகமாக இருக்கிறது என்று அர்த்தம். தனியார் பள்ளிகள் பணவசதி படைத்திருப்பதால், பல வசதிகளை அவர்கள் தேடிக்கொள்ள முடிகிறது. அவர்களுக்கே மீண்டும் மீண்டும் இந்த வசதிகளைக் கொடுக்க வேண்டுமா என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டும்.

அருப்புக்கோட்டை நகரத்தில் 3 தனியார் பள்ளிகளுக்கு ஹையர் செகண்டரி வகுப்புகள் நடத்த வாய்ப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. பக்கத்தில் உள்ள கிராமப் பகுதிகளுக்கு இந்த வாய்ப்பு கொடுக்கப்பட வில்லை. நாம் ஒரு புதிய திட்டத்தை உருவாக்கும்போது, மீண்டும் மீண்டும் நகரப்புறங்களுக்குத் தான் அந்த வாய்ப்பு கிடைக்கிறது என்றால், கிராமப்புறங்களில் உள்ள பள்ளி களின் நிலை என்ன ஆவது? கிராமப்புறங்களில் உள்ள ஏழை எளிய மாணவர் கள் கல்லூரிக்குச் சென்று படிக்க பணம் செலவழிக்க முடியவில்லை. அங்கே விடுதிகளில் தங்கிப் படிக்க பணம் செலவழிக்க முடியவில்லை. அதோடு புதிய தொழிற் கல்வி சேர்ந்திருக்கிறது. அதை ஆரம்பத்தில் கிராமப் புறங் களுக்குத்தான் கொண்டுவருவோம் என்று சொல்லிவிட்டு, அந்த உணர்வு தலை கீழாக்கி இருக்கிற இந்த நிலையில் தனியார் பள்ளிகளுக்குத்தான் ஹையர் செகண்டரி வகுப்புகள் வைத்து நடத்த வசதி இருக்கும் என்று சொல்லுவது எப்படி சரி என்பது எனக்குப் புரியவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பட்டியலை வாங்கிப் பார்க்க வேண்டும். ஒரு மாவட்டத்தில் ஹையர் செகண்டரி வகுப்புகள் தனியார் பள்ளிகளுக்கு எத்தனை சதவீதம் கொடுக்கப்பட்டிருக் கிறது, அரசுப் பள்ளிகளுக்கு எத்தனை சதவீதம் கொடுக்கப்பட்டிருக்கிறது என் பதைப் பார்க்க வேண்டும். 50-50 என்று பாதி இவர்களுக்கு மற்றது அரசுப் பள்ளிகளுக்கு என்றாலாவது நியாயம் இருக்கும். இதைப்பற்றி அரசாங்கம் சிந்திக்க வேண்டும். மாநிலம் முழுவதும் 500 பள்ளிகளுக்கு இந்த வகுப்புகள் தரப்படுகின்றன. அதில் எத்தனை தனியார் பள்ளிகளுக்கு, எத்தனை அரசுப் பள்ளிகளுக்கு என்பதைப் பார்த்து, அரசுப் பள்ளிகளுக்கு இந்த வாய்ப்பு அதிகப்படியாக இருக்கச் செய்ய வேண்டும்.

உயர்நிலைப் பள்ளிகளில் மாணவர் சேர்க்கையைப் பொறுத்தவரை, பழைய முறையைப் பின்பற்றி வருகிறோம். 50 மாணவர்கள் சேர்ந்தால், 2-வது செக்ஷன் வருகிறது. புதிய கல்வித் திட்டத்தின் காரணமாக மாணவர்

[திரு. வே. தங்கப்பாண்டியன்] [1978 மார்ச் 15

ஆசிரியர் எண்ணிக்கையைக் குறைத்தால்தான், ஆசிரியர்களுடைய போதனை சிறப்பாக இருக்கும். அப்போதுதான் தரமான கல்வியை மாணவர்களுக்கு ஆசிரியர்கள் அளிக்க முடியும். ஆசிரியர்களிடத்தில் நல்ல விருப்பம் இருந்தாலும், மூளைப்பு இருந்தாலும் கூட, அவர்கள் தங்கள் விருப்பத்தை நிறைவேற்றுகிறபோது, ஏராளமான மாணவர்களை வைத்துக்கொண்டு, ஏராளமான கும்பலை வைத்துக்கொண்டு, பெருங் கூட்டத்தை வைத்துக்கொண்டு, தரமான கல்வியைப் போதிக்க முடியாது. இந்தச் சூழ்நிலைதான் இன்றையதினம் அரசுப் பள்ளிகளில் இருக்கின்றது. தனியார் பள்ளிகளில் அதிகமான பணத்தைப் போட்டு—சில சந்தர்ப்பங்களில் தங்கள் சொந்தப் பணத்தைப் போட்டு—ஆசிரியர்களை நியமனம் செய்கிறார்கள். அரசாங்கப் பள்ளிகளில் அப்படிச் செய்ய முடியவில்லை. அவர்கள் ஏற்கெனவே உள்ள விதிமுறைகளுக்கும் சட்ட திட்டங்களுக்கும் உட்பட்டுச் செயல்பட வேண்டியவர்களாக இருக்கிறார்கள். இதையும் நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

அடுத்து, இங்கே தரப்பட்டிருக்கிற அறிக்கையில் எல்லா மாவட்டங்களுக்கும் முதன்மைக் கல்வி அதிகாரிகள் போடப்பட்டிருக்கின்றனர் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் திருச்சி—புதுக்கோட்டை ஆகிய இரு மாவட்டங்களுக்கும் சேர்த்து ஒரு கல்வி முதன்மை அதிகாரிதான் இருக்கிறார். புதுக்கோட்டை மாவட்டம் தனி மாவட்டமாக ஆகி 3, 4 ஆண்டுகளுக்கு மேலாகி விட்டது. ஆனாலும், புதுக்கோட்டை மாவட்டத்திற்கு ஒரு தனி அதிகாரி போடப்படவில்லை. அதைப் போலவே தர்மபுரி, சேலம் ஆகிய இரு மாவட்டங்களுக்கும் ஒரு அதிகாரிதான் போடப்பட்டிருக்கிறார். இங்கேயும் தனித் தனியாக மாவட்ட முதன்மைக் கல்வி அதிகாரிகள் போடப்பட வேண்டும். இதுபோன்ற காரியங்களைச் செய்வதற்கு அரசாங்கத்தில் நிதி வசதியில்லை என்று சொல்வது சரியில்லை. தனித்தனி மாவட்டங்களுக்குத் தனித்தனி அதிகாரிகளை நியமிப்பதன் மூலம் அந்த இலாக்காவில் உள்ளவர்களுக்குப் பதவி உயர்வுகூட கிடைக்கும். அதையும் சிந்திக்க வேண்டும்.

(முற்பகல் 11-40)

இன்னொன்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். கல்வித் துறையில் உள்ள அதிகாரிகள் மீது கடுமையாக இருக்க வேண்டும் என்று நான் சொல்வது கிடையாது. அவர்களும் பல முயற்சிகளை மேற்கொண்டு செய்து கொண்டிருக்கின்றார்கள். தவறு என்று வருகின்ற விஷயங்களை, வேகமாக கவனிப்பதில்லை. மற்ற துறைகளிலே உள்ள வேகம், கல்வித் துறையிலே இன்னும் வரவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஒரு மாவட்டத்தில் ஒரு முதன்மைக் கல்வி அதிகாரி மீது ஒரு குற்றச் சாட்டு சொல்லப்பட்டு, அரசாங்கம் அது சம்பந்தமாக நடவடிக்கை எடுத்தது. அதன் பொருட்டு வழக்கும் போடப்பட்டது. அந்த வழக்கு பிறகு வாபஸ் பெறப்பட்டிருக்கின்றது என்று



1978 மார்ச் 15] [திரு. வே. தங்கப்பாண்டியன்]

சொல்கின்றார்கள். வழக்கு நிரூபிக்கப்பட வேண்டும். அரசாங்கம் வழக்கை வாபஸ் பெறுவது நல்லதல்ல. அவர் குற்றம் செய்யவில்லை என்றால், வாபஸ் பெறலாம். ஆனால் அரசாங்கம் தானாகவே வாபஸ் வாங்கிக்கொண்டிருக்கிறது என்பதால், அதிலே உள் நோக்கம் இருப்பதாக எண்ணம் தோன்றும்.

மாவட்ட ஆட்சித் தலைவருக்கு இல்லாத அதிகாரம் கூட முதன்மைக் கல்வி அதிகாரிகளுக்கு இருக்கின்றது. ஆசிரியர்களுக்கு ‘அப்பாயின்ட்மெண்ட்’ கொடுப்பது, பி ளிங் ஆசிரியர்களைப் போடுவது, மாற்றுவது, ஹெட்மாஸ்டர்களை மாற்றுவது போன்ற அதிகாரங்கள் எல்லாம் அவர்களுக்கு இருக்கின்றது. அவர்கள் விரும்பினால், ஆசிரியர்களை எங்கு வேண்டுமானாலும் மாற்றலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நம் கல்வி இயக்குநர் அவர்கள்கூட பள்ளி ஆசிரியர்களை நியமிக்க முடியாது. முதன்மைக் கல்வி அதிகாரிகள்தான் நியமிக்கமுடியும். அப்படிப்பட்ட அதிகாரிகளின் நடவடிக்கைகளைக் கண்காணிக்க வேண்டும் என்று சொல்லிக் கொள்கிறேன். கல்வி அதிகாரி ஒருவர் மீது குற்றம் சாட்டப்பெற்று அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்து அரசாங்கம் நடவடிக்கை எடுத்து, வழக்கு கொண்டு சென்ற பின்னர், வழக்கு முடிவதற்கு முன்பு வாபஸ் பெறக்கூடாது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

ஏராளமான உயர்நிலைப் பள்ளிக் கட்டடங்கள் இடிந்து மோசமாக இருக்கின்றன. வெள்ளம் வந்த பிறகு, அந்தப் பகுதிகளில் உள்ள பள்ளிகளும் மிகவும் மோசமான நிலைமையில் இருந்து கொண்டிருக்கின்றன. இதற்கு என்று ஒரு நல்ல திட்டம் வகுக்க வேண்டும். ஒவ்வொரு பள்ளியிலும் குறைந்தபட்சம் இரண்டு கட்டிடங்களாவது இருக்க வேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இரண்டு கட்டிடங்கள் கண்டிப்பாக இருந்தாக வேண்டும் என்பதை நான் வலியுறுத்திச் சொல்லிக்கொள்கிறேன். அப்படி இருந்தாக வேண்டும் என்ற அடிப்படையில் கல்விக்கூடங்களைத் தொடங்க வேண்டும். இப்போது புதிதாகக் கல்லூரிகளையும், உயர்நிலைப் பள்ளிக் கட்டிடங்களையும் கட்டுவதைக் கூட நிறுத்தி வைக்கலாம். கட்டுவதற்கு ஓய்வு கொடுக்கலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன். கொஞ்ச காலத்திற்கு அந்தத் திட்டத்தை நிறுத்தி வைக்கலாம். இருக்கின்ற கல்விக் கூடங்களை விருத்தி செய்வதற்கும், அதனுடைய பராமரிப்பு வேலைகளைச் செய்வதற்கும், மேம்பாடுகளை உண்டாக்குவதற்கும் அரசாங்கம் முயற்சி செய்ய வேண்டும். இப்படிப்பட்ட முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமே தவிர, புதிதாகக் கல்லூரிக் கட்டடமோ உயர்நிலைப் பள்ளிகளோ உருவாக்குவதனால் பலனில்லை. கல்வியின் குவான்டிடி போதும், ஆனால் குவாலிட்டியை, தரத்தை நாம் வளப்படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதற்கான முயற்சி இப்போது ஏராளமான பயிற்சிப் பள்ளிகளை அரசு மேற்கொள்ள வேண்டும்.

கூடங்கள் இருக்கின்றன. 3, 4 கட்டடங்கள் கிட்டத்தட்ட ரூபாய் 10 லட்சம்,
ரூபாய் 5 லட்சம் என்ற அளவுக்கு செலவிடப்பட்டு, கட்டப்பட்டுள்ளன.
பயிற்சிப் பள்ளிக்கூடங்கள் செகண்டரி கிரேட் டீச்சர்ஸ் டிரெயினிங்குக்
காகக் கட்டப்பட்டுள்ளன. அந்தக் கட்டடங்கள் எல்லாம் பயன்படுத்தப்படா
மல் இருக்கின்றன. உதாரணத்திற்கு முதல்வர் அவர்கள் தொகுதியில்கூட 1
கட்டடங்கள் மற்றும் இடங்கள் எல்லாம் இருக்கின்றன. பேரையூர், வள்ளிப
புதூர் என்ற இடத்தில் இருக்கின்றன. இந்த மாவட்டத்தில் ஆசிரியர்கள்
பயிற்சிக் கூடங்கள் இருக்கின்றன. இதுபோலவே மற்ற எல்லா மாவட்டங்
களிலும் இருக்கின்றன. ஒரே ஒரு வகுப்புதான் ஆரம்பித்தோம். இந்தக்
கட்டிடங்களை அரசாங்கம் இதற்காக எடுத்துக்கொள்ளலாம். இந்தப் புதிய
கல்வித் திட்டத்திற்கு அந்தக் கட்டிடங்களைப் பயன்படுத்திக் கொள்ளலாம்
என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு அங்கத்தினர் அவ
கள் தலைவரைப் பார்த்துப் பேச வேண்டும்.

**திரு. வே. தங்கப்பாண்டியன் :** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, நான்
சொல்வதெல்லாம் தலைவர் அவர்கள் மூலமாகத் தான் சொல்கிறேன்.

**திரு. க. அறிவழகன் :** டைம் ஆகிறது. அதற்காகத்தான் தலைவர் அ
படிக் குறிப்பிட்டுச் சொல்கிறார்கள்.

**திரு. வே. தங்கப்பாண்டியன் :** ஆரம்பக் கல்விபற்றிச் சொல்கிறேன்.
ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள் விஷயத்தில் டியூவல் சிஸ்டம் தான் வந்து
விட்டது என்று சொல்லிக்கொள்கிறேன். அது வேண்டாம். ஒரு ஆசிரிய
மாறுதல் குறித்து ஆணையாளரிடமிருந்து டி.ஈ.ஓ.வுக்கும், பிறகு பி.டி.ஓ
வுக்கும், மறுபடியும் டி.ஈ.ஓ.-வுக்கும் அனுப்பும் முறைகள் இருந்துகொண்டிருக்
கின்றன என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

கல்வித் துறைக்கும் உள்ளாட்சித் துறைக்கும் இடையேயுள்ள வரைமுறை
களில் தவறான முறைகள் இருக்கின்றன என்பதை முன்னேற்றக் கழக ஆட்சிக்
காலத்திலேயே சொல்லியிருந்தேன். அதைப்பற்றிப் பரிசீலனை செய்ய
வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பல்வேறு ஆரம்பப் பள்ளிகளுக்குக்
கட்டடங்களே கிடையாது. அதற்காக தொகை ஒதுக்க வேண்டும். இந்த அர
சாங்கம் ஒரு திடமான முடிவு எடுத்து அதைச் செயல்படுத்த வேண்டும் என்று
கேட்டுக்கொள்கிறேன்.

மற்றொன்றைப்பற்றிச் சொல்ல விரும்புகிறேன். நமது மாண்புமிகு
மேலவைத் துணைத் தலைவர் அவர்கள் தொடர்புடைய துறை. ஏராளமான
நூலக ஆணைக் குழு பணியாளர்கள் 4, 5 மாதங்களாகச் சம்பளம் இல்லாமல்



இருக்கின்றார்கள். அதற்கு பட்ஜெட்டிலேயே, கல்வி மானியத்திலேயே நூலக
ஆணைக் குழுவிற்கு, மத்திய நூலக ஆணைக் குழுவிற்கு, தொகை கொடுத்து
ஒன்றியங்களுக்குக் கொடுக்க வேண்டும். ஒன்றியங்களை வசூலிக்கச் சொன்னால்,
நினைத்தால் வசூல் செய்யும், இல்லாவிட்டால் விட்டுவிடும், ஆகவே
அரசே அதை எடுத்துச் செய்ய வேண்டும். லைப்ரேரியன்களாக இருக்கின்ற
வர்களுக்குச் சம்பளம் கிடைக்க வேண்டும். ஒரு திட்டவட்டமான முடிவு
எடுத்து லைப்ரேரியன்களுக்குச் சம்பளம் கிடைக்கச் செய்ய வேண்டும். ஏறக்
குறைய 5, 6 மாதங்களாகச் சம்பளம் இல்லாமல் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கி
றார்கள். இவர்கள்தான் இன்னும் கிளர்ச்சி என்று எதுவும் செய்யாமல் இருந்து
கொண்டிருக்கிறார்கள். அவர்களை அந்த நிலைமைக்கு உள்ளாக்க வேண்டும்.
அந்த மாதிரி நிலைமைகள் ஏற்பட வேண்டும் என்று நான் சொல்லவில்லை.
இந்த நிலைமைகளையெல்லாம் ஆரம்பத்திலேயே கவனித்துவிட்டால், போராட்
டம் எல்லாம் வராது என்று சொல்லிக்கொள்கிறேன். இது வளர்ந்து வரு
கின்ற துறை. மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்கூட சொன்
னார்கள். நான் உச்சரித்த வார்த்தையைப்பற்றிச் சொன்னார்கள். 'டேப்' என்ற
வார்த்தையைப்பற்றிச் சொன்னார்கள். அதுபற்றிக் கருத்து வேறுபாடு
இருக்கலாம். பேராசிரியர் ஒருவர் எனக்குச் சொன்னார். இங்கிலாந்தில் பேசு
கின்றபோது, ஒரு பிரச்சினை எழுந்தது. ஒரு வார்த்தையை எப்படி உச்சரிக்க
வேண்டும் என்று பிரச்சினை வந்தது. அப்போது எந்த ஆதாரத்தை வைத்து
இப்படித்தான் உச்சரிக்க வேண்டும் என்று சொல்கிறீர்கள் என்று கேட்ட
போது, திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் தந்தையார், திரு. ராமசாமி
முதலியார் அவர்கள் இப்படித்தான் உச்சரிப்பார் என்று சொன்னார்களாம்.
தமிழ் நாட்டிலே இருந்து போனவர்கள் ஒரு காலத்தில் அப்படிப் புகழோடு
இருந்திருக்கின்றார்கள். அந்த அளவுக்குக் கல்வியின் தரம் அந்தக் காலத்தில்
இருந்திருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** உச்சரிப்பில் மாறுபாடு
வரும்போது ஸ்பெல்லிங் அந்த வார்த்தைக்குச் சொல்லி விட்டால், பிரச்சினை
தீர்ந்திருக்கும்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அன்னிய மொழி என்பதால்
தான் இந்த அபிப்பிராய பேதம் இருந்து வருகிறது.

**திரு. வே. தங்கப்பாண்டியன் :** அவரவர்கள் கேட்கின்ற மாதிரி எல்லாம்
ஒவ்வொரு வார்த்தைக்கும் ஸ்பெல்லிங் சொல்லிக்கொண்டு பேச வேண்டும்
என்று வலியுறுத்த முடியாது. I cannot yield to him.

கல்வித் துறை நன்கு வளர வேண்டும். அதனால் தமிழ் நாட்டுக்கு நல்ல
பெருமை ஏற்பட வேண்டும். ஆரம்பக் கல்விக்கூடங்கள், கல்லூரிகள் எல்லாம்
பரவலாக சங்கிலித் தொடர்பு உள்ளது போல ஏற்பட வேண்டும். ஏற்கெனவே

[திரு. வே. தங்கப்பாண்டியன்] [1978 மார்ச் 15

கல்வித் துறையிலே குறைபாடுகள் இருக்கின்றன. அவைகள் நீக்கப்பட
வேண்டும். கல்வி அதிகாரி ஒருவருக்கு, ஓய்வு பெற்றவருக்கு மறுபடியும்
வாய்ப்புக் கொடுத்திருக்கிறார்கள், பதவி கொடுத்திருக்கிறார்கள். கல்வித்
துறையை வளர்ப்பதற்கு இந்தமாதிரி வசதிகளைப் பரவலாகத் தர வேண்டு
என்று கேட்டுக்கொள்கிறேன். இங்கு பேச வாய்ப்பு அளித்த மாண்புமிகு
மேலவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொண்டு, என்
உரையை முடிக்கிறேன். வணக்கம்.

திரு. கே. எஸ். கணபதி: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்
களே, இன்றைக்கு அவையில் நுழைந்தவுடன்
"Higher Secondary Education
in Tamil Nadu—Objectives, Programmes and Implementation"
என்ற புத்தகத்தை இங்கே வைத்திருப்பதைப் பார்த்ததும், எனக்கு மிகவும்
மன நிறைவு ஏற்பட்டது. ஏனென்றால் வர இருக்கும் பல குழப்பங்களை எதி
நோக்கியுள்ள நிலைமையில் அவைகளை அரசு எப்படி சமாளிக்கப்போகிறது,
என்ன திட்டங்களை எடுக்கப்போகின்றது என்பதுபற்றி நாம் அனைவரும் ஆவ
லுடன் இருக்கிறோம். இது போன்று கைப்புத்தகங்கள், ஆசிரியர்களுக்குப்
மற்றவர்களுக்கும் நல்ல வகையிலே உதவியாக இருக்க முடியும் என்று சொல்
லிக்கொள்கிறேன். இது விஷயத்தில் அரசு என்ன செய்ய இருக்கிறது என்
பதைப்பற்றி இந்தப் புத்தகம் தெளிவாக விளக்கும் என்று நான் நம்புகிறேன்.
நான் இந்தப் புத்தகத்தை முழுமையாகப் படிக்கவில்லையே, நாளைக்குப் பேச
லாமா என்றுகூட நான் நினைத்தேன். அந்த அளவிலே இந்தப் புத்தகம்

(முற்பகல் 11-50)

வடித்து தரப்பட்டிருக்கிறது. இதிலேயுள்ள செயல்முறைகள் நிச்சயமாகச்
செயலாற்றப்படுமென்ற நம்பிக்கையுடன் வர இருக்கும் ஹையர் செகண்டரிக்
கல்விபற்றி ஒருசில கருத்துக்களை நான் இந்த அவையின்முன் வைக்கிறேன்.

ஹையர் செகண்டரி கல்வியின் நோக்கங்கள் இரண்டு. ஒன்று கல்வியைப்
பரவலாக்க வேண்டும். மற்றொன்று, தரமான கல்வி தர வேண்டும். இந்த
இரண்டு கொள்கைகளையும் யாரும் மறுக்க முடியாது. இந்தப் புத்தகத்திலே
சொல்லியிருக்கிறார்கள், Vice-Chancellor's three purposes என்று
சொல்லி, அதிலே First purpose ஆக the new pattern is being
used as an occasion for moderning thelearning system என்று
சொல்லியிருக்கிறார்கள். கேட்பதற்கு ரொம்ப நன்றாக இருக்கிறது.
moderning the learning system' என்பது செயல்முறைக்கு வரும்
போது எவ்வளவு செலவு அரசுக்கு ஏற்படும்; அந்தச் செலவை ஏற்க அரசு
தயாரா என்று பார்க்க வேண்டும். இப்போது கிராமங்களிலே உள்ள பள்ளி
களிலே ஹையர் செகண்டரி வகுப்புகள் கொண்டுவரப்படுகின்றன. என்
னுடைய இனிய நண்பர் திரு. தங்கப்பாண்டியன் அவர்கள் பேசும்போது



1978 மார்ச் 15] [திரு. கே. எஸ். கணபதி]

அரசுப் பள்ளிகளுக்கும் முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்று வலியுறுத்தி
னார்கள். இந்தப் புத்தகம் குறைந்த நேரத்தில் கொடுக்கப்பட்ட காரணத்தால்,
அவர் படித்திருக்க மாட்டார் என்று நான் நினைக்கிறேன். இந்தப் புத்தகத்
தில் உள்ள விளக்கத்தில், அரசுப் பள்ளிகளுக்கு மட்டுமே முக்கியத்துவம்
கொடுக்கப்பட்டிருப்பதாக நான் நினைக்கிறேன். 133 பள்ளிகளுக்குக் கட்டிடம்
கட்ட வசதியும், 200 பள்ளிகளுக்கு, ஒரு பள்ளிக்கு 50,000 ரூபாய் வீதம்
லேபாரட்டரி எக்குவிப்மென்ட்ஸ் வாங்கவும் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது.
எனவே அரசுப் பள்ளிகளுக்கு மட்டுமே முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்
கிறதென்பது என்னுடைய குற்றச்சாட்டு. எனவே தனியார் பள்ளிகளுக்கும்
முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்று நான் வலியுறுத்த விரும்புகிறேன்.
அதற்குக் காரணம் தனியார் பள்ளிகள் நகரங்களில் அமைந்திருக்கின்றன.
பள்ளிகள் தேர்ந்தெடுக்கப்படுவது பற்றிச் சொன்னார்கள். அந்தப் பட்டி
யலைப் பார்க்கும்போதும், பெரும்பாலான பள்ளிகள் அரசுப் பள்ளிகளாக
இருக்கின்றன. அந்தப் பள்ளிகள் கிராமங்களில் உள்ள பள்ளிகளாக இருக்
கின்றன. அரசுப் பள்ளிகள், தனியார் பள்ளிகளைப் பொறுத்தமட்டில், இதில்
நியாயம் வழங்கப்பட்டிருப்பதாக நினைக்கிறேன். பள்ளிகள் தேர்ந்தெடுத்
ததிலே நியாயம் வழங்கப்பட்டிருக்கிறது; பண ஒதுக்கீட்டில் நியாயம் வழங்
கப்படவில்லை. தனியார் 'பார்ட்டிசிபேஷன்' இருக்க வேண்டுமென்று அரசு
நினைக்கிறது. ஆனால் இன்றைக்குள்ள தனியார் பள்ளிகளின் நிலைமையைப்
பார்க்க வேண்டும். 20, 25 ஆண்டுகளுக்கு முன்னால் தனியார் பள்ளிகள் செயல்
பட்ட முறைக்கும், இன்றைக்குச் செயல்படும் முறைக்கும் பெருத்த வேறுபாடு
கள் உண்டு. அன்றைக்கு பொது நோக்குடன், தங்களுடைய சொத்துக்களை
கல்வி நிறுவனங்களுக்காக எழுதி வைத்து, கல்வி நிறுவனங்களை நிறுவினார்கள்.
அந்தப் பள்ளிகளுக்கு இன்றுள்ள நிலைமை என்னவென்றால், அன்று எழுதி
வைத்த சொத்தைத் தவிர வேறு வருமானம் கிடையாது என்பதுதான். நில
மாக இருந்தால், வருமானமும் இல்லை. இங்கு உள்ளவர்களுக்கு நன்றாகத்
தெரியும். நிலங்களிலிருந்து வருமானமே கிடையாது. அற நிலையங்கள், கல்வி
நிலையங்கள், தனியார் யாராக இருந்தாலும் நிலங்களிலிருந்து வருமானமே
கிடையாது. இப்படிப்பட்ட நிலைமைகள் இருக்கும்போது, தனியார் பள்ளிகள்
மீண்டும் செலவு செய்து கட்டிடம் கட்டவும், தேவையான ஆய்வகப் பொருள்
களை வாங்க வேண்டுமென்ற நிலைமையும் தோன்றியிருக்கிறது. இதை அவர்
களிடம் நிச்சயமாக எதிர்பார்த்தால், தனியார் பள்ளிகளைப் பொறுத்தமட்டில்,
இந்தத் திட்டம் தோல்வியடைந்துவிடுமோ என்ற ஐயப்பாடு எனக்குத்
தோன்றுகிறது.

இந்த ஆண்டு, ஜூன் மாதத்தில் தனியார் பள்ளிகள் ஹையர் செகண்டரி
வகுப்புக்களைத் துவக்கும்போது, அந்த வகுப்புகளைத் துவக்குவதற்கான
கட்டிடங்கள் வேண்டுமென்றும் இருக்கலாம். அடுத்த ஆண்டு 11 ஆம் வகுப்பு

இல்லை. அந்த இடத்தைப் பயன்படுத்திக்கொள்ளலாம். அடுத்த ஆண்டு கட்
டிடங்களைக் கட்டிக்கொள்ளலாம். ஆனால் ஆய்வகங்களுக்குத் தேவையான
பணத்தை அரசு கொடுக்காமலிருந்தால், அவர்களால் சமாளிக்க முடியாது.
அந்தப் பள்ளிகள் ஆய்வக வசதி இல்லாமல்தான் நடக்கும். அதை விரும்புகி
றீர்களா? நம்முடைய கொள்கைக்கு அது விரோதமல்லவா? எனவே தனி
யார் பள்ளிகளில் ஆய்வகங்களை அமைக்க அரசு ஒத்துழைப்பு தர வேண்டும்.
அதற்கான பொருள்களை அரசு வாங்கித் தர வேண்டும். இல்லையென்றால், தனி
யார் பள்ளிகளைப் பொறுத்த மட்டில்—200 பள்ளிகளைத் தவிர மற்ற பள்ளி
களில் ஹையர் செகண்டரிக் கல்வி தோல்வியாக அமைந்துவிடக்கூடும். எனவே
இதற்காக அரசு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்பு
கிறேன். கட்டிடத்தைப் பொறுத்தவரையில், அடுத்த ஆண்டு சிந்தித்துக்
கொள்ளலாம். ஆய்வு அரங்களைப்பற்றி இந்த ஆண்டே முடிவு செய்ய
வேண்டும்.

கல்வி பரவலாக்கப்பட வேண்டுமென்பதற்காக கிராமங்களில் ஹையர்
செகண்டரிப் பள்ளிகள் அமைந்திருந்தாலும், Vocational Education ஆக,
வேலை வாய்ப்பிற்கு ஏற்றதாக இருக்க வேண்டுமென்று சொல்லுகிறார்கள். நான்
இந்த அவையிலே சென்ற கூட்டத் தொடரிலேயே குறிப்பிட்டிருக்கிறேன்
1948-லே Bifurcated Course வந்தபோது, இதே நோக்கத்தைத்தான்
சொன்னார்கள். ஆனால் அது தோல்வியை எதிர் நோக்கியது. அதற்குக் காரணம்
ஆசிரியர்கள், பொது மக்களிடம் இதன் நோக்கத்தைச் சொல்லாததுதான்.
அதே விதி இதற்கும் ஏற்பட்டுவிடக்கூடாது. Vocational education ஐப்
பொறுத்தவரையில், அந்தப் பள்ளிகள் சரியான முறையில் அதை
எதிர்நோக்கி, வரும் ஆண்டுகளுக்கு மாணவர்களைத் தயாரிக்க முயற்சி எடுத்துக்
கொள்ள வேண்டும். இங்கே ஒரு குறைபாட்டை நான் சொல்ல விரும்புகிறேன்.
இன்று ஹையர் செகண்டரி வகுப்புகளுக்கான சிலபஸ் போட்டிருக்கிறார்கள்
அதில்,

Chemical Pathology Technique
Micro Biology
E. E. G., E.C.G.—Audiometry Technician
Ophthalmic Technician
Dental Mechanic
Applied and Oral anatomy

இதையெல்லாம் வைத்திருக்கிறார்கள். இதை அங்கே வைக்கலாமா,
வைக்கக்கூடாதா என்பதல்ல பிரச்சினை. இந்த மாதிரி கோர்சை வைத்தால்,
அந்தப் பள்ளிகளில் அந்தக் கோர்சில் மாணவர்களைத் தயாரிக்கத் தேவையான
எக்குவிப்மெண்ட்ஸ் வேண்டும். கிராமங்களில் இந்தக் கோர்சுகளை வைத்





தால், பக்கத்தில் ஆஸ்பத்திரிகள்கூட இருக்காது, அந்தக் கருவிகளைக் காண்
பிக்க. இது சிலபசில் இருந்தால் போதுமா? பள்ளிகளில் வர வேண்டாமா?
அரசு கருதும் கருத்து ஒன்று தவறானதென்று நினைக்கிறேன்.
Bifurcated Course equipments ஐ வைத்து Vocational Course
ஐக் கொண்டு வரலாமென்று நினைத்தால், அது தவறு. அந்தக் கருத்து
தோல்வியுறக்கூடியதென்ற நல்லெண்ணத்தில் சொல்கிறேன். செகரட்டேரியல்
கோர்சுக்கு டைப்ரைட்டர் மட்டும் போதும். ஆனால் இன்ஜினியரிங்
கோர்சுக்குத் தேவையான பொருள்கள் அங்கேயில்லை. 1948-லே இந்த
ஸ்கீம் வந்தபோது, பள்ளிகளிலே Engineering Course களை
ஆரம்பித்தார்கள். 2, 3 ஆண்டுகள் ஆரம்பித்ததற்குப் பிறகு, எந்தப்
பள்ளியும் ஆரம்பிக்கவில்லை. அங்கேயுள்ள பொருள்கள் பயன்படாத
பொருள்களாக இருக்கின்றன. Vocational Course வெற்றி பெற
வேண்டுமென்றால், தேவையான பொருள்களை வழங்க இப்போதே நடவடிக்கை
எடுக்க வேண்டும். ஜூன் மாதத்தில் பார்த்துக்கொள்ளலாமென்று நினைப்பது
தவறு. Vocational Course பற்றிச் சொல்லும்போது, it is preparatory
and terminal வேலை வாய்ப்பிற்காகவும் அமையும், மேல் படிப்பிற்கான ஆதார
மாகவும் அமையுமென்று சொல்கிறார்கள். இந்தக் கோர்சை எடுத்துப் படிப்பவர்
கள் மேல் படிப்பிற்குச் செல்ல முடியுமா என்பதைப் பரிசீலிக்க வேண்டும்.
இந்தப் பள்ளிகளில் தொழிற் கல்வி பயின்றவர்கள் மெடிகல் கல்லூரிகளில் சேர
முடியுமா என்றால், சேர முடியாது. இப்போது பிசிக்ஸ், கெமிஸ்டிரி, நேச்சுரல்
சைன்ஸ், இது தவிர கணிதம் என்று 4 பாடங்களை வைத்திருக்கிறோம். கணிதம்
தவிர மீதி மூன்று பாடங்களைப் படித்திருந்தால், பிரபரன்ஸ் தருகிறோம். இந்தப்
பாடங்களை வொகேஷனல் கோர்ஸ் எடுத்தவர்கள் படிப்பதில்லை. அவர்கள்
இதிலிருந்து ஒரு பாடத்தைத்தான் படிக்க வேண்டும். அதனால் அவர்கள்
நிச்சயமாக மருத்துவக் கல்லூரிகளில் சேர்த்துக்கொள்ளப்பட மாட்டார்கள்.
பொறியியல் கல்லூரியில் சேர கணிதம் படித்தால் போதும். அவர்கள் பொறி
யியல் கல்லூரியில் சேர தகுதி உடையவர்களா என்றால், இல்லை. வொகேஷனல்
கோர்ஸ் ‘பிரபரேடரி’ என்பது முழுவதும் உண்மையல்ல. மற்ற மாநிலங்
களில் எப்படி ஏற்படுத்தியிருக்கிறார்களென்பதை அரசு பரிசீலித்திருக்குமென்று
நம்புகிறேன. மற்ற மாநிலங்களில் இந்தப் பள்ளிகளில் படித்த மாணவர்கள்
பொறியியல் கல்லூரிகளிலும், மெடிகல் கல்லூரிகளிலும் சேர்க்கப்படுகிறார்களா
என்பதை ஆராய வேண்டும்.

(நண்பகல் 12-00)

அதைத் தவிர அடுத்த ஆண்டு மிகக் குழப்பமான ஆண்டு என்று நான்
சொல்லுவதற்குக் காரணம், ரி-டிப்ளாய்மென்ட் ஆஃப் ஸ்டாப் (re-deploy-
Ment of staff) பிரச்சினைதான். அதுதான் ஒரு பெரிய பயங்கரமான
சூழ்நிலையை ஏற்படுத்தும். அதிகமாக இருக்கும் ஆசிரியர்கள் எந்த [illegible]

[திரு. கே. எஸ். கணபதி] [1978 மார்ச் 15

அவர்களை எங்கே கொண்டு போய்ச் சேர்ப்பது? ஐந்தாயிரம் பேர் அதிகமாக
இருக்கிறார்கள். அவர்களுக்கு ரி-டிப்ளாய்மென்ட் எப்படி? ‘உங்களுக்குப்
பணிப் பாதுகாப்பு உண்டு’ என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அவர்களை
எப்படி பாதுகாக்கப் போகிறோம் என்று திட்டவட்டமாகச் சொல்லவில்லை.
உயர்நிலைப் பள்ளியிலே இருப்பவர்களில் ஒரு சிலரை ஹையர் செகண்டரி
வகுப்புக்கு எடுத்துச் செல்லலாம். ஆனால் கல்லூரி ஆசிரியர்களைப் பொறுத்த
வரையில், அவர்களுக்கு எப்படி பணிப் பாதுகாப்பு அளிக்கப் போகிறோம்
என்பது தெரியவில்லை. கல்லூரிகளிலிருந்து 1979-80-ல்தான் புகுமுக வகுப்பு
அகற்றப்படுகிறது. ஓராண்டு இருக்கிறது என்றாலும், அது குறித்து அரசு
இப்போதே திட்டமிட்டிருக்கும் என்று நம்புகிறேன். ஹையர் செகண்டரி
பள்ளியை ஜூன் மாதத்தில் ஏற்படுத்தப் போகிறோம். அதற்காக
இப்போதிருந்தே சிந்திக்கிறோம். அப்படி இருக்கும்போது, அரசு உடனடியாக
கல்லூரி ஆசிரியர்களுக்கு எப்படி பணிப் பாதுகாப்பு அளிக்கப் போகிறது
என்பதை இப்போதே தெளிவாகச் சொன்னால்தான், கல்லூரி ஆசிரியர்களின்
மனதில் நிம்மதி ஏற்படுத்த முடியும். இந்தக் குழப்பமான சூழ்நிலை இருக்கு
மானால், ஆசிரியர்கள் முழு மனதுடன் வேலை செய்ய முடியாது. நம்முடைய
நோக்கம், சிறந்த கல்வியை அளிக்க வேண்டும் என்பதுதான். பள்ளி-கல்லூரி
ஆசிரியர்களிடையே ஒரு சுமுகமான சூழ்நிலை, மகிழ்ச்சியான சூழ்நிலையை
ஏற்படுத்தினால்தான், நம்முடைய முயற்சி வெற்றி பெறும். ஆகவே அவர்
களுடைய பணியை எப்படி பாதுகாக்கப் போகிறார்கள் என்பதை அரசு
நிச்சயமாகச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

இந்தக் கைப் புத்தகத்திலே குறிப்பிட்டிருக்கிறார்கள், “An officer of
the Directorate has been made responsible for such work in each of
the 11 Revenue Districts. Complete redeployment will be completed
in the month of April 1978. No teacher's services will be retrenched
due to the introduction of the new pattern of education.”
என்று சொல்லியிருக்கிறார்களே தவிர, எப்படி பாதுகாக்கப்போகிறார்கள்
என்று சொல்லவில்லை. ஏப்ரல் மாதத்திலே வர வேண்டுமென்றால், இப்போதே
அரசிடம் திட்டம் இருக்க வேண்டும். ஏப்ரல் வெகு தூரத்தில் இல்லை. இன்னும்
இருபது நாட்கள்தான் இருக்கின்றன. எப்படி அவர்கள் ஏற்றுக்கொள்ளப்
படுவார்கள் என்று திட்டவட்டமாகச் சொல்ல வேண்டும். அடுத்து, அங்குள்ள
தலைமையாசிரியர்கள், தொடர்ந்து ஹையர் செகண்டரி பள்ளியிலேயே
தலைமையாசிரியர்களாக இருப்பார்களா என்பதைப்பற்றி அரசு தன்னுடைய
கருத்தை வெளியிடவில்லை. “எம்.ஏ., எம்.எஸ்ஸி. இருந்தால் ஏற்றுக்
கொள்ளுகிறோம். பி.ஏ., பி.எஸ்ஸி. இரண்டாவது வகுப்பாயிருந்தால், ஏற்றுக்
கொள்ளுகிறோம். மூன்றாவது வகுப்பானால், 15 ஆண்டுகள் பணி
புரிந்திருந்தால், ஏற்றுக்கொள்ளுகிறோம்” என்று சொல்லியிருக்கிறார்கள்.
தலைமையாசிரியர் பணியில் உள்ளவர், அதே பள்ளியில் ஹையர் செகண்டரி



1978 மார்ச் 15] [திரு. கே. எஸ். கணபதி]

வகுப்பை ஏற்படுத்தும்போது, முதல்வராக ஆக்கப்படுவாரா? தனியார்
பள்ளிகளில் வேண்டுமானால் இது நடக்கும் என்று சொல்லலாம். ஆனால் அரசுப்
பள்ளிகளிலே என்ன நிலைமை என்று குறிப்பிடப்படவில்லை. பணி மூப்பு
அடிப்படையிலே ஆக்கப்படுவார்களா என்பதையும் தெளிவாகச் சொல்ல
வில்லை. அது மாத்திரமல்ல. இந்த ஆசிரியர்கள் ஹையர் செகண்டரி பள்ளிக்கு
மாற்றப்படும்போது, நிச்சயமாக ஊதியம் அதிகமாக இருக்குமென்று எண்ணு
கிறார்கள். அரசு மூன்றாவது ஊதியக் குழுவின் பரிந்துரையை எதிர்
பார்க்கலாம். ஆனால் இப்போதே அரசு சொன்னால்தான், ஹையர் செகண்டரி
பள்ளிக்குப் போகலாமா அல்லது தங்களுடைய இடத்திலேயே
இருக்கலாமா என்று தங்களுடைய விருப்பத்தைச் சொல்ல முடியும். எனவே,
மூன்றாவது ஊதியக் குழுவின் பரிந்துரைக்கு முன்னால் ஹையர் செகண்டரி
பள்ளியில் நிச்சயமாக ஊதியம் அதிகமாக இருக்குமென்று சொல்வார்களே
யானால், விருப்பம் உள்ளவர்கள் அங்கே செல்வதற்கான வாய்ப்பு ஏற்படும்.
எனவே அந்த அளவிலே அந்த வாய்ப்பை ஆசிரியர்களுக்கு அரசு வழங்க
வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து, இன்னொரு மகிழ்ச்சியான செய்தி. ஸ்டாப் ஓரியண்டேஷன்
கோர்ஸ் Staff Orientation Course ஏற்கெனவே தொடங்கிவிட்டதாகவும்,
அது இப்போது போவதாகவும், இன்று முதல் கோர்ஸ் முடிவடையப்
அதிலே ஒவ்வொரு தெரிவித்திருக்கிறார்கள். 5 இடங்களில் நடப்பதாகவும்
திருச்சி, மற்றும் இருக்கிறார்கள். பிரிவிலும் இருபது கல்லூரி பேராசிரியர்கள்
சென்னையில் 12 ரூபாயும் பெரிய நகரங்களில் அவர்களுக்கு 8 ரூபாயும்,
வழங்கப்படுகிறது. அரசு ஊழியராக இருந்தால், அவர்களுக்குப் பத்து அல்லது
15 ரூபாய் வழங்கப்படுவதாக அறிகிறேன். எனக்குள்ள வருத்தமெல்லாம்,
இந்த 8 ரூபாயை வைத்துக்கொண்டு சென்னையிலே வாழ்க்கையை நடத்த
முடியுமா என்பதுதான். ரூம் ரெண்டுக்கே 15 ரூபாய் ஆகும். இவர்களுடைய
நிலைக்கு ஏற்ப மாற்ற வேண்டும். நிலையையும், First Class Committee
ஏற்பட்டபோது பயிற்சி அளிப்பவர் ஏற்கனவே இன்-சர்வீஸ் டிரைனிங்
பயிற்சி பெறும் ஆசிரியர் களுக்கு தினசரி படி 2½ ரூபாயாக இருந்தது.
கல்லூரி பேராசிரியர்களுக்கு இந்த நிலை களுக்கு படி 6 ரூபாயாக இருந்தது.
பெற முடியாது. ஆகவே இருந்தால், அவர்களிடமிருந்து முழு ஒத்துழைப்பைப்
நிச்சயமாக மாற்ற வேண்டும். 8 ரூபாய், 15 ரூபாய் என்ற முறையை
தாம்பரத்தில் சென்னையில் இருப்பவர்களுக்கு 12 ரூபாய் அளிக்கும்போது,
இதற்குக் பயிற்சி பெறுபவர்களுக்கு 8 ரூபாய்தான் வழங்கப்படுகிறது.
காரணம், தாம்பரம் நகருக்கு அப்பால் இருக்கிறது என்று சொல்லப்படுகிறது.
ஆனால் சென்னைக்கு வந்துதான் பிறகு தாம்பரத்திற்கு அவர்கள் செல்லு
கிறார்கள். ஆகவே இந்த நிலையை மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக்
கொள்ள விரும்புகிறேன்.

## ‘தமிழ் நாட்டில கல்வி வளர்ச்சி’ பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பின் மீது விவாதம்

[திரு. கே. எஸ். கணபதி]

[1978 மார்ச் 15

ரீ-டிப்ளாய்மென்ட் மாறு வரும்போது, எல்லோருக்கும் சிக்கல்
ஏற்படலாம். ஆகவே அதில் வரக் கூடிய சிக்கல்களைப் பரிசிலிப்பதற்காக ஒரு
ஸ்டடி குரூப்பை ஏற்படுத்தி, ஒரு தனி அதிகாரியை நியமிக்க வேண்டும்.
அதிலே உள்ள குறைபாடுகளைக் களைவதற்கு அந்தத் தனி அதிகாரிக்கு எல்லா
அதிகாரங்களையும் வழங்க வேண்டும். இந்த நிலைமை ஏற்பட்டால், ரீ-டிப்ளாய்
மென்ட்டைப் பொறுத்த வரையில், குழப்பங்கள் இல்லாமல் செய்ய முடியும்
என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, திருச்சி, கோவையில், இரண்டு பல்கலைக் கழகங்கள்
வருவதைப்பற்றி அரசு புதிய திட்டங்களைத் தர வேண்டுமென்று நடுவண்
அரசின் கல்விச் செயலாளர் குறிப்பிட்டுள்ளதை இன்று பத்திரிகையிலே
பார்த்தேன். அது பற்றி நம்முடைய அரசின் கருத்தை மாண்புமிகு கல்வி
அமைச்சர் அவர்கள் இந்த அவையிலே சொல்ல வேண்டுமென்று கேட்டுக்
கொள்ளுகிறேன். தொழில் நுட்பப் பல்கலைக் கழகம் பற்றி இந்தப் புத்தகத்திலே
ஒரே ஒரு வரி மட்டும் இருக்கிறது. அது மத்திய அரசின் பரிசீலனையில்
இருப்பதாகச் சொல்லுகிறார்கள். அது எப்போது வரும்? அது என்ன நிலையில்
இருக்கிறது என்பதைத் தெளிவுபடுத்த வேண்டுமென்று இந்த நேரத்திலே
கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஹையர் செகண்டரி கல்வியைப் பொறுத்த வரையிலே டைரக்டர் ஆஃப்
ஸ்கூல் எஜுகேஷன் அவர்களே, டைரக்டர் ஆஃப் ஹையர் செகண்டரி
எஜுகேஷனாகவும், இருக்கிறார். அடுத்த ஆண்டிலே வேலைப் பளு மிகவும்
அதிகமாக இருக்கும். ஹையர் செகண்டரிக்கென்று தனியாக ஒரு
டைரக்டரேட் ஏற்படுத்தப்படுமானால், நிச்சயமாக வேலைப் பளு குறைக்கப்
படும். பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களால் இந்தப் பொறுப்பை ஏற்க
முடியாது என்று நான் சொல்லவில்லை. தனியாக டைரக்டர் ஆஃப் செகண்டரி
எஜுகேஷன் என்று ஒருவர் இருந்தால், இதில் ஏற்படும் சிக்கல்களை
உடனடியாகத் தீர்க்க உதவும் என்ற கருத்தை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

அடுத்து, ‘ஏ’ விங், ‘பி’ விங் இன்டகிரேஷன்பற்றி கடந்த கூட்டத்
தொடரிலே கூட சொன்னேன். அப்போது, வெகு விரைவிலே தெளிவான
அறிக்கையொன்றை அரசு அளிக்கும் என்று மாண்புமிகு கல்வியமைச்சர்
அவர்கள் தெரிவித்தார்கள். இது குறித்து அரசின் கருத்து நிச்சயமாக இந்த
அவையின் முன் வைக்கப்படுமென்று அறிகிறேன். இன்டகிரேஷன் என்பது
உடனடியாக உத்தரவிடப்பட வேண்டிய ஒன்று. ஹையர் செகண்டரி படிப்பு
வருவதற்கு முன்னால் இதை அறிவிக்க வேண்டும். மாண்புமிகு அமைச்சர்
அவர்கள், இந்தக் கூட்டத் தொடர் முடிவதற்கு முன் நாளைக்கோ, கல்வி
மானியத்தின் மீது பதில் அளிக்கும்போதோ தெளிவாக அரசாங்கத்தினுடைய
கருத்தைத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.



1978 மார்ச் 15] [திரு. கே. எஸ். கணபதி]

1973 ஆம் ஆண்டு பட்டதாரி ஆசிரியர்கள் நடத்திய போராட்டத்தின்
போது, அவர்களுடைய பதிவேட்டில் ‘சஸ்பெண்ட்’ செய்யப்பட்டதாக ஒரு
குறிப்பு எழுதப்பட்டது. மேலும் அவர்கள் தங்களுக்குள்ள விடுப்புக்களைப்
பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்றும், விடுப்புக்கள் இல்லையானால், ஊதியம்
இல்லாமல் விடுப்பு வழங்க முடியாது என்றும் உத்தரவிட்டிருக்கிறார்கள். புதிய
அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு, அதைத் திரும்பப் பெறுவதாகவும்,
பதிவேட்டிலுள்ள குறிப்புகள் அகற்றப்படும் என்றும் அமைச்சர் அவர்கள்
சொன்னார்கள். ஆனால் இன்னும் அந்தக் குறிப்புகள் அகற்றப்படவில்லை. அது
மாத்திரமல்ல, அவர்கள் எந்த விடுப்புக்குத் தகுதியுள்ளவர்களாக இருக்
கிறார்களோ அந்த விடுப்பு அவர்களுக்கு வழங்க வேண்டுமென்ற நிலை மாறி,
அந்தப் போராட்டக் காலம் முழுவதையும் ஸ்பெஷல் லீவாக ‘ட்ரீட்’ செய்து
ஏற்கெனவே உள்ள அந்த விடுப்புகளை சரி செய்து கொண்டு, மீண்டும் அந்த
விடுப்பை அவர்களுக்கு வழங்குமாறு இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள
விரும்புகிறேன்.

மேலும் மைனாரிட்டி பள்ளிகளில் பல குறைபாடுகள் இருக்கின்றன என்று
சொன்னார்கள். மைனாரிட்டி பள்ளிகளைப் பொறுத்த வரையில், ஒன்றும் செய்ய
முடியாது என்றும் சொன்னார்கள். மைனாரிட்டி பள்ளிகளிலிருந்து பல்வேறு
கோரிக்கைகள் அரசுக்கு வந்திருக்கின்றன. அதன் மீது அரசு எந்தவிதமான
முடிவையும் எடுக்கவில்லை. முடிவு எடுக்க முடியாது என்றே நான்
உணர்கிறேன். அப்படி முடிவு எடுக்க முடியாவிட்டால், அந்தப் பள்ளிகளில்
பணிபுரியும் ஆசிரியர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் வகையில், முடியாது
என்று திட்டவட்டமாக அறிவித்துவிட்டால், அந்த ஆசிரியர்கள் நீதி மன்றங்
களுக்குச் செல்ல வாய்ப்பு ஏற்படும். இது குறித்து சுப்ரீம் கோர்ட்
ஜட்ஜ்மெண்ட் இருக்கிறது. அதிலே அவர்களுக்கு உரிமை வழங்கப்
பட்டிருக்கிறது.

“It is not for maladministration; it is for administration”
என்று உச்ச நீதிமன்றத்திலே சொல்லியிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே
என்னுடைய வேண்டுகோளாக நான் வைக்க விரும்புவது, கல்வி இலாக்காவிலே
முடியாது என்று தெரிவித்து ஒரு பதிலை அவர்களுக்கு அனுப்ப வேண்டு
மென்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

(பிற்பகல் 12-10)

கல்லூரி ஆசிரியர்களைப் பொறுத்தவரையில், அவர்களுக்கு யு.ஜி.சி.
சம்பளம் வேண்டுமென்ற கோரிக்கையோடு பதினொரு கோரிக்கைகளை முன்
வைத்து போராட்டம் நடத்தி, வர இருக்கும் தேர்தலில் ஒத்துழையாமை
இயக்கம் என்பதை முன் வைத்திருக்கிறார்கள். யு.ஜி.சி. சம்பள விகிதத்தைப்
பற்றி நீங்கள் முடிவெடுக்கக் காலதாமதம் ஆகுமென்றால் வகர்கள்

[திரு. கே. எஸ். கணபதி] [1978 மார்ச் 15

வைத்துள்ள மற்ற கோரிக்கைகளைப் பொறுத்து அரசு உத்தரவிடக் கூடாதா? அவர்களும் மற்றவர்களும் சமம் என்ற நிலையை உருவாக்கக் கூடாதா? அரசாங்கம் கல்லூரி ஆசிரியர்களின் பிரச்சினையைப் பரிசீலித்து உடனடியாகத் தீர்வு காண வேண்டுமென்று சொல்லிக் கொள்கிறேன்.

அடுத்து, உத்தமபாளையத்தில் ஆறு மாதங்களாக ஊதியம் வரவில்லை. அவர்கள் திரும்பத் திரும்ப அரசிற்கு எழுதுகிறார்கள். இந்த அவை முன்னவர் கூட அந்தக் கல்லூரிக்குச் சென்று அவர்களுடைய ஊதியம்பற்றிப் பேசி, அவர்களுக்கு ஊதியத்தை அளிப்பதாக வாக்குறுதி அளித்திருக்கிறார்கள். அவர்கள் இன்றுகூட கடிதம் எழுதியிருக்கிறார்கள். ஆறு மாதமாக அவர்களுக்கு ஊதியம் வழங்கப்படவில்லை என்றால், எப்படிக் காலம் தள்ள முடியும்? அரசு அவர்களுடைய நிலைமையை அறிந்து, அவர்களது ஊதியத்தை நேரடியாகக் கொடுக்க முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அது ஒரு மைனாரிடியினர் கல்லூரியாக இருப்பதால், அதில் அரசு அதிகமாகத் தலையிட முடியாது என்ற நிலை வருகிறது. அங்கே உள்ள ஆசிரியர்களின் பாதுகாப்பு முக்கியமானது. தவறாக நடக்கும் நிர்வாகங்களின் கீழ் உள்ள ஆசிரியர்களுக்கு அரசே நேரடியாக ஊதியம் வழங்குவதற்குத் தவறாது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மதுரைப் பல்கலைக் கழகத்தில் உள்ள பல நிர்வாகங்கள் தவறாக இருக்கின்றன என்று அறிகிறோம். எனவே அந்தக் கல்லூரி ஆசிரியர்களுக்கு நேரடியாக ஊதியம் வழங்கும் திட்டத்தை உடனடியாகக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்கள் 1—4—1970 முதல் 3—5—1977 வரை உள்ள இடைக் காலத்தில் பட்டதாரி ஆசிரியர்களாக இருந்து பணியாற்றியிருக்கிறார்கள். அவர்கள் பணியில் சேர்ந்த நாளிலிருந்து அவர்களது பணி வரன்முறைப் படுத்தப்படுவதை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டோம். ஆனால், இடை நிலை ஆசிரியர்களும், சிறப்பு ஆசிரியர்களும் அவர்கள் பணியில் சேர்ந்த நாளிலிருந்து வரன்முறைப்படுத்தப்படாமல் பின்பட்ட தேதியிலிருந்து வரன்முறைப் படுத்தப்பட்டிருக்கிறார்கள். ஒருவருக்கு ஒரு சலுகையும் மற்றவர்களுக்கு அந்தச் சலுகை இல்லாமலும் இருக்கக் கூடாது. அரசு அவர்களது நிலையையும் கவனித்து உதவ வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அவர்கள் பணியில் சேர்ந்த நாள் தொட்டு அவர்களது பணி வரன்முறைப்படுத்தப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

டெக்னிகல் எஜுகேஷனைப் பொறுத்தவரையில், ஒரு கருத்தைச் சொல் விரும்புகிறேன். டெக்னிகல் எஜுகேஷனில் பாலிடெக்னிக் இருக்கிறது. அந் ஆசிரியர்களின் பணி நிலை வேறு. மற்ற ஆசிரியர்களின் பணி நிலை வேறு அவர்களுக்கு எந்தவிதமான சலுகையும் இல்லை. அவர்களுக்கு சரண்டர் லீ வசதி இல்லை. ஃபாமிலி பெனிஃபிட் ஸ்கீம் இல்லை. பென்ஷனில் தனியார் பள் ஆசிரியர்களுக்கு கிராஜுடி உண்டு. ஆனால் இவர்களுக்கு இல்லை. ஒரு தன்



[திரு. கே. எஸ். கணபதி]

1978 மார்ச் 15]

கிடைக்கிறது என்றால், ஆசிரியர் அத்தனை பேருக்கும் அது பொதுவாக இருக்க
வேண்டும். ஒருவருக்கு நன்மையும் மற்றவர்களுக்கு அது மறுக்கப்படவும்
கூடாது. இந்த வேறுபாடுகள் களையப்பட வேண்டும். உயர்நிலைப் பள்ளிகள்,
கல்லூரிகள், தனியார் கல்லூரிகள், அரசுக் கல்லூரிகள் எதுவாக இருந்தாலும்,
அவற்றில் பணியாற்றுகிற ஆசிரியர்கள் பணிக்கான சலுகை ஒன்றாக
இருப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். யு.ஜி.சி. சம்பள
விகிதத்திற்கு அரசின் தனி உத்தரவு இருக்கிறது. அதில் 20 ஆண்டுகள் பணி
புரிந்த ஆசிரியர்களுடைய ஊதியம் ரூ. 875-ல் இருக்கிறது. ஒரு ஆண்டில்
அவர் ரூ. 900 ஆக உயர்வு ஊதியம் பெறுகிறார். அதுதான் மேக்சிமம்
ஸ்கேல் ஆஃப் பே. உச்ச கட்டத்தை எட்டிவிட்டால், 42 வயது பூர்த்தி
யானவர்கள் அடுத்த ஆண்டு எந்த உயர்வும் இல்லாமல் இருக்கிறார்கள்.
ரூ. 450 வாங்கியவர்களுக்கு யு.ஜி.சி. சம்பள விகிதப்படி ரூ. 650 டி.ஏ. சேர்ந்து
வருகிறது. 1—4—1978-ல் ரூ. 875 ஆகிறது. எனவே 1979-ல் அவர்கள் பெறும்
ஊதிய உயர்வுதான் கடைசி உயர்வாக இருக்கிறது. அவர்கள் ஊதியத்தில்
மாற்றம் ஏற்படுத்தி யு.ஜி.சி. சம்பள விகிதத்தில் அவர்களுக்கும் பலன்
கிடைக்கும்படி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஓய்வூதியம் பெரும்பாலானவர்களுக்கு முன்பெல்லாம் ரூ. 55-ம் ரூ. 70-ம்
இருக்கிறது. அதைக் குறைந்த பட்சம் ரூ. 100 ஆக உயர்த்த வேண்டும்.
தனியார் பள்ளிகளில் பணியாற்றுகிற ஆசிரியர்களுக்கு இதனால் பாதிப்பு
ஏற்படுகிறது. 1970-க்கு முன் ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியர்கள் மிகவும்
அதிகமான ஓய்வூதியமாக ரூ. 75-ம் பட்டதாரி ஆசிரியர்கள் ரூ. 60-ம் பெறும்
நிலை இருக்கிறது. 1—6—1970-ல் பணியில் இருந்தவர்களுக்கு மாற்று
ஓய்வூதியம் வழங்க அரசு உடனடியாகத் தனி அதிகாரிகளை நியமித்து
எல்லோருக்கும் பலன் கிடைக்கும் வகையில் நடவடிக்கை எடுத்திருப்பதாகச்
சொன்னார்கள். ஆனால் அந்தப் பலன் பெரும்பாலானவர்களுக்குக் கிடைக்க
வில்லை. தனியார் பள்ளிகளிலிருந்து அதற்கான புள்ளி விவரங்களை அரசிற்கு
அனுப்பாமல் இருக்கிறார்கள். அவர்களிடமிருந்து அந்தப் பரிந்துரைகள்
உடனடியாக வரவேண்டுமென்று வற்புறுத்தி உடனடியாக ஓய்வூதியம் வழங்க
வேண்டுமென்றும் குறைந்த பட்ச ஓய்வூதியமாக ரூ. 100 இருக்க வேண்டு
மென்ற கருத்தையும் சொல்லி பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி
அமைகிறேன். வணக்கம்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : துணைத் தலைவர் அவர்களே, கல்விக்
கொள்கைக் குறிப்பு சம்பந்தமாக இங்கே விவாதத்திற்கு எடுத்துக்கொண்ட
குறிப்பிலே என்னுடைய சில கருத்துக்களைச் சொல்வதில் மெத்த மகிழ்ச்சி
யடைகிறேன். நாளொரு மேனியாக நாட்டினுடைய ஜனத்தொகை
வளருகிறது. அதே அடிப்படையில் கல்வித் துறைக்கு நாம் ஒதுக்குகிற
தொகையும் வருஷா வருஷம் உயர்த்தப்பட வேண்டியிருப்பதால், அந்தப்

[திரு. கே. எஸ். அப்துல் வகாப்] [1978 மார்ச் 15

பாணியில் சென்ற ஆண்டை விட இந்த ஆண்டு கூடுதலான தொகையை அளித்திருக்கிறோம். இந்த ஆண்டு கல்வித் துறையில் புரட்சிகரமான மாற்றங்களை நாம் கொண்டுவர இருக்கிறோம். ப்ளஸ் 2 என்று உயர்நிலைப் பள்ளிக் கல்வியிலே கொண்டுவந்திருக்கிற மாற்றம் கல்வித் துறைக்கே பெரிய அதிர்ச்சி கொடுக்கக் கூடிய மாற்றம் என்றால், அது மிகையாகாது. நான் படிக்கும்போது பதினோராவது வகுப்பான எஸ்.எஸ்.எல்.சி. முடித்த பிறகு, இண்டர்மீடியட் என்று இரண்டாண்டுப் படிப்பு இருந்தது. அதற்குப் பிறகு பி.ஏ., எம்.ஏ., பி.காம். இதுபோன்ற கோர்ஸ்கள் இருந்தன. அதைப் பல ஆண்டுகளுக்கு முன்பு மாற்றினார்கள். இண்டர்மீடியட்டாக இருந்ததை பி.யு.சி.-யாக மாற்றினார்கள். இப்போது அந்த நிலை மாறி பி.யு.சி.-யை எடுத்துவிட்டு ப்ளஸ் 2 என்ற நிலை வருகிறது. இந்த ப்ளஸ் 2 என்பதில் இன்னும் கருத்துக்கள் மக்களுக்குத் தெளிவு படுத்தப்படவில்லை என்ற நிலைமை இருப்பதைப் பார்க்கிறோம். கல்லூரிகளுக்கு ப்ளஸ் 2 கொடுக்க வேண்டுமென்று முன்பு அறிவிக்கப்பட்டது. கடைசியாக கல்லூரிகளுக்கு அது இல்லை என்றும் ஹைஸ்கூல்களுக்குத்தான் என்றும் சொல்லப்படுகிறது. என்னைப் பொறுத்த வரையில், நான் ஒரு பள்ளிக்குக் கேட்டேன். அரசு அதை அனுமதித்ததற்காக இஸ்லாமிய சமுதாயத்தின் சார்பில் அரசுக்கு நன்றியை சமர்ப்பிக்கக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். இப்போது காலேஜ்களில் பி.யு.சி. இருக்கிறது. ஹைஸ்கூல்களில் ப்ளஸ் 2 வருகிறது. இரண்டு கிளாஸ்களும் வருகிற ஆண்டில் இருக்கப்போகின்றன. ஆனால் அடுத்த ஆண்டு பி.யு.சி. இருக்காது என்று அறிகிறேன். காலேஜ்களில் ப்ளஸ் 2 இல்லை. பல காலேஜ்கள் ப்ளஸ் 2 வேண்டுமென்று கேட்கிறார்கள். இந்த ஆண்டு பி.யு.சி. இருப்பதால், ப்ளஸ் 2 இல்லாவிட்டாலும், காலேஜ்கள் பாதிப்பு இல்லாமல் சமாளித்துக்கொள்ள முடியும். அடுத்த ஆண்டு இந்தக் கொள்கை மாற வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும். ப்ளஸ் 2-ம் பி.யு.சி.-யும் இல்லை என்றால், பல காலேஜ்களில் வேலை வாய்ப்பு குறைந்து நிர்வாகச் செலவு கூடுதலாகி, பயிலும் மாணவர்கள் எண்ணிக்கை பெருமளவில் குறைந்து நிர்வாகச் சிக்கலுக்கும் குழப்பத்துக்கும் காலேஜ்கள் ஆளாக வேண்டியிருப்பதால், அந்த முறையில் மாற்றம் தேவை. இந்த ஆண்டு இல்லாவிட்டாலும், அடுத்த ஆண்டு அது வேண்டுமென்று கேட்கிற காலேஜ்களுக்கு இந்த ப்ளஸ் 2 வகுப்புகளைக் கொடுத்தால்தான், நிர்வாக அமைப்பு ஒழுங்காக இருக்குமென்ற கருத்தை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

சென்ற ஆண்டை விட இந்த ஆண்டு மாணவர்களுடைய அதிருப்தி, போராட்டங்கள் குறைவாக இருக்கின்றன என்பதற்காக நான் அரசைப் பாராட்டுகிறேன். நான் படித்த காலத்திலெல்லாம் மாணவர்கள் போராட்டம் என்பதே இல்லை. அந்தக் காலத்தில் படித்த மாணவர்கள் மாதா, பிதா, குரு, தெய்வம் என்று சொல்கிற அடிப்படையில் குரு என்றால், தெய்வத்திற்கு சமமாக மதித்து மரியாதை செய்துகொண்டு வந்தார்கள். போராட்டம்,



1978 மார்ச் 15] [திரு. கே. எஸ். அப்துல் வகாப்]

ஸ்டிரைக் போன்றவைகளை பார்த்ததோ கேட்டதோ கூட இல்லை நான் படித்த காலத்தில். இன்றைக்கு அதற்கு நேர் மாற்றமாக, போராட்டம் இல்லாத

(பிற்பகல் 12-20)

காலேஜோ, பள்ளிக்கூடமோ இருக்கிறதா என்று கேட்கக் கூடிய நிலை இருக்கிறது. இந்த மாற்றத்திற்கு அடிப்படைக் காரணம் என்ன என்பதை நாம் யோசிக்க வேண்டும். என்னைப் பொறுத்தவரையில், நான் மாணவனாக இருந்த காலத்தில், வட தேசத்தில் சிகெரெட் பற்ற வைப்பதற்கு மகன் தகப்பனை நெருப்புக் கேட்ட காட்சியைப் பார்த்ததுண்டு. அந்தப் பண்பாடு தமிழகத்திற்கு இன்னும் வரவில்லை. இன்றைக்கும் மகன் தகப்பனுக்கு உரிய மரியாதையோடு நடந்து கொள்கிறான். இது தமிழ்ப் பண்பாடு. தகப்பனுக்கு அடுத்தபடியாக குருவை தெய்வம் என்று மதித்து நடந்து வந்த காலம் உண்டு. அந்த நிலை தற்போது மாறி, மாணவர்கள் ஆசிரியரிடத்தில் சிகெரெட்டுக்கு நெருப்புக் கேட்கக் கூடிய நிலை உருவாகியிருக்கிறது. இத்தகைய வருந்தத்தக்க சூழ்நிலை ஏன் ஏற்பட்டிருக்கிறது என்பதைப்பற்றிச் சிந்திக்க வேண்டும். என்னைப் பொறுத்தவரையில், நான் ஒன்றைத் தெளிவாகச் சொல்வேன். நான் படித்தகாலத்தில் ஒவ்வொரு ஹைஸ்கூலிலும் கல்லூரியிலும் அவரவர்களுடைய மதபோதனை, மாரல் எஜுகேஷன் இருந்தது. நாடு சுதந்திரம் அடைந்ததற்குப் பிறகு, மத போதனை அளிப்பதன் காரணமாக, மதப் பித்து ஏற்பட்டுவிடுகிறது என்று சொல்லி, மத போதனை கூடாது என்று எடுத்து விட்டார்கள். அப்படி, ஆண்டவன் பக்திக்கு முக்கியத்துவம் கொடுத்ததை எடுத்து விட்டதன் காரணமாக, 'மாரல் ஆட்டிட்யூட்', நன்னடத்தை, நல்ல பண்பாடு, மாணவர்களிடத்தில் குறைந்து விட்டது. கான்ஸ்டிட்யூஷனிலேயே மத போதனை கூடாது என்று உருவாக்கியிருக்கிறார்கள். இது மாற்றப்பட வேண்டும். இது மாற்றப்பட்டால்தான், மாணவர்களுக்கு ஆண்டவன் பக்தி வரும். ஆண்டவன் பக்தி வந்தால், அந்த பயம் இருந்தால் தான், பெரியவர்-சின்னவர், நல்ல நடத்தை, பண்பாடு, ஒழுக்கம் என்ற ஒரு நிலை ஏற்படும். அந்த மனப்பான்மை வர வேண்டும். அதற்காக நமது அரசு தனக்கு அதிகாரம் இல்லாவிட்டாலும், மத்திய அரசுக்கு சிபாரிசு செய்து, வகுப்பு நேரத்தில் இல்லாவிட்டாலும், வகுப்பு நேரத்திற்குப் பிறகாவது, "அவுட் ஆப் கிளாஸ் அவர்ஸ்"-இல் மத போதனையை ஏற்படுத்த வேண்டும். எந்தெந்த மதத்தைச் சார்ந்தவர்களாக இருந்தாலும், அந்தந்த மதபோதனை வகுப்புகளை நடத்தி மாணவர்களிடம் நல்ல பண்பாட்டை ஏற்படுத்த வேண்டும். அப்போது தான் நல்லொழுக்கம் ஏற்படும். அதற்கான முயற்சிகளை நமது அரசு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

கல்லூரிக்குக் கல்லூரி கல்லூரிகளுக்குச் சம்பளம் கொடுப்பது மாறுபடுகிறது. பல மாதங்களாக சில கல்லூரிகளில் சம்பளம் கொடுக்கப் படவில்லை என்ற கூப்பாடு உருவாகி வருகின்றது. இதற்கு மாற்று போர்...

[திரு. கே. எஸ். அப்துல் வகாப்] [1978 மார்ச் 15

நான் சொல்ல விரும்புவது, அரசே நேரடியாக ஆசிரியர்களுக்கும் ஸ்டாப் களுக்கும் கொடுக்கும் திட்டத்தைக் கொண்டுவர வேண்டும். இந்தத் திட்டம் ஏற்கெனவே பல காலமாக அரசின் பரிசீலனையில் இருந்து வருவதாகக் கேட்டிருக்கிறேன். இதைத் துரிதப்படுத்தி சீக்கிரத்திலேயே இந்தத் திட்டத்தை அமுலாக்கி ஆசிரியர்களுக்கு அரசாங்கம் நேரடியாகச் சம்பளம் கொடுக்கின்ற திட்டத்தைக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்போது தான் ஆசிரியர்களுக்குக் கால தாமதமின்றி சம்பளம் கொடுக்க முடியும். கல்லூரிகளுக்கு அரசு தான் சம்பளம் கொடுக்கிறது. அதை நேரடியாகவே கொடுத்துவிடுவது நல்லது என்ற காரணத்தால், இத்திட்டத்தை அமுல்படுத்த வேண்டும் என்ற கோரிக்கை நியாயமாகப்பட்டதால் அதை நான் வற்புறுத்துகிறேன்.

ஆசிரியர்கள் எல்லாம் இப்போது ஸ்டிரைக் செய்வது, பிராட்டிக் கொண்டிருக்கிற நிலை, பரீட்சைகளை பகிஷ்கரிப்பது என்ற சூழ்நிலை எல்லாம் வந்திருக்கின்றன. யு.ஜி.சி. ஸ்கேலை 1973-லிருந்தே கொடுக்க வேண்டுமென்று கோரிக்கை விடுத்திருக்கிறார்கள். அரசு, அந்த அளவுக்கு அமுல்படுத்த முடியாது என்றால், அவர்கள் ஸ்டிரைக் செய்தால், பொதுமக்களுக்கும், மாணவர்களுக்கும் பாதிப்பு ஏற்படும் என்பதால், அவர்கள் 1973-லிருந்து கேட்டால், அது முடியாவிட்டால் 75-லிருந்தாவது அமுல்படுத்த வேண்டும். அவர்கள் கோரிக்கைக்கும் அரசின் நிலைக்கும் நடுவில் இப்படிப்பட்ட ஒரு முடிவு செய்து அதை சீக்கிரமாக அமுல்படுத்த அரசு முயற்சி எடுக்க வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

உத்தமபாளையம் கல்லூரியைப் பொறுத்தவரையில், அந்தக் கல்லூரி சரிவர நிர்வகிக்கப்படவில்லை, ஆசிரியர்களுக்குப் பல மாதங்கள் சம்பளம் கொடுக்கப்படவில்லை, அங்கே ஒரு அமளி, எதிர்ப்பு நிலை உருவாகியது என்ற குறைபாடுகள், கூப்பாடுகள் ஏற்பட்டன. அந்த நிலையில் அரசின் முயற்சி— அது நல்ல முயற்சி—காரணமாக வக்ப் போர்ட் அந்தக் கல்லூரியை எடுத்து நடத்த உத்தரவிட்டது வரவேற்கத்தக்கது. ஆனால் வக்ப் போர்டு மிகவும் பலவீனமான நிலையில் ஏற்கனவே கடனாளியாக இருந்துகொண்டிருக்கிறது. அப்படி இருக்கும்போது, இந்தக் கல்லூரியை ஏற்று நடத்துவது என்றால், அங்கே ஆசிரியர்களுக்குப் பல மாதங்கள் சம்பளம் பாக்கி என்ற நிலை இருப்பதால் அரசு, கல்வி மானியத்தில் இதற்கு என்று விசேஷத் தொகை ஒதுக்கி, ஆசிரியர்களுக்குச் சம்பள பாக்கியைக் கொடுக்கக் கூடிய முறையில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு உரையை முடிக்கிறேன்.

திரு. க. அறிவழகன்: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே, இந்த மாமன்றத்தில் நீண்ட காலமாக கல்வித் துறையைப்பற்றிப் பல விவாதங்களை நடத்தி, கல்வித் துறை மன்றம் என்ற பெருமையைப் பெற்றிருக்கிறது. அது மாத்திரமல்லாமல், இது ஆசிரியர்கள் மன்றம் என்றும்



1978 மார்ச் 15] [திரு. க. அறிவழகன்]

அழைக்கப்பட்டு பெருமை பெற்றது. நமது மாண்புமிகு உறுப்பினர்கள் சில நேரங்களில் பேசும்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதுத்துக் கொள்வார்கள். என்றாலும், உறுப்பினர்கள் கருத்துக்களை ஆசையோடு, ஆவலோடு கேட்பது வழக்கம்.

கல்வித் துறையைப் பற்றி, ‘The problem of education is the problem of teachers ’’ என்று மா சே துங் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். கல்வித் துறைப் பிரச்சினை என்பது ஆசிரியர்களுடைய பிரச்சினை ஆகும். ஆசிரியர் களுடைய பிரச்சினைகளை அறிந்துகொள்ளாமல், கல்வித் துறையைப் பற்றிய பிரச்சினைகளைப் புரிந்துகொள்வது என்பது இயலாத காரியம். ஆசிரியர்களுடைய களைப் புரிந்துகொள்வது என்பது இயலாத காரியம். ஆசிரியர்களுடைய நலன்களைப் பேணினால்தான், கல்வித் துறை வளர்ச்சி சரியான முறையில் இருக்க முடியும், அதை உணர்ந்தோ, உணராமலோ, தெரிந்தோ, தெரியாமலோ, நீண்ட காலமாக கல்வித் துறையைச் சேர்ந்தவர்கள் ஆசிரியர்களுக்காக பல நன்மைகளைச் செய்திருக்கிறார்கள் என்று நான் குறிப்பிடுவேன். இன்று இந்தப் புதிய அரசுக்கு ஏற்பட்டிருக்கிற எல்லாப் பிரச்சினைகளும், அதுவும் கல்வித் துறையைப் பொறுத்தவரையில், அவை அனைத்தும் முன்னால் இருந்த அரசால் கொடுக்கப்பட்ட பிதிரார்ஜித சொத்துக்கள் என்று தான் சொல்லப் பட வேண்டுமே தவிர, இந்த அரசே தேடி எடுத்துக் கொண்ட விவகாரங்கள், பிரச்சினைகள் அல்ல.

துணைத் தலைவரவர்களே, நீங்களே பேசுகிற நேரத்தில் பல நேரங்களில் இந்தப் பிரச்சினைகளைப்பற்றிக் குறிப்பிடும்போதெல்லாம் இந்தக் கல்வித் துறை ஆசிரியர்களிடத்தில் மிகுந்த அக்கறையோடு செயல்படவில்லை என்ற கருத்தைச் சொல்வது வழக்கம். அதற்கு பதிலாக, முன்னால் ஏற்பட்ட பிரச்சினைகளே, ஓரிரு மாதங்களில் தீர்க்கப்படும்படியான சூழ்நிலையிலா இந்த அரசு இருக்கிறது என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

இன்றையதினம், நமது மன்றத்தில் பேசப்பட்ட ஹையர் செகண்டரி எஜுகேஷன் பற்றிக் குறிப்பிட்ட கருத்துக்களுக்கெல்லாம் ஒரு வரப்பிரசாதமாக இந்தக் கல்வி அறிக்கை இருக்கிறது என்று குறிப்பிடுவேன். இந்த மாமன்றத்தில் என்னென்ன கருத்துக்களை நீண்டகாலமாக எடுத்துச் சொல்லி வந்தோமோ, அந்தக் கருத்துக்கள் எல்லாம் இதிலே இடம் பெற்றிருக்கின்றன. ஆனால், கல்வித் துறையில் கருத்துக்கள் இடம் பெறுவது என்பது ஒன்றாகவும், அந்தக் கருத்துக்கள் நடைமுறைப்படுத்தப்படுவது என்பது வேறாகவும் இருப்பதை நாம் பல நேரங்களில் பார்த்திருக்கிறோம். இன்றைக்கு அமைந்திருக்கிற புதிய அமைச்சரவை ஆசிரியர்களுக்காக நீண்ட காலம் பணியாற்றிய ஒரு கல்வி அமைச்சரைப் பெற்றிருக்கிறது. இந்த அமைச்சரவை நிச்சயம் இந்தக் கருத்துக்களின்படி செயலாற்றும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

[திரு. க. அறிவழகன்] [1978 மார்ச் 15

கல்வித் துறையில் சீர்திருத்தங்கள்பற்றி அடிக்கடி இந்த நாட்டில் பேசப்
படுவது வழக்கம். கோத்தாரி கமிஷன் தனது அறிக்கையில், இப்படிச்
செய்யப்பட்ட சீர்திருத்தங்களை எல்லாம், ஒரே வார்த்தையில், ‘Tinkering
with education’ ஆங்காங்கே ஏற்படுகிற துளைகளை அடைக்கிற
வேலைகளில் ஈடுபட்டிருந்தார்கள். ஒரு முழு மாற்றம் ஏற்பட வேண்டும் என்று
கோத்தாரி கமிஷன் தனது அறிக்கையின் துவக்கத்திலேயே சொல்லியிருக்
கிறது. அந்த நோக்கத்தோடு தான் இந்த “Higher Secondary
Education in Tamil Nadu” கொண்டு வரப்பட்டிருக்கிறது. அந்த
மாற்றத்தைச் செயலில் கொண்டு வருகிற ஒரு முயற்சியில் இந்த அரசு
ஈடுபட்டிருக்கிறது என்று குறிப்பிடுவேன். இந்த நாட்டு மக்களின் கல்வி
நிலைமையை, அறியாமை நிலைமையை கண்ணுற்றுப் பார்க்கிறபோது, இது
பயனுள்ளதாக ஆகும்.

கல்வித் துறையைப் பல பிரிவுகளாகப் பிரித்திருக்கிறார்கள். டாக்டர்
மால்கம் ஆதிசேஷய்யா அவர்கள் ஒரு முறை கூறியிருக்கிறார்கள், ஒரு
மாணவன் 2 அல்லது 3-வது படித்துவிட்டு, அவன் மாடு மேய்க்கப் போய்
விட்டாலும் கூட, அந்தக் கல்வி முழுமை அடைந்ததாக இருக்க வேண்டும்.
அதற்குப் பிறகு அவன் 10-வது வகுப்பு வரை படிக்காமலிருந்தாலும் கூட,
அவன் அது வரை பெற்ற படிப்பு முழுமை பெற்றதாக இருக்க வேண்டும்.
எல்லாவற்றைப் பற்றியும் ஒரு சிறிய அளவாவது தெரிந்திருக்க வேண்டும்
என்று கூறினார்கள். அந்த அடிப்படையில்தான் இந்தப் புதிய கல்வித் திட்டம்
அமைந்திருக்கிறது. 10-வது வகுப்பில் அடங்கியிருக்கிற கல்வியானாலும் சரி,

(மாற்றுத் தலைவர் திரு. கே. எஸ். கணபதி தலைமை)

(பிற்பகல் 12-30)

அதற்கு மேலே 2, 3 என்று சொல்லப்படுகிற வகுப்புகளில் சொல்லித்தரப்படும்
கல்வியானாலும் சரி, இன்றையதினம் அது முழுமையான கல்வியைத் தருகிற
கல்வியாக அமைந்திருக்கிறது.

நான் பல ஆண்டுகளாக இந்த மன்றத்திலே ஒரு கருத்தைச் சொல்லி
வந்திருக்கிறேன். அதாவது 10-வது, 11-வது வகுப்பு படிக்கும் மாணவர்
களிடையே ‘எலெக்டிவ்’ என்ற ஒரு பாடத்தை வைத்திருந்தார்கள். எலெக்டிவ்
வைத்திருப்பதைப்போல ஒரு அக்கிரமம் வேறு எதுவும் இருக்க முடியாது.
கண்ணம்மாபேட்டையிலும், ஆற்காடு குப்பத்திலும் உள்ள பள்ளியில் பயிலும்
மாணவன் தான் விரும்புகிற கணக்கு அல்லது விஞ்ஞானத்தை எலெக்டிவ்
பாடமாக எடுத்துப் படிக்க முடியாது. காரணம் அங்கே இருக்கிற பள்ளித்
தலைமையாசிரியர் வரலாறுதான் எலெக்டிவ் பாடமாக இங்கே இருக்கிறது
என்பார். எனவே அவன் தலையெழுத்து வரலாற்றைத்தான் எலெக்டிவ்



1978 மார்ச் 15] [திரு. க. அறிவழகன்]

பாடமாக எடுத்துப் படிக்க வேண்டும். இதனால்தான் யு.ஜி.சி. தலைவராக
இருந்த திரு. கோத்தாரி அவர்கள் குறிப்பிட்டார்கள். எலெக்டிவ் பாடம்
எடுத்துப் படிக்க வேண்டும் என்று 10-வது வகுப்பு மாணவனைச் சொல்வது
‘சைல்ட் மேரேஜ்’ போன்றது, ஒரு குழந்தை மணத்தைப் போன்றது
என்றார். 8-வது, 9-வது படிக்கும் மாணவனைப் பார்த்து, ‘நீ ஒரு எலெக்டிவ்
செலக்ட் செய்து கொள்’ என்றால், இது ஒரு குழந்தைக் கல்யாணம்
போன்றதுதான். இது ஒழிக்கப்பட வேண்டும் என்று சொன்னார். இன்றைக்கு
10-வது வகுப்புவரை எந்தக் குழந்தையும் எந்தக் கட்டாய பாடம் படிப்பது
என்று தன் தந்தையைக் கேட்க வேண்டியதில்லை. அதைப்பற்றி அந்தக்
குழந்தை சிந்திக்கவே வேண்டியதில்லை என்ற அளவுக்கு ஒரு புதிய கல்வியைப்
பெறுகிற நிலை இப்போது உருவாகியிருக்கிறது.

அடுத்து, அரசாங்கப் பள்ளிகளில் சொல்லிக் கொடுக்கப்படும் பள்ளிக்
கல்வியின் தரம்பற்றிச் சொல்லப்படும் பழியைப் போக்கியாக வேண்டும்.
அரசாங்கப் பள்ளிகள் சரியாக நடப்பதில்லை, தனியார் பள்ளிகளில் தான்
நன்றாக சொல்லிக் கொடுக்கிறார்கள், அவைகள் தான் நன்றாக நடக்கின்றன,
அவைகளிலே தான் கல்வித் தரம் உயர்வாக இருக்கிறது என்று சொல்லுகிற
கருத்து ஒரு தவறான கருத்தாகும். ஏழை எளிய மக்கள், பாடுபடும்
தொழிலாளி மக்கள், ஒடுக்கப்பட்ட மக்கள் தங்களுடைய பிள்ளைகளை
அரசாங்கப் பள்ளிகளுக்குத்தான் அனுப்புகிறார்கள். நகரவைப் பள்ளி
களுக்குத்தான் தங்கள் பிள்ளைகளை அனுப்புகிறார்கள். எனவே அவர்கள்
வாழ்க்கைத் தரத்தையும், அவர்கள் கல்வித் தரத்தையும் உயர்த்தும் மிகச்
சிறப்பான பணியில் அரசாங்க ஆசிரியர்கள் இன்றையதினம் ஈடுபட்டிருக்
கிறார்கள். அந்த வகையான அரசாங்கப் பள்ளிகளுக்கு நல்ல ஊக்கத்தைத்
தரவேண்டும். அந்த ஊக்கத்தை இப்போதுதான் முதன்முறையாக இந்த அரசு
கொடுப்பதற்கு முன்வந்திருக்கிறது.

அடுத்து, ஹையர் செகண்டரி பள்ளிகளைக் கொண்டு வருகிறபோது,
தனியார் பள்ளிகளுக்கு என்று அவ்வப்போது லட்சக்கணக்கான ரூபாய்களைக்
கொடுத்து ஊக்குவிப்பது என்று கருதிக் கொண்டிருந்த முறையை மாற்றி,
அரசாங்கப் பள்ளிகளில்தான் இந்த நாட்டு பிற்படுத்தப்பட்ட ஏழை எளிய
மக்களின் பிள்ளைகள் படிக்கிறார்கள், அவர்களை ஊக்குவிக்கும் முறையில்
அவர்களுக்கும் நிதி உதவி தரவேண்டும் என்று எடுக்கப்பட்டுள்ள முயற்சி
மிகவும் பாராட்டப்பட வேண்டியதாகும். நம்முடைய நாட்டில் உள்ள எல்லா
உயர்நிலைப் பள்ளிகளிலும் ஹையர் செகண்டரி வகுப்புகளைக் கொண்டுவருகிற
வாய்ப்பும் வசதியும் இல்லை என்பதை உணர்ந்து, அதைப்பற்றி இந்த
அறிக்கையில் மிகத் தெளிவாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள்
என்பதையும் இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. க. அறிவழகன்] [1978 மார்ச் 15

எவ்வளவுதான் மிகப் பெரிய தனியார் பள்ளியானாலும் சரி, 10 வகுப்புகள் நடத்த, 2,000 மாணவர்களுக்கான விளையாட்டு இடங்கள், மற்றும் மன்றங்கள் நடத்த இடம், ஓய்வு நேரப் பொழுதுபோக்குக்கான இடங்கள், ஆசிரியர்களுக்கு மகிழ்ச்சியாக இருக்கத்தக்க வசதிகள் ஆகியவைகளைப் பெற்ற பள்ளிகள் சென்னை நகரம் முழுவதிலும் பார்த்தாலும், மிகக் குறைவாகத்தான் இருக்கும். இப்படி எல்லா வசதிகளையும் உடைய தனியார் பள்ளிகளிலேகூட மிகக் குறைந்த எண்ணிக்கையில்தான் இருக்கின்றன. இந்த நிலையில் 11-வது, 12-வது வகுப்பை நடத்த வேண்டும் என்று அவர்களுக்கு ஊக்கம் மட்டும் அளிக்கப்படுமானால், அவர்களும் இந்த ஊக்கத்தைக் கொண்டு நடத்தத் துவங்குவார்களானால், மாணவர்களைப் பொறுத்தவரையில், வசதிகள் இல்லாமல் தவிப்பார்கள். எனவே இந்தப் புதிய சூழ்நிலையை அரசு உருவாக்குவதாக இருக்கக்கூடாது என்பதையும் இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்து, தமிழகத்தின் மேலவைத் துணைத் தலைவராகவும், தற்போதைய தலைவராகவும் உள்ள சிலம்புச் செல்வர் திரு. ம. பொ. சிவஞானம் அவர்கள் தமிழ் பாடமொழியாக ஆக வேண்டும் என்று மிக நீண்டகாலமாகச் சொல்லி வந்திருக்கிறார்கள். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் அதன் தாய்க் கழகங்களும் இந்தக் கருத்தைத்தான் வலியுறுத்தி வந்திருக்கின்றன. அப்படி வலியுறுத்தப்பட்ட கருத்தின் அடிப்படையில், இன்றைய தினம் தமிழ் பாடமொழியாக இருக்கும் பள்ளிகளில் படிக்கிற மாணவர்களுக்கு எந்தவிதமான கட்டணமும் இருக்காது என்று அமைச்சர் அவர்கள் சொல்லியிருப்பது மிகவும் வரவேற்கத் தக்கதாகும். ஆங்கிலத்தைப் பாடமொழியாகக் கொண்டு படிக்க வேண்டும் என்று மாணவர்கள் விரும்புவார்களானால், அவர்கள் டான்பாஸ்கோ, லயோலா போன்ற நிறுவனங்கள் நடத்தும் பள்ளிகளில் கட்டணம் கொடுத்துப் படித்துக்கொள்ளலாம். இப்போதே அவர்கள் கட்டணம் கட்டித்தான் ஆங்கிலத்தில் பயின்று வருகிறார்கள். அங்கே அவர்கள் கட்டணம் கட்டிப் படிப்பது என்பது நாட்டுக்கும் நல்லது, கல்வித் துறைக்கும் வருவாய் வருவதாக அது அமையும். ஒரு அரசியல்வாதி என்ற முறையில் இதை மிகச் சாமர்த்தியமாக ஆராய்ந்து இந்தத் திட்டத்தைப் புகுத்தியதற்காக என் பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆங்கிலம் என்கிற மொழி கற்பிக்கப்படுவது என்பது ஒன்று, ஆங்கிலமே பாட மொழியாக—பயிற்று மொழியாக வைக்கப்படுவது என்பது வேறு. ஆங்கிலம் பயிற்று மொழியாக இருந்தால் தான், மாணவர்கள் கல்வியில் நல்ல தரமுள்ளவர்களாக இருப்பார்கள் என்பது சரியற்ற வாதம் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன், ஆங்கிலத்தைப் பயிற்று மொழியாகக் கொண்டு படிக்கின்ற முழுவசதியுள்ள ஆங்கிலோ-இந்திய மாணவர்கள் இந்த நாட்டில் வளர்ச்சி பெறாத சூழ்நிலையைப் பார்ப்போமானால், ஆங்கிலப் பயிற்சி மொழியின்



[திரு. க. அறிவழகன்]
1978 மார்ச் 15]

பலம் ஒரு சமுதாயம் வளர்ச்சி பெறாது என்பதை நன்கு உணர முடியும். ஆங்கிலோ-இந்தியர் சமுதாயம் இந்தத் தத்துவத்திற்கு ஒரு பெரிய எடுத்துக்காட்டாக இருந்து வருகிறது. இன்றையதினம் ஆங்கிலோ-இந்திய இளைஞர்கள் தாங்கள் படிப்பதற்குக் கட்டணம் இல்லாத படிப்புச் சொல்லித்தரும் பள்ளிகள் இல்லாத காரணத்தால், தங்கள் கல்வியைத் தொடர முடியாமல் வாடுகிற சூழ்நிலையை, கஷ்டப்படுகிற சூழ்நிலையைப் பார்க்கிறோம். இதன் காரணமாக அவர்கள் வெளிநாடுகளுக்குச் செல்லும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக இந்த நாட்டில் ஆங்கிலோ-இந்தியரின் ஜனத்தொகை ஆண்டுதோறும் குறைந்துகொண்டு வருகிறது என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன். ஆங்கிலோ-இந்தியன் போர்டு ஆப் எஜுகேஷன் என்ற ஒரு அமைப்பின்கீழ் பள்ளிகள் நடத்தப்படுகின்றன. அந்தப் பள்ளிகளும் மற்ற சமுதாயத்தைச் சேர்ந்த மாணவர்களுக்குத்தான் பயன்படுகின்றனவே தவிர, ஆங்கிலோ-இந்திய சமுதாயத்தைச் சார்ந்த ஏழை எளிய மாணவர்களுக்குப் பயன்படவில்லை. ஆங்கிலோ-இந்திய மாணவர்களுக்கு ஆங்கிலம் பயிற்று மொழியாகக் கொண்ட பள்ளிகளை நடத்தி, அவைகளின் மூலம் ஃபிரீ எஜுகேஷன் அளித்து, கட்டணம் இல்லாமல் நடத்தி உதவிட வழிவகை செய்வது தவறில்லை. ஆனால் அதே நேரத்தில் ஆங்கிலம் பயிற்று மொழியாக இருந்தால் மட்டுமே ஒரு சமுதாயம் வளர்ந்துவிடும் என்று சொல்லுவது சரியல்ல. ஆங்கிலோ-இந்தியர் சமுதாயம் இன்றையதினம் எவ்வளவு இக்கட்டான சூழ்நிலைக்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறதோ அந்த இக்கட்டான சூழ்நிலைக்குத்தான் ஆங்கிலத்தை பயிற்று மொழியாகக் கொள்வதன் மூலம் நாம் மற்றவர்களையும் கொண்டுவருவோம் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மத்திய அரசில் இருக்கிற பல அமைச்சர்கள், அதிலும் குறிப்பாக திரு. ராஜ் நாராயண் போன்றவர்கள் ஒரு கருத்தைச் சொல்லி வருகிறார்கள். இன்றையதினம் சமுதாயம் இரண்டு பிரிவாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. ஒன்று ஆங்கிலம் பாடமொழியாகக் கொண்டு படித்த கூட்டம், மற்றது தமிழ் மொழி போன்ற தங்கள் தாய்மொழியில் பாடம் படித்த கூட்டம். இப்படி இரண்டு கூட்டங்கள் இருக்கின்றபோது, ஆங்கிலத்தை மட்டும் பயிற்று மொழியாகக் கொண்டு பயின்றவர்களுக்கு மிக உயர்ந்த பதவிகளைப் பெறும் வாய்ப்பும், பெரிய இடங்களுக்குச் செல்லக்கூடிய வாய்ப்பும், தமிழ் போன்ற மற்ற மொழிகளைப் பயிற்று மொழியாகக் கொண்டு படித்தவர்கள் அப்படிப்பட்ட உயர்ந்த இடங்களுக்கும் பதவிகளுக்கும் செல்ல முடியாத நிலையும் இருப்பது மாற்றப்பட்டாக வேண்டும். எல்லா இடங்களிலும் தமிழ் மொழிக்கு உரிய முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும். தாய்மொழியின் மூலம் கல்வி கற்பதனால் அவன் நிபுணத்துவம் பெற்ற எந்தத் துறையிலும் அவன் வல்லவனாக இருக்க முடியும் என்ற சூழ்நிலை உருவாக்கப்பட வேண்டும்.

[திரு. க. அறிவழகன்] [1978 மார்ச் 15

மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கப்பாண்டியன் அவர்கள் பேசும்போது,
ஐ.ஏ.எஸ். தேர்வில் தமிழ்ச் சமுதாயத்தைச் சேர்ந்த மாணவர்கள் பெரிய
வெற்றியைப் பெறவில்லை என்ற கருத்தைச் சொன்னார்கள். இதைச்
சொல்லுகிற நேரத்தில் மற்றொன்றையும் நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.
இந்திய உபகண்டத்தில் அந்நியச் செலாவணி என்னும் பாரின் எக்சேஞ்ஜ்
வளர்ந்திருக்கிறது என்றால், அதற்குக் காரணம் ஐ.ஏ.எஸ். துறைக்கு
நம்மவர்கள் அதிகமாகச் செல்லாமல் மற்ற துறைகளுக்கு, அதிலும் குறிப்பாக
பொறியியல் துறைக்குச் செல்வது. இதற்கு நமது பொறியியல் துறை
தெறியாளர் திரு. குழந்தைவேலு அவர்களுக்கு நாம் பாராட்டுத் தெரிவிக்க
வேண்டும். உலகமெங்கும் பொறியியல் துறையில் மிகச் சிறந்த விற்பன்னர்களை
தமிழகம் தான் உருவாக்கிக் கொடுத்துக்கொண்டிருக்கிறது. பல்வேறு
நாடுகளில் பார்த்தால், நம் தமிழ் நாட்டைச் சார்ந்த பொறியியல் நிபுணர்கள்
தான் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அதன் மூலம் நம் நாட்டுக்குத்
தேவைப்படும் அந்நியச் செலாவணியைக் கொண்டுவந்து குவிக்கிறார்கள். நம்
நாட்டில் உற்பத்தியாகும் பொருள்களை வெளிநாட்டுக்கு அனுப்புவதன் மூலம்
நமக்கு அந்நியச் செலாவணி கிடைக்கிறது. ஆனால் அது எந்த அளவுக்குக்
கிடைக்கிறது என்ற கணக்கு என்னிடம் இல்லை. ஆனால் இந்த நாட்டு
அறிவியல், பொறியியல் வளர்ச்சி மிக்கவர்கள் மூலம் இந்த உலகமெங்கும்
அவர்கள் சென்று பணியாற்றி இந்த நாட்டுக்குத் தேவைப்படும் அந்நியச்
செலாவணியைப் பெற்றுக்கொண்டிருக்கிறோம். இதன் காரணமாகத்தான்
இந்திய அரசு இன்றையதினம் அந்நியச் செலாவணி விஷயத்தில்
நிமிர்ந்து நிற்க முடிகிறது.

முன்னாள் இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள்
இதெல்லாம் நெருக்கடி காலச் செயல்களால் கிடைத்தது என்று சொல்லு
கிறார்கள். ஆனால் என்னைப் பொறுத்தவரையில், இது அந்நியச்
செலாவணி பெருகியதற்குக் காரணமாக இருக்க முடியாது. நம் நாட்டுப்
பொறியியல் நிபுணர்கள் வெளிநாடுகளுக்குச் சென்று பணியாற்றி அங்கிருந்து
அந்நியச் செலாவணியை மிகப் பெரும் அளவில் கொண்டுவந்து சேர்த்திருக்
கிறார்கள்.

இருந்தாலும் நமக்கு ஐ.ஏ.எஸ். தேர்வைப் பொறுத்தவரை, ஒரு பெரிய
தொல்லை இருக்கிறது. வடநாட்டில் உள்ளவர்களைப் பொறுத்தவரையில்,
இந்தியைப் பாடமொழியாகக் கொண்டு ஐ.ஏ.எஸ். தேர்வு எழுதலாம் என்று
சொல்லப்பட்டுவிட்டது. அவர்கள் சொல்லுகிற வாதம் பிராந்திய மொழி
களிலும் ஐ.ஏ.எஸ். தேர்வை எழுத யாருக்கும் தடையில்லை என்பதாகும்.
ஆனால் அதே நேரத்தில் தமிழ் மொழியைப் பயிற்று மொழியாகக்
கொண்டவர்கள் ஐ.ஏ.எஸ். தேர்வில் எப்படி எழுதுவது என்பதற்கான
முழுமையான விளக்கம் தரப்படவில்லை. மிக விரைவிலேயே மத்திய அர



1978 மார்ச் 15] [திரு. க. அறிவழகன்]

இந்திக்குத் தருகிற முக்கியத்துவத்தைத் தமிழுக்கும் தர வேண்டும்.
இந்தியைப் பெரிய பெரிய தேர்வுகளில் அங்கீகரிக்கப்பட்ட மொழியாக
வைத்துவிட்டு, ரீஜினல் லேங்குவேஜ்களிலும் எழுதலாம் என்று வெறும்
வார்த்தை அளவில் சொல்லித் தப்பித்துக் கொள்ள நினைப்பது சரியல்ல.
இந்தியா முழுவதும் உள்ள பயிற்று மொழிகளிலும் ஐ.ஏ.எஸ். தேர்வை
எழுதுவதற்கு வசதி இருக்க வேண்டும்.

(பிற்பகல் 12-40)

கல்வித் துறையிலே இந்த சார்புக் கல்வி இல்லாமல் முதியோர் கல்வி
என்பதற்கு முக்கியத்துவம் கொடுத்து, மிக வேகமாக கடந்த ஆண்டிலிருந்து
தொடர்ந்து செயலாற்றிக்கொண்டிருக்கிறது. இங்கே 4 கோடி பேர் இருக்
கின்றார்கள் இந்தத் தமிழகத்தில். அவர்களில் $1\frac{1}{2}$ கோடி பேர்கள் தான்
எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள். ஏறக்குறைய $2\frac{1}{2}$ கோடி பேர்கள் எழுதப்
படிக்கத் தெரியாதவர்கள். அந்தக் காலத்திலேயே பாரதிதாசன் எழுதியிருக்
கிறார்கள். 'கல்வி நல்கா கசடர்க்கு, தூக்கு மரம் அங்கே யுண்டாம்' என்று
பாடியிருக்கிறார்கள். என்னைப் பொறுத்த வரையில், கல்வி நல்கா என்றால்,
இதற்கு முன் இருந்த கல்வித் துறையால் மக்களுக்குக் கல்வி தரப்படவில்லை
என்பதுதான். அந்த கல்வித் துறையின் மீது நான் இந்தக் குற்றச்சாட்டைக்
கூறுகிறேன். 'கசடர்க்கு தூக்கு மரம் அங்கே உண்டாம்' என்று
சொல்கிறார்கள். அப்படிச் சொல்வதற்கு சட்ட மன்றத்திற்கு உரிமையில்லை
என்று கருதுகிறேன். இந்தக் குற்றச்சாட்டை நிவர்த்திக்கின்ற முறையில்.
சார்பற்ற கல்வி---முதியோர் கல்வியை மிகுந்த ஊக்கத்துடன் அளிக்க
முயற்சிப்பதற்கு இந்த அரசைப் பாராட்டுகிறேன்.

நம் நாட்டில் குழந்தைகள் கல்வி என்று எடுத்துக்கொண்டால், மதிய
உணவுபற்றிச் சொல்ல வேண்டும் என்று எண்ணுகிறேன். மதிய உணவு
குழந்தைகளுக்குத் தரப்படுகிறது என்ற அளவில் திருப்தி அடைந்து
வருகிறோம். மத்திய சமையல் அறையிலே சமையல் செய்து அனுப்புவதாகச்
சொல்கிறார்கள். இடிந்து விழுகின்ற நிலையில் உள்ள பள்ளிக்கூடங்களின்
அறைகளில்கூட சமைக்கப்படுகின்றன. ஏதோ உணவு என்று தயாரித்து
அனுப்புகிறார்கள். இரண்டு, மூன்று மாவட்டங்களுக்கு ஒரு மத்திய உணவுக்
கூடம் என்று சொல்லப்படுகிறது. தமிழ் நாட்டில் சத்துள்ள உணவு நல்ல
முறையில் தயாரிக்கப்பட்டு மதிய நேரத்தில் அளிக்கப்பட வேண்டும். அதை
இந்த அரசு நிறைவேற்ற வேண்டும் என்பது என்னுடைய கோரிக்கையாகும்.
ஆரம்பப் பள்ளிகளில் மட்டும் என்பதல்ல. உயர்நிலைப் பள்ளிகளில் படிக்கின்ற
பிள்ளைகளுக்கும் வேண்டும். உயர்நிலைப் பள்ளிகளில் படிக்கின்ற மாணவ
மாணவியர்களைப் பார்க்கிறோம். அவர்கள் வகுப்பு நேரத்தில் மயக்கமடைந்து
விழக்கூடிய அளவுக்குத்தான் இருந்து கொண்டிருக்கின்றனர். ஏன் விழுந்தாய்
என்று மாணவனைக் கேட்கும்போது, அவன் காலையிலும் சாப்பிடவில்லை,

[திரு. க. அறிவழகன்] [1978 மார்ச் 15

மத்தியானமும் சாப்பிடவில்லை என்று சொல்கிறான். இப்படிப்பட்ட நிலைமைகள் இருந்துகொண்டிருக்கின்றன. ஆகவே உயர்நிலைப் பள்ளிகளுக்கும் மதிய உணவுத் திட்டத்தைக் கொண்டு வருகின்ற முயற்சியை இந்த அரசு முக்கியமாக மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

கட்டணம் இல்லாமல் கல்வி அளிக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. ஆனால் பிள்ளைகள் 'ஸ்பெஷல் பீஸ்' கட்ட முடியாமல் இருக்கின்றார்கள். 'ஸ்பெஷல் பீஸ்' கட்டாயமாகக் கட்ட வேண்டியிருக்கிறது. 'ஸ்பெஷல் பீஸ்' கட்டவே தேவையில்லை என்ற சூழ்நிலை வந்தாக வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அந்தப் பிள்ளைகளில் ஏழைகள், பிற்பட்டவர்கள், ஒடுக்கப் பட்ட இனத்தவர் என்றெல்லாம் இருக்கிறார்கள். எல்லோருக்கும் புத்தகங்கள் இலவசமாக உயர்நிலைப் பள்ளிகளிலே கொடுக்கப்பட வேண்டும். இவைகளை யெல்லாம் நிறைவேற்றினால்தான், நம் நாட்டில் சோசலிச சமுதாயத்தை உருவாக்குகின்ற வேலையை நாம் ஓரளவுக்காவது நிறைவேற்றிக்கொண்டிருக் கிறோம் என்ற மனநிறைவைப் பெற முடியும். இல்லாவிட்டால் நாம் இந்தத் துறையில் மனநிறைவைப் பெற முடியாது.

ஆண்டுக்கு ஆண்டு நம் நாட்டில் மேலும் மேலும் எழுதப் படிக்கத் தெரியாதவர்கள் வளர்ந்து கொண்டிருக்கிறார்கள். 'டிராப் அவுட்ஸ்' என்று சொல்வார்கள். அதாவது படித்துக்கொண்டிருப்பவர்கள், தொடர்ந்து படிக்க முடியாமல் விலகிவிடுகின்றவர்கள் அதிகமாகிக் கொண்டிருக்கிறார்கள் என்பது தான். இந்தக் காரணத்தினால் கல்வி அறிவு இல்லாத பிள்ளைகள் அதிகமாகிக் கொண்டு வருகின்றார்கள். இந்தச் சூழ்நிலை நாளுக்கு நாள் பெருகிக்கொண்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைக்கு இருக்கின்ற சூழ்நிலையில், நம் நாட்டுப் பிள்ளைகள் 10-வது வரையிலாவது படித்தவர்களாக இருக்கிறார்கள் என்று சொல்வதற்கு 100 அல்லது 200 ஆண்டுகள்கூட ஆகலாம் என்று சொல்கிறார்கள். அது ஒரு பயங்கரமான உண்மையாக இருந்து கொண்டிருக்கிறது என்பதை நாம் உணரவேண்டும்.

அடுத்து, நம் அரசைப் பொறுத்த வரையில், ஆசிரியர்கள் பிரச்சினைகள் பல இருக்கின்றன. யூனிவர்சிடி கிராண்ட்ஸ் கமிஷன் பெரும்பகுதித் தொகையை ஆசிரியர்களுக்கு, பேராசிரியர்களுக்கு, யூனிவர்சிடி கிராண்ட்ஸ் கமிஷன் விதித்த சம்பள விகிதத்தைத் தரவேண்டும் என்று கேட்டு, 4 ஆண்டுகளுக்கு மேல் ஆகின்றது. நான் அன்றே மாநில சுய ஆட்சிபற்றி குறிப்பிட்டுப் பேசினேன். துணைத் தலைவரவர்களே, நீங்கள் மாநில சுய ஆட்சிக் கொள்கையிலே மிகுந்த ஆர்வமும் அக்கறையும் உள்ளவர்கள் என்ற முறையிலே, நானும் அதைச் சொல்வதில் மகிழ்ச்சி அடைகிறேன். தமிழ்



1978 மார்ச் 15] [திரு. க. அறிவழகன்]

நாட்டில் கல்லூரி ஆசிரியர்கள், புலவர் பட்டம் பெற்றிருந்தால், அவர்களுக்கு அந்தச் சம்பளம் இல்லை என்று யூ.ஜி.சி. சொல்லவில்லை என்று சொன்னார்கள். யூ.ஜி.சி. சொல்லியிருக்கின்ற அந்தச் சம்பள விகிதத்தை எல்லா ஆசிரியர் களுக்கும் இதுவரையில் கொடுக்கவில்லை. இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் நான் இந்த மன்றத்தில் கேட்டேன். உண்மையில் பல்கலைக்கழக ஆசிரியர்களை இந்த அரசு பரிவுடன் கவனிப்பதாகவும் பாதுகாப்பு அளிக்கப் போவதாகவும் சொன்னார்கள். பல்கலைக்கழக ஆசிரியர்கள் மகிழ்ச்சியடையத்தக்க விதத்தில் கொடுக்க வேண்டும் என்று நான் விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

டெமான்ஸ்ட்ரேட்டராகவும், டியூட்டராகவும் இருந்து எம்.ஏ., எம்.எஸ்ஸி. பட்டம் பெற்றிருந்தால், அவர்களில் சிலரைத் துணைப் பேராசிரியர் களாகவும், விரிவுரையாளர்களாகவும் ஆக்குவதற்கு அரசு ஒப்புக் கொண்டுள்ளது. அதற்குப் பாராட்டுகிறேன். அது போலவே பி. டி. பணியில் உள்ள ஆசிரியர்களுக்கு 1970 ஆம் ஆண்டு முதல் வேலையை நிரந்தரம் செய்திருக்கிறார்கள். பலர் இன்னும் நிரந்தரம் ஆக்கப்படாமல் விடுபட்டிருக் கிறார்கள். அதையும் கவனிக்க வேண்டும். செகண்டரி கிரேட் ஆசிரியர்கள், சிறப்பாசிரியர்கள் மற்ற ஆசிரியர்கள் ஆகியவர்களுக்கும் 1970 ஆம் ஆண்டி லிருந்தே அவர்களுடைய வேலையை நிரந்தரம் செய்ய வேண்டும், பணிகளை வரன்முறைப் படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய ஆசிரியர்களில் மிக முக்கியமான இடத்தை வகிக்கின்றவர்கள் என்று நான் கருதுவது கைத்தொழில் ஆசிரியர்கள்தான். கடந்த காலத்தில் அவர்களுக்குப் பல சிரமங்கள் இருந்துகொண்டிருந்தன. அவர்கள் பார்ட் டைம் ஆசிரியர்களாக, 2, 3 பள்ளிகளில் பல்வேறு வகுப்புக்குச் சென்று பாடம் சொல்லிக்கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். நெசவுத் தொழில் ஆசிரியர்கள் இருக்கின்றார்கள். நம்முடைய கல்வி அமைச்சர் அவர்களுக்கும் தெரியும். நெசவுத் தொழில் சொல்லிக்கொடுக்க வசதி இல்லாத இடத்திலே நெசவுத் தொழிலாசிரியர்கள் இருக்கின்றார்கள். தையல் தொழிலுக்கு வசதி யில்லா இடத்திலே தையல் தொழிலாசிரியர் இருக்கின்றார். இப்படி பல தொழிலாசிரியர்கள் இருந்துகொண்டிருக்கிறார்கள். ஹையர் செகண்டரி திட்டம் வந்திருக்கின்ற காரணத்தால், அதிலே மேல் நிலைக் கல்வி கொடுக்கப் படுகின்ற காரணத்தால், நம்முடைய அரசு எந்தெந்த தொழில் கல்வி சொல்லிக்கொடுக்கின்றார்களோ, அதற்கான வசதிகளை விரைந்து செய்து கொடுப்பது நல்லதாகும். வேலை வாய்ப்புக் கல்வி என்று சொல்கின்றார்கள். அது எல்லோருக்கும் வேலை வாய்ப்பை அளித்துவிடும் என்று நான் கருதுவதற்கில்லை. இனிமேல் நெசவு வேலை செய்பவர்கள், மர வேலை செய்பவர்கள், சைக்கிள் ரிப்பேர் செய்கின்றவர்கள், மோட்டார் ரீ வைண்டிங் மற்ற இணைப்பு வேலைகளைச் செய்பவர்கள் எல்லாம் பாதிக்கப்படுவோர்கள் என்று

சொல்கிறார்கள். நம் மாணவர்களெல்லாம் தொழில் துறையில் பயிற்றுவிக்கப் பட்டால், இந்தச் சூழ்நிலைகள் ஏற்படும் என்று சொல்கின்றார்கள். அந்தத் தொழில்களில் பல்லாயிரக்கணக்கானவர்கள் நம் சமுதாயத்தில் இருக்கின்றனர். அவர்கள் எழுதப் படிக்கத் தெரியாதவர்கள். அவர்கள் அந்த மாதிரியான தொழில்களைச் செய்து கொண்டிருக்கின்றார்கள். அவர்களுடன் இந்தக் கல்வி பெற்ற மாணவர்கள் போட்டி போடுவார்கள் என்றும் சொல் கிறார்கள். இப்படிப்பட்ட கல்வியை பல்வேறு மாணவர்களுக்கு அளிப்பதால் அவர்களுக்குத் தொழில்பற்றித் தெரிந்துகொள்வதற்கான வாய்ப்பு கிடைக் கிறது என்று சொல்லிக்கொள்வேன். அவர்களுக்கு ஒரு வாய்ப்பு கிடைக் கின்றது. அது ஒரு குறிப்பிட்ட பணியாற்றும்போது பயன்படும். சமுதாயத் தில் முன்னே அந்த வேலை செய்து கொண்டிருப்பவர்களுடன் போட்டி போடு வதற்காக அல்ல என்று குறிப்பிட விரும்புகிறேன். நம் பள்ளிகளில் பாடங்கள் சொல்லித் தருகிறார்கள். நல்ல உபதேசங்களைச் சொல்லித் தருகிறார்கள். பரிட்சைகள் எழுதித்தான் வெற்றி பெற முடியும் என்ற நிலைமைகள் இருக் கின்றன. தவறாக வெற்றி பெற முடியாது. மேலும் நம் கல்வித் துறையில் ஒரு பெரிய மாற்றத்தை, முழுமுதல் புரட்சியைச் சரியாகச் செய்ய வேண்டு மென்றால், இந்தக் கைத் தொழில் கல்விக்கு வேண்டிய ஏற்பாடுகளையும் மிகச் சிறந்த முறையில் செய்ய வேண்டும். பொறியியல் துறையில் அரசு மிகுந்த ஆர்வம் எடுத்துக்கொண்டு செயல்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன். மையம் செகண்டரியில் தொழில் கல்வி வருவதாக நான் கருதவில்லை. அப்படி வருவதாக இருந்தாலும், வரவில்லை என்றாலும், அந்தப் பொறியியல் துறையின் பல்வேறுவிதமான தொழில் கருவிகளை இந்தத் தொழிற் கல்வித் துறைக்குத் தந்து உதவவேண்டும். அவைகளைப் பயன்படுத்த ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நம்முடைய கல்வித் துறையின் கீழ் இயல் இசை நாடகமன்றம் ஆரம்பத்தில் பல்வேறு நாடகங்களை நடத்திக்கொண்டிருந்தது. அதற்கான அழைப்புகள் முன்பு வந்தன. இப்போது கொஞ்சகாலமாக எனக்கு வரவில்லை.

**திருமதி சத்தியவாணிமுத்து :** இப்போது அனுப்பப்பட்டிருக்கிறது. அழைப்பிதழ் வந்திருக்கின்றது.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** எனக்குத் தொடர்ந்து வந்து கொண்டிருக்கின்றது.

**திரு. க. அறிவழகன் :** தாங்கள் தமிழ்ச் செல்வர். இலக்கியச் செல்வர் ஆனதால், தங்களுக்கு வந்துகொண்டிருக்கும் என்று நினைக்கிறேன்.





**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** எப்போதும் எனக்குத் தொடர்ந்து வந்துகொண்டிருக்கிறது.

**திரு. க. அறிவழகன் :** எனக்கும் இந்தத் தடவை வந்திருக்கிறது. இந்தத் தடவை கிராமிய நடனங்கள் கூட நடத்தப் போகிறார்கள். நான் கூட செயலாளர் அவர்களைப் பார்த்து, இதற்கு முன் நடந்த நாடகங்களுக்கு அழைப்பு அனுப்பவில்லை என்பதைப்பற்றிக் குறிப்பிட்டுச் சொன்னேன். இந்த விஷயத்தில் என்ன செய்ய வேண்டும் என்று எனக்கு விருப்பம் என்றால், நம் நாட்டில் சினிமா பாடல்களை மட்டும் பாடிக் கொண்டு போகிறார்கள், பல்வேறு வெளிநாட்டு பாப் மியூசிக் போன்றவைகளைத் தான் பாடிக்கொண்டிருக் கின்றார்கள், அதை மாற்ற வேண்டும். நாம் படித்த தமிழ்ப் பாடல்களையும், கவிதைகளையும் வரி வரியாகப் பாடுகின்ற நேரத்தில், நாம் மிகச் சிறந்த கவிதைகள் உருவாக்குகின்ற திறன் வருகிறது. அந்த அளவில் அப்படிப் படித்தவர்கள் பல கவிதைகளை எழுதுகிறார்கள் என்று சொல்லிக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-50)

மிகச் சிறந்த இசை விற்பன்னர்களாக அவர்கள் இருக்கிறார்கள். நம்முடைய நாநிலத்திலே இருக்கிற இயல் இசை நாடக மன்றம், பள்ளிகளிலே படிக்கும் பல லட்சக்கணக்கான குழந்தைகளுக்கான பாடல்களைத் தயாரித்து, அவற்றுக்கு இசை அமைத்து, அவற்றைக் குழந்தைகளுக்குத் தரும் முயற்சியை எடுத்துக்கொள்ள வேண்டும். இப்போது பள்ளிகளில் நடக்கும் நாடகங்களைப் பார்த்தால், நமக்குக் கவலை ஏற்படுகிறது. இந்த நாடகங்கள் தான் கிடைத்ததா என்ற கவலை ஏற்படுகிறது. பள்ளிகளுக்கேற்ற, குழந்தை களுக்கேற்ற நாடகங்களை இயல் இசை நாடக மன்றம் இயற்றித் தர வேண்டும். இசைத் துறை, கர்நாடக இசையையும், தமிழ் இசையையும் கற்றுக் கொடுப்பதாக இருக்கிறது. பிள்ளைகளுக்கேற்ற புதிய இசை—புதிய பாடல் களுக்கான நல்ல இசையைத் தயார் செய்து கொடுப்பதற்கான முழு முயற்சியை அவர்கள் எடுத்துக்கொள்ள வேண்டும்.

பொறியியல் துறை ஒரு காலத்தில், பொதுப் பணித் துறை அலுவலகத் தில் உள்ள ஓர் அறையில் தலைமை அலுவலகத்தைக் கொண்டிருந்தது. நெறியாளர் திரு. பு. முத்தையன் அவர்களுடைய பெரு முயற்சியால் அது ஒரு பெரிய பல்கலைக் கழகமாக, இந்த நாட்டினுடைய கல்வியெல்லாம் அங்கே தான் இருக்கிறதோ என்று கருதுகிற அளவுக்கு அந்த நெறியகமும், பொறியியல் கல்லூரியும், அதற்கான கல்லூரிகளும், பாலிடெக்னிக்குகளும் வளர்ந்திருக்கின்றன. இவ்வளவு பெரிய வளர்ச்சியை வைத்துக்கொண்டிருக்கிற அந்தத் துறை, மற்றக் கல்லூரிகளிலே, உயர்நிலைப் பள்ளிகளிலே, ஆரம்பப் பள்ளிகளிலே உள்ள மாணவர்களுக்கு விஞ்ஞான அறிவைப் புகட்ட ஒரு தனி

[திரு. க. அறிவழகன்] [1978 மார்ச் 1

அமைப்பை ஏற்படுத்த முயற்சி மேற்கொள்ள வேண்டும். இங்கே எக்சிபிஷன் நடத்துகிறார்கள். ஆசிரியர்களை அழைத்து பொறியியல் அறிவைப் புகட்டு கிறார்கள். ஒரு முறை முன்னாள் பிரதமர் அவர்கள், கல்வி அவர்கள் இருக்குப் இடங்களுக்குச் செல்ல வேண்டுமென்று சொன்னார்கள். அதைப்போல விஞ்ஞான எண்ணங்களை உயர்நிலைப் பள்ளிகளில் படிக்கின்ற சிறுவர்கள் அனைவருக்கும் ஊட்டுகிற விதத்தில் முழு முயற்சிகளை எடுத்துக்கொள்ள வேண்டும். இப்போதைய பொறியியல் துறை நெறியாளர் தமிழ்த் துறையிலும் வல்லவர். எனவே அந்தத் துறை நூல்களைத் தமிழில் வெளியிட முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய கல்வித் துறையில் பல்லாயிரக்கணக்கான ஆசிரியர்கள் பணியாற்றுகிறார்கள். கல்வித் துறையில் உள்ள உயர்நிலைப் பள்ளிகள் 'ஏ' விங் 'பி' விங், 'சி' விங் என்று பிரிந்திருக்கின்றன. அவை ஒன்றுபடவில்லை என்ற வருத்தம் மிக நீண்டகாலமாக ஆசிரியர்களிடையே இருக்கிறது. அ ஒன்றுபட்டால் என்னென்ன வருத்தம் உண்டாகுமோ என்கிற அச்சம் அரசுக்கு இருக்கக் காரணம் இருக்கிறது. அந்தப் பள்ளிகளை ஒன்றுபடுத்தி அதனால் ஏற்படும் தீமைகளைப் பிறகு தெரிந்துகொள்வோமென்பது என்னுடைய கோரிக்கை. அந்தப் பள்ளிகள் ஒன்றுபடுவதாலே ஆசிரியர் களிடையே மனக்கிலேசங்கள் ஏற்படுமென்று அஞ்சாமல், ஒன்றுபட்ட பிறகு அதனால் ஏற்படுகிற தொல்லைகளை, துன்பங்களை நீக்கிக்கொள்ள முடியும் நீக்கிக்கொள்ள வேண்டுமென்ற கருத்து இருக்க வேண்டும். அதற்கு மாண்புமிகு கல்வி அமைச்சரவர்கள் முழு முயற்சியும் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நாட்டிலே வேலை திறுத்தம் நடைபெறுகிற நேரத்தில், எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு மிகச் சிறப்பாக நடைபெற்றிருப்பதற்குக் காரணம் உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்கள்தான், கல்வி இலாக்கா என்று சொன்னால், அவர்களுக்கு மிக்க மகிழ்ச்சியாக இருக்கும். எனவே அது உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்கள் அடங்கிய கல்வித் துறையின் பெரும் சிறப்பிற்குரிய செயலாகும். அந்தப் பரீட்சைகள் நடைபெறுவது நன்மையென்று நம்முடைய நாட்டு என்.ஜி.ஓ.-க்களுக்குகூட மிக்க மகிழ்ச்சி அடைந்திருப்பார்களென்பது என்னுடைய எண்ணம். அவர்களுடைய பிள்ளைகளும் அந்தப் பரீட்சை எழுதுகிறார்கள். அந்தப் பரீட்சை மிகச் சிறப்பாக நடைபெற அவர்களும் துணை புரிந்திருப்பார்களோ என்ற சந்தேகம் இருக்கிறது. கல்வித் துறையில் என்னென்ன வளர்ச்சிகள் ஏற்பட்டாலும், பெண்களுக்கான கல்வித் துறை வளர்ச்சி பெறவில்லையென்பது என்னுடைய எண்ணமாகும். பெண் பிள்ளைகள் விளையாடுவதற்கு விளையாட்டிடங்கள் இல்லை. நீச்சல் குளம் இல்லை. நீச்சல் குளத்தில் பெண்களுக்கென்று ஒரு நாள் ஒதுக்கப்படுவதில்லை. நம்முடைய



1978 மார்ச் 15] [திரு. க. அறிவழகன்]

பெண்கள் நீச்சல் குளத்திற்கு வருவதே கடினம். சென்னையில்தான் 4, 5 நீச்சல் குளங்கள் இருக்கின்றன. கல்வித் துறையில் உயர்கல்வி இயக்குநராக ஓர் அம்மையாரை நியமித்திருப்பது பாராட்டுக்குரியதாகும். அதே நேரத்தில் கல்வித் துறையில் பெண்களுக்கென்று செய்ய வேண்டிய பல்வேறு காரியங் களைச் செய்தாக வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்துல் வகாப் அவர்கள் மகிழ்ச்சியடைவார்கள். நம்முடைய நகரசபை நடத்துகிற, முஸ்லீம் பெண்கள் படிக்கிற பள்ளிக்கே முட்டாக்கு போட்டு, பெண்கள் வருகிற பஸ்ஸுக்கு முட்டாக்கு போட்டு, பிராட்வேக்கு அழைத்து வருகிறார்கள். அந்தப் பள்ளியிலே படித்த மாணவிகள் பாராளுமன்ற உறுப்பினராக, டாக்டர்களாக வருகிறார்கள். முதலிலே கல்விக் கண்ணைத் தந்தாக வேண்டும். கல்வித் துறையைச் சேர்ந்த பெண்கள் குழு பெண்கள் பள்ளிகளிலே ஆண்கள் படிக்கலாமென்று சொல்லியிருக்கிறது. அந்தக் கருத்திலே தவறு இல்லை. சரியாகக் கூட இருக்கலாம். சென்னைப் பல்கலைக் கழகத் துணை வேந்தர் "விரும்பினால் சேர்த்துக்கொள்ளுங்கள்" என்று தீர்மானம் போட்டு, அனுப்பியிருக்கிறார்கள். பெண்கள் கல்வி என்பது துவங்குகிற கல்விதான். இருக்கிற பெண்களின் எண்ணிக்கையைப் பார்த்து, அவர்களில் கற்றவர்களின் எண்ணிக்கையைப் பார்க்கும்போது, கற்றவர்களின் எண்ணிக்கை மிகக் குறை வாக இருக்கிறது. ஆகவே இந்த நிலையில் பெண்களுடைய கல்வியை வளர்க்கப் பெரு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஹையர் செகண்டரி போர்டாக இருந்தாலும், மெட்ரிகுலேஷன் போர்டாக இருந்தாலும், டெக்ஸ்ட்-புக் சொசைட்டியாக இருந்தாலும், அதிகாரிகளை அதன் தலைவர்களாகப் போட்டுக்கொண்டிருக்கிறார்கள். எவ்வளவோ பேர்கள் பேராசிரியர்களாக இருக்கிறார்கள். தங்களைப் போன்ற தமிழ்ப் பெரு மக்கள் பெருந்தலைவர்களாக இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களைத் தலைவர்களாகப் போட்டு, அதிகாரிகளைச் செயலாளர்களாக நியமிக்க வேண்டும். அப்படி நியமித்தால், அவர்கள் தங்கள் கருத்துக்களைச் சொல்ல வசதியாக இருக்கு மென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். கல்வித் துறையிலிருந்து இந்த முறை வந்திருக்கும் அருமையான அறிவிப்புகளுக்காக என்னுடைய பாராட்டு தல்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்து, கல்வி அமைச்சரவர்களின் முயற்சி வெல்க என்று சொல்லி, அமைகிறேன்.

திரு. கு. மா. பாலசுப்பிரமணியம்: மாண்புமிகு அவைத் தலைவரவர்களே, கல்வி வளர்ச்சிபற்றி எனக்கு முன்னே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் பள்ளிக் கல்வி பற்றியும், கல்லூரிக் கல்வி பற்றியும் வெகுவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இன்னும் கல்வித் துறையைச் சார்ந்த பல உறுப்பினர்கள் இன்றும், நாளையும் அது பற்றிப் பேச இருக்கிறார்கள். ஆகையால் நான் அவர்களுடைய கருத்துக்களை ஆதரித்து, "தமிழ் வளர்ச்சி"

[திரு. கு. மா. பாலசுப்பிரமணியம்] [1978 மார்ச் 15

பற்றி கொடுத்திருக்கிற குறிப்புக்களின்மீது மட்டும் என்னுடைய கருத்துரை
களைச் சொல்ல விரும்புகிறேன். “ தமிழ் வளர்ச்சி இயக்கம் ” என்ற தலைப்பிலே
முதலாவதாகக் குறிப்பிடப்பட்டிருப்பது பிற மொழி நூல்களில்
சிறந்தவற்றைத் தமிழில் வெளியிடுவதற்கும், அரிய தமிழ் இலக்கியங்களைப்
பிற மொழிகளில் வெளியிடுவதற்கும் ஒரு குழு உண்டாக்கப்பட்டிருக்கிற
திட்டம். இதை நான் மன மகிழ்ச்சியோடு பாராட்டுகிறேன். அமரகவி
பாரதியார் சொன்னதுபோன்று “ சென்றிடுவீர் எட்டுத் திக்கும், கலைச் செல்வம்
யாவும் கொணர்ந்து இங்கு சேர்ப்பீர் ” என்ற கண்ணோட்டத்தோடு பிற
நாட்டின் சிறந்த கலைச் செல்வங்களை இங்கே சேர்க்கவும், “ திறமான புலமை
யெனில் பிற நாட்டார் அதை வணக்கம் செய்தல் வேண்டும் ”—என்றதுபோல்,
நம்முடைய திறமையான புலமையைப் பிற நாட்டுக்காரர்களும் அறியும்
வகையில் நம்முடைய அரிய தமிழ் இலக்கியங்களைப் பிற மொழிகளில்
வெளியிட இருப்பதையும் நான் மனமார வரவேற்கிறேன். ஆனால் தமிழ்
வளர்ச்சி இயக்குநர் அதன் தலைவராகவும், உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்
தலைவர், சென்னை பல்கலைக் கழகத் தமிழ்த் துறைத் தலைவர், ஆட்சி மொழிக்
குழுவின் தலைவர், சாகித்ய அகாடெமியின் மண்டலத் தலைவர் ஆகியோர்
இக் குழுவின் உறுப்பினர்களாக இருப்பார்களென்று மட்டும் குறிப்பிடப்

(பிற்பகல் 1-00)

பட்டிருக்கிறது. அதே சமயத்தில், எனக்கு முன்னே பேசிய மாண்புமிகு
உறுப்பினர் திரு. அறிவழகன் அவர்கள் குறிப்பிட்டதைப் போல, இந்தக்
குழுவிலே தமிழ் நூல்களை ஆய்ந்தறிந்த பேரறிஞர்களாக இருப்பவர்களுள்
ஒரு சிலரையும் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.
பன்மொழிப் புலவர் அப்பாதுரையார், தெ. பொ. மீனாட்சிசுந்தரனார், ஔவை
துரைசாமி, சிலம்புச் செல்வர், இப்படி நடைமுறையிலே தமிழ் இலக்கியங்
களோடு தொடர்பு கொண்டவர்களையும் இந்தக் குழுவிலே சேர்த்துக்
கொண்டால், மொழி பெயர்க்கத் தகுந்த சிறந்த நூல்களைத் தேர்ந்தெடுக்கப்
பயனுள்ளதாக இருக்கும் என்று மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுக்குத்
தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அடுத்து, வறுமையில் வாடும் தமிழறிஞர்களுக்கு மாதம் நூறு ரூபாய்
ஓய்வூதியம் அளிக்கும் திட்டம். இந்தத் திட்டத்தையும் நான் மனமார
வரவேற்கிறேன், பாராட்டுகிறேன். இந்தத் திட்டம் 15—1—1978, திருவள்ளுவர்
திருநாள் முதல் வழங்கப்படுகிறது என்றும், இதுவரை 5 பேருக்கு வழங்கப்
பட்டது என்றும், மேலும் 45 பேர்களைச் சேர்த்து மொத்தம் 50 பேருக்கு
வழங்கப்படும் என்றும் தெரிவித்திருக்கிறார்கள். நான் அறிந்த வரையிலே
அவர்களுக்கு முதல் மாதம் ஜனவரியிலே வழங்கியதோடு சரி. அடுத்து இரண்டு
மாதங்கள் ஆகிவிட்டன. ஆனால் அவர்களுக்கு இன்னும் அந்த ஓய்வூதியம்
தொடர்ந்து வழங்கப்படவில்லை என்று அறிகிறேன். இதற்குக் காரணம் ஆணை



1978 மார்ச் 15] [திரு. கு. மா. பாலசுப்பிரமணியம்]

சரியாகப் பிறப்பிக்கப்படவில்லையென்று நினைக்கிறேன். ஏற்கெனவே அறிவிக்கப்
பட்ட அவர்களுக்கு தொடர்ந்து வழங்குவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று
கேட்டுக்கொண்டு, வறுமையில் வாடும் தமிழறிஞர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும்
இந்தத் திட்டத்திற்காக மீண்டும் என்னுடைய நன்றியறிதலைத் தெரிவித்துக்
கொள்ளுகிறேன்.

அடுத்து, கம்பர், வள்ளலார் போன்ற தமிழினச் சான்றோர்களுக்கு நினைவுச்
சின்னமாய்ச் சென்னையில் தமிழ்ப் பண்பாட்டு மைய நிலையம் ஒன்றை ஏற்படுத்த
இருப்பதை வரவேற்கின்றேன். இதிலே கமபருக்கு முன் தோன்றி, தமிழ்
இலக்கியத்திற்கு தலை காப்பியம் அளித்த இளங்கோவடிகள், அவருக்கும்
முந்திய திருவள்ளுவர் ஆகிய தமிழ்ச் சான்றோர்களிலிருந்தே இந்தத்
திட்டத்தைத் தொடங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்தப்
பண்பாட்டு நிலையத்தில் படிப்பக வசதிகளும் செய்யப்படும் என்று சொல்லப்
பட்டிருக்கிறது. அதை நான் பாராட்டுகிறேன். அதைத் தொடர்ந்து எந்த
அளவுக்கு இப்போதுள்ள நூலகங்கள் உதவுகின்றன என்பதையும் சொல்ல
விரும்புகிறேன்.

சென்ற மாதத்தில் நூலகங்கள்பற்றி நான் கேட்ட கேள்விக்கு மாண்புமிகு
கல்வியமைச்சர் அவர்கள் ஒரு விளக்கமான அறிக்கையைக் கொடுத்தார்கள்.
அந்த அறிக்கையின் அடிப்படையிலேயே சில கருத்துக்களைச் சொல்ல
விரும்புகிறேன். நூலகம் என்பது தமிழ் நாட்டிலே அதிகமான நூல்களை மக்கள்
படிப்பதற்கு உதவுகின்ற வாய்ப்பாக இல்லை என்பதைக் குறையாக இங்கே
சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்த
அறிக்கையின் கணக்கின்படி 1973-74 ஆம் ஆண்டில் நூலக வரியாக வசூலான
தொகை ரூ. 58 இலட்சம். அதிலே நூல்கள் வாங்குவதற்காக செலவிட்ட
தொகை ஏறக்குறைய 20 இலட்சம். அதாவது 19 இலட்சத்து 86 ஆயிரம்.
ஏறக்குறைய வசூல் செய்த தொகையில் பாதி செலவிடப்பட்டிருக்கிறது.
1975-76 ஆம் ஆண்டிலே நூலக வரியாக வசூலான தொகை ரூ. 59½ இலட்சம்.
அதிலே ரூ. 12 இலட்சம்தான் நூல்கள் வாங்குவதற்காகச் செலவிடப்
பட்டிருக்கிறது. நூல்கள் வாங்குவதற்காகச் செலவிடுவது கொஞ்சம்
கொஞ்சமாகக் குறைந்து வந்திருக்கிறது. ஆனால் 1975-76-ல் நூலகங்களின்
நிர்வாகத்திற்காகச் செலவு செய்திருப்பது மட்டும் 126 இலட்சம் ரூபாய்.
இந்தக் கணக்கு “ யானை வாங்குவதற்கு ஐந்து பொன், அதற்குத் தீனி
வாங்குவதற்கு ஐம்பது பொன் ” என்பது போல இருக்கிறது. இது பெரிய
தவறு என்பதைச் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். நூலகம் என்பது,
ஏராளமான நூல்களை வாங்கி மக்கள் படிக்கச் செய்வதற்குத்தான்.
நிர்வாகத்திலுள்ள சில அதிகாரிகளுக்குச் சம்பளம் கொடுப்பதற்காக இல்லை
அந்தத் திட்டம். ஆகவே நூலகத்திற்குச் செலவிடுகிற தொகையில்

உண்மையான நூல்களை வாங்குவதற்காக அதிகம் ஒதுக்க வேண்டும். அதுவும் நாட்டிலே நாளுக்கு நாள் அச்சுக் கூலி, காகித விலை, புத்தகம் தயாரிக்கும் செலவு மிகவும் அதிகமாகும் இந்த நேரத்திலே, சாதாரண மக்கள் விலை கொடுத்து வாங்கிப் படிக்கும் நிலையில் இல்லை. நூலறிவைப் பெருக்க வேண்டுமென்று அரசு விரும்புகிறதென்றால், நூலகங்களில் எல்லாம் ஏராளமான புத்தகங்களைக் கொடுப்பதற்கு வழி செய்ய வேண்டும். அப்படியின்றி 12 இலட்சம் ரூபாயை நூல் வாங்குவதற்கும், 126 இலட்சம் ரூபாயை நிர்வாகத்திற்கும் செலவு செய்தால், அது நூலக அறிவு வளர்ப்பதற்குப் பயன் படாது. ஆகவே அந்த முறையை மாற்றியமைக்க வேண்டும். செலவில் சரிபாதி தொகைக்காவது புத்தகங்களை வாங்க வேண்டும்.

புதிய நூலகங்களை ஏற்படுத்துவதற்கு செலவுத் தொகை என்றும் கணக்குக் கொடுத்திருக்கிறார்கள். 1972-73-க்கு 11 ஆயிரம் என்று கொடுத்திருக்கிறார்கள். ஆனால் 1973-74, 1974-75, 1975-76 ஆகிய ஆண்டுகளுக்கு இந்தத் தலைப்பின் கீழ் ஒன்றுமேயில்லை. வெறும் புள்ளிகளை மட்டும் போட்டிருக்கிறார்கள். இந்த ஆண்டுகளில் புதிய நூலகங்களையே ஏற்படுத்தவில்லை என்று பொருளா என்பது புரியவில்லை.

மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கப்பாண்டியன் அவர்கள் கூட நூலகங்களில் பணியாற்றுபவர்களுக்குச் சரியாகச் சம்பளம் கிடைக்கவில்லை என்று குறிப்பிட்டார்கள். புத்தகம் வாங்குவதற்குச் செலவிடுவதைப் போல் பத்து மடங்கு, 126 இலட்சம் ரூபாயை நிர்வாகத்திற்காகச் செலவு செய்தும், சம்பளம் கிடைக்கவில்லையென்றால், அந்தத் தொகை எங்கே போய்ச் சேர்கிறது, என்ன ஆகிறது என்பதை மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இறுதியாக, கல்வித் துறையிலே, உயர்நிலைப் பள்ளியாக இருந்தாலும் சரி, கல்லூரியாக இருந்தாலும் சரி, அதிலே பணியாற்றுகிறவர்களுடைய சில குறைபாடுகளையும், தேவைகளையும் மட்டும் சுட்டிக்காட்டி என்னுடைய உரையை முடிக்க விரும்புகிறேன். நெருக்கடிநிலை காலத்திலே பள்ளியிலும், கல்லூரியிலும் பணியாற்றிய ஆசிரியர்கள் அரசியல் காரணத்திற்காகவும், அரசியல்வாதிகளின் தூண்டுதல் காரணமாகவும் பல்வேறு இடங்களுக்கு மாற்றப்பட்டிருக்கிறார்கள். கணவன் ஒரு பக்கமும், மனைவி ஒரு பக்கமும் தூக்கி எறியப்பட்டிருக்கிறார்கள். அப்போது அந்த நிலை இருந்தது என்பதைப் பற்றி அப்போது பேச முடியாது. இப்போது அப்படியில்லை. கணவனும் மனைவியும் ஒரே இடத்தில் சேர்ந்து பணியாற்ற வேண்டுமென்று நியதி இருப்பதாக நான் அறிகிறேன். முன்னாளில் இட மாறுதல்கள் செய்திருந்தால், அவர்களை மீண்டும் மாற்றியமைத்து அவர்கள் இருவரும் ஓரிடத்தில் சேர்ந்து வாழ இந்த அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.



கடைசியாக, தாய்க் குலத்தின் சார்பாக ஒரு வேண்டுகோள். இந்தக் கல்வித் துறையிலே பணியாற்றுகிற கல்லூரி ஆசிரியைகள், பள்ளி ஆசிரியைகள், பேறுகால விடுமுறையை இப்போது எடுப்பதேயில்லை. மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் விசாரித்துப் பார்த்தால் தெரியும். பேறுகால விடுப்பை அவர்கள் பயன்படுத்துவதே இல்லை. இதற்குக் காரணம், பேறுகால விடுமுறைக்குப் பின் அவர்கள் மீண்டும் பணியில் சேரும்போது, அவர்களுக்குப் பழைய இடம் கிடைப்பதில்லை. அவர்களை வேறு எங்கேயோ மாற்றிவிடுகிறார்கள். கைக் குழந்தையோடு வேறு ஊருக்குப் போய் புதிதாகக் குடியேறுவது என்பது மிகத் தொல்லையாக இருக்கிறது. இந்தத் தொல்லைக்கு அஞ்சி அவர்கள் வேறு ஏதாவது லீவு போட்டு, சம்பளத்தை இழந்தாலும் பரவாயில்லை என்று வேறு லீவு கேட்டு குழந்தையைப் பெற்று எடுக்கிறார்கள். இந்த நிலையில் மாறுதலை ஏற்படுத்த வேண்டும். தாய்க் குலத்தைப் போற்றுகிற நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே இதை நிச்சயமாகக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். பேறுகால விடுமுறை முடிந்து மீண்டும் பணிக்குச் சேர வந்தால், அவர்கள் முன்பு எந்த இடத்தில் பணிபுரிந்தார்களோ அந்த இடத்திலேயே வேலை செய்ய வாய்ப்பளிக்கப்படும் என்ற உறுதியை நிச்சயமாக அரசு அறிவிக்க வேண்டும். இடைக்காலத்திலே தற்காலிகமாகத்தான் அங்கே பணியாளர்களை நியமிக்க வேண்டும் என்றும், பழையவர்கள் மீண்டும் பணியில் சேரும்போது, அதே இடம் வழங்க வேண்டும் என்றும் வாக்குறுதி அளிக்கும் முறையில் கண்டிப்பான உத்தரவை அரசு வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். தாய்க் குலத்தினரின் இந்தக் கோரிக்கையை ஆதரித்து மற்ற உறுப்பினர்களும் பேசுவார்கள் என்ற நம்பிக்கையோடு, நான் பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி இதோடு நான் முடித்துக்கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** இத்துடன் இன்றைய நிகழ்ச்சிகள் முடிவுற்றன. அவை மீண்டும் நாளை காலை 10-30 மணிக்குக் கூடும்.

[பிற்பகல் 1-09]

**பின்னர், அவை ஒத்தி வைக்கப்பட்டது.**

7. அவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்

*A. Statutory Rules and Orders.*

295. Notification issued with G.O. Ms. No. 1612, Rural Development and Local Administration, dated the 4th October 1977 in regard to division of the Madurai City into sixty-five wards, to take effect on and fr— the date of the next ordinary

elections. [Laid on the table of the House under section 432(2) of the Madurai City Municipal Corporation Act, 1971 (Tamil Nadu Act 15 of 1971)].

296. Notification issued with G.O. Ms. No. 105, Agriculture, dated the 24th January 1978 in regard to declaration of the area of Avalurpettai market in South Arcot district to be a notified market area in respect of groundnut, gingelly, paddy and sugar-cane jaggery in all forms. [Laid on the table of the House under section 29(4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959)].

297. Notification issued with G.O. Ms. No. 306, Housing, dated the 27th April 1977 in regard to certain amendments to the Special rules for the Tamil Nadu Slum Clearance Board Non-Technical Subordinate Service Rules, 1972. [Laid on the table of the House under section 72(2) of the Tamil Nadu Slum Areas (Improvement and Clearance) Act, 1971 (Tamil Nadu Act 11 of 1971)].

298. Notification issued with G.O. Ms. No. 3360, Home, dated the 16th December 1977 in regard to an amendment to rule 10 of the Tamil Nadu Motor Vehicles Taxation Rules, 1974. [Laid on the table of the House under section 25(2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1974 (Tamil Nadu Act 13 of 1974)].

299. Notification issued with G.O. Ms. No. 50, Home (Courts-I), dated the 6th January 1978 in regard to an amendment to rule 3 of the Tamil Nadu Hindu Marriages (Registration) Rules, 1967. [Laid on the table of the House under section 8(3) of the Hindu Marriage Act, 1955 (Central Act 25 of 1955)].

300. Notification issued with G.O. Ms. No. 58, Co-operation, dated the 1st February 1977 in regard to certain amendments to the Tamil Nadu Money-Lenders Rules, 1959. [Laid on the table of the House under section 22(3) of the Tamil Nadu Money-Lenders Act, 1957 (Tamil Nadu Act XXVI of 1957)].

301. Notification issued with G.O. Ms. No. 143, Agriculture, dated the 31st January 1978 in regard to an amendment to the Tamil Nadu Agricultural Produce Markets Rules, 1962. [Laid on the table of the House under section 29(4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959)].



*B. Reports, Notifications and Other Papers.*

* 57. Progress of Education in Tamil Nadu. (English and Tamil).

* 58. Performance Budgets on School Education, Collegiate Education and Technical Education for 1978–79. (English).

£ 59. Policy Note on Social Welfare, 1978–79. (English and Tamil).

£ 60. Performance Budget on Social Welfare for the year 1978–79. (English).

£ 61. Demand No. 47—Information, Tourism and Film Technology, 1978. (English and Tamil).

£ 62. Housing in Tamil Nadu for the year 1978–79. (English and Tamil).

£ 63. Demand No. 49—Capital Outlay on Public Health Sanitation and Water Supply for the year 1978–79. (English and Tamil).

£ 64. Policy Note on Urban Development for the year 1978–79. (English and Tamil).

£ 65. Policy Note on Agriculture. (English and Tamil).

£ 66. A Review on the Tamil Nadu Agro Industries Corporation Limited for the year 1977–78. (English and Tamil).

£ 67. A Review on the Tamil Nadu State Farms Corporation for the year 1977–78. (English and Tamil).

£ 68. Performance Budget on Agriculture for the year 1978–79. (Tamil).

£ 69. Policy Note on Department of Correctional Administration for the year 1978–79. (English and Tamil).

£ 70. Demand No. 4—General Sales Tax and other Taxes and Duties. (English and Tamil).

£ 71. A Review of the activities of Home (Prohibition and Excise) Department during 1977–78. (English and Tamil).

£ 72. Policy Note on Industrial Growth in Tamil Nadu Handloom and Textiles, 1978–79.

---

* Sent by post to all M.L.Cs. on 6th March 1978.
£ Circulated to all M.L.Cs. on 14th March 1978.

£ 73. Performance Budget on Directorate of Handlooms and Textiles for the year 1978–79. (English and Tamil).

£ 74. Demand No. 5—Stamps Administration. (English and Tamil).

£ 75. Policy Note on Dairy Development Department and Milk Supply Schemes, 1978–79. (English and Tamil).

£ 76. A Review on the Tamil Nadu Dairy Development Corporation for the year 1977–78. (English and Tamil).

£ 77. A Review of the activities of the Public Works Department (Buildings Branch) for the year 1977–78. (English and Tamil).

£ 78. Performance Budget on Public Works Department for the year 1978–79. (English and Tamil).

£79. Policy Note on Community Development and Panchayat Development. (English and Tamil).

80. Return of Assets of Thiru R. V. Soundararajan, Member of the Tamil Nadu Legislative Assembly as on 31st March 1977 placed on the Table in pursuance of the Resolution passed by the Tamil Nadu Legislative Assembly on the 27th August 1969.

81. Twenty-seventh Report of the Committee on Government Assurances.



இணைப்பு

[24 ஆம் பக்கத்தில் இனம் 6–க்கான அடிக்குறிப்பைக் காண்க]

தமிழ் நாட்டில் கல்வி வளர்ச்சி.

(1978-79 வரவு-செலவு மதிப்பீடு.)

# I தோற்றுவாய்.

கல்விச் செலவும் மாநில வரவு-செலவுத் திட்டமும்

கல்விக்காக 1978–79ஆம் ஆண்டில் ரூ. 176 கோடி (''மானியக் கோரிக்கை 17—கல்வி'' யின் கீழ்) நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. இத்தொகை 1978–79-ல் வருவாய்க் கணக்கில் ஆகும் மொத்தச் செலவான ரூ. 727 கோடியில் 24 விழுக்காடாகும். வரவு-செலவுத் திட்டத்தில் மற்றெல்லாத் துறைகளைக் காட்டிலும் கல்வித் துறைக்கே அதிகத் தொகை அளிக்கப்பட்டுள்ளது. கல்வி மானியத்தின் கீழ் 1975–76-ல் ரூ. 123 கோடியும் 1976–77-ல் ரூ. 143 கோடியும் செலவாயின. 1977–78-க்கான திருத்த மதிப்பீடு ரூ. 169 கோடியாகும். இதிலிருந்து கல்விச் செலவு தொடர்ந்து உயர்ந்து கொண்டே வருகிறது என்பது தெரியவரும்.

2. கல்வி மானியக் கோரிக்கையின் கீழ் 1978–79 வரவு-செலவு மதிப்பீட்டில் பல்வேறு நிலைக் கல்விப் பணிகளுக்கும் செய்துள்ள நிதி ஒதுக்க விவரங்கள் வருமாறு :—

| | 1978–79 வரவு-செலவு மதிப்பீடு | | |
|---|---|---|---|
| | திட்டமல்லாத செலவினம். | திட்டச் செலவினம். | மொத்தம். |
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| 277. கல்வி— | | | |
| 1. தொடக்கக் கல்வி. | 77,69 | 4,71 | 82,40 |
| 2. உயர்நிலைப் பள்ளிக் கல்வி .. | 54,25 | 4,43 | 58,68 |
| 3. கல்லூரிக் கல்வி .. | 21,20 | 1,62 | 22,82 |
| 4. சிறப்புக் கல்வி .. | 67 | 51 | 1,18 |

[1978 மார்ச் 15

| | | | |
|---|---|---|---|
| 5. தேசிய மாணவர் படை, விளையாட்டு முதலியவை. | 1,41 | 24 | 1,65 |
| 6. பிற இனங்கள் | 1 | .. | 1 |
| 7. தொழில் நுட்பக் கல்வி .. | 5,21 | 1,03 | 6,24 |
| மொத்தம்—277. கல்வி. | 1,60,44 | 12,54 | 1,72,98 |
| 278. கலை, பண்பாடு. தொல்பொருள் ஆராய்ச்சி .. | 22 | 17 | 39 |
| | 6 | 8 | 14 |
| ஆவணக் காப்பகமும் அரும் பொருட் காட்சி சாலைகளும் .. | 27 | 1 | 28 |
| பொது நூலகங்கள். | 1,30 | 2 | 1,32 |
| | 1,85 | 28 | 2,13 |
| 288. சமூகப் பாதுகாப்பும் நலனும் (ஊன முற்றோருக்கான பள்ளிகள் முதலியன) .. | 38 | 2 | 40 |
| Recoveries | 18 | .. | 18 |
| மொத்தம் மானியக் கோரிக்கை "17. கல்வி." | 1,62,85 | 12,84 | 1,75,69 |



1978 மார்ச் 15]

3. கல்வி வளர்ச்சிக்காகச் செய்யப்பட்டுள்ள மேற்கண்ட நிதி ஒதுக்கங்கள் தவிர, பள்ளி, கல்லூரி கட்டிடங்கள் கடன்கள் முதலியவற்றிற்காக பிற கோரிக்கைகளின் கீழ் 1978–79-ல் செய்யப்பட்டுள்ள நிதி ஒதுக்கம் வருமாறு :—

| | திட்டத்தின் கீழ் வராத செலவு. | திட்டச் செலவு. | மொத்தம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| **பொதுக் கல்வி.** | | | |
| (அ) வருவாய்க் கணக்கில் செலவு— | | | |
| 314. சமுதாய வளர்ச்சிப் பணிகள்—ஊராட்சி ஒன்றியப் பள்ளிக் கட்டிடங்கள் .. .. .. | .. | 75 | 75 |
| சமூகக் கல்வி .. .. | .. | 8 | 8 |
| மானியக் கோரிக்கை 37—பொதுப் பணி— | | | |
| அரசுப் பள்ளிக் கட்டிடங்கள் | 3 | 11 | 14 |
| 266. தனியார் மற்றும் உள்ளாட்சி மன்ற ஆசிரியர்களுக்கு ஓய்வூதியம் .. | 5,17 | .. | 5,17 |
| (ஆ) வருவாய்க்கணக்கின் கீழ் வராத செலவு— | | | |
| 477. கல்வி, கலைகள், பண்பாடு ஆகியவற்றிற்கான மூலதனச் செலவு—அரசுப் பள்ளிகள், கல்லூரிகளுக்குக் கட்டிடங்கள் .. .. | 1 | 4,62 | 4,63 |
| 767. கடன்கள்—தனியார் பள்ளி ஆசிரியர்களுக்குத் திருமணக் கடன் .. | 1 | .. | 1 |
| 677. தேசிய கடன்படிப்புதவித் தொகைகள் .. | 45 | .. | 45 |
| மொத்தம்—பொதுக் கல்வி. | 5,67 | 5,56 | 11,23 |

[1978 மார்ச் 15

| (1) | திட்டத்தின் கீழ் வராத செலவு (2) | திட்டச் செலவு. (3) | மொத்தம். (4) |
|---|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| தொழில் நுட்பக் கல்வி. | | | |
| 477. அரசு தொழில் நுட்பக் கல்வி நிலையக் கட்டிடங்களுக்கான மூலதனச் செலவு .. | .. | 11 | 11 |
| 677. தொழில் நுட்பக் கல்வி மாணவர்களுக்குக் கடன்கள் .. .. .. | 9 | .. | 9 |
| மொத்தம்—தொழிற் கல்வி .. | 9 | 11 | 20 |
| மொத்தம்—பொதுக் கல்வியும் தொழிற் கல்வியும். | 5,76 | 5,67 | 11,43 |

மேற்சொன்ன நிதி ஒதுக்கங்கள் அனைத்தும் கணக்கிற் கொள்ளப்பட்டால் 1978–79ல் கல்விக்காகச் செலவிடப்படும் தொகை ரூ. 187 கோடியாகும்.

4 (i) அரிசனங்கள் மற்றும் பின்தங்கிய வகுப்பினர் நலப் பள்ளிகள், விடுதிகள், அரிசனங்கள், பழங்குடி வகுப்பினர் பின்தங்கிய வகுப்பினரைச் சேர்ந்த மாணவர்களுக்குப் படிப்பு உதவித் தொகைகள் முதலியவற்றிற்கான செலவும் சீர்திருத்தப் பள்ளிகள், தொழிற் பயிற்சி நிறுவனங்கள் போன்றவற்றிற்கான செலவுகள் மேற்படி செலவினங்களின் கீழ் வாரா. இந்த இனங்களின் மொத்தச் செலவு சுமார் ரூ. 25 கோடியாகும்.

(ii) மருத்துவக் கல்வி, வேளாண்மைக் கல்வி, கால் நடை மருத்துவக் கல்வி ஆகியவற்றிற்கு, அந்தந்தத் துறைகளின்கீழ் வரவு-செலவுத் திட்டத்தில் தனித்தனியாக ஒதுக்கப்பட்டுள்ள நிதி மொத்தம் சுமார் ரூ. 10 கோடி. மேற்கண்ட இரு இனங்களுக்கு ஆகும் செலவையும் (ரூ. 25 கோடியும், ரூ. 10 கோடியும்) கணக்கில் கொண்டால்' 1978–79-ம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் கல்வி வளர்ச்சிக்கான மொத்தச் செலவு சுமார் ரூ. 222 கோடியாக இருக்கும்.



1978 மார்ச் 15]

5. எல்லாத் தலைப்புகளின் கீழும் (277. கல்வி, 477. கல்வி மூலதனச் செலவு, 677கடன் முதலியன) கல்வியின் பல்வேறு துறைகளுக்கு 1978-79ஆம் ஆண்டில் செய்யப்படும் திட்டச் செலவு கீழே கொடுக்கப்பட்டுள்ளது. (கூட்டல் குறிக்குப் பின்னர் உள்ள இலக்கங்கள் மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்களுக்கான செலவினைக் குறிக்கும்).

| | பொறுப் பேற்ற செலவினம். (1) | 1978–79-ல் புதியதாக ஒப்பளிப்பு வழங்கும் செலவினங்கள். (2) | மொத்தம். (3) |
|---|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| பொதுக்கல்வி— | | | |
| (1) பள்ளிக் கல்வி | 12,21 (+)14 | 1,18 | 13,39 (+)14 |
| (2) கல்லூரிக் கல்வி | 1,70 (+)77 | 40 | 2,10 (+)77 |
| | 13,91 (+)91 | 1,58 | 15,49 (+)91 |
| தொழில் நுட்பக்கல்வி | 75 +23 | 20 | 95 +23 |
| சத்துணவு—நண்பகல் உணவு. | 16 | 6 | 22 |
| கலைப்பணிகள் .. | 21 (+) 4 | 7 | 28 (+) 4 |
| | 15,03 (+)1,18 | 1,91 | 16,94 (+)1,18 |

கல்வியை மாநிலப் பட்டியலுக்கு மீண்டும் மாற்றுதல்.

8. இந்திய அரசியல் சட்டத்தின் 42-வது திருத்தத்தின் மூலம் மாநிலப் பட்டியலில் இருந்து பொதுப்பட்டியலுக்கு மாற்றப்பட்டுள்ள கல்வி பற்றிய அதிகாரத்தை மறுபடியும் முன்பு போலவே மாநிலங்களுக்கு மாற்ற வேண்டுமென்பது பெரும்பாலோர் கருத்து. ஆனைத்து

நிலைமைகளையும் தீர ஆலோசித்துத்தான் இந்திய அரசியல் சட்டம் வகுக்கப்பட்டபொழுது கல்வி, மாநிலப் பட்டியலில் வைக்கப்பட்டது. கல்வி, மாநிலப் பட்டியலில் தான் இருக்க வேண்டும் என்பதே கல்வி வல்லுநர் அனைவரின் கருத்தாகும். கோத்தாரி கல்வி ஆணைக்குழுவின் கருத்தும் அதுவே.

9. மத்திய மந்திரிசபை கலந்து ஆலோசித்து கல்வியை மாநிலப் பட்டியலுக்கு மாற்ற முடிவெடுத்த பின்னர் இப்பொழுது அது மறு பரிசீலனை செய்யப்படுவதாகத் தெரிய வருகிறது. கல்வியைப் பொதுப் பட்டியலில் வைத்திருப்பது விரும்பத்தகாத விளைவுகளை உண்டாக்கும், கல்வி வளர்ச்சியைப் பாதிக்கும்.

10. ஆகவே, முதலில் செய்த முடிவுப்படியே கல்வி பற்றிய அதிகாரத்தை மீண்டும் மாநிலப்பட்டியலுக்கு மாற்றுவதற்கு வேண்டிய திருத்தத்தை மைய அரசு கொண்டு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இவ்விஷயத்தில் இம்மன்றத்தின் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் இவ்வரசின் கருத்தை ஆதரிப்பார்கள் என்று நம்புகின்றேன்.



# II. பள்ளிக் கல்வி

(i) பொது.

1. கல்விச் செலவில் பெரும் பகுதி பள்ளிக் கல்விக்குத்தான் ஆகிறது. 1978–79 ஆம் ஆண்டில் கல்வி மானியத்திற்கான ரூ. 176 கோடியில், பள்ளிக் கல்விக்கு ஒதுக்கப்பட்ட தொகை சுமார் ரூ. 141 கோடியாகும்.

2. தமிழ் நாட்டில் 1977–78-ல் (1977ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 1-ந் தேதி அன்று இருந்தவாறு) பள்ளிக்கூடங்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகிய புள்ளி விவரங்கள் வருமாறு :—

| பள்ளிக்கூடங்கள். (1) | எண்ணிக்கை. (2) | | | மாணவர்கள். (இலட்சத்தில்) (3) | ஆசிரியர்கள். (4) |
|---|---|---|---|---|---|
| உயர்நிலைப் பள்ளிகள்— சாதாரணப் பள்ளிகள் .. | 2,912 | அரசு | 1,928 | 17·26 | 68,698 |
| | | நகராட்சி | 123 | | |
| | | தனியார் | 861 | | |
| ஆங்கிலோ—இந்தியப் பள்ளிகள் CBSE ISC பள்ளிகள். மெட்ரிகுலேஷன் பள்ளிகள் முதலியவை. | 146 | ரயில்வே, மைய அரசு | 17 | 1·05 | 4,341 |
| | | தனியார் | 129 | | |
| | 3,058 | | | 18·31 | 73,039 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| உயர் தொடக்கப் பள்ளிகள்— | | | | | |
| | 5,709 | அரசு | 248 | 24·35 | 68,794 |
| | | நகராட்சி | 389 | | |
| | | ஊராட்சி ஒன்றியம் | 3,110 | | |
| | | தனியார் | 1,962 | | |
| தொடக்கப் பள்ளிகள்— | | | | | |
| | 27,395 | அரசு | 1,413 | 41·50 | 1,11,184 |
| | | நகராட்சி | 1,058 | | |
| | | ஊராட்சி ஒன்றியம். | 19,921 | | |
| | | தனியார் | 5,003 | | |
| பெரு மொத்தம் .. | 36,162 | | | 84·16 | 2,53,017 |
| | | | | (மாணவர்கள் 48·61 இலட்சம்; மாணவியர் 35·55 இலட்சம்). | (ஆசிரியர்கள் 1,55,619 ஆசிரியைகள் 97,398). |



| பள்ளிக்கூடங்கள். (1) | எண்ணிக்கை. (2) | மாணவர்கள். (3) | ஆசிரியர்கள். (4) |
|---|---|---|---|
| ஏனைய நிறுவனங்கள்— | | | |
| இளஞ்சிறுர் பள்ளிகள் .. | 40 | 5,300 | 131 |
| கீழ்த்திசைப்பள்ளிகள் .. | 17 (12 சம்ஸ்கிருதம் —5 அராபிக்) | 2,500 | 167 |
| சைனிக் பள்ளி, அமராவதி நகர். | 1 | 540 | — |
| ஊனமுற்றவருக்கான பள்ளிகள். | 40 (பார்வையற்றவருக்கு 18; காது கேளாதவருக்கு 19: மற்றவருக்கு 3). | 3,700 | 335 |
| ஆசிரியர் பயிற்சி பள்ளிகள். | 80 | 2,600 | 317 |
| கைத்தொழில் பயிற்சி மையங்கள். | 7 | 500 | 40 |

[1978 மார்ச் 15

3. தமிழ்நாட்டில் 1976–77, 1977–78-ம் ஆண்டுகளில் பள்ளிகளில் சேர்ந்து பயின்று வந்த மாணவ மாணவியர் விவரங்கள் வருமாறு:—

| | 1976–77. | 1977–78 |
| --- | --- | --- |
| (அ) 6–11 வயது தொகுதிச் சிறுர்கள் (தொடக்க, உயர் தொடக்க பள்ளிகளில் 1—5 வகுப்புகள்). | | |
| பள்ளியில் சேர்க்கப்பட்ட மாணவர்கள் (இலட்சத்தில்) .. | 57.52 | 59.85 |
| மொத்த எண்ணிக்கை (இலட்சத்தில்) .. .. .. (5-லிருந்து 10 முடிய ஆறு வயதுத் தொகுதிகள்). | 63.16 | 64.07 |
| விழுக்காடு (சதவீதம்) .. | 91.7 | 93·4 |
| (ஆ) 11—14 வயதுத் தொகுதி (உயர் தொடக்கப் பள்ளிகளிலும் உயர்நிலைப் பள்ளிகளிலும் 6–8 வகுப்புகள்). | | |
| பள்ளியில் சேர்க்கப்பட்ட மாணவர்கள் (இலட்சத்தில்) .. | 15.50 | 16.38 |
| மொத்த எண்ணிக்கை (இலட்சத்தில்) .. .. .. | 28.42 | 28.83 |
| விழுக்காடு (சதவீதம்) .. | 54.4 | 56.8 |
| (இ) 14—17 வயதுத் தொகுதி (உயர்நிலைப் பள்ளிகளில் 9—11 வகுப்புகள்). | | |
| பள்ளியில் சேர்க்கப்பட்ட மாணவர்கள் (இலட்சத்தில்) .. | 8·02 | 7·93 |
| மொத்த எண்ணிக்கை (இலட்சத்தில்) .. .. .. | 23·46 | 23·80 |
| விழுக்காடு (சதவீதம்) .. | 34·1 | 33·4 |



[1978 மார்ச் 15

1977–78-ல் 11-ம் வகுப்பில் புதிய பாடத்திட்டம் அமுலுக்கு வந்தபடியால் 1977 ஆம் ஆண்டு மார்ச்சில் எஸ்.எஸ்.எல்.சி. எழுதித் தோல்வியுற்ற மாணவர்களுள் எவரையும் 1977–78-ல் பதினேரும் வகுப்பில் இரண்டாம் தடவையாகப் பயில அனுமதிக்க இயலவில்லை. 1977–78ல் 14—17 வயதுத் தொகுதி மாணவர் எண்ணிக்கை குறைந்ததற்கு இது முக்கியமான காரணமாகும்.

4. 1978–79 ஆம் ஆண்டில் 1,000 இடைநிலை (செகண்டரி கிரேடு) ஆசிரியர் பதவிகளும், (உயர் தொடக்கப் பள்ளிகளுக்கும் உயர்நிலைப் பள்ளிகளுக்கும் சேர்த்து) 200 உடற் பயிற்சி ஆசிரியர் பதவிகளும்; உயர் தொடக்கப் பள்ளிகளுக்கு 200 முதல் நிலைத் தமிழாசிரியர் பதவிகளும் புதிதாக ஏற்படுத்தப்படும்.

5. தமிழ்நாட்டில் உள்ள 2½ லட்சம் ஆசிரியர்களோடும் பள்ளிக் கல்வித்துறை நல்ல தொடர்பு வைத்திருக்க வகை செய்து "தமிழ்நாட்டில் கல்வி" என்னும் பெயரில் ஒரு காலாண்டு இதழ் ஒன்றை வெளியிட அரசு ஏற்பளித்துள்ளது. பள்ளிக் கல்வி இயக்குநர் தலைமையில் உள்ள ஆசிரியர் குழு ஒன்று அதை வெளியிடும். தமிழ், ஆங்கிலம் இரு மொழியிலும் கட்டுரைகளை அது வெளியிடும். கல்வி, நிருவாக விஷயங்களைப் பற்றிய செய்திகளைத் தெரிவிக்கும். அவ்வப் பொழுது தெரியவரும் ஆராய்ச்சி முடிவுகளை வெளியிடும் அரசாணைகள், கல்வி இயக்குநர் அலுவலக நடைமுறைகள் ஆகியவற்றுள் முதன்மை வாய்ந்தனவற்றின் சுருக்கங்களும் இடம்பெறும். ஆசிரியர்கள், அதிகாரிகள் ஆகியோர் எழுதும் கட்டுரைகளையும் வெளியிடும். பள்ளிக்கல்வி, அரசுத் தேர்வு, மாநில கல்வி ஆராய்ச்சி பயிற்சி நிறுவனம், பள்ளி சாராக் கல்வி, கல்லூரிக் கல்வி (தேவையானல் பிறவகைக் கல்விகளோடு தொடர்புடைய வேறு துறைகள்) ஆகிய பல துறைகளுக்கும் பொதுவாக இவ்விதழ் பயன்படும்.

6. தற்பொழுது பெற்றேர்–ஆசிரியர் சங்கம் வெளியிடும் "செய்தி", தமிழ்நாடு சாரண சாரணியர் சங்கத்தின் இதழ் போன்றவையெல்லாம் மேற்சொன்ன பொது இதழுடன் இணைக்கப்படும். அரசுத்தேர்வு இயக்குனர் நடத்தும் தேர்வுகளைப் பற்றிய விவரங்களும் அவ்விதழில் அவ்வப்பொழுது வெளிவரும். இன்னும் சில காலம் கழித்து தேவையானல் மூன்று மாதங்களுக்குக் குறைந்த இடைவெளியில் அந்த இதழ் வெளியிடுவது குறித்துக் கருதப்படும்.

## (ii) தொடக்கக் கல்வி.

மாணவர் சேர்க்கை—

1. மேலே குறிப்பிட்டபடி 6–11 வயதுத் தொகுதிச் சிறுர்களில் 93·4 விழுக்காட்டினரும், 11–14 வயது தொகுதிச் சிறுரில் 56.8 விழுக்காட்டினரும் இதுவரை பள்ளிகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். 1977–78ஆம் ஆண்டில் இவ்விரு வயதுத் தொகுதிகளின்கீழ் 3.21 இலட்சம் மாணவ, மாணவியர் கூடுதலாகச் சேர்க்கப்பட்டனர். 1977–78 ஆம் ஆண்டில் இருந்து 33,104 தொடக்கப் பள்ளிகளில் படித்த மொத்த மாணவர்களின் எண்ணிக்கை 65.85 இலட்சமாகும். வேலை பார்த்த ஆசிரியர்களின் எண்ணிக்கை 1,79,978 ஆகும். ஆசிரியர், மாணவர் விகிதம் 1:37 ஆகும்.

2. தொடக்கப்பள்ளியில் சேரும் மாணவ மாணவியர் தொடர்ந்து படிக்காமல் இடையிலேயே பெரும் எண்ணிக்கையில் பள்ளியிலிருந்து நின்றுவிடும் நிலையை மாற்ற அரசு முனைந்துள்ளது. தற்பொழுது இம்மாநிலத்திலுள்ள பள்ளிகளில் எந்த அளவுக்கு இந்தப் பிரச்சினை உள்ளது என்பதைப் பின்வரும் புள்ளிவிவரங்கள் காட்டும்:—

| ஆண்டு. | வகுப்பு. | மொத்த மாணவர். (இலட்சத்தில்.) |
|---|---|---|
| 1972–73 .. .. | 1 | 13.86 |
| 1973–74 ... | 2 | 12.62 |
| 1974–75 .. .. | 3 | 11.18 |
| 1975–76 ... .. | 4 | 9.55 |
| 1976–77 .. .. | 5 | 8.03 |

இவற்றிலிருந்து முதல்வகுப்பில் சேரும் மாணவர்களுள் 58 விழுக்காட்டினரே 5 ஆம் வகுப்பு வரை தொடர்ந்து படிக்கின்றனர் என்பதும் மீதி 42 விழுக்காட்டினரும் இடையிலேயே பள்ளியை விட்டு நின்றுவிடுகின்றனர் என்பதும் தெளிவாகும்.

3. தொடக்கப்பள்ளி நண்பகல் உணவுத் திட்டம், இலவசமாகப் புத்தகங்களும், கற்பலகைகளும் வழங்கும் திட்டம் போன்றவை மாணவ, மாணவியர் பள்ளியை விட்டு இடையில் நின்றுவிடாமல் தொடர்ந்து படிக்கச் செய்ய வேண்டுமென்பதையும் நோக்கமாகக் கொண்டவை. இவற்றோடு (கல்வி சுல்லுநர்கள் கருத்தைப் பின்பற்றி) தொடக்கப் பள்ளிகளில் முதல் சில வகுப்புகளிலாவது ஆண்டிறுதித் தேர்வில் மாணவர்கள் எவரையும் தோல்வியுறச் செய்யாமலிருப்பதும் ஓரளவு பரிகாரமாகும். ஆந்திரப் பிரதேசம், கேரளா முதலிய மாநிலங்களில் சில ஆண்டுகளுக்கு முன்பிருந்தே, முதல் சில வகுப்புகளில் மாணவர்களைத் தோல்வியுறச் செய்யக் கூடாது என்ற நிலை செயல்படுத்தப்பட்டு வருகிறது. 1977–78 முதல் இம்மாநிலத்திலும் 1–3 வகுப்புகளில் மாணவர்கள் அனைவரையும் மேல்வகுப்பிற்கனுப்பும் முறையைச் செயல்படுத்த இவ்வரசு கருதியுள்ளது. அதாவது, எடுத்துக்காட்டாக, 1977–78ஆம் ஆண்டில் 1/2/3 வகுப்புகளில் பயில்வோர் அனைவரும் 1978–79-ம் ஆண்டில் 2/3/4 வகுப்புகளுக்கு அனுப்பப்படுவர். அதே நேரத்தில் கீழ்வகுப்புகளில் புகட்டப்படும் கல்வியின் தரம், நல்ல முறையில் இருக்கும்படி பார்த்துக் கொள்ளவும், அவ்வகுப்புகளில் பயிலும் மாணவர்களின் படிப்பறிவு வளர்ச்சியை அவ்வப்பொழுது மதிப்பிட்டு, கவனம் தேவையான மாணவர்களுக்கு கூடுதல் கவனம் செலுத்திட செய்யவும், தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும்.



4. தொடக்கப் பள்ளிகளில், அறிவியல் போதனையை மேம்படுத்தும் பொருட்டு பாடத்திட்டம் திருத்தியமைக்கப்பட்டுள்ளது. அறிவியல் சாதனங்கள் வாங்குதற் பொருட்டு ஒவ்வொரு தொடக்கப் பள்ளிக்கும் முன்னூறு ரூபாயும் ஒவ்வொரு உயர் தொடக்கப் பள்ளிக்கும் ஆயிரம் ரூபாயும் உதவித் தொகையாக வழங்கப்படுகின்றன. இதுவரை இதன் மூலம் 12,620 தொடக்கப் பள்ளிகளும், 3,830 உயர் தொடக்கப் பள்ளிகளும் பயனடைந்துள்ளன. 1978–79ல் மேலும் 150 உயர் தொடக்கப் பள்ளிகள் பயனடையும்.

நண்பகல் உணவுத் திட்டம்—

5. அனைத்துத் தொடக்கப் பள்ளிகளிலும் நடைமுறையில் உள்ள நண்பகல் உணவுத் திட்டம், பள்ளிகளில் மாணவர் சேர்க்கையை உயர்த்துவதிலும், மாணவர் தொடர்ந்து பள்ளிக்கு வரும்படி செய்வதிலும் சிறந்த இடத்தைப் பெறுகிறது. இப்பள்ளிகளில் பயில்கின்ற மாணவர் தொகையில் மூன்றில் ஒரு பங்காகிய—மிகவும் ஏழைக்குடும்பங்களிலிருக்கின்ற மாணவர்கள் இத்திட்டத்தால் நற்பயன் பெறுகின்றனர். தொடக்க-உயர் தொடக்க நிலைப் பள்ளிகளில் 1–8 வகுப்புகளில் பயிலும் ஏறத்தாழ 20.25 இலட்சம் மாணவர்களுக்கு இத்திட்டத்தின்கீழ் நண்பகல் உணவு வழங்கப்படுகிறது. அரிசன நலத் துறை நடத்திவரும் பள்ளி

1978 மார்ச் 15]

களில் பயிலும் சுமார் 1.65 இலட்சம் மாணவரும் இவ் வெண்ணிக்கையில் அடங்குவர். 1978–79ஆம் ஆண்டில் நண்பகல் உணவுத் திட்டத்திற்காக ஏறத்தாழ ஐந்து கோடி ரூபாய் செலவிடப்படும். நண்பகல் உணவுத் திட்டத்திற்காக மாநில அரசு ஒரு மாணவனுக்கு நாளைக்கு 10காசு வீதம் ஆண்டுக்கு 200 நாட்களுக்கு மானியம் அளிக்கிறது. உள்ளாட்சி மன்றங்கள் ஒரு மாணவனுக்கு நாளைக்கு 5 காசு வீதம் ஆண்டுக்கு 200 நாட்களுக்கு உதவித் தொகை அளிக்க வேண்டுமென ஆணையிடப்பட்டுள்ளது. 'கேர்' நிறுவனத்திலிருந்து இலவசமாக ஆண்டுதோறும் கிட்டும் சுமார் 20,000 டன் உணவைத் தொடக்கப்பள்ளி நண்பகல் உணவுத் திட்டம் பயன்படுத்துகிறது.

6. நவீன அடுப்புகளில் சுகாதார முறைப்படி சமைக்கப் பெற்றுச் சுற்றுப்புறங்களிலுள்ள பள்ளிகட்கு மூடப்பட்ட வண்டிகளில் உணவு எடுத்துச்சென்று வழங்கும் மையச் சமையற்கூடத் திட்டம் செங்கற்பட்டு தென் ஆர்க்காடு, வட ஆற்க்காடு ஆகிய மூன்று மாவட்டங்களில் செயல்பட்டு வருகிறது .இம்மாவட்டங்களில் இயங்கிவரும் 97 சமையற் கூடங்களும் கேர் நிறுவனத்தாரின் 2 கோடி ரூபாய் நிதியுதவியுடன் நிறுவப்பட்டவையாகும். இம் மவட்டங்களில் சுமார் 4 இலட்சம் மாணவர்கட்கு அவை பகல் உணவு வழங்கி வருகின்றன். மைய சமையற்கூடங்களிலிருந்து பள்ளிகட்கு உணவை எடுத்துச்சென்று வழங்க 224 உந்துவண்டிகளையும் 'கேர் நிறுவனம் வழங்கியுள்ளது. இந்த பெட்ரோல் வண்டிகள் பயன்படாத வகையில் பழுதாகும் போது புதிதாக வாங்கும் வண்டிகளை டீசல் வண்டிகளாக வாங்கினுல் செலவு குறையும். ஆகையால் அவ்வாறே படிப் படியாகச் செய்யப்பட்டு வருகிறது. 1976–77லும் 1977-78லும் 23 டீசல் வண்டிகள் வாங்கப்பட்டன. 1978-79-ல் 10 டீசல் வண்டிகள் வாங்கப்படும். இவ் வண்டிகளையும், சமையல் சாதனங்களையும் பழுது பார்க்க 'கேர்' நிறுவனத்தின் உதவியுடன் தென்ஞர்க்காடு மாவட்டத்திலுள்ள விக்கிரவாண்டியில் ரூ. 15 இலட்சம் செலவில் அமைக்கப்பட்ட ஒரு பணிமனை செயல்பட்டு வருகிறது.

7. நண்பகல் உணவுத் திட்டத்திற்குத் தேவையான உணவுப் பொருள்களைச் சீராகச் சேமித்து அவ்வப்பொழுது வழங்கிட 'கேர்' நிறுவன உதவியுடன் ஏறத்தாழ ரூ. 3 இலட்சம் செலவில் வட்டாரக் கிடங்குகள் எட்டும், அடையாற்றில் மையக் கிடங்கு ஒன்றும் கட்டப்பட்டுள்ளன.



இலவச புத்தகங்கள் வழங்குதல்—

8. 1—3 வகுப்புகளில் பயில்வோரும், நண்பகல் உணவு பெறுவோருமான ஏழை மாணவர்களுக்கு முதல் வகுப்பில் பாடப் புத்தகங்களும், சிலேட்டும், இரண்டு, மூன்று வகுப்புகளில் பாடப் புத்தகங்களும் இலவசமாக வழங்கப்படுகின்றன. இத் திட்டத்தின்கீழ் ஆண்டுதோறும் 12 இலட்சத்திற்கும் அதிகமான மாணவர்கள் பயனடைந்து வருகின்றனர். 1972–73-ம் ஆண்டிலிருந்து பாடநூல்கள் தருவதற்கு ஆகும் செலவினைத் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனமே தனது நிதியிலிருந்து ஏற்றுக் கொண்டுள்ளது. இதற்காகப் பாடநூல் நிறுவனம் ஆண்டுதோறும் ரூ. 25 இலட்சம் செலவிட்டு வருகிறது. முதல் வகுப்பு மாணவர் கட்குச் சிலேட்டுகள் இலவசமாக வழங்கும் வகையில் 1978–79இல் ரூ. 3 இலட்சத்தை மாநில அரசு செலவிடும்.

தொடக்கப்பள்ளிக் கட்டிடங்கள்—

9. பள்ளிக் கட்டிடங்கள் கட்டுதற் பொருட்டு உள்ளாட்சி நிறுவனங்கட்கும் தனியார் நிறுவனப் பள்ளி கட்கும் மானியம் வழங்கப்படுகிறது. 1974–75லிருந்து தொடக்கப் பள்ளி கட்டிட மானியம் ரூ. 10,000, ரூ. 17,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. நிருவாகத்தினர் தர வேண்டிய குறைந்தபட்ச பங்குத் தொகையும் ரூ. 5,000, ரூ. 8,000ஆக உயர்த்தப்பட்டுள்ளது. 1978–79இல் நகராட்சி மற்றும் தனியார் தொடக்கப் பள்ளிகளுக்கு கட்டட மானியம் தர ரூ. 4 இலட்சமும் அரசுத் தொடக்கப் பள்ளி கட்டிடங்களுக்காக ரூ. 11 இலட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளன. 1978–79இல் ஊராட்சி ஒன்றியப் பள்ளி கட்டிடங்களுக் காக ரூ. 75 இலட்சம் சமுதாய வளர்ச்சித் துறையின் வரவு–செலவுத் திட்டத்தின்கீழ் செலவிடப்படும்.

உள்ளாட்சி மன்றப் பள்ளிகள்—

10. தமிழ்நாட்டிலுள்ள ஏறத்தாழ 33,000 தொடக் கப் பள்ளிகளுள் ஏறத்தாழ 29,000 பள்ளிகள் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் அமைந்துள்ளன. அந்த 29,000 பள்ளிகளில் 23,000 பள்ளிகளை (சுமார் 19,900 தொடக்கப் பள்ளிகளும், 3,100 உயர் தொடக்கப் பள்ளிகளும்) ஊராட்சி ஒன்றியங்கள் நடத்தி வருகின்றன. தொடக்கக் கல்விக்காக ஊராட்சி ஒன்றியங்கட்கு மானியம் வழங்குவதற்கான திருத்திய முறைப்படி (ஒரு ரூபாய் நில வரிக்கு 45 காசு என்று வசூலிக்கப்படும்)— உள்ளூர் வரியில் 4/9 பாகம் ஊராட்சி ஒன்றியக் கல்வி நிதிக்கு வழங்கப் தொடர்ந்து ஊராட்சி

படுகிறது. 1971ஆம் ஆண்டு மக்கட் தொகை அடிப்படையில் ஒவ்வொரு வட்டாரத்திலுமுள்ள மக்கள் தொகைக்கு தலைக்கு ரூ. 6 வீதம் கணக்கிட்டு வழங்கும் மானியமும், ஊராட்சி ஒன்றியக் கல்வி நிதிக்குச் செல்கின்றது. தொடக்கக் கல்விக்காக ஆகும் செலவில் எஞ்சியதை வட்டார வகைப்பாட்டிற்கு ஏற்ப அரசும், ஊராட்சி ஒன்றியங்களும் பகிர்ந்து ஏற்கின்றன.

ார் 1,450 பள்ளிகளை (சுமார் 1,060 தொடக்கப் பள்ளிகளும், சுமார் 390 உயர் தொடக்கப் பள்ளிகளும்) நகராட்சிகளும், சென்னை, மதுரை மாநகராட்சிகளும் நடத்தி வருகின்றன. நகராட்சிகள் கல்வி வரி வசூலிப்பதுடன் அவ்வாறு வசூலாகும் தொகையில் 50 விழுக்காட்டுக்கு ஈடான தொகையை அரசு மானியமாகவும் பெறுகின்றன. அத்துடன் நகராட்சிகள், மதுரை மாநகராட்சி ஆகியவற்றின் தொடக்கக் கல்விக் கணக்கில் துண்டு விழும் முழுத் தொகையினையும் அரசே ஈடு செய்து வருகின்றது.

(ii) உயர்நிலைப்பள்ளிக் கல்வி

1. 1977–78ல் தமிழ்நாட்டில் 14–17 வயதுத் தொகுதியினர் 23.80 இலட்சம் பேர்கள் இருந்தனர். இவர்களுள் 33.4 விழுக்காடாகிய 7.93 இலட்சம் பேர் உயர்நிலைப் பள்ளிகளில் 9–11 வகுப்புக்களில் பயின்று வந்தனர். 1977–78ல் இம்மாநிலத்தில் இருந்த 3,058 உயர்நிலைப் பள்ளிகளில் 73,000 ஆசிரியர்களும், 18.31 இலட்சம் மாணவர்களும் இருந்தனர். 1977–78ஆம் ஆண்டில் 28 உயர்நிலைப் பள்ளிகள் புதிதாகத் திறக்கப்பட்டன (அரசுப் பள்ளிகள் 21ம், தனியார் பள்ளிகள் 7ம்).

அறிவியல் கல்வி.

2. புதிய பாடத் திட்டத்தின்கீழ் ஆறும் வகுப்பிலிருந்தே இயல்பியல், வேதியியல், உயிரியல் ஆகியவை தனித் தனிப் பாடங்களாகக் கற்பிக்கப்படுகின்றன. அறிவியல் ஆய்வுக் கருவிகள் வாங்குவதற்கும், ஆய்வுக் கூடங்களை அமைப்பதற்கும் நிதியுதவி அளிக்கும் திட்டத்தின்கீழ் தெரிந்தெடுக்கப்பட்ட ஒவ்வொரு அரசு உயர்நிலைப்பள்ளிக்கும் ரூ. 55,000 செலவிடப்படுகிறது. (ஆய்வுக்கூட கட்டிடத்திற்காக ரூபாய் 37,000மும், கருவிகளுக்காக ரூபாய் 18,000மும்) தனியார் மற்றும் நகராட்சி உயர்நிலைப்பள்ளிகள் ஒவ்வொன்றும் பெறும் மானியம் ரூ.40,200 ஆகும். இதில் ரூ. 18,000 கருவிகளுக்காகும். இவற்றைப் பள்ளிக் கல்வித் துறை இயக்குநரே வாங்கி வழங்குகிறார். எஞ்சிய ரூ. 22,200 ஆய்வுக்கூட கட்டிடத்திற்காகும்.





கட்டிடத்திற்கான செலவில் 60 விழுக்காடு அல்லது ரூ.22,200, இதில் எது குறைவோ அது என்ற அடிப்படையில் ஆய்வுக்கூட கட்டிட மானியம் வழங்கப்படுகிறது. 1977–78 முடிய 943 உயர்நிலைப் பள்ளிகள் ஆய்வுக்கூட நிதியுதவி பெற்றிருந்தன. (1977-78ம் ஆண்டில் பெற்ற 50 பள்ளிகள் உட்பட). 1978–79ம் ஆண்டில் இத்திட்டத்திற்கு ரூ. 26 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது (முன் ஆண்டுகளில் ஏற்பளித்த வகையில் 1978–79ல் செலவிட வேண்டிய தொகை உட்பட). 1978–79–ல் மேலும் 25 உயர்நிலைப் பள்ளிகளுக்கு ஆய்வுக் கூடம் அமைக்கப்படும்.

3. தற்பொழுதுள்ள 3,058 உயர்நிலைப் பள்ளிகளில் 507 பள்ளிகளில் (அரசு 125; தனியார் 344; நகராட்சி 38) மட்டுமே ஆய்வுக்கூட உதவியாளர்கள் உள்ளனர். 1978–79ல் மேலும் 80 பள்ளிகளில் ஆய்வுக்கூட உதவியாளர் பதவிகள் ஏற்படுத்தப்படும்.

4. இதுவரையில் அறிவியல் ஆய்வுக்கூட வசதியினைப் பெறாத கிராமப்புற உயர்நிலைப் பள்ளிகளில் அறிவியல் கற்பிப்பதற்கு உதவும் வண்ணம் தற்போது 42 நடமாடும் அறிவியல் ஆய்வுக்கூட வண்டிகள் உள்ளன (1977–78-ல் வாங்கிய 6 வண்டிகள் உட்பட). இதனால் தற்போதுள்ள 48 கல்வி மாவட்டங்களுள் 42 மாவட்டங்களில் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஓர் ஆய்வுக்கூட வண்டி பணிபுரியும் நிலை ஏற்பட்டுள்ளது.

5. 1977 நவம்பரில் சென்னையில் மாநில அறிவியல் கண்காட்சி ஒன்று நடத்தப்பட்டது. 63 உயர்நிலைப் பள்ளிகள் அதில் பங்கேற்றன. மாவட்ட நகரங்களிலும் அத்தகைய அறிவியல் கண் காட்சிகள் நடத்தப்படுகின்றன. மாணவர்களின் அறிவியல் ஆர்வத்தை வளர்ப்பதே இந்த அறிவியல் கண்காட்சிகளின் நோக்கமாகும்.

6. உயர்நிலைப் பள்ளிகளில் நூலக வசதியை மேம்படுத்தும் நோக்கத்துடன், பொருத்தமான நூலக புத்தகங்கள் வாங்கப்பட்டு பள்ளிகளுக்கு வழங்கப்படுகின்றன. 1977–78ஆம் ஆண்டில் ரூபாய் 5 இலட்சம் இதற்குச் செலவிடப்பட்டது. 1978–79ஆம் ஆண்டில் இப்பணிக்கு ரூ. 2 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

ஒலி-ஒளிக் கல்வி—

7. 1977–78ஆம் ஆண்டில் உயர்நிலைப் பள்ளிகளில் தேர்ந்தெடுத்த ஐந்து பள்ளிகளுக்கு ஒலி-ஒளிக் கல்வி வசதியை பெருக்[illegible] வகையில் பள்ளிக்கு ஒரு 16

மி.மி. திரைப்படம் காட்டும் கருவி வழங்கப்பட்டது.
மாநிலத் திரைப்பட சேமிப்பு நிலையத்தை வளப்படுத்த
கல்வித் திரைப்படங்களும் துண்டுப் படங்களும் ரூ.50,000
செலவில் வாங்கப்பட்டன. 1978-79ல் ரூ. 60,000க்குத்
திரைப்படச் சுருள்கள் வாங்கப்படும். சென்னையிலும் அதன்
அண்மையிலும் உள்ள பள்ளிகள் சென்னைத் தொலைக்காட்சி
நிலையத்தின் கல்வி ஒளிபரப்பின் மூலம் பயன் பெறுகின்றன.
சுமார் 30,915 பள்ளிகள் அந்தந்தப் பள்ளி அல்லது
வட்டார முயற்சியின் மூலம் வானொலிப் பெட்டிகளைப்
பெற்று, வானொலியின் கல்வி ஒலிபரப்பின் மூலம் பயன்பெறு
கின்றன.

8. உயர்நிலைப் பள்ளிகளின் கல்வித் தரத்தை உயர்த்
துவதற்காக, ஆய்வு செய்யும் முறையில் ஒரு திருத்தம்
செய்யப்பட்டுள்ளது. ஆண்கள் உயர்நிலைப் பள்ளிகளை
மாவட்டக் கல்வி அலுவலர்களும், பெண்கள் உயர்நிலைப்
பள்ளிகளை பெ ்கள் பள்ளி ஆய்வாளர்களும் ஆய்வு செய்
கின்றனர். புதிய திட்டத்தின்படி உயர்நிலைப் பள்ளிகளை
ஆய்வு செய்ய ஆய்வு அதிகாரிகள் செல்லும்பொழுது (ஆய்வு
அதிகாரிகள் எந்த பாடத்தில் தேர்ச்சி பெற்றுள்ளனரோ
அது தவிர வேறு பாடங்களில் தேர்ச்சி பெற்ற) உயர்நிலைப்
பள்ளி தலைமையாசிரியர்கள் அல்லது தலைமையாசிரி
யைகளுள் இருவரை அண்டையிலுள்ள பள்ளிகளிலிருந்து
அழைத்துச் சென்று ஆய்வு வேலையில் பயன்படுத்தப்படுவர்.
இதன் மூலம் உயர்நிலைப் பள்ளிகளில் பல்வேறு பாடங்
களிலும் ஆசிரியர்களின் பயிற்றுவிக்கும் திறனை நன்கு கண்
காணித்து வளரச் செய்ய இடம் உள்ளது.

பள்ளி இணையங்கள்—

9. சுமார் 2,072 உயர்நிலைப் பள்ளிகளில் பள்ளி
இணையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த உயர்நிலைப்
பள்ளிகள் ஒவ்வொன்றும் சுற்று வட்டாரத்திலுள்ள
தொடக்கப் பள்ளிகளோடும், உயர் தொடக்கப் பள்ளி
களோடும் ஒத்துழைத்துப் பணியாற்றி அனைத்தின் கல்வி
வளர்ச்சிக்கும் உதவுகின்றன.

உயர்நிலைப் பள்ளிக் கட்டிடங்கள்.

10. 1977 நவம்பரில் புயலாலும் வெள்ளத்தாலும்
பாதிக்கப்பட்ட பகுதிகளில் சேதமடைந்த அரசு உயர்
நிலைப் பள்ளிக் கட்டட வேலைகளுக்காக 1977–78ல் ரூ. 61
லட்சம் ஏற்பளிக்கப்பட்டது. புயல் வெள்ளத்தால் சேத
மடைந்த தனியார் பள்ளிகளுக்கு கட்டட மானியமாக
ரூ. 40 இலட்சம் வழங்கப்பட்டது.



11. அரசு உயர்நிலைப் பள்ளிகளின் கட்டிடப் பணிகளுக்
காக 1978–79-ல் ரூ. 46 இலட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்
பட்டுள்ளது (முன் ஆண்டுகளில் ஏற்பளித்த பணிகளுக்கு
1978–79-ல் ஆகும் செலவுக்காக ரூ. 26 லட்சமும், புதிய
கட்டட வேலைகளுக்காக ரூ. 20 லட்சமும்). நகராட்சி
மற்றும் தனியார் உயர்நிலைப் பள்ளிகளுக்கு கட்டிட மானி
யம் தர ரூ. 9 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

படிப்பு உதவித் தொகைகள்—

12. தமிழ்நாட்டில் பள்ளிக் கல்வி எல்லா நிலைகளிலும்
இலவசமாகும். கிராமப்புறத்தைச் சேர்ந்தவர்களும் கல்வி
யில் சிறந்து விளங்குகிறவர்களுமான மாணவர்களுக்கு,
1971–72 முதல் படிப்பு உதவித் தொகைகள் வழங்கப்படு
கின்றன. இத் திட்டத்தின்கீழ் 374 ஊராட்சி ஒன்றியங்
களில் ஒவ்வொன்றிலும் இரண்டு மாணவர்களுக்கு ஆண்டு
தோறும் உதவித் தொகை வழங்கப்படுகிறது. ஒரு முறை
உதவித் தொகை பெற்ற மாணவர் பள்ளிக் கல்வியை முடித்து
வெளி வரும் வரை இவ்வுதவித் தொகையைப் பெறுவார்.
இத் திட்டத்திற்கென ஏற்கப்பட்ட பள்ளிகளில் மாணவர்
படிப்பதாய் இருந்தால், உணவு விடுதியில் தங்கிப் படிக்கின்ற
மாணவர்களுக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 1,000-மும், விடுதி
யில் தங்காமல் பள்ளிக்கு வந்து சென்று படிக்கின்ற மாண
வருக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 500-ம் உதவித் தொகை
வழங்கப்படும். இவ்வுதவித் தொகை பெறும் மாணவர்
களுள் தம் விருப்பப்படி சாதாரண பள்ளிகளில் சேர்ந்து
படிப்பவர்களுக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 150 மட்டும்
வழங்கப்படுகிறது. இந்த உதவித் தொகையைப்
பெறும் மாணவர் எண்ணிக்கை ஆண்டுதோறும் (புதிய
தாகப் பெறுவோர் உட்பட) சுமார் 2,000 ஆகும்.
கிராமப்புற வளர்ச்சிக்கு முதன்மையளிக்க வேண்டுமென்
னும் அரசின் கொள்கைக்கேற்ப இந்தப் படிப்புதவித்
தொகைகளின் எண்ணிக்கையை 1978–79 முதல் இரு
மடங்காகப் பெருக்கிட அரசு ஆணையிட்டுள்ளது. அதாவது
ஒவ்வொரு ஒன்றியத்திலும் ஆண்டு தோறும் இனி நான்கு
மாணவர்கள் புதிதாக இப் படிப்புதவித் தொகையைப் பெறு
வார்கள்.

13. இது தவிர, பர்மா, இலங்கை அகதிகள், முன்னாள்
இராணுவத்தினர், தாழ்த்தப்பட்ட வகுப்பினர், பழங்
குடியினர், தங்கக்கட்டுப்பாடு சட்டத்தால் பாதிக்கப்பட்ட
பொற் கொல்லர்கள், அரசியல் தியாகிகள் ஆகியோரது
குழந்தைகளுக்கும் தாராளமாக கல்விச் சலுகைகள்
தொடர்ந்து அளிக்கப்பட்டு வருகின்றன.

நடமாடும் மருத்துவ வண்டிகள்—

14. சென்னை தவிர மற்ற எல்லா மாவட்டங்களிலும் உயர்நிலைப்பள்ளி மாணவர்களின் மருத்துவ சோதனைக்கென நடமாடும் மருத்துவ வண்டிகள் இயங்கி வருகின்றன.

மெட்ரிகுலேசன் பள்ளிகள்—

15. தமிழ்நாட்டில் 31 மெட்ரிகுலேசன் பள்ளிகள் உள்ளன. அவற்றில் பயில்வோர் 31,000 மாணவர்கள். ஆசிரியர்கள் எண்ணிக்கை 1,100 ஆகும். இவை மாணவர்களிடம் கட்டணம் வசூலிக்கின்றன. பாட மொழி ஆங்கிலமாகும். இவை அரசு மானியம் பெறுவதில்லை. இவை அண்மைக் காலம் வரை சென்னை, மதுரைப் பல்கலைக் கழகங்களுடன் இணைந்து இருந்தன. 1976ஆம் ஆண்டு டிசம்பரிலிருந்து இவை பள்ளிக் கல்வி இயக்குநரின் கட்டுப்பாட்டிற்கு மாற்றப்பட்டுள்ளன.

16. மெட்ரிகுலேசன் பள்ளிகளுக்கான தனி ஆயம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அப்பள்ளிகளுக்குத் தனி ஆய்வாளர் ஒருவரும் நியமிக்கப்பட்டுள்ளார்.

(IV). பள்ளிப் பாடங்கள், பாடத் திட்டம், பாடநூல்கள்.

பள்ளிப் பாடத் திட்டத் திருத்தம்—

1972–73ஆம் ஆண்டிலிருந்து 10 ஆண்டுப் பள்ளிப் படிப்பு அடிப்படையிலான புதிய பாடத் திட்டம் படிப்படியாக நடை முறைக்குக் கொண்டு வரப்பட்டது. 1976–77ஆம் ஆண்டுக்குள் 1–10 வகுப்புகளில் அப்பாடத் திட்டம் அமுலுக்கு வந்து விட்டது. ஆங்கிலோ-இந்தியப் பள்ளிகளில் 1976ஆம் ஆண்டுக்குள் 1–10 வகுப்புகளில் அனைத்துப் பாடங்களிலும் புதிய பாடத் திட்டம் அமுலுக்கு வந்து விட்டது. புதிய பாடத் திட்டத்தின்கீழ் சேர்க்கப்பட்டிருந்த புதுமுறைக் கணிதம், தரமுயர்த்தப்பட்ட அறிவியல் ஆகியவற்றை நன்முறையில் நடத்த வகை செய்வதற்காக 1972–73 முதல் 1975–76 வரை கணிதம், அறிவியல் ஆசிரியர்களுக்குப் பணியிடைப் பயிற்சித் திட்டம் ஒன்று பெருமளவில் நடத்தப்பட்டது. தொடக்கப் பள்ளிகளிலிருந்து 60,000 ஆசிரியர்கள், உயர் தொடக்கப் பள்ளிகளிலிருந்து 30,000 ஆசிரியர்கள், உயர்நிலைப் பள்ளிகளிலிருந்து 12,000 ஆசிரியர்கள் ஆகியோர் இத் திட்டத்தின்கீழ் பயிற்சி பெற்றனர்.





2. தற்போது பள்ளிகளில் அமுலில் உள்ள பாடத்திட்டத்தின் சுமை மாணவர்களுக்கு அதிகமாக இருப்பதாக பல இடங்களிலிருந்தும் முறையீடுகள் வந்தன. மைய அரசுக் கல்வித் துறைக் குழு ஒன்றும் பள்ளிப் பாடத் திட்டங்களின் பளுவைக் குறைப்பதன் தேவையை வலியுறுத்தியுள்ளது. எனவே கல்வி வல்லுநர்களைக் கலந்து பல்வேறு பாடங்களில் (குறிப்பாக கணக்கில்) உள்ள அதிகப்படி சுமையை 1978–79 முதல் அனைத்து வகுப்புகளிலும் குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

3. புதிய பாடத்திட்டத்தின்கீழ் (முன்னர் 10, 11-வது
வகுப்புகளில் கற்பிக்கப்பட்டு வந்த) விருப்பப் பாடங்களுக்கு
இடமில்லை. எனவே, 1976–77ஆம் ஆண்டிலிருந்து 10-வது
வகுப்பிலும், 1977–78ஆம் ஆண்டிலிருந்து 10–11 வகுப்பு
களிலும் விருப்பப் பாடங்கள் நீக்கப்பட்டு விட்டன. எனினும்
விருப்பப் பாட ஆசிரியர் பதவிகள் சுமார் 3,200-ல் எவற்றை
யும் நீக்கக்கூடாது என்றும், ஆசிரியர்—மாணவர் விகிதத்
திற்குட்பட்டு அந்தந்தப் பள்ளியிலோ அல்லது பிற பள்ளி
களிலோ 8–11 வகுப்புகளுக்கு அப்பதவிகளை மாற்றி அப்
பதவிகளைத் தொடர்ந்து வைத்திருக்க வேண்டும் என்றும்
அரசு ஆணையிட்டது. எனவே, விருப்பப் பாடங்கள் நீங்கி
விட்டது என்ற ஒரு காரணத்தினுல் மட்டும் எந்த ஆசிரியரும்
வேலை இழக்க நேரவில்லை.

4. அவ்வாறே, 1977–78ஆம் ஆண்டில் 11ஆவது வகுப்
பில் மட்டும் கற்பிக்கப்பட்டு வந்த இருமுனைப் பாடத்
திட்டங்களைக் கற்பிக்கும் 1,541 ஆசிரியர்களுக்கும் இவ்
வாண்டு வேலைப்பளு குறைந்திருப்பினும், அவர்களையும்
இவ்வாண்டு பணியில் தொடர்ந்து வைத்திருக்க வேண்டு
மென ஆணை வெளியிடப்பட்டது. 1978–79 முதல் இரு
முனைப் பாடங்களின் நிலைமை அவற்றைக் கற்பிக்கும் ஆசிரி
யர்கள் நிலைமை, ஆகியவை குறித்து விரைவில் ஆணை வெளி
யிடப்படும்.

பல்வகைப் பயிற்சிப் பாடங்கள்.

5. உயர்நிலைப் பள்ளிகளில் தொழிற் பயிற்சி தருவதற்
காக பல்வகைப் பயிற்சிப் பள்ளிகளை நிறுவுமாறு கோத்தாரி
கல்விக்குழு பரிந்துரைத்துள்ளது. 1974–75, 1975–76
ஆண்டுகளில் சுமார் 70 உயர்நிலைப் பள்ளிகள் பல்வகைப்
பயிற்சிப் பள்ளிகளாக உயர்த்தப்பட்டன. இப் பள்ளிகள்
வானொலிப் பெட்டிகள் பழுது பார்த்தல், மின் இய

பின்னுதல், உந்து வண்டி பழுது பார்த்தல், வேளாண்மைப் பொறியியல், விற்பனையாளர் பயிற்சி, தையல் போன்றவற்றைப் பாட நேரத்திற்குப் புறம்பான வேளைகளில் கற்பிக்கின்றன. இத்திட்டம் தொடர்ந்து செயல்படும்.

பள்ளிப் பாட நூல்கள்.

6. பள்ளிகளுக்கான அரசுப்பாட நூல்களை வெளியிட்டு வழங்கும் பொறுப்பு 1970-ல் நிறுவப்பட்ட தமிழ்நாட்டுப் பாட நூல் நிறுவனத்துடையதாகும். தரமான நூல்களை உருவாக்குவதிலும், அவற்றை மலிவு விலையில் விற்பதிலும் அந்நிறுவனம் நற்பணியாற்றியுள்ளது. 1977–78-ல் அந்நிறுவனம் ரூபாய் மூன்றரைக்கோடி விலையுள்ள சுமார் 2½ கோடி எண்ணிக்கை பாட நூல் படிகளை அச்சிட்டு வழங்கியது.

7. இந்நிறுவன புத்தகங்கள், 47 மொத்த விற்பனையாளர் (கூட்டுறவுச் சங்கங்கள்) மூலமாகவும், பதிவு செய்யப்பட்ட 1,600 சில்லறை வியாபாரிகள் மூலமாகவும் மாநில முழுவதும் விற்கப்படுகின்றன. பாட நூல்கள் உரிய காலத்தில் குறிப்பிட்ட விலையில் மாணவர்கட்குக் கிடைக்க இந் நிறுவனம் வகை செய்துள்ளது.

8. 1977–78-ல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள மாணவர்களுக்கு ரூ. 3.60 லட்சம் மதிப்புள்ள பாடநூல்களையும் பயிற்சி நோட்டுகளையும் பாட நூல் நிறுவனம் இலவசமாக வழங்கியது.

(V) ஆசிரியர் பயிற்சி.

1. இடைநிலை (செகண்டரி கிரேடு) ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளித்திட, இம்மாநிலத்தில் தற்போது 80 ஆசிரியர் பயிற்சி நிலையங்கள் உள்ளன (இளஞ்சிறார் பள்ளி ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் நான்கு, ஆங்கிலோ–இந்திய ஆசிரியர் பயிற்சிப் பள்ளி ஒன்று, லேடி வில்லிங்டன் மற்றும் புனித கிறிஸ்டோபர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளில் கல்லூரிக்கு ஒன்றாக உள்ள செகண்டரி கிரேடு பயிற்சி வகுப்புகள் இரண்டு ஆகியவை உட்பட) கடந்த பல ஆண்டுகளாக பயிற்சி பெற்ற ஆசிரியர்களிடையே வேலையில்லாத் திண்டாட்டம் பெருமளவில் நிலவி வருவதால் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளில் ஒரு ஆண்டு விட்டு மறு ஆண்டுதான் மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். அதுவும், குறைந்த எண்ணிக்கை மாணவர்களே சேர்க்கப்படுகின்றனர். 1977–78-ல் பள்ளிக்கு 35 பேர் வீதத்தில் சுமார் 2,600 மாணவர்கள் சகெண்டரி ஆசிரியர் பயிற்சிக்கு சேர்க்கப்பட்டனர்.



2. தற்போது இம்மாநிலத்தில் ஆசிரியர்களுக்கு ஆங்கில மொழி கற்பிப்பதில் பயிற்சி அளிக்கும் நிலையங்கள் ஒன்பது செயல்பட்டு வருகின்றன. சென்னை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி ஆகிய மூன்று இடங்களிலும் உள்ள மையங்கள் ஆண்டுதோறும் உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்கள் 1,755 பேருக்கு (35 தொகுதியினர் : மூன்று வாரப் பயிற்சி, ஆங்கிலம் பயிற்றுவிப்பதில் மறு பயிற்சி அளிக்கின்றன). கடலூர், தஞ்சாவூர், சேலம், திருநெல்வேலி, வேலூர், மேலூர் ஆகிய ஆறு இடங்களிலும் உள்ள மையங்கள் ஆண்டுதோறும் உயர் தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் 2,700 பேருக்கு (60 தொகுதியினர் : நான்கு வாரப் பயிற்சி) ஆங்கிலம் பயிற்றுவிப்பதில் மறு பயிற்சி அளிக்கின்றன. பயிற்சி பெற்ற பட்டதாரி ஆசிரியர்களுக்காக 3 முதல் 5 மாதங்கள் நடைபெறும் நீண்டகாலப் பயிற்சி, ஆண்டுதோறும் பெங்களூரில் உள்ள வட்டார ஆங்கிலக் கல்வி நிறுவனத்தில் அளிக்கப்பட்டு வருகிறது. இந்நிறுவனத்தில் இதுவரை 536 பட்டதாரி ஆசிரியர்கள் பயிற்சி பெற்றுள்ளனர்.

3. அரசினர் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளின் தரத்தை மேம்படுத்தும் நோக்கத்துடன், ஒவ்வொரு ஆண்டும் பி.டி ஆசிரியர்கள் எம். எட். படிப்பிற்கு அனுப்பப்படுகின்றனர். இதுவரை, 100 ஆசிரியர்கள் முகமையில் அனுப்பப்பட்டுள்ளனர். 1978–79-ல் மேலும் 20 பேர் முகமையில் அனுப்பப்படுவர்.

(VI) பள்ளித் தேர்வுகள்.

1. 1975 பிப்ரவரி வரை பள்ளிக் கல்வி இயக்குநரே அரசுத் தேர்வு ஆணையாளராகவும் இருந்தார். 1975 பிப்ரவரியிலிருந்து, அரசுத் தேர்வுகளுக்குத் தனியாக இயக்குநர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். (இவரே கல்வி ஆராய்ச்சி பயிற்சிக்கான மாநிலக் குழுவுக்கும் துணை இயக்குநர் இயக்குநராவர்). அவருக்கு உதவியாக கூடுதல் செயலாளர்கள் ஒருவரும், செயலாளர் ஒருவரும், உதவியாளர் ஒருவரும், முதுநிலைக்கணக்கு மூவரும், நேர்முக உதவியாளர் ஒருவரும், அதிகாரி ஒருவரும் உள்ளனர்.

2. இவர் ஆண்டுதோறும் சுமார் 34 தேர்வுகளை நடத்துகிறார் (எஸ். எஸ். எல். சி.; ஆங்கிலோ இந்திய பள்ளி இறுதிச் சான்றிதழ் தேர்வு; ஆசிரியர் பயிற்சி சான்றிதழ் தேர்வு உட்பட) அவற்றில் ஆண்டுக்கு ஒரு முறை நடப்பன சில, ஆண்டுக்கு இரண்டு முறை நடப்பன சில.

3. இத்துறை நடத்தும் தேர்வுகளில் பள்ளியிறுதித் தேர்வு முதன்மையானதாகும். அது மார்ச் தேர்வில் சுமார் 1,000 இடங்களிலும் அக்டோபர் தேர்வில் சுமார் 150 இடங்களிலும் நடைபெறுகிறது. 1977 மார்ச் தேர்வில் எழுதியவர்களின் எண்ணிக்கை 2.85 இலட்சமாகும். அவர்களில் வெற்றி பெற்றவர்களின் விழுக்காடு 55 ஆகும். 1977 அக்டோபரில் 51,000 பேர் எஸ். எஸ். எல். சி. தேர்வு எழுதி அவர்களில் 16.5 விழுக்காட்டினர் தேர்ச்சி பெற்றனர்.

4. 1978 மார்ச்—ஏப்ரல் மாதங்களில் பின்வரும் மூன்று வகையான மாணவர்கள் எஸ். எஸ். எல். சி. தேர்வுகள் எழுதுவார்கள் :—

(1) 10 ஆண்டு பள்ளிப் படிப்புக்கான புதிய பாடத்திட்டத்தை 10 ஆண்டுகளில் முடித்தவர்கள்.

(2) மேற்சொன்ன 10 ஆண்டுப் பள்ளிப் படிப்புப் பாடத்திட்டத்தை 11 ஆண்டுகளில் (அதாவது 9—10 வகுப்புக்களுக்கான புதிய பாடத்திட்டத்தை 9—11 வகுப்புகளில் 1975—76 முதல் 1977—78 முடிய) பயின்றவர்கள்.

(3) பழைய (1969ம் ஆண்டு திட்டப்படி) 11 ஆண்டு எஸ்.எஸ்.எல்.சி. பாடத் திட்டப்படி பயின்று 1977 அக்டோபரிலோ அதற்கு முன்னரோ எஸ்.எஸ்.எல்.சி. தேற முடியாமல் 1978 மார்ச்சில் தனிப்பட்ட முறையில் எஸ்.எஸ்.எல்.சி. எழுதுபவர்.

இந்த மூன்று வகையினரும் வெவ்வேறு வகைக் கேள்வித் தாள்களுக்கு விடையளிக்க வேண்டியிருக்கும்.

5. பள்ளிகளில் பயின்று அவற்றின் மூலம் எஸ்.எஸ். எல்.சி. தேர்வு எழுதுபவர்களுள் பின்வரும் வகையினர் 1978 மார்ச்-ஏப்ரல் எஸ்.எஸ்.எல்.சி. தேர்வுக்கு தேர்வுக் கட்டணமாகிய ரூ. 15 தரவேண்டியதில்லை என ஆணையிடப் பட்டுள்ளது :—

(1) ஷெட்டியூல் வகுப்பினர், மலை சாதியினர் ஆகிய பிரிவினர்.

(2) பிற்பட்ட வகுப்பு மாணவர்களுள் பெற்றோர் அல்லது காப்பாளர் ஆண்டு வருமானம் ரூ. 2,500க்கு மேற்போகாமல் இருப்பவர்கள்.



6. 18 வயதடைந்தவர்களும், இம்மாநிலத்தின் ஏற்பளிக்கப்பட்ட பள்ளிகளில் 8-ம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுமான அனைவரும், தனிப்பட்ட முறையில் எஸ்.எஸ். எல்.சி. தேர்வு எழுத அனுமதிக்கப்படுகின்றனர்.

7. கல்லூரி வகுப்பில் சேருவதற்குத் தகுதி பெற வேண்டுமாயின் தற்போது எஸ்.எஸ்.எல்.சி தேர்வில் ஒரே தடவையில் எல்லா பாடங்களிலும் தேர்ச்சி பெற வேண்டும். இந்த முறையை மாற்றியமைத்து பாடம் பாடமாக (இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தடவைகளில் தேர்வு எழுதி) தேர்ச்சி பெற்றாலும் உயர் வகுப்புகளில் சேர அனுமதிக்கலாம் என செகண்டரி கல்விக் குழுவும், உயர் செகண்டரிக் கல்விக் குழுவும் பரிந்துரை செய்துள்ளன. இதுகுறித்து பின்வருமாறு அரசு ஆணையிட்டுள்ளது: அதாவது எஸ்.எஸ்.எல்.சி., ஏ.ஐ.எஸ்.எல்.சி., ஓரியண்டல் பள்ளியிறுதித் தேர்வு (ஓ.எஸ்.எல்.சி.), மெட்ரிகுலேசன் ஆகிய எந்த தேர்வாயினும் சரி, 1978 மார்ச்—ஏப்ரல் தேர்வில் அனைத்துப் பாடங்களையும் எழுதி அவற்றுள் எவற்றிலாவது தோல்வியுற்றால் தோல்வியுற்ற பாடங்களை மட்டும் 1978 அக்டோபரில் எழுதி அவற்றில் மட்டும் அப்பொழுது வெற்றி பெற்றால் 1979—80 முதல் அவர்கள் (உயர் செகண்டரி கல்விக்குழு விதிக்கும் நிபந்தனைகளுக்குட்பட்டு) ஹையர் செகண்டரி வகுப்பில் சேரமுடியும் என்பதே அந்த ஆணையாகும். இது இந்த அரசு கல்வித் துறையில் கொணர்ந்துள்ள ஒரு முதன்மை வாய்ந்த சீர்திருத்தமாகும்.

8. எஸ்.எஸ்.எல்.சி., ஆங்கிலோ இந்திய பள்ளிப் படிப்பு சான்றிதழ், ஓரியண்டல் பள்ளிப் படிப்புச் சான்றிதழ் ஆகிய தேர்வுகளில் முதல்/இரண்டாவது/அடுத்த சில தகுதி மாணவர்களுக்கு தங்கப் பதக்கம்/வெள்ளிப் பதக்கம்/தகுதிச் சான்றிதழ் வழங்குவதற்கான திட்டமொன்று வகுக்கப்பட்டுள்ளது. அதன்கீழ் முதன் முதலாக 1977 டிசம்பரில் மாணவர்களுக்கு பதக்கங்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

(VII) கல்வி ஆராய்ச்சி-பயிற்சிக்கான மாநிலக் குழு.

1. கல்வி ஆராய்ச்சி பயிற்சிக்கான மாநிலக் குழு (SCERT) பள்ளிக் கல்வி நிலையில் ஆராய்ச்சி, பயிற்சி ஆகியவற்றைக் கவனித்து வருகிறது. இது நற்பயன் விளைத்த பல கருத்தரங்குகளையும் பயிற்சி வகுப்புகளையும் பணிப் பயிற்சிகளையும் நடத்தியுள்ளது.

2. பிரிட்டிஷ் கவுன்சிலின் உடனுழைப்புடனும், உதவியுடனும் இக்குழு சென்னை, மதுரை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் ஆசிரியர்கள் நிலையங்களை நிறுவியுள்ளது. கல்விப் பிரச்சினைகள் குறித்து ஆசிரியர்கள், ஒன்றாகக்கூடி விவாதிப்பதற்கும் கருத்துப் பரிமாற்றம் செய்து கொள்வதற்கும் ஏற்ற பொது மன்றங்களாக இந்நிலையங்கள் திகழ்கின்றன.

3. கணிதம், அறிவியல் ஆகிய பாடங்களில் புதிய பாடத்திட்டங்களைச் செயல்படுத்த உதவுமுகத்தான் இந்நிறுவனம் தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுக்கு உதவியாக கணிதம் பயிற்றுவிக்கும் உபகரணத் தொகுப்பு ஒன்றை உருவாக்கியுள்ளது; புதுக் கணிதத்தில் ஆசிரியர்களுக்கு ஏற்பட்ட ஐயங்களையும் இக்குழு அவ்வப்பொழுது தீர்த்து வந்தது.

4. யுனிசெப் உதவியுடன், இக்குழு சோதனைத்திட்டங்கள் இரண்டை நடத்தி வருகின்றது. ஒன்று "தொடக்க கல்விப் பாடத் திட்டத்தைப் புதுப்பிக்கும் திட்டம்" இதன்கீழ் புதிய பாடத்திட்டம் ஒன்று சில பள்ளிகளில் செயல்படுகிறது. மற்றொன்று, "சமுதாய வளர்ச்சியோடு இணைந்த கல்வி, வளர்ச்சி நடவடிக்கைகள்" இதன்கீழ் பள்ளிக் கல்வி, இளஞ்சிறார் பள்ளிக் கல்வி, பள்ளிசாராக் கல்வி ஆகிய மூன்றும் இணைந்த கல்வி முப்பது தொடக்கப் பள்ளிகளில் வழங்கப்படுகிறது.

5. பரங்கிமலை ஊராட்சி ஒன்றியத்திலுள்ள 50 ஊர்களிலுள்ள தொடக்கப் பள்ளிகளின் மூலம் "கல்வி மூலம் கிராமப்புற வளர்ச்சிக்கான ஒருங்கிணைந்த திட்டம்" ஒன்றை மாநிலக்கல்வி ஆராய்ச்சி பயிற்சி குழு செயல்படுத்தி வருகிறது. இதன்கீழ் கிராமப்புற வளர்ச்சிப் பணிகளில் ஆசிரியர்கள் பயிற்றுவிக்கப்படுகின்றனர். மாணவர்களின் பெற்றோர்களும், பள்ளியை விட்டு நின்றுவிட்ட சிறுவர்களும் சுயமாக வேலை செய்து ஓரளவு சம்பாதிக்க வகை செய்யும் திறமைகளை வளர்த்துக்கொள்ள அவர்களுக்கு அந்த ஆசிரியர்கள் உதவுகிறார்கள்.

6. 1978 ஜனவரியிலிருந்து SCERTல் "தேர்வு முறை சீர்திருத்தப் பிரிவு" ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. பள்ளித் தேர்வுகளில் செய்ய வேண்டிய சீர்திருத்தங்கள் பற்றியும், "கேள்வி வங்கிகள்" போன்ற புதுமையான மதிப்பீட்டு முறைகள் பற்றியும் அப்பிரிவு ஆய்வுகள் செய்யும்.



(VIII) விளையாட்டுகள், உடற்பயிற்சிக் கல்வி முதலியன

அனைத்துப் பள்ளிகளிலும் உடற் பயிற்சிக்கல்வி கட்டாயமாகும். எந்தெந்த உயர் தொடக்கப் பள்ளிகளில் உடற் பயிற்சி ஆசிரியர்கள் உள்ளனரோ அந்தந்த உயர் தொடக்கப் பள்ளிகளில் 6-8 வகுப்புகளிலும், அனைத்து உயர்நிலைப்பள்ளிகளிலும் 6-9 வகுப்புகளிலும் உடற் பயிற்சிக்கல்வி தேர்வுக்கான பாடங்களில் ஒன்றாகும். இந்தப் பள்ளிகள் அனைத்திலும் 6-9 வகுப்புகளில் படிக்கும் மாணவர்கள் உடற் பயிற்சிக் கல்வியில் பெறும் மதிப்பெண்கள், அடுத்த உயர் வகுப்பிற்கு அனுப்புவதற்கான கொள்கைகளை வகுக்கும்போது கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

2. மாநில விளையாட்டுக் குழுவும் மாவட்ட விளையாட்டுக் குழுக்களும் மாணவர்களிடையே மட்டுமின்றி பொது மக்கள் இடையேயும் விளையாட்டுப் போட்டிகளையும், விளையாட்டுகளையும் நன்கு பரப்பிட பணிசெய்து வருகின்றன. மாநில விளையாட்டுக் குழுவிற்கு 1975-76-ல் சுமார் ரூ. 12 இலட்சம் மட்டுமே மானியம் வழங்கப்பட்டது. 1977-78-ல் மானியத் தொகை ரூ. 16 இலட்சமாக உயர்த்தப்பட்டது. கூடுதல் மானியத்தைக் கொண்டு கிராமங்களிலுள்ள மாணவர்களல்லாத இளைஞர்களிடையே விளையாட்டுப் போட்டிகளையும், உடற் பயிற்சியையும் தீவிரமாகப் பரப்ப நடவடிக்கை எடுக்கப்படும்.

3. மாணவர்களுக்கு உடற் பயிற்சி அளிப்பதற்கு என உடற் பயிற்சிக் களரிகளை கல்வி நிலையங்களில் தொடங்கவும் ஏற்பளிக்கப்பட இருக்கிறது.

4. இம்மாநிலத்தில் விளையாட்டுகளையும், உடற் பயிற்சியையும் பேணி வளர்க்கும் நோக்கத்துடன் விளையாட்டு வீரர்களையும் வீராங்கனைகளையும் போற்றி அவர்களுக்கு ஆதரவும் பாராட்டும் அளித்திட அரசு கருதியுள்ளது, தலை சிறந்த விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் ஆகியோருள் முதுமைக் காலத்தில் வறுமையால் வாடுபவர்களுக்கு (மாத வருமானம் ரூ. 150-க்கு குறைவாக உள்ளவர்களுக்கு) மாதம் ரூ. 75 வீதம் உதவிப் பணம் கொடுக்கும் திட்டமொன்று 1978-79 முதல் தொடங்க இருக்கிறது. இவ்வாண்டில் 25 பேருக்கு இந்த உதவிப் பணம் தரப்படும்.

சாரண சாரணியர் இயக்கம்.

5. தமிழ்நாடு சாரணர் கழகம் 1977-78-ல் மொத்தம் 1,25,000 சாரணர்களையும், சாரணியர்களையும் கொண்டிருந்தது. 1977-78-ல் கூடுதலாக 7,000 மாணவர்கள் ரூ. 60,000

செலவில் சாரணர்களாகச் சேர்க்கப்படுவர். 1977-ம் ஆண்டில் குடியரசுத் தலைவரின் சான்றிதழ், பரிசு வில்லைகள் வழங்கும் விழாவில் கலந்து கொள்ள 650 சாரணர், சாரணியர்களை, அனுப்பிய பெருமை தமிழ்நாட்டுச் சாரண சாரணியர் கழகத்தையே சாரும்.

6. பாரத் சாரண சாரணியர் அமைப்பின் எட்டாவது தேசிய விழாவை சென்னையில் 1979 சனவரியில் கொண்டாட தமிழக அரசு இசைந்துள்ளது. நாட்டின் அனைத்துப்பகுதிகளிலிருந்தும் அண்டை நாடுகள் சிலவற்றிலிருந்தும் சுமார் இருபதாயிரம் சாரண சாரணியர் அவ்விழாவில் கலந்து கொள்வர். இந்த தேசிய விழா முதன்முதலாக தமிழ்நாட்டில் நடைபெற இருக்கிறது. இவ்விழாவிற்கான ஏற்பாடுகளைக் கவனிக்க கல்வியமைச்சர் தலைமையில் மாநில மட்டத்தில் ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது.

(ix) பள்ளி வளர்ச்சியில் சமுதாயத்தினர் பங்கேற்றல்.

பள்ளிச் சீரமைப்பு மாநாடுகள்

பள்ளிகளில் உள்ள வசதிகளைப் பெருக்கும் நோக்குடன் மக்கள் முயற்சியையும் ஆர்வத்தையும் தூண்டும் வகையில் (1976-77 முடிய) பள்ளிச் சீரமைப்பு மாநாடுகள் 556, நடந்துள்ளன. பொதுமக்களிடமிருந்து ரூ. 14 கோடி மதிப்புள்ள பொருள்கள் பெறப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ் இப்பொழுது அறிவியல்- நூல் நிலைய மேம்பாட்டிற்கான வசதிகளைப் பெறுவதில் நாட்டம் செலுத்தப்பட்டு வருகிறது. பொதுமக்களின் நன்கொடையைக் கொண்டு 1976-77 வரை ரூ. 3 கோடி செலவில் 41 இலட்சம் மாணவர்களுக்கு இலவசமாகச் சீருடை வழங்கப்பட்டுள்ளது.

(x) பள்ளி ஆசிரியர்கள், ஆசிரியர்களல்லாத பணியாளர்களின் நலன்.

1. தமிழ்நாட்டில் உள்ள பள்ளிகளில் தற்போது பின்வரும் விவரப்படி சுமார் 2.53 இலட்சம் ஆசிரியர்கள் பணியாற்றுகின்றனர்.—

| பள்ளிகள். | அரசு. | ஊராட்சி ஒன்றியம். | நகராட்சி. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| தொடக்கப் பள்ளி .. | 7,814 | 66,757 | 8,918 |
| உயர் தொடக்கப் பள்ளி | 4,257 | 29,493 | 6,699 |
| உயர்நிலைப் பள்ளி .. | 39,403 | .. | 3,974 |
| | 51,474 | 96,250 | 19,591 |



| பள்ளிகள். | தனியார். | மொத்தம். |
|---|---|---|
| (1) | (5) | (6) |
| தொடக்கப் பள்ளி .. | 27,695 | 1,11,184 |
| உயர் தொடக்கப் பள்ளி | 28,345 | 68,794 |
| உயர்நிலைப் பள்ளி .. | 29,662 | 73,039 |
| | 85,702 | 2,53,017 |

| பள்ளிகள். | ஆண்கள், பெண்கள் விவரம் தனித்தனியே | |
|---|---|---|
| | ஆண். | பெண். |
| (1) | (7) | (8) |
| தொடக்கப் பள்ளி .. | 69,846 | 41,338 |
| உயர் தொடக்கப் பள்ளி | 36,755 | 32,039 |
| உயர்நிலைப் பள்ளி .. | 49,018 | 24,021 |
| | 1,55,619 | 97,398 |

2. தனியார் பள்ளி ஆசிரியர்களின் ஊதியச் செலவு முழுவதையும் மாநில அரசே ஏற்றுக் கொள்கிறது. இம்மாநிலத்திலுள்ள அனைத்துப் பள்ளி ஆசிரியர்கட்கும் வழங்கும் ஊதியத்தால் ஏற்படும் செலவு 1970-71-ல் சுமார் ரூ. 55 கோடியாக இருந்தது. 1978-79-ல் சுமார் ரூ. 130 கோடியாக உயரும்.

தேர்வுத் தர பதவிகள் :

3. பிற துறைகளில் பணியாற்றுபவர்களோடு ஒப்பிடுகையில் ஆசிரியர்கட்குள்ள பதவி உயர்வு வாய்ப்பு குறைவே. எனவே ஏறத்தாழ எல்லாவகை ஆசிரியர்களுக்கும் பத்தாண்டு பணி முடிந்ததும் தேர்வுத்தரப் பதவிகள் தரப்படுகின்றன. பத்தாண்டுப் பணியைக் கணக்கிடும்பொழுது அனைத்து வகை (அரசு, உள்ளாட்சி, தனியார்) நிருவாகப் பள்ளிகளிலும் ஆற்றிய பணி கணக்கிடப்படும் (பணி முறிவுகள் இருந்தபோதிலும்). பணி முறிவுக் காலம் மட்டும் சேர்த்துக் கொள்ளப்பட மாட்டாது.

4. இடைநிலை (செகண்டரி கிரேடு) ஆசிரியருக்கான தகுதி இருந்தும் தொடக்கநிலை (ஹையர் கிரேடு) ஆசிரியர்களாகத் தொடக்கப்பள்ளிகளில் பணியாற்றி வந்த 1,500 ஆசிரியர்களுக்கு 1-6-1977 முதல் இடைநிலை ஆசிரியர் பதவிகள் அளிக்கப்பட்டுள்ளன (ஆண்டுக்கு ரூ. 7 இலட்சம் செலவில்).

தனியார் மற்றும் உள்ளாட்சி மன்றப்பள்ளி ஆசிரியர்களுக்கும் பிற பணியாளர்களுக்கும் ஓய்வு காலப் பலன்கள்.

5. மாநில அரசுப் பணியாளர்களுக்குப் பொருந்தும் தாராள ஓய்வூதிய விதிகள், தனியார் மற்றும் உள்ளாட்சி மன்றப் பள்ளிகளில் பணியாற்றி, 1-6-1970 அன்று அல்லது அதற்குப் பிறகு ஓய்வு பெறும் ஆசிரியர்களுக்கும் தனியார் பள்ளிகளிலிருந்து 1-4-1972 அன்று அல்லது அதற்குப் பிறகு ஓய்வு பெறும் ஆசிரியரல்லாத பிற பணியாளர்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளன. அவர்கள், ஓய்வூதியம் பணிக்கொடை முதலியவற்றை அரசுப் பணியாளர்களையொப்பப் பெறுகின்றனர். ஓய்வூதிய இறுதி ஆணை வெளியிடுவதில் காலத் தாழ்வு ஏற்பட்டால் அல்லலுறுமலிருக்க தற்காலிக ஓய்வூதியமும் பணிக்கொடையும் பெறவும் (அரசு ஊழியர்களைப் போலவே இவர்களுக்கும்) வழி செய்யப்பட்டுள்ளது.

6. மாநில அரசுப் பணியாளர்களுக்கான தமிழ்நாடு குடும்ப நல நிதித் திட்டமும் (அரசுப் பணியிலிருக்கும்போது ஒருவர் இறந்துவிட்டால், அவரது குடும்பத்திற்கு ரூ. 10,000 வழங்கும் திட்டம்) தனியார் மற்றும் உள்ளாட்சி மன்றப் பள்ளி ஆசிரியர்களுக்கும் பொருந்துவதாகும்.

7. அரசுப் பள்ளியல்லாத பள்ளி ஆசிரியர்களுக்கு முன்னர் இருந்த குடும்ப ஓய்வூதிய நிபந்தனைகள் 5-1-1978 அன்று தாராளமாக்கப்பட்டுள்ளன. 1-4-1962-க்குப் பின்னர் அவ்வப்பொழுது இறந்த அத்தகைய பள்ளி ஆசிரியர்கள் எவ்வளவு ஆண்டுகள் பணி செய்து இருந்தால் குடும்ப ஓய்வூதியம் தரலாம் என்று இருந்த ஆண்டு வரம்புகளை ஓரளவு குறைத்து இப்பொழுது ஆணையிட்டுள்ளதால் (முன்னர் இருந்த) கூடுதல் ஆண்டு வரம்புகள் அடிப்படையில் குடும்ப ஓய்வூதியம் பெறத் தகுதி பெறுமல் இருந்தவர்களுள் பலர் இப்பொழுது குறைக்கப்பட்ட ஆண்டு வரம்பு அடிப்படையில் 5-1-1978 முதல் குடும்ப ஓய்வூதியம் பெறத் தகுதி பெறுவர்.

8. தமிழ் நாட்டு அரசு ஊழியர்களும், உள்ளாட்சி மன்ற ஆசிரியர்களும் ஏற்கெனவே பெற்றுவந்த மற்றொரு சலுகையும் தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு அண்மையில் விரிவாக்கப்பட்டுள்ளது. அதாவது தனியார் பள்ளி ஆசிரியர்கள்



V211,32 'N78 N78-14731

பணியிலிருக்கும்பொழுதே இறந்து விட்டால் உடனடியாக அவர்கள் குடும்பத்துக்கு ரூ. 1,000 வழங்கப்பட்டு பின்னர் அத்தொகை அவ்வாசிரியர்கள் அல்லது அவர்கள் குடும்பத்தினருக்குச் சேர வேண்டிய ஓய்வூதியம், பணிக்கொடை, குடும்ப ஓய்வூதியம், குடும்ப நலத்திட்டத்தின்கீழ் கிட்டும் ரூ. 10,000 ஆகிய இவை ஏதேனுமொன்றிலிருந்து பிடித்தம் செய்து கொள்ளப்படும்.

9. தனியார் பள்ளி ஆசிரியர்களும், அரசுப் பணியிலுள்ள ஆசிரியர்களுக்கு அவ்வப்போது அளிக்கப்படும் விடுப்பு நலன்கள் அனைத்தையும் பெறத் தகுதியுடையவர்களாவர்.

ஆசிரியர்கள் நலனுக்கான தேசிய நிதி

10. ஆசிரியர்கள் நலனுக்கான தேசிய அமைப்பின் வசூல் நிதியிலிருந்து, 1976-77 ஆம் ஆண்டில், உதவி பெறத் தகுதி வாய்ந்த 517 ஆசிரியர்களுக்கு ரூ. 2 இலட்சம் உதவித் தொகையாக வழங்கப்பட்டது. 1977-78-ல் இது வரை சுமார் 500 ஆசிரியர்களுக்கு உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.

11. ஆசிரியர்களின் பிள்ளைகள் தொழில் படிப்புகளைப் படிக்க படிப்புதவித் தொகை வழங்கும் திட்டம் ஒன்றுக்கு 1977-78-லிருந்து அரசு ஏற்பளித்துள்ளது. பணியிலுள்ள, ஓய்வுபெற்ற, மற்றும் இறந்துவிட்ட ஆசிரியர்களின் பிள்ளைகளுக்கு இப் படிப்புதவித் தொகைகள் கிட்டும். ஆண்டு தோறும் புதிதாக 80 படிப்புதவித் தொகைகள் அளிக்கப்படும் (பொறியியல் படிப்புக்கு 25; மருத்துவம் 25: வேளாண்மை 20; கால்நடை மருத்துவம் 10) இப்படிப்புதவித் தொகை ஆண்டுக்கு ரூ. 500 ஆகும். இதனைப் பெறும் மாணவர்களின் தாய் தந்தையர் மொத்த வருமானம் ஆண்டுக்கு ரூ. 6,000-க்கு (வீட்டு வாடகைப்படி, நகர ஈட்டுப்படி போன்றவற்றைக் கணக்கிலெடுக்காமல்) மேல் போகக்கூடாது. ஆசிரியர் நல தேசிய நிதியிலிருந்து இப்படிப்புதவித் தொகைகள் வழங்கப்படுகின்றன.

12. ஆசிரியர் நல தேசியநிதி பணத்திலிருந்து சென்னையில் ரூபாய் 10 இலட்சம் செலவில் ஆசிரியர் இல்லம் ஒன்றைக் கட்டவும் ஏற்பளிக்கப்பட்டுள்ளது.

12 1945

13. ஒவ்வொரு கல்வி மாவட்டத்திலும் உள்ள உயர் தொடக்கப்பள்ளி நிலைப்பள்ளி ஆசிரியர்கள் இருவருக்கும் மாநில அரசு ... ஆசிரியர்கள் இருவருக்கும்

தொடர்ந்து வழங்கப்படுகின்றன. விருது பெறுபவர் ஒவ்
வொருவருக்கும் ஒரு வெள்ளிப் பதக்கமும் ஒரு சான்றிதழும்,
ரொக்கப்பணம் ரூபாய் 200-ம் அளிக்கப்படுகின்றன.

அரசுப் பள்ளி ஆசிரியர்கள்;

14. அரசு (பி. பிரிவு) உயர்நிலைப் பள்ளிகளில் 1970-ம்
ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ம் தேதி முதல் 1973-ம்
ஆண்டு மார்ச்சு மாதம் 3-ம் தேதி முடியவுள்ள காலத்தில்
தற்காலிகமாக நியமிக்கப்பட்ட பி. டி. ஆசிரியர்கள் சிலர்
பின்னர் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைக்குழுவால்
தேர்ந்தெடுக்கப்பட்டு முறையான நியமனம் பெற்றனர். அரசு
''ஏ பிரிவு'' உயர்நிலைப் பள்ளிகளில் 1973-74-ல் முதலில் தற்
காலிகமாக நியமிக்கப்பட்ட பி. டி. ஆசிரியர்கள் சிலரும் பின்
னர் அவ்வாணைக்குழுவினுல் தேர்ந்தெடுக்கப்பட்டபின் முறை
யான நியமனம் பெற்றனர். இவ்விருவகை பி. டி. ஆசிரியர்
களையும் அவரவர் எந்த நாளில் முதலில் தற்காலிகமாக
நியமனம் பெற்றனரோ அந்த நாள் முதல் முறையாக நிய
மிக்க அரசு ஆணையிட்டுள்ளது. (அவர்களுடைய பணிமூப்பு
வரிசை தேர்வாணைக்குழு நிர்ணயித்தபடி நீடிக்கும்). இவ்
வாறு முந்திய நாட்களிலிருந்து பணி முறைப்படுத்தப்படுவ
தால் சேர வேண்டிய நிலுவைப் பணம் முழுவதையும் அவர்
களுக்குக் கொடுத்திட அரசு ஆணையிட்டுள்ளது.

15. அரசு (பி. பிரிவு) உயர்நிலைப் பள்ளிகளில் 1970-ம்
ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ம் தேதி முதல் 1973-ம் ஆண்டு
மார்ச்சு மாதம் 3-ம் தேதி முடிய பி. டி. ஆசிரியர்களும்
முதனிலைத் தமிழாசிரியர்களுமாக 702 பேர் தற்காலிகமாக
நியமிக்கப்பட்டனர். தொழில் பழகு ஆசிரியர் திட்டம்,
ஐந்து இலட்சம் பேருக்கு வேலை திட்டம் ஆகியவற்றின் கீழ்
அரசு உயர்நிலைப் பள்ளிகளில் 250 பி. டி. ஆசிரியர்களும்
120 முதனிலைத் தமிழாசிரியர்களும் தற்காலிகமாக நியமிக்
கப்பட்டிருந்தனர். இவர்கள் தவிர நெடுநாளாக தற்காலிக
மாக பணியாற்றிவந்த வேறு பி. டி. ஆசிரியர்களும் முதனி
லைத் தமிழாசிரியர்களும் இருந்தனர். இவர்கள் அனைவரின்
பணியையும் முறைப்படுத்த நெடுநாளாக அரசுக்கு கோரிக்
கைகள் வந்து கொண்டிருந்தன. பி. டி. ஆசிரியர்கள் முதனி
லைத் தமிழாசிரியர் ஆகிய பதவிகளுக்கு முறையான நேரடி
நியமனம் தமிழ்நாட்டு அரசுப்பணியாளர் தேர்வுக் குழு
மூலமாகத்தான் செய்ய வேண்டும் என்று இருப்பதால் இத்
தகைய தற்காலிக பி. டி. ஆசிரியர்கள், முதனிலைத் தமிழா
சிரியர் ஆகியோருக்காகவென்றே தனியாக



அரசுப் பணியாளர் தேர்வாணைக்குழு மூலம் நடத்திட அரசு
ஏற்பாடு செய்துள்ளது. அவ்வாசிரியர்களுள் 1977-ம் ஆண்டு
மார்ச்சு மாதம் 31-ந் தேதி அன்றைய நிலவரப்படி ஓராண்டு
தற்காலிகப்பணி (தொடர்ந்து அல்லது விட்டுவிட்டு) முடித்
திருந்து அந்நாளில் பணியிலிருந்தவர்களும் அந்நாளில் பணி
யில் இல்லாமலிருந்தால், அவ்வாறு ஓராண்டு பணி முடித்து
விட்டு 1974-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ம் தேதி அன்று
அல்லது அதற்குப் பின் பணி நீக்கம் செய்யப்பட்டவர்களும்
அத்தேர்வில் கலந்து கொள்ளலாம். இவ்வகையினருள் தேர்
வாணைக்குழுவால் தேர்ந்தெடுக்கப்படுபவர் யாராவது வயது
வரம்பைத் தாண்டி விட்டிருந்தால் அவர்களுக்காக வயது
வரம்பைத் தளர்த்தவும் அரசு ஆயத்தமாக உள்ளது.

பள்ளிகளில் எழுத்தர் முதலிய பதவிகள்;

16. பள்ளிக் கல்வித் துறையில் உள்ள இளநிலை எழுத்தர்,
எழுத்தர் ஆகிய பதவிகள் மொத்தம் 2,115. அவற்றுள்
எழுத்தர் பதவிகள் 376. மூன்று இளநிலை எழுத்தருக்கு ஒரு
எழுத்தர் என்ற நிலை ஏற்பட இன்னும் 153 எழுத்தர் பதவி
கள் தேவை. எனவே தேவையான அளவுக்கு இளநிலை
எழுத்தர் பதவிகளை எழுத்தர் பதவிகளாகப் படிப்படியாகக்
உயர்த்திடக் கருதி 1978-79-ல் முதற்கண் 50 பதவிகள்
எழுத்தர் பதவிகளாக உயர்த்தப்படும்.

17. அரசு (பி. பிரிவு) உயர்நிலைப் பள்ளிகளில் (ரூபாய்
140—195 சம்பள விகிதத்தில்) உள்ள ஆவண எழுத்தர்
பதவிகளையெல்லாம் இளநிலை எழுத்தர் பதவிகளாக உயர்த்தி
இப்பொழுதுள்ள ஆவண எழுத்தர்களுள் எவரெவருக்கு இள
நிலை எழுத்தருக்குரிய தகுதிகள் உள்ளனவோ அவர்களுக்கு
எல்லாம் இளநிலை எழுத்தர் ஆக பதவி உயர்வு தர முடிவு
செய்யப்பட்டுள்ளது. இதுவரை இவ்வாறு 400 பதவிகள்
இளநிலை எழுத்தர் பதவிகளாக உயர்த்தப்பட்டுள்ளன.
1978-79-ல் மேலும் 100 பதவிகள் உயர்த்தப்படும்.

(xi) முதியோர் கல்வியும் பள்ளி சாராக் கல்வியும்

1. 1971-ம் ஆண்டு மக்கட் தொகை கணக்கின்படி தமிழ்
நாட்டில் 39·39 விழுக்காட்டினர் (ஆண்களில் 51·68 விழுக்
காட்டினரும், பெண்களில் 26·83 விழுக்காட்டினரும்) எழு
தப் படிக்கத் தெரிந்து இருந்தனர். அக் கணக்கின்படி அனைத்
திந்தியாவில் எழுதப்படிக்கத் தெரிந்தவர்கள் விழுக்காடு
29·34 ஆகும். (ஆண்கள் 39·51 விழுக்காடு, பெண்கள்
18·44 விழுக்காடு). தமிழ்நாட்டில் 1971-ம் ஆண்டு மக்கட்
தொகைக்கணக்கின்படி இருந்த 4·12 கோடி மக்களுள், 1·63
கோடி பேரே எழுதப்படிக்கத் தெரிந்து இருந்தனர்.

2. பதினான்கு வயதுக்குக் குறைந்த அனைத்துச் சிறுவர்
சிறுமியரையும் பள்ளிகளில் சேர்த்தாக வேண்டும் என்னும்
முயற்சிகளில் ஈடுபடும் அதே நேரத்தில், நம்மக்களில் வயது
வந்தவர்களுக்கும் கல்வி வசதிகள் அளித்து அவர்கள் ஆற்றலை
வளர்த்துக் கொள்ள வழி செய்யவேண்டும் என்பதில் மைய
அரசும், மாநில அரசும் மிகவும் அக்கறை கொண்டுள்ளன.
இந்நாடு முழுவதிலும் வரும் ஐந்து ஆண்டுகளில் 15—35
வயதுத் தொகுதியைச் சேர்ந்தவர்களுள் எழுதப்படிக்கத்
தெரியாமலிருக்கும் சுமார் 10 கோடி பேர்களுக்கு குறைந்த
அளவு எழுதப்படிக்கவாவது கற்றுக் கொடுக்க வேண்டும்
என்பது மைய அரசின் நோக்கமாகும். அவர்களுக்கு அளிக்
கப்படும் முதியோர் கல்வியின் மூலம் அவர்கள் மேற்கொண்டு
தாமாகவே படிப்பறிவை வளர்த்துக் கொள்ளும் திறனைப்
பெற்று தமது வளர்ச்சிக்கும் தம்மைச் சுற்றியுள்ள சமுதாய
வளர்ச்சிக்கும் தன்னம்பிக்கையுடன் தீவிரமாகப் பாடுபட
இயலும். இந்தக் குறிக்கோளை நிறைவேற்ற அனைத்து மாநி
லங்களும் அந்தந்த மாநிலத்திற்கு எழுத்தறிவிப்புத் திட்டங்
களை வகுத்திடக் கோரப்பட்டுள்ளன. தமிழ் நாட்டைப்
பொறுத்தவரை வரும் 5 ஆண்டுகளில் 15—35 வயதுத்
தொகுதியில் எழுத்தறிவில்லாமலிருப்பவர்கள் 65 இலட்சம்
பேருக்கு எழுத்தறிவிக்கத் திட்டமிட வேண்டும். தமிழ்
நாட்டில் முதியோர் கல்விக்கான மாநிலக் குழு ஒன்று அமைக்
கப்படுகிறது. எழுத்தறிவிப்புப் பணிக்காக விரிவான திட்டங்
களும் வகுக்கப்பட்டு வருகின்றன. இப்பணிக்குத் தேவை
யான அளவு மைய அரசு மானிய உதவி கிட்டும் என்று எதிர்
பார்க்கப்படுகிறது.

3. 1978-79-ல் முதியோர் கல்விக்கும் பள்ளி சாராக்
கல்விக்கும் மொத்தம் ரூபாய் 39 இலட்சம் ஒதுக்கப்
பட்டுள்ளது. "தேசியப் பணித் திட்டத்தை" சேர்ந்த
கல்லூரி மாணவர்கள், தேசிய மாணவர் படையினர் ஆகி
யோரும் நேரு இளைஞர் மன்ற பணியாளர்களும் எழுத்தறிவிப்
புப் பணியில் பயன்படுத்தப்படுகின்றனர். முதியோர் எழுத்
தறிவுத் திட்டம் நாடு தழுவிய இயக்கமாக வளர வேண்டு
மென்பது அரசின் கொள்கை. இதனையொட்டி, இந்தத் துறை
யில் ஈடுபடும் தொண்டு நிறுவனங்களுக்கு அரசு உதவ புதிய
திட்டமொன்று செயற்படுத்தப்படும். கல்வியின் பயன்,
கிராம முன்னேற்றத்திற்குத் தூண்டுகோலாக அமைய,
எழுத்தறிவு பெறுவோருக்கு, வேளாண்மை, கிராம—
குடிசைத் தொழில்கள், கூட்டுறவு இயக்கம், சுகாதாரம்;
சத்துணவு, குடும்ப நலத்திட்டம், கால்நடைப் பராமரிப்பு
இவை போன்ற பொருள்களைப் பற்றி எளிய நடையில்
புத்தகங்கள் தயாரித்து வழங்கப்படும்.



4. "வேளாண்மைத் தொழிலோடு இணைந்த எழுத்
தறிவுத் திட்டம்" என்னும் மைய அரசு பண உதவித்
திட்டம் எட்டு மாவட்டங்களில் மொத்தம் சுமார் 600 நிலை
யங்களில் செயல்படுகிறது. 1977-78-ல் இந்நிலையங்களி
லிருந்து சுமார் 20,000 பேர் கல்வி அறிவு பெற்று வெளி
யேறுவர்.

5. பள்ளி சாராக் கல்வியில் மற்றும் ஒரு மத்திய அரசு
பண உதவித் திட்டமும் உள்ளது. இத் திட்டத்தின்கீழ்
15—25 வயதுத் தொகுதியினருக்கு கல்வி கற்பிக்கப்படும்.
திருச்சி, வட ஆர்க்காடு, சேலம், தருமபுரி, கோய
முத்தூர், தென் ஆர்க்காடு, திருநெல்வேலி, இராமநாதபுரம்
ஆகிய மாவட்டங்களில் மாவட்டத்திற்கு 100 இடங்களில்
இத்திட்டம் செயல்படுகிறது. பாதி மாவட்டங்களில்
செலவை மைய அரசும் பாதியில் மாநில அரசும் ஏற்கின்றன.
ஒவ்வொரு மாவட்டத்திலும், இத் திட்டத்திற்கு ஆண்டுக்கு
ரூபாய் 1 இலட்சம் செலவாகின்றது. இத் திட்டத்தின்கீழ்
ஆண்டுதோறும் சுமார் 45,000 மாணவர்கள் பயனடைகின்
றனர்.

6. பள்ளிப் படிப்பைப் பாதியில் விட்டு விடுபவர்கள்,
பள்ளிக்கே செல்லாதவர் ஆகிய இருவகையினரிலும், 6—11,
11—14 வயதுத் தொகுதியினருக்கும் பள்ளி சாராக் கல்வி
அளிக்கும் திட்டம் ஒன்றையும் மாநில அரசு தனது செலவி
லேயே செயல்படுத்தி வருகிறது. இத் திட்டத்தின்கீழ்
374 ஊராட்சி ஒன்றியங்களில் ஒவ்வொன்றிலும் 1976-77-ல்
ஒரு இடத்திலும் 1977-78-ல் இரண்டாவதாக
மற்றொரு இடத்திலும் இவ்வகுப்புகள் தொடங்கப்பட்டன.
ஊராட்சி ஒன்றியப் பள்ளிக் கட்டிடங்களில் இவ்வகுப்புகள்
நடக்கின்றன. பள்ளி ஆசிரியர்களே பள்ளி சாராக்கல்வி
வகுப்புகளை மாலையில் நாள் தோறும் சுமார் இரண்டு மணி
நேரம் நடத்துகின்றனர். இதற்கு திங்கள் ஒன்றுக்கு ரூபாய்
50 மதிப்பூதியம் பெறுகின்றனர். இத் திட்டத்தில் 1977-78
இல் 25,000 பேர் பயில்கின்றனர். 1978-79 இல் ஊராட்சி
ஒன்றியம் ஒவ்வொன்றிலும் இரண்டு புதிய இடங்கள்
என மொத்தம் 748 இடங்களில் இக்கல்வி முறை விரிவு
செய்யப்படும்.

7. ஏழ்மைக் குடும்பங்களைச் சார்ந்தவர்களும் எட்டாம்
வகுப்புடன் பள்ளிப் படிப்பை விட்டுவிட்டவர்களுமான இளை
ஞர்களுக்கு 11-வது வகுப்புத் தரத்தில் கல்வி கற்பிக்க
மைலாப்பூர் செயிண்ட் தாமஸ் கான்வெண்டில் 1975ஆம்
ஆண்டு முதல் மாலை [illegible] பள்ளி சாராக் கல்வி வகுப்

புகள் நடத்தப்படுகின்றன. [1978 ம ர்ச் 15
ஆண்டுக்கு சுமார் ரூபாய் 25,000 இத் திட்டத்திற்கு அரசு
இத்தகைய வகுப்புகள் கோட்டூர்புரத்தில் மானியம் வழங்குகிறது.
ஒரு மையத்திலும் தொடங்கப்பட்டுள்ளன. இரண்டாவதாக

நேரு இளைஞர் நிலையங்கள்.

8. நேரு இளைஞர் நிலையங்கள் ஏழு
சேலம், திருச்சிராப்பள்ளி, கடலூர், வேலூர்,
முத்தூர், புதுக்கோட்டை இராமநாதபுரம், கோய
வருகின்றன. மேலும் ஆகிய இடங்களில் செயல்பட்டு
உள்ளது. இவை ஐந்தைத் தொடக்க ஏற்பளிக்கப்பட்டு
பயனுள்ள குறிப்பாக, பள்ளிசாராக் கல்வித் துறையில்
எல்லா பணிகளைச் செய்கின்றன. பள்ளி சாராக் கல்வி
களிடையே இளைஞர்களுக்கும் கிட்டச் செய்வதும், இளைஞர்
பாடல்கள், அறிவியல் மனப்பான்மையை வளர்ப்பதும்
கைகளுக்கு நாடகங்கள் மூலமாக ஆக்க பூர்வமான நடவடிக்
உடற்பயிற்சிக் வசதி செய்வதும், போட்டி விளையாட்டுக்கள்,
இந் நிலயங்களின் கல்வி ஆகியவற்றுக்கு ஏற்பாடு செய்வதும்
பணிகளாகும்.



1978 மார்ச் 15]

# III மேல் உயர்நிலைப் பள்ளிக் கல்வி

புதிய 10+2+3 ஆண்டு படிப்பு முறையில்+2 நிலையை பள்ளிகளில் வைப்பதே நல்லதென்பது பொதுவாக கல்வி வல்லுநர்களின் கருத்தாகும். தமிழ்நாட்டில் 1978–79 ஆம் ஆண்டு முதல் தொடங்கவிருக்கும் மேல் உயர்நிலைப் பள்ளி (ஹையர் செகண்டரி) வகுப்பை உயர்நிலைப் பள்ளி களிலேயே வைத்திடத் தமிழக அரசும் முடிவு செய்துள்ளது. மேல் உயர்நிலைப் பள்ளி வகுப்பு சுமார் 400 பள்ளிகளில் தொடங்கப்படும். இயன்றவரை ஊராட்சி ஒன்றியப்பகுதி ஒவ்வொன்றிலும் ஒரு மேல் உயர்நிலைப் பள்ளியாவது இருக்கும். மேல் உயர்நிலைப் பள்ளிகளாக உயர்த்திட அரசு ஏற்பளித்துள்ள முதல் பட்டியலில் உள்ள பள்ளிகளின் விவரம் வருமாறு :—

உயர்நிலைப் பள்ளிகள்—

| | |
|---|---|
| சென்னை .. .. | 18 |
| வெளியூர் .. | 182 |
| | 200 |
| ஆங்கிலோ இந்தியப் பள்ளிகள் .. .. | 14 |
| மெட்ரிகுலேசன் பள்ளிகள் .. .. | 6 |
| | 220 |

தேர்ந்தெடுத்துள்ள தனியார் அல்லது நகராட்சிப் பள்ளி ஒவ்வொன்றுக்கும் நிர்வாகத்தினர் ரூ. 25,000 அறக் கட்டளைத் தொகை கொடுக்க வேண்டும். அரசுப் பள்ளி களுக்கும் கூட அந்தந்த ஊர்ப் பொது மக்கள் ரொக்கமாக ரூ. 25,000 கொடுக்க வேண்டும். இந்த அறக் கட்டளைத் தொகை அல்லது ரொக்கப் பணத்தை 15,000, 5,000, 5,000 என மூன்று தவணைகளில் ஆண்டுக்கு ஒன்றாக மூன்று ஆண்டுகளில் தரலாம்.

2. மேல் உயர்நிலைப் பள்ளிப்படிப்பிற்கான பாடத் திட்டங்களை முடிவு செய்து ஏற்பளிக்கப்பட்டுள்ளது. பாடப் புத்தகங்களைத் தயாரிக்கும் வேலையைத் தமிழ்நாட்டுப் பாட நூல் நிறுவனம் செய்து வருகிறது. மேல் உயர்நிலைப் பள்ளி வகுப்பில் பகுதி I-இன் கீழ் ஒவ்வொரு மாணவனும்

தமிழை (அல்லது வேறு 12 மொழிகளுள் யாதானுமொன்றை) படிக்க வேண்டும். பகுதி II-இன் கீழ் ஆங்கிலம் பயில வேண்டும். பகுதி III-இன் கீழ் பொதுவான பாடங்களைப் (Academic Stream) பயில்பவர்கள் அறிவியல் பாடங்கள் அல்லது கலைப் பாடங்களில் ஏதாவது நான்கை எடுத்துப் பயில வேண்டும். பகுதி III-இன் கீழ் தொழில் பாடங்களை (Vocational Stream) பயில்பவர்கள் தொழில் பாடம் ஒன்றை பயில்வதோடு அத் தொழிலோடு தொடர்புடையதாக அறிவியல் அல்லது கலைப் பாடங்களில் இருந்து ஒரு பாடத்தையும் தேர்ந்தெடுத்துப் பயில வேண்டும். உயர் செகண்டரி நிலையில் பல்வேறு துறைகளில் எத்தனை தொழில் பாடங்களைக் கற்றுத்தர ஏற்பளிக்கப் பட்டுள்ளது என்ற விவரம் பின்வருமாறு :—

| | |
|---|---|
| வேளாண்மை .. .. .. .. | 15 |
| மனையியல் .. .. .. .. .. | 9 |
| பொறியியல்—தொழில் நுட்பவியல் .. | 8 |
| வணிகம் .. .. .. .. .. | 9 |
| உடல்நலம் .. .. .. .. .. | 8 |
| பல்வகை .. .. .. .. | 3 |
| மொத்தம் .. | 52 |

வசதிகள் இருப்பதைப் பொருத்தும் மாணவர்கள் சேர்வதைப் பொருத்தும் ஒவ்வொரு மேல் உயர்நிலைப் பள்ளியிலும் 1978–79 முதல் ஒரு தொழில் பாடமாவது தொடங்கப் பெறும். எந்தெந்தப் பள்ளிகளில் என்னென்ன தொழில் பாடங்களைத் தொடங்கினால் பயனுள்ளதாக இருக்குமென் பதை முடிவு செய்ய அனைத்து மாவட்டங்களிலும் விரிவான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட இருக்கின்றன.

3. மேல் உயர்நிலைப் பள்ளிகளில் 11—12 வகுப்புகளில் தமிழே பாட மொழியாக இருக்கும் என அரசு அறிவித் துள்ளது. தமிழைப் பாடமொழியாகக் கொண்டு பயில் பவர்களுக்கு இரு வகுப்புகளிலும் கற்பிப்புக் கட்டணம் கிடை யாது; சிறப்புக் கட்டணம் மட்டுமே குறித்த வீகிதங் களில் செலுத்த வேண்டும். மேல் உயர்நிலைப் பள்ளி வகுப் பில் ஆங்கிலத்தைப் பாடமொழியாகக் கொண்டு பயில விரும்புபவர்கள் கற்பிப்புக் கட்டணம் செலுத்திப் பயில அனுமதிக்கப்படுவர். அவர்களுக்கு 11—12 வகுப்புகளில்





இலவசக் கல்வி கிடையாது. மெட்ரிகுலேசன் பள்ளிகளும் ஆங்கிலோ-இந்திய பள்ளிகளும் ஏற்கனவே 1—11 வகுப்பு களில் கற்பிப்புக் கட்டணம் வசூலிக்கின்றன. அவை மேல் உயர்நிலைப் பள்ளி நிலையிலும் கற்பிப்புக் கட்டணம் வசூலிக்க அனுமதிக்கப்படும்.

4. 1978–79 இல் மேல் உயர்நிலைப் பள்ளிகளாக உயர்த்திடத் தேர்ந்தெடுத்துள்ள அரசு உயர்நிலைப் பள்ளி களில் 133 பள்ளிகளில் மொத்தம் ரூ. 2 கோடி செலவில் (ஒவ்வொரு பள்ளியிலும் சராசரி ரூ. $1\frac{1}{2}$ லட்சம் செலவில் ஒரு வகுப்பறையும் ஒரு ஆய்வுக்கூட அறையும்) கட்டட வசதி செய்ய ஏற்பளிக்கப்பட்டுள்ளது. அரசு மேல் உயர்நிலைப் பள்ளிக் கட்டட வேலைகளுக்கு 1978–79 இல் ரூ. 3 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. அவற்றுக்கு ஆய்வுக் கூட தளவாடங் களை அளிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

5. மேல் உயர்நிலைப் பள்ளி வகுப்பு ஆசிரியர்களுக்கு பின் வரும் தகுதிகளை நிர்ணயிக்கலாமாவென்று ஆய்வு செய்யப் பட்டு வருகிறது :—

உயர்செகண்டரிப் பள்ளித் தலைமையாசிரியர் .. எம்.ஏ., / எம்.எஸ்.சி. / எம்.காம்; பி.டி. / பி.எட்; ஏற்பளித்த பள்ளிகளில் அல்லது கல்லூரிகளில் ஆசிரியராக 10 ஆண்டு அனுபவம்.

ஆசிரியர்கள் .. எம்.ஏ./ எம்.எஸ்.சி. / எம்.காம்; பி.டி./பி.எட். (தேவையான மொழியில் அல்லது பாடத்தில்)

மேற்கண்ட தகுதிகள் படைத்தவர்கள் கிடைக்காவிட்டால் பின்வரும் தகுதிகளைப் பெற்றவர்களை பின்வரும் வரிசை முறைப்படி நியமிக்கலாமாவென்றும் ஆய்வு செய்யப்படுகிறது

(1) பி.ஏ./பி.எஸ்.சி./பி.காம். (தேவையான மொழியில் அல் லது பாடத்தில்)—முதல் அல்லது இரண்டாவது வகுப் பில்;
பி.டி./பி.எட்;
ஏற்பளித்த கல்வி நிறுவனங்களில் ஆசிரியராக 10 ஆண்டு அனுபவம்.

(2) பி.ஏ./பி.எஸ்.சி./பி.காம். (தேவையான மொழியில் அல்லது பாடத்தில்) மூன்றாவது வகுப்பில்;
பி.டி./பி.எட்.,
ஏற்பளித்த பள்ளிகளில் ஆசிரியராக 15 ஆண்டு அனுப வம்.

(3) எம்.ஏ.,/எம்.எஸ்.சி./எம்.காம். (தேவையான மொழி யில் அல்லது பாடத்தில்)—(பி.டி./பி.எட். இல்லாமல்) இவர்கள் நியமிக்கப்பட்டால் நியமித்த மூன்று ஆண்டு களுக்குள் அஞ்சல் முறையிலோ, மாலை நேரக் கல்லூரி யிலோ பகுதிநேர வகுப்புகளிலோ பயின்று பி.டி./ பி.எட். பட்டம் பெற்றுக வேண்டும்.

ஆசிரியர்கள் தகுதிகள் குறித்தும் சம்பள விகிதம் குறித்தும் விரைவில் இறுதியான ஆணைகள் வெளியாகும். உயர்நிலைப் பள்ளிகளில் தற்பொழுது பணியாற்றும் ஆசிரியர்களுள் மேல் உயர்நிலைப் பள்ளி வகுப்புக்கான தகுதியுடையவர்களனைவரும் இயன்றவரை மேல் உயர்நிலைப் பள்ளி வகுப்புகளில் எடுத்துக் கொள்ளப்படுவர்.

6. தமிழ்நாட்டிலுள்ள உயர்நிலைப் பள்ளிகளில் 1978-79-லிருந்து 11 ஆம் வகுப்பு நீங்கிவிடும் காரணத்தால் சுமார் 7,000 பி.டி. ஆசிரியர்கள் பாதிக்கப்படலாம். இவர் களில் மேல் உயர்நிலைப் பள்ளிக் கல்வி ஆசிரியருக்கு வரை யறுக்கப்படும் தகுதிகளைப் பெற்றுள்ளவர்களை அக் கல்வி பயிற்றுவதற்கு எடுத்துக் கொள்ளலாம். ஏனையோரைப் பொறுத்த மட்டிலும் எவரும் வேலையிழக்காதபடி அரசு பார்த்துக் கொள்ளும். ஆசிரியர், மாணவர் விகிதம் அனு மதிக்குமாயின் அந்தந்த பள்ளிகளில் உள்ள 8—10 வகுப்பு களுக்கு 11ஆம் வகுப்பு பி.டி. ஆசிரியர் பதவிகள் மாற்றப் படும். அல்லது ஆசிரியர்-மாணவர் விகிதப்படி கூடுதல் ஆசிரியர்கள் தேவைப்படும் பிற பள்ளிகளுக்கு அப்பதவிகள் மாற்றப்படும்.



# IV கல்லூரிக் கல்வி.

தமிழ்நாட்டில் 1947 ஆம் ஆண்டில் 24 ஆக இருந்த கலை, அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரிகளின் எண்ணிக்கை 1977–78 ஆம் ஆண்டில் 188 ஆக உயர்ந்துள்ளது. 1947-ம் ஆண்டில் கல்லூரிகளில் படித்த மாணவர்களின் எண்ணிக்கை 17,000 என இருந்தது; இது 1977–78 ஆம் ஆண்டில் 2,09,000 ஆக உயர்ந்துள்ளது. இக் கல்லூரிகளிலும், கல்லூரிக் கல்வி இயக்குநரது கட்டுப்பாட்டின்கீழ் அமைந்த பிற நிலையங்களிலும் 1977–78 ஆம் ஆண்டில் படித்து வந்த மாணவர்கள், பணியாற்றிய ஆசிரியர்கள் ஆகியோர் எண்ணிக்கை வருமாறு :—

| நிலையங்களின் எண்ணிக்கை. | | மாணவர் எண்ணிக்கை. (முழுமையான எண்களில்). | | ஆசிரியர் எண்ணிக்கை. | |
|---|---|---|---|---|---|
| (1) | | (2) | | (3) | |
| 1 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள்— | | | | | |
| அரசினர் கல்லூரிகள். | 51 | புகுமுக வகுப்பு. | 89,000 | | |
| உதவிபெறும் கல்லூரிகள். | 137 | | | | |
| | | பி. ஏ. | 43,000 | அரசுக் கல்லூரிகள். | 3,812 |
| | 188 | பி. எஸ். சி. | 49,000 | | |
| | | பி. காம். | 21,000 | தனியார் கல்லூரிகள். | 8,394 |
| சென்னை பல்கலைக் கழகத்துடன் இணைந்தவை. | 110 | பட்ட வகுப்பு | 1,13,000 | மொத்தம்.. | 12,206 |
| மதுரையுடன் இணைந்தவை | 77 | மாணவர் தொகை. | | | |
| அண்ணாமலையுடன் இணைந்தது. | 1 | எம். ஏ. எம். எஸ். சி. எம். காம். | 7,000 | | |
| | | ஆக மொத்தம்.. | 2,09,000 | | |
| (2) ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகள்— | | | | | |
| அரசினர் கல்லூரிகள். | 7 | | [illegible],700 | | [illegible] |
| தனியார் கல்லூரிகள் | 16 | | | | |
| (3) பிற கல்லூரிகள் — | | | | | |
| உடற் பயிற்சிக் கல்லூரிகள். | 3 | | 340 | | 30 |
| கீழ்த்திசைக் கல்லூரிகள். | 16 | | 1,700 | | 124 |
| சமூகவியல் பணிக்கல்லூரிகள். | 2 | | 170 | | 16 |
| ஊரக உயர்நிலை நிலையங்கள். | 2 | | 620 | | 75 |
| இசைக்கல்லூரி (அரசு). | 1 | | 250 | | 23 |

[1978 மார்ச் 15

2. 10+2+3 ஆண்டுப்படிப்பு 1978 ஜூன் முதல் நடைமுறைக்கு வரும். 1979 ஜூனிலிருந்து கல்லூரிகளிலிருந்து புகுமுக வகுப்பு நீங்கிவிடும். இதன்காரணமாக கல்லூரி ஆசிரியர்கள் வேலை இழக்காதபடி அரசு பார்த்துக்கொள்ளும். இதற்காக பல்கலைக் கழகங்களுடன் கலந்து கல்லூரி ஆசிரியர்களுடைய வேலைப்பளு பற்றிய நடைமுறைகள் தேவையான அளவுக்குத் திருத்தியமைக்கப்படும்.

புதிய பல்கலைக் கழகங்கள்.

3. மொத்தமுள்ள 188 கலை, அறிவியல் கல்லூரிகளில் 110 கல்லூரிகள் சென்னை பல்கலைக் கழகத்துடனும் 77 மதுரைப் பல்கலைக்கழகத்துடனும் ஒன்று அண்ணாமலைப் பல்கலைக் கழகத்துடனும் இணைந்தவை. பல்கலைக் கழகம் ஒன்றுடன் 30 அல்லது 40-க்கு மேற்பட்ட கல்லூரிகள் இணைப்புப் பெற்றிருத்தல் கூடாது என பல்கலைக்கழகங்கள் பற்றிய கஜேந்திர கட்கர் குழு பரிந்துரை செய்துள்ளது. எனவே, இம்மாநிலத்தில் மேலும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட புதிய பல்கலைக் கழகங்களை நிறுவுவது இன்றியமையாதது என்பது தெளிவாகும். திருச்சிராப்பள்ளியில் ஒன்றும் கோயம்புத்தூர் ஒன்றுமாக (கல்லூரிகளுக்கு இணைப்பளிக்கும் வகையைச் சார்ந்த) இரண்டு புதிய பல்கலைக் கழகங்களை நிறுவுவது குறித்து மைய அரசுடனும் பல்கலைக் கழக மானியக்குழுவுடனும் முனைப்புடன் இவ்வரசு கலந்தாலோசித்து நடவடிக்கை எடுக்க இருக்கிறது.

தன்னுரிமையுள்ள கல்லூரிகள்.

ஒவ்வொரு பல்கலைக் கழகத்தின் கீழும் உள்ள கல்லூரிகளில் நன்கு நடக்கும் கல்லூரிகள் ஒரு சிலவற்றை தேர்ந்தெடுத்து அவற்றுக்கு சுய ஆட்சி உரிமை தந்தால் கல்லூரிக் கல்வி தரம் உயருமென்று கருதி பல்கலைக்கழக மானியக்குழு அதற்காக திட்டமொன்று வகுத்தது, இதனை சென்னை, மதுரைப்பல்கலைக்கழக கல்லூரிகளில் செயல்படுத்த வகை செய்து பல்கலைக்கழகச் சட்டங்கள் 1977 டிசம்பரில் திருத்தப்பட்டுள்ளன. எனவே, அவ்வாறு சுய ஆட்சி உரிமை பெறும் கல்லூரிகள் பாடத்திட்டங்கள் வகுக்கவும், தேர்வு நடத்தவும் தாம் தாமே வல்லுநர் குழுக்கள் அமைத்து, கல்வித் தரம் உயரக் கூடியவகையில் செயல்பட வாய்ப்புண்டு.

5. இம்மாநிலத்தில் கலை, அறிவியல் கல்லூரிகளின் தேவை ஏறத்தாழ முழுமையாக நிறைவேற்றபட்டுவிட்டது எனலாம். ல குறிப்பிட்ட நகர்ப்புற கல்லூரிகளில் சேருவதற்கே மாண



1978 மார்ச் 15]

வர்கள் நெருக்கி முன்வருகின்றனர். ஆனால், கிராமப்புறப் பகுதிகளிலுள்ள கல்லூரிகளில் இப்பொழுது பல இடங்கள் காலியாக இருந்து வருகின்றன. 1977–78-ம் ஆண்டில் இம்மாநிலத்தில் உள்ள கல்லூரிகளில் புகுமுக வகுப்பில் 9,000 இடங்களும் (ஆங்கிலப் பாட மொழி—6,500 ; தமிழ்ப்பாட மொழி—2,500) பட்ட வகுப்புகளில் 11,700 இடங்களும் (ஆங்கிலப் பாட மொழி —7,700, தமிழ்ப் பாடமொழி-4,000) காலியாக இருந்தன. எனவே, புதிய கல்லூரிகளைத் தொடங்க அனுமதிப்பதைவிட தற்போதுள்ள கல்லூரிகளில் உள்ள இடங்கள் அனைத்தையும் பயன்படுத்த வகை செய்வதே விரும்பத்தக்கதாகும். கல்லூரிக் கல்வியின் தரத்தை மேம்படுத்துவதில் இனி முழுக் கவனம் செலுத்துவதே சிறந்ததாகும்.

கல்வித் தர மேம்பாடு.

6. ஐந்தாம் திட்டக் காலத்தில் அரசுக் கல்லூரிகளில் கல்வித்தர மேம்பாட்டுக்கே முதன்மை அளிக்கப்படுகிறது. 1977–78-ல் அரசுக் கல்லூரிகளில் கூடுதலாக அறிவியல் பட்டப்படிப்புகள் நான்கு, கலைப்பட்டப்படிப்புகள் இரண்டு, வணிகவியல் பட்டப்படிப்பு ஒன்று, அறிவியல் பட்ட மேற்படிப்பு வகுப்பு ஒன்று ஆகியவற்றைத் தொடங்க ஏற்பளிக்கப்பட்டது. 1978–79-ல் புதிய பட்ட வகுப்புகளைத் துவக்க ரூ. 3 லட்சமும், புதிய பட்ட மேற்படிப்பு வகுப்புகளைத் துவக்க ரூ. 1 லட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளன.

சென்னையில் உள்ள மாநிலக் கல்லூரியை ஒரு பட்ட மேற்படிப்பு—ஆராய்ச்சி நிலையமாக உயர்த்தக் கருதப்பட்டுள்ளது. 1978–79-ம் ஆண்டு இதற்கான நடவடிக்கைகள் தொடங்கப்படும்.

7. அறிவியல் கல்வியை வளர்த்திட அரசுக் கல்லூரிகளில் ஆய்வகக் கூட வசதிகள் பெருக்கப்படும். இதற்காக 1977-78-ம் ஆண்டில் ரூபாய் 5 இலட்சம் செலவிடப்பட்டது. 1978-79-ல் ரூபாய் 6 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

8. அரசுக் கல்லூரிகளில் மாணவர்கள் பயன்படுத்திட பாட புத்தகங்களைக் கொண்ட புத்தக நூலகங்களை அமைப்பதற்கென ஆண்டுதோறும் ரூபாய் 1 இலட்சம் செலவிடப்படுகிறது. 1978-79-ம் ஆண்டிலும் ரூபாய் 1 இலட்சம் செலவிடப்படும்.

9. மாணவர்கள் வசதிக்காக உணவருந்தும் இடம், சிற்றுண்டிச்சாலை, மிதிவண்டி நிறுத்துமிடம் ஆகியவற்றை அமைக்கவும், விளையாட்டுத் திடல்களைச் செப்பனிடுவதற் காகவும், விளையாட்டுப் பொருள்கள் போன்றவற்றை வாங்குவதற்காகவும் 1977-78-ம் ஆண்டில் அரசுக் கல்லூரி களில் ரூபாய் 5 இலட்சமும், தனியார் கல்லூரிகளில் ரூபாய் 5 இலட்சமும் செலவிட ஏற்பளிக்கப்பட்டது. அரசுக் கல் லூரிகளில் இவ்வசதிகளுக்காக 1978-79-ல் ரூபாய் 5 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

10. 1977 நவம்பரில் திருச்சிராப்பள்ளி போன்ற இடங் களில் புயலாலும், வெள்ளத்தாலும் தனியார் கல்லூரிகளில் சிலவற்றின் கட்டடங்கள், தளவாடங்கள், பிற சொத்துக்கள் ஆகியவை பெருஞ் சேதமுற்றன. சேதத்தின் அளவை சென்னைப் பல்கலைக்கழக ஆய்வுக் குழு ஒன்று மதிப்பீட்டு அறிக்கை தந்தது. அவ்வறிக்கையின் அடிப்படையிலும் பல்கலைக்கழகத் துணை வேந்தரின் பரிந்துரையின் பேரிலும் சேதம் அடைந்த கல்லூரிகளுக்கு அரசு சிறப்பு மானியமாக ரூபாய் 51 இலட்சம் வழங்கியுள்ளது.

11. அரசுக் கல்லூரிக் கட்டடங்கள், மாணவர் விடுதிக் கட்டடங்கள் ஆகியவற்றுக்காக 1978-79-ல் ரூபாய் 32 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. (புதிய வேலைகளுக்காக ரூபாய் 11 இலட்சமும், முன் ஆண்டுகளில் ஏற்பளிக்கப்பட்டு முடிவு பெறாமல் உள்ள கட்டட வேலைகளுக்கு 1978-79-ல் ஆகும் செலவுக்காக ரூபாய் 21 இலட்சமும்). தனியார் கல் லூரிகளுக்குக் கட்டட மானியம் தர ரூபாய் 7 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

12. அரசுக் கல்லூரிகளில் ஆசிரியர்களுடைய கல்வித் தகுதியினை மேம்படுத்துவதற்கான திட்டங்களும் செயல் படுகின்றன. பல்வேறு துறைகளில் ஆராய்ச்சி செய்து டாக்டர் (பி. எச். டி.) பட்டம் பெறுவதற்காக பேராசிரி யர்கள் முகமையில் அனுப்பப்பட்டு வருகின்றனர். 1973-74 முதல் இத்திட்டத்தின் கீழ் 19 பேர் டாக்டர் நிலை ஆராய்ச்சிக்காக அனுப்பப்பட்டதில் எழுவர் படிப்பை முடித்து திரும்ப வேலையில் சேர்ந்துவிட்டனர். 1978-79-ல் புதியதாக ஆறு பேராசிரியர்கள் டாக்டர் பயிற்சிக்கு அனுப்பப் படுவார்கள். நிரந்தரமாகப் பணிபுரியும் பேராசிரியர்களைத் தவிர வெளியிலிருந்தும் சில பேராசிரியர்கள் விரிவுரையாற்ற அழைக்கப்படுகின்றனர். தமிழ் மொழி வாயிலாகக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு உதவும் வகையில் நினைவூட்டும் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின் கீழ் இதுவரை 2,915 ஆசிரியர்கள் பலனடைந்துள்ளனர்.



13. தொடர்கல்வி அளிப்பதில் மாலை வேளைக் கல்லூரி களும், அஞ்சல் கல்வித் திட்டங்களும் மிகவும் பயனளிக்கும் முறையில் விளங்குகின்றன. 1977-78 ஆம் ஆண்டில் 45 கல்லூரிகளில் மாலை வேளை வகுப்புகள் நடத்தப் பெற்றன; அவற்றில் 10,000 மாணவர்கள் படித்தனர். மதுரைப் பல் கலைக் கழகம் புகுமுக வகுப்புக்கும், பி. ஏ., பி. காம்., எம். ஏ. வகுப்புகளுக்கும் பயிற்றுவிப்பதற்காக அஞ்சல் கல்வித் திட்டத்தை நடத்தி வருகிறது. மாணவர் சமுதாயத்தின ரிடையே இவை மிகவும் போற்றி வரவேற்கப்படுகின்றன.

படிப்புதவித் தொகையும் பயிற்சி உதவிப் பணமும்:

14. புகுமுக வகுப்பில் கற்பிப்புக் கட்டணங்கள் எவையும் வசூலிக்கப்படுவதில்லை. இலவச புகுமுக வகுப்புக் கல்வித் திட்டத்தினால் ஆண்டொன்றுக்கு அரசுக்கு ஏற்படும் செலவு ரூ. 2 கோடியாகும். தமிழ்ப் பயிற்று மொழிக்குரிய பயிற்சி உதவிப் பணத்திற்கான விவரங்கள் பின்னர் அளிக்கப் பட்டுள்ளன. மேற்கண்டவற்றுடன் வேறு பல படிப்புதவித் தொகை திட்டங்களும் பயிற்சி உதவிப் பணத் திட்டங்களும் உள்ளன. அவற்றில் மிக முக்கியமானவை வருமாறு :—

| திட்டம். (1) | 1977-78-ஆம் ஆண்டில் புதிதாக ஒப்பளிக்கப் பட்ட படிப்புதவித் தொகையின் எண் ணிக்கை. (2) | 1977-78-ஆம் ஆண்டில் (புதியவை மற்றும் புதுப்பிக்கப் பட்டவை) ஒப்பளிக்கப்பட்டவற் றின் மொத்த எண் ணிக்கை. (3) | 1978-79-ஆம் ஆண்டு வரவு-செலவு மதிப்பீட் டில் ஒதுக்கியுள்ள பணம். (4) (ரூபாய் இலட்சங்களில்) |
|---|---|---|---|
| தேசிய படிப்புதவித் தொகைத் திட்டம். | 1,314 | 4,000 | 35 |
| பள்ளி ஆசிரியர்களது பிள்ளைகளுக்குரிய தேசிய படிப்புதவித் தொகை. | 70 | 220 | 3 |
| தேசிய கடன் படிப்புதவித் தொகைத் திட்டம். | 1,444 | 5,092 | 45 |

1974-75ஆம் ஆண்டிலிருந்து தேசியப் படிப்புதவித் தொகை, பள்ளி ஆசிரியர்களுடைய குழந்தைகளுக்கு வழங்கப்படும் தேசிய படிப்புதவித் தொகை ஆகிய இரண்டுக்கும் ஆகும் செலவை மாநில அரசே ஏற்று வருகின்றது. உடல் ஊனமுற்றவர்கள், பாதுகாப்புப் பணியாளரது குழந்தைகள், விடுதலைப் போர் வீரர்களின் குழந்தைகள், மற்றும் பர்மா, இலங்கை அகதிகளின் குழந்தைகள் போன்றவர்களுக்கான படிப்புதவித் தொகைத் திட்டங்களும் உள்ளன. தாழ்த்தப் பட்ட இனங்கள்/பழங்குடிகள் மற்றும் பின்தங்கிய வகுப்பு களைச் சார்ந்த மாணவர்கள் அரிசன நலத் துறை, பிற்பட் டோர் நலத் துறை ஆகிய துறைகளிலிருந்து படிப்புதவித் தொகைகள் பெற்று வருகின்றனர்.

15. தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி மாணவர்களுள் பள்ளி இறுதி வகுப்புத் தேர்வில் 60 சதவீதம் அதற்கு மேலாக மதிப்பெண் பெறுபவர்களுக்கும் புகுமுக வகுப்பில் முதல் வகுப்பில் தேர்வு பெறுபவர்களுக்கும் ஆண்டு தோறும் உதவிப் பணம் வழங்கப்படுகிறது. அப்பிரிவினரைச் சார்ந்த கிறித்தவர்களுக்கும் இவ்வுதவிப் பணம் உண்டு. பெற்றோர் வருமானம் எவ்வளவாயிருப்பினும் இவ்வுதவிப் பணம் உண்டு. உதவிப்பணம் ஆளுக்கு ரூ.300 வழங்கப்படுகின்றது. அவர்கள் தாம் விரும்பும் மேற் படிப்பை மேற்கொள்ள இது அவர் களுக்கு உதவும். தாழ்த்தப்பட்ட சாதியினர் பழங்குடிகள் என்ற வகையில் அவர்களுக்குக் கிட்டும் மற்றெல்லாச் சலுகை களுக்கும் பண உதவிகளுக்கும் மேலாக இந்த ரூ. 300 உதவி கிட்டும். இத்திட்டத்தினுல் ஆண்டொன்றுக்கு அரசுக்கு ஏற்படும் செலவு ரூ. 8 இலட்சமாகும்.

16. 1977-78 ஆம் ஆண்டிலிருந்து பட்ட வகுப்பு களில் பயிலும் ஷெட்யூல்டு வகுப்பினர், மலைச் சாதியினர் ஆகியோருக்கு (அவர்களுடைய பெற்றோர் ஆண்டு வருமானம் பற்றிக் கருதாமல்) முழுச் சம்பளச் சலுகை அளிக்கப்பட்டு வருகிறது. முன்னர் இருந்த வருமான வரம்பாகிய ஆண்டுக்கு ரூ. 2,500 என்பது நீக்கப்பட்டுவிட்டது.

17. கல்லூரிகளில் பட்ட வகுப்புகளில் சேர்ந்துவிட்ட மாணவர்கள் பின் பொறியியல், மருத்துவம் முதலிய கல்லூரிகளில் சேருவதற்காகவோ அல்லது வேறு காரணங் களுக்காகவோ கலைக் கல்லூரியை விட்டுச் செல்லும் பொழுது அவர்கள் கலைக் கல்லூரியில் கட்டிய கட்டணத்தை திருப்பித் தரலாமென அரசு ஆணையிட்டுள்ளது.



கல்லூரிகளில் தமிழ்ப் பயிற்று மொழி :

18. 1966-67 ஆம் ஆண்டிலிருந்து புகுமுக வகுப்பில் கலைப்பாடங்களில் தமிழும் பயிற்று மொழியாக ஆனது. 1967-68 ஆம் ஆண்டிலிருந்து பி.ஏ. பட்ட வகுப்பிலும், 1968-69 ஆம் ஆண்டிலிருந்து புகுமுக வகுப்பில் அறிவியல் பாடங்களிலும், 1969-70 ஆம் ஆண்டிலிருந்து பி.எஸ்.சி. வகுப்பிலும் தமிழ் பாட மொழியானது. தமிழ்ப் பயிற்று மொழியை ஊக்குவிக்கும் முறையில் பி.ஏ., பி.எஸ்.சி. வகுப்பு களில் பயிலும் மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் ஊக்க உதவிப் பணம் / புத்தகப்படியாக ஆண்டுக்கு ரூ. 180-ம் புகுமுக வகுப்பு மாணவர்களுக்கு ஆண்டுக்கு ரூ. 50-ம் வழங்கப்படுகின்றன. 1975-76 ஆம் ஆண்டு முதல் 1977-78 முடிய இந்த உதவிப் பணம் பாடப் புத்தகங்கள், குறிப்புப் புத்தகங்கள், எழுதுபொருள்கள் ஆகியவைகளாகவே தரப் பட்டு வந்தது. 1978-79 முதல் இதை மாற்றி மீண்டும் பணமாகவே தரப்படும். ஆண்டுதோறும் தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்ட மாணவர்கள் எண்ணிக்கை (அரசினர் மற்றும் தனியார் கல்லூரிகளில் வருமாறு)—

| ஆண்டு. | புகுமுக வகுப்பு. | பட்டப்படிப்பு. | மொத்தம். | தமிழ்ப் பயிற்று மொழி வகுப்பு மாணவர் களுக்கு வழங்கப்படும் பயிற்சி உதவிப் பணம் மற்றும் புத்தகப்படி இவற்றுக்கான செலவு. (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1969-70 | 19,502 | 3,739 | 23,241 | .. |
| 1970-71 | 20,638 | 4,027 | 24,665 | .. |
| 1971-72 | 20,895 | 15,936 | 36,831 | 39 |
| 1972-73 | 21,224 | 16,786 | 38,010 | 45 |
| 1973-74 | 18,355 | 18,693 | 37,048 | 43 |
| 1974-75 | 19,542 | 15,839 | 35,381 | 40 |
| 1975-76 | 17,784 | 14,869 | 32,653 | 36 |
| 1976-77 | 20,103 | 13,471 | 33,574 | 34 |
| 1977-78 | 22,763 | 12,300 | 35,063 | 34 |

தமிழ்ப் பயிற்று மொழித் திட்டத்தை மாணவர்கள் இன்னும் பெருமளவில் விரும்பி ஏற்கச் செய்ய அரசும் பல்கலைக்கழ கங்களும் நடவடிக்கை எடுத்து வருகின்றன.

19. தமிழ் நாட்டுப் பாட [1978 மார்ச் 15
பாட மொழியாகக் கொண்டுள்ள நூல் நிறுவனம் தமிழைப்
களுக்காக இதுவரை 800பாடபுத்தகங்களை கல்லூரி மாணவர்
இவ்வெளியீடுகளில் பலவற்றைப் வெளியிட்டுள்ளது.
குறிப்புப் புத்தகங்களாகவும் பாட நூல்களாகவும்,
பல்கலைக் கழகங்கள் பரிந்துரை மாணவர்கள் பயன்படுத்திட
நிறுவனம் 1978–79 ஆம் செய்துள்ளன. பாட நூல்
பாட நூல்களை ஆண்டில் மேலும் பல கல்லூரிப்
வெளியிடும்.

பல்கலைக்கழக மானியக்குழு சம்பள விகிதங்கள்:

1. பல்கலைக் கழக மானியக் குழு சம்பள விகிதங்கள்
பின்வரும் கல்லூரி ஆசிரியர்களுக்கு, அதாவது :

அரசு மற்றும் தனியார் கலை அறிவியல் கல்லூரிகள்,
சட்டக் கல்லூரிகள்;

பொறியியல் கல்லூரிகளும், பல்தொழில் பயில
கங்களும்;

சென்னை, மதுரை, அண்ணாமலை பல்கலைக் கழகங்கள்
ஆகியவற்றின் ஆசிரியர்களுக்கெல்லாம் 1–4–1976 முதல்
அமுலாக்கி 1977 செப்டம்பரில் ஆணை வெளியிடப்பட்டது.
பணப் பயன் 1–1–1977 முதல் கிட்டும்.

21. மேற்கண்ட ஆணைகளில் திருத்தங்கள் கோரி முறை
யீடுகள் வந்தன. அரசு அவற்றைப் பரிவுடன் ஆய்வு
செய்து பின்வரும் சலுகைகளை அறிவித்துள்ளது. அதாவது,
1—12—1977 அன்று ஐந்தாண்டு அல்லது அதற்கு
மேலும் பணி செய்திருந்த விளக்குனர்கள் (டெமான்ஸ்
ரேட்டர்) பயிற்றுநர்கள் (டியூட்டர்) ஆகியோருள் அவரவர்
துறையில் பட்ட மேற்படிப்பு (எம்.ஏ., எம்.காம். போன்
றவை) தகுதி பெற்று இருந்தவர்களுக்கெல்லாம் 1-12-1977
முதல் துணைப் பேராசிரியர்கள்/விரிவுரையாளர்கள் பதவி
அளிக்கப்பட்டு, அப்பதவிக்கான பல்கலைக்கழக மானியக்
குழு சம்பள விகிதம் தரப்படும். இனிமேல் இந்த தகுதிகளை
(5 அல்லது அதற்கு மேற்பட்ட ஆண்டுகள் பணி
பட்ட மேற்படிப்பு தகுதி) பெறுபவர்களுக்கும் இந்த சலுகை
கிட்டும்.

22. மேலும் சில சலுகைகளைக்கேட்டு கோரிக்கைகள்
வந்துள்ளன. அவை அரசின் ஆய்வில் உள்ளன.



1978 மார்ச் 15]

தனியார் கல்லூரிகள்.

23. தனியார் கல்லூரி ஆசிரியர்கள் முழுமையாகவும்
காலத் தாழ்வின்றியும் சம்பளம் பெற்றுவர வகை செய்யும்
நோக்கத்துடன் தனியார் கல்லூரிகளுக்கும் மானியம் வழங்
குவதில் புதிய முறையை 1-7-77 முதல் அரசு செயல்
படுத்தி வருகிறது. இதன் கீழ் சம்பளம் வழங்கும் வகையில்
அக்கல்லூரிகளுக்கு ஏற்படும் செலவில் நிகரப் பற்றுக்குறை
முழுவதையும் அரசே ஏற்று வருகிறது.

24. தமிழ்நாட்டிலுள்ள தனியார் கல்லூரி ஆசிரியர்கள்
ஓய்வு காலப் பலன்களை (ஓய்வூதியம், குடும்ப ஓய்வூதியம்
போன்றவை) 1-4-1962 முதல் பெற்று வருகின்றனர்.
1—4—1976 முதல் மேற்கண்ட பலன்கள் அக்கல்லூரிகளி
லுள்ள ஆசிரியரல்லாத பணியாளர்களுக்கும் விரிவாக்கப்
பட்டுள்ளன. அண்மையில், தனியார் கல்லூரி ஆசிரியர்
களுக்கு விடுப்பு வசதிகளும் தாராளமாக்கப்பட்டுள்ளன;
மருத்துவ விடுப்பு முன்னர் 12 மாதங்கள் எடுக்கலாம்
என்று இருந்தது. இப்பொழுது அது 18 மாதங்களாக
உயர்த்தப்பட்டுள்ளது.

தேசிய மாணவர் படை:

25. தமிழ் நாட்டில் தேசிய மாணவர் படையில் தற்
பொழுது 22,000 மாணவ–மாணவியர்களைக் கொண்ட 48
முது நிலைப் பிரிவுகளும், 67,000 மாணவ – மாணவியர்களைக்
கொண்ட 675 இளநிலைப் பிரிவுகளும் உள்ளன. இவற்றில்
3,000 மாணவியரைக் கொண்ட முதுநிலைப் பிரிவுகள் 5-ம்,
5,300 மாணவியரைக் கொண்ட இளநிலைப் பிரிவுகள் 53-ம்
அடங்கும். தேசிய மாணவர் படைக்கு இவ்வரசு 1978–79-ம்
ஆண்டில் செலவிடவிருக்கும் தொகை ரூ. 113 இலட்ச
மாகும்.

26. 1978-ம் ஆண்டு ஜனவரி மாதத்தில் டில்லியில்
நடைபெற்ற குடியரசு விழாவில் தமிழ்நாட்டுத் தேசீய
மாணவர் படைப் பிரிவு பல மாநிலங்களும் அடைய விரும்பும்
அனைத்திந்திய விருதை தமிழ்நாட்டுக்குப் பெற்றுத் தந்
துள்ளது. இந்த விருதை வழங்கத் தொடங்கி எட்டுஆண்டுகள்
ஆகின்றன. 1976-ல் தவிர மற்ற ஏழு ஆண்டுகளிலும் அத
னைத் தமிழ் நாடே பெற்று வந்துள்ளது.

தேசிய பணித் திட்டம்:

27. தேசியப் பணிப் பிரிவானது கல்லூரி மாணவர்கள்
தங்களுடைய ஓய்வு நேரத்தை நாட்டுப் பணியில், குறிப்பாக
கல்விப் பணியில், ஈடுபடுத்துவதற்கு வாய்ப்பளிக்கும் நோக்

குடன் துவக்கப்பட்டது. இத்திட்டத்தைச் செயற்படுத்த
பல்கலைக் கழகங்கள் மாணவர் ஒருவருக்கு ரூ. 60 என்ற
கணக்கில் மானியம் பெறுகின்றன. மேற்கண்ட தொகையில்
ரூ. 35-ஐ இந்திய அரசும் ரூ. 25-ஐ மாநில அரசும் அளிக்
கின்றன. இத்திட்டத்தில் கல்லூரி மாணவர்கள், ஆசிரியர்கள்
ஆகியோருள் விருப்பமுள்ளோர் பங்கு கொள்கின்றனர்.
இத்திட்டத்தில் பங்கு கொண்ட மாணவர் எண்ணிக்கை
1976-77-ல் 20,000 ஆக இருந்தது, 1977-78-ல் 40,000
ஆக உயர்ந்தது. ஆண்டுதோறும் இத்திட்டத்தில் பங்கேற்கும்
மாணவர்களில் பாதிபேர் விடுமுறைக் காலங்களில் சுமார்
10 நாள் அளவுக்கு கிராமங்களில் சிறப்பு முகாம் நடத்தி
கிராமப்புற வளர்ச்சிப் பணிகளை (குறிப்பாக எழுத்தறி
விக்கும் பணியை) செய்கின்றனர். இத்திட்டத்திற்கு
1978-79-ம் ஆண்டில் ரூ. 21 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

சட்டக் கல்வி:

28. சென்னை சட்டக் கல்லூரி மாணவர் தொகை 1968-
69-ல் 1,045 ஆக இருந்தது. 1977-78-ல் சுமார் 2,495
ஆக (முழு வேளை பட்டப்படிப்பு வகுப்புகளில் 1,695, மாலை
நேரப் பட்டப்படிப்பு வகுப்புகளில் 740; எம்.எல். வகுப்பு
களில் 60) உயர்ந்துள்ளது. 1978-79-ல் எம்.எல். வகுப்பில்
ஏழாவது பிரிவு (சொத்துரிமைச் சட்டம்) தொடங்கப்படும்.
சென்னைச் சட்டக் கல்லூரியில் முழுவேளை பட்டப்படிப்பின்
மூன்றாண்டு வகுப்புகளிலும் ஒவ்வொரு பிரிவில் தமிழே
பயிற்று மொழியாக உள்ளது.

29. 1974-75-ம் ஆண்டில் மதுரையிலும் ஒரு சட்டக்
கல்லூரி திறக்கப்பட்டது. அக்கல்லூரியில் 1977-78-ம்
ஆண்டில் முழு நேர வகுப்புகளில் 900 மாணவர்கள் படிக்
கின்றனர். 1977-78-ம் ஆண்டிலிருந்து அக்கல்லூரியிலும்
மாலை வகுப்பு துவக்கப்பட்டு முதலாண்டு சட்ட வகுப்பில்
80 பேர்கள் பயில்கின்றனர். மதுரைச் சட்டக் கல்லூரிக்
கட்டடம், மாணவரில்லம் ஆகியவற்றின் கட்டட வேலைகளை
முடிக்கவும், அக்கல்லூரிக் கட்டடத்தின் மேல், முதல் மாடி
கட்டவும் 1978-79-ல் ரூ. 12 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.



# V தொழில் நுட்பக் கல்வி

தொழில் நுட்பக் கல்விக்காக 1978-79-ல் சுமார் ரூ. 7
கோடி (தொழில் நுட்பக் கல்வி நிலையக் கட்டடச் செலவு
போன்றவை உட்பட) ஒதுக்கப்பட்டுள்ளது. இத்துறையின்
கீழ் 7 பொறியியல் கல்லூரிகளும் 39 பல் தொழில் நுட்பப்
பயிலகங்களும் [மூன்று மகளிர் பயிலகங்களும், ஆறு தனித்
தொழில் பட்டய (டிப்ளமா) கல்வியகங்களும், மூன்று கலை-
கைத் திறன் கல்வியகங்களும் உட்பட], 14 தொழில் நுட்ப
உயர் நிலைப் பள்ளிகளும் உள்ளன. தற்போது ஆண்டு
தோறும், பொறியியல் கல்லூரிகளில் பட்டப் படிப்பிற்காக
1,422 மாணவர்களும், பல் தொழில் நுட்பப் பயிலகங்களில்
பட்டயப் படிப்பிற்காக 5,125 மாணவர்களும், தொழில்
நுட்ப உயர்நிலைப் பள்ளிகளில் 840 மாணவர்களும் சேர்க்
கப்படுகின்றனர்.

2. மேற்சொன்ன ஏழு பொறியியல் கல்லூரிகள் தவிர கிண்
டியிலுள்ள அழகப்ப செட்டியார் தொழில் நுட்பவியல் கல்
லூரி, மற்றும் இந்தியத் தொழில் நுட்பக் கல்வியகம், குரோம்
பேட்டையிலுள்ள சென்னை தொழில் நுட்பக் கல்வியகம்,
அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் பொறியியல் தொழில்
நுட்பவியல் கல்லூரி, திருச்சிராப்பள்ளியில் உள்ள வட்டாரப்
பொறியியல் கல்லூரி, ஆகிய ஐந்து பொறியியல் கல்லூரிகளும்
இம்மாநிலத்தில் உள்ளன. அவை பல்கலைக் கழகங்களைச்
சார்ந்தவை ; அல்லது தன்னாட்சி உரிமை பெற்றவை ஆகும்.

தொழில் நுட்பவியல் பல்கலைக் கழகம்.—

3. சென்னையில் தொழில் நுட்பப் பல்கலைக் கழகத்தை
அமைப்பதற்கான சட்ட முன் வடிவத்துக்கு மைய அரசின்
இசைவு எதிர்பார்க்கப்படுகிறது. அந்த இசைவு வந்ததும்
பிரைவில் அச்சட்ட முன் வடிவம் தமிழ் நாட்டுச் சட்ட
மன்றத்தின் முன் வைக்கப்படும்.

ல்வித் தர உயர்வு:

4. நான்காவது ஐந்தாண்டுத் திட்ட தொடக்கத்தி
லிருந்து தொழில் நுட்பக் கல்விக்காக இருக்கின்ற வசதிகளைச்
ர் செய்து ஒரு முகப்படுத்துவதிலும் கல்வித் தரத்தை மேம்
படுத்துவதிலுமே அதிகக் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.
மாணவர்களுக்கு அதிக வேலைவாய்ப்புகளை ஏற்படுத்தவும்
தொழில் நிறுவனங்களில் புதிதாகத் தோன்றும் துறைகளிலும்
பிரிவுகளிலும் எந்தெந்த பயிற்சிகளைப் பெற்றவர்கள்
தேவைப்படுகிறார்களோ அந்தந்த பயிற்சிகளை அளிக்கவும்

தொழில் சம்பந்தப்பட்ட பல புதிய பாடத்திட்டங்கள்
துவக்கப்பட்டு இருக்கின்றன. தற்போது பொறியியல்
கல்லூரியில் 15 பட்டப் படிப்பு முறைகளும், 31 பட்ட
மேற்படிப்பு முறைகளும், 8 பட்ட மேற்படிப்பு நிலைப்பட்டய
முறைகளும் உள்ளன. பல் தொழில் நுட்ப பயிலகங்களில்
37 பட்டய முறைகளும், 18 பட்டய மேற்படிப்பு முறைகளும்,
17 சான்றிதழ் படிப்பு முறைகளும் உள்ளன.

5. 1978–79-ல் கோயம்புத்தூரிலுள்ள அரசு தொழில்
நுட்பவியல் கல்லூரியில் உற்பத்திப் பொறியியலில் (Productior
Engineering) பட்ட வகுப்பு ஒன்றும், மதுரையிலுள்ள
தியாகராசர் பொறியியல் கல்லூரியில் ''மின்னணு மற்றும்
செய்தித் தொடர்பியலில்'' பட்ட வகுப்பு ஒன்றும் புதி
தாகத் தொடங்கப்படும்.

6. 1977–78 ஆம் ஆண்டிலிருந்து சென்னையிலுள்ள
வேதியியல் தொழில் நுட்பப் பயிலகத்தில், வேதித் தொழில்
நுட்பவியலில் (Polymer Technology) பட்டயப் படிப்பு
ஒன்றும், சென்னையிலுள்ள மைய தொழில் நுட்பப் பயில
கத்திலும் கோயம்புத்தூரிலுள்ள அரசு பல்தொழில் நுட்பப்
பயிலகத்திலும் மின்னணுவியல் பட்டய படிப்புகளும்
தொடங்கப்பட்டன. 1978–79-ல் சென்னையிலுள்ள
மையத் தொழில் நுட்பப் பயிலகத்திலே கட்டிட வேலைகள்
முதலானவற்றுக்கு வெவ்வேறு தளவாடங்கள் முதலியவை
எவ்வளவு தேவை என்று முன்கூட்டியே மதிப்பீடு செய்து
தருவதற்கென (Quantity Surveying) பட்டய மேற்
படிப்பு முறை ஒன்று தொடங்கப்படும். கோயம்புத்தூரி
லுள்ள அரசு பல் தொழில் நுட்பப் பயிலகத்தில் கட்டட
வியல், இயந்திரவியல், மின்னியல் துறைகளில் பகுதி நேரப்
பட்டயப் படிப்பு தொடங்கப்படும்.

7. சென்னையிலுள்ள கலை கைத்திறன் கல்லூரியில்
''பொருள் வடிவமைப்புத் துறையில் (துணிகளின் அலங்கார
வேலைப்பாடு, விளம்பரப்பணி ஆகியவற்றில்)'' பட்ட வகுப்பு
தொடங்கப்படும்.

8. 1977–78-ல் கிண்டி பொறியியற் கல்லூரியில் Structural
Dynamics, சுற்றுப்புற நலப் பொறியியல் (Environmental
Engineering) உச்ச மின்னியல் (High Voltage) ஆகிய
துறைகளின் ஆய்வுக் கூடங்களுக்கும் கோயம்புத்தூரிலுள்ள
அரசுப் பொறியியல் கல்லூரியில் வெப்ப இயந்திரங்கள் (Heat
Engines) ஆய்வுக் கூடத்துக்கும் கூடுதல் தளவாடங்கள்



வாங்கித் தரப்பட்டு தரமுயர்த்தப்பட்டன. 1978-79-ல்
கோயம்புத்தூரிலுள்ள அரசுத் தொழில் நுட்பக்
கல்லூரியில் மின்னணுவியல் ஆய்வுக்கூடம் தரம் உயர்த்தப்
படும். அக்கல்லூரியில் ரூ. 2·4 இலட்சம் செலவில் மகளிர்
விடுதி ஒன்று கட்டப்படும். காரைக்குடியிலுள்ள அழகப்பச்
செட்டியார் பொறியியற் கல்லூரியில் மேலும் ஒரு மாணவர்
விடுதி கட்ட ஏற்பளிக்கப்படும். அவ்வகையில் 1978-79ல்
ரூ. 1·5 இலட்சம் செலவிடப்படும்.

9. நன்கு வளர்ந்த பல் தொழில் நுட்ப பயிலகங்
களுக்கு தாமே புதுக்கல்வி திட்டங்களை வகுக்கவும்,
இருக்கும் பாடத் திட்டத்தைச் சீர்திருத்தவும், தொழில்
நிறுவனங்களுடன் இணைந்து செயல்புரியவும், தாங்கள்
விரும்பியவாறு பயிற்சி அளிக்கவும், கற்பிக்கவும் உரிமை
வழங்கப்படுகிறது. இதையொட்டி இதுவரை தன்னுரிமை
வழங்கப்பட்டுள்ள பாடமுறைகளின் விவரம் வருமாறு:
கோயம்புத்தூர் பி. எஸ். ஜி. பல்தொழில் நுட்பப்
பயிலகத்தில் உள்ள எல்லாப்படிப்பு முறைகளும்,
சேலம் தியாகராயர் பல்தொழில் நுட்பப் பயிலகத்திலும்
ராஜபாளையம் பி.ஏ.சி. ராமசாமி ராஜா பல்தொழில் நுட்பப்
பயிலகத்திலும் நெசவுத் தொழில் நுட்பவியல் படிப்பு
முறை, சென்னையிலுள்ள மைய தொழில் நுட்பப் பயிலகத்தில்
நகரமைப்பு—ஊரமைப்பு பற்றிய பட்டய மேற்படிப்பு:
பொள்ளாச்சியிலுள்ள நாச்சிமுத்து பல்தொழில் பயிலகத்
திலும் மதுரையிலுள்ள தமிழ்நாடு பல் தொழில் பயிலகத்
திலும் உந்து வண்டிப் பொறியியல் பட்டயப் படிப்பு.

பயிற்று துறை வளர்ச்சி—

10. பல்கலைக் கழக மானியக் குழு சம்பள விகிதங்கள்
பொறியியற் கல்லூரி பல்தொழில் பயிலக ஆசிரியர்களுக்கும்
பொருந்துவனவாகும்.

11. பொறியியல் கல்லூரி ஆசிரியர்கள் டாக்டர் பட்டம்
பெற இந்தியத் தொழிலியல் கல்வியகங்கள், பெங்களூரில்
உள்ள இந்திய அறிவியல் கல்வியகம் போன்றவற்றுக்கு
அனுப்பப்படுகின்றனர். சில ஆசிரியர்கள் தங்கள் செலவில்
தங்கள் முயற்சியிலும் டாக்டர் பட்டம் பெறுகின்றனர்.
இதுவரை 54 ஆசிரியர்கள் இவ்வாறு டாக்டர் பட்டம் பெற்
றுள்ளனர். மேலும் 31 ஆசிரியர்கள் தற்போது பயிற்சி
பெற்று வருகின்றனர். 1978–79-ல் மேலும் ஐந்து பேர்
பயிற்சிக்கு அனுப்பப்படுவர்.

[1978 மார்ச் 15

12. பல்தொழில் நுட்பப் பயிலக ஆசிரியர்கள் சென்னையிலுள்ள ''தொழில் நுட்ப ஆசிரியர் பயிற்சி நிலையத்திற்கு'' உயர் பயிற்சிக்காக அனுப்பப்படுகின்றனர். இதுவரை 21 ஆசிரியர்கள் பயிற்சியளிக்கப்பட்டுள்ளனர். 27 ஆசிரிய கள் பயிற்சி பெற்று வருகின்றனர். 1978–79 ஆம் ஆண்( மேலும் 30 ஆசிரியர்கள் பயிற்சிக்கு அனுப்பப்படுவார்கள்.

ஆராய்ச்சியைப் பேணுதல்—

13. ஆராய்ச்சி மற்றும் கலந்தாய்வுப் பணிகள் வள வேண்டும் என்பது நன்கு உணரப்பட்டுள்ளது. பொறியிய கல்லூரிகளில் டாக்டர் நிலை ஆராய்ச்சி எந்த அளவுக்கு நன் நடைபெறுகிறதோ அந்த அளவுக்கு இப்பணி சிறக்கும் அண்மையில் சில ஆண்டுகளில் பொறியியல் கல்லூரிகளி டாக்டர் பட்டத்திற்கு (முழு நேர மற்றும் பகுதி நேர ஆராய்ச்சி செய்ய மாணவர்கள் பதிவு செய்து கொள்வது ஊக்குவிக்கப்படுகிறது. இதுவரை 108 மாணவர்கள் டா டர் பட்ட ஆராய்ச்சிக்கு பதிவு செய்து கொண்டுள்ளனர் டாக்டர் பட்ட ஆராய்ச்சிக்காக தனியார் தொழிற் கல் நிறுவனங்கள் செய்யும் செலவு முழுவதையும் ஏற்க அர இசைந்துள்ளது.

தனியார் தொழில் நுட்பக் கல்வி நிலையங்கள்.—

14. இம்மாநிலத்தில் தனியார் பொறியியல் கல்லூரிகளு கும் பல்தொழில் நுட்பப் பயிலகங்களுக்கும் வழங்கப்படும் மானியத் தொகை படிப்படியாக உயர்ந்து கொண்டே வருகிறது. 1978–79 ஆம் ஆண்டில் ரூ. 160 இலட்சம் மானியத் தொகையாக அளிக்கப்படும்.

15. தனியார் தொழில் நுட்பக் கல்லூரிகளிலும் பல் தொழில் நுட்பப் பயிலகங்களிலும் உள்ள ஆசிரியர்களுக்கு 1–1–1975 முதலும் அவற்றிலுள்ள ஆசிரியரல்லாத பணியாளர்களுக்கு 1–4–1977 முதலும் தாராள ஓய்வூதியத் திட்டம் விரிவாக்கப்பட்டுள்ளது.

விரிவுப் பணிகள்.—

16. தொழில் கல்வி நிலையங்களை விரிவுப் பணிகளில் ஈடுபடுத்த முனைப்பான முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்படுகின்றன. தொடர் கல்வி வசதிகள் அளிக்கப்படுகின்றன. பரிசோதனை மற்றும் அறிவுரை கூறும் பணிகள் நடைபெறுகின்றன. கிராமப்புற கைவினைஞர்கள் புதிய கருவிகளைக் கையாளவும் புதிய தொழில் நுட்பவியல் முன்னேற்றங்களில் பயனை அடையவும் உதவியளிக்கப்படுகிறது.



978 மார்ச் 15]

1. தொடர் கல்வி.—

பணியாற்றும் பொறியியலறிஞர்களுக்கு மறுபார்வை வகுப்புகள் நடத்தப்படுகின்றன. அவரவர் துறையில் அவ்வப்பொழுது நிகழும் வளர்ச்சிகளைப் பற்றி அவர்கள் இவற்றின் மூலம் அறிந்துகொள்ள இயலுகிறது. பெரும்பாலும் இவ்வகுப்புகளை நடத்த ஆகும் செலவு வசூலிக்கும் கட்டணத் தொகைக்கு மேல் போவதில்லை. ஆண்டுதோறும் பல்வேறு பொறியியற் கல்லூரிகளிலும் சுமார் 25 மறுபார்வை வகுப்புகள் நடக்கின்றன. ஒவ்வொன்றிலும் சுமார் 30 பேர் பயன் பெறுகின்றனர். 1978–79-ல் சுமார் 60 வகுப்புகள் நடைபெறும்.

2. பரிசோதனை மற்றும் அறிவுரை கூறும் பணி.—

தொழில் நுட்பக் கல்வி நிலையங்களில் தனியார் தொழிற்சாலைகள் முதலியன விரும்பும் பரிசோதனைகள் செய்துதரப்படுவதுடன் அவர்கள் கோரும் பிரச்சினைகள் பற்றி அறிவுரை கூறும் பணியும் நடைபெறுகிறது. இவற்றுக்கு குறைந்த கட்டணமே வசூலிக்கப்படுகிறது.

3. கிராமப்புற வளர்ச்சி.—

கிராமப்புற மக்கள் எளிதில் பயன்படுத்தத் தக்கவையும் அவர்கள் செயல் திறனைப் பெருக்குபவையும் ஆன பல சுலபமான பொருள்கள், கருவிகள், முதலியவற்றை பல்தொழில் பயிலகங்கள் சில உருவாக்கியுள்ளன. சிறு கடைசல் பொறி; மண்ணெண்ணெய் அடுப்பு; புகையில்லாத சூளை; சீர்திருத்தப்பட்ட மாட்டுவண்டி முதலியவை அத்தகைய சில கண்டு பிடிப்புகளாகும்.

வணிகவியல் பாடங்களில் தேர்வு —

17. தொழில் நுட்ப இயக்குநரே வணிகவியல் பாடங்களான தட்டெழுத்து, சுருக்கெழுத்து, வரவு செலவுக் கணக்கியல், வணிகவியல் பயிற்சி, வணிகப் புவியியல், வங்கியியல் போன்றவற்றிற்கு ஆண்டுதோறும் ஏறத்தாழ ஒரு இலட்சம் மாணவர்களுக்கு தேர்வு நடத்தும் அதிகாரியுமாவார்.

கணித அறிவியல் நிறுவனம் —

18. அடையாற்றில் அமைக்கப்பட்டுள்ள கணித அறிவியல் நிறுவனம் மாநில அரசு, மைய அரசு ஆகியவற்றின் உதவியோடு செயல்படுகிற தன்னுரிமை பெற்ற நிறுவனமாகும். இந்நிறுவனத்திற்கு மாநில அரசு ஆண்டுக்கு ரூ. 3.5 இலட்சம்

மானியமாக அளிக்கின்றது. தற்போது, அடிப்படைக் கணிதம் மற்றும் கணிதம் சார்ந்த இயல்பியல் துறைகளில் உயர்தர ஆராய்ச்சி நடத்திவரும் இந்நிறுவனம் அனைத்திந்திய பெருமையை அடைந்துள்ளது.

சென்னைத் தொழில் நுட்பவியல் கல்வியகம்—

19. சென்னை தொழில் நுட்பவியல் கல்வியகம் **1949-ம்** ஆண்டு தொடங்கப்பட்டது. 1969–70 ஆம் ஆண்டு முதல் இது மாநிலக் கல்வி அமைச்சரின் கீழ் அமைந்த ஒரு மேலாண்மைக் குழுவின் ஆட்சியின் கீழ் வந்தது. இந்நிறுவனம் வானவூர்திப் பொறியியல், உந்து வண்டிப் பொறியியல், மின்னணுப் பொறியியல், கருவிப் பொறியியல், உற்பத்திப் பொறியியல் (1977–78-ல் தொடங்கியது), ஆகியவற்றில் பயிற்சி அளிக்கின்றது. அக்கல்வியகத்தில் அறிவியல் பட்டதாரிகளே சேர்க்கப்படுகின்றனர். வானவூர்திப் பொறியியல், மின்னணுப் பொறியியல் ஆகிய துறைகளில் இந்நிறுவனம் சென்னைப் பல்கலைக் கழகத்தோடு இணைந்த பட்ட மேற்படிப்பு வகுப்புகளையும் நடத்துகின்றது. 1974–75 வரை இந் நிறுவனத்திற்கு ஆண்டுதோறும் ஆகும் செலவில் நிகர பற்றுக்குறைத் தொகையில் மூன்றில் ஒரு பகுதியையும் 1974–75-ம் ஆண்டு முதல் நிகரப் பற்றுக்குறை முழுவதையும் மாநில அரசு ஏற்று வருகிறது.

வட்டாரப் பொறியியல் கல்லூரி, திருச்சிராப்பள்ளி—

20. திருச்சிராப்பள்ளியிலுள்ள வட்டாரப் பொறியியல் கல்லூரி 1964–65 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. அது தன்னுரிமையுள்ள நிறுவனமாகும். தமிழ்நாட்டுக் கல்வி அமைச்சரே அதன் ஆட்சிக் குழுவின் தலைவராவார். தற்போது அக்கல்லூரியில் ஆண்டுதோறும் 200 மாணவர்கள் பொறியியல் பட்டப்படிப்பிற்கு எடுத்துக்கொள்ளப் படுகிறார்கள். கல்லூரியிலுள்ள இடங்களில் பாதி இம்மாநில மாணவர்களைக் கொண்டும், பாதி பிற மாநில மாணவர்களைக் கொண்டும் நிரப்பப்படுகின்றன. அக்கல்லூரிக்கு ஆண்டுதோறும் ஆகும் செலவில் பாதியை மைய அரசும், பாதியை மாநில அரசும் ஏற்று வருகின்றன. செலவில் மாநிலம் ஏற்கும் பங்கு ஆண்டுக்கு ஏறத்தாழ ரூபாய் 20 இலட்சமாகும். அக்கல்லூரியில் நடக்கும் பட்ட மேற்படிப்பு வகுப்புகள் அனைத்துக்கும் சென்னைப் பல்கலைக்கழகம் தன்னுரிமை வழங்கியுள்ளது.



மாநில கூட்டுறவு முறைத் தொழில் கல்வி நிலையம்,
திருச்சிராப்பள்ளி.

21. '' மாநிலக் கூட்டுறவு முறைத் தொழில் கல்வி நிறு
வனம் '', புகுமுக வகுப்பு தேறிய மாணவர்களுக்கு தொழில்
கல்வி பயிற்றுவிப்பதற்காக 1975–76 ஆம் ஆண்டு முதல்
திருச்சிராப்பள்ளியில் துவங்கப்பட்டது. அது தன்னுரிமை
உள்ளது. கல்வி அமைச்சர் இந்நிறுவனத்தின் ஆளுகைக்
குழுவிற்குத் தலைவராவர். திருச்சிராப்பள்ளி மாவட்ட
ஆட்சியர் அதன் துணைத் தலைவராவர். அது 42 மாதங்கள்
கொண்ட (27 மாதங்கள் நிலையப் பயிற்சியும் 15 மாதங்கள்
வேலை அனுபவமும் உடைய) கல்வித் திட்டங்களை நடத்தி
வருகிறது. (1) கட்டடக் கலையும் உள் அமைப்பும், (2)
மின் கருவிகளும் முறைகளும், (3) நெசவும் நவீன அழகு
வேலைப்பாடும் என்ற மூன்று பாடத்திட்டங்கள் அங்கு
உள்ளன. ஒவ்வொரு பாடத் திட்டத்திற்கும் 20 மாணவர்கள்
சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். மாநில அரசு இந்
நிறுவனத்திற்கு ஆண்டுதோறும் ரூ. 2 இலட்சம் மானியம்
அளிக்கின்றது.

[1978 மார்ச் 15

றது. இப்பணிக்கு ஆண்டுதோறும் ரூ. 7 இலட்சம் செ வாகிறது. 1978—79-ல் மேலும் 100 கலைஞர்களுக்கு ஓய் வூதியம் அளிக்க நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

ஓவியம் நுண்கலைக் குழு—

7. ஓவியம் முதலிய நுண்கலைகளை பேணி வளர்க்கும் தமிழ்நாடு ஓவியம் நுண்கலைக்குழு தன்னாட்சியுரிமையுள்ள மற்றொரு நிறுவனமாகும். அது கல்வி அமைச்சரின் தலை மையின்கீழ் இயங்குகிறது. இக்குழு ஆண்டுதோறும் கலைக் கண்காட்சிகள் நடத்துகிறது. சிறந்த ஓவியங்களுக் கும் சிறபங்களுக்கும் ரொக்கப் பரிசு அளிக்கிறது. கலை நிறுவனங்களுக்கு மானியமளிக்கிறது. திறம் மிக்க இளம் கலைஞர்களுக்கு 10 மாதங்களுக்கு மாதம் ரூ. 150 வீதம் உதவித் தொகை அளிக்கிறது. இக்குழுவிற்கு ஆண்டுக்கு ரூபாய் ஒரு இலட்சம் மானியம் தரப்படுகிறது.

ஜவஹர்லால் நேரு பால பவன்—

8. ஜவஹர்லால் நேரு நினைவு நிதியிலிருந்து பெற்ற ரூ. 10 இலட்சம் (அந்நிதி இம்மாநிலத்திலிருந்து வசூலித்த தொகை யில் 40 விழுக்காடு) உதவித் தொகையைப் பயன்படுத்தி ஜவஹர்லால் நேரு பாலபவன் ஒன்று சென்னையில் ஏற்படுத் தப்படுகின்றது கலை, இசை, நடனம் முதலியவற்றின் இளஞ்சிறுர்களிடம் மறைந்துள்ள திறமைகளை வளர்த்துக் கொள்ள வசதி அளிக்கும்படி கல்வி மற்றும் மனமகிழ் மன்ற மாக அது இருக்கும். இந்நிறுவனத்தை அமைக்கும் முதனிலைப் பணி தற்போ கவனிக்கப்பட்டு வருகின்றது.

தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரிகள்—

9. தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரியில் முழுநேர மாண வர்கள் 246 பேரும், பகுதி நேர மாணவர்கள் 250 பேரும் பயிலுகின்றனர். இதில் முழுநேர ஆசிரியர்கள் 23 பேரும் பகுதி நேர ஆசிரியர்கள் 13 பேரும் பணி செய்கின்றனர் இக்கல்லூரியில் வாய்ப்பாட்டு, கருவி இசை பாரத நாட்டி யம் ஆகியவற்றில் பயிற்சி அளிக்கப்படுகின்றது. இக் கல்லூரி அனைத்திந்திய அளவில் புகழ்பெற்று விளங்கு கின்றது. பிற மாநிலங்கள் பலவற்றிலிருந்தும் அயல்நாடு களிலிருந்தும் மாணவர்கள் இக்கல்லூரியில் பயில்கின்றனர். வேலைக்குச் செல்லும் பெண்கள், இல்லத்தரசிகள், ஆண்கள் கியோருள் இசையார்வமுள்ளோரை ஊக்குவிக்கும் வகை



1978 மார்ச் 15]

தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரிகள்—தொடர்ச்சி.

யில் சென்னை நகரில் நான்கு மையங்களில் மாலை நேரங்களில் இசை வகுப்புகள் (வாய்ப்பாட்டு, வயலின், வீணை) நடத்தப் படுகின்றன. ஒவ்வொரு மையத்திலும் 64 பேருக்கு பகுதி நேர ஆசிரியர்கள் பயிற்றுவிக்கின்றனர்.

10. மதுரை மாநகரத்தில் இசைக் கல்லூரி ஒன்றை வரும் ஆண்டில் நிறுவ அரசு முடிவெடுத்துள்ளது. இது சென்னை யிலுள்ள இசைக் கல்லூரியின் இணைப்பாக இயங்கும்.

(ii) ஆவணக் காப்பகமும் அருங்காட்சியகங்களும்

1. தென் ஆசியாவில் வளமான அரசு ஆவணத் தொகுப் பைப் பெற்றுள்ளது தமிழ்நாடு அரசு ஆவணக் காப்பக மாகும். அது ஒரு வரலாற்று ஆராய்ச்சி மையமாகத் திகழ்வ துடன், அரசு ஆவணக்காப்பகமாகவும் செயல்படுகிறது. 300 ஆண்டுகளுக்கு முற்பட்ட பல ஆவணங்கள் அதில் உள் ளன. கடந்த 30 ஆண்டுகளுக்கு முந்திய ஆவணங்கள் ஆராய்ச்சியாளர்களுக்கு ஆய்வுக்குத் தரப்படுகின்றன.

2. ஆவணச் செயல்முறையை அதிகப் படியான பணியா ளர்கள் மற்றும் கருவி கலங்களைக் கொண்டு புதுமைப் படுத்தும் முயற்சிகள் தொடருகின்றன. 1978—79-ல் நுண் நிழற்படக் கருவி ஒன்று வாங்கப்படும்.

3. 1973 ஆம் ஆண்டு அமைக்கப்பெற்ற தமிழ்நாடு வர லாற்று ஆராய்ச்சிக்குழு தென்னிந்தியாவில் பல்வேறு வாழ்க்கை அம்சங்கள் குறித்து தரமான ஆராய்ச்சியுரை களை எழுதும் திறனும் ஆற்றலுமுடையவர்களை ஊக்குவிக்கின் றது. அவர்களுக்கு ஆராய்ச்சிக்குத் தேவையான வசதி களையும் சூழலையும் அளிப்பதுடன் ஆண்டுதோறும் நான்கு ஆராய்ச்சி மாணவப் பணியிடங்களும் (Fellowships) வழங்கப்படுகின்றன. ஒவ்வொரு ஆராய்ச்சி மாணவருக் கும் ரூ. 5,000 சில்லரைச் செலவினங்களுக்காக ஆண்டு தோறும் அளிக்கப்படுகின்றது.

4. ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனி காலத்தைச் சேர்ந்தவையான (17—18-வது நூற்றுண்டுகளைச் சார்ந்த) முக்கியமான ஆவணங்களின் படிகள் அல்லது சுருக்கங்கள் அச்சிடப்பட்டு வரலாற்றுராய்ச்சியாளருக்குப் பெரிதும் பயன்படும் புத்தகங்களாக வெளியிடப்பட்டுள்ளன. ஆர்வ முள்ளோர் அவற்றை விலைக்கு வாங்கிப் பயன்படுத்தும் வகையில் மிகக் குறைந்த விலையில் ஆவணக் காப்பகத்தில் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன.

[1977 மார்ச் 15

5. மாவட்ட விவரச் சுவடிகளை திருத்தியமைத்து மீண்டும் எழுதுவதற்கான மாவட்ட விவரச் சுவடிகள் பிரிவும் ஆவணக் காப்பக மற்றும் வரலாற்று ஆராய்ச்சி ஆணையரின் கட்டுப்பாட்டின்கீழ் தான் செயல்படுகின்றது.

அருங்காட்சியகங்கள்:

6. சென்னையிலும், புதுக்கோட்டையிலும், அரசு அருங்காட்சியகங்கள் உள்ளன. இவ்வருங்காட்சியகங்கள் சிறந்த சிற்பங்கள், மரச் செதுக்கு வேலைகள், வண்ண ஓவியங்கள் ஆகியவற்றைக் கொண்டுள்ளன. இவை தவிர தொல் பொருளியல், மானிடவியல், இயற்கை அறிவியல் ஆகிய துறைகளைச் சார்ந்த பொருள்களும் பார்வைக்கு வைக்கப் படுகின்றன. பொதுமக்களும் ஆராய்ச்சி அறிஞர்களும் இவற்றால் பெரும்பயனடைந்து வருகின்றனர். இவ்வருங் காட்சியகங்கள் பொது மக்களுக்கான அறிவியல் விரிவுரை களையும் கண்காட்சிகளையும் நடத்தி வருகின்றன.

7. 1978–79-ல் இத்துறை சேலத்தில் கிளை அருங்காட்சியகம் ஒன்றை அமைக்க இருக்கிறது. சென்னை அருங்காட்சியகத்தில் உள்ள வசதிகளைப் பெருக்குவதற்கான திட்டங்களும் அவ்வாண்டு மேற்கொள்ளப்படும்.

(iii) பொது நூலகங்கள்

12. கன்னிமாரா பொது நூலகம் மாநிலத்தின் மைய நூலகமாகும். அதில் 3 இலட்சம் புத்தகங்கள் உள்ளன. உறுப்பினர்கள் 10,000 பேராவர். புதுக்கோட்டை, கன்னியாகுமரி மாவட்டங்கள் தவிர பிற மாவட்டங்களில் மாவட்டத்திற்கு ஒரு நூலகம் வீதம் தற்போது 13 மாவட்ட மைய நூலகங்கள் உள்ளன. 1,442 கிளை நூலகங்களும் உள்ளன. புதுக்கோட்டை மாவட்டத்திற்கு நூலக ஆணைக் குழு அமைக்கப்பட வேண்டியுள்ளது. பொது நூல் நிலையச் சட்டம் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு இன்னும் விரிவாக்கப்படவில்லை. ஏறக்குறைய 3,000 பேர் இந் நூலகங்களில் பணி புரிகின்றனர். இந்நூல் நிலையங்கள் அனைத்திலும் உள்ள புத்தகங்களின் மொத்த எண்ணிக்கை 61 லட்சம். இவையனைத்தின் உறுப்பினர்களும் மொத்தம் 7 லட்சம் பேர்கள். உறுப்பினர்களல்லாதவர்களும் நூல் நிலையங்களுக்குச் சென்று அங்குள்ள புத்தகங்களைப் பயன் படுத்தலாம். மாவட்ட நூலக ஆணைக் குழுக்கள், நடமாடும் நூலகங்கள் போன்ற சிறப்பான நூலகப் பணிகளையும் புகுத்தியுள்ளன.



1978 மார்ச் 15]

13. நூலக நிதியின் பெரும்பகுதி ரூபாய்க்கு 5 பைசா
வீதம் வீட்டுவரி, சொத்துவரி ஆகியவற்றின்மீது வசூலிக்
கப்படும் நூலக மேல் வரியைக் கொண்டதாகும். ஒவ்
வோர் ஆண்டும் மாவட்ட நூலக ஆணைக்குழுக்கள் ஏறத்
தாழ ரூ. 70 இலட்சம் முதல் ரூ. 80 இலட்சம் வரை நூலக
மேல் வரியாகப் பெறுகின்றன. சென்னை தவிர பிற மாவட்
டங்களில் உள்ள நூலக ஆணைக்குழுக்கள் நூலக மேல்வரி
மூலம் வசூலிக்கப்படும் தொகைக்குச் சமமான இணை மானி
யத்தையும் அரசிடமிருந்து பெறுகின்றன. 1973–74 ஆம்
ஆண்டிலிருந்து அத்தகைய இணை மானியத்தில் 25 விழுக்காடு
புத்தகங்களாகக் கொடுக்கப்படுகின்றது. இவ்வாறு
1977–78-ம் ஆண்டின் முதல் 9 மாதங்களில் கொடுத்த
புத்தகங்கள் 1,172 ; மொத்தம் கொடுத்த படிகள் 3,37,000;
செலவு ரூ. 25 இலட்சம். இது தவிர திட்டப் பணிகளின்
கீழ் துவங்கப்பட்ட நூலகங்களுக்காக அரசு தனி மானியம்
வழங்குகின்றது. 1973–74 ஆம் ஆண்டு முதல் திட்ட
மானியத்திலும் 50 விழுக்காடு புத்தகங்களாக வழங்கப்படு
கின்றது. 1978–79 ஆம் ஆண்டு பொது நூலகங்களுக்
காக ஆகும் மொத்தச் செலவு சுமார் ரூ. 132 இலட்சமாக
இருக்கும்.

14. 1972 ஆம் ஆண்டு ஆகஸ்டு முதல் நாளிலிருந்து
பொது நூலகங்களுக்காக தனி இயக்குநர் ஒருவர் நியமிக்
கப்பட்டுள்ளார். தமிழ் நாட்டில் நூலகப் பணியின் தற்
போதைய அமைப்பை ஆராய்ந்து அதன் சீரமைப்பு மற்றும்
மேம்பாட்டிற்கான வழிவகைகள் பற்றி ஆலோசனை கூற
ஐவர் குழு ஒன்றை அரசு அமைத்தது. அக் குழு
1974 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் அறிக்கையை அனுப்பி
யது. அக் குழுவின் பல்வேறு பரிந்துரைகளும் விரிவாக
ஆராயப்பட்டன. அதன் பரிந்துரைகளில் ஒன்றை ஏற்று,
1976 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திலிருந்து முழுநேர
மாவட்ட நூலக அலுவலர்கள் மாவட்டத்திற்கு ஒருவர்
தனியாக நியமிக்கப்பட்டுள்ளனர். தமிழ் நாட்டில் நூல்
நிலையப் பணியை முழுவதும் சீரமைத்திட வேறு சில பல
பரிந்துரைகளையும் அக் குழு அளித்துள்ளது. அவற்றை
நிறைவேற்ற 1948 ஆம் ஆண்டு ''தமிழ்நாடு பொது நூல
நிலைய சட்டத்திற்கு'' பல திருத்தங்களைச் செய்ய வேண்டி
யிருக்கும். அவைகள் ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன.

தஞ்சாவூர் சரசுவதி மகால் நூல் நிலையம்.

4. தஞ்சாவூர், மகாராஜா சரபோஜி சரசுவதி மகால்
நூல் நிலையம் மதிப்பு மிக்க கையெழுத்துப் பிரதிகளைக்
**கொண்ட முதன்மையான நூல் நிலையம். இதில் 30,317**

சமஸ்கிருத கையெழுத்துப் பிரதிகளும், 2,081 தமிழ்க் கையெழுத்துப் பிரதிகளும், 2,910 மராத்தி கையெழுத்துப் பிரதிகளும், 778 தெலுங்கு கையெழுத்துப் பிரதிகளும் உள்ளன. இவை தவிர சமஸ்கிருதத்தில் 6,682 புத்தகங்களும், தமிழில் 5,557 புத்தகங்களும், ஆங்கிலத்தில் 10,244 புத்தகங்களும், வேறு மொழிகளில் இன்னும் சில புத்தகங்களும் அந் நூல் நிலையத்தில் உள்ளன. அதன் முக்கிய அலுவல் அருங்கையெழுத்துப் பிரதிகளையும் புத்தகங்களையும் பாதுகாப்பதும், அவற்றை அட்டவணையிடுவதும் நன்முறையில் கையெழுத்துப் பிரதிகளை அச்சிட்டு வெளியிடுவதும் ஆகும்.

5. அண்மையில் இந்திய அரசுக் குழு ஒன்று அந் நூல் நிலையத்திற்குச் சென்று பார்வையிட்டு ஐந்தாவது, ஆறுவது திட்டக் காலங்களில் அந் நூல் நிலையத்தின் வளர்ச்சிப் பணிக்கான நிதித் தேவைகளை மதிப்பிட்டுள்ளது. அந் நூலகம் தீவிரமாகச் செயற்பட தாராளமான நிதி வசதி மைய அரசிடமிருந்து கிட்டும் என நம்பப்படுகிறது.

## (IV) தொல் பொருளியல்.

1. தொல் பொருள் ஆராய்ச்சித்துறை சீரான முறையில் செயலாற்றி வருகின்றது. அது தற்போது இம்மாநிலத்தின் முக்கியமான வரலாற்று நினைவுச் சின்னங்களை பாதுகாக்கிறது. தமிழ்நாட்டில் பல பகுதிகளில் உள்ள நினைவுச் சின்னங்களைப் புதுப்பித்துள்ளது. மதுரையில் உள்ள திருமலை நாயக்கர் அரண்மனை, தஞ்சையிலுள்ள நாயக்கர் அரண்மனை, பாஞ்சாலங்குறிச்சியிலுள்ள வீரபாண்டிய கட்டபொம்மனின் கோட்டைச் சின்னங்கள் போன்றவற்றை இத் துறை பாதுகாத்து வருகின்றது. இராமநாதபுரத்தில் உள்ள இராமலிங்க விலாஸ் கட்டிடமும் தரங்கம்பாடியிலுள்ள டேனிஷ் கோட்டையும் 1977-78-ல் பாதுகாப்பிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. இவ்விடங்களில் நிலையான அருங் காட்சியகங்கள் அமைக்கப்படும்.

2. ஆங்காங்கு பல ஊர்களிலும் சிதறிக் கிடக்கும் சிற்பங்களும் மதிப்பு மிக்க பழைய ஓலைச்சுவடிகளும் சேகரிக்கப்பட்டு பாதுகாக்கப்படும். 1977-78-ம் ஆண்டில் இதற்கான திட்டம் ஒன்று நான்கு மாவட்டங்களில் மேற்கொள்ளப்படும்.





3. இத்துறை ஊர் ஊராகச் சென்று கல்வெட்டுகளைப் பார்வையிட்டு அக் கல்வெட்டுகளுக்குப் படியெடுத்து அவற்றின் பொருளைத் தெளிவு படுத்தி இன்றைய எழுத்துக் களில் அவற்றை வெளியிடுகின்றது. இத்துறை கன்னியா குமரி, வட ஆர்க்காடு, தர்மபுரி மாவட்டங்களில் இப்பணி யை முடித்துள்ளது. கி.பி. 500 ஆம் ஆண்டுமுதல் இன்று வரையுள்ள காலப்பகுதியைச் சார்ந்தவையும் நடு கற்களில் உள்ளவையுமான 500 கல்வெட்டுகளை இத்துறை அச்சிட்டு வெளியிட்டுள்ளது. மேலும் இத்துறை ஊர்தோறும் கோவில்களில் உள்ள சிறப்பு வாய்ந்த வெண்கலச் சிலைகளை கணக்கெடுக்கும் பணியையும் செய்து வருகின்றது. கலைப் பொருட்களை நிழற்படமெடுத்து ஆவணம் செய்யும் முறை யும் கையாளப்படுகிறது.

4. இத்துறை தொன்மை வாய்ந்த இடங்களில் அகழ்ந்து பார்க்கும் பணியையும் செய்து வருகிறது. பாண்டியர் களின் பழந் துறைமுகமான கொற்கை, சேரர்களின் தொன் மையான தலைநகரமான கரூர், பாலாற்று முகப்புப் பகுதியில் ரோமானியர்கள் குடியேறி வாழ்ந்த வாசவ சமுத்திரம் போன்ற இடங்களில் இத்துறை அகழ்வாராய்ச்சி செய்து உள்ளது.

5. இத்துறைக்குச் சொந்தமான அச்சகம் ஒன்றும்— உள்ளது. அதனுடைய வெளியீடுகள் யாவையும் அந்த அச்சகத்திலேயே அச்சிடப்படுகின்றன. இதுவரை ஆங்கிலத் திலும், தமிழிலும் 50-க்கும் மேற்பட்ட நூல்கள் வெளிவந் துள்ளன. 1978-79-ல் இவ்வச்சகத்திற்கு புதிய அச்சுகள் வாங்கப்படும். அவ்வாண்டு ஒரு Xerox படி பெருக்கிப் பொறியும் வாங்கப்படும்.

6. இத்துறை தமிழ், சமஸ்கிருதம், வரலாறு, தொல் பொருளியல், இந்தியக் கலைகள், யாதேனுமொன்றில் எம்.ஏ. பட்டம் பெற்ற மாணவர்களுக்கு கலை மற்றும் கட்டிடக் கலை வரலாற்றைப் போதிப்பதுடன் கல்வெட்டுகளைப் படி எடுத் தல், அவற்றை ஆராய்தல் முதலிய தொழில் நுட்பப் பயிற்சி யும் அளிக்கின்றது. இதற்கு ஆண்டுதோறும் 8 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர்.

7. தொல் பொருள்கள் திருட்டுப் போவதைத் தடுக்கும வகையில், கடுமையாகக் கண்காணிக்கவும், விலை மதிப்பற்ற கலைக் கருவூலங்களை சட்ட விரோதமாக விற்று விடுவதைத தடுக்கவும், '' தொல் பொருள்கள் மற்றும் கலைக் கருவூலங் கள் சட்டம் '' என்ற சட்டம் ஒன்றினை மைய அரசு 1972-ல இயற்றியுள்ளது. 1976 ஆம் ஆண்டு ஏப்ரலிலிருநது இச

சட்டம் இந்தியா முழுவதும் அமுலுக்கு வந்தது. இத்திட்டத்
தின்கீழ் பதிவு அலுவலர்கள் எழுவர் பல்வேறு மாவட்டத்
தலைமையிடங்களில் பணிபுரிகின்றனர். அவர்கள் ஒவ்வொரு
வரிடமும் ஒன்று அல்லது இரண்டு மாவட்டங்கள் ஒப்படைக்
கப்பட்டுள்ளன. இப்பதிவுத் திட்டத்தின் செலவை
1—4—1976 முதல் மூன்றுண்டுகளுக்கு மைய அரசு ஏற்கும்.



# VII. தமிழ் வளர்ச்சி.

1978-79-ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் தமிழ் வளர்ச்சிக்காக ஒதுக்கியுள்ள தொகை ரூ. 66 இலட்சமாகும். இத்தொகையில் கல்லூரிகளில் தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்டு பயிலும் மாணவர்களுக்கான புத்தகப்படி வழங்கிட ரூ. 40 இலட்சம் செலவிடப்படும். கல்லூரி பாடப் புத்தகங்களைத் தமிழில் கொணர்வதற்காக ரூ. 10 இலட்சம் செலவிடப்படும். தமிழ் வளர்ச்சித் துறைக்காகவும் அதன் செயற்பாடுகளுக்காகவும் ரூ. 12 இலட்சம் செலவிடப்படும். வேறு சில காரியங்களுக்காக ரூ. 4 இலட்சம் செலவிடப்படும்.

### தமிழ் வளர்ச்சி இயக்கம்.

2. அனைத்து நிலைகளிலும் தமிழை ஆட்சி மொழியாகக் கொள்ளும் திட்டத்தினை முழு முனைப்புடன் நடைமுறைப் படுத்தப்பட வேண்டுமென்பதில் அரசு ஆவல் கொண்டுள்ளது. சட்டங்கள், விதித் தொகுப்புகள், நடைமுறை நூல்கள் ஆகியவற்றின் மொழி பெயர்ப்புப் பணிகள் துரிதமாக நடந்து வருகின்றன. அரசுத் துறைகள் பயன்படுத்திட ஆட்சிச் சொல்லகராதியும், சிறப்புச் சொல்லகராதிகளும் தொகுக்கப்பட்டு வெளியிடப்பட்டு வருகின்றன. தமிழை ஆட்சி மொழியாகக் கொள்வதில் ஏற்படும் முன்னேற்றத்தை ஆய்வு செய்திட தனி ஆய்வுப் பணியாளர்கள் அமர்த்தப் பட்டுள்ளனர். 1867-ஆம் ஆண்டு முதல் வெளியிடப்பெற்ற தமிழ் நூல்களுக்கான விவர அட்டவணை ஒன்று தொகுக்கப் பட்டு வருகின்றது. 1867 முதல் 1910 ஆம் ஆண்டு வரையிலான காலத்திற்கு எட்டு தொகுதிகள் ஏற்கெனவே வெளியிடப்பட்டுள்ளன. எஞ்சிய தொகுதிகளுக்கான பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

3. ஆதாரபூர்வமான தமிழ்நாட்டு வரலாற்றினை எழுதுவதற்கான வல்லுநர் குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது. ஆறு தொகுதிகளுடைய இவ்வரலாற்றில் இரண்டு தொகுதிகள் முடிக்கப் பெற்றுள்ளன. தொல் பழங்காலத்தைப் பற்றிய முதல் தொகுதியானது ஏற்கெனவே வெளியிடப் பட்டுள்ளது; சங்க காலம் பற்றிய இரண்டாவது தொகுதி விரைவில் வெளியிடப்படும். தமிழில் மூல நூல்களை ஆக்கி வெளியிடும் ஆசிரியர்களுக்கு நிதி உதவி அளிப்பதற்கான திட்டத்தையும் தமிழ் வளர்ச்சித் துறை செயல்படுத்தி வருகிறது.

4. பிற மாநிலங்களிலுள்ள பல்வேறு பல்கலைக் கழகங்களும் வேறு நிறுவனங்களும் தமிழ்ப் பேராசிரியர் பதவிகளை ஏற்படுத்துவதற்கும், தமிழில் ஆராய்ச்சிப் பணிகளை மேற்கொள்வதற்கும் தமிழில் பகுதி நேரப் பட்டயப்படிப்பு வகுப்புகளை நடத்துவதற்கும் இவ்வரசு தாராளமாக நிதி உதவி செய்து வருகிறது. தமிழில் வகுப்புகள் தொடங்குவது குறித்து பல பல்கலைக் கழகங்களின் இசைவு கோரப்பட்டு உள்ளது. அவற்றிடமிருந்து பதில் வந்ததும் மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

5. பிற மொழி நூல்களில் சிறந்தவற்றை தமிழில் வெளியிடுவதற்கும், அரிய தமிழ் இலக்கியங்களைப் பிற மொழிகளில் வெளியிடுவதற்கும் ஒரு திட்டத்தைச் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதற்காக ஒரு குழு அமைக்கப்படுகிறது. தமிழ் வளர்ச்சி இயக்குநர் அதன் தலைவர். உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத் தலைவர், சென்னை பல்கலைக் கழகத் தமிழ்த் துறைத் தலைவர், ஆட்சி மொழிக் குழுவின் தலைவர், சாகித்ய அகாடெமியின் மண்டலத் தலைவர் ஆகியோர் இக்குழுவின் உறுப்பினராக இருப்பர். இக்குழு முதலில் இத்துறையில் இதுவரை இவ்வாறு வெளி வந்துள்ள மொழிபெயர்ப்பு நூல்களைப் பற்றிய விவரங்களைத் தொகுத்து, இனிமேல் ஆற்ற வேண்டிய பணி குறித்து முடிவு செய்யும். கவனமான ஆய்வுக்குப் பின் எந்தெந்த நூல்களை இந்த மொழிப் பெயர்ப்புப் பணிக்கு எடுத்துக் கொள்ளலாம் என்பது குறித்து முடிவு செய்து, அவற்றைத் தமிழ் நாட்டுப் பாட நூல் நிறுவனம் மூலமாக வெளியிடும்.

6. வறுமையில் வாடும் தமிழறிஞர்களுக்கு மாதம் ரூ. 100 வீதம் ஓய்வூதியம் வழங்குவதற்கான திட்டம் ஒன்று 1978 சனவரியில் தொடங்கப்பட்டது. மாத வருமானம் 150-க்கு மேல் இல்லாமல் இருக்கிற தமிழ் அறிஞர்களுக்கு இந்த ஓய்வூதியம் கிட்டும். 1977-78 ஆம் ஆண்டுக்கு இந்த ஓய்வூதியம் 50 பேருக்கு வழங்கப்படும். ஐந்து பேருக்கு 15-1-1978 திருவள்ளுவர் நாள் முதல் இந்த ஓய்வு ஊதியம் ஏற்கெனவே வழங்கப்பட்டு வருகிறது. தமிழ் மொழிக்கும் இலக்கியத்துக்கும் அரும் பணியாற்றியுள்ள அறிஞர்களுக்கும், அத்தகையோர் தங்கள் குடும்பங்களை வறுமை நிலையில் விட்டு விட்டு மாண்டு போய் இருந்தால் அக்குடும்பங்களுக்கும் இந்த ஓய்வூதியம் தரப்படும். ஓய்வூதியம் தரத் தகுதி வாய்ந்தவர்களை வல்லுநர் குழு ஒன்று தேர்ந்தெடுக்கிறது. ஓய்வூதியம் முதலில் மூன்று ஆண்டுகளுக்குத்



தரப்படுகிறது. மூன்றாண்டு, மூன்றாண்டாகப் புதுப்பித்துக் கொள்ளவும் வகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தை தமிழ்வளர்ச்சி இயக்குநர் செயல்படுத்தி வருகிறார்.

7. கம்பர், வள்ளலார் போன்ற தமிழினச் சான்றோர்களுக்கு நினைவுச் சின்னமாய், சென்னையில் தமிழ்ப்பண்பாட்டு மைய நிலையம் ஒன்றை ஏற்படுத்த அரசு முடிவு செய்து உள்ளது. இந்த நிலையத்தில் நூலக, படிப்பக வசதிகளும், காட்சிப் பொருள்களுக்கான இடங்களும் பட அரங்கமும், அமைக்கப்படும்.

8. இஸ்லாமியத் தமிழ் இலக்கியத்திற்காக, உமறுப் புலவர் பெயரில் மதுரைப் பல்கலைக் கழகத்தில் பேராசிரியர் பதவி ஏற்படுத்த இரண்டு இலட்சம் ரூபாய் மானியம் தரப்பட்டிருக்கிறது.

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலி.

9. தமிழிலும், திராவிட மொழிகளிலும் சிறந்த அறிஞராகவும், செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்குநராகவும் உள்ள திரு. ஞா. தேவநேயப் பாவாணர் அவர்கள் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலியை தொகுக்கும் பணியில் முனைப்புடன் ஈடுபட்டுள்ளார். அவ்வகரமுதலி முழு விரிவு வாய்ந்ததாகவும், திட்டவட்டமானதாகவும் அமையும். அது சுமார் 12 தொகுதிகளாக வெளிவரும். முதல் தொகுதி 1978-ம் ஆண்டு இறுதிக்குள் வெளிவரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம்.

10. உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் 1970 ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் நிறுவப்பட்டது. தமிழ் ஆராய்ச்சியில் பற்றுள்ள உலக அறிஞர்களின் ஒத்துழைப்புடன், தமிழ்த் துறையிலும் தொடர்புள்ள பிற துறைகளிலும் ஆராய்ச்சியை வளர்ப்பதே இதன் நோக்கமாகும். 1972 ஆம் ஆண்டிலிருந்து இந்நிலையம் தமிழ் ஆராய்ச்சி பற்றிய அரையாண்டு ஆராய்ச்சி இதழ் ஒன்றை வெளியிட்டு வருகின்றது. உலக நாடுகளில் உள்ள அறிஞர்கள் பலர் எழுதும் கட்டுரைகள் அவ்விதழில் இடம் பெறுகின்றன. ஆராய்ச்சிக்குப் பயன்படும் வகையில் சிறந்த நூலகம் ஒன்று இந்நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ளது. யுனெஸ்கோ கொடையாக அளித்துள்ள காட்சி கேள்விச் சாதனத்தின்

உதவியுடன், மொழிப் பயிற்சிக் கூடத்தின் உதவியைக் கொண்டும் வெளி நாட்டு மாணவர்களுக்கு இந்நிலையம் சிறப்கான முறையில் தமிழ் கற்றுத் தருகிறது. இதுவரை இந் நிறுவனம் 12 நூல்களை வெளியிட்டுள்ளது. தமிழ் இலக்கியத்தில் இலக்கியக் கொள்கைகள் பற்றிய விரிவுரைகளை இந் நிறுவனம் மாதந்தோறும் நடத்தி வருகிறது. அண்மையில் சில ஆண்டுகளாக இந்நிலையம் தமிழ்நாடு அரசிடமிருந்து ஆண்டு தோறும் மூன்று இலட்சம் ரூபாய்கள் அளவில் மானியம் பெற்று வருகின்றது. தற்போது இந்நிறுவனம், அடையாறு மத்தியப் பல்தொழிற் பயிற்சி நிலையக் கட்டிடத்தில் அமைந்து உள்ளது. இந்நிறுவனத்திற்கு நிலையான கட்டடம் ஒன்றைக் கட்டுவதற்காக தற்போது இந்நிறுவனம் இருக்கும் இடத்திற்கு அருகில் ஆறு ஏக்கர் நிலத்தை அரசு ஒதுக்கி உள்ளது.



## இணைப்பு I.

பள்ளிக் கல்வி பற்றிய விவரங்கள்.

(சிறுவர், சிறுமியர் எண்ணிக்கை இலட்சத்தில்.)

| (1) | 1965–66 (மூன்றாவது திட்ட முடிவு). (2) | 1968–69 (ஆண்டுத் திட்டங்கள் முடிவு). (3) | 1973–74 (நான்காவது திட்ட முடிவு). (4) | 1976–77. (5) | 1977–78. (6) |
|---|---|---|---|---|---|
| அ. வெவ்வேறு வயதுத் தொகுதிச் சிறார் மொத்த எண்ணிக்கை— | | | | | |
| வயதுத் தொகுதி 6–11 — | | | | | |
| சிறுவர் .. .. | 25.85 | 26.79 | 30.45 | 31.93 | 32.39 |
| சிறுமியர் .. .. | 25.64 | 26.58 | 29.79 | 31.23 | 31.68 |
| மொத்தம் .. | 51.49 | 53.37 | 60.24 | 63.16 | 64·07 |

இணைப்பு 1—தொடர்ச்சி.

பள்ளிக் கல்வி பற்றிய புள்ளி விவரங்கள்—தொடர்ச்சி.

| (1) | 1965–66 (மூன்றாவது திட்ட முடிவு). (2) | 1968–69 (ஆண்டுத் திட்டங்கள். முடிவு). (3) | 1973–74 (நான்காவது திட்ட முடிவு). (4) | 1976–77. (5) | 1977–78. (6) |
|---|---|---|---|---|---|
| | (சிறுவர், சிறுமியர் எண்ணிக்கை இலட்சத்தில்) | | | | |
| வயதுத் தொகுதி 11–14— | | | | | |
| சிறுவர் .. .. | 11.31 | 11.72 | 13.71 | 14.37 | 14.58 |
| சிறுமியர் .. .. | 11.23 | 11.63 | 13.40 | 14.05 | 14.25 |
| மொத்தம் | 22.54 | 23.35 | 27.11 | 28.42 | 28.83 |
| வயதுத் தொகுதி 14–17— | | | | | |
| சிறுவர் .. .. | 9.33 | 9.67 | 11.31 | 11.86 | 12.03 |
| சிறுமியர் .. .. | 9.26 | 9.60 | 11.07 | 11.60 | 11.77 |
| மொத்தம் .. | 18.59 | 19.27 | 22.38 | 23.46 | 23.80 |



| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஆ. பள்ளிகளில் சேர்க்கப்பட்டோர் எண்ணிக்கை— | | | | | |
| வயதுத் தொகுதி 6–11— | | | | | |
| சிறுவர் .. .. | 26.37 | 28.22 | 30.64 | 32.02 | 33.11 |
| சிறுமியர் .. .. | 18.74 | 20.96 | 23.74 | 25.50 | 26.74 |
| மொத்தம் .. | 45.11 | 49.18 | 54.38 | 57.52 | 59.85 |
| வயதுத் தொகுதி 11–14— | | | | | |
| சிறுவர் .. .. | 7.21 | 8.00 | 9.10 | 9.74 | 10.26 |
| சிறுமியர் .. .. | 3.45 | 4.28 | 5.09 | 5.76 | 6.12 |
| மொத்தம் .. | 10.66 | 12.28 | 14.19 | 15.50 | 16.38 |
| வயதுத் தொகுதி 14–17 — | | | | | |
| சிறுவர் .. .. | 3.86 | 4.30 | 4.97 | 5.34 | 5.24 |
| சிறுமியர் .. .. | 1.65 | 2.07 | 2.42 | 2.68 | 2.69 |
| மொத்தம் .. | 5.51 | 6.37 | 7.39 | 8.02 | 7.93 |

## இணைப்பு—தொடர்ச்சி.

### பள்ளிக் கல்வி பற்றிய புள்ளி விவரங்கள்—தொடர்ச்சி.

| | 1965–66 (மூன்றாவது திட்ட முடிவு.) | 1968–69 (ஆண்டுத் திட்டங்கள். முடிவு.) | 1973–74 (நான்காவது திட்ட முடிவு.) | 1976–77 | 1977–78 |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| இ. பள்ளியில் சேர்க்கப்பட்டோர் | | | | | |
| சதவீதம்— | | | | | |
| 6 முதல் 11 தொகுதி— | | | | | |
| சிறுவர் .. .. | 102.03 | 105.34 | 100.6 | 100.3 | 102.2 |
| சிறுமியர் .. .. | 73.08 | 78.85 | 79.6 | 81.7 | 84.4 |
| மொத்தம் .. | 87.61 | 92.15 | 90.2 | 91.7 | 93.4 |
| 11 முதல் 14 தொகுதி— | | | | | |
| சிறுவர் .. .. | 63.78 | 68.23 | 66.3 | 67.7 | 70.3 |
| சிறுமியர் .. .. | 30.72 | 36.79 | 37.9 | 41.0 | 42.9 |
| மொத்தம் .. | 47.31 | 52.57 | 52.3 | 54.4 | 56.8 |
| 14 முதல் 17 தொகுதி— | | | | | |
| சிறுவர் .. .. | 41.38 | 44.48 | 43.0 | 44.9 | 13.7 |
| சிறுமியர் .. .. | 17.83 | 21.52 | 21.8 | 23.1 | 22.9 |
| மொத்தம் .. | 29.65 | 33.05 | 33.0 | 34.1 | 33.4 |
| ஈ. பள்ளிகளின் எண்ணிக்கை— | | | | | |
| தொடக்கப் பள்ளிகள் .. | 24,641 | 25,694 | 26,726 | 27,306 | 27,395 |
| உயர் தொடக்கப் பள்ளிகள் .. | 6,065 | 6,018 | 5,773 | [illegible] | 5,709 |

இணைப்பு—தொடர்ச்சி.

பள்ளிக் கல்வி பற்றிய புள்ளி விவரங்கள்—தொடர்ச்சி.

| (1) | 1965-66 (மூன்றாவது திட்ட முடிவு.) (2) | 1968-69 (ஆண்டுத் திட்டங்கள். முடிவு.) (3) | 1973-74 (நான்காவது திட்ட முடிவு.) (4) | 1976-77 (5) | 1977-78 (6) |
|---|---|---|---|---|---|
| உயர்நிலைப் பள்ளிகள் (மெட்ரிகுலேஷன் பள்ளிகள், மைய அரசுப் பள்ளிகள் உட்பட) ... | 2,234 | 2,513 | 2,823 | 3,03[illegible] | [illegible],058 |
| | 32,940 | 34,225 | 35,322 | 36,066 | 36,162 |



| | | | | | |
|---|---|---|---|---|---|
| உ. ஆசிரியர்களின் எண்ணிக்கை— | | | | | |
| தொடக்கப் பள்ளிகள் | 88,173 | 91,918 | 1,06,332 | 1,11,033 | 1,11,184 |
| உயர் தொடக்கப் பள்ளிகள் | 59,943 | 62,222 | 66,843 | 67,846 | 68,794 |
| உயர் நிலைப்பள்ளிகள் .. | 48,574 | 54,857 | 65,959 | 72,838 | 73,039 |
| மொத்தம் .. | 1,96,690 | 2,08,997 | 2,39,134 | 2,51,717 | 2,53,017 |
| ஊ. ஆசிரியர்—மாணவர் விகிதம்—(ஆகஸ்டு முதல் நாள் உள்ளபடி)— | | | | | |
| (1) பள்ளி வாரியாக (சிறப்பு ஆசிரியர்களையும் ஆசிரியர் தொகையில் சேர்த்து)— | | | | | |
| தொடக்கப் பள்ளிகள் | 27 | 36 | 35 | 36 | 37 |
| உயர் தொடக்கப்பள்ளிகள் | 35 | 33 | 33 | 33 | 33 |
| உயர் நிலைப் பள்ளிகள் .. | 31 | 26 | 24 | 24 | 24 |

இணைப்பு—தொடர்ச்சி.

பள்ளிக் கல்வி பற்றிய புள்ளி விவரங்கள்—தொடர்ச்சி.

| (1) | 1965-66 (மூன்றாவது திட்ட முடிவு.) (2) | 1965-66 (ஆண்டுத் திட்டங்கள். முடிவு.) (3) | 1973-74 (நான்காவது திட்ட முடிவு.) (4) | 1976-77 (5) | 1977–78 (6) |
|---|---|---|---|---|---|
| (2) வகுப்புத் தொகுதி வாரியாக (சிறப்பு ஆசிரியர்களை, ஆசிரியர் தொகுதியிலிருந்து நீக்கி)— | | | | | |
| தொடக்கப் பள்ளி வகுப்புத் தொகுதி .. | 37 | 37 | 37 | 36 | 37 |
| உயர் தொடக்க நிலை வகுப்பு தொகுதி .. | 32 | 33 | 33 | 33 | 33 |
| உயர்நிலைப் பள்ளி வகுப்பு தொகுதி .. .. | 32 | 32 | 29 | 30 | 27 |



இணைப்பு இரண்டு

கல்லூரிக் கல்வி புள்ளி விவரங்கள்.

| விவரங்கள். (1) | 1965-66 மூன்றாவது திட்ட முடிவு. (2) மார்ச். 1966. | (3) அக்டோபர். 1966. | 1968-69 ஆண்டுத் திட்டங்கள் முடிவு. (4) ஏப்ரல். 1968. | (5) அக்டோபர். 1968. |
|---|---|---|---|---|
| 1. எஸ். எஸ். எல். சி. எழுதிய மாணவர் எண்ணிக்கை | 1,46,592 | 31,327 | 1,96,272 | 57,374 |
| 2. அவர்களுள் தேறியோர் எண்ணிக்கை | 75,270 | 8,128 | 98,181 | 11,004 |
| 3. கல்லூரிப் படிப்புக்கு சென்ற மாணவர்கள். | 39,507 | | 59,743 | |
| 4. மொத்த மாணவர் எண்ணிக்கை— | | | | |
| (1) புகுமுக வகுப்பு .. | | 39,507 | | 59,743 |
| (2) பி.ஏ. .. | | 11,349 | | 28,016 |

| | | |
|---|---|---|
| (3) பி.எஸ்.சி. .. | 22,381 | 33,576 |
| (4) பி. காம். .. | 3,050 | 4,556 |
| (5) பட்ட மேற்படிப்பு | 2,607 | 3,624 |
| | 78,894 | 1,29,515 |
| 5. ஆசிரியர்களின் எண்ணிக்கை— | | |
| (1) அரசுக் கல்லூரிகள் | .. | 1,509 |
| (2) தனியார் கல்லூரிகள். | .. | 5,071 |
| | 4,932 | 6,580 |
| 6. கல்லூரிகள் எண்ணிக்கை— | | |
| (1) அரசு .. | 21 | 33 |
| (2) தனியார் | 71 | 93 |
| | 92 | 126 |



## இணைப்பு இரண்டு—தொடர்ச்சி.

### கல்லூரிக் கல்வி—புள்ளி விவரங்கள்—தொடர்ச்சி.

| விவரங்கள். | 1973-74 நான்காவது திட்ட முடிவு. | | 1976-77. | | 1977-78, | |
|---|---|---|---|---|---|---|
| (1) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) |
| | மார்ச். 1973. | அக். 1973. | மார்ச். 1976. | அக். 1976. | மார்ச். 1977. | அக். 1977. |
| 1. எஸ். எஸ். எல். சி. எழுதிய மாணவர் எண்ணிக்கை. | 1,93,686 | 30,361 | 2,25,971 | 25,301 | 2,85,298 | 50,529 |
| 2. அவர்களுள் தேறியோர் எண்ணிக்கை. | 96,903 | 5,367 | 1,30,874 | 6,738 | 1,43,731 | 6,956 |
| 3. கல்லூரிப் படிப்புக்கு சென்ற மாணவர்கள். | 72,646 | | 84,257 | | 89,423 | |
| 4. மொத்த மாணவர் எண்ணிக்கை— | | | | | | |
| (1) புகுமுக வகுப்பு.. | 72,646 | | 84,257 | | 89,423 | |
| (2) பி.ஏ. .. | 51,698 | | 44,697 | | 43,077 | |

| | | | |
|---|---|---|---|
| (3) பி. எஸ். சி. .. | 49,057 | 48,110 | 48,948 |
| (4) பி. காம். .. | 14,859 | 19,195 | 20,451 |
| (5) பட்ட மேற்படிப்பு. | 6,993 | 7,043 | 7,012 |
| | 1,95,253 | 2,03,302 | 2,08,911 |
| 5. ஆசிரியர்களின் எண்ணிக்கை— | | | |
| (1) அரசுக் கல்லூரிகள். | 2,969 | 3,733 | 3,812 |
| (2) தனியார் கல்லூரிகள். | 7,090 | 7,883 | 8,394 |
| | 10,059 | 11,616 | 12,206 |
| 6. கல்லூரிகள் எண்ணிக்கை.— | | | |
| (1) அரசு .. | 51 | 51 | 51 |
| (2) தனியார் . | 127 | 138 | 137 |
| | 178 | 189 | 188 |



## இணைப்பு 3

தொழில் நுட்பக் கல்வி —புள்ளி விவரங்கள்.

| (1) | 1965–66 (மூன்றாவது திட்ட முடிவு). (2) | 1968–69 (ஆண்டுத் திட்ட கால முடிவு). (3) | 1973–74 (நான்காவது திட்ட முடிவு). (4) | 1976–77. (5) | 1977–78, (6) |
|---|---|---|---|---|---|
| (அ) பொறியியற் கல்லூரிகள் எண்ணிக்கை— | | | | | |
| (1) அரசு .. | 3 | 4 | 4 | 4 | 4 |
| (2) தனியார் .. .. .. | 4 | 3 | 3 | 3 | 3 |
| (3) தன்னுரிமையுள்ளவை .. | 5 | 5 | 5 | 5 | 5 |
| மொத்தம் .. | 12 | 12 | 12 | 12 | 12 |
| (ஆ) பல்தொழிற் பயிலகங்கள் எண்ணிக்கை.— | | | | | |
| (1) அரசு .. .. .. | 16 | 16 | 19* | 19* | 19* |
| (2) தனியார் .. .. .. | 18 | 18 | 19 | 19 | 19 |
| (3) தன்னுரிமையுள்ளவை .. | 1 | 1 | 1 | 1 | 1 |
| மொத்தம் .. | 35 | 35 | 39 | 39 | 39 |

*கலை—தொழில் நுணுக்கக் கல்வி நிலையங்கள் மூன்றையும் சேர்த்து.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (இ) தொழில் நுட்ப உயர்நிலைப் பள்ளிகள்— | | | | | |
| (1) அரசு .. .. | 11 | 11 | 11 | 11 | 11 |
| (2) தனியார் .. .. | 4 | 4 | 3 | 3 | 3 |
| மொத்தம் .. | 15 | 15 | 14 | 14 | 14 |
| (உ) ஆசிரியர்கள் எண்ணிக்கை— | | | | | |
| (1) பொறியியற் கல்லூரிகள் .. | .. | .. | .. | 741 | 749 |
| (2) பல்தொழில்நுட்பப் பயிலகங்கள் .. | .. | .. | .. | 1,134 | 1,184 |
| (3) தொழில் நுட்ப உயர்நிலைப் பள்ளிகள். | .. | .. | .. | 103 | 103 |
| மொத்தம் .. | .. | .. | .. | 1,978 | 2,036 |
| (ஊ) மாணவர்கள் எண்ணிக்கை— | | | | | |
| (1) பொறியியற் கல்லூரிகள் .. | 5,289 | 7,163 | 6,796 | 7,885 | 7,964 |
| (2) பல்தொழில்நுட்பப் பயிலகங்கள் | 10,526 | 12,633 | 10,591 | 14,131 | 14,200 |
| (3) தொழில் நுட்ப உயர்நிலைப் பள்ளிகள். | 1,124 | 1,304 | 1,704 | 2,166 | 2,000 |
| மொத்தம் .. | 16,939 | 21,100 | 19,091 | 24,182 | 24,164 |

## தமிழ்நாடு சட்டமன்ற மேலவை.

—

**வியாழக்கிழமை, 1978 மார்ச் 16.**

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் முற்பகல் 10-30 மணியளவில் மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் (திரு. ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

### 1. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

*Ramanathapuram district.*

*175 Q.—THIRU V. THANGAPANDIAN: Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) whether the District Development Councils have passed and sent any resolution that the Ramanathapuram district be bifurcated into two revenue districts; and

(b) if so, the action taken thereon by the Government?

### இராமநாதபுரம் மாவட்டம்.

**திரு. வே. தங்கப்பாண்டியன்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தை இரண்டு வருவாய் மாவட்டங்களாகப் பிரிக்க வேண்டுமென்று மாவட்ட வளர்ச்சி மன்றக் குழுக்கள் தீர்மானம் நிறைவேற்றி அனுப்பியுள்ளனவா ?

(இ) ஆம் எனில், அரசு அதன் மீது எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு திரு. கி. மனோகரன்:** (அ) 1973-ம் ஆண்டு அக்டோபர் மாதம் -ந் தேதியன்று நடைபெற்ற மேற்கு இராமநாதபுரம் மாவட்ட அபிவிருத்தி மன்றக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் எண் 13-ல் ஏற்கனவே '—6—1973-ந் தேதியன்று நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட -ம் நம்பர் தீர்மானத்தின்படி அருப்புக்கோட்டை தாலுக்காவையும்,

திருச்சுழி அல்லை தாலுக்காவையும் இணைத்து ஒரு புதிய வருவாய்க்
கோட்டத்தை உடனடியாக ஏற்படுத்தி, இந்த வருவாய்க் கோட்டத்தையும்
சிவகாசி வருவாய்க் கோட்டத்தையும் இணைத்து மேற்கு இராமநாதபுரம்
மாவட்டம் என்று பிரிக்கும்படி தமிழக அரசைக் கேட்டுக்கொள்ளத்
தீர்மானிக்கப்பட்டது.

(இ) இராமாதபுரம் மாவட்டத்தை இரண்டாகப் பிரிப்பது சம்பந்தமாக
நிர்வாகச் சீர்திருத்தக் குழு அனுப்பிய அறிக்கையும் மற்ற கோரிக்கைகளும்
அரசின் பரிசீலனையில் உள்ளன.

**திரு. வே. தங்கப்பாண்டியன் :** துணைத் தலைவர் அவர்களே, இந்தக்
கேள்வி பல முறை மேலவையிலும் பேரவையிலும் எழுப்பப்படுகிறது. அந்த
அளவுக்கு ஒரு ஜீவாதார மானப் பிரச்சினையாக இது இருக்கிறது. வசதியும்
நீண்ட நிலப்பரப்பும் கொண்ட மேற்கு முகவை மாவட்டத்தைப் பிரிக்க
வேண்டுமென்று மாண்புமிகு நிதியமைச்சரிடம் சொல்வதற்குக் காரணம்
அவர் கையில் வருவாயும் நிதியும் இருக்கிறது. மேற்கு முகவை மாவட்
டத்தைச் சேர்ந்த உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் இந்தக்
கருத்தைச் சட்ட மன்றத்தில் வலியுறுத்திப் பேசியிருக்கிறார்கள். விரைவில்
மேற்கு முகவை மாவட்டம் என்பதை ஏற்படுத்துவதற்கு அரசு ஆவன
செய்யுமா, அதற்கான செயற்குறிப்பு இருக்கிறதா என்பதை அறிய விரும்பு
கிறேன்.

**மாண்புமிகு திரு. கி. மனோகரன் :** கேள்வியிலேயே பதில் சொல்லியிருக்
கிறேன். இந்த அரசின் பரிசீலனையில் மற்ற கோரிக்கைகள் உள்ளன.

**திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர் :** தமிழகத்தில் உள்ள ஜில்லாக்களைப்
பிரிப்பது ஒவ்வொருவருக்கும் அவர்களுடைய கொள்கையாகவே ஆகிவிட்டது.
மேலும் இந்த இராமநாதபுரம் ஜில்லாவில் ரொம்ப வறட்சியால் வாடக் கூடிய
பகுதி கிழக்கு இராமநாதபுரம் என்பது நிதி அமைச்சருக்கும் மற்ற அமைச்சர்
களுக்கும் நன்றாகத் தெரியும். நான் ஆதார பூர்வமாகச் சொல்கிறேன்.
பண்டைய காலம் தொட்டு அந்தப் பகுதியில் உள்ள தொண்டி என்ற ஊரில்
துறைமுகம் ஏற்பட்டு வெளிநாடுகளுக்கெல்லாம் அங்கிருந்து கப்பல் போக்கு
வரத்து நடந்திருக்கிறது.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** ஆகவே அதை ஏற்படுத்தவா
என்று விரும்புகிறீர்கள். அவ்வளவுதானே ?





**திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர் :** நான் விரும்புவது மட்டுமல்ல.
அது சிலப்பதிகாரத்தில் இடம் பெற்ற துறைமுகம் என்பது தலைவர் அவர்
களுக்கும் தெரியும்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அதனுல் அதுபற்றிச் சொற்
பொழிவு ஆற்ற வேண்டுமா ?

**திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர் :** அந்தத் துறைமுகம் நமக்கு ரொம்ப
முக்கியம். ஒரு ஜில்லாவுக்கு ஒரு துறைமுகம் இருந்தால், அந்த இடம்
ஜில்லாத் தலைநகரமாக இருந்தால், அது போற்றத் தகுந்ததாக இருக்கும்
என்பதை எல்லோரும் அறிவார்கள். உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்
களுக்கும் இது நன்றாகத் தெரியும். மற்ற அமைச்சர்களுக்கும் நன்றாகத்
தெரியும். ஆகையால் தொண்டியை கிழக்கு இராமநாதபுரத்தின் தலைநகர
மாக ஆக்குவதைப் பற்றி நடவடிக்கை எடுப்பார்களா ?

**மாண்புமிகு திரு. கி. மனோகரன் :** தொண்டியைப் பற்றியும் கிழக்கு
இராமநாதபுரத்தின் வரலாற்றுச் சிறப்பைப் பற்றியும் விளக்கமாகக் கூறிய
திரு. தேவர் அவர்களுக்கு நன்றி சொல்லி நான் விடை பெறுகிறேன்.
(சிரிப்பு)

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** இராமநாதபுரம் மாவட்டத்தை இரண்டு
வருவாய் மாவட்டங்களாகப் பிரிக்கிற செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில்
இருப்பதாக நிதியமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஏற்கெனவே இராமநாத
புரம் மாவட்டத்தின் தலைநகரம் மதுரையில் இருக்கிறது. அது சிவகங்கையில்
இருக்க வேண்டுமென்று சிலரும் இராமநாதபுரத்திலேயே இருக்க வேண்டு
மென்று பலரும் கோரிக்கை விடுத்து, அந்தப் பிரச்சினை நீண்டகாலமாக இருக்
கிறது. அந்த வேண்டுகோள்கள் இன்னும் பரிசீலனை செய்யப்படவில்லை.
மதுரையில் உள்ள இராமநாதபுரம் மாவட்டத்தின் தலைமை இடத்தை வேறு
இடத்தில் அமைக்க அரசாங்கம் முடிவு எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. கி. மனோகரன் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி
அவர்கள் கேட்ட கேள்விக்கு நான் சில குறிப்புகளைத் தர விரும்புகிறேன்.
இந்த மாவட்டம் திருப்பத்தூர், திருவாடானை, சிவகங்கை, பரமக்குடி, முது
குளத்தூர், இராமநாதபுரம் ஆகிய வட்டங்களைக் கொண்டதாக இருக்கும்.
இது நான் குறிப்பிடுவது அல்ல. நிர்வாகச் சீர்திருத்தக் குழு அதனுடைய
சிறப்பு அறிக்கையில் பரிந்துரை செய்தது. இதன் தலைநகரத்தைப்பற்றி
ஒப்பிட்டு, பெருமளவில் மேம்பாடடைந்த மானாமதுரை, சிவகங்கை ஆகியவற்
றினை உருவாக்க வேண்டியிருக்கும். மாவட்டத்தின் மற்ற பகுதியிலிருந்து
நல்ல சாலை வசதி, ரயில் வசதி இருப்பதால், இந்தப் பகுதி அந்த மாவட்டத்

தின் தலைமை இடமாவதற்குச் சிறந்த இடமாக இருக்கும். தேவையான தண்ணீரை வைகை ஆற்றிலிருந்து எடுக்கலாம். சிவகங்கைக்கும் மானு மதுரைக்கும் தொலைவு 10 மைல் என்பதால், புதிய தலைமை இடமாக இரண்டு நகரங்களும் காலப்போக்கில் பரந்த நகரமாக மனப்பாங்கு பெறும். 7,632 சதுர கிலோ மீட்டர் பரப்பும் 17.48 லட்சம் மக்களைக் கொண்டதாகவும் 21 ஊராட்சி ஒன்றியங்களைக் கொண்டதாகவும் அமையும். இராமநாதபுரம் நகரம் எந்த முக்கியத்துவமும் இல்லாத ஒன்று. நான் சொல்லவில்லை. பரிந் துரைதான் அது. மேலும் ஜமீன் ஒழிப்பிற்குப் பின்னால் அந்தப் பகுதியில் எந்தச் சிறப்பும் இல்லை. கன்னியாகுமரி மாவட்டத்தைப் போல புகழ்பெற்ற புண்ணிய ஸ்தலம் என்பதால் இராமேஸ்வரம் என்று பெயரிடுவது பொருத்த முடையது. இராமநாதபுரம் என்று பெயர் வைக்கக் கூடாது என்று சிலரும் சிவகங்கை மகாராஜா இருந்த காரணத்தால் அந்த வரலாற்றுச் சிறப்பின் அடிப் படையில் இராமநாதபுரம் என்று பெயர் வைக்க வேண்டுமென்று சிலரும் இப்படி இந்தக் கோரிக்கை வளர்ந்து அரசியல் கட்சிகளிடையே ஏற்படுகிற கோரிக்கையாக உருப்பெற்றுவிடக்கூடாது என்ற அச்சம் அரசிற்கு இருக் கிறது. ஆகவே இது குறித்து முடிவு எடுப்பதற்கு முன்பு அங்குள்ள மக்களின் கருத்துக்களை, அரசியல் கட்சிகளின் கருத்துக்களை, அந்த ஊரிலுள்ள பெரியவர் களின் கருத்துக்களை அறிய வேண்டியிருக்கிறது. இது உணர்வு பூர்வமான பிரச்சினை என்பதனால் சொல்கிறேன், அவற்றை அறிந்து தெரிந்ததற்குப் பிறகு, பெயர் வைப்பதில் அரசு முடிவு செய்யும். அவசரப்பட்டு எங்களை இதில் இறங்கி விடுவதற்கு திரு. வீராசாமி அவர்கள் தூண்டக்கூடாது.

*House Rent Allowance and City Compensatory Allowance.*

* 176 Q.—Thiru P. R. THOMAS: Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) whether it is fact that Therkutheru village comes within the Madurai City limits for the purposes of House Rent Allowance and City Compensatory Allowance; and

(b) if so, the reasons for not making payment of these allowances to the Government school teachers and Government employees residing in that village?

**வீட்டு வாடகைப் படி, நகர ஈட்டுப் படி.**

**திரு. பி. ஆர். தாமஸ்** : மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) வீட்டு வாடகைப்படி, நகர ஈட்டுப்படி ஆகியவை வழங்கப் பெறத் தகுதி உள்ளதாகும் வகையில், தெற்குத் தெரு கிராமம், மதுரை மாநகர எல்லைக்குள் வருகின்றது என்பது உண்மையா?



(இ) ஆமெனில், அக்கிராமத்தில் வசிக்கின்ற அரசுப் பள்ளி ஆசிரியர் களுக்கும் அரசுப் பணியாளர்களுக்கும் மேற்படி படிகள் வழங்கப் படாதிருப் பதன் காரணம் என்ன?

**மாண்புமிகு திரு. கி. மனோகரன்** : (அ) இல்லை. மதுரை மாநகரிலும் மதுரை மாநகர எல்லையிலிருந்து 16 கிலோ மீட்டர் சுற்று வட்டாரத்துக்குள் உள்ள பகுதிகளிலும் பணிபுரியும் அரசுப் பணியாளர்களுக்கு வீட்டு வாடகைப் படியும் நகர ஈட்டுப் படியும் வழங்கப்படுகின்றன. தெற்குத் தெரு கிராமம், மதுரை மாநகர எல்லையிலிருந்து 11 கிலோ மீட்டர் தொலைவுக்குள் அமைய வில்லை. ஆதலால் அக்கிராமத்தில் பணியாற்றும் அரசுப் பணியாளர்கள் மதுரை மாநகருக்குரிய விதங்களில் வீட்டு வாடகைப்படியும் நகர ஈட்டுப் படியும் பெறுவதற்கு உரிமையுடையவர்களாக மாட்டார்கள்.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை;

*Facilities for loan to Poor People.*

* 177 Q.—Thiru Ku. Ma. BALASUBRAMANIAM: Will the Hon. the Minister for Law be pleased to state—

(a) whether the Government are aware of the hardships encountered by the poor people in obtaining loans on pledge to meet their urgent need;

(b) if so, whether the Government have any proposal to make arrangements for easy availability of loans on pledge to poor people; and

(c) if so, the stage at which the matter now stands?

**ஏழை மக்களுக்கு கடன் வசதிகள்.**

**திரு. கு. மா. பாலசுப்பிரமணியம்** : மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ஏழை மக்கள் ஆபத்து அவசரத்துக்கு அடகுக் கடன் எளிதில் வாங்க முடியாத சங்கடம் ஏற்பட்டிருப்பதை அரசு அறியுமா?

(இ) ஆம் எனில், அவர்கள் எளிதில் அடகுக் கடன் பெறுவதற்கு ஏற் பாடு செய்யும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா?

(உ) ஆம் எனில், அது தற்பொழுது எந்நிலையில் உள்ளது?

The Hon. Thiru K. NARAYANASWAMY MUDALIYAR: Mr. Deputy Chairman, Sir, (a) Yes.

(b) Government have already ordered that consumption credit may be issued by co-operative credit institutions to the public for the purposes of marriage, medical expenses and funeral, subject to certain limits. However, jewel-loans have been issued by 332 branches of the Central Co-operative Banks, 658 Agricultural Credit Co-operative Societies and 128 Co-operative Urban Banks. The individual maximum borrowing limit has been fixed at Rs. 2,000 in respect of loans on pledge of jewels and at Rs. 250 on personal surety for certain specific needs.

(c) Does not arise.

(முற்பகல் 10-40)

**திரு. கு. மா. பாலசுப்பிரமணியம் :** நான் இவ்வினுவினைக் கேட்ட நேரத்தில் அடகுக் கடைகள் நாடு முழுவதுமாகத் தடுக்கப்பட்டு செயல்படாமல் இருந்தன. ஆனால், இப்போது மீண்டும் அந்த அடகுக் கடைகள் ஆங்காங்கே திறக்கப்பட்டு பழையபடி நகைகளின்மீதும் மற்றும் ஓட்டை உடைசல் ரேடியோக்கள் மீதும் கூட கடன் கொடுக்கிற நிலைமை ஏற்பட்டுள்ளது. நான் இப்போது கேட்க விரும்புவது சட்டத்தின் அடிப்படையில்தான் இந்த அடகுக் கடைகள் ஏற்கனவே தடுக்கப்பட்டனவா, அல்லது இப்போது மீண்டும் நடக்கிற அடகுக்கடைகள் சட்டப்படி நடக்கின்றனவா என்பதுதான். அடுத்து, மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் கூட்டுறவு சொசைடிகள் மூலமாகக் கடன் கொடுக்க ஏற்பாடு செய்திருப்பதாகச் சொன்னுர்கள். அப்படிக் கடன் கொடுக்கும் கூட்டுறவு சொசைடிகளும் தனியார் அடகுக் கடைகளில் கொடுக்கும் அளவுக்கு தங்க நகைகள், வெள்ளிப் பாத்திரங்கள் ஆகியவை மீது கடன் கொடுப்பதில்லை. ஏறக்குறைய தற்போதைய விலைப்படி சவரன் ஒன்றுக்கு ரூ. 600 அல்லது ரூ. 500 என்றிருந்தாலும், தங்க நகைகளுக்கு சவரன் ஒன்றுக்கு ரூ. 200 விதம் கூட கடன் கொடுப்பதில்லை. எனவே, தங்க நகைகள், வெள்ளிப் பாத்திரங்கள் இல்லாத ஏழை ஜனங்கள் சாதாரணமாக உபயோகிக்கும் பித்தளைப் பாத்திரங்கள், பழைய சேலை போன்றவைகளைக்கூட அடகுக் கடைகள் வாங்கிக்கொண்டு அவற்றின்மீது கடன் கொடுத்து வந்தன. இது ஏழை எளியவர்களுக்கு மிகவும் உதவிகரமாக இருந்தன. எனவே, இதே முறையில் கூட்டுறவு சொசைடிகளிலும், பாங்குகளிலும் குறைந்த வட்டிக்குக் கடன் கொடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**The Hon. Thiru K. NARAYANASWAMY MUDALIYAR:** So far as the Banks are concerned, they are bound by the instructions of the Reserve Bank. The Reserve Bank of India has permitted only the Central Co-operative Banks, subject to certain terms and conditions, to issue loans directly to individuals against security of gold





or silver or jewels, not exceeding Rs. 2,000 for borrowing on pledge of jewels. In respect of loans on personal surety, to the tune of Rs. 250 it is granted.

**திரு. கு. மா. பாலசுப்பிரமணியம் :** சவரனுக்கு ரூ. 250 கடன் கொடுக்கவும் அனுமதி இடையாது. அதோடு தங்க நகைகளைப் பொறுத்தவரையில், 10 கிராம் எடையிருந்தால், அதில் ஒரு கிராம் தள்ளுபடி செய்து விடுகிறார்கள். கோவாப்பரேடிவ் சொசைடிகளிலும் சரி, பேங்குகளிலும் சரி, 10 கிராம் தங்க நகையில் ஒரு கிராம் எடையைத் தள்ளுபடி செய்துவிட்டு, மீதி உள்ளதற்கு ரூ. 25 'வேல்யு' போட்டு கடன் கொடுக்கிறார்கள். அதோடு ஒரு முறை ரூ. 200 கடன் வாங்க வேண்டுமென்றால், அதற்காக ரூ. 1—8—0 மெம்பர்ஷிப் பணம் கட்ட வேண்டும். மீண்டும் அடுத்த நாள் இன்னொரு செலவு ஏற்பட்டு கடன் வாங்க வேண்டுமென்றால், ஏற்கெனவே உள்ள முதல் கடனைக் கட்டி பொருளை மீட்டால்தான் அடுத்த லோன் வாங்கலாம் என்று விதியிருக்கிறது. நகை அடகுக் கடைக்காரர்களைப் பொறுத்தவரையில், தினமும் அவர்கள்—மார்வாடிகள்—அதிக அளவில் வட்டி வாங்கினாலும்கூட கொடுக் ஒரு பாத்திரத்தைக் கொண்டுபோய் அடகு வைத்தாலும் கடன் வாங்க கிறார்கள். எனவே, ஒரு கடன் இருக்கும்போது, மற்றொரு கடன் கஷ்டப்படுகிறார்கள். இதை முடியாதபடி இருக்கும் விதியினால் ஏழை மக்கள் மேற்கொள்ளுமா என்று அரசு அறியுமா? இதை மாற்ற அரசு நடவடிக்கை அறிய விரும்புகிறேன்.

**The Hon. Thiru K. NARAYANASWAMY MUDALIYAR:** Unless the Reserve Bank revises its directions and instructions, it may not be possible to give a very satisfactory answer to the supplementary question raised by the hon. Member. But, so far as the petitions from the poor people and certain sections of the community at large are concerned, Government are receiving some petitions in respect of the hardships faced by the borrowers although the Board of Revenue or the Collectors have not yet sent any reports.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும் போது, கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக கடன் வசதிக்கு ஏற்பாடு செய்யப்பட் டிருக்கிறது என்றும், ஒரு தனி நபருக்கு ரூ. 2,000-ம் அதிக பட்சமாக ரூ. 250 பர்சனல் ஷ்யூரிட்டி மீது கடனுகக் கொடுக்கப்படும் என்றும் உத்தர விடப்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். தமிழ் நாட்டில் எல்லா கூட்டுறவுச் சங்கங்களிலும் இந்தக் கடன் வசதி கிடைப்பதில்லை. எங்கெங்கே

தங்க நகைகள்மீது கடன் வாங்குவதற்கு வசதி இருக்கிறதோ அங்கே மட்டும் தான் இப்படிப்பட்ட வசதிகள் செய்யப்பட்டுள்ளன. ஆனால், தமிழ் நாட்டின் கிராமப் பகுதிகளில் உள்ள கூட்டுறவுச் சங்கங்களில் இப்படிப்பட்ட வசதிகள் இல்லை. எனவே, அப்படிப்பட்ட சங்கங்களிலும் நகைகளின்மீது கடன் வழங்க அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புவதோடு, இந்த ஆண்டு தங்க நகைகள் மீது கடன் வழங்குவதற்காக என்று அரசாங்கம் எவ்வளவு பணம் ஒதுக்கியிருக்கிறது என்பதையும் அறிய விரும்புகிறேன்.

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIYAR: So far as the first part of the question raised by the hon. Member is concerned, Government will consider it if a list containing the names of the Banks is furnished. So far as the second part of the question is concerned, a separate question may be put so that Government may compile and gather all the necessary material.

THIRU G. SWAMINATHAN: Sir, may I know whether the Government are contemplating a comprehensive legislation on this and if so, when the Bill is proposed to be moved?

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIYAR: I think it is under serious contemplation. A fairly comprehensive—I use the words 'fairly comprehensive'—Bill is under contemplation and it will be placed on the legislative council as early as possible.

திரு. எம். சங்கரலிங்கம்: கூட்டுறவு வங்கிகளில் மாத்திரம்தான் நகைகளுக்கு ஈட்டின்பேரில் கடன் கொடுக்கப்படுகிறது. கூட்டுறவுச் சங்கங்களில் இப்படிப்பட்ட கடன் கொடுக்கப்படுவதில்லை. அப்படி கூட்டுறவு வங்கிகளில் கடன் கொடுக்கும்போதுகூட ஒரு மாதத்திற்கு இவ்வளவு தொகை அங்கே 'டிரான்சாக்ட்' ஆகிறதென்றால், அதில் ஒரு 7 சதம் அல்லது 5 சதம் தான் இப்படிப்பட்ட நகைகளின் ஈட்டின்மீது கடன் கொடுக்கலாம் என்று குறியீடு வைத்திருக்கிறார்கள். இதன் காரணமாக கடன் பெறுகிறவர்கள் அதிக வட்டியைக் கொடுத்து கடன் பெறும் சூழ்நிலை மேலும் நிர்ப்பந்தப்படுத்தப்படுகிறது. எனவே, கடன் கொடுக்கும் எல்லை அளவை அரசு விரிவுபடுத்துவதற்கு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIYAR: This suggestion will be seriously considered by Government.**



*Financial assistance from People's Action for Development, India.*

* 178 Q.—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) whether the Government of India have written to the State Government to avail themselves of the financial assistance from the People's Action for Development-India (PADI), to promote voluntary action in rural and agricultural development; and

(b) if so, whether the Government have sent any proposals to the Government of India?

**இந்தியா—வளர்ச்சிக்கான மக்கள் நடவடிக்கை அமைப்பிடமிருந்து நிதியுதவி**

திரு. ஜி. சுவாமிநாதன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கிராம-வேளாண்மை வளர்ச்சியில் சுய முயற்சி மேம்பாட்டிற்காக இந்தியா-வளர்ச்சிக்கான மக்கள் நடவடிக்கை அமைப்பிடமிருந்து [People's Action for Development, India (PADI)] நிதியுதவியைப் பயன்படுத்திக் கொள்வது பற்றி மாநில அரசுக்கு மத்திய அரசு எழுத்து மூலம் தெரிவித்துள்ளதா?

(இ) ஆம் எனில், மத்திய அரசுக்கு செயற்குறிப்பு எதையேனும் அரசு அனுப்பியுள்ளதா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: (அ) ஆம்.

(இ) இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. ஜி. சுவாமிநாதன்: மத்திய அரசாங்கம் என்ன குறிப்புரையை மாநில அரசுக்கு அனுப்பியிருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: இந்த அமைப்பு பதிவு செய்யப்பட்ட பொது சேவை செய்யும் நிறுவனங்களின் விவசாய உற்பத்தியைப் பெருக்கும் கிராமப்புற மேம்பாட்டுத் திட்டங்களுக்கும் மற்றும் கிராமப்புற பின்தங்கிய மக்களின் பொருளாதாரத் தரத்தை உயர்த்தும் திட்டங்களுக்கும் உதவிகள் அளித்து வருகின்றது. இது தொடர்பாக இந்திய அரசின் வேளாண்மை மற்றும் பாசனத் துறை அமைச்சர் தமிழக முதல்வருக்கு 31—8—1977 தேதியிட்டு எழுதிய ஒரு நேர்முகக் கடிதத்தில் வெளிநாடுகளில் உள்ள பொதுச்

சங்கங்களும் நிறுவனங்களும் இதற்குத் தாராளமாக உதவி செய்து வருவதால், நம் நாட்டில் இதன் மூலம் நிறைவேற்றப்படவிருக்கும் கிராமப்புற மற்றும் வேளாண்மை மேம்பாட்டுத் திட்டங்களை நல்ல முறையில் நடத்துவதற்குப் பொருத்தமான பொது சேவை செய்யும் நிறுவனங்களைத் தேர்ந்தெடுப்பதே இந்தச் சங்கத்தின் முக்கிய நோக்கமாகும் என்று கூறியுள்ளார்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** எவ்வளவு உதவி எதிர்பார்க்கப்படுகிறது? பொதுச் சேவை சங்கங்கள் என்பவை எந்த அடிப்படையில் தெரிவு செய்யப்படுகின்றன ?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** இது தொடர்பாக, மாநிலத்தில் ஒரு தொடர்பு அதிகாரியாக ஊரக வளர்ச்சித் துறை இயக்குநர் அவர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார். அவர் இதேபோன்ற அமைப்புகளிடமிருந்து செயற்குறிப்புகளைப் பெற்று, அவைகளை முறைப்படுத்தி 'பாடி' என்கிற அமைப்பிற்கு அனுமதி அரசாங்கத்திற்கு அனுப்புகிறது. எவ்வளவு பணம் என்பது இல்லை. நாம் அனுப்புகிற செயற் குறிப்புகளைப் பொறுத்துப் பணம் ஒதுக்கப்படுகிறது.

THIRU A. R. DAMODARAN: Sir, in view of the fact that the Government of Tamil Nadu contemplate the establishment of a Land Army, why is it necessary for us to duplicate such services by encouraging this PADI organisation?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** இது மைய அரசுடைய அமைப்பு. மாநில அரசாங்கத்திற்கும் இதற்கும் தொடர்பு எதுவுமில்லை. அவர்கள் சில கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் அந்த அமைப்பினுடைய நிதி உதவியைப் பெறுவதற்கு நாம் இதையும் பயன்படுத்த வேண்டியிருக்கிறது.

## *Tribal Farmers.*

* 179 Q.—THIRU V. R. PERIANNAN: Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(a) the number of farmers who were given high breed milch cattle at subsidised prices under the Tribal Welfare Scheme at Kolli Hills; and

**(b) the breed of milch cattle which have been given?**



## மலைசாதி விவசாயிகள்.

**திரு. வி. ஆர். பெரியண்ணன் : மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர்** அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கொல்லி மலையில் மலைசாதி மக்கள் திட்டத்தின்கீழ் எத்தனை விவசாயிகளுக்கு மலிவு விலையில் உயர்ரக கறவை மாடுகள் வழங்கப்பட்டு இருக்கின்றன ?

(இ) எந்த இனத்தைச் சார்ந்த கறவை மாடுகள் வழங்கப்பட்டுள்ளன ?

**மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** (அ) கொல்லி மலையில் வசிக்கும் 21 மலைசாதி விவசாயிகளுக்கு உயர்ரக கறவை மாடுகள் மலிவு விலையில் வழங்கப்பட்டுள்ளன.

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) ஏர்ரா கலப்பு இனம் | .. | .. | .. | 15 |
| ஜெர்சி கலப்பு இனம் | .. | .. | .. | 3 |
| சிந்தி கலப்பு இனம் | .. | .. | .. | 3 |

**திரு. வி. ஆர். பெரியண்ணன் :** இந்த உயர் ரகக் கறவை மாடுகளை நாம் என்ன விலைக்கு வாங்குகிறோம், என்ன விலைக்கு அந்தப் பகுதியில் உள்ள மக்களுக்கு வழங்குகிறோம்? அவர்களுக்கு மொத்தமே சலுகை விலையில் அளிக்கப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** கொல்லி மலையில் உள்ள பழங்குடி மக்களுக்கு ரூ. 90,000 செலவில் 60 நபர்களுக்கு மாடு ஒன்றுக்கு ரூ. 1,500 விதம் இரண்டு கறவை மாடுகளை வழங்குகிறோம். ஆகவே ரூ. 1,500 அளவுக்குத்தான் அரசாங்கம் அவர்களுக்கு மானியமாக வழங்குகிறது. என்ன விலைக்கு இந்த உயர்ரகக் கறவை மாடுகள் வாங்கப்படுகின்றன என்ற விவரம் இங்கே இல்லை.

**திரு. வி. ஆர். பெரியண்ணன் :** உயர் ரகக் கறவை மாடுகள் வழங்கப்படும்போது, அவைகளைப் பெறும் நபர்களிடமிருந்து நாம் எவ்வளவு தொகையைப் பெறுகிறோம்? ரூ. 1,500 மதிப்புள்ள மாட்டை நாம் அரசாங்கத்தில் வாங்குகிறோம். அந்த மாட்டை அந்த மலைவாழ் மக்களுக்குத் தரும்போது, அந்த நபர்களிடமிருந்து நாம் எவ்வளவு பணம் வாங்குகிறோம்? முழுத் தொகையையும் மானியமாக, சகாயமாகக் கருதித் தரப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : கறவை மாடுகளைப் பெறும் நபர்களிடமிருந்து பணம் வாங்கப்படுகிறதா என்ற விவரம் இல்லை.

திரு. வி. ஆர். பெரியண்ணன் : இப்போது கொல்லிமலையில் உள்ள நாட்டுக் கறவைப் பசுக்களைப் பொறுத்தவரையில், அங்குள்ள சீதோஷ்ண நிலைமையின் காரணமாக அவைகளுக்கே பால் இல்லாத நிலை இருக்கிறது. அந்தப் பகுதியில் உள்ள பசுக்கள் கன்றுபோட்டாலும், அந்தக் கன்றுகளுக்குக்கூட கொடுப்பதற்கான பால் இல்லாமல் இருக்கிறது. கன்றுகளுக்கும் கீழே இருந்து இப்போதும் பால் மலைக்குப் போய்க்கொண்டிருக்கிறது. எனவே இப்போது அரசாங்கம் வழங்குகிற உயர் ரகக் கறவைப் பசுக்களிடம் இந்த கிளைமேட்டில் நல்ல பால் கிடைக்குமா என்பதுபற்றிப் பரிசிலனை செய்யப்பட்டதா? இந்த மாடுகள் அந்தப் பகுதியில் உள்ள கிளைமேட்டுக்கு ஏற்றபடியாக இருக்குமா என்பதைப்பற்றிப் பரிசிலனை செய்யப்பட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : அரசாங்கம் மாடு மட்டும் தான் வாங்கித் தருமே தவிர, அதிலே பாலையும் ஊற்றித்தராது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

திரு. வி. ஆர். பெரியண்ணன் : கொல்லிமலையில் இப்போது இருக்கிற நாட்டுப் பசுக்களுக்கே பால் இல்லை என்ற நிலை இருப்பதால், இந்தப் புதிய உயர் ரகக் கறவை மாடுகளை நாம் அவர்களுக்கு வழங்கினால், அந்த சீதோஷ்ண நிலைமையில் அவைகளுக்குப் பால் இருக்குமா என்பதைப்பற்றிக் கால்நடை இலாக்கா பரிசீலித்ததா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-50)

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : அப்படி ஏதாவது வாங்கித் தரப்படுகிற மாட்டில் பால் வரவில்லை என்றால், அதைப்பற்றி அரசாங்கம் பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. மு. மாசிலாமணி : மலை ஜாதியினருக்கு வழங்கப்படுகின்றதைப்போல பழங்குடி மக்களுக்கு வழங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மலை ஜாதி வகுப்பினரும் பழங்குடியினரும் ஒரே வகுப்பினர்தான். 1976 ஆம் ஆண்டிலிருந்து அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டு, அவர்களுக்கு மாடு என்பது மட்டுமல்ல, வெள்ளாடுகள், சேவல்கள், கோழிக் குஞ்சுகள், எருமைகள் போன்றவைகள் எல்லாம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்து வரப்படுகின்றது.



மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. கவன ஈர்ப்பு.

### பாளைய வாரியங்கள் நடத்தும் பள்ளிகளுக்குக் கல்வி மானியம் நிறுத்தி வைக்கப்பட்டதனால் ஏற்படும் இன்னல் குறித்து.

THIRU K. S. GANAPATHI: Sir, I wish to call the attention of the Hon. the Minister for Education to a matter of urgent public importance, namely, the effect of G.O. Ms. No. 23, Education Department, dated 4th January 1978 directing the stoppage of teaching grant to schools run by the Cantonment Boards and the resultant threat of the closure of these institutions resulting in problems to teachers and thousands of parents and students.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : 1964-65 ஆம் ஆண்டிற்கான கணக்குகளைத் தணிக்கை செய்யும்போது தமிழ்நாடு கணக்காய்வுத் தலைவர் (Accountant-General, Madras), நீலகிரி மாவட்டம் அரவங்காட்டிலுள்ள கார்டைட் தொழிற்சாலை உயர்நிலைப் பள்ளிக்கு ஆசிரியர் மான்யம் வழங்கியுள்ளதற்கு மறுப்பு தெரிவித்துள்ளார். இதற்கு அடிப்படை காரணம் உதவிக் கொடை தொகுப்பு (Grant-in-aid Code) விதி 1-லுள்ள ஏற்பாடாகும். இவ்விதியின்படி தனியார் நிர்வாகத்தின் கீழ் இயங்கிவரும் அங்கீகரிக்கப்பட்ட பள்ளிகள் மட்டுமே மான்யம் பெற தகுதியுண்டு. இத்தணிக்கை மறுப்பின் காரணமாக மத்திய அரசுத் துறைகளால் இம்மாநிலத்தில் நடத்திவரப்படும் எல்லா பள்ளிகளுக்கும் மான்யம் கடந்த காலம் முதற்கொண்டு நிறுத்தப்பட்டது.

2. மேற்குறிப்பிட்ட பள்ளிகளுக்கு தொடர்ந்து இம்மாநில நிதியிலிருந்து மான்யம் வழங்கும் கருத்துருவை அரசு மிக விரிவாகப் பரிசீலித்தது. மாநில அரசின் நிதி வசதி குறைவானதாலும், மத்திய அரசு நிதியிலிருந்து உதவிபெற்று இப்பள்ளிகளை நடத்துதல் கஷ்டமானதாக இருக்காது என்பதாலும், மத்திய அரசு துறைகளால் இம்மாநிலத்தில் நடத்தப்படும் பள்ளிகளுக்கு, தணிக்கை தடை செய்யப்பட்ட ஆண்டிலிருந்து மாநில நிதியிலிருந்து மான்யம் வழங்குவதை நிறுத்த இவ்வரசு முடிவு செய்து, இதற்கான ஆணையை 1978 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் பிறப்பித்துள்ளது. கன்டோன்மெண்டு கழகங்களால் நடத்தப்படும்

[திரு. செ. அரங்கநாயகம்] [1978 மார்ச் 16

பள்ளிகளையும் மற்றும் கார்டைட் தொழிற்சாலை உயர்நிலைப் பள்ளியையும் இவ்வரசாணையின்கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது. கன்டோன்மென்டு கழகத்திலிருந்து தனது நிர்வாகத்தின் கீழுள்ள பள்ளிகளை மூட கருத்து கொண்டுள்ளதாக அறிவித்து எந்தக் கடிதமும் இதுகாறும் அரசினரால் பெறப்படவில்லை. அப்படி ஏதாவது கடிதம் பெறப்பட்டால், இக்கழகத்தின் கோரிக்கை அப்பள்ளிகளில் படித்துவரும் மாணவர்கள், பணிபுரிந்துவரும் ஆசிரியர்கள், மற்ற ஊழியர்களின் நலனை கருத்தில் கொண்டு பரிசீலிக்கப்பட்டு தக்க ஆணை பிறப்பிக்கப்படும் என தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. எஸ். கணபதி: துணைத் தலைவரவர்களே, 1964-65 ஆம் ஆண்டு தணிக்கையாளர்கள் எடுத்துச் சொன்ன கருத்துக்களின் மீது 1978 ஜனவரியிலே முடிவு எடுத்திருக்கிறார்கள். நம் மாநிலத்திலே இதுபோன்று 6 பள்ளிகள் இருக்கின்றன. நெய்வேலியில் 2 பள்ளிகளும், பல்லாவரம் கன்டோன்மென்டில் 2, ஆவடி வெகிக்கிள்ஸ் பாக்டரியில் ஒன்று, அரவங்காட்டில் ஒன்று என்று மொத்தம்-6 பள்ளிகள். தனியார் பள்ளிகளுக்கு அரசினுடைய மான்யம் பெறத் தகுதியுண்டு. கிராண்ட்ஸ் இன் எய்ட் விதி 1-ல் உள்ளபடி மான்யம் வழங்குவது அவர்களுக்கு மறுக்கப்படுகிறது. அந்தப் பள்ளி அங்குள்ள ஒரு ரெஜிஸ்டர்ட் சொசைட்டியால் நடத்தப்படுகிறது. ஆகவே அந்தப் பள்ளிகளைத் தனியார் பள்ளிகள் போலக் கருதி, அவைகளுக்கு முழு மான்யத்தை வழங்குவதற்கான நடைமுறை விதிகளை அரசு கொண்டுவருமா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: பல்வேறு மத்திய அரசுத் துறைகளால் இம்மாநிலத்தில் நடத்தப்படுகின்ற பள்ளிகளுக்கு மான்யம் இப்போது நிறுத்தப்பட்டிருக்கின்றது. தனியார் பள்ளிகள் போல நடத்த இந்த விதிகளைத் திருத்துகின்ற அளவுக்கு முயற்சிக்கலாம். அவர்களுக்கு மான்யம் கிடைக்க முயற்சிக்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. எஸ். கணபதி: துணைத் தலைவரவர்களே, இந்த கன்டோன்மென்ட் பள்ளிக்கும் நடுவண் அரசுக்கும் எந்தத் தொடர்பும் கிடையாது. இந்தப் பள்ளி போர்ட் நிர்வாகத்தின்கீழ், தனியார் நிறுவனம் போன்றுதான் நடக்கிறது. எனவே அவைகளைத் தனியார் பள்ளிகளைப் போல நடத்த இந்தச் சட்டத்தைத் திருத்த முயற்சிக்கலாம் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதை உடனடியாகச் செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். உடனடியாகச் செய்யாவிட்டால், அடுத்த ஆண்டு மாணவர்கள் சேர்க்கை நடக்கும்போது, தடைகள் ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



1978 மார்ச் 16]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: துணைத் தலைவரவர்களே, அந்த முயற்சிகளை அந்தப் பள்ளி நிர்வாகத்தினரே உடனடியாக எடுக்க வேண்டும். அவர்கள் உடனடியாக எடுத்து அரசுக்குத் தெரிவித்தால், தேவையான நடவடிக்கைகளை இந்த அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 3. உரிமைப் பிரச்சினை.

### சட்டமன்றப் பேரவையில் திரு. சுப்பு அவர்கள் மேலவையைப்பற்றிப் பேசியது குறித்து.

புலவர் புலமைப்பித்தன்: மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, ஒரு ஒழுங்குப் பிரச்சினை எழுப்ப விரும்புகிறேன். இன்று சட்டமன்றப் பேரவையில் மாண்புமிகு உறுப்பினர், திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள், இந்த அவை * * என்ற வகையில் பேசியதாகத் தெரிகிறது. This is a mother chamber என்றுதான் நான் கேள்விப் பட்டிருக்கிறேனே தவிர, * * என்று நான் கேள்விப்படவில்லை. இந்த அவையினுடைய சிறப்பை, கவுரவத்தைக் குறைக்கின்ற வகையில் இப்படிப் பேசியது சரிதானா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் அப்படிப் பேசியது உண்மை. உடனடியாக அதைப்பற்றிப் பிரச்சினை எழுந்தது. சபாநாயகர் அவர்கள் அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். இன்றைக்கு இந்தப் பிரச்சினையை இங்கே கிளப்ப வேண்டிய அவசியமில்லை என்று நான் கருதுகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு அங்கத்தினர் புலவர் புலமைப்பித்தன் அவர்கள் எழுப்பிய அந்தப் பிரச்சினையில், பேரவையின் அவை முன்னவர் அவர்கள் எடுத்துச் சொல்லி தலைவரே அந்த வார்த்தையைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட்டதால், அதைப் பற்றிப் பிரச்சினை யில்லை என்று நினைக்கின்றேன். இன்னொன்று இங்கு எடுத்துச் சொல்கிறேன். யார் என்ன சொன்னாலும், இரண்டு அவையும் சம அந்தஸ்து உள்ளவைதான். இன்னொன்று இந்த அவைதான் முன்பிருந்து இருப்பதாலும், அதில் வயது

** தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.

[மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்] [1978 மார்ச் 16

வந்தவர்கள் இருப்பதாலும், இது தாய், அது சேய் என்பதல்ல. தயவுசெய்து அங்கத்தினர்கள் அப்படிக் கருத வேண்டாம். இரண்டுமே சம அந்தஸ்து உடையவைகள்தான். இன்னொருவர் மதிப்புக் கொடுத்துதான் மதிப்புவர வேண்டும் என்பதில்லை. அந்த மாதிரியான வகையிலே பேச வேண்டாம். அந்த வார்த்தைகள் குறிப்பிலே இருக்க வேண்டியதில்லை.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : இங்கு அந்தப் பிரச்சினை எழுந்ததால், அந்த வார்த்தைகள் இந்த அவையின் குறிப்பிலே மறுபடியும் ஏறுகின்றன. இந்த விவாதத்தை நீக்கலாம் என்று சொல்லிக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : நீக்க வேண்டியதைத்தான் நீக்க வேண்டும். இந்த * * என்று சொன்னார்கள். அந்த வார்த்தைகளை நீக்குவதிலே ஆட்சேபணை இல்லை. மாறுபட்ட கருத்துக்களைத்தான் நீக்க வேண்டுமே தவிர, எல்லாவற்றையுமே நீக்க வேண்டும் என்பது அல்ல. நான் சொல்வது, எல்லாவற்றையும் இங்கே நீக்குவது நல்லதாக இருக்காது.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, * * என்ற வார்த்தைகளை மட்டும் நீக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

### 4. அரசின் தீர்மானம்.

### தமிழ் நாட்டில் கல்வி வளர்ச்சி பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பின்மீது விவாதம்—தொடர்ச்சி.

*THIRUMATHI MANDAKINI KRISHNAMOORTHY : Mr. Deputy Chairman, this being my maiden speech, I am rather hesitant to stand before such an august gathering. However, I have taken refuge under the revered memory that the greatest legislator in the world, Mr. Abraham Lincoln, had his own reservations when he made his maiden speech. However, if I am able to deliver the goods, I would attribute it to the inspiration I have drawn from this august gathering. But, if there are deficiencies, I would request you to regard it as a human failure.

Sir, I have gone through this Report which I regard as a text-book for educationists. Yesterday's speeches made by the hon. Members have inspired me to give a very thoughtful thinking over this text-book on education.

** தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.



1978 மார்ச் 16] [Thirumathi Mandakini Krishnamoorthy]

(முற்பகல் 11-00)

Yesterday I heard one of the hon. Members saying that those who had the pangs knew the suffering. If, for a moment, I talk in support of women's rights, please do not regard it as if I am a feminist. I know many men who are great supporters of Women's rights. But, as one who is engaged in social welfare and one who is closely associated with the problems of women, there may be occasions when I say something in support of women. I am sure and I know that Indian men have been very gallant in giving their full co-operation for the rights of women.

While I was going through this Policy Note on Education, the first point that attracted my attention was national integration. We are one from Kashmir to Kanyakumari and this Report has, in two clauses, laid emphasis on National Integration. One is mobility of students. Now our students can go all over the country if there is a transfer of their parents from one place to another or in any other case. They can study in any part of the country. Not only that. We have unemployment problem among the teachers and many of them can take jobs elsewhere, where there is scarcity of personnel like Rajasthan and Bihar and it is a very healthy sign. The other point that attracted my attention was this. One hon. Member said —and I do not take exception to what he said—that many of our young men did not get through the I.A.S. examination. If we go to the northern parts of the country, we find that the Tamilian I.A.S. officers have gained a great name. Everywhere in the country, the Tamilian officers have gained a great name. This also has been attained because of national integration. I hope that more and more students would take these administrative service examinations though temporarily for some reasons, they have not been able to take them in recent times. This plus two course will give our students in the College course a better foundation and we would be able to find them competing in large numbers in all administrative service examinations.

There is another point. As we introduce this Plus two course, we may not find enough qualified teachers. I would like to suggest that there are many well-qualified teachers who are willing to do any part-time job. But the remuneration given to them is very meagre. They receive only Rs. 60, which is not sufficient. I would appeal to the Hon. the Education Minister to see that the part-time teachers are paid at least half the salary of the regular teachers, so that we may take advantage of very many qualified people who are available and who cannot be employed for full-time.

There is another point I want to mention. It is mentioned that the schools wishing to have plus two course should pay an endowment of Rs. 25,000. I know many of the institutions are not in a position to collect Rs. 25,000. If a clarification is given that this endowment can be in the form of building or land which gets them an annual income, I think many institutions would be able to endow their buildings and reserve this money for expansion of building and for other equipments.

Sir, there is another point about extra-curricular activities. There is no mention in this Report about the physical education training. I think it is very important and one of the hon. Members mentioned that very few women take to swimming. I feel that the women's institutions can take advantage of the college-complex that has been envisaged in this Report. One day or two days in a week can be reserved and one or two women's colleges may be requested to permit N. S. School students to learn swimming.

Sir, another point which I want to mention is that I am not satisfied with the type of training that is given to Physical Education Teachers. I feel that self-defence methods are very, very important because, in this world of equality, women should protect themselves. Our Physical Education teachers know only the physical education exercises and they are of no use. If we want our women to have self-confidence, the physical education syllabus must be completely changed and our women should have self-defence training in their physical education programmes. The term which is very frequently used in this Report is 'moderning of education' and I feel that physical education needs a lot of moderning.

As far as adult education is concerned, there is a charge by people outside that the politicians do not want our adults to be educated. We should see that it is not there. We can make use of the plus 2 course students for this purpose. For one hour or two hours in a week, or twice a week, they can engage themselves in the adult education programme so that we may have a better society.

While concluding, I just want to say that I am most grateful to you, Mr. Deputy Chairman, for giving me the earliest opportunity. I congratulate our modern looking Chief Minister and the Education Minister and the Officers of the Education Department who have brought out this wonderful comprehensive Report which is going to stay for all time. I wish good luck to them because our educational policy has been changing so often that I wish that this educational





pattern would stay. It is up to all of us to see that this Report is made a success in this State which has gained a name everywhere in India of being the first in any programme that has been undertaken.

Thank you,

* திரு. பி. ஆர். தாமஸ்: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே, தமிழ்நாட்டில் கல்வி வளர்ச்சி என்ற கொள்கை விளக்கக் குறிப்பின்மீது பேச வாய்ப்பு கொடுத்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். 1978-79 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டிலே கல்விக்கென 176 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. இது, மொதத்ச் செலவாகிய 727 கோடி ரூபாயிலே 24 விழுக்காடு என்று வருவது வரவேற்கத்தக்கதாகும். சென்ற ஆண்டில் கூட நம்முடைய மாநிலத்திலே கல்விக்காக 160 கோடி ரூபாய் முதலில் ஒதுக்கீடு செய்யப்பட்டதும், அன்று அது மொத்தச் செலவிலே 24 விழுக்காடாக இருந்ததும், திருத்த மதிப்பீட்டிலே மேலும் 9 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டதும் உறுப்பினர்களின் நினைவிற்கு வரும். நடப்பு ஆண்டிலே கல்வியிலே ஏற்படக்கூடிய முறை மாற்றத்திலும், சூழ்நிலையாலும் அதிகமான நிதி ஒதுக்கீடு செய்யும் நிலை உருவாகும் என்பதையும், அத்தகைய சூழ்நிலை உருவாகும்போது, அதிகமான நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்றும் மாண்புமிகு கல்வி அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

ஒரு மாநிலத்தின் எதிர்கால முன்னேற்றமோ, வளர்ச்சியோ, தொழில் நுட்ப அறிவோ, அறிவியல் முன்னேற்றமோ, கல்வித் திட்டங்களையும், அந்தத் திட்டங்கள் எந்த முறையில் செயல்படுத்தப்படுகின்றன என்பதையும், குறிப்பாக ஆசிரியப் பெருமக்களது பங்கினையும், எல்லாவற்றுக்கும் மேலாக நிதி ஒதுக்கீட்டையும் பொறுத்திருக்கிறது என்பது யாவரும் அறிந்த உண்மை.

176 கோடி கல்விக்காக நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கப்பட்டுள்ள 11 கோடி ரூபாய்க்கு மேலாக, கல்லூரி, பள்ளிக் கட்டிடங்களுக்காக விடுதிகள், ரூபாயும், ஹரிஜன, பின்தங்கிய மக்கள் நலப் பள்ளிகள், 95 கோடி சீர்திருத்தப் பள்ளிகள், தொழில் பயிற்சிப் பள்ளிகளுக்காக கல்வி, ரூபாயும், அதற்கும் மேலாக மருத்துவக் கல்வி, வேளாண்மைக் 222 கால்நடைக் கல்வி ஆகியவற்றுக்காக 10 கோடி ரூபாயும், ஆக, மொத்தம் கோடி ரூபாய் கல்விக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது மகிழ்ச்சி தரக்கூடியதென்ப தால், இதை வரவேற்கிறேன்.

[திரு. பி. ஆர். தாமஸ்] [1978 மார்ச் 1

(முற்பகல் 11-10)

பொதுவாக திட்டத்தில் வராத செலவினம் என்றும், திட்டச் செலவு என்றும், மொத்தர் செலவினம் என்றும் குறிப்பிடும் அந்த வாசகத்தைத் தகுந்த முறையிலே மாற்ற வேண்டுமென்ற கருத்தைக் கூறிக்கொள்ள ஆசைப் படுகிறேன். கல்விக்காகச் செலவிடப்படும் அனைத்துத் தொகையையும் மூலதனம் என்று கொள்ள வேண்டுமே தவிர, செலவினம் என்று கொள்ளக் கூடாது என்ற கருத்தை சென்ற ஆண்டிலேயே நான் கூறினேன். மீண்டும் அந்தக் கருத்தை வலியுறுத்த ஆசைப்படுகிறேன். இதற்குக் காரணம், கல்விக்குச் செலவிடப்படும் அந்த மூலதனத்தால் இருபது, இருபத்தைத் தாண்டுகள் கழித்து என்ன முன்னேற்றம், என்ன வெற்றி, பெருமை ஏற்பட்டிருக்கிறது என்பதைக் கணக்கிட முடியும். அதைப் போலவே, பிற்காலத்தில் கல்வியின் தரம் எவ்வாறு இருக்க வேண்டுமென்று திட்டமிடும் போது, நாட்டில் உள்ள மக்களின் தேவை என்ன என்பதைக் கணக்கில் எடுத்துக்கொண்டு பார்க்கிறோம். ஒரு ஆலை முதலாளி என்று எடுத்துக் கொண்டால், பத்தாண்டுகள் கழித்து மக்களுடைய விருப்பம் எந்தவிதத்தில் இருக்கும், அவர்கள் என்னென்ன வர்ணங்களை விரும்புவார்கள் என்று முன் கூட்டியே எண்ணி ஆய்வு செய்து அந்த ஆய்வின் அடிப்படையிலே துணிகளை நெய்வார். அந்த அடிப்படையிலேதான் கல்வியின் மாற்றமும் இருக்கின்றது. பதினைந்து ஆண்டுகளுக்குப் பின் மக்களுக்கு என்ன தேவை இருக்கும் என்பதை ஆரம்ப நிலையிலேயே எண்ணி அதற்கு வேண்டிய நிதியை ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்ற கருத்தைப் பணிவன்போடு சமர்ப்பித்துக் கொள்ளுகிறேன்.

அடுத்து, நம்முடைய மாநிலத்தின் பட்டியலிலிருந்து எடுத்து கல்வியை மத்திய அரசின் பட்டியலில் வைக்காமல் பொதுப்பட்டியலுக்கு மாற்றப் "Education and University Education" " என்று இப்போது பட்டிருக்கிற ஓர் அம்சத்தைப் பார்க்கிறோம். பொதுப்பட்டியலிலே, மாற்றப்பட்டிருப்பது மாநிலத்தினுடைய முன்னேற்றத்தையும், மாநிலத்தினுடைய கல்வி வளர்ச்சியையும், பாதிப்பதாகவும் அத்துடன்கூட மாநில மக்களுடைய விருப்பத்திற்கு முரண்பாடாகவும் இருக்கக்கூடிய சூழ்நிலையை உண்டாக்கியிருக்கிறது. அதுமட்டுமல்லாமல், மாநிலத்தினுடைய உரிமையைப் பறிப்பதாகவும் இது இருக்கிறது. மாநிலம் தாம் செய்ய வேண்டிய கடமையைச் செய்ய முடியாமல் தடுக்கும் நிலையும் இருக்கிறது. நமது மாநிலம் முன்னேற்றமடைந்த மாநிலம் என்ற கருத்தின் அடிப்படையில், மாநிலத்திற்கே கல்வியைக் கொடுக்க வேண்டுமென்ற கருத்தை நம்முடைய மாநில அரசு வலியுறுத்த வேண்டும். மேலும் கோத்தாரி குழுவினரின்



1978 மார்ச் 16] [திரு. பி. ஆர். தாமல்]

பரிந்துரைகளை அடிப்படையாகக்கொண்டு, இதை மறு பரிசீலனை செய்ய வேண்டுமென்று கருத்தை எடுத்துச் சொல்லி மாநிலப் பட்டியலில் உள்ள பதினோராவது இடத்தில் இருக்கக்கூடிய "Education and University Education" என்ற அமைப்பு தொடர்ந்திருக்க வகை செய்ய வேண்டுமென்ற கருத்தைக்கூறிக்கொள்ளுகிறேன்.

நம்முடைய மாநிலத்தில் பணியாற்றும் பல்வேறு ஆசிரியர்களுக்கு உதவும் வகையில் புதிதாக இந்த ஆண்டிலே ஆயிரம் இடைநிலை ஆசிரியர்கள் பதவியையும், 200 தமிழாசிரியர்கள் பதவியையும், 200 உடற்பயிற்சி ஆசிரியர்கள் பதவியையும் ஏற்படுத்த வகை செய்திருப்பதை நான் வரவேற் கிறேன். ஆனால் சென்ற ஆண்டு கூட பட்டதாரி ஆசிரியர்களுக்கான பதவியிடங்கள் ஏற்படுத்தப்படவில்லை. நடப்பாண்டிலும்கூட பணியிடங்கள் ஏற்படுத்தப்படவில்லை. ஏற்கனவே எட்டாயிரம் பட்டதாரி ஆசிரியர்கள் பணி வாய்ப்பின்றி தவித்துக் கொண்டிருக்கிறார்கள். நம்முடைய மாநிலத்திலுள்ள 23 பயிற்சிக் கல்லூரிகளிலிருந்து ஆண்டுதோறும் 2,700 ஆசிரியர்கள் பயிற்சி பெற்று வெளிவந்து கொண்டிருக்கிறார்கள். நடப்பாண்டிலே ஓய்வு பெறக் கூடிய பட்டதாரி ஆசிரியர்களின் இடத்திலே அவர்களை அமர்த்தலாம் என்ற நிலைதான் இருக்கிறதே தவிர, அவர்களுக்கு புதிய பணி வாய்ப்புகள் ஏற்படுத்தப்படவில்லை. மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் இந்தத் துறையிலே கவனம் செலுத்தி, பட்டதாரி ஆசிரியர்களுக்குப் பணி வாய்ப்பு வழங்கக்கூடிய சூழ்நிலையை உருவாக்க வேண்டுமென்று கூறிக்கொள்ளுகிறேன்.

சிறப்பாசிரியர்களுக்கு உதவும் வகையில், சென்ற ஆண்டு 200 பகுதி நேரப் பணியிடங்கள் முழு நேரப் பணியிடங்களாக உயர்த்தப்பட்டன. ஆனால் நடப்பாண்டில் அப்படி எதும் வழங்கப்படவில்லை. அவர்கள் பகுதி நேர ஆசிரியர்கள் என்றும், முழு நேர ஆசிரியர்கள் என்றும் இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறார்கள். இதைத் தவிர, உயர் தொடக்கப் பள்ளிகளில் பணியாற்றக்கூடிய கைத்தொழில் ஆசிரியர்களுக்கும், உயர் நிலைப் பள்ளியிலுள்ள மற்ற கைத்தொழில் ஆசிரியர்களுக்கும் ஊதிய விகிதத்தில் வேறுபாடு இருக்கின்றது. இந்த வேறுபாட்டை மாற்றுவதோடு, மற்றும் பகுதி நேர ஆசிரியர்களை முழு நேர ஆசிரியர்களாக உயர்த்த அரசாணை பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய மாநில கல்வி இயக்குநர் அலுவலகத்திலிருந்து இரண்டரை இலட்சம் ஆசிரியப் பெருமக்களுக்கு நல்ல கருத்துக்களையும், ஆய்வுகளையும் வெளியிடவும், ஆசிரியர்களுக்கு வழிகாட்டியாக விளங்கக்கூடியதுமான காலாண்டு இதழ் வெளி வரவிருப்பது அறிந்து நான் பாராட்டுகிறேன்,

வரவேற்கிறேன். ஆனால் அதே சமயத்தில் பணிப் பாதுகாப்பின்றி பல்வேறு தொல்லைகளுக்கு ஆளாகியிருக்கிற ஆசிரியர்களுக்குப் பணிப் பாதுகாப்பு அளித்து வழிகாட்டியாக இருக்க வேண்டுமென்று கூறிக்கொள்ளுகிறேன்.

தொடக்க நிலையிலேயே 1 முதல் 5-வது வகுப்பிலேயே 42 சதவீதத்தினர் படிப்பை நிறுத்தி விடுவதைத் தவிர்க்க, அந்த மாணவர்களுக்கு இலவச மதிய உணவு, இலவசப் புத்தகங்கள், இலவச சிலேட்டுகள் வழங்குவதற்காக நடப்பாண்டிலே மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் ஒரு புரட்சிகரமான திட்டத்தைக் கொண்டுவர இருப்பதை அறிந்து பாராட்டுகிறேன், வரவேற்கிறேன். மேலும் அவர்களை ஊக்குவிக்கும் முறையில் 1 முதல் 3 ஆம் வகுப்பு வரையுள்ள மாணவர்களை தேர்வடையச் செய்து மேல் வகுப்புகளுக்கு அனுப்புவது என்பது வரவேற்கத்தக்கது. இதை ஐந்தாவது வகுப்பு வரை உயர்த்தி விடலாம் என்ற கருத்தை வலியுறுத்திக் கூற ஆசைப்படுகிறேன்.

அடுத்து, தொடக்கப் பள்ளிகளிலும், உயர் தொடக்கப் பள்ளிகளிலும் அறிவியல் போதனையை மேம்படுத்தும் பொருட்டு அவர்கள் அறிவியல் சாதனங்கள் வாங்குவதன் பொருட்டு தொடக்கப் பள்ளிகளுக்கு 300 ரூபாய் என்றும், உயர் தொடக்கப் பள்ளிகளுக்கு ஆயிரம் ரூபாய் என்றும் உதவித் தொகை வழங்கும் திட்டம் கிராமப் புறத்தில் கல்வியில் நல்ல முன்னேற்றத்தைத் தரும் என்று திட்டவட்ட மாகக் கூறிக்கொள்ளுகிறேன்.

நண்பகல் உணவுத் திட்டத்தைப் பொறுத்த வரையில், மூன்றில் ஒரு பங்கினர் எட்டாவது வகுப்பு வரை பயிலும் மாணவர்கள் நன்மை பெறுகிறார்கள். ஏறத்தாழ ஐந்து கோடி ரூபாயை இந்த ஆண்டு ஒதுக்கீடு செய்திருப்பது வரவேற்கத்தக்கது. நடப்பாண்டில் 45 இலட்சம் மாணவர்கள் அதிகமாகியிருக்கிறார்கள். அதே சமயத்தில் மைய உணவுக் கூடம் மாநிலத்தின் வட பகுதிகளான வட ஆற்காடு, தென் ஆற்காடு, செங்கற்பட்டு ஆகிய மாவட்டங்களில்தான் நடைபெறுகிறது. ஏன் இதை பிற மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தக்கூடாது என்ற கேள்வி இருக்கிறது. அதை விரிவு படுத்தினால், மற்ற மாவட்டங்களிலுள்ள ஆசிரியர்களுடைய பணியின் பளு திட்டவட்டமாகக் குறையும். அதனால் மாணவர்களுடைய தரத்தை உயர்த்த ஆசிரியர்களை அதிகமாகப் பயன்படுத்த முடியும் என்ற கருத்தைக் கூறிக் கொள்ள விரும்புகிறேன். 1977-78 ஆம் ஆண்டில் நம்முடைய மாநிலத்தில் குழு ஆய்வு முறை அமுலாக்கப்பட்டிருக்கிறது. குழு ஆய்வுமுறை அமுல் படுத்தப்பட்டதைக் குறித்துப் பல கருத்துக்கள் வருவதைப் பார்க்கும்போது, இது ஒரு சிறந்த திட்டம் என்று கருதி இதை வரவேற்கிறேன். இது குறித்து ஒரு சிறிய கருத்தைக் கூற விரும்புகிறேன்.



அந்தந்த மாவட்டங்களில் அநேக பயிற்சிக் கல்லூரிகள் இருக்கின்றன. அங்கே சிறந்த அநுபவம் மிக்க பேராசிரியர்கள், ஆசிரியர்கள் இருக்கிறார்கள். பயிற்சிக் கல்லூரிகள் இருக்கின்ற இடங்களில் கல்லூரிகள் இருக்கின்றன. அங்கே பிளஸ்-2 இருக்கக்கூடிய சூழ்நிலையில் பயிற்சிக் கல்லூரியிலே பணி யாற்றக்கூடிய ஆசிரியர் பெருமக்களையும் இணைத்தால், ஒரு வேளை உயர்நிலைப் பள்ளி அளவிலே கல்வி சிறப்பாக அமையும் என்ற கருத்தைக் கூற நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

நம்முடைய மாநிலத்தில் 374 பஞ்சாயத்து யூனியன்கள் இருக்கின்றன. இந்தப் பஞ்சாயத்து யூனியன் பள்ளிகளில் எட்டாவது வகுப்புத் தேர்வு நடத்தப்படுகிறது. அதில் சிறந்த இரண்டு மாணவர்களைத் தேர்ந்தெடுத்து, அவர்களுக்கு படிப்பு உதவித் தொகை ஆயிரம் ரூபாய் என்றும், அவர்கள் விடுதியில் தங்காமல் பள்ளிக்கு வந்து சென்று படிக்கின்ற மாணவராய் இருந்தால் ரூ. 500 என்றும் வழங்கப்படுகிறது. இவ்வுதவித் தொகை பெறும் மாணவர் தம் விருப்பப்படி சாதாரண பள்ளிகளில் சேர்ந்து படித்தால், ரூ. 150 என்றும் வழங்கப்படுகிறது. இந்த உதவித் தொகையை 4 மாணவர்களுக்கு வழங்க இருப்பது வரவேற்கத்தக்கது. இதிலே இரண்டு பேர் மாணவராகவும், இரண்டு பேர் மாணவியாகவும் இருக்க வேண்டுமென்ற கருத்தைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

ஐந்தாவது வகுப்பு முதல் பத்தாவது வகுப்பு வரையுள்ள திருத்தப் பாடத் திட்டத்தின் பளுவைக் குறைக்க வேண்டுமென்ற அரசினுடைய திட்டத்தை வரவேற்கிறேன். அதோடுகூட பகுதி பகுதியாக எஸ்.எஸ்.எல்.சி., ஓ.எஸ்.எல்.சி., ஆகிய தேர்வுகளை அக்டோபர் மாதம் முதல் எழுதலாம் என்ற திட்டத்தையும் வரவேற்கிறேன். அதே சமயத்தில் மற்றொரு கருத்தையும் தெரிவிக்க விரும்புகிறேன். இது வரையில் உள்ள தேர்ச்சி முறையின்படி, மொழிப் பாடங்களில் 40 மதிப்பெண்களும், மற்ற மூன்று பாடங்களில் ஒன்றில் 30 என்றும் மற்ற இரண்டில் 35 என்றும், ஆனால் சராசரி 35 மார்க்குகள் எடுக்க வேண்டுமென்றும் இருக்கின்றது. ஒரு பாடத்தில் 30 மார்க் எடுத்தால் போதுமென்று இருந்தது. இதற்கு விதிவிலக்கு உண்டு. இரண்டு பாடங்களில் ஒரு மதிப்பெண் குறைவாக இருக்கலாம் என்றும், மொத்தத்தில் 5 மதிப்பெண்கள் குறைவாக இருந்தால், அவர்கள் 215 மொத்த மதிப்பெண்களை விட 10 மதிப்பெண்கள் அதிகமாக எடுத்திருந்தால், அவர்களை

(முற்பகல் 11-20)

மேல் வகுப்பிற்கு அனுப்பலாம் என்று திட்டம் இருந்தது. இதை அடிப் படையாகக் கொண்டு, வரப்போகிற ஆண்டுத் தேர்ச்சியைத் திட்டமிடும் போது, இத்தகைய சலுகை மொத்தமாக எழுதுகிறவர்களுக்கு வழங்கப்பட

வேண்டும். பகுதி பகுதியாக எழுதுகிறவர்களுக்கு 35 மார்க்கு அடிப்படையாக இருக்க வேண்டும் என்று ஒப்புக் கொண்டாலும், மொத்தமாக எழுதுகிறவர்களுக்கு. . . . .

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: இன்னும் நிறையப் பேர் இருக்கிறார்கள். நேற்று பேசியிருந்தால், அரை மணி நேரம் கொடுத்திருப்பேன். நீங்களே அரை மணி நேரம் பேசியிருக்கலாம்.

திரு. பி. ஆர். தாமஸ்: உடற்பயிற்சிக் கல்வியைப் பொறுத்தவரையில், பிற மாநிலங்களில் சிறந்த விளையாட்டு வீரர்களுக்கு மாநில விருது வழங்கி வருகிறார்கள். அந்த அடிப்படையில் நம்முடைய மாநிலத்திலும் சிறந்த விளையாட்டு வீரர்களுக்கு மாநில விருது வழங்க வேண்டுமென்ற கருத்தைக் கூறிக்கொள்ளுவேன்.

தேர்வுப் பணியைப் பொறுத்தவரையில், எண். 334 உள்ள அரசு ஆணையானது உள்ளாட்சித் துறையிலும், அரசுப் பள்ளிகளிலும், தனியார் பள்ளிகளிலும் பணியாற்றுகிறவர்களுக்கு மொத்தப் பணியைக் கணக்கிட்டு வழங்கலாம் என்றிருக்கிறது. ஆனால் உள்ளாட்சித் துறையில் உள்ள குறிப்பாக திண்டுக்கல், காஞ்சீபுரம் போன்ற பள்ளிகளில் இந்த அரசாணை அமுலாக்கப்படாமல் தவிர்க்கப்பட்டிருப்பதனால், ஆசிரியர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கும் முறையாக வழங்க அரசு முன்வர வேண்டுமென்று வேண்டிக்கொள்கிறேன். 1—4—1970-லிருந்து 3-3-1978 வரையில் பணியில் அமர்த்தப்பட்ட ஊழியர்கள் பணி வரன்முறைப் படுத்தப்பட்டதையும், அவர்களுக்கு ஊதிய உயர்வு வழங்கப்பட்டதையும் வரவேற்றாலும், பிற ஆசிரியர்களுக்கு அது வழங்கப்படவில்லை. வழங்கப் படாமல் உள்ள அவர்களுக்கும் இந்தத் திட்டம் விரிவாக்கப்பட வேண்டும் என்று கூறிக்கொள்ளுகிறேன்.

தேர்ந்தெடுக்கப்படாத ஆசிரியர்களுக்குத் தனியாகத் தேர்வு நடந்த இருப்பதை வரவேற்கிறேன். அதே முறையில் 70 உடற்பயிற்சி இயக்குநர்கள் இன்னும் பணி வரன் முறைப்படுத்தப்படாமல் இருக்கிறார்கள். அவர்களுக்கும் இந்தச் சலுகை விரிவாக்கப்பட வேண்டும்.

உயர் செகண்டரி கல்வியைப் பொறுத்த அளவில், இந்த மன்றத்தில் பல கருத்து வேறுபாடுகள், குழப்பங்கள் உருவாகி இருக்கின்றன. அவற்றை நீக்கும் வகையில் இன்று நமது கல்வித் துறை ஒரு குறிக்கோள், திட்டங்கள், செயல்முறைகள் என்ற சிறந்த விளக்கத்தை, ஒரு முகம் பார்க்கும் கண்ணாடி போல், இந்தத் திட்டத்திற்கு விரிவான அறிக்கையைச் சமர்ப்பித்திருக்கிறார்கள்.





அதை வரவேற்கிறேன். ஆனால் இந்தத் திட்டம் அமுலாக்கப்படும்போது, 'பி' பிரிவு பள்ளிகளில் பணியாற்றக்கூடிய ஆசிரியர்கள், 1-4-1970-க்குப் பிறகு நியமிக்கப்பட்டவர்கள், அந்தப் பள்ளிகளிலே பணியாற்றக்கூடாத நிலையில் இருக்கிறார்கள். ஆகவே 'ஏ', 'பி' இணைப்பு உடனடியாக அமுலாக்கப்பட்டால் தான், 'பி' பிரிவில் பணியாற்றுகிற ஆசிரியர்களுக்கு வாய்ப்புக் கிடைக்கும் என்ற கருத்தைக் கூறிக்கொள்கிறேன். இந்த இரண்டு மூனைப்பாடத் திட்டத்தில் இன்னும் 93 பள்ளிகள் தேர்ந்தெடுக்கப்படவில்லை. அந்த இரண்டு மூனைப்பாடத் திட்டத்தில் பணியாற்றிக் கொண்டிருக்கிற 93 பள்ளிகளில் இருக்கக்கூடிய ஆசிரியர்களுக்குப் பாதுகாப்பு ஏற்படும் வகையில் திட்டம் அமுலாகக்கப்பட வேண்டும். ஆங்கிலம் என்பது . . . .

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: ஏற்கனவே 5 நிமிடம் கேட்டீர்கள். அதுவும் போயிற்று. சீக்கிரம் முடியுங்கள். 1½ மணிக்குள் முடிந்தாக வேண்டும்.

திரு. பி. ஆர். தாமஸ்: 6-லிருந்து 11 ஆவது வரை ஆங்கிலப்பாட போதனை முறை நமது மாநிலத்தில் வழங்கப்பட்டு அமுலில் இருந்து வருகிறது. அவர் களுக்குக் கட்டணம் கட்ட வேண்டிய நிலையில்லை. 12 ஆவது வகுப்பு வரையிலும் இலவசப் பாடத் திட்டம் என்ற முறையில் இலவசக் கல்வி பயின்று வருகிறார்கள். ஆகவே ஆங்கில போதனை மொழி என்ற முறையில் கட்டணம் வசூலிக்கப்படக்கூடாது என்ற கருத்தை வலியுறுத்திக் கூறிக் கொள்வேன்.

கல்லூரி ஆசிரியர்கள் பிரச்சினையைப் பொறுத்தவரையில், ஒரு நல்ல முடிவிற்கு அரசு வரவேண்டும். முடிவாக, மாநிலத்தில் ஆசிரியர்களைப் பொறுத்த அளவில் பணிப் பாதுகாப்பு இல்லாத அவல நிலை இருக்கிறது. சில பள்ளிகளுக்கு விதி விலக்கு வழங்கப்பட்டிருக்கிறது. சில பள்ளிகளுக்கு விதி விலக்கு வழங்கப்படவில்லை. சில பள்ளிகளில் சிறுபான்மை இனத்தைச் சார்ந்தவர்கள் பெரும்பான்மை பள்ளிகளில் பணியாற்றினால், பணிப் பாதுகாப்பு இருக்கிறது. ஆனால் பெரும்பான்மை இனத்தினர் சிறுபான்மையினர் பள்ளிகளில் பணியாற்றும்போது, பணிப் பாதுகாப்பு இல்லை. சிறுபான்மையினர் உரிமை பறிக்கப்படவில்லை. ஆனால் பணிப் பாதுகாப்பு வழங்கப்பட அரசு உடனடியாக ஒரு அவசரச் சட்டப் பிரகடனத்தைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எங்கெங்கு தற்காலிக வேலை நீக்கம் என்று இருக்கிறதோ, அதையெல்லாம் ரத்து செய்ய வேண்டும், தற்காலிக வேலை நீக்கம் சிறுபான்மையினர் பள்ளிகளில் செய்யப்பட்டிருந்தால், அந்த ஊழியர்களுக்கு உடனடியாக மாற்றுப்பணி வழங்க வேண்டும்.

தற்காலிக வேலை நீக்கம் மற்ற பள்ளிகளில் செய்யப்பட்டிருந்தால், அவர்களும் உடனடியாக மீண்டும் பணியில் அமர்த்தப்படக்கூடிய வாய்ப்பை உருவாக்க வேண்டுமென்று கேட்டு, நன்றி கூறி, முடிக்கிறேன்.

* Thiru A. R. DAMODARAN: Sir, I have taken the hint and I shall speak very briefly, to the extent possible. We have taken up the discussion of the Policy Note on Education on a very significant day, the 15th March, known as the Ides of March. I only hope that the stars of the Education Department will be more fortunate than those of the unfortunate Caesar to whom the date was singularly inauspicious. I mention this because we have embarked on a programme of major educational reform. I am grateful to the Honourable the Minister for Education for responding to my request during the general discussion on the Budget that a white paper should be placed on Higher Secondary Education in Tamil Nadu Though it is not printed in white paper but only on blue paper, I am grateful to him for placing the said paper which has made it easy for us to understand in theory at least some of the facets of the proposed reform and the difficulties that we are going to face in the coming year. When I refer to the difficulties, it is not because I wish to be unduly pessimistic about this reform but only to highlight these points so that they may be considered by our administrators and solutions found for them in time. I have gone round many schools after this scheme was announced and I have been trying to gather opinion from teachers, students and parents on what they feel about this reform in education. If at all I mention certain points in the form of questions, it is because I want the Board of Higher Secondary Education to think about these matters and issue suitable clarifications whenever necessary.

One of the points that is often mentioned and which has also been stressed by my distinguished Friends, Thiru Thomas and Thiru Ganapathi who are teachers' representatives, is the enormous amount of small irritations that exist in the educational field amongst the teaching profession. I feel that these irritations could be removed by certain structural reforms that we have to effect in the Education Department itself. I am not expert enough to suggest what those reforms should be like. But I certainly feel that if we can have certain panels, composed entirely of teachers' representatives and the administrators in the Education Department, at the taluk-level, district-level and perhaps at the state-level also, many





of the normal complaints which could be sorted out at the taluk level and district level need not come in the form of petitions to the Secretary of the Education Department or even to the Minister in charge of the Education Department. For example, there are pending questions such as the sanction of increments to Selection Grade teachers. I understand that there is a delay of 6 to 8 months even in sanctioning these increments. The B.T. Assistants promoted as Headmasters in Salem and South Arcot districts are still drawing the B.T. scale and the scale has not been revised. The pay of Gazetted Headmasters has not been fixed since 1972. Regarding the salaries of permanent teachers working in temporary posts, there is a delay in the sanction of salaries for 4 or 5 months because some special permission has to be obtained from the Chief Educational Officer or from the Directorate. As I said, these small irritations can be solved at the local levels, by suitable panels being appointed and I am sure that by mutual discussions all these could be sorted out.

Sir, having referred to this point, I now turn to the major issue which is now concerning all of us and that is the introduction of the 10 + 2 course. I would like to divide the problems in regard to this structural reform under three heads, namely, the problems in so far as the students and parents are concerned, the problems in so far as the teachers are concerned, and the Government's own problems in this direction. Sir, I have put them in the form of questions because I know that you would be impatient today and that you would not allow us longer time. I shall read out the questions and I hope that, if the Honourable Minister is not able to reply to them today in this debate, the Education Department will be able to clarify matters as a supplement to the Blue Paper that they have brought out.

The first question is : Will the selection of those schools be linked to the number of pupils studying in the 10th class in a cluster of schools or will the distance factor also be taken into account? In other words, are we going to prescribe that we should have a Higher Secondary School in an area of 10 to 15 square kilo metres without taking into consideration the number of students that may pass out of the 10th class in a number of schools in that area? If we take certain urban areas, they have proposed 3 or 4 schools where 1,000 students may pass out of the 10th class and these areas may require more than one Higher Secondary School. Therefore, my first ques-

[Thiru A. R. Damodaran] [1978 மார்ச் 16

tion is whether it will be linked up to the number of students, say, 500 students in the 10th class will have one Higher Secondary School.

Secondly, is it mandatory for both streams to be provided in each of the 500 schools selected? This question has been asked by many managements. They also ask: "Can we have only academic stream? Can we have only the vocational stream? Or, do we have to start both streams? If 150 pupils are admitted in the academic stream can 100 of them be admitted in the Tamil medium and the other 50 in the English medium? If so, will this create any complication in the sanction of grant-in-aid?"

(முற்பகல் 11-30)

Fourthly, will any capital grant be given to aided institutions and local body schools for building/equipment for laboratories; if so, what percentage of the cost will be given by the Government? If a grant is to be given, will it be an advance grant or post-construction grant? The reason why I am asking this question is this. A month ago a circular has been sent by the Education Department wherein they have informed the schools that they must have the building and equipment required for the course but they have clearly stated that it does not mean that any sort of Government grant will be given and that a decision will be taken soon. We are at the end of March and I hope a decision will be taken as early as possible. Unless a decision is taken about the grant, I am afraid very few private managements will have the resources to put up class-rooms and laboratories that would be required for the course.

The fifth question I would like to ask is: Are text-books ready and will the samples be sent immediately to the selected schools for the courses they choose so that the teachers may familiarize themselves with the syllabi of the new Higher Secondary Course?

The sixth question is: Will the present Headmasters be allowed to continue in Government Schools and in Aided Schools, or will they be displaced by Headmasters with Post-Graduate qualifications? This seems to be a very complicated question so far as aided institutions are concerned. Already we have Headmasters with Degree and B. T. qualifications and they are nervous that the appointment of a Post-Graduate teacher with B. T. qualification as Headmaster may displace them from their present position. This is probably one of the reasons why private managements are reluctant to introduce the Plus Two Course.



1978 மார்ச் 16] [Thiru A. R. Damodaran]

[மாற்றுத் தலைவர் திருமதி சத்தியவாணிமுத்து]

The seventh question is: What qualifications have been prescribed for teachers of vocational courses? For example, we have got courses like Dairy farming, Poultry farming, Catering, Child Care and Nutrition, Tourist Guide and Photography. I am sure these are all difficult vocational courses and I do not know whether teachers will be available for such courses. If so, I would like to know from the Government what the qualifications will be for such teachers? Are you going to prescribe the qualification of Bachelor of Veterinary Science to take up the course in Dairy Farming and Poultry Farming? So far as catering is concerned, I do not know whether graduates will be available to teach this subject. The qualifications to be prescribed will have to be mentioned because the schools have to make a choice of the vocational courses, so far as aided institutions are concerned. Unless clear-cut instructions are given, it will be very difficult for them to introduce these courses.

Then, Sir, a point on which the Blue Book is significantly silent is: what is the salary scale of the Higher Secondary School teachers and the Headmasters? I can realise, that they have been significantly silent on this issue because it is a very complicated matter. I do not know what decision the Government have taken and I hope the Honourable Minister will be able to elucidate in his reply whether he has in mind a salary scale or an extra allowance or a special pay for such teachers.

Sir, my ninth question is: Will you permit more sections in a school where there are more than 500 students in the 10th Class? This problem arises in congested areas like the Neyveli Lignite Corporation area where we have 900 to 1,000 students who will be appearing for the 10th Class Examinations and we require not one school which will be affiliated but possibly two schools. My plea to the Government is that if there are schools with the facilities available, the Government may sanction another school for such areas. I think that in Madras City, Madurai, Salem and the bigger urban areas they are going to have more schools. Even in the rural areas, Government should permit more than one school to be affiliated to the Higher Secondary courses provided the number of pupils justifies the number of such schools.

My tenth question is: Will you give freedom to aided institutions to choose any language under Part I? It is a very inconvenient

question and I would like an answer because there are certain institutions which may prefer to have any language, and if so, they have to make arrangements. Therefore, the Government should make it quite clear whether they will give freedom to aided institutions to choose any language.

My last question, Sir, I am sorry, Madam, is: Will the re-deployment of teachers lead to extensive transfers to other districts under the same class of management or will it involve transfer to institutions managed by local bodies and municipalities?

I have framed these in the form of questions because I do not want to be vague and we require clarification. The clarification is not only required by Members of this House; they are required by private managements, aided schools, schools run by local bodies and even Government schools. I hope that we will be able to get some clarification on this subject.

Yesterday, my honourable Friend Thiru Ganapathi mentioned about one statement made in this document that the vocational stream could lead to further education in the University. I am not very clear on this subject. In fact, on the very example that has been given, I would like a further clarification by the Department. If a boy chooses "Agricultural Chemicals" as vocational subject and if the 'A' subject is Chemistry, that is, one subject from the academic stream in what subject will this boy be able to get admission in the Degree Course as it is presently constituted? To join B.Sc. (Chemistry) course. ....................

THIRU G. SWAMINATHAN: On a point of clarification. When a lady-Member is presiding, she is known as "Vice-Chairman" and not as "Vice-Chairwoman". Are we to address her as "Sir" or as "Madam"?

THIRU A. R. DAMODARAN: The lady-Member, wherever she may be sitting, has to be termed as "Madam, Madam". I was referring to B.Sc. (Chemistry). Now, B.Sc. (Chemistry) requires the subsidiary subjects of Physics and Mathematics. An agricultural vocational subject chosen with Chemistry will deny the boy an entry into the B.Sc. (Chemistry) course because B.Sc. (Chemistry) will require a knowledge of Physics and Mathematics. Similarly, there are other subjects. One of the reasons why we have chosen the vocational courses is to see that we promote employment opportunities. We encourage our boys to take the vocational courses. The idea is very good and I wish the Government all success. But, with the



parents and students who are status-conscious, the demand will be for entry into the academic stream. Probably, we may find that boys above a certain average level will go into the academic stream and those below that level will be pushed into the vocational stream. But, we should not try to mislead these boys into thinking this there are further courses of education available at the University. I do not know if the University contemplates starting new courses based on the new curriculum because that is still in the future. I am speaking only from present knowledge and I would like the Government to make it clear because we should not mislead these boys into thinking that if they go into the vocational courses, they will be able to automatically enter into the graduate courses. On the other hand, the Government can make arrangements, through the University, to see that certain one-year courses are given, after the boys pass out of the vocational stream so that they can take subjects like Physics and Mathematics in semesters and then enter into the graduate courses. If that is possible, I would welcome it because it would also help us in the colleges in 1979 where half the class-rooms are going to be empty because there will be no students. I would like the Government to devote some attention to this problem.

Next, I would like to refer to the vocational courses. I am sure this has been investigated by the experts in the Education Department and if at all I make a suggestion, I only wish it to be examined in the light of their experience and knowledge.

(முற்பகல் 11-40)

Fisheries has been introduced as a vocational course. The introduction of 'Fisheries' as a course would not make all our fishermen induce their children to take the vocational course of fisheries, in order that they may be able to catch more fish or anything like that. We have a long sea coast where the men and women are traditionally occupied in the fishing industry. Therefore, we should have vocational subjects suitably framed, like Marine Engineering, Navigation Shipping Technology with special emphasis on Boat and Steamer building. Wireless Technology, Radar Mechanism, Trawler Fishing, Refrigeration in Ocean Liners, Packing and Preservation of fish. Probably some of these subjects are already covered. When I went through the courses, I thought that they had been framed on somewhat theoretical basis and I think that subjects with a little more practical utility could be chosen. It is for the Board to consider this. Many subjects have been suggested but I think Indigenous Medicine could be profitably included as a vocational course.

[Thiru A. R. Damodaran] [1978 மார்ச் 16

While I am not in favour of foot-loose doctors being let loose all over the country, I still feel that there would be some benefit if we inclue Indigenous Medicine—Ayurvedic, Siddha and Unani medicines —as a vocational course, because it may be possible for these Plus two people to act, not as doctors, but at least as health visitors and prescribe ordinary medicines to those in suffering. The other point is: Rural Water Supply, Drainage and Irrigation are important subjects on which we spend crores of rupees and about which the public know nothing. We do not have trained workers in those fields. These should be added as vocational subjects. One more subject which must be included is the subject of Family Planning and Social Welfare Services. The State is spending crores of rupees on this and we must have people in the Plus Two course, especially women, who must be trained and educated in these fields because they can do a lot of service to the people. Pre-School Education and Nursery Training could be other vocational subjects in the academic stream. We could have Hygiene and Physiology as some subjects, as they were there in the Senior Cambridge. Hygiene and Physiology could be a separate subject. Local Administration, Panchayat Administration, Taxation and Finance may also be the other subjects. These are all things which I would like the Department to consider.

Sir, the other problem is that all these schools are being asked to pay Rs. 25,000. I am sure the Government are going to receive a lot of complaints in the coming months. When they ask the private managements to pay Rs. 25,000, the amount is not going to come from their own pockets. Only the parents who are seeking admission for their boys in those institutions will be made to give donations of Rs. 100, Rs. 200 and Rs. 300. I would like the Government to investigate this because the Managements cannot produce the money from air but they have to collect it from the parents. Only the parents who seek admission for their children are likely to pay the donations. The Government must be prepared to face the complaints in that regard.

I have already mentioned about the necessity for buildings and equipments to start the courses. Only a sum of Rs. 2 crores have been provided in 1977-78 and a sum of Rs. 3 crores in 1978-79. These amounts are exclusively reserved for Government Schools according to the report that has been placed here.

We are going to provide co-education in Plus Two course. I am modern enough to appreciate the principle of co-education in schools. I was myself a student in a co-education system and I enjoyed the



1978 மார்ச் 16] [Thiru A. R. Damodaran]

experience very much but in our rural areas, with our orthodox and traditional outlook, I still think that a little caution is necessary. I realise that lack of finance has forced the Government to have this co-education in many of the rural Plus two classes. Taking into account the reaction of the parents, because I do not want girls' education to suffer, and considering the prejudice in the rural areas against allowing girls, especially of the age between 15 and 17, to have co-education in Plus two courses, I would request the Honourable Minister—though I realise his difficulties in this year—to consider the opening of separate Girls' Schools for Plus two courses at least from 1979-80, because the public would prefer this.

Sir, mention has been made of every Plus 2 school having a library with 5,000 books. I do not know if this is only a pious hope. I hops it will materialise. I have always felt that our school students are not given enough library work. In many of the modern schools, the students are asked to devote two hours to library work. They are asked to take a book and a question is put over the week-end about that book. It helps to create a spirit of inquiry and it improves their vocabulary. I hope that the Education Department will realise that library work is an essential part of education. Now, no hours have been set apart in the prescribed periods. I hope that due emphasis will be given for this purpose also.

In the matter of text-books, people feel that we are asking only for English medium and that we are against Tamil medium. We are not at all so. We realise that 75 to 80 per cent of our boys coming from the rural and backward areas are unfamiliar with the English language. But that is another story. Why they are unfamiliar and the manner in which English is being taught in our primary schools will take me into fields for a discussion of which I do not have the time. I would only say that the Government of Tamil Nadu may have a prize scheme so that competent authors will be attracted to write good text-books. About 50 or 60 subjects have been chosen and I think a prize scheme should be instituted so that it may encourage original works in Tamil. We have done it in the Department of Technical Education where very many books have been published. I think the Government which is interested in promoting the use of Tamil as medium of instruction will see to it that sufficient books are published.

I would now refer briefly to University Education and to a particular problem faced by the Annamalai University in that it seems to be on the verge of liquidation or insolvency. It is unfortunate

[Thiru A. R. Damodaran] [1978 மார்ச் 16

norms to be observed and certainly selection of another panel has rendered the post of Vice-Chancellor equal to that of a Superintendent in a Government office and we cannot think of such posts being occupied by distinguished persons.

I have already spoken during the general discussion on the Budget on one of the subjects which has been the burning issue during the session, namely, the introduction of U.G.C. scales of pay. I am glad that the Hon. Minister, only three days ago, stated that the matter was still open and that he was carrying on discussion with the University representatives, Teachers' representatives. I am not at present concerned with the postponement of the examinations because of this strike. It is an entirely different issue and it is the parents and students who are perturbed. I am not a person who would plead for an unreasonable cause and create an agitation against the Government. I therefore plead with the Government that the grant of the U.G.C. scales of pay with retrospective effect is an inescapable fact, because this unfortunate class of teachers have been discriminated against as compared to their counter-parts in 12 or 14 Universities in different parts of India. In Tamil Nadu, unfortunately, the previous Government did not or could not come to a decision. I will not go into that aspect. They could have come to a decision but they did not. Before they could come to a decision, the President's Government came into power. They were there for about 1 year and 4 months. That is another part of history and now the legacy has been left to this Government. I realise the difficulties of the Education Department and I realise even more the difficulties of the Finance Department. While I am not here to suggest any formula, I would humbly suggest one thing. Four alternatives have been offered by the teachers of Colleges. I am sure the Finance Department has already investigated which of these four alternatives would cost the least. My request to the Education Minister is that, as a via media, he can certainly accept the suggestion that it should be made effective from 1st January 1975, in whatever form the Government wishes to give—whether in the form of cash or in the form of bonds. An honourable solution should be sought because they are a microscopic minority who cannot withstand the pressure of an agitation for long and we will be only pushing academic dons and professors on to the streets of Madras to join the transport workers and the other people who are always willing to rise in agitation against the Government. I hope that the Government will at least be able to separate this community, the academic fraternity and arrive at a solution because it will have a widespread, damaging effect on the future confidence



1978 மார்ச் 16] [Thiru A. R. Damodaran]

of our students in our educational institutions. Already, when I go to Government colleges, when I go to private colleges, I find that the morale is flagging very badly. In fact, one of my complaints against the Directorate of Collegiate Education is that our Government colleges are kept in a remarkably untidy condition. I would not like to name the college because then I would find myself in a very delicate position when an election is facing me. But I would still say that there are some colleges where the debris instead of being put into the dust-bin is put into the courtyard, giving a very shabby appearance. I am glad that we have a lady as the Directress of Collegiate Education. I am sure she will appreciate aesthetics and see that some beauty is restored to our college campuses. If you go to the University of California and Los Angeles, it is a sight for the Gods. But if you see some of our colleges, I do not know for whom it is a sight. I only hope that this small matter will also be attended to.

I would like, before concluding, to make an assurance to the Hon. the Minister for Education from whom we expect very momentous announcements at the end of this session. Two very important announcements are expected and I hope he will make them and relieve our minds. I would only like to assure him that we from the Legislature, on our part, will offer him the maximum co-operation in seeing that the Plus 2 course is carried out successfully. I do not agree with all those VIPs who have rushed to the Press and said, 'Let us have one year in School and one year in College'. That is an impossibility. We have taken too many steps. We have to go forward and we cannot go backward. It is a good decision. We want an all-India pattern, as my hon. Friend, the lady Member remarked. We want an all-India pattern to increase mobility, etc. There will be problems of finance, accommodation and various other questions which we must face and solve. In this task, I would assure him that all of us will definitely give our co-operation. I only hope that some of the points which act as irritants in the educational field will be attended to so that we may look forward to a smooth year of progress and all-round advancement in the field of education.

Thank you very much.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

Thiru G. SWAMINATHAN: Sir, I thank you for the opportunity given me to participate in the discussion on the Policy Note on Education.

[Thiru G. Swaminathan] [1978 மார்ச் 16

I was thinking that I was very fortunate in the sense that the Hon. the lady Member was presiding over the House as Vice-Chairman and I would have the first opportunity to congratulate her on her recent election as Member of the Rajya Sabha. I also thought that I could speak in English which I have been avoiding all the while. ... ... ... ... ... ...

Thiru K. S. GANAPATHI: Do we have the necessary quorum in the House to hear the hon. Member's speech?

(நண்பகல் 12-00)

உறுப்பினரவர்களுடைய பேசசைக் கேட்க அவையில் குறைந்தபட்சக் quorum இருக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : செய்கிறேன்.

Thiru G. SWAMINATHAN: I have been avoiding an English speech all the while when our Hon. Deputy Chairman is presiding. I thought that I would forget speaking in English and, therefore, I chose to make my speech in English after a long time.

Coming to the subject, hon. Members have covered almost all the topics and after the Hon. Deputy Chairman has come over here, I am a bit afraid about the time-limit. My hon. Friend Thiru A. R. Damodaran has taken a long time—about 40 minutes and the Deputy Chairman has fixed a time-limit of 10 minutes. After 10 minutes, he will be ringing the bell. Thereafter, one can take one or two minutes and then wind up one's speech.

The first point is this. My hon. Friend Thiru Thomas who spoke before me has mentioned about the expenses incurred over a long period of time. During the year 1975-76, it was Rs. 123 crores, in 1976-77 it was about Rs. 146 crores and during 1977-78 it was Rs. 169 crores. He also calculated the other items of expenditure and said that the present Government was spending to the tune of Rs. 220 crores. He said that this expenditure was important and necessary and had to be increased during the coming years. Every year the Government would say that they have allotted more money than in the previous year. Whenever the Budget was presented, the D.M.K. Government had been saying that they were spending on Education more money than what was spent during the Congress rule. Now in the paper that has been presented here, the present Government want to mention indirectly that they are spending much more than



1978 மார்ச் 16] [Thiru G. Swaminathan]

what the previous Governments were spending on education. It is also mentioned that it will increase in future years. The hon. Members in both the Houses will always say that the amount spent on education is not enough and some more amount should be spent on education. We have been demanding that the construction of school buildings should be taken up on a large scale, that more number of schools should be started, more amount should be paid to the teachers, more amount should be paid to the college teachers as salary. We all make a demand that there should be further escalation of the expenses made by the Government. Of course, there is great advancement in the field of education since 1947 during the last 30 years. We have also to a certain extent improved the quantity in the field. Even though it has been mentioned in the book that has been placed here that 93.4 per cent. of the pupils are joining the schools, only about 58 per cent of them are studying in the 5th Class. From 11 to 14 years, only 56.8 per cent are joining and I do not know how many of them will continue up to the S.S.L.C. Class. Even after spending so much money, only a small number of students go up to the stage of Higher Education. This is what we have done in education after we have spent so much money. Quantitatively we have not been able to increase education much and the quality of education also is coming down because we are unable to provide the economic inputs for all these people. My only point is that the pattern of education that we have been following and trying to strengthen over all these years is the British pattern of education which we have got for over a century. If we are to strengthen it, we have to start more schools in the villages; should have more hostels and also have more trained teachers. As years go by, neither the Government of India nor the State Government will have sufficient funds to be provided as inputs for education. Perhaps, for the next year, the Government may be able to allot Rs. 10 crores more for education and after ten years, probably, we will be able to allot for the educational expenditure of the State only a sum which, according to me, would be insufficient because we will not be able to spend enough even for the structures that have to be put up. Even with a rise in excise duty and indirect taxes, the Government of India find that their revenue is coming down. So also, the State Government which is mainly dependent on sales tax and other taxes will not be able to escalate the expenditure on education. So, I would only wish the Hon. Minister to reconsider whether it is necessary for us to base our education only on the pattern that we have been following all these years over a period of a century, whether only the formal education should be continued and strengthened in India and if that system alone is to

be strengthened whether we would be able to improve the quality and quantity of education. My own feeling is that we would not be able to give education with quality to all the people if they want to study. If most of the drop-outs from schools want to study again and if most of the people want to study in colleges, it would not be sufficient if we spend Rs. 178 crores or Rs. 200 crores and we may have to spend nearly about Rs. 1,000 crores on education alone. Therefore, the educationists here and also the Hon. Minister should consider whether we have not reached a time when we should make a complete change in the very basis of education from formal to non-formal education. This is the point which I want to stress. Non-formal education has now come to the level of college education. But I would say that non-formal education should start even from the level of elementary school for two reasons. The first reason is that we are now having only one-point entry to our schools. If a boy drops out from school before completing the 5th class and wants to continue his education later in life, he has to start again from Class I. Secondly, in our rural areas, people want their children to assist them in their avocations and they desire their children to devote only a part of their time to education. We are giving them incentives in the shape of mid-day meals, text-books and also clothes. In spite of that, the position has not improved and the rural children are able to devote only a part of their time to education. Therefore, my recommendation to the Hon. Minister is that education at the level of elementary school should be made part-time education. Of course, if anybody wants to give full-time education to his children, the required facilities should be there. But only people who are fairly wealthy or belong to the middle class can afford that and the poorer people would be able to give their children only part-time education. If statistics about drop-outs from schools are taken, Government will find that most of the drop-outs belong to poor families. Therefore, I would request the Government to take action to have part-time courses for elementary education and also for secondary education. Unless it is done, we will not be able to revolutionise education and we will be going in the same pattern as others have gone. We are already exhausting our gasoline and we are only half-way on our road. Our destination is quite far away and we do not have the gasoline to reach our destination.

(பிற்பகல் 12-10)

Then, coming to the matter of allowing the students to pass the S.S.L.C. examination in compartmental system, my hon. Friends Thiruvalargal Ganapathi and Thomas have congratulated the Govern-



ment and I also congratulate the Government on their having introduced this system. Then, referring to the conduct of the examination, much has been talked here and in the other House about the confusion in some Centres. I happened to see the package of question papers. One set of question papers are sent in red colour cover and the other set is sent in green or light blue cover. I do not know how they got mixed up. If the different sets had been sent in green and light blue covers, then there is a possibility for confusion because of colour blindness. But the covers were red and blue in colour and they are quite distinctive. Still if some teachers in some Centres have committed this mistake, it must be due to the fact that they were tired. It is the duty of the Government to see that all things are done properly. Still if some teachers have done this mistake, they need not be visited with severe punishment. The Hon. Minister has stated that he will mete out serious punishment to the teachers concerned. They may be let off since it was a small human error. Both the sets of question papers are prepared only from the same book. I only plead that the students should not be penalised. I also appeal that the teachers may not be severely punished.

Coming to the question of merger of A and B wings, the Hon. Minister had given an assurance that the integration would be announced during the Budget session. I was anxiously looking for the announcement and I will be very happy if he announces the decision early.

Regarding the B.T. Teachers, most of them participated in the strike and the absence on account of strike had been treated as leave for which they were eligible and their leave account had been debited. Now the Government had been pleased to remove the note about their participation in the strike from their personal files. I now request the Hon. Minister to order the grant of special leave to cover the strike period and the leave account of the individuals to be credited with the leave adjusted.

Regarding Higher Secondary Course, I fully endorse the views expressed by my hon. Friend Thiru A. R. Damodaran. I only wish to add that none of the schools is prepared to give the sum of Rs. 25,000. 50 per cent of the schools selected for Higher Secondary Courses are aided institutions. Most of the aided institutions are in a position to give Rs. 25,000 and they have written that they do not want Higher Secondary Course if the payment of Rs. 25,000 is insisted upon.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, மாயவரம் நகராட்சிப் பள்ளியிலிருந்தும், போரூரணி பள்ளியிலிருந்தும் இது போன்ற கோரிக்கைகள் வந்திருக்கின்றன. இதை ஏற்க முடியாது என்று சொல்லப்பட்டு விட்டது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவதைப் போல், பெரும்பான்மையான பள்ளிகள் கட்டவில்லை என்ற நிலைமை இல்லை. அவர்கள் நல்ல ஆர்வத்தோடு இப்போது செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அநேகமாக எல்லோரும் கட்டி விடுவார்கள். ஆகவே மாண்புமிகு உறுப்பினர் அதற்கு மாறான கருத்தைத் தெரிவிப்பாரேயானால், அவர்களுடைய ஆர்வத்தைக் குறைப்பது போல் அது அமையும் என்ற காரணத்தினால்தான், இடைமறித்துப் பேச வேண்டிய நிலை ஏற்பட்டது.

Thiru G. SWAMINATHAN: I would be very happy if all the aided institutions come forward with this Rs. 25,000. Schools in places like Muthupet have not been included. They say that they have to collect the sum of Rs. 25,000 and they do not know from where to collect this money. But still they want to have a Higher Secondary School in their place. I would be very happy if those people are able to collect the money. But, the Government are already under pressure to start the Higher Secondary Schools. Whatever may be the difficulties, from next year onwards they have to start these schools. So, I request that the Government may not insist on the payment of Rs. 25,000. If they insist on the payment of Rs. 25,000, I do not know what is going to happen.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் மணியடித்தார்.)

Thiru G. SWAMINATHAN: Sir, I will conclude shortly. You have allotted me ten minutes.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: விரைவாக முடித்துக் கொள்ளுங்கள்

Thiru G. SWAMINATHAN: My hon. Friend Thiru Damodaran mentioned that liberal grants should be given. I endorse his opinion because unless these institutions are given some amounts, secondary education will not be able to attain full growth in our State.

Sir, the examinations in Colleges have already been postponed from 14th March to 27th March. During the last session also, I raised a point when some of the colleges in Madras were closed as a result of skirmishes between the transport workers and the students. Nowadays, whenever an incident involving students happens, the colleges are closed. Previously, the Government used to be anxious



to open the colleges quickly after such closure. Now, there seems to be a change of climate and the Government do not seem to be very anxious about the re-opening of the colleges. It is only the parents and the students who are trying to press on the Government the necessity for the quick re-opening of the colleges. The attitude of the Government seems to be to close down the college even if the incident happens at a place 3 or 4 miles away. For instance, when there was some trouble in Pachaiyappa's College, the Vaishnava College was closed and it was not re-opened for several days. As a result of such closure of colleges, the portions prescribed for the students could not be covered before the examinations. Now, the examinations are to be started on the 27th March. I do not know whether it is a fixed date or whether that date also is a nebulous date. The parents are very anxious about the commencement of the examinations. I would also like to know whether the postponement of examinations is done on the directive of the Government, or on the directive of the Vice-Chancellor, or with the concurrence of both. A rumour is going round that the Vice-Chancellor, without getting the concurrence of the Government, has asked the Colleges to close down. By whomsoever it has been done, the parents are now suffering.

Thiru A. R. DAMODARAN: Sir, as far as private Colleges are concerned, the Vice-Chancellor has every right to close the Colleges without the concurrence of the Government. It is only in respect of the Government Colleges that Government have to take the decision.

Thiru G. SWAMINATHAN: Sir, my only point is that we are suffering. We are not concerned about who has got the authority and the right to close down the colleges and postpone the examinations. I am concerned about this because my son and daughter are to appear for the examination and they could not write the examinations for another 10 or 15 days. It is causing me worry.

திரு. க. அறிவழகன்: மாண்புமிகு உறுப்பினருடைய மகனும், மகளும் அவருக்கே பெரிய பிரச்சினையாக இருக்கிறார்கள் என்று தெரிகிறது.

Thiru G. SWAMINATHAN: As it always happens in so many other families, most probably, the parents of the hon. Member Thiru Arivazhagan might have felt like that.

Regarding the demands of the College teachers, they have raised eleven demands. The Hon. Minister spoke to them on various dates. I saw in the papers that he had conceded 4 or 5 demands. But later on when I asked a specific question on the floor of this House

[Thiru G. Swaminathan] [1978 மார்ச் 16

to know what were the demands which had been conceded by him, he backed out and said that the demands were just then being considered by him. The Hon. Minister himself had earlier given a statement to papers like The Indian Express and The Hindu to the effect that five demands had been conceded by him and that they would be implemented. Some of the College teachers told me that the statement had appeared in the Press and asked me whether I would be able to get an assurance from the Minister on the floor of the Council in the matter so that he could not back out later on. Later, I gave a call-attention notice in this House and tried to know from the Minister the demands which had been conceded. But the Hon. Minister was very clever and he said that he was just then considering all the 11 demands, that none of the points had been conceded already and that he would be able to reply only later on. My only request to the Hon. Minister is that, except in the case of one or two demands on which he would be able to make a decision only later on, the other demands may be considered and accepted so that the college teachers may get some relief.

(பிற்பகல் 12-20)

Coming to the agitation of teachers in the form of boycotting the examinations, they are refusing to act as invigilators and to do the work of valuation of answer papers. It appears that the Director of Collegiate Education has sent a circular and it has appeared in the newspapers. The Director has threatened them that action would be taken against those who refuse to act as invigilators or as examiners. I would like to know whether it is obligatory on the part of the College Teachers to act as invigilators and as examiners. The Government Colleges may be bound by the circular of the Director. I think it is not obligatory on the part of the College Teachers to do the above work and while so, how can action be taken by the Director of Collegiate Education against these people who do not wish to act as Invigilators? There may be other reasons for their refusal. Sometimes it happens that it is risky to act as invigilators. In the North, policemen had to be posted as invigilators in Schools and Colleges. They may not like to act as examiners for valuing the answer papers. It is not right on the part of the Government to threaten these people with action, when they are obliged to do that work.

Coming to examinations, the College Teachers say that they will boycott the examinations. The newspapers have announced that the examination will be on the 24th. The teachers have announced



1978 மார்ச் 16] [Thiru G. Swaminathan]

that on 23rd they will organise a rally in front of the Secretariat. We are in a quandary whether the examinations will be conducted from 24th or not. I do not know how the Government are going to tackle the problem. It is taking a serious turn. The Government should decide as early as possible. With these words, I thank you very much for the opportunity given.

* Thiru D. V. D'MONTE: Hon. Deputy Chairman, Sir, before dealing with the Note on Progress of Education in Tamil Nadu, I would like to make a few general observations. I find that the language controversy is raising its ugly head in the State. There are attempts made to politicalise the controversy. I cannot see what is the provocation for this to take place now. Both the Prime Minister, the Home Minister and Thiru Raj Narain and other leading Members of the Janata Party have categorically stated that there is no question of imposing Hindi on unwilling people, much less on the people of Tamil Nadu, and that English will be allowed to continue as long as the people want it. You cannot do away with English language, since we want to continue our march towards scientific development. The assurance of the Prime Minister must be taken at its face value. If the Government in the State wanted to have any constitutional remedy to secure the proper place for English, I would be the first person to stand by the Government. Today the Government face many problems. The very unity and integrity of the country is at stake. On the language issue, the assurance of the Prime Minister should be taken seriously and at its face value.

The Government of Tamil Nadu are wedded to the two-language formula. But in the name of two language formula what is actually happening is the vigorous pursuit of one language formula. While I agree that the pride of place should be given to the regional language, the role of English should not be gradually reduced. It is necessary that English must be given its rightful place in the two language formula.

Sir, let us take the decision of the Vice-Chancellor to switch over to the regional language as the medium of instruction. Many right-thinking people have condemned this move as hasty and attributed it to political pressure. Switching over to the regional language will have a bad effect on the students, it will lead to the growth of parochial considerations and it may tend to affect unity. The response of students to opt for regional language has been appallingly poor year after year. This should have convinced the Vice-Chancellor that he should ensure academic freedom. Moreover, there would be practical difficulties in this like the availability of text-books on arts

[Thiru D. V. D'Monti] [1978 மார்ச் 16

subjects and in the subjects on science and technology. Therefore, I would stress that parents and students should be given the freedom to choose the medium of instruction.

Regarding the Higher Secondary Education in schools, Government have decided not to charge tuition fees for students who study in the Tamil Language. But those who wish to pursue their studies in English have to pay fees. It is nothing short of a blatant discrimination against the students, especially against the students of the Anglo-Indian community whose mother-tongue is English. The Anglo-Indian community must have the right to free education as also the right to study in their mother-tongue which is English. The Government must make immediate provision to ensure that the Anglo-Indian community is given this opportunity. I have made this appeal several times in this House and I do hope that at least now the Government would pay heed to my plea which I make on behalf of the microscopic minority community of Anglo-Indians. If the schools are allowed to charge fees, the number of Anglo-Indians studying in those schools which is already small will diminish still further and there will be a large number of drop-outs. This is a serious situation and calls for urgent measures.

Sir, I would like to make mention about an appropriate rural schooling programme for the State. The predominantly rural nature of our country demands that an emphasis be laid on rural education. The rural environment provides the setting for children to develop their knowledge. If the initiative is taken, land belonging to the community could be made available for use as open real-life laboratories. Now that the Government of India are seized of this issue and a sub-committee has also been constituted, I hope that the Government will come forward with a number of educational projects on rural development.

One more point, Sir, and I have done. I would like to refer to the grant of Rs. 16 lakhs that has been made for the Sports Council. It is totally inadequate if we are to consider the number of play-fields and facilities that there are to be made available for games and sports. If we are to promote sports and games in the State the allotment should be of a higher figure. I feel that the Government have not seriously taken up the problem of initiating the young people into sports and games and to make them take their place in world competitions. I would request the Hon. the Minister for Education to ensure that play-fields are made available in schools and colleges in the rural areas so that the young people could take to sports and games in their school-age.

Thank you,



1978 மார்ச் 16]

புலவர் புலமைப்பித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்தக் தமிழ்
கல்வி விளக்க உரையின்மீது, ஒரு பதினொரு ஆண்டு காலம் என்னுடைய ஒரு சில
ஆசிரியனாகப் பணியாற்றியவன் என்கின்ற வகையில் மகிழ்ச்சியடைகிறேன். என்னரும்
கருத்துக்களைத் தெரிவித்துக் கொள்வதில் பன்னரும் கலைஞானத்தால்,
தமிழ் நாட்டின்கண் எல்லோரும் கல்வி கற்று ஓங்கிடும் கீர்த்தி எய்தி
பராக்கிரமத்தால், அன்பால், உன்னத இமயம் போல் என்னுளோ? என்ற
இன்புற்றார் என்று மற்றோர் இயம்பிடக் கேட்டிடல் இந்தக் கல்விக் கொள்கை
ஏக்கத்தை, வேதனையைப் போக்குகின்ற வகையில், பாராட்டி வரவேற்
சிறப்பாக அமைந்திருக்கிறது என்பதை நான் மனமாரப்
கிறேன்.

4.12 கோடி பேர்களில் ஏறத்தாழ ஒன்றரைக் கோடி பேர் மட்டுமே
எழுதப்படிக்கத் தெரிந்தவர்கள் இருக்கிறார்கள் என்ற அவல நிலை மாறி
எல்லோரும் கல்வி கற்று, நல்ல சமுதாயம் உருவாக வேண்டும் என்பதிலே
எல்லோருக்கும் இருக்கின்ற நாட்டத்தை இந்த அரசு நிச்சயமாக நிறைவேற்றி
வைக்கும் என்கின்ற அரும்படையான அடையாளச் சின்னத்தை நாம் இந்தக்
கொள்கை விளக்கத்தின் வாயிலாகக் காண முடிகிறது. இதிலே 11 ஆவது,
12 ஆவது வகுப்புகள் என்கிற புதிய அமைப்பு உருவாவதும் அதனைப்பற்றிப்
பல்வேறு முனையில் விவாதங்கள் நடப்பதும், அதுவும் கல்வித் துறையைப்
பற்றிய விவாதமாக நடக்கிறது என்பதும் நல்ல வருங்காலத்தைக் காட்டுகிற
அடையாளம் என்பதை நான் மனப்பூர்வமாக ஒத்துக்கொள்கிறேன்.

கல்வித் துறைக்கு 176 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பது—இந்த
நாட்டினுடைய மொத்த பொருளாதாரத் திட்டத்தில் ஏறத்தாழ நான்கில் ஒரு
பாகம், 24 விழுக்காடு என்று கருதுகிறேன், அந்த வகையில் ஒதுக்கப்
பட்டிருப்பது—போற்றிப் பாராட்டப்பட வேண்டிய செய்தியாகும்.

(பிற்பகல் 12-30)

குறிப்பாக 11ஆம் வகுப்பு, 12ஆம் வகுப்புகளில் தமிழ் பாட மொழி
யாகவும் பயிற்று மொழியாகவும் இருக்குமென்ற அருமையான திட்டத்தை
நிறைவேற்றுவதற்காகவும், தமிழ் வகுப்புகளில் படிக்கிறவர்களுக்குக்
கட்டணம் இல்லை என்று சொல்லப்படுவதற்காகவும் மெய்யாகவே முன்னேறத்
துடிக்கிற இந்த முத்தமிழ் மொழிக்கு தருகிற ஊக்கமாக அது அமைவதாலும்
நான் அந்தத் திட்டத்தை மனப்பூர்வமாகப் பாராட்டுகிறேன். இருமொழித்
திட்டத்தை வைத்திருக்கும்போது, நடைமுறையில் அது ஒரு மொழித்
திட்டத்தைப் போல இல்லையா என்ற எண்ணம் ஒரு சிலர் மத்தியில் இருப்ப

[புலவர் புலமைப்பித்தன்] [1978 மார்ச் 16

தாக அறிகிறேன். எல்லாக் கலைகளையும் தெரிந்து கற்பதற்கு தாய்மொழியாம் தமிழும், நாட்டுக்குள்ளும் உலக நாடுகளிடையேயும் தொடர்பு கொள்ள ஆங்கிலமும் பயன்படுத்தப்பட வேண்டுமென்ற அடிப்படையில் இரு மொழித் திட்டத்தைக் கொள்கை அளவில் ஒப்புக்கொண்டு நிறைவேற்றி இருக்கிறோமே தவிர, தாய்மொழி பெற்றிருக்கிற எல்லா இடங்களையும் ஆங்கிலம் மீண்டும் பெற வேண்டுமென்பது நல்லதல்ல என்பதை மட்டும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். தாய்மொழி என்ற கொடி வளருவதற்கு ஆங்கிலம் என்ற கொழு கொம்பு இருக்க வேண்டும். அதனாலேயே தாய்மொழி என்ற கொடிக்கு நீர் ஊற்றுவதைப் போலவே கொழுகொம்பிற்கும் நீர் ஊற்றத் தேவையில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இங்கே தமிழ் மொழிக்கும் ஆக்கம் தரும் வகையில் பல்வேறு விதமான ஏற்பாடுகளைச் செய்திருக்கிறீர்கள் என்பதற்காக நான் ஒரு தமிழ் ஆசிரியனாக இருந்தவன் என்ற முறையிலும், ஒரு தமிழ்க் கவிஞன் என்ற அடிப்படையிலும் என்னுடைய மனம் திறந்த பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். அத்துடன் வறுமையில் வாடிக் கொண்டிருக்கிற தமிழாசிரியர்கள், தமிழ் அறிஞர்கள் ஆகியோரை ஆதரிக்கிற வகையில் அவர்களுக்கு ஓய்வூதியமாக திங்கள் தோறும் ரூ. 100 வழங்குவதை ஒரு நல்ல சகுனம் என்றே கருதுகிறேன். திருவள்ளுவர் திருநாளில் தொடக்க நாள் அன்று திருவள்ளுவர் கோட்டத்தில் நமது முதலமைச்சர் அவர்கள் இதைப்பற்றிப் பேசியிருக்கிறார்கள். தமிழ் நாட்டில் தமிழ் கற்ற ஒருவன் வாழ முடியவில்லை என்ற நிலை இருக்குமானால், அதைவிட கேவலமான நிலை எதுவும் இருக்க முடியாது என்று அறிந்து பேசியிருப்பதைப் படித்துப் பார்த்து, மெய்யாகவே மன மகிழ்ச்சியுற்றேன். அதனாலே மாதந்தோறும் ரூ. 100 அவர்களுக்குத் தருவதைத் தொடர்ந்து செயல்படுத்தும் வகையில் அதிகாரிகள் கவனமாக இருந்து, அதை அலட்சியம் செய்யாமல் நிறைவேற்ற ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல இயல், இசை, நாடகத் துறையிலும் வளர்ச்சியை ஏற்படுத்துவதற்காக இந்த அரசு பல முயற்சிகளை எடுத்து வருகிறது. நான் வரலாற்றினைப்பற்றி ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். ஏறத்தாழ பல்வேறு சரித்திர கட்டங்களில் பல்லவர், களப்பிரர், அதற்குப் பின் ஆங்கிலேயர் என்று பலர் இந்த நாட்டிலே புகுந்து ஆதிக்கம் செலுத்திய காரணத்தால், தமிழகத்தின் வரலாறு இருட்டடிப்புக்கு ஆளாகியிருக்கிறது, மறைக்கப்பட்டிருக்கிறது. அந்த வகையில் தமிழகத்தின் வரலாற்றைக் குறைந்த பட்சம் ஆயிரம் ஆண்டுகளுக்கான வரலாற்றையாவது மிகவும் தெளிவாக ஆராய்ந்து வெளிச்சத்திற்குக் கொண்டுவர வேண்டுமென்ற எண்ணத்தைத் தமிழக முதலமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அதைப் பாராட்டி வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் அதே நேரத்தில் நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் என்று எல்லோராலும் பாராட்ட



1978 மார்ச் 16] [புலவர் புலமைப்பித்தன்]

படுகிற அந்த சிலப்பதிகாரத்தினுடைய வரலாற்றைக் கூட இருட்டடிப்புக்கு ஆளாக்கும் முயற்சியில் ஒரு சிலர் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை மிக்க வேதனையோடு தெரிவித்துக் கொள்கிறேன். அதற்குக் காரணம் சாகித்திய அகாடமி பரிசுக்குரியதாகத் தேர்ந்தெடுத்திருக்கிற ஒரு நூலைப் பார்க்கும்போது, அந்த வேதனை உண்டாகிறது. சிலப்பதிகாரம் கி.பி. 11 ஆம் நூற்றாண்டில் தோன்றிய ஒரு கற்பனைக் காவியம் என்று சொல்லி, அதைப் பற்றி எழுதப்பட்ட ஒரு நூலுக்கு சாகித்திய அகாடமி பரிசு தந்திருக்கிறது. சாகித்திய அகாடமி என்பதற்கு தமிழ்ச் சொல் கவிதை அரங்கம் என்று சொல்லலாம் என்று கருதுகிறேன். கவிதையாகவே வளர்ந்த தமிழை இழிவு படுத்த வேண்டுமென்ற நோக்கம் அந்த சாகித்திய அகாடமி என்ற கவிதை அரங்கத்திற்கு ஏற்படலாமா என்பது ஒரு வேதனை தரும் வினவாகும். கி.பி. 575ல் தமிழகத்தில் ஏற்பட்டிருந்த பல்லவர் ஆட்சியிலிருந்து தென் பாண்டி நாட்டை மீட்டான் என்ற வரலாறு வருவதற்கு முன்னால், யாருடைய ஆட்சியும் தென் பாண்டி நாட்டில் ஏற்படவில்லை. அப்போது ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் ஆண்டுவந்தான் என்பதையும் அவன், "நீர்வார் கண்ணை எம்முன் வந்தோய், யாரையோ நீ மடக் கொடியோய்" என்று கேட்க அதற்கு சோழநாட்டுப் பெருமையை எடுத்துச் சொல்லி தன்னை அறிமுகப் படுத்துகிறாள் கண்ணகி என்பதையும் வரலாற்று ஆதாரத்தோடு எடுத்துக் காட்டுகிற சிலப்பதிகாரத்தை இருட்டுக்குள் தள்ள வேண்டுமென்று நினைக்கிறார்களோ என்ற அச்சம் உண்டாகிறது. கி.பி. 11ஆம் நூற்றாண்டில் சிலப்பதிகாரம் தோன்றியது என்றும், அது மட்டுமல்லாமல் அதிலுள்ள கருத்துக்கள் கற்பனை என்றும் வரலாறு இல்லை என்றும் மறுக்கப்பட்டிருக்கிறது. அதை எழுதிய சில்லன் கோவிந்தசாமி என்பவருக்குத்தான் சாகித்திய அகாடமி பரிசு தந்திருப்பதாக அறிகிறேன். அது அவர் சொல்வதைப் போல கற்பனை இல்லை என்பதற்கான ஒரே ஒரு ஆதாரம் உண்டு. இளங்கோ அடிகள் அதைப் பாடும்போதே இப்படிப்பட்ட கருத்தைச் சொல்லப் பலர் பிற்காலத்தில் தோன்றுவார்கள் என்று எதிர்பார்த்து சிலப்பதிகாரம் என்று பெயர் வைத்தார். சிலப்பதிகாரம் என்பது சிலம்பை வைத்து அதிகரித்தது, சிலப்பதிகாரம் என்று தலைப்பிட்டார். அயணம் என்பதற்கும் அதிகாரம் என்பதற்கும் உள்ள வேறுபாட்டைக் காண வேண்டும். அயணம் என்றால், இப்படி இருக்க முடியும் என்று குறிப்பிடுவது ஏற்கப்படுகிற இலக்கிய மரபாகும். அதிகாரம் என்பது அதிகரித்து இருந்தது, வரலாறாகத் தொடர்ந்து இருந்தது என்ற பொருளைத் தருவதாகும். அதனால்தான் இராமாயணம் இப்படிப்பட்ட வகையில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டியதாக இருக்கிறது. சிலம்பை வைத்து அதிகரித்த வரலாறு என்பதைத் தெரிந்துகொள்வதற்காகவே அதன் தலைப்பு

[புலவர் புலமைப்பித்தன்] . [1978 மார்ச் 16

சான்றாக இருக்கிறது என்பதைப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். ஒருவேளை தமிழ் நாட்டின் வரலாற்றை, சிலப்பதிகாரத்தின் பெருமையைக் குறைத்தால், சாகித்திய அகாடமியின் பரிசு கிடைக்குமோ என்னவோ, எனக்குச் சந்தேகமாக இருக்கிறது. தமிழ்த் துறையில் வளர்ச்சி ஏற்பட வேண்டுமென்பதை எல்லோரும் மனமுவந்து வரவேற்கிறார்கள் என்பதை ஒப்புக்கொள்கிறேன். தமிழ்க் காவியங்களை. இலக்கியங்களை உலகமறியச் செய்ய வேண்டும். தமிழ் நூல்களை உலகமறியச் செய்ய வேண்டுமென்ற முயற்சியில் இந்த அரசாங்கம் ஈடுபட்டு வேற்று நாட்டு இலக்கியங்களை தமிழில் கொண்டுவரவும், தமிழ் நூல்களை வேற்று மொழியில் மொழி பெயர்க்கவும் திட்டமிட்டிருப்பதைப் பாராட்டுகிறேன். பாவேந்தர் பாரதி தாசன் அவர்கள்,

தாய் எழில் தமிழை என்றன்
  தமிழரின் கவிதை தன்னை
ஆயிரம் மொழியில் காண
  இப்புவி அவாவிற்றென்ற
தோயுறும் மதுவின்று
  தொடர்ந்து என்றன் செவியில் வந்து
பாயும் நாள் எந்த நாளோ ?
  யார் இதைப் பகர்வார் இங்கே !

என்று பாடியதற்கேற்ப தமிழக அரசு திட்டியிருக்கிற அந்தத் திட்டத்தை மகிழ்ச்சியோடு வரவேற்று, அந்தத் திட்டத்தின் முதல் கட்டமாக பாவேந்தன் பாரதி தாசனின் இலக்கியத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கும் முயற்சியில் அரசு ஈடுபட்டால், மிகவும் மகிழ்ச்சியடைவேன் என்பதையும் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கடைசியாக, தமிழாசிரியனாக இருந்தவன் என்ற அடிப்படையில் செஞ்சோற்றுக் கடன் என்பதைப் போல ஒரு சில கருத்துக்களைச் சொல்ல அனுமதி அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தமிழாசிரியர்களை பி.டி. ஆசிரியர் நிலையில் வைத்து, தலைமை ஆசிரியர் பதவி அளிக்கும் வகையில், அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏற்கெனவே 400 தமிழாசிரியர்கள் முதல் நிலை தலைமையாசிரியர்களாக இருந்ததை கடந்த ஆட்சியில் மாற்றிவிட்டார்கள். சட்டம் இடம் தரவில்லை என்று காரணம் காட்டப்பட்டது. சட்டம் என்பது நமக்காக ஏற்படுத்திக் கொள் வதுதான். தமிழாசிரியர்கள் தலைமையாசிரியர்களாக உயரும் வாய்ப்பு தர வேண்டும். எங்கும் தமிழ் எதிலும் தமிழ் என்று முழங்குகிற இந்தக் காலத்தில் அந்தக் கொள்கைக்கு இந்த நடவடிக்கை உதவியாக இருக்கும் என்ற அடிப்படையில் தெரிவித்துக்கொள்கிறேன்.



1978 மார்ச் 16] [புலவர் புலமைப்பித்தன்]

(பிற்பகல் 12-40)

இறுதியாக 107 பேர்கள் மட்டும் இன்று முதல்நிலைத் தமிழாசிரியர்களாக ஆக்கப்படாமல் இருக்கிறார்கள். ஏறத்தாழ 4,500 பேர்கள் இரண்டாம் நிலைத் தமிழாசிரியர்களாக இருந்தவர்கள் முதல்நிலைத் தமிழாசிரியர்களாகப் பதவி உயர்வு பெற்றிருக்கிறார்கள். இதற்குப் பின்னால் ஒரு 170 பேர் மட்டும் அந்த நிலையைப் பெறாமல் இருக்கிறார்கள். எனவே, அரசு இந்த 170 பேர்களுக்கும் முதல்நிலை தமிழாசிரியர்கள் பதவி உயர்வை அளிக்க உரிய முயற்சியில் ஈடுபட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தமிழ்த் துறையில் நல்ல பணிகளைச் செய்ய வேண்டும். தமிழ் வளர்ச்சித் துறை என்பது ஏதோ புத்தகம் வெளியிடும் ஒரு அமைப்பாக மட்டுமல்லாமல், நல்ல ஆக்கப் பணிகளில் ஈடுபட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஒட்டுமொத்தத்தில் இந்தக் கல்விக் கொள்கை என்பது நாட்டில் அனைவராலும் வரவேற்கக்கூடிய ஒரு கொள்கை என்று தெரிவித்து, ஓராண்டுக் கல்வி பாழ்பட்டுப்போனால், ஒரு 100 ஆண்டுக் காலச் சமுதாயம் பாதிக்கப்படுகிறது என்பதை மனதில் வைத்து எல்லோரும் கல்வித் துறையில் அமைதியை நிலைநாட்ட உறுதுணை புரிய வேண்டுமென்றும், கல்வியில் நல்ல முன்னேற்றத்தை உருவாக்க ஒத்துழைத்திட வேண்டும் என்றும் கருத்தினைத் தெரிவித்து, இந்தக் கல்விக் கொள்கை வெற்றி பெறுவதற்கு எல்லோருடைய ஆதரவுமிருக்கும் என்று கூறி, என் உரையை முடிக்கிறேன். வணக்கம்.

திரு. எம். சங்கரலிங்கம் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே, கல்விக் கொள்கைக் குறிப்பின்மீது நமது மேலவையில் விவாதிக்கப்படுகிற முன்னால் நம் மாநிலத்தின் எனது கருத்துக்களை எடுத்துச் சொல்வதற்கு செலவு செய்கிற ஒரு துறையை மொத்த வருவாயில் 24 சத வீதத்தைச் அவர்களையும் அந்தக் கல்வித் நிர்வகித்து வருகிற மாண்புமிகு அமைச்சர் பாராட்டுகிறேன். அவர்கள் துறை தலைவர்களையும் நான் உண்மையிலேயே போல் இல்லை. மற்ற துறை ஏற்றிருக்கிற பணி மற்ற துறையின் பணிகளைப் செல்லுகிற பணியா பணிகள் எல்லாம் அந்த ஆண்டு நிர்வாகத்தை நடத்திச் மாத்திரம் இனிவரு மட்டும் இருக்கிறது. இந்தத் துறைத் தலைவர்கள் இந்த நாட்டில் இருக் சமுதாயத்தின், ஒரு 50 ஆண்டு காலத்திற்குப் பிறகு கொண்டு, அவர்கள் வேண்டிய சமுதாயத்தின் முன்னேற்றத்தில் அக்கறை பெருமித உணர்வோ உருவாக்குகிற பணியில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்ற அவர்கள் பணியாற் ஈடுபட்டிருக்கிறார்கள்; அந்த உணர்வோடுதான் விரும்புகிறேன். வேண்டும் என்றும் இந்த நேரத்தில் எடுத்துச் சொல்ல

நம் மாநில வருவாயில் 176 கோடி ரூபாயை கல்வித் துறைக்காக நா ஒதுக்கியிருக்கிறோம். பிற இனங்களிலிருந்து இதில் சாட்டப்படும் தொகை சுட்டிக்காட்டி, சுமார் ரூ. 220 கோடி அளவுக்கு இந்தத் துறையில் என்

[திரு. எம். சங்கரலிங்கம்] [1973 மார்ச் 16

செலவாகிறது என்ற விளக்கம் இங்கே தரப்பட்டிருக்கிறது. இவ்வாறு நம்முடைய மாநிலத்திலுள்ள பிறந்த செல்வங்கள் அத்தனைக்கும் அறிவு படைத்த கல்வியைத் தந்து, ஊக்கமூட்டி அவர்கள் இந்த நாட்டில் தலைசிறந்த மக்களாக வாழ்கிற நிலையை இந்தத் துறையினர் உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள், உருவாக்க வேண்டும் என்று கூற விரும்புகிறேன்.

இந்தப் பணி எவ்வளவு சிறப்பாக நடைபெற வேண்டும் என்பதில் யாருக்கும் இரண்டுவிதமான கருத்து இருக்க முடியாது. இந்தப் பணியில் மிக முக்கியமான பொறுப்பு ஆசிரியர்களைச் சார்ந்தது என்பதையும் நாம் மறந்துவிட முடியாது. ஏனென்றால் கட்டிடங்கள் இல்லாமல் கல்வி கற்பிக்க முடியும். சாந்திநிகேதனம் அதைத்தான் நிரூபித்துக் காட்டியது. பெரிய கட்டிடங்கள், எழில் மாடங்கள் இல்லாமல் மரச் சோலைகளின் கீழ், தண்ணிழலின்கீழ்கூட கல்வியைக் கற்பித்து, இந்த நாட்டிற்கு ஏற்றவாறு, இந்த நாட்டின் தேவையைப் பூர்த்தி செய்யும் அளவுக்கு மாணவர்கள் வருகிற நிலைமையை உருவாக்க முடியும். ஆனால் ஆசிரியர்கள் இல்லாமல் கல்வியைக் கற்பிக்க முடியாது. பள்ளி சாராக் கல்வி முறையில்கூட ஆசிரியர்கள் நேரடியாக மக்களை, மாணவர்களைச் சந்திக்கவில்லை என்றாலும், அவர்களெல்லாம் வானொலி மூலமும் பல்வேறு அஞ்சல் வழி மூலமும் ஆசிரியர்கள் தயார் செய்து தந்த பாடங்களைக் கொண்டுதான் உருவாக்கப்படுகிறார்கள். ஆகவே கல்வித் துறைக்கே முதுகெலும்பு போன்றவர்கள் ஆசிரியர்கள்தாம். அந்த ஆசிரியர்களின் நிலை சரியாகக் கவனிக்கப்பட்டு, ஆசிரியர்களுடைய நிலை உயர்வாக அமைக்கப்பட்டு, அவர்கள் மனமொத்து கல்விப் பணியில் ஈடுபடுகிற போதுதான் கல்வி சிறக்கும். இதிலே யாருக்கும் எந்த விதமான ஐயமும் ஏற்படத் தேவையில்லை. மனதில் பல தொல்லைகளைத் தேக்கி வைத்துக்கொண்டு காலத்தின் கட்டளைக்கேற்ப காலை 10 மணிக்குச் சென்று மாலை 4 மணி வரை வகுப்பறையில் இருந்தால் போதாது. மனம் அமைதி பெற்று அவர் கல்விக் கூடத்தில் அமர்ந்து சொல்லிக் கொடுக்கும்போதுதான் நல்ல பலன் விளையும். மனநிலை ஒப்புக்கொள்ளவில்லை என்றால், பிற துறைகளாக இருந்தால், அவர்கள் இந்தப் பணியை நாளைக்குப் பார்த்துக் கொள்ளலாம் என்று தள்ளிப் போட முடியும். தங்கள் பைல்களை நாளைக்குப் பார்த்துக்கொள்ளலாம் என்று கட்டி வைத்துவிட முடியும். உயர்ந்த மாளிகையை உருவாக்குகிறவர்கள் கூட ஒரு நாள் அல்லது 2 நாள் வேலையை நிறுத்தி வைத்துவிடலாம். ஆனால் ஆசிரியர்களைப் பொறுத்த அளவில், அவர்கள் முழு அளவில் மனம் ஒத்து இந்தப் பணியில் ஈடுபட்டுச் செயல்படும்போதுதான் நல்ல விளைவைக் காண முடியும். அந்தச் சூழ்நிலையை இந்தத் துறை உருவாக்கித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



1978 மார்ச் 16] [திரு. எம். சங்கரலிங்கம்]

இங்கே அளிக்கப்பட்டிருக்கிற கல்விக் கொள்கை விளக்கக் குறிப்பில் 100 மாணவர்கள் முதல் வகுப்பில் சேர்ந்தால் அதில் 58 சதவீதத்தினர்தான் 5-வது வகுப்புவரை வருகிறார்கள். மற்ற 48 சதவீதத்தினர் 5-வது வகுப்பை எட்டுவதேயில்லை என்று கருத்துத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. பத்தாவது வகுப்பு அல்லது 11-வது வகுப்புக்கு வருகிறபோது, இந்தச் சதவீதம் இன்னும் குறைந்துவிடும்; 30 சதவீதத்திற்கும் குறைவாகப் போய்விடுகிறது. ஆகவே இவ்வாறு மாணவர்களுடைய எண்ணிக்கை குறைவதற்கு என்ன காரணம் என்று ஆராய்ந்து கொண்டிருக்கிறோம். ஆனால் மிக முக்கியமான காரணம் வறுமைதான். இந்த வறுமை என்பது நம் நாட்டுப் பொருளாதாரத்தோடு பின்னிப் பிணைந்திருக்கிற ஒன்றாகிவிட்டது. எனவே 3-வது வகுப்புவரை படிக்கும் மாணவர்களின் எண்ணிக்கையைப் பார்த்தால், ஒருவேளை கொஞ்சம் குறைவாக இருக்கும். அதாவது 58 சதவீதம் என்பது 56 சதவீதமாகக் குறையும். பெருவாரியான குழந்தைகளின் பெற்றோர்கள் தங்களுடைய குழந்தைகளைப் பள்ளிக்குத் தொடர்ந்து அனுப்ப முடியாத அளவுக்கு அவர்கள் வறுமை தடுத்துவிடுகிறது. ஐந்து வயது, பத்து வயது குழந்தைகளைக்கூட ஏதோ ஒரு தொழிலில் ஈடுபடுத்தி, ஏதாவது ஒரு குற்றேவல் செய்து பணம் சம்பாதிக்க, ஒரு சிறு சம்பளத்திற்கு அனுப்பிவிடுகிறார்கள். இந்த நிலைமையினை மாற்ற வேண்டுமானால், நம் நாட்டுப் பொருளாதார நிலைமை மாற வேண்டும். பொருளாதாரத்தில் ஒரு மாற்றம் ஏற்படும் வரை, நாம் காத்திருக்க முடியாது என்றுதான் கல்வித் துறையில் ஈடுபட்டுள்ள நாமெல்லாம் முயற்சியை எடுத்துக்கொண்டிருக்கிறோம். இதனடிப்படையில் இந்த நாட்டில் உள்ள அறநிலையங்கள் தங்களிடம் உள்ள நிதியை ஒன்று சேர்த்து, சிறு குழந்தைகளை தத்து எடுத்துக்கொண்டு, வறுமையின் காரணமாக கல்வியை விட்டுவிடாத சூழ்நிலையை உருவாக்க வேண்டிய முயற்சியில் நாம் ஈடுபட வேண்டும் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இதற்குக் காரணம் என்னவென்றால், பிற நாடுகளில் எல்லாம் சமய சார்புள்ள அமைப்புகள் இந்தியாவில் உள்ள குழந்தைகளைக் கூட தத்து எடுத்து கல்வி கற்பிக்கின்றன. இங்கிலாந்து போன்ற பெரிய நாடுகளில் உள்ள சமய அமைப்புகள் இங்குள்ள கிருஸ்துவ மிஷனரிகள் மூலமாக அனாதைக் குழந்தைகளைத் தத்து எடுத்துக்கொண்டு கல்வி கற்பித்து வருகின்றன. ஆனால் இங்குள்ள அறநிலையங்களோ அனாதைக் குழந்தைகளை தத்து எடுத்துக்கொள்ள முன்வருவதில்லை என்பது மட்டுமல்ல, பிற நாடுகளிலிருந்து இந்த அறநிலையங்களுக்குப் பொருள் வந்தால், அந்தப் பொருள்களை தத்து எடுத்துக்கொள்ளும் நிலையில் இருக்கின்றன. இந்த நிலையை மாற்ற வேண்டும். இதற்கான நல்ல முயற்சிகளை மேற்கொண்டால் தான், நாம் இந்த வகையிலே நல்ல வெற்றியைக் காண முடியும்.

அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், அந்தப் படியில் கால் எடுத்து
வைக்கத் தொடங்கியிருக்கிறது. அதில் ஒன்றுதான் நண்பகல் உணவு.
அதற்காக மாணவர் ஒருவருக்கு 10 பைசா தருகிறோம். பத்து பைசாவில்
எதனை கொடுக்க முடியும்? ஒரு டம்ளர் காப்பிகூட 30 பைசா ஆகிறது.
ஒரு டம்ளர் கஞ்சிகூட 10 பைசாவில் கொடுக்க முடியாது. அதற்கும்
20 பைசா வேண்டும். ஐந்து பைசாவை அங்குள்ள நகர மன்றங்களும்,
பஞ்சாயத்துக்களும் கொடுக்க வேண்டும் என்றும் போட்டிருக்கிறோம். ஆனால்
யாரும் கொடுப்பதில்லை. மாணவர்களுக்கு நண்பகல் உணவு கொடுக்க வேண்டும்
என்பதை மட்டும் கட்டாயப்படுத்துகிறோம். ஆசிரியர்கள் கஷ்டப்படுகிறார்கள்.
அவர்கள் கணக்கு வைக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. இந்த அவல
நிலையைப் போக்க சமுதாயத்தில் உள்ள அறநிலையங்கள் கல்வித் துறையில்
கைகொடுக்க முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற நாடுகளில் இருந்து வருகிற, 'கேர்' ஸ்தாபனம் செய்கிற அளவுக்குக்
கூட நம் நாட்டுக் குழந்தைகளுக்கு இந்த நாட்டில் உள்ள அறநிலையங்கள்
எதையும் செய்யவில்லை என்பது என்னுடைய குற்றச்சாட்டு. எனவே
அறநிலையங்களை அணுகி, இதை முறைப்படுத்த வேண்டும் என்று சொல்லிக்
கொள்ள ஆசைப்படுகிறேன். முதலில் நான் சொன்னதைப்போல், ஆசிரியர்கள்
மன அமைதியோடு தங்கள் தொழிலில் ஈடுபடத்தக்க சூழ்நிலையை
உருவாக்க நாம் முயற்சிகளை மேற்கொண்டாக வேண்டும். இந்த முயற்சியை
மேற்கொள்வதில் காலம் தாழ்த்தாமல் ஆட்சிக்கு உதவி செய்யும் வகையில்
கல்வித் துறை இதில் ஈடுபட வேண்டும் என்பது என்னுடைய வேண்டு
கோளாகும். இன்றையதினம் கல்வித் துறை இப்படிச் செயல்படுகிறது
என்றால், ஏதோ முயற்சிக்கிறது அவ்வளவுதான். வெற்றிபெற்றது என்று
என்னால் சொல்ல முடியவில்லை. இதற்குக் காரணங்கள் பல. இருப்பினும் ஒரு
முக்கிய காரணம் கல்வித் துறையில் பல்வேறு ஆணைகள் பிறப்பிக்கப்
படுகின்றன. இந்த ஆணைகள் எல்லாம் மாவட்டத்திற்கு மாவட்டம் ஒரே
முறையில் அமுல்படுத்தப்படுவதில்லை. ஒருங்கிணைந்த முறையில் அவைகள்
அமுல்படுத்தப்படுவதில்லை. எந்த நோக்கத்தோடு ஆணைகள் பிறப்பிக்கப்
பட்டனவோ அந்த நோக்கங்களுக்காக அவைகள் அமுல்படுத்தப்படு
கின்றனவா என்றால், இல்லை. கல்வித் துறையில் உள்ள அதிகாரிகள் இதில்
மிகுந்த கவனம் செலுத்த வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான்
கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

கல்வித் துறையில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்கள் கல்வித் தரத்தில் மிக
உயர்ந்தவர்களாக இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் அரசு அவர்களுக்கு
ஊக்க ஊதிய உயர்வு அளிக்கிறது. அதாவது பி.ஏ. படித்த ஆசிரியர், எம்.ஏ.





படித்துப் பட்டம் பெற்றால், அவருக்கு இரண்டு ஊக்க ஊதிய உயர்வு
அளிக்கப்படுகிறது. அதே போல் பி.டி. அல்லது பி.எட். படித்த ஆசிரியர்
எம்.எட். படித்துப் பட்டம் பெற்றால், அவருக்கும் இரண்டு ஊக்க ஊதிய
உயர்வு அளிக்கப்படுகிறது. அவர்களுக்கு ஊக்க ஊதிய உயர்வு அளிக்கப்பட
வேண்டும் என்று அரசு கருதி, அத்தகைய உத்தரவைப் போட்டது. இப்படி
ஊக்க ஊதிய உயர்வு அளிப்பதன் மூலம் கல்வித் தரம் உயரும் என்று எண்ணி
உத்தரவிடப்பட்டது. அந்த ஊக்க ஊதிய உயர்வைக் கொடுப்பதில் பல்வேறு
காரணங்களைச் சொல்லி தடை போடுகிற அதிகாரிகள் யாராக இருந்தாலும்,
அவர்கள்மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்தச்
சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

THIRU G. SWAMINATHAN: There is no quorum in the House.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: என்னையும் சேர்த்து
எண்ணுங்கள். என்னை விட்டுவிட்டு எண்ணுகிறீர்கள்.

(பிற்பகல் 12-50)

திரு. எம். சங்கரலிங்கம்: உதாரணமாக 1971-லே உள்ள அரசாணை,
9—12—1971-ல் வந்த அரசாணை எண் 4763/7-ன் படி ஊக்க ஊதிய உயர்வு
கொடுக்கப்பட வேண்டும் என்று இருக்கிறது. இதுவரை கொடுக்கப்
பட்டிருக்கிறது. 7—7—1978-ல் ஒரு புரோசீடிங்ஸ் வந்திருக்கிறது. கல்வி
குறிப்பாணை எண் 2264/சி8/78-லே என்ன சொல்லியிருக்கிறார்கள்? இந்த
எம்.ஏ. பட்டம் பெற்றவர்கள் 3-வது வகுப்பைப் பெற்றிருந்தால், அவர்களுக்கு
இதுவரை கொடுக்கப்பட்டு வந்த ஊக்க ஊதிய உயர்வை நிறுத்த வேண்டும்,
கொடுத்ததைத் திருப்பித் தரவேண்டும் என்று ஒரு உத்தரவைப் பிறப்பித்
திருக்கிறது.

"If any of the teachers possessing third-class Post-Graduate
degrees were sanctioned incentive increments wrongly . . . . "

நான் குறிப்பிட்ட ஆணையிலே. எம்.ஏ. என்றுதான் சொல்லப்பட்டிருக்கின்றதே
தவிர, பர்ஸ்ட் கிளாஸ், செகண்ட் கிளாஸ் அல்லது தேர்ட்டு கிளாஸ் என்று
வகைப்படுத்திச் சொல்லவில்லை.

". . . immediate action should be taken to revise their pay,
disallow the advance increment and recover the amount so far paid".
என்று போடப்பட்டு, இது ரொம்ப வேகமாகச் செயல்படுத்தப்பட்டு பல
ஆசிரியர்களுக்கு ரெகவரி பிரோசீடிங்க்ஸ் போடப்பட்டிருக்கிறது. இப்போது
இந்த ஆணைகளைக் கொண்டு வந்தது மட்டுமல்லாமல், மேலும் அதற்கு
ரெட்ராஸ்பெக்டிவ் எபக்ட் கொடுத்துள்ளார்கள்.

THIRU G. SWAMINATHAN: Sir, the hon. the Leader of th Opposition is referring to a matter which is already closed. Th order has been cancelled.

**திரு. எம். சங்கரலிங்கம் :** மாண்புமிகு அங்கத்தினர் திரு. ஜி. சுவாமிநாதல் அவர்கள் இந்த ஆணை ரத்து செய்யப்பட்டுவிட்டது என்று சொல்கிறார்கள் அது குறித்து எனக்கு மிக்க மகிழ்ச்சி. அதைத்தான் செய்ய வேண்டும் என்ற தெரிவித்துக்கொள்கிறேன். ரத்து செய்யப்பட்டதாகத்தான் சொல்ல படுகிறது. ஆனால் அது நிறைவேற்றப்படவில்லை என்பதால் சொல்கிறேன் ரத்து செய்யப்பட்டும் பயன் இல்லை. அந்த ஆசிரியர்களுக்கு அந்தப் பயனை கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் அந்த மாதிரியான புரோசிடிங்க்ஸ் கையில் வைத்திருந்தார்கள். அந்த உத்தரவுகளைப் பார்த்தேன். அதனால்தான் சொல்கின்றேனே தவிர, வேறு அல்ல.

**திரு. வே. தங்கப்பாண்டியன் :** மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் பல பள்ளிக்கூடங்களுக்கு எதற்காகச் சென்றார்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. எம். சங்கரலிங்கம் :** நம் நாட்டில் உள்ள ஜனநாயக அமைப்பு முறைதான் நாம் எல்லோரையும் செல்ல வைக்கிறது. அவர்கள் நம்மைப் பார்த்துக் கேட்கிற நிலைமைகளை மாற்றுகிறது. நாமே அவர்களைப் போய்ப் பார்த்து அவர்கள் குறைகளைக் கேட்கின்ற நிலைமைகள் இருக்கின்றன அதனால் அவர்களைப் பார்த்து, அவர்களுடைய குறைகள் என்ன என்று கேட்கிறோம். அப்படிக் கேட்கின்றபோது, இந்த மாதிரியான குறைகள் எல்லாம் நமக்குத் தெரிய வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** துணைத் தலைவரவர்களே, இப்போது செல்லவில்லை என்றால், பயன் இருக்காதா ? அப்படிப் போய்ப் பார்த்திருப்பதனால்தான் பயன் ஏற்படும் என்று கருதுகிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. எம். சங்கரலிங்கம் :** பயன் உறுதியாக ஏற்படும் என்றுதான் நான் நம்புகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் இது தெரியும் என்று எண்ணுகிறேன். இந்த அவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்த பின்னர், ஒரு வார காலமாக இருந்தாலும், அப்படித் தான் எடுத்துச் சொல்வேன். தேர்தல் நேரம் என்பதற்காக எடுத்துச் சொல்வது என்ற அளவுக்கு, அப்படிப்பட்ட மோசமான நிலைமையில் நான் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அந்தக் கருத்தில் அவர்கள் சொல்லவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.





**திரு. எம். சங்கரலிங்கம்:** நானும் வேடிக்கையாகத்தான் சொல்கிறேன். அவர்கள் அவையில் சுவையூட்டவேண்டும் என்பதற்காகத் தான் சொன்னார்கள். எந்தவிதமான உள்நோக்கத்துடனும் அவர்கள் சொல்லவில்லை என்பதும் எனக்குத் தெரியும். தேர்தல் வந்துவிட்டது என்பதனால் மட்டும் நாமும் அவர் களுடைய தேவைகளைப்பற்றி அறிய வேண்டும் என்பதல்ல. ஆசிரியர்கள் பணி 10 அல்லது 15 ஆண்டுகளாக நிரந்தரம் செய்யப்படாமலிருந்தால், அதைப் பற்றிக் கேட்க வேண்டியிருக்கிறது. அவர்களுக்குப் பணி நிரந்தரம் ஏற்பட வேண்டும் என்பதற்காக எங்களைப் போன்ற ஆசிரியப் பிரதிநிதிகள் அங்கே அவர்களிடம் போகவேண்டியிருக்கின்றது. இந்த விஷயங்களில் நாங்கள் தலையிடவேண்டியிருக்கின்றது. அவர்கள் அமைதியாக வேலை செய்து கொண்டிருப்பவர்கள். இந்தமாதிரியான தொல்லைகளால் கஷ்டமான சூழ்நிலையில் இருக்கின்றார்கள் என்பதைத் தான் நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அதையொட்டி நான் ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். 1—4—1970 முதல் 3—3—1973 வரையில் நியமனம் பெற்ற பட்டதாரி ஆசிரியர்கள் பணியை நிரந்தரம் செய்யவில்லை. அதைப்பற்றி நம்முடைய கல்வி அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்து, ஒரு அரசாணை பிறப்பித்து, 702 பேர்களைத் தேர்வாணைக் குழுவிற்கு அனுப்பினார்கள். அப்படித் தேர்வாணைக் குழுவின் ஒப்புதல் பெற்று வேலைக்குச் சேர்ந்தது முதல் அவர்கள் பணியை வரன்முறைப்படுத்தியிருப்பதாக அறிவித்தார்கள். அதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். வரன்முறைப்படுத்தவேண்டும் என்பது குறித்து டி.ஈ.ஓ.-விடமும் டைரக்டர் அவர்களிடமும் போகிறார்கள். இரண்டாவது நிலை தமிழாசிரியர்கள் 30 வயதிற்குமேல் முதல் நிலை தமிழாசிரியர்களாக வருகிறார்கள். பஞ்சாயத்து யூனியன் பள்ளிகளிலே ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களாக இருப்பவர்கள் எலிமெண்டரி கிரேட் ஆசிரியர்களாக வருகிறார்கள். முப்பது வயதிற்குமேல் நடு நிலை ஆசிரியராக வருகின்றார்கள். 1970-73-க்கு இடையிலே வந்தவர்கள் இருக்கிறார்கள். அந்தப் பணிக்கு வந்திருப்பவர்களுக்கு 1974-லிருந்து தான் பணி வரன்முறை செய்யப்பட்டு வருகிறது. இதை ஒரு எடுத்துக்காட்டாகச் சொல்லிக் கொள்கிறேன். நான் மார்ச் மாதம் 2 ஆம் தேதி ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்தேன். அதைப்பற்றிப் பரிசீலனை செய்து ஆணை பிறப்பிப்பதாகச் சொன்னார்கள். இதுவரையில் அதைப்பற்றி ஆணை எதுவும் வரவில்லை. இதை நான் வலியுறுத்துவதற்குக் காரணம் என்னவென்றால், அந்த ஆணையின் அடிப்படையில், ஒவ்வொரு ஆசிரியரும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். வழங்கப் பட்ட தேர்வு நிலை ஊதியம் 'ரெகவரி' செய்யப்பட்டு வருகிறது. திருநெல்வேலி மாவட்டத்தில் பல பேர்களுடைய ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்டிருக் கிறது. ரூ. 2,000, ரூ. 3,000 என்ற அளவுக்குக்கூட 'ரெகவரி' ஆகியிருக்கிறது. நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்வது என்ன

வென்றால், இதைப்பற்றி நீங்கள் பரிசீலனை செய்வதற்கு முன்னால், இந்த ஆணையின்படி சம்பளப்பிடித்தம் எங்கெங்கு நடைபெறுகிறதோ, அவைகளை உடனடியாக நிறுத்த வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன். முப்பது வயதுக்கு முன் வேலை பார்த்தவர்கள் பலருக்கும் இப்படிப் பிடித்தம் செய்கிறார்கள். நாற்பது வயது வரை விதிவிலக்குத் தரலாம் என்று அரசு தேர்வாணைக்குழுவே குறிப்பிட்டுள்ளது. அதனுடைய எல்லைக்குள் வராத பட்டதாரி ஆசிரியர்களுக்கும் இத்தகைய சம்பளப் பிடித்தம் செய்ய வேண்டிய தேவையே இல்லை. நான் அறிந்த வரையிலே சொல்கிறேன். இந்த மாதிரிச் செய்வது கல்வி இலாகாவின் மேல் மட்டத்திலே உள்ளவர்கள் அல்ல. கீழ்மட்டத்திலே இருக்கின்ற அதிகாரிகள்தான் இப்படிச் செய்கின்றார்கள் என்று சொல்ல வேண்டும். 'இன்சென்டிவ் இன்கிரிமெண்ட்' என்று சொல்கிறார்கள். ஆனால் அதைப் பிடித்தம் செய்கிறார்கள். ஒரு கல்வி மாவட்டத்திலே இருப்பது, அடுத்த கல்வி மாவட்டத்திலே கொடுப்பது இல்லை என்ற நிலைமைகள் இருக்கின்றன.

இதே மாதிரி, புரொவிஷனல் சர்டிபிகேட்டின் பேரில் 'இன்சென்டிவ் இன்கிரிமெண்ட்' கொடுக்கின்ற ஒரு உத்தரவு இருக்கிறது. அப்படியும் கொடுக்கின்றார்கள். சில மாவட்டங்களில் அப்படிக் கொடுப்பதில்லை. சில மாவட்டங்களில் கொடுக்கிறார்கள். பல்கலைக் கழகத்தில் பலவிதமான போராட்டங்கள் காரணமாக 'கான்வொகேஷன்' முறையாக நடக்க முடியவில்லை. இந்தச் சூழ்நிலையில் புரொவிஷனல் சர்டிபிகேட்டைக் கொடுக்கின்றார்கள். தற்காலிக சர்டிபிகேட்டையே வைத்து இன்சென்டிவ் இன்கிரிமெண்ட் கொடுக்கின்றார்கள். திருநெல்வேலியில் குழித்துறை, தக்கலை என்ற இடங்களில் அவ்வாறு கொடுக்கப்பட்டிருக்கின்றது. நாகர்கோவிலில் கொடுக்கப்படவில்லை. மற்ற மாவட்டங்களில் கொடுத்திருக்கின்றார்கள் என்று நானே அவர்களிடம் சொன்னேன். புரொவிஷனல் சர்டிபிகேட்டை வைத்துக் கொண்டு இன்கிரிமெண்ட் கொடுத்திருக்கிறார்கள். ஒரிஜினல் சர்டிபிகேட்டைப் பிறகு வாங்கிக்கொடுக்க வேண்டும் என்று சொல்லிவிட்டு, இன்கிரிமெண்ட் கொடுத்திருக்கிறார்கள். முதன்மைக் கல்வி அதிகாரிகள் கொடுக்கலாம் என்று சொல்கின்றார்கள். சில இடங்களில் மாவட்டக் கல்வி அதிகாரிகள் முடியாது என்று சொல்லி விடுகின்றார்கள். இது குறித்த அரசு ஆணை, கொள்கைகள் விளக்கமாக இருந்தும்கூட, மாவட்டங்களில் இந்தமாதிரியான நிலைமைகள், ஆசிரியர்கள் பாதிக்கப்படுகின்ற நிலைமைகள் இருந்துகொண்டிருக்கின்றன என்பதை நான் வருத்தத்தோடு சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

ஜனவரி மாதம் 10 ஆம் தேதி அன்று இந்த அவையிலேயே ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வந்தேன். அரசு அதைப்பற்றிப் பரிசீலிப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இப்போது இரண்டு மாதங்கள்





ஆகிவிட்டன. துண்டுபட்ட பணிக்காலத்தையும் கணக்கில் எடுத்துக்கொண்டு சிறப்பூதியம் கொடுக்க வேண்டும். இது குறித்து கொள்கை விளக்கக் குறிப்பிலேகூட 30-வது பக்கத்திலே சொல்லப்பட்டிருக்கிறது. ஆசிரியர்களுக்கு வேலையில் பதவி உயர்வு வாய்ப்புகள் குறைவு. ரெவின்யூ இலாகாவிலே, மற்ற இலாகாவிலே இருப்பது மாதிரி வாய்ப்புகள் கல்வி இலாகாவிலே இல்லை. அதனால் 10 ஆண்டு பணிக்காலம் உள்ளவர்களுக்குச் சிறப்பூதியம் அளிக்கலாம் என்பதை அரசினுடைய கொள்கையாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். 322 ஜி.ஓ.-வின்படி முதலிலே தேர்வு நிலை கொடுத்தது. 519 அரசாணை வந்தது. அதற்குப் பிறகு 333 அரசாணையின்படி துண்டுபட்ட காலத்தையும் சேர்த்து தேர்வு நிலை வழங்கலாம் என்று வந்தது. அவர்கள் எந்த நிறுவனத்தில் இருந்தாலும், அரசுப் பள்ளி நிர்வாகத்தில் இருந்தாலும், தனியார் பள்ளி நிர்வாகத்தில் இருந்தாலும், ஏஜென்சி எதுவாக இருந்தாலும், வழங்கலாம் என்று இருக்கின்றது. அண்மையில் 22—8—1977-ல் ஒரு அரசுக் குறிப்பாணை வந்தது. கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள தனியார் பள்ளிகளில் மாத்திரம் தொடர்ந்து பணியில் இருந்த ஆசிரியர்களுக்கு இந்தக் குறிப்பாணை வரப்பெற்றதன் காரணமாக வழங்கப்பட்டிருக்கிறது. பலருக்குத் தேர்வு நிலை சம்பளத்தை நிறுத்தியும் வைத்திருக்கிறார்கள். இனிமேல் கொடுக்கும்போது, துண்டுபட்ட காலத்தையும் கணக்கில் எடுத்துக்கொடுக்க வேண்டும். அப்படிக் கணக்கிடுவது நிறுத்தப்பட்டதால், 700 ஆசிரியர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். துண்டுபட்ட பணிக் காலத்தையும் சேர்த்து தேர்வு நிலை ஆசிரியர்களுக்கு வழங்கப்படாமலிருந்தால், அவர்களுக்கு பயம் ஏற்படுகிறது. இந்த மாதிரியான சூழ்நிலைகளைக் கல்வித் துறையில் வைத்துக் கொண்டிருந்தால், அது கல்வி வளர்ச்சிக்கு உகந்ததாக இருக்காது என்பதை நான் சொல்லிக்கொள்கிறேன்.

(பிற்பகல் 1-00)

ஆசிரியர்கள் அமைதியான நிலையில் பணிக்கு வந்து செல்கிற நிலை இருக்க வேண்டுமென்பதை மனதில்கொண்டு, நம்முடைய அணுகுமுறை இருக்க வேண்டுமென்று நான் முதலிலேயே கூறினேன். மூன்றாவது சம்பளக் கமிஷனுக்குக் கல்வித் துறையே ஒரு கருத்தை எடுத்துச் சொல்லி, ஆசிரியர்கள் நிலையை மற்ற ஊழியர்களின் நிலையிலிருந்து வேறுபட்டுப் பார்க்க சிபாரிசு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அலுவலகங்களில் பணி புரியும் எழுத்தர்களுக்குக் குறைந்தபட்ச கல்வித் தகுதி எஸ்.எஸ்.எல்.சி. என்று சொல்லுகிறார்கள். இடைநிலை ஆசிரியராக வர வேண்டுமென்றால், எஸ்.எஸ்.எல்.சி. படித்துவிட்டு, அதற்குப் பிறகு இரண்டு ஆண்டுகள் ஆசிரியர் பயிற்சி பெற வேண்டும். அவரிடம் தொழிற் கல்வியும் இருக்கிறது. இரண்டு ஆண்டுகள் பயிற்சி பெற்ற இவர்களுடைய ஊதியம் மற்றவர்களுடைய

ஊதியத்திலிருந்து வித்தியாசமாக இருக்க வேண்டும். எஸ்.எஸ்.எல்.சி. படித்துவிட்டு எழுத்தராக வருகிறவருக்கு. சம்பளம் 210 ரூபாய். எஸ்.எஸ்.எல்.சி. படித்து, பிறகு இரண்டு ஆண்டுகள் ஆசிரியர் பயிற்சி பெற்ற இடைநிலை ஆசிரியர்களுக்கும் 210 ரூபாய்தான் சம்பளம் என்ற நிலை இல்லாமல், இவர்களுடைய சம்பளம் வித்தியாசமான நிலையில் இருக்க வேண்டும். பி.ஏ. படித்துவிட்டு வருகிற அதிகாரிக்கும், பி.ஏ.,பி.டி. படித்த ஆசிரியருக்கும் ஒரே சம்பளம் என்ற நிலை இல்லாமலிருக்க, ஊதியக் கமிஷனுக்குக் கல்வித் துறை சிபாரிசு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. க. அறிவழகன் :** மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர்கள் சிக்கனம் காட்டுவது என் என்று தெரியவில்லை. ஊதியக் குழுவிலே ஆசிரியர்கள் குறித்து தனியாகக் கவனிக்க வேண்டுமென்று சொல்லுகிறார்கள். தனியாக ஆசிரியர் களுக்கென்று ஊதியக் குழு ஏற்படுத்தி, இதைக் கவனிக்க வேண்டுமென்று சொன்னால், நன்றாக இருக்குமென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. எம். சங்கரலிங்கம் :** என்னைவிட ஒரு படி வேகமாக, ஆசிரியர்களுக் கென்று தனி ஊதியக் கமிஷன் வேண்டுமென்று சொல்லிய மாண்புமிகு உறுப்பினர் திரு. அறிவழகன் அவர்கள் கருத்தை வரவேற்று, அதை வலியுறுத்தி, அது குறித்து மாண்புமிகு கல்வி அமைச்சரவர்கள் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கேரளம், கருநாடகம் மாநிலங்களில் இருக்கக்கூடிய ஆசிரியர்கள், மற்ற ஊழியர்கள் பெறுகிற சம்பள விகிதத்தைக் கணக்கில் கொண்டு, அதற்கேற்ற முறையில் ஆசிரியர்கள் ஊதியத்தை உயர்த்த வேண்டுமென்று சொல்வதில் தவறில்லை. பல்கலைக்கழக மானியக் குழு நிர்ணயித்த சம்பளத்தைக் கல்லூரி ஆசிரியர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று அரசு முடிவெடுத்திருக்கிறது. அதை வரவேற்கிறேன். அவர்கள் 1973 ஆம் ஆண்டிலிருந்து அந்தச் சம்பள விகிதத்தை அமல்படுத்த வேண்டுமென்று சொல்கிறார்கள். 1977 ஆம் ஆண்டிலிருந்து அமல்படுத்துகிறோமென்று நம்முடைய அரசு தெரிவிக்கிறது. 1973 ஆம் ஆண்டிலிருந்து அமல்படுத்தினால், அரசுக்கு 20 சதவிகிதம்தான் இழப்பு ஏற்படுகிறது. 1978 ஆம் ஆண்டுக்குமேல் முழுத் தொகையையும் நம்முடைய அரசு கொடுக்க வேண்டும். எப்போது பல்கலைக் கழக மானியக் குழு சொன்னதோ, அதிலிருந்து ஐந்து ஆண்டுகளுக்கு 80 சதவிகிதம் தருகிறோம், அதற்குப் பிறகு முழுப் பொறுப்பையும் நீங்களே ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று மத்திய அரசு சொல்லியிருக்கிறது. நம்முடைய அரசு அந்தச் சம்பள விகிதங்களை 1977 ஆம் ஆண்டிலிருந்து அமல்படுத்தினால், ஓர்



ஆண்டுக்கு மத்திய அரசின் உதவியான 80 சதவிகிதம் கிடைக்கும். நான்கு ஆண்டுகளுக்கு முன்னாலிருந்து அந்தச் சம்பள விகிதங்களைக் கொடுப்பதாக அறிவித்தால், மத்திய அரசிடமிருந்து அந்த நான்கு ஆண்டுகளுக்கும் 80 சதவிகிதம் உதவி கிடைக்கும். மாநில அரசு கொடுக்க வேண்டிய 20 சதவிகிதத்தை 'பான்ட்'-ஆகக் கொடுத்தால்கூட, ஆசிரியர்கள் அதை ஏற்றுக்கொள்வார்கள். கேள்வி நேரத்தின்போது, 'உங்களுடைய ஆட்சி யிலேயே நீங்கள் இதைச் சொல்லி, செய்திருந்தால், இவ்வளவு தலைவலி வந்திருக்காதே' என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். நாங்கள் செய்ய வேண்டுமென்று தான் இருந்தோம். அதற்குள் வெளியே போகச் சொல்லி விட்டார்கள். 1976 ஜனவரியில் போனோம். 1976 மார்ச் வரை இருந்திருந்தால். பட்ஜெட்டில் வந்திருக்கும். எனவே அதற்குப் பிறகு நீங்கள் தருகிற பட்ஜெட்டில் அதைச் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று சொல்வதில் தவறில்லை.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** 1975 மார்ச் பட்ஜெட்டில் ஏன் வரவில்லை ?

**திரு. எம். சங்கரலிங்கம் :** அறிவிப்புகள் கொடுக்க ஒரு காலம் இருக்கும். 1974-லே மத்திய அரசு அறிவித்தது. உடனே அதைப் பரிசீலனை செய்து, 1976-ல் அறிவிக்க இருந்தோம்.

**திரு. க. அறிவழகன் :** இதையெல்லாம் செய்யவில்லை என்பதால்தான், அமைச்சரவையை நீக்கிவிட்டார்களோ ?

**திரு. எம். சங்கரலிங்கம் :** அப்படியிருந்தால், அந்த நிலைமை உங்களுக்கு வந்து விடக்கூடாதென்பதற்காக மிகப் பரிவோடு இதைப்பற்றிக் கவனிக்க வேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன்.

**திரு. க. அறிவழகன் :** அதைத்தான் செய்யப் போகிறோம்.

**திரு. எம். சங்கரலிங்கம் :** 1973 ஆம் ஆண்டிலிருந்தே அந்தச் சம்பள விகிதங்களை அமல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நமது பள்ளிகளில் பெரும்பாலானவை கிராமங்களில் அமைந்திருப்பவை என்பதை நாம் நன்றாக உணருவோம். கிராமங்களில் ஆசிரியர்கள் பள்ளி களுக்குப் பக்கத்தில் தங்கியிருந்து, காலை 9 மணிக்குப் பள்ளிக்குச் சென்று, பணி புரியும் சூழ்நிலையை உருவாக்க வேண்டுமென்றால், கிராமங்களில் பணி புரியும் ஆசிரியர்களுக்கு வீட்டு வாடகைப் படி கொடுக்க வேண்டும். இதை, நான் மாண்புமிகு நிதி அமைச்சரவர்களிடம் ஒரு வினா மூலம் கேட்கும்போது, சிறு சதவிகிதத்தைக் குறைத்து அவர்களுக்கு வீட்டு வாடகைப்படி கொடுப்பது

[திரு. எம். சங்கரலிங்கம்] [1978 மார்ச் 16

நல்ல யோசனை என்று தெரிவித்துவிட்டு, அது ஏற்றுக்கொள்ளப்படுமா என்பதைப் பற்றி ஒன்றும் சொல்லாமல் விட்டுவிட்டார்கள். என்னுடைய கல்லூரி கிராமத்திலிருந்து 10 மைல்கள் தள்ளி அமைந்திருக்கிறது. நான் இரண்டு, மூன்று ஆண்டுகளுக்கு முன்னால் நடந்ததைச் சொல்கிறேன். கல்லூரியிலிருந்து முதலில் சம்பளத்தைக் கொடுத்துவிட்டு, பின்னால் 80 சதவிகிதம் கிரான்ட் வாங்கிக்கொள்ள வேண்டும். எனவே சம்பளம் வழங்கும்போதே வீட்டு வாடகைப் படியையும் சேர்த்துக் கொடுத்துவிட்டேன். ஆடிட்டில் வீட்டு வாடகைப் படி கிடையாதென்று சொல்லிவிட்டார்கள். பிறகு ஆசிரியர்களிடத்தில் சொன்னேன், நீங்கள் நாகர்கோவிலில் போய் உட்கார்ந்து கொள்ளுங்கள் என்று. அவர்கள் நாகர்கோவிலிலிருந்து வருகிறார்கள். அதற்கான சர்ட்டிபிகேட் கொடுக்கிறார்கள். அவர்கள் எல்லோருக்கும் வீட்டு வாடகைப் படி கொடுக்கப்படுகிறது. 10 மைலுக்கு அப்பாலிருந்து வந்தால் வீட்டு வாடகைப்படி இருக்கிறது. பள்ளிக்கூடத்திற்குப் பக்கத்தில் இருந்தால் இல்லை. உங்களுக்கெல்லாம் நன்றாகத் தெரியும், பல கிராமங்களில் வீடே கிடையாது. Unhealthy allowance, Hill allowance என்று இப்போது கொடுக்கிறார்கள். அதைப் போன்று 'Village allowance' என்று ஏதாவது கொடுத்தால்தான், கிராமங்கள் வளர முடியும்.

THIRU G. SWAMINATHAN: What is meant by 'unhealthy allowance'.

திரு. எம். சங்கரலிங்கம்: ஆலஞ்சோலை என்று சொல்லக்கூடிய பகுதிக்கும், மாஞ்சோலை என்று சொல்லக்கூடிய பகுதிக்கும் மலை ஈட்டுப்படி தர வேண்டுமென்று கேட்டோம். 1968-லே கேட்டோம். மலை ஈட்டுப்படி தர வேண்டிய அளவுக்கு அது உயரமான பகுதியில்லை என்று சொல்லிவிட்டார்கள். ஆனால் கொசுக்கள் நிறைய இருப்பதாலும், சுத்தமில்லாத பகுதியாக அவை இருப்பதாலும் 'Unhealthy allowance' என்று மலையீட்டு படியைவிடக் குறைவாகக் கொடுத்தார்கள்.

THIRU G. SWAMINATHAN: Sir, there is hill allowance, there is Special Locality allowance. Is there any 'unhealthy' allowance?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: 'un healthy allowance' என்று சொல்வதைவிட, 'Healthy allowance' என்று அதைச் சொல்லலாமென்று மாண்புமிகு உறுப்பினர் திரு. சுவாமிநாதன் அவர்கள் கருதுகிறார்கள்போல இருக்கிறது.



1978 மார்ச் 16]

திரு. எம். சங்கரலிங்கம்: பெயரை எப்படி வேண்டுமானாலும் வைத்துக
கொள்ளுங்கள். கிராம ஈட்டுப்படி என்றோ, கிராம ஊக்கப்படி என்றோ பெயர்
வைத்து, கிராமங்களிலே பணி புரிகிற ஆசிரியர்களுக்கும், மற்ற ஊழியர்
களுக்கும் கொடுக்க வேண்டும். கிராமங்களில் வீடுகள் கிடைப்பதில்லை. அவர்
களுக்கு நல்ல மருத்துவ வசதிகள் கிடைப்பதில்லை. பல்வேறு சிக்கல்களுக்
கிடையே அவர்கள் பணி புரிகிறார்கள். எனவே அவர்களுக்கு வீட்டு வாடகைப்
படி கொடுக்க வேண்டும். பெயர் எதுவாக இருந்தாலும், அந்தப் படி குறை
வாக இருக்கக்கூடாதென்பது என்னுடைய வேண்டுகோள்.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக ஆசிரியர்களின் பதவிப் பாதுகாப்பு
மிகமிக இன்றியமையாதது. இன்று கல்லூரி ஆசிரியர்கள் 'போராட்டம்,
போராட்டம்' என்று சொல்லும்போதெல்லாம் அவர்களுக்குள்ள அச்சம் பதவிப்
பாதுகாப்பு பற்றித்தான். சம்பளத்தை விட்டுக் கொடுக்கக்கூட அவர்கள்
தயாராக இருப்பார்கள். அரசு மீண்டும் மீண்டும் உறுதி அளித்திருக்கிறது.
அமைச்சரவர்கள் இந்த அவையிலும், பேரவையிலும் உறுதி அளித்திருக்
கிறார்கள். சக்திவாய்ந்த மசோதா அல்லது சட்டம் கொண்டு வரப்படுமென்று சொல்லியிருக்
கிறார்கள். அப்படி அமைச்சரவர்கள் சொன்னாலும், அதை நிறைவேற்ற
முடியாத சூழ்நிலை உருவாகியிருக்கிறதென்று அவர்கள் நினைக்கிறார்கள்.
கல்லூரிகளில் படிக்கும் மாணவர்களில் 60 சதவிகிதத்தினர் பி.யு.சி. மாண
வர்கள், அடுத்த ஆண்டிற்குப் பிறகு அந்த வகுப்பு கிடையாது. அதனால்
இப்போது கல்லூரிகளில் வேலை பார்க்கும் ஆசிரியர்களுள் 50 சதவிகிதத்தினர்
வேலையில்லாமல் போகிறார்கள். உயர்நிலைப் பள்ளிகளில் 10 ஆம் வகுப்பிற்குப்
பிறகு 11 ஆம் வகுப்பு கிடையாது.

(மாற்றுத் தலைவர் திருமதி சத்தியவாணி முத்து தலைமை)

(பிற்பகல் 1-10)

பதினோராவது வகுப்பில் வேலை பார்த்துக் கொண்டு வருகிற 7,200 ஆசிரியர்
களை பதவி விலக்கப் போகிறார்கள். அவர்களை எட்டாவது வகுப்புப் பாடங்
களைப் போதிக்க பயன்படுத்தப் போகிறார்கள் என்று சொல்லப்படுகிறது.
அப்படியானால் எட்டாவது வகுப்பிலுள்ள இடைநிலை ஆசிரியர்கள் 7,200
பேர்கள் வேலை இல்லாமல் போகிறார்கள். இதை எப்படி அரசு தீர்க்கப்
போகிறது என்ற வழி முறைகளை அறிவித்தால், நலமாக இருக்கும். ஆசிரி
யர்கள்—மாணவர்கள் எண்ணிக்கையை 1 : 25 என்று உயர்நிலைப் பள்ளி
களிலும், 1 : 30 என்று சில கல்லூரிகளிலும், இருபதுக்குக் கீழே பதினைந்து
மாணவர்கள் இருந்தாலும் ஒரு ஆசிரியரை வைத்துக்கொண்டால் கிராண்ட்
தருகிறோம் என்றும் சொல்லி, புதுமுக வகுப்பிலுள்ள மாணவர்களின்

[திரு. எம். சங்கரலிங்கம்] [1978 மார்ச் 1

எண்ணிக்கையையும், பட்டப் படிப்பு வகுப்பிலே உள்ள மாணவர்களின்
எண்ணிக்கையையும் மாற்றிக்கொள்ளுகிறோம் என்று வழி முறையைத் தெளி
வாகச் சொன்னால்தான் ஆசிரியர்களுக்கு நம்பிக்கை பிறக்கும். தற்போத
அவர்களுக்கு நம்பிக்கை இல்லை. அவர்களுடைய மனதில் வேலையை இழக்
போமோ என்ற அச்சம்தான் மேலோங்கி நிற்கிறது என்பதை இந்தச்
சந்தர்ப்பத்திலே சொல்லிக்கொள்ளுகிறேன்.

தனியார் பள்ளிகளில் ஒரு பிரிவைக் குறைத்தால், ஆசிரியர்களை நீக்க
வேண்டாமென்று கொள்கை வைத்திருக்கிறோம். ஒரு தனியார் பள்ளியிலே
பார்த்தேன், 11 ஆசிரியர்கள் வேலையில்லாமல் இருப்பதை. ஆனால் அவர்
களுக்கும் சம்பளம் வழங்கப்படுகிறது. ஒரு பள்ளியில் என்றால், இப்படி
வேலையில்லாமல் சம்பளம் வழங்க முடியும். ஆனால் பள்ளிதோறும் இப்படிப்
பட்ட பிரச்சினை வந்தால், அதை எப்படித் தீர்ப்பது? அவர்களை கிளார்க்
காகவோ, வேறு பணிகளுக்கோ அனுப்பி விடுவார்கள் என்ற அச்சம் அவர்
களின் மனதில் ஏற்படுகிறது. நாம் கல்வியை நாடெங்கும் பரப்பிவிட்டோம்.
பள்ளி இல்லாத ஊரே இல்லை. ஆகவே இந்த நிலையில் நாம் கல்வியினுடைய
தரத்தை உயர்த்த வேண்டும். இதற்கு ஒரு வழி, மாணவர்களுடைய
எண்ணிக்கை விகிதத்தைக் குறைப்பதுதான். மற்றொன்று, ஆசிரியர்களுடைய
வேலைப் பளுவைக் குறைப்பதாகும். 17 மணிகள் ஒரு உயர்நிலைப் பள்ளி
ஆசிரியர் பணி புரிய வேண்டும். 30 பீரியடில் அவருக்கு 26 பீரியடுகள் வரு
கின்றன. ஆரம்பப் பள்ளியிலும், உயர் தொடக்கப் பள்ளியிலும் எல்லா
பீரியடுகளும் வேலை செய்கிறார்கள். அங்கேயெல்லாம் அவர்களுடைய பணி
யின் நேரத்தை 15 மணிக்குக் குறைத்து ஆசிரியர்களுடைய எண்ணிக்கையைப்
பெருக்கலாம். கல்லூரிகளிலேகூட ஆசிரியர்களுடைய வேலைப் பளுவைக்
குறைத்து ஆசிரியர்களுடைய எண்ணிக்கையைப் பெருக்கலாம். இப்படி
யெல்லாம் செய்வதற்குரிய வழி முறையை அரசு மிக விரைவிலே அறிவிக்க
வேண்டும். அப்போதுதான் ஆசிரியர்கள் அமைதியடைவார்கள்.

அரசு எல்லா நடவடிக்கைகளையும் எடுத்தாலும்கூட, சில தனியார் பள்ளி
களில் வெளியேற்றப்பட்டவர்கள் இன்னமும் பள்ளிக்குத் திரும்ப எடுத்துக்
கொள்ளப்படாமலே இருக்கிறார்கள். இதனால் அந்த ஆசிரியர்கள் தவித்துக்
கொண்டிருக்கிறார்கள். உதாரணமாக, திருச்சி மாவட்டத்தில், கரூர் கல்வி
வட்டத்திலே நங்காவரம் என்ற இடத்தில் ஒரு ஆசிரியர், நடராஜன் என்பவர்
வேலையிலிருந்து நீக்கப்பட்டு, நாலரை வருடம் ஆகியும் இன்னும் வேலைக்குத்
திரும்ப எடுத்துக் கொள்ளப்படாமலே, இன்றும் இரயில்வே ஸ்டேஷனில் பிச்சை
எடுக்கிற சூழ்நிலையில் இருக்கிறார். இது குறித்து ஏற்கெனவேகூட சொல்லி
யிருக்கிறேன். அவரைத் திரும்பியெடுத்துக்கொள்ள வேண்டுமென்று அரசு



1978 மார்ச் 16] [திரு. எம். சங்கரலிங்கம்]

உத்தரவைப் போட்டிருக்கிறது. கல்விச் செயலாளர் அவர்களே அந்த
உத்தரவைப் போட்டிருக்கிறார்கள். அதற்குப் பிறகு அப்பீலுக்குப் போக
வேண்டுமென்றால், டிரிபியூனலுக்குப் போக வேண்டும். அதை விட்டுவிட்டு
ஐகோர்ட்டில் பெட்டிஷன் போட்டுவிட்டு, அது அட்மிட் ஆகிறதோ இல்லையோ
என்று இரண்டு வருடங்களாகக் காலத்தைக் கழித்துக் கொண்டிருக்கிறார்கள்.

அதைப் போலவே கன்னியாகுமரி மாவட்டத்தில் சவுத்பாலவிளை என்ற
இடத்தில் ஒரு பள்ளி. அது தனி நபர் ஒருவரால் ஆரம்பிக்கப்பட்டது. அவர்
நெருக்கடிநிலை காலத்திலே, அந்த நெருக்கடி நிலையைப் பயன்படுத்தி அதிகாரி
களின் ஆதரவில் மூன்று, நான்கு ஆசிரியர்களை வெளியேற்றிவிட்டார். பல
பொய்க் காரணங்களைச் சொல்லி, அந்த ஆசிரியர்களை வெளியேற்றியிருக்
கிறார். அந்த ஆசிரியர்கள் போராடிக்கொண்டிருக்கிறார்கள். அந்தத் தனி
நபர் இப்போது ஐகோர்ட்டில் பெட்டிஷன் போட்டு, மைனாரிட்டி இன்ஸ்டி
டியூஷன் என்று சொல்லி, எக்ஸ்-பார்ட்டி தீர்ப்பை வாங்கியிருப்பதாக அறி
கிறேன். இது உண்மையாக இருந்தால், நான் அறிந்தவரை உண்மையென்று
நம்புகிறேன், மிகவும் வருந்தத்தக்கது. மைனாரிட்டி இன்ஸ்டிடியூஷன் என்ற
பேரிலே ஒவ்வொரு ஆசிரியரும் அவமதிக்கப்படுகிறார். யாரையும் வெளியேற்
றலாம் என்ற நிலை, அதிலும் குறிப்பாக மைனாரிட்டி பள்ளிகளில் இன்றைக்கு
ஏற்பட்டிருக்கிறது. இது குறித்துக் கேட்டபோது, முன்பு ஒரு முறை
அமைச்சர் அவர்கள், மைனாரிட்டி பள்ளி ஆசிரியர்களுக்கு வேண்டிய பாது
காப்பை அளிப்பதற்காக அரசியல் சட்டத்தைத் திருத்தியும், மேல் முறை
யீட்டை உச்ச நீதி மன்றத்தில் செய்யும் அளவுக்கு நடவடிக்கையை அரசு
எடுக்கும் என்று உறுதியை அளித்தார்கள். ஆனால் இப்போது அவர்களைப்
பாதுகாக்கக் கூடிய நிலை இருப்பதாகத் தெரியவில்லை என்பதை இந்தச் சந்தர்ப்
பத்திலே சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். இது தனியார் பள்ளியில் உள்ள
நிலைமை.

அரசுப் பள்ளியிலே பத்தாண்டுகள், ஏழாண்டுகள் விதி 10 ஏ-1-ன் படி
வேலை பார்த்தவர்கள் இன்று வெளியே இருக்கிறார்கள். ஓராண்டு பணி புரிந்
திருந்தாலும்கூட, தேர்வாணைக் குழுவிற்கு வரும்படி அரசு உத்தரவிட்டிருக்
கிறது. ஆனால் கன்னியாகுமரி மாவட்டத்தில் முத்தையன் என்ற ஆசிரியர்
வேலை நீக்கம் செய்யப்பட்ட பிறகு உண்ணாவிரதம் இருந்து ஆஸ்பத்திரியில்கூட
'அட்மிட்' ஆனார். பிறகு அவருக்குப் பழையபடி விதி 10-ஏ-1-ன்படி வேலை
கொடுத்திருக்கிறார்கள். அதை நிரந்தரமாக அவருக்கு அளிக்க வேண்டுமென்று
இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்ளுகிறேன். ஆகவே ஆசிரியர்களின்
பதவி இழப்பு ஏற்படாமல் அமைதியான நிலையை ஏற்படுத்த வேண்டுமென்று
இந்தச் சந்தர்ப்பத்திலே தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

**Thiru G. SWAMINATHAN**: On a point of information. I would like to know whether the reply by the Hon. Minister will be in the morning or in the afternoon.

**The Hon. Thiru C. ARANGANAYAGAM**: The reply will be made now.

**Thiru K. ARIVAZHAGAN**: I think it is now afternoon.

**Thiru G. SWAMINATHAN**: It is already 1-15 p.m. Will the Hon. Minister be replying now or after lunch?

**மாற்றுத் தலைவர் (திருமதி சத்தியவாணிமுத்து)**: இப்போதே முடித்து விடலாம்.

**திரு. எம். சங்கரலிங்கம்**: பள்ளித் தலைமையாசிரியர்களையெல்லாம் அரசிதழ் பதிவு பெற்றவர்களாக ஆக்க வேண்டுமென்று நான் முன்னரேயே பேசியிருக்கிறேன். கேரளாவிலே உள்ள எல்லா தலைமையாசிரியர்களும் அரசிதழ் பதிவு பெற்றவர்களாக இருக்கிறார்கள். அப்படி அரசிதழ் பதிவு பெற்றவர்களாக ஆக்கினால், அவர்களுக்குப் பலவித வசதிகள் கிடைக்கும். ரூபாய் 425 வாங்குகிற பஞ்சாயத்து யூனியன் கமிஷனர் அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரியாக இருக்கிறார். ஆனால் அதே ரூபாய் 425ஐப் பெறக்கூடிய தலைமையாசிரியர்கள் அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரியாக ஆக்கப்படவில்லை. கேரளாவிலே தலைமையாசிரியர்கள் அரசிதழ் பதிவு பெற்றவர்களாக இருப்பதைப்போலவே இங்கேயும் ஆக்கித் தர வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்ளுகிறேன்.

பஞ்சாயத்து யூனியன் தனியார் பள்ளிகள் பத்துப் பதினைந்து சதவீதம் தான். மீதியுள்ள 85 சதவீதம் பள்ளிகள் அரசுப் பள்ளிகள்தான். கன்னியாகுமரி மாவட்டத்தில் டெபுடி இன்ஸ்பெக்டர் அலுவலகத்தில் ஓரிரு உதவியாளர்கள்தான் இருக்கிறார்கள். அங்கு இரு நூறு, முன்னூறு பள்ளிகள் இருந்தால், எல்லாப் பள்ளிகளுக்கும் இந்த டெபுடி இன்ஸ்பெக்டர்தான் டிராயிங் ஆபீசர், லீவ் சாங்ஷன் ஆபீசர். இவர்தான் அந்தப் பள்ளிகளின் நிர்வாக அதிகாரி. ஒரு இடத்திலே இரண்டு அலுவலர்தான் இருக்கிறார்கள். ஆதலால் வேலைகள் அப்படியே தேங்கிக் கிடக்கின்றன. ஊதிய உயர்வு கொடுப்பது, லீவ் கொடுப்பது ஆகிய பணிகளில் தேக்கம் ஏற்பட்டிருக்கிறது. இதை நான் ஏற்கெனவே பல முறை எடுத்துச் சொல்லியிருக்கிறேன். அதையும் மனதிலே கொண்டு இவற்றையெல்லாம் போக்குவதற்குத் தக்க நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்ளுகிறேன்.



கல்வித் துறையிலே மாற்றங்களைக் கொண்டு வருவதற்கும், தேர்வு முறைகளில் மாற்றங்களைக் கொண்டு வருவதற்கும் எஸ்.ஸி.இ.ஆர்.டி. என்ற அமைப்பை வைத்திருக்கிறார்கள். அதை வரவேற்கிறேன். அதிலே இருக்கிற அதிகாரிகளைப் பார்த்தால், மற்ற இலாக்காக்களில் வேண்டாமென்று சொன்ன அதிகாரிகளாக இருக்கிறார்கள். அது ஒரு பனிஷ்மெண்ட் இலாக்கா மாதிரி இருக்கிறது. பல்கலைக் கழகத்தில் ஆராய்ச்சித் துறைக்குத் தலைவராகப் போட வேண்டுமென்றால், முதல் நிலையில் தேறியவர்களைப் போடுவதைப் பார்த்திருக்கிறேன். ஆனால் இங்கே கடைசி நிலையில் உள்ளவர்களை ஆராய்ச்சிக்கு அனுப்பியிருக்கிறார்கள்.

**திரு. கே. எஸ். கணபதி**: அவர்கள், condemned or unwanted.

**திரு. எம். சங்கரலிங்கம்**: நான் அந்த இரண்டு வார்த்தைகளையும் உபயோகிக்கவில்லை. பனிஷ்மெண்ட் நியாயமாக இருக்கலாம். காக்கா பிடிக்காதவர்களுக்கும் வரும்; திறமை இல்லாதவர்களுக்கும் வரும். ஆகவே அவர்களை மாற்றி நல்ல நுண்ணறிவு படைத்தவர்களை நியமித்து, அதைத் திறம்படச் செயல்படுத்த வேண்டுமென்று சொல்லிக்கொள்ளுகிறேன். இதை குறையாகச் சொல்வதாக நினைத்துவிடக் கூடாது என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்லிக்கொள்ளுகிறேன்.

மாநில விருது பெற்ற ஆசிரியர்களுக்கு ஐந்தாண்டுகளுக்கு வேலை நீட்டிப்புக் கொடுப்பதில்லை. ஆனால் தேசிய விருது பெற்றவர்களுக்கு ஐந்தாண்டு வேலை நீட்டிப்புக் கொடுக்கப்படுகிறது. மாநில விருது பெற்றவர்களுடைய பணியைச் சிறப்பிக்கிற வகையில் ஐந்தாண்டுகள் அல்லது மூன்றாண்டுகள் வேலையை நீட்டித்துத் தர வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே வற்புறுத்திக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இன்று நம்முடைய கல்லூரிக் கல்வி இயக்குநர், பள்ளிக் கல்வி இயக்குநர், முறை சாராக் கல்வி இயக்குநர், தேர்வு இயக்குநர் ஆகிய நான்கு இயக்குநர்கள் இருந்து பணியைச் செய்கிறபோதே இவ்வளவு சிக்கல்கள் இருக்கின்றன. மேலும் உயர் நிலைக் கல்வியென்று வரும்போது, மேலும் வேலைப் பளு கூடுதலாகும். ஆகவே உயர் நிலைக் கல்விக்காக தனியாக ஒரு போர்டு நியமிக்க வேண்டுமென்று வற்புறுத்துகிறேன். உயர்நிலைக் கல்வியால் வரக்கூடிய வேலைப் பாரத்தை பற்றுக்கொள்ளுகிற வகையில் தற்போதுள்ள இலாக்காவைப்

பொறுக்கிக்கொள்ளவில்லை. விஸ்தரித்துக் கொள்ளவில்லை. ஆகவே இப்போது இருக்கிற இயக்குநரிடத்திலே பொறுப்பு இருந்தாலும், ஆலோசனை சொல்லுகிற அளவிலே தனியாக ஒரு போர்டு இருக்க வேண்டும்.

**திரு. க. அறிவழகன் :** துணைத் தலைவர் அவர்களே, அதற்கும் ஒரு போர்டு இருக்கிறது. அது அப்படியான போர்டு அல்ல.

(பிற்பகல் 1-20)

**திரு. எம். சங்கரலிங்கம் :** ஹையர் செகண்டரி கல்விக்கு ஒரு சட்ட ரீதியான போர்டு வைத்து . . .

**திரு. க. அறிவழகன் :** போர்டு இருக்கிறது. அதற்கு 'பவர்ஸ்' இல்லை.

**திரு. கே. எஸ். கணபதி :** ஹையர் செகண்டரி போர்டு 'ஸ்டாடூடரி' போர்டு இல்லை. போர்டு இருக்கிறது.

**திரு. எம். சங்கரலிங்கம் :** அதை அதிகாரம் உள்ள போர்டாக அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது பல்கலைக் கழகத்துணை வேந்தர் நியமனத்தில் ஏற்பட்டிருக்கின்ற கால தாமதம் மாநில உரிமைகளுக்கு ஏற்பட்டிருக்கிற சவாலாக அமைகிறதோ என்ற அச்சம் கல்வித் துறையில் இருப்பவர்களுக்கு வந்திருக்கிறது. 'ஆக்ட்'டில் மிகத் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஒரு பேனல் நியமிக்க வேண்டும். சிண்டிகேட், செனட், கவர்னர் ஆகிய மூவரும் ஆளுக்கு ஒருவரை பேனலுக்கு நியமிக்க வேண்டும். ஆனால் கவர்னர் எப்படியோ மூன்று பேரைச் சிபாரிசு செய்தார். ஆகவே இன்னொரு தடவை பேனல் நியமிக்க புரொவிஷன் இல்லை. சட்டத்தை மீறுகிற நிலையை யார் செய்தாலும் சரி, மத்திய அரசானாலும், கவர்னரானாலும், அமைச்சரானாலும், சாதாரண அதிகாரியாக இருந்தாலும், அந்த நிலையை அனுமதிக்கக்கூடாது, யார் பெரியவர், யார் தாழ்ந்தவர் என்பதல்ல பிரச்சினை. சட்டத்தின் ஆட்சி நிலை நாட்டப்பட வேண்டும். இதில் அரசு வேகமாக முடிவெடுக்கிறபோது, எங்களுடைய ஆதரவு இருக்கிறது என்று கூறிக்கொண்டு, நான் சொன்ன கருத்துக்களை எல்லாம் அமைச்சர் அவர்கள் கருத்தில் கொண்டு நிறைவேற்றி, கல்வித் துறை உயர்ந்து, கல்விப் பணி சிறந்து வரும் காலம் உயர்வதற்கு வழி வகுக்க வேண்டும் என்று கூறி அமைகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, கல்விக் கொள்கை விளக்கக் குறிப்பின் மீது மாண்புமிகு உறுப்பினர்கள் பலபேர் தங்களுடைய சீரிய கருத்துக்களையெல்லாம் எடுத்து வைத்தார்கள்.



மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் தங்கப்பாண்டியன், கு. மா. பாலசுப்பிரமணியம், மதிப்பிற்குரிய டிமாண்டி, கே. எஸ். கணபதி, சுவாமிநாதன், ஏ. ஆர். தாமோதரன், புலமைப்பித்தன், அறிவழகன், இறுதியாக எதிர்க் கட்சித் தலைவர் திரு. சங்கரலிங்கம் எல்லோரும் தங்கள் கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள்.

திரு. அறிவழகன் கூறியபோது, கல்வி என்றாலே ஆசிரியர்கள்தான் என்கின்ற முறையில் கருத்தை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதை முழுமையாகப் பின்பற்றி நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே தன்னுடைய உரையை நிகழ்த்தியிருக்கிறார்கள் என்று நான் கருதுகிறேன். ஆசிரியர்களைப்பற்றி நிறையப் பேசி அமைச்சருக்கு நல்லுதவி செய்திருக்கிறார்கள்.

இங்கே நடைபெற்ற விவாதங்களில் மிக முக்கியமான பிரச்சினையாகக் கருதி பலரும் தங்களுடைய கருத்துக்களைத் தெரிவித்தது புதிதாக வரவிருக்கிற பிளஸ் 2 நிலை பற்றித்தான். அது பற்றித் தங்களுடைய கருத்துக்களைக் கூறி, அது எப்படியிருந்தாலும் நிறைவேற்றப்பட வேண்டிய ஒன்றுதான், அதில் இருக்கிற குறைபாடுகள் இன்னின்ன என்று சொல்லுகிறோம்; அவற்றை நிவர்த்தி செய்து நல்லமுறையில் நிறைவேற்ற வேண்டும், அதில் இரண்டு விதமான கருத்துக்கள் இல்லை என்று ஆணித்தரமாக எடுத்துக்கூறி, அதை நிறைவேற்ற அரசிற்கு எங்களுடைய பூரண ஒத்துழைப்பு இருக்கிறது என்று சொன்ன உறுப்பினர்களுக்கு நன்றியையும், பாராட்டையும் தெரிவித்துக் கொள்கிறேன். என்றாலும் பத்திரிகையில் வருகின்ற குறிப்பாக ஒரு கருத்தை நான் இங்கே சொல்லியாக வேண்டும். கல்வி என்பது அரசியல்வாதிகளின் விளையாட்டு மைதானமாக ஆகிவிட்டது என்ற கருத்தைக்கூறி, அந்த அடிப்படையில் இந்தப் புதிய சீர்திருத்தத்தை எதிர்க்கிற வாதத்தை நான் பார்த்தேன். அந்தக் கருத்தை எழுதியவருக்கும், மற்றவர்களுக்கும் இந்த மாண்புமிகு அவையின் மூலமாக நான் கூறிக்கொள்ள விரும்புவது, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்ற அரசியல் கட்சிக்கும் புதிதாக வருகிற இந்தத் திட்டத்திற்கும் எள்ளளவும் சம்பந்தமில்லை என்பதையும், நாங்கள் ஆட்சிப் பொறுப்பு ஏற்றதன் காரணமாக ஒரு கடமையை நிறைவேற்றுகிற அடிப்படையில்தான் இந்தத் திட்டத்தை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம் என்பதையும் எல்லோருடைய கவனத்திற்கும் கொண்டுவர விரும்புகிறேன்.

இந்தக் கல்வித் திட்டத்தைப் பொறுத்தமட்டில், அதைக் கொண்டு வந்தபோது, மதிப்பிற்குரிய திருமதி இந்திரா காந்தி அவர்கள் பிரதமராக இருந்தார். அதற்குப் பிறகு இப்போது திரு. மொரார்ஜி தேசாய்

[திரு. செ. அரங்கநாயகம்] [1978 மார்ச் 16

பிரதமமாக இருக்கிறார். அவரும் இந்தத் திட்டத்தில் தீவிரமாக மாறுதல் செய்ய வேண்டும் என்று சொல்கிறாரே தவிர, இந்தத் திட்டம் தவறு என்று சொன்னதாகத் தெரியவில்லை. இந்தத் திட்டம் இந்த மாநிலத்தில் கொண்டு வரப்பட்டபோது, மதிப்பிற்குரிய கலைஞர் ஆட்சியில் இருந்தார்கள். இன்றைக்கு நாங்கள் இருக்கிறோம். பல்வேறு கட்சிகள் பல்வேறு இடங்களில் இருந்தாலும், இது நல்ல திட்டம் என்கின்ற முறையில் அனைவரும் இதில் ஈடுபாடு கொள்கிறோமே தவிர, இதில் அரசியல் இல்லை என்பதை நான் இங்கே சொல்வதன் மூலம், பொதுமக்கள் மனதில் இனிமேலாவது அப்படிப்பட்ட தவறான அபிப்பிராயத்தை உருவாக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் பேசுகின்றபோது, பல்வேறு இடங்களில் பல கல்லூரிகளை ஆரம்பித்து எண்ணிக்கையைப் பெருக்கியிருக்கிறீர்களே தவிர, தரத்தை உயர்த்தவில்லையே என்ற கருத்தைச் சொன்னார்கள். பிரிட்டிஷ்காரர்கள் காலத்திலிருந்து, அதற்குப் பிறகு சுதந்திரம் பெற்ற பின்னரும், இப்படிப்பட்ட நிலை தொடர்ந்து கொண்டிருக்கிறதே, இதற்கு முடிவு கிடையாதா என்ற ஏக்கத்தையும் எதிரொலித்தார்கள். நான் அவர்களுக்குச் சொல்லிக் கொள்வதெல்லாம், அத்தகைய ஒரு கருத்தின் அடிப்படையில் செய்யப்படுகின்ற சீர்திருத்தம்தான் இது. தற்போது சொல்லித் தரப்படுகின்ற கல்வி மாணவர்களுக்கு நல்ல முறையில் பயனளிக்கவில்லை என்பதை உணர்ந்து, பயன்தரக்கூடிய கல்வியாக இன்றைக்கு 10 பிளஸ் 2 பிளஸ் 3 என்ற அடிப்படையில் மிக முக்கியமான சீர்திருத்தத்தைக் கொண்டுவர 30 ஆண்டுகளாக இந்த அளவுக்கு கல்வித் துறையில் செய்யப்படவில்லை என்று சொல்லும் அளவிற்கு, பெருமளவில் முயற்சியை நாம் மேற்கொள்ளும் கட்டத்தில் இருக்கிறோம். பள்ளி இறுதித் தேர்வு 3 இலட்சம் மாணவர்கள் எழுதுகிறார்கள் என்றால், 80 ஆயிரம் பேர் கல்லூரிப் படிப்பிற்குச் செல்கிறார்கள். மற்றவர்கள் படிப்பை நிறுத்தி விடுகிறார்கள். நாம் இதுவரை குமாஸ்தா வேலைக்குக்கூட இந்தக் கல்வித் திட்டம் பயனில்லை என்று சொல்லி வந்தோம். இன்றைய எஸ்.எஸ்.எல்.சி. படிப்பு குமாஸ்தா வேலைக்குத் தேவையான படிப்பாகக் கூட இல்லை என்ற உண்மையை நாம் ஒத்துக் கொள்ள வேண்டும். எதற்கும் பயனற்ற முறையில், படித்தவர்கள் என்ற நிலையில் அவர்கள் சமுதாயத்திற்குப் பயன்படாத முறையில் கல்வி இருக்கிறதே தவிர, இவன் பள்ளிக்குப் போகாமல் இருந்திருந்தால் ஏதாவது கூலி வேலையாவது செய்து பிழைத்துக் கொள்வான், குடும்பத்தைக் காப்பாற்றிக் கொள்ளுவான் என்று நாடு கருதிய அளவில் படித்தவர்களும், பாமரர்களும் சொல்லுகின்ற குறையை நீக்க வேண்டும் என்ற எண்ணத்தில் எழுப்பப்பட்ட வாதங்களின் அடிப்படையில் அமைந்ததுதான் புதிய



1978 மார்ச் 16] [திரு. செ. அரங்கநாயகம்]

சீர்திருத்தம். இந்தச் சீர்திருத்தத்தின் முக்கிய நோக்கம், மாணவர்களை சமுதாயத்திற்குப் பயனுள்ளவர்களாக ஆக்குவது தான் என்பதை நான் இங்கே மீண்டும் மீண்டும் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். ஏதோ தொழிலைச் சொல்லித் தருவதன் மூலம், அந்தத் தொழிலுக்கு உத்தரவாதம் தரமுடியுமா என்றால், அந்த அடிப்படையில் இந்தச் சீர்திருத்தம் கொண்டு வரப்படவில்லை. ஆனால் அவர்கள் படிப்பு முடிந்தவுடன், உனக்கு என்ன தெரியும் என்று கேட்டால், எனக்கு ஏதாவது தெரியும் என்று சொல்கிற அளவுக்கு, எதிர்காலத்தில் உறுதியை, தன்னம்பிக்கையை வளர்க்கின்ற அளவுக்கு நல்ல சீர்திருத்தத்தைக் கொண்டு வருகிறோம். ஆகவே இந்தச் சீர்திருத்தம் நாட்டில் பலரின் ஆதரவையும், ஒத்துழைப்பையும் பெறும் விதத்தில் அமைந்திருக்கிறது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன், இந்தத் திட்டத்திற்கு மாண்புமிகு உறுப்பினர்கள் தரும் ஆதரவையும் ஒத்துழைப்பையும் பெருமையோடும், பூரிப்போடும் வரவேற்கிறேன் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, பல்வேறு கருத்துக்களை நீங்கள் இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறீர்கள். கல்லூரி ஆசிரியர்களுடைய கோரிக்கைகளைப் பற்றிப் பல உறுப்பினர்களும் சொன்னார்கள். அதைச் சீக்கிரமாக முடித்துவிடுவது நல்லது என்று சொன்னார்கள். அந்த அடிப்படையில் தான் இப்போது பேச்சு வார்த்தைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. உறுப்பினர் திரு. சுவாமிநாதன், "ஒருமுறை கேட்டபோது 5 கோரிக்கைகளை ஏற்றுக் கொண்டிருப்பதாகச் சொன்னீர்கள். இன்னொரு தடவை கேட்டபோது பெரும்பான்மையான கோரிக்கைகளை ஏற்றுக் கொண்டு விட்டதாகச் சொல்கிறீர்கள். மீண்டும் ஒரு முறை கேட்டால் பேச்சு வார்த்தை நடத்திக்கொண்டிருக்கிறோம் என்று சொல்கிறீர்கள்" என்ற குறைபாட்டைச் சுட்டிக்காட்டினார்கள். அவர்களுக்குச் சொல்லிக் கொள்ளுவேன், பேச்சு வார்த்தை நடந்து கொண்டிருக்கின்ற நிலைமையில் நாங்கள் இப்போது அதைத் தெளிவாக வெளியே சொல்லும் நிலைமையில் இல்லை. பேச்சு வார்த்தை முடிந்தவுடன் இரண்டு மூன்று நாட்களில் முடித்துவிடும் என்ற நம்பிக்கை இருக்கிறது, ஆசிரியர்களுக்குத் திருப்தி ஏற்படும் வகையில் அந்த முடிவு இருக்கும் என்று நம்புகிறோம்—நிச்சயமாக இந்த மன்றத்தில் நான் விரிவாக அறிக்கை மூலம் விவரத்தைத் தருகிறேன் என்று இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். பேராசிரியர்களும், கல்லூரி ஆசிரியர்களும் நல்ல ஒத்துழைப்புத் தந்து, நல்ல முடிவு ஏற்பட உதவியாக இருப்பார்கள் என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

[திரு. செ. அரங்கநாயகம்]  [1978 மார்ச் 16

(பிற்பகல் 1-30)

கல்வி, மாநிலப் பட்டியலில் இருக்க வேண்டுமென்ற கருத்தை நான் இந்த அறிக்கையில் சொல்லியிருக்கிறேன். அப்படி இருக்க வேண்டுமென்ற நிலைமைக்கு ஒரு ஆதரவு நாட்டில் இருந்து வருகிறது. கல்வி என்பது நகர்ப்புறங்களிலிருந்து கிராமங்கள் வரையில் இருக்கிற மக்களுக்குத் தேவையைப் பூர்த்தி செய்யும் ஒரு பணியாக இருப்பதால், அந்தத் தேவைகளை ஆராய்ந்து பூர்த்தி செய்யும் நிலைமையில் மாநில அரசுதான் இருக்கிறது என்பதற்காகவும் மாநிலப் பட்டியலில் இடம் பெறுவது அவசியமாகிறது. சில பாடங்களைப் படித்துவிடுவது மட்டுமல்ல கல்வி. கலாசாரம், பண்பாடு, வாழ்க்கை முறை ஆகியவற்றைக் கற்க வேண்டியிருப்பதால் மாநிலப் பட்டியலில் கல்வி இருக்க வேண்டுமென்ற அடிப்படையில் இந்தக் கருத்தை மத்திய அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்திருக்கிறோம். நிச்சயம் நடைபெறும் என்பதையும் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, ஹையர் செகண்டரி என்கிற உயர்நிலைக் கல்வி கற்பிக்க பகுதி நேர ஆசிரியர்களை நியமிக்கக்கூடிய சாத்தியக் கூறுகள் இருக்கின்றன என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். தொழிற் கல்வி நாம் தரவேண்டு மென்பதும் அதில் பல தரப்பட்ட கல்வியைத் தர வேண்டிய நிலைமை இருக்கிறது என்பதையும் அதற்கு உடனடியாகப் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் கிடைக்காவிட்டால், பகுதி நேர ஆசிரியர்களாக நியமனம் பெறத் தகுதி பெற்றவர்களைப் பதிவு செய்ய வைத்து, அவர்களைப் பயன்படுத்திக் கொள்வதன் மூலம் தொழிற் கல்வியைத் தொடர்ந்து நடத்துவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்பதையும் தெரிவித்துக் கொள் கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அமைச்சர் பதில் முடியும் வரையில் அவை நீடிக்கும்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மேலும் கல்லூரிப் படிப்பைத் தொடர வேண்டுமென்று விரும்பினால், அதற்கு இடம் இருக்கிறதா என்ற ஐயத்தை உறுப்பினர்கள் திரு. எ. ஆர். தாமோதரன் அவர்களும், திரு. கணபதி அவர்களும் எழுப்பினார்கள். கல்வியைத் தொடரும் வகையில்தான் ஏற்படுத்தியிருக்கிறோம். அத்தகைய நிலைமை வேறு மாநிலங்களில் இல்லை. ப்ளஸ் 2 ஸ்டேஜ் என்பது ஒரு டெர்மினல் ஸ்டேஜ் ஆக மட்டுமே மற்ற இடங்களில் உள்ளது. நம் மாநிலத்தில் பிரபரேட்டரி அண்ட் டெர்மினல் ஸ்டேஜ் என்ற வாய்ப்பு இருக்கும் அளவில் உருவாக்கி வைத்திருக்கிறோம்.



1978 மார்ச் 16]  [திரு. செ. அரங்கநாயகம்]

தேவைப்படுமானால், அதில் திரு. எ. ஆர். தாமோதரன் அவர்கள் கூறியதைப் போல, பிரிட்ஜ் கோர்ஸ் முறையில் பயிற்சி தந்து, மேல் நிலைக் கல்வி தொடரும் வாய்ப்பை அரசு தரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆங்கிலோ-இந்தியன் குழந்தைகள்பற்றி உறுப்பினர் திரு. டி'மாண்டி அவர்கள் குறிப்பிட்டார்கள். அவர்களுடைய கோரிக்கையை அரசு நிச்சயமாகப் பரிசீலனை செய்யும். ஆங்கிலம் பயிற்சி மொழியாக வேண்டு மென்பதற்கு நாங்கள் ஆதரவு தராததற்குக் காரணம், தமிழ் மொழி எங்கள் தாய் மொழி என்பதற்காக மட்டுமல்ல. உலக நிபுணர்கள் சொல்லிய கருத்தின் அடிப்படையில் ஒரு குழந்தை தாய் மொழியின் மூலமாகப் படிக்கும்போதுதான் அதனுடைய 'கிரியேட்டிவ்' திங்கிங் என்று சொல்லப் படுகிற சிந்தனையைத் தூண்டும் அளவிற்குக் கற்க முடிகிறது. அப்படி இல்லாத குறைபாடு இருப்பதால்தான், தாய்மொழிக்கு ஊக்கம் தருவதன்மூலம் கல்வியின் தரத்தை உயர்த்த அரசு முனைகிறது. அந்த முறையில் ஆங்கிலோ-இந்தியன் குழந்தைகளும் தாய்மொழியில் கற்கும் கோரிக்கையை நிச்சயமாக இந்த அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இயல், இசை, நாடக மன்றத்தைப்பற்றியும் கருத்துக்களைச் சொன்னார்கள். இந்த நாட்டின் கலை உணர்வுகளை வளர்ப்பதற்கும் கலைகள் வளருவதற்கும் இந்த அரசு புதிய முயற்சிகளைத் துவக்கும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்பு கிறேன். கலை, இசை, நாடகம் ஆகியவை மேல் தட்டில் இருக்கிற ஒரு பகுதி மக்களுக்குத்தான், அவர்கள் ரசிப்பதற்குத்தான் என்ற நிலையை மாற்றி, பெரும்பாலான மக்கள் அவற்றை அனுபவிக்கும் முறையில் இயல், இசை, நாடகக் கலை மூலம் மக்களின் உள்ளத்தில் உற்சாகத்தையும், களிப்பையும், ஆர்வத்தையும் உருவாக்கி அதன் மூலம் சமூக மாற்றத்திற்கு வழிகாண அவற்றை ஒரு கருவியாகப் பயன்படுத்திக் கொள்ளவும் இந்த அரசு எதிர் காலத்தில் திட்டங்களை வகுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

விளையாட்டுக் குழு என்று வைத்துக்கொண்டு இப்போது அதிகமான தொகையை அதற்காக ஒதுக்கி அதை ஊக்குவித்து வருகிறோம். விளையாட்டு என்பது மேல் மட்டத்தில் இருக்கிறவர்களுக்குத்தான் உரியது என்ற நிலைமையை மாற்றி கல்லூரி, பள்ளி மாணவர்களுக்கு மட்டும்தான் என்று இருக்கிற நிலையையும் மாற்றி, படிக்காத இளைஞர்கள் மத்தியிலும் இந்த விளையாட்டு ஆர்வம் ஏற்படும் வகையில் அப்படிப்பட்ட இளைஞர்களை அடையாளம் கண்டு அழைத்துப் பயிற்சி தந்து மாநில அளவில், தேசிய அளவில், உலக அளவில் தமிழகத்தின் சிறந்த இளைஞர்கள் இருக்கிறார்கள் என்ற அளவுக்கு சிறப்பான நிலைமையை உண்டாக்க முயற்சிகளை இந்தக் குழு மேற்கொள்ளும் என்ற நம்பிக்கையைத் தர விரும்புகிறேன்.

ஹையர் செகண்டரி வகுப்புகளுக்கு நியமனமாகும் ஆசிரியர்களின் சம்பள விகிதங்களை விரைவில் நிர்ணயம் செய்து வெளியிட இருக்கிறோம். ஹைஸ்கூல் ஆசிரியர்களின் சம்பளத்தைவிட அதிகமாகவும் கல்லூரி ஆசிரியர்கள் சம்பளத்தைவிடக் கொஞ்சம் குறைவாகவும் இருக்கும். அந்த நேரத்தில் அவர்களுக்கு எப்படித் தருவது என்பதைப் பரிசீலித்து அவர்களுக்கு ஊக்கம் தரும் வகையில் அந்தச் சம்பள விகிதம் இருக்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தைப்பற்றிச் சொன்னார்கள். நிதி நிலைமை பற்றி ஆய்வு செய்யப்பட்டு, விரைவில் உத்தரவு பிறப்பிக்கப்பட இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் டிராப் அவுட்ஸ் (drop-outs) பற்றிக் குறிப்பிட்டார்கள். ஒன்றாவது, இரண்டாவது வகுப்புகளில் சேருகிறவர்கள் தொடராமல் இடையில் படிப்பை நிறுத்திவிடுகிறார்கள் என்ற குறைபாட்டைச் சொன்னார்கள். இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் இப்படி நின்றுவிடுகிறவர் கள் நிலைமையை நன்கு பரிசீலித்து இரண்டு திட்டங்களை இன்று உருவாக்கி பிருக்கிறோம். இதில் ஒன்று முதல் மூன்று வகுப்புகள் படிக்கிற மாணவர்கள் இடையில் வெற்றி தோல்வி என்ற நிலை இருக்கக்கூடாது. பரிட்சை இருக்கும். தோல்வி இருக்காது என்ற அடிப்படையில் அவர்களுக்கு மேல் வகுப்புக்குச் செல்கிற ஒரு சீர்திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். அதனால் ஏழு, ாட்டு வயதுக் குழந்தைகள் மனதில் தோல்வி உணர்வு தவிர்க்கப்படுகிறது.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** அமைச்சர் அவர்கள் சொல்கிற கருத்து அரசு அனுமதி பெற்ற பள்ளிகளில் மட்டுமா, தனியார் நடத்தும் கான்வெண்ட் பள்ளிகளுக்கும் பொருந்துமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** அரசு உத்தரவுக்குக் கீழ், அரசின் ஆதிக்கத்தின் கீழ் உள்ள எல்லாப் பள்ளிகளுக்கும் பொருந்தும். ஒன்று முதல் மூன்று வகுப்பு மாணவர்களுக்குத் தோல்வி ஏற்படாமல் சீர்திருத்தம் செய்திருப்பது இந்த 'டிராப் அவுட்' குறைபாட்டைப் போக்கும். ஐந்தாவது படிக்கும் நேரத்தில் 11, 12 வயது ஆகிற நிலையில் ஆண்களில் சிலரையும் பெண்களில் பெரும்பாலானவர்களையும் நிறுத்தி விடுகிற பழக்கம் அதிகமாகக் கிராமங்களில் இருப்பதை நாம் அறிவோம். அதற்காக பல்வேறு முயற்சிகளை எடுக்கவேண்டியிருக்கிறது என்றாலும், இந்த ஆண்டு ஆறு, ஏழு, எட்டு வகுப்புகளில் படிக்கிற தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த, மதிய உணவு





சாப்பிடுகிற அந்தக் குழந்தைகளுக்குச் சீருடை இலவசமாகத் தருவதன்மூலம் அவர்கள் இடையில் நின்றுவிடாமல் செய்யும் முயற்சியும் எடுக்கப்பட்டிருக் கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

கல்வி அதிகாரிகள் மாநில அளவில் போடுகிற உத்தரவுகளை மாவட்ட அளவில் உள்ள அதிகாரிகள் வேறுபாடான முறையில் அமுல் நடத்துகிறார்கள் என்ற குறைபாட்டை எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சுட்டிக்காட்டினார்கள். அதற்காகத்தான் மாவட்ட அளவில் உள்ள அதிகாரிகளை ஆண்டுக்கு இரண்டு மூன்று முறை சென்னையில் வந்து கூட்ச்செய்து, இதுபோன்ற பொதுவான கருத்துக்களை எல்லோரும் ஒரே அர்த்தத்தில் புரிந்துகொள்ளும் வகையில் கருத்துப் பரிமாறிக் கொள்வதற்காக ஏற்படுத்த இருக்கிறோம். அதற்கான ஏற்பாட்டை அரசு செய்யும் என்பதையும் அப்படிப்பட்ட நிலைமை சமீபத்தில் ஏற்பட்டது என்பதையும் சொல்லிக்கொள்கிறேன்.

எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், ஆசிரியர் பணிப் பாதுகாப்பு பற்றி விளக்கமாக எடுத்துச் சொன்னார்கள். கல்லூரி ஆசிரியர்களுடைய பல்வேறு கோரிக்கைகள் 1973-லிருந்து பல்கலைக் கழக மானியக் குழுவின் சிபாரிசுகளை அமுல் நடத்த வேண்டுமென்பதில் இருக்கின்றன. அது வெளியில் இருந்து பார்க்கிற பலருக்கு முக்கியமான கோரிக்கையாகத் தென்பட்டாலும், பணிப் பாதுகாப்புதான் அவர்களிடையில் உள்ள முக்கியமான கோரிக்கையாகும் என்பதை எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கூறினார்கள். அதை ஏற்றுக் கொள் கிறேன். பணிப் பாதுகாப்பிற்கான உறுதியை அரசிடமிருந்து பெற ஆயிரக் கணக்கான ஆசிரியர்கள் விரும்புவதையும் அவர்களது போராட்ட உணர்வையும் அதிலுள்ள நியாயத்தையும் நான் புரிந்துகொண்டிருக்கிறேன்.

(பிற்பகல் 1-40)

ஆகவேதான் பல்வேறு சந்தர்ப்பங்களிலே பணிப் பாதுகாப்பு பற்றிய அந்தக் கோரிக்கையை முழு அளவில் ஏற்றுக்கொண்டு நான் அந்த உறுதிமொழியை வலியுறுத்திக் கூறி வந்திருக்கிறேன். நீங்கள் அதை எப்படியெல்லாம் சந்திக்க இருக்கிறீர்கள் என்று கேட்பீர்களானால், இப்படித்தான் என்று வரைமுறைப்படுத்திச் சொல்ல முடியாது என்றாலும், இப்படிப்பட்ட நிலைமைகளைச் சந்திக்க நாம் மேற்கொள்ள இருக்கிற ஒரு சில நடவடிக்கைகளைப் பற்றி மட்டும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

செமஸ்டர் சிஸ்டத்தைக் கொண்டுவருவதன் மூலம் சில ஆசிரியர்களுக்குப பணி கிடைக்க ஏதுவாக இருக்கும்.

[திரு. செ. அரங்கநாயகம்] [1978 மார்ச் 16

மாலை நேரக் கல்லூரிகளுக்கு இப்போது பகுதி நேர அடிப்படையில் சொல்லிக் கொடுக்கிற ஆசிரியர்களைப் போடுகிற நிலைமையை மாற்றி, தனியாக ஆசிரியர்களைப் போடுவதன் மூலம் அங்கேயும் சில ஆசிரியர்களுக்குப் பணி கிடைக்க வாய்ப்பு ஏற்படும்.

தாழ்த்தப்பட்ட, மற்றும் பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் சரியான அளவில் தேர்ச்சி பெறவில்லை என்றால், அவர்களுக்குத் தனியாகப் பயிற்சி தருவதற்கு உரிய வகையில் ஆசிரியர்களைப் போட்டு, இன்னும் சில பேருக்குப் பணி கிடைக்க வகை செய்யலாம்.

எல்லாவற்றிற்கும் மேலாக வேலை வாய்ப்பைத் தரக்கூடிய அளவுக்கு பல்வேறு கோர்ஸ்களை மாற்றியமைக்கத் திட்டமிட்டிருக்கிறோம். புதிய கோர்ஸ்களை ஏற்படுத்தவும் திட்டமிட்டிருக்கிறோம். இதன் மூலம் பல ஆசிரியர்களுக்குப் பணி வாய்ப்புகள் கிடைப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ள இருக்கிறோம். இவைகளின் மூலம் ஆசிரியர்களின் பணிகளுக்குப் பாதுகாப்பளிக்க முடியும் என்பதை மட்டும் இப்போது தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, முதியோர் கல்வி என்பதை மிக முக்கியமான ஒன்றாகக் கருதி, இந்த அரசு அதற்கான சிறப்பான நடவடிக்கைகளை மேற்கொள்ள இருக்கிறது. இதற்காக தனியான போர்டு ஒன்றை நிறுவ இருக்கிறோம். இந்த வகையில் இந்த ஆண்டிலிருந்தே ஒரு பெரிய முயற்சி எடுத்துக்கொள்ளப்படும். கல்வி கல்லாதவர் தொகையை இந்த நாட்டில் குறைப்பதற்காக தீவிர நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் நான் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

வேறு சில விஷயங்களைப்பற்றியும் குறிப்பிடலாம் என்று கருதியிருந்தேன். ஆனால் இப்போது சீக்கிரமாக முடிக்க வேண்டியிருப்பதால், ஒன்றை மட்டும் சொல்லி முடித்துக்கொள்ளலாம் என்று கருதுகிறேன்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்த நேரத்தில், தமிழகத்தைப் பொறுத்தமட்டில் 'கன்சல்டேடிவ் கமிட்டி'—ஆலோசனைக் குழு ஒன்று தேவை என்று கருதி அவருடைய தலைமையில் ஒரு குழுவை அமைத்திருந்தார்கள். ஆனால் அவருடைய மறைவுக்குப் பிறகு, அது தேவையில்லை என்று கருதப்பட்டு, அந்த ஆலோசனைக் குழு செயல்படாமலே இருந்தது. பிறகு அது புதுப்பிக்கப்படாமல் போய்விட்டது. ஆனால் இன்றையதினம் இந்த அரசு அந்த ஆலோசனைக் குழு அவசியம் என்று உணர்ந்து, அதை ஏற்படுத்தத் திட்டமிட்டுள்ளது. இந்தக் குழுவில் தமிழகச் சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களும் மேலவை உறுப்பினர்களும் இடம் பெறுவார்கள் என்ற செய்தியை மட்டும் கூறி, என்னுடைய உரையை இந்த அளவில் முடிக்கிறேன்.



1978 மார்ச் 16]

திரு. கே. எஸ். கணபதி : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதையொட்டி, இரண்டு விளக்கங்களைக் கோர விரும்புகிறேன். அதில் ஒன்று மாநிலத்தின் எல்லையோரத்தில் உள்ள பகுதிகளில் வாழக்கூடிய மாணவர்களைப் பொறுத்தது. ஆங்கிலோ-இந்திய மாணவர்களைப் பற்றி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். மாநிலத்தின் எல்லைப்புறத்தில் வாழ்கிற சிலர் தமிழைத் தாய்மொழியாகக் கொள்ளாதவர்களாக இருக்கிறார்கள். ஆனால் தமிழ்தான் அந்தப் பகுதியிலும் பயிற்று மொழி. வேறு மொழி இல்லை. எனவே அங்குள்ள மாணவர்கள் ஆங்கிலத்தைப் பயிற்று மொழியாகக் கொண்டு கல்வி பயின்றால், அவர்களிடம் அரசாங்கம் கட்டணம் ஏதும் வசூலிக்காத நிலை உருவாக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

அடுத்து, கல்லூரி ஆசிரியர்கள் பணிப் பாதுகாப்பைப் பற்றிக் கூறும் போது, பல்வேறு கல்லூரிகளில் புதிய பல கோர்ஸ்களை ஆரம்பிக்க இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். புதிய கோர்ஸ்களை ஆரம்பிக்க வேண்டுமானால் அகெடமிக் கவுன்சில், செனட், சிண்டிகேட் ஆகியவைகளின் அனுமதி வேண்டும். ஆகவே, பல்கலைக் கழகத்தின் கருத்தை இந்த வகையில் அமைச்சர் அவர்கள் கோரியுள்ளார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : கல்லூரிகளில் புதிய கோர்ஸ்களை ஆரம்பிப்பதுபற்றி ஏற்கெனவே பல்கலைக் கழகத்தவர்களிடம் பேசியிருக்கிறேன். அவர்களும் அது தொடர்பாக முயற்சி எடுத்து வருகிறார்கள். அது வருகிற ஆண்டில் தீவிரமாகச் செயல்படுத்தப்பட இருக்கிறது. இதன் மூலம் ஆசிரியர்களுக்குப் புதிய வாய்ப்புகள் ஏற்பட்டு, அவர்களை நன்கு பயன்படுத்திக் கொள்ள முடியும். இந்த வகையில்தான் புதிய கோர்ஸ்கள் அமைக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கிறேன். தாய் மொழியில் கல்வி பயில வேண்டும் என்று வலியுறுத்திக் கூறுவதன் மூலம் தாய்மொழியில் கல்வி கற்பதை இலவசமாக்கி இருக்கிறோம்.

திரு. கே. எஸ். கணபதி : இந்த மாநிலத்தின் எல்லைப் பகுதிகளில் தமிழைத் தாய்மொழியாகக் கொள்ளாதவர்கள் இருக்கிறார்கள். தாய் மொழியாகத் தமிழ் இல்லாத காரணத்தால், அவர்கள் ஆங்கிலத்தைப் பயிற்று மொழியாகக் கொண்டு கல்வி கற்றால், அவர்களுக்கு அது இலவசமாக வழங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** சிறுபான்மை மொழி பேசும் மக்களுக்கு நாம் அவர்களுடைய தாய் மொழியிலேயே கல்வி கற்பிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டியிருக்கிறது. அந்த அடிப்படையில்தான் இந்தப் பிரச்சினையை நாம் அணுக வேண்டியிருக்கிறது. இது தவிர வேறு சங்கடங்கள் இருக்குமானால், நிச்சயமாக அரசு அதைப் பரிசீலிக்கும்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** 'கன்சல்டேடிவ் கமிட்டி' என்பது எந்த அடிப்படையில் இருக்கும் ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** 'கன்சல்டேடிவ் கமிட்டி' என்பது பேரவை, மேலவை உறுப்பினர்களைக் கொண்டதாக இருக்கும். பேரறிஞர் அண்ணா அவர்கள் தலைவராக இருந்திருக்கிறார்கள். கல்வி அமைச்சர் துணைத் தலைவராக இருந்திருக்கிறார்கள். மற்றவர்கள் உறுப்பினர்களாக இருந்திருக்கிறார்கள். எந்த முறையில் அமைக்கலாம் என்று அரசு யோசித்து முடிவெடுக்கும்.

## 5. இரங்கல் குறிப்பு.

**திராவிடர் கழகத் தலைவரும், பெரியார் ஈ. வே. ரா. அவர்களின் மனைவியாருமான திருமதி மணி அம்மையார் அவர்கள் மறைவு குறித்து**

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அவைக்கு ஒரு அறிவிப்பைச் சொல்ல விரும்புகிறேன்.

திராவிடர் கழகத் தலைவரும், பெரியார் ஈ. வெ. ரா. அவர்களின் மனைவியாருமான திருமதி மணி அம்மையார் அவர்கள் காலமாகிவிட்டார்கள் என்று இங்கே செய்தி கிடைத்திருக்கிறது என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மணியம்மையார் அவர்கள் மிகப் பெரிய சமூக சீர்திருத்தப் புரட்சியாளராகத் திகழ்ந்து, தேச விடுதலைப் போராட்டத்தில் நீண்டகாலம் பங்கு பெற்று இந்த நாட்டில் அறிவியக்கத்தைப் பரப்பிய பெரியார் அவர்களுடைய தொண்டில் இரண்டறக் கலந்து பாடுபட்டவர்கள். அந்த முறையில் தமிழகம் அவருக்கு அஞ்சலி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறது. எனவே இந்த அவை ஒரு நிமிட நேரம் மௌனமாக எழுந்திருந்து அவருக்கு அஞ்சலி செலுத்தக் கோருகிறேன்.

அவை உறுப்பினர்கள் அனைவரும் மௌனமாக ஒரு நிமிட நேரம் எழுந்து நின்றனர்.





**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. அவை மீண்டும் நாளை காலை 10-30 மணிக்குக் கூடும்.

(பிற்பகல் 1-50)

பின்னர், அவை ஒத்தி வைக்கப்பட்டது.

## 6. அவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. Statutory Rules and Orders.

302. Tamil Nadu Government review on the working of the Tamil Nadu Textile Corporation Limited for the year ended 31st December 1974 together with Sixth Annual Report and Statement of Accounts. (Laid on the table of the House under section 619 (A) of the Companies Act, 1956 (Central Act I of 1956).

303. Notifications issued with G.O. Ms. No. 2117, Commercial Taxes and Religious Endowments, dated the 19th December 1977 in regard to amendments to the Tamil Nadu Entertainments Tax Rules, 1939. (Laid on the table of the House under section 16 (4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939).

304. Notification issued with G.O. Ms. No. 3495, Home, dated the 31st December 1977 in regard to amendments to the Madras Liquor (Licence and Permit) Rules, 1960. (Laid on the table of the House under section 54 (3) of the Tamil Nadu Prohibition Act, 1937 (Tamil Nadu Act X of 1937).

[1978 மார்ச் 17

*B. Reports, Notifications and Other Papers.*

£ 82. **Objectives, Programmes & Implementation of the Higher** Secondary Education in Tamil Nadu (English).

*83. Review on Tamil Nadu Fire Service Department, 1977-78 (English and Tamil).

* 84. Review on Tamil Nadu Police, 1977-78. (English and Tamil).

---

£ Laid on the table of the House on 15th March 1978.
* Circulated to all M.L.Cs. on 15th March 1978.

## தமிழ் நாடு சட்ட மன்ற மேலவை

---

வெள்ளிக்கிழமை, 1978 மார்ச் 17.

---

சென்னை, செயிண்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் முற்பகல் 10-30 மணியளவில் மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் (திரு. ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

### 1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்** : வினாக்கள் 180 முதல் 183 வரை கடைசியில் எடுத்துக்கொள்ளப்படும்.

*Bus Service between Alaveli and Mayuram.*

* 184 *Q*.—Thiru V. THANGAPANDIAN (on behalf of Thiru K. S. MANI).—Will the Hon. the Minister for Transport be pleased to state—

(*a*) whether the Cholan Transport Corporation bus service in route No. 20 between Alaveli and Mayuram in Kumbakonam taluk, Thanjavur district, has been recently suspended;

(*b*) if so, whether any representation has been received by the Government from the public requesting the revival of the bus service; and

(*c*) the action taken thereon?

ஆலவெளிக்கும் மாயவரத்திற்கும் இடையே
பேருந்து வசதி.

திரு. வே. தங்கப்பாண்டியன் (திரு. கோ. சி. மணி சார்பில்): மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் வட்டத்தில் ஆலவெளிக்கும் மாயவரத்திற்கும் இடையில் 20-ஆம் எண் வழித் தடத்தில் ஓடிக்கொண்டிருந்த சோழன் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் அண்மையில் நிறுத்தப்பட்டு விட்டனவா?

(இ) ஆம் எனில், அவைகளை மீண்டும் விடக் கோரி பொது மக்களிடமிருந்து முறையீடு எதுவும் அரசுக்கு வந்துள்ளதா ?

(உ) அதன்மீது எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) & (இ) ஆம்.

(உ) மாயவரத்திற்கும் ஆலவெளிக்கும் இடையே தனியாக நகரப் பேருந்து ஒன்று விடுவதற்கும், மேலும் மேற்படி வழித்தடத்தில் சில மாற்றங்கள் செய்து மாயவரம் பேருந்து நிலையத்திலிருந்து திருவிந்தளூர், மாப்படுகை, சோளம்பேட்டை, வாணாதிராசபுரம், அஞ்சறுவத்தலை, குத்தாலம் அஞ்சறுவத்தலை, ஆலங்குடி, கருப்பூர் வழியாக பந்தநல்லூர் வரை பேருந்துகள் விடுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

திரு. ஜி. சுவாமிநாதன் : துணைத் தலைவரவர்களே, இது போன்ற கேள்வி களை மாவட்ட அபிவிருத்தி கவுன்சில்களிலும் கேட்கின்றோம். மேலவையிலும் கேட்கின்றோம். இது போன்ற கேள்விகளை எங்குமட்டும் கேட்கலாம், இந்தக் கேள்வி இங்கேதான் கேட்கப்பட வேண்டும், இந்த கேள்வி அங்கேதான் கேட்கப்பட வேண்டும் என்பதற்கு வரைமுறை இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : இங்கே கேட்பதற்குத்தான் நான் சொல்ல முடியும். அதைப்பற்றி நான் இங்கே சொல்ல முடியாது. மாவட்ட அபிவிருத்தி கவுன்சிலிலே இந்தக் கேள்விதான் கேட்க வேண்டும், அந்தக் கேள்விதான் கேட்க வேண்டும், இந்தக் கேள்வி கேட்கக்கூடாது என்று வரையறுத்து நான் இங்கே சொல்லமுடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அங்கத்தினர்கள் இங்கே இந்தமாதிரியான கேள்விகளைக் கேட்க உரிமையுண்டு.

*Central Board of Film Censors, Madras.*

S.N. 2 Q.—PULAVAR PULAMAI PITHAN (on behalf of THIRU A. K. VILWAM): Will the Hon. the Minister for Information and Tourism be pleased to state—

(a) whether it is a fact that the Central Government hav since reconstituted the Advisory Panel for the Central Board of Film Censors at Madras; and

(b) if so, whether the State Government was consulted before such reconstitution?



மத்திய திரைப்பட தணிக்கைக் குழு, சென்னை.

புலவர் புலமைப் பித்தன் (திரு. ஏ. கே. வில்வம் சார்பில்) : மாண்புமிகு செய்தி—சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னையில், மத்திய திரைப்படத் தணிக்கைக் குழுவிற்கான ஆலோசனைக் குழுவை மத்திய அரசு மாற்றி அமைத்துள்ளது என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், மேற்சொன்ன குழு மாற்றியமைக்கப்படுவதற்கு முன் மாநில அரசுடன் கலந்து ஆலோசிக்கப்பட்டதா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) ஆம்.

(இ) இல்லை.

திரு. வே. தங்கப்பாண்டியன் : இந்த மத்திய திரைப்படத் தணிக்கைக் குழுவிற்கு மத்திய அரசாங்கம் உறுப்பினர்களை நியமிக்கும்போது, மாநில அரசுகளைக் கேட்டுக்கொண்டுதான் நியமிக்கவேண்டும் என்ற மரபு முன்பிருந்ததாகத் தெரிகிறது. அப்படிப்பட்ட நிலைமை இருக்கின்றது என்றால், அந்த மரபை மத்திய அரசாங்கம் இப்போது மீறிவிட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : இந்தத் தணிக்கைக் குழுவிற்கு உறுப்பினர்களை நியமிக்கின்ற உரிமை மத்திய அரசைச் சேர்ந்தது. இதிலே மாநில அரசைக் கேட்டுக்கொண்டு அமைக்க வேண்டுமென்ற விதிமுறை இல்லை. இதற்கு முன்னாலேயும் இல்லை. இருந்தாலும், மாநில அரசைக் கேட்டுக் கொண்டு, கலந்துகொண்டு அமைக்க வேண்டும் என்று ஒரு வேண்டுகோள் வைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அந்த வேண்டுகோள் மத்திய அரசாலே ஏற்றுக்கொள்ளப்படவில்லை. இந்த முறை அவர்கள் கேட்கவே இல்லை. ஆனால் தமிழ்நாடு அரசின் சார்பிலே நடத்தப்படுகின்ற திரைப்படத் தொழில் நுட்பக் கல்லூரியினுடைய முதல்வர் அவர்கள் அந்தக் குழுவிலே இடம் பெற வேண்டும் என்று கேட்கப்பெற்று, அரசும் அவர்களுக்கு அனுமதி கொடுத்தது. எந்தக் காரணத்தினாலேயோ அவரும் அந்தக் குழுவில் இடம் பெறவில்லை. ஆனால் அவர்கள் அமைத்த அந்தக் குழுவில் நமது மாநில அரசில் பணியாற்றுகின்ற ஒரு அலுவலரைத் தேர்ந்தெடுத்து அவர்கள் நியமித்திருக்கின்றார்கள். அந்த அலுவலரும் அரசிடத்திலே அனுமதி பெறவில்லை என்று அறிகிறேன். அவர்கள் தெரிந்தோ தெரியாமலோ அந்தத் தணிக்கைக் குழுவிலே அவரைச் சேர்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்று சொல்லிக் கொள்கிறேன்.

திரு. எல். பலராமன் : இது போன்று திரைப்படத் தணிக்கைக் குழு அமைப்பது என்பது திரைப்படங்களில் ஆபாசமான காட்சிகளைத் தணிக்கை செய்ய வேண்டும் என்ற பொது நோக்கத்துடன்தான். இன்றைக்கு ஆபாசம் பரவக்கூடாது என்ற ஒரு பொதுவான கருத்து இருக்கின்றது. இதுதான் ஆபாசம், இது தான் ஆபாசமற்ற காட்சி என்று இன்று வரை எந்த வரை முறையும் நிர்ணயிக்கப்படாமலிருப்பது அரசுக்குத் தெரியுமா என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : கேட்கப்பட்டுள்ள கேள்விக்கும், இப்போது உறுப்பினர் அவர்கள் கேட்கின்ற கேள்விக்கும் சம்பந்தமில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எல். பலராமன் : ஆபாசம் என்பது எது எது என்பதைப் பற்றி அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : ஆபாசம் என்பதைப் பற்றிச் சொல்லாமல் இருப்பதே நல்லது.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : ஆபாசம் என்பது பற்றி இதுவரை யாரும் அறுதியிட்டு இறுதியாகச் சொல்ல முடியாமல் இருக்கிறார்கள். அது அவரவர்களுடைய மன நிலைமையை, உள்ளுணர்வைப் பொறுத்ததாகும். அவர்கள் வயதையும் பொறுத்ததாகும். அது காலத்தையும் ஒட்டியதாகத் தான் இருந்து வருகின்றது. மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் எது ஆபாசம், எது ஆபாசம் இல்லை என்று கருதுவது அவர்களுடைய அபிப்பிராயத்தைப் பொறுத்ததாகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : மத்திய அரசு தணிக்கைக் குழுவிற்கு உறுப்பினர்களை நியமிக்கும்போது, மாநில அரசு ஆலோசனை செய்து அனுமதித்த உறுப்பினர் அவர்களை நியமிக்காமல் மாற்றியமைத்துவிட்டது. மாநில அரசைக் கலந்தாலோசிக்காமல் ஒரு அலுவலரை நியமித்திருக்கிறது என்றும், அதற்காக என்று எந்த விதி முறையும் இல்லை என்றும் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதற்கென்று விதிமுறைகள் இல்லாவிட்டாலும் கூட, இதை ஒரு சம்பிரதாயமாகக் கொண்டு மாநில அரசைக் கலந்துகொண்டுதான் நியமித்திருப்பதாக எனக்கு நினைவு இருக்கிறது. அந்த முறையைக் கடைப் பிடிக்காதது ஒரு குற்றம் என்பதோடு மாநில அரசிலே பணியாற்றக்கூடிய ஊழியரை மாநில அரசைக் கலக்காமல் நியமித்தால், மாநில அரசை மத்திய அரசு புறக்கணிக்கின்றது என்ற நிலைமை ஏற்படுகிறது. எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மத்திய அரசுக்கு நம்முடைய வருத்தத்தைத் தெரிவிப்பார்களா என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த மாநில அரசு ஊழியர் ஒருவரை



நம் அனுமதியில்லாமல் அந்தக் குழுவில் எப்படி நியமித்தார்கள் என்பதைப் பற்றிக் கேட்குமா? அந்த அதிகாரி மீது அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மத்திய அரசு மாநில அரசைக் கேட்டுக்கொண்டு குழுவை அமைக்க வேண்டும் என்று சட்ட விதிமுறை எதுவும் இல்லை. அப்படிப்பட்ட நடைமுறையும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்கள் அதிகாரத்தின் கீழ் உள்ள உரிமையின்படி தான் செய்திருக்கிறார்கள். அதை நாம் குற்றம் என்று சொல்ல முடியாது. நம் முதல்வர் அவர்கள் 4—3—1978 அன்று ஒரு நேர்முகக் கடிதத்தில் மத்திய செய்தி ஒலிபரப்புத் துறை அமைச்சர் அவர்களுக்கு இது தொடர்பான கருத்துக்களை எழுதியிருக்கிறார்கள். அது அவர்கள் கவனத்திற்குச் சென்ற பிறகு செய்தார்களா, அதற்கு முன்னதாகவே அப்படி அமைத்தார்களா என்பதுபற்றித் தெரியாது. அவர்கள் நம் திரைப்படத் தொழில் நுட்பக் கல்லூரி முதல்வர் அவர்களை உறுப்பினராக அதில் சேர்த்திருக்கலாம். அவர்கள் சேர்க்கவில்லை. அதற்குப் பதிலாக திரு. பொன் அடியான் என்பவர் சேர்க்கப் பட்டிருக்கிறார். அவர் பொன் அடியான் என்ற பெயரிலே மாநில அரசில் வேலையில் இல்லை. ஒருவேளை பெயர் தெரியாமல் சேர்த்துக்கொள்ளப்பட்டிருக் கின்றாரா என்பதுபற்றித் தெரியவில்லை. அவர் நம் மாநில அரசிடம் முறையான அனுமதி பெறவில்லை. அதற்கான நடவடிக்கைகளை அரசு எடுத்துக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : மத்திய தணிக்கைக் குழுவினுடைய அலுவலகம் சென்னையிலே அமைக்கப்படும் என்ற செய்தி இருக்கிறதே, அது உண்மையா? முத்தக் காட்சிகள் அனுமதிக்கப்பட வேண்டுமென்று மத்திய அமைச்சர் அவர்கள் பேசியதாகத் தகவல் வந்திருக்கிறது. அதுபற்றி நமது அரசுக்குத் தகவல் தெரியுமா? அதில் நம்முடைய அரசின் கொள்கை என்ன என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : நம் அரசின் கொள்கையைக் குறித்துத்தான் 4—3—1978 ஆம் நாள் கடிதத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மத்திய அமைச்சருக்குத் தெரிவித்திருக்கிறார்கள். இது போன்ற எதிர்ப்புகளோ, மாற்றுக் கருத்துக்களோ தமிழகத்தில் இருக்குமானால், அதைப் பற்றி மறுபரிசிலனை செய்ய வேண்டும். மாநில அரசு அளவிலே மாநில அரசு தொடர்புடைய ஒரு குழு அதற்காக அமைக்க வேண்டும் என்று அரசு கேட்டுக்கொண்டிருக்கிறது. நமது முதலமைச்சர் அவர்கள் இதுபோன்ற காட்சிகளை நிச்சயமாக அனுமதிக்க மாட்டோம் என்று தெரிவித்திருக்கி றார்கள். மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் அறிவித்ததுபோல, மத்திய

தணிக்கைக் குழு அலுவலகம் சென்னையில் அமைப்பதற்கான ஆலோசனைகள் இருக்கிறதா என்பதைப்பற்றி அரசுக்குத் தெரியாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 10–40)

திரு. ஜார்ஜ் கோமகன் : திரைப்படத் தணிக்கைக் குழு அமைக்கப்படும் நேரத்தில், மத்தியில் இருந்த முந்தைய காங்கிரஸ் அரசு மாநில அரசைக் கலந்தாலோசித்து குழுவை அமைத்திருக்கிறதா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : அது சட்டப்படி நடைபெறாத காரியம் என்பதாலே பொறுப்பிலேயுள்ள அமைச்சரவர்களுடைய சொந்த அதிகாரபூர்வமாக, சட்ட ரீதியாகக் காரியங்கள் நடைபெற்றதாகக் குறிப்புகள் விருப்பங்களை வைத்து, காரியங்கள் நடைபெற்றிருக்கலாம். ஆனால் முறையாக இல்லை.

திரு. வே. தங்கப்பாண்டியன் : திரைப்படத் தணிக்கைக் குழுவில் மாநில அரசின் சார்பில் அங்கத்தினர் இருக்க வேண்டுமென்று அரசு யாரையாவது சிபாரிசு செய்திருக்கிறதா ? அப்படி சிபாரிசு செய்யப்பட்டு, அதை மத்திய அரசு ஏற்றுக்கொள்ளவில்லையா ? இது கடுமையான பிரச்சினை. நம்முடைய மாநிலத்தில் தயாரிக்கப்படும் சினிமா சம்பந்தப்பட்ட பிரச்சினைகளைத் தீர்க் கின்ற அதிகாரம் மத்திய அரசிடம் இருக்க வேண்டுமா ? இதை ஸ்டேட் லிஸ்ட்டுக்குக் கொண்டுவர ஒரு தீர்மானம் போட்டு, அதை மத்திய அரசுக்கு அனுப்ப அரசு தயாராக இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : இது நம்முடைய மாநிலத்தைப் பொறுத்த விஷயம் மட்டுமல்ல. இந்தியாவிலே இருக்கிற பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த ஒரு பொதுக் கருத்தின் அடிப்படையிலே உருவாக வேண்டிய விஷய மாகும். என்றாலும், மத்திய அரசின் பட்டியலிலே இருக்கக்கூடிய அந்த அதிகாரத்தை மாநில அரசு பெறுகின்ற கோரிக்கையை ஒரு மாநிலத் தினுடைய வேண்டுகோள் மூலம் நிறைவேற்ற முடியாது. இந்தியாவில் உள்ள எல்லா மாநில அரசுகளும் அதைப் பின்பற்றிக் கேட்கும் நிலைமை வந்தால், அதற்குப் பிறகு மத்திய அரசு என்ன முடிவு செய்கிறது என்பதைத் தெரிந்து கொள்ள முடியும். மாண்புமிகு உறுப்பினரவர்கள் கேட்டது, நாம் இங்கேயிருந்து யாருடைய பெயரையாவது அனுப்பினோமா என்பதுதான். நாம் எந்தப் பட்டியலும் அனுப்பவில்லை. நான் முன்னாலே சொன்னபடி, திரைப்படத் தொழில் நுட்பக் கல்லூரியினுடைய முதல்வரவர்களை அந்தக்



குழுவிலே சேர்த்துக்கொள்ள அவர்கள் கேட்டார்கள். அவரும் அரசிடத்திலே அனுமதி கேட்டார். அரசு அனுமதி கொடுத்தது. என்ன காரணத்தினாலோ அவர் இடம் பெறவில்லை. இதுதான் இன்றைக்குள்ள நிலைமை.

திரு. ஜி. சுவாமிநாதன் : மத்திய அரசின் அதிகாரத்தில் இருந்தாலும், படங்கள் எல்லா மாநிலங்களிலும் ஓடுகின்றன. மாநிலத்திற்கு மாநிலம் கலாச்சாரம் வேறுபடுகிறது. ஆகவே தணிக்கையைப் பொறுத்தவரையில், என்ன முறையில் அதற்கான வரன்முறை இருக்க வேண்டுமென்று மாநில அரசுகளைக் கலந்துகொண்டு செய்தால் நல்லது. மாநில அரசின் அபிப்ரா யங்களைப் பிரதிபலிப்பதென்ற கருத்தை அடிப்படையாக வைத்துக் கொண்டு, மாநிலத்திலே இருக்கக்கூடியவர்களைக் கூட்டி—மாநாடு கூட்டி, நம்முடைய மாநிலத்திலே எந்த முறையில் தணிக்கைக்கான வரன்முறை இருக்கலாமென்று முடிவு செய்து, அதை மத்திய அரசுக்கு அனுப்பும் ஆலோசனை அரசிடம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு உறுப்பினர் திரு. சுவாமிநாதன் அவர்கள் தெரிவித்ததுபோல், மாநாடு கூட்டித்தான் கருத்துக்களைத் தெரிவிக்க வேண்டுமென்பதில்லை. நான் முன்னாலேயே அறிவித்தபடி, இந்த மாநில மக்களின் கருத்துக்களை, இந்த அரசின் கருத் துக்களை, மாண்புமிகு முதல்வரவர்கள் மத்திய அரசுக்குத் தெரிவித்திருக் கிறார்கள். இந்தக் கேள்வியை ஒட்டி இங்கே நடைபெற்றுக்கொண்டிருக்கும் விவாதங்களின் குறிப்புகள் மத்திய அரசுக்குத் தெரிவிக்கப்படுகிறது, தெரிவிக்கப்படும். இதன் தொடர்பான செய்திகள் பத்திரிகையில் வரும். ஆகவே இந்த மாநில அரசினுடைய உணர்வை, இந்த மன்றத்தினுடைய உணர்வை மத்திய அரசு தெரிந்துகொண்டு, எதிர்காலத்திலே தக்க மதிப்பு அளிக்கும், நடவடிக்கைகளை எடுக்குமென்று நினைக்கிறேன்.

திரு. க. அறிவழகன் : இதிலே மத்திய மாநில உறவு சம்பந்தப்பட்ட பிரச்சினை இருக்கிற காரணத்தால், மாண்புமிகு அமைச்சரவர்கள் மிக ஜாக்கி ரதையாகப் பதில் அளித்துக்கொண்டிருக்கிறார்கள். மத்தியத் திரைப்பட தணிக்கைக் குழுவில், மாநிலத்தைச் சேர்ந்த ஒரு கவிஞர், அதுவும் மாமன்றங் களில் கவிதை இயற்றி பாடக்கூடிய பெரிய கவிஞர் இடம் பெற்றிருக்கிறார். அவரது அவர் ஊழியராக இருக்கிற காரணத்தால் இடம் பெறவில்லை. ஊழியர் என்பதால் இடம் பெறாமல் இருந்து, பிறகு அவர் அனுமதி கேட்டால், இப்போதிருக்கிற சூழ் நிலையில், அவர் அந்தக் குழுவில் பணியாற்ற அரசு அனுமதி தருமா என்று அறிய விரும்புகிறேன்.

[1978 மார்ச் 17

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: ஒருசில நடைமுறை விதிகளை உருவாக்கிக் கொண்டு அதன் அடிப்படையிலே நாம் எல்லாக் காரியங்களையும் ஆற்றிக்கொண்டிருக்கிறோம். அதற்குமேலே சட்ட விதிகளை உருவாக்கி வைத்துக்கொண்டிருக்கிறோம். சட்ட விதிகளுக்கு உட்பட்டு ஒரு அரசு அலுவலர் அந்தப் பணியை ஏற்றுக்கொள்வதற்கு, முன்னாலேயே அவர் அரசை அணுகியிருக்க வேண்டும். அல்லது அரசில் பணியாற்றுகின்ற ஒருவரை அழைக்கும்போது, அழைப்பதற்கு முன்னாலேயே அனுமதி பெற்றிருக்க வேண்டும். நான் முன்னாலே தெரிவித்த திரைப்படத் தொழில் நுட்பக் கல்லூரி முதல்வரவர்கள், அவர்களுடைய வேண்டுகோள் கிடைத்தவுடன் அரசை அணுகி, அனுமதி பெற்றார். இதுமாதிரி இந்த அலுவலரும் அனுமதி பெற்றிருக்க வேண்டும். அவர் குழுவில் பணியாற்ற ஒப்புதல் அளித்து, இப்போது பணியாற்றிக்கொண்டிருக்கிறாரா என்பதும் தெளிவாகத் தெரியவில்லை. ஒப்புதல் அளிப்பதற்கு முன்னால் அந்த அலுவலர் கேட்டிருக்க வேண்டும். அதுதான் இப்போது பிரச்சினை. ஒரு கவிஞர் அந்தக் குழுவிலே இடம் பெற்றுவிட்டார்; எப்படியோ ஒரு இடம் அந்தத் தணிக்கைக் குழுவிலே கிடைத்துவிட்டதே என்று ஏதோ இந்த அரசு காத்துக்கொண்டி-ருப்பது போலவும், எதிர்பார்த்துக்கொண்டிருப்பது போலவும், நம்முடைய அலுவலர் ஒருவருக்கு இடம் கிடைத்துவிட்டதே, எப்படியோ அதைப் பிடித்துக் கொண்டு விடலாமென்ற உணர்விலே நாம் இந்தப் பிரச்சினையை அணுக முடியாது. நடைமுறை, சட்டம், ஒழுங்கு, விதிமுறை ஆகியவற்றின் அடிப் படையில் காரியங்கள் நடைபெற வேண்டுமென்று தெரிவித்துக்கொள் கிறேன்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: நம்முடைய மாநிலத்திலே தயாரிக்கப் படுகின்ற படங்களைத் தணிக்கை செய்யும் குழுவை மத்திய அரசு நியமிக்கிறது. நாம், நம்முடைய நாகரீகம், பண்பாட்டையொட்டி படம் தயாரிக்கிறோம். அதே நேரத்தில் பிற மாநிலங்களில் தயாரித்து, இங்கே திரையிடப்படும் படங்கள் நம்முடைய நாகரீகத்திற்கும், பண்பாட்டிற்கும் ஒவ்வாத காட்சிகள் இடம் பெற்றதாக இருக்கின்றன. அப்படிப்பட்ட படங்களை இங்கே திரையிடும் போது, அந்தப் படங்களைத் தணிக்கை செய்ய, மாநில அரசே ஒரு தணிக்கைக் குழுவை நியமித்து, அதன்மூலம் நம்முடைய மாநிலத்தின் கலை, பண்பாடு, கலாச்சாரத்தைக் காப்பாற்ற அரசு முயற்சி எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: இந்த முயற்சியினுடைய ஆரம்பக் கட்டமாகத்தான் முதல்வரவர்கள் கடிதம் எழுதியிருக்கிறார்களென்று இரண்டு, மூன்று முறை தெரிவித்திருக்கிறேன். அதிலே, சென்னையில் ஓர் ஆலோசனைக்



9978 மார்ச் 17]

குழு அமைத்து, ஆபாசக் காட்சி இருந்தால், தணிக்கை அதிகாரிகள் மறுமுறை அந்தப் படத்தைப் பார்த்து, திருத்தம் செய்யும் அதிகாரத்தை அந்தக் குழுவிற்கு அளிக்க வேண்டுமென்ற யோசனையைத் தெரிவித்திருக்கிறார்கள். அதுதான் அடிப்படைக் கருத்து. இந்த மாதிரிக் குழுக்கள் அமைக்கும்போது, மாநில அரசுகள் கலந்தாலோசிக்கப்பட வேண்டுமென்று செய்தித்துறை அமைச்சர் மாநாட்டில் நான் எடுத்துச் சொல்லியிருக்கிறேன். இது வழக்கமாக வந்துகொண்டிருப்பதால், இயற்கையாகத் தங்கள் கையிலே உள்ள அதிகாரத்தை ஒப்படைக்கக்கூடாது என்பதாலோ, இதனால் வேறு விளைவுகள் வரும் என்பதாலோ மத்திய அரசு இதற்கு இணக்கம் காட்டவில்லை. நம்முடைய கருத்துக்களை நாம் எடுத்து வைக்கிறோம். அந்த உரிமைகளைப் பெற முயலுவோம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-50)

இன்னொன்று இந்திப் படத்தைப் பற்றிச் சொன்னார்கள். அதற்காகவே அந்த அதிகாரத்தை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். இந்தியா முழுவதும் இந்திப் படம் ஓடிக்கொண்டிருக்கிறது. அதற்கு வேறு சில காரணங்களையும் சொல்லுகிறார்கள். அதை நான் இந்த மன்றத்திலே அமைச்சர் என்ற பொறுப்பில் இருந்துகொண்டு தெரிவிக்கக் கூடாது. எந்தக் காரணங்கள் வெளியே சொல்லப்பட்டாலும், அவைகளை அனுமதிக்க முடியாது என்று நான் கருதினாலும், மக்கள் என்ன எண்ணுகிறார்கள் என்று தெரியும். அதைத் தவிர்த்து உலகம் முழுவதும் ஓடுகிற ஆங்கிலப் படமும் வருகிறது. அவர் களுடைய உரிமையையும் பாதுகாக்க வேண்டிய அவசியம் இருக்கிறது. அதனால்தான் மத்திய அரசு இந்த அதிகாரத்தைத் தன்னிடமே வைத்துக் கொண்டிருக்கிறது.

திரு. எல். பலராமன்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன்னுடைய பதிலிலே, திரைப்படத் தணிக்கைக் குழுவிற்கு மத்திய அரசாங்கம் சட்டரீதி யாக உறுப்பினர்களை நியமித்திருக்கிறது என்று கூறினார்கள். மேலும் அவர்கள் பதிலளிக்கும்போது, வழி முறையாக மரபு நிலையாக, அதாவது கன்வென்ஷனாக அவர்கள் அதைப்பற்றி நம்மையும் கேட்டிருக்க வேண்டு மென்று கூறினார்கள். மரபு நிலைக்கு இந்தத் தமிழ் நாடு அரசாங்கம் மரியாதை தருகிறதென்றால், மரியாதை தராத மத்திய அரசுக்குத் தன்னுடைய கண்டனத்தைத் தெரிவிக்க ஏதாகிலும் ஆலோசனை அரசிடத்தில் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: கேட்டிருக்க வேண்டுமென்று நான் தெரிவிக்கவில்லை. இதுவரை வழக்கத்திலே இல்லையென்று தெரிவித்தேன். இதற்கு முன்னால் இருந்தவர்களும் கேட்டிருந்தார்கள். மாண்புமிகு

[1978 மார்ச் 17

முதலமைச்சர் அவர்களும் கடிதம் எழுதியிருக்கிருர்கள். ஆகவே சட்டப்படி நடந்துகொண்டிருப்பதால், அது குறித்துக் கண்டனம் எழுப்ப வேண்டிய பிரச்சினையே எழவில்லை.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : விளுக்கள் 180, 181, 182, 183 ஒத்திப்போடப்படுகின்றன. விளுக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. உரிமைப் பிரச்சினை.

**ஈரோட்டிலுள்ள அண் நினைவகத்தில் விஜயன் என்பவருக்கு வேலை கொடுக்கப்பட்டிருக்கிறது என்றும் 1974-75 ஆம் ஆண்டு தமிழ் நாடு அரசு நிர்வாக அறிக்கைப் பிரதிகள் எறிக்கப்பட்டன என்றும் உறுப்பினர் திரு. ஆற்காடு நா. வீராசாமி தவருன செய்தி தந்ததாகக் குற்றச்சாட்டு குறித்து.**

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அறிவழகன், ஒரு உரிமைப் பிரச்சினையை எழுப்ப முன்னறிவிப்பைக் கொடுத்திருக்கிருர்கள். அது எப்படி உரிமைப் பிரச்சினைக்குட்பட்டு வருகிறது என்பதைச் சுருக்கமாக விளக்கக் கோருகிறேன்.

**திரு. க. அறிவழகன் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற மேலவை விதி 157-ன் கீழ் இந்த உரிமைப் பிரச்சினையை நான் எழுப்ப அனுமதியைக் கோருகிறேன்.

1978-79 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தின் மீதான பொது விவாதத்தில் 28—2—1978 அன்று பேசும்போது மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள், பெரியார், அண்ணு நினைவாலயத்தைப்பற்றி கீழ்க் கண்டவாறு கூறினுர்:—

"அதற்கு வேலைக்கு எங்கேயிருந்து ஆள் வருகிருர் தெரியுமா? பாலக் கோட்டிலிருந்து வருகிருர். 1—1—1978-ல் வருகிருர். 2—1—1978 அவருக்கு வேலை அங்கே கொடுக்கப்படுகிறது. அவருடைய பெயர் விஜயன். கிச்சாமியின் மகன். ஏழாவது படித்தவர். அவருடைய மதர்டங் மலையாளம்.

மீண்டும் மாண்புமிகு செய்தி, சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்களின் பேச்சில் குறுக்கிட்டு பதில் அளிக்கையில் மாண்புமிகு உறுப்பினர் திரு. வீரா சாமி அவர்கள் கீழ்க்கண்டவாறு கூறுகிருர் :—

**ஈரோட்டிலுள்ள அண்ணு நினைவகத்தில் விஜயன் என்பவருக்கு வேலை** 
**கொடுக்கப்பட்டிருக்கிறது என்றும் 1974–75 ஆம் ஆண்டு**
**தமிழ்நாடு அரசு நிர்வாக அறிக்கைப் பிரதிகள்**
**எறிக்கப்பட்டன என்றும் உறுப்பினர்**
**திரு. ஆற்காடு நா. வீராசாமி தவருன**
**செய்தி தந்ததாகக் குற்றச்சாட்டு**
**குறித்து**

1978 மார்ச் 17] [திரு. க. அறிவழகன்]

"அவர் வேலை வாய்ப்பு நிலையத்தில் பதிவு செய்யவில்லை. விஜயன் தமிழ்
நாட்டில் பிறக்கவில்லை. தமிழ்நாட்டில் அவர் வாழவில்லை. ஜனவரி 1ந் தேதி
தமிழகத்தில் வருகிருர். ஏழாவது வகுப்பு படித்திருக்கிருர். எம்பளாய்மென்ட்
எக்சேன்ஜ் மூலமாக இல்லாவிட்டாலும் உங்கள் ஆட்சியின் மூலம் வேலை
கொடுக்கப்படுகிறது என்பது இன்ெைரு குற்றச்சாட்டு ஆகும். இப்படி
ஈரோட்டில் வேலை கொடுத்திருக்கிருர்கள் இதுதான் குற்றச்சாட்டு".

மீண்டும் 1974-75 ஆம் ஆண்டுக்கான தமிழ் நாடு நிர்வாக அறிக்கையைப்
பற்றிக் குறிப்பிடும்போது கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டிருக்கிருர் மாண்புமிகு
உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள்.

"தமிழ்நாடு அட்மினிஸ்டிரேட்டிவ் ரிப்போர்ட் 1974-75 அரசு 1976 ஆம்
ஆண்டு செப்டம்பர் மாதம் 23-ந் தேதி அச்சிடப்பட்டது. நம்முடைய
தலைமைச் செயலாளர் திரு. கார்த்திகேயன் அதிலே முன்னுரையை எழுதி
யிருக்கிருர்கள். இவ்வளவு அழகான புத்தகத்தை என்ன செய்திருக்கிருர்
கள் என்ருல், முக்கியமான இடங்களில் வைத்துவிட்டு மீதியை எறித்துவிட
வேண்டுமென்று சொல்லியிருக்கிருர்கள். திராவிட முன்னேற்றக் கழக
ஆட்சியின் சாதனைகளைப் பற்றி தலைமைச் செயலாளர் அதிலே எழுதியிருக்
கிருர்கள். அதையே கொளுத்தியிருக்கிருர்கள் என்று சொன்னுல்
அதைவிட இந்த ஆட்சியில் பயங்கரமான நிர்வாகச் சீர்கேடு வேறு என்ன
இருக்க முடியுமென்று சுட்டிக் காட்ட விரும்புகிறேன்" என்று குறிப்பிட்
டிருக்கிருர்கள்.

இந்த மாண்புமிகு அவையின் முன்னுல் 15—3—1978 அன்று நம்முடைய
அவையின் முன்னவர் அவர்கள் ஒரு விளக்கம் அளித்து, மாண்புமிகு
உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் சொன்ன கருத்துக்களில் உண்மை எது
மில்லை என்பதைத் தெளிவாகத் தெரிவித்திருக்கிருர்கள். இதிலிருந்து
திரு. வீராசாமி அவர்கள் அவையில் பேசும்போது வேண்டுமென்றே இந்த
அவையைத் திசை திருப்பும் வகையில் உண்மைக்கு மாருன தகவல்களை
வெளியிட்டிருக்கிருர் என்பது விளங்குகிறது. இது அவையின் உரிமையை
மீறுகிற வகையில் இருப்பதால் இதை உரிமைக் குழுவிற்கு அனுப்ப வேண்டு
மென்று கேட்டுக்கொள்கிறேன்.

[1978 மார்ச் 17

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** இதை மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்களுக்கு அனுப்பி அவருடைய விளக்கத்தைப் பெற்ற பின்னர் என்னுடைய தீர்ப்பை வழங்குகிறேன்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** துணைத் தலைவர் அவர்களே, உரிமைக் குழுவிற்கு அனுப்பிவிடலாம் என்று நானே முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** நான் முடிவு செய்ய வேண்டியது அது.

## 3. கவன ஈர்ப்பு.

**கைத்தறிக்கென்று ஒதுக்கப்பட்ட பேண்டேஜ் மற்றும் காஸ் துணியை விசைத் தறியில் உற்பத்தி செய்யக் கூடாதெனவும் மற்றும் சில கோரிக்கைக் களுக்காகவும் சத்திரப்பட்டி ஏரியா அனைத்துக் கட்சி சார்பில் 13—2—1978 அன்று நடைபெற்ற வேலை நிறுத்தம் குறித்து.**

**திரு. வே. தங்கப்பாண்டியன் :** துணைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு கைத்தறி மற்றும் பஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்:—

"கைத்தறிக்கென்று ஒதுக்கப்பட்ட பேண்டேஜ் மற்றும் காஸ் துணியை விசைத்தறியில் உற்பத்தி செய்யக் கூடாதெனவும் மற்றும் சில கோரிக்கை களுக்காகவும் சத்திரப்பட்டி ஏரியா அனைத்துக் கட்சி சார்பில் 13—2—1978 அன்று வேலை நிறுத்தம் செய்ததும் அதனால் அப்பகுதி கைத்தறி நெசவாளர்கள் படும் இன்னல் குறித்தும்."

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :** மாண்புமிகு துணைத் தலைவ. அவர்களே, இராமநாதபுரம் மாவட்டம் சத்திரப்பட்டி பகுதியிலுள்ள கைத்தறி நெசவாளர்கள் அனைத்துக் கட்சி ஆதரவில் 13—2—1978 அன்று வேலை நிறுத்தம் செய்தனர். அவர்கள் ஊர்வலமாகச் சென்று இராஜபாளையம் வட்டாட்சியரிடம் 15 கோரிக்கைகள் அடங்கிய ஒரு மனுவை சமர்ப்பித்தார்கள். அதில் முதல் இந்த கோரிக்கைகளில் கைத்தறிக்கென்று ஒதுக்கப்பட்ட பேண்டேஜ் மற்றும் காஸ் வகைத் துணிகள் விசைத் தறியில் உற்பத்தி செய்யக்



1978 மார்ச் 17] [திரு. கே. இராஜா முகமது]

கூடாது என்று கோரியிருந்தனர். கைத்தறி ஒதுக்கீட்டு திட்ட ஆணைகள் மீறப் பட்டதற்காக வழக்குத் தொடர்ந்து தண்டனை அளித்ததை எதிர்த்துச் சில விசைத்தறி உரிமையாளர்கள் சென்னை உயர்நீதி மன்றத்தில் தாக்கல் செய்த ரிட் மனு இடையே தள்ளுபடி செய்யப்பட்டது. இதனைத் தொடர்ந்து கைத்தறி ஒதுக்கீட்டுத் திட்ட ஆணைகள் இந்தப் பகுதியில் செயல்படுத்துவது தீவிரப் படுத்தப்பட்டது. இதன் விளைவாக "ஒதுக்கீட்டு ஆணைகள்" 52 நிறுவனங்களைச் சார்ந்த 235 விசைத் தறிகளால் மீறப்பட்டதாகக் கண்டுபிடிக்கப்பட்டு, 28 நபர்களுக்கு அபராதம் விதிக்கப்பட்டது. மீதமுள்ள வழக்குகளில் குற்றப் பத்திரிக்கை தாக்கல் செய்து மேற்கொண்டு நடவடிக்கைகள் தொடரப் பட்டுள்ளது.

இதைத் தவிர கைத்தறியில் தயாரிக்கப்பட்ட காஸ் பாண்டேஜ் துணிகளை மட்டும் அரசாங்க மருத்துவ மனைகளில் உபயோகப்படுத்துவதற்கான ஒரு செயற்குறிப்பு அரசின் பரிசிலனையில் உள்ளது. இதனால் இராஜபாளையம் சத்திரப்பட்டி பகுதியிலுள்ள கைத்தறி நெசவாளர்களுக்கு நல்ல வாய்ப்புக் கிடைக்கும். மீதமுள்ள கோரிக்கைகள் வருமாறு :—

கைத்தறி நெசவாளர்களின் குழந்தைகளுக்கு அட்டவணையில் கண்ட வகுப்பினருக்கு அளிப்பது போன்ற தனி கல்விச் சலுகை ;

நெசவாளர்கள் வீடு கட்டிக்கொள்ள மானியம் ;

நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் நிதி நெருக்கடிகளைத் தீர்த்தல் ;

தள்ளுபடித் தொகையை அதிகரித்தல் ;

பிரதம சங்கங்களிடமிருந்து வர தள்ளுபடி மான்ய நிலுவைக்காகவும், மத்திய கூட்டுறவு வங்கிகள் சான்றுரை கடன்கள் வேண்டிய நிலுவைக்காகவும், வழங்குதல் ;

சத்திரப்பட்டியில் தொழிலிய கூட்டுறவுச் சங்கங்களைத் தொடங்குதல்.

இந்தக் கோரிக்கைகளில் எவைகள் சாத்தியமோ அவைகள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**திரு. வே. தங்கப்பாண்டியன் :** துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலிலிருந்து பல்வேறுவிதமான கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டன என்று தெரிகிறது. ஆனாலும் அந்தப் பகுதியிலுள்ள

ஈரோட்டிலுள்ள அண்ணா நினைவகத்தில் விஜயன் என்பவருக்கு
வேலை கொடுக்கப்பட்டிருக்கிறது என்றும் 1974–75 ஆம்
ஆண்டு தமிழ்நாடு அரசு நிர்வாக அறிக்கைப்
பிரதிகள் எறிக்கப்பட்டன என்றும் உறுப்
பினர் திரு. ஆற்காடு நா. வீராசாமி
தவறான செய்தி தந்ததாகக்
குற்றச்சாட்டு குறித்து

[1978 மார்ச் 17

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** இதை மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்களுக்கு அனுப்பி அவருடைய விளக்கத்தைப் பெற்ற பின்னர் என்னுடைய தீர்ப்பை வழங்குகிறேன்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** துணைத் தலைவர் அவர்களே, உரிமைக் குழுவிற்கு அனுப்பிவிடலாம் என்று நானே முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** நான் முடிவு செய்ய வேண்டியது அது.

3. கவன ஈர்ப்பு.

**கைத்தறிக்கென்று ஒதுக்கப்பட்ட பேண்டேஜ் மற்றும் காஸ் துணியை விசைத் தறியில் உற்பத்தி செய்யக் கூடாதெனவும் மற்றும் சில கோரிக்கைக் களுக்காகவும் சத்திரப்பட்டி ஏரியா அனைத்துக் கட்சி சார்பில் 13—2—1978 அன்று நடைபெற்ற வேலை நிறுத்தம் குறித்து.**

**திரு. வே. தங்கப்பாண்டியன் :** துணைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு கைத்தறி மற்றும் பஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்:—

"கைத்தறிக்கென்று ஒதுக்கப்பட்ட பேண்டேஜ் மற்றும் காஸ் துணியை விசைத்தறியில் உற்பத்தி செய்யக் கூடாதெனவும் மற்றும் சில கோரிக்கை களுக்காகவும் சத்திரப்பட்டி ஏரியா அனைத்துக் கட்சி சார்பில் 13—2—1978 அன்று வேலை நிறுத்தம் செய்ததும் அதனால் அப்பகுதி கைத்தறி நெசவாளர்கள் படும் இன்னல் குறித்தும்."

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :** மாண்புமிகு துணைத் தலைவ. அவர்களே, இராமநாதபுரம் மாவட்டம் சத்திரப்பட்டி பகுதியிலுள்ள கைத்தறி நெசவாளர்கள் அனைத்துக் கட்சி ஆதரவில் 13—2—1978 அன்று வேலை நிறுத்தம் செய்தனர். அவர்கள் ஊர்வலமாகச் சென்று இராஜபாளையம் வட்டாட்சியரிடம் 15 கோரிக்கைகள் அடங்கிய ஒரு மனுவை சமர்ப்பித்தார்கள். அதில் முதல் இந்து கோரிக்கைகளில் கைத்தறிக்கென்று ஒதுக்கப்பட்ட பேண்டேஜ் மற்றும் காஸ் வகைத் துணிகள் விசைத் தறியில் உற்பத்தி செய்யக்





கூடாது என்று கோரியிருந்தனர். கைத்தறி ஒதுக்கீட்டு திட்ட ஆணைகள் மீறப்
கூடாது என்று கோரியிருந்தனர். கைத்தறி ஒதுக்கீட்டு திட்ட ஆணைகள் மீறப் பட்டதற்காக வழக்குத் தொடர்ந்து தண்டனை அளித்ததை எதிர்த்துச் சில விசைத்தறி உரிமையாளர்கள் சென்னை உயர்நீதி மன்றத்தில் தாக்கல் செய்த ரிட் மனு இடையே தள்ளுபடி செய்யப்பட்டது. இதனைத் தொடர்ந்து கைத்தறி ஒதுக்கீட்டுத் திட்ட ஆணைகள் இந்தப் பகுதியில் செயல்படுத்துவது தீவிரப் படுத்தப்பட்டது. இதன் விளைவாக "ஒதுக்கீட்டு ஆணைகள்" 52 நிறுவனங்களைச் சார்ந்த 235 விசைத் தறிகளால் மீறப்பட்டதாகக் கண்டுபிடிக்கப்பட்டு, 28 நபர்களுக்கு அபராதம் விதிக்கப்பட்டது. மீதமுள்ள வழக்குகளில் குற்றப் பத்திரிக்கை தாக்கல் செய்து மேற்கொண்டு நடவடிக்கைகள் தொடரப் பட்டுள்ளது.

இதைத் தவிர கைத்தறியில் தயாரிக்கப்பட்ட காஸ் பாண்டேஜ் துணிகளை மட்டும் அரசாங்க மருத்துவ மனைகளில் உபயோகப்படுத்துவதற்கான ஒரு செயற்குறிப்பு அரசின் பரிசிலனையில் உள்ளது. இதனால் இராஜபாளையம் சத்திரப்பட்டி பகுதியிலுள்ள கைத்தறி நெசவாளர்களுக்கு நல்ல வாய்ப்புக் கிடைக்கும். மீதமுள்ள கோரிக்கைகள் வருமாறு :—

கைத்தறி நெசவாளர்களின் குழந்தைகளுக்கு அட்டவணையில் கண்ட வகுப்பினருக்கு அளிப்பது போன்ற தனி கல்விச் சலுகை ;

நெசவாளர்கள் வீடு கட்டிக்கொள்ள மானியம் ;

நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் நிதி நெருக்கடிகளைத் தீர்த்தல் ;

தள்ளுபடித் தொகையை அதிகரித்தல் ;

தள்ளுபடி மான்ய நிலுவைக்காகவும், பிரதம சங்கங்களிடமிருந்து வர வேண்டிய நிலுவைக்காகவும், மத்திய கூட்டுறவு வங்கிகள் சான்றுரை கடன்கள் வழங்குதல் ;

சத்திரப்பட்டியில் தொழிலிய கூட்டுறவுச் சங்கங்களைத் தொடங்குதல். இந்தக் கோரிக்கைகளில் எவைகள் சாத்தியமோ அவைகள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**திரு. வே. தங்கப்பாண்டியன் :** துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலிலிருந்து பல்வேறுவிதமான கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டன என்று தெரிகிறது. ஆனாலும் அந்தப் பகுதியிலுள்ள

கைத்தறி நெசவாளர்கள் மீண்டும் வருகிற 20 ஆம் தேதி மறியல் போராட்டம் நடத்த மிகப் பெரிய திட்டத்தில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சம்பந்தப்பட்டவர்களை அழைத்து நிறைவேற்றப்பட்ட கோரிக்கைகளை அவர்களிடத்திலே சொல்லி, இந்தப் போராட்டத்தைத் தவிர்க்க அரசாங்கத்தின் சார்பிலே முயற்சி எடுத்துக்கொள்ளப்படுமா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு கே. இராஜா முகமது: துணைத் தலைவர் அவர்களே, இவ்வளவு நடவடிக்கைகள் எடுத்த பிறகும், ராஜபாளையத்திலும், சத்திரப் பட்டியிலும் உள்ளவர்கள் மீண்டும் போராட்டம் நடத்தவிருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கப்பாண்டியன் அவர்கள் இங்கே ஒரு தகவலைத் தந்திருக்கிறார்கள். எங்களுக்குக் கிடைக்காத ஒரு தகவல் அவருக்கு முன்கூட்டியே தெரிந்திருக்கிறது. அந்தத் தகவலைத் தெரிவித்த தற்காக அவருக்கு நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

இந்த ஒதுக்கீடு ஆணைகள் மீறப்படுகிறபோது, எந்தெந்த வகையான துணிகள் ஒதுக்கீடு ஆணைகளை மீறி தயாரிக்கப்படுகின்றனவோ அந்தத் துணிகளைப் பறிமுதல் செய்வதற்குத்தான் அதிகாரம் இருக்கிறதே தவிர, அதைத் தயாரித்த விசைத் தறிகளை இயங்கவிடாமல் தடுக்கவும், மின் விசையைக் கொடுக்காமல் நிறுத்தவும் அதிகாரங்கள் இல்லை. அந்த அதிகாரங்கள் வேண்டுமென்று, மத்திய அரசிடம், பேச்சு வார்த்தைகளின் மூலம், நம்முடைய கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறோம். அந்த அதிகாரங்கள் கிடைக்கிற வரையில், வழக்குப் போடுவதும், திரும்பவும் நீதி மன்றத்தினுடைய தீர்ப்பை எதிர்த்து உயர்நீதி மன்றத்திற்குச் செல்வதும், உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பை எதிர்த்து ஃபுல் பெஞ்சின் தீர்ப்புக்குச் செல்வதும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. அவர்கள் வசதியுள்ள காரணத்தால், சட்ட நுணுக்கங்களை தங்கள் கையில் வைத்துக்கொண்டு

(முற்பகல் 11-00)

வழக்கு மன்றத்திற்குச் சென்றிருக்கிறார்கள். இதை ஏற்கனவே சத்திரப் பட்டி நெசவாளர்களுக்குத் தெரியப்படுத்தி இருக்கிறோம். அது விஷயம் வழக்கு மன்றத்தில் இருக்கிறபோது, நாம் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாது. ஏற்கனவே உயர்நீதி மன்றத்தில் அவர்கள் போட்ட [illegible] [illegible] அன்றுபடி செய்யப்பட்ட பிறகு, கடுமையான நடவடிக்கைகள்



எடுத்த விசைத் தறிகளில் பாண்டேஜ் மற்றும் காஸ் துணிகள் தயாரிக்கக் கூடாது என்று சொல்லி உத்தரவு செயல்படுத்தப்படுவது நிலைப்படுத்தப் பட்டது. இடையில் மீண்டும் அவர்கள் வழக்கு மன்றத்திற்குச் சென்றிருக் கிறார்கள். வழக்கு மன்றத்திற்குக் கொண்டு செல்லப்பட்டிருக்கும் விஷயம் குறித்து உயர்நீதிமன்றத் தீர்ப்பு என்னவென்று தெரிந்த பிறகு, இந்த விஷயத்தில் தெளிவான முடிவிற்கு வரமுடியும் என்று நெசவாளர்களுக்குத் தெரியப்படுத்தியிருக்கிறேன். மேலும் அவர்கள் அமைச்சரைச் சந்திக்க விரும்பினால் சந்திக்கவும், எங்கள் கருத்துக்களைச் சொல்லவும் தயாராக இருக்கிறோம்.

திரு. வே. தங்கப்பாண்டியன்: துணைத் தலைவரவர்களே, அமைச்சர வைக்குத் தெரியாத, அரசாங்கத்திற்குத் தெரியாத காரியம் உறுப்பினருக்குத் தெரிந்திருப்பதாகச் சொன்னார். அவர்கள் நோட்டீஸ் போட்டு அனைத்துக் கட்சி சார்பாக என்று கோரிக்கைகளை அனுப்பியிருக்கிறார்கள். அந்த அறிவிப்பு எனக்கு வந்திருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் வந்திருக்கும். பொறுப்புள்ள அரசாங்க அதிகாரிகள் கொடுக்காமல் இருக்கிறார்களோ என்னவோ எனக்குத் தெரியாது. ஆளுங்கட்சி நண்பர்களும் கையெழுத் திட்டிருக்கிறார்கள். நெசவாளர்களுக்குப் பிரச்சினையில் சந்தேகம் இருப்பதால் தெளிவில்லாமல், கோரிக்கையின் வேகத்தை வைத்துப் போராடியிருக்கலாம். இங்கே அமைச்சர் அவர்கள் தந்த விளக்கத்தை அதிகாரிகள் மூலம் அந்த நெசவாளர்களுக்கு எடுத்து வைக்கலாம். அதைக் கொண்டு மீண்டும் பரிசீலனை செய்ய கைத்தறி நெசவாளர்கள் தயாராக இருக்கக்கூடும் என்பதற்காகச் சொல்கிறேன். எனக்குத் தெரிந்த பிரச்சினை, அமைச்சருக்குத் தெரியாது என்பதல்ல. எதிர்க்கட்சிக்காரர்கள் அந்த நிலைமையில் இருப்பார்கள். போராட்டத்தின் வேகத்தைத் தணிக்க அமைச்சர் அவர்களின் பதில் சாதகமாக இருப்பதால், நான் சொன்ன அந்த முயற்சியில் ஈடுபடத் தயாராக இருக்கிறாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினருக்கு விஷயங்கள் முன்கூட்டித் தெரிந்திருக்கிறது என்று சொல்லக் காரணம், சில நேரங்களில் எல்லோரும் சேர்ந்து பேசித் தீர்த்துக்கொள்ள வேண்டிய விஷயங்களுக்கு அரசியல் வண்ணம் பூசப்பட்டு, போராட்டமாக உருவெடுத்துவிடுகின்றன. சத்திரப்பட்டி பகுதியில் இந்த அரசு வந்த பிறகு மிகப் பெரிய மாறுதல் ஏற்பட்டிருக்கிறது. கடந்த 30

252 கைத்தறிக்கென்று ஒதுக்கப்பட்ட பேண்டேஜ் மற்றும் காஸ் துணியை விசைத் தறியில் உற்பத்தி செய்யக் கூடாதெனவும் மற்றும் சில கோரிக்கைகளுக்காகவும் சத்திரப்பட்டி ஏரியா அனைத்துக் கட்சி சார்பில் 13–2–1978 அன்று நடைபெற்ற வேலை நிறுத்தம் குறித்து

[திரு. கே. இராஜா முகமது] [1978 மார்ச் 17]

ஆண்டுக் காலமாக கைத்தறித் துறையில் தயாரிக்கலாம் என்று ஒதுக்கீட்டு ஆணை இருந்தும் பாண்டேஜ், காஸ் துணிகள் விசைத் தறியில் தயாரிக்கப்பட்டு வந்ததைத் தடுக்க பழைய அரசு என்ன நடவடிக்கை எடுத்தது என்றால் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. நாங்கள் வந்த பிறகு 258 வகையான துணிகளைப் பறிமுதல் செய்து, 58 வழக்குகளைப் போட்டு, 28 நபர்கள் மீது தண்டனை விதிக்க நடவடிக்கை மேற்கொண்டு, அதற்கு மேல் அரசாங்க மருத்துவ மனைகளில் கைத்தறியால் தயாரிக்கப்பட்ட காஸ், பாண்டேஜ் துணிகளை மட்டும் உபயோகிக்க வேண்டும் என்று உத்தரவிட செயற்குறிப்பு வைத்திருக்கிறோம். இவ்வளவு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பது அங்கேயுள்ள கைத்தறி நெசவாளர்களுக்குத் தெரியும். நானே சத்திரப்பட்டி சென்று, கருத்தரங்கம் நடத்தி பல்வேறு பிரச்சினைகளைப் பற்றிப் பேசிவிட்டு வந்திருக்கிறேன். அதற்கிடையில் குறிப்பிட்டவர்கள் ஊர்வலம் வருவதுதான் எனக்குப் புரியவில்லை. அதைத் தவிர்ப்பது நல்லது. அரசாங்கம் நடவடிக்கை எடுக்காமல் அலட்சியமாக இருந்தால், அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வர ஊர்வலம் நடத்தலாம். ஊர்வலமே கூடாது என்று சொல்கிற அரசு அல்ல இந்த அரசு. இவ்வளவு விஷயங்கள், நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்று தெரிந்திருந்தும், எதற்காக இந்த ஆர்ப்பாட்டங்களை நடத்துகிறார்கள் என்று தெரியவில்லை. எந்தக் கட்சி முன்னின்று நடத்துகிறது என்று நான் சொல்லவில்லை. ஆர்ப்பாட்டங்கள் என்றால், காரணம் இருக்கிறதா இல்லையா என்று சிந்தித்து நடத்தினால், நல்லது என்று தெரிவித்துக்கொள்வதைத் தவிர, வேறு எந்த நோக்கமும் என்னிடமில்லை.

## 4. அரசின் தீர்மானம்.

### வேளாண்மை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, பாசன வசதி குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு ஆகியவற்றின் மீது விவாதம்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** வேளாண்மை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, பாசன வசதி குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு இரண்டையும் சேர்த்து விவாதத்திற்கு எடுத்துக் கொண்டால் நல்லது. இரண்டும் ஒரே மாதிரியானதுதான்.

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :** துணைத் தலைவரவர்களே, பாசன வசதி குறித்தும், விவசாயம் குறித்தும் இருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்புகளை ஒரே நேரத்தில் எடுத்துக்கொண்டு மாண்புமிகு உறுப்பினர்கள்



1978 மார்ச் 17]

தங்கள் மேலான கருத்துக்களைத் தெரிவித்த பிறகு, மாண்புமிகு அமைச்சர்கள் ...ங்கள் கருத்துக்களைத் தெரிவிக்க இசைவு தெரிவித்திருப்பதால், இரண்டையும் சேர்த்து ஒன்றாக விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளலாம் என்ற ...ருத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** மேலவைத் துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்ற மேலவையின் முன் வைக்கப்பட்டுள்ள வேளாண்மை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு @ பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

என்று முன் மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** முன் மொழியப்பட்ட தீர்மானம் :

"சட்ட மன்ற மேலவையின் முன் வைக்கப்பட்டுள்ள வேளாண்மை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட ...ண்டும்."

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** துணைத் தலைவரவர்களே,

"சட்ட மன்ற மேலவையின் முன் வைக்கப்பட்டுள்ள பாசன வசதி ...றித்த கொள்கை விளக்கக் குறிப்பு * பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட ...வண்டும்."

...ன்று முன் மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** முன் மொழியப்பட்ட பாசன வசதி தீர்மானம் :

"சட்ட மன்ற மேலவையின் முன் வைக்கப்பட்டுள்ள பாசன வசதி குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

**Thiru D. V. D'MONTE :** Hon. Deputy Chairman, Sir, I just wish to make a few points on the Policy Note on Agriculture. I find that no mention has been made about the rodent's menace. I do not know what the actual loss caused by rats with regard

@ 317-339 ஆம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

*339-352 ஆம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

to foodgrains ... The annual loss of rice due to rodents is estimated at 48 million tons, which would be sufficient to feed 1,000 million people for three months. I dare say that the loss, as far as Tamil Nadu is concerned, is rather on the high side. Rats are the enemy of man, stealing his food, fouling his home and affecting his health. It is often suggested that loss of grains in fields and warehouses caused by rodents would make the difference between marginal loss and plenty. The rodent menace is a serious one. The rats eat and carry away the grains to their furrows and they also contaminate the grains because of their droppings. Rodent menace must be contained by a concerted plan of action and it is for the Government to come to grips with this problem, if it has not already done so.

I also find that there is no mention about the techniques to be used in water and soil conservation. The traditional method of water conservation is the putting up of embankments and bundings. Although bunding helps to control erosion, its capacity is limited. To improve and establish crop production in rain-fed areas, it is necessary that there must be conservation of soil and water. This is the only small point I wish to make as far as this subject is concerned.

Coming to the report on Agro Industries Corporation, I find that a fruit processing plant is to be established. But nothing has been stated as to when this is expected to go into production, whether it is proposed to be done by Indian techniques or whether there is foreign collaboration. But it is a good project and I welcome it. We can also think of dehydrating of fruits and vegetables. Dehydration can be done in respect of onions, beans and potato, all of which have a huge market in our country. There is need for increase in the production of fruits like sappota and mango all of which have got good export potentiality. There is also need for canning plant for drum-sticks, ladies finger and such other

(முற்பகல் 11-10)

vegetables. I would urge the Government to look into this aspect of setting up dehydration plants as well.



There is also need for setting up agro-industrial complex in drought areas like Ramanathapuram, Tirunelveli and Kanyakumari. There are similar projects which have been started in Haryana and Punjab some time ago. These, I am told, are working very well. It involves 1,000 acres of land. I would urge the Government to consider the possibility of setting up pilot plants in Ramanathapuram and one or two other districts. It will certainly give a face-lift to the State. It will not only improve our methods of agricultural production but will also introduce dairy farming, piggery and other allied professions.

There is also need to improve our potato production in the hills. I am aware that all steps are being taken to do these and that steps are also taken to popularise the new methods of productivity. These are the few points which I wanted to present to the Hon. the Minister for Agriculture.

Thank you.

**திரு. கே. எஸ். அப்துல் வகாப் :** துணைத் தலைவர் அவர்களே, வேளாண்மை, பாசனம் ஆகிய இரண்டு கொள்கைக் குறிப்புகளை அவை முன் வைத்து இரண்டிற்கும் சேர்த்துக் கருத்துக்களைச் சொல்ல ஏற்பாடு செய்த முறைக்கு என் பாராட்டுக்களையும் எனக்குப் பேச வாய்ப்பளித்த தங்களுக்கு எனது நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன். பேச்சை துவக்கு முன் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். தமிழக அக்ரிகல்சுரல் யூனிவர்சிடிக்கு இந்த சபையின் மூலம் எல்லா உறுப்பினர்களும் ஆதரித்து ஏகமனதாக என்னை ஒரு உறுப்பினராகத் தேர்ந்தெடுத்தமைக்கு எல்லா உறுப்பினர்களுக்கும் அகில உலக அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்கும் என்னுடைய உளமார்ந்த நன்றியை எனது சார்பிலும் நான் சார்ந்துள்ள முஸ்லீம் லீக் கட்சி சார்பிலும் . . . .

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** இங்கே 'அகில உலக' என்ற பெயர் இருப்பதாகத் தெரியவில்லை.

**திரு. கே. எஸ். அப்துல் வகாப் :** அனைந்திந்திய அண்ணா தி.மு.க. என்று வைத்துக்கொள்ள வேண்டும். சென்ற ஆண்டு வெள்ளத்தின் காரணமாக விவசாயம் பாதிக்கப்பட்டது. அதற்கு முந்திய ஆண்டு தண்ணீர் பற்றாக்குறை காரணமாக விவசாயம் பாதிக்கப்பட்டது. வந்த உபரித் தண்ணீரினால் விவசாயம் பாதிக்கப்பட்டது.

[திரு. கே. எஸ். அப்துல் வகாப்] [1978 மார்ச் 17

ஆனாலும் அரசு எடுத்துக்கொண்ட தகுந்த நடவடிக்கைகளின் காரணமாக நமக்கு ஏற்பட்ட சிரமங்கள் பெருவாரியாகக் குறைந்தன என்பதற்காக என்னுடைய பாராட்டுக்களை அரசுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

விவசாயக் கல்லூரியைப் பார்த்தேன். விவசாயத்தில் விஞ்ஞான முறையில் அவர்கள் சில கண்டுபிடிப்புகளை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அவை கொள்கை அளவில் இருக்கின்றன. அவை நடைமுறையில் அமுல்படுத்தப்பட்டால், வெகுவிரைவில் சில ஆண்டுகளில் தமிழகம் ஒரு களஞ்சியமாக விளங்கும். பிற மாநிலங்களுக்கு தானியங்களை வழங்கக்கூடிய உபரி மாநிலமாக உருவாகும் வாய்ப்புகள் எனக்குத் தென்பட்டன. நடைமுறையில் விஞ்ஞான முறையில் விவசாயத்தை ஊக்குவிப்பதற்கான வழிவகைகளை அரசு காண வேண்டும். பல ஆண்டுகளாக உரம் கிடைக்கவில்லை. எப்போது பார்த்தாலும் அதற்கு அதிகமான டிமாண்ட் இருந்த நிலைமை மாறி, இன்றைக்கு உரம் தாராளமாகக் கிடைக்கும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இருந்தாலும் பூச்சிக் கொல்லி மருந்துகள் மிகவும் சிரமத்துடன் கிடைக்கும் நிலையில் டிமாண்ட் இருக்கிறதைப் பார்க்கிறோம். நமது மாநிலத்தில் கூடுதலான அளவுக்கு உரமும், பூச்சிக் கொல்லி மருந்துகளும் கிடைக்கக்கூடிய அளவுக்கு அதிகமான பாக்டரிகளை ஏற்படுத்துவதற்கு அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நம் மாநிலத்தில், நம் நாட்டில் விவசாயம் செய்கிறவர்கள் அனேகமாக ஒரு ஏக்கர், அரை ஏக்கர் என்று வைத்துக்கொண்டு செய்கிறார்கள். அமெரிக்கா போன்ற நாடுகளில் பெரிய அளவில் 50 ஏக்கர், 60 ஏக்கர் என்று ஒரே பண்ணையாக வைத்துக்கொண்டு விவசாயம் செய்வதால், டிராக்டர் போன்றவற்றை நவீன முறையில் உபயோகித்து விவசாயத்தில் அதிகமான லாபத்தைப் பெறுகிறார்கள் என்பதைப் பார்க்கிறோம். அப்படி அதிக அளவில் வைத்துக்கொள்வதால் சுலபமாக விவசாயம் செய்வதோடு, நிர்வாக அமைப்புகளில் சிக்கனம் ஏற்படுகிறது. அப்படிப்பட்ட நிலையை நாம் திடீரென்று கொண்டுவர முடியாவிட்டாலும், அதற்கு முயற்சிகளை எடுக்க வேண்டும். அமெரிக்க விவசாயம் பற்றிய டாக்குமெண்டரி ஃபிலிம்களைப் பார்க்கும்போது, அதில் பெரிய பெரிய பண்ணைகளாக வைத்துக்கொண்டு விவசாயம் செய்வதைக் காண முடிகிறது. அப்படி நாமும் செய்வதற்கு அரசு உடனடியாக ஐந்தாண்டு, பத்தாண்டுத் திட்டங்களைப் போட்டு முயல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மதுரையில் உள்ளதைப் போன்ற விவசாயக் கல்லூரி ஒன்று திருச்சியில் துவக்கப்பட வேண்டும். தஞ்சையிலும் ஒரு விவசாயக் கல்லூரி துவக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.



1978 மார்ச் 17] [திரு. கே. எஸ். அப்துல் வகாப்]

நம் மாநிலத்தைப் பொறுத்தவரையில், இங்கே அரிசி சாப்பிடுகிறவர்கள் தான் அதிகமாக இருக்கிறோம். அதனால் நெல் பயிரை அதிகமாகப் பயிர் செய்கிறார்கள். வட தேசத்தில் பார்த்தால், கோதுமை அதிகமாகவும் நெல் குறைவாகவும் பயிர் செய்கிறார்கள். கோதுமையைத் தமிழகத்தில் ரொம்பக் குறைவாக ஒரு சில இடங்களில் உற்பத்தி செய்கிறார்கள். நெல்லைவிட அதிகமான சத்துள்ள தானியம் கோதுமை. அதனால் மக்கள் அதை அதிகமாகச் சாப்பிடுவதற்குப் பழக்கப்படுத்தப்பட வேண்டும். அதன் உற்பத்தியைப் பெருக்க வேண்டும். அதற்கான முடிவை அரசு எடுத்து தமிழகத்தில் கோதுமையை அதிகமாகப் பயிரிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய மாநிலத்தில் பழ வகைகள்கூட மிகக் குறைவாகத்தான் உற்பத்தியாகின்றன. பழ வகைகள் உடல் திடகாத்திரத்திற்கு உதவக் கூடியவை. எவ்வளவுக்கு எவ்வளவு பழங்களைக் கூடுதலாக உற்பத்தி செய்கிறோமோ அவ்வளவுக்கு அவ்வளவு மக்களும் அதிகமாக அவற்றைப் பயன்படுத்துவார்கள். உடல் திடகாத்திரத்தைப் பெறுவார்கள். ஆங்கிலத்தில் சொல்வார்கள். "An apple a day keeps the doctor away" என்று. பழங்களை எவ்வளவுக்கு எவ்வளவு அதிகமாகச் சாப்பிடுகிறோமோ அவ்வளவுக்கு அவ்வளவு டாக்டரிடம் போகக்கூடிய வேலையில்லை என்ற நிலைமை ஏற்படும். அதனால் பழ உற்பத்திக்கு அதிக முக்கியத்துவம் அரசு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பருப்புகளைப் பொறுத்தவரையில், தமிழகத்தில் நிறையச் செலவிருக்கிறது. ஆனால் நமது மாநிலத்தில் அவை பற்றாக்குறையாக உற்பத்தியாகின்றன. வெளி மாநிலங்களிலிருந்து இறக்குமதி செய்யும் நிலைமையில் இருக்கிறோம். அதை மாற்றி, நமக்குத் தேவையான பருப்பு வகைகளை வெளியிலிருந்து செய்யாமல் நாமே உற்பத்தி செய்வதற்கான கொள்கைகளை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ் நாடு அக்ரிகல்சுரல் யுனிவர்சிடியில் உள்ள ஊழியர்களிடையில் சில குறைபாடுகள் காரணமாகக் குமுறல்கள் ஏற்பட்டிருக்கின்றன. இப்படியே அவற்றை விட்டுவிட்டால், விபரீதத்தில் போய் முடியுமோ என்று அஞ்சுகிறேன். அமைச்சர் அவர்கள் அந்த ஊழியர்களை அழைத்துப் பேசி, அவர்கள் கோரிக்கைகளின் பேரில் சுமுகமான முடிவை எடுக்க முயற்சிக்க வேண்டும். அவர்கள் வைத்திருப்பவை மிகச் சிறிய கோரிக்கைகள்தான். ஆகவே அவற்றில் உடனடியாக கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. கே. எஸ். அப்துல் வகாப்] [1978 மார்ச் 17

தமிழ் நாடு அக்ரிகல்சுரல் யுனிவர்சிடியினுடைய கான்ஸ்டிடியூஷன்—நிர்ணயச் சட்டத்தை முழுக்கப் படித்துப் பார்த்தேன். கல்லூரி துவக்குவதற்குமுன் உருவாக்கப்பட்ட சட்டங்கள் அவை. நடைமுறையில் பார்த்தால், அவை ஒத்து வரவில்லை, சரிவர அமையாத நிலையில் பல குறைகளை அவற்றில் கண்டேன். அவற்றை மறுபரிசிலனை செய்து சட்டங்களைத் திருத்தி அமைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பாசனத்தைப்பற்றிச் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். பஞ்சாப் மாநிலத்திற்கு ஒரு முறை சென்றிருந்தேன். அங்குள்ள பாசன நிலைமைகளைப்பற்றி விசாரித்தேன். பாகிஸ்தான் பிரிவதற்கு முன்பு பஞ்சாபில் வேண்டிய அளவுக்குத் தண்ணீர் இருந்தது. பாகிஸ்தான் பிரிந்த பிறகு, சில ஆறுகள் பாகிஸ்தான் எல்லைக்குள் சென்றுவிட்டதால், பஞ்சாப் ஒரு வறட்சி மாநிலமாக உருவாகிவிட்டது. அதற்குப் பிறகு பக்ராநங்கல் டாம் உலகத்திலேயே அதிக உயரமான டாம் என்ற அளவில் கட்டப்பட்ட பிறகு, இன்றைக்கு பஞ்சாப் மாநிலத்தில் விவசாயம் மேலோங்கி, அது ஒரு உபரி மாநிலமாக, மற்ற மாநிலங்களுக்கு தானியங்களை உதவி செய்யும் மாநிலமாக உருவாகிவிட்டது என்று சொன்னார்கள். அதேபோன்று ஆந்திராவில் துங்கபத்ராவைப் பார்த்தோம். அங்கேயும் இதே கதையைத் தான் சொன்னார்கள், துங்கபத்ரா டாம் கட்டுவதற்கு முன்பு ஆந்திரா பற்றாக்குறை மாநிலமாக இருந்தது. கட்டிய பிறகு இப்போது அது உபரி மாநிலமாக ஆகிவிட்டது. கிருஷ்ணா நீரை சென்னைக்கு தருவதற்குச் சாதகமாக இருக்கிற நிலையில் அவர்கள் இப்போது இருக்கிறார்கள். உலகத்தில் நீளத்தில் பெரிய டாம் அந்த துங்கபத்ரா டாமாகும் என்று சொன்னார்கள்.

[முற்பகல் 11.20]

இந்த அணை கட்டப்பட்ட பிறகு, தண்ணீர் பற்றாக்குறை என்பதே இல்லை. அதோடு மட்டுமல்லாமல், விவசாயப் பொருளின் உற்பத்தியும் உபரியாகி இருக்கிறது என்ற நிலை ஆந்திர மாநிலத்தில் ஏற்பட்டிருக்கிறது. இதையும் நாம் ஒரு படிப்பினையாக எடுத்துக்கொள்ள வேண்டும்.

அடுத்து, பஞ்சாப் மாநிலத்தில் நான் பார்த்த ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். அங்குள்ள நீர்ப்பாசன வாய்க்கால்கள் சாதாரணமாக நம் ஊர் பக்கத்தில் காணப்படும் வாய்க்கால்கள் போல் இல்லை. அவ்வாய்க்கால்கள் அனைத்தும் கட்டிடம் கட்டப்பட்ட வாய்க்கால்களாக அமைந்துள்ளன. அடியிலும் கட்டிடம் கட்டி, பேஸ் மட்டத்திலேயே சிமிண்ட் உபயோகப்படுத்தி



1978 மார்ச் 17] [திரு. கே. எஸ். அப்துல் வகாப்]

கான்கிரீட் கட்டிடம் கட்டி வாய்க்கால் அமைத்திருக்கிறார்கள். கீழ்ப் பகுதியில் மட்டுமல்லாமல், வாய்க்கால்களின் இரண்டு ஓரங்களிலும் சிமிண்ட் கட்டிடம் கட்டியிருக்கிறார்கள். இந்த சிமிண்ட் கட்டிடத்தில்தான் தண்ணீர் பாய்கிறது. அதுவுமல்லாமல் இந்த வாய்க்கால்கள் அனைத்தும் ஒரே நேர்க் கோட்டைப்போல் அமைந்துள்ளன. 5 மைல், 10 மைல் நீளத்திற்கு ஒரு நேர்க்கோட்டைப்போல் வாய்க்கால் அமைந்திருக்கிறது. நான் பிளேனில் இருந்து பார்த்தேன். 10, 20 மைல் நீளத்திற்கு ஒரு கோடு போட்டதைப் போல் தெரிகிறது. இம்மாதிரியான அமைப்பில் அந்தக் கால்வாய்கள் அமைந்திருப்பதால், அந்தக் கால்வாய்கள் காட்டு வழியாக வரும்போதும், தண்ணீர் சேதாரம் என்னும் 'வேஸ்ட்' எதுவுமில்லாமல், அத்தனை தண்ணீரும் வீணாகாமல், பாசனத்திற்கு உபயோகப்படுத்தப்படுகிறது. எங்கேயும் தண்ணீர் 'வேஸ்ட்' ஆவதில்லை. இதுவும் நமக்கு ஒரு படிப்பினையாக அமைய வேண்டும்.

அடுத்து, பெரிய அணைகள் நம் தமிழகத்தில் கட்டப்பட்டால், நாமும் பற்றாக்குறை நிலையிலிருந்து மீண்டும் உபரி நிலையைப் பெறும் வாய்ப்பு இருக்கிறது. குறிப்பாக தமிழகத்தைப் பொறுத்தவரையில், காவிரி நதி ஜீவ நதியாக இருக்கிறது. இந்த நதியில் நாம் ஏற்கெனவே ஒரு பெரிய அணையைக் கட்டியுள்ளோம். இன்னும் மேற்கொண்டு ஒன்று அல்லது இரண்டு அணைகளைக் கட்டி, பஞ்சாப் மாநிலத்தில் அமைத்துள்ள வாய்க்கால்களைப்போல் கட்டிடம் கட்டி அமைப்போமானால், காவிரி நீர் வீணாக்காமல் பாசனத்திற்குக் கிடைக்கும் என்பது மட்டுமல்ல, இதன் விளைவாக இப்போதுள்ள உணவு உற்பத்தியும் இரட்டிப்பாகும் நிலையும் ஏற்படும். விவசாய உற்பத்தி பெரும் அளவில் பெருகும் நிலை உருவாகும். காவிரி நதித் தண்ணீர் பெறுவது குறித்து நாம் கருநாடக அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி, பெற வேண்டிய நிலையில் இருக்கிறோம். இந்தப் பிரச்சினை நீண்டகாலமாகப் பேசப்பட்டு, இதற்காக ஒரு டிரிபியூனல் அமைத்து, சுப்ரீம் கோர்ட்டுக்குப் போய், இன்னும் அந்தப் பிரச்சினை தீராத நிலையில் இருந்து வருகிறது. கடைசியாக என்ன சொல்லப்பட்டது என்றால், மக்களால் தேர்தெடுக்கப்பட்ட ஆட்சி வந்துவிட்டால், இதற்கு ஒரு தீர்வு காணப்படும் என்பதுதான். இப்போது அங்கே திரு. தேவராஜ் அர்ஸ் அவர்கள் முதலமைச்சராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்துள்ளார்கள். எனவே இந்தப் பிரச்சினை குறித்து தாமதிக்காமல் பேச்சுவார்த்தையைத் துவக்கி நல்ல முடிவைக் காணவேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் உரையை முடிக்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு மேலவை உறுப்பினர்களுக்கு ஒரு மகிழ்ச்சிகரமான அறிவிப்பைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். பால்வள நிறுவனத்தின் சார்பாக இங்கே பதப்படுத்தப்பட்ட பால், தயிர், மோர் ஆகியவை கொடுக்கப்பட இருக்கின்றன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : இங்கேயே சாப்பிடுகிற அளவுக்கா ? அல்லது வீட்டுக்கு எடுத்துச் செல்லுகிற அளவுக்கா ? அவையின் சார்பாக இதற்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

Thirumathi MANDAKINI KRISHNAMOORTHI : Hon. Deputy Chairman, on going through the Report on Agriculture, I have certain suggestions to make. It was somewhere in the late sixties that we had a Vegetable Development Committee, presided over by the Director of Agriculture and many voluntary and honorary members were on this committee. The work of this Committee was to see that vegetable was grown in each house and in institutions, and we found that the result was very astounding. But, then in 1967 or 1968, this Committee was discontinued. If I mention the economics of having this Committee, I think the Hon. Minister would not mind re-constituting this Committee. This Committee did not impose any financial strain on the Government. The only expenditure that was incurred by this Committee was: When the Director of Agriculture called a meeting of the Committee, the members were given a cup of coffee and such meetings will be three in number in a year. But the result was very good because yearly we had competitions and I myself, as a member of the Committee and also as one of the judges had gone round the City of Madras a number of times and we found there were people who were very much interested in growing vegetables and we were able to control to some extent the inflation in the cost of vegetables in the City. I feel that if this Committee is again constituted, there will be a very good effect in vegetable growth. Even the expenses for the prize distribution by this Committee were borne by the public. Giving of prizes was not a burden to the Government. There is another point. There are many people who are very enthusiastic and they go to the shops to get necessary seeds. But some of them do not like to go to the shops to get the seeds. I feel that a number of volunteers who are members of this Committee would



during the particular season go about selling seeds and we will have very good effect. Otherwise, sometimes it happens that the seeds are sold when the time is over and people complain that the seeds supplied by the Government shops are not good and this particular complaint we will be able to eradicate, if we have that Committee.

There is another point regarding the loaning of ploughs and helping in the digging of wells. We find that the construction of wells and the getting of ploughs in urban areas are very difficult and they also prove to be much expensive. If there is a provision that the construction of wells should be helped by giving loans, I think we could improve the production of vegetables without much expenditure to the Government.

Coming to Dairy Development, the point that I want to make here may not concern actually with the development of dairy but it is a very important point so far as women are concerned. It was in the year—somewhere in late sixties—that the late Thiru Kamaraj Nadar of our revered memory opened a park in Adyar in front of Travancore Palace and this was known as Dr. Muthulakshmi Reddi Park. When the Dairy Development Corporation took over this park last year, they removed the slab: thus no name-board was there. Then, the local people of this area, about a thousand persons, made an appeal to the Government and this name-board was restored. I was away for three months and on my way from the airport to my house, I found that the board was missing again. Hence, I thought I could find out what the matter was. The person of the park informed me that they do not want any individual names in public places. I, therefore, went round looking on the bridges to find out whether the names were still there. I found that the names on the bridges continued to be there. Naturally the main bridges also are public places. You would agree that very few women are honoured and those who are honoured should remain honoured. I appeal that men would be more gallant in restoring such names to places bearing women's names than removing them. I would, therefore, appeal to the Hon. the Minister for Agriculture that the name-board of this park may again be restored.

Thank you.

திரு. என். சுந்தரேசத் தேவர் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவ
அவர்களே, இந்த அரசாங்கத்தினுடைய விவசாயக் குறியீட்டைப்பற்றி நாம்
ஆராயும்போது "அதிகமான வருமானமுடையதும் வேலைவாய்ப்பு உடையது
மான" துறை என்று ஆரம்ப கட்டத்திலேயே இந்த அறிக்கையில் சொல்லி
யிருக்கிறார்கள். அதிகமான வருமானம் உடையது இந்தத் துறை என்பதை
நான் ஏற்றுக்கொள்ள இயலாத நிலையில் இருக்கிறேன். ஏனென்றால் வருமானம்
தருகிற பயிரும் இருக்கிறது. வருமானம் அற்ற பயிர்களும் இருக்கின்றன.
பொதுவாக விவசாயத்தைப்பற்றிச் சொல்லும்போது 'உழுதவன் கணக்குப்
பார்த்தால் உழவுக்கூலி கூட காணாது' என்ற பழமொழியைச் சொல்வார்கள்.
இதுதான் உண்மையான நிலை, விவசாயக் கூலிகளைப் பொறுத்தவரையில் கூட,
அதிகமான கூலி, விவசாயக் கூலிகளுக்குக் கிடைப்பதாகச் சொல்ல முடியாது.
பொதுவாக தொழில் துறையையும் விவசாயத் துறையையும் எடுத்துக்
கொண்டால், அதிகமான லாபம், கூலி ஆகியவை கிடைக்கக் கூடிய சூழ்நிலை
தொழிற் துறைக்குத்தான் இருக்கிறதே தவிர, விவசாயத் துறைக்கு இல்லை
என்பதை நாம் அறிவோம். இந்த நிலையை மாற்ற வேண்டும் என்ற அவா
நமக்கு இருந்தாலும், விவசாயக் கூலிகளுக்கு அதிகமான கூலி கொடுத்தால்,
விவசாயம் கட்டுப்படியாவதில்லை. விவசாயம் கட்டுப்படி ஆக வேண்டுமென்றால்,
விவசாயப் பொருள்களுக்கு அதிகமான விலை கொடுக்க வேண்டும். விவசாயப்
பொருள்களுக்கு அதிகமான விலை கொடுத்தால், நாட்டிலுள்ள ஏழை எளிய
மக்கள் வாங்கிச் சாப்பிட முடியாத நிலை ஏற்படுகிறது. இப்படிப் பல நிலை
களிலே கஷ்டங்கள் ஏற்படுகின்றன என்பதைப் பார்க்கிறோம். ஆகவே, விவ
சாயத்தைப்பற்றிச் சொல்லும்போது, அது லாபகரமான தொழிலாக இருந்தா
லும் இல்லாவிட்டாலும், இது ஒரு மூலாதாரமான தொழிலாக இருக்கிறது
என்பதை நாம் ஏற்றுக்கொண்டேயாக வேண்டும். எனவே, அரசாங்கம்
இந்தத் தொழிலுக்கு உரிய மரியாதையைக் கொடுக்க வேண்டும். விவசாயிகள்
நாட்டுக்காக உழைத்து இந்த நாட்டை மேம்படுத்தக் கூடியவர்கள்; இந்த
நாட்டு மக்களுக்கு உண்ண உணவை அளிக்கக் கூடியவர்கள்; இந்த நாட்டுக்கு
மிக முக்கியமானவர்கள் என்பதை உணர்ந்து அரசாங்கம் அவர்களுக்கு உரிய
மரியாதையை அளிப்பதோடு தகுந்த ஊக்கத்தையும் அளிக்க வேண்டும்
என்பதைத்தான் நான் முன்னோடியாகச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

(முற்பகல் 11-30)

பொதுவாக நெல்லுக்கு அதிகமான விலையில்லை என்ற குறை இருந்து
கொண்டிருக்கிறது. இந்தக் குறை எங்கு பார்த்தாலும் எழுப்பப்படுகிறது.
நெல்லுக்குக் கொடுக்கப்படுகின்ற விலை கட்டுப்படியாகின்ற விலையாக இல்லை



என்பதை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். இதில் வியாபாரத் துறையில்
இருக்கின்றவர்கள் விவசாயிகளைச் சுரண்டுகிறார்கள் என்றுதான் சொல்ல
வேண்டும். அரசாங்கம் கொள்முதல் செய்வதிலேகூட சரியான முறை
இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நெல்லிலே மண் இருக்கிறது,
கல் இருக்கிறது என்று சொல்லி 2 கிலோ, 3 கிலோ குறைத்து, கொள்முதல்
செய்கிறார்கள். அதிகமான ஈரப்பசை இருக்கின்றது என்று சொல்லி, 1 கிலோ
2 கிலோ வரையில்கூட குறைத்துக்கொண்டு கொள்முதல் செய்கின்றார்கள்.
இந்த மாதிரியான குறைபாடுகளை நீக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.
குவிண்டாலுக்கு ரூபாய் 90 முதல் ரூபாய் 95 என்று விலை நிர்ணயம் செய்யப்
பட்டபோதிலும்கூட, அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், இந்த மாதிரி
யெல்லாம் சொல்லி விலையைக் குறைத்துக் கொடுக்கிறது. அரசாங்கம் விவசாயி
களுக்கு நன்மை செய்கின்ற வகையில் கொள்முதல் செய்ய வேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன். மாநில அரசின் நெல் விலையைப் பொறுத்தவரையில்,
விலை குறைவாகத்தான் இருக்கிறது. கோதுமைக்கு அதிக விலை கொடுக்கப்
படுகிறது. நெல் பயிர் செய்வதற்கு எடுக்கின்ற பாடுகளைவிட, கோதுமைக்குத்
குறைவுதான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அப்படி இருந்தும்,
நெல்லுக்குக் குறைந்த விலையும், கட்டுப்படியாகாத விலையும், கோதுமைக்கு
அதிகமான விலையும் கொடுப்பது சரியல்ல. நெல் பயிரிடுவதற்கு அதிகமான
உரம் இட வேண்டும். மருந்துகள் போட வேண்டும். வேலைகள் அதிகமாகச்
செய்ய வேண்டும். இந்த நெல்லுக்குக் குறைந்த விலையைக் கொடுப்பது,
கட்டுப்படியாகாத விலைக்குக் கொள்முதல் செய்வது சரியல்ல என்பதைச்
சுட்டிக் காட்ட ஆசைப்படுகிறேன். இது குறித்து மத்திய அரசும் செவி
சாய்க்காத நிலைமையில் இருந்து கொண்டிருக்கிறது. நெல்லுக்கு ஒரு விலை,
கோதுமைக்கு ஒரு விலை என்ற நிலைமையை மாற்ற வேண்டும். இப்படியே
விட்டுவிடாமல் விவசாயிகளுக்குக் கட்டுப்படியாகின்ற விலையை நிர்ணயிப்ப
தற்குப் போராட வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன். மாநிலத்தில் பல
பேர்கள் நெல்லுக்கு ஒரு நியாயம், கோதுமைக்கு ஒரு நியாயம் என்பதைப்
பற்றிக் குறை கூறிப் பேசுகிறார்கள். இப்படி நியாயமான விலை இல்லாதது
தவறு என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அதைப்பற்றி நமது அரசும்
மத்திய அரசுக்கு எடுத்துக்கூற வேண்டும். வலியுறுத்திக் கூற வேண்டும்
என்று கேட்டுக்கொள்கிறேன். இது குறித்து திரு. டி. ஏ. பாய் அவர்கள்கூட
பேசியிருக்கிறார்கள். ஆகவே அதைப்பற்றி நாம் மத்திய அரசிடம் வலியுறுத்திக்
கூற வேண்டும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

[திரு. என். சுந்தரேசத் தேவர்] [1978 மார்ச் 17

விதை நெல்லைப் பொறுத்துச் சொல்ல வேண்டும் என்றால், அரசாங்கம் விவசாயிகளுக்கு நல்ல தரமான விதைகளைக் கிடைக்கச் செய்ய வேண்டும். அரசாங்கப் பண்ணைகளிலிருந்து கிலோ ரூபாய் 2 என்று அதிகமான விலைக்குக் கொடுக்கிறார்கள். ரூபாய் 1-40, ரூபாய் 1-10க்குக் கிடைக்கக்கூடிய நெல் விதைக்கு, ரூபாய் 2 விலைக்கு விற்கிறார்கள். அந்த அதிகமான விலைக்கு விவசாயிகள் வாங்குவது பொருத்தமானதல்ல, சரியல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதிகமான விலைக்கு விற்பதைக் குறைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். 5 சதம் அல்லது 10 சதம் என்ற அளவுக்கு அதிகமான விலையாக இருந்தாலும், பரவாயில்லை. அரசாங்கம் ரூபாய் 2, ரூபாய் 1-90 என்ற அதிக விலைக்குக் கொடுக்கின்ற நிலைமைகளை அகற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த விதை விநியோகம் பொறுத்துப் பார்த்தால், அது விதைப் பண்ணைகள் மூலமாகக் கிடைக்கின்றது. அந்த விதைகள் நல்ல முறையில் உற்பத்தி செய்யப்படுகின்றன. அந்தத் திட்டம் நல்ல முறையில் நிறைவேற்றப்படுகிறது. அந்தப் பண்ணைகளில் நல்லவிதமான, தரமான விதைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. அந்த விதைகளை விநியோகிப்பதற்கு வட்டார வளர்ச்சி அலுவலர்களுக்கு அனுமதி கொடுக்கவேண்டும். அது நல்லதாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த விஷயத்தில் நான் குறைபாடுகள் சொல்லவில்லை. ஆனால் இந்த விதைகள் அதிக விலைக்குக் கொடுக்கப்படுகின்றது என்பதைத்தான் நான் இங்கே சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, விவசாய வருமான வரி அதிகமாக்கப்பட்டிருக்கிறது. மருந்துகள், விவசாய இயந்திரங்கள், உரங்கள் போன்றவைகளுக்கு மத்திய அரசும் மாநில அரசும் வரிகளைப் போட்டிருக்கின்றன. அந்த வரிகளை ரத்து செய்தாவது அந்தப் பொருள்களின் விலைகளைக் குறைக்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஒரு விவசாயி உரமிட்டு, மருந்து தெளித்து, பயிர் செய்வதற்கு ஒரு ஏக்கருக்கு குறைந்த அளவு ரூபாய் 50 ஆவது செலவாகிறது. குறைந்தபட்சம் மூன்று முறையாவது மருந்துகள் அடிக்க வேண்டியதாக இருக்கிறது. ரூபாய் 150 அளவுக்குச் செலவாகின்றது. இதை அரசாங்கம் உணர வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். உரம், மருந்து போன்ற பொருள்கள் மத்திய மாநில அரசுகளின் வரிகளால் அதிகமாகியிருக்கின்றன. மத்திய அரசிடம் இந்தப் பொருள்கள் மீது வரி போடுவது குறித்து வாதாடியிருக்கிறோம் என்பது பற்றியெல்லாம் நான் படித்தேன். உண்மையில் நாம் அந்த வரிகளைக் குறைக்கப் போராட வேண்டும். மத்திய அரசிடம் விவசாய உரத்திற்கும், பூச்சி மருந்துகளுக்கும், கருவிகளுக்கும் உண்டான அதிக



1978 மார்ச் 17] [திரு. என். சுந்தரேசத் தேவர்]

வரிகளைக் குறைத்து, அதன் மூலம் விலைகளைக் குறைத்து, விவசாயிகளுக்குக் கொடுப்பதற்கான வழிமுறைகளை அரசு மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். விவசாயம் செய்வதற்கு உண்டான உபகரணங்கள், மருந்துகள், உரங்கள் யாவும் விவசாயிகளுக்குக் கட்டுப்படியாகக் கூடிய விலைக்குக் கிடைக்கும்படியாகச் செய்ய வேண்டும். அதற்கான நடவடிக்கைகளை அரசு எடுத்துக்கொள்ள வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

விவசாயிகளுக்குக் கிடைக்கக்கூடிய மருந்து வகைகள் நல்ல வகைகளாக இருக்க வேண்டும். இப்போது பாலிடால் போன்ற பூச்சி மருந்துகள் எல்லாம் கிடைப்பதில்லை. அது தடை செய்யப்பட்டிருக்கின்றது. இப்போது வரக் கூடிய மருந்துகள் தரமான மருந்துகளாக இல்லை என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இப்போது கிடைக்கின்ற பூச்சிக்கொல்லி மருந்துகள் போடுவதால் பூச்சிகள் சாகின்றன என்று சொல்வதற்கில்லை. நெல் பயிர்கள் பூச்சித் தொல்லையிலிருந்து பாதுகாக்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்படிப்பட்ட மருந்துகளை அதிகமான விலை கொடுத்து விவசாயிகள் வாங்குகின்றார்கள். ஒரு ஏக்கருக்கு 3 தடவை மருந்து தெளிக்க ரூபாய் 150 செலவு செய்ய வேண்டியிருக்கிறது. அப்படியெல்லாம் செலவு செய்த பிறகும், பயிருக்குப் பாதுகாப்பு இல்லை. இந்த நிலைமைகள் இருப்பது சரியல்ல. மருந்துகள் தரமானவைகளாக அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். சென்ற ஆண்டு மருந்துகளினுடைய பீரியட் முடிந்த பிறகு, அந்த மருந்துகள் எங்கே பார்த்தாலும் வழங்கப்பட்டிருந்தன. இதைப்பற்றி பட்ஜெட் விவாதத்திலேகூட குறிப்பிட்டுச் சொன்னார்கள். அவர்கள் அதை ஒரு பெரிய குறையாகச் சொன்னார்கள். மருந்து அடித்த பிறகும் பூச்சிகள் சாகவில்லை. அவர்கள் கதிரைக் கூடக் கொண்டு வந்திருந்தார்கள் இங்கே காட்டுவதற்காக. ஆனால் காட்டவில்லை. குறைகளை மட்டும் எடுத்துச் சொல்லிவிட்டார்கள். அதைப்பற்றிப் பொதுவாகச் சொல்லிவிட்டார்கள். மருந்துகள் கொள்முதல் செய்வதிலும்கூட பல ஊழல்கள் நடந்திருக்கின்றன. நம் மாநிலத்தில் பல விதமான கோளாறுகள் ஏற்பட்டிருக்கின்றன. மருந்து கொள்முதல், இயந்திரங்கள் கொள்முதல் செய்வது இவைகளிலெல்லாம் கண்ணியமான முறைகளைக் கையாள வேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதில் எல்லாம் ஊழல்கள் இருக்கக்கூடாது. அப்படியானால்தான், அரசாங்கத்திற்கு நல்ல பெயர் ஏற்படும். விவசாயிகள் படித்தவர்கள் அல்ல. பீரியட் முடிந்துவிட்ட மருந்துகளை வாங்கும்போது, அவர்கள் ஏமாற்றப்படுகிறார்கள். அதை

அவர்களால் தெரிந்துகொள்ள முடியவில்லை. 'டைம் பார்ட்டு' மருந்துகளையெல்லாம் விவசாயிகளுக்கு விநியோகிக்கக்கூடாது. அந்த மாதிரியான நிலைமைகளையெல்லாம் அகற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இயற்கை உரங்களைப்பற்றி முன்பெல்லாம் நல்ல பிரசாரம் செய்தார்கள். நாம் ரசாயன உரங்களை கடந்த பல ஆண்டுகளாக உபயோகித்து வருகிறோம். ரசாயன உரங்கள் கிடைப்பதற்கு முன்பு நாம் இயற்கை உரங்களைத்தான் உபயோகித்து வந்தோம். அந்த இயற்கை உரங்களை உற்பத்தி செய்வதற்கு, உபயோகிப்பதற்கு முன்பு ஊக்கம் கொடுத்தது போல, இப்போது கொடுக்கப்படுவதில்லை. இந்த நிலைமைகளைப்பற்றி நான் அரசுக்குச் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். ரசாயன உரம் போடுவதால் அதிகமாக மகசூல் கிடைக்கிறது. அதே நேரத்தில் பூச்சி மருந்து போட்ட பின்பு, திரும்பவும் பூச்சிகள் வந்துவிடுகின்ற நிலைமைகள் இருக்கின்றன. பூச்சி மருந்துகள் அந்த அளவுக்குப் பயன் அளிக்கவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அப்படியும் பூச்சி மருந்துகள், ரசாயன உரங்கள் பயிர்களுக்குப் போடப்பட்டு நன்மை ஏற்பட்ட போதிலும், அதைப் பயன்படுத்துகின்றபோது, நோய்கள் மக்களுக்கு ஏற்படுகின்றன என்பதைத்தான் நாம் தெரிந்துகொண்டிருக்கிறோம்.

(முற்பகல் 11-40)

ரசாயன உரம் போட்டு விளைந்த உணவை உட்கொள்ளுவதால் புற்று நோய் ஏற்படுகிறதென்று அண்டை நாடான இலங்கையிலிருந்து வானொலியில் ஒலி பரப்பிய செய்தியை நானே கேட்டேன். டி. டி. டி. பவுடரை விவசாயத்திற்கு நாம் உபயோகிப்பதால், புற்று நோய் ஏற்படுகிறதென்று சொல்லுகிறார்கள். ரசாயன உரம் போட்டு விளைவித்த உணவுப் பொருட்களை உண்பவர்களுக்கு நாளாவட்டத்தில் புற்று நோய் வருகிறது. மருந்துகளை அதிகமாக உபயோகப்படுத்துவதால், மக்களிடத்திலே நோய்கள் அதிகமாகப் பாவுவதைக் காண்கிறோம். இயற்கை உரங்களான தழை உரங்கள், பசுந்தாள் உரங்களைப் போடுவதால் பூச்சிகள் குறைவாக இருந்தன. ரசாயன உரம் போடுவதால், அதிகமான பூச்சிகள் பாவுகின்றன. ரசாயன உரங்கள் இல்லையென்றால், அதிகமான மகசூல் இல்லை. அதனால் ரசாயன உரத்தையே விவசாயிகள் வாங்கிப் போடுகிறார்கள். அதனால் பூச்சி வருகிறது. அந்தப் பூச்சிகளைக் கொல்ல பூச்சிக் கொல்லி மருந்து அடிக்க வேண்டியிருக்கிறது. அந்த உணவை உட்கொள்ளும் மனிதர்களுக்கு நோய் வருகிறது. அதனால் அடிக்கடி ஆஸ்பத்திரிக்குப் போக வேண்டியிருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.



எனவே இயற்கை உரங்களை உற்பத்தி செய்வதற்கு ஊக்கம் அளிக்கும் விதத்தில் பிரச்சாரம் செய்ய வேண்டும். 10, 20 ஆண்டுகளுக்கு முன்பு பிரச்சாரம் செய்ததுபோல், இப்போது பிரச்சாரத்தைத் தொடங்க வேண்டும். இயற்கை உரம்தான் நல்லது, இயற்கை உரம் இல்லையென்றால் செயற்கை உரம் போடலாமென்ற நிலையை உருவாக்க வேண்டும்.

விவசாயக் கருவிகளான தெளிப்பான்கள் விலை 750 ரூபாய், 1,000 ரூபாய் அளவில் இருக்கிறது. மாடுகள்கூட அதிக விலை விற்கின்றன. டிராக்டர்கள் விலை மிக அதிகமாக இருக்கிறது. பூச்சி மருந்து தெளிப்பான்கள் கட்டுப்படியாகாத விலை விற்கிறது. அதிகமான விலை விற்பதால், அரசாங்கம் வாங்கிக் கொடுக்கும் நிலை இருக்கிறது. விவசாயிகளே வாங்கி உபயோகிக்கும் நிலையில் எந்தப் பொருளும் இல்லை. முன்பு டிராக்டர்கள் 15,000 ரூபாயாக இருந்தது. இன்று 60,000 ரூபாய் அளவுக்கு இருக்கிறது. 150, 200 ரூபாய்க்கு விற்ற தெளிப்பான்கள் 750 ரூபாய், 1,000 ரூபாய் அளவில்கூட கிடைக்காத நிலை இருக்கிறது. இந்தக் கருவிகளை அரசாங்கம் வாங்கி வாடகைக்குக் கொடுக்கும் நிலை இருக்கிறது. அதனால் அரசாங்கத்திற்குப் பெரிய பணி செய்ய வேண்டியிருக்கிறது. விவசாயிகளாலும் வாடகை கொடுக்க முடியவில்லை. டிராக்டர்களுக்கு வாடகை அதிகமாக இருக்கிறது. மேடு பள்ளங்களை நிரவ, புல்டோசர்களுக்கு மணிக்கு 45 ரூபாய், 60 ரூபாய், 75 ரூபாய் என்று அதனதன் ஹார்ஸ் பவருக்குத் தகுந்தாற்போல் வாடகை கொடுக்க வேண்டியிருக்கிறது. எனவே இப்படிப்பட்ட இயந்திரங்களை உபயோகித்து விவசாயம் செய்து கட்டுப்படியாகாத தொழிலாக இருக்கிறது என்பதை இந்த அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இந்த அரசாங்கம் மட்டும் செய்தால் போதாது. மத்திய அரசுக்கு வலியுறுத்த வேண்டும். மத்திய அரசினுடைய வரிகள் அதிகமாக இருப்பதால், 20,000 ரூபாய், 25,000 ரூபாய் செலவில் உற்பத்தி செய்யப்படும் டிராக்டர்கள், விற்பனை வரி, எக்சைஸ் டியூட்டி போன்றவற்றின் காரணமாக 70,000 ரூபாய் அளவிற்கு விற்கப்படுகின்றன என்பதைப் பார்க்கிறோம். எனவே விவசாயக் கருவிகளுக்கு, விவசாய இயந்திரங்களுக்கு வரி போடாத கொள்கையை மாநில அரசு சிபாரிசு செய்து, மத்திய அரசுக்குத் தக்க ஆலோசனை கூற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். விவசாயக் கருவிகள் விவசாயிகளுக்குக் குறைந்த விலையில் கிடைக்க அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும்.

[திரு என். சுந்தரேசத் தேவர்] [1978 மார்ச் 17

அடுத்தபடியாக, சமீபத்திலே அடித்த புயல், வெள்ளம் காரணமாக, கோர மழையின் காரணமாக வயல்கள் மேடிட்டிருக்கின்றன. அதைச் சமப்படுத்த ஏழை விவசாயிகளுக்கு இலவசமாக புல்டோசர்கள் அளிக்கப்படுமென்று அறிவிக்கப்பட்டது. மற்றவர்களுக்கு 50 சதவீதம் மானியத்தில் புல்டோசர்கள் தரப்படுமென்று அறிவிக்கப்பட்டது. நம்மைப் பொறுத்தவரையில், புல்டோசர்களின் தேவை அதிகமாக இருக்கிறது. ஆனால் கிடைப்பது சுலபமாக இல்லை. சில சமயங்களில் புல்டோசர்களை எடுக்க ஆளில்லை. எனவே, அரசாங்கம அதிகமான புல்டோசர்களை வாங்கி வைக்க வேண்டுமென்று ஆலோசனை நான் கூறவில்லை. மணிக்கணக்கில் வாடகை வாங்குகிறார்கள். மணிக்கு 45 ரூபாய், 60 ரூபாய் 75 ரூபாய் என்று வாங்குகிறார்கள். ஆனால் புல்டோசர்களில் கோளாறு இருக்கிறது. அதனுடைய சக்தி குறைவாக இருக்கிறது. இந்த மாதிரி கோளாறான புல்டோசர்களைக் கொடுத்துவிட்டு, மணிக் கணக்கில் வாடகை கேட்டால், ஏழை விவசாயிகள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். எனவே தரமான இயந்திரங்களை அரசாங்கம் வைத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். புயல், மழை காரணமாக மேடிட்டுள்ள நிலங்களில் முழுமையாக மண்ணை அப்புறப்படுத்த இன்னும் ஒன்று அல்லது இரண்டாண்டுகள் ஆகும். எனவே அரசாங்கம் கொடுக்கும் மானியத்தை இன்னும் இரண்டு ஆண்டுகளுக்கு நீட்டிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஸ்ப்ரேயர்ஸ் நிறைய அரசாங்கம் வாங்கிக் கொடுத்திருக்கிறது. பிளாக் லெவலில் நிறைய இருக்கின்றது. ஆனால் இருக்கின்ற கருவிகள் சரியான நிலையில் இல்லை. பழுதான ஸ்ப்ரேயர்களை ரிப்பேர் செய்திருக்கிறார்களா என்றால், இல்லை. முன்பு ஸ்ப்ரேயர்களுக்குப் பஞ்சமாக இருந்தது. இப்போது நிறைய கிடைக்கிறது. ஆனால் வட்டாரத்தில் ஒரு சில இடங்களில்தான் நல்ல முறையில் இருக்கிறது. மற்ற இடங்களில் பழுதடைந்திருக்கிறது. அப்படி பழுதடைந்த கருவிகளை ரிப்பேர் செய்ய வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1978 மார்ச் 17] [திரு. என். சுந்தரேசத் தேவர்]

விவசாயிகள் கருத்தரங்கு ஒன்றினை ஆண்டு ஒரு முறை கூட்ட வேண்டு மென்ற யோசனையை அரசுக்குக் கூற விரும்புகிறேன். விவசாய வரி, விவசாய வருமான வரி, லோகல் செஸ், பஞ்சாயத்து வரிகள், பஞ்சாயத்து யூனியன் வரிகள்—இப்படி வரிகளை அடிக்கடி போடக்கூடிய நிலையைப்பற்றிப் பேசுவதற்கு அந்தக் கருத்தரங்கு வசதியாக இருக்கும். நிலச் சீர்திருத்தம்பற்றி ஒவ்வொரு அரசாங்கமும் அறிக்கை கொடுத்திருக்கிறது. நம்முடைய நிதி யமைச்சரவர்கள்கூட அது குறித்து மீண்டும் ஆய்வு செய்வதற்கு உத்தேசமிருக்கிறதென்று சொல்லுகிறார்கள். இப்படி அடிக்கடி பிரச்சினையை எழுப்பிக்கொண்டிருப்பது நல்லதல்ல. அது விவசாயத்திற்கு க்ஷேமமாக இராதென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஏற்கெனவே நாம் 15 ஸ்டான்டர்டு ஏக்கர் என்று முடிவு செய்துவிட்டோம். இத்தனை ஏக்கர்கள் கொண்டது ஒரு ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று முடிவு செய்திருக்கிறோம். அதை 10 ஏக்கர் என்று ஆக்குங்கள், வேண்டாமென்று சொல்லவில்லை. ஆனால் எப்போது பார்த்தாலும் விவசாயச் சீர்திருத்தம் என்று சொல்லிக் கொண்டிருப்பது, விவசாயிகளுக்குப் பெரும் பிரச்சினையாக இருக்கிறது. எனவே இப்படிப்பட்ட பிரச்சினைகள் குறித்துப் பேச, ஆண்டுக்கு ஒருமுறை கருத்தரங்கைக் கூட்ட வேண்டும். ஏப்ரல், மே மாதங்கள் விவசாயிகளுக்கு நல்ல சீசன். இந்த நேரத்தில் சென்னையில் ராஜாஜி ஹால் போன்ற இடத்தில் விவசாயிகளின் கருத்தரங்கைக் கூட்ட வேண்டும். அதிலே விவசாயிகளின் பிரதிநிதிகள், விவசாயக் கூலிகள், வல்லுநர்கள் எல்லோரும் கூடி, அவசரப்படாமல், இரண்டு அல்லது மூன்று நாட்கள் கூடி, அங்கே என்னென்ன கருத்துக்கள் சொல்லப்படுகின்றன என்பதைக் கவனித்து, அதை அரசு ஆராய்ந்தால் நல்லது. விவசாயம், வருமானம் வரக்கூடிய தொழில் என்று ஒத்துக்கொள்ளாமல், மனிதாபிமானத்தோடு கவனிக்க வேண்டிய தொழில் என்று கருதி அரசு நடவடிக்கை எடுத்தால், அது விவசாயிகளுக்குத் திருப்தியளிக்குமென்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

நண்பர் திரு. அப்துல் வகாப் அவர்கள் ஒரு கருத்தைக் கூறினார்கள். தமிழ் நாட்டிலே பழ மரங்கள் குறைவாக இருக்கிறதென்று அவர்கள் சொன்னது உண்மையிலேயே ஒத்துக்கொள்ள வேண்டிய விஷயம். நம்முடைய மாநிலத்தில் தரிசு நிலங்கள் ஏராளமாக இருக்கின்றன. செம்மண் பிரதேசங்களில் பலா, மா, திராட்சை செழிப்பாக வருகிறது. தரிசு நிலங்களில் வாழை மரங்களை நட ஆய்வு நடத்தி, நல்ல முறையில் அதைச் செயல்படுத்தினால், நம்முடைய மாநிலம் பூராவும் சோலை மயமாகும் வாய்ப்பு இருக்கிறதென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். தென்னையைப் பொறுத்த வரையில், நான் ஒரு

விஷயத்தைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். 2¼ லட்சம் ஏக்கரில் தென்னை பயிரிடப்பட்டிருக்கிறதென்று அரசாங்கம் கூறுகிறது. இந்தப் புள்ளி விவரம் தவறு என்பது என்னுடைய கருத்து. போன நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்தின்போதே புள்ளி விவரங்களை ஒத்துக்கொள்ளக் கூடியதாக இல்லை என்று நான் கூறினேன். தஞ்சை ஜில்லாவிலே அதிகமான நிலப் பரப்பிலே தென்னை பயிர் செய்கிறார்கள். இராமநாதபுரம் மாவட்டத்திலும் திட்டம் போட்டு தென்னை பயிர் செய்கிறார்கள். தென்னை பயிரிட ஊக்கம் கொடுக்கப்படுகிறது. எல்லோரும் அபிவிருத்தி செய்துகொண்டு வருகிறார்கள். 2¼ லட்சம் ஏக்கர் என்று பல வருஷங்களாகச் சொல்லிக்கொண்டிருப்பது சரியான புள்ளி விவரமல்ல என்பது என்னுடைய திடமான கருத்து. இதற்காகத் தனியாகக் குழு அமைக்க வேண்டுமென்று அரசுக்கு நான் ஆலோசனை கூறவில்லை. வட்டாரங்களுக்கு உத்தரவிட்டு, ஒரு மாதத்திற்குள், அந்த வட்டார எல்லைக்குள் என்னென்ன பயிர்கள் பயிராகின்றன என்ற புள்ளி விவரத்தைச் சேகரித்து கொடுக்க வேண்டுமென்று சொன்னால், சரியான புள்ளி விவரத்தை அவர்கள் கொடுக்க முடியும்.

(முற்பகல் 11-50)

தென்னைக்கு மட்டுமல்லாமல், எல்லா விவசாயப் பயிர்களும் எத்தனை எத்தனை ஏக்கர்களில் பயிர் ஆகிறது என்ற குறிப்பை இந்த அரசாங்கம் எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். தென்னையைப் பொறுத்த வரையில், நல்ல அபிவிருத்தி செய்யப்பட்டிருக்கிறது. மேலும் அபிவிருத்தி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். நெட்டை, குட்டை ஆகிய வினைதானை மேலும் வழங்கி இன்னும் இரண்டு, மூன்று இடங்களில் அபிவிருத்தி செய்யலாம் என்று சொல்லிக்கொள்ளுகிறேன்.

பாசனத்தைப் பொறுத்த வரையில், ஒரு சில வார்த்தைகளைச் சொல்லி என்னுடைய உரையை முடித்துக்கொள்ள தலைவருடைய அனுமதியைக் கேட்டுக் கொள்ளுகிறேன். காவிரிப் பிரச்சினையைப்பற்றி எல்லோரும் பேசியிருக்கிறார்கள். நான் பேசித்தான் அமைச்சர் அவர்களுக்கு இது பற்றித் தெரிய வேண்டுமென்பதல்ல. அவருக்கே தெரியும். வெகு காலமாகப் பேசிக்கொண்டே இருக்கிற நிலையை ஒரு நல்ல முடிவுக்குக் கொண்டுவர வேண்டிய கட்டாயச் சூழ்நிலையில் நாம் இருக்கிறோம் என்பதைக் கூறிக்கொள்ளுகிறேன். கோவையிலே நடந்த ஜனதா கட்சி மாநாட்டிலே கூட கங்கை, காவிரியை இணைக்க வேண்டுமென்று கூறினார்கள். அதற்கு முன்பாக காவிரி கோதாவரியை



இணைக்க வேண்டுமென்றுகூட கூறினார்கள். இதை வலியுறுத்த வேண்டிய அரசாங்கம் தமிழ்நாடுதான். ஆந்திரத்திற்கும், கருநாடகாவுக்கும் இதிலே அவசியம் கிடையாது. இது தமிழ்நாட்டிற்குத்தான் முக்கியமான பிரச்சினை. கங்கை, காவிரி இணைப்பை அடுத்த கட்டமாக எடுத்துக்கொண்டு இதை முதலிலே எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சொல்லிக்கொள்ளுகிறேன். இதை விரைவிலேயே செய்து முடிக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, நிலத்தடி நீரைப் பொறுத்த வரையில், இந்த அரசாங்கம் அதற்கு அனுமதி வழங்க வேண்டிய நிலை இருக்கிறது. நிலத்தடி நீர்க் குழாய் போடும்போது, அதற்கு அனுமதி தேவையில்லை. ஆனால் அதற்கு மின் இணைப்புக் கொடுக்கும்போது, அனுமதி வாங்க வேண்மென்ற ஒரு கட்டுப்பாடு இருக்கிறது. நிலத்தடி நீரை எடுப்பதற்குக் கட்டுப்பாடு வைக்க வேண்டுமானால், அதை போடும் முன்னாலேயே அனுமதியை வாங்க வேண்டுமென்று சொன்னால் நலமாக இருக்கும். ஆனால் மின் இணைப்பு வழங்கும்போது மட்டும் அனுமதியைப் பெற வேண்டுமென்று கூறுவது பொருத்தமாக இல்லை. மேலும் இந்தக் கட்டுப்பாடு தேவைதானா என்பதையும் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன். ஏனென்றால், கோயம்புத்தூர், தருமபுரி, சேலம், மதுரை ஆகிய மாவட்டங்களில் நிலத்தடி நீர் பெறுவதில் பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது. அங்கெல்லாம் கேணியிலே நீரே கிடையாது என்று கூறுகிறார்கள். வேண்டுமானால் அந்த மாவட்டங்களுக்கு அனுமதியைப் பெற வேண்டுமென்று கட்டுப்பாட்டை வைத்துக் கொள்ளலாம். தஞ்சை, தென்னாற்காடு ஆகிய மாவட்டங்களில் இந்தக் கட்டுப்பாட்டுச் சட்டங்கள் எதற்காகத் திணிக்க வேண்டும்? தஞ்சையில் குழாய்க் கிணறுகளை அதிகமாகப் போடுவதில்லை. போடுபவர்களுக்கு மின்சார சப்ளை கிடைப்பதில்லை. ஆகவே நண்ணீர் பஞ்சம் இல்லாத ஜில்லாக்களுக்கு அனுமதி வழங்குவதில் உள்ள கட்டுப்பாட்டை ரத்து செய்ய வேண்டுமென்று கூறிக்கொண்டு, இந்த அளவோடு என்னுடைய உரையை முடித்து நன்றி கூறிக் கொள்ளுகிறேன்.

**திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, எனக்கு முன் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரேசத் தேவர் எல்லா விவரங்களையும் சொல்லிவிட்டார்கள். நானும் அவர்கள் சொன்னதையெல்லாம் இங்கே சொல்ல வேண்டுமென்பதில்லை.

[திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர்] [1978 மார்ச் 17

ஒரு சந்தோஷமான செய்தியைச் சொல்வதாகச் சொல்லி மாண்புமிகு அமைச்சர் அவர்கள், பால், மோர், தயிர், லஸ்ஸி, பால்கோவா ஆகியவைகளை யெல்லாம் கொடுத்திருக்கிறார்கள். நான் அதையெல்லாம் ஒவ்வொன்றாகச் சாப்பிட்டுப் பார்த்தேன். ரொம்ப நன்றாக இருக்கின்றன. அந்த சந்தோஷத்தில் ஒரு வருத்தமும் எனக்கு வந்து விட்டது. அதாவது, இன்றைக்கோடு இது சரியென்று சொல்லுகிறார்கள். அதை இங்கேயே ஒரு ஸ்டால் மாதிரி வைத்து வழங்கி வேண்டுமானால் காசையும் வாங்கிக் கொள்ளலாம்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : துணைத் தலைவர் அவர்களே, ஒரு இருபது நாளைக்கு இந்தப் பொருள்களை வழங்க இங்கேயே ஒரு கடையை வைத்து....

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : கோட்டைக்குள்ளேயே ஒரு கடை இருக்கிறது.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : அது ரொம்பவும் தூரத்தில் இருக்கிறது இங்கிருந்து போய்வர அரை மணி நேரம் ஆகிறது. ஆகவே, இந்த வெயில் காலத்தில் கூல் டிரிங்ஸ் மாதிரி, சபை நடக்கிற காலத்தில் மட்டுமாவது இங்கேயே கொடுக்கலாம் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர் : அதுமாதிரிச் செய்தால் நலமாக இருக்குமென்று நான் நினைக்கிறேன். எப்படி சாத்தியமோ அப்படிச் செய்யட்டும்.

பொதுவாக வறட்சியான பிரதேசங்களில் நிச்சயமாக ஆழ் துளைக் கிணறுகளைப் போட வேண்டும். அது போடாதவரை, 'இதைச் செய்கிறோம்' அதைச் செய்கிறோம், என்று சொல்லுவது பயனளிக்காது, இந்த மாதிரிச் செய்ய வேண்டுமென்று எத்தனையோ முறை மாறி மாறி, பரம்பரை பரம்பரையாகச் சொல்லிவருகிறோம். ஆனால் இனியும் அவற்றைச் செய்வதில் காலத்தை நீட்ட வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் திருவாடானை தாலூக்காவிலே, ஆங்கிலேயர்கள் காலத்திலே ஒரு என்ஜினியர் பரிசீலனை செய்தபோது, அவருக்கு உதவியாக அவரை அழைத்துக்கொண்டு போய் எல்லா இடங்களையும் ஊர் மக்கள் காட்டினார்கள். அவர் எல்லாவற்றையும் பார்த்துவிட்டு, அந்த தாலூக்காவிலே சுத்தமாக நிலத்தடி நீரே இடையாது என்று பைலில் எழுதி வைத்துவிட்டுப் போய் விட்டார். பிறகு வருகிற மாவட்ட ஆட்சித் தலைவர்களிடம் ஆழ் துளை



1978 மார்ச் 17] [திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர்]

கிணறுகளைப் போட வேண்டுமென்று கேட்டால், அவர்கள் பழைய பைலைப் புரட்டிப் பார்த்துவிட்டு, பரிசீலனையில் நிலத்தடி நீரே கிடையாது என்று எழுதியிருக்கிறார்கள், ஆகவே ஒன்றும் செய்ய முடியாது என்று சொல்லி விடுகிறார்கள். நாங்களும் விடாமுயற்சியாக அவரைப் பிடித்து அழைத்துக் கொண்டு போய் சில இடங்களைக் காட்டி இங்கே பரிசீலனை செய்து பாருங்கள் என்று கேட்டோம். பிறகு ஆய்வு செய்தார்கள். பிறகு சில துளைக் கிணறுகளைப் போட்டார்கள். அதில் ஒவ்வொன்றிலும் இப்போது தண்ணீர் பீய்த்துக்கொண்டு நூறு ஏக்கர் நூற்றைம்பது ஏக்கர் என்ற அளவுக்குப் பாய்ந்துகொண்டிருக்கிறது. அதே மாதிரி ஐந்து மைல்களுக்கு ஒரு இடத்திலே இந்த ஆழ் துளைக் கிணறுகளைப் போட்டால், சமுத்திரத்தில் போய் கலக்கும் நீரை ஓரளவுக்கு நிலத்திற்குக் கொண்டுவர முடியும் என்று சொல்லிக் கொள்ளுகிறேன். இதைச் செய்வதில் ஒன்றும் இடைஞ்சல் கிடையாது. மேலும் மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரேசத் தேவர் சொன்ன மாதிரி, இத்தனை அடிக்கு ஒரு கேணி வெட்ட வேண்டுமென்று சொல்லுவது சரியாக இருக்காது. எங்கள் மாவட்டத்தில் பம்புசெட்டுகள் அதிகமாகக் கிடையாது. அதை அமைப்பதில் அங்கே தகராறு கிடையாது. ஆகவே அடிக்கணக்குப் போட்டால் வாழ முடியாது. ஆகவே நிறைய ஆழ் துளைக் கிணறுகளைப் போட்டால், அந்தப் பகுதியில் உள்ளவர்கள் மனிதர்களாக வாழக்கூடிய பகுதியாக ஆவதற்குரிய சந்தர்ப்பம் ஏற்படும். இதை நிவர்த்திக்க அரசால் முடியும். அப்படிச் செய்தால், அது ஒரு பெரிய நன்மையாக இருக்கும் என்று சொல்லிக் கொள்ளுகிறேன்.

குடிக்கத் தண்ணீர் இல்லையென்ற நிலையிருக்கிறது. எங்கேயோ இருந்து ஐம்பது மைல், நாற்பது மைல் தூரத்திலிருந்து பைப் மூலமாகத் தண்ணீரைக் கொண்டு வருகிறார்கள். அதற்கு அதிகமாகச் செலவாகிறது. 80 கிராமங் களுக்கு ஒரு கோடியே ஆறு இலட்சம் ரூபாய் செலவாகிறது என்று சொல்லு கிறார்கள். ஆனால் ஒரு 50 இலட்சம் ரூபாய் செலவு செய்து நான்கு கேணி போட்டால், அதிலே நான்கு 'சக்சஸ்' ஆனால் அது ஒரு பெரிய உதவியாக இருக்கும். இதையெல்லாம் பரிசீலனை செய்து எங்களுடைய பகுதிக்கு வசதிகள் செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்

எங்களுடைய பகுதியிலே பெரிய ஆறுகள் இல்லை. காட்டாறுகள்தான் இருக்கின்றன. அதிலே ஒரு நான்கு அணைகள் கட்டப்பட்டுள்ளன. நான் எம்.எல்.ஏ. வாக இருக்கும்போது, அந்த அணைகள் கட்டப்பட்டன. அதாவது சிறுகம்பையூர் அணை, அனுமந்தாகுடி அணை, முத்துநாட்டு அணை, எழுவன் கோட்டை அணை ஆகிய அணைகள் கட்டப்பட்டன. இதனால் கடலிலே போய்ச் சேரும் தண்ணீர் கண்மாய்க்கும் போய்ச் சேரும். அங்கே நூற்றுக் கணக்கான கண்மாய்கள் இருக்கின்றன. அதிலேயே காலத்தைப் போக்க வேண்டிய நிலையிருக்கிறது. சிறுகம்பையூர் அணையிலிருந்து ஒரு ரிசர்வ் டாங்க் கட்டி பல கிராமங்களுக்குத் தண்ணீர் கொடுப்பதாக ஒரு திட்டம் இருக்கிறது. அது இன்னும் அரசிடமே இருக்கிறது. அந்தத் திட்டம் இன்னும் நிறைவேறவில்லை. அதே மாதிரி, எழுவன்கோட்டையிலே கட்டப்பட்ட அணை, நாற்பது ஐம்பது மைலுக்குப் போய்ச் சமுத்திரத்தில் சேரக்கூடிய திட்டம் ஒன்றும் இருக்கிறது. அது அஞ்சுக் கோட்டைக் கண்மாயோடு பத்தாவது மைலிலேயே நின்றுவிட்டது. அதே மாதிரி தேவகோட்டைப் பகுதியில் விரிசுழியாற்றில், சிறுநல்லாறு என்ற இடத்திலே கண்மாயை டாங்க் ஆக்கி, கூடஊர் மற்றும் நூறு கிராமங்களுக்குத் தண்ணீர் கொடுக்கும் திட்டம் ஒன்று அரசின் பரிசிலனையில் இருக்கிறதென்று அங்குள்ள என்ஜினியர்கள் சொல்லுகிறார்கள். இப்படி பரிசிலனையிலேயே இருந்தால், அது நல்லதல்ல. எல்லோரும் செய்த மாதிரிதான் இவர்களும் செய்கிறார்கள் என்று மக்கள் சொல்லுவார்கள். ஆகவே இந்தக் காலத்திலாவது அதற்கெல்லாம் நல்ல வழிவகைகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

(நண்பகல் 12-00)

அடுத்தபடியாக, வரிகள் வரைகடந்து போயிருக்கின்றன. இனிமேல் கிராமங்களில் அரை விளைச்சல், கால் விளைச்சல் விளைந்தால், வரி கட்டி ஜீவிக்க முடியாது. நீங்கள் நிரந்தரமாக நன்றாக விளைகிறது என்று சொல்கிறீர்கள். இந்த வருடம் விளைகிறது. அப்படி விளைந்தாலும், நாங்கள் அடிப்பட்டவர்கள். கொள்ளிக்கட்டை சூடுபட்டவர்களுக்கு, நீட்டாங் குச்சியைக் கண்டால் கூட பயம். ஆகவே எங்களுக்கு நிரந்தரமான ஊற்றுக் கிணறுகளைத் தோண்டிக் கொடுத்து முன்னேற வழி தேடிக் கொடுக்க வேண்டும்.

இயற்கை உரங்களைத் தயார் செய்ய வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். இயற்கை உரம் உண்டுபண்ண ஆடுமாடுகள் வேண்டும். ஆனால் ஆடுமாடுகளை வைத்துக்கொள்ள இடமில்லை சம்சாரிக்கு. அதிகப்படியான நிலங்களை எடுத்துக்கொண்டு, அரசாங்கம் அசைன்மெண்ட்



செய்து கொடுத்துவிட்ட பிறகு, ஆடுமாடுகளை அவர்கள் எங்கே வைத்துக்கொள்வார்கள்? என்னிடமிருந்து 146 ஏக்கரை எடுத்துக் கொண்டார்கள். நான் ஐயாயிரம் ஆடுகள், 150, 200 மாடுகள் வைத்திருந்தேன். இதற்கு முன்பிருந்த அரசாங்கம் மேய்ச்சலுக்கு நிலம் வைத்துக்கொள்ளலாம் என்று சட்டம் வகுத்திருந்தார்கள். எனக்கு அதற்காக 40 ஏக்கர் கொடுத்திருந்தார்கள். ஆனால் இடையில் சட்டம் கொண்டு வந்து, மேய்ச்சல் தரைக்கு இடம் வேண்டாம் என்று எடுத்துக் கொண்டுவிட்டார்கள். அதன் பிறகு நான் ஆடு மாடுகளைச் சந்தையில் விற்றுவிட்டேன். சுடுகாடாக இருந்த இடங்கள் எல்லாம் அசைன்மெண்ட் செய்யப்பட்டுவிட்டன. இப்படிப்பட்ட நிலையில் எப்படி இயற்கை உரத்தை உண்டுபண்ணுவது, எதை வைத்து இயற்கை உரத்தை உண்டு பண்ணுவது என்று புரியவில்லை. 50 ஏக்கர் அல்லது 100 ஏக்கர் ஆடு, மாடு மேய்ச்சலுக்கு என்று இருக்க வேண்டும். அப்படிச் செய்தால் தான், ஆடு மாடு வைத்துக்கொண்டு இயற்கை உரத்தை உற்பத்தி செய்ய முடியும்.

செயற்கை உரத்தை அரசாங்கம் கொண்டுவந்தபோது, எதிர்ப்பு இருந்தது. இதைப் போட்டால் நிலம் கெட்டுப் போய்விடும் என்று எதிர்ப்பு இருந்தது. தொடர்ந்து போட்டு வந்த இடங்களில் இப்போது ஒன்றுக்குப் பத்து போட்டால் தான் நிலம் ஏற்றுக்கொள்கிறது என்ற நிலமை வந்திருக்கிறது. இதிலிருந்து தெரிவது என்னவென்றால், மண்ணுக்கு வலுவில்லை என்பதுதான். இதையெல்லாம் அரசு உற்றுப்பார்த்து நல்ல ஏற்பாட்டைச் செய்ய வேண்டும்.

எங்கள் ஏரியாவில் ராஜசிங்கமங்கலம் கண்மாய் இருக்கிறது. அதற்கு நல்ல ஏற்பாடுகளைச் செய்திருக்கிறார்கள். கரை போட்டிருக்கிறார்கள். வருடா வருடம் 10 இலட்சம் ரூபாய் செலவு செய்கிறார்கள். இதை மொத்தமாக செலவு செய்து ரிவெட்மெண்ட் போட வேண்டும். ரிவெட்மெண்ட் போட கவர்னர் மற்றும் முதலமைச்சர் எல்லோரும் எல்லோரும் வந்து பார்த்தார்கள். இதைச் செய்ய வேண்டுமென்ற நோக்கம் அவர்களுக்கு இருக்கிறது. என்ன காரணமோ அந்த வேலை தடைப்பட்டுக் கொண்டிருக்கிறது. அதன் காரணமாக வருடா வருடம், அதிகச் செலவு ஏற்பட்டு வருகிறது. அந்தக் கண்மாயில் பாலம் கட்டி முடிந்திருக்கிறது. இப்போது அந்தப் பாலத்தைத் திறந்து வைக்க மரியாதைக்குரிய முதலமைச்சரை அழைக்க வேண்டும் என்று சொல்லி, நமது மராமத்து அமைச்சரை அணுகி, மாவட்ட ஆட்சித் தலைவரைக் கேட்டு, திறந்து வைக்கும் நேரத்தை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம். பாலம் திறக்கப்படாததால்,

அங்கேயுள்ள மக்கள் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதை உடனடியாகத் திறந்து, விவசாயிகளை நல்லபடி விவசாயம் செய்ய ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆ. திராவிடமணி:** மதிப்பிற்குரிய துணைத் தலைவரவர்களே, தமிழ் நாட்டு வேளாண்மை, விவசாயத் துறை சம்பந்தமாக அரசு முன் வைத்திருக்கிற குறிப்பின் மீது சில கருத்துக்களைச் சொல்ல வாய்ப்பு அளித்ததற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். தமிழகத்தில் இருக்கிற 11 லட்சம் ஏக்கரா தரிசு நிலங்களை ஆண்டுக்கு கணிசமான அளவுக்கு எடுத்து சாகுபடிக்குக் கொண்டுவர தீவிரமான முயற்சி எடுக்க வேண்டுமென்ற கருத்தை நான் இந்த அவையில் வலியுறுத்த விரும்புகிறேன். 1966-ல் துவக்கப் பட்ட வேளாண்மைத் தொழில் கழகம் 1973 வரையில் டிராக்டர்களை இறக்குமதி செய்தது. 1973-க்குப் பிறகு அவை இங்கேயே உற்பத்தி செய்யப் பட்டு, அதனுடைய உதிரி பாகங்கள் எல்லாம் பல்வேறு மாவட்டங்களில் உற்பத்தி செய்யக்கூடிய அளவுக்கு அமைக்கப்பட்டிருக்கிறது என்று குறிப்பில் சொல்லியிருக்கிறார்கள். எல்லா மாவட்டங்களில் செய்வதுடன், அதனுடைய பணிமனைகள் இருக்கக்கூடிய அளவுக்கு அரசு தீவிர முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

கரும்பு, பருத்தி, முந்திரி, புகையிலை, காப்பி, தேயிலை பயிர் வகைகள் வாழை, தென்னை, மிளகு உட்பட அபிவிருத்திக்குத் திட்டம் தந்திருக்கின்ற இந்தக் குறிப்பில் பாக்கு மரம் உற்பத்தி செய்ய எந்தக் குறிப்பும் வரவில்லை. எந்தப் பகுதியில் பாக்குமரக் கன்றுகள் நட்டால் அதிகமான முறையில் பாக்கு கிடைக்கும் என்று விவசாயத் துறை ஆராய்ந்து அதில் கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். சில பகுதிகளில் விவசாயத் துறையில் நல்ல அபிவிருத்திகள் நடந்திருந்தாலும், கோவில்பட்டி மானாவாரி பகுதியாக அமைந்திருப்பது போல், கடையநல்லூர், தென்காசி, சங்கரன்கோவில் பகுதிகளில் மானாவாரி நிலங்கள் ஏராளமாக இருக்கின்றன. அந்த நிலங்களுக்கு மத்திய அரசாங்கத்தின் அனுமதியோடு பாசன வசதிகள் செய்து தர சாத்தியக் கூறுகள் இருக்கின்றனவா என்பதை விவசாயத் துறை பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பாசனத் துறையைப் பொறுத்த வரையில், அமைச்சர் அவர்கள் ஒரு குறிப்பைத் தந்திருக்கிறார்கள். அந்தக் குறிப்பின்படி, 7 பாசனத் திட்டங்கள் போக புதிதாகத் திட்டங்கள் வழங்கப்பட்டத்தில், நெல்லை மாவட்டத்தில் உள்ள களக்காடு வட்டாரம் பயன் பெறும் அளவுக்கு, அதில் உள்ள ஐயாயிரம்,



ஆறாயிரம் ஏக்கர் பாசன வசதி பெறவிருந்த நல்ல திட்டம், பச்சையாறு திட்டம் இந்தக் குறிப்பில் இடம் பெறவில்லை என்பது கண்டு வருத்தப் படுகின்றேன். மலைச் சரிவில் இருக்கிற களக்காட்டில், ஓடி வருகிற தண்ணீரைத் தேக்கி வைத்தால், அங்கே விணாகிப் போகிற தண்ணீரைக் கட்டு படுத்தி, மலைச் சரிவிலிருந்து வருகிற காட்டாற்று வெள்ளத்தைத் தேக்கி வைத்தால், நல்ல முறையில் பயன்படும் என்று முந்தைய அரசு கொண்டு வந்திருந்த அந்தத் திட்டம், இந்தக் குறிப்பில் குறிக்கப்படவில்லை. பரிசீலனையில் இருக்கிறது என்றாவது குறிப்பிட்டிருக்கலாம். ஆனால் என்ன காரணத்தால் விடப்பட்டிருக்கிறது என்பது தெரியவில்லை. அதை அமைச்சர் அவர்கள் கவனத்தில் வைத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

செங்கோட்டையில் இலத்தூர் கிராமம் விவசாயத்தை மட்டும் அடிப்படையாகக் கொண்டது. அங்கே 850 ஏக்கருக்குப் பாசன வசதி அளிக்கக் கூடிய கண்மாய் இருக்கிறது. மூன்று போகம் விளையக்கூடிய பகுதி. தண்ணீர் பற்றாக்குறையால் ஒரு போகம் கூட எடுக்க முடியாமல் விவசாயிகள் கஷ்டப் படுகிறார்கள். ஆகவே ஆய்வு செய்து, லாப நஷ்டக் கணக்கைப் பார்க்காமல், அடவையாறு திட்டத்தைச் செயல்படுத்த வேண்டுமென்று விவசாய நண்பர்கள் எல்லாம் அண்ணா அவர்களிடத்தில் எடுத்துச் சொன்னார்கள்.

(பிற்பகல் 12.10)

அந்த அடவையாறு திட்டம் நிறைவேற்றப்பட்டால், செங்கோட்டைக்குப் பக்கமுள்ள எலத்தூர் கிராமத்தைச் சார்ந்த 800 ஏக்கர் பகுதியில் உள்ள கண்மாய் நீர் நிலை பெருகும். மூன்று போகம் சாகுபடி செய்யலாம். ஆகையால் அமைச்சர் அவர்கள் அடவையாறு திட்டத்தை ஏற்படுத்தி, அதன் மூலமாக அந்தப் பகுதிக்குத் தண்ணீர் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். திருவைகுண்டம் வட்டாரத்தில் ஏராலுக்கும் சேதுவாய்க்காலுக்கும் நடுவில் ஒரு கால்வாய் வெட்டினால், அதன் மூலமாகக் கிழக்குப் பகுதி பூராவும் திருச்செந்தூர், திருவைகுண்டம் தாலுகாக்கள் பாசன வசதி பெறும். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் சடையனேரி கால்வாயை உடன் குடி, மெய்ஞானபுரம் பகுதியில் வெட்டியதன் மூலமாக அங்குள்ள கிணறுகளில் அதிக நீர்ப்பிடிப்பு ஏற்பட்டு பாசன வசதி பெற்றிருக்கிறது. அந்த சடையனேரி 33 கிலோ மீட்டர் அளவில் ரூ. 48 லட்சம் செலவில் வெட்டப்பட்டது. அதற்கு இணைக் கால்வாய் வெட்டினால், சாத்தான்குளம் வட்டாரம் வறட்சிப் பகுதிக்கும் வளம் ஏற்படும் என்பதற்காக முன்னாள் எம். எல். ஏ., திரு. கே. பி. கந்தசாமி அவர்கள் தீர்மானம் கொண்டு

[திரு. ஆ. திராவிடமணி] [1978 மார்ச் 17

வந்து முயற்சி எடுத்ததன் பேரில், அந்தக் கால்வாய் வெட்டப்பட்டது. அதற்குத் துணைக் கால்வாய் வெட்ட வேண்டுமென்ற கட்டத்தில் அவசாநிலை வந்தது. அதனுல் அது பரிசீலிக்கப்படவில்லை. அமைச்சர் அவர்கள் அதைக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேற்கு இராமநாதபுரம் முழுவதுமே பயன்படுத்தக் கூடிய திட்டம் கிழக்கு அழகாடித் திட்டம். முந்திய ஆட்சியில் அது பரிசீலிக்கப்பட்டு, விவசாய நிபுணர்கள் விவசாயிகள் எல்லோருமே இருந்து பரிசீலனை செய்து, அதை நிறைவேற்றினுல், மேற்கு இராமநாதபுரம் ராயலசீமை என்று சொல்லப் படுகிற பகுதி தஞ்சாவூரைப் போல செழிப்பாகும் என்று கருதப்பட்டது. அந்த அழகாடித் திட்டத்தைத் தனித்த கவனத்தில் வைத்து அடுத்த திட்டத் தில் அதைச் சேர்க்க வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

ஏரிகளில் தூர் வாருவதற்காக ரூ. 20 லட்சம் ஒதுக்கப்பட்டிருப்பதாகக் குறிப்பில் இருக்கிறது. அது குறைவாகத் தெரிகிறது. நல்ல எண்ணத்தோடு போடப்பட்ட அந்தத் திட்டத்திற்கு கணிசமான தொகை ஒதுக்க வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். எட்டையபுரத்தில் 200 ஏக்கர் பாசன வசதி தரக்கூடிய கண்மாய் தரை மட்டத்தில் இருக்கிறது. முந்திய அரசில் மாவட்ட ஆட்சித் தலைவர் அங்கே வந்து பார்வையிட்டு, சில அதிகாரிகளையும் கலந்து அந்தக் குளம் ஆழப்படுத்தப்பட வேண்டியதுதான் என்று முடிவெடுத்து அனுமதிக்கப்பட்ட பிறகு, இப்போது நிறுத்தப்பட்டிருக்கிறது. என்ன காரணம் என்பது தெரியவில்லை. அந்த எட்டையபுரம் கண்மாயைக் குறித்து வைத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சிவகாசிக்குப் பக்கத்தில் வடபட்டி கிராமம் உள்ளது. திரு. காளா வெங்கட் ராவ் அவர்கள் தொழில் நகரமாக இருக்கும் சிவகாசியைப் பார்க்க விரும்பிச் சென்றார்கள். அப்போது பக்கத்திலுள்ள வடபட்டிக்கும் போனூர்கள். அப்போது ரெவின்யு அமைச்சராக இருந்தார் அவர். அதைப் பார்த்துவிட்டு, பல பாகங்களிலிருந்து சிற்றோடைகள் மூலமாக அங்கே தண்ணீர் வருகிற காரணத்தால், இந்தக் குளத்தை மராமத்து செய்ய வேண்டுமென்று சொன்னூர்கள். ஆகையால் அந்தப் பகுதி மக்களின் ஆவலைப் பூர்த்தி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

காவிரிப் பிரச்சினையில் இப்போது அமைச்சர் அவர்கள் தந்துள்ள குறிப்பில் ஒரு வரியைத் தெளிவாகவே குறிப்பிட்டிருக்கிறார்கள். அது அமைச்சரின் உள்ளத்தைக் கோடிட்டுக் காட்டுகிறது. இந்த ஆண்டு நீர்ப்பாசனம் தொடர்ந்து கொடுக்கப்படும் என்று தொடர்கிறது. திராவிட முன்னேற்றக்



1978 மார்ச் 17] [திரு. ஆ. திராவிடமணி]

கழக ஆட்சிக் காலத்திலிருந்து இது தொடர்கிறது. 1924-ல் ஏற்பட்ட ஒப்பந்தம் 1974-ல் முடிவடைவதால், வருமுன்னர் காக்க வேண்டுமென்ற கொள்கையின் அடிப்படையில் 1970லேயே பேச்சைத் தொடங்கி திரு. வீரேந்திர படேல் அவர்களிடத்தில் பேச்சு வார்த்தை நடத்தப்பட்டது. அப்போது மத்திய நீர்ப் பாசன அமைச்சர் திரு. ராவ் அவர்கள் இருந்தார்கள். திரு. அச்சுத மேனன் அவர்களும், திரு வீரேந்திர படேல் அவர்களும் தமிழகத்தின் சார்பில் முன்னுள் முதல்வர் கலைஞர் அவர்களும் சேர்ந்து, திரு. ராவ் அவர்கள் முன்னிலையில் சென்னையிலும், திருவனந்தபுரத்திலும், டெல்லியிலும் பேச்சு வார்த்தை நடத்தி, அதன் மூலமாக ராவ் அவர்கள் ஒரு ஒப்பந்தத்தை ஏற்படுத்தித் தந்த காரியம்தான் தொடர்ந்து நடந்து வருகிறது. அதற்குப் பிறகு திரு. அர்ஸ் வந்தார்கள். அப்போதும் பேச்சு வார்த்தை சுமுகமாகவே நடந்தது. என்றாலும் நமக்குக் கிடைக்க வேண்டிய பங்கு தண்ணீர் கிடைக்க வேண்டுமென்பதற்காக டிரிபியுனலுக்குச் செல்லும் அவசியம் ஏற்பட்ட பொழுது, முன்னுள் பிரதமர் திருமதி இந்திரா அம்மையார் அதை சுமுகமாக முடித்துத் தருகிறேன், டிரிபியுனலுக்குப் போக வேண்டாமென்று கேட்டுக் கொண்டதால் டிரிபியுனலுக்குப் போகாமல் சமாதானமாகப் பேசி முடித்துக் கொள்ளலாம் என்று இருந்தோம். எந்த அளவுக்கு நாசூக்காக திராவிட முன்னேற்றக் கழக அரசு அந்தப் பிரச்சினையை அணுகியதோ அந்த முறையில் அப்போது அந்த அணியில் இருந்த அமைச்சர் அவர்கள் மேற்கொண்டு காவிரி தண்ணீரில் நமக்கு உரிய பங்கு கிடைப்பதற்கு ஆவன செய்வார் என்று நம்புகிறேன்.

சென்னை நகரத்திற்குக் குடிநீர் கொண்டுவருவதில் எல்லோருக்கும் இருக்கிற ஆவல் நம்முடைய அமைச்சருக்கும் இருப்பதால், மிகுந்த அக்கறை யோடு கிருஷ்ணு நதித் தண்ணீரைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆந்திராவில் தேர்தல் நடந்ததால், அது முடிந்த பிறகு, வருகிற அமைச்சர் களிடத்தில் பேசலாம் என்று குறிப்பிடப்பட்டது. அப்போது திரு. வெங்கல் ராவ் அவர்கள் இருந்தார்கள். சூழ்நிலையின் காரணமாக இப்போது டாக்டர் சென்னு ரெட்டி அவர்கள் வந்திருக்கிறார்கள். அவர்களிடம் பேச்சு ஆரம்பிக்க வேண்டும். ஏற்கெனவே காந்தியார் பேத்தி 1977 ஜூலையில் பேசும்போது, "கிருஷ்ணு நதித் தண்ணீர் வருகிறது என்று சென்னையில் முன்னுள் பிரதமர் பேசினூர்கள். அது மையால் எழுதப்பட்ட ஒப்பந்தமா அல்லது கிருஷ்ணு நதித் தண்ணீரால் எழுதப்பட்ட ஒப்பந்தமா என்று தெரியவில்லை" என்று பேசியிருக்கிறார்கள். அவர்கள் தமிழகத்தின் பால் அக்கறை கொண்டு பேசி யிருக்கிறார்கள். சென்னைக்கு இரண்டு பக்கத்திலிருந்து தண்ணீர் வருவதில்

[திரு. ஆ. திராவிடமணி] [1978 மார்ச் 17

எங்களைப் போன்றவர்களுக்கு மகிழ்ச்சி. ஏற்கெனவே 17 லட்சமாக இருந்த மக்கள் தொகை இப்போது 37 லட்சமாகப் பெருகியிருக்கிறது. நாளடைவில் அது 50 லட்சமாகப் பெருகக் கூடிய வாய்ப்பு இருக்கிறது. கிருஷ்ணா நதித் தண்ணீர் வரவேண்டும். வருவதில் மகிழ்ச்சிதான். ஆனால் இதற்கு முன் நல்ல குழாய்கள் பாதிக்கப்பட்டு, பாலங்கள் கட்டப்பட்டு, சேத்தியாதோப்பு வீதிகளிலே கிடக்கின்ற குழாய்களைப் பற்றி வீராணம் திட்டத்தைப்பற்றி அமைச்சர் அவர்கள் இதிலே குறிப்பிட்டிருந்தால் மகிழ்ச்சியாக இருந்திருக்கும். ஏற்கெனவே இந்த அவையில் திராவிட முன்னேற்றக் கழக அரசு கொண்டு வந்த வீராணம் குடிநீர் திட்டத்தைப் பொறுத்து நிபுணர்கள் கணக்கெடுத்துப் பார்த்ததில், மீண்டும் ரூபாய் 4 கோடி இந்த ஆண்டு ஒதுக்கியிருக்கிறோம் என்று குடிநீர் வாரியப் பொறுப்பேற்றுள்ள திரு. இராகவானந்தம் அவர்கள் சட்டமன்றப் பேரவையில் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே அந்தத் திட்டம் நிறைவேற்றப்பட வேண்டும். அதுவும் நிறைவேற்றப்படும், அத்துடன் கிருஷ்ணா நதி நீரும் கொண்டுவரப்படும் என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கலாம். என் விடுபட்டுப் போனது என்பது தெரியவில்லை. எனவே பாலங்கள் கட்டப்பட்டு, குழாய்கள் பொருத்தப்பட்டு, சேத்தியாதோப்பு ரோடுகளில் பஸ் போக்குவரத்துக்கு இடைஞ்சலாகக் கிடக்கும் குழாய்களை மீண்டும் அமைக்கும் திட்டத்தைக் கொண்டுவர அமைச்சர் அவர்கள் தீவிரமாக கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, அதன் மூலமாக சென்னை மக்களின் குடிநீர்ப் பிரச்சினையினை முதல் கட்டமாகத் தீர்க்க ஆவன செய்வார்கள் என்று நம்புகிறேன்.

மேற்கு நோக்கிப் பாயும் ஆறுகளை கிழக்கே திருப்பிவிடுவதற்கு பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் அவர்கள் திருவனந்தபுரத்திற்கு வந்தபோது, தமிழக அமைச்சர் அவர்கள் அங்குள்ள முதலமைச்சர் திரு. அந்தோணி அவர்களுடன் பேசியதாக ஒரு குறிப்பை அமைச்சர் அவர்கள் தந்திருக்கிறார்கள். திரு. இ. எம். எஸ். அமைச்சராக இருந்தபோது, மத்திய அரசில் உணவு அமைச்சராக திரு. ஜெகஜீவன்ராம் அவர்கள் இருந்தபோது, கேரள அரசு பஞ்சத்திலே வாடியபோது, ஒரு லட்சத்து இருபதாயிரம் டன் அரிசி தமிழகம் கொடுக்கும் என்று சொன்னவுடன் இ. எம். எஸ். அவர்கள் "அரிசியைக் கொடுங்கள், நாங்கள் எவ்வளவு தண்ணீர் வேண்டுமானாலும் கொடுக்கிறோம்" என்று மிகுந்த மனிதாபிமானத்தோடு அண்ணா அவர்களுக்குக் கடிதம் எழுதினார்கள். அண்ணா அவர்கள் காலத்தில் ஏற்பட்ட அந்த உணர்வின் காரணமாக, பிறகு ஐயப்பன் திருவிழாவுக்கும் குருவாயூரப்பன் விழாவுக்கும் அரிசி கொடுக்கப்பட்டு, பிறகு வந்த திரு. அச்சுத மேனன்



1978 மார்ச் 17] [திரு. ஆ. திராவிடமணி]

அரசுடனும் பேசி சிறுவாணி தண்ணீர் கிடைப்பதற்கான வழி வகுக்கப் பட்டது. திரு. அச்சுத மேனன் கோவை வந்தபோது, அவரிடம் என்ன கேட்டாலும் தருகிறேன் என்றபோது, அவர் 22 ஆயிரம் டன் அரிசி வேண்டுமென்று கேட்டபோது அந்த மேடையிலேயே அதைக் கொடுப்பதாக கலைஞர் அவர்கள் சொன்னார்கள். அதன் பிறகு சிறுவாணி திட்டம் சம்பந்தமாகப் பேச உங்கள் அமைச்சரை வரச்சொல்லுங்கள் என்று திரு. அச்சுத மேனன் சொல்லிப் போனார். அதற்குப் பின் திரு. ப. உ. ச. வும், திரு. சாதிக் பாஷாவும் சென்று கேரள அமைச்சராக இருந்த திரு. திவாகரன், திரு. ஜான் அவர்கள் கையெழுத்திட்டு நிறைவேற்றப்பட்ட திட்டம் இந்த சிறுவாணி திட்டம். அதன் அடிப்படையில் இப்போது முதலமைச்சராக உள்ள திரு. அந்தோணி அவர்களுடன் நம் அமைச்சர் பேசினார் என்ற செய்தி அறிந்து மகிழ்ச்சி அடைகிறேன். கேரளத் தண்ணீர் கிழக்கே வருவதற்கு வாய்ப்பு ஏற்படுமானால், அதனால் மகிழ்ச்சியடைவோம்.

(பிற்பகல் 12-20)

பரம்பிக்குளம்—ஆளியாறு திட்டம் ஒப்பந்தத்தின் மூலமாக 2,40,000 ஏக்கர் நிலத்திற்கு பாசன வசதியும், 186 கி.வா. மின்சார உற்பத்தி செய்யும் வசதியும் கிடைக்க ஆவன செய்ததைப்போல், கேரள அரசோடு பேச்சு வார்த்தை நடத்தி, கேரளத்திலிருந்து வீணாகச் செல்லும் ஆற்று நீரை, அரபிக் கடலில் சென்று கலக்கும் அந்த ஆறுகளைத் தமிழகத்திற்குத் திருப்பி அதிகமான பாசன வசதி காண புதிய அரசு முயற்சியளிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நீண்ட நெடுங்காலமாக நிறைவேற்றப்பட வேண்டியதும் டெல்லியின் கவனத்தில் இருக்கக்கூடியதும், சங்கரன்கோயில், கோயில்பட்டி, விளாத்திக்குளம் பகுதிகளுக்குப் பாசன வசதியை அளிக்கக்கூடியதுமான கிரியாற்றுத் திட்டம் பற்றியும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். தேர்தலுக்கு நிற்கிற அவ்வளவு வேட்பாளர்களும் இந்தக் கிரியாற்றுத் திட்டத்தைப் பற்றிச் சொல்லுவது வழக்கம். இந்தத் திட்டத்தின் மூலமாக கேரளத்தில் ஓடுகிற நதித் தண்ணீரைத் தமிழகத்திற்குத் திருப்பி, இந்தத் திட்டத்தைச் செயல் படுத்த வேண்டும் என்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு இப்போது கொண்டுவர விரும்புகிறேன். அமைச்சர் அவர்களும் இதைக் கவனத்தில் கொள்வார்கள் என்று எண்ணி, பாசன வசதி பற்றி என்னுடைய கருத்துக்களைக் கூற வாய்ப்பு தந்தமைக்கு நன்றி கூறி என் உரையை முடிக்கிறேன். வணக்கம்.

[1978 மார்ச் 17

திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்களால் அளிக்கப்பட்டுள்ள 1978-79 ஆம் ஆண்டுக்கான கொள்கை விளக்கக் குறிப்பின் மீது ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

வேளாண்மை பற்றிய விவாதத்தைத் தொடங்குவதற்கு முன்னுலே அமைச்சர் அவர்கள், மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் சூடாக இருக்கக் கூடாது என்ற காரணத்தாலோ என்னவோ, ஒரு சுவையான, குளிர்ந்த பாலைத் தந்து இந்த விவாதத்தைத் துவக்கி வைத்திருக்கிறார்கள். அவருக்கு முதலில் நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

அமைச்சர் அவர்களுடைய உரையை நான் முழுவதும் படித்தும் பார்த்தேன். பல்வேறு குறிப்புகளைத் தந்திருக்கிறார்கள். இதற்கு முன்னுலே இருந்த ஆட்சிக் காலத்தில் தொடங்கப்பட்டு, மிக வேகமாக வளர்ச்சி யடைந்து வந்திருக்கிற இந்த வேளாண்மைத் துறையில் நாம் அடைய வேண்டிய அளவுக்கு வெற்றியை அடைந்திருக்கிறோமா என்றுல், இல்லை என்பதைச் சொல்லி இந்த வகையில் ஒரு சில குறிப்புகளை நான் இங்கே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். நாட்டில் மிக முக்கியமான தொழி லான இந்த வேளாண்மைத் துறையில் நாம் ஓரளவுக்கு கவனம் செலுத்தி யிருக்கிறோம் என்றுலும், செலுத்த வேண்டிய அளவுக்கு கவனம் செலுத்து கிறோமா என்றுல், இல்லை என்பதைத்தான் நான் குறிப்பிட விரும்புகிறேன். ரூ. 720 கோடி செலவு செய்கிற ஒரு அரசாங்கம் இந்த ஆண்டு வேளாண்மைத் துறைக்கு ஒதுக்கியிருக்கிற தொகையின் அளவைப் பார்க்கிறபோது, அது நாம் மகிழ்ச்சியடையக் கூடிய அளவில் இல்லை என்பதையும், அதே நேரத்தில் இன்னும் ஒரு கணிசமான தொகையை இந்தத் துறைக்கு ஒதுக்கி ஆக்க பூர்வமான பணிகளை இந்தத் துறை மேற்கொண்டிருக்க வேண்டும் என்பதையும் கூறிக் கொள்ள விரும்புகிறேன். எனவே இதற்காக மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடமும் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களிடமும் வாதிட்டு, இன்னும் அதிகமான நிதியைப் பெற வேண்டும் என்று சொல்லிக்கொள்ள விரும்பு கிறேன்.

இங்கே அச்சடித்துக் கொடுக்கப்பட்டிருக்கிற அமைச்சர் அவர்களின் கொள்கை விளக்கக் குறிப்பில் பெரும்பாலும் வெள்ள நிவாரணப் பணிகளைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த மன்றத்தில் முன்னுல் புயல் வெள்ள



1978 மார்ச் 17] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

அறிக்கையின்மீது என்னென்ன கருத்துக்களைச் சொன்னுர்களோ அவை களையேதான் இப்போதும் சொல்லியிருக்கிறார்கள். குறிப்பாக "சிறு விவசாயிகள் மற்றும் குத்தகைதாரர்கள், தாளடி பயிர் செய்வதற்காக இலவசமாக நெல்விதை வழங்குதல்; பயிர்களுக்கான உரங்களை வாங்குவதில் சிறு விவசாயிகள் மற்றும் குத்தகைதாரர்களுக்கு 25 சதவிகித மானிய உதவி; பயிர்ப் பாதுகாப்பு மருந்துகள் எந்தவிதப் பாகுபாடுமின்றி எல்லா விவசாயி களுக்கும் தமிழ் நாடு முழுவதற்கும் 25 சதவீத மானிய விலையில் வழங்குதல்" போன்ற பழைய குறிப்புகளையே தந்திருக்கிறார்கள். புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு எந்த அளவுக்கு இந்த உதவிகள் செய்யப்பட்டன என்ற விவரத்தை மாண்புமிகு அவை உறுப்பினர் களுக்குக் கொடுத்திருந்தால், அது உண்மையிலேயே உதவிகரமாக இருந் திருக்கும் என்ற கருத்தையும் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

நமக்கிருக்கும் வருத்தமெல்லாம், புயல் வெள்ளம் வந்து 3, 4 மாதங்களாகி விட்டன. எல்லா இடங்களிலும் நிவாரணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன என்று சொல்லப்பட்டது. என்றுலும் பல இடங்களிலிருந்து புகார்கள் வந்து கொண்டிருக்கின்றன. நிவாரணப் பணிகள் பரவலாகச் செய்யப்பட்டிருக் கின்றன. என்றுலும், குறிப்பாகத் தஞ்சை மாவட்டத்தில் ஒரு சில பகுதிகளில் இந்த உதவிகள் சில விவசாயிகளுக்குக் கிடைக்கவில்லை என்ற புகார்கள் வந்து வண்ணமிருக்கின்றன. அதே போல் வடஆற்காடு மாவட்டத்திலும் விவசாயி களுக்கு 25 சதவீத மானிய விலையில் மருந்துகள் விநியோகிப்பதில் புகார்கள் வந்துள்ளன. என்ன புகார் என்றுல், 'Time barred medicine' காலம் கடந்து போன மருந்துகளைப் போல் காலாவதியான பூச்சி மருந்துகளை விவசாயிகளுக்குக் கொடுத்திருக்கிறார்கள்' என்பதாகும். இதில் எந்த அளவுக்கு உண்மை இருக்கிறது என்பது எனக்குத் தெரியாது. நான் இங்கே இதைக் குறிப்பிடுவதற்குக் காரணம் இப்படிப்பட்ட புகார்களை ஆராய்ந்து பார்த்து, இப்படிப்பட்ட தவறுகள் நடக்காமல் இனியாவது பார்த்துக் கொள்ளவேண்டும் என்பதற்காகத்தான்.

புயல் வெள்ள நிவாரண அறிக்கையின்மீது மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. இராவிடமணி அவர்கள் கேட்டுக்கொண்டதற்கு இணங்க, மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் வெற்றிலைப் பயிர் சேதமடைந்தவர் களுக்கும் ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 500 வீதம் நஷ்ட ஈடு அளிப்பதற்கு நிதி ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். அதற்காக அமைச்சர் அவர்களுக்குப் பாராட்டுத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [1978 மார்ச் 17

வேளாண்மைத் துறை சம்பந்தமாக இங்கே பல்வேறு புள்ளிவிவரங்களைத் தந்திருக்கிறார்கள். இந்தப் புள்ளி விவரங்கள் தவறு என்று நான் சொல்ல வில்லை. என்றாலும் கொடுத்திருக்கிற புள்ளி விவரங்கள் 'approximate' ஆகக் கொடுக்கப்பட்ட புள்ளிவிவரங்களாக இருக்குமோ என்று ஐயப்பட வேண்டியிருக்கிறது. இந்த ஆண்டு அரிசி உற்பத்தியைப் பொறுத்த வரையில், அதிகமாகும் என்று சொல்லியிருக்கிறார்கள். இது எந்த அடிப்படையில் சொல்லப்பட்டது என்பதுபற்றிக் குறிப்பில் ஒன்றுமில்லை. அரிசி உற்பத்தி அதிகமாகும், சிறு தானியங்கள் உற்பத்தி அதிகமாகும் என்று பார்க்கிறபோது, 1977-78 ஆம் ஆண்டில் 62 லட்சம் டன்னுகை இருந்த அரிசி உற்பத்தி 1978-79 ஆம் ஆண்டில் 64 லட்சம் டன்னுகை இருக்கும் என்று எதிர்பார்க்கும்போது, இது எந்த அடிப்படையில் எதிர்பார்க்கப்படுகிறது என்பதற்கு விவரமில்லை. அதிகமான நிலங்களை நெல் உற்பத்தி செய்வதற்காகப் பக்குவப்படுத்தி இருக்கிறோமா அல்லது விளைச்சலை அதிகரிக்கத் தக்க வகையில் புதிய ரக நெல் வகைகளை அறிமுகப்படுத்தியிருக்கிறோமா; ஒன்றும் தெரியவில்லை. 1977-78 ஆம் ஆண்டில் 62 லட்சம் டன்னுகை இருந்த அரிசி உற்பத்தி 1978-79 ஆம் ஆண்டில் 64 லட்சம் டன்னுகை, அதாவது 2 லட்சம் டன் அதிகமாக ஆகும் என்று மொட்டையாகப் போட்டால், மாண்புமிகு உறுப்பினர்களுக்கே கூட புரிந்துகொள்ள வசதியாக இல்லை. இந்த வகையிலுல் இந்த ஆண்டு உற்பத்தி அதிகமாகப் போகிறது என்று குறிப்பிட்டால், உறுப்பினர்கள் புரிந்துகொள்ள ஏதுவாக இருக்கும் என்பதை சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

அதைப் போலவே சிறு தான்யங்களின் உற்பத்தி சென்ற ஆண்டு 19 லட்சம் டன்னுகை இருந்தது இந்த ஆண்டு 20 லட்சம் டன்னுகை உயரும் என்றும், பயறு வகைகள் சென்ற ஆண்டு 3 லட்சம் டன்னுகை இருந்தது இந்த ஆண்டு 3.25 லட்சம் டன்னுகை உயரும் என்றும், புள்ளிவிவரம் கொடுக்கப் பட்டிருக்கிறது. எந்த அடிப்படையிலே இந்த உற்பத்தியை சென்ற ஆண்டைக் காட்டிலும் இந்த ஆண்டு அடைய இருக்கிறீர்கள் என்ற விவரத்தை இந்த ஆண்டு இல்லாவிட்டாலும் கூட இனி வருகிற ஆண்டு களிலாவது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, உழவர் பயிற்சி நிலையங்களை இந்த ஆண்டு கன்னியாகுமரியில் ஒன்றும், தருமபுரியில் ஒன்றுமாக ஆக மொத்தம் இரண்டு நிலையங்களைத் துவக்க இருப்பதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த உழவர் பயிற்சித் திட்டத்தைப் பொறுத்தவரையில், தமிழகத்தில் ஒவ்வொரு



1978 மார்ச் 17] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

இருக்க வேண்டும். இப்படி ஆண்டொன்றுக்கு மாவட்டத்திற்கும் ஒன்று இரண்டு பயிற்சி நிலையங்கள் என்றில்லாமல் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு பயிற்சி நிலையம் என்று துவங்குவோமானுல், படித்து வேலையில்லாமல் இருக்கும் வாலிபர்கள் அங்கே பயிற்சி பெற்று விவசாயம் செய்வது என்பது ஒன்றும் இழுக்கு நிறைந்த தொழில் அல்ல என்ற மனப் பக்குவத்தைப் பெற்று நிச்சயமாக இந்தத் தொழிலில் ஈடுபட ஏதுவாக இருக்கும். எனவே இந்த பயிற்சி நிலையங்களை மாவட்டந்தோறும் அமைக்கும் வகையில் அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பயிர் பாதுகாப்புத் திட்டம் என்று பொதுவாகச் சில திட்டங்களை அறிவிக் கிறோம். ஆனுல் இங்கே ஆளுகின்ற கட்சியான அண்ணு திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் தேர்தல் நேரத்தில் அதிலும் குறிப்பாக இன்றைய முதலமைச்சர் அவர்கள் தேர்தல் நேரத்தில் எல்லா இடங்களிலும் ஒன்றைப் பற்றிப் பேசினார்கள். அதாவது இந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தால், பயிர் பாதுகாப்புத் திட்டத்தை "Crop Insurance" திட்டத்தைக் கொண்டு வரும் என்று சொன்னார்கள். ஆனுல் இதுவரை இந்த அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பது புரியவில்லை. ஏதோ மத்திய அரசுதான் இதைச் செய்ய வேண்டும் என்று ஒரே வரியில் சொல்லிவிடுவதால், மக்கள் திருப்தி அடைந்துவிட முடியாது. மத்திய அரசு ஒப்புக்கொள்ளவில்லை என்றாலும், மாநில அரசு அளவில் திட்டம் தீட்ட முடியுமா என்பதைப் பரிசீலிக்க வேண்டும். அதற்கு நிதி வசதி தேவைப்பட்டால், வங்கிகள் மூலம் ஏதாவது பெறுவதற்கு வழி இருக்கிறதா என்றும் ஆராய வேண்டும். இந்த வகையில் ஆட்சியில் உள்ள இந்த அரசாங்கம் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாநிலத்தில் விதைப் பண்ணைகளை அதிகரிக்க வேண்டும் என்று சொல்லி, அதற்கான புள்ளி விவரங்களையும் இங்கே கொடுத்திருக்கிறார்கள். கொடுக்கப் பட்டிருக்கிற புள்ளி விவரங்களைப் பார்க்கிறேபோது, விதைப் பண்ணைகள் லாபத்தில் நடைபெறுகிற நிலைமை புரிகிறது. இது நமக்கு மகிழ்ச்சியைத் தருகிறது. ஏனென்றுல் அரசாங்கம் எதைச் செய்தாலும், நட்டத்தில்தான் இருக்கும் என்று ஒரு சில முதலாளிகள் வேறு சில துறைகளில் ஒரு கருத்தை உண்டாக்கியிருக்கிறார்கள். ஆனுல் விவசாயத் துறையில் நடைபெறும் விதைப் பண்ணைகளைப் பார்க்கிறபோது, அவைகள் லாபத்தில் நடைபெற்றுக் கொண் டிருக்கின்றன. இது ஒரு மகிழ்ச்சியான செய்தி. 1970-71-ல் விவசாயத் துறையில் இருந்த விதைப் பண்ணைகளில் கிடைத்த லாபம் ரூபாய் 9.00 லட்ச மாக இருந்தது 1974-75-ல் ரூபாய் 49.82 லட்சமாக அதிகரித்திருக்கிறது.

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [1978 மார்ச் 17

1975-76-ல் பார்த்தால்கூட ரூபாய் 30.67 லட்சம் லாபம் வந்திருக்கிறது. இப்படி விவசாய விதைப் பண்ணையில் லாபம் அதிகரித்து வந்திருப்பதைப் பார்க்கிறோம். எனவே அரசாங்கம் விதைப் பண்ணைகளை அதிகமாக்கி, தமிழகம் முழுவதும் விவசாயிகளுக்குத் தரமான விதைகளைக் கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, விதைகள் விநியோகத்தைப் பொறுத்தவரையில், 1976-77 ஆம் ஆண்டில் 12,144 டன் விதைகள் விநியோகிக்கப்பட்டிருக்கின்றன. பொதுவாக உணவு உற்பத்தியை அதிகரிக்கிறோம், விளைச்சலை அதிகமாக்குகிறோம் என்று சொல்லுகிற அரசாங்கம் ஆண்டுதோறும் இந்த விதைகளை விநியோகிப்பதில் வளர்ச்சியைக் காட்டியிருந்தால், பாராட்ட முடியும். ஆனால் என்ன காரணத்தாலோ 1977-78 ஆம் ஆண்டில், 9,500 டன்னாக நெல் விதை விநியோகம் குறைக்கப்பட்டிருக்கிறது. அதாவது 12,144 டன் அளவாக இருந்த இந்த நெல் விதை விநியோகம் 9,500 டன்னாக குறைக்கப்பட்டிருக்கிறது. இந்த அளவுக்குத் தான் விநியோகம் செய்யப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதற்குக் காரணம் என்ன ? விவசாயிகள் இந்த விதைகளை வாங்க முன்வரவில்லையா அல்லது அரசாங்கம் இவ்வளவுதான் இருப்பு வைத்துக் கொள்ள முடியும் என்பதற்காகக் குறைத்துக் கொண்டிருக்கிறதா ? அல்லது நம் விதைப் பண்ணைகளில் உற்பத்தியாகும் நெல் விதைகளின் உற்பத்தி குறைந்து விட்டதா ? என்ன காரணம் என்பதை தெரிவிப்பது நல்லதாக இருக்கும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைப் போலவே சிறு தானியங்கள் 325 டன்கள் 1976-77 ஆம் ஆண்டில் உற்பத்தி என்றால், 1977-78 ஆம் ஆண்டில் 305 டன்னாகவும், 1978-79 ஆம் ஆண்டில் 305 டன்னாகவும் இருக்கிறது. இதைப் பார்க்கிறபோது, வேளாண்மைத் துறையில் வேகமாகச் செயல்பட்டிருந்த நிலைமை மாறி, ஏதாவது மந்தப் போக்கு வந்து விட்டதோ என்ற ஐயம் ஏற்படுகிறது. எனவே இந்த அளவுக்குக் குறைந்தது எந்தக் காரணத்தால் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-30)

நமது மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கின்ற செயல் வினைமுறைத் திட்டம் 1978-79-ல் 27-வது பக்கத்தில், தமிழ் நாட்டில் கரும்புப் பெருக்கத்திற்கான மத்திய அரசு சார்புத் திட்டம் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். 1978-79-ல் மொத்தம் 1,200 செயல் விளக்கத் திடல்களை அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. 1978-79 ஆம் ஆண்டில் தமிழ்



1978 மார்ச் 17] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

சார்ந்த 150 தொழிலாளர்
நாடு, பாண்டிச்சேரி மற்றும் கேரள மாநிலங்களைச் என்று குறிப்பிடப்
களுக்குப் பயிற்சி அளிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது காரணத்தினாலே,
பட்டுள்ளது. இது மத்திய அரசுத் திட்டமாக இருக்கின்ற கொடுக்கிறோம்
அந்த 3 மாநிலத்தையும் சேர்ந்த தொழிலாளர்களுக்குப் பயிற்சி கேரளாவைச் சேர்ந்த
என்று அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். நான் கேட்கவில்லை,
மாணவர்களுக்கும் பயிற்சி கொடுக்கலாமா என்பதற்காக பேர்களிலே தமிழ்
நான் இதில் கேட்க விரும்புவதெல்லாம், அந்த 150 பாண்டிச்சேரியைச் சேர்ந்தவர்கள்
நாட்டைச் சேர்ந்தவர்கள் எத்தனை பேர்கள், எத்தனை பேர்கள் தேர்ந்
எத்தனை பேர்கள், கேரளாவைச் சேர்ந்தவர்கள் கொடுத்திருந்தால், இதிலே
தெடுக்கப்படுவார்கள் என்ற விவரங்களையும் சொல்லிக் கொள்ளாமல்
பொதுவாக உறுப்பினர்கள் மத்தியிலே ஏதும் அதைப் பற்றித்
இருக்க ஏதுவாக இருக்கும் என்று சொல்லிக்கொள்கிறேன்.
தெளிவுபடுத்திச் சொல்ல வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இதுபோல நெட்டை, குட்டை வீரிய ஒட்டு தென்னங்கன்று உற்பத்தி செய்யப்படுகிறது. வட ஆற்காடு மாவட்டம் நவ்லாக் பண்ணையில் இந்தத் திட்டம் செயலாக்கப்படுகின்றது என்று குறிப்பிட்டிருக்கின்றார்கள். நம் முடைய தமிழகத்தில் ராஜபாளையத்தில் ஆயிரம் காய்ச்சித் தென்னைகள் தனி யார் விவசாயிகளாலே பயிரிடப்படுகின்றன. அந்தத் தென்னை மரம் ஒன்றைக்கு ஒரு ஆண்டுக்கு ஆயிரம் காய்களைக் கொடுக்கின்றது. இந்த மாதிரியான தென்னை மரங்கள் தமிழகத்தில் இருக்க வேண்டும். அப்படிப்பட்ட அதிக உற்பத்தியைத் தருகின்ற ஆயிரங்காய்ச்சி தென்னை மரங்களை நாம் வளர்க்க வேண்டும். தமிழகத்திலே எல்லா இடங்களிலும் வளர்க்க வேண்டும். இந்த மரத்தைப்பற்றி நவ்லாக் போன்ற பண்ணைகளில் ஆராய்ச்சி செய்து பார்க்க முடியுமா என்பதைப்பற்றி நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முயற்சிகள் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்னை நகரில் காய்கறிகள் உற்பத்தி செய்ய திட்டம் தீட்டப்பட்டிருக் கின்றது. வீட்டுத் தோட்டங்கள் அமைப்பதின் மூலம் சென்னை நகரில் காய்கறி உற்பத்தியை அதிகப்படுத்துவது, காய்கறி பயிரிடும் சென்னை வாழ் மக்களுக்குத் தொழில் நுட்ப உதவியளித்தல், வீட்டுத் தோட்டங்களுக்குத் தேவைப்படும் விதை மற்றும் நாற்றுகள், பூச்சி மருந்துகள், உரங்கள் ஆகிய இடு பொருட்களைப் பெற்று விநியோகித்தல், 1978-79-ஆம் ஆண்டில் 2,50,000 காய்கறி விதை பாக்கெட்டுகளும், 5,00,000 காய்கறி மற்றும் பழ நாற்றுகளும் இத்திட்டத்தின் மூலம் விநியோகிக்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செயல்வினை முறைத் திட்டத்தில் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

உண்மையிலேயே சென்னை போன்ற மாநகரங்களில் காய்கறிகள் விலை ஏறிக்கொண்டு போகின்ற நேரத்தில், இப்படிப்பட்ட ஒரு திட்டம் வந்திருப்பது நல்லதுதான். இதிலே நான் சொல்ல விரும்புவது என்னவென்றால், இன்றைய தினம் சென்னையிலே அர்பன் லேண்ட் சீலிங் என்று இருக்கின்றது. அந்த அர்பன் லேண்ட் சீலிங் விதியிலிருந்து விலக்குக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். யார் யார் தங்களுடைய வீடுகளில் தோட்டங்கள் அமைத்துக்கொண்டு பயிர் செய்துகொண்டு இருக்கின்றார்களோ அவர்களுக்கெல்லாம் அர்பன் லாண்ட் சீலிங் விதியிலிருந்து விதிவிலக்குத் தருவதாக இருக்க வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன். இப்படிச் செய்வதால், நகரில் உள்ள ஒரு 500 விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்புகள் ஏற்படும். அதே நேரத்தில் ஏராளமான காய்கறிகளை உற்பத்தி செய்யலாம். அந்தக் காய்கறிகளை நாம் கொள்முதல் செய்து மார்க்கெட்டிலே விற்றுக்கொள்ள முடியும். இதை நான் சொல்வதால், ஏதோ நான் நிலச்சுவான்தார்களுக்கு என்று வாதாடுவதாக அங்கத்தினர்கள் நினைத்துவிடக்கூடாது என்று சொல்லிக்கொள்கிறேன். 3, 4 கிரவுண்டுகள் வைத்திருப்பவர்கள் இருக்கிறார்கள். அண்ணா நகர், கே. கே. நகர் போன்ற பகுதிகளில் வைத்திருக்கிறார்கள்.

திரு. வே. தங்கப்பாண்டியன் : துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் அண்ணா நகரில் கிரவுண்டு வைத்திருக்கிறார்கள். அதனால் அவர்களுக்குப் பலன் கிடைக்கும் என்பதற்காகச் சொல்கின்றார்களா என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : துணைத் தலைவரவர்களே, அதனாலேதான் நான் கே. கே. நகரையும் சொன்னேன். சென்னையிலே இருக்கக்கூடிய 120 டிவிஷனிலேயும் கொடுக்க வேண்டும் என்று சொல்கிறேன். இந்தத் திட்டத்தை விஸ்தரிக்க வேண்டும். 2 கிரவுண்ட், 3 கிரவுண்ட் வைத்திருப்பவர்கள், ஒரு அரை கிரவுண்ட், ஒரு கிரவுண்டில் வீடு கட்டிவிட்டு, மீதமுள்ள இடத்தில் இந்த மாதிரியான தோட்டங்கள் வைத்துக்கொள்ள வேண்டும். அதற்கு அரசாங்கம் மக்களை உற்சாகப்படுத்த வேண்டும். இதனால் சென்னை வாசிகளுக்கும் காய்கறிகள் கிடைக்க வாய்ப்புகள் ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய தமிழகத்தில், இவ்வளவு பரந்து விரிந்து இருக்கின்ற தமிழகத்தில், இந்த விவசாயப் பயிற்சித் திட்டத்தின் கீழ் 13 வேளாண்மைப் பள்ளிகள் தான் இருக்கின்றன. இந்த 13 வேளாண்மைப் பள்ளிகளில் 390 இளைஞர்களுக்குத்தான் பயிற்சி அளிக்கப்பட்டு வருவது தொடரும் என்று சொல்லப்படு





கிறது. அந்த அளவுக்குத்தான் பயிற்சி பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். நம் நாட்டில் 4½ கோடி மக்கள் இருக்கின்றார்கள். இவர்களில் 80 சதவிகிதம் பேர்கள் விவசாயத் தொழிலிலேதான் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமையில் விவசாயிகளுக்குப் பயிற்சி கொடுக்க 13 பள்ளிகள்தான் இருக்கின்றன. அதில் 390 பேர்கள்தான் பயிற்சி பெறுகின்றார்கள். இந்த எண்ணிக்கையைப் பற்றி நாம் யோசித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதிகமான மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டால்தான், நாம் விவசாயத் துறையில் முன்னேற முடியும். அப்படி ஈடுபடாததால் நாம் பின் தள்ளப்படுகிறோம் என்ற எண்ணம் மக்கள் மனதிலே ஏற்படாமலிருப்பதற்கு நமது அமைச்சர் அவர்கள் முயற்சி எடுத்துச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வேளாண்மைத் துறையில் உள்ள திட்டங்கள்பற்றியும், புதிய ரகங்கள் தயாரிக்கப்பட்டிருப்பதைப்பற்றியும் படம் போட்டுக் காண்பிக்கப்படுவதாகச் சொல்லப்படுகிறது. வேளாண்மைத் துறையைப் பொறுத்த வரையிலே, முக்கியமாக விவசாய மக்களிடம் தொடர்பு கொள்வதற்கு வானொலி தான் சிறந்தது. வானொலி பெட்டி மூலம் பிரச்சாரம் செய்ய வேண்டும். இப்போது ஒரு அரை மணி நேரம் தான் பிரச்சாரம் செய்யப்படுகிறது. அது போதாது. ஒரு 2 மணி நேரம் அல்லது 2½ மணி நேரம் ஒதுக்க வேண்டும். ரேடியோ ஒவ்வொரு கிராமத்திலும் இருக்கின்றது. சாப்பிட்டுவிட்டு திண்ணையிலே உட்கார்ந்துகொண்டு ரேடியோ கேட்கிறார்கள். விஞ்ஞான முறையில் விவசாயத் துறையில் நாம் புத்தகத்தில் அச்சடித்துக் கொடுத்தால், அவர்கள் படிக்க மாட்டார்கள். சினிமா படம் போட்டுக் காண்பித்தால் பார்ப்பார்கள். அதற்கு நம்மிடம் போதிய நிதிவசதி கிடையாது. மத்திய அரசிடம் தொடர்பு கொண்டு வானொலிப் பெட்டியில் 2 அல்லது 2½ மணி நேரம் பிரச்சாரம் செய்தால், விவசாயிகள் நிச்சயமாக பலன் அடைவார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

வேளாண்மை மறுநிதி மற்றும் அபிவிருத்திக் கழகத் திட்டங்கள்பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொள்கை விளக்கக் குறிப்பில் 20-21 ஆம் பக்கங்களில் ஏராளமான செய்திகளைத் தந்திருக்கிறார்கள். இந்தத் திட்டத்தின் நிதித் தேவையில் 75 சத விதத்தை இக்கழகமும் மற்ற 25 சத விதத்தை அரசும் ஏற்கும் என்று சொல்லியிருக்கிறார்கள். இந்தத் திட்டத்திலே செங்கற்பட்டு மாவட்டத்தில் 400 ஹெக்டேர் நிலப்பரப்பில் ரூபாய் 28.40 இலட்சங்கள் நிதி மதிப்பீட்டுடன் தென்னை மரங்களை வளர்க்கப் போவதாகச்

சொல்லியிருக்கிறார்கள். எந்த இடத்தில் என்று தெளிவாகக் குறிப்பு இருக்கிறதா என்றால், இல்லை. திருநெல்வேலி மாவட்டத்தில் வள்ளியூர் ஊராட்சி ஒன்றியத்தில் 200 ஹெக்டேர் பரப்பளவில் ரூபாய் 13.30 லட்சத்தில் நிதி மதிப்பீட்டுடன் மரங்களை வளர்ப்பதாக இருக்கிறது. அது எந்தெந்த இடங்களில் என்று தெரியவில்லை. சேலம் மாவட்டத்தில் ரூபாய் 24.38 லட்சம் செலவில் 200 ஹெக்டேர் நிலப்பரப்பில் தோப்பாகவும் மற்றும் 35,000 மரங்கள் வரப்பில் வளர்ப்பதாகவும் இருக்கிறது. அது எந்த இடங்களில் என்று தெரியவில்லை. இப்படிப் பல இடங்களிலே நிறைவேற்றப் போவதாகப் போட்டிருக்கிறார்கள். மார்ச் மாதம் வரையிலே அவர்களுக்குத் தெரியவில்லையா அல்லது தெரிந்தும் போடவில்லையா என்பது தெரியவில்லை. அதைப்பற்றித் தெளிவாக்க வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன். அது மட்டுமல்ல, இப்படி பொதுவாக மரங்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். அதுவும் என்ன ரக மரங்கள் என்று சொல்லவில்லை. வட ஆற்காடு மாவட்டத்தில் ரூபாய் 13.47 இலட்சம் நிதி மதிப்பீட்டில் எத்தனை மரங்கள் வளர்க்கப் போகிறார்கள், மீதி இடங்களில் என்ன மரங்கள் வளர்க்கப் போகிறார்கள் என்று சொல்லவில்லை. இந்த அரசுக்கு நான் ஒரு யோசனை சொல்ல விரும்புகிறேன். குஜராத், ஆந்திரா மாநிலங்களில் வேப்ப மரங்கள் வளர்க்கின்றார்கள். அதுபோல இந்த அரசும் வளர்க்க வேண்டும். அதனால் எதிர்காலத்திலே வேப்ப விதைகள் கிடைக்கும். அதிலிருந்து எண்ணெய் எடுக்கிறார்கள். அதற்கு அமெரிக்காவிலேகூட நல்ல கிராக்கி இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். டாடா நிறுவனங்களில் கூட இந்த வேப்ப எண்ணெயிலிருந்து சோப்பு செய்கிறார்கள். இன்னும் பலவிதமான பொருள்கள் செய்கிறார்கள். எனவே தான் வேப்ப மரம் வளர்ப்பதற்கு இந்த அரசு திட்டமிட வேண்டும். அதற்கு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் தமிழ் நாடு வேளாண் தொழிற் கழகம் என்ன என்ன செய்யப்போகின்றது என்று சொல்லியிருக்கிறார்கள். 'அந்தத் தமிழ்நாடு வேளாண்மை தொழிற் கழகம் அடுத்த சில ஆண்டுகளில் பல புதிய திட்டங்களைச் செயல்படுத்த திட்டமிட்டுள்ளது. அவைகள் கீழ்வருமாறு: (1) செங்கற்பட்டு, புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களில் தாவர எண்ணெய் உற்பத்தி தொழிற்சாலைகள், (2) எண்ணெய் வடித்தெடுக்கும் தொழிற்சாலைக்குரிய அனைத் தொழிற்பேட்டை, (3) டிராண்டர்' (பலதரப்பட்ட வேலைகளுக்கான) டிராக்டர் தயாரித்தல், (4) பூச்சிக்கொல்லி மருந்து மூலப் பொருள் தயாரிக்கும் ஆலை, (5) பஞ்சு அரவை ஆலை . . . .





என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இப்படி ஆரம்பத்திலேயே பல தொழில்கள் உண்டாக்கினால், உள்ளபடியே வேலையில்லாத் திண்டாட்டம் என்பது போய் விடும். அடுத்த ஆண்டு திட்டம் இருக்கிறது. அந்தத் திட்டங்களுக்கு எவ்வளவு பணம் ஒதுக்கப்படுகிறது, அந்தத் திட்டம் எப்போது திட்டவட்டமாக எடுத்துக்கொள்ளப்பட இருக்கிறது என்று பார்த்தால், அந்த விவரம் ஒன்றுமில்லை, திட்டங்களை எல்லாம் வைக்கிறார்கள். விவரங்களைக் கொடுக்கவில்லை. இந்தத் திட்டங்கள் எப்போது வரும், எவ்வளவு நிதி ஒதுக்கியிருக்கிறார்கள் என்ற விவரங்களைத் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

(பிற்பகல் 12-40)

அவசர காலச் சட்டம் அமுலில் இருந்தபோது, பணப் பயிர்களுக்கு வரி போட்டார்கள். ஆனால் அவசர காலச் சட்டம் அமுலில் இருந்தபோது, அதை அமுல் படுத்தவில்லை. இந்த அரசாங்கம் வந்த பிறகு அதை மாற்றுகிறோமென்று சொல்லி, கரும்பு, வாழை, மஞ்சள் பயிரிட்டால், வரி என்று போட்டிருக்கிறார்கள். இதுபற்றி வேளாண்மைத் துறை அமைச்சரவர்கள் நிதி அமைச்சரைக் கேட்க வேண்டுமென்று சொல்லாமல், விவசாயிகளைப் பாதிக்கும் வரிகளை ரத்து செய்யுங்கள் என்று கேட்டுக்கொள்ள வேண்டும். நேற்றைய தினம் பொதுப் பணித் துறை அமைச்சர் சட்டப் பேரவையில் பேசியதைப் பார்க்கிறபோது, மின்சாரக் கட்டணத்தில் மூன்று பைசா அதிகரிக்குமோ என்ற பயம் ஏற்பட்டிருக்கிறது. ஏற்கெனவே மின்சாரக் கட்டணத்தைக் குறைக்க வேண்டுமென்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். மத்திய அரசாங்கமும் வரியைக் கூட்டுகிறது. மாநில அரசு எவ்வளவு கூட்டும் என்பது தெரியாது. விவசாயிகளைப் பொறுத்தவரையில், மாநில அரசும், மத்திய அரசும் வரிகளைப் போடுவதில்லை என்ற நிலைக்கு வர வேண்டும். நெல்லுக்குக் கூடுதல் விலை கொடுத்தோமென்று சொன்னார்கள். நெல்லுக்கு 90 ரூபாய் என்று விலை நிர்ணயம் செய்தார்கள். ஆனால் தமிழ் நாட்டில் எந்த இடத்திலும் கொள் முதல் செய்யவில்லை. உற்பத்தி செய்யும் நெல்லை, விவசாயி விரும்புகிற நேரத்திலே கொள்முதல் செய்ய வேண்டுமென்று அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். வட ஆற்காடு மாவட்டத்தில் மேலூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை, விவசாயிகளிடத்திலே, அவர்கள் முதலில் பதிவு செய்தபோது, டன்னுக்கு 127 ரூபாய் தருகிறோமென்று சொல்லி பில் போட்டுக் கொடுக்கும்போது 115 ரூபாய் கொடுக்கிறார்கள். அவர்களை உற்சாகப்படுத்த வேண்டுமென்பதற்காக ஏக்கருக்கு 400 ரூபாய் சப்சிடி கொடுக்கிறோமென்றும், 2,500 விவசாயிகளுக்குத்தான் கொடுப்போமென்றும், மீதமுள்ள 1,000 விவசாயிகளுக்குக் கொடுக்க மாட்டோமென்றும் சொல்லும்

நிலையிருக்கிறது. இதையெல்லாம் ஆராய்ந்து பார்த்து, என் இப்படிப்பட்ட குழப்பங்கள் ஏறபடுகின்றன என்பதைக் கண்டறிந்து, அவற்றை நீக்கிட மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரவர்கள் தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இந்தத் துறை வளர வேண்டிய துறை. இந்தத் துறையை உற்சாகப்படுத்த எதிர்க் கட்சிகள் எப்போதும் துணையாக இருக்கு மென்று கூறி, அமைகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : இரண்டு அமைச்சர்கள் பேச வேண்டும். அவர்கள் பேசுவதற்கு எதிர்க் கட்சித் துணைத் தலைவர் துணையாக இருக்க வேண்டும்.

திரு. கோ. சி. மணி : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே, இன்றைய தினம் தமிழ்நாட்டில் ஆவலோடு எதிர்பார்க்கிற இரண்டு இலாக் காக்களின் கொள்கை விளக்கக் குறிப்புகளின்மீது நாம் விவாதித்துக்கொண் டிருக்கிறோம். ஒன்று நீர்ப்பாசனத் துறை; மற்றொன்று வேளாண்மைத் துறை. என்னைப் பொறுத்த வரையில், இந்த நேரத்தில் நான் தங்கள் மூலமாக அரசுக்கு ஒன்றைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். வேளாண்மைத் துறை, பொதுப் பணித்துறை, கூட்டுறவுத் துறை ஆகிய மூன்று துறைகளின் கொள்கை விளக்கக் குறிப்பின்மீது விவாதிக்க இருக்கிறோம். அவற்றின்மீது நம் அவையில் வோட் எடுப்பதில்லை. எனவே, எதிர்காலத்திலே இந்த மூன்று துறைகளையும் ஒன்றாகச் சேர்த்து, இரண்டு அல்லது மூன்று நாட்கள் ஒதுக்கி, இதை ஒரு முக்கியமான பிரச்சினையாக மேற்கொண்டு, ஒவ்வொரு உறுப்பின ருக்கும் பேசுவதற்கும் போதிய வாய்ப்பு அளித்தால், அது பயனளிக்குமென்று கருதுகிறேன். காரணம், இந்த மூன்று இலாக்காக்களும் எப்போது சேர்ந்து, தொடர்ந்து பணியாற்றுகின்றனவோ அப்போதுதான் அது நல்ல பலனை அளிக்க முடியுமென்று, என்னைப் பொறுத்த வரையில் பல நேரங்களில் சொல்லி யிருக்கிறேன். இந்த மூன்று இலாக்காக்களும் இணைந்து பணியாற்றுகின்றனவா என்றால், இல்லை. பல நேரங்களில் குறைபாடுகள் காணப்படுகின்றன. நடுவில் வருவாய்த்துறை இருக்கிறது. இந்த நேரத்தில் ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நீர்ப்பாசனத் துறையைப் பொறுத்த மட்டில், இயற்கைக் கோளாறுகள், தாமாக ஏற்படுகிற கோளாறுகள், விவசாயிகளின் கோளாறுகள் இவ்வளவும் சேர்ந்து சில நேரங்களில் மொத்த உரு எடுத்து, பயங்கரமான நிலையை ஏற்படுத்துகின்றன. தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில், விவசாயிகளாக இருக்கிற நாங்கள் கொஞ்சம் சிக்கனத்தைக் கையாளவில்லை என்பதை நானே ஏற்றுக்கொள்கிறேன். அந்த அளவுக்கு நாங்கள் பூரணத் துவம் பெறவில்லை. கிடைக்கிற தண்ணீரை வைத்துக்கொண்டு, காலத்தில் விவசாயம் செய்யும் அளவுக்கு நாங்கள் இன்னும் வரவில்லை. அதை நான்



மறுக்கவில்லை. அதே போல அந்தத் துறையைச் சேர்ந்தவர்கள் அறிவிப்புகளைத் தக்க நேரத்தில் தருகிறார்களா என்றால், இல்லை. இந்த ஆண்டிலேகூட இந்த மன்றத்திலே நான் ஒன்றைக் குறிப்பிட்டுச் சொன்னேன். இருக்கிற மேட்டூர் அணைத் தண்ணீரைத் திறந்துவிடுங்கள்; இதைவிட குறைவாக இருந்தபோது, ஏற்கனவே இருந்த அரசு திறந்து விட்டிருக்கிறது; இன்னும் காலம் தாழ்த்தினால், பெருமழை வந்து குறுவை பாதிக்கும் சூழ்நிலை ஏற்படும் என்று சொன்னேன். தஞ்சை மாவட்டத்தில் குறுவைதான் நல்லமுறையில் எதிர்பார்க்கும் சாகுபடியாக இருக்கிறது; அதில் கிடைக்கும் பலனிலிருந்து மற்ற மாநிலங்களுக்குக் கொடுக்கும் நிலைமைகூட இருக்கிறது என்று சொன்னேன். அப்போதுகூட காலம் தாழ்த்தினார்கள். கர்நாடக சர்க்காரிலிருந்து தண்ணீரைக் கேட்டுப் பெற்றுத் தருகிறோமென்று சொன்னார்கள். போனார்கள், அரை நாளில் திரும்பி வந்து தண்ணீர் கிடைத்துவிட்டதென்று பத்திரிக்கையில் செய்தி கொடுத்தார்கள். தண்ணீர் கிடைக்குமென்று சொன்னார்கள். எவ்வளவு கிடைக்கும், எதிலிருந்து கிடைக்கும் என்று கேட்டதற்கு, இதிலிருந்து கிடைக்குமென்று சொன்னார்கள். மன்றத்திலே வாக்குறுதி தரப்பட்டது. ஆனால் ஆற்றிலே தண்ணீர் வரவில்லை. சிறிதுநாள் கழித்து மழை பெய்தது. எனவே இவர்கள் சொன்ன தண்ணீர் வந்ததாக நம்ப முடியவில்லை. மழை பெய்த பிறகுதான் தண்ணீர் வருகிறது. தண்ணீர் தேவையில்லாத நேரத்தில் தண்ணீர் வருகிறது. ஆரம்பத்திலே பருவநிலை கோளாறு அடைந்ததால், பிற்பகுதியில் மழை பெய்து, குறுவை சாகுபடி கணிசமான அளவுக்குக் கிடைத்திருக்கிற தென்று சொல்லப்பட்டிருக்கிறது. குறுவை சாகுபடி அதிகம். அதிலே விளைவு காணப்பட்டது அதிகம். அதில் எந்தவிதமான தவறும் இல்லை. அந்தப் பலன் விவசாயிகளுக்குக் கிட்டிற்று? கிடைக்கிற சூழ்நிலை இருந்ததா? நட்டபிறகு, பருவமடைந்து, விளைந்திருக்கிற நெல்லின் மகசூலைப் பார்த்து, மொத்தம் கிட்டிவிட்டது என்று சொன்னால், நம்மை நாமே ஏமாற்றிக்கொள்வதாகும். அறுவடைக்குத் தயாராக இருந்தது. சில இடங்களில் அறுவடையே ஆகவில்லை. சில இடங்களில் அறுவடையாகி, 30 மூட்டை கண்டுமுதல் ஆகிற இடத்தில் 10 மூட்டை கண்டுமுதல் ஆகியிருக் கிறது. இது இடையில் ஏற்பட்ட தொல்லை. இதை நான் மறுக்கவில்லை, மறைக்கவில்லை. வெள்ளம், புயலால் ஏற்பட்டது. அதற்காக இந்த மன்றத்தில் அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் சரியாக நிறைவேற்றப்பட்டனவா என்றால், இல்லை. இந்த ஆண்டு மட்டும் குறுவை சாகுபடி பரிபூரணத்துவம் பெற்றிருந்தால், என்னைவிட மகிழ்ச்சி அடைபவர்கள் யாரும் இருக்க முடியாது. ஏறத்தாழ திட்டங்கள் அறிவிக்கப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள்.

[திரு. கோ. சி. மணி] [1978 மார்ச் 17

பாசனப் பரப்புத் முறையில் சிறிய, பெரிய விவசாயிகளுக்குப் பூச்சிக்கொல்லி மருந்து 25 சதவிகித மானியத்தில் கொடுக்கப்படுமென்று சொல்லப்பட்டது. எத்தனை பேருக்குக் கொடுக்கப்பட்டது? எவ்வளவு கொடுக்கப்பட்டது? ஏன் இதில் இல்லை? என்ன காரணம்? இதனால் மாவட்டங்களில் எத்தனை பேர்கள் பயன்பெற்றனர்? மொத்தம் கொடுத்த அளவு எவ்வளவு? ஏன் இதில் குறிப்பிடவில்லை? அங்கே கொடுத்திருக்கிறபோது, கொடுத்து முடிந்துவிட்ட போது, இந்த அறிக்கையை அதற்குப் பிறகு வைக்கிறபோது, ஏன் இதில் அந்த விவரங்கள் இல்லை? எத்தனை பேருக்கு, எத்தனை ரூபாய்க்கு, எவ்வளவு கொடுத்தீர்கள்? எத்தனை பேர்கள் அதனால் பயன் அடைந்தது என்று ஏன் இந்த அறிக்கையில் சொல்லவில்லை? விளக்கக் குறிப்புதானே இது. இதிலே அதைத்தானே சொல்லியிருக்க வேண்டும். எதையெல்லாமோ சொன்னீர்கள். அறிவிப்புகளைத்தானே சொல்லியிருக்கிறீர்கள். எத்தனை பேர்கள் பயன் பெற்றார்கள், எவ்வளவு பேர்கள் பயன்பெற்றனர் என்ற புள்ளி விவரம் இருக்கிறதா? எவ்வளவு பூச்சி மருந்து, உரம் கொடுக்கப்பட்டிருக்கிறது? விதை கொடுக்கப்பட்டதா? விதை கொடுக்கும் சூழ்நிலை உங்களிடம் இல்லை. யாராவது விதை வாங்கியிருக்கிறார்களா? எத்தனை பேர்கள் என்ற புள்ளி விவரம் ஏன் கொடுக்கவில்லை? கொடுத்திருக்கிறோம் இத்தனை பேருக்கு என்று ஏன் சொல்லவில்லை? நாங்கள் கொடுக்கவில்லை என்று சொல்கிறோம். கொடுக்கத் திட்டம் இருக்கிறதென்று சொல்லுகிறீர்கள். திட்டம் திட்டப் பட்ட அடிப்படையிலே பயன் பெற்றவர்கள் எத்தனை பேர்? மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரவர்களிடம் விளக்கம் எதிர்பார்க்கிறேன். கொடுத்துள்ள குறிப்பில் இல்லையென்றாலும், அவர்கள் தெளிவாகப் பதில் சொல்லும்போது, எத்தனை பேருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது; எவ்வளவு பேர்கள் பயன்பெற்றனர் என்ற புள்ளி விவரத்தை வைத்தால், நான்கூட திருப்தி அடையலாம். நமக்குத் தெரியாத அளவுக்கு இவ்வளவு பேர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறதென்று பெருமைப் படலாம். திட்டங்களைப் போடும்போது, அந்தத் திட்டங்களால் பயன் கிடைக்குமென்ற எண்ணத்தோடு போடுகிறோம். அதில் வேறுபாடு இல்லை. அந்தத் திட்டங்களை நிறைவேற்றும்போது, இந்தத் துறையில் நிறைவேற்ற முடியாமல் போய்விட்ட

[பிற்பகல் 12.50]

தென்ற உண்மையை ஒத்துக்கொள்ளத் தயங்குவதன் காரணம் என்ன? ஏன் அப்படித் தயங்க வேண்டும்? இதில் போட்டிருக்கிற திட்டங்கள் முடிந்து போய்விட்டன. அவைகள் நிறைவேறிவிட்டன. ஆனால் பலன் கிடைத் திருக்கிறதா, சொல்லுங்கள்.



1978 மார்ச் 17] [திரு. கோ. சி. மணி]

சிறு நீர்ப் பாசனத் திட்டத்திற்காக 24 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம் என்று தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். நான் அதற்காக மகிழ்ச்சியடைகிறேன். அது போதுமானதுதான். அத்தொகை முழுவதையும் இந்த வருடமே செலவு செய்ய முடியுமா? தஞ்சை மாவட்டத்தில் ஐந்து திங்களுக்குள் வேலையை ஆரம்பித்து முடிக்க வேண்டும். இதுவரையில் இலாக்கா பூர்வமாக இருந்தது, இதற்கு மேல் கமிட்டிக்கும், அரசியல் கட்சி என்ற பெயரில் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களுடைய கமிட்டிக்கும் போக வேண்டும். அந்தக் கமிட்டியில் உள்ளவர்கள்தான் இன்னின்ன வேலைகளை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று முடிவு செய்ய வேண்டும். அந்தக் கமிட்டியிலே அங்கம் பெற்றவர்கள் தனக்குத் தெரியாமல் எதுவும் நடக்கக் கூடாது என்று சொல்லுகிறார்கள். நாங்கள் பார்த்துத்தான் நடக்க வேண்டுமென்று சொல்லுகிறார்கள். எங்களுக்குத் திருப்தி அளித்தால்தான், நாங்கள் ஒத்துக்கொள்ளுவோம் என்று அவர்கள் சொல்லுகிறார்கள். எக்சிக்யூட்டிவ் என்ஜினியர், சூப்பரின்டென்டிங் என்ஜினியர் ஆகியவர்கள் தவறு செய்தால், அரசாங்கத்தில் புகார் கொடுக்கலாம். சாதாரண ஒரு வேலையை ஆரம்பிக்கும்போதே இவ்வளவு சங்கடங்கள். ஒரு பத்தாயிரம் ரூபாய்க்கான வேலையைத் தொடங்க வேண்டுமென்றால், அதிகாரிகள் 'நீங்கள் இன்னாரைப் போய்ப் பாருங்கள்' என்று சொல்லுகிறார்கள். ஒரு வாய்க்கால் கட்ட வேண்டும். ஒரு புதிய திட்டத்தைப் போட வேண்டும் என்று ஒரு மகஜரைக் கொடுத்தால், அதற்காக எஸ்டிமேட் தயார் செய்து அதை காண்ட்ராக்ட் கொடுப்பது என்பது இல்லை. வேலை தொடங்க வேண்டுமென்றாலே, நீங்கள் அவரைப் போய் பாருங்கள்' என்று சொல்லுகிறார்கள். அடுத்து யாரிடத்திலே காண்ட்ராக்ட் கொடுப்பது? அந்தக் கமிட்டியார் சொல்லுபவரிடத்திலேதான் காண்ட்ராக்டைக் கொடுக்க வேண்டும். இல்லாவிட்டால் சங்கடம் வரும் என்று சொல்லுகிறார்கள். சரி, அவர்களாவது காண்ட்ராக்ட் எடுக்கிறார்களா என்றால், அதுவுமில்லை. அவர்கள் முதலிலே எடுப்பார்கள், பிறகு அதை வேறு ஒருவரிடத்திலே கொடுப்பார்கள். இது போன்ற நிறைய சிக்கல்கள் இருக்கின்றன. இதெல்லாம் தேவையில்லாதது. இதனால் என்ன பலன்? எங்கள் அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்களை விட்டு விட்டார்கள் என்றோ, எதிர்க் கட்சியைச் சேந்தவர்களை அந்தக் கமிட்டியில் போடவில்லையென்றோ நான் சொல்லவில்லை. இதெல்லாம் தேவைதானா என்று கேட்கிறேன். இதையெல்லாம் சொன்னால், நான் சொல்லுகிறேன் என்று மறுத்துவிடுவார்களோ என்ற அச்சம் எனக்குண்டு. நான் சொல்லுவதற்காக அதை மறுக்க வேண்டாம்.

நீர்ப்பாசனத் துறையை வகிக்கிற அமைச்சர் அவர்களுக்கு நல்ல அனுபவம் இருக்கிறது. நல்ல பலன் ஏற்பட வேண்டுமென்று அவரிடத்திலே நான் சொல்லுகிறேன். அவருக்குப் புரியும். ஆனால் அரசியலில் கட்டுப்பட்டிருக்கக் கூடிய சூழ்நிலைக்கு ஆளாகக் கூடாது. இது அவருக்குப் புரிகிறது. நான் இதைப்பற்றி அதிகமாகச் சொல்லவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்களாவது இதைச் சுத்தப்படுத்தினால், நல்லதாக இருக்குமென்று சொல்லிக்கொள்ளுகிறேன். கொள்கையைத் திட்டவட்டமாக அறிவிக்காத காரணத்தால், பல வேலைகள் தடைப்பட்டிருக்கின்றன. சிறு சிறு வேலைகள் கூட பாதிக்கப்பட்டிருக்கின்றன. இப்போது செய்யவில்லையென்றால், மழைத் தண்ணீர் வந்த பிறகு, வேலையைச் செய்ய முடியாது. முறையான காண்ட்ராக்ட் எடுப்பவர்கள் கூட அஞ்சுகிறார்கள். இதற்குக் காரணம், முதலில் அவர்கள் எக்சிகியூட்டிவ் என்ஜினியரைப் பார்க்க வேண்டும், பிறகு அசிஸ்டென்ட் என்ஜினியரைப் பார்க்க வேண்டும். சூப்பர்வைசரைப் பார்க்க வேண்டும், பிறகு எம்.எல்.ஏ.வைப் பார்க்க வேண்டும். அதையெல்லாம் தாண்டி கட்சியில் இருக்கிற கமிட்டியில் உள்ளவர்களைப் பார்க்க வேண்டும். இவ்வளவு சங்கடங்களை ஒப்பந்தக்காரர்கள் சந்திக்க வேண்டியிருக்கிறது. ஆகவே போடக் கூடிய திட்டங்கள் ஏட்டில்தான் இருக்குமே தவிர, நாட்டிலே சரிவரப் பணிகளைச் செய்ய முடிவதில்லை.

இன்னும் கூட ஆற்றுப் பகுதிகளில் ஆக்கிரமிப்புக்கள் நடந்து கொண்டிருக்கின்றன என்று சொன்னேன். ஏற்கனவே ஒரு முறை ஆக்கிரமிப்பாளர்களை வெளியேற்ற அதற்குரிய அதிகாரங்களை பொதுப்பணித் துறையில் உள்ளவர்களுக்குக் கொடுக்கலாம் என்று சொன்னேன். சட்டரீதியாக பி.டபிள்யூ.டி.க்குச் சொந்தமான நிலங்களில் செய்துள்ள ஆக்கிரமிப்புகளை வெளியேற்ற ரெவின்யூ இலாக்காவினர் பி.மெமோ கொடுத்து வெளியேற்ற வாய்ப்பளிப்பது தேவையில்லை. அங்கே இருக்கிற மாவட்ட வளர்ச்சி மன்றத்திலே இது குறித்து ஒரு தீர்மானம் போட்டு, அரசாங்கத்திற்கு அனுப்பியதாகவும், அதை அரசாங்கம் ஏற்றுக்கொண்டு ஒரு அரசாணையைக் கூட போட்டிருப்பதாகவும் கேள்விப்பட்டேன். நான் நேராகப் பார்க்கவில்லை. ஆனால் திரும்பவும் ரெவின்யூ இலாக்காவிற்கே மாற்றிவிட்டதாகக் கேள்விப்படுகிறேன். அதைக் காலி செய்வதற்கு அரசாங்கம் தயாராக இருந்தும், பி.டபிள்யூ.டி. தயாராக இருந்தும், அதற்காகத் தொகையை ஒதுக்கியும்கூட, அங்குள்ள கர்ணத்தினுடைய ஒத்துழைப்பு இல்லாத காரணத்தால், ஒதுக்கப்பட்ட தொகை செலவழிக்கப்பட முடியாமல் இருக்கின்றது. இது போன்று எத்தனை ஊர்களில் நடந்திருக்கின்றது? இது ஏன்? ஒத்துழைப்பு இல்லாத காரணத்தால்.



ஆக்கிரமிப்புகளைக் காலி செய்ய முடியாமல் சவுக்குத் தோப்புகளாகவும். மிளகாய்க் கொல்லையாகவும், வாழைத் தோப்பாகவும் மாறியிருக்கின்றன. ஆறு என்று ஒன்று இருக்கிறது. வீரச்சோழனாறு, மஞ்சளாறு, வெட்டாறு, வெண்ணாறு என்று இருக்கிறது. ஆனால் அங்கே உள்ளபடியே பார்க்கும்போது, மிளகாய்க் கொல்லையாகவும், வாழைத் தோப்பாகவும் காட்சியளிக்கிறது. ஆக்கிரமிப்பைக் காலி செய்வதற்காக ஒதுக்கிய தொகை செலவு செய்யப்பட்டிருக்கிறதா? ரெவின்யூ இலாக்கா ஒத்துழைப்பு இல்லாமல் காலி செய்ய முடியாமல் இருக்கிறது. சில இடங்களில் அரசியல் தலையீடு காரணமாகவும் ஆக்கிரமிப்புக்களைக் காலி பண்ண முடியாமல் போகிறது. இப்படிப்பட்ட நேரத்தில் நான் சொல்லும் வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டு ஒரு புள்ளி விவரத்தைத் தயாரியுங்கள். ஒவ்வொரு மாவட்டத்திலும், எத்தனை ஆறுகள், ஏரிகள், குளங்கள், வாய்க்கால்கள், ஏ-கிளாஸ் சேனல்கள், பி-கிளாஸ் சேனல்கள் இருக்கின்றன என்றும், அதில் எந்தெந்த இடங்களில் ஆக்கிரமிப்புச் செய்யப்பட்டிருக்கின்றது என்றும் புள்ளி விவரத்தைத் தயார் செய்யுங்கள். யாரிடமும் சொல்லாமல் அரசாங்கமே இந்தப் புள்ளிவிவரத்தைத் தயார் செய்து அவர்களைக் காலி செய்ய எத்தனை ரூபாய் ஆகும், எத்தனை வருடங்களில் அவர்களை அகற்றி விடலாம் என்ற விவரங்களைத் தயாரித்தால், கிடைக்கிற தண்ணீரை வைத்துக்கொண்டு சிக்கனமாகச் செலவழிக்க வாய்ப்புக் கிடைக்கும் அரசாங்கத்தைப் பொறுத்த வரையில். அரசாங்கம் தண்ணீர் இல்லையென்று சொல்லக் கூடாது. தண்ணீர் கொடுப்பதாகச் சொல்ல வேண்டும். இருக்கிற தண்ணீரை எப்படியாவது உபயோகத்திற்குக் கொண்டுவர வேண்டும்.

வெள்ளம் வந்த பிறகு உடைப்பு ஏற்பட்டது. 'கிளிக்கூட்டிலே ஏற்பட்ட உடைப்பு தஞ்சை சாகுபடியை எப்படிப் பாதிக்கும்' என்று சில அமைச்சர்கள் பேசியதாகக் கேள்விப்பட்டேன். நான் சொல்லுவது, விஞ்ஞான வளர்ச்சி பெற்ற இந்த நேரத்தில் உடைப்பை அடைக்க சவுக்கு மரம், சிமெண்ட், மணல் மூட்டை, ஆகியவைகளை வைத்துக் கொண்டு அடைக்கிறார்களே, அது எப்படி முடியும்? அவற்றை அடைக்க எவ்வளவு நாட்கள் ஆகும்? 33 நாட்கள் ஆகியிருக்கின்றன. போர்க் காலப் பணியாக அடைக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். 30 நாட்களில் அடைப்பது போர்க்காலப் பணியா? வெள்ளம் தேங்கி, அதற்குப் பிறகு நடவு நட்டு, சம்பா சாகுபடிக்கு வரும் போது தண்ணீர் வராமல் வீணாகிப் போய்விட்டது. ஒரு நேரத்தில் தண்ணீர் மயமாக இருந்தது. ஒரு நேரத்தில் நீர் கிடைக்காமல் பயிர் வீணாகிறது; ஒரு நேரத்தில் நீர் அதிகமாகி பயிர் வீணாகிறது. சர்க்கார் இதிலெல்லாம் அக்கறை எடுத்துக் கொண்டு கூடுமான வரையில் விரைவாக சாகுபடிக்கு நீர் கொடுக்க

[திரு. கோ. சி. மணி] [1978 மார்ச் 17

காலத்திற்கேற்றவாறு புதிய நடவடிக்கை எடுத்தால் என்ன? மறுபடியும், ஆரம்பக் காலத்திலே செய்தார்களே அதைப் போலவே சவுக்கு மரத்தையும், சாக்கு மூட்டையையும் வைத்து அதே கதையைத்தான் இன்றும் செய்து வருகிறார்கள். இதுபோன்று செய்வதை விஞ்ஞான முறையில் செய்ய முடியாதா? பெரிய டின் ஷீட் வந்திருக்கிறது, சீக்கிரத்தில் அடைத்துவிடு வார்கள் என்று சொன்னார்கள். 15 நாள் கழித்துப் பார்த்தேன், வழக்கம் போல் மூன்று நான்கு புல்டோசர்கள்தான் வந்திருந்தன. வழக்கம் போல் சவுக்கு மரத்தையும், சாக்கு மூட்டையையும்தான் பயன்படுத்தினார்கள்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** ஏற்கெனவே 15 நிமிடம் ஆகிறது. பத்து நிமிடம்தான் என்று ஒப்பந்தம்.

**திரு. கோ. சி. மணி:** இன்னொரு ஐந்து நிமிடம். ஒரே ஒரு விஷயத்தை மட்டும் சொல்லிக்கொள்ளுகிறேன். பாசன ஆயக்கட்டுகளைப்பற்றிச் சொல்லி விடுகிறேன். வரிகள் போடுவதற்கும், வரிகளை நீக்குவதற்கும், அவற்றை ஒத்தி வைப்பதற்கும், பணிகள் நடந்திருப்பதாக விவசாயிகள் ஏற்றுக்கொள்வதற்கும் தொடர்பேயில்லை. குறிப்பாக, தென்னாற்காடு மாவட்டத்தில் விருத்தாசலம் வட்டத்தில், தொழுதூர் என்ற ஊர். அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். அங்கே 23 வருடங்களுக்கு முன் 1955 ஆம் ஆண்டில் ஒரு ஏரி கட்டப்பட்டது. ஏறத்தாழ 28 ஆயிரம் ஏக்கருக்குப் பாசனம் அளிக்கக் கூடியது என்று சொல்லப் பட்டிருக்கிறது. ஆனால் இது வரையில் ஒரு வருடம் கூட தூர் எடுக்கப் படவில்லை என்று சொல்லப்படுகிறது. அதுபற்றி என்னிடம் மனுக் கொடுத்திருக் கிறார்கள். அந்தத் தகவலின்படிதான் நான் சொல்லுகிறேன். நான் பயணம் போனபோது கேட்ட தகவலைத்தான் சொல்லுகிறேன். 1923-ல் கட்டப்பட்ட அந்த ப்ராஜெக்ட் ஏரியில் இதுவரையில் தூர் எடுக்கப்படவில்லையென்று சொல்லுகிறார்கள். இடையில் தூர் எடுத்திருக்கலாம். ஆனால் அது தெரியவில்லை. தேவையான அளவுக்கு இல்லையென்று சொல்லுகிறார்கள். தூர் எடுத்ததாக யாரும் தமக்கு தெரியவில்லை என்று சொல்லுகிறார்கள். அதில் பாதிதான் விளைகிறது. ஆனால் இந்தப் பசலிக்கு அதிகமான நிலத் தீர்வையை ரெவின்யூ இலாக்காவினர் அறிவித்திருக்கிறார்கள் என்று சொல்லுகிறார்கள். அதைத்

(பிற்பகல் 1-00)

தங்கள் மூலமாக பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கு நினைவூட்டு கிறேன். இந்த ஆண்டு நீர்வரியை உயர்த்துவது கொடுமையானதாகும். அப்படி உயர்த்தப்பட திட்டமிருக்குமேயானால், இந்த வருடம் ரத்து செய்து, புதிதாகப்



1978 மார்ச் 17] [திரு. கோ. சி. மணி]

போடுகிற வரி இல்லாமல் இருக்க நடவடிக்கைகளை நமது பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் எடுக்க வேண்டுமென்று கேட்டு அமைகிறேன். வணக்கம்.

*** மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** மேலவைத் துணைத் தலைவரவர்களே, இன்று வேளாண்மையையும் பாசனத்தையும் ஒன்றாக்கி, 'நீரின்றி அமையாது உலகு' என்று சொல்வதற்கு இணங்கவும், 'வரப்பு உயர நீர் உயரும், நீர் உயர நெல் உயரும், நெல் உயர குடி உயரும், குடி உயர கோல் உயரும்' என்று சொல்வதற்கு இணங்கவும், வேளாண்மையையும், பாசனத்தையும் ஒன்றாக்கி, இங்கே மேலவையிலே 8 உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்திருக் கிறார்கள். தங்களுடைய மேலான கருத்துக்களை இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொல்கிற நேரத்தில், ஏதோ விவரம் புரியாதவர்கள் இந்த அமைச்சரவையில் வந்து விட்டார்களோ என்று எண்ணுகிற அளவுக்கு மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. சி. மணி அவர்கள் ஒரு கருத்தைத் தெரிவித்தார்கள். கிளிக்கூண்டு பகுதியில் உடைப்பு எடுத்ததற்கும் தஞ்சை யில் தண்ணீர் வருவதற்கும் என்ன சம்பந்தம் என்ற கருத்தை விவரமாக எடுத்துச் சொன்னார்கள்.

**திரு. கோ. சி. மணி:** துணைத் தலைவரவர்களே, கேள்விப்பட்டேன், எந்த அளவுக்கு உண்மையோ, தவறோ நான் அறியேன் என்று தான் சொன்னேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. சி. மணிக்குத் தெரியுமோ, தெரியாதோ, கலப்பையால் உழுது, நெல்லை விதைத் தோம் என்றால், தண்ணீர் பாய்ச்சாமல் கூட அறுவடை செய்ய முடியும் என்று சொன்னவர்கள் பழைய அரசில் இருந்தார்கள். அப்படிப்பட்டவர்கள் பழைய அரசில் இருந்தார்கள் என்று சொல்லும்போது, உண்மையிலேயே இங்கே திரு. கோ. சி. மணிக்குத் தெரிவித்துக் கொள்வேன், கிளிக்கூண்டு பகுதிக்கும் தஞ்சைக்கும் என்ன சம்பந்தம் இருக்கிறது என்பது விவசாயத்தில் ஈடுபட்டிருக் கின்ற என்னைப் போன்றவர்களுக்கு நன்றாகத் தெரியும். அது மட்டுமல்ல. புயலும் வெள்ளமும் ஏற்பட்ட நேரத்தில் முதன் முதலாக, அமைச்சர் பொறுப்பை ஏற்றுக் கொண்டவன் என்ற முறையிலும் அங்கே இருக்கக்கூடிய விவசாயப் பெருங்குடி மக்களின் குறைகளைக் கேட்கவும், கிளிக்கூண்டு பகுதிக்கு முதன்முதலாகச் சென்று அங்கே வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு முதலுதவி அளித்தவன் நான் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் கிளிக்கூண்டு பகுதி

[திரு. ப. குழந்தைவேலு] [1978 மார்ச் 17

அமைச்சருக்குத் தெரியாத பகுதி என்பது போலவும், அங்கேயிருந்து தண்ணீர் எங்கே போகிறது என்று அமைச்சருக்குத் தெரியாதது போலவும் மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. சி. மணி அவர்கள் இங்கே சொல்லியிருக் கிறார்கள்.

திரு. கோ. சி. மணி : துணைத் தலைவரவர்களே, நான் சொன்னதாக அமைச்சர் அவர்கள் வலியுறுத்துகிறார். நான் அப்படிச் சொல்லவில்லை அவர்கள் சொன்னார்கள், அது எந்த அளவுக்கு உண்மையோ, தவறோ தெரியாது என்று தான் சொன்னேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மேலவைத் துணைத் தலைவரவர்களே ஆனால் பழைய அரசுகள் எவ்வளவு தூரம் விவசாயிகளுடைய துன்பத்தையும், துயரத்தையும் நீக்காமல், கஷ்ட நஷ்டத்தைப் போக்காமல், படுகிற இன்னல் களையும், இடர்பாடுகளையும் நோக்காமல் இருந்தார்களோ, அந்த இன்னல் களையும், இடர்பாடுகளையும் நீக்கி, கஷ்டத்தைப் போக்கி, இந்த அரசு பொறுப்பு ஏற்றுக்கொண்ட கடந்த 8 மாத காலமாக வேளாண்மைத் துறையில் கவனத்தைச் செலுத்தி, அதன் மூலமாக இன்று விளைச்சலைப் பெருக்கிக் காட்டி யிருக்கிறது. குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால், நெல் உற்பத்தியில் இன்று தமிழகம் தன்னிகர் இல்லாத மாநிலமாக விளங்குகிறது. கடந்த ஆண்டு 1976-77-ல் 53 லட்சம் டன் அரிசி உற்பத்தி என்றால், இன்று 1977-78-ல் 62 லட்சம் டன் அரிசியாக உற்பத்தியைப் பெருக்கிக் காட்டியிருக்கிறோம். இதைச் சொல்லுகிற நேரத்தில், புயலும், வெள்ளமும் அடித்து எங்கே கோர விபத்து ஏற்பட்டு, அதனால் விவசாயப் பெருங்குடி மக்கள் பாதிக்கப்பட்டுவிடுவார் களோ என்ற நிலைமையிலும் கூட இப்படிப்பட்ட ஒரு நல்ல விளைச்சலை இந்தத் துறை செய்து காட்டி இருக்கிறது என்று சொல்வதில் நான் மகிழ்ச்சி அடை கிறேன். அதே நேரத்தில் பல்வேறு திட்டங்களை வேளாண்மைத் துறை மூலமாக நடப்பு ஆண்டுக்குக் கொடுத்திருக்கிறோம். கடந்த 8 மாத காலமாக இந்த அரசு என்ன சாதித்துவிட்டது என்று சொல்லி, பழைய அரசில் இருந்த வர்களும் மாற்றுக் கட்சித் தோழர்களும் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் அதிகமாக வேளாண்மைத் துறையைப்பற்றிக் குறைபட்டுக் கொள்ளாவிட்டாலும், இந்த நேரத்தில் சாதனைகள் சிலவற்றைச் சொல்ல விரும்புகிறேன்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் கடந்த 8 மாத காலமாக இந்த அரசு என்ன சாதித்து விட்டது என்று யாரும் கேட்கவில்லை. விவசாயத்தைப் பொறுத்த வரையில், இந்த பிரச்சினை உருவாகக் கூடாது என்பதற்காக முன்பிருந்த அரசாங்கம் . . .



1978 மார்ச் 17]

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : உட்காருங்கள்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மேலவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. சி. மணி அவர்கள் நல்ல விவசாயி என்பது எனக்கு நன்றாகத் தெரியும். அவர் எப்படிப்பட்ட விவசாயம் செய்கிறார் என்பதும் எனக்கு நன்றாகத் தெரியும். ஆனாலும் அவர் விவசாயி, விவசாயி என்று விவசாயிக்காகப் பரிந்து பேசிக்கொண்டிருக்கும்போது, எனக்கு வருகிற எண்ணம் எல்லாம் உண்மையிலேயே அவர் எப்படியோ இந்த அமைச்சரவையில் பொறுப்பு ஏற்காமல் இருந்து விட்டாரே என்பதுதான். அந்த ஏக்கப் பெருமூச்சுத்தான் அடிக்கடி எனக்கு வந்துகொண்டிருக்கிறது. ஏனென்றால், அவர் செய்கின்ற விவசாயத்தைப்பற்றி அதிகமாக இந்த நேரத்தில் நான் சொல்லாவிட்டாலும், இந்த நேரத்தில் இந்த ஆட்சி செய்த சில சாதனைகளைச் சொல்லும்போது அவர்கள் ஏற்றுக்கொள்வார்கள், பாராட்டு வார்கள் என்ற எண்ணத்துடன்தான் இந்தச் சாதனைகளை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

வேளாண்மைத் துறைக்கு ஒரு சவாலாக, இயற்கை தனது சீற்றத்தால் தமிழகத்தினுடைய விவசாயிகளுக்கு சேதத்தை விளைவித்ததோடு, உயிருக்கும் உடமைக்கும் பெரும் தீங்கை விளைவித்தது. அப்படியிருந்தும் அயரா நெஞ்சம் கொண்ட நமது விவசாயப் பெருங்குடி மக்கள் உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்ற உயரிய எண்ணத்தோடு உழைத்ததன் பயனாக கடந்த ஆண்டு 53 லட்சம் டன் அரிசி உற்பத்தியாகி இருந்ததை இந்த ஆண்டு 62 லட்சம் டன்னாக அதிகரித்துக் காட்டியுள்ளார்கள்.

அடுத்ததாக, எந்த ஆண்டும் உபயோகிக்காத அளவுக்கு உரம் இந்த ஆண்டு 2.5 லட்சம் டன் அளவுக்குத் தழைச் சத்து உரம் விவசாயிகளால் உபயோகிக்கப்பட்டிருக்கிறது. இது இதுவரையில் எந்த ஆண்டிலும் இல்லாத ஒரு புதிய சாதனையாக இந்த ஆண்டு செய்யப்பட்டிருக்கிறது என்று சொல்லும்போது, உண்மையிலேயே மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய மகிழ்ச்சியைத் தெரிவிப்பார்கள் என்று நான் நினைக்கிறேன். அடுத்ததாக, இராமநாதபுரம் மாவட்டத்தில் கடந்த ஆண்டில் 48 ஆயிரம் ஏக்கர் நிலப் பரப்பில் மட்டுமே நெல் பயிரிடப்பட்டு இருக்க, இந்த அரசு பொறுப்பு ஏற்றதற்குப் பின்னாலே, அந்த 48 ஆயிரம் ஏக்கர் என்ற நிலையை மாற்றி, நான்கு லட்சத்து எட்டாயிரம் ஏக்கரில் அங்கே நெல் உற்பத்தி செய்திருக் கிறோம் என்று சொல்லும்போது, நீங்கள் உண்மையிலேயே இந்த வேளாண்மைத் துறையைப் பாராட்டுவீர்கள் என்று நான் நினைக்கிறேன்.

அதற்கு அடுத்தாற்போல், சான்றிதழ் விதைகளை இலாக்கா மூலமாக அதிகாரிகளால் செய்யப்பட்டு கொடுக்கப்பட்டு வந்ததை மாற்றி, இன்று அதற்கு என்று தனி அதிகாரிகளை நியமித்து அவர்கள் மூலமாக நல்ல தரமான விதைகளை விவசாயப் பெருங்குடி மக்களுக்கு உற்பத்தி செய்து

[திரு. ப. குழந்தைவேலு] [1978 மார்ச் 17

கொடுப்பதற்கு உண்டான சாத்தியக்கூறுகளை இந்த அரசு செய்து காட்டி
யிருக்கிறது. அடுத்தாற்போல் வேளாண்மை விளைபொருள் விற்பனைப் பணிகளை
களையும் கருத்துமாக கவனிக்கத் தனியாக ஒரு இயக்குநர் அலுவலகம்
துவக்கப்பட்டுள்ளது. இதன் மூலமாக, ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தின்
மூலமாகக் கிடைத்த வரி கடந்த ஆண்டைக் காட்டிலும் இந்த ஆண்டு 10
சதவிகிதம் உயர்ந்திருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் சொல்லிக்
கொள்ள விரும்புகிறேன். அதே நேரத்தில் எந்த ஆண்டுமே இல்லாத
அளவுக்கு இந்த ஆண்டு பெய்த மழையாலும் புயலாலும் பாதிக்கப்பட்ட
விவசாயப் பெருங்குடி மக்களுக்கு எந்த அரசும் செய்யாத, இதுவரையிலும்
செய்யாத, சலுகைகளை, ஏறத்தாழ 20 சலுகைகளை இந்த அரசு செய்து
கொடுத்திருக்கிறது. மேலும் வேளாண்மைத் துறை மூலமாக இந்த ஆண்டு
10 புதிய விரிய ரகங்கள் உற்பத்தி செய்யப்பட்டு விவசாயப் பெருங்குடி
மக்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. மேலும், வேளாண்மை பல்கலைக்
**கழகத்தின் மூலமாக, 8 புதிய ரகங்கள் உற்பத்தி செய்யப்பட்டு** கொடுக்கப்
பட்டிருக்கின்றன. கரும்பு விவசாயிகளுக்குக் கட்டுப்படியாகின்ற விலை,
சர்க்கரை சத்து, மற்றும் கிடைக்கும் தன்மை ஆகியவைகளை நிர்ணயித்து
கூட்டுறவு ஆலைகளுக்குக் கொடுக்கப்பட்டு வருகிறது. மத்திய சர்க்கார்
குறைந்தபட்ச விலையான 8.5 விழுக்காட்டுக்கு ரூபாய் 85 என்று குறித்திருந்
தாலும், தமிழ் நாட்டிலுள்ள 20 சர்க்கரை ஆலைகளிலும் அதற்கு அதிகமாகக்
கொடுக்கப்பட்டு வருகிறது என்பதனையும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்
பட்டிருக்கிறேன். அதே நேரத்தில் கரும்பு சாலை அபிவிருத்தித் திட்டத்தின்
கீழாக சென்ற ஆண்டைக் காட்டிலும் இந்த ஆண்டு அதிகமாக 32.67 கிலோ
மீட்டருக்கு சாலை அமைக்கப்பட்டுள்ளது; 60.83 கிலோமீட்டருக்குத் தார்
போடப்பட்டுள்ளது. இந்த அரசு பொறுப்பு ஏற்கும்பொழுது, ஏறத்தாழ 400
விவசாயப் பட்டதாரிகள் வேலையில்லாமல் இருந்தார்கள்.

(பிற்பகல் 1-10)

இன்றைய அரசு பொறுப்பு ஏற்றுக்கொண்ட பின்னால் 400 ஆக இருந்தது
குறைக்கப்பட்டு இன்று 150 விவசாயப் பட்டதாரிகள் மட்டுமே வேலையில்லாமல்
இருக்கின்றனர் என்ற நிலை உள்ளது. எந்த ஆண்டும் இல்லாத அளவுக்கு இந்த
ஆண்டு நெல் பயிரிடப்படும் பரப்பளவு அதிகமாக்கப்பட்டிருக்கிறது. பழைய
அரசில் குறிப்பிட்ட சில இடங்களில்தான் உரம் கிடைக்கும் நிலைமை இருந்தது.
இப்போது எங்கே வேண்டுமானாலும் எப்போது வேண்டுமானாலும் உரமும்
பூச்சி மருந்தும் கிடைக்கிற நிலைமையை அண்ணா திராவிட முன்னேற்றக் கழக
அரசு ஏற்படுத்தியிருக்கிறது என்பனதப் பெருமையோடு சொல்லிக்கொள்ளக்
கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆராய்ச்சிப் பண்ணைகள் மூலமாகக் கண்டுபிடிக்கப்பட்ட புதிய ரகங்களுக்கு
பழைய அரசியல் வாதிகளின் பெயர் கொடுக்கப்பட்டிருந்தது. நெல்லுக்கு
கருணா என்று பெயர் கொடுக்கப்பட்டது. பாசிப்பயறுக்கு அஞ்சுகம் என்று



978 மார்ச் 17] [திரு. ப. குழந்தைவேலு]

பெயர்களை உடனடியாக நீக்கிவிட்டு
பயரிட்டிருந்தார்கள். அப்படிப்பட்ட
நெல்லுக்கும் பாசிப்பயறுக்கும் யார் அந்த ரகத்தைக் கண்டுபிடிக்கிறார்களோ
அப்படிக் கண்டுபிடித்த விஞ்ஞானிகளின் பெயரை வைக்க வேண்டுமென்றும்
ன்லுக்கு மேற்பட்டவர்கள் கண்டுபிடிக்கிற தன்மை இருந்தால், அந்த
ஆராய்ச்சிப் பண்ணையின் பெயர் வைக்க வேண்டுமென்றும் இன்றைய
அரசு உத்தரவிட்டிருக்கிறது.

வேளாண் பல்கலைக் கழகத்தில் ஒரு மீனவளக் கல்லூரி துவக்கப்
1977-78-ல் வேளாண் பெருமக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு உயர்
பட்டுள்ளது. வேளாண் பெருமக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு உயர்
மட்டக் குழு ஏற்படுத்தப்பட்டது. அக்குழுவினர் இதுவரை நான்கு தடவை
கூடி, முக்கியமான பிரச்சினைகளை அணுகி ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள்.
அதன் மூலமாக விவசாயிகளுடைய பிரச்சினைக்கு ஒரு முடிவு ஏற்பட இருக்
கிறது என்பதை இந்த நேரத்தில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். விவசாயி
களுடைய நிலைமையை ஆராய்ந்து அவர்கள் பெறும் கொள்முதல் விலையைக்
கூட்டிக் கொடுக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு நெல் கொள்முதல் விலையை
மோட்டா ரகத்திற்கு ரூ. 90 என்றும் நடுத்தர ரகத்திற்கு ரூ. 95 என்றும்
நிர்ணயிப்பதற்கான சாத்தியக் கூறுகளை இந்த அரசு ஆராய்ந்து உத்தரவு
பிறப்பித்திருக்கிறது. முக்கியமான திட்டமான பயிர்க் காப்புறுதித்
திட்டத்தைப்பற்றிப் பல உறுப்பினர்கள் பேசினார்கள்.

மத்திய அரசின் பரிசீலனையில் இருந்து
பயிர்க் காப்புறுதித் திட்டம் மத்திய அரசின் பரிசீலனையில் இருந்து
வருகிறது. 7—3—1978-ல் பயிர்க் காப்புறுதித் திட்டத்தின் சார்பாக மத்திய
அரசின் மூலமாக டெல்லியில் ஒரு கூட்டம் நடைபெற்றது. அதில் தமிழகத்தின்
சார்பில் நாம் கலந்துகொண்டிருக்கிறோம். மாநில அரசு இந்தத் திட்டத்தின்
தவணைத் தொகைகளிலும், உரிமைக் கோரிக்கைச் செலவுகளிலும், 25 சதவிகி
தத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்ற கருத்தையும், அறுவடை சோதனை
களில் கிடைக்கும் விளைச்சல் அளவையும் இதர நிர்வாக உதவிகளையும் மாநில
அரசு அவ்வப்போது அளிக்க வேண்டும் என்றும் இம்முன்மாதிரித் திட்டத்தை
இரண்டு, மூன்று ஆண்டுகளுக்கு காப்புறுதிக் கழகம் நடத்திய பின், மாநில
அரசே இத்திட்டத்தை ஏற்று நடத்த ஒப்புக்கொள்ள வேண்டுமென்றும்
அவர்கள் கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள். ஆகவே பயிர்க் காப்புறுதித்
திட்டம் உரிய வகையில் மத்திய அரசு உதவியுடன் மாநிலத்திற்கு வர இருக்
கிறது என்பதைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

1978-79 ஆம் ஆண்டிற்கான வேளாண்மைத் துறையின் கொள்கை விளக்
கத்தில் புதிய திட்டங்கள் என்ற வகையில் பல்வேறு திட்டங்கள் சொல்லப்பட்
டிருக்கின்றன. திட்டங்களை வரிசைப்படுத்திச் சொன்னால், காலம் அதிகமாகும்.

மேலும் வேளாண் தொழில் கழகத்தின் மூலமாக திட்டங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. தமிழ் நாடு வேளாண் பண்ணைக் கழகத்தின் திட்டமாக பல்வேறு திட்டங்கள் இருக்கின்றன. அவற்றையெல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள் படித்திருப்பார்கள் என்று நினைக்கிறேன்.

ஒரு கருத்தை மட்டும் இந்த நேரத்தில் வேளாண்மைத் துறை சார்பாகச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். வேளாண் பெருமக்களின் பிரச்சினைகளை இந்த அரசு ஆராய்ந்து வருவதோடு, அவர்களுக்கு நல்ல உதவிகளைச் செய்யவும் அதே நேரத்தில் ஏற்ற விலையைப் பெற்றுத் தர வேண்டுமென்பதில் இந்த அரசு உன்னிப்பாகவும் கவனமாகவும் இருந்து வருகிறது என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

பால் வள நிறுவனம் சார்பாக ஒரு சில கருத்துக்களைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னால் சில சாதனைகளை, பால்வள நிறுவனத்தைப் பொறுத்தவரையில், செய்திருக்கிறோம். அதைக் கோடிட்டுக் காட்டுவது எனது இன்றியமையாத கடமை என்று கருதுகிறேன். பால் கொள்முதல் அளவு கடந்த ஜூலை 1977-ல் 1,87,.07 லிட்டராக இருந்தது அதிகரித்து 1978 பிப்ரவரியில் அதிகரித்து 2,05,937 லிட்டராக உயர்ந்திருக்கிறது. பால் விற்பனை அளவில் 1977 ஜூலை மாதத்தில் இரண்டு லட்சம் லிட்டராக இருந்ததை இப்போது 2,10,871 லிட்டராக அதிகரித்திருக்கிறோம். சென்னை மாநகரத்தில் உள்ள முழுநேர பால் அங்காடிகள் 104 ஆக இருந்ததை 116 ஆகக் கூட்டியிருக்கிறோம். பால் விற்பனை செய்யும் டெப்போக்கள் 454 என்பதை 456 ஆக உயர்த்தியிருக்கிறோம். பால் வள நிறுவனத்திடமிருந்து பால் வாங்கும் நபர்களின் எண்ணிக்கை ஒரு லட்சத்து முப்பதாயிரமாக இருந்தது 1,46,000 ஆக உயர்ந்திருக்கிறது. பால் விற்பனை செய்ய புதிதாக எடுக்கப்பட்ட மாவட்டங்களில் உள்ள நகரங்களின் எண்ணிக்கை 8 ஆக இருந்ததை 12 என ஆக்கியிருக்கிறோம். பால் வளத் துறையினால் பயன்பெறும் விவசாயிகள் எண்ணிக்கை 1 லட்சத்து 80 ஆயிரத்திலிருந்து 1 லட்சத்து 95 ஆயிரமாக உயர்த்தப்பட்டிருக்கிறது.

மேலும் இந்த ஆண்டுக்கு 1978-79-ல் ஐந்து இடங்களிலே பால் குளிரூட்டும் நிலையங்கள் ரூ. 48 லட்சம் செலவில் நிறுவப்பட இருக்கின்றன. பரமத்தி, வேலூர், கிருஷ்ணகிரி, கூடலூர், கோத்தகிரி, பரமக்குடி ஆகிய இடங்களில் ஏற்பாடு செய்ய இருக்கிறோம். நடப்பு ஆண்டில் இன்று செயல்பட்டுக் கொண்டிருக்கிற ஈரோடு பால்வள யூனியன் சார்பாக ஏறத்தாழ ரூ. 3.68 கோடி ரூபாய் செலவில் பால் பவுடர் உற்பத்தி செய்யும் தொழிற்சாலையை ஆரம்பிக்கும் நோக்கத்தில் அதற்கான கட்டிடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. ஒன்றிரண்டு ஆண்டில் அந்தத் திட்டம் முடிவடையும் என்ற நிலைமையில் உள்ளது. சேலம், தர்மபுரி மாவட்டங்களிலும் பால் பவுடர் உற்பத்தி செய்யும் முயற்சியில் ஈடுபட இருக்கிறோம் என்பதையும் சொல்லிக்கொள்கிறேன்.





பால்வள நிறுவனத்தின் நிலைமை நாளுக்கு நாள் முன்னேறிக்கொண்டிருக்கிறது. அரிஜன மக்கள் ஒரு உப தொழிலாக வைத்துக்கொள்ளும் வகையிலும் அவர்களுக்கு முக்கியத் தொழிலாகவும் இருப்பதற்காக பால் கறவை மாடுகளை வாங்கிக் கொடுப்பதன் மூலமாக உதவ இந்த அரசு திட்டம் வகுத்திருக்கிறது. அரிஜன மக்களுக்கு பால் கூட்டுறவுச் சங்கங்களை ஏற்படுத்தித் தரவேண்டுமென்ற கொள்கை அடிப்படையில் பால்வள நிறுவனம் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்** : நேரம் அதிகமாகிக் கொண்டிருக்கிறது. இன்னொரு துறைக்கும் அமைச்சர் பதில் சொல்ல வேண்டியிருக்கிறது.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு** : விரைவில் முடித்துக்கொள்கிறேன். இந்த விவாதத்தில் கலந்துகொண்ட எட்டு உறுப்பினர்கள் பல்வேறு கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். இரண்டொரு கருத்துக்களை மட்டும் முக்கியமாக ஏற்று பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. டி'மாண்டி அவர்கள் எலிகளால் ஏற்படக்கூடிய சேதங்களைப் பற்றி எடுத்துச் சொன்னார்கள். எலிகளை ஒழிப்பதற்காக சிங்க் பாஸ்பைடு என்ற மருந்து விவசாய டெப்போக்கள் மூலமாகக் கொடுக்கப்பட்டு எலிகளை ஒழிக்கும் திட்டத்தைச் செயல்படுத்துகிறோம் என்று சொல்லிக்கொள்கிறேன். தஞ்சை மாவட்டத்தில் இதற்காக தனித் திட்டம் இயங்கி வருகிறது என்பதையும் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

அதேபோன்று அடுத்துப் பேசிய உறுப்பினர் திரு. கே. எஸ். அப்துல் வகாப் அவர்கள் விவசாயத்தில் விஞ்ஞான முறைகளைக் கையாள்வதைப்பற்றிக் கூறினார்கள். அத்துடன் இப்போது உரம் தாராளமாகக் கிடைப்பதற்கும் பாராட்டு தெரிவித்தார்கள். பூச்சிக்கொல்லி மருந்துகள் இப்போது 31-3-78 வரையிலும் 25 சதவிகிதம் மானியத்தில் எல்லா விவசாயிகளுக்கும் கொடுக்கப்பட்டு வருகின்றன. எங்காவது குறைகள் இருந்தால், உறுப்பினர் அவர்கள் இந்த அரசிற்குத் தெரிவித்தால், அதை உடனடியாகக் கவனிப்போம் என்பதையும் சொல்லிக்கொள்கிறேன்.

25 எக்கர், 50 ஏக்கர் போன்ற பண்ணைகள் ஏற்படுத்த வேண்டுமென்று அவர்கள் சொன்னார்கள். அப்படிப்பட்ட பெரும் பண்ணைகள் பெருவிளக்க பண்ணை 'Compact Block Demonstrations.' என்ற முறையில் பல்வேறு இடங்களில் செயல்படுகின்றன. அப்படிப்பட்ட பண்ணைகள் மூலமாக ஒன்றிரண்டு ஏக்கர் வைத்திருக்கும் சிறு விவசாயிகள் கூட தரமான விதைகளை வைத்துக்கொண்டு, விளைச்சலை அதிகப்படுத்தும் சாத்தியக் கூறுகளைப் பெற்று வருகிறார்கள் என்பதை இந்த நேரத்தில் அவர்களுக்குச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(பிற்பகல் 1-20)

அடுத்துப் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திருமதி மந்தாகினி கிருஷ்ணமூர்த்தி அவர்கள் காய்கறி உற்பத்தியை அதிகரிக்க வேண்டுமென்று சொன்னார்கள். இப்போது காய்கறி விதைகள் சென்னை நகரில் இரண்டு டெப்போக்கள் மூலம் தேனாம்பேட்டையிலும், அண்ணா நகரிலும் வழங்கி

[திரு. ப. குழந்தைவேலு] [1978 மார்ச் 17

வர்ப்படுகின்றன என்பதைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அவைகள் ஆடிப் பட்டத்திலும் தைப் பட்டத்திலும் விற்கப்பட்டு வருகின்றன. இவைகளை வாங்கி தங்கள் வீட்டுத் தோட்டங்களிலும், கொல்லைப் புறத்திலும் மற்றும் தங்கள் வீடுகளுக்குப் பக்கத்திலுள்ள இடங்களிலும் காய்கறிகளைப் பயிர் செய்து உற்பத்தியை அதிகப்படுத்தும் திட்டத்தை இந்த அரசு செயல் படுத்திக்கொண்டு வருகிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னொரு கருத்தையும் அவர்கள் இங்கே பேசும்போது குறிப்பிட்டார்கள். அடையாறு பகுதியில் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி அவர்களின் பெயரில் இருந்த பார்க் ஒன்றை தமிழ் நாடு பால்வள நிறுவனம் எடுத்துக்கொண்டு அந்தப் பெயர்ப் பலகையை மாற்றிவிட்டது என்று சொன்னார்கள். அந்தப் பெயர்ப்பலகை இன்றளவும் அப்படியேதான் இருக்கிறது, மாற்றப்படவில்லை என்பதையும் எடுத்துக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்துப் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. சந்தோசத் தேவர் அவர்கள் பல்வேறு கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். கோதுமைக்கு எவ்வளவு கொள்முதல் விலை கொடுக்கிறார்களோ அதே கொள்முதல் விலையை நெல்லுக்கும் கொடுக்க வேண்டுமென்ற கருத்தைச் சொன்னார்கள். கோதுமைக்குக் கொடுக்கப்படும் கொள்முதல் விலை ரூ. 110, இதை மத்திய அரசு நிர்ணயித்துள்ளது. நெல்லுக்கும் அதிகப்படியான கொள்முதல் விலை ரூ. 110 ஆக நிர்ணயிக்க வேண்டும் என்று நாம் கேட்டுக்கொண்டிருக்கிறோம். ஏனென்றால் கோதுமை பயிரிட ஒரு விவசாயிக்கு எவ்வளவு செலவாகிறதோ அதே அளவுக்கு நெல் விளைவிப்பதற்கும் செலவாகிறது. எனவே கோதுமைக்குக் கொடுக்கப்படும் கொள்முதல் விலையை நெல்லுக்கும் கொடுக்க வேண்டும் என்று மத்திய அரசுக்குச் சிபாரிசு செய்திருக்கிறோம். அது மட்டு மல்ல, கடந்த ஜனவரி மாதத்தில் 10, 11 தேதிகளில் முதலமைச்சர்கள் மாநாட்டில் முதல்வர் அவர்களும் நானும் இதை முக்கியமாக எடுத்துச் சொல்லியிருக்கிறோம் என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்து, அவர்கள் விதைகளைப்பற்றிக் குறிப்பிடும்போது, ரூ. 2-க்கு விற்கப்படுகிறது என்றும் இது அதிகமான விலையாக இருப்பதாகவும் குறிப்பிட்டார்கள். ஆனால் விலையை எப்படி நிர்ணயிக்கிறோம் என்றால் "Market rate + 25 paise" என்று Rate fix செய்து கொடுக்கிறோம். மார்க்கெட் ரேட் எவ்வளவு இருக்கிறதோ அதற்கு மேல் கூடுதலாக 25 பைசா அதிகமாக வைத்து இன்றையதினம் 2 ரூபாய் அளவுக்கு விற்பனை செய்கிறோமே தவிர, ஏதோ லாப நோக்கத்தோடு 2 ரூபாய் என்று வசூலிக்கப்படவில்லை என்பதையும் குறிப்பிட ஆசைப்படுகிறேன்.

அதே நேரத்தில் பூச்சி மருந்து, உரம் போன்றவற்றின் விலைகளையும் குறைக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள். இந்த விலைகள் எல்லாம் மத்திய அரசால் நிர்ணயம் செய்யப்படுபவை. இந்த அரசு பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு, உரத்தின் விலை டன் ஒன்றுக்கு ரூ. 100 அளவுக்குக் குறைக்கப்



1978 மார்ச் 17] [திரு. ப. குழந்தைவேலு]

பட்டிருக்கிறது. நாம் எடுத்துக்கொண்ட முயற்சியின் மூலமாக மத்திய அரசு இந்தக் குறைப்பைச் செய்திருக்கிறது என்பதையும் நான் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். இதோடு நில்லாமல் அடிக்கடி மத்திய அரசை மேலும் இவற்றின் விலையைக் குறைக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறோம். உரத்தின் விலையையும் பூச்சி மருந்தின் விலையையும் குறைத்துக் கொடுத்தால் தான், மத்திய அரசு நிர்ணயித்துள்ள கொள்முதல் விலைக்கு நெல் வாங்க முடியும் என்றும் எடுத்துச் சொல்லியிருக்கிறோம்.

அடுத்து, விவசாயக் கருத்தரங்குகளை ஆங்காங்கே நடத்த வேண்டும் என்ற கருத்தைச் சொன்னார்கள். பல்வேறு இடங்களில் ஏற்கெனவே விவசாயக் கருத்தரங்குகள் நடத்தப்பட்டிருக்கின்றன. நடந்தும் வருகின்றன. இன்னும் மாவட்டந்தோறும், தாலுக்காக்கள்தோறும் இப்படிப்பட்ட விவசாயக் கருத்தரங்குகளை நடத்த இருக்கிறோம் என்பதையும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்துப் பேசிய திரு. இராமகிருஷ்ணத் தேவர் அவர்கள் பால்வள நிறுவனத்தின் ஸ்டால் ஒன்றை சட்டமன்றப் பேரவைக்கும் சட்டமன்ற மேலவைக்கும் பக்கத்திலே வைக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக் கிறார்கள். இந்த ஸ்டால் வைக்கும் கோரிக்கை அரசின் கவனத்தில் இருக்கிறது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்துப் பேசிய உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் பல கேள்விகளைக் கேட்டார்கள். அதே சமயத்தில் வேளாண்மைத் துறையைப் பாராட்டவும் செய்தார்கள். வேளாண்மைத் துறைக்கு ஒதுக்கியுள்ள தொகை குறைவு என்றார்கள். இதை அரசு கவனத்தில் எடுத்துக்கொண்டிருக்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன். அதே நேரத்தில் பூச்சி மருந்துகளை time-barred அதாவது கால கெடு ஆகிவிட்ட மருந்துகளை எல்லாம் விவசாயிகளுக்குக் கொடுத்திருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அப்படிப்பட்ட மருந்துகள் எந்த விவசாயக் கிடங்கிலிருந்தும் கொடுக்கப்படவில்லை. காலாவதி ஆகிவிட்டாலும்கூட, பின்னால் அதைப் பரிசீலித்துப் பார்த்து, அது வீரியம் இழந்துவிட்டதா இல்லையா என்று பார்த்து revalidate செய்து தான் அந்த மருந்துகளை விற்றுக்கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

"உற்பத்தியை அதிகமாகக் காட்டியிருக்கிறீர்களே எந்த அடிப்படையில்? எப்படி உற்பத்தி அதிகமாகும்?" என்று கேட்டார்கள். அவர்களுக்கு விவரம் சொல்ல வேண்டுமென்றால், என்னிடம் 'data' இருக்கிறது. அதை இங்கே படிக்க வேண்டுமென்றால், இன்னும் 15 நிமிஷம் ஆகும்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: பிறகு சொல்லலாமே.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: அடுத்து, ஒவ்வொரு மாவட்டத் திலும் உழவர் பயிற்சி நிலையங்கள் அமைக்கப்பட வேண்டுமென்று கேட்டார்கள். உழவர் பயிற்சி நிலையம் இல்லாத மாவட்டம் இல்லை என்று சொல்லுகிற

அளவுக்கு மாவட்டங்கள்தோறும் படிப்படியாக உழவர் பயிற்சி நிலையங்களை அமைக்க இருக்கிறோம் என்பதையும் இந்த நேரத்தில் குறிப்பிட விரும்பு கிறேன்.

மேலும் விதைப் பண்ணைகள் அதிகமாக்கப்பட வேண்டும் என்ற கருத்தையும் சொன்னார்கள். இந்த விதைப் பண்ணைகளில் உற்பத்தி குறைவாக இருப்பதற்கு என்ன காரணம் என்றும் கேட்டார்கள். வறட்சியான நேரத்தில் உற்பத்தி சரியாக இல்லையென்றால், வேளாண்மைத் துறை மூலம் விதைகளைக் கொடுக்கிறோம். வளமான நேரத்தில் நம் மாநிலத்திற்குத் தேவைப்படும் அதிகபட்சமான விதையின் அளவு 9,500 டன்கள் தான். எனவே இந்த அளவுக்கு நம்மிடம் விதைகள் இருந்தால் போதும். இந்த அடிப்படையில்தான் 9,500 டன் விதை போதும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** உறுப்பினர்கள் எல்லாம் என்னை நோக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** மேலும் தென்னை ஆராய்ச்சிப் பண்ணையைப்பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். இந்தக் கருத்துக்களை எல்லாம் இந்த அரசு கவனத்தில் எடுத்துக்கொண்டு அதிகமான அளவில் தென்னை ஆராய்ச்சிப் பண்ணைகளை அமைக்க திட்டமிட்டிருக்கிறோம். அடுத்து, ரேடியோவில் விளம்பரம் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். முதலில் 3 இடங்களில்தான் விளம்பரம் செய்யப்பட்டது. இந்த அரசு பொறுப் பேற்றுக் கொண்ட பிறகு, 4-வது விளம்பர நிலையமாக சென்னையிலிருந்து ஒரு அரை மணி நேரம்—மாலை 7½ மணியிலிருந்து 8 மணி வரை—ஒலி பரப்பு செய்துகொண்டிருக்கிறோம். வீடும் வயலும் என்ற அந்த நிகழ்ச்சி உங்கள் அனைவருக்கும் நன்றாகத் தெரியும் என்று நினைக்கிறேன்.

அடுத்துப் பேசிய திரு கோ. சி. மணி அவர்கள் பல குற்றச்சாட்டுகளைச் சொன்னார்கள். அதற்கெல்லாம் நான் ஏற்கெனவே பதில் சொல்லியிருக்கிறேன். திரு கோ. சி. மணி அவர்களுக்கு ஒன்றை மட்டும் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். வேறு எந்த ஆண்டும் இல்லாத அளவுக்கு ஒரு நல்ல நிலைமை வேளாண்மைத் துறையில் இந்த ஆண்டு ஏற்பட்டிருக்கிறது. இதை அவர்கள் மறுக்கவும் மாட்டார்கள், மறைக்கவும் மாட்டார்கள் என்று நம்புகிறேன். ஆகவே வேளாண்மைத்துறை மூலம் ஏழை எளிய மக்களுக்கு நல்ல திட்டங்களைத் தீட்டிக் கொடுத்து, அதன் மூலம் உற்பத்தியை அதிகப் படுத்த நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறோம்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** இந்த விவாதம் முடிகிற வரை அவைக் கூட்டம் நீட்டிக்கப்படுகிறது.



**மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு:** ஆகவே அப்படிப்பட்ட நல்ல கருத்துக் களைச் சொன்ன உறுப்பினர் அனைவருக்கும் நன்றிகூறி அவர்களுடைய மேலான கருத்துக்களை இந்த அரசு கவனத்தில் எடுத்துக் கொள்ளுகிறது என்றும் கூறி, என் உரையை முடிக்கிறேன். வணக்கம்.

**திரு கோ. சி. மணி:** 1977-78ஆம் ஆண்டுக்கான வெள்ள நிவாரண நடவடிக் கைகள்பற்றிச் சொல்லும்போது, அமைச்சர் அவர்கள் பல காரியங்கள் செய்யப்பட்டிருக்கின்றன என்றார்கள். அவற்றில் 2,3 காரியங்களைப் பற்றி யாவது சொல்ல வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு:** 2, 3 என்ன மொத்தமும் சொல்லு கிறேனே. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதைப்பற்றி முக்கியமாகக் கேட்கிறார்கள் என்பதில் எனக்கும் மகிழ்ச்சி.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** (திரு கோ. சி. மணி அவர்களைப் பார்த்து) சாப்பிட்டுவிட்டு வந்துவிட்டவர்கள் போலிருக்கிறது. (சிரிப்பு)

**மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு:** நெல் விதையைப் பொறுத்தவரை, ,988 பேருக்கு மான்யமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

**திரு கோ. சி. மணி:** இது தமிழ் நாடு முழுவதற்குமா?

**மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு:** வேளாண்மைத் துறை தமிழ் நாடு முழுவதற்குமாகத்தான் இருக்கிறது. தஞ்சை மாவட்டத்திற்கு மட்டுமல்ல.

அடுத்து, வாழை அழிந்த இடங்களில் 7,794 பேருக்கு ஏக்கர் ஒன்றுக்கு 5. 100- என்று கொடுக்கப்பட்டிருக்கிறது.

அதைப் போலவே கரும்புக்கும் 1,363 பேருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

தென்னைக் கன்றுகளைப் பொறுத்தவரை, 98,139 கன்றுகள் மான்யமாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. பலன் அடைந்தவர்கள் எண்ணிக்கை 24,609 பேர்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** (திரு கோ. சி. மணி அவர்களைப் பார்த்து) இப்போது திருப்தி அடைந்து விட்டீர்கள் இல்லையா?

(பிற்பகல் 1-30)

* **மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே, பாசன வசதியைப்பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பில் மாண்புமிகு அங்கத்தினர்கள் எல்லாம் கலந்துகொண்டு பல்வேறு நல்ல கருத்

துக்களை வழங்கியிருக்கிறார்கள். இன்னும் சொல்லப் போனால், பதில் சொல்லித் தான் தீரவேண்டும் என்கின்ற நிலைமையில் அவர்களுடைய பேச்சுக்கள் வற்புறுத்தலின்றி அமைந்திருப்பது, உண்மையிலேயே மகிழ்ச்சிக்குரியது. அவர்கள் எழுப்பியுள்ள ஐயங்களைத் தெளிவாக்குவது என்னுடைய கடமை என்ற அளவில் சிலவற்றினைப்பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன்.

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரேசத் தேவர் அவர்கள் நிலத்தடி நீர்பற்றிக் குறிப்பிட்டுப் பேசினார்கள். இந்த நிலத்தடி நீர் மழை மூலம் கிடைப்பது குறைவு. ஆனால் பம்புசெட்டுகள் வைத்து எற்றுகின்ற நீர் அதிகம். அதனால் நிலத்தடி நீர் குறைந்துகொண்டு போகிறது. இந்த ஆபத்திலிருந்து காப்பாற்றவேண்டியது அரசினுடைய தலையாய கடமையாகும். அவர்கள், "மின்சாரம் தரமாட்டேன் என்று சொல்லுகிறீர்கள். ஆனால் அதே நேரத்தில் டீசல் என்ஜின் வைத்துக்கொண்டு தண்ணீரை வெளியேற்றுகிறார்கள். அதற்கு என்ன செய்வது" என்று கேட்டார்கள். "அதை எப்படித் தடுப்பது" என்றும் கேட்டார்கள். குழாய் கிணறுகள் அமைக்க துளை போடுகிறபோது, அனுமதி வாங்கிக்கொண்டு போட வேண்டுமென்று சொன்னால், நல்லதாக இருக்கும் என்று சொன்னார்கள். அதே அடிப்படையிலே ஒரு சட்டம் வரப்போகிறது. இரண்டு அவையின் கூட்டுக் குழுவிலே அதைப் பற்றி ஆலோசனை செய்ய வேண்டும். இந்த நல்ல கருத்தினை அங்கத்தினர் அவர்கள் எடுத்துச் சொன்னதற்கு அவர்களுக்கு நான் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்துப் பேசிய நண்பர்கள், காவிரி நதி நீர் பங்கீடு குறித்துப் பேசினார்கள். அது தீராத பிரச்சினையாக இருந்து வருகிறது. அதை சீக்கிரத்தில் தீர்த்து வைக்க வேண்டியது நம்முடைய கடமையாகும். ஒரு மாநிலத்திற்கும் இன்னொரு மாநிலத்திற்கும் இருக்கின்ற பிரச்சினையாக இது இருந்துகொண்டிருக்கிறது. மாநிலங்கள் கண்ணோட்டத்தில் பார்க்கும்போது, அதில் இந்த மாநிலத்தில் உள்ள கட்சி, அந்த மாநிலக் கட்சி என்பது போன்ற அரசியல் காரணங்களால் அதில் வேறுபாடுகள் இருப்பதற்கு நியாயம் இல்லை என்று சொல்லிக்கொள்கிறேன்.

தமிழகத்தில் எந்தக் கட்சி ஆட்சியில் இருந்தாலும், அது காங்கிரஸ் கட்சியாக இருந்தாலும், அதற்குப் பிறகு வந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியாக இருந்தாலும், அதற்குப் பிறகு வந்த ஆளுநர் அவர்கள் ஆட்சியாக இருந்தாலும், அதற்குப் பிறகு வந்த அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியாக இருந்தாலும் சரி, இன்றையதினம் வரையில் தமிழகத்தைப் பொறுத்தவரை, காவிரி நதி நீர் பங்கீடு குறித்த பிரச்சினையில்



ஒரு மாறாத நிலையாகத்தான் இருக்கின்றது. அந்த நிலைமையைத்தான்
தொடர்ந்து பின்பற்றி வந்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.
ஏற்கெனவே பாசன வசதி கிடைக்கின்ற அளவுக்கு, நாம் எந்த அளவுக்குத்
தண்ணீர் பெற முடியுமோ அந்த அளவுக்குப் பெற்று வருகிறோம். அதிலே
சிறிதளவுகூட குறைவில்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். பாரதப்
பிரதமர் அவர்கள் கேரளத்திற்கு வந்தபோது, நமது புரட்சித் தலைவர் அவர்
களும் கேரள மாநில முதலமைச்சர் திரு. அந்தோணி அவர்களும் சேர்ந்து
பேச்சு வார்த்தைகள் நடத்தினர். அப்போது பிரதமர் அவர்களிடத்திலே
கருத்தைத் தெரிவித்தபோது, 3 மாநிலங்களின் முதலமைச்சர்கள் கூட்டம்
ஒன்றைக் கூட்டிப் பேசலாம் என்று பிரதமர் அவர்கள் தெரிவித்தார்கள்.
அதற்குள் கர்நாடகத்தில் அரசியல் நிலை மாறிவிட்டது. தேர்தல்கள் வந்தன.
அதன் காரணமாகக் கூட்டம் கூடவில்லை. இப்போது தேர்தலுக்குப்பின்
கர்நாடகத்தில் ஆட்சி அமைந்திருக்கின்றது. நல்ல சூழ்நிலைகள் இருக்
கின்றன. பாரதப் பிரதமர் அவர்கள் கூட்டத்தைக் கூட்டுவார்கள் என்று
நம்புகிறேன். அந்தக் கூட்டத்தைக் கூட்ட வேண்டும் என்று அரசு சார்பில்
கடிதம் எழுதப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே நம்முடைய மாண்புமிகு அங்கத்தினர் திரு. திராவிட மணி அவர்கள்
பேசுகின்றபோது, இந்த நீர்ப் பிரச்சினையை நாசூக்காக அணுக வேண்டு
மென்று குறிப்பிட்டார்கள். நமது அரசும் நாசூக்காகத்தான் அணுகும்
என்பதை அங்கத்தினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, கங்கை-காவேரி இணைப்புத் திட்டம்பற்றியும் இங்கே குறிப்பிட்டுப்
பேசினார்கள். கங்கை-காவேரி வருகிறதோ, வரவில்லையோ, நமது அரசு அந்தத்
திட்டம், அந்தக் கொள்கை நிறைவேற வேண்டுமென்றுதான் விரும்புகிறது
இன்றைய தினம் பொறுப்பு ஏற்றுக்கொண்டிருக்கிற மத்திய அரசும், மாநில
அரசும் அதே கருத்துடன்தான் இருக்கின்றன. அந்தத் திட்டத்தை நிறை
வேற்றும்போது, முதல் கட்டமாக கோதாவரியிலிருந்து கிருஷ்ணா நதி, காவிரி
நதி என்று இணைக்கின்ற திட்டம் மூலமாகத்தான் நிறைவேற்ற முடியும்
என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். கங்கை நதியிலிருந்தே இணைக்கின்ற
திட்டத்தை நிறைவேற்றுவதாக இருந்தால், ஆயிரக்கணக்கான அடிகளுக்கு
மேல் தண்ணீரை பம்பு செய்ய வேண்டிய நிலைமைகள் எல்லாம் ஏற்படும்.
கோதாவரியிலிருந்து அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதுதான் உண்மையில்
தமிழகத்திற்கு மிகப் பெரிய நன்மையைத் தேடித்தரும்.

நமது தமிழகத்தில் உள்ள நீர்வளம் பற்றிச் சொல்ல விரும்புகிறேன்.
இந்தியாவில் மக்கள் தொகையில், தமிழகத்தின் மக்கள் தொகை 8 சதவிகிதம்.
ஆனால் இந்தியாவின் நீர்வளத்தில் நமது பங்கு 2 சதம் தான், நாலில் ஒரு

பங்குதான், நமக்கு இருக்கின்ற நீர்வளம். அண்டை மாநிலத்தில் அவர்களுக்குத் தேவையில்லாத நீரை நமக்கு அவர்கள் எந்த அளவுக்குக் கொடுக்க முடியுமோ, அந்த அளவுக்குத் தமிழகம் நீர்வளத்தை அதிகரிக்க முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கர்நாடக மாநிலம் தேசிய நீர்வளத்தில், சராசரி அளவிலே நல்ல நிலைமையைப் பெற்றிருக்கிறது. கோதாவரிபற்றிச் சொல்லுகின்றபோது, அது 7 காவேரிக்கு சமம் என்று சொல்வார்கள். அதன் மொத்த நீர்வளமான 4,630 டி.எம்.சி. தண்ணீரில், பயன்படுத்தப்படுகின்ற அளவு 13 சதம். அதாவது 607 டி.எம்.சி.தான் பயன்படுகிறது. 4,023 டி.எம்.சி. தண்ணீர் கடலில் போய் கலந்துகொண்டிருக்கின்றது. கிருஷ்ணா நதி 3 காவேரிக்கு சமம் என்று சொல்வார்கள். அதில் 2,060 டி.எம்.சி. அளவு தண்ணீர் பயன்படுத்தக்கூடிய அளவுக்கு இருக்கிறது. அதிலே தற்போது 1131 டி.எம்.சி.தான் பயன்படுத்தப் படுகிறது. இது 55 சதவிகிதமாக இருக்கிறது. ஆகவே முதல் கட்டமாக கோதாவரியிலே இருந்து ஆரம்பித்து காவேரியை இணைத்துக்கொள்ள வேண்டும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இது ஒரு நல்ல திட்டம். இந்த நல்ல திட்டத்தை மத்திய சர்க்கார் உருவாக்கினால், அதைத் தமிழகம் வரவேற்கும், வலியுறுத்தும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்னை மாநகரத்தினுடைய குடி தண்ணீர் பற்றாக்குறையைப் போக்க வீராணம் திட்டம் இருக்கிறது. அதுவும் ஒரு இடைக்காலத் தேவையை நிறைவு செய்யும் திட்டம். முழுத் தேவைகளை நிறைவேற்ற வேண்டும் என்றால், கிருஷ்ணா நதி நீர்தான் பயனளிக்க முடியும். வீராணம் திட்டம்பற்றி விரிவாகக் குறிப்பிடவில்லை என்று கூறினார்கள். நாம் மாண்புமிகு அங்கத் தினர்களுக்கு ஒன்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அந்தத் திட்டம் தமிழ் நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின்கீழ் வருகிறது. அந்தத் துறை தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் பொறுப்பிலே இருப்பதால், இந்தக் கொள்கைக் குறிப்பிலே அதைப்பற்றி விளக்கமாகக் குறிப்பிடப் படாமல் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். கிருஷ்ணா நதித் திட்டம்பற்றிப் பேசுகிறபோது, 'இங்க-ஆலே கையெழுத்துப் போட்டார்களா அல்லது கிருஷ்ணா நதி நீரிலே போட்டார்களா என்று காந்தியார் பேத்தி பேசியதாக இங்கு எடுத்துச் சொன்னார்கள். கையெழுத்து 'இங்கே'—ஆலே தான் போடப்பட்டது. அதை நானும் பார்த்தேன் என்பதை அங்கத்தினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.



மாநிலங்களில் ஆட்சி எந்தக் கட்சியிடம் இருந்தாலும், ஆட்சி மாறினாலும், மாநிலங்களுக்கு இடையே முன்பு ஏற்பட்ட ஒப்பந்தங்களை அல்லது ஒத்துக் கொண்ட கருத்துக்களை அந்தந்த மாநில அரசுகள் பாதுகாக்க வேண்டும். அந்த ஒப்பந்தங்கள் பராமரிக்கப்பட வேண்டும். அந்த மரபுகளைத்தான் எல்லா மாநிலங்களும் பின்பற்றிக்கொண்டிருக்கின்றன. அந்த மரபைத்தான் நமது அரசும் காத்து நடந்து வருகிறது. அது அரசுகளின் கடமையாகும்.

கேரளத்தில் மேற்கு நோக்கி ஓடும் ஆறுகளில் எந்த அளவுக்குத் தண்ணீரைக் கிழக்கு நோக்கித் திருப்பி நம்முடைய தமிழகத்திலே பயன்படுத்தலாம் என்பது பற்றிப் பேச்சு வார்த்தைகள் நடத்தலாம் என்று நம்முடைய பாரதப் பிரதமர் அவர்கள், அங்கு வந்திருந்தபோது தெரிவித்தார்கள். திருவனந்தபுரத்தில் ஒரு கூட்டம் நடந்தது. அதில் ஏற்கெனவே ஒப்பந்தம் செய்யப்பட்ட ஆறுகள்போக மீதி ஆறுகள் பற்றிப் பேசும்போது, தொழில் நுட்பக் குழு ஒன்றை அதற்காக என்று நியமித்து அதைப்பற்றி ஆராயலாம் என்று சொல்லப்பட்டது. அந்தத் தொழில் நுட்பக் குழுக் கூட்டத்தைக் கூட்ட வேண்டும் என்று நாம் வற்புறுத்திக் கொண்டிருக்கிறோம். எந்த அளவுக்குக் கேரளத்திலிருந்து தமிழகத்திற்குத் தண்ணீரைத் திருப்பிவிடலாம் என்பதைப்பற்றி நமது அரசு தக்க நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு அங்கத்தினர்கள் கிரி ஆறு பற்றி இங்கே பேசினார்கள். கிரி ஆறு பாம்பு ஆற்றுக்கு மேலே வருகிறது. ஆங்கிலத்திலே சொல்லும்போது அதையே 'கிரி' ஆறு என்றும் 'பம்பாறு' என்றும் சொல்கிறார்கள். அவைகளும் நிறைவேறும் என்று சொல்லிக்கொள்கிறேன். அது சம்பந்தமாகப் பேச்சு வார்த்தைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. மேலும் பல திட்டங்களைப் பற்றி அங்கத்தினர்கள் இங்கே குறிப்பிட்டிருக்கின்றார்கள். அந்தத் திட்டங்கள் யாவும் நிராகரிக்கப்படாது. அவைகள் எல்லாம் பல்வேறு கட்டங்களில் ஆய்வில் இருந்து கொண்டிருக்கின்றன.

நமது மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. சி. மணி அவர்கள் காண்ட்ராக்ட் முறையில் உள்ள குறைகளைப் பற்றியெல்லாம் சொன்னார்கள். கமிட்டிகள் போடு வதால் வேலைகள் காலதாமதமாக நடக்கின்றன என்று குறிப்பிட்டுச் சொன்னார் கள். அங்கத்தினர் அவர்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன். பொதுவாக இன்ஜினியர்களும் காண்ட்ராக்டர்களும் சேர்ந்துகொண்டுவிடுகிறார்கள் என்ற குறையுண்டு. அதனால்தான் வேலைகள் நடைபெறுவதில்லை என்றும், எதிர் பார்த்த அளவுக்கு தரமாக நடைபெறுவதில்லை என்றும் சொல்லுகிறார்கள். கொடுக்கப்பட்டிருக்கின்ற வேலைகளைக் கண்காணிக்க மக்கள் பிரதிநிதிகள் அடங்கிய ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அவர்களும் அதில் [illegible]

கொள்வதற்கு அல்ல, கண்காணிப்பதற்காக என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மக்கள் பிரதிநிதிகள் அதில் கண்காணிப்பாக இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் அந்தக் குழுவே ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. எங்காவது காலதாமதம் இருந்தால், திட்டமிட்டபடி வேலைகள் நடைபெறாமல் இருந்தால் அதிலே குறைபாடுகள் இருக்கின்றன என்றால், அதையெல்லாம் குழு கவனித்துக் கேட்க வேண்டும். குறிப்பிட்ட வேலைகளுக்காக ஒதுக்கப்பட்ட பணத்தை அந்தத் திட்டத்திற்குச் சரியாகச் செலவழிக்கவில்லை என்பதை அறிந்ததும், அதைப் பற்றி அரசின் கவனத்திற்குக் கொண்டுவரலாம். மக்கள் பிரதிநிதிகள் அவைகளைக் கண்காணிக்க வேண்டும், அவைகளைச் செம்மைப்படுத்த வேண்டும் என்பதற்காகத்தான் அவர்களும் அந்தக் குழுவில் இடம் பெறச் செய்திருக்கிறோம் என்பதை நான் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(பிற்பகல் 1-40)

ஆக்கிரமிப்புகள்பற்றிச் சொன்னார்கள். அது தமிழ் நாட்டிலே மிகப் பெரிய பிரச்சினை. ஏரிகளானாலும் சரி, குளங்களானாலும் சரி, கண்மாய்களானாலும் சரி, ஆறுகள் ஆனாலும் சரி, கால்வாய்களானாலும் சரி, வாய்க்கால்களானாலும் சரி, அவைகளினுடைய பகுதிகளிலே ஆக்கிரமிப்புகள் வருகின்றன. அவை அத்தனையும் பொதுப் பணித் துறையின்கீழ் இருப்பதல்ல. அணை மட்டும் பொதுப் பணித் துறையின்கீழ் இருக்கும். அதை ஒட்டிய புறம்போக்கு நிலங்கள் வருவாய்த் துறையின்கீழ் இருக்கும். அங்குள்ள கணக்குப்பிள்ளை யாருக்கு வேண்டுமானாலும் அந்த நிலங்களை ஒதுக்கி, அங்கே அவர்களைப் பயிரிடச் செய்துவிடுகிறார். அரசாங்கம் இந்த முறையை மாற்ற வேண்டுமென்று முடிவு செய்திருக்கிறது. எல்லா நிலங்களையும் பொதுப் பணித் துறையே கையகப்படுத்திக்கொண்டு, எந்தெந்த நீர் நிலைகளுக்கு, நீர் வழிகளுக்கு அவை ஏற்கெனவே உரிமை பெற்றதோ, அவற்றை மீண்டும் திரும்பப் பெற கவனத்தோடு செயல்படுவோமென்பதையும், ஆக்கிரமிப்புகள் நிச்சயமாக அனுமதிக்கப்படமாட்டாது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தத் துறையைப் பொறுத்தவரையில், இன்னும் பல கருத்துக்களை உறுப்பினர்கள் எடுத்துச் சொல்லியிருந்தாலும், அவற்றுக்குப் பதில் சொல்லவில்லை என்று கருதத் தேவையில்லை. என்னென்ன கருத்துக்களை சட்ட மன்ற மேலவையில் பேசியிருக்கிறார்களோ அவைகளையெல்லாம் குறிப்பெடுத்து, அதன் மீது நீர்ப்பாசனத்துறை நடவடிக்கை எடுக்கும். நிறைவேற்றக்கூடிய திட்டங்களை நிறைவேற்றும். நிறைவேற்ற முடியாவிட்டால், அதற்கான காரணங்களை எடுத்துச் சொல்லும். அடுத்த ஆண்டு நீர்ப்பாசனத்துறை கொள்கை விளக்கக்





திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன
குறிப்பு வரும்போது, என்னென்ன திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன என்பது நூல் வடிவில் மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தரப்படும். தொடர்ந்து நீர்ப்பாசனத் துறை குறித்து மேலவை, பேரவை உறுப்பினர்கள் கருத்துக்கள் சொல்லும் முறையில் ஓர் ஆலோசனைக் குழு அமைக்கப்படும். அந்த ஆலோசனைக் குழு அடிக்கடி கூடி, ஆலோசனை வழங்கும். அதன் அடிப்படையில் திட்டங்களை நிறைவேற்றுவதற்கும், காரியங்களை மேற்கொள்வதற்கும் ஏதுவாக அந்தக் குழுவும் அமைக்கப்படுமென்று கூறி, இங்கே நல்ல யோசனைகளைக் கூறிய மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நன்றி கூறி, அமைகிறேன்.

திரு ஆ. திராவிடமணி: பாசன வசதி பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பிலே 'அப்பகுதிகளைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாநிலச் சட்ட மன்ற உறுப்பினர்கள்' என்று மட்டும் சொல்லப்பட்டிருக்கிறது. மேலவை உறுப்பினர்களும் அந்தக் குழுவில் இருப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: சட்ட மன்ற உறுப்பினர்கள் என்றாலே மேலவை, பேரவை இரண்டையும் குறிக்கும்.

அவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. மீண்டும் அவை நாளை காலை 10-30 மணிக்குக் கூடும்.

(பிற்பகல் 1-42)

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

## 5. அவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. Statutory Rules and Orders.

305. Supplementary Report of the Comptroller and Auditor-General of India (Civil) for the year 1975-76. [Laid on the table of the House under Article 151 (2) of the Constitution of India].

306. Second Annual Report of the Madurai Pandiyan Engineering Corporation Limited, Madurai for the year 1976. [Laid on the table of the House under section 619(A) of the Companies Act, 1956 (Central Act I of 1956)].

307. Fifth Annual Report of the Pandiyan Roadways Corporation Limited, Madurai for the year 1976. [Laid on the table of the House under section 619(A) of the Companies Act, 1956 (Central Act I of 1956)].

308. Third Annual Report of the Madurai Pandiyan Engineering Corporation Limited, Madurai for the year 1977. [Laid on the table of the House under section 619(A) of the Companies Act, 1956 (Central Act I of 1956)].

309. Sixth Annual Report of the Pandiyan Roadways Corporation Limited, Madurai for the year 1977. [Laid on the table of the House under section 619(A) of the Companies Act, 1956 (Central Act I of 1956)].

310. Fifth Annual Report of the Tamil Nadu Theatre Corporation Limited, Madras, for the year 1976–77. [Laid on the table of the House under section 619 (A) of the Companies Act, 1956 (Central Act I of 1956)].

*B. Reports, Notifications and Other Papers.*

* 85. Objectives, Programmes & Implementation of the Higher Secondary Education in Tamil Nadu. (Tamil).

§ 86. Policy Note on the Tamil Nadu Khadi and Village Industries Board for the year 1978–79. (English and Tamil).

§ 87. Note on Labour in Tamil Nadu. (English & Tamil).

§ 88. Policy Note on Animal Husbandry for the year 1978–79 (English and Tamil).

§ 89. Performance Budget on Animal Husbandry Department for the year 1978–79. (English and Tamil).

90. Review of activities of Tamil Nadu Poultry Development Corporation Limited for the year 1977–78. (English and Tamil).

§ 91. Policy Note on Irrigation for the year 1978–79. (English and Tamil).

92. Demand No. 12—Administration of the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act, 1959 (English and Tamil).

* Laid on the table of the House on 16th March 1978.
§ Circulated to all M.L.Cs. on 16th March 1978.



இணைப்பு I

(16 ஆம் பக்கத்தில் இனம் 4-க்கான அடிக் குறிப்பைக் காண்க)

## 1978-79 ஆம் ஆண்டு வேளாண்மைத் துறைக்கான கொள்கை விளக்கம்

தமிழ் நாட்டின் வேலை வாய்ப்பிற்கும், வருமான உற்பத்திக்கும்
வேளாண்மை சிறப்பு மிக்க கருவூலமாக விளங்குகின்றது.
உழவர்களுக்கு தொழில் நுட்ப வழிமுறைகளையும் அதற்கு உறு
துணையான உதவிகளையும் வழங்குவதன் வாயிலாக வேளாண்மைத்
துறை உற்பத்தியைப் பெருக்குவதற்கு வழி வகுக்கிறது. இத்
துறையின் நேரடி நிர்வாகத்தில் தொடர்ச்சியாக இணைந்து செயல்
படும் வேளாண்மை பரிசோதனை நிலையங்கள் மூலமாகவும்,
அனுசரணை ஆராய்ச்சிகள் மூலமாகவும், தமிழ்நாடு வேளாண்மைப்
பல்கலைக் கழகத்துடனும் மற்றைய நிறுவனங்களுடனும் நெருங்
கிய தொடர்பு கொள்வதின் வாயிலாகவும், இத்துறை வேளாண்
மையில் ஏற்படுகின்ற வழிமுறைப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்ப
துடன் வேளாண்மை வளர்ச்சிக்கு வேண்டிய புதிய வழிமுறை
களையும் பெற்றுத் தருகின்றது. அரசு விதைப் பண்ணைகளிலும்,
தனியார் வயல்களில் நடத்தும் விதை மையங்கள் மூலமாகவும்,
தரமான விதைகள் உற்பத்தி செய்யப்பட்டு வேளாண்மைக்
கிடங்குகளின் மூலமாக விநியோகிக்கப்படுகின்றன. இறக்குமதி
மூலமாகவும் உற்பத்தியாளர்களிடமிருந்தும் உரங்களைப் பெற்று
கூட்டுறவு மற்றும் தனியார் துறை வாயிலாக விநியோகிக்கப்
படுகின்றன. வேளாண் கிடங்குகள், கூட்டுறவுத் துறை மற்றும்
தனியார் துறை வாயிலாக பயிர்ப் பாதுகாப்பு மருந்துகள் விநி
யோகிக்கப்படுகின்றன. முக்கியமான எல்லா இடுபொருட்களின்
தரக்கட்டுப்பாட்டினை இத்துறை கண்காணிக்கின்றது. நிலத்தினைச்
சமன்படுத்துவதற்கும், நிலத்தடி நீரை வெளிக் கொணர்வதற்கும்
தேவையான பொறியியல் கருவிகளை இத்துறை நியாயமான
கட்டணத்தில் வாடகைக்குத் தருகின்றது. பிற்பட்ட பகுதிகள்,
வறட்கி சார்பு பகுதிகள், மலை வாழ் மக்கள் வாழும் பகுதிகள்
ஆகியவைகளின் முன்னேற்றத்திற்காக தீட்டப்பட்ட சிறப்புத்
திட்டங்களை இத்துறை செயல்படுத்தி வருகிறது.

### 1977–78ஆம் ஆண்டின் முன்னேற்றம்

பருவ நிலை

தொடர்ந்து நிலவிய வறட்சியான ஆண்டுகளுக்குப் பின்
1977-78-ம் ஆண்டில் சாதகமான பருவநிலை இருக்குமென
எதிர்பார்க்கப்பட்டது. தென்மேற்குப் பருவ மழை ஓரளவு
தாமதித்து பெய்தாலும் வழக்கமான அளவு இருந்தது. எனவே,
முதற் பயிரில் ஓரளவு ஏற்பட்ட குறைவை சம்பா பருவத்தில்
ஈடு செய்ய முடிந்தது.

ஆனால், வட கிழக்குப் பருவக்காற்று அளவுக்கு அதிகமாக இம்மாநிலத்தின் எல்லா பகுதிகளிலும் கடுமையான மழையையும் புயலையும் கொண்டு வந்தது. நவம்பர் திங்கள் இரண்டாவது வாரத்தில் இம்மாநிலத்தைத் தாக்கிய கடும் புயலும், வெள்ளமும், தஞ்சாவூர், திருச்சி, தென் ஆற்காடு, புதுக்கோட்டை மற்றும் மதுரை மாவட்டங்களில் உள்ள பயிர்களுக்கு மிகுந்த சேதத்தை விளைவித்தது. இதன் விளைவாக நெல் உற்பத்தியில் இரண்டு இலட்சம் டன் அளவிற்கும் இதர பயிர்கள் உற்பத்தியில் ஒரு இலட்சம் டன் அளவிற்கும் இழப்பு ஏற்பட்டது.

## 1977–78ஆம் ஆண்டின் சாதனைகள்

இந்நிலையினைச் சமாளிப்பதற்காக கீழ்க்கண்ட நிவாரண நடவடிக்கைகள் அறிவிக்கப்பட்டு அவைகள் மிக வேகத்துடன் செயலாக்கப்பட்டன :—

1. சிறு விவசாயிகள் மற்றும் குத்தகைதாரர்கள் தாளடி பயிர் செய்வதற்காக இலவசமாக நெல் விதை வழங்குதல்.

2. தாளடி பயிருக்கான உரங்களும், சம்பா பயிருக்கு மேலுரத்திற்கான தழைச் சத்து உரங்களும் 25 சதவிகித மானிய விலையில் சிறு விவசாயிகள் மற்றும் குத்தகைதாரர்களுக்கு வழங்குதல்.

3. பயிர்ப் பாதுகாப்பு மருந்துகள் எந்தவித பாகுபாடுமின்றி எல்லா விவசாயிகளுக்கும் தமிழ்நாடு முழுவதற்கும் 25 சதவிகித மானிய விலையில் வழங்குதல்.

4. பாதிக்கப்பட்ட தென்னைமரங்களுக்குப் பதிலாக புதிதாக தென்னங்கன்றுகள் வளர்ப்பதற்காக சிறு விவசாயிகளுக்கும் குத்தகைதாரர்களுக்கும் இலவசமாக தென்னங்கன்றுகள் வழங்குதல்.

5. மண் மேடிட்ட நிலங்களை சிறு விவசாயிகள் மற்றும் குத்தகைதாரர்களுக்கு இலவசமாகவும், மற்ற விவசாயிகளுக்கு 50 சதவிகித மானிய செலவிலும் சீர்திருத்தம் செய்து தருதல்.

6. கரும்பு மற்றும் வாழை பயிரிட்டிருந்த சிறு விவசாயிகள் மற்றும் குத்தகைதாரர்களுக்கு இப்பயிர்களைப் புதுப்பிக்க ஏக்கர் ஒன்றுககு ரூ. 100 உதவித் தொகை வழங்குதல்.

7. வெற்றிலைப் பயிரிட்டு இருந்த சிறு விவசாயிகள் மற்றும் குத்தகைதாரர்களுக்கு வெற்றிலைக் கொடிக்காலை மறுபடியும் ஆரம்பிக்க ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 500 (ஐநூறு மட்டும்) உதவித் தொகை வழங்குதல்.



வெள்ளத்தால் ஏற்பட்ட இழப்புகளை ஈடு செய்யவேண்டி ஏரிகளிலும் கிணறுகளிலும் உள்ள நீர் வசதியைக் கொண்டு 0·60 இலட்சம் ஹெக்டேர் கூடுதலான பரப்பில் நெல்லும், 0·40 இலட்சம் ஹெக்டேர் கூடுதலான பரப்பில் சிறுதானியங்களும், 1·20 இலட்சம் ஹெக்டேர் கூடுதலான பரப்பில் நிலக்கடலையும் கோடையில் பயிரிட பெரிய அளவில் திட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன் விளைவாக 1977–78-ம் ஆண்டில் கீழ்க்கண்ட உற்பத்திக் குறியீட்டை அடைய முடியும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது:—

| | |
|---|---|
| அரிசி .. .. .. | 62·00 இலட்சம் டன். |
| சிறு தானியங்கள் .. .. .. | 19·00 இலட்சம் டன். |
| பயறு வகைகள் .. .. .. | 3·00 இலட்சம் டன். |
| எண்ணெய் வித்துக்கள் .. .. | 14·90 இலட்சம் டன். |
| கரும்பு (வெல்லம்) .. .. | 14·00 இலட்சம் டன். |
| பருத்தி .. .. .. .. | 3·75 இலட்சம் பேல்கள். |

## 1978–79-ம் ஆண்டுக்கான குறிக்கோள்களும் மேற்கொள்ளவிருக்கும் திட்டங்களும்

உற்பத்தித் திட்டங்கள் மூலம் பெற்ற பயிர் முன்னேற்றங்களையும், உற்பத்திக்கான வாய்ப்பினையும் கருத்தில் கொண்டு, 1978–79-ம் ஆண்டில் உணவு தானியங்கள் உற்பத்திக் குறியீடு 87·25 இலட்சம் டன்னாகவும், வணிகப் பயிர்கள் உற்பத்திக் குறியீடு 30·76 இலட்சம் டன்னாகவும் கீழே குறிப்பிட்டபடி நிர்ணயிக்கப்பட்டுள்ளது :—

| | 1978–79-ம் ஆண்டிற்கு திட்டமிடப்பட்டுள்ள குறியீடு. (இலட்சம் டன்கள்). |
|---|---|
| அரிசி .. .. .. .. .. | 64·00 |
| சிறு தானியங்கள் .. .. .. .. | 20·00 |
| பயறு வகைகள் .. .. .. .. | 3·25 |
| எண்ணெய் வித்துக்கள் .. .. .. | 15·70 |
| கரும்பு (வெல்லம்) .. .. .. | 14·30 |
| பருத்தி (இலட்சம் பேல்) .. .. .. | 4·25 (0·76 இலட்சம் டன்) |

## உற்பத்தி குறியீடுகளை அடைவதற்கான செயல் திட்டங்கள்

### நெல்லும் சிறு தானியங்களும்

புதிய உயர் விளைச்சல் ரகங்களையும், வீரிய ஒட்டு ரகங்களையும்
பரப்புவதன் வாயிலாகவும், அதிக விளைச்சல் தரும் திறன்
வாய்ந்த ரகங்களின் பரப்பளவை அதிகரித்தும், முறையான
உழவியல் முறைகளையும், உரிய நீர் பராமரிப்பு முறைகளை
மேற்கொண்டும் நெல்லில் கூடுதலாக 2 இலட்சம் டன்னும்,
சிறு தானியங்களில் 1 இலட்சம் டன்னும் பெற முயற்சிகள்
மேற்கொள்ளப்படும்.

உயர் விளைச்சல் ரகங்கள் பயிரிடும் பரப்பு 22 இலட்சம்
ஹெக்டேரிலிருந்து 22·40 இலட்சம் ஹெக்டேராக அதிகரிக்கப்
படும். இதில் குறிப்பாக புழுதிக்கால் விதைப்புப் பகுதிகளில்
தீவிர கவனம் செலுத்தப்படும். 1977–78 ஆம் ஆண்டில் 18
இலட்சம் ஹெக்டேர் பரப்பளவில் பயிரிடப்பட்ட ஐ. ஆர். வகை
சார்பினங்கள் பரப்பை 19·00 இலட்சம் ஹெக்டேராக அதிகரிக்
கப்படும். மற்ற ரகங்களை விட அதிக உற்பத்தித் திறன் வாய்ந்த
ஆடுதுறை-31 ரகத்தை செங்கல்பட்டு, வட ஆற்காடு, மற்றும்
தென் ஆற்காடு மாவட்டங்களில் நவரை மற்றும் சொர்ணவாரி
பருவங்களில் கூடுதலாக 0·40 இலட்சம் ஹெக்டேர் பரப்பில்
பயிரிடப்படும். இதற்கென 9,500 டன் சான்றிதழ் பெற்ற
விதைகள் விநியோகம் செய்யப்படும். சமச்சீர் உரமிடுதல்,
பயிர்ப்பாதுகாப்பு முறைகளை முக்கியமாக அடிக்கடி பூச்சி, நோய்
களால் தாக்கப்படும் இடங்களில் தீவிரப்படுத்துதல், புகையான்
தடுப்பு, விதையுடன் மருந்து கலத்தல் ஆகிய மற்ற நடவடிக்கை
களும், உற்பத்திக் குறியீட்டை அடைய மேற்கொள்ளப்படும்.

1977–78-ஆம் ஆண்டில் 5·10 இலட்சம் ஹெக்டேராக இருந்த
உயர் விளைச்சல் சிறுதானியங்களின் பரப்பு 1978–79-ல் 5·60
இலட்சம் ஹெக்டேராக அதிகரிக்கப்படும். இந்த அதிகப்படியான
பரப்பு தீவனச் சோளம் பயிரிடும் பரப்பளவில் 30,000
ஹெக்டேரில் உயர் விளைச்சல் தரவல்ல வீரிய ஒட்டு சோள ரகங்
கள் பயிரிடுவதன் மூலமும், இருபயிர் சாகுபடி திட்டத்தின்கீழ்
20,000 ஹெக்டேர் பரப்பளவில் வீரிய ஒட்டுக் கம்பு பயிரிடுவதன்
மூலமும் மேற்கொள்ளப்படும். பாசன வசதிக்கு வாய்ப்புள்ள
பகுதிகளில் பாசனப் பயிர் பரப்பை அதிகரிக்க முயற்சிகள் மேற்
கொள்ளுவதுடன் மானாவாரிப் பகுதிகளில் அதற்கேற்ற உழவியல்
முறைகளை பின்பற்றுவதற்கான சிறப்பு முயற்சிகள் மேற்கொள்ளப்
படும். இத்துறை கீழ்க்கண்ட அளவில் விதை விநியோகம் செய்ய
திட்டமிட்டுள்ளது:—



**வீரிய ஒட்டுரக சிறுதானியங்கள்.**

| | டன்கள். |
|---|---|
| கம்பு | 150 |
| சோளம் | 430 |
| மக்காச்சோளம் | 315 |
| கேழ்வரகு | 175 |

### பயறு வகைப் பயிர்கள்

தற்போது பயறு வகைப் பயிர்கள் சாகுபடி செய்யப்படும்
10·40 இலட்சம் ஹெக்டேர் பரப்பளவை இரு பயிர் சாகுபடி
மற்றும் கலப்பு பயிர் சாகுபடி வாயிலாக 11·00 இலட்சம் ஹெக்
டேராக அதிகரிக்கப்படும். 0·80 இலட்சம் ஹெக்டேர் பரப்பிற்கு
நுண்ணுயிர் குடுவைகள் விநியோகம் செய்ய திட்டமிடப்பட்டுள்
ளது. 0·40 இலட்சம் ஹெக்டேர் பரப்பளவில் இலை வழியாக
மணிச்சத்து தெளிக்கும் முறை மேற்கொள்ளப்படும். இவ்வாண்டு
முதன் முறையாக 2,000 ஹெக்டேரில் தழைச்சத்தையும்,
மணிச்சத்தையும் அடியுரமாக இடும் புதிய உத்தி மேற்கொள்ளப்
படும். இத்துடன் உழவியல் முறைகள் உரிய பராமரிப்பு முறை
கள் ஆகியவற்றில் தீவிர கவனம் செலுத்தப்படும். 1,700 டன்
பயறு வகைப் பயிர் விதைகள் விவசாயிகளுக்கு விநியோகம்
செய்யப்படும்.

### எண்ணெய் வித்துப் பயிர்கள்

கடலை எண்ணெய் மற்றும் நல்லெண்ணெய் ஆகியவற்றின்
அதிகப்படியான தேவையைக் கருத்தில்கொண்டு நிலக்கடலை, எள்,
சூரியகாந்தி ஆகிய பயிர்களின் பரப்பு மற்றும் உற்பத்தித் திறனை
அதிகரிக்க பெரிய அளவில் திட்டமிடப்பட்டுள்ளது. எண்ணெய்
வித்துக்களின் உற்பத்தி 14.90 இலட்சம் டன்னிலிருந்து 15·70
இலட்சம் டன்னாக அதிகரிக்கப்படும். எண்ணெய் வித்துக்கள்
88,000 ஹெக்டேர் பரப்பளவில் கூடுதலாக பயிரிடப்படும். இதில்
நிலக்கடலை 20,000 ஹெக்டேரும், எள் 10,000 ஹெக்டே
ரும், சூரியகாந்தி 8,000 ஹெக்டேரும் அடங்கும். நிலக்கடலையில்
டி.எம்.வி. 7, டி.எம்.வி. 9, டி.எம்.வி. 10 ஆகிய திருந்திய
ரகங்களும், எள்ளில் டி.எம்.வி. 3, டி.எம்.வி. 4 ஆகிய திருந்திய
ரகங்களும், சூரியகாந்தியில் கெ.2 ரகமும் பெரும் பரப்பளவில்
பயிரிட முயற்சிகள் மேற்கொள்ளப்படும். மேலும் 750 டன்
நுண்ணூட்டல் கலவையும், 12,000 டன் ஜிப்சமும் நிலக்கடலைப்
பயிருக்கு விநியோகிக்கப்படும். 5,000ஹெக்டேர் எள் பரப்
பளவில் மாங்கனீஸ் சல்பேட்டு இடுதல் மேற்கொள்ளப்படும். கீழ்க்
கண்ட அளவில் விதைகள் இத்துறை மூலமாக விநியோகிக்கப்
படும்:

| | டன்கள் |
|---|---|
| நிலக்கடலை | 4,320 |
| எள் | 50 |
| சூரியகாந்தி | 900 |

## பருத்தி

பருத்தி உற்பத்திக் குறியீடான 4·25 இலட்சம் பேல் அளவை அடையும் பொருட்டு, பருத்தி பயிரிடும் பரப்பு 3.20 இலட்சம் ஹெக்டேரிலிருந்து 3·50 இலட்சம் ஹெக்டேராக அதிகரிக்கப்படும். இதில் 10,000 ஹெக்டேர் இறவையிலும், 20,000 ஹெக்டேர் மானாவாரியிலும் பயிரிடும் பரப்பளவு அதிகரிக்கப்படும். தற்போதுள்ள தழைச்சத்து பயன்படுத்தும் அளவை இறவையில் கூடுதலாக ஏக்கருக்கு 8 கிலோ என்ற அளவிலும் மானாவாரியில் 2 கிலோ என்ற அளவிலும் அதிகரிக்கப்படும். 6,000 ஹெக்டேர் பரப்பளவில் ஒட்டுமொத்தமான மருந்து தெளிப்பு மேற்கொள்ளப்படும். இத் துறை மூலமாக 50 சதவீதம் இறவைப் பயிருக்கும், 30 சதவீதம் மானாவாரிப் பயிருக்கும் நிறைவு செய்யும் வகையில் 1,760 டன் விதை விநியோகம் செய்யப்படும்.

## கரும்பு

கரும்பு சாகுபடியின் மொத்தப் பரப்பு 1.45 இலட்சம் ஹெக்டேராக இருக்கும்பொருட்டு கூடுதலாக 1,000 ஹெக்டேரில் கரும்பு பயிரிடப்படும். வயலில் போதுமான பயிர் எண்ணிக்கை இருக்குமாறு செய்வதன் மூலமும், ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு முறைகளை மேற்கொள்ளுவதன் மூலமும், சமச்சீர் உரமிடுவதன் மூலமாகவும் உற்பத்தித் திறனை ஏக்கர் ஒன்றுக்கு 38 டன்னிலிருந்து 40 டன்னாக உயர்த்தப்படும். மேலும், நோய் தாக்காத தரம் வாய்ந்த குறுகிய வயதுடைய விதைக் கரணைகளை விநியோகிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.



**கரும்புச்சாலை அபிவிருத்தித் திட்டம்—**

கரும்புச் சாலை அபிவிருத்தித் திட்டம் சர்க்கரை ஆலைப் பகுதிகளில் கரும்பை உடனடியாக ஆலைக்கு எடுத்துச் செல்லும் பொருட்டு பழைய சாலைகளை செப்பனிடவும், புதிய சாலைகள் அமைக்கவும் ஏற்படுத்தப்பட்ட திட்டமாகும். மேற்படி திட்டத்தின் கீழ் மூன்று ஆண்டுகளில் அடைந்த முன்னேற்றத்தின் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:—

| ஆண்டு. | செலவு (ரூபாய் இலட்சத்தில்). | புதிய சாலை அமைத்தல். (கி.மீ.). | சரளைக் கல் பரப்புதல். (கி.மீ.). | தார் போடுதல் (கி.மீ.) | சிறு பாலங்கள் (எண்கள்) | பாலங்கள் (எண்கள்) | தரைப் பாலங்கள். (எண்கள்). |
|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
| 1975-76 .. .. | 70·22 | 68·02 | 76·26 | 65·60 | 158 | 13 | 6 |
| 1976-77 .. .. | 75·00 | 31·51 | 72·28 | 58·64 | 85 | 16 | 5 |
| 1977-78 (31-12-1977 முடிய.) | 46·05 | 32·67 | 32·92 | 60·83 | 45 | 10 | 3 |

நந்நோயினால் பாதிக்கப்பட்ட 14,400 ஹெக்டேர் பரப்பளவிலும் மத்திய அரசு உதவித் தொகையுடன் திட்டம் ஒன்று செயல்படுத்தப்பட்டு வருகிறது. உரம், பூச்சிக் கொல்லி மருந்து வகைகள் போன்ற இடுபொருள்கள் 50 சதவிகிதம் சகாய விலையில் சிறிய மற்றும் நடுத்தர விவசாயிகளுக்கும், முழுத் தொகையில் மற்ற விவசாயிகளுக்கும் அளிக்கப்படுகின்றன.

மந்தாரின் ஆரஞ்சுப் பழ வகையினைப் பெருக்குவதற்கான திட்டம் ஒன்று பழனி மலைக் குன்றுகளிலும், கோடைக்கானல் பகுதியிலும் 250 ஹெக்டேர் பரப்பளவில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின் வாயிலாக உற்பத்தியாளர்களுக்கு தரமான ஆரஞ்சுப் பழக் கன்றுகள் வழங்கப்படுகின்றன. சீரான வெப்ப நிலைக்குக் குறைவாக உள்ள பகுதிகளில் வளர்ச்சியடையும் பழ வகைகள், மணப்பொருள்கள் மற்றும் வேறு பழ வகைகளை உற்பத்தி செய்வதற்கான திட்டமொன்று கன்னியாகுமரி, மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் செயல்படுத்த அனுமதிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் மூன்று ஆண்டுகளில் 2,400 ஹெக்டேர் பரப்பளவில் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின்படி, உரம், பூச்சிக் கொல்லிமருந்துகள் போன்ற இடுபொருள்கள் 50 சதவிகித விலையில் அளிக்கப்படும். தமிழ் நாட்டில் வடஆற்காடு, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, சேலம், தர்மபுரி, மதுரை மாவட்டங்களில் ஏற்றுமதிக்குரிய வாழைப்பழ ரகங்களைப் பெருக்குவதற்கான திட்டமொன்று செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் மத்திய அரசுத் திட்டமாகும்.

ஆராய்ச்சிப் பணிகள்

1977-78-ம் ஆண்டு விவசாயத் துறை 16 புதிய ரகங்களை வெளியிட்டது. தமிழ்நாடு விவசாய பல்கலைக் கழகம் 8 புதிய ரகங்களை வெளியிட்டது. இப்புதிய ரகங்களின் விதைகளைப் பெருக்கம் செய்து அவைகளை விவசாயிகள் பெருத்த அளவில் தங்கள் நிலங்களில் சோதனை செய்து பார்க்க விநியோகிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. பயிரிடும் முறையில் அபிவிருத்தி, மண் வளப் பராமரிப்பு, மானாவாரி சாகுபடி, நீர்ப் பராமரிப்பு, பயிர் உற்பத்தி பராமரிப்பு ஆகியவை சம்பந்தப்பட்ட சாகுபடிப் பிரச்சினைகளைக் கவனித்துத் தீர்வு காண இத் துறை தொடர்ந்து செயலாற்றும். இத் துறையில் பணியாற்றும் களப் பணியாளர்களுக்கும் முற்போக்கு விவசாயிகளுக்கும் பயிற்சியளிக்க ஆராய்ச்சி நிலையங்கள் பயன்படுத்தப்படும்.

நீலகிரி மாவட்ட மலைப் பகுதி மேம்பாட்டு திட்டம்

நீலகிரி மாவட்டத்தின் தனித் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ள மண் வளப் பாதுகாப்பு, விதை உற்பத்தி சிறிய விவசாயிகளின், தேயிலை மற்றும் காப்பி தோட்டங்



களை அபிவிருத்தி செய்தல் ஆகிய திட்டங்கள் இந்த ஆண்டும் தொடரப்படும். இந்த திட்டங்களுக்காக ரூ. 110·38 இலட் சம் நிதி ஒதுக்கீடு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத் தில் தோட்டக்கள் மற்றும் மலைவாழ் மக்களின் தேவைகளையும் நிறைவு செய்ய வகை செய்யப்பட்டுள்ளது.

ஒருங்கிணைந்த மானாவாரி வேளாண்மை அபிவிருத்தித் திட்டம்

மானாவாரிப் பகுதி வேளாண் மக்களின் பொருளாதார நிலை யினை உயர்த்தும் பொருட்டு 1971-ம் ஆண்டில் தமிழ் நாட்டில் புதுக்கோட்டை மற்றும் கோவில்பட்டி ஆகிய இரண்டு இடங்களில் ஒருங்கிணைந்த மானாவாரி வேளாண்மை அபிவிருத்தித் திட்டம் துவக்கப்பட்டது. இத்திட்டம் மானாவாரி சாகுபடியில் சிறு பாசனம், காடு வளர்ப்பு, நிலச் சீர்திருத்தம், நிலச் சமன்படுத்தல்- குளங்களில் தூர் எடுத்தல், பாசன வசதிகள் அளித்தல், இடு பொருட்களையும் கருவிகளையும் வழங்குதல், உழவர்களுக்குப் பயிற்சியளித்தல், செயல் விளக்கப் பண்ணைகள் அமைத்தல் போன்றவற்றில் ஒருங்கிணைந்த முயற்சிகளை மேற்கொள்ளும். 1978-79-ம் ஆண்டில் இத்திட்டத்திற்கென ரூ. 14·16 இலட்சம் ஒதுக்கீடு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

பயிற்சித் திட்டம் :

விவசாயிகளுக்கு பயிற்சி அளிப்பதற்காக நடப்பு ஆண்டில் துவக்கப்பட்ட இரண்டு உழவர் பயிற்சி நிலையங்களையும் சேர்த்து தற்போது 11 உழவர் பயிற்சி நிலையங்கள் இயங்கி வருகின்றன. இந்த ஆண்டில் மலைப் பகுதி திட்டத்தின்கீழ் ஊட்டியில் உழவர் பயிற்சி நிலையம் ஒன்றும் மத்திய அரசு உதவியின்கீழ் சேலத்தில் ஒரு உழவர் பயிற்சி நிலையமும் இராமநாதபுரத்தில் ஒரு உழவர் பயிற்சி நிலையமும் நிறுவப்பட உள்ளன. தற்போது இயங்கி வரும் 13 வேளாண்மைப் பள்ளிகள் மூலம் ஆண்டொன்றுக்கு 390 இளைஞர்களுக்கு அளித்துவரும் பயிற்சி தொடர்ந்து மேற் கொள்ளப்படும்.

விற்பனையும் தரக் கட்டுப்பாடும் :

வேளாண்மை விளைபொருள் விற்பனைத் துறை ஒன்றைத் தனியாக 1977-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 14-ம் தேதியி லிருந்து அரசு ஏற்படுத்தியுள்ளது. விற்பனைக் குழுக்கள் தங்களது பணிகளை விரிவுபடுத்திக் கொள்வதற்கும் விற்பனை வசதிகளை நீட்டிக்கவும், விவசாயிகளின் விளைபொருட்கள் நல்ல விலையைப் பெறுவதற்கும் இந்த தனித் துறை மிக்க உதவியாக இருக்கும்.

இன்றியமையாப் பொருட்களை 'அக்மார்க்' தரம் பிரிக்கும் திட்டத்தை இத்துறை தீவிரப்படுத்தும், மேலும், ஒழுங்குமுறை விற்பனை கூடங்களுக்கு வேளாண்மை விளை பொருட்களை உற்பத்தியாளர்கள் அதிக அளவில் கொண்டுவந்து பயனடைவதற்கான தகுந்த நடவடிக்கைகளை எடுக்கும். உற்பத்தியாளர்களுக்கு உதவியாக மத்திய நிதி உதவியுடன், ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ், விற்பனைக் குழுக்கள், ஆறு தரம்பிரிக்கும் நிலையங்களை— அதாவது புகையிலைக்கு ஒரு நிலையம் முந்திரிக்கு இரண்டு நிலையங்கள், கப்பாஸ் பருத்திக்கு இரண்டு நிலையங்கள், நிலக்கடலைக்கு ஒரு நிலையம் அமைப்பதற்கான திட்டம் ஒன்றுக்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. மேற்சொன்ன திட்டத்தின்கீழ் நிலக்கடலைப் பொருட்களைத் தரம் பிரிப்பதற்கான ஆய்வுக்கூடம் ஒன்று திருவண்ணாமலையில் அமைக்கப்பட்டுள்ளது. அக்மார்க் பொருட்களின் மாதிரிகளை ஆய்வு செய்வதற்குத் தலைமைக் கட்டுப்பாட்டு ஆய்வுக் கூடம் ஒன்றை அமைப்பதற்கான செயற்குறிப்பு பரிசீலனையில் உள்ளது. 1978 79-ல் 20 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் நிறுவப்படும். வறட்சிக் குட்பட்ட பகுதித் திட்டம் அமுலாக்கப்படும் இராமநாதபுரம் மாவட்டத்தில் ஒன்றும், தருமபுரி மாவட்டத்தில் இரண்டும் ஆக மூன்று ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்கள் ஏற்படுத்துவதற்கான செயற் குறிப்புகள் மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளன. இதற்கான செயல் முறைகளுக்குத் தேவையான ரூ. 7·57 இலட்சங்களை இவ்வரசு மத்திய அரசின் நிதி உதவியாக கோரியுள்ளது. ரூ. 644·41 இலட்சம் மொத்தச் செலவில், 30 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களும், பழங்கள், காய்கறிகளுக்காக 8 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களும் அமைக்கப்படுவதற்கான திட்ட அறிக்கை ஆய்வில் உள்ளது. இதற்காக உலகவங்கியின் உதவி பெறுவது குறித்து எடுக்க வேண்டிய முயற்சிகளும் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன.

**வேளாண்மைப் பொறியியல் :**

இத்துறையின் பொறியியல் பிரிவு பல்வேறு விதமான கருவிகளைக் கொண்டு நில அபிவிருத்தி, மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்பு, நீர்ப் பராமரிப்பு, சிறுபாசனப் பணிகள் போன்றவற்றை மேற்கொள்கிறது. இத்துறையில் 177 டிராக்டர்களும், 163 புல்டோசர்களும், 815 பலதரப்பட்ட துளைக் கருவிகளும் உள்ளன.

**நிலச் சீர்திருத்தம் :**

இவ்வாண்டு, மேற்கூறிய டிராக்டர்களையும், புல்டோசர்களையும் கொண்டு 2,30,000 மணி நேரம் வேலை செய்து 4,340 ஹெக்டேர் நிலத்தைச் சமன்படுத்தவும், 20,400 ஹெக்டேர் பரப்பளவை உழுவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.





**சிறு பாசனம் :**

4,200 குழாய்க் கிணறுகளைத் தோண்டவும், 2,300 கிணறுகளை ஆழப்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், 2,000 கிணறுகளில் துளைகள் இடவும் (Boring) திட்டமிடப்பட்டுள்ளது.

**மண்வளப் பாதுகாப்பு :**

தற்போது ஆண்டொன்றுக்கு இத்திட்டத்தின்கீழ் கொண்டுவரப்படும் 44,000 ஹெக்டேர் பரப்பளவு, 1978 79-ல் 50,000 ஹெக்டேர் பரப்பளவாக அதிகரிப்பதுடன், நீர்பராமரிப்புப் பணிகளில் தனிக் கவனம் செலுத்தப்படும்.

**ஆயக்கட்டுப் பகுதி அபிவிருத்தியும் நீர்பிடிப்பு பராமரிப்பும் :**

விவசாய உற்பத்திக்கு நீர் மிக முக்கியம் வாய்ந்த ஒரு இடு பொருள் ஆகலின் கிடைக்கும் நீரையும், இருக்கும் நிலத்தையும் பயன்படுத்தி உற்பத்தி அளவை அதிகப்படுத்துவதற்காக மண் மற்றும் நீர்ப்பராமரிப்பின் பயனுள்ள முறைகளை விவசாயி களுக்கு திறம்பட எடுத்துக் காட்ட வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதற்காக இத்துறையில் பணியாற்றும் ஒவ்வொரு வேளாண்மைத் துணை அலுவலரும் இயற்கையாக நீர்வடியும் பகுதிகளைத் தெரிந் தெடுத்து ஒரு ஆயக்கட்டு அபிவிருத்திப் பணியையும், ஒரு புஞ்சை நில நீர் வடியும் பகுதி பராமரிப்புத் திட்டத்தினையும் மேற் கொள்வார்கள். மேலும் ஒவ்வொரு மாவட்டத்திலும் 400 ஹெக்டேர் மானாவாரி நிலப்பரப்பு தேர்ந்தெடுக்கப்பட்டு அவற்றில் ஒருங்கிணைந்த நீர் நிலப்பராமரிப்பு முறைகளை விவசாயி களுக்கு விளக்கப்படும்.

**மானாவாரி சாகுபடி :**

தமிழ்நாட்டில் மொத்த சாகுபடிப் பரப்பளவில் 54 சத விகிதம் சொற்பமாக பெய்யும் மழையையே நம்பியுள்ள மானாவாரி நிலங்களாகும். இத்தகைய பகுதிகளில் பயிரின் மகசூல் மிகக் குறைவாகவே இருந்து வந்துள்ளது. குறைந்த வயதுடைய வறட்சியைத் தாங்கும் உயர் விளைச்சல் ரகங்களை உருவாக்கியதன் மூலமாகவும், புதிய உழவியல் முறைகளை மேற்கொண்டதன் விளைவாகவும் மானாவாரி பகுதி பண்ணைகளின் மகசூலையும், வருமானத்தையும் அதிகரிக்க இத்துறை வழி வகுத்துள்ளது. முன்னோடி செயல்வழி மூலம் மானாவாரி சாகுபடியில் பெற்ற அனுபவத்தைக்கொண்டு குறுகிய உயர் விளைச்சல் ரக தானியப் பயிர்கள், பயறு வகைப் பயிர்கள், பருத்தி மற்றும் எண்ணெய் வித்து ரகங்கள் ஆகியவற்றை அறிமுகப்படுத்தி மானாவாரி சாகுபடி முறைகளைப் பரவலாக்க தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

இரு பயிர் சாகுபடி மற்றும் இதர உழவியல் முறைகளைக் கை
யாண்டு உற்பத்தித் திறனை அதிகரிக்கவும் முயற்சி மேற்கொள்
ளப்படும். நடப்பு ஆண்டில் மானாவாரி நிலங்களில் 20,00
ஹெக்டேர் பரப்பளவில் இருபயிர் சாகுபடி மேற்கொள்ளப்படும்

**பிற்பட்ட பகுதிகளின் அபிவிருத்தி :**

பிற்பட்ட பகுதிகள் மற்றும் மலைப் பகுதிகளின் அபிவிருத்தி
கும், அங்கு வாழும் மக்களின் பொருளாதார நிலைமையை மே
படுத்தும் வகையிலும் தனித் திட்டங்கள் செயல்படுகின்றன.
இத்திட்டங்களின் மூலம் அவர்கள் பழ வகைப் பயிர்கள் மற்றும்
இதர இலாபகரமான பயிர்களையும் பயிரிடுவதற்கான வசதிகள்
செய்து தரப்படுகிறது. இத்திட்டம் 5 மாவட்டங்களில்
கிராமப் பகுதிகளில் செயல்படுகிறது. இப்பகுதிகளில் பழச்
செடிகளும் மற்ற இடுபொருட்களும் 50 சத மலிவு விலையில்
வழங்கப்படுகின்றது. கல்ராயன் மலைப் பகுதிகளில் மட்டும்
இவைகள் இலவசமாகவே அளிக்கப்படுகின்றன.

**5. 1978-79-ம் ஆண்டுக்கான புதிய திட்டங்கள்:**

தற்போது நடைமுறையில் உள்ள திட்டங்களோடு கீழ்க்கண்ட
புதிய திட்டங்கள் 1978-79-ம் ஆண்டில் செயலாக்க திட்டமிட
பட்டுள்ளது:—

பொது

தரமான ஆதார விதைகளையும், சான்றிதழ் பெற்ற விதை
களையும் உற்பத்தி செய்ய 24 மாநில விதைப்பண்ணைகளுக்குத்
போதுமான பாசனம் மற்றும் இதர உள்ளமைப்புத் தேவைகள்
ஏற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. ஈரமற்ற, நோய் தாக்காத
விதைகளை உரிய பருவத்தில் வழங்குவதற்கு வழி செய்யும் வகை
யில் விதை சுத்திகரிப்பு நிலையங்களில் மூட்டைகள் அடுக்கிவைக்
இடைச்செருகு கட்டைகள் மற்றும் ஈர அளவை கண்டுபிடிக்கு
கருவிகள் பொருத்தப்படும். மேலும், விவசாயிகளுக்கு வி
யோகிக்கப்படும் விதைகள் தரமானவையாக இருப்பன
உறுதிப்படுத்தும் பொருட்டு விதைச்சான்றளிப்பு அமைப்
ஒன்று தனித்துச் செயல்படும். இதன் மூலம் இந்நிறுவன
விதை உற்பத்தியாளர்களுக்குத் தரமான விதை உற்பத்தி செ
வழிவகைகளை கற்பித்து அவர்களை ஊக்குவிக்கும். தரக்கு
வான விதைகள் உற்பத்தி செய்வோர் மீது சட்டப்படி நடவடிக்
கள் எடுக்கவும் வழிவகுக்கும். விதைப் பரிசோதனை வசதி
அபிவிருத்தி செய்யப்படும். இதற்கென மேலும் ஒரு வி
பரிசோதனை நிலையம் குடுமியான்மலையில் உள்ள அண்ணா ப
யில் நிறுவப்படும்.



80,000 ஹெக்டேர் பயறு வகைப்பயிர் பரப்பில் ஒட்டு
மொத்த மருந்து தூவியும், 20,000 ஹெக்டேர் பரப்பில், டை
அம்மோனியம் பாஸ்பேட் தெளித்தும் பயறு வகைகளின் உற்
பத்தியை அதிகரிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

**வணிகப் பயிர்கள் ;**

வடகரை, பவானிசாகர் மற்றும் துரைராஜ் நகரில் உள்ள
எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி செய்யும் முதன்நிலைப் பண்ணை
களுக்கு பாசன வசதியும் மற்றும் இதர உள்ளமைப்புத் தேவைகளை
வழங்குவதன் மூலம் அபிவிருத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.
பட்டுக்கோட்டை, திப்பம்பட்டி மற்றும் தேவிப்பட்டினத்தில்
உள்ள தென்னை நாற்றங்கால்களுக்கு கூடுதலான பாசன வசதி
அளிப்பதன் மூலம் அவைகளையும் அபிவிருத்தி செய்ய திட்டமிடப்
பட்டுள்ளது. ஒரு இலட்சம் வீரிய ஒட்டுத் தென்னங்கன்றுகள்
பட்டுக்கோட்டையைச் சுற்றியுள்ள பகுதியில் உற்பத்தி செய்யப்
படும். தீவிர தென்னை அபிவிருத்தி திட்டம், கன்னியாகுமரி,
கோயம்புத்தூர் மற்றும் தருமபுரி மாவட்டங்களுக்கு விரிவுபடுத்
தப்படும். தென் ஆற்காடு மாவட்டத்தில் பெரிய அளவில் பழத்
தோட்டம் ஒன்று நிறுவப்படும். இவை பழ வளர்ப்புக்கு ஒரு
செயல் விளக்கப்பண்ணையாக அமையும். கொல்லிமலைக் குன்று
களிலும் மற்றும் கல்ராயன் மலைப் பகுதியிலும் அம்மலை வாழ்
மக்களின் பயனுக்காக பெரிய அளவில் பழத்தோட்டங்கள் நிறுவப்
படும். மற்றும் தரமான பழக்கன்றுகள் உற்பத்தி செய்து அவை
களை உற்பத்தியாளருக்கு வழங்கும் பொருட்டு சேலம் மாவட்டத்
தில் மாதிரி பழத்தோட்டம் மற்றும் நாற்றங்கால் ஒன்று நிறுவப்
படும்.

**ஆராய்ச்சியும், கல்வியும்**

தற்போதுள்ள 11 வேளாண்மைப் பள்ளிகளுக்கு வசதிகள்
செய்து தர திட்டமிடப்பட்டுள்ளது. இராமநாதபுரம்,
சேலம், மற்றும் ஊட்டியில் மூன்று அதிகமான உழவர் பயிற்சி
நிலையங்கள் புதிதாக துவக்குவதன் மூலம் உழவர் பயிற்சி மற்றும்
கல்வித் திட்டம் தீவிரப்படுத்தப்படும்.

குறைந்த செலவில் அதிக வருமானம் தரவல்ல பயிர் முறையை
உருவாக்க பயிர் மாற்று ஆய்வுகள் திருச்சி மற்றும் தென் ஆற்காடு
மாவட்டத்தில் மேற்கொள்ளப்படும். தென்னையைத் தாக்கும்
வாடல் நோய் பற்றிய ஆய்வுகள் கன்னியாகுமரி மாவட்டத்தில்
மேற்கொள்ளப்படும். செம்மண் மற்றும் மணற்பாங்கான குறு
மண் நிலங்களில், இறவையிலும் மானாவாரியிலும் பயிரிடுவதற்கு
உகந்த உயர் விளைச்சலும், அதிக எண்ணெய் சத்தும் உடைய
சூரியகாந்த ரகங்கள் திண்டிவனம் ஆராய்ச்சிப் பண்ணையில் உரு

[1978 மார்ச் 17

இரு பயிர் சாகுபடி மற்றும் இதர உழவியல் முறைகளைக் கையாண்டு உற்பத்தித் திறனை அதிகரிக்கவும் முயற்சி மேற்கொள்ளப்படும். நடப்பு ஆண்டில் மானாவாரி நிலங்களில் 20,000 ஹெக்டேர் பரப்பளவில் இருபயிர் சாகுபடி மேற்கொள்ளப்படும்.

பிற்பட்ட பகுதிகளின் அபிவிருத்தி :

பிற்பட்ட பகுதிகள் மற்றும் மலைப் பகுதிகளின் அபிவிருத்திக்கும், அங்கு வாழும் மக்களின் பொருளாதார நிலைமையை மேம்படுத்தும் வகையிலும் தனித் திட்டங்கள் செயல்படுகின்றன. இத்திட்டங்களின் மூலம் அவர்கள் பழ வகைப் பயிர்கள் மற்றும் இதர இலாபகரமான பயிர்களையும் பயிரிடுவதற்கான வசதிகள் செய்து தரப்படுகிறது. இத்திட்டம் 5 மாவட்டங்களில் கிராமப் பகுதிகளில் செயல்படுகிறது. இப்பகுதிகளில் பழச் செடிகளும் மற்ற இடுபொருட்களும் 50 சத மானிய விலையில் வழங்கப்படுகின்றது. கல்ராயன் மலைப் பகுதிகளில் மட்டும் இவைகள் இலவசமாகவே அளிக்கப்படுகின்றன.

5. 1978-79-ம் ஆண்டுக்கான புதிய திட்டங்கள்:

தற்போது நடைமுறையில் உள்ள திட்டங்களோடு கீழ்க்கண்ட புதிய திட்டங்கள் 1978-79-ம் ஆண்டில் செயலாக்க திட்டமிடப்பட்டுள்ளது:—

பொது

தரமான ஆதார விதைகளையும், சான்றிதழ் பெற்ற விதைகளையும் உற்பத்தி செய்ய 24 மாநில விதைப்பண்ணைகளுக்குப் போதுமான பாசனம் மற்றும் இதர உள்ளமைப்புத் தேவைகள் ஏற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. ஈரமற்ற, நோய் தாக்காத விதைகளை உரிய பருவத்தில் வழங்குவதற்கு வழி செய்யும் வகையில் விதை சுத்திகரிப்பு நிலையங்களில் மூட்டைகள் அடுக்கிவைக்க இடைச்செருகு கட்டைகள் மற்றும் ஈர அளவை கண்டுபிடிக்கும் கருவிகள் பொருத்தப்படும். மேலும், விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படும் விதைகள் தரமானவையாக இருப்பதை உறுதிப்படுத்தும் பொருட்டு விதைச்சான்றளிப்பு அமைப்பு ஒன்று தனித்துச் செயல்படும். இதன் மூலம் இந்நிறுவனம் விதை உற்பத்தியாளர்களுக்குத் தரமான விதை உற்பத்தி செய்ய வழிவகைகளை கற்பித்து அவர்களை ஊக்குவிக்கும். தரக்குறைவான விதைகள் உற்பத்தி செய்வோர் மீது சட்டப்படி நடவடிக்கைகள் எடுக்கவும் வழிவகுக்கும். விதைப் பரிசோதனை வசதிகள் அபிவிருத்தி செய்யப்படும். இதற்கென மேலும் ஒரு விதைப் பரிசோதனை நிலையம் குடுமியான்மலையில் உள்ள அண்ணா பண்ணையில் நிறுவப்படும்.



1978 மார்ச் 17]

80,000 ஹெக்டேர் பயறு வகைப்பயிர் பரப்பில் ஒட்டுமொத்த மருந்து தூவியும், 20,000 ஹெக்டேர் பரப்பில், டைஅம்மோனியம் பாஸ்பேட் தெளித்தும் பயறு வகைகளின் உற்பத்தியை அதிகரிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

வணிகப் பயிர்கள் ;

வடகரை, பவானிசாகர் மற்றும் துரைராஜ் நகரில் உள்ள எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி செய்யும் முதன்நிலைப் பண்ணைகளுக்கு பாசன வசதியும் மற்றும் இதர உள்ளமைப்புத் தேவைகளை வழங்குவதன் மூலம் அபிவிருத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. பட்டுக்கோட்டை, திப்பம்பட்டி மற்றும் தேவிப்பட்டினத்தில் உள்ள தென்னை நாற்றங்கால்களுக்கு கூடுதலான பாசன வசதி அளிப்பதன் மூலம் அவைகளையும் அபிவிருத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. ஒரு இலட்சம் வீரிய ஒட்டுத் தென்னங்கன்றுகள் பட்டுக்கோட்டையைச் சுற்றியுள்ள பகுதியில் உற்பத்தி செய்யப்படும். தீவிர தென்னை அபிவிருத்தி திட்டம், கன்னியாகுமரி, கோயம்புத்தூர் மற்றும் தருமபுரி மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தப்படும். தென் ஆற்காடு மாவட்டத்தில் பெரிய அளவில் பழத் தோட்டம் ஒன்று நிறுவப்படும். இவை பழ வளர்ப்புக்கு ஒரு செயல் விளக்கப்பண்ணையாக அமையும். கொல்லிமலைக் குன்றுகளிலும் மற்றும் கல்ராயன் மலைப் பகுதியிலும் அம்மலை வாழ் மக்களின் பயனுக்காக பெரிய அளவில் பழத்தோட்டங்கள் நிறுவப்படும். மற்றும் தரமான பழக்கன்றுகள் உற்பத்தி செய்து அவைகளை உற்பத்தியாளருக்கு வழங்கும் பொருட்டு சேலம் மாவட்டத்தில் மாதிரி பழத்தோட்டம் மற்றும் நாற்றங்கால் ஒன்று நிறுவப்படும்.

ஆராய்ச்சியும், கல்வியும்

தற்போதுள்ள 11 வேளாண்மைப் பள்ளிகளுக்கு வசதிகள் செய்து தர திட்டமிடப்பட்டுள்ளது. இராமநாதபுரம், சேலம், மற்றும் ஊட்டியில் மூன்று அதிகமான உழவர் பயிற்சி நிலையங்கள் புதிதாக துவக்குவதன் மூலம் உழவர் பயிற்சி மற்றும் கல்வித் திட்டம் தீவிரப்படுத்தப்படும்.

குறைந்த செலவில் அதிக வருமானம் தரவல்ல பயிர் முறையை உருவாக்க பயிர் மாற்று ஆய்வுகள் திருச்சி மற்றும் தென் ஆற்காடு மாவட்டத்தில் மேற்கொள்ளப்படும். தென்னையைத் தாக்கும் வாடல் நோய் பற்றிய ஆய்வுகள் கன்னியாகுமரி மாவட்டத்தில் மேற்கொள்ளப்படும். செம்மண் மற்றும் மணற்பாங்கான குறுமண் நிலங்களில், இறவையிலும் மானாவாரியிலும் பயிரிடுவதற்கு உகந்த உயர் விளைச்சலும், அதிக எண்ணெய் சத்தும் உடைய சூரியகாந்தி ரகங்கள் திண்டிவனம் ஆராய்ச்சிப் பண்ணையில் உருவாக்கப்படும்.

(7) கோயம்புத்தூர் மாவட்டம், கோயம்புத்தூர் வட்டத்தில் ரூ. 26.40 இலட்சம் நிதி மதிப்பீட்டில் 320 ஹெக்டேர் நிலப்பரப்பில் தோப்பாகவும், 10,500 மரங்கள் வரப்பிலும் பயிரிடுதல்.

(8) புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி வட்டத்தில் ரூ. 7.35 இலட்சம் நிதி மதிப்பீட்டில் 100 ஹெக்டேர் பரப்பளவை தென்னை வளர்ப்பில் கொண்டுவருதல்.

(9) தர்மபுரி மாவட்டம், பர்கூர் ஊராட்சி ஒன்றியத்தில் ரூ. 15.84 இலட்சம் நிதி மதிப்பீட்டில் 200 ஹெக்டேர் நிலப்பரப்பை தோப்பாக உருவாக்குதல்.

(10) தஞ்சாவூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் ரூ. 21.01 இலட்சங்கள் நிதி மதிப்பீட்டில் 360 ஹெக்டேர் நிலப்பரப்பில் தென்னை வளர்த்தல்.

**மா வளர்ப்புத் திட்டம்:**

(11) வட ஆற்காடு மாவட்டத்தில் ரூ. 13.47 இலட்சம் நிதி மதிப்பீட்டுடன் 400 ஹெக்டேர் மா வளர்ப்பு ஏற்படுத்துதல்.

**திராட்சை வளர்ப்புத் திட்டம்:**

(12) தர்மபுரி மாவட்டத்தில் ரூ. 24.26 இலட்சம் நிதி மதிப்பீட்டுடன் 80 ஹெக்டேர் நிலப்பரப்பைத் திராட்சை சாகுபடியில் கொண்டுவருதல்.

**சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டம்:**

ஒரு ஹெக்டேர் வரை பாசன வசதியுள்ள நிலம் அல்லது 2 ஹெக்டேர் வரை பாசன வசதியற்ற நிலம் உள்ள சிறு விவசாயிகளின் வளத்தைப் பெருக்குவது இத்திட்டத்தின் முக்கிய நோக்கம். உயர் விளைச்சல் ரகங்களைப் பயிரிடுதல், திருந்திய சாகுபடி முறைகளைக் கையாளுதல், தகுந்த உரமிடுதல், பலபயிர் சாகுபடி ஆகிய முறைகளை சிறு விவசாயிகள் கடைப்பிடிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இத்துடன் பொருந்த இடங்களில் பாசன வசதிகள் அபிவிருத்தி செய்யப்படுகின்றன. மானியத்துடன் இணைந்த கடன் வசதிகள் மூலம் தேவையான இடுபொருள்கள் மற்றும் விவசாயக் கருவிகள் வழங்குவதற்கு உதவி அளிக்கப்படுகிறது. பாற்பண்ணை போன்ற உபதொழில்கள் அமைக்கவும், உதவி செய்யப்படுகிறது. கால்நடைகள் வாங்க, அவற்றிற்கான மருத்துவ வசதி பெற மற்றும் விவசாயப் பொருட்களை விற்பனை செய்ய ஆகிய பல துறைகளிலும் உதவி அளிக்கப்படுகிறது. சென்னை, இராமநாதபுரம் மற்றும் தருமபுரி மாவட்டங்கள் நீங்கலாக இத்திட்டங்கள் மற்ற மாவட்டங்களின் பகுதிகளில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டம் இந்திய அரசின் முழு நிதியுதவி பெறும் மத்தியத்



துறைத் திட்டமாகும். கூட்டுறவு நிறுவனங்களின் மூலமும், நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளின் வாயிலாகவும் கடன்களைப் பெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

1977-78 ஆம் ஆண்டு ஒவ்வொரு மாவட்டத்திற்கும் மத்திய அரசினால் ஒதுக்கப்பட்ட தொகை, வழங்கப்பட்ட தொகை மற்றும் செலவழிக்கப்பட்டதுபற்றி விவரங்கள் கீழ்க்காணுமாறு:—

| மாவட்டம் | மத்திய அரசினால் 1977—78க்கு ஒதுக்கப் பட்ட தொகை. | மத்திய அரசினால் வழங்கப் பட்டது (சென்ற ஆண்டு மிகுதி உட்பட) | 1977—78-ல் செலவழிக் கப்பட்டது 31—12—77 வரை |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| மதுரை | 34.00 | 17.45 | 18.15 |
| திருநெல்வேலி | 37.50 | 16.26 | 14.17 |
| தென் ஆற்காடு | 36.00 | 18.15 | 17.86 |
| வட ஆற்காடு | 34.00 | 17.05 | 15.53 |
| சேலம் | 35.00 | 17.29 | 11.86 |
| செங்கற்பட்டு | 30.00 | 29.64 | 14.48 |
| தஞ்சாவூர் | 31.50 | 15.30 | 10.81 |
| திருச்சிராப்பள்ளி | 31.50 | 16.38 | 8.94 |
| புதுக்கோட்டை | 45.00 | 22.44 | 8.36 |
| கோயம்புத்தூர் | 33.30 | 16.39 | 13.94 |
| நீலகிரி | 26.30 | 14.58 | 9.90 |
| கன்னியாகுமரி | 20.75 | 10.24 | 11.35 |
| மொத்தம் | 394.85 | 211.17 | 155.35 |

## தமிழ்நாடு வேளாண் தொழிற் கழகம்

தமிழ்நாடு வேளாண் தொழிற் கழகம் 1966 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 5 ஆம் தேதி நிறுவப்பட்டது. இந்நிறுவனம் மத்திய-மாநில அரசுகளின் கூட்டு முயற்சியாகும். இதன் நோக்கம் தமிழ்நாட்டில் வேளாண் தொழில்களையும் பிற துணைத் தொழில்களையும் வளர்ச்சி அடையச் செய்வதாகும்.

தமிழ்நாடு வேளாண் தொழில் கழகத்தின் முக்கிய நோக்கங்கள் பின் வருமாறு:—

(1) வேளாண்மை, கால்நடை, மீனவம், கோழி வளர்ப்பு ஆகிய துறைகளின் வளர்ச்சிக்கும் அவற்றை நவீனமயமாக்குவதற்கும் உதவக்கூடியப் பொருள்களைத் தயாரித்தல்.

(2) உள்நாட்டுப் பயனுக்கும், வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கும் உரிய உணவுப் பொருட்கள், துணை உணவுப் பொருள்கள் ஆகியவற்றின் உற்பத்தியைப் பெருக்கும் நோக்கத்துடன் வேளாண் விளைப் பொருட்கள், மீன்வளப் பொருள்கள், கால்நடைகளிலிருந்து கிடைக்கும் பொருள்கள் ஆகியவற்றைப் பக்குவப்படுத்துதல்.

### டிராக்டர் விற்பனை.

தமிழ்நாடு வேளாண் தொழில் கழகம் விவசாயிகள் தம் விருப்பம்போல் தேர்ந்தெடுத்துக்கொள்ள, நான்கு வகையான டிராக்டர்களை விற்கும் உரிமம் பெற்றுள்ளது.

### பூச்சிக்கொல்லி மருந்து தயாரிக்கும் திட்டம்.

தமிழ்நாடு வேளாண் தொழில் கழகம் விவசாயிகள் விரும்பும் பிரசித்திப் பெற்ற பூச்சிக்கொல்லி மருந்துகளை தயாரித்து வருகின்றது. இதில் முக்கியமானவை பி.எச்.சி. 10 சதவீதம், எண்ட்ரின் 20 சதவீதம் இ.சி. ஆகியவை. இதுவரை இப்பூச்சிக்கொல்லி மருந்துகளைத் தனியார் நிறுவனங்கள் தயாரித்து வந்தன. தற்போது தனக்கென ரூ. 9.79 இலட்சம் மூலதனத்தில், பூச்சிக்கொல்லி மருந்து தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றை சென்னைக்கு அருகில் உள்ள அம்பத்தூரில் இக்கழகம் நிறுவியுள்ளது. பெருகி வரும் தேவையைப் பூர்த்தி செய்ய மற்றுமொரு தொழிற்சாலையும் ரூ. 4 இலட்சம் மூலதனத்தில் வேளாண் கழகம் நிறுவியுள்ளது.

### மீன்வலை உற்பத்தித் திட்டம்.

நைலானிலிருந்தும், பாலிதினிலிருந்தும், ஆண்டொன்றுக்கு 50 டன் எடையுள்ள மீன் வலைகள் தயாரிக்கும் திறனுள்ள தொழிற்சாலை ஒன்றினை இக்கழகம் நிறுவியுள்ளது. மெல்லிழை நைலான் மீன்பிடி வலைகளுக்கான பெருகிவரும் தேவையினைப் பூர்த்தி செய்ய ரூ. 95 இலட்சம் மதிப்புள்ள மற்றொரு இயந்திரம் ஒன்றை இறக்குமதி செய்ய வேளாண் தொழில் கழகம் திட்டமிட்டுள்ளது.



### 'மகரோனி' தயாரிக்கும் திட்டம்.

நாளொன்றுக்கு 250 கிலோ கிராம் 'மகரோனி' தயாரிக்கும் ஆலை ஒன்றினை வேளாண் தொழில் கழகம் அக்டோபர் 1976-ல் தொடங்கியுள்ளது. இந்த உணவு வகை மக்களிடையே நல்லாதரவு பெற்றுள்ளது. அங்காடியில் இது தனக்குரிய இடத்தைப் பிடித்து வருகிறது.

### எண்ணெய் வடித்தெடுக்கும் தொழிற்சாலை.

தவிட்டிலிருந்தும் பிண்ணாக்கிலிருந்தும் எண்ணெய் வடித்தெடுக்கும் தொழிற்சாலையை கதர் கிராமத் தொழில் கழகத்திடமிருந்து ரூ. 36 இலட்சம் செலவில் இக்கழகம் ஏற்றுள்ளது. இதன் உச்ச உற்பத்தித்திறன் நாளொன்றுக்கு 15 டன் தவிட்டிலிருந்து எண்ணெய் எடுப்பது அல்லது 25 டன் பிண்ணாக்கிலிருந்து எண்ணெய் எடுப்பதாகும். இத்தொழிற்சாலையில் 1977 நவம்பரில் உற்பத்தி தொடங்கியது.

தமிழ்நாடு வேளாண் தொழில் கழகம் அடுத்த சில ஆண்டுகளில் பல புதிய திட்டங்களைச் செயல்படுத்த திட்டமிட்டுள்ளது. அவைகள் கீழ்வருமாறு:—

(1) செங்கற்பட்டு, புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களில் தாவர எண்ணெய் உற்பத்தித் தொழிற்சாலைகள்.

(2) எண்ணெய் வடித்தெடுக்கும் தொழிற்சாலைகளுக்குரிய துணைத் தொழிற்பேட்டை.

(3) 'டிராண்டர்' (பலதரப்பட்ட வேலைகளுக்கான) டிராக்டர் தயாரித்தல்.

(4) பூச்சிக்கொல்லி மருந்து மூலப் பொருள் தயாரிக்கும் ஆலை.

(5) பஞ்சு அரவை ஆலை.

(6) கால்நடைத் தீவனம் தயாரிக்கும் ஆலை.

(7) மக்காச் சோளத்திலிருந்து ஸ்டார்ச்சு, குளுக்கோஸ், டெக்ஸ்ட்ரோஸ் தயாரிக்கும் ஆலை.

(8) பழங்கள் பக்குவப்படுத்தும் ஆலை.

(9) "டானின்" தயாரிக்கும் ஆலை.

(10) நில ஆவிரை வகைச் செடியிலிருந்து மருந்து தயாரிக்கும் ஆலை.

(11) "பைரித்திரம்" ( Pyrthrum ) பிரித்தெடுக்கும் ஆலை.

## தமிழ்நாடு வேளாண் பண்ணைக் கழகம்

இம்மாநிலத்தில் உள்ள ஏராளமான புறம்போக்கு தரிசு நிலங்களைச் சாகுபடிக்குக் கொண்டுவரும் நோக்கத்துடன் தமிழ்நாடு வேளாண் பண்ணைக் கழகம் நிறுவப்பட்டது. ஸ்ரீலங்காவிலிருந்து வரும் அகதிகளுக்கு மறு வாழ்வளிக்கும் மற்றொரு சமூக நல நோக்கமும் இக்கழகக் குறிக்கோளுடன் பின்னர் சேர்க்கப்பட்டது. இந் நிறுவனமும் முசரவாக்கம், நெய்வேலி 1, 2, 3 ரூபநாராயண நல்லூர், தியாகராசபுரம்-சக்கரமங்கலம், வெள்ளாள விடுதி, திராப்பிடிங்கி ஆகிய இடங்களைச் சாகுபடி செய்ய எடுத்துக்கொண்டுள்ளது.

1974-75 முதல் 1976-77 வரையுள்ள கால அளவில் சாகுபடியான பரப்பளவு 958 ஹெக்டேர். அச்சாகுபடி மூலம் ஈட்டிய வருவாய் 30.43 இலட்சம் ரூபாய் ஆகும். பெரும் புயல், மழை காரணமாக 1977-78 ஆம் ஆண்டு குழாய்க் கிணறுகளுக்கு மின் இணைப்பு அளிப்பதில் தொய்வு ஏற்பட்டது. அதன் விளைவாக, இந்நிறுவனம் 3,230 ஹெக்டேர் சாகுபடி செய்ய திட்டமிட்டு ரூ. 192.75 இலட்சம் வருவாய் கிடைக்கும் என எதிர்பார்த்ததற்கு மாறாக, சுமார் 1,800 ஹெக்டேர் அளவில் சாகுபடி செய்து அதன் மூலம் ரூ. 121 இலட்சம் ஈட்டுவதே சாத்தியமாகும் எனத் தெரிகிறது.

## தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகம்.

1971-ம் ஆண்டு ஜூன் திங்கள் 1-ம் நாள் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகம் உருவாகியது. 1976-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் முதல் தேதியிலிருந்து சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியும் மற்றும் கால்நடை சம்பந்தமான ஆராய்ச்சி நிலையங்களும் வேளாண்மை பல்கலைக் கழகத்துடன் இணைக்கப்பட்டன. 1977-78-ம் ஆண்டிலிருந்து ஒரு மீன்வளக் கல்லூரியும் துவங்கப்பட்டுள்ளது. இப்பல்கலைக் கழகம் ஏற்பட்டதிலிருந்து சுமார் 37 புதிய பயிர் ரகங்கள் வெளியிடப்பட்டுள்ளன. இங்கு செய்த ஆராய்ச்சியின் பயனால் 1977-78-ம் ஆண்டில் எட்டு புதிய பயிர் ரகங்கள் வெளியிடப்பட்டுள்ளது.

இவ்வாண்டில் கீழ்க்காணும் புதிய பிரிவுகளை ஏற்படுத்த இப்பல்கலைக் கழகம் திட்டமிட்டுள்ளது:—

(1) வேளாண் வணிக நிர்வாகத்தில் எம்.எஸ்சி. பட்ட மேற்படிப்பு.

(2) கால்நடை மருத்துவக் கல்லூரியில் மேலும் நான்கு பிரிவுகளில் பி.எச்.டி. படிப்பு.



(3) வேளாண்மை விரிவாக்கம், விதை நுட்பம் பற்றிய பி.எச்.டி. படிப்பு.

(4) தாவர உடலியங்கியலில் பி.எச்.டி. படிப்பு.

(5) பாற்பண்ணை பெருக்கத்தில் பட்டப் படிப்பு.

1978-79-ம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மை, கால்நடைப் பராமரிப்பு மற்றும் மீன்வளத்திற்காக கீழ்க்கண்ட தொகைகள் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகத்தால் செலவழிக்கப்பட உள்ளன:—

| | திட்டம். | திட்டத்தில் சேராதவை. | மொத்தம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| வேளாண்மை | 44.00 | 182.0 | 226.00 |
| கால்நடை மருத்துவம் | 71.42 | 93.00 | 164.42 |
| மீன்வளம் | 10.00 | | 10.00 |

இதைத் தவிர, பல்கலைக் கழகம் இந்திய விவசாய ஆராய்ச்சி கழகத்திடமிருந்தும் ஏனைய இதுபோன்ற நிறுவனங்களிடமிருந்தும் தனது ஆராய்ச்சித் திட்டங்களுக்காக நிதி உதவி பெற்று வருகிறது.

## இணைப்பு II.

[253 ஆம் பக்கத்தில் இனம் 4-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

### பாசனம் மீதான மூலதனச் செலவு குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு 1978-79.

**பெரிய, நடுத்தரப் பாசனம்.**

1. பெரிய, நடுத்தரப் பாசனத் திட்டங்கள், வெள்ளக் கட்டுப்பாடு திட்டம் ஆகியவற்றுக்கு 1978-79-ல் 24.48 கோடி ரூபாய் ஒதுக்கப்படும். 1977-78-ல் மூன்று பெரிய பாசனத் திட்டங்களும், 12 நடுத்தரப் பாசனத் திட்டங்களும் நிறைவேற்றப்பட்டு வந்தன. கீழ் நீராறு அணை கட்டும் பணியும் பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டத்தில் சுரங்கப்பாதை அமைக்கும் பணியும் விரைவாக நடந்தேறி வருகின்றன. இவை 1979-ல் முடிக்கப் பெறும். தஞ்சாவூர் முடியும் பணி நவீனப்படுத்தும் கால்வாய்களை கைக்

இருக்கிறது. உலக வங்கி நிதியுதவி செய்யும் பெரும் திட்டமான பெரியாறு மேம்பாட்டுத் திட்டம் புதிய வேகம் பெற்றுள்ளது. இந்த ஆண்டு இத் திட்டத்திற்காக ரூ. 10.94 கோடி செலவிடத் திட்டமிடப்பட்டுள்ளது. இத் திட்டத்திற்காக எல்லா நிலைகளிலும் போதுமான பணியாளர்களுடன் தலைமைப் பொறியாளர் ஒருவர் தனியாக நியமிக்கப்பட்டுள்ளார். நீரியல், தரக்கட்டுப்பாடு, கண்காணிப்பு இவற்றிற்குத் தனி கோட்டங்கள் அமைக்கப் பட்டுள்ளன.

2. எழு நடுத்தரப் பாசனத் திட்டங்கள் முடியும் நிலையில் உள்ளன. இத் திட்டங்களின் மூலம் 32,000 ஏக்கர் புதிதாகப் பாசனம் பெறும். ஏற்கெனவே பாசனம் பெறும், 1,20,000 ஏக்கர் நிலம் இத் திட்டங்களின் மூலம் இடையுறுப் பாசனம் பெறும். புதிய திட்டங்கள் பொருளாதார வகையில் ஆதாயம் தரத்தக்கதா என்பதை நன்கு அறிந்து கொள்ள அவைபற்றி ஆழ்ந்து ஆய்வு செய்த பின்னரே அவற்றிற்கு அனுமதி வழங்கப் படுகிறது. தருமபுரி மாவட்டம், ஓசூர் வட்டம், கெலவர பள்ளியில் பெண்ணை யாற்றின் குறுக்கே நீர்த்தேக்கம் கட்டுவதற்கு சமீபத்தில் அனுமதி வழங்கப் பட்டுள்ளது. இத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு ரூ. 551.50 இலட்சம் செலவாகும். ஓசூரில் உள்ள 'சிப்காட்' நிறுவனத்தைச் சேர்ந்த தொழிற்சாலைத் தொகுதிகளுக்கு தண்ணீர் வழங்குவதைத் தவிர, இத் திட்டத்தினால் 9,100 ஏக்கர் நிலம் பாசனம் பெறும். 1978-79-ல், புதிய திட்டங்களுக்காக ரூ. 100 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. பெண்ணையாறு வடிநிலப் பகுதியில் தருமபுரி மாவட்டத்தைச் சேர்ந்த ஓசூர் வட்டத்தில் வாணியாற்றின் குறுக்கேயும் பாலக் கோடு வட்டத்தில் உள்ள தும்பல ஹள்ளியிலும் நீர்த் தேக்கங்கள் கட்டுவதற்கு விரிவான திட்ட அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளன. இராமநாதபுரம் மாவட்டம், அருப்புக்கோட்டை வட்டத்தில் குல்லூர்சந்தையில் வைப்பாற்றின் குறுக்கே நீர்த்தேக்கம் ஒன்றும் அதே வடிநிலப் பகுதியில் வேம்பக் கோட்டையில் மற்றொரு திட்டமும் கட்டுவது குறித்து விரிவாக ஆய்வு செய்யப் பட்டுள்ளது. இத் திட்டங்களை ஆய்வு செய்யும் பணி பெரும்பகுதி முடிந்துள்ளது. இவை பொருளாதார வகையில் ஆதாயம் தரத்தக்கவையாக இருப்பின், நடப்பாண்டில் நிறைவேற்றப்படுவதற்காக எடுத்துக் கொள்ளப் படலாம். நீர்நிலை வாயில்கள் முழுவதையும் பயன்படுத்திக் கொள்வதற்காகப் பொருளாதார வகையில் ஆதாயம் தரத்தக்க திட்டங்கள் அனைத்தையும் சேர்த்து இவ்விரண்டு வடிநிலப் பகுதிக்கான பெருந்திட்டம் ஒன்று தயாரிக்கப் பட்டு வருகிறது. இம்மாநிலத்தின் மிகவும் வறட்சிப்பாங்கான இவ்விரு பகுதிகள் பயனடைய ஒருங்கிணைந்த பகுதி மேம்பாட்டு திட்டமாக இப்பெருந் திட்டங்களை உலக வங்கிக்கு அனுப்பி நிதியுதவி பெறக் கருதப்பட்டுள்ளது.



**சிறு பாசனத் திட்டம்.**

3. சிறுபாசனத் திட்டம் சீரமைக்கப்பட்டுள்ளது. வரும் ஆண்டில், சிறப்பு சிறுபாசனத் திட்டத்தின் கீழ் 400 இலட்சம் ரூபாயும், ஏரிகளில், தூர் வாருதல் பண்படுத்தல் பணிகளுக்காக 20 இலட்சம் ரூபாயும் ஒதுக்கப்பட்டுள்ளன. சிறப்பு சிறுபாசனத் திட்டத்தைச் சீரமைப்பதற்காக அரசால் நியமிக்கப்பட்ட பணிக் குழுவினது பரிவுரைகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. நடை பெற்றுவரும் திட்டங்களை விரைவில் முடிப்பதற்கு முக்கியத்துவம் அளிக்கப் படுகிறது. இந்நாளில் நிலவுகின்ற விலைவாசி நிலவரத்திற்கு ஏற்ப இருக்குமாறு பொருளாதார வகையில் ஆதாயம் தரத்தக்க நிலை பற்றி குறிப்பிடப்பட்ட அடிப்படை அலகுகள் யாவும் திருத்தப்பட்டு உயர்த்தப்பட்டுள்ளன. நடப்பாண்டில், சிறப்புச் சிறு பாசனத் திட்டத்தின்கீழ் 200 பணிகளையும், ஏரிகளில் தூர் வாருதல் பண்படுத்துதல் திட்டத்தின்கீழ் 10 பணிகளையும் முடிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. தலைமைப் பொறியாளர் (பாசனம்) புதியத் திட்டங்கள் குறித்து தொகுக்கப்பட்ட பட்டியல் ஒன்றைத் தயாரிக்கக் கருதியுள்ளார். வரும் ஆண்டில் இத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு 4.76 கோடி ரூபாய் செலவாகும். புதிய திட்டங்கள், தொழில் நுட்ப வகையிலும் பொருளாதார வகையிலும் ஆதாயம் தரத் தக்கவையென விரிவான ஆய்வுகள் மூலம் தெளிவாகத் தெரிய வந்த பின்னரே, அவற்றிற்கு அனுமதி வழங்கப்படும்.

4. இம்மாநிலத்தில் பாசனம் பெறும் மொத்த நிலப்பரப்பில் சுமார் மூன்றில் ஒரு பகுதி ஏரிகளின் மூலம் பாசனம் பெறுகின்றது. அந்த ஏரிகளின் எண்ணிக்கை 37,000-க்கும் கூடுதலாகும். இந்த ஏரிகளை நவீனப்படுத்தவும் அவற்றின் நீரை சிக்கன முறையில் பயன் படுத்தவும், இவற்றின் ஆயக் கட்டுகளில் நவீன வேளாண்மை நடைமுறைகளை பின்பற்றுவதற்கான பெருந் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. நிதியுதவிக்காக இத் திட்டம் உலக வங்கிக்கு அனுப்பப்பட வேண்டியுள்ளது.

இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதில் முதல் கட்டத்தில் ரூ. 111 கோடி செலவிடப்படும்; இதன்கீழ் ஒவ்வொன்றும் 500 ஏக்கரும் அதற்கு அதிகமாகவும் ஆயக்கட்டுக்களைக் கொண்ட 500 ஏரிகளைக் குறித்த பணிகள் மேற்கொள்ளப்படும்; இதன் மூலம் மொத்தம் 6 லட்சம் ஏக்கர் நிலம் பயன் பெறும். இத்திட்டத்தின் கீழ்ச் செய்யப்படும் பணிகளாவன: ஏரிகள் புதுப் பிக்கப்பட்டு அவற்றின் தர நிலைக்குக் கொண்டு வருதல்; தொடர்புடைய ஏனைய பணிகளை நிறைவேற்றுதல்; ஆயக்கட்டில் உள்ள நீர் வழங்கு ஏற்பாடுகளை நவீனப்படுத்துதல்: சேதமாகாமல் நீரைச் சேமிக்கும் மேம்பாட்டுப் பணிகள்,

வயலுக்கு நீர் கொண்டு செல்லும் வாய்க்கால்களை அமைத்தல்; மேம்படுத்தப் பட்ட பயிர் நடைமுறைகளையும் வேளாண்மை குறித்த அறிவியல் முறைகளையும் பின்பற்றுதல் முதலியன. இத்திட்டத்தின் முதல் கட்டத்தை நிறைவேற்று வதற்கு எட்டு ஆண்டுகள் ஆகும். இதன் மூலம், 1,35,000 ஏக்கர் பரப்பு கூடுதலாகப் பாசனம் பெறும். மேலும், தற்போது பாசனம் பெறுகின்ற 5,40,000 ஏக்கர் பரப்புக்குப் பாசன வசதி நிலைப்படுத்தப்படும். பயிர்த்தொழில் நடைபெறாத காலங்களின்போது எட்டாண்டு கட்டுமான காலத்தில் இத்திட்டம் நாளொன்றுக்கு ஏறத்தாழ 30,000 ஆட்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும்.

5. விரைவுப் படுத்தப்பட்ட சிறு பாசனத் திட்டத்தின்கீழ், சிறுபாசன வாயில்களைப் பேணுவதற்காக ஆண்டுதோறும் நிதி ஒதுக்கீடுகள் செய்யப் படுகின்றன. இத்திட்டத்தின் கீழ்ச் செய்யப்படும் பணிகளில் பின்வருவன அடங்கும் :—

பழைய பாசன வாயில்கள் புதுப்பிக்கப்பட்டு நல்ல நிலைக்குக் கொண்டு வருதல்; உபரி நீர் குறித்த ஏற்பாட்டுப் பணிகளைச் செய்தல்; அவசியமான இடங்களில் மதகுகள் அமைத்தல்; நீர் வழங்கு கால்வாய்கள் வெட்டுதல் போன்ற நிலையான மேம்பாட்டு பணிகளைச் செய்தல். பின் வருகின்ற மூன்று வகைப்பட்ட பாசன வாயில்களுக்குப் பழுது பார்க்கும் பணிகள் மேற்கொள்ளப் படுகின்றன; (1) 100 ஏக்கருக்கு மேல் ஆயக்கட்டுகளைக் கொண்ட பொதுப் பணித்துறையைச் சேர்ந்த பாசன வாயில்கள்; (2) தற்போது ஊராட்சி ஒன்றியங்களின் பொறுப்பில் உள்ள 100 ஏக்கர்களுக்குக் குறைவான ஆயக் கட்டுகளைக் கொண்ட ஏரிகள்; (3) முன்னாள் ஜமீன்களைச் சேர்ந்த பாசன வாயில்கள்.

6. 1978-79 ஆம் ஆண்டில், பொதுப் பணித்துறையைச் சேர்ந்த பாசன வாயில்களுக்கு ரூ. 75 இலட்சமும் ஊராட்சி ஒன்றியங்களின் பொறுப்பில் உள்ள பாசன வாயில்களுக்கு ரூ. 50 இலட்சமும், முன்னாள் ஜமீன்களைச் சேர்ந்த பாசன வாயில்களுக்கு ரூ. 10 இலட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளது. 100 ஏக்கருக்குக் குறைவான ஆயக்கட்டுகளைக் கொண்டுள்ளவையும் ஊராட்சி ஒன்றியங்களின் பொறுப்பில் உள்ளவையுமான சிறுபாசன வாயில்களும், முன்னாள் ஜமீன்களைச் சேர்ந்த பாசன வாயில்களும முதற்கண் பொதுப் பணித்துறையில் தர நிலைக்குக் கொண்டு வரப்பட்டு பின்னர் ஊராட்சி ஒன்றியங்களிடம் ஒப்படைக்கப்படும்.



**நில நீர் :**

7. மேற்கொண்டும் நீரைப் பயன்படுத்துவதற்காக இருக்கின்ற மேற்பரப்பு நீர் ஆதாரங்கள் போதுமானவையாக இல்லாதிருப்பதால் நில நீர் கிடைக்கும் இடத்தில் அதை முறையாகப் பயன்படுத்துவதும், நில நீரையும், மேற்பரப்பு நீரையும் சேர்த்துப் பயன்படுத்துவதும் அவசியமாகும். எனவே, இம் மாநிலத்தில் நில நீர் ஆய்வுகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. தருமபுரி மாவட்டத்தினைக் கவனிப்பதற்காகவென்றே கூடுதலாக ஒரு கோட்டத்தை ஏற்படுத்தி இத்துறைக்கான பணியாளரமைப்பு வலுப்படுத்தப் பட்டுள்ளது. இராமநாதபுரம் மாவட்டத்தில் கிரிதமால், வைப்பாறு வடி நிலங்களில் ஆழ்குழாய்க் கிணறுகளை அமைப்பதற்கான வாய்ப்பு குறித்து மத்திய நில நீர் வாரியம் விரிவான ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறது. இந்த ஆதாரங்களைப் பெரிய அளவில் பயன்படுத்துவதற்கான சாத்தியக் கூறுகளை இந்த ஆய்வுகள் குறிப்பிட்டுள்ளன. இந்த மாவட்டத்தின் கிரிதமால் வடிநிலத்தில் சுமார் 10 ஊராட்சி ஒன்றியங்களைக் கொண்ட பகுதியில் சுமார் 100 ஆழ் கிணறுகளையும், நடுத்தரப் பொதுக் குழாய்க் கிணறுகளையும் வெட்டுவதற்கான திட்டத்தை சிறுபாசனச் சிறப்புத் திட்டத்தின் கீழ் நிறை வேற்றக் கருதப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு சுமார் ரூபாய் ஒரு கோடி செலவாகும். ஆண்டொன்றில் மூன்று பாசனப் பயிர்களை விளைவிக்க, ஒவ்வொரு கிணறும் சுமார் 30 முதல் 40 ஏக்கர்கள் பரப்பளவிற்குப் பாசன வசதி அளிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

8. எனினும், இம்மாநிலத்தில் நில நீரைப் பயன்படுத்துவதை முறைப் படுத்தலுக்கும் சேமித்து வைப்பதற்கும் உடனடி அவசியம் உள்ளது. நில நீர் குறைந்து வருவது சில ஆண்டுகளாக நமக்கு கவலையை அளித்துள்ளது. கோயம்புத்தூர், சேலம், தருமபுரி, வடாற்காடு, மதுரை ஆகிய மாவட்டங் களில் இந்த நிலைமை மிகவும் கடுமையாக உள்ளது. இம்மாநிலத்தின் நலனைக் கருத்தில் கொண்டு நில நீரை வெளிக் கொண்டு வருவதையும் பயன்படுத்து வதையும் கட்டுப்படுத்த அரசு சட்ட வரைவு ஒன்றை கொண்டு வந்துள்ளது. இம் மசோதா ஆய்வுக் குழுவிற்கு அனுப்பப்பட்டுள்ளது.

9. நீர் ஆதாரங்களைப் பற்றிய அறிவியல் அடிப்படையிலான திட்டம், நிர்வாகம் ஆகியவற்றில் உதவும் ஆராய்ச்சி, வளர்ச்சித் திட்டங்களை மேற் கொள்ளவும் சிறப்புப் பொறியியல் அதிகாரி ஒருவரின் பொறுப்பின்கீழ் நீர் ஆய்வு பற்றிய நிலையம் ஒன்று (Institute of water studies) ஏற்படுத்தப் பட்டுள்ளது. இந்த நிலையத்தை இந்நாட்டிலேயே முதன்மையான ஆராய்ச்சி நிலையமாக மேம்படுத்த அரசு திட்டமிட்டுள்ளது.

**1977-78-ல் பாசனம் :**

10. தென் மேற்குப் பருவ மழை வழக்கமான அளவிற்கு பெய்யாத போதிலும் 1977-78 பாசனப் பருவம் மொத்தத்தில் நன்றாகவே அமைந்தது. பெரும்பாலும் எல்லா பாசன ஏற்பாட்டிலும் முறையான ஆயக்கட்டுகளுக்கு வழக்கமாக விடப்படும் தண்ணீர் முறையாக விடப்பட்டது. பல ஆண்டுகளுக்குப் பிறகு முதல் முறையாக மாநிலத்திலுள்ள எல்லா நீர்த் தேக்கங்களும் அநேகமாக நிரம்பி வழிந்துள்ளன. பரம்பிக்குளம் ஆழியாறு திட்டத்தைச் சேர்ந்த நீர்த் தேக்கங்களில் தண்ணீர் வரவு திருப்திகரமாக இருந்தது. பவானி, அமராவதி ஏற்பாட்டில் பருவ மழை திருப்திகரமாக இருந்தது. தென் மேற்குப் பருவ மழை வழக்கத்திற்குக் குறைவாகப் பெய்ததால் பெண்ணையாறு, தாமிரவருணி வடி நிலங்கள் பாதிக்கப்பட்டன. பின்னர் வடகிழக்குப் பருவ மழையின்போது, தண்ணீர் வரவு அதிகரித்தது. மொத்தத்தில் இவ்விரண்டு வடி நிலங்களிலும் பாசன நிலை திருப்திகரமமாக உள்ளது. இம் மாநிலத்தில் உள்ள ஏரிப் பாசனம் நல்ல திருப்திகரமான நிலையில் இருந்தது. வட கிழக்குப் பருவ மழைக் காலத்தில் பெரும்பாலான ஏரிகள் நிரம்பின. பெரும்பாலும் மாநிலம் முழுவதும் நிலநீர் மட்டம் பெருமளவிற்கு உயர்ந்திருக்கின்றது. இதனால் கோயம்புத்தூர், வட ஆற்காடு, சேலம், மதுரை, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் கோடைக்காலப் பயிர் நல்ல விளைச்சலை அளிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

11. மேட்டூர் நீர்த்தேக்கம், பாசனத்திற்காக 1977 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 15-ம் நாளிலிருந்து திறந்து விடப்பட்டது. அதன் பின்னர் கயவாய்ப் பகுதிக்குப் போதுமான தண்ணீர் வழங்கப்பட்டது. இதனால் காவிரியின் கீழுள்ள எல்லாக் கால்வாய்களையும் இந்த ஆண்டு திறக்க முடிந்தது. வட கிழக்குப் பருவ மழைக் காலத்தில் நீர்த்தேக்கம் நல்ல நீர் வரவினைப் பெற்று 1977 அக்டோபரில் நிரம்பியது. கயவாய்ப் பகுதியிலுள்ள சம்பா தாளடி பயிர்களுக்கு தொடர்ந்து பாசனமளிக்கவும், வெள்ளத்தின்போது பயிர் இழந்த உழவர்கள் அதை ஈடுகட்டும் வகையில் மற்றொரு போகம் சாகுபடி செய்யவும் இன்னும் தண்ணீர் வழங்கப்படுகிறது.

12. 1977 ஆம் ஆண்டு நவம்பரில் புயலினால் ஏற்பட்ட சேதங்கள் பற்றி இந்த அவை அறியும். அமராவதி, காவிரி, கொள்ளிடம் ஆகிய ஆறுகளில் அதிக வெள்ளப் பெருக்கு ஏற்பட்டதன் காரணத்தால் ஆறுகளிலும் கால்வாய்களிலும் பெரும் உடைப்புகள் ஏற்பட்டன. உடைப்புகளை உடனடியாக அடைப்பதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. கல்லணைக்கு மேல் கிளிக் கூட்டில் காவிரியில் பெரும் உடைப்பு ஏற்பட்டதன் காரணத்தால்



கயவாய்ப் பகுதிகளுக்கு 1977 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 22-ம் நாள் வரை தண்ணீர் வழங்குவது நிறுத்தி வைக்கப்பட வேண்டியதாயிற்று. மிக விரைவாக இப்பெரும் உடைப்பை அடைத்து முடித்த பெருமை பொதுப் பணித்துறையையே சாரும். வெள்ளத்தால் ஏற்பட்ட சேதங்களை சீர் செய்யும் பணியில் மிகு விரைவாகவும் ஆழ்ந்த அக்கறையுடனும் பொதுப் பணித்துறை ஈடுபட்டது என்பதற்கு இது ஒரு சான்றாகும்.

**காவிரி நீர்ப் பிரச்சனை:**

தொடர்ந்து

13. இந்த ஆண்டும் காவிரி நீர் யாத்தினை கர்நாடக அரசு முயற்சி தடுத்தது. இருந்த போதிலும் இந்த அரசு மேற்கொண்ட தனி பரஸ்பர களினாலும், இரண்டு மாநிலங்களுக்கும் இடையில் நிலவி வரும் செயல்பட்டதனாலும் நல்லெண்ணத்தினாலும், பிரச்சினையை புரிந்து கொண்டு கிடைத்தது. தமிழ் நாட்டுக்குப் போதிய அளவுக்கு உரிய காலத்திற்குள் நீர் கீழ் வட கிழக்குப் பருவ மழை சாதகமாக இருந்ததால் இந்த ஆற்றின் விடப்பட்டு வரும் எல்லா பாசன ஏற்பாடுகளுக்கும் தண்ணீர் திறநது ஏற்படவில்லை. தொடர்ந்து வழங்கி வருவதில் எவ்வித இடர்பாடும்

மாநிலங்களின்

14. இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக மூன்று அரசு மேல் மட்ட அளவுக் கூட்டத்தை நடத்தும்படி இந்திய அரசினை இந்த பாசன கேட்டுக் கொண்டுள்ளது. தமிழ் நாட்டில் தற்போது உள்ள வார்த்தைக்கு ஏற்பாட்டை பிரதிகூலமாக பாதிக்கும் வகையில் எந்த ஒரு பேச்சு அல்லது ஏற்பாட்டிற்கு ஒரு தரப்பினராக தமிழ் நாடு இருக்காது.

**சென்னை நகருக்கு கிருஷ்ணா நதி நீர் வழங்குதல் :**

கிருஷ்ணா நீரை

15. சென்னை மாநகருக்கு 15 ஆயிரம் மில்லியன் கன அடி நடைமுறைகள் வழங்குவது குறித்தும் அதைக் கொண்டு வருவதற்கான இந்த ஆறு குறித்தும் 1977 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 27-ம் நாளன்று செய்துகொள்ளப்பட்டது. பாயும் வடிநில மாநிலங்களுடன் உடன்பாடு ஒன்று அரசுடன் தற்போது இந்த ஏற்பாடுகளை முடிவு செய்வதற்கு ஆந்திரப் பிரதேச மாநிலத்தின் பேச்சு வார்த்தைகள் தொடங்கப்பட வேண்டியுள்ளது. ஆந்திர தொடங்கலா சட்ட மன்றத் தேர்தல்கள் முடிந்த பிறகு பேச்சு வார்த்தைகளை மென்று அம்மாநில முதலமைச்சர் தெரிவித்துள்ளார்.

**மேற்கு நோக்கிப் பாயும் ஆறுகளை திசை திருப்பி விடுதல்:**

பரஸ்பர

16. தமிழ்நாடு, கேரளா, கர்நாடகம் ஆகிய மாநிலங்களின் குறித்து நலனுக்காக மேற்கு நோக்கிப் பாயும் ஆறுகளை திசை திருப்பி விடுவது இறுதியாக இந்திய அரசு நியமித்த தொழில் நுட்பக் குழுவின் ஆய்வு வரம்பை

முடிவு செய்தது பெரும் முன்னேற்றமாகும். இதில் கேரள மாநிலம் ஏற்கனவே சில நிபந்தனைகளைத் தெரிவித்தது. 1977 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள், திருவனந்தபுரத்தில், இந்திய பிரதமர் முன்னிலையில், தமிழ்நாடு, கேரள முதல் அமைச்சர்களிடையே நடைபெற்ற கலந்துரையாடலின் மூலம் இது இயலக்கூடியதாகச் செய்யப்பட்டது. தமிழ்நாடு, கேரளா ஆகிய மாநிலங்களிடையே ஏற்கனவே ஏற்பட்ட உடன்பாடுகளில் அடங்காத ஆறுகளை கிழக்கு நோக்கித் திசை திருப்புவதற்கான சாத்தியக் கூறுகளை தொழில் நுட்பக் குழு ஆராயலாம் என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

17. இதுபோன்ற மாநிலங்களுக்கிடையேயான பிரச்சினைகளை தீர்க்க தரிசனத்துடனும் விடாமுயற்சியுடனும் அணுக வேண்டும். நல்லெண்ணமும், பரஸ்பரம் புரிந்து கொண்டு செயல்படுவதும்தான் தமிழ்நாட்டின் நீண்டகாலப் பாசனத் தேவைகளை நிறைவு செய்யும் திருப்திகரமான ஏற்பாட்டினை அடைவதற்கான முயற்சிகளுக்கு அடிப்படையாக இருக்கும்.

**பொதுப்பணித் துறையைத் திருத்தியமைத்தல் :**

18. நிர்வாகத்தின் திறனை மேம்படுத்தவும், செவ்வியவகையில் மேற்கொள்ளவும் பொதுப்பணித் துறையைத் திருத்தியமைக்கக் கருதப் பட்டுள்ளது. பாசனம், கட்டிடம், ஆகிய இரண்டையும் நிர்வகிக்கும் பல நோக்கு நிர்வாகப் பணியாளர் அமைப்பாக, நில எல்லை அடிப்படையில் இத்துறை உருவாக்கப்பட்டுள்ளது. நவீன தொழில் நுட்பத்திற்கு இன்றியமையாத அம்சமாகவுள்ள சிறப்பு அறிவு பெறுவதற்கு இந்த ஏற்பாடு ஒவ்வாது. கிராமப் பொருளாதார மேம்பாட்டிற்கு உதவும் வகையில் சிதரு வல்லுநர்களின் கண்காணிப்பும் நவீன தொழில் நுட்ப நடவடிக்கைகளும் முக்கியமான பணியான நீர்பாசனத்தில் இணைந்திருக்க வேண்டும்.

கட்டிடங்களை கட்டத் திட்டமிடுதல், கட்டுதல் ஆகியவை வேறொரு தொழில் நுட்ப அம்சமாகும். பொதுப்பணித் துறையை பாசனம், கட்டிடங்கள் என்று இரு கூறுகளாகத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கிணங்க, நிர்வாக, மேற்பார்வைப் பணியாளர் அமைப்புகளைச் சீரமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த மாற்று ஏற்பாட்டினால் நிர்வாகத்தின் திறமையும் சுறுசுறுப்பும் ஓங்கும்.

19. பாசன ஏற்பாடுகளின் அமைப்பினைக் கருத்தில் கொள்ளாமல் வட்டார அடிப்படையில் நீர்ப்பாசனத்துறை தற்போது வரையறுக்கப்பட்டுள்ளது. இந்த வரையறுப்பு, அறிவியல் முறையில் நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துவதையும், குறிப்பாக வெள்ளம் முதலியன ஏற்படும் காலங்களில் உடனடியாகவும் உறுதியானவுமான நிவாரண நடவடிக்கைகள் எடுப்பதையும் பாதிக்கின்றது.





நீரைப் பாதுகாப்பதும் பயன்படுத்துவதும், வடிநிலப் பகுதி பாசனத்திற்காக நீரைப் பாதுகாப்பதும் வாய்ப்பு இருக்கிறது. ஒவ்வொரு முக்கிய வாரியாக நன்கு கவனிக்கப்பட வாய்ப்பு இருக்கிறது. ஒவ்வொரு முக்கிய வடிநிலப் பகுதியிலும் கிடைக்கக் கூடிய நீரின் அளவு, பயன்படுத்துதல், உபரி நீர் அளவு ஆகியவற்றை மதிப்பிடுதலும், ஆற்றுப் பள்ளத்தாக்குப் பகுதிகளில் நீரை உரிய அளவுக்குச் சிக்கனமாகப் பயன்படுத்துவதன் மூலமும் தொடர்பான வேளாண்மை நடைமுறைகள் மூலமும் முழுமையான ஒருங்கிணைந்த வளர்ச்சிக்கான பெருந் திட்டங்களை வகுப்பதும் பொருத்தமாகும். இந்த நடவடிக்கை நமது மாநிலத்தின் உடனடித் தேவையாகும். ஏனெனில், இம் மாநிலம் மேற்பரப்பு நீர் வாயில்களை ஏறக்குறைய முழுவதும் பயன்படுத்தியாகி விட்டது. தேவைகளையொட்டி ஒவ்வொரு வடிநிலப் பகுதியிலும் உறுதியான அடிப்படையிலமைந்துள்ள பாசன வாயில்களைப் பெறுவதற்கும் பாதுகாக்கவு மான திட்டங்கள் வகுக்கப்பட்டு, நிறைவேற்றப்பட வேண்டும். அந்த வகையில், தற்போது அறிவியல் அடிப்படையில் அமைந்திராத மாவட்டவாரி அதிகார வரம்புகளை நீக்கிவிட்டு மேற்குறிப்பிட்ட திட்டங்களை நிறைவேற்ற வேண்டும். இம்மாநிலத்தில் உள்ள பாசன வழி நிலைகளைக் கீழ்க்கண்டவாறு வகைப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது :—

**வடக்குத் தொகுதி :**

(i) ஆரணியாறு, கொற்றலையாறு, கூவம், அடையாறு, பாலாறு வடிநிலங்கள்.

(ii) பெண்ணையாறு வடிநிலம்.

**மத்தியத் தொகுதி :**

(iii) பரம்பிக்குளம் ஆளியாறு திட்டம்.

(iv) காவேரி, பவானி, அமராவதி வடிநிலங்கள்.

**தென் தொகுதி :**

(v) வெள்ளாறு, அக்கினியாறு, மணிமுத்தாறு வடிநிலப் பகுதி.

(vi) பெரியாறு, வைகை வடிநிலப் பகுதி.

(vii) தாமிரவருணி—கோதையாறு வடிநிலப் பகுதி.

ஒவ்வொரு தொகுதி வடிநிலப் பகுதியும் ஒரு தனியான தலைமைப் பொறி யாளரிடம் (பாசனம்) ஒப்படைக்கக் கருதப்பட்டுள்ளது. அவர், திட்ட ஆய்வு திட்ட கட்டுமானம், திட்டத்தை இயக்குதல், முறை பராமரிப்பு ஆகியவற்றிற்கு ஒட்டுமொத்தப் பொறுப்பு வகிப்பார்.

**ஆயக்கட்டு ஆலோசனைக் குழுக்கள் :**

20. திட்டங்களைத் தீட்டி செயல்படுத்துதல், நீரைச் சிக்கனமாகப் பயன் படுத்துதல், பயிரிடும் முறை குறித்துத் திட்டமிடுதல் ஆகியவற்றில் அதிக அளவில் நடவடிக்கை எடுப்பதில் ஆயக்கட்டுதாரர்களோடும், தேர்ந்தெடுக்கப் பட்ட பிரதிநிதிகளோடும் இணைந்து செயல்படுவது அவசியமாகும் என்று இந்த அரசு கருதுகிறது. பாசனத் திட்டங்களின் ஆயக்கட்டு பகுதிகளில் பொறுப்பு வகிக்கும் பல்வேறு அரசுத் துறைகளுக்கிடையே ஒருங்கிணைப்பை ஏற்படுத்துவது அவசியமாகும் என்றும் இவ்வரசு கருதுகிறது. இந்த இரு நோக்கங்களைக் கருத்திற் கொண்டு பெரிய வடிநிலப் பகுதிகள் ஒவ்வொன்றுக்கும் பாசன, வேளாண்மை, கூட்டுறவு, மீன், வனம், மின்சாரம், வருவாய் ஆகிய துறைகளைச் சேர்ந்த அதிகாரிகள் விவரம் தெரிந்த ஆயக்கட்டுதாரர்கள், அப்பகுதிகளைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாநிலச் சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகியோரைக் கொண்ட ஒரு ஆலோசனைக் குழுவை நியமிக்கக் கருதப்பட்டுள்ளது.

**வெள்ளமும், வெள்ள நிவாரணமும் :**

21. பருவ மழைக் காலங்களில் சென்னை மாநகரிலும், அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் தண்ணீர் தேங்குவதற்கும், வெள்ளத்தால் பாதிக்கப்படுவதற்கும் வாய்ப்பு உள்ளது. 1976-77 ஆம் ஆண்டுகளில் பெற்ற அனுபவத்திலிருந்து இது தெரிய வருகிறது. இவற்றிற்கான காரணங்களைப் பகுப்பாய்வு செய்து பரிகார நடவடிக்கைகள் குறித்து பரிவுரை செய்யுமாறு குழுக்கள் அமைக்கப் பட்டன. சைதாப்பேட்டை குடியிருப்பு வீட்டுத் தொகுதிகளில் வெள்ளத்தால் ஏற்பட்ட சேதங்கள் குறித்து ஆய்வு செய்ய திரு. கே. கே. நம்பியார் தலைமையில் அமைக்கப்பட்ட குழு 1976-ல் ஆய்வு செய்தது. இந்த வீடுகள் இயற்கையாகவே வெள்ளப் பெருக்கு ஏற்படக்கூடிய அடையாறு ஆற்றுப் பகுதியில் கட்டப்பட்டுள்ளன என்று அக்குழு கருத்து தெரிவித்தது. மேலும் இக்குடியிருப்புகளுக்கு ஆற்று வெள்ளத்திலிருந்து பாதுகாப்பு அளிப்பதற்காக அவற்றைச் சுற்றிக் கட்டத் திட்டமிடப்பட்ட வளைவுக்கரை கட்டப்படாமலேயே விடப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளது. வளைவுக்கரையை முழுவதும் கட்டி முடித்து, நீர் உட்புகா வண்ணம் தடுப்பதற்கு இந்த வளைவுக்கரை உயரமாகக் கட்டப்பட வேண்டும் என்று குழு பரிவுரை செய்தது. இப்பரிவுரை தற்போது நிறைவேற்றப்பட்டுள்ளது.



இக்குழு தெரிவித்தக் கருத்துக்களைக் அடையாற்றை சென்னை மாநகர் 1884-ஆம் ஆண்டு ஆறுகள் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் கொண்டுவரவும் ஆற்றுப் பாதுகாவலர் ஒருவரை நியமிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. சென்னை மாநகருக்குள் ஓடும் ஆறுகள் அனைத்தையும் பராமரித்தல், பாதுகாக்கும் பணி குறிப்பாக பொதுப்பணித் துறையிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது. செம்பரம்பாக்கம் ஏரியை மேம்படுத்தும் பணியும் மேற்கொள்ளப் பட்டுள்ளது.

செங்கற்பட்டு மாவட்டத்திலும் சென்னை மாநகரிலும் வெள்ளத்தால் ஏற்படும் சேதங்களைத் தடுப்பதற்கான நிலையான நடவடிக்கைகள் குறித்து ஆய்வு செய்து பரிவுரைகள் அளிக்குமாறு திரு. சிவலிங்கம் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டது. அக்குழு மௌண்ட்—போரூர் பாலத்திலிருந்து அடையாற்றுப் பாலம் வரையில் உள்ள அடையாறு ஆற்றின் பகுதி முழுவதிலும், நெடுக வெள்ளத் தடுப்புச் சுவர்களைக் கட்ட வேண்டும் என்று பரிவுரை செய்தது. இது குறித்து ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

22. 1977 அக்டோபர்—நவம்பர் திங்கட்களில் முன்னெப்போதும் கண்டிராத பெருமழை பெய்ததன்விளைவாக தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, மதுரை ஆகிய மாவட்டங்களில் வெள்ளப் பெருக்கால் உயிருக்கும், உடைமைக்கும் பெரும் சேதம் ஏற்பட்டது. பாசன வாயில்கள், கட்டுமானங்கள் ஆகியவற்றை அவசரமாகப் பழுது பார்க்கும் பணி, போர்க்கால நடவடிக்கையைப் போல மேற்கொள்ளப்படுவதற்காக திருச்சிராப்பள்ளியைத் தலைமையிடமாகக் கொண்டுள்ள பாசனத் தலைமை சிறப்புப் பொறியாளரின் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள சிறப்புப் பிரிவால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 1978 ஆம் வருடம் மார்ச்சு மாதம் 31 ஆம் தேதி வரையில் பார்க்கப்படும் செப்பனிடு பணிகளுக்கு 5 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. பொதுக் கட்டிடங்களுக்கு ஏற்பட்டுள்ள சேதம் 2 கோடி ரூபாய் ஆகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. 1978 ஆம் வருடம் மார்ச்சு மாதம் 31 ஆம் தேதிவரையில் பழுது பார்க்கும் பணிகளுக்காக 1 கோடி ரூபாய் செலவு ஏற்படும்.

23. புயல், வெள்ளம் போன்ற இயற்கைச் சீற்றங்கள் நேரிடும் காலத்தில் மீனவர்களுக்கும் கடற்கரையோரப் பகுதியில் வாழும் ஏனையோருக்கும் பாதுகாப்பு அளிக்கும்பொருட்டு கடற்கரையோரத்தில் முக்கியமான இடங் களில் புயல்-வெள்ளப் புகலிடங்களைக் கட்டுவதற்கு அரசு முடிவு செய்துள்ளது. முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து பெறும் உதவியுடன் ஒவ்வொன்றும் ரூ. 2 இலட்சம் செலவில் ஏழு புகலிடங்களைக் கட்டுவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. அத்தகைய புகலிடங்கள் கட்டுவதற்கு தஞ்சாவூர்

மாவட்டம் நாகப்பட்டினம் வட்டத்தில் அக்கரைப்பேட்டை (வடக்குப் பொறையூர் கிராமம்), புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி வட்டத்தில் மீமிசல் (சந்திரம் பட்டினம் கிராமம்), தென் ஆர்க்காடு மாவட்டம், சிதம்பரம் வட்டத்தில் வல்லம்படுகை, பிச்சாவரம், ஜெயங்கொண்டபட்டினம், தென் ஆர்க்காடு மாவட்டம், கடலூர் வட்டத்தில் ஆலப்பாக்கம், கள்ளயார்குப்பம் ஆகிய இடங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

**வறட்சி நிவாரணம்:**

24. தமிழ்நாட்டில் தென்மேற்குப் பருவமழை நன்றாகப் பெய்யவில்லை. எனவே, ஏரிக்கரைகளை வலுப்படுத்துதல், ஏரிகளையும் குளங்களையும் தாழ்ப் படுத்துதல், கால்வாய்கள் முதலியவற்றில் தூர்வாருதல் போன்ற வறட்சி நிவாரணப் பணிகள் நடப்பாண்டிலும் மேற்கொள்ளப்பட்டன. 1977-78-ல் வறட்சிப் பகுதிகளில் மேற்கொள்வதற்காக 770 திட்டங்களுக்கு ரூ. 571.33 இலட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டது. ரூ. 15 இலட்சம் சிறப்பு நிதி ஒதுக்கம் செய்யப்பட்டது. எஞ்சிய தொகை, 1977-78 ஆம் ஆண்டுக்கான முறையான மானியங்களில் இப்பணிகளுக்காக நிதி ஒதுக்கம் செய்வதன் மூலம் பெறப்பட்டது. 1977, அக்டோபர் வரையில் ஆன செலவு ரூ. 148.169 இலட்சமாகும்; உழைப்பு நாட்கள் 9,42,261 ஆகும். இத்தகைய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தபோது வடகிழக்கு பருவமழை பெய்யத் தொடங்கி வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு நிவாரணம் அளித்தது.

**நிலப்படை ( Land Army ):**

25. மாநிலத்தில் நிலப்படை அமைப்பதற்கான திட்டம் ஒன்றை வகுக்க தலைமைச் செயலாளரின் தலைமையில் குழு ஒன்றை அரசு அமைத்துள்ளது. அடுத்த சில மாதங்களுக்குள் அப்படை அமைக்கப்படுமென்று எதிர்பார்க்கப் படுகிறது.

**வேலை கிடைக்காத பொறியாளர்களுக்கு உதவும் திட்டம்:**

26. வேலை கிடைக்காத பொறியாளர்களுக்குப் பெருமளவில் உதவும் நோக்கத்துடன், ஒப்பந்தங்கள் வழங்குவதில் தற்போதுள்ள சலுகைகளை அரசு தாராளமாக்கியுள்ளது. வேலை இல்லாத பட்டதாரிகளுக்கும் பட்டயதாரர் களுக்கும் எவ்வித வேறுபாடுமின்றி ஒரே அளவில் சலுகைகள் அளிக்கப் படுகின்றன.



**பணி ஆலோசனைக் குழுக்கள்:**

27. அரசுத் துறைகளில் ஏற்படும் செலவு குறித்து துறை அளவில் மட்டுமே ஆய்வு செய்வதைவிட, பொதுமக்களின் தொடர்ந்த கண்காணிப்பு இருக்க வேண்டுமென்பதே இவ்வரசின் கொள்கையாகும். பொதுப்பணிகளின் தரம், முன்னேற்றம் ஆகியவை குறித்து ஆய்வு செய்வதில் உள்ளூர் மக்களும் பங்கு கொள்ளவேண்டும். அப்போதுதான் முறைகேடுகள் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் குறைக்கப்பட்டு, அரசு செலவிடும் பணத்திற்கு நல்ல பலன் கிட்டும். இந்த நோக்கங்களை எய்துவதற்காக, கோட்டாட்சியரின் தலைமையில் வட்ட அளவில் பணி ஆலோசனைக் குழுக்களை அமைக்க ஆணையிடப்பட்டுள்ளது. இக்குழுவில், தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள், பொதுமக்களின் பிரதிநிதிகள், சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள் ஆகியோர் இருப்பர். இந்த ஆலோசனைக்குழு, துறை கட்டிவரும் பணிகள் அனைத்தையும் பார்வையிட்டு அவற்றின் முன்னேற்றத்தையும் தரத்தையும் ஆய்வுசெய்யும். முறைகேடுகளும், ஊழல்களும் நடந்திருப்பதாகத் தெரிய வருமாயின் அரசுக்கு உடனடியாகத் தெரிவிக்கப்படும். பணி நடைபெறும் இடம் ஒவ்வொன்றிலும் பணியின் விவரங்கள், ஒப்பந்தக்காரரின் பெயர், ஒப்பந்தம் அளிக்கப்பட்ட நாள், அனுமதிக்கப்பட்ட தொகை, பணி முடிக்கப்படுவதற்கு வரையறுக்கப்பட்ட நாள் ஆகியவை குறித்த விவரங்கள் எல்லோருக்கும் தெரியும் வகையில் வைக்கப்படவேண்டும். அதனால், பொதுமக்கள், பணியின் முன்னேற்றம், தரம் குறித்து தெரிந்து மனநிறைவு கொள்வர்.

**நீரியல் குறித்த புள்ளி விவரத் தகவல் காப்பகங்கள்:**

28. இம்மாநிலத்தில் பெய்யும் மழையின் அளவு, வடிந்து போகும் மழை நீரின் அளவு, பல்வேறு ஆறுகளில் வந்துசேரும் வெள்ளப்பெருக்கு நீர் அளவு ஆகியவை தொடர்பான தகவல்களைத் தொடர்ந்து பாசனத்துறை சேகரிக்கிறது. அத்துடன் வெள்ளத்திற்கு முன்பும் பின்பும் குறிப்பிட்ட இடங்களில் ஆறுகளில் போக்கு குறித்த தகவல்களையும் அது வைத்துள்ளது. இந்தப் புள்ளிவிவரங்கள் இப்போது ஒன்றுக்கு ஒன்று தொடர்பில்லாமல் பல்வேறு வடிவங்களில் கிடைக்கின்றன. தற்காலக் கணக்கீட்டுப்பொறி நடைமுறைகளை மேற்கொள்வதன் மூலம் அவற்றை வரிசைப்படுத்தி தொகுத்துத்திரட்டி வைக்கவேண்டும். இத் துறையிடம் உள்ள தகவல்கள் அடங்கிய பதிவேடுகள் சில காலப்போக்கில் சிதைந்து போய்விடக்கூடும். அவற்றைத் தொகுத்த பிறகு, புள்ளிவிவரத் தகவல் காப்பகங்களில் நிலையாகச் சேகரித்து வைக்கலாம். அவ்வாறு அவற்றைப் பாதுகாத்தால் திட்ட நடைமுறைப் பகுப்பாய்வுக்காகவும் எதிர்காலத்தில் மேற்கொண்டும் ஆய்வுகள் செய்வதற்காகவும் அவை எளிதில் கிட்டும். தற்போது கிடைக்கிற புள்ளி

விவரங்களைச் சேகரித்துத் தொகுக்கவும் பல்வேறு வடிநிலப்பகுதிகள் முதலியவற்றை ஒரே சமயத்தில் பகுப்பாய்வு செய்யவும் பாசனத் தலைமைப் பொறியாளர் அலுவலகத்தில் ஒரு பிரிவை ஏற்படுத்தக் கருதப்படுகிறது. நூற்றுக்கும் மேற்பட்ட ஆண்டுகளின் நீரியல் புள்ளி விவரங்களை அறிவியல் முறையில் பயன்படுத்துவதற்கான சிறந்த முன்னேற்ற நடைமுறைகளில் இது ஒன்றாகும்.

29. பொதுப்பணித்துறை பெருமளவில் தொகை செலவிடும் ஒரு துறையாகும். பொருளாதார அமைப்பு—குறிப்பாக, கிராமத் துறையின் பொருளாதார அமைப்பு—இத்துறையின் திறமையையே பொறுத்துள்ளது. பொது நிதிகளை விவேகமாகச் செலவு செய்யும் வகையிலும் பணிகளை நிறைவேற்றும் வகையிலும் செவ்விய தொழில் நுட்ப வகையிலும் இத்துறையின் கொள்கைகளும் திட்டங்களும் அமைந்திருக்க வேண்டும். எல்லா நிலைகளிலும் பொதுமக்களின் தேவைகளை அறிந்து செயல்படுதல், தொழில் நுட்பத் திறமை, நிர்வாகத் திறமை, நாணயம் ஆகியவை கொண்டதாக பொதுப் பணித்துறையை அமைத்து அதற்குப் புதியதோர் உருக்கொடுத்து அரசு முடிவு செய்துள்ளது. இந்த வகையில் நமது முயற்சிகளைப்பற்றிச் சுருக்கமாக நான் விளக்க முயன்றுள்ளேன்.

## தமிழ் நாடு சட்ட மன்ற மேலவை

---

*சனிக்கிழமை, 1978 மார்ச் 18*

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் முற்பகல் 10-30 மணியளவில் மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் (திரு. ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

### 1. வினாக்கள்-விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

### *Stay-in-Strike by Prisoners in Central Jail, Madurai.*

* 185 Q.—THIRU V. THANGAPANDIAN: Will the Hon. the Minister for Law be pleased to state—

(a) whether it is a fact that the prisoners in Central Jail, Madurai, have indulged in stay-in-stirke, while prisoners have been released on the birthday of Arignar Anna during September, 1977;

(b) if so, the nature of their demands; and

(c) the action taken thereon by the Government?

**மதுரை மத்திய சிறைச்சாலையில் கைதிகள் உள்ளிருப்பு வேலை நிறுத்தம்.**

திரு. வே. தங்கப்பாண்டியன்: மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1977 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் அறிஞர் அண்ணா பிறந்த நாளையொட்டி கைதிகளை விடுதலை செய்யும்போது, மதுரை மத்திய சிறைச் சாலையில் கைதிகள் உள்ளிருப்பு வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டார்கள் என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், அவர்களின் கோரிக்கைகள் யாவை?

(உ) அவைகளின்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIYAR:

(a) Yes.

(b) The charter of seven demands is as follows:

(1) All lifers may be released on completing seven years of sentence and short-termers may be granted remission more liberally;

(2) The term of life imprisonment may be ten years;

(3) The cases of the lifers may be placed before the Advisory Board on completion of seven years of sentence and they may be released on completion of eight or nine years of sentence. The remission awarded for good conduct, industry and set-off period may be calculated for eligibility for Advisory Board for consideration of premature release;

(4) Long-termers may be granted release on leave for one or two months in a year. The system of enquiry by local authorities may be abolished.

(5) With the rapid growth of industry and scientific advance, all prisoners may be given wages according to their work;

(6) Exchange of prisoners from one prison to another as a matter of punishment without their consent, may be avoided.

(7) The long-term prisoners, on their release, may be given sufficient financial assistance to rehabilitate themselves.

(c) The above demands are under consideration of the Government.

திரு. வே. தங்கப்பாண்டியன் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கைதி களுடைய பல்வேறு விதமான கோரிக்கைகளை எடுத்துச் சொல்லி, அந்தக் கோரிக்கைகள் அரசின் பரிசீலனையில் இருப்பதாகச் சொன்னார்கள். அப்படிப் பட்ட பிரச்சினைகள் பரிசீலனையில் இருந்தாலும், அவற்றை முக்கியமான பிரச்சினைகளாகக் கருதி விரைவில் அரசு முடிவை எடுக்குமா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். பத்தாண்டுக் காலம் ஆயுள் தண்டனை அனுபவித்த கைதிகளை விடுதலை செய்வதற்கு அரசாங்கத்திடம் ஏதாவது செயற்குறிப்பு இருக்கிறதா? ஆயுள் கைதிகளை விடுதலை செய்வதற்கு, போலீ சாரிடமிருந்தும், கலெக்டரிடமிருந்தும் நன்னடத்தைச் சான்றிதழ் பெற்றால்தான், அவர்களை விடுதலை செய்யும் வாய்ப்பு இருக்கிறது. எந்தப் போலீஸ்காரர்கள் தண்டனையை வழங்கியிருக்கிறார்களோ அதே போலீஸ் காரர்களிடமே சிபார்சு பெற்றால்தான், விடுதலை கொடுக்கப்படும் என்ற வாய்ப்பு இருக்கிறது. போலீஸ்காரருடைய சிபார்சு இல்லாமல், ஆயுள் தண்டனைக் கைதிகளை விடுதலை செய்ய அரசாங்கம் தயாராக இருக்கிறதா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.



THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIYAR: The hon. Member has put three questions. If he can put them one by one, I can answer.

திரு. வே. தங்கப்பாண்டியன் : பத்தாண்டுக் காலம் சிறை வாழ்க்கையை முடித்துவிட்டால், ஆயுள் தண்டனைக் கைதிகளை விடுதலை செய்யும் செயற் குறிப்பு அரசினிடத்தில் இருக்கிறதா? ஆயுள் தண்டனைக் கைதிகளை விடுதலை செய்வதற்கு போலீஸ்காரர்களுடைய நன்னடத்தைச் சான்றிதழ் இருக்க வேண்டுமென்ற நிலைமை இருக்கிறது. அதை தவிர்த்துவிட்டு, மாவட்ட ஆட்சித் தலைவர், சிறைக் கண்காணிப்பாளர் ஆகியவர்களுடைய குறிப்பை வைத்துக் கொண்டு அரசாங்கமே அவர்களை விடுதலை செய்ய அரசு பரிசீலனை செய்யுமா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

THE HON. THIRU K. NARAYASWAMI MUDALIYAR: So far as the lifers are concerned, those who have completed ten years, there is one complicated question that has now arisen. There are two categories of lifers. One is people who are sentenced to death and thereafter whose death sentence has been commuted into imprisonment for life. In such cases, the Government of India have said that it will be fourteen years. But this Government have always been reviewing cases of the prisoners who have completed ten years as lifers. So, now we have sought clarification from the Government of India in respect of these two categories. We want to adopt the earlier liberal attitude towards the lifers. But in view of the Government of India's communication, we would like to get the clarification so that we may adopt a uniform policy towards both the lifers, whether they were given death sentence which was later on commuted to life imprisonment or even at the very commencement sentenced to imprisonment for life. That is with regard to the first question.

The Government will examine the second suggestion of the hon. Member. So far as lifers are concerned, there may be some force in the hon. Member's contention that the very same Police machinery should not be used for acting upon the advisory opinion in which they ought not to participate. That is practically the view. Anyway this policy matter will be examined by the Government and the matter also will be referred to what is called the Jail Reforms Commission for their views.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** தூக்குத் தண்டனையைப் பெற்று அதற்குப் பின்னால் ஆயுள் தண்டனையாக மாற்றப்பட்டிருந்தால், அவர்களுடைய விடுதலையைப்பற்றி 14 ஆண்டுகளுக்குப் பின்னால்தான் பரிசீலிக்க வேண்டுமென்று மத்திய அரசு சொல்லியிருந்தாலும், கேரள மாநிலத்தில் தூக்குத் தண்டனை பெற்றிருந்தாலும், ஆயுள் தண்டனையைப் பெற்றிருந்தாலும் சரி, அவர்கள் பத்தாண்டுக் காலம் சிறைத் தண்டனையை அனுபவித்த பிறகு விடுதலை செய்யப்படுவார்கள் என்று கேரள அரசாங்கம் ஒரு சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறது. அதைப்போலவே நம்முடைய அரசாங்கமும், பத்தாண்டுக் காலம் சிறைத் தண்டனையை அனுபவித்தவர்கள் யாராக இருந்தாலும், ஆயுள் கைதியாக இருந்தாலும், தூக்குத் தண்டனையைப் பெற்ற கைதியாக இருந்தாலும், அவர்களை விடுதலை செய்வதற்கு ஒரு சட்டத்தைக் கொண்டுவருமா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

The Hon. Thiru K. NARAYANASWAMY MUDALIAR: After receiving the necessary and requisite clarification from the Government of India, the suggestion made by the hon. Member Thiru Veerasami will be seriously considered by this Government.

**திரு. கே. எஸ். அப்துல் வகாப் :** சிறைச்சாலையில் ஒரு கைதி உண்ணாவிரதம் இருந்தால், அதை சிறை அதிகாரிகள் அரசுக்கு உடனே தெரிவிக்கிறார்களா ? அதை இத்தனை காலத்திற்குள்தான் தெரிவிக்க வேண்டுமென்று ஏதாவது வரம்பு இருக்கிறதா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

The Hon. Thiru K. NARAYANASWAMY MUDALIYAR: This does not arise from the main question. Anyway, the hon. Member Thiru Abdul Wahab may be pleased to put a separate question so that I may gather the material and place it before this House.

### *Selection Grade Scale of Pay to Headmasters.*

* 186 .Q—Thiru K. S. GANAPATHI and Thiru V. THANGAPANDIAN: Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether the Government have received any representation from the Association of Headmasters for the grant of Selection Grade Scale of Pay to them; and

(b) if so, the action taken by the Government in this **regard?**



### தலைமையாசிரியர்களுக்கு தேர்வுத்தர சம்பள வீதம்.

**திரு. கே. எஸ். கணபதி & திரு. வே. தங்கப்பாண்டியன் :** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தலைமையாசிரியர்களுக்கு தேர்வுத்தர சம்பள வீதம் வழங்கப்பட வேண்டுமென தலைமையாசிரியர்கள் சங்கத்திடமிருந்து அரசுக்கு முறையீடு ஏதேனும் வந்துள்ளதா ?

(இ) ஆமெனில், இது குறித்து அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** (அ) ஆம்.

(இ) உயர்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்களுக்குத் தேர்வுநிலை ஊதியம் அளிக்க வேண்டும் என்ற கோரிக்கையை அரசு பரிசீலனை செய்து அதுபற்றிய கருத்துருவை தள்ளி வைத்தது.

**திரு. வே. தங்கப்பாண்டியன் :** எல்லா ஆசிரியர்களுக்கும் செலக்ஷன் கிரேட் உண்டு என்ற நிலைமையை உருவாக்கிவிட்டு, தலைமையாசிரியர்களுக்கு மட்டும் செலக்ஷன் கிரேட் இல்லாமல் இருக்கிறது. ஆகவே அவர்களுடைய இந்தக் குறையைப் போக்குவதில் காலதாமதப்படுத்துவது என்பது நியாயமில்லை என்று சொல்லி அவர்களுக்கு விரைவாக செலக்ஷன் கிரேட் அளிக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம் :** உயர்நிலைப்பள்ளிகளில் பணியாற்றும் தலைமையாசிரியர்களுக்குக் கீழ்க்காணும் இரண்டு சம்பள விகிதங்களை அளிக்கலாம் என்று இரண்டாவது சம்பளக் குழு பரிந்துரை செய்தது :

ஆயிரம் மாணவர்களுக்குக் குறைவாக உள்ள பள்ளிகளில் உள்ள தலைமையாசிரியர்களுக்கு ரூ. 450-25-750 என்றும்

ஆயிரம் மாணவர்களுக்கு மேலே உள்ள பள்ளிகளில் உள்ள தலைமையாசிரியர்களுக்கு ரூ. 500-25-625-30-745-35-850 என்றும் பரிந்துரை செய்தது. மேற்கண்ட சம்பள விகிதங்களைப் பெறும் தலைமையாசிரியர்களுக்குத் தேர்வுநிலை வழங்கலாம் என்று இரண்டாவது சம்பளக் குழு பரிந்துரை செய்யவில்லை. மேலும் இந்தக் கோரிக்கையை அரசு பரிசீலனை செய்து, இந்தக் கருத்துருவைத் தள்ளி வைத்தது. தற்போது இத்தகைய கோரிக்கைகள் மூன்றாவது சம்பளக் குழுவின் பரிசீலனைக்கு உட்பட்டவையாகும்.

(முற்பகல் 10-40)

**திரு. பி. ஆர். தாமஸ்:** 2—10—70-க்கும் முன்னதாக இரண்டு வேறுபட்ட ஊதிய விகிதங்கள் தலைமையாசிரியர்களுக்கு வழங்கப்பட்டன. அத்தோடு தலைமையாசிரியர்படி என்றும் வழங்கப்பட்டது. அதே முறையில் தலைமையாசிரியர்படி என்ற வகையில் இப்போது வழங்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** இப்போது மூன்றாவது சம்பளக் கமிஷன் செயல்பட்டுக்கொண்டிருக்கும்போது இந்தக் கோரிக்கையை அவர்கள் முன்னால் வைக்கலாம்.

**திரு. கே. எஸ். அப்துல் வகாப்:** புதிய கல்வித் திட்டத்தின் அடிப்படையில் ப்ளஸ் 2 என்ற ஹையர் செகண்டரி வகுப்புகளுக்கு உள்ளவர் ஹெட்மாஸ்டர் என்று அழைக்கப்படுவாரா அல்லது பிரின்சிபால் என்று அழைக்கப்படுவாரா? ஹையர் செகண்டரி பள்ளிக்கும் ஹைஸ்கூலுக்கும் ஒருவரே இருந்தால், அவரை பிரின்சிபால் என்பதா ஹெட்மாஸ்டர் என்பதா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** ஹையர் செகண்டரி பள்ளியில் ஹெட்மாஸ்டர் இருப்பார். அது முழுமையான பள்ளியாக இருப்பதால், ஹெட்மாஸ்டர் என்பவர்தான் இருப்பார்.

## *Integration of 'A' and 'B' Wing Teaching Staff.*

* 187 Q.—THIRU A. R. DAMODARAN, THIRU P. R. THOMAS and THIRU K. S. GANAPATHI: Will the Hon. the Minister for Education be pleased to state with reference to the answer given to Legislative Council Question No. 6, on the floor of the Council on 20th August 1977—

(*a*) whether the Government have had any discussions with the representatives of 'A' and 'B' Wing Teaching Staff regarding integration; and

(*b*) if so, the stage at which the matter now stands?

**'ஏ' மற்றும் 'பி' பிரிவு ஆசிரியர்கள் ஒருங்கிணைப்பு**

திரு. ஏ. ஆர். தாமோதரன், திரு. பி. ஆர். தாமஸ் & திரு. கே. எஸ். கணபதி: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் 20—8—1977 அன்று சட்ட மன்ற மேலவையில் 6 ஆம் எண் வினாவிற்கு அளிக்கப்பட்ட விடையையொட்டி கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

**(அ) 'ஏ' மற்றும் 'பி' பிரிவு ஆசிரியர்களை ஒருங்கிணைப்பது தொடர்பாக அந்த ஆசிரியர்களின் பிரதிநிதிகளுடன் அரசு விவாதம் நடத்தியதா?**

**(ஆ) ஆம் எனில், இது தற்போது எந்த நிலையில் உள்ளது?**



**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** (அ) ஆம்.

(ஆ) 'ஏ' 'பி' பிரிவு பள்ளிகளில் ஒருங்கிணைப்பிற்கான செயற்குறிப்பு அரசின் தீவிரமான பரிசீலனையில் உள்ளது. ஒருங்கிணைப்புக்கான முடிவு விரைவில் எடுக்கப்படும்.

**திரு. பி. ஆர். தாமஸ்:** வருகிற ஆண்டில் பிளஸ் 2 வகுப்புகள் ஆரம்பிக்கப்படுகிற காரணத்தால், அந்தக் கல்வித் திட்டம் அமுலாவதற்கு முன்னால் துரிதமாக இது அமுலாக்கப்படுமா? இவ்வப்பு பூர்த்தி செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** அதற்கு முன்னதாக இந்த ஒருங்கிணைப்பு அமுல் நடத்தப்படும். மேல் உயர்நிலை வகுப்புகளில் பணியாற்ற ஆசிரியர்களுக்கு உயர்வு கிடைப்பதற்கான வகையில் ஒருங்கிணைப்பு முதலிலே நடைபெறும்.

**திரு. ஜி. சுவாமிநாதன்:** இப்போது நடைபெறும் சட்டமன்றக் கூட்டத் தொடர் முடிவதற்குள்ளேயே அது உருவாக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** முடிந்தால் தெரிவிக்கப்படும்.

## *Tamil Pandits, Grade II.*

* 188 Q.—THIRU P. R. THOMAS and THIRU M. SANKARALINGAM: Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it is a fact that Tamil Pandits Grade II of Government High Schools, appointed prior to 25th February 1971, who have completed 30 years of age, are to be regularised only from 21st March 1974, although they might have received more than three increments; and

(*b*) if so, the reasons therefor?

**இரண்டாம் தர தமிழாசிரியர்கள்**

திரு. பி. ஆர். தாமஸ் & திரு. எம். சங்கரலிங்கம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அரசினர் உயர்நிலைப் பள்ளிகளில் 25—2—1971 ஆம் நாளிற்கு முன்பாக வேலைக்கு அமர்த்தப்பட்ட 30 வயது முடிந்த இரண்டாம் தர தமிழாசிரியர்கள், மூன்றுக்கும் மேலாக உயர் ஊதியம் பெற்ற போதிலும் 21—3—1974 முதற்கொண்டுதான் வேலையில் பணி வரன்முறைப்படுத்தப்படுவர் என்பது உண்மையா?

**(ஆ) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை?**

மாண்புமிகு, திரு. செ. அரங்கநாயகம்: (அ) ஆம். அரசு 'பி' பிரிவு உயர்நிலைப் பள்ளிகளில் 1—4—1970 முதற்கொண்டு 22—3—1973 வரை நியமிக்கப்பட்டவர்களுக்கு 21—3—1974 முதற்கொண்டு பணி வரன்முறை செய்யப்படுகிறது.

(இ) அரசு (ஆணை) நிலை எண். 428 கல்வி, நாள் 21—3—1974 மற்றும் அரசாணை (நிலை) எண். 765, கல்வி, நாள் 16—5—1974-ல் உள்ள ஆணைக்கேற்ப செய்யப்படுகிறது. அரசாணை (நிலை) எண். 765, கல்வி, நாள் 16—5—1974-ல் 1—4—1970-க்குப்பின் 'பி' பிரிவு பள்ளிகளில் நியமனம் செய்யப்பட்டு 21—3—1974-ல் ஒரு வருடத்திற்குக் குறையாமல், பணிக்காலம் நிரம்பப்பெற்ற இடைநிலை ஆசிரியர்கள் இரண்டாம் நிலைத் தமிழாசிரியர்கள் மற்றும் தனித் தேர்வு பெற்ற ஆசிரியர்கள் அனைவரின் பணியையும் 21—3—74 முதல் வரன் முறைப்படுத்த ஆணையிடப்பட்டது.

திரு. பி. ஆர். தாமஸ்: 21—3—1974 ல்தான் வரன்முறைப்படுத்த வேண்டுமென்று விதி இருக்கிறது. ஆனால் பட்டதாரி ஆசிரியர்களுக்கு 1—4—1970 லிருந்து 3—3—73 வரையில் நியமனம் செய்யப்பட்டு 3—8—73-ல் வரன்முறை செய்யப்பட்டவர்களுக்கு முந்திய கால ஊதியமும் நிலுவையும் வழங்க வேண்டுமென்று அரசு உத்தரவிட்டார்கள். அதே மாதிரி இந்தப் பகுதியினருக்கும் சலுகை வழங்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அது குறித்து யோசனையை கவனத்தில் எடுத்துக்கொள்கிறேன்.

திரு. ஜி. சுவாமிநாதன்: இந்த ஆணையின்படி பட்டதாரி ஆசிரியர்களும் தமிழாசிரியர்களும் ஒரே நிலையில் வைக்கப்பட்டிருக்கிறார்கள். அதே நிலையில் உள்ள பட்டதாரி ஆசிரியர்களுக்குக் கொடுத்திருக்கும்போது தமிழாசிரியர்களுக்கு ஏன் கொடுக்கப்படவில்லை?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அது குறித்து நான் பரிசீலிக்கிறேன்.

*Salaries of Teachers of Pasumpon Muthuramalinga Thevar College.*

*189 Q.—Thiru D. SANTOSHAM and Thiru P. R. THOMAS: Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether it is a fact that the teachers of the Pasumpon Muthuramalinga Thevar College, Usilampatti, Madurai district, have not been paid their salaries for the last four months;



(b) whether the Government have paid the Teaching Grant to the Management for the said period;

(c) if so, the reason for the non-payment of the salaries; and

(d) the action taken thereon?

பசும்பொன் முத்துராமலிங்க தேவர் கல்லூரி ஆசிரியர்களுக்கு சம்பளம்.

திரு. டி. சந்தோஷம் & திரு. பி. ஆர். தாமஸ்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மதுரை மாவட்டம், உசிலம்பட்டி, பசும்பொன் முத்துராமலிங்க தேவர் கல்லூரியின் ஆசிரியர்களுக்கு கடந்த நான்கு மாதங்களாக சம்பளம் வழங்கப்படவில்லை என்பது உண்மையா?

(இ) மேற்சொன்ன கால அளவில் நிர்வாகத்திற்கு கல்வி மானியத்தை அரசு வழங்கியுள்ளதா?

(உ) ஆம் எனில், சம்பளம் வழங்கப்படாததற்கான காரணம் என்ன?

(எ) அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) ஆம்.

(இ) இல்லை.

(உ) & (எ) 1975-76 மற்றும் 1976-77 ஆண்டுகளுக்கான நிதி கணக்குகளை நிர்வாகம், கல்லூரி கல்வி இயக்குனருக்கு இன்னமும் அனுப்பாததால், இக்கல்லூரிக்குச் சேரவேண்டிய மானியத்தைக் கணக்கிட்டு வழங்க இயலவில்லை. விரைவிலேயே கணக்குகளை நிர்வாகம் அனுப்புவதாகக் கூறியுள்ளது. அவைகளைப் பெற்றபின் அரசு மானியத்தை கல்லூரிக் கல்வி இயக்குநர் வழங்குவார். இதைக் கொண்டு ஆசிரியர்களுக்கு ஊதியம் வழங்க இயலும்.

திரு. பி. ஆர். தாமஸ்: மேற்படி கல்லூரியிலே ஆசிரியர்களிடம் பிடித்தம் செய்யப்பட்ட க்ஷேமநல நிதி கூட அந்தக் கணக்கில் காட்டப்படவில்லை. அதேபோன்று உத்தமபாளையம், உசிலம்பட்டி கல்லூரிகளிலும் ஆசிரியர்களின் நிலை இருப்பதால், அவர்களுக்கு நேரிடையாகவே அரசு ஊதியத்தை வழங்க முன்வருமா? உத்தமபாளையத்தில் ஆறு மாதங்களாக ஊதியம் தரப்படாமல் ஆசிரியர்கள் அவல நிலையில் இருப்பதால், அவர்களுக்கும் உசிலம்பட்டி ஆசிரியர்களுக்கும் நேரிடையாக ஊதியம் வழங்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பொதுவாக ஆசிரியர்களுக்கு முறையாக ஊதியத்தை வழங்கிவிட்டு, அதற்குப் பின்னர் அதற்கான மானியத்தைப் பெற்றுக்கொள்வது அந்தந்த நிர்வாகத்தினரின் வேலையாகும். இந்தக் கல்லூரியைப் பொறுத்தவரையில், அந்தக் கணக்குகளைக் கல்லூரிக் கல்வி இயக்குநருக்கு அனுப்பாமலிருப்பது முக்கியமான காரணமாக இருக்கிறது. கூடிய வரையில் அந்தந்த ஆண்டிலேயே மானியம் வழங்கலாம் என்று அரசு கொள்கை அளவில் முடிவு செய்திருக்கிறது. அப்படி வழங்கும் போது, நிர்வாகம் அவ்வுறைப் பெற்றுக்கொள்வதில் சிரமம் இருக்காது. உசிலம்பட்டி கல்லூரியைப் பொறுத்தவரையில், விசாரணை நடைபெற்று கல்லூரிக் கல்வி இயக்குநர் நடவடிக்கை எடுத்து வருகிறார். விரைவில் ஆசிரியர்களுக்குச் சம்பளம் கிடைக்கும் வகையில் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : தேவர் கல்லூரியிலே எத்தனை ஆசிரியர்கள் இருக்கிறார்கள் ? ஒரு மாதத்திற்கு எவ்வளவு சம்பளம் பட்டுவாடா செய்யப்படுகிறது ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அது குறித்துத் தகவல் இல்லை. தனியாகக் கேள்வி போட வேண்டும்.

திரு. ஆர். சக்தி மோகன் : கல்லூரி ஆசிரியர்கள் பல காரணங்களைக் குறிப்பிட்டு உண்ணாவிரதம் போன்ற இயக்கங்களில் ஈடுபட்டிருக்கிறார்கள். அதில் பல்கலைக் கழகம் நேரடியாகத் தலையிட்டு, ஆவன செய்ய வேண்டுமென்று நிர்வாகத்தின் சார்பில் வேண்டுகோள் விடப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. அதன் பேரில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : விசாரணை நடத்தப்பட்டிருக்கிறது. அந்த அறிக்கைமீது அரசு நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. அரசின் தீர்மானங்கள்

(1) தனி உறுப்பினர் நாளன்று அரசு அலுவலை மேற்கொள்ளுதல்.

மாண்புமிகு திரு கே. இராஜா முகமது : மேலவைத் துணைத் தலைவர் அவர்கள் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன் மொழிகிறேன் :

" தமிழ் நாடு சட்ட மன்ற மேலவை விதிகளின் 23 (1)-வது விதி நிறுத்திவைக்கப்பட்டு, இந்த அவை 1978 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 18-ஆம் நாள் சனிக்கிழமையன்று அரசு அலுவலை மேற்கொண்டு நடத்தத் தீர்மானிக்கிறது."



மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை :

" தமிழ்நாடு சட்ட மன்ற மேலவை விதிகளின் 23 (1)-வது விதி நிறுத்தி வைக்கப்பட்டு, இந்த அவை 1978 ஆம் ஆண்டு மார்ச் திங்கள், 18 ஆம் நாள் சனிக்கிழமையன்று அரசு அலுவலை மேற்கொண்டு நடத்தத் தீர்மானிக்கிறது."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(2) தமிழ் நாடு நில மேம்பாட்டுக் குழுவிற்கு உறுப்பினரைத் தேர்ந்தெடுத்தல்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : துணைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட தீர்மானத்தை முன் மொழிகிறேன் :

" வேளாண்மைத் துறையின் 1—3—75 நாளிட்ட 305 ஆம் எண் அரசாணையில் மாற்றியமைக்கப்பட்ட தமிழ் நாடு நில மேம்பாட்டுக் குழுவின் உறுப்பினராக திரு. கோ. சி. மணி, எம்.எல்.சி., சட்ட மன்ற மேலவையினால், தமிழ் நாடு 1959 ஆம் ஆண்டு நில மேம்பாட்டுத் திட்ட சட்டத்தில் (தமிழ் நாடு சட்டம் 31/1959), 8வது பிரிவைச் சேர்ந்த (2) உட் பிரிவின் (f) பகுதியின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்டதாலும்;

மேற்சொன்ன பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவின் (f) பகுதியில் குறிப்பிட்டுள்ள உறுப்பினரின் பதவிக்கால அளவு மேற்சொன்ன பிரிவைச் சேர்ந்த (5) உட்பிரிவின் (a) பகுதியின் கீழ், 28—2—1978 அன்று முடிவடைந்துள்ளதாலும் ;

எனவே, மாண்புமிகு மேலவைத் தலைவர் முடிவு செய்யும் நாளன்று தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு, நில மேம்பாட்டுத் திட்டச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 31/1959) 8-வது உட்பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவின் (f) பகுதியினை ஒட்டி, மேற்சொன்ன குழுவின் உறுப்பினராக இருக்க, சட்ட மன்ற மேலவையின் உறுப்பினர் ஒருவரை இம்மன்றம் தேர்ந்தெடுக்க வேண்டும்."

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை ;

" வேளாண்மைத் துறையின் 1—3—1975 நாளிட்ட 305 ஆம் எண் அரசாணையில் மாற்றியமைக்கப்பட்ட தமிழ் நாடு நில மேம்பாட்டுக் குழுவின் உறுப்பினராக திரு. கோ. சி. மணி, எம்.எல்.சி. சட்டமன்ற மேலவையினால் தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு நில மேம்பாட்டுத் திட்டச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 31/1959), 8-வது பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவின் (f) பகுதியின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்டதாலும் ;

மேற்சொன்ன பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவின் (f) பகுதியில் குறிப்பிட்டுள்ள உறுப்பினரின் பதவிக்கால அளவு மேற்சொன்ன பிரிவைச் சேர்ந்த (5) உட்பிரிவின் (a) பகுதியின் கீழ், 28—2—1978 அன்று முடிவடைந்துள்ளதாலும் ;

[மேலவைத் துணைத் தலைவர்] [1978 மார்ச் 18

எனவே மாண்புமிகு மேலவைத் தலைவர் முடிவு செய்யும் நாளன்று தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு, நில மேம்பாட்டுத் திட்டச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 31/1959) 8 வது உட்பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவின் (f) பகுதியினை யொட்டி, மேற்சொன்ன குழுவின் உறுப்பினராக இருக்க, சட்ட மன்றமேலவையின் உறுப்பினர் ஒருவரை இம்மன்றம் தேர்ந்தெடுக்க வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானத்திற்கிணங்க தமிழ் நாடு நில மேம்பாட்டு வாரியத்திற்கு ஒரு உறுப்பினரைத் தேர்ந்தெடுப்பதற்கான வேட்பாளர் நியமனத்தாள்களை 21—3—78, செவ்வாய்க்கிழமை நண்பகல் 12-00 மணிக்குள் செயலாளரிடம் சேர்க்க வேண்டும். நியமனத்தாள்கள் வேண்டுவோர் செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

நியமனத்தாள்கள் 21—3—1978, செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1-00 மணிக்கு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும். விலகிக் கொள்ள விரும்பும் வேட்பாளர்கள் 22—3—1978, புதன்கிழமை நண்பகல் 12-00 மணிக்குள் விலகிக் கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை, நிரப்பப்பட வேண்டிய இடங்களின் எண்ணிக்கைக்கு, அதாவது ஒன்றுக்கு மேற்படுமாயின், 27—3—1978, திங்கட்கிழமை காலை 10-30 மணிக்கும் பிற்பகல் 1-30 மணிக்கும் இடையே வாக்கெடுப்பு நடைபெறும்.

(3) அரசியலமைப்பு (நாற்பத்து மூன்றாவது திருத்தச் சட்டம்) என்று மாற்றப் பெற்ற குறுந்தலைப்பினைக் கொண்ட 1977 ஆம் ஆண்டு அரசியலமைப்பு (நாற்பத்து நான்காவது திருத்தச்) சட்ட முன்வடிவு.

(முற்பகல் 10-50)

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIYAR: Mr. Deputy Chairman, Sir, I beg to move:

"That this House ratifies the amendments to the Constitution of India falling within the purview of the proviso to clause (2) of article 368 thereof, proposed to be made by the Constitution (Forty-fourth Amendment) Bill, 1977, as passed by the two Houess of Parliament and the short title of which has beer changel into 'The Constitution (Forty-third Amendment) Act, 1977'."



1978 மார்ச் 18] [Thiru K. Narayanaswamy Mudaliar]

Sir, the said Bill provides for omission of Articles 31-D, 32-A, 131-A 144-A, 226-A and 228-A which were inserted by the Constitution (Forty-second) Amendment Act, 1976. This Bil also provides for certain consequential amendments to articles 145, 228 and 366 of the Costitution of India.

The Constitution (Forty-second Amendment) Act, 1976, inserted various articles in the Constitution to curtail, both directly and indirectly, the jurisdiction of the Supreme Court and the High Courts to review the constitutionality of laws. Article 32-A barred the Supreme Court from considering the constitutional validity of any State law in proceedings for the enforcement of fundamental rights unless the constitutional validity of any Central law also is in issue in such proceedings. Article 131-A gave to the Supreme Court exclusive jurisdiction to decide the constitutional validity of a Central law and thus deprived the High Courts of their jurisdiction in respect of the same. Article 144-A provided that the minimum number of Judges of the Supreme Court who shall sit for the purpose of determining the constitutional validity of any Central law or State law shall be seven and required a special majority of two-thirds for the invalidation of such law. Article 226-A barred the High Courts from deciding the validity of any Central law and article 228-A required that there should be a Bench of at least five Judges for determining the constitutional validity of any State law and prescribed a special majority for a judgment invalidating such a law. It is considered that article 32-A, 131-A and 228-A cause hardship to persons living in distant parts in India. Further, article 32-A would lead to multiplicity of proceedings as cases relating to the validity of a State law which could be disposed of by the Supreme Court itself have to be heard first by the High Court. The minimum number of Judges in every case wherein the constitutional validity of a law is involved, however unsubstantial the challenge might be, results in valuable judicial time being lost in hearing and rejecting submissions that have no substance. The Supreme Court has, in a case, expressed the hope that article 144-A would engage the prompt attention of Parliament and would be amended so as to leave to the court itself the duty to decide how large a Bench should decide any particular case. In fact, a number of cases are

stated to have been held up in the Supreme Court and High Courts as a result of the aforementioned articles. It is therefore proposed to omit articles 32-A, 131-A, 144-A, 226-A, and 228-A. Article 31-D confers special power on Parliament to enact certain laws in respect of anti-national activities. It is considered that these powers of Parliament to make laws for dealing with anti-national activities and anti-national associations are of a sweeping nature and are capable of abuse. It is, therefore, proposed to omit article 31-D.

Under the proviso to clause (2) of Article 368 of the Constitution, any amendment Bill which seeks to make any change in respect of certain matters mentioned in the said proviso shall be got ratified by the Legislatures of not less than one-half of the States by resolutions to that effect passed by those Legislatures before the Bill making provision for such amendment is presented to the President for assent. The Constitution (Fourty-fourth Amendment) Bill, 1977 seeks to make changes to the provisions mentioned in clause (b) of the Proviso to clause (2) of Art. 368 of the Constitution and hence the Bill has to be ratified by a resolution passed by Legislatures of not less than one-half of the States. Sir, I commend the Resolution ratifying the Bill for the acceptance of the House.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : முன்மொழியப்பட்ட தீர்மானம்—

“நாடாளுமன்ற இரண்டு அவைகளிலும் நிறைவேற்றப்பெற்று, 1977 ஆம் ஆண்டு அரசியலமைப்பு (நாற்பத்து மூன்றாவது திருத்தச்) சட்டம் என்று மாற்றப் பெற்ற குறுந்தலைப்பினைக் கொண்ட, 1977 ஆம் ஆண்டு அரசியலமைப்பு (நாற்பத்து நான்காவது திருத்தச்) சட்ட முன்வடிவினால் செய்யக் கருதப் பெற்றுள்ள, இந்திய அரசியலமைப்பின் 368-வது பிரிவின் (2) பகுதியின் வரம்பு நிபந்தனையின்கீழ் வரும் திருத்தங்களுக்கு இம்மேலவை ஏற்பளிக்கின்றது.”

* **Thiru D. V. D'MONTE** : Mr. Depuy Chairman, Sir, in initiating the Debate in the Rajya Sabha, defending the 42nd Constitutional Amendment Bill, the former Prime Minister stated that the Bill was to " rejuvenate the Nation and the Constitution. ". She said, ". . . . by establishing harmony between the



Legislature, Executive and Judiciary as provided in the Constitution ". She declared that what was being done was to remove the " cobwebs created by some recent attempts of the Judiciary to encroach into the political and legislative sphere. ".

Sir, we have seen what rejuvenation and what harmony to the nation took place and at what cost to the people of this country. This is an example of how words and expressions could be distorted and how such distortions could be replaced by a word of the mouth. Today, the passing of the Resolution before us to ratify the 44th Constitution Amendment Bill as passed by both the Houses of Parliament is a sacred duty which the Members of this House would be performing for posterity. The Amendment seeks to undo the mischief done by certain provisions of the 42nd Amendment Act. Sir, the 42nd Amendment Act was the very negation of the values and objectives for which we have struggled all these years. To describe the 42nd Amendment Act as a black Constitutional provision and as a Draconian measure would amount to minimising the extraordinary effect which it sought to unfold on the people of the country. The 42nd Amendment Act was designed by an evil genius who sought Constitutional sanction to enslave the millions of free citizens of our country. To gag the freedom of the individual, to reduce the vital role of the Judiciary in a democratic process and to burden men and women with misery and suffering were some of the essential sections of the 42nd Amendment. Its objective was to install constitutionally an individual's authority over 600 million people.

Sir, it is needless for me to go into the dark days and sordid histories of the Emergency proclaimed by the former Prime Minister. The 44th Amendment seeks to ensure that those dark days do not return and threaten the democracy. All thinking people should welcome the move to erase the statute of the 42nd Amendment.

It is amazing that in modern times a single individual had developed facist streak like that of Hitler and Franco. Authoritarianism is a dying creed the world over and even the recent Soviet amendments to the Constitution will ensure greater freedom

to the individual. We owe a duty not only to ourselves but to our children and the future generations to ensure that this country will not give birth again to such similar situations.

Of course, it has been said that men and women in power and authority were silent witnesses when the 42nd Amendment Act was forced down the throats of those people. What did the thousands of intellectuals do when Hitler's Nazi rule came about in the most developed country in the world? It is nothing but fear-psychosis which gripped the country and the people all over. But, in a most silent revolution that had taken place at the polls, the people have created the opportunity for democracy to return. The 44th Amendment is in a way a recognition of the unique effort and action of the people to throw out the authoritarian regime and help democracy to establish itself.

On behalf of the Janata Party, I wholeheartedly welcome this Resolution and urge that it be adopted unanimously by this enlightened House.

Thank you.

(முற்பகல் 11-00)

Thiru G. SWAMINATHAN : Sir, as has been very ably supported by my esteemed Friend and Member of the Janata Party, Thiru D'Monte, I also welcome this Amending Bill and plead for its ratification by this House. Of course, I do not want to go into the intricacies of the various Articles of the Constitution, as they have been already enlightened by no less a person than our Hon. Law Minister who is eminently suited to the position, he being a retired High Court Judge, and I hope he would further enlighten us on the subject in his winding-up speech, by mentioning in what way the provisions of the Constitution, sought to be omitted, had jeopardised the judicial power and the inherent fundamental rights of the citizen. Two things are worthy of consideration on this occasion when the provisions of the 42nd Amendment Act are sought to be omitted. One is this. The Parliament had been given powers to legislate, even in violation of the fundamental rights of the citizens, for prevention or curbing of anti-national activities of a citizen or of a group





of citizens. The second thing is that by this Amending Bill, we are trying to restore the judicial powers which had been taken away by the 42nd Amendment Act. I have gone through the debates that took place in the Lok Sabha as well as in the Rajya Sabha, when the Bill was introduced and when the Bill was discussed and voted upon. Various contentions were raised not only by the Members of the Congress Party but also by other Members. At that time there was only one Congress Party and the members of that Congress Party supported the Bill. My Friend Thiru Sundaresa Thevar is here, even though there are no members to represent the two Congress Parties here, as they are. There are two Congress Parties in the Parliament and the Members of both the Congress Parties have supported the Bill. It was a curious thing that the Janata Party Members had opposed the introduction of the Bill in the Parliament. No less a person than Prof. Mavalankar and Thiru Jethmalani opposed the introduction of the Bill and stated that they were not satisfied with the present Bill because they wanted a comprehensive legislation to abrogate completely the 42nd Amendment Act and that they did not want a piecemeal legislation like the present one. I was expecting that Thiru D'Monte would make this point. It was pointed out that according to the manifesto of the Janata Party, the 42nd Amendment Act should be repealed as a whole. They argued that the Hon. the Law Minister was going slowly, and that he was trying to make a compromise with the people who had been responsible for the bringing of the 42nd Amendment Act. Since they had no majority in the Rajya Sabha, it was pointed out that the Law Minister was trying to have a dialogue with the Congress Party Members and that he was, therefore, bringing a piece meal legislation instead of a Bill for complete repeal of the Act. Of course, there were also abuses exchanged between the opposing sections in the Parliament. They were only mere abuses. But I saw in today's papers that in the U.P Legislature, not only abuses but blows had been exchanged and that about 12 legislators had to be carried away and given first aid. I have come to think that provision for giving first aid will have to be made in the Legislatures hereafter. Of course,

this Bill has been passed. Another funny thing is: When the Bill was taken up for voting, the voting machine in the Parliament failed to function properly at the crucial time.

There was some confusion about the voting. While 232 Members were required for passing an Amendment, the machine showed that there were only 231 Members. Then, there was some confusion as to who voted and who did not vote. The Hon. the Prime Minister said that he pushed a button and that his vote was not recorded. It was also said in the Parliament that some new Janata Members claimed that they were new to the Parliament and that they did not know how to vote and how to push the button. Then, the Hon. Speaker had to explain to the Members the method of voting and using the push-button.

Sir, there is one more thing which came out in that debate and it has a relation to a particular controversy that arose in our Legislative Council some time back. In your absence, when the hon. Member Thiru Balasubramaniam was Vice-Chairman, a question arose whether he had the right to adjourn the House when the Members wanted to sit for some more time. In Parliament, along with other points, this point was also discussed and the Hon. Speaker said, "-Regarding the time, I am in the hands of the House because I have no powers at all. Therefore, I am putting it to the House". So, my contention in this matter which I made the other day was correct.

Coming to the points at issue, it was then said that the Government should have strong powers to deal with anti-social activities. The powers of Parliament to legislate came up for discussion. A major question which was agitating everyone of then was the question regarding the supremacy of the powers the Parliament and it was discussed in Parliament. Regarding the High Court Judges and Supreme Court Judges also, discussions took place. Another question which was taken up there was whether Emergency was required or not. I would like to dwell for a few minutes on these few important points.





Regarding a comprehensive amending law, the Hon. the Minister for Law there said that he would take action to bring other Bills. He also said that there were certain Articles of the Constitution which were covered by the 42nd Amendment Act which, according to him, need not be repealed. He also mentioned about legal aid to the poor and about the participation of workers in management and said that these would go away if the earlier Act was totally repealed.

Regarding the supremacy of Parliament, it was talked about whether Parliament had the supreme power to have any Act or any Article of the Constitution amended or whether it should be left to the Judiciary and whether the Judiciary was the final arbiter. Theoretically, Parliament is representative of the people of this country but what ultimately happens is this. When some Congress Members in Parliament wanted to be in favour of this Bill, the Janata Members questioned them why they supported the earlier Amendment. The Congress Members said that because they were in the Ruling Party then, they had to support all the moves brought about by the Ruling Party. This is what happens in Parliament and in State Legislatures, whether the move is brought by the Prime Minister or by a State Chief Minister. Those Members do not have the temerity to oppose whatever is said by the Prime Minister or the Chief Minister. That is what

(முற்பகல் 11-10)

happened in Parliament also. Thirumathi Indira Gandhi became all powerful. Some complained that her son Thiru Sanjay Gandhi also became powerful and all things which Thiru Sanjay Gandhi and Thirumathi Indira Gandhi wanted, they had to do. Utimately, eventhough it is stated that it was the powers of the people that the Parliament reflected, the will and power of two individuals had been reflected by the Parliament. Even the people who abrogated the fundamental rights at that time have to go to Court and stand before it and seek the help of legal luminaries for their support. It may happen to any person one day or the other. We see some people who were in the Opposition are occupying the Treasury Benches. People who were on the Treasury Benches are now

[Thiru G. Swaminathan] 

in the Opposition. The persons in power always think that they will continue in power for all time to come. It is not the correct position, as we have seen in recent years. Because the conditions change in course of time, in the matter of safe-guarding fundamental righs of the citizens, the supremacy of Parliament will not be correct. I personally feel that it is not correct to give all powers to the Parliament which ultimately empowers a single person to do what that person likes. That is what happened. Any party may be branded as an anti-nationalist party. It is often said " Give the dog a bad name and hang it. " That was what happened. I, therefore, personally feel that it should be considered whether the Parliament should have amending power in the case of basic principles of the Constitution and I think when a comprehensive Bill is brought forward and the relative Resolution for the ratification of the same comes up before this House, they will be in a position to give their views.

Coming to the powers of the judiciary, many cases which would be decided by the High Court had to be taken to the Supreme Court. The argument for making such an amendment was stated thus: Certain citizens take up disputes against the State to the Courts. Some High Courts give judgment in favour of the citizens. When a matter was taken to the Maharashtra and Gujarat High Courts, it was ruled that the Government was right on the same issue. It was stated that amendments like this were necessary so that only the Supreme Court would be empowered to give a ruling which would be binding on the whole country. I feel that there will be no confusion on account of the differing judgments given by the various High Courts. The judgment given by the Maharashtra and Gujarat High Courts will be applicable to those States and not to the other States.

The other suggestion of having two-thirds majority for the invalidation of any law will not be practicable. It was stated that there were three kinds of judgments in the Supreme Court on the question whether the Parliament had the right to abrogate the



 [Thiru G. Swaminathan]

fundamental rights. In one case they stated that the fundamental rights could be changed. In another case it was held that they could be changed only with some qualifications. In still another case, they held that Parliament could change the Constitution in respect of the basic features. I think there is no justification for the amendment requiring two-thirds majority for any reason mentioned by them. If such a principle is adopted, it will result in accepting the view of the minority and in rejecting the majority decision of the Court. In the case of a Bench of five Judges, if three Judges, who constitute a majority, decide that a legislation is invalid the decision of the two Judges who constitute only a minority will be ultimately accepted, in accordance with the 42nd Amendment Act. This was also one of the arguments put forth in the Parliament and it was mentioned that the minority opinion would prevail over the majority opinion The question is whether the having of these Benches of 5 and 7 Judges is going to make any change. If a Judge decides in a particular manner, till another decision is given, I think that should be the law. When I was associated with the Swatantra Party, it used to be argued and criticised that Rajaji often changed his mind. Whenever we entered into a private conversation with Rajaji, he used to say, " Only an ass does not change its mind. An organic human individual naturally gets fresh facts and then he has to change his mind. Even after getting fresh facts, if he does not change with those facts, I think he is not an organic human being ". If a Supreme Court Judge decides later, in any other way, I think that should be the law of the country. Now, there are so many Writ Petitions pending in the Courts. I myself have filed a Writ Petition and it is pending for four years. They say that it will take another two years. Even single Judges are not able to decide on Writ Petitions on which we violently feel that our rights have been violated and if Benches with 5 or 7 Judges are going to be formed, the time taken may not be 5 or 6 years but it may even be 10 or 15 years for giving decisions, unless we increase the number of Judges, who are going to sit on these Benches.

I think that this Amendment is already a very late move. While supporting very strongly the ratification of the Amendment Act, **I personally hope that the further Amendments to the Constitution,** as was accepted by the Hon. the Minister for Law at the Centre, will very soon come and that we will also have further opportunities to discuss this matter in this House.

Thank you.

**திரு. கே. எஸ். அப்துல் வகாப் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே, அரசியல் நிர்ணயச் சட்ட 44-வது திருத்தத்தின் பேரில் நான் சில கருத்துக்கள் சொல்ல வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். 44-வது திருத்தம் என்பது புதிய திருத்தமல்ல. அம்மையார் காலத்தில் கொண்டுவந்த 42-வது திருத்தத்தை நடைமுறையில் நடக்காமல் ரத்து செய்வதுதான் இந்த 44-வது திருத்தமாகும். இது எல்லோருக்கும் தெரிந்த உண்மை. இன்றைக்கு மத்திய அரசில் ஆட்சியில் உள்ள ஜனதாக் கட்சிக்காரர்கள், நாங்கள் அதிகாரத்திற்கு வந்தால் 42-வது திருத்தத்தை உடனடியாக ரத்து செய்வோமென்று தேர்தலுக்கு முன்பு வாக்குறுதி கொடுத்திருந்தார்கள். அந்த வாக்குறுதியை நிறைவேற்றுமுகத்தான் இந்த ரத்துச் சட்டம் 44-வது திருத்தம் என்ற பெயரிலே கொண்டுவரப்பட்டிருக்கிறது. பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. விரும்பத்தகாத 42-வது சட்டத் திருத்தத்திலே உள்ள பல அம்சங்களை இதன் மூலம் திருத்தியிருக்கிறார்கள். ஆனால் இன்னும் பல அம்சங்கள் திருத்தப்பட வேண்டும். நண்பர் திரு. சுவாமிநாதன் அவர்கள் சொன்னதுபோல், 'பீஸ் மீல்' ஆகத்தான்—சில பகுதிகளைத்தான் திருத்தியிருக்கிறார்கள். 42-வது திருத்தச் சட்டம் பூராவையும் ரத்து செய்யவில்லை என்பதை நாம் அறிய முடிகிறது. 42-வது திருத்தத்தின்படி அரசியல் நிர்ணயச் சட்டத்தில் புகுத்தப்பட்ட 31 (டி) பிரிவு மிகவும் பயங்கரமான பிரிவாகும். அந்தப் பிரிவின்படி ஒரு அரசியல் கட்சி அல்லது சங்கத்திற்கு தேசிய விரோதமான கட்சி என்று பெயர் சூட்டி விட்டு, தடை உத்தரவைப் போட்டுவிடலாம். அதாவது Ban செய்து விடலாம். அரசுக்கு அந்த அதிகாரத்தை வழங்கும் சட்டத் திருத்தம் அது. அது மிகவும் பயங்கரமான பிரிவு. சட்டம் கொண்டு வருவதற்கு முன்பு அதன் நகல் பட்டுவாடா செய்யப்பட்டது. அப்போது எங்கள் கட்சித் தலைவர்கள், கேரளாவைத் தவிர மற்ற மாநிலங்களில் எதிர்க் கட்சியிலேயே இருந்து பழகியவர்கள், முஸ்லீம் லீக் கட்சித் தலைவர்கள் பெருவாரியான எதிர்ப்பைத் தெரிவித்தார்கள். மத்திய அரசினரைச் சந்தித்து, இந்தப்



பிரிவு கடுமையானது, இதனால் தாங்கள் பாதிக்கப்படும் நிலை உருவாகும், இந்தப் பிரிவை ரத்து செய்ய வேண்டுமென்று எதிர்ப்பைத் தெரிவித்தார்கள்.

(முற்பகல் 11-20)

அப்போது எங்களிடம் மத்திய அமைச்சர் சொன்ன பதில் என்னவென்றால் "இந்தப் பிரிவின் மூலம் உங்கள் கட்சியின் மீது கை வைக்கவில்லை. உங்கள்மீது தடை உத்தரவு வராது" என்று கூறினதாகச் சொல்கிறார்கள். இது மூன்றாவதாகக் கொண்டுவரப்பட்ட சட்டம்.

**திரு. வே. தங்கப்பாண்டியன் :** துணைத் தலைவரவர்களே, அந்தக் கட்சியில் உள்ளவர்கள் இதைத் தவறு என்று சொல்லியிருந்தால் அவர்களையும் அரஸ்ட் செய்து உள்ளே அனுப்பியிருப்பார்கள்.

**திரு. கே. எஸ். அப்துல் வகாப் :** அன்றைக்கே சொல்லியிருக்கிறோம். வேறுக் கட்சிக்காரர்களைக் குறி வைத்து இந்தச் சட்டம் கொண்டுவரப்படுவதாகவும் மற்றவர்களுக்கு அல்ல என்றும் மத்திய அமைச்சர்கள் கூறியதாக என்னிடத்திலே சொன்னதைத்தான் சொன்னேன்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** இந்த முறையில் அமைச்சர் தெரிவித்த கருத்துக்களை அன்றைக்கு நாட்டுக்குச் சொல்லியிருந்தால், இந்தச் சட்டத்தை எதிர்த்திருந்தால், அப்போது உங்களையும் பிடித்து, உங்கள் கட்சியையும் தடைசெய்து, சிறையிலே தள்ள இந்தச் சட்டத்தைப் பயன்படுத்தி இருப்பார்கள்.

**திரு. கே. எஸ். அப்துல் வகாப் :** எங்களுடைய கட்சியைச் சேர்ந்த தலைவர்களும், உறுப்பினர்களும் இந்தச் சட்டத்தை எதிர்த்துக் கருத்துக்களை பாராளுமன்றத்திலே எடுத்து வைத்திருக்கிறார்கள். பாராளுமன்ற நடவடிக்கைக் குறிப்புகளைப் பார்த்தால், தெரியும். இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்ததன் உள்நோக்கமே தேர்தலில் எதிர்க் கட்சிக்காரர்கள் ஆளும் கட்சியைவிடக் கூடுதலாக வெற்றி பெற்றுவிடக் கூடாது என்பதுதான். ஆளுங்கட்சிக்காரர்கள் நினைத்தால், எதிர்க் கட்சிகளை முடக்கச் செய்துவிட்டு, தடை செய்துவிட்டு, தேர்தலில் சுலபமாக வெற்றி பெற்று மீண்டும் ஆட்சிக்கு வர உதவக்கூடிய ஒரு பயங்கரமான சட்டம். அம்மையார் அவர்கள் சென்ற தேர்தலில் இந்தச் சட்டத்தை உபயோகிக்கவில்லை. அடுத்த தேர்தலில் நாம் நிச்சயமாக ஜெயித்துவிடுவோம், பிறகு இதைப் பயன்படுத்திக்கொள்ளலாம் என்று எண்ணினார்கள். தப்புக் கணக்கு போட்டுவிட்டார்கள். அடுத்த தேர்தலில் வெளியே போய்விட்டார்கள். இந்தச் சட்டமும் இன்றைக்கு

[திரு. கே. எஸ். அப்துல் வகாப்] [1978 மார்ச் 18

வெளியே போகக்கூடிய நிலைமை உருவாக்கப்பட்டுவிட்டது. அப்படி இல்லாமல் ஒருகால் அம்மையார் அவர்களே 1977 ஆம் ஆண்டுத் தேர்தலில் வெற்றி பெற்றிருந்திருப்பார்களேயானால், அடுத்து எந்தக் கட்சியும் தேர்தலின் பக்கம் தலைவைத்துப் படுக்கவிடாமல் செய்திருப்பார்கள். ரஷ்யாவைப் போல தனிக் கட்சி ஆட்சி, ஒரே ஒரு கட்சி ஆட்சி இந்தியாவில் நடந்து கொண்டிருக்கும் விதத்தில், ஜனநாயகம் பயங்கரமாக முடக்கப்பட்டிருந்தது. ஆனால் குறிப்பாக இந்தத் தேர்தலில் மாற்றம் வந்தது. இப்போது இந்தச் சட்டத்தைத் திருத்தக்கூடிய நிலை வந்துள்ளது. இன்றைக்கு எல்லோரும் இதை வரவேற்கிறார்கள். நானும் அதற்கு என்னுடைய ஆதரவினைக் கூறிக் கொள்கிறேன்.

42-வது திருத்தச் சட்டத்திலே ஜீவாதார உரிமைகள், "பண்டமெண்டல் ரைட்ஸ்" என்ற உரிமைகள், நியாயமான உரிமைகள் என்று தெரிவிக்கப் பட்டவை பறிக்கப்பட்டன. இது அக்கிரமம் என்றுதான் நாம் சொல்ல வேண்டும். இந்தத் திருத்தத்தின் மூலம் ஏற்கெனவே வழங்கப்பட்ட ஜீவாதார உரிமைகளைத் திரும்பிக் கொடுப்பதற்கான வழிவகைகள் வகுக்கப் படுவது வரவேற்கத்தக்க, மகிழத்தக்க ஒன்று. நம்முடைய நண்பர் திரு. சுவாமிநாதன் அவர்கள் குறிப்பிட்டார்கள். 42-வது திருத்தத்தின் மூலம் ஹைக்கோர்ட்டுகளுடைய உரிமைகள் பறிக்கப்பட்டன என்பதைவிட குறைக்கப்பட்டன என்று சொல்ல வேண்டும். அரசுக்கு எதிராக ஏதாவது ஒருவர் குறை இருந்து தாவா தொடுத்தால், அந்த தாவாவை ஹைகோர்ட்டு அப்படியே ஏற்றுக்கொள்ள முடியாது. முதலில் சுப்ரீம் கோர்ட்டில் உத்தரவு வாங்கி, அதன் பிறகுதான் ஹைக்கோர்ட்டில் தாவா தொடங்க வேண்டும். சுப்ரீம் கோர்ட் அனுமதி வழங்க வேண்டும். டில்லிக்குப் போக வேண்டும். வக்கீலைப் பிடிக்க வேண்டும். சுப்ரீம் கோர்ட்டிலே வழக்குப் போட்டு, அவர்கள் சென்னை ஹைக்கோர்ட்டிலே தாவா தொடரலாம் என்று அனுமதி கொடுத்த பிறகுதான், இங்கே ஹைக்கோர்ட்டிலே தாவா தொடர முடியும். எல்லோராலும் சுப்ரீம் கோர்ட்டிற்குப் போக முடியாது. எல்லோரும் சுப்ரீம் கோர்ட்டிற்குப் போய் தாவா தொடர முடியுமா? வசதி படைத்தவர்களைத் தவிர ஏழைகள், நடுத்தர மக்கள், நிச்சயமாகப் போக முடியாது. ஏழை, நடுத்தர மக்கள் நீதி பெற முடியாத நிலை இருந்தது. பணக்காரர்களுக்கு மட்டும் நீதி என்ற நிலை உருவாகியிருந்தது. இந்தத் திருத்தத்தின் மூலம் அது மாற்றப்படுகிறது என்பது மிகவும் வரவேற்கத்தக்க, பாராட்டத்தக்க ஒன்று.



1978 மார்ச் 18] [திரு. கே. எஸ். அப்துல் வகாப்]

ஹைக்கோர்ட்டிலும், சுப்ரீம் கோர்ட்டிலும் ஒரு கேஸ் விசாரணைக்கு வந்தது என்றால், ஹைக்கோர்ட்டிலே 5 ஜட்ஜுகளுக்கும் குறைவாக விசாரிக்கக் கூடாது. ஹைக்கோர்ட் ஜட்ஜுகள் எத்தனை பேர் இருக்க வேண்டும், சீப் ஜட்ஜ் ஒருவர், மற்றும் எத்தனை ஜட்ஜ் இருக்க வேண்டும் என்றால், முக்கியமாக 5 ஜட்ஜுகள் இருக்க வேண்டும். அதற்குக் கூடுதலான ஜட்ஜுகள் இருக்கலாம். ஆனால் 5 ஜட்ஜுகளுக்குக் குறைவாக இருக்கக் கூடாது. அதே போல் சுப்ரீம் கோர்ட் என்றால், 7 பேர் விசாரிக்க வேண்டும். அதில் மூன்றில் இரண்டு பங்கு மெஜாரிடி வேண்டும். இரண்டு பேர் கூட வெற்றி பெற்று விடுகிறார்கள், மைனாரிட்டி ரூல் அமைந்து விடுகிறது என திரு. சுவாமிநாதன் அவர்கள் சொன்னார்கள். இது மிகவும் அநியாயமானது. ஜட்ஜுகளுக்குள் "ஈக்வாலிட்டி" இல்லாத நிலை இருந்தது. இப்போது இது நீக்கப்படுகிறது. ஜட்ஜுகளுக்கு சம அந்தஸ்து கொடுக்கப்படுகிறது, சம உரிமை கொடுக்கப்படுகிறது. அந்த அடிப்படையில் இது அமைந்திருப்பதால், இதை நான் வரவேற்கிறேன்.

இந்த 42-வது சட்டத் திருத்தத்தின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் களின் ஆயுள் காலம் 5 ஆண்டுகள் என்று இருந்தது, 6 ஆண்டுகள் என்று மாற்றப்பட்டது. அதைப் பழையபடி செய்வதற்கு இந்தத் திருத்தத்தில் இப்போது ஒன்றும் காணவில்லை. அது விடுபட்டுவிட்டது என்றுதான் நான் நினைக்கிறேன்.

இந்த 42-வது சட்டத் திருத்தத்தைக் கொண்டுவந்த திரு. சையத் முகமது அலி என்பவர் அன்றைக்கு அமைச்சராக இருந்தவர். அன்றைக்கு இந்தச் சட்டத் திருத்தத்தை பிரேரேபித்தவரே அவர்தான். அவர்தான் இன்றைக்கு இந்தச் சட்டத்தைத் தீவிரமாக எதிர்த்து வாதாடுகிறார். இன்றைக்கு தீவிரமாக எதிர்த்து வாதாடுகிறவரும் அவரேதான். அன்றைக்குப் பிரேரேபித்தவரும் அவரேதான். இன்றைக்கு இப்படிப்பட்ட விசித்திரம் ஏற்பட்டிருக்கிறது. சூழ்நிலைகளில் மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. ஆட்சியில் மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. ஆட்கள் மாறியிருக்கிறார்கள். அன்றைக்கு இதைக் கொண்டு வந்தவர்களே இன்றைக்கு தீவிரமாக எதிர்க்கிற நிலை ஏற்பட்டிருக்கிற காட்சியைப் பார்க்கிறோம்.

நம்முடைய கான்ஸ்டிடியூஷன் அமுலுக்கு வந்து 28 ஆண்டுகள் ஆகின்றன. 1950 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 26 ஆம் தேதி நம்முடைய அரசியல் சட்டம் அமுலுக்கு வந்தது. இந்த 28 ஆண்டுகளிலே 44 அமெண்ட்மெண்டுகள் செய்யப்பட்டிருக்கின்றன. ஒரு வருஷத்திற்கு 1½, இரண்டு வருடத்திற்கு

[திரு. கே. எஸ். அப்துல் வகாப்] [1978 மார்ச் 18

மூன்று என்ற கணக்கிலே அரசியல் அமைப்புச் சட்டத்திற்குத் திருத்தங்கள் கொண்டுவரப்பட்டுள்ளன. அந்த அளவிற்குத் திருத்தங்கள் கொண்டு வந்தார்கள்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** காரணம் பெடரல் அமைப்பில் அதிகாரங்களை அங்கே வைத்து விட்டார்கள். அதனால் இப்படி "அமெண்ட்மெண்ட்"கள் கொண்டுவரப்பட்டன. இன்னும் வருடத்திற்கு நான்கு நடக்கும்.

**திரு. கே. எஸ். அப்துல் வகாப் :** அமெரிக்காவில் கான்ஸ்டிடியூஷன் சட்டம் ஏற்படுத்தப்பட்டு 100 ஆண்டுகள் ஆகிவிட்டன என்று நூற்றாண்டு விழாவினைக் கொண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். அங்கு உருவாக்கப்பட்ட கான்ஸ்டிடியூஷனுக்கு இதுவரையில் 15, 20 திருத்தங்கள் மட்டுமே செய்யப்பட்டிருப்பதாகச் சொல்கிறார்கள். ஆனால் நம்முடைய கான்ஸ்டிடியூஷனுக்கு 44 திருத்தங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன. இது மாதிரி எந்த நாட்டிலும் பாராளுமன்றத்தில் திருத்தங்கள் கொண்டு வரப்பட்டதாக நாம் கேள்விப்படவில்லை. நாடு சுதந்திரம் அடைந்து, 30 ஆண்டுகளாகி ஆட்சி நடந்து நாம் அனுபவபூர்வமான நிலையைப் பார்த்த பிறகு இப்படித் திருத்தங்களை கொண்டுவர வேண்டிய நிலை இருக்கிறது. எனவே நான் ஒரு யோசனையைச் சொல்ல விரும்புகிறேன். புதிய கான்ஸ்டிடுவெண்ட் அசெம்பிளி அமைக்கப்பட வேண்டும். 30 ஆண்டுகள் ஆகிவிட்டன. எனவே புதிய கான்ஸ்டிடுவென்ட் அசெம்பிளி கூட்டப்பட்டு, அரசியல் சட்டம் மறுபரிசீலனை செய்யப்பட வேண்டும், நல்லவர்களை வைத்தாக கொண்டு, நல்ல கருத்து உள்ளவர்களைக் கொண்டு புதிய சட்டம் கொண்டுவர இந்த அரசு முயற்சி செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஆர். சக்தி மோகன் :** துணைத் தலைவரவர்களே, 42-வது அரசியல் சட்டத் திருத்தத்திற்கு இன்றைக்குக் கொண்டு வரப்பட்டுள்ள திருத்த மசோதாவை ஒட்டிய கருத்துக்களை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். ஆட்சி மாறுகிறபோது, சட்டங்களும் மாறும். ஆட்கள் மாறுகிறார்கள், சட்டங்கள் மாறுகின்றன. இப்போதுள்ள அரசியல் அமைப்புச் சட்டம் முழு அளவுக்கு இந்திய மயமானது என்பதற்கில்லை. ஏனென்று சொன்னால், நாட்டுக்காக யார், யார் பாடுபட்டார்களோ, விடுதலைப் போராட்டத்தில் யார், யார் தீவிரமாகப் பாடுபட்டார்களோ, தியாகம் செய்தார்களோ அவர்களெல்லாம் ஒரு பக்கம், சுதந்திரத்திற்காகப் பாடுபடாதவர்கள் ஒரு பக்கம். இந்த அரசியல் சட்டம் யாரால் ஏற்படுத்தப்பட்டது என்பது



1978 மார்ச் 18] [திரு. ஆர். சக்தி மோகன்]

நமக்குத் தெரியும். அரசியல் சட்டத்தைச் செய்தவர்கள் காங்கிரஸ்காரர்கள் என்று சொல்லப்படுவதே தவறு. இந்தச் சட்டத்தை இயற்றியவர்கள் காங்கிரஸ்காரர்கள் அல்ல. காங்கிரஸ்காரர்கள் வெறும் கை தூக்கிகளாக அன்றைக்கு இருந்தார்கள்.

அன்றைக்கு 42-வது அமெண்ட்மெண்டைக் கொண்டுவந்தவர்களின் அந்த சார்பைச் சேர்ந்த சிலர் இன்றைக்கு அதை எதிர்த்துப் பேசினார்கள். தொகுத்து அளிப்பதற்குக் மட்டுமல்ல. இந்தக் கான்ஸ்டிடியூஷனைத் காரணமாக இருந்த டாக்டர் அம்பேத்கார் அவர்களே இதில் எவ்வளவு குறைகள் இருக்கின்றன என்று கூறிவிட்டு, இந்தக் கான்ஸ்டிடியூஷனை என் சொந்த முறையில் என்ன செய்திருப்பேன் என்று ஒரு கடுமையான கருத்தை மேலும் சொன்னார். இப்படித்தான் அன்றைக்கு நிலை இருந்தது. சட்டங்களை உருவாக்குகிறபோது ஆட்சியில் இருப்பவர்கள் தங்கள் ஆட்சிக்குச் சாதகமாக, அவர்களுடைய கொள்கைக்கு உரிய முறையில்தான் சட்டங்களை அமைத்துக் கொள்வார்கள். அது இயல்புங்கூட. இதற்கு முன்பு ஆட்சி செய்த மதிப்பிற்குரிய பிரதமர், மாஜிப் பிரதமர், திருமதி இந்திரா காந்தியவர்கள் தன்னுடைய ஆட்சிக் காலத்திலே அந்த ஆட்சிக்கு ஏற்பட்ட பயங்கரச் சூழ்நிலையில், மிக, மிகப் பயங்கரமான எதிர்ப்பையும் போராட்டங்களையும் அடக்குவதற்காக, தமது ஆட்சியைக் கவிழ்ப்பதன் மூலம் நாட்டையே ஆபத்துக்குட்படுத்தும் எதிர்ப்புகளைச் சமாளிக்கும் விதத்தில் அவசரகால

(முற்பகல் 11-30)

நிலையைக் கொண்டுவந்தார்கள். அவசர நிலை தவறு என்று இன்றைக்குப் பேசுகிறோமே தவிர, அதைக் கொண்டுவருவதற்கான காரண காரியங்களைக் குறித்து யாருமே விளக்கம் அளிப்பதேயில்லை. அதற்குள் நான் போக வேண்டாமென்று கருதுகிறேன். ஆட்சி மாறிவிட்டதால், காரண காரியங்களும் மாறத் தான் செய்யும். இன்றைக்கு இந்தச் சட்டத் திருத்தத்தின் மூலம் சுப்ரீம் கோர்ட்டுக்கு முழு அதிகாரம் கொடுக்கப்படுகிறது. அதை நாம் ஒப்புக் கொள்ள வேண்டும். எந்த ஒரு ஜனநாயக நாட்டிலும் பார்லிமெண்ட்தான் சுப்ரீம் பாடி என்று சொல்லுவார்கள். பார்லிமெண்ட் மூலம்தான் சட்டத்தை நிறைவேற்றுகிறோம். அந்தச் சட்டத்தை நிறைவேற்றுகிற உரிமையும், பொறுப்பும் நீதிமன்றங்களுக்கு உண்டு என்பது நம்முடைய அரசியல் நிர்ணயச் சட்டத்தின் அடிப்படை. இந்த வகையில் பார்க்கிறபோது, சுப்ரீம் கோர்ட்டுக்கு இந்த அதிகாரங்கள் முழுவதையும் கொடுத்துவிட்டால், ஒரு சமயத்தில் நீதிபதிகள் தங்களுடைய மெஜாரிட்டியை வைத்து பார்லிமெண்டே தேவையில்லையென்று கலைத்து விட்டாலும் விடலாம். இப்படிப்பட்ட பேராபத்து இருக்கிறது.

[திரு. ஆர். சக்தி மோகன்] [1978 மார்ச் 18

ஜனநாயக அமைப்பைப்பற்றிச் சொன்னார்கள். ஜனநாயகத்தை ஆசியில் அறிமுகப்படுத்திய சாக்ரடீஸ்கூட இரண்டு கேள்விகளைத் தொடுத்தார். இதற்கு இன்றுவரை யாருமே பதில் சொன்னதில்லை. "ஜனநாயகம் இருக்கிற இடமும், சர்வாதிகாரம் இல்லாத இடமும் எது?" என்று அவர் உலகிற்கு எழுப்பிய கேள்விக்கு இன்னமும் பதில் சொல்ல யாரும் வரவில்லை. இந்தத் திருத்தத்தைக் கொண்டுவரும்போது, ஜனநாயகம் என்று பேசுகிறோம். ஆனால் ஜனநாயகம் எங்கே இருக்கிறது என்று யாருக்குமே தெரியாது. சர்வாதிகாரம் இல்லாத இடம் எது என்றும் தெரியாது. ஜனநாயகத்தைவிட சர்வாதிகாரம்தான் மேம்பட்டிருக்கிறது என்பதை நாம் நடைமுறையிலே பார்க்கிறோம். அதை விளக்க வேண்டுமென்றால் நீண்ட நேரம் பிடிக்கும். ஆகவே அன்றைய ஆட்சி செய்த சட்டத் திருத்தம் அன்றைக்குத் தேவை. அன்றைக்கு எதிர்த்தரப்பினர்களால் நடத்தப்பட்ட பயங்கர நிலையைத் தடுப்பதற்காகப் போடப்பட்ட சட்டம், அன்றைக்கு தேவைப்பட்டது. இன்றைய ஆட்சி நிலைக்கு இது தேவையில்லை. இன்றையத் தேவை எப்படியோ, அப்படித்தான் அன்றைய தேவையும் இருந்தது. எனவே இன்றைய தேவை என்ற முறையில் இந்தத் திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இது ஒரு தேசியமளாவிய திருத்தம் என்ற முறையில் என்னுடைய கட்சியின் சார்பிலே இதை ஆதரித்து என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்ட இந்தத் திருத்தச் சட்டத்தை ஆதரித்து நான் எனது கருத்துக்களைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்திய அரசியல் சட்டம் புனிதமானது, அதைத் திருத்தவே கூடாது என்று ஒரு காலத்திலே வாதங்கள் இருந்தன என்றாலும், அது திருத்தப்படுகின்றது, அதுவும் அதிகமாகத் திருத்தப்படுகின்றது என்று பேசப்படுகிற ஒரு சூழ்நிலை இன்று நாட்டிலே உருவாக்கப்பட்டிருக்கிறது. 42-வது அரசியல் சட்டத் திருத்தத்தை, நாங்கள் ஆட்சிக்கு வந்தால், முழுமையாக நீக்குவோம் என்று தேர்தல் நேரத்திலே, இன்று மத்தியிலே ஆண்டு கொண்டிருக்கிற ஜனதா கட்சியினர் வாக்குறுதியைக் கொடுத்து, ஏதோ காரணத்தினால் முழுவதுமாக நிறைவேற்ற முடியாத சூழ்நிலையில் ஒரு சில பிரிவுகளைத் திருத்துகிறோம், என்று சொல்லியிருந்தாலும், இந்த அளவுக்காவது திருத்துவதற்கு முன் வந்ததற்காக நாம் மத்திய அரசாங்கத்தைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

நமக்கிருக்கிற மகிழ்ச்சியெல்லாம், இதற்கு முன்னால் 42-வது திருத்தச் சட்டம் வந்தபோது, அதை ஆதரித்த ஒரு கட்சி இன்று தமிழகத்திலே ஆளும் கட்சியாகி, அந்தத் திருத்தத்தை நீக்க வேண்டுமென்று ஒரு திருத்தத்தைக்



1978 மார்ச் 18] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

கொண்டுவந்திருக்கிற சூழ்நிலை ஏற்பட்டிருப்பதுதான். இது மகிழ்ச்சிக்குரிய ஒன்றாகும். அதோடு மட்டுமல்லாமல், திரு. வகாப் அவர்கள் பேசும் போது, "மத்தியிலே சட்ட அமைச்சராக இருந்தவர் இந்தத் திருத்தத்தைக் கொண்டுவந்த நேரத்திலே 44 வது சட்டத் திருத்தத்தை ஆதரித்து 42 வது சட்டத் திருத்தத்தை எதிர்த்துப் பேசியிருக்கிறார். அதைப் பார்க்கும்போது, எனக்கே சிரிப்பு வந்தது" என்று சொன்னார். நான் கூட சிறையிலே இருந்த போது, அவசர காலத்தில் 42 வது திருத்தச் சட்டத்தை ஆதரித்து அறிக்கை விடுத்த முஸ்லீம் லீக் கட்சியினுடைய பிரதிநிதியாக இருக்கிற திரு. வகாப் அவர்கள் இப்போது இவ்வளவு வேகமாக இந்தத் திருத்தத்தை ஆதரித்துப் பேசுகிறார்கள் என்பதைப் பார்க்கும்போது, எனக்குக் கூட சிரிப்பு வந்தது. மாறும் காலத்திற்கேற்ப நிலைமைகளும் மாறுகின்றன. அதற்கேற்றாற் போல் கொள்கைகளை மாற்றிக் கொண்டார்கள் என்பதைப் பார்க்கும்போது, என்னால் மகிழ்ச்சியடையாமல் இருக்க முடியாது. ஜனதா கட்சி இந்தத் திருத்தச் சட்டத்தை நாடாளு மன்றத்திலும், மாநிலங்கள் அவையிலும் கொண்டு வந்த போது, யாராவது எதிர்த்திருக்கிறார்களா என்று பார்த்தால், திரு. சுவாமி நாதன் அவர்கள் சுட்டிக்காட்டியதைப் போல், ஒருவர் மட்டுமே பட்டனை எப்படி பிரஸ் செய்வது என்று தெரியாமல், இதை எதிர்த்ததாகத் தெரிகிறது. நாடாளுமன்றத்தில் மொத்தம் 318 பேர் ஆதரித்திருக்கிறார்கள். மாநிலங்கள் அவையில் 134 பேர் ஆதரித்திருக்கிறார்கள். எதிர்த்தவர்கள் யாருமே இல்லை. ஆகவே 42 வது சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்தவர்களே கூட ஜனதா கொண்டுவந்த இந்தத் திருத்தத்தை எதிர்த்ததாகத் தெரியவில்லை, அவர்களும் ஆதரித்திருக்கிறார்கள் என்று நினைக்கும்போது, அவர்களே தாங்கள் ஒரு தவறான சட்டத் திருத்தத்தைக் கொண்டுவந்தோம் என்று உணர்ந்துவிட்டார்கள் என்றுதான் என்னால் நினைக்க முடிகிறது. அவர்கள் செய்தது சரிதான் என்று அவர்களாலேயே சொல்ல முடியவில்லை. இதுவும் நமக்கு மகிழ்ச்சியளிக்கிறது.

இன்றைய தினம் இந்தத் தீர்மானத்தை முன்மொழிந்திருக்கிற சட்ட அமைச்சர் அவர்கள் சார்ந்திருக்கிற கட்சி 42-வது திருத்தத்தை அவசர காலத்தில் ஆதரித்திருந்தாலும், அதை ஆதரித்துப் பிரசாரம் செய்திருந்தாலும், அந்த நேரத்திலே கூட இன்றைய தினம் சட்ட அமைச்சராக இருக்கிற திரு. நாராயணசாமி முதலியார் அவர்கள், "அவசர காலச் சட்டத்தால் இந்தியத் திருநாடு சர்வாதிகார இருளை நோக்கி இழுத்துச் செல்லப்படும்" என்று எச்சரிக்கையை விடுத்தார் என்பதை இந்தச் சட்டத் திருத்தம் கொண்டு வரும் இந்த நேரத்திலே குறிப்பிடுவது நல்லது என்று நினைக்கிறேன்.

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [1978 மார்ச் 18

அன்றைய தினம் எதிர்த்தவர் இன்று சட்ட அமைச்சராக இருக்கிறார். அதிலே ஒரு மகிழ்ச்சி. அது மட்டுமல்ல, "நெருக்கடி என்ற பெயரால் இந்தியாவுக்கு வாவிருந்த பேராபத்து அண்மையில் நீங்கிவிட்டது" என்ற மகிழ்ச்சியான செய்தியை நம்முடைய சட்ட அமைச்சர் அவர்கள் ஒரு கட்டுரையின் வாயிலாக வெளிப்படுத்தியிருக்கிறார்கள். அதைப் படித்துப் பார்க்கும் பேறு பெற்றேன். அப்படிப்பட்ட கருத்துக்களைத் தெரிவித்தவர், இன்று சட்ட அமைச்சராக இருந்து இப்படிப்பட்ட நல்ல திருத்தத்தைக் கொண்டு வந்ததற்காக நாம் மகிழ்ச்சி அடையத்தான் வேண்டும்.

42 வது சட்டத் திருத்தத்தை நாடாளுமன்றத்திலே விவாதித்தபோது, பல கட்சியினரும் தங்களுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்ல முடியாத சூழ் நிலையில் அது நிறைவேற்றப்பட்டது. விவாதம் நடந்ததாகச் செய்தி வந்தது. ஆனால் அவசர அவசரமாக அந்தச் சட்டத் திருத்தம் கொண்டுவரப்பட்டு, அதை யார் யார் எதிர்ப்பார்கள் என்று தெரிந்ததும், அவர்களையெல்லாம் மிசாச் சட்டத்தின் கீழ் கைது செய்து சிறைச்சாலையிலே போட்டுவிட்டு, யாரும் எதிர்க்காத ஒரு சூழ்நிலையை ஏற்படுத்தி மிக எச்சரிக்கையோடு அன்றைக்கு அரசுக் கட்டிலில் இருந்தவர்கள் இந்தச் சட்டத்தை நிறை வேற்றினார்கள். மாநிலங்கள் அவையில் மட்டும் திரு. கிருஷ்ண காந்த் என்ப வரும் திரு. டப்தாரி என்பவரும் எதிர்த்ததாக அன்றைய தினம் பார்த்தோம். அதால் நாடாளுமன்றத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டது. எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களும் வாயைத் திறக்க முடியவில்லை. அந்த அளவுக்கு அன்றைய தினம் நாட்டில் பேசுவதற்குக் கூட உரிமையற்று இருந்தார்கள் நாடாளு மன்ற உறுப்பினர்கள் என்பதை மறந்துவிடுவதற்கில்லை. ஆனால் ஜனதா கட்சியினரும், ஜனதா கட்சியுடன் இணைந்திருந்த மற்றக் கட்சிகளும், திராவிட முன்னேற்றக் கழகமும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும் அன்றைக்கே கூட வெளிப்படையாக 42 வது அரசியல் சட்டத் திருத்தம் நாட்டுக்கு எப்படி யெல்லாம் கேடு விளைவிக்கும், நாட்டிலே உள்ளவர்களை எப்படியெல்லாம் பாதிக் கும், மனிதனுடைய தனி உரிமைகளை எப்படி இழக்க வேண்டிய நிலை ஏற்படும் என்றெல்லாம் எடுத்துச் சொன்னார்கள். அப்படிச் சொன்னதால்தான் ஜனதா கட்சியினரையும், அவற்றைச் சார்ந்த பல்வேறு கட்சியினரையும், முன்னேற்றக் கழகத்தினரையும், மார்க்சிஸ்ட் கட்சியினரையும் அன்றைய தினம் ஆட்சியிலே இருந்தவர்கள் துன்புறுத்தி பல்வேறு கொடுமைகளுக்கு ஆளாக்கினார்கள் என்பதைச் சுட்டிக் காட்டுவது நல்லது என்று நினைக்கிறேன்.



1978 மார்ச் 18] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

அது மட்டுமல்ல, மாண்புமிகு உறுப்பினர் திரு. சுவாமிநாதன் அவர்கள் குறிப்பிட்டதைப் போல, 'தேச விரோதம்' என்ற சொல்லை வைத்துக் கொண்டு எப்படியெல்லாம் மிரட்டிக் கொண்டிருந்தார்கள் என்பதை நான் எண்ணிப் பார்க்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. வகாப் அவர்கள் இன்றைக்கு இந்தத் திருத்தச் சட்டத்தை ஆதரித்துப் பேசியிருக்கிறார்கள். அவர்கள் அன்றைக்கு 42-வது அரசியல் சட்டத் திருத்தத்தை எதிர்த்துப் பேசியிருப்பார்களேயானால், அவர் சார்ந்திருக்கிற கட்சி சாதியைத் தூண்டுகிற கட்சி என்று சொல்லி, அன்றைக்கே அதைத் தடை செய்திருப்பார்கள். அதைப் போல் அன்றைய தினம் மிரட்டல்கள் இருந்தன. நான் சிறையில் இருந்தபோது கூட, சிறை அதிகாரிகள் மிரட்டினார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தை அழிப்பதற் காக அன்றைய தினம் பிரதமராக இருந்த திருமதி இந்திரா காந்தி அவர்கள் ஒரு சட்டத்தையே கொண்டுவரப் போகிறார்கள் என்று மிரட்டினார்கள். அதனு டைய விளைவாக பல தொழிற் சங்கங்களுடைய உரிமைகள் பறிக்கப்பட்டன. சுதந்திரம் அழிக்கப்பட்டது. அப்படிப்பட்ட நேரத்திலே, இன்றைய தினம் ஆளும் கட்சியாக இருக்கிற அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் கூட எதிர்த்திருந்தால், பிரிவினை சக்தி என்று எண்ணி, அம்மையார் அவர்கள் கோபம் கொண்டு தடை செய்திருப்பார். அதைக் கருதித்தான் அவசர அவசர மாக ஒரே நாளில் தன்னுடைய கட்சியை அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்று பெயர் மாற்றியதைப் பார்த்தோம். அப்படிப் பட்ட சூழ்நிலை அன்றைக்கு இருந்தது. அந்த நிலைமைகள் எல்லாம் இன்றைய தினம் மாற்றம் பெறுகின்றன. அதை எண்ணிப் பார்க்கிற நேரத்தில், மகிழ்ச் சியடையாமல் இருக்க முடியாது. அகில இந்திய அண்ணா தி. மு. க. என்று மாற்றிக் கொண்டாலும், அண்ணா தி.மு.க. என்று இருந்தாலும், இன்றைக்கு அகில இந்தியக் கட்சிகள் எந்தக் கண்ணோட்டத்தில் மாநிலக் கட்சிகளை நோக்குகின்றன என்பதை மறந்துவிடக் கூடாது. காங்கிரசாக இருந்தாலும், இந்திரா காங்கிரசாக இருந்தாலும், ஜனதா கட்சியாக இருந்தாலும், நிலைமை மாறவில்லை. கடந்த 13 ஆம் தேதி கோவையில் நடைபெற்ற ஜனதா கட்சி மாநாட்டில் அகில இந்திய அண்ணா தி. மு. க. வை அகில இந்தியக் கட்சியாக ஏற்றுக் கொண்டார்களா என்றால், இல்லை. திராவிட முன்னேற்றக் கழகமும், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் ஒரே குட்டையில் ஊறிய மட்டை கள் என்றுதான் பேசப்படுகிறதே தவிர, கருத்தில் மாற்றம் ஏற்பட்டிருக் கிறதா என்றால், இல்லை. அவசர காலம் அமுலில் இருந்த காரணத்தால், அப்படி மாற்றிக்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டிருந்தாலும் கூட,

[திரு. ஆற்காடு நா. வீராசாமி]   [1978 மார்ச் 18

(முற்பகல் 11-40)

அண்ணுவின் பெயரால் ஏற்பட்ட கட்சியின் பெயரைத் திரும்பவும் நீங்கள் மாற்றிக் கொள்ள வேண்டுமென்று கூட இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மொழிப் பிரச்சினையில் பார்க்கிறேம். தமிழ கத்தைப் பொறுத்தவரையில், அதில் கருத்து வேறுபாடு யாருக்கும் இல்லை. தமிழ் மொழி பாதுகாக்கப்படும், இந்தித் திணிப்பு கூடாது என்பதைச் சொன்னுல், உடனே பிரிவினை வாதிகள், மொழி வெறியர்கள், பிற்போக்கு வாதிகள் என்று பட்டம் சூட்டுகிருர்கள். இன்றைய ஆளும் கட்சியும் திராவிட முன்னேற்றக் கழகம் சொல்கிற மொழிக் கொள்கையை ஏற்றுக்கொண்டுதான் இருக்கிறது. எதிர்க் கட்சியைப் பொறுத்தவரையில், தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில், இந்தித் திணிப்பு கூடாது என்பதில் கருத்து வேறுபாடு இல்லை. இருந்தாலும் அதை இந்தியாவில் பேசப்படுவது பிரிவினை சக்திகள் என்பதுதான். கடந்த 12 ஆம் தேதி டெல்லியிலே ஜனதா கட்சியைச் சேர்ந் தவர்கள். . .

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்:** துணைத் தலைவர் அவர்களே, ஜனதா கட்சி . . .

**திரு. ஜி. சுவாமிநாதன்:** துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவருடைய இடத்திலிருந்து பேசவில்லை.

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்:** (அவருடைய இடத்திலிருந்து) உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் சொல்லியதைப்போல பிரிவினைவாதிகள் என்று யாரும் சொல்லியதாகத் தெரியவில்லை. இந்தியைத் திணிப்போம் என்றும் சொல்லவில்லை. பத்திரிக்கையிலும்கூட அப்படிச் செய்தி வரவில்லை. அப்படி இருக்கும்போது, தங்களை வளர்த்துக்கொள்வதற்காக இப்படிச் சொல்வது முறையல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** திரு. தீக்ஷிதர் அவர்கள் அனேகமாக அந்த மாநாட்டிற்குச் சென்றிருப்பார்கள் என்று நினைக்கிறேன்.

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்:** மாநாட்டிலேதான் முழுவதும் இருந்தேன்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** அந்த மாநாட்டில் எடுக்கப்பட்ட தீர்மானத்தில் குறிப்பிட்டிருக்கிறர்கள். அதைப் படிக்கிறேன்:

"தமிழ் மொழி காப்பாற்றப்பட வேண்டும், வேற்று மொழி ஆதிக்கம் கூடாது, இந்தி மொழித் திணிப்பை ஏற்கமாட்டோம் என்று சொன்ஞல்,



1978 மார்ச் 18]   [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

அப்படிச் சொல்கிறவர்கள் பிரிவினைவாதிகள், பிரிவினை சக்திகள், பிற்போக்கு வாதிகள், மொழி வெறியைத் தூண்டுகிறவர்கள். . . . ." என்று தீர்மானம் போட்டிருக்கிருர்கள்.

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்:** துணைத் தலைவர் அவர்களே, தீர்மானத்தின் நோக்கம் என்ன என்பதைப் பார்க்க வேண்டும். இந்தியை யாரும் திணிக்கவில்லை. திணிப்பதற்கு அவசியமும் இல்லை, இடமுமில்லை என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** தீர்மானத்தில் சொல்லி யிருப்பதை அவர் சொல்கிருர். வேறு அல்ல.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** அதற்கு என்ன நோக்கம் என்பது தெரியவில்லை. அதை விளக்கிப் புத்தகங்களாகப் போட்டால் புரிந்து கொள்ளலாம். தீர்மானம் அப்படி இருக்கிறது. அதில் இந்தியக் கட்சியாக இருக்கிற நீங்கள் அப்படிச் சொல்கிறீர்கள். உங்களைப்பற்றி பெட்டி காங்கிரஸ் காரர்கள், தாங்கள்தான் காங்கிரஸ் என்று சொல்கிறவர்கள், என்ன சொல் கிருர்கள்? ஜனதா கட்சிக்காரர்கள் இந்திரா காங்கிரஸ் கட்சியைப் பார்த்து, அவர்கள் மாநிலக் கட்சியாக இருந்து, பிற்போக்குவாதிகளாக இருக்கிருர்கள் என்று சொல்கிருர்கள். உங்களைப் பார்த்து, அவர்கள் பிற்போக்குவாதிகள் என்று சொல்கிருர்கள். நீங்கள் எங்களைப் பார்த்து, பிற்போக்குவாதிகள் என்கிறீர்கள். ஜனநாயகம் என்ற போர்வையில் ஒரு கட்சி இன்னொரு கட்சியைப்பற்றி எப்படிச் சொன்னலும் அந்தக் கொள்கையிலே அவர்கள் நிலையாக இருக்கிருர்களா என்ருல், இல்லை. ஜனதா கட்சிக்காரர்கள் அவசர நிலை காலத்தில் என்ன சொன்ஞர்கள்? இப்போது உள்நாட்டுக்கு என்ன ஆபத்து வந்துவிட்டது? அந்நிய நாட்டின் ஆபத்து எதும் வராதபோது, உள்நாட்டுப் பாதுகாப்பு என்று ஏன் இந்த அவசரநிலை என்று கேட்டார்கள். இப்போது அந்தச் சட்டம் அப்படியே வேண்டுமென்று சொல்லவில்லையே தவிர, அந்தச் சட்டத்தின் நோக்கம் அப்படியே ஏற்றுக்கொள்ளப்படுகிற நிலைமை தான் இருக்கிறது. அதை முழுமையாக நீக்க நடவடிக்கை எடுக்கப்பட வில்லை. ஜனதா கட்சி அவசரகாலக் கொடுமைகளை அகற்றியிருக்கிறது. அந்த அச்சம் இப்போது போக்கப்பட்டிருக்கிறது. அதற்காக மனதாரப் பாராட்டுகிறேம். இந்திரா அவர்கள் பிரதமராக இருந்தபோது, 42-வது சட்டத் திருத்தத்தைக் கொண்டுவந்தபோது, என்னென்ன கொடுமைகள் நடந்தனவோ அவை அத்தனையும் முழுமையாக இப்போது நீக்கப்பட்டு விட்டனவா என்ருல் இல்லை. தேர்தல் நேரத்தில் மக்கள் மத்தியில் என்ன

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [1978 மார்ச் 18

பிரச்சினையை வைத்தார்களோ அது அப்படியேதான் இன்னும் இருக்கிறது. 42-வது சட்டத் திருத்தம் வருவதற்கு முன்னால், அந்தத் திருத்தத்தை எப்படிக் கொண்டுவரலாம் என்பதை ஆராய திரு. சுவரண்சிங் அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட குழு விவாதம் நடத்த வேண்டுமென்ற கருத்து சொல்லப்பட்டது. உறுப்பினர் திரு. அறிவழகன் அவர்கள்கூட மிசாவில் சிறையில் இருந்தார்கள். பத்திரிக்கையில் செய்தி வந்தவுடன் விவாதம் நடைபெற்றதாகவும் மக்களால் அது ஏற்றுக்கொள்ளப்பட்டதாகவும் சொல்லப்பட்டது. அப்படி விவாதம் முழுமையாக எங்காவது நடந்ததா? ஒரு சாரார் கருத்துத்தான் ஏற்றுக்கொள்ளப்பட்டது. வானொலியைத் திருப்பினால் வக்கீல்கள் வாதாடுகிறார்கள், கருத்துக்களைக் குவிக்கிறார்கள், அறிஞர்கள் தங்கள் கருத்துக்களை வெளியிடுகிறார்கள் என்று சொன்னார்கள். எந்த அறிஞர் சொன்னார்? திரு. சுவரண் சிங் அவர்கள் தலைமையில் அமைந்த குழு தனது அறிக்கையைத் தந்ததும், திராவிட முன்னேற்றக் கழகம், அதைப்பற்றி ஆராய்ந்து ஒரு அறிக்கை தரும்படி, அப்போது அமைச்சராக இருந்த திரு. மாதவன் தலைமையில் ஒரு குழுவை அமைத்தது. அந்தக் குழு அறிக்கை தயாரித்தது. அந்த அறிக்கையின் ஒரு பகுதியைச் சொல்கிறேன்; " . . . கடமைகளை யாரும் எதிர்த்திட மாட்டார்கள். ஆனால் இந்தக் கடமைகளை அரசமைப்புச் சட்டத்தில் வழங்கப்பட்டிருக்கும் அடிப்படை உரிமைகளுக்கும் அரசமைப்புச் சட்டத்தின் ஏனைய பிரிவுகளுக்கும் முரணாகச் செயல்படுத்திடப் பாராளுமன்றம் சட்டங்கள் இயற்றலாம் என்பதும், இதில் நீதிமன்றங்கள் தலையிட முடியாது என்பதும்தான் பேராபத்தாக அமைந்துள்ளது. ஜனநாயக நாட்டில் ஆட்சியின் அதிகாரச் சுழலில் அமிழ்ந்துவிடாமல் பாதுகாத்துக்கொள்வதற்காகத்தான் அடிப்படை உரிமைகள் மக்களுக்கு வழங்கப்படுகின்றன. 'கடமைகள்' என்ற பெயரில் கொடுக்கப்பட்ட உரிமைகளைப் பறிப்பது ஜனநாயகத்திற்கு முரணாகும்.

கடந்த 26 ஆண்டுகளாக மேற்சொன்ன கடமைகள் அரசமைப்புச் சட்டத்தில் குறிப்பிடப்படாமலேயே சட்டங்களின் மூலம் நிறைவேற்றப்பட்டு வந்துள்ளன. அண்மைக் காலத்தில்தான் 'கடமைகள்' என்ற பெயரில் அடிப்படை உரிமைகளைத் தவிர்த்திடும் போக்கு எழுந்துள்ளது" என்று அந்தப் பரிந்துரை நூலின் முன்னுரை விளக்கம் காட்டுகிறது. இதில் என்ன தவறு? 26 ஆண்டு காலத்தில் கடமையை வற்புறுத்தியா ஆட்சி நடந்தது? அந்தக் கடமைகளை சட்டத்தின் மூலம் புகுத்தி அதன்படி. நாட்டு மக்கள் கடமையாற்ற வேண்டுமென்று கொண்டுவந்து நிறைவேற்ற முடியுமா? தேவையில்லாத ஒன்று அது. அப்படி திராவிட முன்னேற்றக் கழகத்தின்



1978 மார்ச் 18] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

சார்பில் எடுத்துச் சொல்லப்பட்ட அந்தக் கருத்து ஏற்றுக்கொள்ளப்பட்டதா என்றால், இல்லை. இந்தக் கருத்து பத்திரிக்கையில் வரக் கூடாது என்று பத்திரிக்கைத் தணிக்கைக் குழு எண்ணும் கருத்துடையதாக இருந்தது. அந்தக் கருத்துக்களை வெளியிடக் கூடாது என்று உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டன.

சுவரண் சிங் குழுவின் சிபாரிசில் "இறையாண்மை வாய்ந்த ஜனநாயக மதச் சார்பற்ற சோசலிச குடியரசு" என்றும் ஒற்றுமை என்பதோடு ஒருமைப்பாடு என்ற சொல்லையும் இணைக்க வேண்டும் என்றும். . . .

**திரு. ஜி. சுவாமிநாதன் :** துணைத் தலைவர் அவர்கள் இதில் பேச விரும்பினால், பேசலாமா?

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** துணைத் தலைவர் இதில் பேச விரும்பவில்லை. நீங்கள் அனுமதித்தாலும் விரும்பவில்லை.

**திரு. க. அறிவழகன் :** துணைத் தலைவர் அவர்கள் பேச விரும்புவது போலத் தோன்றுகிறது.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** இதிலே என் குரலையும் கேட்க ஆசைப்படுவதற்கு நன்றி.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** தங்களைப் பார்த்துக்கொண்டே திரு. வீராசாமி அவர்கள் பேசுகிறார் என்பதால் கேட்டேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அது அவையின் மரபு.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** திரு. சுவரண் சிங் அவர்கள் குழு பரிந்துரை செய்துள்ளதை வரவேற்பதுடன் அரசமைப்புச் சட்டத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள கூட்டாட்சித் தத்துவமும் இடம் பெறும் வண்ணம் "இறையாண்மை வாய்ந்த ஜனநாயக மதச் சார்பற்ற சோசலிசக் கூட்டாட்சிக் குடியரசு என்று அமைய வேண்டுமென இந்தக் குழு கருதுகிறது" என்று வற்புறுத்தப்பட்டது.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** நடந்தவை அவை. அவற்றை இவ்வளவு நீண்ட வரலாறாகச் சொல்லத் தேவையில்லை. சுருக்கமாகச் சொன்னால், நல்லது. அந்தச் சட்டம்தான் போய்விட்டதே.

**திரு. க. அறிவழகன் :** துணைத் தலைவர் அவர்களே, இப்போது அந்த சுவரண் சிங் மாறிவிட்டார்.

[1978 மார்ச் 18

**திரு. வே. தங்கப்பாண்டியன் :** அவர் கொள்கையில் மாறவில்லை. கட்சிதான் மாறியிருக்கிறார்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** சோசலிச கூட்டாட்சிக் குடியரசு அமைய வேண்டுமென்று மாதவன் குழு சிபாரிசு செய்தது. இந்திய அரசியல் சட்டத்தில் சொல்லப்பட்டுள்ள கூட்டாட்சித் தத்துவத்தை ஒப்புக் கொள்கிறோம். அதற்கு ஒரு திருத்தம் கொண்டுவந்தபோது, அன்றைய

(முற்பகல் 11-50)

தினம் ஆட்சியில் இருந்தவர்கள் ஒப்புக்கொள்ளவில்லை. இன்றையதினம் ஆளுங்கட்சியில் இருப்பவர்கள் இந்தச் சட்டத்தைக் கொண்டுவருகிறபோது, அவர்கள் கூட்டாட்சித் தத்துவத்தை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். நமக்கு அதிக அதிகாரம், அதாவது மாநில சுயாட்சி வேண்டும் என்று சொல்லுகிற நேரத்தில், அவர்கள் அதையும் ஏற்றுக்கொள்வதில் கருத்து வேறுபாடு இருக்காது என்று எண்ணுகிறேன். முன்பு ஒருமுறை நமது சட்டப் பேரவையில் இதுபற்றிய விவாதம் வந்தபோது, அப்போது எதிர்க் கட்சித் தலைவராக இருந்த தற்போதைய உணவு அமைச்சர் திரு. எட்மண்ட் அவர்கள் "திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த நீங்கள் ஆளும் கட்சியாக இருக்கிற நேரத்தில், நாங்கள் மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும், மாநிலங்களுக்குச் சுயாட்சி வேண்டும் என்று கேட்க மாட்டோம்" என்று சொன்னார்கள். அப்போது நாங்கள் ஆட்சியில் இருந்த காரணத்தால், நீங்கள் கேட்காமல் இருந்திருக்கலாம். ஆனால் இன்றையதினம் நீங்கள் ஆட்சியில் இருப்பதால், மாநில சுயாட்சி கோரும்போது, நீங்கள் சொன்னதைப்போல், நாங்கள் சொல்லத் தயாராக இல்லை. ஆட்சியில் யார் இருந்தாலும் சரி, மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும். மாநிலங்களுக்குச் சுயாட்சி வேண்டும் என்ற பேரறிஞர் அண்ணா அவர்களின் கொள்கையை இன்றைக்கும் ஒலிக்கக்கூடியவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள். இன்றையதினம் அவைத் தலைவராக இருக்கிற தாங்கள். . . . . . .

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** நல்லவேளையாக முன்னேற்றக் கழகத்தவர் மட்டும்தான் என்று சொல்லவில்லையே.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** மாநிலச் சுயாட்சியைப்பற்றிப் பல பேர் பேசினாலும், நாங்கள் பேசினாலும், உங்களைப்போல் பேச முடியாது என்பதை நானும் ஒப்புக்கொள்கிறேன்; தாங்கள் சட்ட மன்ற உறுப்பினராக



[திரு. ஆற்காடு நா. வீராசாமி]

1978 மார்ச் 18]

இருந்த நேரத்தில், மாநில சுயாட்சிபற்றி அந்த மன்றத்திலே பேசிய பேச்சை ஒருமுறை நினைத்துப் பார்க்கிறேன். உள்ளபடியே எங்களால் அந்த அளவுக்கு ஆதாரத்தோடு, ஆணித்தரமாக இந்தக் கொள்கையைப்பற்றிப் பேச முடியவில்லையே என்றுதான் வருந்துகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** நான் இன்றும் அதிலிருந்து மாறவில்லையே. தனிப்பட்ட முறையில் அந்தக் கொள்கையிலிருந்து மாறவில்லையே. எனவே நான் பேச சந்தர்ப்பம் இல்லாத நேரத்தில், குறையாகச் சொல்லாதீர்கள் என்று கூறிக்கொள்கிறேன்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** நான் குறையாகச் சொல்லவில்லை. மிகுந்த மகிழ்ச்சியோடுதான் சொல்லுகிறேன். உங்களைப்போல் எங்களால் அவ்வளவு ஆணித்தரமாக, ஆதாரத்தோடு பேச முடியவில்லையே என்று. உங்களுடைய வாதத்தின் அடிப்படையில்தான் இன்றைக்கும் திராவிட முன்னேற்றக் கழகம் இந்த மாநில சுயாட்சிக் கொள்கையை வலியுறுத்திக் கொண்டிருக்கிறது என்பதையும் இந்த நேரத்தில் சுட்டிகாட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். மாநிலங்கள் அதிக அதிகாரம் பெற வேண்டும் என்று சொல்லுகிற நேரத்தில் . . . . . .

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு உறுப்பினர் பேசும்போது, அவைத் தலைவர் அவர்களை "Quote" பண்ணிப் பேசுவது முறையா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அவைத் தலைவர் விவாதத்திற்கு உரியவராக மாறக்கூடாது என்பதுதான் மரபு. உறுப்பினர் பேசும்போது, நான் பேசிய அளவுக்கு தம்முடைய கட்சி தீவிரமாகப் பேசியதில்லை என்று சொல்லியிருக்கிறார். அதை நானும் உண்மை என்று ஒப்புக்கொள்கிறேன்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** அவைத் தலைவர் அவர்களை இக்கட்டான நிலைக்குக் கொண்டு வருவதற்காக நான் சொல்லவில்லை. அவர் கூறிய கருத்துக்களை எங்கள் கழகம் அப்படியே ஏற்றுக்கொண்டு வலியுறுத்தி வருகிறது என்பதைத்தான் சொன்னேன்.

அடுத்து, இந்த அவையிலே கொண்டுவரப்பட்டிருக்கும் திருத்தங்களில் மிக முக்கியமானது என்னவென்றால், சட்டங்களை நீதிமன்றங்களில் கொண்டு சென்று, அவற்றின் செல்லுபடித்தன்மையை ஆட்சேபிப்பது பற்றியதாகும். இங்கே மாநிலங்களில் உள்ள சட்டமன்றங்களால் இயற்றப்படும்

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [1978 மார்ச் 18

சட்டங்களைப் பொறுத்தவரையில், இங்கே உள்ள உயர்நீதிமன்றங்கள் கட்டுப்படுத்தும் அதிகாரம் கொண்டுள்ளன. ஆனால் பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்படுகிற சட்டத்தைப் பொறுத்தவரை, இங்கே இருக்கிற உயர்நீதிமன்றத்தில் நாம் வாதிட்டு ஆட்சேபிக்க முடியாது என்ற நிலை தற்போது மாற்றப்பட்டு, இன்றைக்கு மீண்டும் பழைய நிலையே உறுதி செய்யப்பட்டிருப்பதுபற்றி நான் உள்ளபடியே மகிழ்ச்சியடைகிறேன். \ அது மட்டுமல்ல. அதிக அதிகாரம் மாநிலங்களுக்கு வேண்டுமென்று சொல்லுகிற நேரத்தில், கல்வியைப் பொறுத்தவரையில், மாநிலப் பட்டியலில் இருந்த கல்வி இன்றையதினம் மத்திய அரசின் பட்டியலில் கொண்டு போகப்பட்டிருக்கிறது. எனவே இந்தத் திருத்தங்கள் வருகிற இந்த நேரத்தில் மீண்டும் கல்வியை மாநிலப் பட்டியலில் கொண்டு வரவேண்டும் என்று கோர வேண்டும். தம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதில் ஒரு தீர்மானம் போட்டு, மத்தியில் உள்ள ஜனதா அரசு "கல்வியை மீண்டும் மாநிலப் பட்டியலுக்கு மாற்ற வேண்டும்; ஏற்கனவே இருந்த நிலையை உருவாக்க வேண்டும்; மாநிலங்களுக்கு இருந்த உரிமை காப்பாற்றப்பட வேண்டும்" என்று சொல்ல வேண்டும். இதனால் மாநில அரசுக்கும் மத்திய அரசுக்கும் கருத்து வேறுபாடு வந்து விடாது என்பதையும் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். 42-வது திருத்தம் முழுமையாக அகற்றப்படவில்லை. எனவே இடைக்காலத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ள அதிகாரத்தைத் திரும்பவும் எங்களுக்கு அளித்து கல்வியை மாநிலப் பட்டியலுக்கு மாற்ற வேண்டும் என்று கேட்பது ஆட்சியில் உள்ளவர்களுக்கு ஒரு இக்கட்டான நிலைமையை ஏற்படுத்தாது என்பதையும் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அவசரகாலச் சட்டத்தை ஆதரித்து, பிறகு 42-வது சட்டத் திருத்தத்தையும் வரவேற்று இருப்போமானால், திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையில், சொல்லுகிறேன்—உள்ளபடியே எங்கள்மீது 'மிசா' சட்டம் பாய்ந்திருக்காது. அதேபோல அன்றையதினம் முதலமைச்சராக இருந்த எங்கள் கலைஞர்மீது சர்க்காரியா கமிஷன் விசாரணையும் வந்திருக்காது என்பதைச் சொல்லிக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: 42-வது திருத்தம் என்பது காலத்தால் பிற்பட்டது. தி.மு.க. ஆட்சி அகற்றப்பட்ட பிறகு வந்தது இந்தத் திருத்தம்.



1978 மார்ச் 18]

திரு. ஆற்காடு நா. வீராசாமி: 42-வது திருத்தச் சட்டம் என்பது காலத்
தால் பிற்பட்டது என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். ஆனாலும் அந்தச்
சட்டத்திற்கு அடிப்படையே அவசர காலச் சட்டம்தான் என்பதையும் நினைவு
படுத்த விரும்புகிறேன். அந்த அவசர காலச் சட்டத்தை நாங்கள் எதிர்த்
தோம். அதனால் எப்படிப்பட்ட இன்னல்களுக்கு ஆளானோம் என்று எண்ணிப்
பார்க்கிறபோது, பரவாயில்லை, இவ்வளவு இடையூறுகளுக்குப் பிறகு
இவ்வளவு இடுக்கண்களுக்குப் பிறகு, சர்க்காரியா கமிஷன் வந்த பிறகு,
இவைகளையெல்லாம் தாங்குகிற துணிவு இருந்தாலும்—எங்களுக்கு இருக்கிற
மகிழ்ச்சி என்னவென்றால், இவ்வளவு இன்னல்களுக்குக் காரணமாக இருந்த
42-வது திருத்தச் சட்டம் அகற்றப்பட்டு, 44-வது சட்டத் திருத்தம் கொண்டு
வரப்படுகிறதே என்பதுதான். இதன் மூலம் நாட்டில் நடைபெற்ற ஜனநாயக
விரோதப் போக்குகள் இன்றையதினம் அகற்றப்படுகின்றன என்பதை
எண்ணிப் பார்க்கிறபோது, எனக்கு மெத்தவும் மகிழ்ச்சி உண்டாகிறது.
அடுத்து, எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்ட
தைப்போல் இந்தத் திருத்தத்தின் மூலம் 31 (டி.) என்பது முழுமையாக நீக்கப்
படுகிறது. இதன் மூலமாக அரசியல் கட்சிகளும், தொழிற் சங்கங்களும்
பழைய பாதுகாப்பைப் பெறுகின்றன. அதைப்போல் நீதி மன்றங்களும்,
நீதிபதிகளும் கூட—பெரிய நிலையில் இருந்த அவர்கள் கூட—இன்றையதினம்
காப்பாற்றப்பட்டிருக்கிறார்கள். ஏதோ பள்ளிக்கூட ஆசிரியர்களைப்போல் ஊர்
மாற்றல் பெறுகிற நிலையிலிருந்து அவர்கள் தப்புவிக்கப்பட்டு பழைய நிலையை
அடைந்திருக்கிறார்கள். எனவே இந்தச் சட்டத்தை வரவேற்கும் இந்த
நேரத்தில் இந்த அரசாங்கத்தின் மூலமாக ஒன்றைக் கேட்டுக்கொள்ள
விரும்புகிறேன். இந்த அவையிலே கூட ஒரு தீர்மானத்தைப் போட்டு
42-வது திருத்தச் சட்டத்தை முழுமையாகத் திருத்திவிட வேண்டும். அதை
முழுமையாக நீக்கிவிட வேண்டும் என்று வேண்டுகோள் வைத்தால், திராவிட
முன்னேற்றக் கழகத்தின் சார்பில் அதை நான் வரவேற்கத் தயாராக
இருக்கிறேன் என்று கூறி, இந்தத் திருத்தச் சட்டத்தை ஆதரித்து
அமைகிறேன், வணக்கம்.

திரு. என். சுந்தரேசத் தேவர்: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்
அவர்களே, இந்தத் திருத்தச் சட்டத்தை எங்களுடைய கட்சி பாராளுமன்றத்
தில் ஆதரித்திருந்தபோதிலும்கூட, ஒன்றை மட்டும் நான் இங்கே குறிப்பிட
ஆசைப்படுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் பேசும்
போது, அவர் சார்ந்துள்ள கட்சியைத் தடை செய்ய வேண்டுமென்ற நோக்
கத்துடனே, அவர்கள் கட்சி அரசாங்கத்தைக் கலைக்க வேண்டுமென்ற நோக்
கத்துடனே இந்தச் சட்டத்தைக் கொண்டுவந்தது போல் பேசினார்கள். அது

சரியில்லை. இந்தச் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வருவதற்கு ஆரம்பத்தில் யார் யார் காரணமாக இருந்தார்களோ அவர்கள்தான் இன்றைக்கு ஆட்சிப் பொறுப்பில் இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் ஆட்சிப் பொறுப்பிலிருந்து [illegible] காரணத்தால், அந்தத் தவறான போக்குகள் [illegible] காரணத்தால், இந்தத் திருத்தச் சட்டத்திற்கு அவசியமில்லை என்ற நிலையை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டியிருக்கிறது என்பதை நான் தெளிவாகச் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

பொதுவாக இந்தத் திருத்தச் சட்டத்தில் விவாதத்திற்குரிய ஒரு விஷயமாக [illegible] இருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். அது என்னவென்றால், இந்த நாட்டு சுப்ரீம் கோர்ட்டுக்கு அதிக அதிகாரம் இருக்க வேண்டுமா அல்லது இந்த நாட்டின் பாராளுமன்றத்திற்கு அதிக அதிகாரம் இருக்க வேண்டுமா என்ற பிரச்சினைதான். இதுதான் இன்றைக்கு சர்ச்சைக்குரிய பிரச்சினையாக இருக்கிறது. எங்களுடைய கட்சியைப் பொறுத்தவரையில், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பாராளுமன்றம் தான் இறுதியான அதிகாரத்தைப் பெற்ற அமைப்பாக இருக்க முடியும்; அது நிறைவேற்றுகிற சட்டங்கள் தான் இறுதியான சட்டங்களாக இருக்க முடியும் என்று கருதுகிறோம். எனவே அதைத்தான் இன்னும் வலியுறுத்துகிறோம்.

இந்தச் சட்டத்திருத்தத்தைப் பொறுத்த வரையில் இன்றைய நிலையில் இந்தச் சட்டம் அவசியமில்லை என்ற காரணத்தால், எங்கள் கட்சி இந்தப் புதிய 44-வது திருத்தச் சட்டத்தை ஏற்றுக்கொள்கிறது என்று கூறி, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

* THIRUMATHI MANDAKINI KRISHNAMURTHI: Mr. Deputy Chairman, Sir, I am most grateful to you for giving me this opportunity. I do commend the Amendment from the point of view that the rights of citizens are above every other thing. But, if the rights of citizens are above everything else they revolve round the responsibilities that are also involved in the rights of the citizens. I am often reminded of the saying of President Kennedy that what we can do for our country will be more important than what the country can do for us. As such,



I do commend the Amendment that is going to uphold the rights of the citizen. I have been attracted towards the amendments to Articles 32A, 131 A and 223 A. There is a mention that it involves a lot of difficulties for people who come from far away. I even feel that such disabilities cause a lot of hardship to poor and innocent people. It is something that one must feel very sad about when one notes that there are 13,000 pending cases from 1962 to 1977 from the original 1,720 cases. There is a mention that the right of choosing the panel of 5 or 7 Judges who would sit on the Benches is left to the High Court or the Supreme Court. Here I have a humble suggestion to make. While the principle regarding the panel of Judges is clear, the point regarding the right is not very clear. I would request the Hon. the Law Minister kindly to bring to the notice of the Central Parliament that the right should be so flexible that it should be mentioned that the Judges who are easily available should sit and decide on the cases.

There should be a time bound programme so that the pendency of cases will not go up and there will be no delay in the administration of justice. As is often said, justice delayed is justice denied. As such if we go on increasing the pendency of cases, we are not going to give justice to the most innocent, the poor and the needy person. As an Honorary Magistrate, I used to sit in the Juvenile Court and when one Magistrate was absent, we used to get another Magistrate, so that the cases were disposed of. I am not making any reflection upon the neighbouring Stipendiary Magistrates. But if one Magistrate was absent, the cases posted before him used to be postponed. This thing should not be allowed and it should be seen that no case is postponed because of the absence of the Judge. I would like this particular clause to be more flexible, so that the poor people will not suffer. Thank you.

(நண்பகல் 12-00)

புலவர் புலமைப் பித்தன்: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் திருத்த மசோதாவின்மீது நானும் ஒருசில கருத்துக்களைச் சொல்லிக்கொள்வதிலே மிக்க மகிழ்ச்சியடைகிறேன். எனக்கு முன்பு பேசிய பல பேர்கள் இதனை ஆதரித்தும், இதை எதிர்த்தும் இந்த அவையில் பேசி

[புலவர் புலமைப் பித்தன்] [1978 மார்ச் 18

யிருக்கிருர்கள். அரசியல் நிர்ணய சபையில் பண்டித நேரு அவர்கள் சட்டத்தைப்பற்றிச் சொல்கின்றபோது, இச்சபையின் முதல் கடமை, அரசியல் சட்டம் ஒன்றை அமைப்பதன் மூலம் இந்தியாவை விடுதலை செய்து, அதிலே உள்ள பசியால் வாடும் மக்களுக்கு—உணவும், உடையும் இல்லாமலிருக்கும் மக்களுக்கு அப்படிப்பட்ட நிலைமைகள் இல்லாமல் வாழ்வளிப்பது நமது கடமையாகும் என்று சொன்னர் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த அடிப்படையில் சட்டம் என்பது மக்கள் சமுதாயத்தைக் கட்டுப்படுத்த போடப்படுகின்ற வேலிகள்தான் என்பதை மனதிலே கொண்டு, அந்தச் சட்டத்தைப்பற்றி எண்ணிப்பார்ப்பது இன்றியமையாத கடன் என்று நான் நினைக்கிறேன்.

என்னைப் பொறுத்தவரையில், நான் சட்டத் துறையிலே அதிக ஈடுபாடு கொள்ளாதவன் என்றாலும், வேறு சட்டத்திலே, அற நூலான அகில உலக நூலாக உள்ள திருக்குறளை நான் படித்து உணர்ந்தவன் என்ற அடிப்படையில், ஒரு சில நியாயமான கருத்துக்களைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். சட்டம் என்பது பல நேரங்களில் மனித சமுதாயத்தைப் பாதுகாக்க என்று போடப்பட்டு, அதற்கு நேர் மாறான முறையிலே செயல்படுகிற கொடுமை சமுதாயத்தில் அவ்வப்போது ஏற்பட்டுவிடுகின்றது.

வேளாண்மையைப் பாதுகாப்பதற்காக என்று போடப்படுகின்ற வேலியே வேளாண்மையை அழித்துவிடுகிறது என்று சொல்வார்கள். அதுபோல ஒரு சில வரலாற்று விபத்துக்களும் ஏற்பட்டுவிடுகின்றன. இந்தச் சட்டத்தைப் பற்றிப் பேரறிஞர் அண்ணா அவர்கள் 15 ஆண்டுகளுக்கு முன்னால் சொன்னதை இப்போது நான் இந்த மன்றத்திற்கு நினைவுபடுத்துவது என்னுடைய கடமை என்று கருதுகிறேன். சட்டம் என்பது மனித சமுதாயத்தை மகிழ்ச்சியடையச் செய்வதற்கும், அந்தச் சமுதாயத்தை வாழ்விப்பதற்கும் பயன்பட வேண்டும் என்று சொன்னார்கள். அதற்கு மாருக அது பல நேரங்களிலே மனித சமுதாயத்தையே துயரடையச் செய்துவிடுகிறது என்று சொல்லியிருக்கிருர்கள். பேரறிஞர் அண்ணா அவர்கள், பதினாரும் நூற்ருண்டில் ஒரு நாட்டில் போடப்பட்ட சட்டத்தைப்பற்றி ஒரு கட்டுரை எழுதியிருக்கிருர்கள். அந்தக் கட்டுரையிலே இரண்டு நாட்டைச் சேர்ந்தவர்கள், ஒரு நாட்டைச் சேர்ந்த ஒரு ஆடவனும், இன்னொரு நாட்டைச் சேர்ந்த ஒரு பெண்ணும் கடிமணம் புரிந்துகொண்டார்களாம். அந்த ஆடவனும் பெண்ணும் கடிமணம் புரிந்து கொண்ட பின்னர் ஒரு ஆண்டு காலத்திலே குழந்தை பிறந்தது.



1978 மார்ச் 28] [புலவர் புலமைப் பித்தன்]

**திரு. ஜி. சுவாமிநாதன் :** துணைத் தலைவரவர்களே, மணத்திற்கும் கடிமணத்திற்கும் உள்ள வித்தியாசம் என்ன என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**புலவர் புலமைப் பித்தன் :** மகிழ்ச்சியாக ஏற்றுக் கொள்ளப்படுகிற மணத்திற்கு கடிமணம் என்று சொல்வார்கள். கடி என்பது பெருமைப்படுத்தப்படுவதற்காக என்று பொருள்படுகிற உரிச்சொல் என்பதனை நான் அங்கத்தினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திருமணம் என்றே சொல்லிவிடலாம். திரு. சுவாமிநாதன் அவர்கள் ரொம்ப கஷ்டப்படுகிருர்கள்.

**புலவர் புலமைப் பித்தன் :** அவர்களுக்குக் கடிமணம் நடந்த பிறகு, அந்தக் குழந்தைக்கு எங்கே குடியுரிமை வழங்குவது என்ற பிரச்சினை வந்தது. ஆட வனுடைய நாட்டைச் சேர்ந்தவர்கள், வேறு நாட்டைச் சேர்ந்த பெண்ணுக் குப் பிறந்த குழந்தை என்ற காரணத்தால், அந்த நாட்டில் குடியுரிமை கொடுக்க மறுத்துவிட்டார்கள். அதே போல பெண்ணைச் சேர்ந்த நாட்டைச் சேர்ந்தவர்கள், வேறு நாட்டு ஆடவனுக்குப் பிறந்த குழந்தை என்று சொல்லி, அந்த நாட்டிலும் குடியுரிமை கொடுக்க மறுத்துவிட்டார்கள். இப்படி இரு நாடுகளிலேயும் அந்தக் குழந்தைக்குப் பிறப்புரிமை மறுக்கப்பட்டு, குழந்தை அனாதையாக ஆகக்கூடிய அளவுக்குச் சட்டம் பயன்பட்டிருக்கிறது என்பதைப் பார்த்தாயா என்று அன்றைக்கு அண்ணா அவர்கள் தம்பிக்கு எழுதிய கடிதத்தில் எழுதியிருக்கிருர்கள். 42-வது திருத்த மசோதா கொண்டு வரப்படுகிறபோது, அதனுடைய நோக்கங்களாகக் கருதப்பட்டவை செயல் படுத்தப்படுகிறபோது, எப்படி எப்படியெல்லாம் மாறிவிட்டன என்பதைப் பற்றி நான் அதிகமாகப் பேசத் தேவையில்லை. ஆனாலும் எந்தக் கட்சியும் எதிர்க்கவில்லை என்று சொல்கிறார்கள். அதை நான் முழுமையாக மறுக்கா விட்டாலும், அதைப்பற்றி என் கருத்தை மட்டும் இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். சமுதாயத்தினுடைய பொருளாதாரப் புரட்சியைக் கட்டுப் படுத்துவதற்கு ஜனநாயகம் தேவை. தவறுகளைக் கண்டிப்பதற்குத் தேவைப் படுகிறது. அந்த அடிப்படையில் நாங்கள் வரவேற்கிறோம். இருந்தாலும் அ.தி.மு.க. ஒருசில பரிந்துரைகளை அன்றைக்குச் செய்திருக்கின்றது என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தியா ஒரு சோஷலிச ஜனநாயகக் குடியரசு என்பதோடு, கூட்டாட்சிக் குடியரசு என்றும் அழைக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தியிருக்கிறோம்

[புலவர் புலமைப் பித்தன்] [1978 மார்ச் 18

யிருக்கிருர்கள். அரசியல் நிர்ணய சபையில் பண்டித நேரு அவர்கள் சட்டத்தைப்பற்றிச் சொல்கின்றபோது, இச்சபையின் முதல் கடமை, அரசியல் சட்டம் ஒன்றை அமைப்பதன் மூலம் இந்தியாவை விடுதலை செய்து, அதிலே உள்ள பசியால் வாடும் மக்களுக்கு—உணவும், உடையும் இல்லாமலிருக்கும் மக்களுக்கு அப்படிப்பட்ட நிலைமைகள் இல்லாமல் வாழ்வளிப்பது நமது கடமையாகும் என்று சொன்னர் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த அடிப்படையில் சட்டம் என்பது மக்கள் சமுதாயத்தைக் கட்டுப்படுத்த போடப்படுகின்ற வேலிகள்தான் என்பதை மனதிலே கொண்டு, அந்தச் சட்டத்தைப்பற்றி எண்ணிப்பார்ப்பது இன்றியமையாத கடன் என்று நான் நினைக்கிறேன்.

என்னைப் பொறுத்தவரையில், நான் சட்டத் துறையிலே அதிக ஈடுபாடு கொள்ளாதவன் என்றாலும், வேறு சட்டத்திலே, அற நூலான அகில உலக நூலாக உள்ள திருக்குறளை நான் படித்து உணர்ந்தவன் என்ற அடிப்படையில், ஒரு சில நியாயமான கருத்துக்களைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். சட்டம் என்பது பல நேரங்களில் மனித சமுதாயத்தைப் பாதுகாக்க என்று போடப்பட்டு, அதற்கு நேர் மாருன முறையிலே செயல்படுகிற கொடுமை சமுதாயத்தில் அவ்வப்போது ஏற்பட்டுவிடுகின்றது.

வேளாண்மையைப் பாதுகாப்பதற்காக என்று போடப்படுகின்ற வேலியே வேளாண்மையை அழித்துவிடுகிறது என்று சொல்வார்கள். அதுபோல ஒரு சில வரலாற்று விபத்துக்களும் ஏற்பட்டுவிடுகின்றன. இந்தச் சட்டத்தைப் பற்றிப் பேரறிஞர் அண்ணு அவர்கள் 15 ஆண்டுகளுக்கு முன்னுல் சொன்னதை இப்போது நான் இந்த மன்றத்திற்கு நினைவுபடுத்துவது என்னுடைய கடமை என்று கருதுகிறேன். சட்டம் என்பது மனித சமுதாயத்தை மகிழ்ச்சியடையச் செய்வதற்கும், அந்தச் சமுதாயத்தை வாழ்விப்பதற்கும் பயனபட வேண்டும் என்று சொன்னர்கள். அதற்கு மாருக அது பல நேரங்களிலே மனித சமுதாயத்தையே துயரடையச் செய்துவிடுகிறது என்று சொல்லியிருக்கிருர்கள். பேரறிஞர் அண்ணு அவர்கள், பதினாரும் நூற்றாண்டில் ஒரு நாட்டில் போடப்பட்ட சட்டத்தைப்பற்றி ஒரு கட்டுரை எழுதியிருக்கிருர்கள். அந்தக் கட்டுரையிலே இரண்டு நாட்டைச் சேர்ந்தவர்கள், ஒரு நாட்டைச் சேர்ந்த ஒரு ஆடவனும், இன்னொரு நாட்டைச் சேர்ந்த ஒரு பெண்ணும் கடிமணம் புரிந்துகொண்டார்களாம். அந்த ஆடவனும் பெண்ணும் கடிமணம் புரிந்து கொண்ட பின்னர் ஒரு ஆண்டு காலத்திலே குழந்தை பிறந்தது.



1978 மார்ச் 28] [புலவர் புலமைப் பித்தன்]

திரு. ஜி. சுவாமிநாதன்: துணைத் தலைவாவர்களே, மணத்திற்கும் கடி
மணத்திற்கும் உள்ள வித்தியாசம் என்ன என்று அறிந்துகொள்ள
விரும்புகிறேன்.

புலவர் புலமைப் பித்தன்: மகிழ்ச்சியாக ஏற்றுக் கொள்ளப்படுகிற மணத்
திற்கு கடிமணம் என்று சொல்வார்கள். கடி என்பது பெருமைப்படுத்தப்படு
வதற்காக என்று பொருள்படுகிற உரிச்சொல் என்பதனை நான் அங்கத்தினர்
அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்
திருமணம் என்றே சொல்லிவிடலாம். திரு. சுவாமிநாதன் அவர்கள் ரொம்ப
கஷ்டப்படுகிருர்கள்.

புலவர் புலமைப் பித்தன்: அவர்களுக்குக் கடிமணம் நடந்த பிறகு, அந்தக்
குழந்தைக்கு எங்கே குடியுரிமை வழங்குவது என்ற பிரச்சினை வந்தது. ஆட
வனுடைய நாட்டைச் சேர்ந்தவர்கள், வேறு நாட்டைச் சேர்ந்த பெண்ணுக்
குப் பிறந்த குழந்தை என்ற காரணத்தால், அந்த நாட்டில் குடியுரிமை
கொடுக்க மறுத்துவிட்டார்கள். அதே போல பெண்ணைச் சேர்ந்த நாட்டைச்
சேர்ந்தவர்கள், வேறு நாட்டு ஆடவனுக்குப் பிறந்த குழந்தை என்று
சொல்லி, அந்த நாட்டிலும் குடியுரிமை கொடுக்க மறுத்துவிட்டார்கள்.
இப்படி இரு நாடுகளிலேயும் அந்தக் குழந்தைக்குப் பிறப்புரிமை மறுக்கப்பட்டு,
குழந்தை அநாதையாக ஆகக்கூடிய அளவுக்குச் சட்டம் பயன்பட்டிருக்கிறது
என்பதைப் பார்த்தாயா என்று அன்றைக்கு அண்ணு அவர்கள் தம்பிக்கு
எழுதிய கடிதத்தில் எழுதியிருக்கிருர்கள். 42-வது திருத்த மசோதா கொண்டு
வரப்படுகிறபோது, அதனுடைய நோக்கங்களாகக் கருதப்பட்டவை செயல்
படுத்தப்படுகிறபோது, எப்படி எப்படியெல்லாம் மாறிவிட்டன என்பதைப்
பற்றி நான் அதிகமாகப் பேசத் தேவையில்லை. ஆனாலும் எந்தக் கட்சியும்
எதிர்க்கவில்லை என்று சொல்கிருர்கள். அதை நான் முழுமையாக மறுக்கா
விட்டாலும், அதைப்பற்றி என் கருத்தை மட்டும் இங்கே சொல்லிக்கொள்ள
விரும்புகிறேன். சமுதாயத்தினுடைய பொருளாதாரப் புரட்சியைக் கட்டுப்
படுத்துவதற்கு ஜனநாயகம் தேவை. தவறுகளைக் கண்டிப்பதற்குத் தேவைப்
படுகிறது. அந்த அடிப்படையில் நாங்கள் வரவேற்கிறோம். இருந்தாலும்
அ.தி.மு.க. ஒருசில பரிந்துரைகளை அன்றைக்குச் செய்திருக்கின்றது என்பதை
இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.
இந்தியா ஒரு சோஷலிச ஜனநாயகக் குடியரசு என்பதோடு, கூட்டாட்சிக்
குடியரசு என்றும் அழைக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தியிருக்கிறோம்

[புலவர் புலமைப் பித்தன்] [1978 மார்ச் 18

அதற்குப் பின்னர் வாக்கெடுப்பு மூலம் நன்றாக இருக்க வேண்டும் என்று வலியுறுத்தியிருக்கிறோம். அதற்குப் பின்னர் மாநில உரிமைகளை இப்போது உள்ளவைகளைக் காட்டிலும் கூடுதல் செய்ய வேண்டுமே தவிர, குறைக்கக்கூடாது என்பதை மூன்றாவது பரிந்துரையாக நாங்கள் தந்திருக்கிறோம். அதற்குப் பிறகு நான்காவது பரிந்துரையாக இந்தப் பொருள் மாநிலங்களுக்கு தேவை அவர்கள் கொடுத்த வாக்குறுதிகளை, பொருளாதாரக் கொள்கைகளை அரசியல் அமைப்பின் ஒரு பகுதியாக ஆக்க வேண்டும் என்று வலியுறுத்திக் கொண்டிருக்கிறோம். இதை நான் இங்கே சொல்லுவதற்குக் காரணம், ஒன்றை ஆதரிக்கும்போது, கண்ணை மூடிக்கொண்டு ஆதரிப்பது என்ற அடிப்படையிலே இல்லாமல், அதிலே உள்ள சாதக பாதகங்களை எண்ணிப் பார்த்துச் செயல்பட வேண்டும். சாதகமாக இருக்கும்போது, அவைகளை ஆதரிப்பதும், பாதகமாக இருக்கும்போது அவைகளை எதிர்ப்பதும் தேவையானதாகும். அதன் முக்கியத்துவத்தை அறிந்தும், தகுதி அறிந்தும் அவைகளை ஆதரிப்பது தேவை என்பதைத் தான் சொல்கின்றேனே தவிர, வேறு அல்ல என்று சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். அந்தத் தரப்பிலே இருந்துகொண்டு மாண்புமிகு அங்கத்தினர் திரு. வீராசாமி அவர்கள் பேசினார்கள். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினர் எதிர்பார்ப்போடு நிற்கின்ற நெருக்கடிச் சட்டத்திலிருந்து தப்பித்துக் கொள்வது என்ற அடிப்படையிலே செயல்பட்டதாகப் பேசினார்கள். நான் அவர்களுக்கு ஒன்றைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். [illegible] 20 அம்சத் திட்டத்திலே நன்மை பல காணப்பட்டதாலே தான் ஆதரித்தோம். இப்போது 4 அம்சத் திட்டத்தை அந்த 20 அம்சத் திட்டத்திலே சேர்த்திருக்கிறார்களே என்று எங்கள் தலைவர் வெளிப்படையாக அப்போது சொன்னார்கள். வீரம் மிக்க பரம்பரைக்குச் சொந்தக்காரர்கள் என்று சொல்லிக்கொண்டிருக்கின்றவர்கள் சஞ்சய் காந்தியை ஆதரித்துப் பேசியதோடு மாத்திரமல்லாமல், எங்களைப்பற்றி வேறு வகையிலே சுட்டிக் காட்டுகின்ற முயற்சியிலே, அந்த ஆசையிலே ஈடுபட்டு தங்கள் திறத்தைக் காட்டியிருக்கிறார்கள். இதை நான் இங்கே சொல்வதற்குக் காரணம், அவர்கள் தங்களைத் தப்பித்துக்கொள்ள வைத்துக்கொள்வதற்காக ஒரு வழி இல்லாவிட்டால், இன்னொரு வழி என்ற அளவில் எல்லாம் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதனை நாம் இங்கு எண்ணிப்பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாநில சுயாட்சிபற்றி அவர்கள் சொன்னார்கள். அது பேரறிஞர் அண்ணா அவர்களுடைய கொள்கை என்றும் சொன்னார்கள். நான் அதைப்பற்றிக் கொஞ்சம் தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன். மாநில சுயாட்சியை ஆதரிப்பதா இல்லையா என்பது வேறு செய்தி. மாநிலங்களுக்கு அதிகாரங்கள்



1978 மார்ச் 18] [புலவர் புலமைப் பித்தன்]

தேவை என்பதிலே நமக்கு எந்தவிதமான மாறுபட்ட கருத்தும் இல்லை; இதை எல்லா மாநிலத்தவர்களும் ஒத்துக்கொண்டிருக்கின்றார்கள். கேரள முதலமைச்சராக இருந்த திரு. நம்பூதிரிபாட் அவர்கள்கூட இதை ஒத்துக்கொண்டிருக்கின்றார்கள். அது தேவைப்படுகிறது என்று நாங்களும் சொல்கிறோம். எனவே தான் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வகுத்து எடுத்த கொள்கைகள், கோட்பாடுகள் என்று மூன்று சாரங்கள் வைத்திருக்கிறோம். நாங்கள் கட்டுண்டு வாழோம், பிரிவினை நாடோம், சமநிலை இணைவோம் என்பதைத் தான் தத்துவமாகக் கொண்டிருக்கிறோம் என்று தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதிலே யாரும் யாருக்கும் கட்டுண்டு வாழத் தேவையில்லை என்று நாங்கள் சொல்கின்றபோதே, நாங்கள் அடிமைகளாக வாழத் தயாராக இல்லை என்று சொல்கிறேன். அப்படிச் சொல்லும்போதே, நாங்கள் அதிக அதிகாரங்களைக் கேட்கிறோம் என்பதற்கு அது ஒரு அருமையான எடுத்துக்

(பிற்பகல் 12-10)

காட்டு என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் அதே நேரத்தில் பேரறிஞர் அண்ணா அவர்கள் தமிழரசுக் கழகம் நடத்திய மாநாட்டிற்கு வந்தார்கள்; மாநில சுயாட்சியை ஆதரித்துப் பேசினார்கள் என்பதைத்தவிர, அவர் அதை தன்னுடைய முதன்மையான கொள்கையாகச் சொன்னார் என்பதற்கு ஆதாரமில்லை. இன்னும் சொல்லப்போனால், எனக்கு நன்றாக நினைவு இருக்கிறது. 1947-48 ஆம் ஆண்டுகளில் 'தமிழன்' என்ற புனைப் பெயரில், நம்முடைய மேலவைத் துணைத் தலைவரவர்கள் 'பிரிவினையா-சுயாட்சியா' என்ற தலைப்பில் மாநில சுயாட்சிபற்றி எழுதி வந்ததை, நான் பள்ளியில் படிக்கும்போது, இளைஞனாக இருந்தபோது படித்ததாக நினைவு.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: இப்போதும் இளைஞர்தான்.

புலவர் புலமைப் பித்தன்: நான் எப்போதும் இளைஞன்தான். காரணம் தமிழ் படித்தவன் என்பதுதான். அண்ணா அவர்கள் திராவிட நாடு பிரிவினைக் கொள்கையைக் கைவிட்ட பின்னர், அதிக அதிகாரங்கள் தேவை என்பதை மட்டும் வலியுறுத்தி வந்திருக்கிறார்கள். பிரிவினை வேண்டுமென்ற கொள்கையை அவர் கைவிட்டுவிட்டாலும், மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் தேவை என்பதில் உறுதியாக இருந்தார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் தேவை என்பதைப் பற்றியும், மாநில சுயாட்சிப் பிரச்சினை பற்றியும் அண்ணா அவர்கள் சொன்ன கொள்கைகளை நீங்கள் வேண்டுமானால் ஏற்றுக்கொள்ளாமல்

இருக்கலாம். ஆனால் அவர் அதைப்பற்றிச் சொல்லாததைப் போன்ற ஒரு கருத்தை உருவாக்கக் கூடாது. மாநில சுயாட்சி பற்றி அவர் தமிழரசுக் கழக மாநாட்டில் மட்டும் பேசவில்லை. அண்ணா அவர்கள் இல்லஸ்டிரேட்டட் வீக்லியில் ஒரு பேட்டி கொடுத்திருக்கிறார்கள். அந்தப் பேட்டியை மாண்புமிகு உறுப்பினரவர்கள் படித்திருந்தால், நிச்சயமாக இப்படிப்பட்ட கருத்துக் களைச் சொல்ல மாட்டார்கள்.

**புலவர் புலமைப் பித்தன் :** அருமை உறுப்பினர் நான் படிக்கவில்லை என்பது போல் சொன்னார்கள். அண்ணா அவர்கள் உயில் போன்று எழுதி வைத்து விட்டுப்போன கடைசி கடிதத்தைக் கொஞ்சம் ஆழ்ந்து படித்தால் தெரியும். அதிலே 'ஆழ்நிலையின் கைதி' என்று சொல்லியிருக்கிறார். அப்படிச் சொல்வதற்குக் காரணம், வேறு பல நிகழ்ச்சிகளில் ஈடுபட முடியவில்லை; தம்பிகளோடு கலந்து உரையாட முடியவில்லை; பொறுப்பிலே மாட்டிக்கொண்டிருக்கிறேன் என்று சொல்கிறார். ஆனால் அதே நேரத்தில் அதிக அதிகாரங்கள் தேவை என்றும் சொல்லியிருக்கிறார். இதுதான் அண்ணா அவர்களின் மூலக் கொள்கை என்று வாதிடாதீர்கள் என்பதுதான் என்னுடைய வேண்டுகோள்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** அதைத்தான் சொல்கிறேன். அண்ணா அவர்கள் இல்லஸ்டிரேட்டட் வீக்லி பத்திரிகைக்குக் கொடுத்த பேட்டியின் மூலம் மாநில சுயாட்சிக் கொள்கையை எந்த அளவுக்கு வலியுறுத்தியிருக்கிறார்கள், எந்த அளவுக்கு ஆழமான லட்சியமாக அதை வைத்திருந்தார்கள் என்பதை அறிய முடியும். நீங்கள் படித்திருக்கக்கூடும். ஆனால் சில நேரங்களில் படித்தவர்கள்கூட திசை திருப்புகிறார்கள், மறைக்கிறார்கள். ஆகவே இல்லஸ்டிரேட்டட் வீக்லி பத்திரிகையில் வந்த அண்ணா அவர்களின் பேட்டியைப் படித்தவர்கள், மாநில சுயாட்சிக் கொள்கையில் அண்ணா அவர்களுக்குப் பிடிப்பில்லை என்று கூற மாட்டார்கள்.

**THIRU G. SWAMINATHAN :** What is the relevance of this arguments to the 44th Amendment, Sir ?

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** இவர் பேசுகிறார், அவர் பேசுகிறார். அதுதான் முக்கியம்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் சொல்கிற இல்லஸ்டிரேடட் வீக்லி பத்திரிக்கையை நான் படித்திருக்கிறேன். அண்ணா அவர்கள் வலியுறுத்தவில்லை.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : திரு. வீராசாமி அவர்கள், இது கழகத்தினுடைய விதிகளில் இருக்கிறதென்று காட்டிவிட்டால் சரியாகிவிடும்.**





**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** இதை ஒரு பிரச்சினையாக விவாதிப்பது முறையாக இருக்காது.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** நானும் அதை ஒப்புக்கொள்கிறேன்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** அண்ணா அவர்கள் அந்தக் கொள்கையிலே
தெரிவித்துக்கொள்கிறேன்.
அழுத்தம் திருத்தமாக இருந்தார்கள் என்பதைத்

**புலவர் புலமைப் பித்தன் :** அந்த அடிப்படையில் மாநிலத்திற்கு அதிக
பரிந்துரை செய்திருக்
அதிகாரங்கள் தேவை என்பதை நாங்கள் அன்றைக்கே
கண்ணை மூடிக்கொண்டு
கிறோம் என்பதிலிருந்து நாங்கள் ஒட்டுமொத்தமாகக்
தெரிவித்துக்கொள்கிறேன். இந்தி
எதையும் ஆதரிக்கவில்லை என்பதைத்
கருத்து இருக்க முடியாது,
மொழிச் சிக்கல்பற்றி நமக்குள்ளே இரண்டுபட்ட
அந்த வகையில் இன்று
இருக்கக்கூடாதென்பது என்னுடைய எண்ணமாகும்.
உறுதிமொழியைச் சட்டமாக்குகிற
இருக்கிற அரசுகூட நேருவினுடைய
பரிந்துரையாக இந்த மாமன்
முயற்சியில் ஈடுபட வேண்டுமென்பதை நான் ஒரு
றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். காரணம், ஒவ்வொரு ஆட்சி வரும்போதும்,
'கவலைப்படாதீர்கள், நாங்கள் திணிக்க மாட்டோம்' என்று சொல்லிக்கொண்டு,
மேற்கொள்வது நாகரிக
திரை மறைவில் இந்தியைத் திணிக்கும் முயற்சியை
மல்ல என்பதை மட்டும் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். இந்தி
மொழித் திணிப்பு எந்தெந்த அளவுக்கெல்லாம் தீவிரப்படுத்தப்பட்டு வந்திருக்
கிறது என்பதைப் பல நேரங்களில் பார்த்திருக்கிறோம். நான் பல ஆண்டுகள்
தமிழாசிரியனாக இருந்தவன் என்பதால் அது ஓரளவுக்கு எனக்குப் புரிந்திருக்
கிறது. இந்தித் திணிப்பு என்பது சட்டத்தின் மூலமாக வராமல், சந்து
பொந்துகள் மூலமாக வருகிறது; கொல்லைப் புறத்தின் வாயிலாக வந்து கொண்
டிருக்கிறதென்பதை நாம் மனதில் வைத்துக்கொள்ள வேண்டும். இதுகுறித்து
என்னதான் பேசினாலும், அங்கே இருக்கிறவர்கள் இந்தியைத் திணிப்பது
தான் தங்கள் அரசியல் லட்சியம் என்று நினைக்கின்ற மனோபாவம் உள்ளவர்
களாக இருந்துகொண்டிருக்கிறார்கள் என்பதைப் பணிவோடு, நிதர்சனமாக
உண்மையை வெளிப்படையாகச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.
இன்றைக்கு மற்ற மொழிகளைக் காட்டிலும், இந்தி மொழிக்கு அதிகப்படியான
ஆதரவும், அதைப் பரவலாக்கும் முயற்சியிலே வெகுவான ஆக்கமும்
காட்டப்படுகிறதென்பதை மறந்துவிடக் கூடாது. இந்தப் பகுதியிலே
உள்ள எங்களைக் காட்டிலும், ஜனதாக் கட்சிக்காரர்கள் வடக்கேயும், மற்ற
இடங்களிலும் பரவலாக தங்கள் கட்சி வர வேண்டுமென்று எதிர்பார்க்கிறார்கள்.

[புலவர் புலமைப் பித்தன்] [1978 மார்ச் 18

எனவே அவர்கள் துணிந்து இந்தக் கருத்துக்களைச் சொல்ல வேண்டுமென்பது எனது எண்ணம். நெருக்கடி நேரத்தில் இருந்த நிலைமை எப்படி இருந்தாலும், நாட்டுக்கு இப்போது சுதந்திரமான உணர்வுகள் வருவதற்கும், ஒரு நல்ல அரசியல் அமைப்பு உருவாவதற்கும் இத்தகைய திருத்தம் தேவை என்பதைச் சொல்லி, இதை மனமார வரவேற்று, அமைகிறேன்.

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIYAR: Mr. Deputy Chairman, Sir, I would like to convey my grateful thanks to all the Members of this House, particularly the erudite, learned and distinguished Members of this House who have participated in this rather interesting debate. The hon. Members Thiruvalargal D. V. D' Monte, Swaminathan, Abdul Wahab, Sakthi Mohan, Veerasami, Sundaresa Thevar, Pulamaipithan and Thirumathi Mandakini Krishnamurthi have really contributed to, and enriched, the debate this forenoon in this House. They have not merely enriched the debate but they have conducted it at a very high level and on a very high keel. Before actually I reply to some of the points raised, I would like to mention, with a sense of humility, one stubborn fact and that is this. In the years 1963-64, Amarar Anna and myself started what is called Human Rights Association in order to support, champion and espouse the cause of human rights, basic human rights. I was the founder-Secretary of the Association but the real inspiring genius behind the entire organisation was Amarar Anna. In this background, the Members of this House would realise and appreciate my insatiable, imperishable, and unremitting zeal and

(பிற்பகல் 12-20)

support for basic human rights. They have been actually removed from this country by one blackest Act that has ever disfigured the Statute Book of this country and that is the 42nd Amendment Act.

I do not want to grow more eloquent because I have already been criticised by at least one speaker that I must have been elsewhere. I see no reason why I should be elsewhere. In this country, everybody including Congressmen have passed it now. I am now in the company of Congressmen themselves who have seen wisdom in this 44th Amendment, who have seen the folly and unwisdom of the 42nd Amendment. I am in the glorious



1978 மார்ச் 18] [Thiru K. Narayanaswamy Mudaliar]

company of Congressmen who have prepetrated and imposed this black Act on this country. So, I am in the best and glorious company of Congressmen, particularly the Congressmen (R) who have voted for this 44th Amendment in the Lok Sabha as well as the Rajya Sabha. I need not seek place elsewhere with any other partymen. I seek place by the side of every Indian who has longed for the basic human principles, and who has wanted to live an ordinary human life with all the rights of privacy and with all the inalienable and natural rights that God has really dignified a human being with.

Some very important opinions and views have been expressed by the hon. Members. In fact, the hon. Member Thiru D' Monte went to the extent of saying that the 42nd Amendment to the statute was the negation of all finer values of human life enshrined in the Constitution and he mentioned about the present restoration of this atmosphere of freedom and democracy and the complete elimination and removal of fear-psychosis. The hon. Member Thiru Swaminathan adverted to the dangerous consequences of Article 31 D and exposed the unworkability and unsatisfactory nature of the constitution of Benches with five Judges and seven Judges in the High Courts and the Supreme Court respectively. The hon. Member Thiru Abdul Wahab went to the extent of asking for a new Constituent Assembly for bringing out so many other original constitutional amendments. Particularly this request embodied in his speech may be transmitted to the Ministry of Law and Justice.

I am also beholden to the hon. Member Thiru Sakthi Mohan. Here, I would like to mention one fact. The essential function of any Judge in the High Court or the Supreme Court is only to interpret the laws. There may be some occasions where there is a lacuna or a field of vacuum or a field of unoccupied area where a Judge may occupy until it is either re-affirmed by the Legislature or modified by the Legislature or accepted by the Legislature if not expressly, at least impliedly. Therefore, the Judges do not arrogate to themselves the function of amending or what I call making the Constitution either in part or in whole in any sense whatever.

There are different opinions about the sovereignty of Parliament. But this is not the forum where I can express my views, supported by abundant authorities from the Constitutional laws of various countries. The hon. Member Thirumtahi Mandakini Krishnamurthi rightly stressed the need for a time-bound programme. I may assure her that all of us including the Ministry of Law and Justice and the Home Department of the Government of India are keen on the expeditious disposal and quicker dissolution of the pendency of cases in various Courts.

The hon. Member Thiru Pulamaipithan wanted devolution of more powers to the States. But it is beyond the scope of this resolution and there will be enough opportunity when the comprehensive Bill now promised by Thiru Shanti Bhushan comes up before this House for ratification in due course of time, to make our views known in this House and they will be transmitted to the Governmnt of India for consideration in connection with the legislation envisaged and which is to come up sooner than later.

The hon. Member Thiru Swaminathan asked me to say a few words more on the repeal of Article 31-D and the impracticability of having Benches of 5 or 7 Judges and of following the rule of two-thirds majority in regard to certain aspects. Firstly, I would remind this House that this Bill has come up before us for ratification, after achieving what may be called the universal consensus of all parties in the Parliament. Therefore, practically there was no contentious division over the passage of the 44th Amendment Bill. This is the first step and a very salutary step taken by the Janata Party Government for which we must express our sense of gratitude, for the simple reason that they have restored the atmosphere of freedom in this country and they have brought the most important judicial reform so that the rights of the poor litigants in distant parts of India are not affected by the 42nd Amendment.

The manifesto of the Janata Party says: "The Constitution was amended to sanctify and institutionalise a total concentration of power in the hands of one individual—the Prime Minister." I am quoting from their manifesto. The total concentaration of





powers was in the hands of one individual—the Prime Minister. The manifesto further says:—

"The authoritarian trends that had unfolded themselves over the past few years were embodied in the 42nd Amendment which was bulldozed through Parliament. To call it an amendment is a misnomer. It is a betrayal of the testament of faith that the founding fathers bequeathed to the people and it subverts the basic structure of the 1950 constitution. It vitiates the federal principle and upsets the nice balance between the people and Parliament, Parliament and the Judiciary, the Judiciary and the Executive, the States and the Centre, the citizen and the Government. It is the culmination of a conspiracy to devalue democracy —these are the words I used in the Legislative Assembly—that started with the erosion of the Cabinet system, the deliberate and consummate scuttling of democratic processes in the ruling party . . . and the concentration of all power in the hands of a leader who has been sought to be identified with the nation or even to be placed above it." Under the item 'Political Charter'—point No. 5, they said:

"Seek to rescind the 42nd Amedment" 'To rescind'—I take it as 'to repeal the Constitution 42nd Amendment'. I am sure that this House will signify its anxiety and consent for the total repeal of the 42nd Amendment Act by this ratification of the 44th Constitution Amending Bill. It may be brought to the notice of my hon. Friends, particularly, Members of the Congress party that this Constitution (44th Amendment) Bill was introduced in the Lok Sabha and was passed in the Lok Sabha and the Rajya Sabha with the support of the Congress Party.

(பிற்பகல் 12-30)

I emphasise the words 'with the support'. One remarkable effect of the 44th Amendment Bill is that it repeals Article 31D which protected laws in respect of anti-national activities from challenge under the Chapter on Fundamental Rights. The Statement of Objects and Reasons for the Bill rightly said that "Article 31 D conferred powers on Parliament of a sweeping nature which were capable of abuse" and accordingly, that Article was omitted from the Constitution. This gives some amount of explanation sought for by the hon. Member Thiru Swaminathan.

Accordingly, that Article was omitted from the Constitution. The 43rd Amendment also repealed certain Articles which had

been introduced by the 42nd Amendment with a view to curtailing the powers of the Judiciary and making it more difficult for aggrieved parties to challenge the validity of laws on the ground that they violated fundamental rights. Article 32 (1) provided that the right to move the Supreme Court by appropriate proceedings for the enforcement of fundamental rights was guaranteed. And Article 32 (2) conferred upon the Supreme Court the power to issue the writs of habeas corpus, mandamus, prohibition, quo warranto and certiorari, whichever might be appropriate for the enforcement of any particular fundamental right. The 42nd Amendment by enacting Article 32A deprived the Supreme Court of the power to grant relief under Article 32, which itself was treated throughout these 28 years as a fundamental right, if a party complained that a State law was invalid because it violated fundamental rights. And by enacting Article 131-A and Article 226-A it deprived the High Courts of the power to grant relief under Article 226 if a party complained that a Central law was invalid for violating fundamental rights or was otherwise invalid because Article 131-A conferred on the Supreme Court exclusive jurisdiction to decide on the validity of a Central Law. Again, Articles 144-A and Article 228-A prescribed that the minimum of seven Judges of the Supreme Court must sit for deciding on the validity of a Central or State law, and a minimum of five Judges of the High Courts must sit for deciding on the validity of the State Law. And in both these Courts a majority of not less than two-thirds of the Judges was required to declare a Central and/or a State law invalid. The 43rd Amendment repealed Articles 32A, 131A, 141A, 226A and 228A and made consequential amendments in Articles 145, 226, 228 and 336 which defined Central Law. The Statement of Objects and Reasons, which is too long to quote, explains why the Articles were deleted. In addition to the reasons given there, it may be observed that these provisions were made deliberately to curtail the powers of the Supreme Court and the High Courts and to serve upon the Courts a notice that if they did not behave themselves to the satisfaction of the Government, worse would follow. Further, the requirement of a two-thirds majority leads to the absurd result that the validity of a law is to be decided by a minority of Judges. For example, if a Bench of 13 Supreme Court Judges was constituted to determine the validity of a





Central and State law, eight Judges could not declare them invalid because they do constitute less than two-third of a Bench of 13 Judges. To laymen and lawyers alike, it must seem absurd that five Judges who hold a law valid, should prevail over 8 Judges who hold it void.

THIRU G. SWAMINATHAN : Two-thirds majority is required for a Constitutional Amendment. Why cannot the same principle be invoked for the judicial decisions also? If it is absurd at one place, it is also absurd in the other. May I know the Hon. Minister's views on this?

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIAR : My answer is this. Two-thirds majority of those present and voting will give sanctity and validity to the law that is passed. I will illustrate so that the House may appreciate this argument. Now, for example in the Madras High Court, five Judges sit. Two-third will be 3 and 1/3. You cannot chop a judge into one-third. It is the height of absurdity and stupidity. In other words, it comes to this. They expect four Judges to deliver one Judgement and only one to be a minority Judge. In the Supreme Court also when a Bench with 13 Judges is constituted, 8 Judges could not hold it invalid.

Now three Judges say : Here is the law which has been impeached as invalid by Thiru Swaminathan, the petitioner in Writ Petition No. such and such. They say that the Act is invalid. The other two judges say that it is valid. Because three Judges do not constitute two-thirds majority, the majority decision of the three judges will have no force and the minority decision of two judges will be in force. The Members of the House may just imagine what the preposterous result of such a position will be. It impinges on the rights of the petitioner Thiru Swaminathan, since the minority decision is followed. I will illustrate the absurdity, taking the Supreme Court's position. There 13 Judges constitute a Bench and eight Judges hold the law void. There it is not given currency and the decision of two judges in the High Court holds good. This absurdity cannot be seen anywhere. I have looked into the constitutions of Australia, Canada and America and the judgments of the House of Lords. Nowhere in the world I could see a provision of this type.

[Thiru K. Narayanaswamy Mudaliar] [1978 மார்ச் 18

Sir, the repeal of the above mentioned Articles redeems a part of be Janata Party's pledge to restore judicial independence which the Constitution had conferred on Courts.

Article 31-D sounds the death-knell of the Fundamental Rights particularly under Articles 14 and 19 which means that seven freedoms perished during the Emergency. Trade Union activity has killed, as it were. On June 25, 1975, the President of India proclaimed the Emergency on the sole advice of Prime Minister, Indira Gandhi, for she had no authority from the Council of Ministers to tender such advice. Her act constitutes an act of subversion of the Constitution. It was then the dark clouds of tyranny descended over India inexorably and enveloped the entire country. In the encircling gloom there was only one kindly light. Let it be said to the eternal glory and credit of nine High courts which stood firm in upholding the Rule of Law. India was a vast prison house of the people who were oppressed by a draconian censorship and emasculated and silenced by preventive detention even without reasons assigned and without any redress. The horrendous magnitude of the public mischief and naked tyranny let loose on the country was concealed from the public gaze. Article 31-D was a piece of monstrous distortion introduced into the Constitution. And the sooner it is ended, the better for the constitutional liberties of this country. I appeal to the hon. Members to pass this resolution unanimously.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்** : அவை முன் உள்ள பிரச்சினை—

"நாடாளுமன்ற இரண்டு அவைகளிலும் நிறைவேற்றப்பெற்று, 1977 ஆம் ஆண்டு அரசியலமைப்பு (நாற்பத்து மூன்றாவது திருத்தச்) சட்டம் என்று மாற்றப் பெற்ற குறுந்தலைப்பினைக் கொண்ட, 1977 ஆம் ஆண்டு, அரசியலமைப்பு (நாற்பத்து நான்காவது திருத்தச்) சட்ட முன்வடிவினால் செய்யக் கருதப்பெற்றுள்ள, இந்திய அரசியலமைப்பின் 368-வது பிரிவின் (2) பகுதியின் வரம்பு நிபந்தனையின்கீழ் வரும் திருத்தங்களுக்கு இம்மேலவை ஏற்பளிக்கின்றது."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்** : இந்நாளின் இன்றைய நிகழ்ச்சிகள் முடிவுற்றன. அவை மீண்டும் 20—3—1978 திங்கட்கிழமை காலை 10-30 மணிக்குக் கூடும்.

(பிற்பகல் 12-40)

**பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.**

## தமிழ்நாடு சட்டமன்ற பேரவை

---

### திங்கட் கிழமை, 1978 மார்ச் 20

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் முற்பகல் 10-30 மணியளவில் மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் (திரு. ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

### 1. இரங்கற் குறிப்பு.

இந்திய நாடாளுமன்றத்தின் முன்னாள் தலைவரும், பீகார் மாநில முன்னாள் ஆளுநருமான திரு. எம். அனந்தசயனம் ஐயங்கார் அவர்கள் மறைவு குறித்து.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்**: இந்திய நாடாளுமன்றத்தின் முன்னாள் தலைவரும், பீகார் மாநில முன்னாள் ஆளுநருமான திரு. எம். அனந்தசயனம் ஐயங்கார் அவர்கள் 19-3-1978 ஆம் தேதியன்று மறைந்ததை இம்மேலவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. அனந்தசயனம் ஐயங்கார், சுதந்திரப் போராட்டத்தில் பங்குகொண்டு சிறை சென்றவர். அவர் 1934ஆம் ஆண்டிலிருந்தே மத்திய சட்ட சபை உறுப்பினராக இருந்தவர். 1952 முதல் 1956 வரை நாடாளுமன்றத்தின் துணைத் தலைவராகவும், பிறகு 1956ல் இருந்து 1962 வரை அம் மன்றத்தின் தலைவராகவும் இருந்தார். பின்னர் பீகார் மாநில ஆளுநராக இருந்தார்.

மறைந்த திரு. அனந்தசயனம் ஐயங்கார் அவர்களும் நானும் இங்கிருந்து 1100 மைல்களுக்கு அப்பால் இன்று மகாராஷ்டிராவில் உள்ள அமராவதி சிறைச்சாலையில் ஒன்றரை ஆண்டு காலம் சேர்ந்து சிறை வாழ்க்கை நடத்தினோம். நீண்டகாலமாக அவரை மதிப்பிற்குரிய பெரிய தலைவராக ஏற்று கருதி மதித்து வந்தேன்.

அன்னாரின் மறைவு குறித்து இம்மன்றம் வருந்துகிறது. அவரை இழந்துவிட்ட குடும்பத்திற்கு ஆழ்ந்த அனுதாபத்தையும் இரங்கலையும் இப்பேரவையின் சார்பிலும் என் சார்பிலும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மறைந்தவருக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நிற்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

(அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நின்றனர்.)

[1978 மார்ச் 20

2. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

*Tourist Centres.*

*190 Q.—THIRU V. R. PERIANNAN & THIRU A. BALASUBRAMANIAM: Will the Hon. the Minister for Information and Tourism be pleased to state—

(a) whether there is any proposal with the Government to make Kolli Hills of Salem district as Tourist Centre; and

(b) if so, the stage at which the matter now stands?

சுற்றுலா மையங்கள்

திரு. வி. ஆர். பெரியண்ணன் திரு. ஆ. பாலசுப்ரமணியம்: மாண்புமிகு செய்தி - சுற்றுலாத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறன்:

(அ) சேலம் மாவட்டத்தில் உள்ள கொள்ளிமலையை, சுற்றுலா தளமாக (Tourist Centre) அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், அது தற்போழுது எந்நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. ஆர், எம். வீரப்பன்: (அ) மற்றும் (இ) இந்த கொல்லி மலையை சுற்றுலா மையமாக மேம்படுத்தும் திட்டம் பரிசீலனையில் உள்ளது. நிதிநிலையை ஒட்டி இத்திட்டத்தை செயலாற்றுவது பற்றி பரிசீலிக்கப்படும. என்றாலும், சமீபத்தில் தமிழ்நாட்டு சுற்றுலா வளமை குறித்து மத்திய அரசுக்கு அனுப்பியுள்ள அறிக்கையில் (Survey) ஆறுவது திட்டத்தில் சேர்க்கப்பட வேண்டுமென்று குறிப்பிடப்பட்டுள்ள சுற்றுலா மையங்களில் கொல்லி மலையும் ஒன்றாகும்.

*191 Q.—THIRU K. S. MANI: Will the Hon. the Minister for Information and Tourism be pleased to state—

(a) whether any new places have been selected to attract the tourists;

(b) if so, the names of those places;

(c) whether there is any proposal with the Government to attract tourists more and more; and

(d) if so, the details thereof?



1978 மார்ச் 20]

திரு. கோ. சி. மணி: மாண்புமிகு செய்தி - சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்.

(அ) சுற்றுலா பயணிகளை கவரத்தக்க வகையில் புதிய இடங்கள் எதுவும் தெரிவு செய்யப்பட்டுள்ளனவா?

(இ) ஆம் எனில், அவ்விடங்கள் யாவை?

(உ) சுற்றுலா பயணிகளை மேலும் கவருவதற்கு செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா?

(எ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: (அ) ஆம்.

(இ) கீழ்க்கண்ட இடங்களை சுற்றுலா மையங்களாக வரும் நிதி ஆண்டில் மேம்படுத்த அரசு உத்தேசித்துள்ளது;—

(1) பிச்சாவரம்

(2) ஏலகிரிமலை

(3) ஆவுடையார் கோயில்

(4) விராலிமலை

(உ) மற்றும் (எ) மாநிலத்தின் சுற்றுலா வளத்தை மதிப்பீடு (சர்வே) செய்து எந்தெந்த சுற்றுலா மையங்களை மேம்படுத்தலாமென்ற யோசனைகளுடன் கூடிய அறிக்கை தயாரிக்கப்பட்டு மத்திய அரசுக்கு 23-8-77-ல் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. இது குறித்து மத்திய மாநில அரசுகள் கலந்தாலோசித்த பின்பு எந்தெந்த இடங்களை மேம்படுத்தலாமென்பது உறுதி செய்யப்படும்.

திரு. கோ. சி. மணி: துணைத் தலைவர் அவர்களே, அந்த அறிக்கையை இந்த அவையில் வைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: அறிக்கை என்பது ஆலோசனையாக அரசுக்கு வழங்கப்பட்டிருப்பது. அது பரிசீலனைக்கு வருகிற நிலையில் இந்த அவையின் முன் வைக்கப்படுமென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வி. ஆர். பெரியண்ணன்: அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிற நேரத்தில் வரமுடியாமல் கொஞ்சம் தாமதமாக வந்தேன். கொல்லிமலையை டூரிஸ்ட் செண்டராக ஏற்றுக்கொள்ளப்பட்டிருப்பதாகச் சொன்னதாகக் கேள்விப்பட்டேன். நிதிநிலை அறிக்கையின் மீது பேசும்போது கொல்லிமலை சுற்றுலா

மையமாக இந்த ஆண்டு எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்று பேசினேன். அப்படி சேர்த்துக் கொள்ளப்படுமா, அதைச் சேர்ப்பதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : இந்த ஆண்டுத் திட்டத்தில் சேர்க்க வேண்டுமென்று சுற்றுலாத் துறை நிதித் துறையோடு பெருமளவிற்கு வாதாடியது. கடைசி நேரத்தில் சுற்றுலாத் துறை தோல்வியடைந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். உறுப்பினருடைய வேண்டுகோளை ஏற்று மீண்டும் அதற்காக வாதாடி எந்த அளவிற்கு முன்னுரிமை பெறலாமோ அந்த அளவிற்குப் பெற்று சேர்ப்பதற்கு முயற்சிக்கப்படுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கோ. சி. மணி : சுற்றுலாப் பயணிகளைக் கவரத் தக்க வகையில் ஆவுடையார் கோவில் வளர்ச்சிக்கு எப்படித் திட்டமிடப்பட்டிருக்கிறது என்பதை அவையில் அறிவிக்க முடியுமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : ஆவுடையார் கோவிலில் இப்போது முதல் பணியாக ரூ. 75 ஆரயிம் செலவில் பயணிகள் தங்குவதற்கான இடங்களும் அதற்கான சுகாதார வசதிகளும் செய்து தருகிற பணியை அரசு மேற்கொள்ள இருக்கிறது.

திரு. கு. மா. பாலசுப்பிரமணியம் : புதிய சுற்றுலா தளங்களில் விராலிமலை ஒன்றாக இருப்பதாக அமைச்சர் குறிப்பிட்டார். விராலிமலையில் ஏற்கனவே, சித்தர்கள் இருந்தார்கள் என்றும் அது பெரும் காடு என்றும் கேள்விப்பட்டிருக்கிறேன். அந்த வழியில் பஸ் போகும்போது, அந்த இடத்தைப் பார்க்கிறேன். சின்னஞ் சிறு மலையாக அது இருக்கிறது. அங்கே சுற்றுலாத் துறை தளம் அமைத்தால், அதனால் பயன் கிடைக்குமா, நஷ்டம் ஏற்படுமா என்பதை அரசு ஆராயுமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்; சுற்றுலா தலம் என்பது மூன்று தகுதிகள் அடிப்படையில் நிர்ணயிக்கப்படுகிறது. (1) தேசிய முக்கியத்துவம் வாய்ந்த யாத்திரிகர்கள் மையம், (2) உள் நாட்டு, வெளி நாட்டு சுற்றுலா பயணிகளை ஈர்க்க வல்ல தேசிய முக்கியத்துவம் வாய்ந்த சுற்றுலா மையம், (3) உள்நாட்டில் சுற்றுலா பயணிகளுக்கான சுற்றுலா மையம் என்பன. இதில் விராலிமலை உள்நாட்டு யாத்திரிகர்கள் மையமாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

திரு. வே. தங்கப்பாண்டியன்: இந்த சுற்றுலா மையங்களுக்கு வெளிநாட்டுப் பயணிகளைக் கவரும் வகையில் விசேஷ ஏற்பாடுகளைச் செய்வதற்கு தமிழ்நாடு அரசு விசேஷமான



காரியங்களைச் செய்து வருகிறது. வெளிநாட்டுப் பயணிகள் வரும்போது, அவர்களைக் கவரும் முறையில் கிராமியக் காட்சிகள், கிராமியக் கலாச்சாரம், பண்பாடு ஆகியவற்றை வெளிப்படுத்தும் வகையில் ஏற்பாடுகள் நடைபெறுவதாகச் சொல்கிறார்கள். வெளிநாட்டு பயணிகள் தங்குவதற்கு விடுதிகளில் மதுபானம் கிடைத்தால்தான், அதிகமாக வருவார்கள் என்ற நிலைமை இருக்கிறது. அதைப்பற்றி அரசு பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்; நமது மாநிலத்தில் மதுவிலக்கு தீவிரமாக அமுல்படுத்தப்பட்டாலும், வெளிநாட்டிலிருந்து வருகிற சுற்றுலாப் பயணிகளுக்குத் தேவையான மது வழங்குவதற்கான அனுமதிகள் வழங்கப்படுகின்றன. அவற்றைச் சங்கடமின்றி பெறுவதற்கும் அரசு ஏற்பாடு செய்திருக்கிறது. மேலும் சுற்றுலாப் பயணிகளுக்கான திட்டங்களை இப்போதுதான் அரசு முக்கியமாக எடுத்துக்கொண்டு பரிசீலிக்க முன் வந்திருக்கிறது. நம்முடைய சட்டமன்றங்களிலே கூட சுற்றுலா பற்றிய கேள்விகள் இப்போதுதான் அதிகமாக வந்திருக்கின்றன. இதிலிருந்து அரசின் செயல் குறிப்புகள் முன்னேற்றத்தை அளிக்கும் வகையில் வந்திருப்பதால்தான், உறுப்பினர்களுடைய கவனத்தைக் கவர்ந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஜி. சுவாமிநாதன் ; ஆருவது திட்டத்தைப் பொறுத்து, நம்முடைய மாநிலம் இந்தச் சுற்றுலா வளர்ச்சிக்கு எவ்வளவு தொகை ஒதுக்க வேண்டுமென்று மத்திய அரசைக் கேட்டிருக்கிறது? ஐந்தாவது திட்டத்தில் எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டு செலவிடப்பட்டது? ஐந்தாவது திட்டத்தில் மகாபலிபுரத்தில் ஒலி, ஒளி காட்சியும், வண்டலூரில் மிருகக் காட்சி சாலையும் சென்னையில் வாக்ஸ் மியூசியமும் வைப்பதாகச் சொன்னார்கள். அது எந்த நிலைமையில் இருக்கிறது?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : ஆருவது திட்ட காலத்தில் எவற்றிற்குச் செலவிடப்பட வேண்டுமென்று மத்திய அரசுக்கு மாநில அரசு ஒரு நீண்ட வேண்டுகோளை வைத்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் தனிக் கேள்வி போட்டால், அந்த விவரங்களைச் சேகரித்துத் தர முடியும். ஒலி-ஒளிக் காட்சியைப் பொறுத்த வரையில், முன்னால் இருந்த மத்திய அரசு மதுரையில் வைப்பதற்கு ஏற்றுக்கொண்டது. பிறகு ஆஸ்திகர்கள் தெரிவித்த எதிர்ப்பால் அது கைவிடப்பட்டது. மகாபலிபுரத்தில் வைக்கலாமா என்று ஆலோசனை கேட்கப்பட்டது. இன்றுள்ள அரசு மகாபலிபுரத்தில் ரூ. 25 லட்சம் அல்லது ரூ. 30 லட்சத்திற்கு மேல் செலவிட்டு வைப்பதால் பலன் இல்லை என்று தெரிவித்திருக்கிறார்கள். ஆனாலும் மாநில அரசு அதை வைக்க வேண்டுமென்று வற்புறுத்தி வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 10-40)

<u>திரு. எஸ். இராமகிருஷ்ணத்தேவர் :</u> நம்முடைய மாநிலத்தில் மதுவிலக்குக் கொள்கை தீவிரமான முறையில் அமுல் நடத்தப்பட்டு வருகிறது. இந்த நேரத்தில் புதுக்கோட்டை மாவட்டத்தில் இருக்கிற விராலிமலையில் ஒரு சுற்றுலா மையம் அமைப்பது என்பது மிகவும் பொருத்தமானதுதான் என்றாலும், அமைச்சர் அவர்கள் பதிலளிக்கும்போது, வெளிநாடுகளிலிருந்து அங்கே வரக்கூடியவர்களில் மதுபானம் சாப்பிடக்கூடியவர்கள் இருந்தால், அதற்கும் நாம் ஏற்பாடு செய்து கொடுக்க வேண்டும் என்று சொன்னார்கள். அப்படியானால், அங்கே மதுபானம் சாப்பிடக்கூடியவர்கள் வரும்போது, அவர்கள் தங்களுக்குத் தேவையான மதுபானத்தை தாங்களே அங்கே கொண்டு வருவார்களா அல்லது விராலிமலையிலேயே பழையபடி மதுவுக்கு உயிர் கொடுத்து உற்சாகம் கொடுத்து விற்க ஏற்பாடு செய்யப்போகிறோமா? எனவே அந்தச் சுற்றுலா பயணிகளுக்கு எந்த முறையிலே மதுபானம் வழங்க ஏற்பாடு செய்து தரப்போகிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :</u> வெளிநாடுகளில் இருந்து சுற்றுலாப் பயணிகள் வந்து இருக்கக்கூடிய இடங்களில் எல்லாம் மதுபானம் கொடுப்பதற்காக அங்கெல்லாம் கடைகள் திறக்கப்படும் என்று பொருள் கொள்ளக் கூடாது. வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் வந்து இறங்குகிற விமான நிலையங்களிலேயே பெர்மிட் சீட்டு வழங்கப்படுகிறது. அந்த வெளிநாட்டுப் பயணிகள் எந்த விடுதிகளில் தங்குகிறார்களோ அங்கே அவைகளைப் பெறுவதற்கான வசதிகள் செய்து தரப்பட்டிருக்கின்றன. எனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அஞ்சுவது போல், புண்ணிய ஸ்தலங்களிலோ அல்லது புண்ணிய கோவில்களிலோ இப்படிப்பட்ட கடைகளைத் திறப்பதாக இல்லை, இப்படிப்பட்ட தவறுகள் நடைபெறாமல் இந்த அரசு கண்காணிப்பாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>திரு, க. அறிவழகன் :</u> வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் தமிழகத்திற்கு வரும்போது, தமிழகத்தைப் பற்றிய முக்கியமான விளக்கங்கள் அனைத்தும் அவர்களுக்கு ஆங்கில மொழியில்தான் தரப்படுகிறது. இந்த நிலைமையை மாற்றி, தமிழகத்தின் வரலாற்றுச் சிறப்பு மிக்க இடங்களுக்கு வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் வரும்போது, அவர்களுக்கு விளக்கம் தருவதற்காக உலகத்தின் முக்கியமான மொழிகள் என்று கருதப்படுகிற மொழிகளில் விளக்கங்களும், சுற்றுலா இடங்களைப் பற்றிய விவரங்களையும் தருவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

அடுத்து, தமிழகத்திலுள்ள திருக்கோயில்களுக்கு பயணிகள் வரும்போதுகூட அதிலும் குறிப்பாக வரலாற்றுச் சிறப்பு மிக்க கோயில்களுக்கு சுற்றுலாப் பயணிகள் வரும்போது, ஆங்கிலத்தில் தான் விளக்கங்கள் தருகிறார்கள், சில இடங்களில் தமிழிலும்



விளக்கம் தருகிறார்கள். இங்கே திராவிட மக்கள், திராவிட மொழி பேசும் மக்கள் நிறைந்திருக்கிறார்கள். அதோடு வட இந்தியாவிலிருந்தும் இந்தி பேசுகிற மக்களும் நிறைய வருகிறார்கள். எனவே அவர்கள் எல்லாம் புரிந்து கொள்ளும் வகையில் இந்தியாவின் மிகமுக்கியமான 4, 5 மொழிகளில் விளக்கங்களை எழுதி வைக்கபபடுமா அல்லது அவர்களுக்கு இதற்கான இதழ்கள் - பாம்ப்லெட்ஸ் - வழங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்,

<u>மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :</u> மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட பல்வேறு புனித தலங்கள் அல்லது பழம் பெரும் சரித்திரத்தை நினைவுபடுத்தும் இடங்களெல்லாம் வேறுபல துறைகளின்கீழ் இருக்கின்றன. அவைகள் சுற்றுலாத் துறையோடு இணைந்தில்லை. இருப்பினும் அவைகளை ஒருங்கிணைத்து சுற்றுலாத் துறை ஆங்கிலத்தோடு தமிழிலும் மற்றும் உலகத்தில் வழங்கப்படும் வேறு 1, 2 முக்கியமான மொழிகளிலும் விளக்கக் குறிப்புகளை வழங்க முயற்சிகளை மேற்கொள்ளும் என்று கூறிக்கொள்கிறேன்.

<u>திரு. ஜி. சுவாமிநாதன் :</u> சென்னை நகரத்திலும், சென்னையை சுற்றியுள்ள பகுதிகளிலும் சுற்றுலாப் பயணிகளாக வரும் வெளிநாட்டவர்களுக்கு என்னென்ன வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன? அல்லது அவர்கள் பார்க்கத் தக்க இடங்கள் என்று எவையெவை அமைக்கப்பட்டிருக்கின்றன? இப்போது இருக்கும் மிருகக் காட்சி சாலை சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்திற்குப் பக்கத்தில் இருப்பதால், மிருகங்கள் மிகவும் பாதிக்கப்படுகின்றன என்றும் எனவே கிண்டிக்கு அருகிலோ, வண்டலூரிலோ இந்த மிருகக் காட்சி சாலையை அமைக்க வேண்டும் என்று முன்பு ஒரு குறிப்பு இருந்தது. அது தற்போது எந்த நிலைமையில் உள்ளது?

<u>மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :</u> தற்போதைய மிருகக் காட்சி சாலையை விரிவுபடுத்தி, வண்டலூருக்கு அருகில் பெரிய அளவில் சுற்றுலாப் பயணிகளைக் கவரத் தக்க வகையில் அதனை அமைக்க வேண்டும் என்ற திட்டத்தை இந்த அரசு மத்திய அரசுக்கு அனுப்பியிருக்கிறது. மத்திய அரசு பல்வேறு திட்டங்களையும் இன்னும் பரிசீலனை அளவிலேயே வைத்துக் கொண்டிருக்கிற காரணத்தால், அது பற்றிய முடிவை இப்போது கூற முடியாது.

சென்னை நகரத்தைப் பொறுத்தவரையில், சென்னை நகரமே ஒரு சுற்றுலா மையமாக இருப்பதால், தனிப்பட்ட இடங்களை மட்டும் குறிப்பிட்டுச் சொல்லுகிற அளவுக்கு சுற்றுலாத் துறை ஏற்பாடு செய்யவில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

<u>மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :</u> 17-3-1978ஆம் தேதியிட்ட வினாக்கள் பட்டியலிலிருந்து மாற்றப்பட்ட வினாக்கள் 180 முதல் 183 வரை எடுத்துக்கொள்ளப்படும்.

*Former Language Pandits.*

* 180 Q.—THIRU P. R. THOMAS (on behalf of THIRU K. S (GANAPATHI): Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether it is a fact that the Government have granted Selection Grade Scale of Pay to the erstwhile Language Pandits (Hindi and Sanskrit) now working as B.T. Assistants and Secondary Grade Teachers;

(b) whether this benefit is denied to such of the Pandits as are working as Librarians, Junior Assistants, Attenders, etc., in various schools in the State; and

(c) if so, the reason therefor?

முன்னாள் மொழி ஆசிரியர்கள்

திரு. பி. ஆர். தாமஸ் திரு. (கே. எஸ். கணபதி சார்பில்) : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) முன்னர், இந்தி ஆசிரியர்களாகவும், சமஸ்கிருத ஆசிரியர்களாகவும் இருந்து, தற்போது பி. டி. (B.T.) ஆசிரியர்களாகவும் இடைநிலை ஆசிரியர்களாகவும் பணியாற்றி வருபவர்களுக்கு, அரசு தேர்வுத்தர சம்பள விதம் வழங்கியுள்ளது உண்மையா ?

(இ) அவ்வாறு மொழி ஆசிரியர்களாக இருந்து இம்மாநிலத்தின் பல்வேறு பள்ளிகளில் நூலகர்களாகவும், இளநிலை உதவியாளர்களாகவும் சிற்றெழுத்தர்களாகவும் தற்போது பணியாற்றி வருபவர்களுக்கு இச்சலுகை மறுக்கப்படுவது உண்மையா ?

(உ) ஆமெனில், அதற்கான காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம்.

(இ) ஆம்.

(உ) பி. டி. ஆசிரியர்கள், இடைநிலை ஆசிரியர் பதவிகளுக்கு தேர்வு நிலை பதவிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. பி.டி. ஆசிரியர், இடைநிலை ஆசிரியர் பணிக்கு தகுதி பெற்ற முன்னாள் இந்தி மற்றும் இதர மொழி ஆசிரியர்கள் அப்பதவிக்கு அமர்த்தப்பட்டு தேர்வுநிலையும் பெறுகின்றனர். நூலகர்கள், இளநிலை உதவியாளர்கள் ஆகிய பதவிகளுக்கு தேர்வு நிலை பதவிகள் ஏற்படுத்தப்படவில்லை. மேலும் ஆசிரியர் பணிக்கு தகுதி இல்லாத காரணத்தால் நூலகர், இளநிலை உதவியாளர் பதவிகளில் அமர்த்தப்பட்ட முன்னாள் இந்தி மற்றும் இதர மொழி ஆசிரியர்கள் தேர்வு நிலை பெற முடியவில்லை.



திரு. பி. ஆர். தாமஸ் : மொழியாசிரியர்களுக்கு அளிக்கப்பட்ட பாதுகாப்பின் அடிப்படையில் இந்த இரண்டாவது பிரிவினருக்கும் தேர்வு நிலை வழங்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

அடுத்து, ஒரே ஊதிய விகிதத்தில் இரண்டு பணிகளை ஆற்றியவர்களுக்குத் தேர்வு நிலை வழங்கப்பட வேண்டும் என்று ஆணை இருக்கிறது. ஆனால் கைத்தொழில் ஆசிரியராகப் பணியாற்றிவிட்டு, அடுத்து இடைநிலை ஆசிரியராகப் பணியாற்றும்போது, இந்த இரண்டு பணிகளையும் ஒன்றாகச் சேர்த்து எடுத்துக்கொள்ளாத காரணத்தால், அவர்களுக்குத் தேர்வு நிலை மறுக்கப்படுகிறது. எனவே இந்த இரண்டு நிலைமைகளையும் ஆராய்ந்து நல்ல முடிவை எடுப்பதற்கு மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : கேட்கப்பட்டிருக்கிற கேள்வியின் அடிப்படையில், ஆசிரியர் பணிக்குத் தகுதி இல்லாத காரணத்தால், அந்தத் தேர்வு நிலை தர முடியவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. க. அறிவழகன் : இந்தி ஆசிரியர்களும், சமஸ்கிருத ஆசிரியர்களும், பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, இந்த மாநிலத்தில் இந்திக் கல்வி நிறுத்தப்பட்டதால், மற்ற துறைகளுக்குச் சென்றார்கள். அவர்கள் எல்லாம் ஆசிரியர்களாக இருக்கத் தகுதி உள்ளவர்கள்தான். ஆனால் அவர்களை ஆசிரியர்களாக இந்த அரசு வைத்துக்கொள்ள முடியாத காரணத்தால், வேறு பணிகளில் நூலகர்களாக, இளநிலை உதவியாளர்களாக, சிற்றெழுத்தர்களாகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அவ்வாறு அவர்கள் 'இந்தப்பணிகளுக்கு எடுத்துக் கொள்ளப்படும்போதே அவர்கள் வாங்கிக்கொண்டிருக்கிற சம்பளத்திற்கு பாதிப்பு ஏதும் வராது என்றும், மற்ற ஆசிரியர்கள் என்னென்ன பயன்களைப் பெறுவார்களோ அவை அனைத்தும் இவர்களுக்கும் வழங்கப்படும் என்றும் அளிக்கப்பட்ட உறுதி மொழியின் அடிப்படையில்தான் அவர்கள் எல்லாம் வேறு பணிக்கு மாற்றப்பட்டார்கள். எனவே அருள்கூர்ந்து அமைச்சர் அவர்கள் இதை மறுபடியும் கவனித்து மறுபரிசீலனை செய்து முடிவெடுக்க முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : 3-வது சம்பளக் கமிஷன் முன்பாக இந்தக் கோரிக்கை வைக்கப்படலாம் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அப்படியொரு யோசனை இல்லை.

*Next World Tamil Conference.*

* 183 *Q*.—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether there is any proposal under the consideration of the Government to hold the next World Tamil Conference in Tamil Nadu; and

(*b*) if so, the place where it is proposed to be held?

அடுத்த உலகத் தமிழ் மாநாடு

திரு ஜி. சுவாமிநாதன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அடுத்த உலகத் தமிழ் மாநாட்டை தமிழ் நாட்டில் நடத்துவது பற்றிய செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆமெனில், எந்த இடத்தில் அதனை நடத்தக் கருதப் பட்டுள்ளது?

மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம் : (அ) அரசு இது குறித்து யோசித்து வருகிறது.

(இ) இடம் நாள் இன்னும் நிச்சயிக்கப்படவில்லை.

திரு ஜி. சுவாமிநாதன் : இந்த ஆண்டிலேயே நடத்தலாமா என்பதையாவது அரசு முடிவு செய்திருக்கிறதா? 1978ஆம் ஆண்டிலேயே நடத்தலாம் என்று அரசு முடிவு எடுத்துள்ளதா?

மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம் : அதைக் குறித்துத் தான் யோசனை செய்யப்பட்டு வருகிறது.

திரு ஜி. சுவாமிநாதன்: தமிழ் நாட்டினுடைய வரலாறு குறித்து சரியான முறையில் வரலாறு எழுதப்பட வேண்டும் என்று அரசு ஆலோசனை செய்து வருகிறதா? அதைப்பற்றி முடிவு செய்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம் : தனியாகக் கேள்வி கேட்டால், விவரமாகப் பதில் சொல்ல வசதியாக இருக்கும்.



*Leasing out Quarries.*

* 192 *Q*.—THIRU K. S. MANI (on behalf of Thiru M. SANKARALINGAM): Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether any complaint has been received stating that the lease amount of the quarries was not paid to the concerned Panchayat even though G.O. Ms. No. 755, Rural Development and Local Administration Department, dated 30th April 1975 provides the right to the Panchayats for leasing out the quarries within their limits and for collecting the lease amount therefor; and

(*b*) if so, whether steps will be taken to pay the arrears also till date?

கற்பாறைகள் குத்தகை

திரு. கோ. சி. மணி (திரு. எம். சங்கரலிங்கம் சார்பில்): மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ஒவ்வொரு ஊராட்சி எல்லைக்குட்பட்ட கற்பாறைகளை (quarries) ஏலம் (குத்தகை) விடுகிற உரிமையும், குத்தகைத் தொகையை பெறுகிற உரிமையும் அந்தந்த ஊராட்சிகளுக்கே உரிமை உடையது என்ற, 30-4-1975ஆம் நாளிட்ட ஊர் வளர்ச்சி—உள்ளாட்சித் துறையின் அரசு ஆணை எண். 755—ன் படி அந்தந்த ஊராட்சிகளுக்குத் தொகை கொடுக்கப்படவில்லை என்று புகார் ஏதேனும் வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், இதுவரையுள்ள பாக்கி தொகையையும் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள இரு ஊராட்சிகளிடமிருந்து புகார்கள் வந்துள்ளன.

(இ) இவை அரசின் பரிசீலனையில் உள்ளன.

*Street Lights in Anna Nagar.*

* 193. *Q*.—THIRU K. S. MANI : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether the Tamil Nadu Housing Board, has paid certain amount to the Corporation of Madras for the installation of street lights in Anna Nagar, Madras;

(b) if so, the date on which the Housing Board paid th amount;

(c) whether the street lights have been installed; and

(d) if not, the reason therefor?

## அண்ணா நகரில் தெரு விளக்குகள்

**திரு. கோ. சி. மணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் —

(அ) தமிழ் நாடு வீட்டுவசதி வாரியம், சென்னை, அண்ணா நகர் பகுதியில் தெரு விளக்குகள் அமைக்கப்படுவதற்காக, ஒரு குறிப்பிட்ட தொகையை சென்னை மாநகராட்சிக்கு செலுத்தியிருக்கிறதா?

(இ) ஆம் எனில், எப்பொழுது வீட்டு வசதி வாரியம் அத் தொகையைச் செலுத்தியது?

(உ) தெரு விளக்குகள் அமைக்கப்பட்டு விட்டனவா?

(எ) இல்லையெனில், காரணம் என்ன?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:** (அ) ஆம்.

(இ) 1966–67ம் ஆண்டு முதல் 1977–78-ம் ஆண்டு வரை ரூ. 29,67,554 செலுத்தியுள்ளது.

(உ) இதுவரை 846 தெரு விளக்குகள் அமைக்கப்பட்டு விட்டன.

(எ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. கோ. சி. மணி:** அந்த பிளாக்கில் 3-வது பிரிவில் இதுவரை விளக்குப் போடப்படவில்லை என்று நேற்றுவரை நானே பார்த்திருக்கிறேன். நேற்றுவரை போடப்படவில்லை என்ற தகவலும் எனக்குக் கிடைத்திருக்கிறது, அது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? அப்படி அமைக்கப்படாத இடங்களில் புதிதாக எவ்வளவு நாட்களுக்குள் விளக்குகள் போட அரசு உத்தேசித்திருக்கிறது?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:** பகுதி 3, 4 விட்டுப்போன இடங்களில் 19 விளக்குகள் எரிய வைக்கப் பட்டுள்ளன. மீதம் 306 விளக்குகள் பொருத்தப்பட்டு



இருக்கின்றன. அவற்றில் 96 விளக்குக் கம்பங்கள் நடப்பட்டு விட்டன. மற்றவைகளுக்குத் தேவைப்படும் விளக்குக் கம்பங்களுக்குத் தேவையான புதை கம்பிகள் (underground cables) கைவசம் இருப்பு இல்லாததால்தான், இந்தப் பணி தொடங்கப் படவில்லை. அவைகளைத் தருவிக்க உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. ஏப்ரல் மாத மத்தியில் அவைகள் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

(முற்பகல் 10-50)

**திரு. கோ. சி. மணி:** இந்த உத்தரவு வழங்கப்பட்டு எவ்வளவு நாட்கள் ஆகின்றன? அந்தப் பொருள்கள் கிடைக்காததற்குக் காரணம் அரசாங்கத்தின் முயற்சியின்மையா அல்லது பொருள்கள் தட்டுப்பாடா என்பதைப் பற்றி அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:** பொருள்கள் கிடைக்க வில்லை என்றுதான் குறிப்பில் இருக்கிறது. இவைகள் ஏப்ரல் மாதம் இறுதியில் கிடைக்கும் என்று தெரிகிறது. எப்போது உத்தரவு வழங்கப்பட்டது என்று குறிப்பில் இல்லை.

**திரு. வே. தங்கப்பாண்டியன்:** அண்ணா நகர் பகுதியிலே மட்டும்தான் குறைவாக இருக்கின்றனவா? சென்னை நகரில் பல பகுதிகளிலும் குறைவாக இருக்கின்றன என்று புகார்கள் வந்திருப்பதாகத் தெரிகிறது. ஒட்டுமொத்தமாக எங்கெல்லாம் தெரு விளக்குகள் இல்லையோ, அங்கெல்லாம் அமைப்பதற்குத் திட்டம் இருக்கிறதா என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:** அப்படிப்பட்ட புகார்கள் வந்திருக்கின்றன. ஒட்டுமொத்தமாக அமைக்க முயற்சிக்கலாம். இப்போது கேட்கப்பட்டுள்ள கேள்வி அண்ணா நகரைப் பற்றியதாக இருக்கிறது. அதனால்தான் அதற்கு மட்டும் பதில் குறிப்பில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. கோ. சி. மணி:** ஏப்ரல் மாதம் இறுதிக்குள்ளாகவே கிடைக்கும் என்று அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். ஏப்ரல் மாதத்தில் விளக்குகள் அமைக்கப்படுவதற்கு அரசாங்கம் முயற்சி எடுக்குமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:** அரசு முயற்சி எடுத்துக்கொள்ளும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

*Teachers Serving under Kallar Reclamation Scheme.*

* 194 Q.—THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(*a*) whether it is a fact that both secondary grade and higher grade teachers serving under Kallar Reclamation, Madurai district, have not yet been sanctioned Selection Grade Scale of Pay from 1st April 1974;

(*b*) whether it is a fact that the upgraded teachers have not been sanctioned secondary grade scale of pay;

(*c*) whether the services of the teachers appointed under Half-a-Million Job Programme have not yet been regularised; and

(*d*) if so, the action proposed to be taken thereon?

**கள்ளர் சீர்திருத்தப் பணித் திட்டத்தின் கீழ் பணிபுரியும் ஆசிரியர்கள்.**

திரு. பி. ஆர். தாமஸ்: மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மதுரை மாவட்டம், கள்ளர் சீர்திருத்தப் பணித் திட்டத்தின் கீழ் பணிபுரியும் உயர்நிலை ஆசிரியர்களுக்கும் தொடக்கநிலை ஆசிரியர்களுக்கும் 1-4-1974 ஆம் நாளிலிருந்து தேர்வுநிலை சம்பளம் வழங்கப்படவில்லை என்பது உண்மையா?

(இ) பதவிநிலை உயர்த்தப்பட்ட ஆசிரியர்களுக்கு உயர்நிலைச் சம்பளம் வழங்கப்படவில்லை என்பது உண்மையா?

(உ) ஐந்து இலட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் திட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட ஆசிரியர்களின் பணி இது வரையில் முறைப் படுத்தப்படவில்லையா?

(எ) ஆம் எனில், அதன் மீது எடுக்கக் கருதியுள்ள நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: (அ) 1-4-74 முதல் இடைநிலை, இளநிலை ஆசிரியர்களுக்கு தேர்வுநிலை ஊதியம் வழங்கப்பட்டுவருகிறது.

**(இ), (உ) & (எ)—பரிசீலனையில் உள்ளது.**



திரு. பி. ஆர். தாமஸ்: பல ஆண்டுகளாக பட்டதாரி ஆசிரியர்களுக்கும், மற்ற ஆசிரியர்களுக்கும் அந்தந்த ஆண்டுக்குரிய ஊதிய உயர்வுகள் அளிக்கப்படாமலிருக்கின்றன. மேலும் தேர்வு நிலையும் வழங்கவில்லை. 1-4-1974-லிருந்து இடைநிலை ஆசிரியர்களுக்கும், 1-4-73-லிருந்து பட்டதாரி ஆசிரியர்களுக்கும் தேர்வுநிலை வழங்க வேண்டும். அதற்கான நடவடிக்கைகளை அரசு எடுக்குமா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிக திரு. பெ. சௌந்தரபாண்டியன்: பல ஆசிரியர்களுக்கு 24-10-1977 ஆம் தேதியிலிருந்து நடவடிக்கை எடுக்கப்பட்டு இந்த ஊதியம் வழங்கப்பட்டுக்கொண்டிருக்கிறது. கால தாமதத்திற்குக் காரணம் ஒவ்வொருவருடைய கோப்புகளையும் பார்த்து யார் யாருக்குத் தகுதி இருக்கிறது என்று பார்க்கப்படுவது. அதைப் பற்றி அறிந்துகொள்வதில் கொஞ்சம் கால தாமதம் ஏற்பட்டது. ஆகவே இத்தேர்வு நிலை தருவது பரிசீலனையில் உள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. அறிவழகன்: கல்வித் துறை ஆணைகளை ஹரிஜன நலத் துறையில் நடைமுறைக்குக் கொண்டுவருவதால் தான் காலதாமதம் ஆகின்றது. அந்த ஹரிஜன நலத் துறையில் உள்ள ஆசிரியர்கள் அதனால் தொல்லைக்குள்ளாகின்றார்கள். அதைக் கல்வித் துறையினர் அமுல் செய்யவேண்டும். அப்படிச் செய்யவில்லை என்றால், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அந்தத் துறைக்கு அறிவித்திருக்கின்றார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: சில நேரங்களில் அரசாங்கம் இடுகின்ற ஆணைகள் கல்வித் துறையைச் சேர தாமதம் ஆகிறது. அதற்குப் பிறகு கல்வித் துறையிலிருந்து ஹரிஜன நலத் துறை, பிற்பட்டோர் நலத் துறை ஆகியவற்றுக்கு அந்த ஆணைகள் வர காலதாமதம் ஆகின்றது. அந்த ஆணைகளைப் பெற்ற பிறகு, ஒவ்வொருவரைப் பற்றிய குறிப்புக்களை, கோப்புகளைப் பார்த்து, யார் தகுதியுள்ளவர்கள் என்று பார்க்க வேண்டும். தேவையான அலுவலர்கள் இல்லாத காரணம் வேறு இருக்கிறது. இந்த அரசாங்கம் பொறுப்பேற்ற பிறகு அந்த ஆணைகளுக்குரியவாறு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: வினாக்கள் விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 3. தகவல் கோரல்.

### முதலமைச்சர் அவர்கள் பதிலளிக்க வேண்டிய வினாக்கள் குறித்து.

திரு. வே. தங்கப்பாண்டியன் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு ஒழுங்குப் பிரச்சினையை எழுப்ப விரும்புகிறேன். நீண்டகாலமாகப் பொறுத்திருந்து கேட்கிறேன். நம் மேலவை விதி 35-ன் பிரகாரம், ஒரு கேள்வி அனுமதிக்கப்பட்ட பின்னர், 42 நாட்களில் பதிலளிக்கப்பட வேண்டும். குறிப்பாக முதலமைச்சர் அவர்களின் கேள்விகள் அனுமதிக்கப்பட்டு, 3 மாத காலம் ஆகின்றது. இன்னும் அந்தக் கேள்விகளுக்கு விடை வரவில்லை. இந்த அவையில் வேறு அமைச்சர்கள் மூலமாகவாவது அந்தக் கேள்விகளுக்கு பதில் அளிக்கப்படுமா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : துணைத்தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் இலாகா குறித்த கேள்விகளுக்கான பதில்களைச் சொல்வதற்கு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 22ஆம் தேதியிலிருந்து எடுத்துக் கொள்ளலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். வேறு சில பணிகளிலே ஈடுபட்டிருந்ததால், இந்தக் கூட்டத் தொடரில் ஆரம்பத்திலேயே எடுத்துக்கொள்ள முடியவில்லை. 22 ஆம் தேதியிலிருந்து வரிசைக்கிரமமாக எடுத்துக்கொள்வதற்கு வாய்ப்பு இருக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

திரு. கோ. சி. மணி: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, இப்படிப்பட்ட வினாக்களை இத்தோடு பல முறைகள் இந்த அவையிலே தங்கள் மூலம் கிளப்பி ஆயிற்று. இதைவிட வேறு பணிகள் முதலமைச்சர் அவர்களுக்கு இருக்கின்றன என்று முன்னவர் அவர்கள் சொல்கிறார்கள். சட்ட மன்றப் பணியைத் தவிர வேறு பணி என்பதைக் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. பேரவையில் கேட்டால் மேலவைப்பணி என்கிறார்கள், மேலவையில் கேட்டால் பேரவைப் பணி என்கிறார்கள். இப்படி அந்த அவையிலேயும் கேட்கப்பட்டு வருகிறது. அவர்களுக்கு இந்தப் பணியைவிட வேறு என்ன பணி முக்கியமான பணி? கொடுத்த கேள்விகளுக்கு பதில் அளிப்பதற்கு வர வேண்டும். மேலவையில் கேள்வி நேரத்தில் இருந்து பதில் அளிப்பதை விட வேறு முக்கியமான பணி என்ன என்பதைப் பற்றி அறிந்துகொள்ள விரும்புகிறேன். அவைகளை ஒத்தி வைத்திருப்பதற்கு என்ன சமாதானம் சொல்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.





மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : துணைத்தலைவர் அவர்களே, சட்ட மன்றம் நடக்கின்ற நேரத்திலே, சட்ட மன்றப் பணிதான் முக்கியமானது என்பதை யாரும் மறுக்க முடியாது. சமீபத்தில் நடைபெற்ற என். ஜி. ஓ.-க்கள் பிரச்சினைகள், மற்ற சம்பவங்கள், இவைகளையெல்லாம் தொடர்ந்து பல சூழ்நிலைகள் இருந்த காரணத்தினாலே, வர முடியவில்லை. சமீபத்திலே டெல்லிக்குச் சென்று நேற்று திரும்பி வந்திருக்கிறார்கள். முதல்வர் அவர்கள் இப்படித் தொடர்ந்து பணியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் 22 ஆம் தேதியிலிருந்து கேள்விகள் எடுத்துக்கொள்ளுங்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். கேள்விகள் எடுத்துக்கொள்ளும்போது, சில சந்தர்ப்பங்களில் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குப் பதிலாக முன்னவராக இருப்பவர் கேள்விகளுக்கு பதில் சொல்வதற்கு அனுமதி அளித்திருக்கிறார்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : இதைக் குறித்து நீண்ட விவாதமாக ஒவ்வொருவரும் எழுந்து கேட்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். முதலமைச்சர் அவர்கள் 22 ஆம் தேதி என்று சொல்லியிருக்கிறார்கள்.

திரு. கோ. சி. மணி : துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்தக் குறிப்பிட்ட 22 ஆம் தேதி முதல் அந்தக் கேள்விகளுக்கு பதில் சொல்வார்களா என்று அறிய விரும்புகிறேன். 22 ஆம் தேதியிலிருந்து, இதுவரை எவ்வளவு கேள்விகள் அனுமதிக்கப்பட்டிருக்கின்றனவோ அத்தனை கேள்விகளுக்கும் முதலமைச்சர் அவர்கள் இந்த அவையில் பதில் அளிப்பார்களா அல்லது வேறு அமைச்சர் யாராவது பதில் அளிப்பார்களா என்பதைப் பற்றியாவது தெரிவிப்பார்களா என்று தங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : நான் அவை முன்னவர் அவர்களையும் நமது இலாகா அலுவலர்களையும் கலந்து பதிலளிக்க ஏற்பாடு செய்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : துணைத் தலைவரவர்களே, கேள்விகளுக்கு இன்னார்தான் பதில் அளிக்க வேண்டும் என்று கட்டாயப்படுத்த முடியாது. மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் வராத சந்தர்ப்பத்தில் அவர்கள் சார்பாக நான் கேள்விகளுக்குப் பதில் சொல்லியிருக்கிறேன். 22 ஆம் தேதியிலிருந்து கேள்விகளை எடுத்துக்கொள்ளலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆ. பாலசுப்ரமணியம் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, சில சமயங்களில் முக்கியத்துவம் குறித்து தான் கேள்விகள் போடுகிறோம். உரிய காலத்திலே பதில் சொல்லவில்லை என்றால், அதற்குப் பயன் இல்லாமல் போகிறது. அப்படி முக்கியத்துவம் வாய்ந்த கேள்விகளுக்காவது முதலமைச்சர் அவர்கள் இல்லாத சந்தர்ப்பத்திலும் பதில் சொல்ல வேண்டும். இதை மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்கள் மூலம் கேட்டுக்கொள்கிறேன். அதற்கு உத்தரவாதம் வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : இது குறித்து முன்னவர் அவர்களே ஏற்கெனவே சொல்லியிருக்கிறார்.

திரு. கோ. சி. மணி : மேலவையில் பலமுறை இதைப் பற்றியே திரும்பத் திரும்பப் பேசுகின்ற நிலைமைகள் ஏற்படுகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : நானும் அதைப் பற்றி கவனித்துக்கொண்டுதான் இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 4, அரசின் தீர்மானம்

சமுதாய வளர்ச்சி—ஊராட்சி வளர்ச்சி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகளின் மீது விவாதம்.

மாண்புமிகு திரு கா. காளிமுத்து : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே,

"சட்ட மன்ற மேலவையின் முன் வைக்கப்பட்டுள்ள 'சமுதாய வளர்ச்சி — ஊராட்சி வளர்ச்சி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி குறித்த கொள்கை விளக்கக் குறிப்புக்கள்' *பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படவேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : முன்மொழியப்பட்ட தீர்மானம் . . . .

"சட்டமன்ற மேலவையின் முன் வைக்கப்பட்டுள்ள 'சமுதாய வளர்ச்சி — ஊராட்சி வளர்ச்சி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள்', பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

*5501-534, ஆம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.



(முற்பகல் 11-00)

இன்றைக்கு அதிருஷ்டவசமாக ஏராளமான உறுப்பினர்கள் இந்த விஷயத்தில் ஆர்வம் கொண்டு, பேச பெயர் கொடுத்திருக்கிறார்கள். எனவே உறுப்பினர்கள் அனைவரும் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. வே. தங்கப்பாண்டியன்: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரவர்களால் கொண்டுவரப்பட்டுள்ள சமுதாய வளர்ச்சி கொள்கை விளக்கக் குறிப்பின்மீது சில கருத்துக்களைச் சொல்வதிலே நான் மகிழ்ச்சியடைகிறேன். அந்தக் கருத்துக்கள் முறைப்படி பரிசீலனை செய்யப்படும், நடைமுறைப்படுத்தப்படும் என்ற நம்பிக்கையோடு நான் என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன். சென்ற முறை சமுதாய வளர்ச்சி பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு இந்த மன்றத்திலே வைக்கப்படவில்லை, அதனால் விவாதமும் இல்லை, விளக்கங்களும் இல்லை. இந்த முறை கொள்கை விளக்கக் குறிப்பு வைக்கப்பட்டு, உறுப்பினர்கள் கருத்துக்களைச் சொல்லிய பிறகு, மாண்புமிகு அமைச்சரவர்கள் பதில் சொல்லக் காத்துக்கொண்டிருக்கிறார்கள். ஒரு நல்ல முன்மாதிரியை பொதுப் பணித் துறை அமைச்சரவர்கள் இங்கே சொன்னார்கள். உறுப்பினர்கள் பல்வேறு கருத்துக்களைச் சொல்கிறார்கள். ஆனால் காலத்தின் காரணமாக அமைச்சர்கள் எல்லாக் கருத்துக்களுக்கும் பதில் சொல்லாவிட்டாலும், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அதற்கான விளக்கங்களை அளித்து, அடுத்த ஆண்டு கொள்கை விளக்கக் குறிப்பு இந்த அவையில் வைக்கப்படும்போது, அந்த விளக்கங்களையும் இங்கே ஒரு ஏடாகத் தர வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு அமைச்சரவர்கள் கொடுத்திருக்கும் கொள்கை விளக்கக் குறிப்பு, 1952 ஆம் ஆண்டில் சமுதாய வளர்ச்சித் திட்டம் எப்படி உருவாக்கப்பட்டது, அது 1958 ஆம் ஆண்டிலே எப்படி நடைமுறைப்படுத்தப்பட்டது என்ற முன்னுரையோடு இருக்கிறது. தமிழ்நாட்டைப் பொறுத்தவரை, உள்ளாட்சித் தத்துவம் என்பது புதிதல்ல. நம்முடைய ரத்தத்தோடு ஊறிப்போனது. சோழர்கள் சாம்ராஜ்யத்திலிருந்து உள்ளாட்சி மன்றங்கள் இருந்துகொண்டிருக்கின்றன. உள்ளாட்சித் தத்துவம் தமிழர்களின் உணர்வோடு பிறந்தது. நான் அதற்காகப் பெருமைப்படுகிறேன். அந்தப் பொற்காலத்திலேகூட எண் பேராயங்கள், ஐம்பெருங் குழுக்கள் எல்லாம் நம்முடைய நாட்டிலே நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கின்றன. வெள்ளைக்காரன் காலத்திலே கொஞ்சம் இடைவெளி ஏற்பட்டாலும், ரிப்பன் பிரபு காலத்திலிருந்து உள்ளாட்சித் தத்துவம் ஒத்துக்கொள்ளப்பட்டது. அதற்குப் பிறகு கொஞ்சம் கொஞ்சமாக

[திரு. வே. தங்கப்பாண்டியன்] [1978 மார்ச் 20

அந்தத் தத்துவம் நடைமுறைப்படுத்தப்பட்டது. பண்டித
நேரு அவர்கள், ஒரு ஜனநாயகத்திலே உள்ள கிராம மக்க
ளுடைய உழைப்புச் செல்வத்தை சமுதாய வளர்ச்சித் திட்டங்
களுக்குப் பயன்படுத்துவதன் மூலமாகத்தான் நாட்டில் வளர்ச்
சியைப் பெருக்க முடியுமென்று சொல்லியிருக்கிறார்கள். அதற்குப்
பிறகுதான் சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் தீவிரப்படுத்தப்
பட்டன. 1958 ஆம் ஆண்டிலே திரு. காமராஜர் அவர்களின்
நல்ல முயற்சியாலே ஊராட்சி ஒன்றியங்கள் ஏற்படுத்தப்
பட்டன. முந்தைய மத்திய அமைச்சர் திரு. எஸ். கே. டே
அவர்கள் இந்தியா பூராவும், இமயம் முதல் குமரி வரை
ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையிலே இந்தத் திட்டம் நடைமுறைப்
படுத்தப்பட வேண்டும் என்ற எண்ணத்தோடு நடைமுறைப்
படுத்துவதாகச் சொன்னார்கள். அதற்குப் பின்னாலே வந்த
ஒவ்வொரு ஜனநாயக அரசும், இந்தத் திட்டத்திற்கு அதிக
முக்கியத்துவம் கொடுக்க வேண்டும், கிராம வளர்ச்சித் துறை,
உள்ளாட்சி மன்றங்கள் சிறப்பாக நடைபெற வேண்டும், அப்
போதுதான் மாநில அரசுகளும், மத்திய அரசும் வலிமை
பெற்று விளங்குமென்ற உண்மையை ஏற்றுக்கொண்டிருக்
கிறார்கள். நாம் சொல்கிற தத்துவத்தை, சித்தாந்தத்தை,
அதற்குக் கொடுக்கிற விளக்கத்தை நடைமுறைப்படுத்துகிறோமா
என்றால், இல்லை. நான் இன்றைக்கு இருக்கிற அரசைக் குற்றம்
சாட்டுவதாக நினைக்க வேண்டாம். ஊர் ஊராகச் சென்று
மேடைகளிலே பேசும்போது, உள்ளாட்சித் தத்துவம்பற்றிப்
பேசும்போது, இந்தத் திட்டங்களிலே கிராம மக்கள் பங்குகொள்ள
வேண்டும், அவர்கள் உழைப்பை மையமாக வைத்துத்தான்
காரியங்கள் நடைபெற வேண்டுமென்று சொல்கிறோம். ஆனால்
அதன்படி திட்டங்கள் நடைபெற்றிருக்கின்றனவா என்றால் இல்லை.
நடைபெற்றுக்கொண்டிருந்த ஊராட்சி ஒன்றியங்கள் இடைக்
காலத்திலே அவசர காலச் சட்டம் அமுலில் இருந்தபோது
ரத்து செய்யப்பட்டன. ஊராட்சி ஒன்றியங்கள்,
மன்றங்கள் கலைக்கப்பட்டுவிட்டன. இன்றைக்கு நகராட்சி
இல்லை; ஊராட்சி ஒன்றியங்கள் இல்லை. நகராட்சிகள்
இருப்பவர்கள் ஸ்பெஷல் ஆபிசர்கள்தான்— இன்றைக்கு அங்கே
கள்தான். எத்தனை ஆண்டுகளுக்குச் சிறப்பு அலுவலர்
வைத்துக்கொண்டு நடத்துவது? நான் வருத்தத்தோடு ஒன்றைச்
சொல்லிக்கொள்கிறேன். உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள்
இன்றைக்கு துறைக்கு மட்டும்தான் அமைச்சராக இருக்கிறார்கள்.
அங்கே உள்ளாட்சி இல்லை. வெறும் துறை மட்டும்தான்
இருக்கிறது. ஜீவன் இல்லாத கூடாக இருக்கிறது. ஊராட்சி
ஒன்றியங்கள் இருந்தால்தானே அவை நடக்கும். நாம் ஒதுக்கீடு
செய்கிற பணம் பொது மக்களுக்குப் போய்ச் சேருகிறதா!
ஒவ்வொரு துறைக்கும் முறைப்படி பணம் பயன்படுத்தப்படு
கிறதா? நகராட்சிகளுக்கு ஒதுக்கப்படுகிற பணம் முறைப்படி



1978 மார்ச் 20] [திரு. வே. தங்கப்பாண்டியன்]

எந்தெந்தத் துறைகளுக்குச் செலவழிக்கப்பட வேண்டுமோ அப்படி
செலவழிக்கப்படுகிறதா? மக்கள் குரல் மன்றங்களிலே எழுப்பப்
படுகிறதா? இவை எல்லாவற்றையும் செய்ய ஊராட்சி ஒன்றி
யங்கள், நகராட்சி மன்றங்கள் இருக்க வேண்டும். அவை ஏன்
இன்னும் நடைமுறைப் படுத்தப்படவில்லை? சென்னை மாநகராட்சி
யிலிருந்து, ஊராட்சி ஒன்றியங்கள் வரை எங்கும் உள்ளாட்சி
அமைப்பு இல்லாததால், அங்கேயுள்ள அதிகாரிகள் இங்கே
போடப்படும் ஆணைகளை நிறைவேற்றும் சாதாரண அதிகாரி
களாகத்தான் இருந்துகொண்டிருக்கிறார்கள்.

'' அக்டோபர் திங்களில் தேர்தல்கள் நடைபெறும்: அதற்
கான வாக்காளர் பட்டியல் இன்றைக்குத் தயாராகிக் கொண்டிருக்
கிறது; வீடு வீடாகச் சென்று, தகவல்கள் சேகரித்து, வாக்கா
ளர் பட்டியல் தயாரிக்கப்பட்டு வருகிறது '' என்று அமைச்
சரவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இதற்கு முன்னாலே வீடு
வீடாகச் சென்று வாக்காளர் பட்டியல் தயாரிக்கவில்லை என்பது
போலவும், இப்போதுதான் அப்படிச் செய்கிறார்கள் என்பது
போலவும் ஒரு குறிப்பைக் கொடுத்திருக்கிறார்கள். எப்போதுமே
வாக்காளர் பட்டியல் என்பது, வீடு வீடாகச் சென்று, தக
வல்கள் சேகரித்துத் தயாரிப்பதுதான். இதிலே இன்னொரு
வேடிக்கை. இந்தியா முழுவதும் நாடாளுமன்றத் தேர்தல் நடை
பெற்றது. அதற்குப் பிறகு சட்ட மன்றத் தேர்தல் நம்
மாநிலத்தில் நடந்தது. அதற்குப் பின்னால் இரண்டு முறைகள்
உள்ளாட்சித் தேர்தல்கள் நடைபெறுமென்று சொல்லி, அதற்
காக வாக்காளர் பட்டியல் தயார் செய்யப்பட்டு—மொத்தம்
4 முறை வாக்காளர் பட்டியல் தயார் செய்யப்பட்டு, திருத்
தப்பட்டு, அச்சடிக்கப்பட்டு, அச்சுப் புத்தகங்களாக இருக்கின்றன.
இன்றைக்கு மீண்டும் அந்தக் காரணத்தையே சொல்லுகிறார்கள்.
ஆந்திராவில் பெரும் புயல் வீசிற்று. அங்கே தேர்தல் நடந்து
விட்டது. அங்கே ஜனநாயக அரசு வந்துவிட்டது. இந்தத்
துறைக்குப் பொறுப்பு ஏற்றுக் கொண்டுள்ள மாண்புமிகு அமைச்
சரவர்களே ஒரு ஊராட்சித் தலைவர். 1967 ஆம் ஆண்டு
தேர்தல் நடந்தபோது, தன்னுடைய சங்கநாதத்தை எழுப்பி,
நூற்றுக்கணக்கான கிராமங்களின் பெயர்களை மேடையிலே சொல்லு
வார்கள். நண்பர் திரு. சீனிவாசனை ஆதரித்துப் பிரசாரம்
செய்யும்போது, அந்தத் தொகுதியிலுள்ள 153 கிராமங்களின்
பெயர்களையும் பட்டியலைப் படிப்பதுபோல் சொல்லுவார்கள்.
அந்தக் கிராமங்கள் இன்றைக்கு முறைப்படி, ஜனநாயகப்படி
இருக்கின்றனவா என்றால், அங்கே அந்த நிலைமைகள் இல்லை.
வெறும் துறைக்கு அமைச்சராக இருந்துகொண்டிருக்கிறார்கள்,
அங்கு உள்ளாட்சி இல்லை, மன்றங்கள் இல்லை, நகராட்சிகள்
இல்லை, மாநகராட்சிகள் இல்லை. வெறும் துறையை வைத்துக்
கொண்டு, அதிகாரத்தை வைத்துக்கொண்டு உத்தரவு போடும்
நிலைமை இன்றைக்குத் தேவையா என்பதைச் சொல்லக் கடமைப்

பட்டிருக்கிறேன். இன்றைய அரசினர் தேர்தல் பற்றி வேகமாகச் சொன்னார்கள். ஜனநாயகத்தைச் சந்திக்க திராவிட முன்னேற்றக் கழகம் பயப்படுகிறதென்று சொன்னார்கள். நான், நீங்கள் தேர்தலுக்குப் பின் வாங்குகிறீர்களென்று சொல்லவில்லை. ஏதோ ஒரு சூழ்நிலையால் தேர்தலை நடத்த அஞ்சுகிறீர்கள்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : மாண்புமிகு உறுப்பினரவர்கள், கிராமங்களிலே ஜனநாயக அமைப்புகள் இல்லை என்ற பொருளிலே சொல்லுகிறார்கள். ஆங்காங்கே ஊராட்சி மன்றங்கள் இருக்கின்றன.

திரு. வே. தங்கப்பாண்டியன் : இங்கேயுள்ள மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. சுந்தரராசத் தேவர், திரு. ராமகிருஷ்ணத் தேவர், திரு. கோ. சி. மணி ஆகியோர் அங்கிருந்து வந்திருக்கிறார்கள். இன்றைக்குள்ள நிலைமை என்ன? தேர்ந்தெடுக்கப் பட்டுள்ள ஊராட்சி மன்றங்கள் பொம்மைகளாக இருக்கின்றன. ஊராட்சி மன்றங்களுக்கு ஆலோசனைக் குழுக்கள் போடப் போகிறோமென்று சொல்லி, ஒவ்வொரு ஊருக்கும் பட்டியல் அனுப்பிக்கொண்டிருக்கிறீர்கள். நீங்கள் தான் உத்தரவு போட்டிருக்கிறீர்கள். கிராம அதிகாரிகள் தலைமையில் ஆலோசனைக் குழுக்கள் அமைக்கப்படுமென்று.......

மாண்புமிகு திரு கா. காளிமுத்து : அந்த ஆணை திருத்தப் பட்டுவிட்டது.

திரு. வே. தங்கப்பாண்டியன் : ஆணை திருத்தப்பட்டுவிட்டது. அந்தக் குழு இல்லையென்று சொல்லியிருக்கிறீர்களா? கிராம உத்தியோகஸ்தர்கள் தலைமையில் இல்லை. புதிய குழுவை அமைக்க உத்தரவு இருக்கிறது. இதற்கு முன்னாலே போடப்பட்ட உத்தரவு மாற்றப்பட்டு, புதிய புதிய உத்தரவுகள் போடப் படுகின்றன. ஒரு சாதாரண பொம்மலாட்டம் மாதிரி, சொக்கட்டான் காய்கள் மாதிரி இருக்கின்றன. இந்த நிலைமை நீடிப்பது நல்லதல்ல. முக்கியமாக ஜனநாயகத்திற்கு இது தேவையில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். தேர்தல்கள் அக்டோபர் மாதத்தில் நடைபெறுமென்று குறிப்பிட்டிருக்கிறார்கள். நல்ல மழைக்காலம் அப்போது. விவசாயிகள் விவசாயத்தில் ஈடுபடக்கூடிய காலம். நல்ல வேளையாக புயல் வெள்ளம் பாதிக்காமல் இருக்க வேண்டும். தேர்தல்களை நடத்துவதில் இந்த அரசுக்கு என்ன கஷ்டம் இருக்கிறது? கிராமங்கள் தோறும் செல்வாக்குப் பெற்று, பலம் பொருந்திய ஆளுங் கட்சிக்கு என்ன ஆபத்து ஏற்பட்டுவிடும்?



திரு க. அறிவழகன் : கடந்த இரண்டு, மூன்று ஆண்டுகளாக நவம்பர், டிசம்பர் திங்களில்தான் மழை பெய்கிறது.

திரு வே. தங்கப்பாண்டியன்: நவம்பருக்கும், அக்டோபருக்கும் ரொம்ப வித்தியாசமில்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. அறிவழகன் அவர்கள் நவம்பர், டிசம்பர் திங்களில் மழை பெய்கிறதென்று சொல்லுகிறார்கள். நவம்பருக்கும், அக்டோபருக்கும் இடைவெளி அவ்வளவில்லை. மழை பெய்யாது என்பதற்கு என்ன உத்தரவாதம்? நாம் வளர்த்துக் கொண்டே போகிறோம். அசோக் மேத்தா தலைமையில் கமிட்டி போட்டிருக்கிறார்கள் என்று கூடச் சொல்லுவார்கள்.

திரு. க. அறிவழகன் : பொதுவாக கோடைக் காலங்களில் தேர்தல்கள் நடைபெற்றால், பல பிரச்சினைகள் வரும். கோடை வெய்யில் தாங்க முடியாமல் இருக்கும். நானே, தேர்தல்களை மழைகாலத்தில் நடத்த வேண்டுமென்ற கோரிக்கையை விடுப்பதாக இருந்தேன். பரீட்சைகள்கூட இங்கிலாந்து நாட்டிலே அக்டோபர் மாதத்தில்தான் நடக்கும்.

மாண்புமிகு மேலவைத் துணைத்தலைவர் : நீங்கள் பேசப் போகிறீர்கள். அப்போது சொல்லலாம்.

(முற்பகல் 11-10.)

திரு. வே. தங்கப்பாண்டியன் : இந்த வேடிக்கையான வாதத்தை நான் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. தமிழ் நாட்டினுடைய பருவ காலத்தைப் பற்றி பட்டணத்திலுள்ள சுகவாசிகளுக்கு வேண்டுமானால் தெரியாமல் இருக்கலாம். ஆனால் கிராமத்திலுள்ளவர்களுக்கு அக்டோபர் மாதமா, நவம்பர் மாதமா பருவ காலம், அதில் எந்த மாதம் என்பது அவர்களுக்குத் தெரியும். இது போன்ற காரணங்களைக் காட்டுவதில் அரசு ஈடுபடாது என்று நான் மனப்பூர்வமாக நம்புகிறேன். எந்தத் தேர்தலும், அது நாடாளுமன்றத் தேர்தலானாலும், சட்ட மன்றத் தேர்தலானாலும் மார்ச்—ஏப்ரல் மாதங்களில்தான் நடத்துவது வழக்கம். அதைத் தொடர்ந்து ஜூன் மாதத்தில் ஊராட்சி மன்றத் தேர்தல் நடைபெறும். ஆனால் இப்போது டிசம்பர் மாதத்தில் நடத்துவதில் எங்களுக்கு ஒன்றும் ஆட்சேபணையில்லை என்று இந்தநேரத்திலே சொல்லிக்கொள்ளுகிறேன்.

நான் சொல்லிக்கொள்வதெல்லாம், தேர்தலை விரைவிலே நடத்தவேண்டும், ஜனநாயக அமைப்பை ஏற்படுத்த வேண்டும் என்பதுதான். இதற்குக் காரணம், இன்றைக்கு நாம் இந்தத் துறைக்காக 85 கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கிறோம். இதற்

காகச் சட்டப் பேரவையிலே மானியக் கோரிக்கையின் மூலமாக அனுமதியைப் பெற்றிருக்கிறார்கள். அதே நேரத்தில், நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் நிதியறிக்கையைச் சமர்ப்பித்தபோது, ''ஏழை, பணக்காரன், முதலாளி, தொழிலாளி என்ற வேறுபாடு இந்த நாட்டிலே இருக்கின்றது. கிராமங்களுக்காக, நகரத்தில இருக்கிற ஒரு தனி மனிதருடைய வருமானத்தில் பாதியளவுக்குத்தான் இன்றைக்கு செலவு செய்யப்படுகிறது. கிராமப்புறம் தொடர்ந்து புறக்கணிக்கப்பட்டு வருகிறது'' என்று சொன்னார்கள். இதை உண்மையிலேயே ஏற்றுக்கொள்ள நான் தயாராக இல்லை. கிராமங்களுக்குப் பல்வேறு காரியங்களைச் செய்ய வேண்டுமென்ற எண்ணம் இருக்கிறது. ஆனால் அந்தக் காரியங்களை நாம் தொட்டுத் தொடங்கியிருக்கிறோமே தவிர, இன்னும் முடிக்கவில்லை. ஆனால், தொடர்ந்து புறக்கணிக்கப்பட்டுவிட்டது' என்று சொல்வது சரியல்ல. ஆளும் கட்சியினருடைய தேர்தல் அறிக்கையிலே கிராமங்களை நகரங்களாகவும் சிறு நகரங்களாகவும் ஆக்குவோம் என்று சொன்னதை அவர்களுடைய தேர்தல் அறிக்கை இசைத்தட்டுகளிலே கேட்டிருக்கிறேன். அப்படி கிராமங்களை சிறு நகரங்களாக ஆக்குவதற்காக எத்தனை கோடியை ஒதுக்கியிருக்கிறார்கள்? இங்கே ஒதுக்கியிருப்பது 35 கோடி ரூபாய்தான். உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள் 144 கோடி ரூபாய் செலவு செய்கிறோம் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இதிலே 35 கோடி ரூபாயை உள்ளாட்சித் துறையின் மூலம் செலவு செய்கிறோம் என்றும், பொதுத் துறை, நெடுஞ்சாலைத் துறை, பொதுச் சுகாதாரத் துறை, கல்வித் துறை, ஆகிய துறைகளின் மூலம் தொகையை ஒதுக்கி கிராமங்களில் செலவு செய்கிறோம் என்றும் சொல்லுகிறார்கள். ஆனால் உள்ளாட்சித் துறையின் மூலமாக ஒதுக்கியிருப்பது ரூ. 35 கோடிதான். இந்த 35 கோடி ரூபாயிலே எப்படி கிராமங்களை சிறு நகரங்களாக மாற்ற முடியும்? 'தொடர்ந்து கிராமங்கள் புறக்கணிக்கப்பட்டுவிட்டன' என்று நிதியமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இதை எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்? பெருந்தலைவர் திரு. காமராஜர் அவர்கள் காலத்தில் எத்தனை பள்ளிகள் திறக்கப்பட்டன? நான் புள்ளிவிவரத்தைப் பார்த்தேன். இந்தப் புதிய அரசு எல்லா கிராமங்களிலும் திடீரென்று பள்ளிக் கூடங்களைக் கட்டிவிட்டதா? இவர்களே தங்களுடைய மனச்சாட்சிப்படி இங்கே பட்டியலைக் கொடுத்திருக்கிறார்கள். அதனை பார்த்தால், இணைப்புச் சாலைகள் 1974ல் 35,220 கி.மீ., 1975லே 35,750 கி.மீ., 1976லே 36,681 கி.மீ., 1977லே 36 852 கி.மீ., என்று தொடர்ந்து கொஞ்சம் கொஞ்சமாக நடந்து வந்திருக்கிறது. ஏற்கெனவே 1974ஆம் ஆண்டில் 35 ஆயிரம் கிலோ மீட்டர் நீளத்திற்குச் சாலைகள் போடப்பட்டுள்ளன. அதைப் போலவே 1974-ல் ஏறக்குறைய 6 ஆயிரம் மேல் நிலை நீர்த் தொட்டிகள் இருந்தது, 1977-ல் ஏழாயிரத்து நானூறு என்று உயர்ந்திருக்கிறது. குடிநீர் கிணறுகளின் எண்ணிக்கை 1974ல் 74 ஆயிரமாக இருந்தது 1977ல் 81 ஆயிரமாக



இருக்கிறது. ஊராட்சி ஒன்றிய நிர்வாகத்தின் கீழ் உள்ள
தொடக்க நடுநிலைப் பள்ளிகளின் எண்ணிக்கை 1974ல் 19 ஆயிர
மாக இருந்தது 1977ல் ஏறக்குறைய 20 ஆயிரமாக இருக்கிறது.
ஊராட்சி ஒன்றிய நிர்வாகத்தின் கீழ் உள்ள உயர்நிலைத் தொடக்கப்
பள்ளிகளின் எண்ணிக்கை 1974ல் 3 ஆயிரமாக இருந்தது 1977ல்
3,155 ஆக இருக்கிறது. ஊராட்சி ஒன்றியங்களுக்குச் சொந்த
மான கட்டடங்களின் எண்ணிக்கை 1974ல் 16,514 ஆக இருந்தது
இன்றைக்கு 1977-ல் 18,615 ஆக உயர்ந்திருக்கிறது. ஆகவே
கிராமங்கள் தொடர்ந்து வளர்ச்சியுற்றிருக்கின்றன. அப்படி
இருக்கும்போது 'தொடர்ந்து கிராமங்கள் புறக்கணிக்கப்பட்டன'
என்று சொல்லும் குற்றச்சாட்டை நான் ஏற்றுக்கொள்ள முடி
யாது. நாம் போடுகிற திட்டங்களையெல்லாம் கிராமங்களை மைய
மாக வைதது்க்கொண்டுதான் போடுகிறோம். அப்படிச் செய்
தால்தான். கிராமங்களில் உழைக்கிற மக்களுக்கு அவர்களிட
மிருந்து வசூலிக்கிற வரியின் மூலம், அவர்களுடைய தேவைகளை
உணர்ந்து பூர்த்தி செய்ய முடியும். அந்தத் தத்துவத்தை
வைத்துக்கொண்டுதான் நாட்டு மக்களுக்குப் பயன் அளிக்கக்
கூடிய திட்டங்கள் செய்யப்பட்டு வருகின்றன. 'கிராமங்கள்
புறக்கணிக்கப்பட்டுவிட்டன' என்று சொல்லுவதன் மூலம் இந்தப்
புதிய அரசாங்கம் ஏராளமான காரியங்களை கிராமங்களுக்காகச்
செய்கிறார்கள் என்ற ஒரு பிரமிப்பை உண்டாக்குகிற அளவுக்கு
மக்களிடம் எண்ணத்தை உண்டாக்குகிறார்கள் என்றுதான் என்னால்
உணர முடிகிறது. கிராமங்களைச்சிறு நகரங்களாக மாற்றவேண்டும்
என்பது நிச்சயமாக எல்லோராலும் வரவேற்கப்படுகிறது. கிராமங்
களை சிறு நகரங்களாக மாற்ற வேண்டுமென்று முடிவு எடுத்தால்,
அதற்காக 'என்ன திட்டம் தயாரித்திருக்கிறார்கள், அந்தத் திட்டத்
திற்காக ஒதுக்கிய ஒதுக்கீடு என்ன சமுதாய வளர்ச்சித் துறை
யின் மூலமாக, மற்ற ஒவ்வொரு துறையின் மூலமாகவும் என்ன
தொகையை செலவழிக்க இருக்கிறார்கள்' என்றெல்லாம் குறிப்
பிட்டிருக்க வேண்டும். ரூ. 35 கோடியை மட்டும் ஊராட்சிகள்,
ஊராட்சி மன்றங்கள், நகராட்சிகள் ஆகியவற்றுக்காக ஒதுக்கி
விட்டு, கிராமங்களை, சிறு நகரங்களாக ஆக்கப் போகிறோம்
என்ற அந்த முரண்பாடான வாதத்தை நான் ஏற்றுக்கொள்ளத்
தயாராக இல்லை. ஆகவே இந்த அரசாங்கம் எவ்வளவுதான் காரி
யங்களைச் செய்ய முற்பட்டாலும், கிராமங்களில் அது குறைவாகத்
தான் தெரியும். அதற்குக் காரணம் அங்கே முறையாகத் தேர்ந்
தெடுக்கப்பட்ட அமைப்பு இல்லாததுதான். அது அமைச்சர்
அவர்களுக்கும் தெரியுமென்று கருதுகிறேன். தேர்ந்தெடுக்கப்பட்ட
அமைப்பு இல்லாத காரணத்தால், எத்தனை ஊராட்சி மன்றங்களில்
விசேஷ அதிகாரிகள் இருந்துகொண்டு பல்வேறு காரியங்களைச்
செய்துகொண்டிருக்கிறார்கள்? அவர்களுக்கு நாம் அதிகாரங்களை
மாற்றிக் கொடுத்துவிட்ட காரணத்தால், அந்த அதிகாரத்தை
வைத்துக்கொண்டு இன்றைக்கு ஊராட்சி ஒன்றியங்களில் இருக்கக்
கூடிய பொது நிதியை அவர்கள் தங்கள் இஷ்டம் போல் எடுத்துச்

செலவு செய்கிறார்கள். முன்பெல்லாம் ஒன்றியக் குழுவில் இடம்
பெற்றவர்கள் எந்தெந்தப் பகுதிகளுக்கு என்னென்ன தேவையென்
பதைக் குறித்து ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி பிறகு சம்பந்தப்
பட்ட அதிகாரிகளின் முன்னிலையில் அதை நிறைவேற்றினார்கள்.
ஆனால் இன்று இந்த விசேஷ அதிகாரிகள் தாங்களாகவே முடிவு
செய்து சில காரியங்களைச் செய்கிறார்கள். இலட்சக் கணக்கான,
ஆயிரக்கணக்கான ரூபாயைப் பொது நிதியிலிருந்து எடுத்துத் தங்கள்
விருப்பம் போல், தாங்கள் விரும்பும் ஒரு காண்ட்ராக்டரைத்
திருப்பதிடுத்த வேண்டும் என்பதற்காக ஊராட்சி மன்றக் கட்டி
டங்களை ரிப்பேர் செய்ய வேண்டுமென்று செலவு செய்கிறார்கள்.
இந்த ரிப்பேர் அந்தக் கட்டிடத்திற்கு தேவைதானா என்று சொல்ல
பொதுமக்கள் பிரதிநிதிகள் அங்கே இல்லை. டி.டி.ஓ. தான் அங்கே
தனி அதிகாரி. அவர் ஒருவர்தான் ஏறக்குறைய 15 ஒன்றியங்
களுடைய கூட்டுப் பொறுப்பையும் கவனிக்கிறார். பொது நிதி
யில் கை வைக்கிற அதிகாரத்தை அவருக்குக் கொடுத்திருக்கிறோம்.
இந்த ஆபத்தான நிலையிலிருந்து ஜனநாயகத்தைக் காப்பாற்ற
வேண்டுமானால், தேர்தல் வர வேண்டும். தேர்தல் வந்துவிட்டால்,
செக்ஸ் அண்டு பேலன்ஸ் வந்துவிடும் என்பதுதான் என்னுடைய
கருத்து. முறைப்படி அரசாங்கக் காரியங்கள் நடக்கும்.

அடுத்து, எனக்கொரு சந்தேகமும் வருகிறது. சமுதாய வளர்ச்
சிக்கென்று ஏற்கெனவே சட்டங்களைப் போட்டிருக்கிறார்கள். ஆனால்
இப்போது வந்திருக்கிற உத்தரவுகளைப் பார்த்தால், ஏற்கனவே
உள்ள சட்டங்களுக்கு முரணாக இருக்குமோ என்ற அளவுக்குச்
சந்தேகங்கள் வருகின்றன. ஏற்கெனவே உள்ள சட்டங்களைப்
இப்போது போட்ட ஆணைகளின் மூலமாகப் புறக்கணித்திருக்
கிறார்கள். இன்றைக்கு வருகின்ற அந்த ஆணைகள் ஏற்கெனவே
உள்ள சட்டங்களைப் புறக்கணிப்பதாக இருக்கின்றன என்று
ஊராட்சி மன்றத் தலைவர்கள், சட்ட மன்ற உறுப்பினர்கள் ஆகித
வர்கள் இன்றைக்கு வழக்காட முடியும். ஆனால் யார் அந்த
அளவுக்கு அக்கறை எடுத்துக்கொள்ளப் போகிறார்கள்? ஊராட்சி
ஒன்றியங்களில் சில பேர்களை வேலைக்கு எடுத்துக்கொள்ளலாம்
என்று அதிகாரம் இருந்தது. கேஷியர்கள், எழுத்தர்கள், கடை
நிலை ஊழியர்கள் ஆகியவர்களை ஒன்றியமே தேர்ந்தெடுத்துக்
கொள்ளலாம் என்ற அதிகாரம் இருந்தது. ஆனால் இன்றைக்
அந்த நிலைமை இல்லை. அவர்களையெல்லாம் மாவட்ட ஆட்சித்
தலைவர்தான் நியமிக்க வேண்டுமென்று ஆணையைப் பிறப்பித்திருக்
கிறார்கள். இப்படி உத்தரவு போடுவதன் மூலமாக, ஏற்கெனவே
உள்ள விதி முறைகள், இந்த ஆணைகளின் மூலமாகப் புறக்கணிக்கப்
படுகின்றன. இன்றைக்குப் பேரூராட்சி மன்றத்திலே ஒரு சின்ன
வேலை காலியானால்கூட அதைக் கலெக்டருக்குத் தெரிவித்து,
பின்னர்தான் அதை நிரப்ப வேண்டுமென்ற நிலையிருக்
கிறது. இதற்கெல்லாம் பரிகாரம் காணவேண்டுமென்றால், தேர்ந்
தெடுக்கப்பட்ட ஒரு அமைப்பு இருக்க வேண்டும். இப்படி ஆணை



களின் மூலமாக அதிகாரிகளுக்கு அறிவுரைகள் கொடுத்து என்ன
தான் காரியங்களைச் செய்தாலும் அது நிச்சயமாக மக்களின்
மனதிலே நல்ல எண்ணத்தை உண்டாக்காது என்று சொல்லிக்
கொள்ளுகிறேன்.

உதாரணமாக, பேரூராட்சிகளை, தேர்வுநிலை, முதல் தரம்,
இரண்டாம் தரம் என்று மூன்று பிரிவுகளாகப் பிரித்திருக்கிறார்கள்.
பேரூராட்சிகளுக்கு சேல்ஸ் டாக்ஸ், தொழில் வரி, முத்திரைத்
தாள் வரி, வாகனங்கள் வரி என்று பல்வேறு விதங்களில் வரு
மானம் வருகிறது. பேரூராட்சியினுடைய பெயரைக் குறிப்பிட
விரும்பவில்லை. இரண்டாம் தர பேரூராட்சிக்கு வருமானம் 54
ஆயிரம் ரூபாய்தான். ஆனால் அந்தப் பேரூராட்சிக்கு செலவு 60
ஆயிரம் ரூபாய் என்று கணக்கு வந்திருக்கிறது.

(முற்பகல் பகல் 11-20)

என்ன செலவினங்கள்? வளர்ச்சித் திட்டங்களுக்கான
செலவினங்களா? இருக்கின்ற மின்சாரக் கட்டணத்திற்கும், அதற்கு
அடுத்து அங்கே இருக்கின்ற நிர்வாகச் செலவிற்குமே போதிய
வருமானமில்லை. அங்கே எக்சிக்யூடிவ் ஆபீசர் இருக்கிறார்.
நிர்வாக அதிகாரி இருக்கிறார். எழுத்தர்கள், அட்டெண்டர்கள்
வாட்ச்மென்கள், துப்புரவுத் தொழிலாளர்கள் இருக்கிறார்கள்.
இவர்களின் சம்பளத்திற்கும், மின்சாரக் கட்டணத்திற்குமே
சிறிய இரண்டாம் கிரேட் பஞ்சாயத்து 60,000 ரூபாய் செல
வழிக்கிறது. ஆண்டு வருமானம் 54,000 ரூபாய். ஆனால்
ஆண்டுச் செலவு 60,000 ரூபாய் ஆகிறது. இதற்கு அரசாங்
கம் உதவித் தொகையோ மானியமோ ஊராட்சி ஒன்றியங்
களுக்கோ, பேரூராட்சிகளுக்கோ கொடுப்பது கிடையாது. இந்த
நிலையில் அரசாங்கம் புதிய உத்தரவு ஒன்றைப் போட்டிருக்
கிறது. அது நல்ல உத்தரவு தான். அதைப் பாராட்டுகிறேன்.
என்ன உத்தரவு? பென்ஷன் கண்டிரிபூஷனைப்பற்றி ஜி. ஓ.
எம். எஸ். 420, ஆர். டி. எல். எ., நாள் 9-3-73 இட்ட
உத்தரவு, மற்றும் ஜி. ஓ. எம். எஸ். 2171, ஆர். டி. எல் .எ.,
நாள் 19-10-73 இட்ட உத்தரவு. இதில் பேரூராட்சி மன்றங்
களுக்கு உத்தரவு போட்டிருக்கிறார்கள், அங்கே பணியாற்று
கின்ற பஞ்சாயத்து நிர்வாக அதிகாரி, மற்ற எழுத்தர்கள்,
பில் கலெக்டர்கள், துப்புரவுத் தொழிலாளர்கள் இவர்
களுக்கு 1974ஆம் ஆண்டிலிருந்து பணி வரன்முறை செய்யப்
பட்டிருக்கிறது. அப்படி ஒழுங்குபடுத்தப்பட்ட 1974ஆம்
ஆண்டிலிருந்து அவர்கள் கட்டவேண்டிய பென்ஷன் தொகை
யைப் பேரூராட்சி ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற உத்தரவு
போட்டிருக்கிறார்கள். என்றைக்கு வரன்முறைப்படுத்தப்படுகிற
தேதி, அந்தத் தேதியிலிருந்து கொடுக்க வேண்டுமென்று சொன்னால்

அந்தத் தொகையைப் பேரூராட்சி மன்றங்கள் கட்டலாம். இப்படி
பஞ்சாயத்துக்கள் கட்ட வேண்டுமென்ருல், அவைகள் தாங்கிக்
கொள்ள அவகாசம் கொடுக்க வேண்டும். இன்றைக்கு 1974-
விருந்து 'ரிட்ராஸ்பெக்டிவ் எபக்ட்' கொடுத்து, 1974-லிருந்து
வரன்முறை செய்து, அந்த நாளிலிருந்து பென்ஷனுக்கான
தொகையைக் கட்டவேண்டும் என்ருல் 16,000 ரூபாய் கட்ட
வேண்டும் பென்ஷன் கன்டிரிபியூஷனுக. ஏற்கெனவே 6,000 ரூபாய்,
7,000 ரூபாய் பேரூராட்சி மன்றங்களுக்குத் துண்டு விழுகிறது.
எந்தவொரு வளர்ச்சித் திட்டத்திற்கும் செலவு செய்யாமல்,
மின்சாரக் கட்டணம், நிர்வாகச் செலவு ஆகியவற்றுக்கு மட்டும்
செலவு செய்யக்கூட வருமானம் போதுமானதாக இல்லை. இப்
படிப்பட்ட நிலையில் பென்ஷன் கன்டிரிபியூஷன் 1974லிருந்து
கட்ட வேண்டும் என்று உத்தரவு போடப்பட்டிருக்கிறது என்ருல்,
அதுகூடாது என்று நான் சொல்லவில்லை. உழைக்கும் பணி
யாளர்களுக்கான நல்ல காரியங்களைச் செய்தாக வேண்டியது
தான். ஆனல் இப்படி உத்தரவு போட்டு, பென்ஷன் ஸ்கீம்
கொண்டு வந்து, இதையும் ஊராட்சி மன்றங்கள் ஏற்றுக்
கொள்ள வேண்டுமென்ருல், எந்த நிதியிலிருந்து கொடுக்க முடி
யும் என்பதை அரசாங்கம் சிந்திக்கவேண்டும். அரசாங்கம் இப்படிப்
பட்ட உத்தரவுகளைப் போடும்போது, முறையாகச் செய்யும்
போது, ஊராட்சி மன்றங்கள் தாங்கிக்கொள்ள முடியுமா என்
பதையும் அரசாங்கம் பரிசீலனை செய்ய வெண்டும். பென்ஷன்
கன்டிரிபியூஷனைக் கட்ட வேண்டும் என்று உத்தரவு வந்து கொண்
டிருக்கிறது. எந்த ஊராட்சி மன்றமாவது கட்டாவிட்டால்,
ஆடிட் டிபார்ட்மென்ட், பஞ்சாயத்து நிர்வாக அதிகாரிகளிட
மிருந்து ரெகவரி போடுகிருர்கள். அவர்கள் எந்தத் தொகை
யிலிருந்து கட்டுவார்கள்? ஏற்கெனவே இராமனுதபுரம் மேற்குப்
பகுதியில் இருக்கின்ற ஊராட்சிகளில் நிதிநிலை சரியில்லாமல்,
அங்கே பணியாற்றுகின்ற ஊழியர்களுக்குக் கூட சம்பளம் கொடுக்க
முடியாத நிலையில் இருக்கின்றனர். மின்சாரக் கட்டணம் கட்ட
முடியவில்லை. லைப்ரரி செஸ் கட்ட முடியவில்லை. இப்படிப்பட்ட
நிலையில் புதிய உத்தரவைப் போட்டு, 1974-லிலிருந்து முன்
தேதியிட்டு பணம் கட்ட வேண்டும் என்கிருர்கள். இதை
யெல்லாம் உதாரணத்திற்காகச் சொல்லுகிறேன். முன்னுக்குப்
பின் உள்ள முரண்பாட்டைச் சுட்டிக்காட்டுவதற்காகச் சொல்லு
கிறேன். இப்படிப்பட்ட உத்தரவுகள் மூலம் ஊராட்சி ஒன்றி
யங்கள் பணியாற்ற முடியாமல் செய்யப்பட்டிருக்கின்றன.

மற்ருெரு காரியம். இப்போது ஊராட்சி மன்றங்களுக்கு
ஒரு உத்தரவு வந்திருக்கிறது. எந்தப் படங்களை வைக்க
வேண்டுமென்ற ஒரு உத்தரவு வந்திருக்கிறது. இதை நான்
மெத்த வருத்தத்தோடு சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.
பேரறிஞர் அண்ணாவின் படம், பெரியார் படம், காமராசர்



படம், ராஜகோபாலாச்சாரியார் படம், திருவள்ளுவர் படம்
இருக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிருர்கள். நான் ஆதியிலும்
ஊமையில்லை, பாதியிலும் ஊமையில்லை, வெள்ளை ஏகாதிபத்தி
யத்தால் ஊமையாக்கப்பட்டேன் என்று சொன்ன முத்துராம
லிங்கத் தேவர் படம் கூட அங்கே வைக்க முடியாது. 'செந்
தமிழ் நாடென்னும் போதினிலே' என்று பாடிய சுதந்திரக் கவி
பாரதியார் படம் பேரூராட்சி மன்றங்களில் வைக்க முடியாது.
என்ன காரணம்? ஏன் அப்படி உத்தரவு போடுகின்ருேம்?
இன்றைக்கு இந்த அரசிற்கு படத்தை நீக்குவது தான் வேலையா
என்ருல், இல்லை. எங்கள் ஊராட்சியில் உடனடியாக இந்திரா
காந்தியின் படத்தை எடுத்து விட்டார்கள்.

இன்னும் ஒரே ஒரு செய்தியை மட்டும் சொல்லி முடித்து
விடுகிறேன். மதுரை ஒரு பெரிய நகரம். அது தூங்கா நகரம்
என்று கூடச் சொல்லுவார்கள். அங்கே வைகைக்கு வடக்கே
வளர்ந்து கொண்டிருக்கிறது. திருப்பரங்குன்றத்தில் முருகனும்,
மதுரை மாநகரில் மீனுட்சியும் இருக்கின்ற இடத்தில், எந்தச்
சீர்திருத்தத்தை எடுத்துக் கொண்டாலும், வைகைக்கு வடக்கே
நடந்து கொண்டிருக்கிறது. மதுரையைப் பொறுத்த வரையில்,
வடக்கு வாழ்கிறது, தெற்கு தேய்கிறது என்ற நிலை இருக்
கிறது. மாண்புமிகு அமைச்சருக்குத் தெரியும் என்று நினைக்
கிறேன். வசந்தமண்டபம் வறண்டு போயிருக்கிறது. அதை
அழகுபடுத்தி பூஞ்செடிகளை உண்டாக்கி மேம்படுத்த வேண்டும்.
கடற்கரை இல்லாத பட்டணம் மதுரை. இன்றைக்கு அங்கே
நல்ல பல காரியங்களைச் செய்ய வேண்டும். மாமதுரைத்
திட்டத்தை நல்ல முறையில் நடைமுறைப்படுத்த வேண்டும்.
இன்னும் பல்வேறு பிரச்சினைகள் இருந்தபோதிலும், நேரம்
இல்லாத காரணத்தால், நன்றியையும் வணக்கத்தையும் தெரி
வித்து இத்துடன் என்னுடைய உரையை முடித்துக்கொள்
கிறேன்.

* THIRU D. V. D' MONTE: Mr. Deputy Chairman, Sir, "If a
village perishes, India perishes" said Mahatmaji. How much have
we followed Bapuji in our cause for village reconstruction? It can
at best be understood by the fact that there has been an enormous
downward escalation as far as rural life is concerned. This is
substantiated by the increasing proportion of the small and marginal
farmer. If we check some figures, we can see that from 54 per
cent in 1951, the percentage of marginal farmers went up to 62 per
cent in 1961 and to 70 per cent in 1971. It is likely to go up to
80 per cent in 1981. According to Mr. Macnamara, World Bank
President, the percentage of the population below the poverty-line
is expected to go up from 40 per cent in 1975 to 50 per cent in

1980 and to 65 per cent in the year 2000. In other words, we have 23 million rural poor in Tamil Nadu. If this is the case, must we not do far more pragmatic planning? Unfortunately, I find, as far as the Policy Note is concerned, that the General Report makes painful reading.

Sir, if we take the allotment for link roads, from Rs. 120.67 lakhs in 1974 and Rs. 67.56 lakhs in 1975-76, it has come down to Rs. 65 lakhs for 1978-79. Rural roads have the highest priority within the road-system. It is rural roads that will stimulate agriculture and lift it from a subsistence economy to a more practical and favourable position. Village roads are necessary to connect villages to market places and buying centres. Village roads will provide employment to lakhs of people in road-building as well as help rural industries like quarrying, brick-laying, masonry, carpentry, wheel-wright and cart-wright industry. Blacksmithy shops will also provide the wherewithal for making implements so far as the mechanical needs of farmers are concerned. So, village road rebuilding will provide the wherewithal for job opportunities for several lakhs of our rural people. If the farmer is able to carry his produce to the market, it certainly means getting better prices for his product. Therefore, I feel that the allotment of Rs. 65 lakhs for village link roads is not only paltry but also shows the lack of understanding of the priorities on rural reconstruction.

[முற்பகல் 11-30]

This is the gloomy picture I see when I verify several other items of expenditure. For agriculture the sum of Rs. 68.4 lakhs in 1974-75 drops to Rs. 43 lakhs in 1978-79. The sum of Rs. 15.7 lakhs allotted to animal husbandry in 1974-75 drops to Rs. 10 lakhs in 1978-79. So far as fisheries are concerned, the provision of Rs. 2.4 lakhs in 1974-75 drops to Rs. 2 lakhs in 1978-79.

Let us now take rural housing. This subject requires the most urgent attention of the Government which is progressive in outlook, since the vast majority of the people, almost 83 per cent of the people, live in villages. Decent housing is essential for healthy living and any deficiency in rural housing would affect the health and vitality of 500 million people on the national scale and 30 million people as far as our State is concerned. Therefore, rural housing should be given top priority by the Government in our schemes of rural development.





Take rural health care. Very often we hear public men and even some of our Ministers expressing an opinion that our young doctors and medical graduates should go to rural areas and practise there, taking medical help to the doorsteps of the rural people. I feel that it is an unfair appeal, because young doctors who have been educated in towns are out of touch with village life. Further, according to the figures available, in our country we have one doctor for every 5,000 people, whereas in developed countries, the ratio is one doctor for every thousand people. It will require more than a century for us to supply all our villages the required number of doctors. The situation is not hopeless, if we attach more importance to preventive medium than to curative medicine. If we take preventive measures by the improvement of environmental hygiene in our rural parts, it will certainly go a long way to help village life. It is not doctors that are required in villages but sanitary inspectors in thousands are required, at least two of them in each Panchayat. Their duty is to see that the provisions of the Public Health Acts, which still remain effective only on paper, are implemented and carried out by the Panchayats.

Coming to agriculture, the political cry has always been 'land to the tiller'. An important, if not more important, cry should be 'tiller to the land'. If agriculture should be more productive, the tiller must work for 24 hours a day all the days of his life. Agriculture is a full-time job. The Government should give top priority to agriculture whereas only Rs. 43 lakhs has been provided for Agri-culture where I think we should spend 70 to 80 lakhs of rupees.

There is need for drawing up a Master Plan to give a face-lift to rural life. In addition to rural health, link roads, rural housing, etc., we must have more non-farm and allied jobs such as handicrafts, rural industries, dairying, poultry farming and sheep and goat rearing, horticulture, fisheries and forest development. Agriculture alone cannot be the panacea for the uplift of the rural poor. It must be supported by grass-root development by having labour intensive programmes of short gestation periods. Of these, Animal Husbandry and Poultry are the most suitable because they can be easily adopted by any single person especially the landless poor. Judging by the poor allocation of funds to Animal Husbandry, I do not see how any effective work can be done in this direction. There is already

widespread discontent in rural areas and this calls for urgent attention. This calls also for a bold approach and strong political will. Only in this way we can reach the Gandhian ideal of wiping the tears off the eyes of the last man. Otherwise, we will be merely shedding crocodile tears.

Thank you.

திரு. ஜி. சுவாமிநாதன்; துணைத் தலைவர் அவர்களே, எனக்கு முன்னாலே பேசிய உறுப்பினர் நண்பர் திரு. தங்கப் பாண்டியன் அவர்கள் அநேகமாக பல விஷயங்களைப்பற்றிப் பேசி அதிலும் குறிப்பாக தேர்தல்கள் தள்ளிப் போடுவதைப் பற்றி மிகவும் கடுமையாக அரசாங்கத்தைக் குறைசாற்றிப் பேசி னார்கள். இங்கே ஊராட்சி ஒன்றியங்களிலிருந்து வந்திருக்கிற உறுப்பினர்கள் நண்பர் திரு. தங்கப்பாண்டியன், திரு. கோ. சி. மணி, திரு. சுந்தரேசத் தேவர், திரு. ராமகிருஷ்ணத் தேவர், போன்றவர்கள் எல்லாம் இந்தப் பிரச்சினை குறித்து மிகவும் நேரடியான அனுபவம் பெற்றிருப்பதால், நல்ல முறையில் பேசினார்கள்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அதனால் தாங்கள் குறைவாகப் பேசப்போகிறேன் என்று சொல்கிறீர்களா?

திரு. ஜி. சுவாமிநாதன்: எனக்கு நேரிடையான அனு பவம் இல்லை என்பதற்காகச் சொல்கிறேன். அதனால் பொது வான சில விஷயங்களைப்பற்றிக் குறிப்பிடலாம் என்று கருது கிறேன். தேர்தல்பற்றி திரு. தங்கப்பாண்டியன் குறிப்பிட்டார். இந்த அரசு தேர்தலைத் தள்ளிப்போட்டுக்கொண்டே வருகிறது என்று குறைப்பட்டுக் கொண்டார். அவர் பேசியபோது ஒருவேளை அவர்கள் கட்சி ஆட்சி செய்த காலத்தில் தேர் தலைத் தள்ளிப் போட்டதைப்பற்றி யாராகிலும் கேட்டுவிடப் போகிறார்களோ என்ற அச்சத்தால் இந்த ஆட்சியை மட்டும் குறை சொல்லவில்லை, எல்லா ஆட்சியிலும் இப்படி நடக்கிறது என்று முன்னெச்சரிக்கையோடு பேசினார். நான் இன்னும் முன் னெச்சரிக்கையோடு குறிப்பிடுகிறேன். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலோ, அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலோ, தமிழகத்தில் மட்டுமோ நடைபெறுகின்ற காரி யம் அல்ல இது. பல்வேறு மாநிலங்களைப் பார்க்கும்போது, அகில இந்திய அடிப்படையில் எடுத்துப் பார்த்தால், காஷ் மீரிலிருந்து கேரள மாநிலம் வரையில் எல்லாத் தேர்தல்களும் தள்ளிப் போடப்பட்டு வருகின்றன என்பதையும் ஒரு சில மாநிலங்களில் நான்காண்டுகள் வரையிலும்கூட தேர்தல்கள் தள்ளிப் போடப்பட்டிருக்கின்றன என்பதையும் பார்க்கிறோம்.



இதற்குக் காரணம் மாநில அரசின் கையில் தேர்தலை நடத்து கிற அதிகாரம் இருப்பதுதான். அப்படித் தள்ளிப்போடும் போது, விசித்திரமான காரணங்கள் சொல்லப்படுகின்றன. புயல் அடித்தால் அதன் காரணமாகத் தள்ளிப்போடுகிறோம், வெள்ளம் வந்தால் அதன் காரணமாகத் தள்ளிப்போடுகிறோம், வறட்சி ஏற்பட்டால் அதன் காரணமாகத் தள்ளிப்போடு கிறோம். இப்படியெல்லாம் சொல்லப்படுகிறது. இத்துடன் அல்லாமல் ஓட்டர் ஜாபிதா சரியாக அமைக்கப்படவில்லை என்று காரணம் காட்டி தள்ளிப்போடப்படுகிறது. ஆகையால் மாநில அரசினுடைய கையில் இந்த ஊராட்சித் தேர்தல் நடைபெறுவதற்கான அதிகாரங்கள் இருக்கும் வரையில், இந்தத் தேர்தலை எந்த ஆட்சியும் ஒழுங்காக நடத்ாது என்பதைப் பார்க்கிறேன். மாநிலத் தேர்தலைப் பொறுத்த வரையில், தேர்தல் கமிஷன் வைத்திருக்கிறோம். மாநில ஆட்சியின் கையில் அந்தத் தேர்தல் நடத்தும் அதிகாரம் இல்லை. எலெக்ஷன் கமிஷன் ஒரு நாளை நிர்ணயிக்கிறது மாநிலத் தேர் தல்களைப் பொறுத்தவரையில். ஊராட்சி, நகராட்சித் தேர் தல்களைப் பொறுத்தும் தனியாக ஒரு எலெக்ஷன் கமிஷன் இருக்க வேண்டுமென்ற அபிப்பிராயத்தை நான் தெரிவித்துக்கொள் கிறேன்.

திரு. இரா. சாம்பசிவம்: துணைத் தலைவர் அவர்களே, மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டுமென்று கேட்கிற இந்த நாளில் உறுப்பினர் திரு. சுவாமிநாதன் அவர்கள் இருக்கிற அதிகாரத்தையும் எடுத்துவிட வேண்டுமென்று கேட்பது என்ன நியாயம்?

திரு. ஜி. சுவாமிநாதன்: அதிகாரம் என்பது மக்கள் அளிக் கின்ற ஓட்டின் அடிப்படையில் வருகின்றது. இந்தத் தேர்தல் நடக்காமலிருந்தால், மக்களுக்கும் அதிகாரம் இல்லாமல் போய் விடுகிறது. மத்திய அரசுக்கும், மாநில அரசுக்கும் மக்களால் அதிகாரம் அளிக்கப்படுகிறது. அப்படிப் பார்த்தால் இப்போது மக்களுக்கு உள்ள அதிகாரமே பறிக்கப்படுகிறது என் அதை திரு. சாம்பசிவம் அவர்கள் கவனிக்க வேண்டும். பதனால்தான் தனியாகத் தேர்தல் கமிஷன் வைக்க வேண்டு மென்று சொல்கிறேன். எந்த மாநில அரசும் அதற்குப் பரிந்துரை செய்யாது என்றாலும், அதைச் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். தேர்தல் தள்ளிப் போடுவதைப்பற்றி யாரும் அக்கறை காட்டுவதாகவோ, கவலைப்படுவதாகவோ தெரியவில்லை. அந்தத் தேர்தல் மூலமாக ஊராட்சித் தலைவராக வர விரும்பு கிறவர்கள், ஊராட்சி ஒன்றியத் தலைவர்களாக வர விரும்பு கிறவர்கள், நகராட்சித் தலைவராக வர விரும்புகிறவர்கள், அவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு மேலவை சட்டமன்ற உறுப் பினர்களாக வர விரும்புகிறவர்கள்தான் அதில் அக்கறை காட்டு

கிறார்களே தவிர, பொது மக்களைப் பொறுத்தவரை இப்படித் தேர்தல் நடைபெறுமல் இருக்கிறதே என்ற ஏக்கம் இருப் பதாகத் தெரியவில்லை.

திரு. க. அறிவழகன்: துணைத் தலைவர் அவர்களே, நான் ஊராட்சி மன்றத்தினைச் சார்ந்தவனாக இல்லாவிட்டாலும், அதன் வாயிலாக இங்கே வரப்போவதில்லை என்றாலும், எனக்கு அந்தத் தேர்தல்களிலே அக்கறையும் ஆர்வமும் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்; உறுப்பினர் திரு. சுவாமிநாதன் அவர்கள் சொல்வதை மறுக்கிறேன். பொது ஜனத் தொடர்பே அவருக்கு இல்லை என்று நினைக்கிறேன். அவர்கள் படித்தவர்கள், கிராஜுவேட்ஸ் பக்கம் இருக்கிறார்கள், அப் படிப் படித்தவர்கள் கொஞ்சம் தான் இருக்கிறார்கள், ஆகையால் அவருக்கு பொதுமக்களைப்பற்றித் தெரியவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஜி. சுவாமிநாதன்: உறுப்பினர்கள் கூறியதற்கு விடை யளிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன், பொதுமக்கள் பிரதிநிதி என்று திரு. அறிவழகன் கூறினார், அவரைத் தலைவராகத்தான் நான் எண்ணிக் கொண்டிருக்கிறேன், பொது மக்களில் ஒருவராக எண்ணவில்லை. திரு. தீக்ஷிதர் அவர்கள் ஒன்றைச் சொன்னார் கள். நான் முன்பே சொன்னேன், நகராட்சித் தேர்தலில் நிற்க விரும்புகிறவர்கள்தான் அதில் அக்கறை கொண்டிருக் கிறார்கள் என்றேன். அதை நிரூபிக்கும் வகையில் திரு. தீக்ஷிதர் அவர்கள் சொல்லிவிட்டார்.

(முற்பகல் 11-40)

திரு க. அறிவழகன் : We are common men given the uncommon task என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒருமுறை குறிப்பிட்டார் கள். நாங்கள் எங்களைப்பற்றி அப்படித்தான் எண்ணிக் கொண்டிருக்கிறோம்.

திரு. ஜி.சுவாமிநாதன் : My unpression is that Thiru Arivazhagan is an uncommon man with uncommon interest. நம்முடைய மேலவையைப் பொறுத்தவரையில்கூட, உள் ளாட்சி மன்றங்கள் மூலமாகத் தேர்ந்தெடுக்கக்கூடிய உறுப்பினர் கள் வர இயலாத நிலை இருக்கிறது என்பதை எடுத்துக்கூறி, இதற்காகவாவது உள்ளாட்சி மன்றத் தேர்தல்களை உடனடியாக நடத்த வேண்டும் என்று குறிப்பிட்டேன். அந்தக் கருத்தை நான் இப்போதும் வலியுறுத்துகிறேன்.



அடுத்து, இன்றயதினம் பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன்கள் ஆகியவற்றைப் பொறுத்தவரையில், மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. தங்கப்பாண்டியன் அவர்கள் குறிப்பிட்ட தைப் போல், உயிர் இருக்கிறதே தவிர, அவைகளுக்கு உடை யில்லை. அரசாங்க அதிகாரிகளைக் கொண்ட நிருவாகம் இருக்கிறதே தவிர, பொதுமக்களின் பிரதிநிதிகள் அங்கே இல்லை என்கிற நிலைமைதான் இருந்து வருகிறது. மாநில அரசாங்கத்தின் அதிகாரிகளுடைய அதிகாரங்கள்தான் அங்கே செயல்பட்டுக் கொண்டிருக்கின்றனவே தவிர, மக்களால் தேர்ந் தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் ஆட்சி செய்யும் நிலைமை இல்லை. நாடெங்கும் இதுதான் நிலைமையாக இருக்கிறது. எனவே தான் நான் மீண்டும் மீண்டும் அதிகாரங்கள் பரவலாக்கப்பட்டு மக்களின் பிரதிநிதிகளுக்கு அதிகாரங்கள் கொடுக்கப்பட வேண்டும் என்று கூற விரும்புகிறேன்.

அடுத்து, ஊராட்சி மன்றங்கள், நகராட்சி மன்றங்கள் ஆகியவற்றிற்கு அதிகாரங்கள் அதிகமாக வேண்டும் என்று சொல்லுகிற இந்த நேரத்தில் அவர்கள் தங்கள் அதிகாரங் களைச் செம்மையாகச் செயல்படுத்த தகுந்த பொருளாதார நிலை இருக்க வேண்டும். இன்றையதினம் மாநில அரசாங்கங்கள் மத்திய அரசாங்கத்திடம் எதற்கெடுத்தாலும் சென்று கை யேந்துகிற நிலைமை இருப்பதைப்போல் மத்திய அரசாங்கத் திடம் போய் 'கிராண்ட்' கேட்பதைப்போல் ஊராட்சி மன்றங்களும், நகராட்சி மன்றங்களும் மாநில அரசினுடைய கையை எதிர்பார்த்து நின்று கொண்டிருக்கிறார்கள். இந்த உள்ளாட்சி மன்றங்கள் எல்லாம் மாநில அரசை வணங்கிக் கேட்டுக்கொண்டிருக்கிற சூழ்நிலையைத்தான் இன்றைக்கும் பார்க்கிறோம். மாநில அரசு 'கிராண்ட்' கொடுக்கும் நிலையில் இருக்கிறது. இதற்குக் காரணம் உள்ளாட்சி மன்றங்களுக்கு இன்றையதினம் வருகிற வருவாய் போதுமானதாக இல்லை. அவர்களுடைய வருமானத்திற்குள் அவர்கள் செம்மையாக இயங்கக்கூடிய அளவுக்கு அதிகாரங்கள் ஊராட்சி மன்றங் களுக்கும், நகராட்சி மன்றங்களுக்கும், ஊராட்சி ஒன்றியங் களுக்கும் வழங்கப்பட்டால்தான், ஊராட்சி மன்றங்களால் நல்ல சேவை செய்ய இயலும் என்பதையும் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன். ஊராட்சி மன்றங்கள், உள்ளாட்சி மன்றங்கள் சரியாக இயங்கவில்லை என்பதனால் இதைப்பற்றி ஆராய அசோக் மேத்தா அவர்கள் தலைமையில் மத்திய அரசாங்கம். ஒரு கமிட்டியைப் போட்டிருக்கிறது. டிசம்பர் மாதத்திலே போட்டார்கள். அதாவது 6 மாத காலத்திற்குள் உள்ளாட்சி மன்றங்கள் எப்படி நிர்வகிக்கப்பட வேண்டும், அங்கே நிர்வாகம் எப்படி நடக்க வேண்டும் என்று ஆராய வேண்டும் என்று அந்தக் குழுவை மத்திய அரசு போட்டிருக் கிறது. அந்தக்கமிட்டி ஆராய்வதற்காக என்று 4,5 குறிப்பு

களைக் கொடுத்திருக்கிறார்கள். பஞ்சாயத்துக்களைப் பொறுத்தவரை, ''இருக்கிற அதிகாரங்கள் போதுமானவையா அல்லது இன்னும் அதிக அதிகாரம் வேண்டுமா? பஞ்சாயத்துக்களைப் பொறுத்தவரையில், அவைகளுக்கு தற்போதுள்ள பொருளாதாரம் போதுமானதா அல்லது அவைகளின் பொருளாதாரம் வளரும் வகையில் வழிவகை காணப்பட வேண்டுமா? இருக்கிற பொருளாதாரத்தின் அடிப்படையில் கிராம வளர்ச்சியைப் பெற முடியுமா?'' என்றெல்லாம் ஆராய வேண்டும் என்று அந்தக் கமிட்டியைக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

கமிட்டியைப் போடும்போதெல்லாம் ஒன்றைச் சொல்லுவார்கள். திரு. எஸ். கே. டே அவர்கள் கண்ட கனவை நினைவாக்க வேண்டுமென்று சொல்லுவார்கள். அவர் ஆரம்பித்தபோது எல்லாம் சரியாக இருந்தது. ஏதாவது ஒன்று சரியாக இல்லை என்றால், உடனே ஒரு கமிட்டியைப் போட வேண்டும் என்பார்கள். உடம்பு சரியாக இல்லை என்றால் டாக்டரிடம் போவதைப் போல் ஏதேனும், ஒன்று சரியாக இயங்காவிட்டால், அதைப் பற்றி ஆராய்வதற்கு கமிட்டி போடப்படும். அந்த வகையில் அமைக்கப்பட்ட அசோக் மேத்தா கமிட்டி என்ன செய்தது என்றால், இந்த நாட்டுப் பிரச்சினைகளைப் பரவலாக ஆராய்ந்ததே தவிர குறிப்பாக, அழுத்தந்திருத்தமாக இந்தப் பிரச்சினைகளைப்பற்றி, ஆராயாத காரணத்தால், மாநில அளவில் நாமாவது புதிதாக ஒரு கமிட்டியை அல்லது கமிஷனை அமைத்து இதைப்பற்றி தீவிரமாகவும் துரிதமாகவும் ஆராய வேண்டும் என்று அமைச்சர் அவர்களிடத்தில் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து நகர்ப்புற வளர்ச்சிபற்றி ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். அமைச்சர் அவர்கள்கூட இங்கே கொடுத்திருக்கிற கொள்கை விளக்கக் குறிப்புப்புத்தகத்திலே குறிப்பிட்டிருக்கிறார்கள். நகர்ப்புற வளர்ச்சி மிகவும் மோசமாக இருக்கிறது என்றால், அதற்கு முக்கியமான அடிப்படைக் காரணம் 'அர்பன் லேண்ட் சீலிங் ஆக்ட்' இந்தச் சட்டம் வந்த பிறகு, பெரிய நகரங்களில், மிக முக்கியமான நகரங்களில் வீடுகள் கட்டப்படுவது மிகவும் குறைந்துவிட்டது என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். வீடுகள் கட்டுவது குறைந்து விட்டது என்றால், அரசாங்கத்தின் சார்பில் நிறைய வீடுகள் கட்டிக் கொடுக்க வேண்டிய சூழ்நிலை உருவாகும் என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

இப்போது இருக்கிற இந்த அர்பன் லேண்ட் சீலிங் ஆக்ட் நம்முடைய மாநிலம் போட்டிருக்கிற சட்டம். மத்திய அரசாங்கத்தால் போடப்பட்ட அர்பன் லேண்ட் சீலிங் ஆக்ட்டைப் பொறுத்தவரையில், அதை ஆராய அவர்கள் ஒரு கமிட்டியைப்



போட்டு அதன் அறிக்கையின் பேரில் விரிவாகவும் சரியாகவும் ஒரு சட்டம் கொண்டுவரப்படும் என்று கூறிவிட்டார்கள். தமிழ்நாடு சட்டத்தைத் திருத்தும் உத்தேசம் உண்டா என்று அவர்களிடம் கேட்டபோது, இந்தச் சட்டத்தைத் தமிழ்நாடு தனியாக வைத்துக் கொண்டிருக்கிறது. எனவே தமிழ்நாட்டுச் சட்டத்தைத் திருத்துவதுபற்றி தமிழ் நாடு அரசாங்கம்தான் ஆலோசனை செய்ய வேண்டுமே தவிர, நாங்கள் கருத்துச் சொல்ல முடியாது என்று சொல்லிவிட்டார்கள். இதைத்தான் மத்திய அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எனவே இந்த மாநிலத்தின் சட்டமான அர்பன் லேண்ட் சீலிங் ஆக்ட்டுக்கு செவ்வரவாக ஒரு திருத்தம் கொண்டுவர வேண்டும். காரணம் வீடு கட்ட முடியாத நிலை இருந்து வருகிறது. இப்போது யாரும் சென்னை போன்ற நகரில் வீடு கட்டுவதாக இல்லை. திருச்சியில் இருக்கிற என் நண்பர் ஒருவர் சென்னையில் ஒரு வீடு கட்டுவதாக இருந்தார். வீட்டைக் கட்டி வாடகைக்கு விட வேண்டும் என்று இருந்தார் இப்போது அவர் இந்த எண்ணத்தையே கைவிட்டுவிட்டார். காரணம் அவர் 1 லட்சம், 1½ லட்சம் ரூபாய் செலவு செய்து வீட்டைக் கட்டி வாடகைக்கு விட்டால், 4 சத வீத வட்டி கூட கிடைக்க மாட்டேன் என்கிறது. வீட்டிற்குச் செலவழிக்காமல் பாங்கில்போட்டால் கூட, 8 சதவீத வட்டி கிடைக்கிறது. எனவேதான் அவர் சொன்னார், 'Fools build houses for wise men to live in' என்று.

அமைச்சர் அவர்கள் கூட இப்படித்தான் சொன்னார்கள். எப்போதுமே சிறந்தவர்களுக்கு ஒரே விதமான கருத்து தோன்றுவது வழக்கம். தற்போது யாரும் வீடு கட்டுவதற்காகப் பணத்தை முதலீடு செய்யத் தயாராக இல்லை என்பது மட்டுமல்ல, வேண்டாமென்றே இருக்கிறார்கள். மத்திய அரசாங்கத்திற்குக் கூட சொல்லிக்கொள்வேன். இப்போது இருக்கிற சட்டத்தின் அடிப்படையிலேயே யாராவது செல்வந்தர்களாக இருந்து நிலம் வாங்கினாலும் அவர்கள் 'வெல்த் டாக்ஸ்' கட்டியாக வேண்டியிருக்கிறது. நிலத்தை வாங்கி விற்றால், 'கேப்பிடல் கெயின்ஸ் டாக்ஸ்' கட்ட வேண்டியிருக்கிறது. இந்தச் சட்டத்தின் மூலமாக எல்லோருக்கும் கஷ்டம்தான் ஏற்படுகிறதே தவிர, வேறொன்றுமில்லை. விவசாய நிலங்களானாலும் சரி, தொழிற்சாலைக்குத் தேவைப்படும் நிலங்களானாலும் சரி, தொல்லைதான் ஏற்படுகிறது. வீட்டு வசதிக்கும் இதனால் லாபமில்லை. வீடு கட்ட முடியாத நிலைதான் இருக்கிறது. ஆகவே மாநில அரசாங்கம் இதில் உடனடியாக கவனம் செலுத்தி விரைவில் ஒரு முடிவெடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, முடித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சி மன்றங்களைப் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பை நன்றாகப் படித்து அதனுடைய புள்ளி விவரங்களைத் தெரிந்துகொள்ள முடியாத நிலையில் இருக்கிறேன். ஏனென்றால் என்னால் படிக்க முடியவில்லை. ஆனாலும் இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் பேசியதைத் பார்த்து, அதிலிருந்து என்ன தெரிந்து கொள்கிறேன் என்றால், நேர்மையான ஒரு அரசு நடந்து கொண்டிருக்கிறபோது, இப்படிப்பட்ட சிறிய தவறுதல்களைக் கொண்டு வந்து, இந்த அரசினுடைய தலைவருக்குக் களங்கத்தை ஏற்படுத்த கூடிய நிலையில் இந்தத் திட்டங்கள் எல்லாம் அடிக்கடி மாற்றப் பட்டு வருகின்றன. இதை அமைச்சர் அவர்களும் நன்றாக அறிவார்கள், காரணம் உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் முன்பு பஞ்சாயத்துத் தலைவராக இருந்து, அதற்குப் பிறகு பஞ்சாயத்து மெம்பராக இப்போது இருக்கிறார்கள் என்று எண்ணுகிறேன். (சிரிப்பு) மன்னிக்கவும், இப்போது அமைச்சராக இருக்கிறார்கள். இருந்தாலும் முன்னாலே இருந்த நிலைமைகள் எல்லாம் மறந்து போயிருக்காது. அங்கேயிருக்கிற கஷ்டங்கள் எல்லாம் அவருக்கு நன்றாகத் தெரியும்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு முறை பேசும்போது, பஞ்சாயத்துத் தலைவர்களையெல்லாம் நல்லமுறையில்பக்குவப் படுத்தி தேர்ச்சியுடையவர்களாக ஆக்க முற்படுகிறோம். என்று சொன்னார்கள் அதனால்தான் இப்போது மின்சாரப் பொறுப்பை அவர்களிடம் கொடுத்து பஞ்சாயத்துத் தலைவர்களை ஊக்குவித்து, தேர்ச்சியுடையவர்களாகச் செய்யவேண்டுமென்று இருக்கிறார்கள். அடுத்து, பஞ்சாயத்துத் தலைவர்களைத் தேர்ச்சியடையச் செய்ய வேண்டும் என்கிறபோது, ஏன் ஏதோ ஒரு குழு அமைத்து யாரையோ கொண்டுவர வேண்டும் என்று நினைக்கிறீர்கள் என்றுதான் புரியவில்லை. எங்களுக்கு இதிலேதான் குழப்பமாக இருக்கிறது. எந்தக் கட்சிக்காரர்கள் செல்வாக்கோடு இருக்கிறார்களோ, அவர்கள் வருவதில் ஆட்சேபணை இருக்காது. நாங்கள் இப்போது வந்திருக்கிற அரசுக்கு உதவியாக பாராளுமன்றத் தேர்தலின் போது கூட முழுமூச்சாக வேலை செய்தோம். அன்றைக்கு இருந்த உடன்பாட்டின்படி செய்தோம். இப்போது இருக்கிற நிலைமையைப் பார்க்கிறபோது, ஆங்காங்கே உள்ள கட்சிக்காரர்கள் சொல்லுகிற நபர்களை நீங்கள் ஒவ்வொரு கமிட்டியில் போடுகிறீர்கள். அதையெல்லாம் நாங்கள் விளக்கமாகப் பேசினால், அது நன்றாக இருக்காது என்பதை உணர்கிறேன்.



(முற்பகல் 11-50)

[மாற்றுத்தலைவர் திரு. ஆ. பாலசுப்ரமணியம் தலைமை]

நான் இப்போது என்ன சொல்ல விரும்புகிறேன் என்றால்,
உங்கள் கட்சியையோ, முதல்வர் அவர்களையோ நான் குறை
கூறிப் பேசுவதாக நினைக்க வேண்டாம். அவர் நல்ல எண்ணம்
படைத்தவர்கள் என்பதுதான் என்னுடைய சொந்த எண்ணம்.
பஞ்சாயத்து பிரசிடெண்ட் இருக்கும்போது, ஆலோசனைக் குழு
என்று ஒன்றை வைக்கப்போகிறோம் என்று சொல்கிறார்கள்.
இது எதற்கு என்று கேட்டுக்கொள்கிறேன். ஊர் மக்களால்
தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருவர் பிரசிடெண்டாக இருக்கின்றார்.
அவர் அங்கே இருக்கும்போது, ஒரு வில்லேஜ் ஆபிஸர்
போடுவதாகச் சொல்கிறார்கள். செக்ரட்டேரியட்டில் இருந்து
தானே இது உருவாகி வருகிறது. இது எல்லாம் நல்லது
என்று சொல்கின்றார்களா அல்லது தவறானது என்று நினைக்
கின்றார்களா? பஞ்சாயத்து பிரசிடெண்டை நல்லபடியாக
ஊக்குவிக்கவும் அவர்களுக்குப் பதிலாக ஒரு ஆலோசகரைப்
போடுவதாகச் சொல்கிறார்கள். பிரசிடெண்ட்தான் பெரிய
மனிதராக இருக்கின்றார். அவருக்குப் பதில் நீங்களாகப் பார்த்து
ஒருவரை வைக்கிறீர்கள். மக்கள் தேர்ந்தெடுத்து ஊரிலே உள்ள
ஒருவரைத்தான் பிரசிடெண்டாகப் போடுகிறார்கள். மின்சாரத்
தைக் கொண்டுவந்து அவர்கள் பொறுப்பிலே வைக்கிறீர்கள்.
அவர்கள் எல்லாம் நல்ல பயிற்சி பெற்றுக்கொள்வார்கள்
என்றெல்லாம் சொல்கின்றார்கள். கிராமத்தில் உள்ளவர்களுக்கு
அது எப்படித் தெரியும் என்று சொல்லிக்கொள்கிறேன்.
அவர்கள் வீணைக் கஷ்டப்படுகிறார்கள். எத்தனை பஞ்சாயத்துகள்
இருக்கின்றன? 374 பஞ்சாயத்துகள் இருக்கின்றன. இவை
களுக்காக ரூ. 35 கோடி அளவுக்கு ஒதுக்கியிருக்கிறோம். உங்களுக்குத்
தெரியாத புள்ளிவிவரம் இல்லை. நான் என்ன அதிக
மாகப் புள்ளிவிவரங்களைப்பற்றிச் சொல்லிவிடப்போகிறேன்.
எவ்வளவு வருவாய் இந்தப் பஞ்சாயத்திலே வருகிறது.
எவ்வளவு செலவு ஆகிறது என்பதெல்லாம் உங்களுக்குத் தெரி
யும். இந்த 374 பஞ்சாயத்துகளுக்கு ரூபாய் 35 கோடி எப்படிப்
போதும் என்பது எனக்குத் தெரியவில்லை. பஞ்சாயத்துகளுக்கு
நல்ல ரோடுகள் இல்லை. எங்கள் பகுதியில் இல்லை. நிர்வாகம்
செய்வதற்கு என்று பஞ்சாயத்திற்கு ஒரு கட்டிடம் இல்லை.
ஒரு சில ஊர்களிலே இருக்கலாம். ஒரு சில ஊர்களிலே இல்லாமல்
இருக்கலாம். ஒரு ஊரில் பஞ்சாயத்து பிரசிடெண்டாக
வருகின்றவர் அந்த ஊருக்கு ஒரு பெரிய மனிதராகக் கருதப்படு
கிறார். அந்த ஊருக்கு நன்மை செய்யக் கூடியவராகவும்
அவர் இருக்கிறார். அப்படித்தான் அந்த ஊர் மக்கள் அவரைப்
பற்றிக் கருதுவார்கள். அவர்களையும்விட ஓர் ஆலோசகரையும்
போடுவதாகச் சொல்கின்றார்கள். இதைப்பற்றி நாம் பேசுவோம்,

உங்கள் தலைவர் அவர்களிடமும் இதைப்பற்றிப் பேசுவோம். இதைப்பற்றித் தலைவர் அவர்களிடம் பேசினால்தான் சரியாக வரும். தலைவர் அவர்களிடமே போய்ப் பேச வேண்டும்.

மாற்றுத் தலைவர் (திரு. ஆ. பாலசுப்ரமணியம்) : மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் அவையில் நேரடியாகப் பேச வேண்டியதில்லை என்று சொல்லிக்கொள்கிறேன்.

(மணி அடித்தல்.)

திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர் ; தலைவர் அவர்கள் அடிக்கடி மணி அடித்து விடுகிறார்கள்.

மாற்றுத் தலைவர் (திரு. ஆ. பாலசுப்ரமணியம்) ; நான் உங்கள் பேச்சை நிறுத்தச் சொல்லவில்லை. நீங்கள் ஏதாவது கேட்பதாக இருந்தால், தலைவர் அவர்கள் மூலமாகக் கேட்க வேண்டும் என்று சொல்வதற்காகத்தான் அடித்தேன். நீங்கள் பேசுங்கள்.

திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர் : உங்கள் கட்சி ஆள் யாரையாவது போடவேண்டுமென்று நினைத்தால், கலைக்கப்பட்ட இடத்திலே உடனே போடுங்கள். அதை விட்டுவிட்டு ஒரு பெரிய மனிதர் நல்ல மனிதர் பஞ்சாயத்துத் தலைவராக இருக்கின்ற போது, அந்த இடத்தில் உங்கள் கட்சியிலே இருப்பவர் ஒருவரைப் பிடித்துப் போட வேண்டும் என்று பார்க்கின்றீர்கள். இது ஒரு நோக்கமா? நான் எல்லா இடத்திலும் தவறு செய்யாதவர்கள் இருக்கின்றார்கள் என்று சொல்லவில்லை. யாராவது ஒரு சிலர் இருக்கலாம். 374 பஞ்சாயத்துகளிலே யாராவது ஒருவர் இருவர் இருக்கலாம். அது உங்களுக்குத் தெரியாது என்று சொல்ல முடியாது. ஒரு பாவமும் செய்யாத, அறியாதவர்கள் இருக்கின்ற இடத்தில் அப்படிச் செய்தால், அவர்களுக்கு மனம் புண்படாதா? உங்கள் கட்சிக்காரரைக் கொண்டு வரலாம். உங்கள் கட்சிக் காரரை நியமித்து நீ அங்கே போய் இரு என்று சொல்லக் கூடாது. அப்படியெல்லாம் செய்யக் கூடாது என்று தெரிவித்துக் கொள்கிறேன். இரவு பகல் என்று பாராமல், அவர்கள் அங்கே வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் மனம் புண் படும்படி செய்யக்கூடாது. இந்த மாதிரியான நிலைமைகள் ஏற் படக்கூடாது. குறைகள் இருக்கலாம். அவைகளை நல்ல முறை யிலே நீக்கி, நன்கு இயங்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஐயா, பெரிய மனிதர்கள் சில நேரங் களில் தவறு செய்வார்கள். ஆகையால்தான் இப்படிச் செய்வ தாகக்கூடச் சொல்லாம், நான் சொல்கிறேன், யார் பெரிய மனிதர் என்பதும் சந்தேகம் தான். எங்கள் தாலுக்காவிலே இயதிலே நான் ரொம்பப் பெரியவன் என்று நினைக்கிறேன். இப்படியெல்லாம் நீங்கள் செய்யக்கூடாது என்று சொல்லிக்



கொள்கிறேன். எந்த எந்தப் பஞ்சாயத்து எப்படி இயங்குகிறது.
எங்கெங்கே என்ன செய்கிறார்கள், ஒழுங்காக இருக்கிறதா
என்பதையெல்லாம் பரிசீலனை செய்து, பிறகு பண்ணுங்கள்
என்பதைத்தான் நான் இங்கே சொல்லிக்கொள்கிறேன்.

மின்சாரத்தைக் கொண்டுவந்து எங்கள் பொறுப்பில் விடுகிறீர்
கள். ஒவ்வொரு பஞ்சாயத்திலும் நிதிநிலைமைகள் எப்படி
இருக்கின்றன? நிதிநிலைமையில் பற்றுக்குறை இருக்கிறது. இரண்டு
ஆயிரம் ரூபாய்கூட வருவாய் இல்லாத பஞ்சாயத்துகளும்
இருக்கின்றன. அவர்களிடம் மின்சாரப் பொறுப்பைக் கொடுத்துப்
பாருங்கள் என்றால், எப்படி முடியும்? பயிற்சியாகிவிடும் என்று
கூடச் சொல்கிறார்கள். இதைப்பற்றி நீங்கள் சிந்தித்துப்
பாருங்கள். நாங்கள் நல்ல முறையிலே அந்த நிர்வாகத்தை
நடத்த வேண்டும். கட்சி என்பது வேறு. நிர்வாகம் என்பது வேறு.
நிர்வாகம் சீராக நடக்க வேண்டும் என்பதுதான் முக்கியம்.

திரு. வே. தங்கப்பாண்டியன் : மாண்புமிகு அங்கத்தினர்
திரு. இராமகிருஷ்ணத் தேவர் அவர்கள் அண்ணா திராவிட முன்னேற்
றக் கழக அரசுடன் நிரந்தரமாக ஏதாவது உடன்படிக்கை செய்து
கொண்டிருக்கிறார்களா என்பதைப்பற்றி அறிய விரும்புகிறேன்.

திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர் ; எந்தக் கட்சியைப் பற்றி
யும் நான் இங்கு குறை சொல்லவில்லை. இப்போது உள்ளூ
கட்சி தேர்தலில் வெற்றி பெற்று வந்தாகிவிட்டது. தேர்த
லில் வெற்றி பெற்று வந்த பிறகு, நாம் என்ன செய்ய
வேண்டும்? எந்தக் கட்சி நிர்வாகத்திலே இருந்தாலும், நல்ல
முறையில் நிர்வாகம் செய்ய வேண்டும். அவர்கள் நல்ல காரியங்
களை நிறைவேற்ற வேண்டும். ஒருவரை ஒருவர் குறைத்துச்
சொல்லக்கூடாது. முன்பிருந்த தலைவர்களை எங்கள் ஊரில் ஒரு
பாலம் கட்ட ஆரம்பிக்கும்போது வரவழைத்தோம். இப்போது
வேலை முடிந்துவிட்டது. இப்போது இருப்பவர்களை வைத்து,
பாலத்தைத் திறக்கப் போகிறோம். அன்றைக்கு இருந்தவர்களை
வைத்து பாலத்திற்கு அடிக்கல் நாட்டினோம். இன்று இருப்பவர்களை
வைத்து நமக்கு ஆகவேண்டிய நல்ல காரியங்களை நடத்திக்
கொள்ளத்தான் வேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.
கட்சி என்பது வேறு. நிர்வாகம் வேறு. இப்போது செய்வது நேர்
மையானதாக இல்லை. இப்போது அவர்கள் நேர்மை தப்பித்தான்
நடக்கிறார்கள் என்று சொல்லத் தோன்றுகிறது. ஆனால், நேர்மை
யான அமைச்சர் என்பது என் மனதிலே உள்ள எண்ணம். அத
னாலேதான் நான் நேரடியாக இப்படிப் பேசுகிறேன். அதைப்பற்றி
விவரமாக அவர்களிடத்திலே பேசினால்தான் உண்மை தெரியும்
என்று எண்ணுகிறேன். பஞ்சாயத்து பிரசிடெண்டாக இருந்
தவர்தான் இப்போது அமைச்சராக வந்திருக்கிறார்கள். அங்கே

இருக்கின்ற நிலைமைகள் எல்லாம் அவருக்குத் தெரியாமல் இருக்காது. அவருக்கு நன்ருகத் தெரியும். ஆகவே, அவர்கள் இதையெல்லாம் யோசித்துப் பார்த்து நல்ல முறையிலே செய்ய வேண்டும். இந்தப் பஞ்சாயத்துகள்தான் உங்களுக்கு அடிப்படையான அஸ்திவாரம். அந்த அஸ்திவாரம் பலம் இல்லாமல் போகுமாளுல், மேல் கட்டடங்கள் எல்லாம் தளர்ந்து போகும். ஆகவே, இந்தப் பஞ்சாயத்துகளைப் பற்றி நன்கு சிந்தனை பண்ணி நல்ல காரியங்களைச் செய்யுங்கள். நல்ல காரியங்களைப் பண்ணிளுர்கள் என்ற நல்ல பேராவது இருக்கும். உங்கள் கட்சிக்காரர்களைக் கொண்டு வரவேண்டும் என்பதற்காக ஒரு திட்டம் கொண்டு வாாதீர்கள் என்று சொல்லிக் கொள்கிறேன். அப்படிச் செய்வது நல்லதில்லை என்று சொல்லிக் கொள்கிறேன். உங்கள் அனைவருக்கும் உங்கள் தலைவர் அவர்களுக்கும் சொல்லிக் கொள்கிறேன். எனக்குப் பேச வாய்ப்பளித்த தலைவர் அவர்களுக்கும் நன்றி கூறி, என் பேச்சை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

( நண்பகல் 12—00 )

திரு. என். சுந்தரேசத் தேவர் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, உள்ளாட்சித்துறைபற்றிய கொள்கை விளக்கக் குறிப்பின் மீது நான் சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். பொதுவாக மாண்புமிகு உறுப்பினர் நண்பர் திரு. தங்கப்பாண்டியன் அவர்கள் கூறிய விஷயங்கள் யாவும் ஒத்துக்கொள்ள வேண்டியவை. நண்பர் திரு. சுவாமிநாதன் அவர்கள் கூறிய விஷயங்களையும் நான் ஆதரிக்கக் கூடியவளுக இருக்கிறேன் என்று கூறிக்கொண்டு என்னுடைய கருத்துக்களைக் கூற ஆசைப்படுகிறேன்.

திரு. காமராஜ் அவர்கள் முதலமைச்சராக இருந்த நேரத்தில், பஞ்சயத்து ஆட்சியானது சிறப்பாக ஓங்க வேண்டுமென்பதற்காக அதனுடைய நிர்வாகப் பொறுப்பை தன்னிடத்திலே வைத்துக்கொண்டிருந்தார். அதிக அதிகாரம் வேண்டுமென்று கேட்டபோது, நாளாவட்டத்தில் எவ்வளவு அதிகாரங்களை அளிக்க முடியுமோ அவ்வளவு அதிகாரங்களும் தாளுக வருமென்று கூறிளுர்கள். கூறியதோடு மட்டுமல்லாமல், பஞ்சாயத்து ஆட்சி சிறப்புற விளங்க, நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக பஞ்சாயத்து யூனியன்கள் பஞ்சாயத்துகள் ஆகியவற்றுக்கு அதிகமான அதிகாரங்களைக் கொடுத்து ஊக்குவித்து வந்தார்கள். அதற்குப் பிறகு ஏற்பட்ட அரசியல் மாற்றத்தின் காரணமாக திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி ஏற்பட்டது. அப்போது பஞ்சாயத்தினுடைய செழுமையான நிலைமை பாதிக்கப்பட்டதென்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். அதற்குப் பிறகு அண்ணு திராவிட முன்னேற்றக் கழக அரசு ஆட்சிக்கு



இந்த அரசு வந்த பிறகு, பஞ்சாயத்துகளு
வந்திருக்கிறது. இருக்குமென்று எண்ணி நான்
டைய எதிர்காலம் செழிப்பாக இன்றைய நிலையிலே அண்ணு
சந்தோஷமாக இருந்தேன். ஆளுல் பஞ்சாயத்துகள்
திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலும் அளவுக்கு மிக
செழிப்பாக வளராது என்று எண்ணக்கூடிய பார்க்கும்போது,
மோசமான நிலைமைகள் ஏற்பட்டு வருவதைப் கேட்டுக்
இந்த நிலையை நீடிக்க வேண்டாமென்று அரசைக் அமைக்குப்
கொள்கிறேன். நல்ல சிறப்பான உள்ளாட்சியை ஆட்சி சிறப்
வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுங்கள். பஞ்சாயத்து மாற்றுத் தலை
புறுவதற்கான காரியங்களைச் செய்யுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.
வரவர்களே, உங்கள் மூலமாக அரசைக் துறை இவைகளு
பொதுவாக பஞ்சாயத்துகள், உள்ளாட்சித் என்று கூறவில்
மட்டும்தான் இப்படிப்பட்ட நிலைமை இப்படிபட்ட
அந்தத் துறையை ஏற்றுக்கொண்டுள்ளவர்களுக்கே அமைச்சரவர்களுக்கு
நிலைமை இருக்கிறதென்று நினைக்கிறேன். அவர்கள்
அதிகாரம் இருக்கிறதா என்று பார்க்கும் போது, பஞ்சா
எதையும் செய்ய முடியாதவர்களாக இருக்கிருர்கள். ஒன்றியங்
யத்துகளுக்கு அதிகாரம் வழங்குவது, பஞ்சாயத்து அதிகாரம்
களுக்கு அதிகாரம் வழங்குவது, நகராட்சிகளுக்கு என்பது
வழங்குவது, மாநகராட்சிகளுக்கு அதிகாரம் வழங்குவது அதிகாரம்
பற்றி எண்ணும்போது, உள்ளாட்சித் துறைக்கு உள்ள உதாரணத்திற்குப்
இருக்கிறதா என்பதைப் பார்க்க வேண்டும். துறை
பார்ப்போமாளுல், ஹைவேஸ் துறையையும், நீர்ப்பாசனத் பல
யையும் தனித் தனியாகப் பிரித்து விட்டார்கள். இப்படிப் வளர்ச்சித்
தமான மாறுதல்கள் செய்திருக்கிருர்கள். சமுதாய அரசின்
திட்டங்களுக்கான மத்திய அரசின் உதவியையும், மாநில கைத்
நிர்வாக அமைப்புகளையும் பார்க்கும்போது, காதி கிராமக் துறையிடம்
தொழில் துறை -சமுதாய வளர்ச்சித் திட்டத் துறை அமைச்
இல்லை. குடிநீர் திட்டம் என்பது உள்ளாட்சித் அந்தத் துறை
ருடைய பொறுப்பிலே இல்லை. வேறு அமைச்சரிடம் சமுதாய
இருப்பதுபற்றி நான் வருந்தவில்லை. மத்திய அரசு மக்களின்
நலத் திட்டங்களுக்காக, அடி மட்டத்திலுள்ள கிராம
நலத்துக்காக உதவுகிறது.

திரு. ஜி. சுவாமிநாதன்: குடிநீர் வடிகால் வாரியம் மாண்பு
மிகு அமைச்சர் திரு. இராகவானந்தம் அவர்கள் பொறுப்பில்
இருக்கிறது. அவரிடமிருந்து அந்த அதிகாரத்தை எடுத்து உள்
ளாட்சித் துறை அமைச்சரிடம் கொடுக்க வேண்டுமென்று
மாண்புமிகு உறுப்பினர் சொல்கிருரா?

திரு. என். சுந்தரேசத் தேவர் : யாரிடம் இலாக்கா இருக்
கிறது என்பது பிரச்சினையல்ல. உள்ளாட்சித் துறை அமைச்
சராக திரு. இராகவானந்தம் அவர்கள் இருந்தால், அவரிடம்
இந்தத் துறை இருக்க வேண்டுமென்று கூறுவேன். அவரிடம்
உள்ளதைப் பறித்து இவரிடம் கொடுக்க வேண்டுமென்று நான்

சொல்லவில்லை. மத்திய அரசினர் சமுதாய நலத் திட்டத்திற்
காக வேண்டிய நிதி தருகிறார்கள். கிராம மக்களின் மேம்
பாட்டிற்காக காரியங்கள் செய்கிறோம். அதற்கென மானியங்
கள் ஏராளமாகக் கிடைக்கின்றன. அந்த உதவிகளைப் பெற்று
உள்ளாட்சித் துறை காரியங்களைச் செய்கிறதா என்பதைப் பார்க்க
வேண்டும். சென்னைக்குப் பணம் வந்த பிறகு, அது வேறோர்
கைக்கு மாறுகிறதென்பதைப் பார்க்கும் போது, வருத்தப்பட
வேண்டியிருக்கிறது. சமுதாய நலத் துறை அமைச்சர் என்று
இருந்தாலும், அந்தத் துறைக்கென வரும் மத்திய அரசின் மாநில
அரசின் மானியங்கள் அந்தத் துறைக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறதா
என்றால்கொடுக்கப்படவில்லை. இன்றைக்குப் பஞ்சாயத்துகளுக்கு அதி
காரமில்லை; பஞ்சாயத்து யூனியன்களுக்கு அதிகாரமில்லை. உள்
ளாட்சித் துறைக்கே அதிகாரமில்லாத நிலையைப் பார்க்கும்போது
மொத்தத்தில் வருத்தப்படக்கூடியவர்களாக இருக்கிறோம். முந்
தைய ஆட்சியில் இருந்ததைவிட, இந்த ஆட்சியில் பஞ்சாயத்
துக்கள் சிறப்புறுமென்று எண்ணினோம், இப்போது இப்படிப்பட்ட
நிலைமைகள் இருப்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இன்றைக்கு குடிசை மாற்று வாரியம், குடிநீர் வடிகால் வாரி
யம் என்ன சிறப்பான காரியங்களைக் கிராமங்களில் செய்திருக்
கின்றன? கிராமங்களில் கிணறுகளை வெட்டுகிறார்கள். குடிக்க
தண்ணீர் கொடுக்கிறார்கள். முன்பு பஞ்சாயத்துக் கூட்டு
மன்றங்கள் இந்தக் காரியங்களைக் கவனித்து வந்தன. இன்றைய
தினம் குடிநீர் வடிகால் வாரியம் என்று அமைத்திருக்கிறார்கள்.
அவர்கள் கிராம மக்களின் தொடர்பில்லாமல் கிணறுகளை வெட்டு
கிறார்கள். நல்ல தண்ணீரா, கெட்ட தண்ணீரா என்று கூட
பார்க்காமல், பணத்தை வீணாக்கி விட்டு வருகிறார்கள். ஆனால்
அரசுக்கு எண்ணிக்கை கிடைக்கிறது. குடிநீருக்கு இவ்வளவு
கிணறுகளைத் தோண்டினோம், இவ்வளவு மேல் நிலைத்தொட்டி
களைக் கட்டினோம் என்று புள்ளி விவரம் கிடைக்கிறது. ஆனால்
மக்களுக்குத் தேவையான முறையில் அந்தத் திட்டங்கள் நிறை
வேற்றப்படுகின்றனவா என்றால், இல்லை. மக்கள் ஆலோ
சனை கிடைத்ததா என்றால் இல்லை. மக்களுக்கு அவசிய
மில்லாத அளவிலே சமுதாய வளர்ச்சித் திட்டத்தின்கீழ் ஒதுக்
கப்படும் நிதி செலவழிக்கப்படுறதென்பதைக் கூறிக்கொள்ள
ஆசைப்படுகிறேன். காதி கிராமத் தொழிலும், குடிநீர் வாரி
யமும், வடிகால் வாரியமும், குடிசை மாற்று வாரியமும் உடன
டியாக உள்ளாட்சித் துறை அமைச்சரின் பொறுப்பில் மாற்றப்
பட வேண்டுமென்று முதல் கட்டமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஸ்தல ஸ்தாபனங்களுக்கு அதிகாரம் கிடைக்
கவேண்டும். நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக....



திரு ஜி. சுவாமிநாதன் : வீட்டு வசதி வாரியத்தை இதுமாதிரி மாற்றலாமா?

திரு என். சுந்தரேசத் தேவர் : இன்றைய தினம் நாம் வேடிக்கையான நிலையைப்பார்க்க வேண்டியவர்களாக இருக்கிறோம். மாநிலங்களுக்கு அதிகாரமில்லை, மத்திய அரசு மாநிலங்களின் அதிகாரங்களைப் பிடுங்கிக் கொண்டு வருகிறது. தலையிட்டுக் கொண்டு வருகிறது; மாநிலங்களுக்கு நிதி நிலைமை போதவில்லை; அதிகாரங்கள் போதவில்லை; இதற்காக மாநிலங்கள் பேச வேண்டுமென்று நேற்றைய தினம் கூட பேசியிருக்கிறார்கள். நம்முடைய முதலமைச்சரவர்கள் மாநில முதலமைச்சர்கள் மாநாட்டில் பேச இருப்பதாகப் பத்திரிகையில் செய்தி வந்திருக்கிறது. மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் தேவையென்றுகேட்கும் போது, பஞ்சாயத்துக்களுக்கும், பஞ்சாயத்து ஒன்றியங்களுக்கும், நகராட்சிகளுக்கும் அளிக்க வேண்டிய அதிகாரத்தை அளிக்காமல் இருப்பது நியாயம்தானா என்பதைக் கேட்க விரும்புகிறேன். மாநில அளவிலே எங்களுக்கு அதிகாரம் வேண்டுமென்று கேட்கும் அரசு, உள்ளாட்சித் துறையின் அதிகாரத்தை எப்படிப் பறிக்கலாம்? உள்ளாட்சித் துறைக்கு அதிக அதிகாரம் கொடுக்காத அரசு, மாநிலத்திற்கு அதிக அதிகாரம் வேண்டுமென்று கேட்பது எப்படி நியாயமாகும்? எனவே ஜனநாயக ஆட்சி என்று சொல்லும் போது, நீங்கள் மாநிலத்திற்கு உள்ளாட்சி கோரினால், உங்கள் அதிகாரத்திற்குட்பட்ட உள்ளாட்சித் துறைக்கு அதிக அதிகாரத்தை வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இதைப்பற்றி அரசு பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தேர்தல்பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு சுவாமிநாதன் அவர்கள் கூறினார்கள். என்னுடைய அபிப்பிராயமும் அதுதான். உள்ளாட்சித் துறைத் தேர்தல், அதன் நிர்வாக அமைப்பு ஆகியவை அரசியல் சட்டத்திலே இடம் பெற வேண்டும். மாநிலங்களிலுள்ள சட்ட மன்றத்திற்கு 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை தேர்தல் நடக்கிறது. பாராளுமன்றத்திற்கு 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை தேர்தல் நடக்கிறது. அதைப்போல உள்ளாட்சித் தேர்தல் குறித்த வரம்பையும், அதிகார வரம்பையும் அரசியல் சட்டத்திலே இணைக்க வேண்டும். அதற்கு மத்திய அரசுக்கு மாநில அரசு சிபாரிசு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாநில உள்ளாட்சித் துறைக்கு அதிகமான வாய்ப்புக்களைக் கொடுப்பதற்கும், பஞ்சாயத்துக்களுக்கு அதிகமான வாய்ப்புக்களை கொடுப்பதற்கும் திரு அசோக் மேத்தா அவர்கள் தலைமையிலே ஒரு கமிட்டி போடப்பட்டிருக்கிறது. மாநில முதல்வர்கள் அந்த

கமிட்டியில் உறுப்பினராக இருக்கிறார்கள். எனவே மாநில முதல்
வரவர்கள் இந்தக் கருத்தை யோசனையாக அந்தக் கமிட்டிக்குச்
சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-10)

மாநில சுயாட்சி கேட்கும் நேரத்தில் அந்த மாநாட்டில்
உள்ளாட்சித் துறைக்கும் அதிகமான அதிகாரங்களைக் கொடுக்க
வேண்டிய அளவுக்கு அரசியல் சட்டத்திலே ஒரு இடத்தைத்
தர வேண்டுமென்று மத்திய அரசாங்கத்தை வலியுறுத்தி,
தம்முடைய முதலமைச்சர் அவர்கள் பேச வேண்டுமென்று,
தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக இந்த அரசாங்கத்தைக்
கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, உள்ளாட்சித் துறையைப்பற்றி மாண்புமிகு
உறுப்பினர் திரு தங்கப்பாண்டியன் அவர்கள் சில
கருத்துக்களைச் சொன்னார்கள். எனக்கும் அதே கருத்துத்தான்
இருக்கிறது. தேர்தலைப் பொறுத்த வரையில், இந்த சபையில்
மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஓர் உறுதியை
அளிக்க வேண்டும். அக்டோபர் மாதம் 31 ஆம் தேதி
வரை இந்தத் தேர்தல்களை ஒத்தி வைக்க ஏற்கெனவே
இந்த அவையின் அனுமதியை வாங்கியிருக்கிறார்கள். எனக்கு
வருகிற சந்தேகம், அக்டோபர் 31 ஆம் தேதிக்குள்
நிச்சயமாக இந்தத் தேர்தல் நடக்குமா? அல்லது மேலும்
அக்டோபருக்கு மேல் நீட்டிக்கப்படுமா என்பதுதான். இது
குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன்னுடைய
கருத்தை உறுதியாகக் கூற வேண்டுமென்று கேட்டுக்கொள்
கிறேன். எதற்காக இந்தச் சந்தேகம் எனக்கு வருகிற
தென்றால், இப்போது போடப்படுகிற அட்வைசரி கமிட்டி
களைப் பார்த்தால், தேர்தலே நடக்காது என்ற எண்ணம்
எனக்கு வருகிறது. பஞ்சாயத்து, பஞ்சாயத்துக் கூட்டு
மன்றம் ஆகியவைகளுக்கான தேர்தலை நடத்துவதற்கான
ஆயத்தம் இல்லாத காரணத்தால்தான், இன்றைக்கு
இதற்கான அட்வைசரி கமிட்டியைப் போடுகிறார்களோ
என்ற ஐயப்பாடு எனக்கு வருகிறது. ஆகவே தேர்தல் நிச்
சயமாக அக்டோபர் மாதம் 31 ஆம் தேதிக்குள் நடக்கு
மென்ற உறுதிமொழியை இந்த அவையிலே தெரிவிக்க
வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். தேர்தலை ஒத்தி
வைக்க இங்கே மேலும் ஒரு மசோதா வராது என்று
தெரிவிப்பார்களேயானால், பஞ்சாயத்திலே அதிகமான அக்கறை
உடையவன் என்ற முறையில் நான் நன்றியுள்ளவனாக
இருப்பேன்.



உள்ளாட்சித் துறையைப் பொறுத்த வரையில், அதிக
அதிகாரங்கள் வேண்டுமென்று கேட்பதைவிட, இருக்கக்கூடிய
அதிகாரங்களையாவது பிடுங்கக் கூடாது என்று கேட்க
வேண்டிய நிலைமைதான் இருக்கிறது. அடிக்கடி ஜி. ஓ. போடு
வதைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கப்பாண்டியன்
அவர்கள் குறிப்பிட்டார்கள். சென்னையிலே இருந்து
கொண்டு பஞ்சாயத்து நிர்வாகத்திற்கு எப்படி நடக்க
வேண்டுமென்று ஓர் உத்தரவு போடப்படுகிறது. இங்கிருந்து
நாளைக்கு இப்படித்தான் நடக்க வேண்டுமென்று, தினமும்
ஏன் உத்தரவு போடுகிறார்கள்? உள்ளாட்சித் துறை சுதந்தி
ரமாக இயங்க வேண்டும். நகராட்சிக்கு, நகராட்சிக் கவுன்
சிலுக்கு, பஞ்சாயத்துக் கவுன்சிலுக்கு உத்தரவு போட்டு
சில முறைகளை மாற்றவேண்டுமென்று சொன்னாலும்,
பரவாயில்லை. நேரடியாக அந்த நிர்வாகத்திலுள்ள அதிகாரி
களுக்கு, எக்சிகியூட்டிவ் பாடிக்கு ஒரு உத்தரவை அனுப்பி
எக்சிகியூஷன் நடக்கிறது. இது வேடிக்கையாக இருக்கிறது.
மத்திய அரசாங்கத்தில் உள்ளவர்கள், இந்த மாநில அர
சுக்குத் தெரியாமல் டில்லியிலே இருந்து இங்குள்ள அதிகாரி
களுக்கு எப்படிச் செய்ய வேண்டுமென்று கட்டளை கொடுத்
தால், மாநில அரசுக்கு எப்படி இருக்கும்? அதைப் போலத்
தான் நகராட்சியின் நிலைமையும். அவர்களுக்குச் சுதந்திரம்
வேண்டாமா? ஏன் 'ப்ராப்பர் சேனல்' மூலமாக அனுப்ப
மாட்டேன் என்கிறார்கள்? நேரிடையாக அதிகாரிகளை வைத்து
நடக்கச் சொல்வது என்பது ரொம்பவும் தவறான நிலை
என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். நினைத்தவர்கள்
எல்லாம் உத்தரவை போடுகிறார்கள். யார் வேண்டுமானாலும்
உத்தரவு போடலாம் போலும். அந்த அளவுக்கு நிறைய
உத்தரவுகள் வருகின்றன. என்னுடைய தபாலில் கூட
பார்த்தேன். கட்டுக் கட்டாக ஜி. ஓ. க்கள் வருகின்றன.
ஆகவே அரசு இதையெல்லாம் குறைத்துக்கொள்ள வேண்டு
மென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து நிதியாதாரங்களைப் பொறுத்த வரையில், வேடிக்கை
யான நிலையிருக்கிறது. நில வரியை அரசாங்கம்
விதிக்கிறது. அந்த நில வரிக்கு மேல் கூடுதல் வரியை-
சர்சார்ஜை விதிக்க பஞ்சாயத்துக் கூட்டு மன்றங்களுக்கு அதி
காரம் வழங்கியிருக்கிறது அரசு. நில வரியின் மீது பஞ்சா
யத்துக் கூட்டு மன்றம் இரண்டரை ரூபாய் வரையிலும்
வரி போடலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். நில வரியே
ஒரு ரூபாய், ஆனால் சர்சார்ஜ் இரண்டரை ரூபாய் போட
லாம் என்று சொல்வது என்ன நியாயம் என்று எனக்குத்
தெரியவில்லை. எதற்காக இப்படி செய்கிறார்கள் என்றால்,
''நாங்கள் இந்த வரியைப் போடவில்லை, பஞ்சாயத்து

யூனியன் தான் போட்டிருக்கிறது'' என்ற அவப் பெயரை
அவர்கள் மீது சுமத்துவதற்காகத்தான். திராவிட முன்னேற்
றக் கழக ஆட்சி காலத்திலேதான் இரண்டரை ரூபாய் வரை
சர்சார்ஜ் போடலாம் என்று உத்தரவு போடப்பட்டது.
ஆனால் பஞ்சாயத்துக்கள் தங்களுக்குத் தேவையான அளவுக்கு
மட்டும் விதிக்கலாம் என்ற முறையை வைக்கவில்லை. எல்லா
யூனியன்களிலும் இரண்டரை ரூபாய் கண்டிப்பாக விதித்
தாக வேண்டுமென்று நிலை. கூட்டு மன்றத் தலைவராக
நான் 1969-லிருந்து தொடர்ந்து இருந்திருக்கிறேன். இந்த
வரியைப் போட முடியாது என்று நான் மறுப்பு தெரி
வித்தேன். டி. ஆர். டி. அவர்களிடம் சொன்னேன்,
''கையில் 16 இலட்சம் ரூபாய் இருக்கிறது. மேற்கொண்டு
எதற்காக வரி போடச் சொல்லுகிறீர்கள்?'' என்று கேட்
டேன். அது அரசாங்கத்தின் உத்தரவு, எப்படியாவது
போட வேண்டுமென்று கலெக்டர் சொன்னார் என்று
அவர் கூறினார். அந்த அளவிலே............

திரு. வே. தங்கப்பாண்டியன் : மாற்றுத் தலைவர் அவர்
களே, இராமநாதபுரத்திலே இந்தத் தாக்கீது வந்தபோது,
அதைத் தூக்கியெறிந்துவிட்டு, அந்த வரியைப் போட
முடியாது என்று மறுப்பைத் தெரிவித்து, அதற்கான ஒன்றியக்
குழுவில் ஒரு முடிவை எடுத்து அந்த முடிவை அரசாங்கத்
திற்குத் தெரிவித்திருக்கிறோம். அந்த தைரியம் அந்த ஒன்
றியக் குழுவிற்கு அப்போது இருந்தது என்பதை நான்
இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்
கிறேன்.

திரு என். சுந்தரேசத் தேவர்: மாற்றுத் தலைவர் அவர்களே
நான் அதை அறிவேன், ஒரு ஜி. ஓ. வைப் போட்டுவிட்டு
பின்னர் கலெக்டரை விட்டு அந்த வரியைப் போடும்படி
யாக 374 பஞ்சாயத்துக்களையும் நிர்ப்பந்தப்படுத்தினால்
அது நல்லதா என்று கேட்கிறேன். மாண்புமிகு உறுப்பின
திரு தங்கப்பாண்டியனைப் போன்ற தைரியம் உள்ளவர்கள்
நான்கைந்து பேர் அந்த வரியைப் போடாமல் இருந்திருக்
கலாம். மற்ற எல்லோரும் போட்டுவிட்டார்கள். இதனால்
அந்த வரியை விவசாயிகள் கட்ட முடியாமல் கஷ்டப்படு
கிறார்கள். அரசாங்கம் வரியைப் போடாமல் பஞ்சாயத்
வரியைப் போட்டிருக்கிறது என்ற காழ்ப்புணர்ச்சியை
ஏற்படுத்தக் கூடிய தன்மையை இது உண்டாக்குகிறது
இதையெல்லாம் அரசாங்கம் யோசிக்க வேண்டும். பஞ்சாயத்
யூனியன்களின் நிதியாதாரங்களைப் பெருக்க வேண்டுமென்று
அரசு எப்படி நிதியை அவர்களுக்குப் பங்கீடு செய்வது
என்பதைப்பற்றி ஆய்வு செய்ய வேண்டும், நில வரியை



பஞ்சாயத்துக்கே கொடுக்கலாம் என்று நான் கருதுகிறேன்.
விவசாயிகளுக்கான திட்டங்களையும், கிராம முன்னேற்றத்திற்
கான திட்டங்களையும் பஞ்சாயத்தும், பஞ்சாயத்து யூனிய
னும்தான் செய்கிறது. ஆகவே, நில வரி வருமானத்தைப்
பூரணமாக பஞ்சாயத்தே எடுத்துக்கொள்ளலாம் என்று
ஆணையிட்டால், அது அவர்களுக்கு மிகவும் சாதகமாக
இருக்குமென்று கூறிக்கொள்கிறேன். எத்தனையோ கிராண்ட்
களைக் கொடுக்கிறார்கள். நில வரி என்பது பெரிய தொகை
யல்ல. நில வரி முழுவதையும் அவர்களுக்கே கொடுத்து
விட்டு, மற்ற வரி எதையாவது அரசு ஏற்றுக்கொள்ளலாம்.
பஞ்சாயத்துகள், பஞ்சாயத்து யூனியன்களுடைய நிதியாதா
ரங்களில் நிலையான போக்கைக் கடைப்பிடிக்க வேண்டும்.
விவசாயிகளின் மீது கூடுமான வரையில் வரியைக் குறைத்துப்
போடுவது நல்லது. நினைத்தவர்கள் எல்லாம் வரி போடுவது
என்பது சரியல்ல. அத்தனை வரியையும் விவசாயிகளால்
எப்படிக் கட்ட முடியும்? ஆகவே, இவ்வளவு அதிகமான
தொகையை சர்சார்ஜாக வசூலிப்பது சரியல்ல என்பதைத்
தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, நிர்வாகத்திலே பல கோளாறுகள் இருக்
கின்றன. என்னுடைய பஞ்சாயத்திலே கையில் ரூ. 16
இலட்சம் இருக்கும்போது, சர்சார்ஜ் இரண்டரை ரூபாய்
போடச் சொன்னபோது, முடியாது என்று கூறிவிட்டேன்
என்று முதலிலேயே சொன்னேன். 16 இலட்சம் ரூபாய்
இருக்கும்போது ஒரு 14 இலட்ச ரூபாய்க்கு எஸ்டிமேட்
போடச் சொன்னால், போடமாட்டேன் என்கிறார் ஹைவேஸ்
என்ஜினியர். அது மூன்று வருடங்களாகத் தேங்கிக் கிடக்
கிறது. ஹைவேஸ் என்ஜினியர்கள் தங்கள் இஷ்டத்திற்குப்
பண்ணக்கூடியவர்களாக இருக்கிறார்கள். ரூரல் ஒர்க்ஸ் என்று
தனியாக ஒரு இலாக்கா இருந்தது. அதை ஹைவேஸில்
இணைத்து ஹைவேஸ் அண்டு ரூரல் ஒர்க்ஸ் என்று ஆக்கி
விட்டார்கள். அதிலுள்ள என்ஜினியர்கள் பஞ்சாயத்து யூனி
யனுக்கு எஸ்டிமேட் போடமாட்டேன் என்று சொல்லு
கிறார்கள். இப்படி பலவித கஷ்டங்கள் இருக்கின்றன.
ஹைவேஸில் உள்ளவர்கள் தங்களை பெரிதாக நினைக்கிறார்கள்.
பஞ்சாயத்து, நகராட்சியில் உள்ளவர்களை இரண்டாம் தரமாகக்
கருதுகிறார்கள். ஆகவே, ஹைவேஸ் அண்டு ரூரல் ஒர்க்ஸ்
என்ற இலாக்காவை, பாசனம், கட்டிடம் என்று தனித்தனி
யாகப் பிரித்து உள்ளாட்சித் துறைக்குக் கொடுக்க வேண்டு
மென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

(துணைத் தலைவர் மணி அடித்தார்.)

துணைத் தலைவர் அவர்களே, தாங்கள் வந்ததை நான் பார்க்கவில்லை. மன்னிக்கவும். முடித்துக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: ஒரு சிறு குறிப்பைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. பலராமன், தனது பதவிக் காலம் முடிவடைவதால், இன்று பேச வேண்டுமென்று கேட்டிருக்கிறார். தயவுசெய்து மாண்புமிகு உறுப்பினர்கள் ஒத்துழைத்தால் நலம். மற்ற உறுப்பினர்களுடைய நேரத்தை எடுத்துக் கொள்ள வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன். இங்கே திரு. ராமகிருஷ்ணத் தேவரும் உள்ளாட்சித் துறையைச் சேர்ந்தவர், திரு கோ. சி. மணியும் உள்ளாட்சித் துறையைச் சேர்ந்தவர். ஆகவே, உறுப்பினர்கள் ஒத்துழைப்புத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. என். சுந்தரேசத் தேவர்: போலீஸ் துறைக்கு முதலில் ஒருநாள் என்று போட்டிருந்தார்கள். பிறகு அதை இரண்டு நாள் என்று மாற்றினார்கள். பிறகு 3 நாளாக மாற்றினார்கள். கல்வித் துறைக்கும் அதேபோல் இரண்டு நாட்கள் கொடுத்தார்கள். இங்கே உள்ளாட்சித் துறையைச் சேர்ந்த எங்களுக்கும் ....

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: நீங்களும் சேர்ந்துதான் அலுவல் ஆய்வுக் குழுவில் முடிவு எடுத்தீர்கள்.

திரு. என். சுந்தரேசத் தேவர்: இதை நாளைக்கும் எடுத்துக்கொள்ளலாம் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். ஏகப்பட்ட நாட்கள் இருக்கின்றன. மேலும் ஒரு நாள் பேச வாய்ப்பளித்தால், மிகவும் உதவியாக இருக்கும்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: இது திடீரென்று முடிவு செய்வதல்ல. நீங்களும் ஆய்வுக் குழுவில் இருந்தீர்கள். அப்போது நீங்கள் அப்படிச் சொல்லவில்லை.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: அலுவல் ஆய்வுக் குழுவின் தீர்மானத்தை பல முறை மாற்றியிருக்கிறோம். இந்த அவையில் வாத்தியார்களும், உள்ளாட்சித் துறையைச் சேர்ந்தவர்களும்தான் நிறைய இருக்கிறார்கள். ஆகவே, உள்ளாட்சித் துறையைச் சேர்ந்த எங்களுக்கும் இன்னொரு நாள் ஒதுக்கினால், நல்லது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-20)

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: ஏற்கனவே பலர் பேசி முடிந்துவிட்டது. ஆகவே இனி இதை மேலும் நீடிக்கத் தேவையில்லை.



திரு. என். சுந்தரேசத் தேவர்: துணைத் தலைவரவர்களே, எல்லோரும் பேசவேண்டும் என்பதற்காக நீடிக்க வேண்டும் என்று கேட்டேன். பிறகு உங்களுடைய அபிப்ராயப்படி செய்யலாம். விரைவாக முடித்துவிடுகின்றேன்.

ஹைவேஸ் இலாகாவைப் பொறுத்த வரையில், ரூரல் ஒர்க்ஸ் என்று தனியாக வைத்திருப்பதால், ஊராட்சி ஒன்றிய நிர்வாகங்களுக்குக் கஷ்டமாக இருக்கிறது. உதாரணத்திற்காக ஒரு காரியத்தைக் குறிப்பிட்டு சபையில் அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். எங்கள் பஞ்சாயத்து யூனியனில் டி.ஆர்.டி. ஒரு உத்தரவைப் போட்டிருக்கிறார்கள். தாய் சேய் நல விடுதிகள் 18,000 ரூபாயில் தான் கட்ட வேண்டும் என்ற உத்தரவு வந்தது. பின்னர் 22,000 ரூபாய்க்குள் சிக்கனமாகக் கட்ட வேண்டும் என்ற உத்தரவு வந்திருக்கிறது. நான் 22,000 ரூபாய் செலவில் 10 சென்டர்களில் தாய் சேய், நல விடுதி கட்ட எஸ்டிமேட் போட்டு பணம் ஒதுக்கி வைத்திருந்தேன். ஆனால், ஹைவேஸ் என்ஜினியர் 37,000 ரூபாயில் தான் கட்ட முடியும், இல்லாவிட்டால் முடியாது என்று 'ரெப்யூஸ்' செய்துவிட்டார். 37,000 ரூபாய்க்குதான் தாய் சேய் நல விடுதி கட்ட வேண்டும், 22,000 ரூபாய்க்கு முடியாது என்று என்ஜினியர் சொல்கிற அளவுக்கு இருக்கிறது என்றால், சாதாரண குறைந்த வருமானம் உள்ள பஞ்சாயத்து யூனியனில் எவ்வளவு ஊதாரித்தனமாக செலவு செய்யச் சொல்கிறார்கள் என்பதைச் சுட்டிக் காட்டத்தான் சொல்கிறேன். இன்றைய தினம் மூன்று கிளாஸ் ரூம் வைத்து கட்டிடம் கட்ட 40,000 ரூபாய்க்குத் திட்டம் போடுகிறோம் என்றால், 2 கிளாஸ் ரூம் போட்டு முடித்துவிடுகிறார்கள். இப்படி இந்த ரூரல் ஒர்க்ஸ் இலாக்கா தேவையற்ற முறையில் காரியங்களைச் செய்கிறது. 4, 5 காரியங்களில் பஞ்சாயத்துக் கூட்டு மன்ற நிதிகளை வாரி இறைத்து வீணாக்கி விடுகிறார்கள். ஆகவே, இந்த அவையில் நான் கேட்டுக்கொள்ள விரும்புவது, ரூரல் ஒர்க்ஸ் இலாக்காவைத் தனியாகப் பிரித்து, உள்ளாட்சித் துறைக்குக் கொண்டுவர வேண்டும் என்பதுதான். அதோடு, குடிநீர் வாரியம், குடிசைமாற்று வாரியம், குடிசை தொழில் வாரியம் இவற்றையெல்லாம் கலைத்து உள்ளாட்சித் துறைக்குக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, முடிக்கிறேன்.

திரு. க. அறிவழகன்: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, உள்ளாட்சித் துறை பற்றி நான் இதுவரையில் பேசியதில்லை. ஆனாலும் சென்னை நகரத்திலும், தஞ்சை மாவட்டத்திலும் உள்ளாட்சித் துறைப் பிரச்னைகளில் நான் அதிகமாக சம்பந்தப்பட்டிருக்கிறேன். உள்ளாட்சித் துறையைப் பொறுத்த வரையில், இந்திய அரசியல் சட்டம் ஆர்டிகிள் 40, மாநில

அரசுகள் இந்தப் பஞ்சாயத்துகளையும் ஊராட்சிகளையும் அமைக்க வேண்டுமென்றும், அதற்குரிய முறையில் காரியங்களை நடத்த வேண்டுமென்றும் சொல்கிறது. அதோடு சேர்த்து இந்தத் தேர்தல்களையும் நடத்த வேண்டும் என்பதையும் இந்திய அரசியல் சட்டம் சொல்லியிருந்தால், நன்றாக இருந்திருக்கும். பல விஷயங்களில் இந்திய அரசியல் சட்டத்தை உருவாக்கியவர்கள், பிரிட்டிஷ் பாராளுமன்ற முறையைப் பின்பற்றுகிற காரணத்தால், மாநில அரசு பொறுப்போடு நடப்பார்கள் என்று கருதியிருக்கக் கூடும். ஆதலால் தேர்தல் எப்போது நடத்துவது என்று குறிப்பிடவில்லை. ஆனால், ஊராட்சித் துறையைப் பொறுத்தவரையில் அது உள்ளாட்சித் துறை என்று வழங்கப்படுகிற பெயரைப் பெற்று இருக்கிறது. உள்ளாட்சித் துறை நல்ல அமைச்சர் அவர்கள் கையில் இருக்கிறது. அமைச்சர் அவர்கள் இன்னும் செய்யலாம், இப்போதும் செய்வார்கள். ஏனென்றால், இந்த அமைச்சரைப் பொறுத்த வரையில், நமது எதிர்க்ககட்சி உறுப்பினர்கள் மிகவும் மகிழ்ச்சியடைகிற அமைச்சராவார், நமக்குத் தெரியும். மிகத் திறமையான அமைச்சர் என்று நானும் குறிப்பிடுவேன். அவர்கள் இந்த உள்ளாட்சித் துறைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சபையில் ....

<u>திரு. ஜி. சுவாமிநாதன் :</u> துணைத் தலைவரவர்களே, வேறு எந்த அமைச்சர் நல்ல அமைச்சர் இல்லை என்று எதிர்க்கட்சியில் இருப்பவர்கள் சொல்கிறார்கள் என்பதை உறுப்பினர் கூற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

<u>மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :</u> உறுப்பினர் திரு. அறிவழகன் இந்த அமைச்சர் நல்லவர் என்றால், கெட்டவர் யார் என்று சொல்ல வேண்டும் என்று கேட்கிறீர்களா ?

<u>திரு. ஜி. சுவாமிநாதன் :</u> அவரே பதில் சொல்வார் என்று எதிர்பார்க்கிறேன்.

<u>திரு. க. அறிவழகன் :</u> நம்முடைய தலைவர் அவர்கள், சிலம்புச் செல்வர். பல பேரை சிலம்புச் செல்வர் ஆக்கியிருப்பவர்கள். அதைப்போல் பெருமைமிக்க அமைச்சரவையில், அவர் திறமை மிக்கவர் என்று பொருள்படுகிறது. இதில் நான் வெளிப்படையாக எதிர்க்கட்சி நண்பர்கள் திரு. தங்கப்பாண்டியன் போன்றவர்கள் அமைச்சர் அவர்களைப் புழ்கந்து பேசியதை நான் கேட்டிருக்கிறேன். நீங்களும் கேட்டிருக்கிறீர்கள். சரி, அது போகட்டும். இப்போது இவ்வளவு பெருமை மிக்க அமைச்சர் கையில் உள்ள உள்ளாட்சித் துறை, கடந்த காலத்தில் நெருக்கடி நிலைமையின்போது மாநில அரசின் கையில் முழுதும் இல்லியிருந்தபோது, தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் இருக்கிற





நேரத்தில் நடைபெற்றதைவிட, மிகத் திறமையாகச் செய்யப்பட வேண்டிய காரியங்களைச் செய்யுமாறு அதிகாரி களாக பணியாற்றுபவர்களைப் பணித்திருக்க வேண்டும். இன்னும் வேகமாக விரைந்து செய்திருக்க வேண்டும். 50, 60 அதிகாரிகள் சரியாகக் காரியங்களைச் செய்திருக்க வேண்டும். செய்யாவிட்டால், அவர்களைக் கண்டனத்திற்கு உரியவர்களாக ஆக்கியிருக்க வேண்டும். ஆக்கவில்லை என்று கருதுகிறேன். அது சென்னை மாநகராட்சியானாலும் சரி, மதுரை மாநகராட்சியானாலும் சரி, ஏனென்றால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் செய்ததை விட-- வாக்காளர் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் பல நேரங்களில் வாக்காளர் களுக்கும், அதிகாரிகளுக்கும் கடமைப்பட்டவர்களாக, அவர்களுக்குத் தேவையில்லாத மரியாதையைக் காட்டுகிறவர்களாக அமைந்து விடுகிறார்கள்—இந்த நேரத்தில் ஊராட்சிகளில் நடைபெறவேண்டிய காரியங்களை, விரைந்து செய்ய வேண்டிய செயல்களை, செய்ய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். அப்படி எடுக்கும் முறையில்தான், அவர்கள் ஆலோசனைக் குழுக்களை அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்று கருதுகிறேன். அந்த வகையில் நான் அதை வரவேற்கிறேன்.

மற்றொரு முக்கியமான விஷயம். நாம் குஜராத் சென்றிருந்தோம். தலைவர் அவர்கள் வரவில்லை. அங்கே இந்த உள்ளாட்சித் துறைகளை எவ்வளவு வலிவுடையதாக ஆக்கியிருக்கிறார்கள் என்றால் அங்கே இருக்கிற மாவட்ட பரிஷத் தலைவர்களுக்கு முழு அதிகாரத்தைக் கொடுத்து, ஐ. ஏ. எஸ். அதிகாரிகளில் சீனியர்மோஸ்ட் ஐ. ஏ. எஸ். அதிகாரிகளை செகரடரிகளாகப் போட்டு, அந்தத் துறையில் அமைச்சர்கள் கூட குறுக்கிட செய்ய முடியாத அளவுக்கு ஆக்கியிருக்கிறார்கள். அங்கேயிருக்கிற முதலமைச்சரும், முதலமைச்சராக இருந்து எதிர்க்கட்சித் தலைவராக இருப்பவரும் எங்களிடத்தில் விளக்கமாகச் சொன்னார்கள். எங்கள் மாநில மாவட்ட ஆட்சி போர்டுகளில் யாரும் தலையிட முடியாது. மாநில அரசாங்கம், அரசுச் செயலாளர்கள் தலையிட முடியாது. காரணம், அவர்களைவிட உயர்ந்த நிலையில் உள்ள சீனியர் ஐ. ஏ. எஸ். அதிகாரிகள் மாவட்ட பரிஷத்தை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அதன் தலைவர்கள் அமைச்சர்களைவிட அதிக அதிகாரம் படைத்தவர்களாக இருக்கிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். அதற்கு ஒருவேளை காரணம், திரு. பலவந்த்ராய் மேத்தா தலைமையில் ஊராட்சித் துறை பற்றிய கமிஷன் குறிப்பிட்ட கருத்துக்கள் அவர் குஜராத் மாநிலத்தின் முன்னாள் முதல்வராக இருந்த காரணத்தால், அவருடைய சிபார்சுகளை நிறைவேற்றும் முறையில் காரியங்கள் அங்கே நடைபெற்றிருக்கலாம். ஆனால், தேர்தலில் தேர்ந்தெடுக்கப் பட்ட ஊராட்சி மன்றங்கள் இல்லை என்ற குறையை விட, இருந்தபோது பல குறைகள் தீர்க்கப்படவில்லை என்கின்ற

என்ணமும் வலுத்திருந்தது. தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சிகள் வந்து தீரவேண்டும். ஆனால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சிகள் இல்லாத நேரத்தில் ஒருங்கிணைக்கிற காரியங்களைச் செய்து முடித்து.......

திரு. கோ. சி. மணி: துணைத் தலைவரவர்களே, இதுவரையில் தேர்தல் நடத்தாமலிருப்பது, தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்புகள் சரியாக இயங்கவில்லை, அதை நிறைவேற்றிக்கொண்டு பிறகு தேர்தல் நடத்துவோம் என்ற அடிப்படையில் தேர்தலை ஒத்தி வைத்துவிட்டார்களா?

திரு. க. அறிவழகன்: அதன் காரணமாகத் தான் மதுரை மாநகராட்சியையும், சென்னை மாநகராட்சியையும் அன்றைக்கு இருந்த அரசு கலைத்திருக்க வேண்டும் என்ற எண்ணம்....

திரு. கோ. சி. மணி: இதுவரையில் நடைபெறாமல் இருக்கிற ஊராட்சித் தேர்தல்களிலிருந்து, நகரசபை தேர்தல் வரை இந்த அடிப்படையில் தான் ஒத்தி வைத்திருக்கிறார்களா?

திரு. க. அறிவழகன்: நெருக்கடி காலத்தில் ஏற்பட்ட சூழ்நிலைகள் விரைவில் நீக்கப்பட்டு, குறிப்பிட்ட காலத்தில் நடத்தப்படும் என்பதையெல்லாம் உயர்திரு. தங்கப்பாண்டியன் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதில் கோ. சி. மணி அவர்களுக்குக் கருத்து மாறுபாடு தேவையில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன். அந்த நல்ல சந்தர்ப்பத்தை அமைச்சர் அவர்கள் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்பதை வற்புறுத்திச் சொல்கிறேன்,

அடுத்து, சென்னையை எடுத்துக்கொள்ளுங்கள். பூந்தமல்லி நெடுஞ்சாலையை அகலப்படுத்துகிறார்கள். அகலப்படுத்துகிறவர்கள் யாராக இருக்கட்டும், நடந்து போகிற மக்களுக்கு பிளாட்பாரம் இருக்கிறதே, அதில் ஏதாவது வழிவிட்டிருக்கிறார்களா என்றால், 8 அடியிலிருந்து 4-ஆக ஆக்கி, இப்போது இரண்டடி ஆக்கிவிட்டார்கள். ஓரத்தில் இருந்த மரங்களை வெட்டித் தள்ளிவிட்டார்கள். ஒரு பக்கத்தில் வனமகோத்சவம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இன்னொரு பக்கத்தில் மரத்தை வெட்டிக் கொண்டிருக்கிறார்கள், ஏன் வெட்டுகிறீர்கள் என்றால், ஏதாவது காரணத்தைச் சொல்லி வெட்டிக் கொண்டிருக்கிறார்கள். நடந்து போகிற மக்களுக்காக இருக்கிற அரசு இது. ஏழை எளிய மக்களிடம் மிகுந்த அக்கறை கொண்ட அரசு இது. ஆகவே பூந்தமல்லி நெடுஞ்சாலையானாலும், சென்னை நகரில் இருக்கிற எந்த சாலைகளானாலும், நடந்து போகிற மக்களுக்கு



மரியாதை தரும் முறையில், பாதைகள் அகலப்படுத்துகின்ற இந்த நேரத்தில், ஏதாவது நல்ல முறையில், சிறப்பான முறையில் அமைக்க முயற்சிக்க வேண்டும்.

(பிற்பகல் 12-30)

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: எதிர்க் கட்சித் துணைத் தலைவர் உற்சாகமாகத் தலையாட்டி வரவேற்கிறார்.

திரு. க. அறிவழகன்: நடந்துபோகிற மக்கள் பிரச்சினைகளை அவர்களும் கவனிக்க ஆரம்பித்திருக்கிறார்கள். நகரசபைப் பள்ளி களைப்பற்றி இம்மாமன்றத்தில் கல்வித் துறை விவாதத்தின்போது குறிப்பிட்டேன். புரசைவாக்கத்தில் தாணா தெருவில் ராமசாமி பிள்ளை பள்ளி, இன்னும் நூற்றுக் கணக்கான ஆரம்பப் பள்ளிகளை நகரசபைகள் நடத்துகின்றன. நகரசபைகள் நடத்துகின்ற பள்ளி களில் குடிநீர் வசதி, கழிவிட வசதிகள் சரிவர இல்லை. அந்தப் பகுதியில் வாழ்கிற ஏழை எளிய மக்கள் அவற்றைத் தங்களின் ஒதுங்கும் இடமாகப் பயன்படுத்தி வருகிறார்கள். அதுதான் இன்றுள்ள நிலை. அவர்களுக்குச் சரியான ஒதுக்கிடங்கள் இல்லாத தால், அவற்றைப் பயன்படுத்துகிறார்கள். அத்துடன் இரவு நேரங்களில் கழிவிடங்களாக, சூதாடுகிற இடங்களாக, இன்னும் பல தவறான காரியங்களுக்குப் பயன்படுத்தவருகிறார்கள். அப்படி நகரசபை பள்ளிகளில் தக்க ஒதுங்கிடங்கள் இல்லை, குடிநீர் வசதி யில்லை, கேட்டுகள் இல்லை, இருந்தால் அதைப் பூட்ட சாவி இல்லை, வாட்ச்மேன் இல்லை என்ற நிலைமை இருக்கிறது. எந்தப் பள்ளி களின் மூலமாக, பண்பாட்டை வளர்க்க வேண்டுமோ, கல்வியை நன்றாகத் தரவேண்டுமோ அவை நடைபெறவில்லை. சென்னை நகரத்தில் பாரிஸ் கார்னரிலிருந்து பூந்தமல்லி சாலையில், மவுண்ட் ரோடில் நடந்து போனால், வழியில் எங்குமே ஒதுங்குவதற்கு, மகளிர் ஒதுங்குவதற்கு இடம் எதுவும் இல்லை. அதைவிடக் கொடுமை சமுதாயத்தில் வேறு இருக்க முடியாது. ஏழை எளிய மக்கள் மத்தியில் இந்த ஒதுக்கிடங்களைத் தக்கவாறு பயன்படுத் துவதில்லை என்ற காரணத்தை நாம் அவர்கள் பேரில் சுமத்துவ தில் பயனில்லை. சென்னை மாநகராட்சியில் ஸ்பெஷல் ஆபீசராக திரு. அண்டோனி அவர்கள் இருந்தபோது, அவர்களிடம் சொன னேன். நகரசபை இதை ஒரு அடிப்படைப் பிரச்சினையாக எடுத்து, அதிகமான கழிவிடங்களை ஏற்படுத்த வேண்டுமென்று சொன்னேன். இருக்கிற இடங்களைப் பார்க்க ஒரு ஆளை அவர் நியமித்தார். தேவையான ஒதுக்கிடங்கள் அமைக்கப்படவில்லை. கல்விக்கு ஒதுக்கப்பட்ட நிதியைப் பொறுத்தவரை, நகரசபைப் பள்ளிகளுக்கு அதிகமாக அளிக்கப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். ஐந்து மாதங்கள் ஆகின்றன. ஒரு கோடி ரூபாய் நகரசபைப் பள்ளிக்கு ஒதுக்கப்பட்டிருப்பதாகப் பத்திரிகையில் செய்தி வந்தது. அது எந்த அளவுக்குச் செலவழிக்கப்பட்டது,

காரியங்கள் செய்யப்பட்டன என்பது நிச்சயமாகத் தெரியவில்லை. கிராமப் பகுதிகளை எடுத்துக்கொண்டால், நான் இருக்கிற கிராமமானாலும் மற்ற கிராமங்களானாலும், ஆதிதிராவிட மக்கள் வசிக்கும் பகுதிகளில் சாலை வசதிகள் பெருக வேண்டும். நான் இதுபற்றி எங்கள் பஞ்சாயத்து யூனியன் தலைவருக்கும் மாவட்ட ஆட்சித் தலைவருக்கும் எழுதினேன். பஞ்சாயத்து போர்டில் தீர்மானம் போடுங்கள் என்று சொன்னார்கள். பஞ்சாயத்து போர்டில் தீர்மானம் போட்ட பிறகு நிதி வசதி இல்லை என்கிறார்கள். மின்சார விளக்குகள் வேண்டுமென்று ஒருவருக்கு எழுதினால், அவர் மற்றவருக்கு எழுதச் சொல்கிறார். இப்படி மக்களுக்குத் தேவையான காரியங்கள் நடைபெறாமல் இருக்கின்றன. அப்படி தேவையான காரியங்கள் நடைபெறாத அளவுக்கு இந்த நாட்டு ஊராட்சி மன்ற அதிகாரிகள் இருக்கிறார்கள் என்பது திட்டவட்டமாகத் தெரிகிறது. நிதி இல்லை என்று சொல்வது அவர்களுக்கு வசதியாக இருக்கிறது. அவர்கள் பல்வேறு நேர்மையான அல்லது நேர்மையற்ற காரியங்களைச் செய்வதற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட மன்றங்கள் இல்லாதது வசதியாக இருக்கிறது. நம்முடைய அமைச்சர் அவர்கள் அக்டோபர் மாதத்தில் தேர்தல் நடத்தப் போகிறேன் என்று சொல்லியிருப்பதை வரவேற்கிறேன். வழூர் கோயில் சிறப்பு மிக்க ஒரு கோயிலாகும். துணைத் தலைவர் அவர்களும் அதை அறிவார்கள். பழம்பெரும் கோயில், அரும் சிற்பங்கள் கோடிக்கணக்கான ரூபாய் பெறும்படியான கலை வளங்கள் உள்ள கோயில் அது. அதற்குச் செல்கிற சாலை மிகவும் மோசமாக இருக்கிறது. வெளிநாட்டுப் பயணிகளை வரவேற்கப் போவதாக செய்தி சுற்றுலாத் துறை அமைச்சர் மாண்புமிகு திரு வீரப்பன் அவர்கள் சொன்னார்கள். புதிய புதிய சுற்றுலா இடங்களைத் தேர்ந்தெடுப்பதாகச் சொல்கிறார்கள், ஆனால் இருக்கிற பழைய இடங்களுக்குப் போகின்ற சாலைகள் மிகவும் சிறப்பாக அமைவதற்கு நெடுஞ்சாலை அல்லது ரூரல் டெவலப்மெண்டைச் சேர்ந்த துறை கவனிக்க வேண்டும். நம்முடைய நாட்டு ஏழைக் குழந்தைகளுக்கு சத்துணவு வழங்கும் திட்டம் என்பதாகச் சொல்லி, குறிப்பிட்ட சில கிராமங்களில் அதை அமுல்படுத்துகிறார்கள். நம் நாட்டில் கிராமங்களில் உள்ள ஏழை எளிய குழந்தைகள் அத்தனை பேருக்கும் அந்தத்திட்டத்தை நிறை வேற்றும் வகையில் உலக வங்கியிடமோ, யுனிசெஃப் போன்ற நிறுவனங்களிடமிருந்தோ நிதியைப் பெற்று செயலாற்ற வேண்டும். ஏழைக் குழந்தைகளுக்கு ஊட்டச் சத்து இல்லாததால், அவர்களது மூளை வளர்ச்சி பெறாமல் உடல் வளர்ச்சியும் குன்றும் நிலையில் வாழ்கிறார்கள். அப்படி வளர்ந்தால் எதிர்கால சமுதாயம் வளமுள்ளதாக இருக்க முடியாது. சோமங்கலம் போன்ற கிராமம் மட்டும் வளர்ந்தால் போதாது. அத்தனை கிராமங்களுக்கும் எல்லா வளர்ச்சித் திட்டங்களையும் அமுல் படுத்த வேண்டும் என்று கூறி அமைச்சரின் முயற்சிகள் வெல்க என்று கூறி அமைகிறேன், வணக்கம்.



திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் : துணைத்தலைவர் அவர்களே: தற்காலம் நகராட்சிகளின் தேர்தல் நடந்து பல வருஷங்களாகின்றன. ஊராட்சித் தேர்தலும் அதே மாதிரிதான். 1969-ல் நகராட்சித் தேர்தல் நடந்தது. ஊராட்சித் தேர்தல் 1970-ல் நடந்தது. கிட்டத்தட்ட பத்து வருஷங்கள் ஆகின்றன. மற்ற தேர்தலுக்கெல்லாம் எந்த இடைஞ்சலும் வருவதில்லை. இந்த சர்க்காரை மட்டும் நான் குறை சொல்லவில்லை. எந்த சர்க்கார் வந்தாலும், ஏதாவது குறையைச் சொல்லித் தள்ளிப் போடுகிறார்கள். ஆட்சியில் தேர்ந்தெடுக்கப்பட்ட கவுன்சிலர்களோ, தலைவர்களோ இருந்தால், அதைப்பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை. நெருக்கடி வந்தது. யாருக்கு வந்தது என்று தெரியவில்லை. நகராட்சிகளுக்கும் ஊராட்சி ஒன்றியங்களுக்கும்தான் நெருக்கடி வந்தது. அவற்றைக் கலைத்துவிட்டார்கள். அதற்குப் பிறகு கிட்டத்தட்ட இரண்டு வருஷங்களாக நிர்வாகத்தில் என்ன நடக்கிறது என்பதே ஜனங்களுக்குத் தெரியவில்லை. அவற்றில் உள்ள கமிஷனர் போட்டதுதான் உத்தரவு. அதை சர்வாதிகாரம் என்றுதான் சொல்ல வேண்டும். ஒரு மனுப் போடுகிறோம் என்றால், அதன்பேரில் அப்பீல் செய்யும் போது, அதே அதிகாரியிடம்தான் போக வேண்டும். கீழேயிருந்துதான் மேலே அதிகாரியாக வருகிறார்கள். அதனால் கீழே உள்ள குறைகளை மேலே உள்ளவர்களிடம் போய் சொல்ல முடியவில்லை. அந்த நிலைமையில் நிர்வாகம் நடந்துகொண்டிருக்கிறது. ஜனங்கள் படுகிற கஷ்டம் கொஞ்ச நஞ்சமல்ல. தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் இருந்தால், சம்பளம் கொடுத்தால் கூட, அவர்கள் அப்படி வேலை செய்யமாட்டார்கள். அந்த அளவுக்கு அவர்கள் செய்வார்கள். சாப்பிட்ட நேரம் போக மற்ற நேரங்களில் நகராட்சி அலுவலகத்திற்குச் செல்வார்கள். எங்கே தண்ணீர் இல்லை, எங்கே குப்பை சேர்ந்திருக்கிறது, எங்கே விளக்கு இல்லை என்பதைப் பார்ப்பார்கள், கவனிப்பார்கள். ஏன் அப்படியிருந்தார்கள்? மறுபடியும் எலக்ஷன் வருமே, ஜனங்கள் முன்னால் போய் ஓட் கேட்க வேண்டுமென்ற காரணத்தால், மக்களின் தேவைகளைக் கவனித்தார்கள். அந்தக் காலத்தில் மூன்று வருஷங்களுக்கு ஒரு முறை தேர்தல் இருந்தது. பிறகு ஐந்து வருஷங்களாக மாறியது. சிலர் அதைப்பற்றி சந்தோஷப்பட்டோம். நாம் தானே இருக்கிறோம், பார்த்துக்கொள்ளலாம் என்றிருந்தோம். இப்போது எலக்ஷன் நடந்து பத்து வருஷங்களாகிவிட்டன. நாட்டில் எத்தனையோ பேர் ஜனங்களுக்கு சேவை செய்ய வேண்டுமென்று துடித்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் வாயில் மண் விழுந்தது போல தேர்தல்கள் தள்ளிப் போய்க்கொண்டிருக்கின்றன. ஆகையால் தேர்தலை சீக்கிரம் நடத்துவதற்கு அரசு முன்வரும் என்று நினைக்கிறேன். வெள்ளம் வந்தது, புயல் வந்தது, அதனால் தேர்தல் தள்ளிப் போய்விட்டது என்று சொல்லலாம். அதனால் பார்லிமெண்ட் தேர்தல் நின்றதா? ஆந்திராவில் இதற்கு மேல் பயங்கரமான புயல்தான் அடித்தது. அங்கே திடீரென்று எலக்ஷன்

வந்தது. ஜனங்கள் எல்லாம் நாங்கள் புயலால் பாதிக்கப்பட்டு விட்டோம் என்று சும்மா இருக்கவில்லை, எல்லோரும்தான் வந்து ஓட்டுப் போட்டார்கள். இறந்தவர்கள்தான் ஓட்டுப்போடவில்லை.

திரு. வே. தங்கப்பாண்டியன்: சில இடங்களில் அவர்களும் வோட்டுப் போட்டிருக்கிறார்கள்.

திரு க. அறிவழகன்: அங்கேயும் இங்கேயும் வெள்ளம் வந்தது. இங்கே மாநில அரசே சமாளித்தது.

(ஒரு உறுப்பினர் : இந்திரா காங்கிரஸ் வந்தது ஆந்திராவில்)

திரு ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் : ஆந்திராவில் இந்திரா காங்கிரஸ் கட்சி ஜெயித்தது என்று சொல்கிறார்கள். மொத்தம் எத்தனை பெர்செண்ட் அவர்கள் ஓட்டு வாங்கினார்கள் என்று பார்க்க வேண்டும். மேல் நாடுகளில் எல்லாம் அப்படித்தான் பெர்செண்டேஜ் பார்ப்பார்கள்.

(பிற்பகல் 12-40)

பத்து வாக்கு வித்தியாசத்திலேகூட ஒருவர் ஜெயிக்கலாம். அதை வைத்துக்கொண்டு மந்திரி சபை அமைக்கலாம். ஆனால் யார் ஜெயித்தாலும், நீங்களும் நாங்களும் இந்தியாவில்தான் இருக்கிறோம் என்பதை மறந்துவிடக்கூடாது. எனக்கு 61 வயதாகிறது. எத்தனையோ தேர்தல்களைப் பார்த்துவிட்டேன். 21 வயதானவர்கள் யாரானாலும் அவர்களுக்கு ஓட்டுரிமை என்று கொடுத்துவிட்டோம். அவர்கள் எந்தத் தேர்தலுக்கும் நிற்கலாம் என்று சொல்லிவிட்டோம். இதிலே எந்த வித்தியாசமும் இல்லை. ஏழை, பணக்காரன், தொழிலாளி, முதலாளி, என்று வித்தியாசமில்லாமல் 21 வயதானால் ஓட்டு உண்டு என்று சொல்லிவிட்டோம். 21 வயதாகிவிட்டால், ஜனாதிபதி பதவிக்குக் கூட நிற்கலாம்.

திரு. க. அறிவழகன் : 35 வயதானால் தான் ஜனாதிபதி பதவிக்கு நிற்க முடியும்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் : எப்படியோ எல்லோரும் தேர்தலைச் சந்திக்க வாய்ப்பிருக்கிறது. அந்த வகையில்தான் நாம் ஏற்பாடு செய்திருக்கிறோம். அப்படி இருக்கும்போது, இந்த உள்ளாட்சி மன்றங்களின் தேர்தல்களைப் பொறுத்தவரையில், தள்ளித் தள்ளிப் போட்டுக் கொண்டே போவது சரியல்ல. உடனே தேர்தலை நடத்தி, இந்த உள்ளாட்சி மன்றங்கள் சரியான முறையில் செயல்பட வாய்ப்புக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



எனக்கு உள்ளாட்சி மன்றங்களில் நிறைய அனுபவம் உண்டு. தாலுக்கா போர்டு, அதற்கப்புறம் ஜில்லா போர்டு என்று மாறி வந்தது. இப்போது ஊராட்சி ஒன்றியங்கள் என்று வந்திருக்கின்றன. இதனால் பல சௌகரியங்களும் உண்டு, அசௌகரியங்களும் உண்டு. 1958 ஆம் ஆண்டு பஞ்சாயத்து ஆட்சி வந்தது. ஏதோ அவைகள் சில வரிகளைப் போட்டு அதோடு அரசாங்கத்திலே இருந்து கொஞ்சம் கிராண்ட் வாங்கி நடைப் பெற்றுக் கொண்டிருக்கின்றன. இப்போது பஞ்சாயத்து ஆட்சி நிர்வாகம் எப்படி இருக்கிறது என்றால், பேரூராட்சித் தலைவர், ஊராட்சித் தலைவர், ஊராட்சி மன்றத் தலைவர், நகராட்சி மன்றத் தலைவர் என்று எல்லாம் இருக்கிறார்கள். ஆனால் அதிகாரம் எல்லாம் அதிகாரிகளிடம்தான் இருக்கிறது. இந்தத் தலைவர்கள் எல்லாம் 'இஸ்பேட் ராஜா' என்று அந்தக் காலத்தில் சொல்லுவார்களே, அவர்களைப்போல் இருக்கிறார்கள். அதிகாரமே அவர்களுக்குக் கொஞ்சம்கூட இல்லை. நீங்கள் ஆட்சியில் இருந்தீர்களே, அப்போது ஏன் இந்த நிலைமைகளையெல்லாம் மாற்றவில்லை என்று என்னைக்கேட்கலாம். நான் இப்போது வருத்தப்படுகிறேன். இந்தத் தலைவர்களுக்கு அதிகாரங்கள் கொடுத்தால்தான், எல்லாம் நன்றாக நடக்கும். இதைப் பல ஆண்டுகளாகக் கேட்டுக் கொண்டிருக்கிறோம். இதுவரை எந்த அரசும் இதற்குச் செவிசாய்க்க வில்லை. இந்த அரசாவது செவி சாய்த்து, அதிகாரங்களை ஊராட்சித் தலைவர்களுக்கும், ஒன்றியத் தலைவர்களுக்கும், நகராட்சி மன்றத் தலைவர்களுக்கும் கொடுக்க வெண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இல்லாவிட்டால், ஜனங்கள்தான் இதனால் கஷ்டப்படுவார்கள். ஜனங்களிடம் போய் ஓட்டு வாங்கி வந்து விட்டு, அவர்களுக்கு எந்த நன்மையும் செய்ய முடியாது. இப்போது இருக்கிற அதிகாரிகள் சரியாக இல்லை. இவர்களை வைத்துக் கொண்டு ஆட்சி நடத்தினால், இந்த உள்ளாட்சி மன்றங்களில் நிர்வகாம் சரியாக இருக்காது. இதற்குப் பல உதாரணங்களைச் சொல்ல முடியும். நான் ஏற்கெனவே கூட போடிநாயக்கனூரில் நடந்த சம்பவம்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறேன். போடிநாயக்கனூரில் சுருளிமணி என்று ஒரு நகராட்சி மன்றத்தலைவர் இருந்தார். அவருக்கும் அந்த ஊர் முனிசிபல் கமிஷனருக்கும் ஒத்து வரவில்லை. எப்போது பார்த்தாலும் இரண்டு பேருக்கும் தகராறு. தலைவர் எந்த பைலைக் கேட்டாலும், கமிஷனர் கொடுக்கமாட்டார். இவர்கள் தகராறு ஹைக்கோர்ட்டு வரை போயிற்று. தலைவர் ஒரு ரிட் போட்டு நான் கேட்கிற ஃபைலை கமிஷனர் கொடுக்க வேண்டும் என்று கேட்டார். அப்போது திராவிட முன்னேற்றக் கழகம் ஆளுகிற கட்சியாக இருந்தது. இந்த நகராட்சி மன்றத் தலைவர் ஆளுகிற கட்சியினைச் சேர்ந்தவர். போடிநாயக்கனூர் திராவிட முன்னேற்றக் கழகம்தான் மெஜாரிடி மெம்பர்களை நகர சபையில் கொண்டிருந்தது. அப்படி இருந்தும், இந்த நகராட்சி மன்றத்

[திரு. ஓய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்] [1973 மார்ச் 20]

தலைவர் நகர சபையைக் கூட்ட வேண்டும், அஜெண்டாவை வைக்க வேண்டுமென்று கமிஷனருக்குச் சொன்னால், அவர் செய்வதே இல்லை. ஆளும் கட்சியின் தலைவர், சர்க்காரும் அவர்கள் சர்க்கார். இருந்தும் அந்தக் கமிஷனரை ஒன்றும் செய்ய முடியவில்லை. அவர் கோர்ட்டுக்குப் போய் நின்றார். அந்தக் கமிஷனர் அந்தத் தலைவரைப்படுத்திய கொடுமை கொஞ்ச நஞ்சமல்ல. என்னிடம் ரிக்கார்ட் இருக்கிறது. வேண்டுமானால் காப்பியைக் கொண்டு வந்து காட்டுகிறேன். இவ்வளவுக்கும் காரணம் என்ன? அதிகாரம் முழுவதும் கமிஷனரிடம் இருப்பதுதான்.

எங்கள் ஊரிலேகூட ஒரு சம்பவம் நடந்தது. நான் இருந்த முனிசிபாலிடியில் - ஸ்ரீரங்கத்தில் - ஒரு கமிஷனர் இருந்தார். அவருக்கும் அங்கே இருக்கிற ஹெல்த் ஆபீசருக்கும் ஒத்துப் போகவில்லை. இரண்டு பேருக்கும் தகராறு வந்துவிட்டது. ஹெல்த் ஆபீசர் எந்த ரிக்வெஸ்ட் பண்ணினாலும், கமிஷனர் செய்யமாட்டேன் என்பார். இரண்டு பேருக்கும் தகராறு முற்றி விட்டது. இந்தக் கமிஷனர் என்ன செய்தார் என்றால், அந்த ஹெல்த் ஆபீசருக்கு போட்டிருந்த ஒரு கிளார்க்கை வாபஸ் பெற்று விட்டார். கிளார்க் இல்லாமல் ஹெல்த் ஆபீசரால் வேலை செய்ய முடியாது. கிளார்க்கைத் திரும்ப வாங்கிவிட்டது மட்டுமல்ல. அவர் ஆபீஸிலிருந்த டைப்ரைட்டரைக் கூட எடுத்து வந்துவிட்டார். சம்பளம் போட வேண்டுமென்றால், அந்தக் கமிஷனர் முதல் வாரத்தில் போட்டு வாங்கித்தர மாட்டார். இவ்வளவும் நடந்தது. கேட்பதற்கு ஆளே இல்லை. நாங்களும் எவ்வளவோ மேலே எழுதினோம். ஒருத்தரும் கேட்கவில்லை. எப்படியோ ஒரு வகையில் அந்தக் கமிஷனர் மேலே சிபாரிசு பிடித்து வைத்திருந்தார். கடைசிவரை அந்தக் கமிஷனரை ஒன்றும் செய்ய முடியவில்லை.

நிர்வாகத்தில் கமிஷனருக்குத்தான் எல்லா அதிகாரமும் இருக்கிறது. ஹெல்த் ஆபீசரால் ஒன்றும் செய்ய முடியவில்லை. எங்களைப் பார்த்து நீங்கள் எல்லாம் நிர்வாகத்திற்கு ஒத்துழைப்புக் கொடுங்கள் என்றால், அதிகாரம் இல்லாமல் என்ன வகையில் ஒத்துழைப்புக் கொடுப்பது. ஹெல்த் ஆபீசர் தெருக் கூட்டுகிற வேலையிலிருந்து கக்கூஸ் எடுக்கும் வேலை வரை எல்லாவற்றையும் பார்க்க வேண்டும். ஹெல்த் ஆபீசருக்கு ஏதாவது வேண்டும் என்றால் இந்தக் கமிஷனர் கையெழுத்துப் போட மாட்டார். கட்டுவதற்கு கிளாஸ்கோ வேண்டும் என்று ஹெல்த் ஆபீசர் எழுதினால், கமிஷனர் கையெழுத்துப் போடமாட்டார். கமிஷனர் என்ன வேலையைச் செய்து கொண்டிருக்கிறார் என்றால், வரியைப் போடுவது, ஒழுங்காக



1978 மார்ச் 20] [திரு. ஓய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்]

செலவு செய்து கொண்டிருப்பது என்பதுதான். நகர சபையில் வேலை செய்யும் கிளார்க் அவருக்கு ஆகவில்லையா, உடனே அவரை மாற்றி விடுவார். டவுன் பிளானிங்கில் சில பேரைப் பிடிக்க வில்லை என்றால், உடனே பிராசிக்யூஷன் போட்டுவிடுவார். நகராட்சியில் உள்ள டவுன் பிளானிங் செக்ஷனில் எங்கே பார்த்தாலும், தப்பு கண்டுபிடிக்க முடியும். 100 கேஸ் எடுத்துப் பார்த்தால், 100-லும் தவறு இருக்கும். கட்டிடம் கட்டுவார்கள். பிளான் இருக்காது. பிளான் இருந்தால் அப்ரூவ்டு பிளான்படி கட்டிடம் இருக்காது. கட்டிட பிளானில் திருத்தம் இருக்கும், டீவியேஷன் இருக்கும். திருத்தம் இருக்கும்போது, ரெக்டிபிகேஷன் போட்டிருக்க மாட்டான். இப்படியெல்லாம் தவறுகள் இருக்கும். இதற்கெல்லாம் பிராசிக்யூஷன் போட்டு விடலாம். நகர சபை ஆபீசுகளில் இந்த டவுன் பிளானிங் செக்ஷனில் நடக்கிற அக்கிரமம் சொல்ல முடியாது. பியூனி லிருந்து எல்லோரும் அந்த செக்ஷனுக்குப் போக மிகவும் ஆசைப் படுவார்கள். காரணம் அங்கே சீக்கிரமாக முன்னுக்கு வந்து விடலாம். நகரங்கள் முன்னேறாமல் இருப்பதற்குக் காரணம் இந்த டவுன் பிளானிங் செக்ஷன்கள்தான். பிளான் போட்டு அனுப்பியிருப்பார்கள். அப்போது மூட்டை சிமின்ட் 15 ரூபாய் விலையில் விற்கும். 20 ரூபாய் மூட்டை சிமின்ட் என்று ஆகிற வரை கூட பிளானை 'அப்ரூவ்' செய்து அனுப்ப மாட்டார்கள். ஏன் தாமதப்படுத்துகிறீர்கள் என்று கேட்பதற்கு ஆளே இல்லை. இவ்வளவு அதிகாரத்தையும் கமிஷனருக்குக் கொடுத்திருக் கிறார்கள். தனிப்பட்ட முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் செய்கிற தவறுகளைக் காட்டிலும் இந்த அதிகாரிகள் செய்கிற தவறுகள் மிகவும் அதிகம். இப்போது கமிஷனர்களுக்கு வேண்டாத ஆட்கள் இருக்கிறார்கள் என்றால், உடனே ஏதாவது குற்றம் குறை சொல்லி பிராசிகியூஷன் போட்டுவிடுவார்கள். அதற்கு நிவாரணம் தேட கவுன்சில் இல்லை.

எனக்குத் தெரிந்த ஒரு சம்பவத்தைச் சொல்லுகிறேன். எங்கள் ஊரில் ஒரு கமிஷனர் இருந்தார். ஒரு வீட்டிற்கு வரி 250 ரூபாய் இருந்தது. இவர் வந்ததும் அதை ரூ. 2,500/- என்று ஒரேயடியாக உயர்த்தினார். இந்த விஷயம் மினிஸ்டர் லெவல் வரை ஒரு புகாராக வந்தது. பிறகு ஒரே வாரத்தில் அவரே அதை மறுபடியும் 250 ரூபாய் என்று மாற்றிவிட்டார். இப்படி திடீரென்று ஏறுகிறது, திடீரென்று இறங்குகிறது. இந்த அளவுக்கு அவர்களுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருப்பதால் தான், இப்படியெல்லாம் செய்கிறார்கள். இந்த அதிகாரங்கள் எல்லாம் தலைவர்களுக்கு இருக்க வேண்டும். ரிப்பன் பிரபு காலத்தில் இப்படி அதிகாரங்கள் எல்லாம் நமக்கு இருக்க வேண்டும் என்றுதான் இதைக் கொண்டுவந்தார். ஆனால்

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு இன்றைக்கு அதிகாரம்
ஏதுமில்லை என்று ஆகிவிட்டது. ஒரு லட்ச ரூபாய்க்குச்
சொத்துள்ளவர் சேர்மன் என்று இருப்பார். ஆனால் அவருக்கு
ஒரு 5 ரூபாய்க்கு 'செக்' போட அதிகாரம் இல்லை. ஆனால்
கமிஷனர் 1 லட்ச ரூபாய்க்கு 'செக்' போடலாம் என்று
இருக்கிறது. இதை எதற்குச் சொல்கிறேன் என்றால்,
பொறுப்புகள் தலைவர்களிடம் இருக்க வேண்டும். இப்போது
சிப்பந்திகளை கமிஷனர்கள் டிரான்ஸ்பர் செய்வதற்குக் காரணம்
கூட காட்டுவதில்லை. கலைஞர் அவர்கள் முதலமைச்சராக
இருந்தபோது. சில அதிகாரங்கள் கொடுக்கப்பட்டன. ஆனால்
அவைகள் பின்னால் ஏனோ உடனடியாக வாபஸ் பெறப்பட்டன.
அப்பாயின்ட்மென்ட் கமிட்டி, டிரான்ஸ்பர் கமிட்டி என்
றெல்லாம் போட்டு அவர்களுக்குச் சில அதிகாரங்கள் கொடுத்
தார்கள். பின்னால் அவைகளையும் திரும்பப் பெற்றுவிட்டார்கள்.
அந்த அதிகாரங்கள் எல்லாம் அற்பாயுசாகப் போய்விட்டன.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அதிகாரமே
அற்பாயுசு உள்ளதுதான்.

திரு. ஓய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் : அதிகாரிகள் தான்
அற்பாயுசு உள்ளவர்கள். அதிகாரம் நிரந்தரமானதுதான். நபர்கள்
தான் அற்பாயுசு உள்ளவர்கள்.

இப்போது 374 ஊராட்சி ஒன்றியங்கள் இருக்கின்றன.
600க்கு மேற்பட்ட பேரூராட்சி மன்றங்கள் இருக்கின்றன,
12,642 கிராமப் பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன.
எல்லாம் சீர்பட வேண்டுமென்றால், அதிகாரிகள் நல்லவர்களாக இவைகள்
இருக்க வேண்டும். அமைச்சர் அவர்களிடம் சமீபத்தில்கூட
ஒரு புகார் கொடுத்தேன். அது இன்னும் கவனிக்கப்படவில்லை.
எங்கள் ஊரில் ஒரு கமிஷனரை மாற்ற வேண்டுமென்று 12
பேர் உறுப்பினர்களாக இருப்பவர்கள் சொல்லுகிறார்கள். 14
உறுப்பினர்கள் இருக்கிற இடத்தில் 12 பேர் ஏகோபித்து அந்தக்
கமிஷனரை மாற்ற வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள்.
திருச்சி ஜில்லாவில் 50 நகராட்சிகள் இருக்கின்றன.
அதில் ஏதாவது ஒரு இடத்திற்கு மாற்றிவிடலாம். அவரை
சரியாக இல்லை என்று உறுப்பினர்கள் தீர்மானம் நிர்வாகம்
அவரை மாற்ற வேண்டும் என்று கேட்கிறார்கள். போட்டு,
இருக்கிற பொதுமக்கள் மேலே இருப்பவர்களுக்குப் அங்கே
அனுப்புகிறார்கள். இருந்தும் அந்தக் கமிஷனர் புகார்
இருக்கிறார். இது இப்படியே நீடித்தால், அங்கேயே
அஜிடேஷனை உருவாகும் நிலை இருக்கிறது. அங்கே ஒரு
அந்தக் கமிஷனர் அங்கேயே இருக்கிறார். இவ்வளவு இருந்தும்,
பிடித்து அங்கே இருக்கிறார். யாரையோ சிபாரிசு
அதற்குக் காரணம் என்ன என்று





எனக்குப் புரியவில்லை. அவர் அங்கே இருக்க வேண்டும் என்று
விரும்புவதற்கு ஏதோ விசேஷம் இருக்கிறது. அங்கே அவருக்கு
ஏதோ சௌகர்யம் இருக்கிறது என்று நினைக்க வேண்டியிருக்கிறது.

அடுத்து, நகராட்சி நிர்வாகத்தில் ரோடுகள் பராமரிப்பு
மிகவும் மோசமாக இருக்கிறது. முன்னாலே டோல் காம்பன்
சேஷன் என்று இருந்தது. தாலுக்கா போர்டு, டிஸ்ட்ரிக்
போர்டு காலத்தில் அது இருந்தது. அப்போது கார், பஸ்
எல்லாம் குறைவு. எங்கேயும் ஒற்றைமாட்டு வண்டி, இரட்டை
மாட்டு வண்டிதான் இருக்கும்.

[பிற்பகல் 12.50]

அந்தக் காலத்தில் பர்செண்ட்டேஜ் அடிப்படையில் நகராட்சி
களுக்கு கிராண்டாகக் கொடுத்திருக்கிறார்கள். மோட்டார்
வாகன வரியாக ஒரு கோடி அல்ல இரண்டு கோடி அல்ல, பல
கோடி ரூபாய்கள் வருகின்றன. அரசுக்குக் கலியுக காமதேனு
போல விற்பனை வரியும், மோட்டார் வாகன வரியும் நாளுக்கு
நாள் ஏறிக்கொண்டே போகின்றன. அந்த இரண்டு வரியும்
அதிகமாக ஸ்டேட் கவர்ன்மெண்ட்டுக்குக் கிடைக்கிறது. அதி
லிருந்து ஊராட்சிக்கும் நகராட்சிக்கும் அதிகத் தொகை ஒதுக்
கப்படுகிறதா ? ஒதுக்குவது கிடையாது. ஏதோ கொஞ்சம்
தொகைதான் கொடுக்கிறார்கள். அங்கு இருக்கின்ற ரோடுகள்
கொஞ்சம்தான் இருக்கின்றன. 50 பெர்செண்ட் தான் கொடுக்
கிறார்கள். அதைக்கொண்டு எப்படிப் பராமரிப்பது ? திருச்சி,
ஸ்ரீரங்கம் போல மெட்டர்னிடி செண்டர்களும் அதிகமில்லை. வழி
யிலேயே தானே பிரசவம் ஆகிவிடும். அங்கே மெடர்னிடி
செண்டருக்குப் போகக்கூடிய ரோடுகளைப் பார்த்தால் 10 மாதத்
தில் ஆகவேண்டிய பிரசவம் 7 மாதத்திலேயேகூட ஆகிவிடும்.

திரு வே. தங்கப்பாண்டியன் : பிரசவம் ரோடிலேயே ஆகி
விடுகிறதா, பஸ்ஸில் ஆகிவிடுகிறா அல்லது வீட்டிற்குப் போன
பிறகு ஆகிவிடுகிறதா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

திரு ஓய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் : பிரசவம் வீட்டிலே
ஆனாலும் சரி, ரோடிலே ஆனாலும் சரி, பஸ்ஸிலே ஆனாலும்
சரி, மோட்டார் வாகன வரி அரசுக்கு வந்துவிடும். வலி
தாங்காமல் வீட்டிலேயேகூட பிரசவம் பார்த்துக்கொள்கிறார்கள்.
ரோடுகள் அப்படி இருக்கின்றன. இதற்குக் காரணம் என்ன ?
பணம் தேவைப்படுகிறது. மோட்டார் வாகன வரியை வாங்கிக்
கொள்கிறார்கள். 10 லட்சம் ரூபாய் வருகிறது என்று சொன்னால்,
அதில் ரூ. $1\frac{1}{2}$ லட்சம் தான் தருவார்கள். முக்கியமானது
ரோடுகள். அதையும் நாங்கள் பராமரிக்க வசதியில்லாமல்

[திரு. ஒய். வெங்கடேஸ்வரதீக்ஷிதர்] [1978 மார்ச் 20

ஹேவேஸ் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று 15 ஆண்டு
களாகக் கேட்டுக்கொண்டிருக்கிறேன். இதுவரையில் எடுத்துக்
கொள்ளப்படவில்லை. அவர்கள் ஏதேனும் காரணம் சொல்
கிறார்கள். முனிசிபாலிட்டிகளில் நிதிப் பற்றாக்குறை இருக்கின்றது.
அவர்கள் என்ன பண்ணமுடியும்? எல்லா முனிசிபாலிட்டி
களின் தேவைகளும் ஒன்றாக இருக்காது. ஆனால் எல்லோருக்
கும் கொடுப்பதுபோலத்தான் கொடுக்க முடியும் என்று
சொல்கிறார்கள். ஏராளமான பஸ்கள் இருக்கின்ற பகுதியில்,
ரோடுகள் பராமரிப்புக்கு அதிகமாகச் செலவாகும். யாத்திரி
கர்கள் அடிக்கடி வரக்கூடிய இடங்கள், பஸ்கள் அதிகமாக
வந்துகொண்டிருக்கின்ற பகுதிகளாக இருக்கின்றன. அந்த லாரிக்கு
வரி வாங்கலாமா, பஸ்ஸுக்கு வரி வாங்கலாமா என்று பார்த்
துக்கொண்டிருக்கிறார்கள். டவுன் பஸ்கள் செகண்டுக்கு ஒன்று
வந்துகொண்டிருக்கின்றன. இப்போது கூட 4 பஸ்கள் ஓடிக்
கொண்டிருக்கின்றன. அதனால் அந்த ரோடுகளின் பராமரிப்புச்
செலவு ஒன்றுக்கு எட்டுப் பங்காக ஏறிக்கொண்டிருக்கிறது. 110
நகராட்சிகள் இருக்கின்றன. எல்லா நகராட்சிகளிலும் பற்றாக்
குறை நிலைமைதான் இருக்கும். சர்பிளஸ் பட்ஜெட் போட்ட
நகராட்சி எதுவும் கிடையாது. எந்த நிலைமையிலும் பற்றாக்
குறைதான் இருக்கிறது. பள்ளிகளில் 5 பெர்செண்ட் என்று
வைத்து கல்வி வரி வாங்கிவிடுங்கள் என்று சொல்கின்றார்கள்.
அந்தக் கல்வி வரியை வாங்க முடியாது. ஒரு நகராட்சிக்கு 5
லட்சம் ரூபாய் தேவை என்றால், 2 லட்சம் ரூபாய் தான்
வசூல் ஆகும். பாக்கி ஜனங்களுடைய மற்ற வரியிலேதான்
எடுத்துக்கொள்ள வேண்டும். 20 பள்ளிகள் இருந்தால், 15
நகராட்சியிலும் 5 தனியார் நிர்வாகத்திலும் இருக்கும். தனி
யார் பள்ளிகளில் செலவுக் கணக்கு எழுதுகிறார்களோ இல்லையோ,
அவர்களுக்கு முழு அளவுக்குத் தந்துவிடுகிறார்கள். நகராட்சி
களுக்குக் கிடையாது. தனியார்களுக்கு முழு அளவு கிடைக்கிறது.
இதற்கு முன் 100 கோடி ரூபாய்க்குக் கீழே இருந்தது 150
கோடி ரூபாய் என்ற அளவுக்கு செலவுக் கணக்கு இப்போது
வளர்ந்துவிட்டது. கல்விக்காகச் செலவு செய்யப்படுகிறது. அது
நல்லகாரியம்தான். இப்போது 150 கோடி ரூபாய்க்குச் செலவு
செய்யும்போது, இன்னும் கொஞ்சம் அதிகமாகவே செலவு
செய்யலாம். பி. யு. சி. வரையிலே இப்போது இருக்கிறது. டிகிரி
கோர்ஸையும் இனமாகக் கொடுக்கலாமே. ஜனங்களுக்கு நல்லது
தானே. ஸ்ரீரங்கம் முனிசிபாலிட்டியில் தண்ணீர் வரி 5 ரூபாய்
கூட போடவேண்டியிருக்கிறது.

திரு ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு அங்கத்தினர்
அவர்கள் இன்னும் கொஞ்சம் தானே என்று சொல்கிறார்கள்.
பி. ஏ. வரையில் சலுகை கொடுக்கலாம் என்று சொல்கின்றார்கள்.
அது தமிழ்நாடு வரையிலும் தானா அகில இந்திய அளவி



1978 மார்ச் 20] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

லேயா என்று கேட்டுக்கொள்கிறேன். அப்படிச் சலுகை கொடுக்க
அவர்கள் யோசனை சொல்கின்றார்களா என்று கேட்டுக்
கொள்கிறேன்.

திரு ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: இந்த யோசனை நல்லது
தான். அதை நானும் ஒப்புக்கொள்கிறேன். சர்க்காரிலே
இன்னும் கொஞ்சம் கிராண்ட் அதிகமாகக் கொடுக்கலாம்.
ஒதுக்குகின்ற பணத்தைச் செலவு செய்யக்கூட சிலருக்குத் தெரி
யாது. ஒரு லட்சம் ரூபாய் கொடுத்தால்கூட, செலவழிக்கத்
தெரியாது. கோடிக் கணக்கிலே பணம் இருக்கிறது. கொஞ்சம்
அதிகம் ஒதுக்கிச் செலவழிக்க வேண்டும்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு
அங்கத்தினர் அவர்களை டெல்லிக்கு அனுப்பியிருந்தார்களானால்,
அதைப்பற்றி அங்கே சொல்லியிருப்பார்.

திரு ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: பாராளுமன்றத் தேர்
தலிலே தோல்வி ஏற்பட்டது. ஜனநாயகம் இருக்கிறது.

மாண்புமிகு மேலவைத் துணைத்தலைவர்: ஒரு தடவை
தோற்றுவிட்டாலும், இன்னொரு முறையில் முயற்சி செய்தால்
ஜெயிக்கலாம்.

திரு ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: தேர்தலில் தோல்வி
ஏற்பட்டதால் ஒன்றுமில்லை. அதனால் என்ன? இன்று நம்
நாட்டில் ஜனநாயகம் இருக்கிறது என்பதை அப்போதுதான்
நினைத்தேன். இந்த ஊராட்சிகளுக்கு அதிகமான அதிகாரங்களைக்
கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மக்களால்
தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்ற தலைவர்களுக்கு, ஊராட்சி
மன்றங்களுக்கு அதிக அதிகாரத்தைக் கொடுக்க வேண்டும் என்று
கேட்டுக்கொண்டு, இங்கே பேச வாய்ப்பளித்த தலைவரவர்களுக்கு
நன்றி கூறி அமைகிறேன், வணக்கம்.

திரு எல். பலராமன்: மாண்புமிகு மேலவைத் துணைத்
தலைவரவர்களே, சமுதாய வளர்ச்சி, ஊராட்சி வளர்ச்சிக்
கொள்கை விளக்கத்தின் பேரிலே இங்கே இரண்டொரு வார்த்
தைகள் கூற விரும்புகிறேன். சமுதாயம் வளர வேண்டும்,
மேன்மைப்பட வேண்டும் என்பதற்காகத்தான் ஜனநாயகத்திலே
இருக்கக்கூடிய எல்லாக் கட்சிகளும் சேர்ந்து பாடுபடக்கூடிய
நிலைமைகள் இருக்கின்றன. இருந்தாலும் செயல்படுத்துவது
என்பதிலே, எப்படி மக்களை மேம்படுத்துவது என்பதிலே சில
கருத்து வேறுபாடுகள் இருக்கலாம். அந்த முறையில் கட்சி

[திரு. எல். பலராமன்] [1978 மார்ச் 20

ஆட்சிகள் இயங்கிக்கொண்டிருக்கின்றன. ஆனால் அந்த இயக்கம்
நல்ல முறையில் அமைந்து, சமுதாயத்திற்கு நல்ல பணிகளைச்
செய்து, நல்ல நிலைமைகளை உருவாக்க வேண்டும் என்பதுதான்
நம்முடைய கருத்து. ஒட்டுமொத்தமாகச் சொல்வதென்றால்,
அந்தக் கருத்து உடையவைகளாகத்தான் அனைத்துக் கட்சிகளும்
இருக்கின்றன என்பதை நாம் உணர்ந்து செயல்பட வேண்டு
மென்று நான் இந்த நேரத்திலே கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

பொதுவாக நம் மாநிலம் மட்டுமல்ல. இந்திய உபகண்டத்
திலே உள்ள கிராமங்கள் அனைத்தும் தனித்து இயங்க வேண்டும்.
நமது காந்தி அடிகள் கண்ட கனவு அதுதான். அந்த மாதிரி
ராஜ்யமாக அமையவேண்டும் என்று காந்தி அடிகள் அவர்களும்
அன்றே கோரிக்கை விட்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையில்
அவருடைய வாரிசான காங்கிரஸ் கட்சியினர் பஞ்சாயத்து ராஜ்
யத்தை உற்பத்தி செய்தார்கள். பஞ்சாயத்து ராஜ்யங்களைக்
கிராமத்தைச் சேர்ந்த மக்கள் அமைத்துக்கொண்டு தங்கள் தேவை
களைப் பூர்த்தி செய்துகொள்ள வேண்டும். தாங்களே சுய ஆட்சி
செய்துகொள்ள வேண்டும் என்ற அளவுக்கு வசதிகளையும்
சட்டங்களையும் உருவாக்கினார்கள். ஆனால் எந்த அளவுக்கு வளர்ந்
திருக்கின்றது என்று பார்க்கும்போது, மிகமிக வருத்தமாக
இருக்கிறது. ஆரம்பத்திலே இருந்த ஊக்கம், உற்சாகம்கூட
இன்றைக்கு இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். இங்கே அது
சீரழிக்கப்பட்டிருக்கிறது என்பதைத்தான் நான் சொல்லிக்
கொள்கிறேன்.

நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தத் துறையில்
அனுபவம் உள்ளவர். பொதுமக்களுடைய பிரதிநிதியாக கிரா
மங்களில் இருந்தவர். இன்றைக்கு அவர்கள் அமைச்சரவையிலேயே
இருக்கின்றார்கள் என்பதால், அவைகளைப்பற்றி நன்கு உணர்ந்து
செயல்படுவார்கள் என்று சொல்லிக்கொள்கிறேன். அங்குள்ள
நிலைமைகளைப்பற்றி நன்கு உணர்ந்திருப்பார்கள். அதைப்பற்றி
அவர்களுக்கு ஞாபகமூட்ட விரும்புகிறேன். அவர்கள் இந்தத்
துறையின் மூலமாக கிராம மக்களுக்கு நல்ல வளம் ஏற்பட
முயற்சி செய்யவேண்டும். கிராமங்கள் வளர்ந்தால்தான், இந்த
நாடு செழிக்கும் என்பதை அமைச்சர்களும் ஏற்றுக்கொள்
கின்றார்கள். ஆனால் கிராமப்புற மக்களுக்கு ஏதாவது வசதி
வாய்ப்புகள் கிடைக்கச் செய்திருக்கிறார்களா என்று பார்த்தால்,
இல்லை என்றுதான் சொல்லவேண்டும். கிராமப்புற மக்கள் தான்
தங்களுக்கு வாக்கு அளித்தார்கள் என்று அண்ணா திராவிட
முன்னேற்றக் கழகத்தினர் சொல்லிக்கொள்கிறார்கள். ஆனால் அந்த
கிராமப்புற மக்களுக்காக ஒதுக்கீடு செய்த நிதி குறைவாகத்
தான் இருக்கிறது என்பதைக் குற்றச்சாட்டாகக் கூறிக்கொள்



1978 மார்ச் 20] [திரு. எல். பலராமன்]

விரும்புகிறேன். கிராமப்புற மக்களுக்கு ஒதுக்கியுள்ள தொகை
மிகமிகக் குறைவு என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.
கிராமப்புற மக்களைப் புறக்கணிக்கிறார்கள் என்ற குற்றச்
சாட்டை நான் தெரிவித்துக்கொள்கிறேன். கிராமப்புற மக்கள்
புறக்கணிக்கப்பட்டிருக்கின்ற நிலைமைகளைப்பற்றி எங்கள் தலைவர்
திரு. சுந்தரேசத் தேவர் அவர்கள்கூட சுட்டிக்காட்டிப் பேசியிருக்
கிறார்கள். அந்த மாதிரி இருக்க வேண்டாம் என்று கேட்டுக்
கொள்கிறேன். அதிகமான நிதி ஒதுக்கீடுகளை, வசதிகளைக்
கிராமப்புற மக்களுக்கு இந்த அரசு வழங்க வேண்டும் என்று
கேட்டுக்கொள்கிறேன். கிராமப்புற மக்களுக்கு அனுசரணையாக
இருக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கூறிக்கொள்ள
ஆசைப்படுகிறேன்.

[பிற்பகல் 1-00.]

மதிப்பிற்குரிய என்னுடைய மாபெரும் தலைவர் திரு. காமராஜ்
அவர்கள் கிராமப்புற மக்கள் வாழ வேண்டுமென்பதற்காகப் பல
திட்டங்களை உருவாக்கினார்கள். அவர் முதலமைச்சாரக இருந்த
போது, இந்த நிர்வாகத்தை ஊக்குவிக்க வேண்டுமென்பதற்காக
அன்றைய பிரதமர் பண்டித நேரு அவர்களைத் தமிழகத்திற்கு
அழைத்து வந்து, அனைத்துப் பஞ்சாயத்துத் தலைவர்களையும்
கூட்டி, ஒரு மாநாடு ஏற்பாடு செய்து, 'உங்களுக்குத் தான் இந்த
நாடு, நீங்கள்தான் இந்த நாட்டைச் செம்மையாக ஆள வேண்டும்'
என்று சொல்லி உற்சாகப்படுத்தினார்கள். அந்த நிலை இன்றைக்கு
இல்லை. அந்த நிலையை மீண்டும் உருவாக்குவதற்கு, இப்போது
பொறுப்பேற்றுள்ள அமைச்சரவர்கள் பாடுபட வேண்டுமென்று
நான் இந்த அவையிலே கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு நாம் மாநில சுயாட்சி கேட்கிறோம். மாநில
சுயாட்சி உணர்வு அகில இந்தியா பூராவும் உருவாகிக்கொண்
டிருக்கிறது. ஆனால் நமக்குக் கீழ்படிந்துள்ள பஞ்சாயத்து ராஜ்
யங்களுக்கு அதிகாரம் வழங்கியிருக்கிறோமா என்றால், இல்லை.
அதிகாரம் தரவேயில்லை என்ற நிலையை இங்கே சுட்டிக்காட்டிப்
பேசினார்கள். ஆனால் ஒவ்வொரு கட்சியும் பொறுப்பிலே இருக்
கும்போது, 'கடந்த 10, 15 ஆண்டுகளாக மற்ற மாநிலங்
களில் தேர்தல்கள் இல்லை, இங்கே என்ன அவசியம்?' என்ற
நிலையில்தான் பதில் அளிக்கிறார்கள். ஒரு ஜனநாயக அமைப்
பிலே தேர்தல்களை நடத்த வேண்டும், அவர்களுக்கு அதிக
அதிகாரத்தை வழங்க வேண்டுமென்ற மனப்பக்குவத்தை உரு
வாக்கிக் கொள்ள வேண்டும். அப்போதுதான் ஜனநாயக அமைப்பு
களை நிறுவ முடியுமென்பதை நாம் உணர முடியும். அந்த
நிலைக்கு இந்த நாட்டு மக்களை உருவாக்க வேண்டுமென்று நான்
கேட்டுக் கொள்கிறேன். காங்கிரஸ் கட்சி ஆட்சியில் இருந்தபோது,
பஞ்சாயத்துக்களுக்குப் பல அதிகாரங்கள் கிடைத்தன. பள்ளி ஆசிரி

யர்களை மாற்றுதல் போன்ற பெரும்பகுதி நிர்வாகம் பஞ்சாயத்துத் தலைவர்களின் பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டிருந்தது. ஆனால் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி காலத்தில் அவைகள் பறிக்கப் பட்டன. ஜனநாயக உரிமைகள் பறிக்கப்பட்ட நிலையில் அவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு மேலும் என்ன அதிகாரங்கள் வழங்கலாமென்பதை நாம் ஆலோசிக்க வேண்டும். அதற்காக ஆய்வுக் குழு ஒன்றை ஏற்படுத்தினால்கூட, நல்லதென்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். பஞ்சாயத்து அமைப்புகள் 1961ஆம் ஆண்டுக்கு முன்னால் ஏற்பட்டவை. பல பஞ்சாயத்து ஒன்றியங்களின்கீழ் 60, 70 கிராமங்கள் இருக்கின்றன. அதிக விஸ்தீரணம் உடையதாக இருக்கின்றன. அவைகளை மாற்றி அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். எப்படி அமைந்தால் நல்லதென்பதை உணர்ந்து, பஞ்சாயத்து ஒன்றியங்களையும், பஞ்சாயத்துக்களையும் மாற்றி அமைக்க சந்தர்ப்பம் அளிக்க வேண்டும். சில இடங்களிலிருந்து மாற்றி அமைக்க விண்ணப்பம் வந்து, அவை நிராகரிக்கப்பட்டிருக்கின்றன என்பதை நான் உணர்வேன். எனவே சின்ன நிர்வாகமாக, அதிக அதிகாரங்களை உடையதாக பஞ்சாயத்து ஒன்றியங்களை அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

காங்கிரஸ் ஆட்சி காலத்திலே நிலவரி வசூலிக்கும் அதிகாரத்தை பஞ்சாயத்து ஒன்றியங்களுக்கும், பஞ்சாயத்துகளுக்கும் வழங்கினால் என்ன என்ற கேள்வி எழுப்பப்பட்டு, அதற்காக ஆலோசனைக் கமிட்டி போட்டார்கள். அதுபோன்ற நிலைமையை உருவாக்கி, பஞ்சாயத்து மேல் வரியை போடாமல் இருப்பதற்கும், பஞ்சாயத்தே வரிகளை வசூலிப்பதற்குமான நிலைமையை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அன்றைக்கு அவர்கள் சிந்தித்தார்கள். கிராம அதிகாரிகளேகூட பஞ்சாயத்து நிர்வாக செயலாளராக இருக்க வேண்டுமென்ற ஆலோசனை வழங்கப்பட்டது. செயலாளர்கள், பஞ்சாயத்து கர்ணம், கிராம அதிகாரி என்ற நிலைமை இல்லாமல், எல்லா வரிகளையும் பஞ்சாயத்து நிர்வாகமே வசூலிக்க வேண்டுமென்பதற்காக ஓர் ஆய்வுக் குழு அமைத்து, அது எவ்வளவு சாத்தியம் என்று ஆராய்ந்து பார்த்து, நிர்வாகத்தை மாற்றி அமைக்க வேண்டுமென்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இன்றைக்கு பஞ்சாயத்து ராஜ்யம் என்று பெருமையாகக் கூறிக்கொண்டு அந்த மக்களை ஏமாற்றிக்கொண்டிருக்கிறோம். அந்த மக்கள் நிர்வாகம் செய்யும் அளவுக்கு, ஓரிடத்தில் உட்கார்ந்து தங்கள் குறைகளைப் பரிசீலிக்கும் அளவுக்கு ஒரு பஞ்சாயத்தில்கூட கட்டிடம் இல்லை. நானும் பஞ்சாயத்துத் தலைவனாக இருக்கிறேன். என்னுடைய பஞ்சாயத்திற்குக் கட்டிடம் கட்ட முடியாத நிலை இருக்கிறது. ஏனென்றால் அங்கே வரக்கூடிய வருமானம் போதவில்லை. வரக்கூடிய வருமானத்தைக்கொண்டு பஞ்சாயத்துக் கட்டிடம் கட்ட முடியாத நிலைமை இருக்கிறது. பஞ்சாயத்து ராஜ்யம்தானே



பழைய முறையில் மரத்தடியில் நடத்துங்கள் என்ற எண்ணத்தை உருவாக்கி, அது சாத்தியமா என்றுகூடக் கேட்கலாம். எனவே பஞ்சாயத்துக் கட்டிடங்களைக் கட்ட அரசாங்கம் முயல வேண்டும். மேலும் தனிப்பட்ட முறையில் சிறிய பஞ்சாயத்துக்களின் பொருளாதாரத்தை வளர்க்க திட்டங்கள் ஏதேனும் பரிசீலிக்கப்படுகிறதா என்றால், இல்லை. இருக்கக்கூடிய, வரக்கூடிய பணத்தையும் ஆணையரே சரிக் கட்டிவிடுகிறார். மதிய உணவிற்காக 5 சா ஒதுக்கப்படுகிறது. அதற்காகக் கொடுக்க வேண்டிய ஆயிரம் அல்லது 2,000 ரூபாயை ஆணையரே, பஞ்சாயத்து கொடுக்க வேண்டிய இனத்திற்கு சரி செய்துவிடுகிறார். அதிலிருந்து மின்சார பில்லைக் கட்டிவிடுகிறார். எனவே பஞ்சாயத்துக்களுக்கு வருமானம் வரக்கூடிய அளவுக்கு வேறு மாற்று முறைகளில்லை. ஆனால் பொது மக்களிடமிருந்து நன்கொடை வாங்கி நடத்துங்கள் என்று கூறும் நிலை இருக்கிறது. விவசாயத்தை நம்பியுள்ள மக்களிடம் நன்கொடை வாங்கும் நிலையில்லை என்பதை அமைச்சரவர்களும், இந்த அவையினரும் நன்கு உணர்வார்கள். எனவே பஞ்சாயத்துக்களின் வருவாயை அதிகரிக்க தீவிரமாக அரசு சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து. மின்சார விளக்குகளுக்கான கட்டணம் பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். பஞ்சாயத்துக்களே பல்புகளை பொருத்திக் கொள்ள வேண்டும். உள்ளம் வெளிச்சமாக இல்லையென்றாலும், ஊர் வெளிச்சமாக இருக்கட்டும் என்று மின்சார பல்புகளைப் பொருத்தியிருக்கிறோம். கிராமங்களிலே மின் இணைப்புகள் வழங்கியிருக்கிறார்கள். ஊர்களில் வெளிச்சம் தரக்கூடிய அளவுக்கு இருந்தாலும், கட்டணம் ஆயிரக் கணக்கில் இருக்கிறது. அந்தக் கட்டணத்தைத் தாங்கக்கூடிய நிலையில் பஞ்சாயத்துக்கள் இல்லை என்பதை உணர்ந்து, அந்தக் கட்டணத்தைக் குறைப்பதற்கான முயற்சிகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பல்புகளைப் பொருத்தவரையில், முன்னால் இருந்த முறையையே கையாள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முன்பு பஞ்சாயத்து ஒன்றியங்களுக்கு பல நிர்வாகப் பொறுப்புகள் இருந்தன. ஆரம்பக் கல்வி என்பது மிக மிக அத்தியாவசியமானது. கல்வித் துறையில் அதைப்பற்றிப் பேசினோம்; அதற்காசிக தனி வாரியம் அமைப்போமென்று பேசப்பட்டது. ஆரம்பத்தில் பஞ்சாயத்து ஒன்றியத்தின் பொறுப்பில் ஆரம்பக் கல்வி இருந்த போதுதான் ஒழுங்காக நடந்தது. ஆரம்ப காலத்தில் 1961 முதல் பஞ்சாயத்து யூனியன் ஆரம்பப் பள்ளிகள் நல்ல முறையில் நடந்தன. இன்றைக்கு என்ன நிலைமை என்பதைப் பார்க்கிறோம். அரசாங்கச் சட்டங்களின் காரணமாக எத்தனையோ தலையீடுகள், சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன. கிராமங்களிலுள்ள பள்ளிகள் ஒன்றியத்தின்கீழ் இருந்தால்தான், கிராம மக்களின் கல்வித் தரம்

உயருமென்பது என்னுடைய கருத்தாகும். என்னுடைய கட்சி யின் கருத்தும் அதுதான். அந்தக் கல்விக் கூடங்களை நல்ல முறை யில் இயக்குவதற்கு ஒன்றியங்களிடம் முழு அதிகாரத்தையும் வழங்க வேண்டுமென்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

கல்விக்கூட கட்டிடங்களுக்காக ஒதுக்கப்படும் தொகை மிகக் குறைவாக இருக்கிறது. ஆரம்பப் பள்ளிகளுக்குக் கட்டிடம் இல்லாத தால், மரத்தடியில் நடத்தக்கூடிய அளவுக்கும், சூரிய வெளிச்சம் நேராக மாணவர்கள்மேல் விழும் அளவுக்கும் பள்ளிகளின் கூரை களும் இருக்கின்றன. அவற்றை மாற்றி அமைப்பதற்காக ஒதுக்கப் பட்டுள்ள தொகை மிகக் குறைவாக இருக்கிறதென்பதை அமைச் சரவர்களும், இந்த அவையினரும் அறிவார்களென்று நம்பு கிறேன். அதற்காக அதிகமான தொகை ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

(பிற்பகல் 1-10)

கடந்த காலத்திலே விவசாயத் துறை, பொறியியல் துறை, கல்வித் துறை, அனைத்துமே ஒன்றாகக் கூட்டாக இயங்கிய நிர் வாகம் இன்றைக்கு தனித்தனியாகப் பிரிந்து சீர் கெட்டிருக் கிறதென்றால், அதற்குக் காரணம் ஒவ்வொரு துறையினரும் ஒவ்வொரு கோணத்தில் தங்களைப் பெரிதாகக் கருதுவது. கல்வித் துறையினர் தாங்கள் பெரிது என்று நினைக்கிறார்கள். பொறியியல் துறையினர் தாங்கள்தான் பெரிது என்று நினைக் கிறார்கள். திரு. சுந்தரேசத் தேவர் கூட, 16 இலட்சம் ரூபாயை வருமானமாக வைத்துக் கொண்டிருக்க ஒரு ஒன்றியத்திலே அதற்கேற்ப ஒரு எஸ்டிமேட் போட வேண்டுமென்று சொன்னால், அந்த என்ஜினியர்கள் போடவில்லை என்று சொன்னார்கள். இன்று வரை அது நிறைவேறவில்லை என்று கூறினார்கள். அந்த அளவுக்குப் பொறியியல் துறை நிர்வாகத்தில் சீர்கெட்டிருக் கிறது. இத்துறைகள் எல்லாம் சரியான முறையில் இயங்கு வதற்கு என்ன செய்ய வேண்டும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன். 'ஊர் கூடி தேர் இழுத்தால், தேர் நகரும்' என்பதைப் போல, அனைத்துத் துறைகளும் ஒன்றாக இயங்கினால், திட்டங்கள் நல்ல முறையில் நிறைவேறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆரம்பத்திலே கிராம சேவக்குகள் தூய்மையாகப் பணி யாற்றினார்கள் என்பதை மறுக்க முடியாது. அவர்களெல்லாம் காங்கிரஸ்காரர்கள் என்று திராவிட முன்னேற்றக் கழகக் காலத்திலே களங்கப்படுத்தி, அவர்களுக்கு உத்தியோகம் கொடுக் காமல் தடை செய்த நிலை ஏற்பட்டது. அவர்கள்தான் இந்த



நாட்டுச் சமுதாயத்திற்கும் கிராம மக்களுக்கும் பணியாற்றக் கூடியவர்கள் என்பதை உணர்ந்து அவர்களுடைய கோரிக்கையை நிவர்த்தி செய்ய வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர் களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

பஞ்சாயத்து ஒன்றியத்தில் இருக்கக் கூடிய துறைகள், கல்வித் துறை, நெடுஞ்சாலைத் துறை, மற்ற விவசாயத் துறை ஆகிய துறைகளின் எண்ணங்கள் ஒன்றுக்கொன்று மாறுபட்டு இருக்கக் கூடிய நிலைமையை மாற்றி, ஒட்டுமொத்தமாக ஒரே எண்ணத்துடன் இயங்குவதற்குரிய சூழ்நிலையை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இணைப்புச் சாலைகளைச் சீர்திருத்தம் செய்வதற்காக அரசு மானியம் வழங்குகிறது. முதலில் மணலாக இருந்த சாலையை சல்லியைக் கொண்டு கப்பி ரோடாகப் போட்ட பிறகு, அதைப் பஞ்சாயத்தால் பராமரிக்க முடியாத நிலை ஏற்படுகிறது. அதற்கு ஒரு மைலுக்கு பத்தாயிரம், பன்னிரண்டாயிரம் என்று எஸ்டிமேட் போடுகிறார்கள், மண் ரோடாகஇருந்தால், இரண்டு தட்டு மணலை வாரிப் போட்டால் போதும், சல்லி ரோடாகப் போட்டுவிட்ட பிறகு, மறுபடியும் சல்லியைத்தான் போட வேண்டிய நிலை இருக்கிறது. அதற்காகும் செலவைப் பஞ்சாயத்து யூனியன் ஏற்க முடியாமல், மீண்டும் அந்த ரோடுகள் மோச மான நிலையில் இருக்கின்றன. இதைத் தவிர்ப்பதற்காக அர சாங்கம் மேலும் நிதி ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளு கிறேன்.

மேலும் எங்கள் மாவட்டத்திலே மலைவாழ் மக்களுக்காக ஒரு புதிய வட்டாரத்தை அமைக்க வேண்டுமென்ற கோரிக்கை நீண்ட நாட்களாக இருக்கின்றது, சமுதாயத்தில் பின்தங்கி யிருக்கிற மலைவாழ் மக்களுக்கு, மத்திய அரசு அளிக்கக் கூடிய மானியத்தைப் பயன்படுத்தி, ஜவ்வாது மலை அபிவிருத்தி வட்டாரம் என்று ஒரு வட்டாரத்தை அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்,

எங்களுடைய மாவட்டத்தில் வேலூரைத் தலைமையிடமாகக் கொண்டிருந்தாலும், குடிநீர்ப் பிரச்சனை ஒரு தீராத பிரச்சினை யாக இருக்கிறது. அங்கு ஒரு நாளைக்கு, இரண்டு மூன்று மணி நேரத்திற்குத்தான் குடிநீர் வருகிறது, பக்கத்திலுள்ள பாலாற்றையும், நிலத்தடி நீரையும் கொண்டு மக்களுக்குத் தேவையான குடிநீரை வழங்க இந்த அரசாங்கம் விரைவாக முயல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன், 'கிராமப் புறங் களை மேலும் மேம்படுத்துவோம் என்ற முறையில் அங்கே தனித்தனியாக இருக்கக் கூடிய மக்களை ஒன்று திரட்டி கிராம அபிவிருத்தியை ஏற்படுத்த வழி வகை செய்யப்படும்' என்ற

வாசகத்தை முதலமைச்சர் அவர்கள் உருவாக்கித் தந்திருக்கிறார்கள். அந்த முறையில் கிராமப் புறங்களுக்கு இருக்கக் கூடிய வசதிகளை மேலும் அபிவிருத்தி செய்யும் சூழ்நிலையை உருவாக்கித் தர வேண்டுமென்று கூறிக் கொண்டு, காந்தி கண்ட கனவை நனவாக்க கிராமங்களில் நல்லதொரு பஞ்சாயத்து நிர்வாகத்தை ஏற்படுத்த பஞ்சாயத்துத் தேர்தலை விரைவாக நடத்தி அந்த அமைப்புகள் மீண்டும் நல்ல முறையில் இயங்க வைக்க வேண்டும் என்பதை ஞாபகப்படுத்தி, பேசுவதற்கு ஒரு அரிய வாய்ப்பையளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

(மாற்றுத் தலைவர் திரு. ஆ. பாலசுப்ரமணியம் தலைமை)

திரு. கோ. சி. மணி: மாண்புமிகு மாற்றுத் தலைவா அவர்களே, இன்றைய தினம் இங்கே தரப்பட்டிருக்கிற கொள்கை விளக்கக் குறிப்பைப் பற்றி ஆளும் கட்சியினரும், அவர்களுக்கு ஆதரவு தருகிற கட்சிகளும். எதிர்க்கட்சியாக இருக்கிற நாங்களும் ஏகோபித்த கருத்தைக் கூடுமான வரை இன்றைய தினம் பேசி வருகிறோம். இது ஆளும் கட்சித் தரப்பிலிருந்து கூட சுட்டிக்காட்டப்பட்டது. இதிலிருந்து இந்த அவைக்கு ஒன்றைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இந்த அவையிலே இருக்கிற எதிர்க் கட்சி, தேவையானவற்றையெல்லாம் ஏற்றுக்கொண்டு, தேவையற்றவைகளை நீக்க வேண்டுமென்றும். தீதானவற்றை நீக்க வேண்டுமென்றும் தெளிவான நம்பிக்கை கொண்டு, நல்லவைகளை ஏற்றுக்கொண்டு, தீயவைகளை மறுக்கிறது என்பதற்கு இதுவே ஒரு சான்றாக அமையும் என்று கருதுகிறேன்.

இன்றைய தினம் ஊராட்சி மற்றும் நகராட்சி பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பின் மீது விவாதம் நடந்து கொண்டிருக்கிறது. அரசு எப்படிச் செயல்பட வேண்டுமென்ற ஒரு கருத்து உலகம் போற்றும் உத்தமர் காந்தியடிகள், பேரறிஞர் அண்ணா ஆகியவர்கள் சிந்தனையில் அடிபட்டு, அதற்காக நீண்ட காலமாக அவர்கள் முயற்சி எடுத்து, படிப்படியாக அதற்கு ஒரு நல்ல உருவத்தைக் கொடுத்து, நல்ல நிலைக்குக் கொண்டு வர வேண்டுமென்று கருதி, அரசியல் சார்பில்லாமல் அவர்கள் ஏற்படுத்திய அமைப்புதான் உள்ளாட்சி. தேர்தல் காலத்திலே அரசியல் மாச்சரியங்கள் இருந்தாலும் கூட, தேர்தல் முடிந்த பிறகு, அரசியல் சார்பில்லாமல் ஒரு இடத்திலே உட்கார்ந்து கொண்டு திட்டமிடுகிற சிறந்த அமைப்பு ஊராட்சிகள். அதி… சிறிய ஊராட்சியாக இருந்தாலும், செலக்‌ஷன் கிரேட் பஞ்சாயத்தாக இருந்தாலும், நகராட்சியாக இருந்தாலும், இர…டாந்தர நகராட்சியாக இருந்தாலும், மூன்றாந்தர நகராட்சியா…



இருந்தாலும், சென்னை போன்ற கார்ப்பரேஷனாக இருந்தாலும் இருந்தாலும், சென்னை போன்ற காப்பரேஷனாக இருந்தாலும் ஒரே இடத்தில் அமர்ந்துகொண்டு அரசியல் கட்சி வேறு பாடின்றி இன்றியமையாத திட்டங்களை விவாதிக்கின்ற மிகப் பெரிய மாமன்றம் என்று எண்ணிக்கொள்ள வேண்டும். அப்படிப் பட்ட மன்றத்தினுடைய அன்றாட நடவடிக்கைகளையும் அதில் ஏற்படும் சிக்கல்களையும் உணர்ந்துதான் இந்த மன்றத்திலே இது விவாதிக்கப்படுகிறது என்று குறிப்பிட்டுச் சொல்ல பெருமைப்படுகிறேன்.

மாண்புமிகு காங்கிரஸ்(ஐ) கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரேசத் தேவர் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். ''இந்த அவையில் ஆசிரியர்கள் பகுதியிலிருந்து அதிக மானவர்கள் வந்திருக்கிறார்கள். அதைப் போலவே உள்ளாட்சித் துறையிலிருந்தும் அதிகமானவர்கள் வந்திருக்கிறோம். கல்விக் கொள்கை விளக்கக் குறிப்பின் மீது இரண்டு நாள் விவாதம் நடைபெற்றது. அதைப் போலவே இதிலே இரண்டு நாள் வைக்கக் கூடாதா'' என்று தனக்கிருக்கிற உரிமையை வேண்டுகோளாக வைத்தார். என்னைப் பொறுத்த வரையில், அது உரிமையென்றே நான் கருதுகிறேன். இதைப் பேச வேண்டும், இதை விவாதிக்க வேண்டும், அந்தத் தொகுதி லிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டுவிட்டோம் என்பதற்காக, நான் கூட பேசியிருக்கிறேன் என்று சொல்லுவதற்காக விவாதம் அமைகிறது என்று கருதுகிறேன். எதை எண்ணுகிறார்களோ, அதை யாராவது எடுத்துச் சொன்னார்களா என்றால், இல்லை. அதற்குக் காரணம் முடியவில்லை. முடியவில்லை என்பதற்குக் காரணம் நேரம் ஒதுக்க முடியவில்லை. நேரம் ஒதுக்க முடிய வில்லை என்பதற்குக் காரணம், ஏறத்தாழ பத்தரை மணிக்கு ஆரம்பித்து ஒன்றரை மணிக்கு முடித்து விடுகிறோம். ஆரம் பத்தில் ஒரு மணி நேரம் கேள்வி நேரத்திற்குச் செலவிடப் படுகிறது; அதற்குப் பிறகு வேறு சில வாதங்களுக்குப் போகிறது: நல்ல வேளை இன்று ஒத்தி வைப்புத் தீர்மானம் இல்லை. பிறகு கிடைக்கிற ஒன்றரை மணி நேரத்தை வைத்துக் கொண்டு பெரியதொரு கொள்கை விளக்கக் குறிப்பின் மீது விவாதம் நடத்தி ஒரு முடிவிற்கு வந்துவிடு என்று சொன்னால், அது எப்படி முடியும்? எதிர்காலத்திலே இந்த மன்றத்திலே இப்படியொரு பரிதாபகரமான சூழ்நிலை வரக் கூடாது. இது ஒரு முக்கியமான பிரச்சினை. ஒரு சங்கடத்தின் பேரில் யோசனை சொல்லுவதை அனுமதிக்கக் கூடாது. இந்தத் துறைக்காக கொடுக்கக் கூடிய மானியத்தை குறைக்க வேண்டுமென்று சொல்லாவிட்டாலும், இது குறித்து வெட்டுப் பிரேரணையைக் கொடுக்காவிட்டாலும் கூட, இது பற்றிய யோசனையைச் சொல்வதற்காகத்தான் இந்த அவையே கூட்டப்படுகிறது.

[திரு. கோ. சி. மணி] [1978 மார்ச் 20

(பிற்பகல் 1-20)

இந்த யோசனை சாமான்யமானதல்ல. ரொம்ப ஆழ்ந்து பரிசீலித்துச் சொல்லப்படுகிற யோசனையாக எல்லோரும் கருதியிருக்கிறார்கள். ஆகையால்தான் நான் திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருக்கிறேன். அடுத்த முறையாவது இதற்குக் காலம் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் தொடர்கிறேன்.

1920 ஆம் வருடத்திய சட்டத்தின் 4-வது பிரிவின் அடிப்படையில் நகராட்சிகளைத் தரம் பிரித்து வைக்கப்பட்டிருக்கிறது. தரம் பிரிப்பதில் மக்கள் தொகையை விட மிக முக்கியமாக கவனிப்பது நகரசபையின் வருமானம். வருமானத்தின் அடிப்படையில் தேர்வுநிலை நகராட்சி, முதல்தர நகராட்சி, இரண்டாம் தர நகராட்சி, மூன்றாம் தர நகராட்சி என்று பிரிக்கப்பட்டிருக்கிறது. 3 லட்ச ரூபாய் வருமானம் வந்தால் மூன்றாம் தர நகராட்சியாக ஆக்கி விடலாம் என்று விதியிருக்கிறது. தொகையைப் பார்க்கும்போது தான், லட்சமாக இருக்கிறதே தவிர, 1920-ல் சட்டம் இயற்றிய காலத்திற்கும், தற்போதைக்குமிடையே அது எவ்வளவு மதிப்புக் குறைந்து விட்டது என்பதை கவனிக்க வேண்டும். இடையே தொகையை உயர்த்தியிருக்கலாம். அதை மறுக்கவில்லை. ஆனால் வருகிற வருமானத்தைக் கொண்டு மூன்றாம்தர நகராட்சி செயல்படுமா என்ற ஆய்வினை நடத்தி, தொகையை உயர்த்தி உச்ச கட்டம் வைத்திருக்கிறோமா என்றால் இல்லை. ஆண்டுக்கு ஆண்டு சம்பள உயர்வு கொடுக்கப்படுகிறது. பொருட்களின் விலைவாசி ஏறுகின்றது. அதைத் தடுக்க முடியவில்லை. ஆனால் நகராட்சிக்கு மட்டும் இவ்வளவு வருமானம் வந்தால் போதும், அது மூன்றாம்தர நகராட்சி ஆக்கப்படலாம் என்று உச்ச வரம்பு வைத்திருக்கிறோம். ஒரு பேரூராட்சியில் 2 லட்சத்து 70 ஆயிரம் வருமானம் வருகிறது என்றால், பக்கத்தில் இருக்கிற ஒரு பஞ்சாயத்தையும் சேர்த்து, இதை எப்படியாவது முனிசிபாலிடியாக ஆக்க வேண்டும் என்று, அரசியல் காரணத்தாலோ, வேறு காரணங்களாலோ, அல்லது பெருமைக்காக, நாம் ஆட்சிக்கு வந்தோம், இத்தனை நகரசபைகளை அமைத்தோம், இது ஒரு நகர சபை என்று பெயர்ப்பலகை தொங்கவிடப்படட்டும் என்ற ஆசைக்காகவோ, நகரசபை ஆக்க முற்பட்டால், பக்கத்தில் இருக்கிற பஞ்சாயத்தும் கெடுக்கப்பட்டு, பேரூராட்சியையும் வாழ விடாமல், மூன்று லட்ச ரூபாய் வருமானம் என்று எப்படியோ கணக்குத் தயாரித்து மூன்றாம்தர நகராட்சி ஆக்கினால், அந்த நகராட்சி ஏற்பட்ட பிறகு, வருகிற வருமானத்தை வைத்துக் கொண்டு, ஏதோ விட்ட குறை தொட்ட குறையாக அரசாங்கம் தருகின்ற மானியத்தை வைத்துக்கொண்டு முழுமையாக இயங்க முடிகிறதா? ஏற்கனவே பேரூராட்சியாக, பஞ்சாயத்தாக விளங்கியபோது



1978 மார்ச் 20] [திரு. கோ. சி. மணி]

இருந்த சங்கடங்கள் இல்லாமல் வாழ முடிகிறதா? பஞ்சாயத்துக்கும் சங்கடம், பேரூராட்சிக்கும் சங்கடம் ஏற்படுகிறதைத் தான் கண்டு கொண்டிருக்கிறோம்.

எங்களுடைய ஆட்சிக் காலத்தில் சோழவரம் கிராமப் பஞ்சாயத்தாக இருந்தது. பிறகு நகரப் பஞ்சாயத்தை, பேரூராட்சியை நகராட்சியாக ஆக்கவேண்டும் என்று அதற்கு மக்கள் தொகை, வருவாய் எல்லாம் சட்டத்திற்கு உட்பட்டிருக்கிறதாக என்று கண்டுபிடிக்கப்பட்டு, தஞ்சை மாவட்டத்தில் 9 பஞ்சாயத்துக்களை எடுத்து, அதில் 6 பஞ்சாயத்துக்களை ஒன்றுக்கி ஜாபிதா வெளியிட்டார்கள். 15 நாள் கழித்து மக்களே இந்தப் பஞ்சாயத்துக்களை ஒன்றாக்க வேண்டாம் என்று கிளர்ச்சி செய்தார்கள். பட்டியலில் இடம் பெற்ற பஞ்சாயத்துக்கள் நகராட்சியாக ஆக்கப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டது. இன்று வரையில் ஃபைல் போய்க் கொண்டிருக்கிறது. வைக்கலாமா கூடாதா என்பதற்கு, வைக்கலாம் என்று சொல்வதற்கு ஒரு சிலரும், வேண்டாம் என்பதற்கு வேறு சிலரும் இருந்து கொண்டு, நிலைமை அப்படியே இருந்து கொண்டிருக்கிறது. சட்டம் எப்படி இருந்தாலும், பஞ்சாயத்துக்களை இணைத்து நகராட்சி ஆக்கினால், அவை நன்கு இயங்க முடியுமா, அதற்கு வாய்ப்பு இருக்கிறதா, சாலைப் போக்குவரத்து இருக்கிறதா, எவ்வளவு நீளம், அகலம் இருக்கிறது என்பதையெல்லாம் கவனிக்க வேண்டும். எங்கள் பஞ்சாயத்து 5 மைல் நீளம் சாலையைப் பராமரிக்க வேண்டியிருக்கிறது என்றால், யாராலும் நம்ப முடியுமா? 960 ரூபாய் வருமானம் வந்த பஞ்சாயத்து. இப்போது 1,860 ரூபாய் வருகிறது. இப்படிப்பட்ட பஞ்சாயத்து 5 மைல் நீளமுள்ள சாலையை நிர்வகிக்க முடியுமா? முடியும் என்றால், யாராவது நம்பத் தயாரா? கிராமத்தில் உள்ள கோவில் நிலங்களுக்கு உச்ச வரம்பு வந்துவிட்டது. ஆகவே அடிக்கடி நிலங்கள் விற்பது நடைபெறுவதில்லை. ஆகவே ஸ்டாம்ப் டியூடியில் வருமானம் இல்லை. ஏறத்தாழ 4 மைலுக்கு மேல் ரோடு இருக்கிறது அதை நிர்வகிக்க வேண்டும். அதற்குப் பிறகு அந்த ரோட்டுக்கு மார்க்கெட் காம்பிளெக்ஸ் என்ற தொகையை வைத்துத் தார் போட்டோம். தார் போட்டால் சாலையை ஊராட்சி ஒன்றியம் ஹைவேஸில் ஒப்படைத்தால் ஹைவேஸ் ஏற்றுக்கொள்ளலாம் என்று விதி இருக்கிறது. ஆனால் அவ்வாறு எடுத்துக் கொள்ள ஹைவேஸ் இலாக்கா முன்வருவதில்லை. திருவாவடுதுறை-தேரழுந்தூர் சாலை இருக்கிறது. அதை யார் நிர்வகிக்கிறார்கள் என்று தெரியவில்லை. ஹைவேஸ் எடுத்துக்கொள்ளலாம் என்று தீர்மானம் பஞ்சாயத்து போட்டாகிவிட்டது. ஆனால் ஹைவேஸ் எடுத்துக்கொள்ளவில்லை. கேட்டால், அவர்கள் கொடுத்து விடுகின்றோம் என்று எழுதவில்லையே என்கிறார்கள். உண்மைநிலை என்னவென்றால், அவர்கள் எடுத்துக்கொள்ளக் கூடாது என்றில்லை. இதைப் பராமரிக்க எங்கே பணம்

இருக்கிறது என்று தனியாகக் கேட்டால் சொல்கிறார்கள். இந்தச் சங்கடங்கள் எல்லாம் இருக்கின்றன. ஆகவே இவற்றையெல்லாம் பார்த்துச் செய்ய வேண்டும்.

புதிய அமைச்சரவை 1-4-78 லிருந்து ஒரு முடிவைச் செய்திருப்பதாகக் கேள்விப்பட்டேன். மாநகராட்சியில் இருக்கிற குடி தண்ணீர் இலாக்காவை இன்னொரு வாரியத்தில் ஒப்படைக்கப் போவதாகவும், அது நடைமுறைக்கு வருவது அவசியம் என்று கருதுவதாகவும் கேள்விப்பட்டேன். என்ன அவசியம்? மாநகராட்சியைத் தான் ஒரு ஐ. ஏ. எஸ். அதிகாரியின் தலைமையில் ஒப்படைத்தாகி விட்டது. அதற்குப் பிறகும் அங்கே அதிகாரிகளுக்குப் பஞ்சம் வராது என்று கருதுகிறேன். மாநகராட்சியில், மாநில அரசில் எவ்வளவு இலாக்காக்கள் இருக்கின்றனவோ, அவ்வளவு இலாக்காக்கள் இருக்கின்றன. ரெவின்யூ இலாக்கா இருக்கிறது. குடிநீர் துறையை கவனிக்க மாநகராட்சியில் அதிகாரிகள் இருக்கிறார்கள். போக்குவரத்துத் துறையைப் பார்க்க அதிகாரிகள் இருக்கிறார்கள். இவ்வளவு வாய்ப்பும், வசதிகளும் கார்ப்பொரேஷனில் இருக்கிறது. அப்படி இருக்கும்போது, குடிநீர் இலாக்கா ஒன்றை மட்டும் எடுத்துக் கொண்டு, அதற்கு என்று எஸ்டாபிலிஷ்மெண்ட் வைத்து, அதற்குப் பிறகு அதற்குத் தனியாக அதிகாரி ஒருவரைப் போட்டு, அவர்களுக்குச் செலவழிக்கின்ற நிர்வாகச் செலவுகளையும் குடிநீர் திட்டத்திலிருந்து எடுத்துக் கொண்டு, அந்தச் செலவுகள் எல்லாம் போக மதிப்பிருப்பதைத் தான் குடிநீர் திட்டத்திற்காகச் செலவழிக்கப் போகிறார்கள். இதற்கு என்ன அவசியம் வந்துவிட்டது? இப்படிச் செய்தால், அடுத்த வருடம் மாநகராட்சியில் மின்சார இலாக்கா இருக்க வேண்டியதில்லை. அதற்கு என்று தனி எஸ்டாபிலிஷ்மெண்ட் வைத்து, என்ஜினியர் போட்டு, அவருடைய தலைமையில் மின்சாரப் பகுதி இருக்கும் என்று சொல்லக் கூடும். அப்படியானால் அதற்குப் பிறகு எதற்குக் கார்ப்பொரேஷன்? 70 டிவிஷன், 80 டிவிஷனாக இருந்த கார்ப்பொரேஷன் 100 டிவிஷனாகி, பற்றாததற்கு, அரசியல் காரணத்தாலோ என்னவோ, பக்கத்தில் உள்ள பேரூராட்சிகளை எல்லாம் சேர்த்துக் கொள்ள ஏற்பாடாகியிருக்கிறது. இப்படி கார்ப்பொரேஷன் என்ற பெயர் பலகைதான் தொங்க வேண்டுமா? குடிநீர் பகுதியைக் கார்ப்பொரேஷனிலிருந்து எடுத்துவிட்டு, அந்தப் பகுதியில் யார் யார் அதிகாரிகள் இருந்தார்களோ அவர்களை மாற்ற வேண்டும். அவர்கள் உங்களிடம் வந்து சிபாரிசு பிடிக்க வேண்டும். இதனால் என்ன லாபம் எதிர்பார்க்கிறீர்கள்? என்ன நன்மை கிடைக்கும் என்ற நம்பிக்கை உங்களுக்கு வந்திருக்கிறது? வேறு எந்தக் கார்ப்பொரேஷனைப் பார்த்து, அதனால் கிடைக்கிற லாபத்தைப் பார்த்து, இப்படிச் செய்ய வேண்டுமென்று முடிவிற்கு வந்திருக்கிறீர்கள்? இதுவரை நீங்கள் சொல்லவில்லை. உங்களுக்கு அதிகாரம் பற்றவில்லை என்று நீங்கள் கேட்



அதிகாரம் பற்றவில்லை என்று நாங்கள்
பதும், பஞ்சாயத்திற்கு மாநகராட்சியில் தீர்மானம்
கேட்பதும் இருந்து வருகிறது. தூக்கிக் கொண்டு இப்படிச்
போட்டால், அந்தத் தீர்மானத்தைத் பைலை அவர்களே தூக்கிக்கொண்டு
செய்யுங்கள் என்று சொல்லி உள்ள வேதனை அவர்
வரவேண்டியிருக்கிறது. அதிகாரிகளுக்கு செய்வதன் மூலம் மனத்
களுக்குத்தான் தெரியும். நீங்கள் இப்படிச் வளர்ச்சிக்கு இடம்
தளர்ச்சிக்கு இடம் கொடுக்கிறீர்களே தவிர, அரசியல்வாதிகளுக்
கொடுக்கவில்லை. அதிகாரிகளுக்கு மட்டுமல்ல, தவிர, மன
கும் மனத் தளர்ச்சிக்கு இடம் கொடுக்கிறீர்களே நான் அரசியல்
வளர்ச்சிக்கு இடம் கொடுக்கவில்லை. இதை துறையில் அரசியல்
நோக்கத்தோடு சொல்லவில்லை. இந்தத் அரசியல் நோக்கத்தை நான்
நோக்கம் இருப்பது தவறு. ஆகவே யார் தவறு பண்ணினாலும்,
பயன்படுத்த எண்ணவில்லை. இதில் வந்து விடிகிறது. அவாகள்
அது பொது மக்கள் தலையில் தான் சிறு வயதிலிருந்து கிராமப்
தான் பாதிக்கப் படுகிறார்கள். நான் இருந்திருக்கிறேன். அங்கே இருக்கிற
பஞ்சாயத்தில் பொறுப்பில் இதல் அரசியல் மாச்சரியங்களைக்
சங்கடங்கள் எனக்குத் தெரியும்.
கொண்டு புகுத்த விரும்பவில்லை.

(பிற்பகல் 1-30)

374 ஒன்றியங்களைச் சேர்ந்த சாலைகள்
தமிழ் நாட்டிலுள்ள அவற்றைப் பராமரிக்க ரூ. 275
எவ்வளவு நீளம் இருக்கிறதோ திட்டங்கள் இருக்
லட்சம் ஒதுக்கியிருக்கிறார்கள். எத்தனையோ நீங்கள் எடுத்துக்
கின்றன என்றாலும், இந்த சாலைப் பராமரிப்பை இலாகாவிடம்
கொள்ளுங்கள் என்று ஒரு இலாகா மற்றொரு பெருந்
ஒப்படைக்க முடியுமா, மனம் வருமா? அப்படிப்பட்ட கவனிக்க
தன்மை எந்த இலாகாவுக்கும் வராது. அதைக்
வேண்டும்.

ஆக்குவோம் என்றும், அது
கிராமங்களைச் சிறிய நகரங்களாக என்றும் சொல்கிறீர்கள். சிறிய
தான் அரசாங்கத்தின் கொள்கை நகரங்களாகவே மாற்றுங்கள்.
நகரமாக மட்டுமல்ல, பெரிய அதில் தலையிடவேயில்லை;
வேண்டாமென்று சொல்லவில்லை. தேர்ந்தெடுப்பார்கள் என்று
ஒன்றியத் தலைவர்களை மக்களே நாங்கள் ஒத்துப் போகி
சட்டம் இருக்கிறது. அதில் உங்களோடு என்கிறீர்கள். செய்யுங்கள்.
றோம். கிராமங்களை நகரமாக்குவோம் மட்டுமல்ல, இன்னும் ரூ.
சாலை பராமரிப்புக்கு ரூ. 225 லட்சம் செலவழியுங்கள், வேண்டாமென்று
300 லட்சம் வேண்டுமானாலும் செலவழிக்க வேண்டிய அவசியமென்ன,
சொல்லவில்லை. ஆனால், தேவர் அவர்கள் சொன்னார்கள்.
மாண்புமிகு திரு. ராமகிருஷ்ணத் சொல்லலாம். என்னால் சொல்ல
வயதுக்கு அப்படிச்
வுவர்

முடியாது. சொன்னால் கட்சி அரசியல் என்று சந்தேகப்படுவார்கள். மக்கள் கமிட்டி என்று ஆரம்பித்திருக்கிறார்கள். எதற்காக? ஊராட்சித் தலைவர் இருக்கிறார். ஊராட்சி ஒன்றியங்கள் இயங்குகின்றன. கலைக்கப்படவில்லை. அப்படியிருக்கும் போது, எதற்காக கமிட்டி? பெருந்தனக்காரர்கள் தலைமையில் இயங்கும் என்றார்கள். இப்போது அதை நீக்கிவிட்டு நல்ல குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்று ஆக்கியிருக்கிறார்கள். அதை அளப்பதற்கு எங்கே தர்மாமீட்டர் இருக்கிறது? எந்த தர்மாமீட்டரை வைத்து ஜனங்கள் அவர்களை அளப்பது? ஊராட்சி மன்ற உறுப்பினர் தேர்தலிலிருந்து நாடாளுமன்றத் தேர்தல் வரையில் நம்பி, அதுதான் ஜனநாயகம் என்று சரியோ, தவறோ அதில் வந்துவிட்ட பிறகு ஊராட்சி அடிப்படையில் ஒரு கமிட்டி எதற்காக அமைக்க வேண்டும்? புதிய பஞ்சாயத்துத் தலைவருக்கும் பட்டாமணியருக்கும் சிண்டு முடிந்து விடுகிற வேலை எதற்காக என்றுதான் கேட்கிறேன். நகராட்சிகளைக் கலைத்தீர்கள். ஸ்பெஷல் ஆபீசரைப் போட்டீர்கள். பஞ்சாயத்து ஒன்றியங்களைக் கலைத்தீர்கள். ஸ்பெஷல் ஆபீசரைப் போட்டீர்கள். ஊராட்சி மன்றங்களையும் கலைப்பதற்கு முயற்சி செய்தீர்கள் என்று பத்திரிகைச் செய்தி வந்தது. அதைச் செய்ய முடியாமல் விட்டுவிட்டீர்கள். அப்படிச் செய்திருந்தால், பல பேர் ஹைகோர்ட்டுக்குப் போயிருப்பார்கள். ஸ்டே வாங்க முயற்சி செய்திருப்பார்கள். ஆகையால் இந்தக் கமிட்டியின் வேலை என்ன? எஸ்டிமேட் பிரிபேர் செய்ய முடியுமா, ஒரு செக்கில் கையெழுத்துப் போட முடியுமா? நீங்களே நாமினேஷனைச் செய்கிறீர்கள். பெருவாரியான ஓட்டுக்களைப் பெற்று வந்திருக்கிறீர்கள். பாராட்டுகிறேன். ஆளும் கட்சியாக இருக்கிறீர்கள். நாங்கள் உங்களை விட குறைவான வோட்டுக்களை வாங்கி வந்திருக்கிறோம். அப்படிப்பட்ட உங்களுக்கு எதற்காக இந்த நாமினேஷன் யோசனை? குறைந்த வோட்டு வாங்கியவர்களுக்கு நாமினேஷன் கிடைக்காதா என்ற எண்ணம் வரலாம். ஜனநாயகம் அங்கே இருக்கிறதா? கூட்டுறவுச் சங்கங்களுக்கு நாமினேஷன் இல்லாமல் தேர்தல் நடத்துவோம் என்று கூட்டுறவு அமைச்சர் சொன்னார். இப்போது அது எந்த நிலையில் இருக்கிறது என்று தெரியவில்லை. இப்படிக் கமிட்டி போடுவதால் உங்களுக்கு ஜனநாயகத்தில் நம்பிக்கை இருக்கிறதா என்ற சந்தேகம்தான் வருகிறது. இதை அதிகாரிகள் செய்திருப்பார்களா என்றால், அது சந்தேகமாகத்தான் இருக்கிறது. அதிகாரிகள் செய்ததை நீங்கள் கெடுக்கக் கூடாது. நீங்கள் சொல்லியதை அவர்கள் கேட்பார்கள். இதில் அவர்கள் தலையீடு இருக்குமென்று சத்தியமாக நான் நம்பவில்லை. நீங்கள் சொல்லித்தான் அதிகாரிகள் செய்திருக்க வேண்டும். நான் இங்கே இதை வலியுறுத்திப் பேசுவதற்குக் காரணம் இந்த அமைச்சர் இதைச் செய்வார் என்ற நம்பிக்கையில்தான். உறுப்பினர் திரு. அறிவழகன் அவர்கள் பேசும்போது, உள்ளாட்சித் துறை அமைச்சரை எல்லோரும் பாராட்டுகிறார்கள் என்றார். அதில் எந்த லாபமோ நஷ்டமோ



எங்களுக்கில்லை. யோக்கியமான அரசியல்வாதியாக நல்ல முறையில் நல்ல காரியங்களைச் செய்வார் என்ற நம்பிக்கையில்தான் அப்படிச் சொல்கிறோமே தவிர, அவர் ஆபீசுக்குக் கையைச் சொறிந்து கொண்டு நான் போய் நிற்கப் போவதுமில்லை. அவரும் அப்படியில்லை. அவர் இந்தத் துறையில் தொடர்புள்ளவர், அதிகமாக என்னைப் போன்று கூட்டங்களில் இவற்றையெல்லாம் கண்டித்துப் பேசியவர். அப்படிப்பட்ட மன உணர்வு அவரிடம் இருப்பதை நினைவுபடுத்துகிறேன். என்னை யார் என்று பார்க்கக் கூடாது. தலைவர் அவர்களே, தங்கள் மூலம் இந்த அமைச்சரவைக்கு நான் தெரிவித்துக் கொள்ள விரும்புவது, பேசிக் கொண்டிருக்கிற மணி எந்தக் கட்சி என்று இந்த நேரத்தில் பார்க்க வேண்டாம். தேர்தல் நேரத்தில் வாருங்கள், போட்டி போடலாம். சந்தோஷம். இப்படிப்பட்ட மாமன்றங்களில் பொதுக் காரியங்களைப்பற்றிப் பேசும்போது, அது வேண்டாம். அது தேவையற்றது. நீண்ட நெடுங்காலமாக காந்தி, பெரியார், பேரறிஞர் அண்ணா அவர்கள் காலத்திலேயிருந்து எந்த கிராம ராஜ்யம் வேண்டுமென்று கனவு கண்டார்களோ அதை நிறைவேற்றுவதுதான் நமது கடமை.

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

ஒன்றியத்தைக் கலைத்தார்கள். அப்போது குழு போடப்போகிறோம் என்று சொல்லவில்லை. ஏதோ ஆர்டர் வந்தது. அது நடைமுறைக்கு வரவில்லை. குழு ஒரு இடத்திலும் கூடவில்லை. அதற்கு அதிகாரமும் இல்லை. ஏன் கூட்டவில்லை என்று கேட்டால், பஞ்சாயத்து பிரசிடெண்ட் கூட்ட முடியாது என்கிறார். அவரிடம் என்ன செய்வது? எப்படியும் கலைக்கப்போகிறீர்கள், எப்படியிருந்தாலும் எலக்ஷன் வரப்போகிறது, எதற்காகக் கூட்ட வேண்டும் என்கிறார்கள். ஆகையால் அரசு போடுகிற உத்தரவுகள் வெளியே குறைவாக மதிப்பிடப்படுகின்றன என்பதைச் சொல்லிக் கொள்கிறேன். அரசாங்கம் போடுகிற ஜி.ஓ.க்களை மக்கள் அலட்சியமாக நினைக்கிறார்கள். இதைச் சொல்வதற்கே எனக்குக் கூச்சமாக இருக்கிறது. நீங்கள் அமைச்சராகவும் நான் எம். எல். சி. யாகவும், நீங்கள் ஆளும் கட்சியாகவும் நாங்கள் எதிர்க் கட்சியாகவும் இருக்கலாம். இந்திய அரசியல் சட்டத்தின்படி பார்த்தால், இந்த அரசாங்கத்தில் நானும் அங்கம். அதனால்தான் இந்த அரசாங்கத்தின் ஜி. ஓ. க்கள் மதிக்கப்படாமல் போகும்போது, வேதனையாக இருக்கிறது. ஒரு உத்தரவு வருகிறது. உடனே அதை மாற்றி வேறு உத்தரவு பிறப்பிக்கிறார்கள். அதுவும் நடைமுறைக்கு வருவதில்லை. இப்படி இல்லாமல் நிரந்தரமாக இருக்கிற வகையில் உத்தரவுகளை யோசித்துப் போடுங்கள். அப்படிப் போட வேண்டுமென்று அதிகாரிகளுக்கு அறிவுரை வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 1-40)

இன்னும் ஓரே ஒரு பிரச்சினையைப்பற்றிக் குறிப்பிட விரும்பு கிறேன். இவற்றையெல்லாம் இங்கே சொல்லுவதற்கேகூட சங்கடமாக இருக்கிறது. பேசவும் முடியவில்லை, பேசாமல் இருக்கவும் முடியவில்லை. அதிகமாகப் பேசினல் 'மாண்புமிகு உறுப்பினர் சாப்பிட்டு விட்டு வந்துவிட்டாரா என்ற பிரச்சினை வந்துவிடும். நான் சாப்பிடவில்லை என்பதை முதலில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் துலைவர் : நான் சாப்பிட்டு விட்டேன் என்று சொல்லுகிறீர்களா?

திரு. கோ. சி. மணி : அதைக்கூட நான் சொல்லவில்லை. இன்றையதினம் ஊராட்சி மன்றங்களில், ஒன்றியங்களில் பல் வேறு திட்டங்களை நிர்வகிப்பதற்கு 1978-79 ஆம் ஆண்டின் முதலீட்டில் ரூ 143.07 கோடியாக இருக்கும் என்று சொல்லப் பட்டிருக்கிறது. ஆனல் இந்தத் தொகையை இனவாரியாகப் பிரித்துப் பார்த்தால், அதாவது, முனிசிபாலிடி, ஊராட்சி ஒன்றியங்கள், ஊராட்சிகள் என்று பிரித்துக் கொடுக்கிற போது, இந்த மன்றங்களுக்கெல்லாம் எவ்வளவு குறைவாகப் போகிறது என்பதை உணர முடியும். இதைப் பார்த்தால், மனநிறைவு கொள்ள முடியாது போகிறது என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இதன் காரணமாக இந்தத் திட்டங்கள் எல்லாம் நாம் எண்ணிய அளவுக்கு நிறைவேற்ற முடியாது போகிறது. எதற்கும் பணம் போதுவதில்லை. இந்த வருஷம் அஸ்திவாரம், அடுத்த வருஷம் சுவர் கட்டுவதைப் போல் ஒவ்வொரு ஆண்டுக்கும் கொஞ்சம் கொஞ்சம் செலவு செய்கிறோம். வீடுகட்ட ஆரம்பிப்பதுபோல் துவங்கி, இந்த ஆண்டு கொஞ்சம் அடுத்த ஆண்டு கொஞ்சம் என்று தொடர்ந்து, அந்த எஸ்டிமேட் ரிவைஸ்டு எஸ்டிமேட்டாக மாறுவது போலா கிறது. இப்படிப்பட்ட நிலைமையில் திட்டங்களை செயல்படுத்தக் கூடாது. இதற்கென்று ஒரு ஸ்கீம் போட்டு இன்னின்ன திட்டங் கள், இந்தந்த ஆண்டுகளில் இங்கிங்கே செயல்படுத்தப்படும் என்ற முறையில் நாம் நிறைவேற்ற முன் வர வேண்டும்.

தற்போது பேரூராட்சிகளில் பஸ் ஸ்டாண்டைக் கட்டுகிறோம். எங்கள் ஊரில் கட்டியிருக்கிறோம். பஸ் ஸ்டாண்டு கட்டுவது மக்க ளுக்கு நன்மையானது என்பதுமட்டுமல்ல, பஞ்சாயத்து போர்டுக்கும் லாபகரமான தொழில். அரசாங்கத்திடம் கடன் வாங்கி, கட்டிவிட்டு அரசாங்கத்திற்கு உரிய தவணையைத் திருப்பிக் கொடுத்துவிட்டு அதற்கு மேலும் பஞ்சாயத்துக்கு லாபம் கிடைக்கிறது. இப்படிப் பட்ட காரியத்திற்கு நாம் எவ்வளவு ஒதுக்குகிறோம்? ரூ 5 லட்சம் தான் ஒதுக்குகிறோம். இது எத்தனை பேரூராட்சிகளுக்கு உபயோ



கப்படும்? இந்த அரசாங்கத்தை மட்டும் நான் குறை சொல்லிப் பேசவில்லை. எங்கள் அரசாங்கம் இருந்தபோதும் இதே நிலை. அப்போது ரூ. 5 லட்சம் கூட ஒதுக்கவில்லை. அடையாளமாக ஒரு தொகை ஒதுக்கப்படுகிறது என்றுதான் அப்போது குறிப்பிடு வோம். அதே மாதிரிதான் இப்போதும் ரூ. 2 லட்சம் ரூ. 5 லட்சம் என்று ஒதுக்குகிறோம். அரசாங்கத்தில் இதைப்பற்றி யோசிக்க வேண்டும். ரூ. 5 லட்சத்தை வைத்துக்கொண்டு எத்தனை பஞ்சாயத்துக்களைத் திருப்திப் படுத்த முடியும்? ஒவ்வொரு பேரூராட்சிக்கும் ஒரு பஸ் ஸ்டாண்டு மிகவும் முக்கியம். நீங்களே பி. டபிள்யூ. டி. மூலமாக ஒரு பஸ் ஸ்டாண்டைக் கட்டிப் பாருங் கள். நீங்களே கட்டி பேரூராட்சியிடம் ஒப்படையுங்கள். அவர்கள் வரியை வசூலித்து உங்களுக்குக் கட்டட்டும். இப்போது பஸ் ஸ்டாண்டுகள் எப்படி இருக்கின்றன? அங்கே இருக்கிற நுழை வாயிலில் உள்ள ரோடு எப்படி இருக்கிறது? எந்த ஊரில் பார்த் தாலும், இந்த ரோடு நாதியற்று இருக்கிறது. ஒரு பர்லாங், 2 பர்லாங் வரை பஸ் ஸ்டாண்டு ரோடு மிகவும் மோசமாக இருக்கிறது. ஒருவர் தூங்கிக்கொண்டே பஸ்ஸில் பயணம் செய் தாலும்கூட, பஸ் ஸ்டாண்டு ரோடு சமீபம் வந்தால், பஸ் ஸ்டாண்டு வந்துவிட்டது போலிருக்கிறது என்று விழித்துக் கொள்வார்கள். அந்த அளவுக்குத்தான் பஸ் ஸ்டாண்டு ரோடும் ரெயில்வே ஸ்டேஷன் ரோடும் இருக்கின்றன. அந்த அளவில் தான் ஸ்தல ஸ்தாபனம் சம்பந்தப்பட்ட பராமரிப்பு இருக்கிறது. அடுத்து, பஸ் ஸ்டாண்டுகள் கட்டப்பட்டபோது இருக்கிற அழகு, கழிவரைகள் இருக்கிற நிலைமை எல்லாம் ஒரு மாதம் கூட தாங்குவதில்லை. அவ்வளவு கேவலமாகப் போய்விடுகிறது. அவ்வளவு சங்கடமான நிலைமைகள் இருக்கின்றன. சுகாதார வசதிகளைப் பற்றிச் சொல்லவே முடியாது. அவ்வளவு மோச மாகப் போய்விடுகிறது.

இன்றைன்று, அமைச்சர் அவர்களுக்கும் தெரியும். சிங்கப்பூர், ஹாங்க்காங், ஜப்பான், டோக்கியோ போன்ற நகரங்களில் ரோட்டில் உட்கார்ந்து சாப்பிடலாம் போல் இருக்கிறது. அவ்வளவு சுத்தமாக வைத்திருக்கிறார்கள். அதற்குக் காரணம் அங்கே ஒவ்வொரு எலெக்ட்ரிக் கம்பத்திலும் ஒரு குப்பைத் தொட்டியை வைத்திருக்கிறார்கள். குப்பையை அங்கேதான் போடவேண்டும் என்று விதி இருக்கிறது. நம் போன்ற வெளியூர்க்காரர்கள் சென்னையிலிருந்து போகிறவர்கள் அங்கே குப்பையைக் கீழே போட்டால்தான் உண்டு. அந்த ஊர்க்காரர்கள் யாரும் தரையிலே குப்பையைப் போடமாட்டார்கள். ஒருமுறை நான் சோதித்துப் பார்த்தேன். நான் கிழிந்த காகிதக்குப்பையை அந்தத் தொட்டியில் போடாமல் தெருவில் போட்டுவிட்டுச் சென் றேன். எனக்குப் பின்னலே வந்த பேண்ட் போட்ட ஒருவர் ஆபீசரைப்போல் இருப்பவர்—அந்தக் குப்பைக் காகிதத்தை எடுத்து, குப்பைத் தொட்டியிலே கொண்டுபோய் போட்டுவிட்டுத்

தான் போனார். இந்த நிலைமை இங்கே வருமா? நம் ஜனங்கள் இப்படிச் செய்வார்களா என்று கேட்பீர்கள். நம் மக்களிடத்திலே இந்த வழக்கத்தை வரவழைக்க வேண்டும். அப்படிச் செய்யவில்லை என்றால், அது குற்றம் என்று சொல்ல வேண்டும். முழுவதும் தார் போட்ட பாதைகளிலாவது இதை நாம் கொண்டு வர வேண்டும். ஆனால் இருக்கிற நிலைமை என்ன? முழுவதும் தார் போட்ட பாதையில் கூட இரண்டு பக்கமும் நடைபாதையில் மண் இருக்கிறது. ஒருமுறை காற்றடித்தால் இந்தப் பக்கத்திலே கடை வைத்திருக்கிறவன் முகத்திலே மண். அந்தப் பக்கத்திலே இருந்து காற்றடித்தால் எதிர்ப்பக்கத்திலே கடை வைத்திருக்கிறவன் முகத்திலெல்லாம் மண். க்ஷயரோகத்திற்கு நாம்தானே வித்திடுகிறோம். இந்த மண் தூசிதானே க்ஷயரோகத்திற்குக் காரணம். சில இடங்களில் பிரஷ் போட்டு கூட்டுகிறார்கள். பார்க்கிறேன். இது தினசரி நடக்கிறதா என்றால், இல்லை. அன்றைக்கு கமிஷனர் வருகிறார் என்று புரோகிராம் இருக்கும். எனவேதான் சொல்லுகிறேன். மதுரை, சென்னை போன்ற மாநகராட்சிகளின் எல்லைக்குள்ளாவது இந்த சாலைத் துப்புரவை சரியாகச் செய்ய வேண்டும். சாலைத் துப்புரவுக்காக ஒரு இலாக்காவே இருக்கிறது. ஆனால் துப்புரவு மட்டும் நடைபெறவில்லை.

இன்னொன்று மாநகராட்சிகளால் வெட்டப்படுகிற ரோடுகள் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் செப்பனிடப்பட வேண்டும் என்று உத்தரவிட வேண்டும். இது மிகவும் மோசமாக இருக்கிறது. இதையெல்லாம் இங்கே எடுத்துச் சொல்வதேகூட சங்கடமாக இருக்கிறது. சாக்கடை சீரமைப்புக்காக வெட்டியிருப்பான். எலெக்ட்ரிக் கனெக்ஷன் கொடுக்க வெட்டியிருப்பான். அவ்வளவுதான். வெட்டுவதோடு சரி. மூடுவது என்பதே கிடையாது. போகிற பஸ் லாரிக்காரன் இடித்து இடித்து மூட வேண்டும். இதெல்லாம் சின்னச் சின்னக் காரியங்களாக இருந்தாலும், சொல்லியாக வேண்டும் என்ற நிலையில் இருக்கிறேன். இதை அமைச்சர் அவர்களிடம் தவிர வேறு யாரிடமும் சொல்ல முடியாது. அதிகாரிகளிடம் போய்ச் சொன்னால், உடனே சந்தேகப்படுகிறார்கள். நாங்கள் போய் குப்பை வார வேண்டுமென்று அதிகாரியிடம் சொன்னால், "கோ. சி. மணி போய் என்னவோ பேசினார்" அவ்வளவுதான் அந்த அதிகாரிக்கு அன்றைக்கு சாயங்காலமே டிரான்ஸ்பர் உத்தரவு வந்துவிடும்.

அமைச்சர் அவர்களை யாரும் டிரான்ஸ்பர் செய்ய முடியாது. பண்ணினாலும் 5 வருஷம் கழித்துத்தான் பண்ண வேண்டும். [illegible] வருஷம் கழித்து டிரான்ஸ்பர் செய்கிறார்களோ [illegible]லையோ? அப்படியே டிரான்ஸ்பர் செய்தாலும், பிறகு நா[illegible] இரண்டு பேரும் சந்திக்கு ஒன்றாக வந்துவிடப் போகிறோம். எ[illegible]



தான் இதையெல்லாம் உங்களிடம் சொல்ல வேண்டியிருக்கிறது. இவ்வளவு பெரிய கொள்கை விளக்க விவாதத்தில் இந்தக் குறைபாடுகளையெல்லாம் ஏதோ முனிசிபல் கவுன்சிலில் அங்கே உள்ள மெம்பர்கள் பேசுவதைப்போல் கோ. சி. மணி பேசலாமா என்ற எண்ணம் வந்துவிடக்கூடாது. இப்படிப்பட்ட மன்றத்திலே அப்படிப்பட்ட சிறிய விவரங்களைக்கூட பேசவேண்டிய சூழ்நிலை இருக்கிறதே என்று நினைவுபடுத்தி, மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே பல நல்ல யோசனைகளைச் சொல்லியிருக்கிறார்கள்; அவர்களோடு நானும் இணைகிறேன் என்று சொல்லி விடை பெறுகிறேன். வணக்கம்.

<u>மாண்புமிகு திரு கா. காளிமுத்து</u> : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சி, ஊரக வளர்ச்சி, நகர்ப்புற வளர்ச்சி ஆகியவை தொடர்பான கொள்கைக் குறிப்பை அடிப்படையாகக் கொண்டு அந்தத் துறையோடு நல்ல தொடர்பு கொண்டுள்ள மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய அருமையான கருத்துரைகளையும், ஆய்வுரைகளையும், அறிவுரைகளையும் வழங்கியிருக்கிறார்கள். அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பொதுவாக இந்தத் துறையினுடைய மேம்பாட்டுக்காகவும் இதனுடைய சிறப்புக்காகவும் இங்கே உள்ள மாண்புமிகு உறுப்பினர்களில் சிலர் சிலபல குறைகளையும் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். இந்த அரசைப் பொறுத்த வரையில், கொடுத்திருக்கிற கொள்கை விளக்கக் குறிப்புகளின் மேல் அவர்கள் தருகிற வெறும் விமர்சனங்கள் என்கிற வகையில் மட்டுமல்லாமல் இந்தத் துறை இன்னும் சிறப்படைவதற்கும் அவர்கள் தந்திருக்கிற அறிவுரைகள் என்கிற வகையில் அவைகளை அணுகும் என்கிற உறுதிமொழியை முதலிலேயே தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் தங்களுடைய கருத்துக் கருத்துக்களைச் சொன்னாலும், அவர்களில் பலருடைய கருத்துகளும் எண்ணங்களும் பொதுவாக ஊராட்சி ஒன்றியங்கள், ஊராட்சி மன்றங்கள் என்கிற அமைப்புகளைச் சுற்றியே வட்டமிட்டன என்பதை நான் கவனித்துக் கொண்டிருந்தேன்.

கிராமப்புறங்கள் மேம்பாடு அடைய வேண்டும். ஊராட்சி அமைப்புகள் இன்னும் பலப்பட வேண்டும் என்ற சீரிய நோக்கத்துடன்தான் அவர்களும் சொன்னார்கள். நான் அவர்களுடைய சில பல கருத்துக்களுக்கு பதில் அளிப்பதற்கு முன்னால் பொதுவாக அவர்கள் ஒன்றை அறிவார்கள் என்று கருதுகிறேன். தமிழகத்தில் ஊராட்சி அமைப்பு முறை மிகச் சிறப்புடையதாக இருக்கிறது. இந்தியாவில் இருக்கிற பல்வேறு மாநிலங்களைவிட இந்த

[திரு. கா. காளிமுத்து]    [1978 மார்ச் 30

மாநிலத்தில்தான் அது மிகச் சிறந்த முறையில் செயல்படுகிறது. சிறப்பான முறையில் இயங்கிக் கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் மிக நன்ருக அறிவார்கள் என்று கருது கிறேன்.

மேற்கு வங்கத்திலிருந்துகூட ஒரு குழு வந்து தமிழகத்தில் அமைந்திருக்கிற ஊராட்சி அமைப்பு முறையை நேரடியாகப் பார்த்து அவர்கள் இதுபற்றிய விவரங்களை அறிந்து கொண்டிருக் கிருர்கள் என்பதையும், அண்மையில் அமைக்கப்பட்டிருக்கிற திரு. அசோக் மேத்தா குழுவில் தமிழகத்தின் முதலமைச்சர் அவர்கள் உறுப்பினராக இருக்கிருர்கள் என்பதையும் அந்தக் குழு இத் துறை பற்றிப் பல்வேறு கருத்துரைகளை ஆராய்ந்து தனது அறிக்கையை அளிக்க இருக்கிறது என்பதையும் மாண்புமிகு உறுப் பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே பேசிய பல உறுப்பினர்கள் உள்ளாட்சி மன்றத் தேர்தல்கள் தள்ளிப் போடப்படுகிற காரணத்தால், அவைகள் உரிய நேரத்தில் நடைபெருத காரணத்தால், இந்த அமைப்பு உயிரற்ற உடல்போல் இருக்கிறது; உள்ளாட்சி அமைப்பு இருக் கிறதே தவிர உள்ளாட்சியில் ஆட்சி நடைபெருத காரணத்தால், இதிலே பல குறைபாடுகள் நெளிகின்றன என்ற வகையில் அவர் களுடைய எண்ணத்தை எடுத்துச் சொன்ஞர்கள். இதைப்பற்றி நான் ஒன்றைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். உள்ளாட்சித் துறை இன்றையதினம் உயிரற்ற உடலாக இருக் கிறது என்பது உண்மைதான். ஆனல் அந்த உயிர் போவதற்கும் நாங்கள் காரணமல்ல என்பதும் அப்படி உயிர் போனதும் எங்கள் காலத்திலல்ல என்பதும் இங்கே இருக்கிற மாண்புமிகு உறுப்பினர் களுக்கு நன்ருகத் தெரியும் என்று கருதுகிறேன். அதை உயிர்ப் பிக்கும் முறையில்தான் இந்த அரசு உரிய திட்டங்களைத் தீட்டி செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதையும் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். நான் ஆரம்பத்திலே சொன்னேன். எதனல் உள்ளாட்சி மன்றத் தேர்தல்கள் தள்ளிப்போடப்பட வேண்டும் என்ற கேள்வி விஸ்வரூபம் எடுப்பதற்கு முன் நான் ஒரு கருத்தைத் தெரிவித்தேன். அதை அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்திலேயே கூட பேசியதாக எனக்கு நினைவு. பல உறுப்பினர் கள் அதிலே சில எண்ணங்களை எடுத்துச் சொன்ஞர்கள். கடந்த

(பிற்பகல் 1-50)

முறை இந்த மேவைலயிலே பேசுகிறபோதுகூட நான் குறிப்பிட் டேன். ஒழுங்கான வாக்காளர் பட்டியலை உருவாக்குவதற்குத்தான் இந்தக் கால அவகாசத்தை இந்த அரசாங்கம் கேட்கிறது என்று சொன்னேன். அப்போது அண்ணன் திரு. தங்கப்பாண்டியன்



1978 மார்ச் 30]    [திரு. கா. காளிமுத்து]

போன்றவர்கள் வாக்காளர் பட்டியல் ஏற்கெனவே இருக்கிறதே, இப்போது அந்த அவசரமும் அவசியமும் ஏன் வந்தது என்று கேட்டார்கள். அந்த வாக்காளர் பட்டியல் பற்றிப் புகார்கள் வந் திருக்கின்றன என்பதை இந்த ஆட்சியின் தொடக்கக் காலத்தி லேயே ஆளுநர் அவர்கள் உரையிலே குறிப்பிட்டுச் சொன்ஞர்கள். அது உறுப்பினர்களுக்கும் நினைவு இருக்கும் என்று நினைக்கிறேன். திராவிட முன்னேற்றக் கழகச் செயற்குழுக் கூட்டத்திலேகூட தீர்மானம் போட்டுப் பேசியிருக்கிருர்கள். வாக்காளர்கள் பட்டிய லிலே தவறுகள் இருக்கின்றன என்ற வகையிலே தீர்மானம்கூட போடப்பட்டிருக்கின்றது. அந்தத் தவறுகளைச் சீர்படுத்தத்தான் கால அவகாசத்தை இந்த அரசு கேட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அப்போது எந்த அளவுக்குக் கால அவகாசம் வேண்டும் என்று தெரியாமல் இருந்தது. அன்று கேட்ட அதே கேள்வியை இப்போதும் உறுப்பினர்கள் கேட்டிருக்கிருர்கள். அது குறித்து அவர்களுக்கு ஒன்று தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். ஊராட்சி ஒன்றியங்கள் பற்றிய வாக்காளர் பட்டியலும் இறுதி வெளியீடாக, அச்சிட்ட வெளியீடாக 31—5—78-ல் வெளியிடப்படுகிறது. தேர்தல் எப்போது என்பதை அப்போது கேட்கலாம். வாக்காளர் பட்டியல்தான் எடுத்தாயிற்றே, இதைத்தானே காரணமாகச் சொன்னீர்கள், இன்னும் ஏன் கால தாமதம் என்று கேட்கலாம். வாக்காளர் பட்டியல் வந்த பிறகு தேர்தல் நடத்துவதற்கு அரசுக்கு ஆட்சேபணை இல்லை என்பதையும், தேர்தல் தேதி குறிப்பிட தீவிர முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்படும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே பல்வேறு கருத்துக்கள் எடுத்துச் சொல்லப்பட்டன. ஒரு கருத்தை அண்ணன் திரு. கோ. சி. மணி அவர்களும் அண்ணன் திரு. தங்கப்பாண்டியன் அவர்களும், நம்முடைய மாண்புமிகு அங்கத்தினர் திரு. சுந்தரேசத் தேவர் அவர்களும் திரு. ராமகிருஷ்ணத் தேவர் அவர்களும் மிக அழுத்தமாக எடுத்துச் சொன்ஞர்கள். ஆலோசனைக் குழு போடுவது பற்றி கருத்துக்களை எடுத்துச் சொன்ஞர்கள். அது அவர்களுடைய மனதை இந்த அளவுக்குப் புண்படுத்தும் என்று நான் எண்ணிப் பார்க்கவில்லை. அவருக்கு ஒன்றைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஊராட்சி ஒன்றியங்களுக்கும் ஊராட்சிகளுக்கும் ஆலோசனைக் குழுவை, மக்கள் குழுவை, கண்காணிப்புக் குழுவை அமைக்க வேண்டுமென்ற உணர்வு திடீரென்று எனக்கு உதயமாகி விட்ட தாகக் கருத வேண்டாம். சட்ட மன்றப் பேரவையிலேயே இந்தக் கருத்துக்களைச் சொல்லியிருக்கிருர்கள். ஊராட்சிகளுக்கு இப்படிப்பட்ட அமைப்பு முறைகள் தேவை என்று சொல்லி யிருக்கிருர்கள். ஊராட்சி மன்றங்களுக்கு ஒரு கண்காணிப்புக் குழு போன்று இப்படிப்பட்ட அமைப்புகள் தேவை என்று பேரவையிலே

சொல்லப்பட்ட கருத்துக்களின் அடிப்படையிலே தான் இந்த அரசு
அந்த அமைப்பை உருவாக்கியுள்ளது என்பதைத் தெரிவித்துக்
கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் கட்சி அடிப்படை
யிலேயோ, அரசியல் காரணங்களுக்காகவோ, அரசியல் உள்நோக்
கத்திற்காகவோ அப்படிப்பட்ட ஒரு குழுவை நியமனம் செய்ய
வேண்டும் என்று அரசு எண்ணவில்லை. அமைக்கப்படுகின்ற
அந்தக் குழுக்களில் ஆங்காங்கு இருக்கின்ற கட்சிகளுக்கு நிச்சய
மாகப் பிரதிநிதித்துவம் கொடுக்கப்படும். எல்லாக்கட்சிகளும்
அதிலே அங்கம் வகிக்க வேண்டுமென்ற நிலைமைகளையும் அரசு
மிகத் தெளிவாகத் தெரிவித்திருக்கின்றது என்பதையும்
தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தக்
குழுக்கள் அந்தந்த மாவட்டத்திலேயே அந்தந்த மாவட்ட
ஆட்சித் தலைவர்களால் உருவாக்கித் தரக்கூடிய குழுக்களாக இருக்
கின்றன, அதிலே அரசியல் பிரச்சினைகள் குறுக்கிடாத அளவுக்கு
பார்த்துக்கொள்ளப்படும். அதுதான் பொதுவாகப் போடப்பட்
டிருக்கின்ற உத்தரவாகும். அந்த ஊரைச் சேர்ந்த பெரியவர்க
ளும் இருக்கலாம், நம் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளும்
மக்கள் பிரதிநிதிகளும் அதிலே பங்கு வகிக்கலாம் என்பதைத்
தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கோ. சி. மணி: துணைத் தலைவரவர்களே, ஊராட்சி மன்றங்
கள் கலைக்கப்பட்டன; நகராட்சி மன்றங்கள் கலைக்கப்பட்டன.
அங்கே சிறப்பதிகாரிகள் பணிபுரிகிறார்கள். அங்கெல்லாம் இந்த
மாதிரிக் குழுக்கள் அமைக்க ஆட்சேபணை இல்லை. கலைக்கப்படாது
இருக்கின்ற ஊராட்சிகளில், மேல் ஒரு குழு போடவேண்டுமா
என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: துணைத் தலைவரவர்களே,
கிராம அளவிலே, ஊராட்சி அளவிலே ஒரு குழு தேவை என்ற
கருத்து பேரவையிலேயே சொல்லப்பட்டது. அங்கே இருக்கின்ற
ஊராட்சித் தலைவர்களுக்கும் இந்த மாதிரியான குழுக்கள் உதவியாக
வும், ஊராட்சிகளைக் கண்காணித்துக்கொள்ளக்கூடிய அளவுக்கும்
இருக்கும் என்பதற்காகத்தான் அமைக்கிறோம். அங்கு காழ்ப்பும்
கசப்பும் இருக்கக்கூடிய அளவுக்கு இந்தக் குழு அமைந்திட வேண்
டும் என்று எண்ணவில்லை. அங்கு உள்ள நிலைமைகளை ஒட்டி
அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அமைப்பார்கள் என்பதைத்
தெரிவித்துக்கொள்கிறேன். இதில் கட்சிக்காரர்கள் என்ற நிலைமை
கள் ஏற்படாது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: இந்தக் குழுக்களை நியமிப்பது
பற்றி ஒரு கருத்துச் சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு
அமைச்சர் அவர்கள் தேர்தல் நடத்துவதற்கு 31—5—78-ல்
வாக்காளர் பட்டியல் வந்துவிடும், அதற்குப் பின்னாலே
தேர்தல் வைக்கப்படும் என்று சொன்னார்கள். இதுவரையிலே



ஊராட்சி மன்றங்களில் இப்படி ஒரு ஆலோசனைக் குழு போட
லாம் என்றும், தேர்தல் நடத்தலாம் என்றும் அரசு முடி
வெடுத்துள்ளது என்று சொன்னார்கள். குறுகிய காலத்தில்
தேர்தல் வர இருக்கின்றது. 5, 6, மாதத்திற்கு ஒரு குழு
தேவையா? இப்படியே இருந்தால் என்ன ஆகிவிடும்? அதை
அரசாங்கம் மறுபடியும் பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: துணைத் தலைவரவர்களே,
5 மாதங்கள்தான் இருப்பதாக இருந்தாலும், இந்த அமைப்பு
அதற்கு இடையிலே சரியாக நடக்க வேண்டும் என்பது
தான் அரசினுடைய கருத்து. அந்த வகையிலேதான்
இப்படிப்பட்ட அமைப்பு வேண்டும் என்று நினைக்கிறது
என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.
தேவையற்ற குழப்பங்களுக்கு இது காரணமாக இருக்கக்கூடாது.
அங்குள்ள நிலைமைகளை அனுசரித்துத்தான் இந்த அமைப்புகள்
இருக்க வேண்டும் என்று அரசு கருதுகிறது என்பதைத்
தெரிவித்துக்கொள்கிறேன்.

அண்ணன் திரு. தங்கப்பாண்டியன் அவர்கள் சொன்னார்கள்.
நாம் கிராமப்புற வளர்ச்சிகளைப்பற்றிப் பேசிக்கொண்டிருக்கி
றோம். அதற்கான பல தத்துவங்களை எடுத்துச் சொன்னார்கள்.
ஆனால் அந்தத் தத்துவங்கள் எல்லாம் நடைமுறையில் நடத்தப்
படுகின்றனவா என்பதைப் பற்றியும் நாம் எண்ணிப்பார்க்க
வேண்டும். நாம் போடுகின்ற பல திட்டங்கள் விரும்புகின்ற
கருத்துக்கள் நடைமுறைக்கு உடனடியாக வர முடியாமல்
போகலாம். ஆனால் அதை நாம் உருவாக்கித்தர வேண்டும்.
அந்த அடிப்படையிலேதான் இத்தகைய கருத்துக்களை எடுத்துச்
சொல்கிறார்கள். தந்தை பெரியார் அவர்கள் சொல்லியிருக்
கிறார்கள், "அதிருப்திதான் முன்னேற்றத்திற்குத் தாய்"
என்று. அந்த வகையில் நாம் எடுத்திருக்கின்ற பணி முடிந்து
விட்டது, இதற்கும் மேலே வளர்ச்சிப் பணியே கிடையாது
என்று எண்ணிவிட முடியாது. ஊராட்சியும் ஊராட்சி
ஒன்றியங்களும் கொஞ்சம் கொஞ்சமாகத்தான், படிப்படியாகத்
தான் வளர்ந்து வரக்கூடிய நிலைமைகள் இருக்கின்றன. இதை
நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். மேலை நாடுகளில் உள்ளா
ட்சித் துறையில், ஊராட்சிகளுக்கு அதிக அதிகாரம் கொடுக்
கப்பட்டிருக்கிறது என்று சொல்கின்றார்கள். அவைகள் தனி
யாகவே சட்டம் இயற்றத்தக்க அளவுக்கு அதிகாரம் பெற்றிருக்
கின்றன என்றும் சொல்கின்றார்கள். அந்த அளவுக்கு நமது
ஊராட்சிகள், பரிணாம வளர்ச்சியை இயல்பாக அடையவேண்டும்
என்ற அடிப்படையிலேதான் நாம் செயல்பட வேண்டும்
என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.
தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்பு இல்லாத நேரத்தில், மக்களு
டைய முழு உணர்வையும் பிரதிபலிக்கின்ற அளவுக்குச் செயல்பட

நிச்சயமாக ஒரு அமைப்பை உருவாக்க வேண்டும். இந்த ஊராட்சிகள் நாட்டின் இதயமாக, ஈரல் குலையாக இருப்பதாகும். தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் அமைப்பாகத்தான் அது இருக்க வேண்டும். அதை அமைப்பதற்குரிய நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள வேண்டும் என்ற அடிப்படையிலேதான் அரசு மேற்கொள்கிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

அண்ணன் திரு. தங்கப்பாண்டியன் அவர்கள் பேரூராட்சிபற்றி எடுத்துச் சொன்னார்கள். அதை அமைப்பதைப்பற்றி திரு. கோ. சி. மணி அவர்களும் எடுத்துச் சொன்னார்கள். பேரூராட்சி அமைக்க வேண்டுமென்றால், அது நல்ல முறையில் இயங்க வேண்டும். ஊராட்சிகள், பேரூராட்சிகள் என்று ஆகின்றபோது அதனுடைய எதிர்காலம் என்ன ஆகும் என்பதைப்பற்றியும் நாம் எண்ணிப் பார்க்கவேண்டும். அது திரிசங்கு சொர்க்கத்தில் இருப்பதாகிவிடும். அது முழுமையான அளவுக்குச் சீராக நடக்க வேண்டும். திரு. தங்கப்பாண்டியன் அவர்கள் ஒரு ஊராட்சியின் நிதிநிலைமைகளைப் பற்றிச் சொன்னார்கள். அதன் வருமானம் எவ்வளவு, செலவுகள் எவ்வளவு என்பதைப்பற்றிச் சொன்னார்கள். அதைப் பற்றி அரசு மிகத் தீவிரமாகச் சிந்தித்துக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஊராட்சிகளுக்கு இணை மான்யம், ஈட்டு மான்யம் வழங்க முடியுமா என்பதைப் பற்றியும் அரசு தீவிரமாக சிந்தித்துக் கொண்டிருக்கிறது. பேரூராட்சிக்கு அதிகாரிகள், சுகாதாரப் பணியாளர்கள், துப்புரவுப் பணியாளர்கள் போன்று பலரை நியமித்து, அவர்களுக்குச் சம்பளம் கொடுப்பதற்காகவே அதன் முழு வருமானமும் செலவாகிவிடுகின்றது. மக்கள் நலன்களுக்கு என்று செலவு செய்ய முடியாத நிலைமைகள் ஏற்படுகின்றன. அதைக் கூட சிந்தித்துப் பார்த்து, நிர்வாக அதிகாரிகளை மட்டும் நியமித்து மற்ற அதிகாரிகளை, பணியாளர்களைக் குறைத்து, செலவைக் குறைத்து ஊராட்சிகள் செயல்பட முடியுமா என்பதைப்பற்றி முடிவு எடுக்க வேண்டும். அதைப்பற்றி அரசு தீவிரமாக சிந்தித்துக்கொண்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(பிற்பகல் 2-00)

நகர்ப்புற வளர்ச்சிபற்றி திரு. சுவாமிநாதன் அவர்கள் குறிப்பிட்டார்கள். 'அர்பன் லேண்ட் சீலிங்' இருப்பதால் ஏற்படும் சிக்கல்களை எடுத்துச் சொன்னார்கள். அதைப்பற்றி அரசாங்கம் தீவிரமாகச் சிந்தித்து, உரிய சட்டத் திருத்தம் கொண்டுவர வெகு சீரைவில் செயல்படுமென்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



மின்சார விளக்குகள் பற்றி திரு. ராமகிருஷ்ணத் தேவர் அவர்கள் போன முறையும் குறிப்பிட்டார்கள். இப்போதும் குறிப்பிட்டார்கள். அவர்களுடைய ஊருக்குப் போயிருந்தபோதும் எடுத்துச் சொன்னார்கள். இந்த நேரத்தில் மனம் திறந்து ஒரு உண்மையை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். ஊராட்சிப் பொறுப்பிலே இன்றைய தினம் அது ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. கசக்கிறதென்று அதைத் துப்பவும் முடியவில்லை, இருக்கிறதென்று விழுங்கவும் முடியாமல் இருக்கிறது என்ற நிலையைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அதை ஊராட்சியின் பொறுப்பில் ஒப்படைத்த பிறகு, அந்தப் பொறுப்பை சீராக, செம்மையாக ஊராட்சிகள் நடத்த வழியிருக்கிறதா என்று அரசு சிந்தித்துக் கொண்டிருக்கிறது. இது குறித்து மின்சார அமைச்சரோடு கூடி ஒரு கூட்டம் நடத்தினோம். சிலபல கருத்துக்களை நாங்கள் பரி மாறிக் கொண்டோம். இந்த மாத இறுதிக்குள் முழுமையாக விளக்குகள் எரிய வைக்கிறோமென்று அவர்கள் உறுதி கூறியிருக் கிறார்கள். அந்த உறுதியைக் காப்பார்கள். அதற்குப் பிறகு அவற்றை நல்ல முறையில் பராமரிக்க உள்ளாட்சி அமைப்புகள் நிச்சயமாக தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளுமென்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அண்ணன் திரு. சுந்தரேசத்தேவர் அவர்கள் பேசும்போது அதிகாரங்களை இன்னும் அதிகமாக வழங்க வேண்டுமென்று குறிப் பிட்டார்கள், மத்திய அரசிடமிருந்து மாநில அரசு அதிகாரங்களைக் கேட்பதால், உள்ளாட்சி அமைப்புகளுக்கு மாநில அரசு அதிக அதி காரங்களை வழங்க வேண்டுமென்று கேட்டார்கள். அதுதான் அரசின் கருத்து, மாண்புமிகு முதலமைச்சரவர்கள் கூட அசோக் மேத்தா அவர்கள் தலைமையிலான குழுவிலே அங்கம் வகித்து கருத்துக்களை எடுத்துச் சொல்லும்போது இந்தக் கருத்துக்களை வலியுறுத்தியிருக் கிறார்கள். அந்தக் கருத்துகள் செயல்படுத்தப்படுகிற அள வுக்கு நிச்சயமாக இருக்குமென்பதை இந்த நேரத்தில் தெரிவித் துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆசிரியப் பெருந்தகை திரு. அறிவழகன் அவர்கள் பேசும்போது மாநகராட்சியிலே இருக்கும் பள்ளிகள் நிலைமைகளைப்பற்றிச் சொன் னார்கள். எவ்வளவு ஏழைக் குழந்தைகள் பயில்கிறார்கள், அவர் களுக்கு எந்த அளவுக்கு மாநகராட்சி நிர்வாகம் தன்னுடைய முழு கவனத்தைச் செலுத்தி, அவர்களுடைய நிலை உயர பாடு பட வேண்டுமென்று சொன்னார்கள். மதிய உணவு பெறும் பிள் ளைகளின் எண்ணிக்கையை அவர்கள் அதிகப்படுத்த இருக்கிறார் கள். சீருடை வழங்குகிற பணியையும், புத்தகங்கள் வழங்கும் பணி யையும் மாநகராட்சி மேற்கொண்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. கா. காளிமுத்து] [1978 மார்ச் 30

திரு. எல். பலராமன் அவர்கள் பேசும்போது, மலைவாழ் மக்களுக்கென ஒரு தனி ஒன்றியம் தேவையென்று கூறினார்கள். அவர்களுக்கு ஒன்றைத் தெரிவித்துக்கொள்கிறேன். வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள மலைவாழ் மக்களுக்கென ஆலங்காயம் வட்டாரம் ஒதுக்கப்பட்டிருக்கிறதென்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். கிராமங்களிலே வரி வசூலிக்கும் அதிகாரிகள் பஞ்சாயத்து நிர்வாகத்தின் கீழ் இருந்தால், நன்றாக இருக்குமென்று அவர்கள் சொன்னார்கள். அரசு அதைப்பற்றி தீவிரமாக சிந்திக்கிறது. ஊராட்சி நிர்வாகத்தின்கீழ் வரிவசூலிக்கும் நிலைமையைக் கொண்டுவர வேண்டுமென்ற நிலையை அரசு விரும்புகிறதென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவர்கள் இன்னொன்றைச் சொன்னார்கள். கிராம சேவக்குகள் எந்த அளவுக்குச் செயல்படுகிறார்கள்.; அவர்களுடைய வேண்டுகோள்கள், கோரிக்கைகள் கடந்த காலங்களில் எந்த அளவுக்குப் புறக்கணிக்கப்பட்டதென்பது பற்றிச் சொன்னார்கள், இப்போது கிராம சேவக்குகள் கிடையாது. அவர்களுக்கு 'ஊர்நல உதவியாளர்கள்' என்று பெயர் மாற்றப்பட்டிருக்கிறது. அவர்களை உற்சாகப்படுத்த வேண்டும்; அவர்கள்தான் உள்ளாட்சித் துறையின் அடித்தளத்திலுள்ள ஆணிவேர்களாக இருந்து செயல்படுபவர்கள் என்பதால், அவர்களில் வேளாண்மைப் பயிற்சி பெற்று வருபவர்களுக்கு ரூ. 100 ரொக்க மானியம் கொடுக்க அரசு தீர்மானிக்கிறதென்று சட்டமன்றப் பேரவையில் நான் எடுத்துச் சொன்னேன். இங்கே திரு கே. எஸ். மணி அவர்கள் பேசும்போது பல கருத்துக்களை வழங்கியிருக்கிறார்கள். அந்தக் கருத்துக்களையெல்லாம் வெறும் கட்சி மாச்சரியத்தோடு நிச்சயமாக அரசு அணுகாது. அவர் இந்தத் துறையின் மேம்பாட்டிற்காக நல்ல உள்ளத்தோடு, உயர்ந்த உள்ளத்தோடு வழங்கிய கருத்துக்களென்று அரசு கருதும். நகர்புறத்தை சுத்தப்படுத்துவது சம்பந்தமாக அவர் கூறிய கருத்துக்கள் ஏற்கனவே அரசின் பரிசீலனையில் உள்ளன. இன்னும் இந்தத் துறையின் மேம்பாட்டிற்காக அதிகமான நிதியை ஒதுக்க வேண்டுமென்று சொன்னார்கள். இருக்கிற சூழ்நிலையில் இருக்கிற நிதி நிலைமையைப் பயன்படுத்தித்தான் காரியங்களைச் செய்யும் நிலைமை இருக்கிறது. இந்த நிலைமை எதிர்காலத்தில் சீர்படும், இன்னும் இந்த அமைப்பு சீர்படும் அளவுக்கு அதன் செயல்முறைகள் இருக்குமென்று கூறி, இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் தந்த மேலான கருத்துக்களுக்கு நன்றி கூறி அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்; இத்துடன் இன்றைய நிகழ்ச்சிகள் முடிவுற்றன. மீண்டும் அவை நாளை காலை 10.30 மணிக்குக் கூடும்.

[பிற்பகல் 2.05]

**பின்னர் அவை ஒத்திவைக்கப்பட்டது.**



## 5. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### *A. Statutory Rules and Orders.*

311. Notification issued with G.O. Ms. No. 238, Home (Transport-1), dated the 1st February 1978 exempting the vehicles belonging to United Nations Development Programme, World Health Organisation, now employed in Madras Metropolitan Area Water Supply and Sewerage Project from payment of tax leviable under the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1974 for a period of one year from 1st April 1978. [Laid on the table of the House under section 25 (2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1974 (Tamil Nadu Act 13 of 1974).]

312. Notification issued with G.O. Ms. No. 112, Home, dated the 16th January 1978 in regard to amendments to Rules 22-C, 49-T, 49-U of the Tamil Nadu Motor Vehicles Rules, 1940. [Laid on the table of the House under section 133 (3) of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939).]

313. Notification issued with G.O. Ms. No. 132, Home, dated the 18th January 1978 in regard to an amendment to Rule 113 of the Tamil Nadu Motor Vehicles Rules, 1940. [Laid on the table of the House under section 133 (3) of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939).]

314. Notification issued with G.O. Ms. No. 127, Home (Transport-I), dated the 17th January 1978 in regard to extension of time for payment of tax in respect of all stage carriages kept or used by the Cholan Roadways Corporation, Kumbakonam for the quarter ending 31st March 1978. [Laid on the table of the House under section 25 (2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1974 (Tamil Nadu Act 13 of 1974).]

### *B. Reports, Notifications and Other Papers.*

**†93. Demand No. 31—Policy Note on Harijan and Tribal Welfare Department, 1978-79. (English and Tamil.)**

**†94. Demand No. 31—Annexures to Harijan and Tribal Welfare Department, 1978-79. (English and Tamil.)**

†95. Performance Budget on Harijan and Tribal Welfare for the year, 1978-79. (English.)

†96. Demand NO. 32—Policy Note on Backward Classes Department, 1978-79. (English and Tamil.)

†97. Demand No. 32—Annexures to Backward Classes Department, 1978-79. (English and Tamil.)

†98. Performance Budget on Backward Classes for the year 1978-79. (English.)

†99. Policy Note on the working of the Stationery and Printing Department for the year 1978-79. (Tamil.)

†100. Financial supplement to Demand under Community Development, 1978-79. (English and Tamil.)

‡Circulated to all M.L.Cs on 18th March 1978.



## இணைப்பு

(426 ஆம் பக்கத்தில் இனம் 4 க்கான அடிக்குறிப்பை காண்க.)

## முன்னுரை

1952 ஆம் ஆண்டில் சமுதாய வளர்ச்சித் திட்டம் தொடங்
கப்பெற்றது. ஊர்ப்புறங்களில் வாழும் நலிவுற்ற மக்களின்
நிலையை உயர்த்துவதும் அவர்களிடையே தன்னம்பிக்கையை
வளரச் செய்து அவர்கள் முன்னேற வழிகளமைத்துத் தர
வேண்டுமென்பதுமே இத்திட்டத்தின் நோக்கமாகும். தெளி
வாகக் கூற வேண்டுமானால் மக்களின் முயற்சிகளை அரசின்
முயற்சிகளுடன் இணைத்துச் செயலாற்றி மக்களின் பொருளா
தார சமுதாய நிலைகளை மேம்படச் செய்து அவர்களை நாட்டின்
வாழ்வுடன் இணைத்து, நாட்டின் முன்னேற்றத்திற்கு அவர்
களின் முழு ஒத்துழைப்பையும் பெற்று செயல்படும் திட்டங்
கள்தாம் சமுதாய நலத்திட்டமாகும். மற்றும் முன்னேற
வேண்டுமென்று முனைப்பு சக்தியானது மக்களிடமிருந்தே எழ
வேண்டும் ஊர்ப்புறங்களில் செயலற்றுத் தேங்கி நிற்கின்ற மனித
ஆற்றலை ஒன்று திரட்டி, நிலையான பணிகளைச் செய்ய வேண்டு
மென்ற நோக்குடனேயே சமுதாய வளர்ச்சித் திட்டம் தொடங்
கப்பெற்றது. எனவே மக்களின் ஒத்துழைப்பைப் பெற்று
அவர்கள் திட்டங்களில் பங்கேற்றுச் செயலாற்றச் செய்வதே
சமுதாய வளர்ச்சித் திட்டத்தின் முக்கிய குறிக்கோளாகும்.

தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டம் செய
லுக்கு வந்தவுடன், சமுதாய வளர்ச்சித் திட்டம் ஒரு மாற்
றத்தை அடைந்தது. ஒவ்வொரு சமுதாய வளர்ச்சி வட்டார
மும், ஊராட்சி ஒன்றியமாக அமைந்தது.

ஊராட்சி ஒன்றியங்கள் மக்களுக்கான நல்வாழ்வுப் பணி
களுடன் வட்டார அளவில் நிறைவேற்றப்படக்கூடிய வளர்ச்சி
பணித் திட்டங்களையும் அரசின் பிரதிநிதிகளாக பொறுப்
பேற்று நிறைவேற்றுகின்றன. இந்தக் கட்டத்தில் ஒரு முக்கி
யமான மாற்றம் செயலுக்குக் கொண்டு வரப்பட்டது. கிராம
வளர்ச்சித் திட்டத்தை மையமாகக் கொண்டு பல்வேறு
வளர்ச்சித் திட்டப் பணிகளில் கிடைக்கும் நிதிகளனைத்தையும்
ஒன்று சேர்த்து ஊராட்சி வளர்ச்சித் திட்டவாரியான நிதி
நிலைத் திட்டம் தயாரிக்கப்பட்டு, ஊராட்சி ஒன்றியங்கள்
பயன்படுத்திக் கொள்ள வசதி செய்யப்பட்டது. வளர்ச்சித்
திட்டங்களை ஒருமித்த முறையில் நிறைவேற்றுவதற்கு, இம்
முறை ஒரு பொருளாதார கட்டுக்கோப்பைத் தந்ததுடன்,
ஊர்ப்புற மக்கள் உற்சாகத்துடன் திட்ட வேலைகளுக்கு

தங்கள் பங்கினை அளிக்கும் மனப்பாங்கையும் அவர்களிடையே வளர்க்க உதவியுள்ளது. சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ள இனங்களின்கீழ் ஊராட்சி ஒன்றியங்களுக்கு அரசிடமிருந்து கிடைக்கும் வருவாய்கள், மானியங்கள் மற்றும் இதர இனங்களின் வாயிலாக அரசிடமிருந்து கிடைக்கக் கூடிய எல்லா நிதி ஆதாரங்களையும் ஊராட்சி வளர்ச்சித் திட்ட வாரியான நிதி நிலைத் திட்டத்தில் தெளிவாகக் குறிப்பிடப்படும். உள்ளூர் மக்களின் நன்கொடைத் தொகை எந்த அளவு பெருகுகிறதோ அந்த அளவு ஊராட்சி ஒன்றியத்தின் மொத்த நிதி நிலையும் அதிகரிக்கும்.

ஊராட்சி ஒன்றியங்களில் பல்வேறு திட்டங்களை நிர்வகிப்பதற்கு 1978-79.ல் செய்யப்பட்ட நிதி முதலீடுகளின் அளவு சுமார், ரூ. 143.07 கோடியாக இருக்கும். சட்டப் பேரவையின் முன்னுள்ள கோரிக்கையான ரூ. 35.65 கோடி என்பது, ரூ. 143.07 கோடியின் ஒரு பகுதியேயாகும். இக்குறிப்புரையுடன், சட்ட மன்றத்தின் முன் வைக்கப்பட்டுள்ள நிதி நிலை அறிக்கை இணைப்பானது, ஊராட்சி வளர்ச்சிக்குரிய நிதி முதலீடுகளைத் தொகுத்து காட்டுகிறது. 1977-78-ல் மேற்கொள்ளப்பட்ட பணிகளின் ஆய்வும், 1978-79ஆம் ஆண்டின் திட்டங்களும் இக்குறிப்புரையில் சுருக்கமாகத் தரப்பட்டுள்ளன.

## 2. ஊராட்சி வளர்ச்சி நிர்வாகம்.

### (அ) அமைப்பு.

தென் ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள கல்ராயன் குன்றுகள் பகுதி நீங்கலாக, இம்மாநிலத்திலுள்ள அனைத்து கிராமப் பகுதிகளிலும் தமிழ்நாடு 1958-ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 35/1958) தற்போது செயலிலுள்ளது. கல்ராயன் குன்றுப் பகுதியில் அடங்கியுள்ள ஜாகீர்ப் பகுதிகளை அரசு எடுத்துக் கொண்டபின்னர் இப்பகுதியில் ஊராட்சிகளை அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஊராட்சிகள் அமைக்கப்பட்ட பின்னர், தனியாக ஊராட்சி ஒன்றியம் ஒன்று இப்பகுதியிலும் அமைக்கப்படும்.

### (ஆ) நிர்வாக அமைப்பின் வளர்ச்சி.

நிர்வாக அமைப்பின் விதமும் அதன் முறையும் தொடர்ந்து அரசின் பரிசீலனையில் இருந்து வருகின்றன. கீழே குறிப்பிடப்பட்டுள்ளவை இது வரை செய்யப்பட்டுள்ள மாற்றங்களையும் இனி செய்ய இருக்கின்ற மாற்றங்களையும் காட்டுகின்றன:—



(i) அரசின் உதவிகள் அளிக்கப்படுவதற்காக, வட்டா
ரங்கள் தலைவிகித நில வருவாயின் அடிப்படையில் ஆறு
விதமாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அரசின் உதவிகள் அளிக்கப்
படுவதில் ஒரு ஒழுங்கு முறையை உருவாக்கி. குறைந்த வரு
வாயுள்ள வட்டாரங்களுக்கு உதவவும், அதிக வருவாய் வரத்
தக்க நிலையிலுள்ள வட்டாரங்களை மென்மேலும் தங்கள்
வருவாயைப் பெருக்கிக் கொள்ள ஊக்குவிக்கவும் தக்க நட
வடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(ii) வட்டாரங்களின் வருவாயைப் பெருக்குவதற்காக
''உள்ளூர் செஸ் மேல் வரி'' யில் ஒரு குறிப்பிட்ட குறைந்த
தொகையை நிர்ணயிக்கவும், தற்பொழுதுள்ள உச்ச வரம்பை
அதாவது ரூபாய் 2.50ஐ மேலும் அதிகரிக்கவும் அரசு ஆலோ
சித்து வருகிறது.

(iii) நிர்வாக வசதி, மக்களின் விருப்பம் ஆகியவற்றின்
அடிப்படையில் ஊராட்சிகள் பொதுத் தேர்தல்களுக்கு முன்பே
மிகப்பெரிய வட்டாரங்களைப் பிரிக்கவும்—அவற்றின் எல்லைகளை
மாற்றி அமைக்கவும்—திட்டமிடப்பட்டுள்ளது.

(iv) ஊராட்சிகளின் கடைசி பொதுத் தேர்தல் 1970ஆம்
ஆண்டு ஜூன் மாதம் நடைபெற்றது. 1975ஆம் ஆண்டு ஜூன்
மாதத்துடன் குறிப்பிட்ட ஐந்தாண்டு காலம் முடிவுற்ற போதிலும்
தவிர்க்க இயலாத சில காரணங்களினால் அனைத்து ஊராட்சி
உறுப்பினர்கள் மற்றும் தலைவர்களின் பதவிக்காலம் 1978ஆம்
ஆண்டு அக்டோபர் மாதம் 31ஆம் தேதி வரை நீட்டிக்கப்பட்டது.
1977ஆம் ஆண்டுபிப்ரவரி மாதம் 1ஆம் தேதி முதல் ஊராட்சி
ஒன்றியங்களை நிர்வகிப்பதற்கு ''சிறப்பு அலுவலர்கள்'' நியமிக்கப்
பட்டுள்ளனர். அவர்களின் பதவிக்காலமும் 1978ஆம் ஆண்டு
அக்டோபர் மாதம் 31ஆம் தேதி வரை நீட்டிக்கப்பட்டது.
அனைத்து ஊராட்சிகளில் வாக்காளர் பட்டியல் கடைசித் தடவை
யாக 1970 ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்டது. இப்போது ஒவ்
வொரு வீடாகக் கணக்கெடுத்து புதிதாக வாக்காளர் பட்டியல்கள்
தயாரிக்கப்பட்டு வருகின்றன. அனைத்து ஊராட்சிகளுக்கும் புதிய
வாக்காளர் பட்டியல்கள் 1978ஆம் ஆண்டு மே மாத இறுதிக்குள்
தயாராகிவிடும். வாக்காளர் பட்டியல் தயாரிக்கும் பணிகள் நிறை
வுற்றதும், ஊராட்சித் தேர்தல்களை நடத்த அரசு திட்டமிட்
டுள்ளது. ஊராட்சி ஒன்றிய மன்றங்களுக்கு தலைவர்கள் நேரடித்
தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்படுவர்.

### (இ) பயிற்சித் திட்டங்கள்

ஊரக வளர்ச்சி இயக்ககம் நடத்தும் கீழ்க்காணும், பயிற்சி
நிலையங்களில் வெவ்வேறு வளர்ச்சித் துறைகளைச் சார்ந்த மாவட்ட
அலுவலர்களும், ஊராட்சி நிறுவனங்களைச் சார்ந்த அலுவலர்
களும் பயிற்சி அளிக்கப்படுகின்றனர்.

(1) மாநில சமுதாய வளர்ச்சி நிலையம், பவானிசாகர்

(2) ஊரக வளர்ச்சிப் பணிப்பயிற்சி நிலையம், பவானிசாகர் (பட்டறைப் பிரிவு இணைக்கப்பட்டது) தே. கல்லுப்பட்டி (மதுரை மாவட்டம்), பட்டுக்கோட்டை (தஞ்சை மாவட்டம்) சத்திய விஜய நகரம் (வட ஆற்காடு மாவட்டம்) கிருஷ்ணகிரி (தர்மபுரி மாவட்டம்).

மாநில சமுதாய வளர்ச்சி நிலையத்தில், மாவட்ட மற்றும் வளர்ச்சி அலுவலர்களுக்கு ஊராட்சி கொள்கைப்பற்றிய பயிற்சியும், வட்டார வளர்ச்சி அதிகாரிகளுக்கு பணிப் பயிற்சியும் மேலும் ஊட்டச் சத்துணவுத் திட்டப் பயிற்சியும் அளிக்கப்படுகின்றன. வேளாண்மை, கால்நடை வளர்ச்சி போன்ற துறைகளில், நேர்ந்தெடுக்கப்பட்ட ஊர்நல அலுவலர்களுக்குப் "பணி முன் பயிற்சியும்" இரண்டாண்டு காலம் அளிக்கப்படுகிறது. கிராமக் கைவினைஞர்களுக்கும் அவர்களுடைய பிள்ளைகளுக்கும் ஓராண்டு காலத்திற்கு—தொழிற்கூடப் பயிற்சி—தச்சு மற்றும் கருமார்த் தொழில்களில் பயிற்சி—அளிக்கப்படுகிறது. பெண் பணியாளர்களுக்கு பயிற்சி அளிக்கும் வசதிகள் ச. வி. நகரத்திலும், தே. கல்லுப்பட்டியிலும் அமைந்துள்ள ஊரக விரிவாக்க பயிற்சி நிலையங்களில் உள்ளன.

இந்த பயிற்சித்திட்டங்கள் சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் பற்றிய பணிகளில் அலுவலர்களுக்கு மேலும் பயிற்சி அளிப்பதன் மூலம் அவர்கள் தங்கள் பணியைத் திறம்பட ஆற்றுவதற்கும் பெரும் உதவிபுரிகின்றன.

(ஈ) நிதிநிலை வெற்றியும்-திட்டங்களின் சாதனைகளும்:

ஊராட்சி வளர்ச்சித் திட்டங்களுக்காகும் நிதிச் செலவு, படிப்படியாக உயர்ந்து வந்துள்ளது. 1974-75ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்ட நிதி ஒதுக்கீடு, வட்டாரத்திற்கென வழங்கப்பட்ட சராசரி நிதி ஒதுக்கீடு ஆகியவற்றின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

| ஆண்டு. | ஒதுக்கீடு. | ஒரு வட்டாரத்திற்கு வழங்கப்பட்ட சராசரி நிதி ஒதுக்கீடு. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | (ரூபாய் இலட்சத்தில்.) | |
| 1974-75 .. .. | 1,04,22.05 | 27.87 |
| 1975-76 .. .. | 1,11,23.87 | 29.74 |
| 1976-77 .. .. | 1,16,25.40 | 31.08 |
| 1977-78 .. .. | 1,32,55.30 | 35.44 |
| 1978-79 .. .. | 1,40,67.58 | 38.25 |



மக்களின் தேவைகளை நிறைவேற்றும் பொருட்டு, ஊரக வளர்ச்சிக்கென அரசு அளிக்கும் முக்கியத்துவத்திற்கு இவை வெளிப்படையான சான்றுகளாகும்.

"உள்ளூர் செஸ் மேல் வரி" யின் மூலம் ஊராட்சி ஒன்றியங்கள் தம் வருவாயைப் பெருக்கிக்கொள்ள தீவிர முயற்சிகள் மேற்கொண்டு வருகின்றன. அதை ஊக்குவிக்கும் வகையில் அரசு அளிக்கும் ஊக்குவிப்புத் தொகை ஆண்டுக்கு ஆண்டு அதிகமாகி வருவது இதற்கு சான்றாகும். 1978-79 ஆம் ஆண்டில் மட்டும் உள்ளூர் "செஸ் மேல் வரி" இணை மானியத்திற்காக ரூபாய் 1,350 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. கேளிக்கை மற்றும் காட்சி வரிகளின் மீதும் ஊராட்சி ஒன்றியங்கள் வரி விதிக்கின்றன. அத்தகைய வரி 1978-79ஆம் ஆண்டில் ஏறத்தாழ ரூபாய் 110 இலட்சத்தை எட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சில திட்டங்களைப் பொறுத்த வரையில், 1977 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் நாள் நிலவரப்படி சேகரிக்கப்பட்ட அடிப்படை புள்ளி விவரங்கள் (கூடுதல் எண்ணிக்கை) கீழே காடுக்கப்பட்டுள்ளன :—

| தொடர் எண்ணும் விவரங்களும். | யூனிட்டு. | 31-3-74 | 31-3-75 | 31-3-76 | 31-3-77 |
|---|---|---|---|---|---|
| | | ஆம் நாள் நிலவரப்படி | | | |
| 1. இணைப்புச் சாலைகளின் நீளம். | கி.மீ. | 35,220 | 35,750 | 36,681 | 36,852 |
| 2 மேல் நிலை நீர்த்தொட்டிகள், தானியங்கி அழுத்த நீர்த்தொட்டிகள் ஆகியவற்றின் எண்ணிக்கை. | .. | 5,850 | 6,270 | 6,796 | 7,400 |
| 3 குடிநீர் கிணறுகளின் எண்ணிக்கை. | .. | 74,050 | 76,560 | 79,460 | 81,310 |
| 4 ஊராட்சி ஒன்றிய நிர்வாகத்தின் கீழ் உள்ள தொடக்க நிலைப் பள்ளிகளின் எண்ணிக்கை. | .. | 19,415 | 19,646 | 19,826 | 19,922 |
| 5 ஊராட்சி ஒன்றிய நிர்வாகத்தின் கீழ் உள்ள உயர் நிலைத் தொடக்கப் பள்ளிகளின் எண்ணிக்கை. | .. | 3,172* | 3,166* | 3,175 | 3,155* |
| 6 ஊராட்சி ஒன்றியங்களுக்குச் சொந்தமான கட்டிடங்களின் எண்ணிக்கை. | .. | 16,514 | 17,360 | 18,034 | 18,615 |

* உயர்நிலைத் தொடக்கப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாக மாறினதின் காரணமாக **இந்த எண்ணிக்கையில் மாற்றம் ஏற்பட்டுள்ளது.**



ஊராட்சி ஒன்றியங்களின் மூலம் அரசு, பல்வேறு துறைகளின் மீது செலவழித்துள்ள தொகை பற்றிய விவரங்களை கீழ்க் காணப்பெறும் விவர அறிக்கை காட்டும்.

1974-75 ஆம் ஆண்டு முதல் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களுக்காக ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் அரசு செலவழித்துள்ள தொகை பற்றிய விவரங்களையும், 1978-79-ம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டையும் கீழ்க்கண்ட அட்டவணை காட்டும் :—

| திட்டத்தின் பெயர். | 1974-75 | 1975-76 | 1976-77 | 1977-78 திருத்தப்பட்ட திட்ட மதிப்பு. | 1978-79 வரவு-செலவு திட்ட மதிப்பு. |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| | | | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| வேளாண்மை .. .. | 68.40 | 38·12 | 38.82 | 40.00 | 43.00 |
| ால்நடை வளர்ச்சி .. | 15.78 | 10.53 | 10.02 | 10.00 | 10.00 |
| ீன் வளம் .. .. | 2·40 | 1.90 | 1.97 | 2.00 | 2.00 |
| இணைப்புச் சாலைகள் .. | 120.67* | 67.56 | 56.00 | 60.00 | 65.00 |
| டிநீர் வழங்கல் .. | 179.57* | 191.94* | 315.58* | 140.00 | 150.00 |
| ள்ளிக் கட்டிடங்கள் .. | 71.55 | 53.16 | 53.79 | 54.00 | 75.00 |
| மூகக் கல்வி .. | 11.86 | 4.20 | 8.02 | 8.00 | 8.00 |
| களிர், குழந்தைகள் நலன். | 11.50 | 16.12 | 17.66 | 16.16 | 16.16 |

* வறட்சி நிவாரணத்திற்காக செலவழித்துள்ள தொகை சேர்க்கப்பட்டுள்ளது.

தங்கள் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள இந்த ஏரிகளை மேலும் சிறந்த முறையில் பராமரித்து வரும் நிலையில் இருக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

1978—79 வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்துக்கென 25 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 4. உற்பத்தித் திட்டங்கள்.

### வேளாண்மை, கால்நடை வளர்ச்சி, மீன்வளம்.

1978-79-ல் செய்யப்பட்ட ஒதுக்கீடுகளின் அடிப்படையில், வேளாண்மை, கால்நடை வளர்ப்புத் திட்டங்களை ஆண்டுத் திட்டங்களாக ஊராட்சி ஒன்றியங்கள் செயல்படுத்தி வருகின்றன. ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஒரு குறிப்பிட்ட தொகை ஒதுக்கீடு செய்யப்படுகிறது. வேளாண்மைத் துறையின் ஆலோசனையுடனும் அவ்வப்போது பிறப்பிக்கப்படும் அரசாணைகளில் வரையறுக்கப்பட்டுள்ள சில திட்டவட்டமான நடைமுறையின் அடிப்படையிலும், தாமே திட்டங்கள் வகுத்துக்கொள்ள ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் முழு உரிமை வழங்கப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட மாவட்டத் தொழில் நுட்ப அதிகாரிகளின் ஆலோசனையுடன் ஊராட்சி ஒன்றியங்களால் இத்திட்டங்கள் வகுக்கப்பட்டு, செயல்படுத்தப்படுகின்றன.

ஊராட்சி ஒன்றியங்கள் கீழ்க்காணும் திட்டங்களை மேற்கொண்டுள்ளன ;—

### (அ) வேளாண்மை,

(1) வேளாண்மை டெப்போ—கிடங்கு கட்டுதல்,

(2) ஊராட்சி மலைத் தோட்டங்களைப் பராமரித்தல்.

(3) மாவட்ட வேளாண்மை அதிகாரிகள் ஆலோசனையுடனும் மாவட்ட ஆட்சித்தலைவர் ஒப்புதலுடனும் உள்ளூர்ப் பகுதிக்கேற்ப கீழ்க்காணும் திட்டங்களைப் போன்று ஊராட்சி ஒன்றியங்கள் தெரிந்தெடுக்கவிருக்கும் ஏனையத் திட்டங்கள்.

(i) ஊராட்சிகளுக்கும் ஊராட்சி ஒன்றியங்களுக்குப் சாதனங்கள் வழங்குதல்.

(ii) தனிப்பட்டவர்களுக்குச் சாதனம் வழங்குதல்.

(iii) உதவிகள் / விரிவாக்குதல்—கிராம விழாக்கள், கண்காட்சிப் போட்டிகள் முதலியன.



(iv) வேளாண்மை விரிவாக்கப்பணி—விளக்கப்பாத்திகள் அமைத்தல்.

(v) தனிப்பட்டவர்களுக்கு பசுந்தழை உர விதைகள் வழங்குதல்.

(vi) தனிப்பட்டவர்களுக்கு விதைகளும் நாற்றுக்களும் வழங்குதல்.

1978-79 வரவு-செலவு திட்ட மதிப்பீட்டில் வேளாண்மை திட்டங்களை நிறைவேற்றுவதற்கென 43 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 1978-79-ல் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் 11,497 ரூபாய் மானியமாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதற்குச் சமமாக 9,245 ரூபாய் உள்ளூர்வாசிகள் செலுத்த வேண்டும்.

| | | ரூ. |
|---|---|---|
| (i) | வேளாண்மை டெப்போ-கிடங்கு கட்டுதல் .. .. .. | 2,500 |
| (ii) | ஊராட்சி மலைத்தோட்டங்கள் பராமரிப்பு .. .. .. | 700 |
| (iii) | ஊராட்சி ஒன்றியங்கள் தெரிந்தெடுக்கும் திட்டங்கள் .. | 8,297 |
| | மொத்தம் .. | 11,497 |

### (ஆ) கால்நடை வளர்ப்பு.

இத்திட்டத்தின்கீழ் அரசு மானியமாக 10 லட்சம் ரூபாய் தனியே ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் 2,674 ரூபாய் மானியமாக ஒதுக்கப்பட்டது. இதற்கு ஈட்டுத் தொகையாக ரூபாய் 2,048 உள்ளூர் வாசிகளிடமிருந்து பெற வேண்டும்.

ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியப் பகுதியிலும் கால்நடை வளர்ப்புத் திட்டத்தின்கீழ் கீழ்க்காணும் பணி இனங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன :—

1. கால்நடை மருந்தகங்கள் கட்டுதலும், தற்போதுள்ள மருந்தகங்களை மேம்படுத்தலும்.

2. கால்நடை உதவி மருத்துவர்களுக்குக் குடியிருப்புகள் கட்டுதல்.

3. கால்நடைகள், பால் பண்ணை, கோழித்தீவனம் மேம்பாட்டுக்காக உள்ளூர் நிலைமைகளின் அடிப்படையில் ஊராட்சி ஒன்றியங்கள் தெரிந்தெடுக்கவிருக்கும் திட்டங்கள்.

[1978 மார்ச் 20

இணைப்பு சாலை வேலைகளை நிறைவேற்ற அரசு மானியமும், பொது மக்கள் நன்கொடைத் தொகை விகிதங்களும் பின் வருமாறு :—

| வட்டாரத்தின் வகை. | அரசு மானியம் (சதவீதம்). | பொதுமக்கள் நன்கொடைத் தொகை (சதவீதம்). |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| I | 50 | 50 |
| II | 55 | 45 |
| III | 60 | 40 |
| IV | 70 | 30 |
| V | 75 | 25 |
| VI | 80 | 20 |

அரிசனங்கள் வசிக்கும் பகுதிகளில் குடிநீர் வழங்கும் திட்டத்திற்கென 15 சதவீதமும், இணைப்புச் சாலைகளுக்கென 10 சதவீதமும், அரிசன நலத்துறை நிதிகளிலிருந்து பெறப்படுகிறது. குடிநீர் வழங்கல் இணைப்புச் சாலைகளுக்கென ஒதுக்கப்பட்டுள்ள தொகையில் 20 சதவீதமும் அரிசனங்கள் பயனுக்காக செய்யப் பெறும் பணிகளுக்காக ஒதுக்கப்பட வேண்டும்.

(இ) பள்ளிக் கட்டிடங்கள்.

1974-75 ஆம் ஆண்டு தொடக்க, முதல் தொடக்கப் பள்ளிக் கட்டிடங்கள், உயர் தொடக்கப் பள்ளிக் கட்டிடங்கள் ஆகியவற்றுக்கு முறையே ரூ. 20,000, ரூ. 30,000-த்தை உயர் மதிப்பீடாகக் கொண்டு கீழ்க்கண்டவாறு அரசு மானியமும் பொது மக்கள் நன்கொடைத் தொகை விகிதமும் திருத்தி அமைக்கப்பட்டுள்ளது:—

| வட்டார வகை. | அரசு மானிய விகிதம். | பொதுமக்கள் நன்கொடை விகிதம். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| I | 50 | 50 |
| II | 55 | 45 |
| III | 60 | 40 |
| IV | 70 | 30 |
| V | 75 | 25 |
| VI | 80 | 20 |



1978 மார்ச் 20]

மலைப்பகுதி வட்டாரங்களைப் பொறுத்த மட்டில், கட்டுமானப் பணிகளுக்கான மதிப்பீட்டின் உச்ச வரம்பு 25 சதவீதம் உயர்த்தப்பட்டுள்ளது. 1978-79 நிதிநிலை மதிப்பீட்டில் ஊர்ப்புறங்களில் பள்ளிக் கட்டிடங்கள் கட்டுவதற்கென ரூ. 75 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

(ஈ) சாலைகளைப் பேணுதல்.

1958 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சி ஒன்றியங்கள் சட்டத்தின் 131 ஆம் பிரிவின்கீழ் ஊராட்சி ஒன்றியங்களின் பொறுப்பிலுள்ள சாலைகளைப் பேணுவதற்கென ''உள்ளூர் சாலைகள் மானியம்'' ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஒவ்வொராண்டும் வழங்கப்படுகிறது. 1978—79 ஆம் ஆண்டு நிதிநிலை மதிப்பீட்டில், மக்கள் தொகை, சாலைகளின் நீளம் ஆகியவற்றின் அடிப்படையில் ஊராட்சி ஒன்றியங்களுக்கு பிரித்து வழங்குவதற்காக 2,25 இலட்சம் ரூபாய் கொடுக்கப்பட்டுள்ளது.

(உ) சிறுபாசனம்.

சிறுபாசன அமைப்புகள் பாதுகாக்கப்படவும், பராமரிக்கப்படவும், ஊராட்சி ஒன்றியங்களிடம் சட்ட பூர்வமாக ஒப்படைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு பாசன அமைப்பும் குறைந்தது ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறையேனும் கவனிக்கப்படும் அடிப்படையில் அமைந்த பராமரிப்புத் திட்டத்தின்படி, ஊராட்சி ஒன்றியங்கள் சிறு பாசன அமைப்புகளைப் பராமரித்து வருகின்றன. ''உள்ளூர்ப்பாசன மானியம்'' என்னும் தலைப்பின் கீழ் அளிக்கப்பெற்றுள்ள நிதி ஒதுக்கீட்டிலிருந்து ஊராட்சி ஒன்றியங்கள் தொகையைச் செலவிடும். இதற்கென்று ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகைகளை மட்டும் கொண்டு ஊராட்சி ஒன்றியங்கள் இப்பாசன அமைப்புகளை சரிவர பராமரிக்க இயலவில்லை என்று தெரியவந்ததால் ஒன்றியங்களின் பளுவைக் குறைக்கும் பொருட்டு, 100 ஏக்கரும் அதற்கு மேற்பட்டும் உள்ள ஆயக்கட்டைக் கொண்ட எல்லா பாசன அமைப்புகளையும் பொதுப்பணித்துறை எடுத்துக்கொள்ளும் என்று அரசு ஆணை பிறப்பித்துள்ளது. 100 ஏக்கருக்குக் குறைவான ஆயக்கட்டை கொண்ட சிறுபாசன அமைப்புகளை ஊராட்சி ஒன்றியங்களே தொடர்ந்து பராமரித்து வரும். 100 ஏக்கருக்கு குறைவான ஆயக்கட்டைக் கொண்ட ஏரிகள் மட்டுமே ஊராட்சி ஒன்றியங்களின் பராமரிப்பின்கீழ் விடப்பட்டு விட்டாலும் ஏரிகளைப் பராமரிக்கும் வகையில் ஊராட்சி ஒன்றியங்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் மானியங்களில் எவ்வித குறைப்பும் இன்றி தற்போதைய அளவிலேயே மானியங்களை அரசு வழங்கும். ஊராட்சி ஒன்றியங்கள்

தங்கள் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள இந்த ஏரிகளை மேலும் சிறந்த முறையில் பராமரித்து வரும் நிலையில் இருக்குமென்று எதிர் பார்க்கப்படுகிறது.

1978—79 வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத் திட்டத்துக்கென 25 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.

### 4. உற்பத்தித் திட்டங்கள்;

#### வேளாண்மை, கால்நடை வளர்ச்சி, மீன்வளம்;

1978—79-ல் செய்யப்பட்ட ஒதுக்கீடுகளின் அடிப்படையில், வேளாண்மை, கால்நடை வளர்ப்புத் திட்டங்களை ஆண்டுத் திட்டங்களாக ஊராட்சி ஒன்றியங்கள் செயல்படுத்தி வருகின்றன. ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஒரு குறிப்பிட்ட தொகை ஒதுக்கீடு செய்யப்படுகிறது. வேளாண்மைத் துறையின் ஆலோசனையுடனும் அவ்வப்போது பிறப்பிக்கப்படும் அரசாணைகளில் வரையறுக்கப்பட்டுள்ள சில திட்டவட்டமான நடைமுறையின் அடிப்படையிலும், தாமே திட்டங்கள் வகுத்துக்கொள்ள ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் முழு உரிமை வழங்கப்பட்டுள்ளது. சம் பந்தப்பட்ட மாவட்டத் தொழில் நுட்ப அதிகாரிகளின் ஆலோசனையுடன் ஊராட்சி ஒன்றியங்களால் இத்திட்டங்கள் வகுக்கப்பட்டு, செயல்படுத்தப்படுகின்றன.

ஊராட்சி ஒன்றியங்கள் கீழ்க்காணும் திட்டங்களை மேற் கொண்டுள்ளன;—

#### (அ) வேளாண்மை,

(1) வேளாண்மை டெப்போ—கிடங்கு கட்டுதல்,

(2) ஊராட்சி மலைத் தோட்டங்களைப் பராமரித்தல்.

(3) மாவட்ட வேளாண்மை அதிகாரிகள் ஆலோசனையுடனும் மாவட்ட ஆட்சித்தலைவர் ஒப்புதலுடனும் உள்ளூர்ப் பகுதிக்கேற்ப கீழ்க்காணும் திட்டங்களைப் போன்று ஊராட்சி ஒன்றியங்கள் தெரிந்தெடுக்கவிருக்கும் ஏனையத் திட்டங்கள்.

(i) ஊராட்சிகளுக்கும் ஊராட்சி ஒன்றியங்களுக்கும் சாதனங்கள் வழங்குதல்.

(ii) தனிப்பட்டவர்களுக்குச் சாதனம் வழங்குதல்.

(iii) உதவிகள் / விரிவாக்குதல்—கிராம விழாக்கள், கண்காட்சிப் போட்டிகள் முதலியன.



(iv) வேளாண்மை விரிவாக்கப்பணி—விளக்கப்பாத்திகள் அமைத்தல்.

(v) தனிப்பட்டவர்களுக்கு பசுந்தழை உர விதைகள் வழங்குதல்.

(vi) தனிப்பட்டவர்களுக்கு விதைகளும் நாற்றுக்களும் வழங்குதல்.

1978-79 வரவு-செலவு திட்ட மதிப்பீட்டில் வேளாண்மை திட்டங்களை நிறைவேற்றுவதற்கென 43 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 1978-79-ல் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் 11,497 ரூபாய் மானியமாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதற்குச் சம மாக 9,245 ரூபாய் உள்ளூர்வாசிகள் செலுத்த வேண்டும்.

| | | ரூ. |
|---|---|---|
| (i) | வேளாண்மை டெப்போ-கிடங்கு கட்டுதல் .. .. .. | 2,500 |
| (ii) | ஊராட்சி மலைத்தோட்டங்கள் பராமரிப்பு .. .. .. | 700 |
| (iii) | ஊராட்சி ஒன்றியங்கள் தெரிந்தெடுக்கும் திட்டங்கள் .. | 8,297 |
| | மொத்தம் .. | 11,497 |

#### (ஆ) கால்நடை வளர்ப்பு.

இத்திட்டத்தின்கீழ் அரசு மானியமாக 10 லட்சம் ரூபாய் தனியே ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் 2,674 ரூபாய் மானியமாக ஒதுக்கப்பட்டது. இதற்கு ஈட்டுத் தொகையாக ரூபாய் 2,048 உள்ளூர் வாசிகளிடமிருந்து பெற வேண்டும்.

ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியப் பகுதியிலும் கால்நடை வளர்ப்புத் திட்டத்தின்கீழ் கீழ்க்காணும் பணி இனங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன:—

1. கால்நடை மருந்தகங்கள் கட்டுதலும், தற்போதுள்ள மருந்தகங்களை மேம்படுத்தலும்.

2. கால்நடை உதவி மருத்துவர்களுக்குக் குடியிருப்புகள் கட்டுதல்.

3. கால்நடைகள், பால் பண்ணை, கோழித்தீவனம் மேம்பாட்டுக்காக உள்ளூர் நிலைமைகளின் அடிப்படையில் ஊராட்சி ஒன்றியங்கள் தெரிந்தெடுக்கவிருக்கும் திட்டங்கள்.

(இ) மீன் வளம்.

இத்திட்டத்தில் மாநிலம் முழுவதற்கும், "ஊராட்சி ஒன்றியங்களுக்கு மானியங்கள்" என்ற தலைப்பின்கீழ் ரூபாய் 2 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வேளாண்மை, கால்நடை வளர்ப்புத் துறைகளைப் போன்று ஊராட்சி ஒன்றியங்களின் மீன்வளங்களின் மேம்பாட்டுக்கென்று திட்டவட்டமான ஒதுக்கீடுகள் செய்யப்படுகின்றன. மீன் வளர்ப்பு மேம்பாடு எங்கெங்கு இயலுமோ அந்த ஊராட்சி ஒன்றியங்களில் மட்டும் இத்திட்டம் செயற்படுத்தப்படுகிறது.

1978-79 ஆம் ஆண்டில் இந்திட்டத்தின்கீழ் கீழ்காணும் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன:

(1) மீன் குஞ்சு வளர்ப்பு-பேணுதல்,

(2) மீன் குஞ்சுகளை வழங்குதல்,

(3) ஏரிகளைப் புதுப்பித்தல் (குறைந்த அளவு தேவைகள் முழுவதற்கும்).

5. நலப்பணித் திட்டங்கள்.

(அ) தொடக்கக் கல்வி.

ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில், ஒன்றியங்கள், அவற்றின் நிதி வசதிக்கேற்றவாறு ஒரு நியாயமான நிதியை ஒதுக்கி தொடக்கப் பள்ளிகளைத் திறந்து, பேணி, விரிவுபடுத்தி, மேம்படுத்துவது, மேலும், அப்பகுதிகளில் தனியார் தொடக்கப் பள்ளிகளுக்கு மானியங்கள் வழங்குவது ஆகிய ஊராட்சி ஒன்றியங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வது 1958 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்திலுள்ள 65(c) பகுதியின்படி ஊராட்சி ஒன்றிய மன்றங்களின் கடமையாகும். ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் தொடக்கக் கல்வியை நிர்வகிக்கும் முழுப்பொறுப்பு சட்ட அடிப்படையில் ஊராட்சி ஒன்றியத்தை சேர்ந்ததாகும். ஊராட்சி ஒன்றிய பகுதிகளில் 28,435 பள்ளிகள் (தொடக்க, உயர் தொடக்க, உதவி பெறும் பள்ளிகள்) உள்ளன. இவற்றில் 23,077 பள்ளிகள் ஊராட்சி ஒன்றியங்களால் நடத்தப்பெறுகின்றன. எஞ்சியவை உதவி பெறும் நிறுவனங்களாகும். ஊராட்சி ஒன்றிய பள்ளிகள் உதவி பெறும் பள்ளிகளில் 1.31 இலட்சம் ஆசிரியர்கள் 48.13 இலட்சம் மாணவர்களுக்குக் கல்வி கற்பிக்கின்றனர்.



1972-73 ஆம் ஆண்டிலிருந்து அரசின் செலவு, ஊராட்சி ஒன்றியச் செலவின் பங்கு ஆகிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

| ஆண்டு. | | | அரசின் செலவு. | ஊராட்சி ஒன்றியச் செலவின பங்கு. |
|---|---|---|---|---|
| | | | (ரூபாய் இலட்சத்தில்.) | |
| 1972—73 | .. | .. | 3,200.00 | 570.00 |
| 1973—74 | .. | .. | 3,432.41 | 372.00 |
| 1974—75 | .. | .. | 3,636.97 | 392.00 |
| 1975—76 | .. | .. | 3,898.28 | 432.04 |
| 1976—77 | .. | .. | 4,300.02 | 662.94 |
| 1977—78 | .. | .. | 5,069.72 | 741.18 |
| 1978—79 | .. | .. | 5,468.00 | 817·06 |

மதிய உணவுத் திட்டம்.

ஊராட்சிகளும், ஊராட்சி ஒன்றியங்களும் அமைக்கப்பட்டதன் மூலம் நாட்டு வளர்ச்சிப் பணிகளில் உள்ளாட்சிகளைப் பங்கு பெறச் செய்து மதிய உணவுத் திட்டத்தை அரசு நிலைத்துச் செயல்படச் செய்ய முடிகிறது. இம்மாநிலத்திலுள்ள பெரும்பாலான ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் இத்திட்டம் செயல்பட்டு வருகிறது. ஒவ்வொரு பள்ளியிலும் மதிய உணவுக் குழு உள்ளது. இதில் ஊராட்சித் தலைவர் தலைவராகவும், பள்ளித் தலைமை ஆசிரியர் செயலாளராகவும் பணியாற்றுகிறார்கள். கோரிக்கை எண் 17-ல் ரூபாய் 420.94 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

(ஆ) மக்கள் நல்வாழ்வுப் பணிகள்.

ஆரம்ப சுகாதார நிலையங்கள்.— ஆரம்ப சுகாதார நிலையம் சமுதாயத்துக்கு நோய் தடுப்பு சிகிச்சை அளிப்பது, நோய் சிகிச்சையளிப்பது மற்றும் மக்களின் உடல் நலன் நாளடைவில் ஊட்டம் பெறச் செய்வது ஆகிய பல்நோக்குடன் நிறுவப்பட்டதாகும். 374 வட்டாரங்களிலும் ஆரம்ப சுகாதார நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன. பத்து வட்டாரங்களில் ஒரு கூடுதல் தொடக்கச் சுகாதார நிலையம் நிறுவப்பட்டுள்ளது.

தாய்-சேய் நல நிலையங்கள்.— தாய் சேய்-நலப் பணிகளைச் செயல்படுத்துவது ஊராட்சி ஒன்றியங்களின் பொறுப்பாகும். இத்திட்டத்திற்காக ஊராட்சி ஒன்றியங்கள் செய்யும் மொத்தச் செலவில் 3-ல் 2 பங்கை அரசு உதவி மானியமாகத் தருகிறது. ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் செயற்படும் தாய்-சேய் நல

நிலையங்களின் மொத்த எண்ணிக்கை 2,820 ஆகும். 1978–79 ஆம் ஆண்டில் இந்த இனத்தின்கீழ் ரூபாய் 80 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

ஊராட்சி ஒன்றிய மருந்தகங்கள்.—மருந்தகங்களை நிறுவுவதும், நிர்வகிப்பதும் ஊராட்சி ஒன்றியங்களின் பொறுப்பாகும். மருந்தகங்களை நிர்வகிப்பதற்குத் தேவையான நிதிகளை ஊராட்சி ஒன்றியங்கள் ஒதுக்குகின்றன. ஊராட்சி ஒன்றிய மருந்தகங்களைத் தவிர, கிராம மருந்தகங்களும், ஊராட்சிகளில் உள்ளன. மருந்தகங்களை நிர்வகிப்பதற்காகும் மொத்தச் செலவில் 50 சதவிகிதம் (ஆண்டொன்றுக்கு ரூபாய் 5,400-க்கு மேற்படாமல்) உதவி மானியம் பெற ஊராட்சி ஒன்றியம் தகுதி பெற்றதாகிறது. 1978—79 ஆம் ஆண்டில் ரூபாய் 5 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

குடும்ப நலத் திட்டம்.—தங்களுடைய பகுதிகளில் குடும்ப நலத் திட்டப் பணிகளை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு ஊராட்சி ஒன்றியங்கள் பொறுப்பாக்கப்பட்டுள்ளன. சீரமைக்கப்பட்ட குடும்ப நலந் திட்டத்தின்கீழ் இம்மாநிலத்திலுள்ள 374 வட்டாரங்களும் கொணரப்பட்டுள்ளன.

(இ) சமூகக் கல்வி.

தற்போது 13,392 சமூகக் கல்வி நிலையங்கள் உள்ளன. கிராமங்களில் வயது வந்தோர், நாட்டு நடப்புச் செய்திகளின் மீது அவர்களுக்குள் விவாதிக்கும் ஒரு நிலையமாக இவை அமைக்கப்பட்டுள்ளன. உள்ளூர் பள்ளி ஆசிரியர்கள் அல்லது படித்தவர்கள் வேறு யாரேனும் இதன் அமைப்பாளராக நியமிக்கப்படுகிறார்கள். அவர்கள் செய்தித் தாள்கள், இதழ்கள் ஆகியவற்றைப் படித்து விவாதங்களைத் துவக்கி வைக்க உதவுகின்றனர்.

ஊராட்சிகளில் வானொலிப் பெட்டிகளை நிறுவும் திட்டம் தொடர்ந்து தீவிரமாகச் செயற்பட்டதனால், மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதியில், இம்மாநிலத்திலுள்ள எல்லா ஊராட்சிகளிலும், வானொலிப் பெட்டிகள் வழங்கப்பட்டு விட்டன. ஊராட்சித் தலைமையிடங்கள் அனைத்திலும் வானொலிப்பெட்டிகள் அமைக்கப்பட்டுவிட்டன. ஊராட்சிகளிலுள்ள சிற்றூர்களிலும் இப்பொழுது வானொலிகள் நிறுவப்படுகின்றன. 41,105 வானொலிப் பெட்டிகள் இதுவரை மாநிலத்திலுள்ள ஊர்கள், சிற்றூர்களில் அமைக்கப்பட்டுள்ளன.

ஐந்தாண்டுத் திட்டங்களில் மக்களின் கவனத்தை ஊக்குவிப்பதற்கும், ஆக்கப் பணிகள், திட்டங்கள் ஆகியவற்றிற்கு மக்களின் ஆதரவைப் பெறுவதற்கும் கிராம வானொலி மன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இம்மன்றங்கள் நிகழ்ச்சிகளைக் கேட்டு விவாதிக்கும் குழுக்களாகச் செயல்படுகின்றன. இன்றைய நிலவரப்படி 14,220 கிராம வானொலி மன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன.





(ஈ) மகளிர் குழந்தைகள் நலம்.

1962–63 ஆம் ஆண்டு தொடக்கத்திலிருந்தே, ஓர் ஊராட்சிக்கு ஒரு மகளிர் மன்றம் வீதம், ஊராட்சி ஒன்றியத்துக்கு குறைந்தது 30 மன்றங்கள் ஊர்ப்புறங்கள் அனைத்திலும் நிறுவப்பட்டுள்ளன. இம்மன்றங்களின் மூலம் மக்களிடையே கருத்துக்கள் பரிமாறிக் கொள்ளப்படுகின்றன. தற்போது கிராமப்புறப் பகுதிகளில் 12,356 மகளிர் மன்றங்கள் செயல்படுகின்றன. இம்மன்றங்களின் மூலமாக கிராமப்புறத்திலுள்ள மகளிர், தையல், ஊட்டச்சத்து உணவு முறைகள் மற்றும் குடும்ப நலம் போன்ற குடும்ப வாழ்க்கைக்குத் தேவையான எல்லா முறைகளிலும் அனுபவம் பெறுவதற்கு வாய்ப்புகள் பெறுகின்றனர். ஒவ்வொரு வட்டாரத்திலும் 30 மகளிர் மன்றங்கள் உள்ளன. மகளிர், குழந்தைகள் நலத்தைப் பேணுவதற்கென தற்போது ஒவ்வொரு வட்டாரத்திற்கும் ரூபாய் 4,000 வழங்கப்படுகிறது.

6. சிறப்புத் திட்டங்கள்.

(அ) செயல்முறை ஊட்டச் சத்துணவுத் திட்டம்.

மத்திய அரசு, 'யூனிசெப்', மாநில அரசு ஆகியவற்றின் உதவியுடன் 1962–63 ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் முதல் முறையாக செயல் முறை சத்துணவுத் திட்டம் தொடங்கப் பெற்றது.

கிராமப் பகுதிகளில் குறிப்பாகத் தாய்மார்களும், குழந்தைகளும் சத்துணவு உட்கொள்ளும் நிலையைப் பழக்கத்தில் கொண்டு வருவதும், பரப்புவதும், சத்துணவுப் பொருட்களைப் பெருமளவில் உற்பத்தி செய்யக் கிராம மக்களுக்கு உதவுவதும், குறிப்பாகக் கிராமச் சமுதாயத்தில் உள்ள நலிவுற்ற மக்களுக்கு அவற்றை கிடைக்கச் செய்வதுமே இத்திட்டத்தின் பொதுவான நோக்கமாகும். வேளாண்மைத் துறை, சுகாதாரத் துறை, கல்வித்துறை மற்றும் நாட்டு மக்கள், குறிப்பாகக் கிராமப் பகுதிகளிலுள்ள தாய்மார்கள், குழந்தைகளின் சத்துணவு உட்கொள்ளும் நிலையை உயர்த்துவதை நோக்கமாகக் கொண்ட பிற முகவர் நிறுவனங்கள் ஆகியவற்றுக்கிடையே கல்விப் பணிகளை ஒருங்கிணைக்கும் திட்டமாக இச்சத்துணவுத் திட்டம் விளங்குகிறது.

1962-63 ஆம் ஆண்டிலிருந்து இத்திட்டம் 61 வட்டாரங்களுக்கு விரிவுப்படுத்தப் பெற்றுள்ளன. இவற்றில், 38 வட்டாரங்களில் செயல்முறைச் சத்துணவுத் திட்டம் முடிவுற்றது. 23 வட்டாரங்களில் இத்திட்டம் செயல்பட்டு வருகிறது.

[1978 மார்ச் 20

ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் செயல்முறை ஊட்டச் சத்துணவுத் திட்டம் மேற்கொள்ளப்பட்ட வட்டாரங்களில் இத் திட்டம் 6 ஆண்டுக் காலத்திற்குச் செயலில் இருக்கும். திட்ட காலத்தில் செய்ய வேண்டிய பணிகளுக்கான விரிவான திட்டம் ஒன்று வகுக்கப்பட்டு மத்திய அரசு, 'யூனிசெப்', மாநில அரசு ஆகியவற்றால் ஒப்புதல் அளிக்கப்படுகிறது. திட்டம் செயல்படும் காலத்திற்கு உதவித் தொகை வழங்கும் திட்டத்தில் ஒப்புதல் அளிக்கப் பெற்ற நிதி ஒதுக்கங்களைக் கொண்டு, ஒவ்வோராண்டும் என்னென்ன பணியைச் செய்து முடிக்க வேண்டுமென்பதைக் குறிப்பிட்டு அந்த வகையில் முன்னைய ஆண்டுகளில் பெற்ற அனுபவத்தின் அடிப்படையில் ஆண்டுத் திட்டங்கள் வகுக்கப் பெறுகின்றன. திட்ட காலத்தில், திட்டத்தினைச் செயல்படுத்தும் வட்டாரம் ஒவ்வொன்றுக்கும் பொருள்கள் வடிவிலும், ரொக்க வடிவிலும் ரூ. 1·6 இலட்சம் அளவிற்கு 'யூனிசெப்' நிறுவன உதவி கிடைக்கப் பெறுகிறது. இத்திட்டத்தில் பணியாளர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்கான செலவு முழுவதையும் 'யூனிசெப்' நிறுவனம் ஏற்றுக் கொள்கிறது. தவிர, ஒவ்வொரு வட்டாரத்திலும் 10 மகளிர் மன்றங்களையும், 5 இளைஞர் மன்றங்களையும் உருவாக்க ரொக்க உதவியாக ரூ. 9,500-ம் கொடுக்கப்படுகிறது. திட்டம் செயல்பட்டு வரும் வட்டாரங்கள் ஒவ்வொன்றிற்கும் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கென ஆண்டொன்றுக்கு ரூ. 34,000-ம் முன்னால் திட்டத்தைச் செயல்படுத்திய வட்டாரங்களுக்கு ஒரு ஆண்டுக்கு ரூ. 20,000-மும் மத்திய அரசு உதவித் தொகையாக அளிக்கிறது. இத்திட்டத்தின்கீழ் மாநில அரசு உற்பத்தி வகைப் பணிகளுக்காக ரூ. 51,000 வீதமும், ஊட்டச் சத்து, கல்விப்பணிகளுக்காக ரூ. 50,000 வீதமும் ஒவ்வொரு நிதியாண்டிலும் ஒவ்வொரு வட்டாரத்துக்கும் வழங்குகிறது. சத்துணவுத் திட்டம் செயல்படும் வட்டாரங்களிலுள்ள எல்லாக் கிராமங்களுக்கும், சிற்றூர்களுக்கும், இத்திட்டம் படிப்படியாகச் செயல்படுத்தப்படும். கீழே குறிப்பிட்டுள்ள திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன :—

1. மீன் வளம்.

2. தோட்டக்கலை—

(அ) தலைமையிடத்தில் நாற்றங்கால்.

(ஆ) சமுதாயத் தோட்டம்.

3. கால்நடை வளர்ப்பு—

(அ) கால்நடைப் பண்ணைகளை உருவாக்குதல்.

(ஆ) கோழி முட்டை வளம் பெருக்கும் பிரிவுகள்.

(இ) புழக்கடை பிரிவுகள்.

(ஈ) தீவன மேம்பாட்டுத் திட்டங்கள்.





4. வீட்டுத் தோட்டங்கள்.

5. பள்ளித் தோட்டங்கள்.

6. சத்துணவுக் கல்வி—

(அ) மகளிர் மன்றங்களுக்கும் இளைஞர் மன்றங்களுக்கும் உதவி.

(ஆ) உணவளிப்பது குறித்துச் செயல்முறை விளக்கத் திட்டம்.

7. பொதுச் சுகாதாரப் பணிகள்—

(அ) ஆய்வு.

(ஆ) மருத்துவப் பரிசோதனை.

(இ) தடுப்பு ஊசி போடுதல்.

செயல்முறை சத்துணவுத் திட்டத்திற்கு 1978-79 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 30·00 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

(ஆ) 'கேர்' நிறுவனத்தின் உதவியுடன் குழந்தைகள் காப்பகங்களில் சத்துணவு வழங்கும் திட்டம்.

இத்திட்டம் 2 முதல் 5 வயது வரையிலான குழந்தைகளுக்கும், கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கும் சத்துணவு வழங்குவதை நோக்கமாகக் கொண்ட சிறப்புத் திட்டமாகும். இவர்களெல்லாம் எளிதில் நோய்க்கு ஆட்படும் வகையினர் ஆதலால், இன்றியமையாத வளர்ச்சிக் கால கட்டத்தில் இவர்களுக்குச் சத்துணவு வழங்குவதே இத்திட்டத்தின் குறிக்கோளாகும். ஆண்டில் 300 நாட்களுக்கு 1,30,000 பேர்களுக்குச் சத்துணவு அளிப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தின்கீழ், பயன்பெறுகின்ற ஒவ்வொருவருக்கும் ஒரு நாளுக்கு 80 கிராம் வீதம் பலாகாரம் எனப்படுகின்ற மாவுப் பொருள் உணவும் (அதாவது தானியம், சோயாபீன், மக்காச்சோளம் இவை கலந்த மாவு) 7 கிராம் வீதத்தில் 'சாலாடு' எண்ணெயும் (Salad Oil) அல்லது 'பீநட்' எண்ணெயும் (Peanut Oil) 'கேர்' நிறுவனத்தால் வழங்கப்படுகிறது. குழந்தைகள் காப்பகங்கள் ஒவ்வொன்றிலும் சத்துணவு அளிக்கப்பட்டுப் பயன் பெறுவோரின் உயர்ந்தளவு எண்ணிக்கை 120 ஆகும். அதாவது குழந்தைகள் 80 பேர்; தாய்மார்கள் 40 பேர். தற்போது இந்தச் சத்துணவு வழங்கும் திட்டம் 110 வட்டாரங்களில் அமைந்து கிடக்கின்ற 1,398 குழந்தைகள் காப்பகங்களில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது இவற்றின் மூலம் 1,30,000 குழந்தைகளும், தாய்மார்களும் பயன் பெறுகின்றனர்.

[1978 மார்ச் 20

1978-79 ஆம் ஆண்டில் இத் திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகை ரூ. 19.00 இலட்சமாகும். இத் தொகையில் 'கேர்' நிறுவனத்திற்காகும் நிர்வாகச் செலவுகள், பல்வேறு குழந்தைகள் காப்பகங்களுக்கும் உணவுப் பொருட்களை எடுத்துச் செல்வதற்காகும் போக்குவரத்துச் செலவு, உணவு வழங்குவதற்கு ஆகும் செலவுகள், பால சேவிகைகள், ஆயாக்கள், ஆகியோருக்கு ஊதியம், பாத்திரங்கள் வாங்குவதற்கு ஆகும் செலவு, மற்றும் நிர்வாகச் செலவு ஆகியன அடங்கும்.

### (இ) கிராம முழு வளர்ச்சித் திட்டம்.

வேளாண்மையையே பெரிதும் நம்பியிருக்கின்ற, கிராமப் பகுதிகளில் வாழ்கின்ற மக்களின் நலனை மேம்படுத்தும் உயரிய நோக்குடன், வேளாண்மையை மேம்படுத்தவும், காலத்திற்கேற்ப மாற்றியமைக்கவும் பரிந்துரைகளைச் செய்யும் பொருட்டு இந்திய அரசு வேளாண்மை குறித்த தேசிய ஆணைக்குழு ஒன்றை நிறுவியது. இந்த ஆணைக் குழு, கிராமதானக் கிராமங்களையும், சர்வ சேவா சங்கத்தையும் மேம்படுத்துவதற்காக திட்ட ஆணைக் குழுவுடன் விவாதம் நடத்தியது. கிராமதானப் பகுதிகளில் கிராம நிலங்களுக்குரிய உரிமை முழுவதும் ஏற்கெனவே உள்ளபடியால், குறிப்பாக அந்தப் பகுதிகளிலெல்லாம் முன்னோடி அடிப்படையில் வேளாண்மை மேம்படுத்துவது அல்லது காலத்திற்கேற்ப மாற்றியமைப்பது குறித்த பணிகள் முதற்கண் மேற்கொள்ளப்படலாமென்று வேளாண்மை குறித்த தேசிய ஆணைக் குழு கருதிற்று. மேலும், கிராமதானப் பகுதிகளில் இத்திட்டத்தைச் செயல்படுத்தினால் இது மக்களிடையே பரவலாக ஏற்றுக் கொள்ளப்படும் என்றும், அதன் மூலம் அண்டையிலுள்ள கிராமங்களும் இத்திட்டத்தில் பங்கு கொள்ள முன் வரலாம் என்றும் ஆணைக்குழு கருதியது.

வேளாண்மை குறித்த தேசிய ஆணைக்குழு, கிராம முழு வளர்ச்சித் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக, தமிழ்நாடு திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள மேலநீலிதநல்லூர் வட்டாரத்தைச் சேர்ந்த சின்னக் கோயிலாங்குளம், பெரிய நடுவக் குறிச்சி, சின்ன நடுவக் குறிச்சி, பட்டடைக் கட்டை ஆகிய நான்கு கிராமங்களைத் தெரிந்தெடுத்துள்ளது.

இந்திய அரசின் வேண்டுகோளின்பேரில், 1976 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்களில் மேற்சொன்ன கிராமங்களுக்காக விரிவான திட்டங்கள் தயாரிக்கப்பட்டு இந்திய அரசுக்கு அனுப்பப்



1978 மார்ச் 20]

பட்டன. இந்தத் திட்டத்திற்காக மொத்தம் ரூபாய் 66 இலட்சம் முதலீடு செய்யக் கருதப்பட்டுள்ளது. இத்தொகையை பின்வரும் வகைகளில் செலவிடக் கருதப்பட்டுள்ளது:—

| திட்டத்தின் பெயர். | மொத்த மூலதனம் (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| (1) | (2) |
| 1 வேளாண்மை .. .. .. | 36.49 |
| 2 கால் நடை வளர்ப்பு .. .. .. | 13.83 |
| 3 தொழிற்சாலைத் திட்டங்கள் .. .. | 3.96 |
| 4 குறைந்தளவுத் தேவைகள் திட்டம் .. .. | 8.02 |
| 5 பணியாளர்க்கான செலவு, சில்லரைச் செலவுகள் | 3.70 |
| | 66.00 |

ஆகஸ்டுத் திங்கள் 1977 வரை, மொத்தம் 4.96 இலட்சம் இத்திட்டத்தின் கீழ் செலவாகியுள்ளது.

கிராம முழு வளர்ச்சித் திட்டத்தின் கீழ், நிறைவேற்றப் படுவதற்காக கீழ்க்காணும் திட்டங்களுக்குத் தேவையான செயற்குறிப்புகள் இந்திய அரசிற்கு அனுப்பப்பட்டுள்ளன:

| | ரூபாய். |
|---|---|
| 1 வேளாண்மை .. .. .. | 14,15,975 |
| 2 கால்நடை வளர்ப்பு .. .. | 9,66,025 |
| 3 தொழிற்சாலைகள் .. .. | 1,30,000 |
| 4 பணியாளர்கள், சில்லரைச் செலவுகள் .. | 1,88,000 |
| | 27,00,000 |

மத்திய அரசிடமிருந்து, இதற்கான நிதி ஒதுக்கீடு எதிர்பார்க்கப்படுகிறது.

### (ஈ) கிராமப்புறப் பகுதிகளில் சாணத்திலிருந்து எரிவாயு தயாரிப்புக் கூடங்கள் நிறுவுதல்

கிராமப்புறப் பகுதிகளில் சாணத்திலிருந்து எரிவாயு தயாரிப்புக்கூடம் நிறுவும் திட்டத்தைச் செயல்படுத்த கிராம வளர்ச்சி இயக்குநர் பொறுப்பு வகிக்கிறார்.

ஒவ்வொன்றுக்கும் ஆகும் செலவில் 20 சதவீதம் உதவித் தொகையாக வழங்கப்படுவதற்கு இத்திட்டம் வகை செய்கிறது. எரிவாயுக்கூடம் வெற்றிகரமாக நிறுவப்பட்டவுடன் மேற்கூறிய உதவித் தொகை வழங்கத்தக்கதாகும். மேலும் இத்திட்டத்தினால் பயனடைவோருக்கு நாட்டுடைமையாக்கப் பட்ட வங்கிகளும் கூட்டுறவு வங்கிகளும் கடன் வழங்கும்.

1976-77 ஆம் ஆண்டில் நமது மாநிலத்தில் சாணத்தி லிருந்து எரிவாயு தயாரிப்புக் கூடங்கள் 1,500 நிறுவப்பட வேண்டுமென்று மத்திய அரசு இலக்கு நிர்ணயித்திருக்க அந்த ஆண்டில் 1,493 கூடங்கள் நிறுவப்பட்டன.

### சாண எரிவாயுத் திட்டம்

1977-78 ஆம் ஆண்டுக்கான இலக்கு எண்ணிக்கையான 2,100 சாண எரிவாயு முறை நிறுவப்பட சீரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். தமிழ்நாடு வேளாண்மைத் தொழில் கழகம், தமிழ்நாடு வேளாண்மைத் தொழிற்பணிக் கூட்டுறவு நிறுவனம் மற்றும் தமிழ்நாடு சிறு தொழில் கழகம் மற்றும் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில்கள் வாரியத்தால் ஒப்ப ளிக்கப்பட்ட தனியார் தொழிற்கூடங்கள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள தொழிற் பிரிவுகள் ஆகியவைகளிடமிருந்து மட்டுமே வாங்க வேண்டும். மேற்கண்ட நிறுவனங்களிட மிருந்து வாங்கப்பட்ட சாண எரிவாயு முறைகளுக்கு மட்டுமே உதவித் தொகை அனுமதிக்கப்படும்.

### (உ) தமிழ்நாட்டில் தொலைக்காட்சிப் பொருள்களை நிறுவுதலும் பேணுதலும்

வேளாண்மை, பொது சுகாதாரம் மற்றும் பல துறை களில் அடைந்துள்ள முன்னேற்றத்தையும் அவை பற்றிய நுட்பத்தையும் ஊர்ப்புற மக்களுக்கு போதிப்பதற்காகவும் விளம்பரம் செய்வதற்காகவும் சமுதாயத் தொலைக்காட்சிப் பெட்டிகளை நிறுவும் பணி மேற்கொள்ளப்பட்டது. இந்திய அரசால் அன்பளிப்பாக அளிக்கப்பட்ட 125 தொலைக்காட்சிப்



பெட்டிகள் செங்கற்பட்டு, வட ஆர்க்காடு மற்றும் தென் ஆர்க்காடு மாவட்டங்களில் நிறுவப்பட்டுள்ளன. மேலும், 195 தொலைக்காட்சிப் பெட்டிகள் வாங்கப்பட அரசு ஏற்பாடு செய்துள்ளது. இதில் 7 பெட்டிகள் ஏற்கனவே பெறப்பட்டு, நிறுவப்பட்டும் விட்டன. நன்முறையில் இயங்கி வரும் இப் பெட்டிகளை ஊராட்சி வானொலி பராமரிப்பு நிறுவனம் பராமரித்து வருகின்றது. ஊராட்சிகளில் நிறுவப்பட்டுள்ள தொலைக்காட்சிப் பெட்டிகளை மட்டுமின்றி, நகராட்சிகள் மற்றும் சென்னை மாநகராட்சியால் நிறுவப்பட்டுள்ள தொலைக் காட்சிப் பெட்டிகளையும் பராமரிப்பதற்காக ஊராட்சி வானொலி பராமரிப்பு நிலையத்தில் 'தொலைக்காட்சிப் பிரிவு ஒன்றை ஏற்படுத்த அரசு ஆணையிட்டுள்ளது.

### (ஊ) பூமிதானமும் கிராமதானமும்.

தமிழ்நாடு பூமிதான சட்டம் 1958-ல் (தமிழ்நாடு சட்டம் XV—1958) கண்ட பிரிவு 3-ன் படி, தமிழ்நாடு மாநில பூமிதான வாரியம் 1959 இல் ஏற்படுத்தப்பட்டது. பூமி தானம் மற்றும் கிராமதானத்தின்கீழ் அன்பளிப்பாக அளிக் கப்படும் நிலங்களைப் பெற்று நிலமற்ற ஏழைகளுக்கு ஒழுங்காக அளிக்கும் பணியை இந்த வாரியம் ஏற்று நடத்துகிறது.

**பூமிதானம்;**

திரு. ஆச்சார்ய வினோபாபாவே அவர்களால் தொடங் கப்பட்டு நிலமற்ற ஏழைகள், கூட்டுறவுச்சங்கங்கள், சர்வோ தய ஊராட்சிகள் ஆகியவைகளுக்கு சமுதாய நலன் அடிப் படையில்—இனமாகப் பெற்ற நிலங்களை வழங்கும் திட்டமே பூமிதானம் எனப்படும்.

தக்க விசாரணைக்குப் பின்னர் அறிவிப்பு வெளியிட்ட பிறகு தமிழ்நாடு அரசிதழில் வெளியான பின்பே, அந்த நிலங்கள் வாரியத்தின் உடைமையாகும்.

கிராமதானம்:

'கிராமதான கிராமம்' என்பது—ஒரு குறிப்பிட்ட கிரா மத்தில் தங்கியுள்ள—சொந்தத்தில் நிலம் கொண்டவர்களில் —மூன்றில் இரண்டு பங்கிற்கு குறையாதவர்கள் தாமாகவே முன்வந்து தங்களுக்குச் சொந்தமான நிலம் அனைத்தையும்

கிராமதானமாக அளிக்கும் பகுதியாகும். மேலும் ஒரு குறிப்பிட்ட கிராமத்தில் பாதிக்கு மேல் நிலத்தைச் சொந்தமாக உடையவர் மனமுவந்து அளித்தாலும் அதுவும் கிராமதான கிராமமாக எடுத்துக்கொள்ளப்படும். கிராமதானம் அளிப்போர் கொடுப்பதுடன், அந்நிலத்தில் 19/20 பங்கினில் பயிர் செய்யவும், மீதி 1/20 பங்கினை நிலமற்ற ஏழைகளுக்காக அளிக்கும் வகையுடன் தமக்கு அந்நிலங்களின் மீதுள்ள உரிமையை கிராம சபைகளுக்காக விட்டுக் கொடுக்கவேண்டும்.

பூமிதான நிலங்களைப் பெற்றவர்கள்—அதனைப் பயிர் செய்யும் வகையில் உதவுவதற்காக சில மாவட்டங்களில் 'பூமிதான கூட்டுறவுச் சங்கங்கள்' ஏற்படுத்தப்பட்டுள்ளன. பூமிதானமாகக் கிடைத்த நிலம் 20 ஏக்கருக்குக் குறையாமல் ஒரே நிலமாக இருக்குமானால் அந்த நிலத்தை சீர்திருத்தி—பயிர் செய்யும் பணியை தமிழ்நாடு சர்வோதய மன்றத்திலிருந்து இப்பணிகளுக்காக பண உதவியை பெற்று, அந்நிலங்களைப் பெற்றவர்களின் உழைப்பையும் பெற்று, 'சர்வ சேவைப் பண்ணைகள் நிறைவேற்றும். அந்த நிலங்கள் முழுவதும் முன்னேற்றம் பெறும் வரை, அந்த நிலத்தைப் பெற்றவர்கள் ஊதியமும் பெறுவர். முதலில் செலவழித்த தொகையைப் பெற்ற பின்னர் அந்த நிலம் முதலில் அளிக்கப்பட்டவர்களுக்கு உரிமையாக்கப்பட்டுவிடும்.

பூமிதானமாக தமிழ்நாட்டில் இதுவரை 23,470 ஏக்கர் நிலம் கிடைத்துள்ளது. இதில் 22,240 ஏக்கர் நிலம், நிலமற்ற 15,084 ஏழைகளுக்கு வழங்கப்பட்டுவிட்டன. அவர்களில் பெரும்பான்மையோர் அரிசனங்கள் ஆவர்.





## மானியக் கோரிக்கை எண் 33

### நகர்ப்புற வளர்ச்சி பற்றிய கொள்கைக் குறிப்பு

### நகர்-ஊரமைப்பு

கிராமப்புறக் குடியிருப்புகள் மற்றும் நகரங்கள் ஆகிய இரண்டின் ஒருமுகப்படுத்திய வளர்ச்சியின் மூலமே மக்கள் தம் வாழ்வில் விரும்புகின்ற மேம்பாட்டினைப் பெறமுடியுமென தமிழ்நாடு அரசு தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. கிராம-நகரப் பகுதிகளிடையே உறுதியாக உள்ள பிணைப்பைத் தள்ளிவிட இயலாது. நகர்ப்புறப் பகுதிகளின் திட்டங்கள் யாவும் முழுமைத் திட்டங்கள் மற்றும் விரிவு வளர்ச்சித் திட்டங்கள் மூலம் நிறைவேற்றப்படுகின்றன. கிராமப் பகுதிகளின் திட்டங்கள் யாவும் மண்டலத் திட்டங்கள் மற்றும் உள் மண்டலத் திட்டங்கள் மூலம் நிறைவேற்றப்படுகின்றன. கிராம-நகர்ப் பகுதிகளுக்கான ஒருங்கிணைந்த அணுகுமுறையை உறுதிப்படுத்தும் வகையில், 1971-ம் ஆண்டின் நகர்-ஊரமைப்புச் சட்டம் இங்கு குறிப்பிடப்பட்டபடி முறையான திட்டங்களுக்கு வழிவகை செய்துள்ளது.

2. எனவே, இந்த நகர்-ஊரமைப்பு இயக்கம், உள் மண்டலத் திட்டங்கள், மாவட்டத் திட்டங்கள் ஆகியவற்றைத் தயாரிப்பதில் கவனம் செலுத்தி வருகிறது. இத்திட்டங்களில் இட இணைப்புகளும், பொருளாதார கூறுபாடு திட்டங்களும் வருங்காலத்திற்கான எதிர் நோக்கிய நிலப் பயன்பாடு தொகுதிகளுடன் அறிவியல் முறையின் அடிப்படையில் இணைக்கப்படுகின்றன. இந்த பணி இனி வரும் ஆண்டுகளில் வலுப்பெறும். இத்துடன், இந்தத் திட்டங்களின் ஆயத்தம் செய்யும் அணுகு முறையிலும் ஒரு மாற்றம் ஏற்பட்டுள்ளது. செயற்படுத்தும் பணிகள் ஏதும் மேற்கொள்ளாமல் வெறும் திட்டங்களைத் தயாரிப்பதை மட்டுமே இவ்வியக்கம் இந்நாள் வரை செய்து வந்துள்ளது. தற்போது இத் திட்டங்களைச் செயற்படுத்தக்கூடிய பகுதியையும் கருத்தில் கொள்ளப்பட்டுள்ளது. இதன் மூலமாக இத்திட்டங்கள் மிகுந்த பயன் விளைவிப்பனவாகவும் நடைமுறைக்கு ஏற்ற இயல்பும் பெறுவதோடு இத்திட்டங்களைச் செயற்படுத்தும் இடங்களிலிருந்து கிடைக்கப் பெறும் பின் ஊட்டங்கள் மூலமாக ஒத்துணர்வும், செயற்துறை ஈடுபாடும் கிடைக்கப்பெறும்.

3. ஆகையால், முழுமைத் திட்டங்களைப் பொறுத்த வரையில். இந்த அரசு புதிய ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டங்களைத் தொடங்கியுள்ளது. இத் திட்டங்கள் வீட்டு வசதி, சிறு தொழில்கள், போக்குவரவு, மற்றும் போக்குவரத்து, குடிநீர் மற்றும் வடிகால் ஆகிய பல்வேறு வகைகளைக் கொண்டுள்ளன. மேலும் நகர்ப் பகுதிகளைப்

புதுப்பித்தல், விரைவாக வளரும் இரண்டாம் நிலையிலுள்ள சிறு நகரங்களுக்கும், சிறிய குடியிருப்புகளுக்கும், பொது வசதிகள் செய்தல் ஆகிய கருத்துக்களையும் கொண்டுள்ளன. மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி போன்ற மாநகரங்களைப் பொறுத்தவரையில் ஏற்கெனவே, மத்திய அரசு, உலக வங்கி, உ க நாடுகளின் வளர்ச்சித் திட்டம் ஆகியவற்றின் உதவியுடன் செயல் படுத்தக்கூடிய ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டங்களை இந்த அரசு உருவாக்கியுள்ளது. சென்ற ஆண்டு நவம்பர் மாதத்தில் இந்த மாநகரங்களின் பகுதிகளைப் பார்வையிட்ட உலக வங்கியைச் சேர்ந்த சிறு குழு இந்த அரசு நகரமைப்புத் துறையில் செய்துள்ள நகர்ப் புற திட்டமிடுதலின் தரத்தில் பெரிதும் ஈடுபாடு காட்டியது. 1978-ம் ஆண்டு மார்ச்சு மாத இறுதிக்குள் மத்திய அரசு உதவியுடன் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் முதற் கட்டப் பணி, மதுரை, கோயம்புத்தூர், மாநகரங்களில் தொடங்கும் இப் பணி, வரும் ஆண்டுகளில், மேலும் ஊக்கம் பெறும். மதுரை, கோயம்புத்தூர், மற்றும் திருச்சிராப்பள்ளி, மாநகரங்களுக்கான குடிநீர், சாக்கடை வசதிக்கான முன் முதலீடு ஆய்வுகள் தொடங்க உத்தேசித்துள்ளது. மற்றும் தேசீய தொலை புலனுணர்வு செயலாண்மை நிலையம் (நேஷனல் ரிமோட் சென்சிங் ஏஜென்சி) உதவியுடன் வான் வெளி மூலம் நில ஆய்வு ஏனைய விளக்கங்களை ஆய்வு செய்யும் பணியினையும் இந்த இயக்ககம் ஏற்றுக் கொள்ள இருக்கின்றது.

4. எந்த நகர்ப்புறத் திட்டத்திலும் போக்குவரவு மற்றும் போக்குவரத்துத் திட்டம் பெரும் பங்கு உடையது. சென்னை மாநகரத்திற்கான போக்குவரவுத் திட்டம் ஒன்றை ஏற்கனவே இவ்வியக்கம் ஆயத்தம் செய்து போக்கு வரவுத் துறையில் சிறப்பான திறமை பெற்றுள்ளது. இந்த போக்கு வரவுத் திட்டம் இந்தியாவிலேயே முதன் முதலில் தயாரான திட்டமாகும். இது சென்னை மாநகருக்கான விரைவுப் போக்குவரவு அமைப்பிற்கு (Rapid Transit System) அடிப்படையானதாகவும் உள்ளது. இந்த அனுபவத்தின் அடிப் படையில் இந்த இயக்கம் கோயம்புத்தூர் மாநகருக்கான போக்கு வரவு மற்றும் போக்குவரத்து ஆய்வுகளை முடித்து விட்டு, மதுரை, திருச்சிராப்பள்ளி, சேலம், ஆகிய மாநகரங் களுக்கான ஆய்வுகளை தற்போது மேற்கொண்டுள்ளது. மற்ற நகரங்களில் உள்ள உடனடியாக கவனிக்க வேண்டிய போக்கு வரவுச் சிக்கல்களைத் தீர்க்கவேண்டிய விரைவான பகுப்பாய்வு ஊராட்சி ஒன்றிய அளவில் கிராமப் போக்குவரத்திற்கான சாலை இணைப்புகள், எல்லா வகைப் போக்கு வரவுச் சாதனங் களையும் கருத்தில் கொண்டு மாநில அளவிலான ஒருங்கிணைந்த போக்குவரத்திற்கான திட்டம் தயாரித்தல் முதலியன இவ் வியக்கம் மேற்கொண்டுள்ள மற்ற சில முக்கிய பணிகளாகும்.



5. மேற்குறிப்பிட்ட எல்லாப் பணிகளையும் புதுமையான அடிப்படை விவரங்களை முறைப்படுத்தும் கருவிகளும், வான் வெளி நிழற்பட விளக்கக் கருவிகளும், மனித கணிப்புத் திறனுக்குப் புறம்பான ஆய்வு முறைகளைக் கணக்கிடும் கணி தக் கருவிகளும் இல்லாமல் செய்ய முடியாது. எனவே, இந்த இயக்ககத்தை நவீனமாக்கவும் இத் துறையின் திறனை மேம் படுத்தவும், தமிழக அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. திட்ட அமைப்பில், பொது மக்களின் ஈடுபாடு மிகவும் இன்றி யமையாதது என்பதைக் கருத்தில் கொண்டு, இந்த அரசு உள்ளூர்த்திட்ட அதிகாரக் குழு, மண்டலத் திட்ட அதிகாரக் குழு, மாநில நகர் ஊரமைப்புக் குழு ஆகியவற்றைச் செயற் படுத்தத் தேவையான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. இதன் தொடர்பாகசட்டம் மற்றும் தொழிற் நுட்பம் சம்பந்தப்பட்ட சிக்கல்கள் தீர்க்கப்பட உள்ளன. இந்த இயக்கம், திட்ட அமைப்பு முறையில் பொது மக்களின் கருத்துக்களைப் பெற டெல்ஃபி செயல்முறை போன்ற புதிய நுட்பமான செயல்முறைகளைப் பின் பற்றி வருகின்றது.

6. இந்த இயக்ககம் இந்திய தர நிர்ணய நிறுவனத்தின் (Indian Standards Institution) உதவியுடன், இம்மாநிலத்திற் கான விரிவான வளர்ச்சிக் கட்டுப்பாடு மற்றும் கட்டிட விதிகளை உருவாக்கும் பணியினை மேற்கொண்டுள்ளது. புயல், மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்படும் பகுதிகளுக்கும், மலைப் பாங்கான பகுதிகளுக்கும் வேறு தனிப் பண்பு கொண்ட நிலப் பகுதிகளுக்கும், சிறப்பான விதிகளையும் இவ்வியக்ககம் உருவாக்கி வருகிறது.

7. சமீபத்தில் தமிழகத்தில் ஏற்பட்ட புயல், வெள்ளத் தால் உருவான பயங்கர பெருந் துன்பத்தைத் தொடர்ந்து, இவ்வியக்ககம் செய்த பணி குறிப்பிடத்தக்கது. குடிசை வாழ் மக்களின் துன்பங்களைக் கண்டு புயல் வீசும் சமயத்தில் மக்களைப் பாதுகாக்க காப்புக் கூடமாகவும், மற்ற சமயங் களில் பொது பயனுக்காக சமுதாயக் கூடமாகவும் பயன்படும் தனிப் பண்பு கொண்ட கட்டிடங்களைக் கட்டுவதற்கு இவ் வியக்கம், அறிவியல் அடிப்படையான வடிவமைப்பையும், திட்டத்தையும் உருவாக்கியுள்ளது. இப் பணி இந்திய செஞ்சிலுவைச் சங்கத்தின் பாராட்டையும், உலக நாடுகளின் குழந்தை காப்பு அவசர கால நிதி (UNICEF) போன்ற வெளிநாட்டு முகமைகளின் கருத்தையும் கவர்ந்துள்ளது. மேலும் பெரும் அழிவு தடுப்புத் திட்டம் பற்றி தொழில் நுட்ப திட்ட அறிக்கை ஒன்றையும் இந்த இயக்கம் தற்போது ஆயத்தம் செய்ய முனைந்திருக்கிறது. சென்னையி லுள்ள இந்திய தொழில் நுட்ப கழகத்தின் மனிதப் பண்பியல் மற்றும் சமுதாய அறிவியல் துறையின் உதவி யுடன், புயல். வெள்ளம் போன்ற இயற்கைப் பாதிப்புகளை (Cyclone Disaster Simulator) உருவாக்கியுள்ளது.

இது போன்ற பணிகள் இம்மாநிலத்தில் இயற்கையால் ஏற்பட்ட பெருந்துன்பத்தைக் குறைக்கப் பெரிதும் உதவுவதுடன் இந்நாட்டின் மற்ற பகுதிகளுக்கு ஒரு முன் மாதிரியாகவும் அமையும்.

சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம்.

**சென்னை** பெருநகர் பரப்பு 1,167 சதுர கிலோ மீட்டர் பரப்பளவுள்ள சென்னை நகரமும் மற்றும் புறநகர் பகுதிகளையும் கொண்டுள்ளது. இப்பகுதி அதிகமாகப் பெருகி வரும் மக்கட் தொகையமைந்த தனித்தன்மை வாய்ந்ததாக இருக்கிறது. சென்னைப் பெருநகர் வட்டாரத்தின் திட்டமிட்ட முறையான வளர்ச்சிக்கு உத்திரவாதமளிக்கும் வகையில் அமைக்கப்பட்ட சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சினனாட்களுக்கு முன்னர் அதன் நான்காண்டு சாதனையை முடித்திருக்கிறது. சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் புறநகர்ப் பகுதி மற்றும் புதுநகர திட்டமிடலுக்கும் தன்னை ஈடுபடுத்தி வருகிறது. மேலும் அடிப்படைத் திட்டங்கள் தீட்டலும். சென்னை பெருநகர் பகுதிக்குள் வட்டார வளர்ச்சியை இனிது நிறைவேற்றலும், உலக வங்கி திட்டத்தின் ஒரு பகுதியான குடிநீர் அமைத்தல், சாலைப் பராமரிப்பு, போக்குவரத்து, குடிசைமாற்று மேம்பாடு, சமுதாய அபிவிருத்தித் திட்டம் போன்ற இன்னோரன்ன பிற பலதரப்பட்ட வட்டாரத் திட்டங்களை வகுத்து ஒருங்கிணைத்து நிறைவேற்றலும் இக்குழுமத்தின் செயலாகும். நகர வளர்ச்சியின் பகுதியாக சமுதாய வளர்ச்சியை மேம்படுத்தும் வகையில் இவ்வாண்டின் சிறப்பினை வலியுறுத்தல் செய்யப்பட்டு இருக்கிறது. முன்னேற்றத்திலுள்ள பல தரப்பட்ட திட்டங்களின் சிறப்பான அம்சங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

மணலி திட்டமும் வளர்ச்சியும்:

2. மணலி புறநகர்ப் பகுதி, சென்னை மாநகரின் வடபுறத்தே, மணலி எண்ணூர்-திருவொற்றியூர் சுற்றுபுறங்களிலுள்ள தொழில் நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளிகளுக்கும் இதர தொழிலாளிகளுக்கும் குடியிருப்பு மனைகள் அமைக்கும் வகையில் அபிவிருத்தி செய்யப்படுகிறது. இவ்வபிவிருத்தியின் முதற் கட்டமாக 198 ஹெக்டேர் நிலப்பரப்பில் ரூபாய் 400 இலட்சம் செலவிட உத்தேசிக்கப்பட்டு, 114.78 இலட்ச ரூபாய் இதுவரை செலவிடப் பட்டுள்ளது, 69.20 இலட்ச ரூபாய் கடனுதவியாக புறநகர் வீட்டுவசதி அபிவிருத்திக் கழகத்திடமிருந்து (ஹட்கோ) மணலி பகுதியில் 543 வீடுகள் கட்டுவதற்காகப் பெறப்பட்டுள்ளது. இத்திட்ட மூழுச் செலவு ரூ. 92.66 இலட்சமாகும். 1978-79-ம் ஆண்டிற்காக மேற்கொள்ளப்பட விருக்கும் வேலைபாடுகள் அதாவது மாநில வரவு-செலவு திட்டத்துடனும் 'ஹட்கோ' போன்ற நிறுவனங்களின் வெளிப்புற உதவியுடனும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிப் பகுதி முழுதும் முறை படுத்தப்பட்ட நகர வளர்ச்சியின் குறிக்கோளை அடைவதற்கு உதவும் வகையில் மணலி வளர்ச்சி வேகமாகச் செயல்பட இருக்கிறது.



மறைமலை நகரப் புதுநகரம் :

3. மறைமலை நகர் என்ற பெயருடன் புதிய நகரம் ஒன்று சென்னை மாநகரிலிருந்து தென் மேற்காக 45 கிலோ மீட்டர் தொலைவில் தாம்பரத்திற்கும் செங்கற்பட்டிற்கும் இடையே திட்டமிடப் பட்டுள்ளது. இப்புது நகர் முழுவாக ஒரு இலட்சம் மக்களுக்குக் குடியிருப்பு வசதியளித்து, தன்னிறைவு பெற்றதாக விளங்கும் வகையில் அபிவிருத்தி செய்யப்படுகிறது. இப்புதுநகர் தொழிற்சாலை, குடியிருப்பு, வாணிகம் மற்றும் அறிவுக் கூடங்கள் ஆகியவைகளுக்குமான மனைகள் கொண்டதாக விளங்கும். சமுதாய வசதிகளுக்கான மனைகளும் ஏற்படுத்தப்படுகின்றன. இத்திட்டத்தின் முதல் கட்டமாக 200 இலட்சம் ரூபாய் செலவிட உத்தேசிக்கப்பட்டு, 94.09 இலட்சம் ரூபாய் இதுவரை செலவிடப் பட்டுள்ளது. இவ்வாண்டின் செயற்குறிப்புகள் தீவிர மேம்பாடு முயற்சியைக் கொண்டு தொழிற்சாலைகளையும் மக்களையும் புதிய நகரத்திற்கு கவர்ந்து இழுக்கும் தன்மையுள்ளதாக அமையும். திருவள்ளூரில் புதிய நகரமைப்புக்கான ஆரம்ப ஆய்வுப்பணி தொடங்கப் பெற்று இடத்தினை நேராய்வு செய்யப் பட்டுள்ளது. இதுமாதிரியான பிரிதொரு ஆய்வு கும்மிடிபூண்டியிலும் துவங்க திட்டமிடப்பட வேண்டியுள்ளது.

அடிப்படைத் திட்டமும் வட்டார வளர்ச்சி திட்டமும் :

4. அடிப்படைத் திட்டத்தின் ஒழுங்குமுறை விதிகளைச் செயலாக்கக் கோருதல், விரிவான வளர்ச்சித் திட்டங்களை குறிப்பாக சென்னை நகரத்திலும் மற்றும் பெருநகர பல்வேறு பகுதிகளிலும் முறையாக அமைத்தல் ஆகியவை இத்திட்டத்தில் அடங்கும். கடந்த ஆண்டு சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்திலும், சென்னை மாநகராட்சியிலும் சட்டத்தின் படி வழங்கப்படும் திட்ட அனுமதிகள் வழங்க ஒழுங்கு முறைப் படுத்துப்பட்ட முறைகள் செயலுக்குக் கொண்டு வரப்பட்டு விரைவுபடுத்தப்பட்டு வருகிறது. சென்னை நகர் சம்பந்தப் பட்ட பகுதிகளில் விரிவான வளர்ச்சித் திட்டத்தினை நடைமுறைப் படுத்துவதற்காக 99 திட்டப் பிரிவுகளாக பிரிக்கப் பட்டுள்ளது. இவைகளில் 38 பகுதிகளுக்கான விரிவான திட்டங்கள் இதுவரை அறிவிக்கப் பட்டு அவைகளைத் தயாரிக்கும் பணி பல்வேறு நிலையில்

உள்ளது. நடப்பு ஆண்டில் மேலும் 20 பகுதிகளில் இத்தகைய திட்டம் செயலாக்க அறிவிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

சிறப்பு வளர்ச்சித் திட்டங்கள்:

5. சென்னை நகரத்திற்குள் ஏற்படும் வளர்ச்சியைப் பரவலாக்கும் நோக்கத்துடனும், மற்ற பெருநகர் வளர்ச்சி வட்டாரத்திற்கு உதவும் வகையிலும், சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம், சென்னை பழக்கடைப் பகுதியை திருத்தி அமைத்தல், பேருந்து மற்றும் வாகன நிலையங்கள் மூன்றை அபிவிருத்தி செய்தல், கோயம்பேட்டில் மொத்த வியாபார அங்காடியை அமைத்தல், வட தென் சென்னையில் அலுவலகங்களை உருவாக்க கட்டிடம் கட்டுதல் போன்ற சிறப்புத் திட்டங்களை தொடங்கியுள்ளது, இச்செயல் முறைகளுக்கு திட்டமிடல் 1978-79-ல் முழுமையடைய இருக்கிறது.

சென்னை நகர வளர்ச்சித் திட்டம் :

6. சென்னை பெருநகர் வட்டாரத்தின் திட்டமிட்ட முறையான வளர்ச்சிக்கும் நீண்டகாலத் தேவைக்கும் வருங்கால உடனடித் தேவைக்கும் உறுதியளிக்கும் வகையிலும், சென்னைப் பெருநகர் பரப்பில் வாழும் ஏழை எளிய மக்கட் பகுதிக்கு நேரடியாகப் பயனளிக்கும் முகத்தான் முதலீடுகளை பயன்படச் செய்யும் சென்னை நகர வளர்ச்சித் திட்டம் தயாரிக்கப்பட்டு, அவற்றைச் செயல்படுத்த உலக வங்கியின் உதவியும் பெறப்பட்டுள்ளது. இத்திட்ட வேலைகள் கடந்த ஆண்டு துவங்கின. இரண்டாமாண்டான இவ்வாண்டில் மேலும் பணியின் வேகம் அதிகரிக்கும், இத்திட்டத்தின் பல்வேறு அங்கங்களை அரசுத் துறைகளும் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், குடிசைமாற்று வாரியம், சிறுதொழில் வளர்ச்சிக் குழுமம் போன்ற அரசுச் சார்பு நிறுவனங்களும் நிறைவேற்ற இருக்கின்றன. அவற்றில் தண்ணீர் மற்றும் கால்வாய் வசதிகள், போக்குவரத்து, குடிசை மேம்பாடு சிறு தொழில்கள் மற்றும் குடிசைத் தொழில்கள், மற்றும் மகப்பேறு குழந்தை நலம் ஆகியவை முக்கியமாகும். உலக வங்கி திட்டத்தின்கீழ் அளிக்கப்பட்டுள்ள கூடுதல் பொறுப்பை செவ்வனே செய்ய சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் திறனை வலுவடையச் செய்வது இத்திட்டத்தின் ஒரு முக்கியக் கூறு ஆகும். இதனைக் கருத்திற்கொண்டு கீழ்க் குறிப்பிட்டுள்ள காரணங்களுக்காக தக்க ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது :—

1. திட்டமிடலுக்கும், ஒருமைப்படுத்தலுக்கும், திட்டங்களின் மதிப்பீடு செய்தலுக்கும், சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்திற்கு உதவ தொழில் நுட்ப ஆலோசகர்களின் பணிகளைப்பெறுதல் ;



2. திறம்படச் செயல்களை நிறைவேற்ற இயலச் செய்வதற்கு சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழும அலுவலர்களுக்கும், தன் திட்டங்களை நிறைவேற்றும் நிறுவனங்களில் பணிபுரியும் அலுவலர்களுக்கும் பயிற்சி அளித்தல்.

நகராட்சி நிர்வாகம்.

1920-ம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவு 4-ன்படி அரசு அறிவிப்பின் மூலமாக எந்த நகரத்தையும் அல்லது கிராமத்தையும் நகராட்சியாக அமைக்கலாம். சிறப்பு தேர்வு, முதல், இரண்டு மற்றும் மூன்றும்தர நகராட்சிகளாக கருதுவதற்காக அரசு கீழ்க்காணும் வழிமுறைகளை விதித்துள்ளது.

| எண். நகராட்சியின் தரம். | கணக்கின் படி சாதாரண ஆண்டு வருமானம். | கடந்த 3 ஆண்டுகளில் மொத்த வருமானம். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. சிறப்பு நகராட்சி .. | ரூ. 50 இலட்சம் அதற்கு மேலும். | ரூ. 75 இலட்சம் அதற்கு மேலும். |
| 2. தேர்வு நகராட்சி .. | ரூ. 25 இலட்சம் அதற்கு மேலும். | ரூ. 50 இலட்சம் அதற்கு மேலும். |
| 3. முதல் தர நகராட்சி. | ரூ. 10 இலட்சம் அதற்கு மேலும். | ரூ. 15 இலட்சம் அதற்கு மேலும். |
| 4. இரண்டாம் தர நகராட்சி. .. | ரூ. 5 இலட்சம் அதற்கு மேலும். | ரூ. 7 இலட்சம் அதற்கு மேலும். |
| 5. மூன்றும் தர நகராட்சி. .. | ரூ. 2 இலட்சம் அதற்கு மேலும். | ரூ. 3 இலட்சம் அதற்கு மேலும். |

மேற்சொன்ன சட்டத்தின் பிரிவு 4ஏ-ன் கீழ் நகராட்சியையோ அல்லது குறிப்பிட்ட பகுதியையோ தொழிற்சாலை, தொழிலாளர் அல்லது நிறுவனங்கள் சார்ந்த குடியிருப்பு அல்லது உடல் நலத்திற்கு உகந்த இடங்களை, நகரியமாக அரசு அறிவிக்கலாம். தற்போது 8 நகரியங்கள் உட்பட, 104 நகராட்சிகள் உள்ளன. அவை—

| | |
|---|---|
| சிறப்புத்தர நகராட்சிகள் .. .. | 3 |
| தேர்வுத்தர நகராட்சிகள் .. .. | 12 |
| முதல்தர நகராட்சிகள் .. .. | 29 |
| இரண்டாம்தர நகராட்சிகள் .. | 35 |
| மூன்றும்தர நகராட்சிகள் .. .. | 25 |

[1978 மார்ச் 20]

1977-ம் ஆண்டில் மதுரை மாவட்டத்திலுள்ள சின்னமனூர் நகர பஞ்சாயத்தும், புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள அறந்தாங்கி நகர பஞ்சாயத்தும் புதியதாக மூன்றும் தர நகராட்சிகளாக அமைக்கப்பட்டன. மதுரை மாவட்டத்திலுள்ள மேலூர் நகர பஞ்சாயத்து, 1978 ஜனவரி மாதம் முதல் மூன்றும் தர நகராட்சியாக அமைக்கப்பட்டது. 1977-ல் கீழ்க் கண்டவாறு நகராட்சிகள் உயர்த்தப்பட்டது.

| | | |
|---|---|---|
| 1. | திண்டுக்கல் | .. தேர்வுத் தரம். |
| 2. | திருப்பத்தூர் | .. முதல் தரம். |
| 3. | கோபிசெட்டிபாளையம் | .. முதல் தரம். |
| 4. | ஸ்ரீரங்கம் | .. முதல் தரம். |
| 5. | சத்தியமங்கலம் | .. இரண்டாம் தரம் |
| 6. | தென்காசி | .. இரண்டாம் தரம். |

3. 1978 ஏப்ரல் மாதம் முதல் தேதியிலிருந்து மேட்டுப்பாளையம் நகராட்சியை முதல்தர நகராட்சியாக உயர்த்த செயற்குறிப்பு ஒன்று அரசின் பரிசீலனையில் உள்ளது. 1920-ம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்ட விதிகளைச் செயல்படுத்தும் பொறுப்பு (1) நகராட்சி மன்றத்தையும், (2) நகராட்சி மன்றத் தலைவர், மற்றும் (3) நிர்வாக அதிகாரியையும் சாரும். மக்கள் தொகைக்கு தகுந்தபடி, நகராட்சி மன்றத்தின் உறுப்பினர்களின் எண்ணிக்கை அரசு அறிவித்தபடி நிர்ணயிக்கப்படும். மன்றத்தின் காலவரம்பு ஐந்தாண்டுகளாகும்.

4. நிதி வசதிக்கேற்ப, குடிமக்களுக்கு, தண்ணீர் வசதி, தெரு விளக்குகள், வடிகால்கள் மற்றும் பொது கழிவறைகளைப் பராமரித்தல் முதலிய பணிகளை நகராட்சி மன்றங்கள் மேற்கொள்ளும்.

5. தமிழ்நாட்டில், ஒரு இணை நகராட்சி ஆய்வாளர் மற்றும் ஐந்து மண்டல நகராட்சி ஆய்வாளர்களின் உதவியோடு, நகராட்சி நிர்வாகம் சீராக நடைபெறுவதற்கு, நகராட்சிகளின் ஆய்வாளர் பொறுப்பாவார். சிறப்பு மற்றும் தேர்வு நகராட்சிகள் நகராட்சிகளின் ஆய்வாளரால் ஆய்வு செய்யப்படும். முதல்தர, இரண்டாம் தர, மற்றும் மூன்றும்தர நகராட்சிகளை, மண்டல நகராட்சி ஆய்வாளர்கள் தணிக்கை செய்வார்கள். சென்னையில் நகராட்சிகளின் ஆய்வாளரின் தலைமை அலுவலகம் அமைக்கப்



1978 மார்ச் 20]

பட்டுள்ளது. மண்டல நகராட்சி ஆய்வாளர்களின் எல்லை மற்றும் தலைமை அலுவலகம் கீழே குறிப்பிட்டுள்ளவாறு அமைக்கப்பட்டுள்ளது—,

| மண்டலம். | தலைமை அலுவலகம். | எல்லை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| (1) மண்டல நகராட்சி ஆய்வாளர், சேலம். | சேலம் | சேலம், கோயம்புத்தூர் மற்றும் உதகமண்டலம் மாவட்டங்கள். |
| (2) மண்டல நகராட்சி ஆய்வாளர், மதுரை. | மதுரை | மதுரை, திருச்சிராப்பள்ளி மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள். |
| (3) மண்டல நகராட்சி ஆய்வாளர், திருநெல்வேலி. | திருநெல்வேலி | திருநெல்வேலி இராமநாதபுரம் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்கள். |
| (4) மண்டல நகராட்சி ஆய்வாளர், தஞ்சாவூர். | தஞ்சாவூர் | தஞ்சாவூர் மற்றும் தென்னாற்காடு மாவட்டங்கள். |
| (5) மண்டல நகராட்சி ஆய்வாளர், சென்னை. | வேலூர் | செங்கல்பட்டு, வட ஆற்காடு மற்றும் தருமபுரி மாவட்டங்கள். |

நகர் அமைப்புத் திட்டங்களுக்காக கடன் வழங்குதல்.

நகர் மற்றும் ஊரமைப்பு இயக்குநர், நகராட்சிகள் மற்றும் மதுரை மாநகராட்சி ஆகியவற்றிலிருந்து நகர் மற்றும் ஊரமைப்பு திட்டங்களுக்காகக் கடன் கேட்டு வரும் விண்ணப்பங்களை ஒவ்வொரு ஆண்டிலும் அரசுக்கு அனுப்புகிறார். அந்தக் கடன் தொகை இருபது (20) ஆண்டுகளில் திரும்பிச் செலுத்தப்படுகிறது. வழங்கப்படும் தொகை அத் தொகையை பெற்ற நாளிலிருந்து ஆறு (6) மாதங்களுக்குள் அப்பணிக்காக செலவு செய்யப்பட வேண்டும். நகராட்சிகள் கடன் தொகையைத் திரும்பச் செலுத்துவதை மாநில கணக்காய்வுத் தலைவர் கண்காணிக்கிறார். இந்த நடப்பு ஆண்டில் நகராட்சிகளுக்கு ரூபாய் ஆறு இலட்சம் கடனாக வழங்குவதற்கான செயற்குறிப்புகளை அரசு ஆய்வு செய்து வருகிறது.

1978 மார்ச் 20]

பின்தங்கிய பகுதிகளின் ஒருங்கிணைந்த முன்னேற்றம்

சமுதாயத்தின் நலிந்த பகுதியினர் பெரும்பான்மையாக வசிக்கும் இடங்களில் மக்களின் அடிப்படைத் தேவையான சாலை வசதி, மின் விளக்கு வசதி, மற்றும் குடிநீர் வசதி ஆகியவை அளிக்கப்பட நகராட்சிகளின் ஆய்வாளர் ''பின்தங்கிய பகுதிகளின் முன்னேற்ற திட்டம்'' ஒன்றினைத் தீட்டியுள்ளார். இத்திட்டத்தை ஊக்கத்துடன் செயல்படுத்துவதற்காக நடப்பு ஆண்டில் 10 நகராட்சிகளுக்கு மான்யமாக ரூ. 10.00 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. அந்தப் பத்து நகராட்சிகள் பின்வருமாறு:

சேலம், திருச்சிராப்பள்ளி, விருதுநகர், நாமக்கல், திருப்பூர், பழனி, வேலூர், திருவொற்றியூர், கும்பகோணம், திண்டிவனம்.

நகராட்சித் தேர்தல்.

நகராட்சிகளின் கடைசி பொதுத் தேர்தல் 1969-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் நடைபெற்றது. 1974-ம் ஆண்டில் குறிப்பிட்ட ஐந்தாண்டு காலம் முடிவடைந்த போதிலும் அனைத்து நகராட்சிகளின் பதவிக்காலம் 30—6—1976 வரை நீட்டிக்கப்பட்டது. 1—7—1976 முதல் நகராட்சிகளை நிர்வகிப்பதற்கும் மன்றப் பணிகளின் பொறுப்புக்களைச் செயலாற்றவும் சிறப்பு அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்களின் பதவிக்காலமும் 30—9—1978 வரை தவிர்க்க இயலாத சில காரணங்களினால் நீட்டிக்கப்பட்டது. அனைத்து நகராட்சிகளின் வாக்காளர் பட்டியல் கடைசியாக 1973-ம் ஆண்டில் தயாரிக்கப்பட்டது. இப்போது ஒவ்வொரு வீடாகக் கணக்கெடுத்து புதிதாக வாக்காளர் பட்டியல்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. அனைத்து நகராட்சிகளுக்கும் புதிய வாக்காளர் பட்டியல்கள் 1978-ம் ஆண்டு மே மாதம் இறுதிக்குள் தயாராகிவிடும். வாக்காளர் பட்டியல்கள் தயாரிக்கும் பணி நிறைவுற்றதும், நகராட்சி தேர்தல்களை நடத்த அரசு திட்டமிட்டுள்ளது. நகராட்சி தலைவர்கள் வருகின்ற நகராட்சி தேர்தலில் நேரடி தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

———



# Index to Tamil Nadu Legislative Council Debates

FIFTY-THIRD SESSION OF THE LEGISLATIVE COUNCIL UNDER THE CONSTITUTION OF INDIA.

VOLUME CXLVII (Nos. 1 to 5)

*15th to 18th and 20th March 1978.*

PAGES.

*A*

ABDUL WAHAB, THIRU K.S.—

Policy Note on Progress of Education in Tamil Nadu, discussion on ... ... ... ... ... 47-50

Policy Notes on Agriculture and Irrigation, discussion on ... ... ... ... ... ... 255-259, 272

Resolution *re* Constitution (Forty-fourth Amendment) Bill, 1977, ratification of ... ... ... ... 374-378

AGRICULTURAL PRODUCE MARKETS ACT, 1959—

Declaration of area of Avalurpettai Market in South Arcot district for groundnut, gingelly, paddy and sugarcane jaggery in all forms, notification laid on the table ... ... ... ... ... 68

AGRICULTURAL PRODUCE MARKETS RULES, 1962—

Amendment to—, notification laid on the table ... 68

AGRICULTURE—

Performance Budget, 1978-79 ... ... ... 69

Policy Note on—, laid on the table ... ... ... 69

Policy Notes on—and Irrigation, discussion on ... 252-315

A—*cont.*

AGRO INDUSTRIES CORPORATION LIMITED—

Review on—for 1977-78, laid on the table ... ... 60

ALLOWANCES—

Question *re* inclusion of Therkutheru village in Madurai City limits for purposes of House Rent and City Compensatory— ... ... ... ... ... 160-161

ANANTHASAYANAM IYENGAR, THIRU M.—

Obituary Reference *re* death of—, former Speaker, Lok Sabha and former Governor of Bihar ... ... 407

ANIMAL HUSBANDRY—

Policy Note on—for 1978-79, laid on the table ... 316

ANIMAL HUSBANDRY DEPARTMENT—

Performance Budget on—for 1978-79, laid on the table 316

ARANGANAYAGAM, the HON. THIRU C.—

Policy Note on Progress of Education in Tamil Nadu, discussion on ... ... ... ... ... 24, 198, 212, 224-234

Teaching Grant to Schools run by Cantonment Boards, statement *re* stoppage of—and resultant closure of institutions ... ... ... ... ... 169-171

ARIVAZHAGAN, THIRU K.

Policy Note on—

Community Development, Panchayat Development discussion on ... ... ... ... ... 431, 442, 460-464, 466

Progress of Education in Tamil Nadu, discussion on 36, 50-60, 61-63, 199, 216, 217, 222, 224, 225

Privilege Issue *re* statement of Thiru Arcot N. Veerasami, M.L.C. about the alleged appointment of one Thiru Vijayan and destruction of State Administration Reports ... ... ... 246-247





B

BACKWARD CLASSES—

Performance Budget for 1978-79, laid on the table ... 500

BACKWARD CLASSES DEPARTMENT—

Annexures to—Demand No. 32, 1978-79, laid on the table ... ... ... ... ... ... 500

Policy Note on—Demand No. 32, 1978-79, laid on the table ... ... ... ... ... ... 500

BALARAMAN, THIRU L.—

Policy Note on Community Development, Panchayat Development and Urban Development, discussion on ... ... ... ... ... ... 473-480

BALASUBRAMANIAM, THIRU A.—

Information *re* questions to be answered by Chief Minister ... ... ... ... ... ... 426

BALASUBRAMANIAM, THIRU Ku.Ma.—

Policy Note on Prtgress of Education in Tamil Nadu, discussion on ... ... ... ... ... 63-67

BETEL VINES—

Question *re* Committee to study problems of—farmers, consideration of all problems regarding agriculture and inclusion of Member experienced in cultivation of betel vines ... ... ... ... ... 11-20

BILLS—

Constitution (Forty-fourth Amendment) Bill 1977, Resolution *re* ... ... ... ... ... 364-406

BUSINESS ADVISORY COMMITTEE—

*See* Committees

BUSINESS OF THE HOUSE—

Transaction of Government business on a Private Members' Day ... ... ... ... ... 362-363

C.

CATTLE—

Question *re* farmers supplied with milch—at subsidised prices under Tribal Welfare Scheme at Kolli Hills, number of ... ... ... ... ... 166-168

C—*cont.*

CENTRAL BOARD OF FILM CENSORS, MADRAS—
Question *re* reconstitution of Advisory Panel for ... 238-24[illegible]

COMMITTEES— ...
Assurances Committee—
Presentation of Twenty-seventh Report ... ... [illegible]
Twenty-Seventh Report, laid on the table ... ... [illegible]
Business Advisory Committee, decision of ... ... 20-[illegible]

COMMUNITY DEVELOPMENT—
Financial Supplement to Demand under—1978-79, laid on the table ... ... ... ... 5[illegible]

COMMUNITY DEVELOPMENT AND PANCHAYAT DEVELOPMENT—
Policy Note on—, laid on the table ... ... ...

COMPTROLLER AND AUDITOR-GENERAL OF INDIA (CIVIL)—
Supplementary Report for 1975-76, laid on the table ...

CONDOLENCE RESOLUTION *re* DEATH OF—
Ranga Rao, Thiru R. R. S. R., Raja of Bobbili, former Chief Minister of Composite Madras State ... ...

CONSTITUTION (FORTY-FOURTH AMENDMENT) BILL, 1977—
Resolution *re* ... ... ... ... ... ... 364-[illegible]

CORRECTIONAL ADMINISTRATION—
Policy Note on Department of—for 1978-79, laid on the table ... ... ... ... ... ...

D.

DAIRY DEVLOPMENT CORPORATION—
Review on—, 1977-78 ... ... ... ...

DAIRY DEVELOPMENT DEPARTMENT AND MILK SUPPLY SCHEME—
Policy Note (1978-79) on ... ... ... ...



D—*cont.*

DAMODARAN, THIRU A. R.—
Policy Note on Progress of Education, discussion on 182-193, 199

DEPUTY CHAIRMAN—
Announcement *re*— ... ... 20-21
Business Advisory Committee's decision ... ...
Land Improvement Board, election of one Member to ... ... ... ... ... ... ... 363-364
Condolence Resolution *re* death of Ranga Rao, Thiru R.R.S.R., Raja of Bobbili, former Chief Minister of Composite Madras State ... ... 1
Information *re* questions to be answered by Chief Minister ... 425, 426
Obituary reference *re*—
Death of Ananthasayanam Iyengar, Thiru M., former Speaker, Lok Sabha and former Governor of Bihar 407
Death of Mani Ammayar, Thirumathi, wife of Periyar E.V.R., Leader of Dravida Kazhagam ... 234-235
Policy Note on—
Agriculture and Irrigation, discussion on ... ... 252, 255, 260, 292, 298, 301, 305, 307, 308, 309, 315
Community Development, Panchayat Development and Urban Development, discussion on ... ... 431, 440, 458, 460, 463, 470, 473
Progress of Education, discussion on ... ... 180, 181, 194, 198, 211, 212, 228
Privilege issue *re*—
Remarks of Suppu, Thiru K., M.L.A., in the Assembly about the Council ... 171-172

PAGES

D—*cont.*

DEPUTY CHAIRMAN—*cont.*

Privilege issue *re*—*cont.*

Statement of Thiru Arcot N. Veerasami, M.L.C., about alleged appointment of one Thiru Vijeyan and destruction of State Administration Reports ... 246, 248

Resolution *re* Constitution (Forty-fourth Amendment) Bill, 1977, ratification of ... ... ... ... 366, 378, 385, 387, 388, 389, 390, 397, 398, 399, 400

D'MONTE, Thiru D. V.—

Policy Note on—

Agriculture and Irrigation, discussion on ... ... 253-255

Community Development, Panchayat Development and Urban Development, discussion on ... ... 437-440

Progress of Education, discussion on ... ... ... 201-202

Resolution *re* Constitution (Forty-fourth Amendment) Bill, 1977, ratification of ... ... ... ... 366-368

DRAVIDAMANI, Thiru A.—

Policy Notes on Agriculture and Irrigation, discussion on ... ... ... ... ... ... 276-281, 31[illegible]

E

EDUCATION—

Higher Secondary Education, objectives, programmes and implementation of—laid on the table ... 236, 31[illegible]

Policy Note on Progress of Education in Tamil Nadu, discussion on ... ... ... ... ... ... 24-67, 172-28[illegible]

School Education, Collegiate Education and Technical Education, Performance Budgets, 1978-79, laid on the table ... ... ... ... ... ... [illegible]

ELEMENTARY SCHOOL TEACHERS—

*See* Teachers

ENTERTAINMENTS TAX RULES, 1939—

Amendments to—, notification laid on the table ...



PAGES.

F

FIRE SERVICE DEPARTMENT—

Review on—for 1977-78, laid on the table ... ... 236

G

GANAPATHI, Thiru K. S.—

Policy Note on Progress of Education, discussion on ... 38-47, 194, 223, 224, 233

Teaching grant to schools run by Cantonment Boards, calling Minister's attention to stoppage of—and resultant closure of institutions ... ... ... 169, 170

GENERAL SALES TAX AND OTHER TAXES AND DUTIES—

Demand No. 4 ... 69

H

HANDLOOMS AND TEXTILES—

Performance Budget of Directorate of—for 1978-79, laid on the table ... ... ... ... ... 70

HARIJAN AND TRIBAL WELFARE—

Performance Budget for 1978-79, laid on the table ... 500

HARIJAN AND TRIBAL WELFARE DEPARTMENT—

Annexures to—, Demand No. 31, 1978-79, laid on the table ... ... ... ... ... 499

Policy Note on—, Demand No. 31, 1978-79, laid on the table ... ... ... ... ... ... 499

HINDU MARRIAGES (REGISTRATION) RULES, 1967—

Amendment to rule 3, notification laid on the table ... 68

HINDU RELIGIOUS AND CHARITABLE ENDOWMENTS ACT, 1959—

Administration of—, Demand No. 12, laid on the table ... ... ... ... ... ... 316

PAGES

H—*cont.*

HOME (PROHIBITION AND EXCISE) DEPARTMENT—
Review on activities of—for 1977-78, laid on the table ... ... ... ... ... ... 69

HOTELS—
Question *re* Janata—, Government's proposals to India Tourism Development Corporation to construct ... ... ... ... ... ... 5-10

HOUSING IN TAMIL NADU FOR 1978-79—
Laid on the table ... ... ... ... 69

I

INDUSTRIAL GROWTH IN TAMIL NADU—
Handloom and Textiles, 1978-79, laid on the table 69

INFORMATION, TOURISM AND FILM TECHNOLOGY, 1978—
Demand No. 47, laid on the table ... ... 69

IRRIGATION—
Policy Note on—for 1978-79, laid on the table 316
Policy Notes on Agriculture and—, discussion on ... 252-315

K

KALIMUTHU, THE HON. THIRU K.—
Policy Note on Community Development, Panchayat Development and Urban Development, discussion on ... ... ... ... ... ... 427, 430, 491-498

KHADI AND VILLAGE INDUSTRIES BOARD, TAMIL NADU—
Policy Note on—for 1978-79, laid on the table 316

KOLANDAIVELU, THE HON. THIRU P.—
Policy Notes on Agriculture and Irrigation, discussion on ... ... ... ... ... 258, 260, 272, 299-309



PAGES.

L

LABOUR—
Note on—in Tamil Nadu, laid on the table 316

LAND IMPROVEMENT BOARD—
Election of one memeber to 363

LIQUOR (LICENCE AND PERMIT) RULES, 1960—
Amendments to—, notification laid on the table 235

LOANS—
Question *re*—arrangements for easy availability of—on pledge to poor people ... ... ... 161-164

M

MADURAI CITY MUNICIPAL CORPORATION ACT, 1971—
Division of Madurai City into 65 wards, notification laid on the table ... ... 67-68

MADURAI PANDIYAN ENGINEERING CORPORATION LIMITED, MADURAI—
Second Annual Report for 1976, laid on the table 315
Third Annual Report for 1977, laid on the table 316

MANDAKINI KRISHNAMOORTHY, Thirumathi—
Policy Note on—
Agriculture and Irrigation, discussion on 260–261
Progress of Education, discussion on 172–175
Resolution *re*—Constitution (Forty-fourth Amendment) Bill, 1977, ratification of ... 392–393

MANI, Thiru K.S.— ... ... ... ...
Information re questions to be answered by Chief Minister ... ... ... ... ... ... 425, 426, 427

Policy Note on—
Agriculture and Irrigation, discussion on ... ... 292-299, 300, 309
Community Development, Panchayat Development and Urban Development discussion on 462, 480-491

PAGES.

M—*cont.*

MANI AMMAYAR, Thirumathi—
Obituary reference *re* death of—, wife of Periar E.V.R., leader of Dravida Kazhagam ... ... ... 234-238

MANOHARAN, THE HON. THIRU K.—
Privilege issue *re* remarks of Suppu, Thiru K., M.L.A., in the Assembly, about the Council ... 171

MATTER OF URGENT PUBLIC IMPORTANCE—
Powerlooms, calling attention to hartal in Chatrapathy area, Ramanathapuram district, by all political parties pressing for ban on production of bandage and gauze cloth ... ... ... ... 248-252
Teaching grant to schools run by Cantonment Boards, calling attention to stoppage of—and resultant threat of closure of institutions ... ... 169–171

MONEY-LENDERS RULES, 1959—
Amendments to—, notification laid on the table ... 68

MOTOR VEHICLES RULES, 1940—
Amendments to—, notification laid on the table ... 499

MOTOR VEHICLES TAX—
Exemption of vehicles of United Nations Development Programme, W.H.O. in Madras Metropolitan Area Water-Supply and Sewerage in Madras Metropolitan Area Water-Supply and Sewerage Project from—, notification laid on the table ... 499
Extension of time for payment of—in respect of all stage carriages kept or used by Cholan Roadways Corporation, Kumbakonam for quarter-ending 31st March 1978, notification laid on the table ... ... ... ... ... 499

MOTOR VEHICLES TAXATION RULES, 1974—
Amendment to—, notification laid on the table ... 68

N.

NARAYANASWAMI MUDALIYAR, THE HON. THIRU K.—
Resolution *re* Constitution (Forty-fourth Amendment) Bill, 1977, ratification of ... ... ... 364-366, 400-404



PAGES

O.

OBITUARY REFERENCE *re*—
Death of Ananthasayanam Iyengar, Thiru M., former Speaker, Lok Sabha and former Governor of Bihar 407
Death of Mani Ammaiyar, Thirumathi, wife of Periar E. V. R., Leader of Dravida Kazhagam ... 234–235

ORCHARD—
Question *re* starting of—at Kolli Hills through Agricultural University, Coimbatore ... ... ... 10–11

P.

PANDIYAN ROADWAYS CORPORATION LIMITED, MADURAI—
Fifth Annual Report for 1976, laid on the table ... 315
Sixth Annual Report for 1977, laid on the table ... 316

PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE—
Agricultural Produce Markets Act, 1959—Declaration of area of Avalurpetai Market in South Arcot District for groundnut, gingelly, paddy and sugarcane jaggery in all forms (G.O. Ms. No. 105, Agriculture, dated the 24th January 1978) ... ... ... 68
Agricultural Produce Markets Rules, 1962, amendment to—(G.O. Ms. No. 143, Agriculture, dated 31st January 1978) ... ... ... ... ... ... 68
Agriculture—
Performance Budget, 1978–79 ... ... ... 69
Policy Note on ... ... ... ... ... 69
Agro Industries Corporation Limited, Review on—for 1977–78 ... ... ... ... ... 69
Animal Husbandry, Policy Note for 1978-79 ... 316
Animal Husbandry Department, Performance Budget for 1978–79 ... ... ... ... ... ... 316
Backward Classes—
Performance Budget for 1978–79 ... ... ... 50(

PAGES

P—*cont.*

APERS LAID ON THE TABLE OF THE HOUSE—*cont.*

Backward Classes Department—

Annexures to—Demand No. 32, 1978–79 ... 500

Policy Note on—Demand No. 32, 1978-79 ... 500

Committees—Assurances Committee, Twenty-seventh Report ... 70

Community Development—

Financial Supplement to Demand under—, 1978–79. ... 500

Community Development and Panchayat Development—Policy Note on ... 70

Comptroller and Auditor-General of India (Civil) Supplementary Report for 1975–76 ... 315

Correctional Administration, Policy Note on Department of—for 1978–79 ... 69

Dairy Development Corporation, Review on—for 1977–78, laid on the table ... 70

Dairy Development Department and Milk Supply Schemes, Policy Note, 1978–79, on—laid on the table ... 70

Education—School Education, Collegiate Education and Technical Education, Performance Budgets, 1978–79 ... 69

Entertainments Tax Rules, 1939, amendment to—(G.O. Ms. No. 2117, Commercial Taxes and Religious Endowments, dated 19th December 1977) ... 235

Fire Service Department, Review on—for 1977–78 ... 236

General Sales Tax and other Taxes and Duties—Demand No. 4 ... 69

Handlooms and Textiles, Performance Budget of Directorate of—, for 1978–79 ... 70

Harijan and Tribal Welfare, Performance Budget, 1978-79 ... 500

Harijan and Tribal Welfare Department—Annexure to—Demand No. 31, 1978-79 ... 499



PAGES

P—*cont.*

PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE—*cont.*

Policy Note on—Demand No. 31, 1978-79 ... 499

Higher Secondary Education in Tamil Nadu, Objectives, Programmes and Implementation of ... 236, 316

Hindu Marriages (Registration) Rules, 1967, amendment to rule 3 [G.O. Ms. No. 50, Home, (Courts-I), dated 6th January 1978] ... 68

Hindu Religious and Charitable Endowments Act, 1959, administration of—Demand No. 12 ... 316

Home (Prohibition and Excise) Department—Review on activities of—for 1977-78 ... 69

Housing in Tamil Nadu for 1978-79 ... 69

Industrial Growth in Tamil Nadu—Handloom and Textiles, 1978-79 ... 69

Information, Tourism and Film Technology, 1978—Demand No. 47 ... 69

Irrigation, Policy Note for 1978-79 ... 316

Khadi and Village Industries Board, Tamil Nadu, Policy Note for 1978-79 ... 316

Labour in Tamil Nadu, Note on ... 316

Liquor (Licence and Permit) Rules, 1960, amendment to—(G.O. Ms. No. 3495, Home, dated 31st December 1977) ... 235

Madurai City Municipal Corporation Act, 1971, division of Madurai City into 65 wards (G.O. Ms. No. 1612, Rural Development and Local Administration, dated 4th October 1977) ... 67-68

Madurai Pandiyan Engineering Corporation Limited, Madurai,—

Second Annual Report for 1976 ... 315

Third Annual Report for 1977 ... 316

Money-lenders Rules, 1959, amendments to—(G.O. Ms. No. 58, Co-operation, dated 1st February 1977) ... 68

PAGES

P—*cont.*

PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE—

Motor Vehicles Rules, 1940—

Amendments to—(G.O. Ms. No. 112, Home, dated 16th January 1978 and No. 132, Home, dated 18th January 1978) ... ... ... ... ... 499

Motor Vehicles Tax—

Exemption of vehicles of United Nations Development Programme. W. H. O. in Madras Metropolitan Area Water Supply and Sewerage Project from payment of—[G.O. Ms. No. 238, Home (Transport-I), dated 1st February 1978] ... ... 499

Extension of time for payment of—In respect of all stage carriages kept or used by Cholan Roadways Corporation, Kumbakonam for quarter ending 31st March 1978 [G.O. Ms. No. 127, Home (Transport-I), dated 17th January 1978] ... ... ... 499

Motor Vehicles Taxation Rules, 1974, amendment to—

(G.O. Ms. No. 3360, Home, dated 16th December 1977) ... ... ... ... ... ... 68

Pandiyan Roadways Corporation Limited, Madurai—

Fifth Annual Report for 1976 ... ... ... 315

Sixth Annual Report for 1977 ... ... ... 316

Police, Review on—for 1977-78 ... ... ... 236

Policy Note on—

Progress of Education in Tamil Nadu ... ... 69

Social Welfare, 1978-79 ... ... ... ... 69

Poultry Development Corporation Limited, Tamil Nadu, Review of activities for 1977-78 ... ... 316

Public Health, Sanitation and Water Supply—

Demand No. 49—Capital Outlay ... ... ... 69

Public Works Department, Performance Budget, 1978-79 ... ... ... ... ... ... ... ... 70

Public Works Department (Buildings Branch), review of activities of—for 1977-78 ... ... ... 70





PAGES.

P—*cont.*

PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE—*cont.*

Return of Assets—Sounderrajan, Thiru R. V., Member, Legislative Assembly as on 31st March 1977— ... 70

Slum Clearance Board Non-Technical Subordinate Service Rules, 1972, amendments to—(G.O. Ms. No. 306, Housing, dated 27th April 1977) ... ... 68

Social Welfare, Performance Budget, 1978-79 ... 69

Stamps Administration—Demand No. 5 ... ... 70

State Farms Corporation Limited, review on— for 1978-79 ... ... ... ... ... ... 69

Stationery and Printing Department, Policy Note on—, 1978-79 ... ... ... ... ... ... 500

Tamil Nadu Theatre Corporation Limited, Fifth Annual Report for 1976-77 ... ... ... ... 316

Textile Corporation Limited, Sixth Annual Report and Statement of Accounts ... ... ... ... 235

Urban Development for 1978-79, Policy Note on ... 69

PEOPLE'S ACTION FOR DEVELOPMENT—INDIA (PADI)—

Question *re* availing of financial assistance from—for rural and agricultural development ... ... 165-166

PERIYAR-ANNA NINAIVAGAM AT ERODE—

Statement under rule 82 of the Council Rules *re* alleged appointment of one Vijayan at ... ... 21-22

POLICE—

Review on—for 1977-78, laid on the table ... ... 236

POLICY NOTE ON—

Agriculture and Irrigation, discussion on ... ... 252-315

Progress of Education in Tamil Nadu—

Discussion on ... ... ... ... ... ... 24-67, 172-234

Laid on the table ... ... ... ... ... 69

Social Welfare, 1978-79, laid on the table ... ... 69

PAGES

P—*cont.*

POULTRY DEVELOPMENT CORPORATION LIMITED, TAMIL NADU—

Review of activities of—for 1977-78, laid on the table. 31[illegible]

POWERLOOMS—...

Hartal in Chatrapaty area, Ramanathapuram district, by all political parties pressing for ban on production of bandage and gauze cloth by—, Minister's attention called to ... ... ... ... ... ... 248-25[illegible]

POWERLOOMS—

Question *re* Stay-in-strike by—in Central Jail, Madurai, on birthday of Arignar Anna during September 1977 ... ... ... ... ... 358-35[illegible]

PRIVILEGE ISSUE *re*—

Remarks of Suppu, Thiru K., M.L.A. in the Assembly regarding Council ... ... ... ... ... 171–17[illegible]

Statement of Thiru Arcot N. Veerasami, M.L.C., about alleged appointment of one Thiru Vijayan and destruction of State Administration Reports ... 246–24[illegible]

PUBLIC HEALTH, SANITATION AND WATER-SUPPLY—

Demand No. 49, laid on the table ... ... ... 6[illegible]

PUBLIC WORKS DEPARTMENT—

Performance Budget, 1978–79, laid on the table ... 7[illegible]

PUBLIC WORKS DEPARTMENT (BUILDINGS BRANCH)—

Review on activities of—for 1977–78, laid on the table. 7[illegible]

PULAMAI PITHAN, PULAVAR—

Policy Note on Progress of Education, discussion on ... 208–2[illegible]

Privilege issue *re* remarks of Suppu, Thiru K., M.L.A., in the Assembly about the Council ... 17[illegible]

Resolution *re* Constitution (Forty-fourth Amendment) Bill, 1977, ratification of ... ... ... ... [illegible]

Q.

QUARRIES—

Question *re* complaint on non-payment of lease amount to Panchayats for ... ... ... ... ... 4[illegible]



PAGES

Q—*cont.*

[QU]ESTIONS—

Information *re* questions to be answered by Chief Minister ... ... ... ... ... ... 424–426

[QU]ESTIONS AND ANSWERS—

Balasubramaniam, Thiru A.—

Question *re* Kolli Hills of Salem district, making of—a Tourist Centre ... ... ... ... ... 408–413

Balasubramaniam, Thiru Ku. Ma.—

Question *re* loans, arrangements for easy availability of—on pledge to poor people ... ... ... 161–164

Damodaran, Thiru A.R.—

Question *re* teaching staff of 'A' and 'B' Wings, discussion with representative *re* integration of ... 358–359

Dravidamani, Thiru A.—

Question *re* Committee to study problems of farmers, consideration of all problems regarding agriculture and inclusion of member experienced in cultivation of betel vines ... ... ... ... 11–20

Ganapathi, Thiru K. S.—

Question *re*—

Former Hindi and other Language Pandits now working as Junior Assistants in schools, direction to appear for S.S.L.C. Examinations in October 1977 ... ... ... ... ... ... 416–417

Headmasters, representation from their Association for grant of Selection Grade scale of pay to ... 356–358

Teaching staff of 'A' and 'B' Wings, discussion with representatives *re* integration of ... ... 358–359

Mani, Thiru K. S.—

Question *re*—

Bus service between Alaveli and Mayuram in Thanjavur district, revival of ... ... ... 237–238

Street lights in Anna Nagar, Madras, payment of amount by Tamil Nadu Housing Board to Corporation of Madras for installation of ... 419–421

Tourist Centres, selection of new places as—and measures to attract more tourists to ... 408–413

PAGES

Q—cont.

QUESTIONS AND ANSWERS—cont.

Periannan, Thiru V. R.—
Question re—
Farmers supplied with milch cattle at subsidised prices under Tribal Welfare Scheme at Kolli Hills, number of ... ... ... ... 166–168
Kolli Hills of Salem district, making of—a Tourist Centre ... ... ... ... ... 408–418
Orchard at Kolli Hills, starting of—through Agricultural University, Coimbatore ... ... 10–11

Sankaralingam, Thiru M.—
Question re—
Elementary School teachers working for less than 220 days during 1977-78, reduction in salary of 417-418
Private tanks receiving water from Government Reservoirs, representation from farmers of Kanyakumari district requesting Government to take over ... ... ... ... ... 4-5
Quarries, complaint about non-payment of lease amount to Panchayats for ... ... ... 419
Tamil Pandits, Grade II, regularisation of services of—of Government High Schools, appointed prior to 25th February 1971 from 21st March 1974 ... ... ... ... ... ... 359-360

Santosham, Thiru D.—
Question re—
Self-employment Scheme, Ambattur, starting of workshops using electricity at 9 p.m. instead of 8 p.m. ... ... ... ... ... 2-4
Teachers of Pasumpon Muthuramalinga Thevar College, Usilampatti, non-payment of salaries to ... ... ... ... ... ... 360-362

Swaminathan, Thiru G.—
Question re—
Janata Hotels, Government's proposals to India Tourism Development Corporation to construct 5-10



Q—cont.

PAGES

Question re—cont.
Swaminathan, Thiru G.—cont.
Question re—cont.
People's Action for Development—India (PADI), availing of financial assistance from—for rural and agricultural development ... ... ... 165–166
World Tamil Conference, holding of next—in Tamil Nadu ... ... ... ... ... 418

Thangapandian, Thiru V.—
Question re—
Headmasters, representation from their Association for grant of Selection Grade scale of pay to ... ... ... ... ... ... 356-358
Prisoners in Central Jail, Madurai, Stay-in-strike on birthday of Arignar Anna during September 1977 ... ... ... ... ... ... 353-356
Ramanathapuram district, resolution of District Development Councils regarding bifurcation of 157-160

Thomas, Thiru P. R.—
Question re—
Elementary School teachers working for less than 220 days during 1977-78, reduction in salary of 417-418
Erstwhile Language Pandits and now working as B.T. Assistants and Secondary Grade Teachers, grant of Selection Grade scale of pay to ... 414-415
Secondary and higher grade teachers under Kallar Reclamation in Madurai district, sanction of Selection Grade scale of pay to ... ... ... 422-423
Tamil Pandits, Grade II, regularisation of services of—of Government High Schools appointed prior to 25th February 1971 from 21st March 1974 ... ... ... ... ... 359-360
Teachers of Pasumpon Muthuramalinga Thevar College, Usilampatti, non-payment of salaries to ... ... ... ... ... ... 360-362
Teaching staff of 'A' and 'B' wings, discussion with representatives re integration of ... ... 358-359
Therkutheru village, inclusion of—in Madurai City limits for purposes of House Rent and City Compensatory Allowances ... ... 160-161

Q—*cont.*


QUESTIONS AND ANSWERS—*cont.*

Vilwam, Thiru A. K.—

Question *re*—

Central Board of Film Censors, Madras, reconstitution of Advisory Panel for ... ... ... 238-246


## R


RAGHAVANANDAM, THE HON. THIRU S.—

Policy Note on Progress of Education in Tamil Nadu, discussion on ... ... ... 37

RAJA MOHAMMED, THE HON. THIRU K.—

Business of the House—Transaction of Government business on a Private Members Day ... ... 362-363

Information *re* questions to be answered by Chief Minister ... ... ... ... ... 425-4[illegible]

Land Improvement Board, election of one Member to ... ... ... ... ... 363-364

Policy Notes on Agriculture and Irrigation, discussion on ... ... ... ... ... 252-25[illegible]

Powerlooms, statement *re* hartal in Chatrapathy area, Ramanathapuram district pressing for ban on production of bandage and gauze cloth by ... 248-252

Statement under rule 82 of the Council Rules *re* Periyar—Anna Ninaivagam at Erode, alleged appointment of one Vijayan at ... ... ... 21-22

State Administration Report for 1974-75, alleged destruction of ... ... ... ... 22-23

RAMACHANDRAN, THE HON. THIRU. S.—

Policy Notes on Agriculture and Irrigation, discussion on ... ... ... ... ... 253, 309, 315

RAMAKRISHNA THEVAR, THIRU, S.—

Policy Note on Community Development and Panchayat Development and Urban Development, discussion on ... ... ... ... ... 446-4[illegible]

Policy Notes on Agriculture and Irrigation, discussion on ... ... ... ... ... 271-[illegible]






R—*cont.*


RAMANATHAPURAM DISTRICT—

Question *re* Resolution of District Development Councils *re* bifurcation of ... ... ... 157-160

RANGA RAO, THIRU R.R.S.R.—

Condolence Resolution *re* death of—Raja of Bobbili, former Chief Minister of Madras State ... ... 1

RETURN OF ASSETS—

Sounderrajan, Thiru R. V., Member, Legislative Assembly as on 31st March 1977—laid on the table ... ... ... ... ... 70

RULINGS AND OBSERVATIONS OF THE CHAIR—

Privilege issue *re*

Remarks of Thiru K. Suppu, M.L.A., in the Assembly about the Council—Ruled that the question of privilege did not arise since the remarks under reference were expunged. The Deputy Chairman, however, observed as follows:

''யார் என்ன சொன்னாலும், இரண்டு அவையும் சம அந்தஸ்து உள்ளவைதான. இன்றென்று இந்த அவைதான் முன்பிருந்து இருப்பதாலும், அதில் வயது வந்தவர்கள் இருப்பதாலும், இது தாய், அது சேய் என்பதல்ல, தயவுசெய்து அங்கத்தினர்கள் அப்படிக் கருத வேண்டாம். இரண்டுமே சம அந்தஸ்து உடையவைகள் தான். இன்றொருவர் மதிப்புக்கொடுத்துதான் மதிப்பு வர வேண்டும் என்பதில்லை. அந்த மாதிரியான வகையிலே பேச வேண்டாம்". 171-172

Statement of Thiru Arcot N. Veerasami, M.L.C., about alleged irregular appointment of one Thiru Vijayan and destruction of State Administration Reports—The Deputy Chairman said that he would give his ruling after obtaining the remarks of Thiru Arcot N. Veerasami. ... ...... ... 248


## S


SAKTHI MOHAN, THIRU R.—

Resolution *re* Constitution (Forty Fourth Amendment) Bill, 1977, ratification of ... ... ... 378-380

S—*cont.*


SAMBASIVAM, THIRU R.

SLUM CLEARANCE BOARD NON-TECHNICAL

Policy Note on Community Development, Panchayat Development and Urban Development, discussion on ... ... ... ... ... 441

SANKARALINGAM, THIRU M.—

Assurances Committee, presentation of Twenty-seventh Report ... ... ... ...

Policy Note on Progress of Education, discussion on ... ... ... ... ... 60, 2[illegible]

SCHOOLS—

Teaching grant to—run by Cantonment Boards, Minister's attention called to stoppage of—and resultant threat of closure of— ... ... 160-1[illegible]

SELF-EMPLOYMENT SCHEME—

Question *re* starting of Workshops under—using Electricity at 9 p.m. instead of 8 p.m. ... 2[illegible]

SUBORDINATE SERVICE RULES, 1972—

Amendments to—, notification laid on the table ... ... ... ...

SOCIAL WELFARE—

Performance Budget, 1978-79, laid on the table ... 6[illegible]

STAMPS ADMINISTRATION—

Demand No. 5, laid on the table ... ... ...

STATE ADMINISTRATION REPORTS—

Privilege issue *re* alleged destruction of ... 246-24[illegible]

Statement under rule 82 of the Council Rules *re* alleged destruction of ... ... ... ... 22[illegible]

STATE FARMS CORPORATION LIMITED—

Review on—for 1978-79 ... ... ... ...

STATEMENT UNDER RULE 82 OF THE COUNCIL RULES *re*—

Periyar-Anna Ninaivagam at Erode, alleged appointment of one Vijayan at ... ... ... 21[illegible]






S—*cont.*


STATIONERY AND PRINTING DEPARTMENT—

Policy Note on—1978-79, laid on the table ... 500

STREET LIGHTS—

Question *re* payment of amount by Tamil Nadu Housing Board to Corporation of Madras for installation of—in Anna Nagar, Madras ... ... 419-421

SUNDARESA THEVAR, THIRU N.—

Policy Note on Community Development, Panchayat Development and Urban Development, discussion on ... ... ... ... ... 450-459

Policy Notes on Agriculture and Irrigation, discussion on ... ... ... ... ... 262-271

Resolution re Constitution (Forty-fourth Amendment) Bill, 1977, ratification of ... ... ... ... 391-392

SWAMINATHAN, THIRU G.—

Policy Note on Community Development, Panchayat Development and Urban Development, discussion on. 440-445, 451, 458

Policy Note on Progress of Education, discussion on. 186, 193-201, 211, 212, 222, 234

Resolution *re* Constitution (Forty-fourth Amendment) Bill, 1977, ratification of ... ... ... ... 368-374, 387, 395, 398


T.


TANKS—

Question *re* Private—receiving water from Government—Reservoirs, representation from farmers of Kanyakumari district requesting Government to take over 4-5

TEACHERS—

Question *re*—

Elementary School—working for less than 220 days during 1977-78, reduction in salary of ... ... 417-418

PAGES.

T.—cont.

TEACHERS'b—*cont.*

Questions *re*—cont.

Erstwhile Language Pandits now working as B.T. Assistants and Secondary Grade—, grant of Selection Grade scale of pay to ... ... ... 414–415

Former Hindi and other Language Pandits now working as Junior Assistants in schools, direction to appear for S.S.L.C. Examinations in October 1977 ... ... ... ... ... ... 416–417

Headmasters, representation from Association of Headmasters for Selection Grade scale of pay to 356-358

Integration of 'A' and 'B' Wing—, discussion with representatives ... ... ... ... 358–359

Non-payment of salaries to—of Pasumpon Muthuramalinga Thevar College, Usilampatti ... ... 360-362

Secondary and Higher Grade Teachers serving under Kallar Reclamation in Madurai district, sanction of Selection Grade scales of pay to ... ... ... 422-423

Tamil Pandits, Grade II, regularisation of services of—of Government High Schools, appointed prior to 25th February 1971 from 21st March 1974 ... 359-360

TEXTILE CORPORATION LIMITED—

Sixth Annual Report and Statement of Accounts, laid on the table ... ... ... ... ... ... 235

THANGAPANDIAN, THIRU V.—

Information *re* questions to be answered by Chief Minister ... ... ... ... ... ... 425

Policy Note on—

Agriculture and Irrigation, discussion on ... ... 288

Community Development Panchayat Development and Urban Development, discussion on ... ... 428–437, 449, 456, 466, 471

Progress of Education in Tamil Nadu, discussion on 24-38

Powerlooms, calling Minister's attention to hartal in Chatrapathy area, Ramanathapuram district, pressing for ban on production of bandage and gauze cloth by. ... ... ... ... ... ... 248–251



PAGES.

T.—cont.

THANGAPANDIAN, THIRU V.—*cont.*

Policy Note on—*cont.*

Resolution *re* Constitution (Forty-fourth Amendment) Bill, 1977, ratification of ... ... ... ... 375, 388

THEATRE CORPORATION LIMITED, TAMIL NADU—

Fifth Annual Report for 1976–77, laid on the table ... 316

THERKUTHERU VILLAGE—

Question *re* inclusion of—within Madurai City limits for purposes of House Rent and City Compensatory Allowances ... ... ... ... ... 160–161

THOMAS, THIRU P. R.—

Policy Note on Progress of Education, discussion on. 175–182

TOURIST CENTRE—

Question *re* making of Kolli Hills in Salem district as. 408–413

Qustion *re* selection of new places as and measures to attract more tourists to ... ... ... ... 408–413

TRANSPORT—

Question *re* revival of bus service between Alaveli and Mayuram in Thanjavur district ... ... ... 237–238

TRIBAL WELFARE SCHEME—

Question *re* supply of milch cattle at subsidised prices to Tribal Farmers under ... ... ... ... 166–168

U.

UNIVERSITIES—

Question *re* Agricultural University, Coimbatore, starting of Orchard at Kolli Hills through ... ... 10–11

URBAN DEVELOPMENT FOR 1978-79—

Policy Note on—, laid on the table ... ... ... 69

V

VEERASAMI, THIRU ARCOT N.—

Policy Note on—

Agriculture and Irrigation, discussion on ... ... 282-292, 300

V—*cont.*

PAGES

VEERASAMI, THIRU ARCOT—*cont.*

Police Note on—*cont.*

Community Development, Panchayat Development and Urban Development, discussion on ... ... 472-473, 494-495

Progress of Education, discussion on ... ... ... 230

Privilege issue *re* statement of—about alleged appointment of one Thiru Vijayan and destruction of State Administration Reports ... ... ... ... 248

Resolution *re* Constitution (Forty-fourth Amendment) Bill, 1977, ratification of ... ... ... ... 380-391, 397, 398, 399

VENKATESWARA DIKSHIDAR, THIRU Y.—

Policy Note on—

Community Development, Panchayat Development and Urban Development, discussion on ... ... 442-458, 465-472

Resolution *re* Constitution (Forty-fourth Amendment) Bill, 1977, ratification of ... ... ... ... 384, 385

VICE-CHAIRMAN (THIRU A. BALASUBRAMANIAM)—

Policy Note on—Community Development, Panchayat Development and Urban Development, discussion on ... ... ... ... ... ... 448

W

WORLD TAMIL CONFERENCE—

Question *re* holding of next in Tamil Nadu ... ... 418